தமிழர் கலை, பண்பாடு ஆய்வுக் கோவை

கிழக்குப் பல்கலைக்கழக
பன்னாட்டு மாநாட்டுக் கட்டுரைகள்

சிறப்பாசிரியர்
பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம்

முதன்மைப் பதிப்பாசிரியர்
பேராசிரியர் பாஞ்.இராமலிங்கம்

பதிப்பாசிரியர்
முனைவர் த. மேகராசா

தமிழ்ப் புதுவை
புதுச்சேரி

தமிழர் கலை, பண்பாடு: ஆய்வுக் கோவை

சிறப்பாசிரியர்
பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம்

முதன்மைப் பதிப்பாசிரியர்
பேராசிரியர் பாஞ். இராமலிங்கம்

பதிப்பாசிரியர்
முனைவர் த. மேகராசா

ஒருங்கிணைப்பாளர்
பேராசிரியர் சி. சந்திரசேகரம்

பதிப்பு
தமிழ்ப் புதுவை, புதுச்சேரி

ISBN : 978-93-91728-61-8

முதற்பதிப்பு : சூன் 2024

பக்கங்கள் : 672

வெளியீடு :
தமிழ் கற்கைகள் துறை, கலை கலாசார பீடம்
கிழக்குப்பல்கலைக் கழகம், இலங்கை

All rights reserved. No part of this book may be reproduced or retrieved
or photocopied in any from excepting for the purpose of reference
or research without prior permission of the editor

भारतीय उच्चायुक्त
High Commissioner of India

15 May 2024

Message

It gives me great pleasure to convey my greetings to the Eastern University of Sri Lanka for organizing the International Conference on Arts and Culture of Tamils 2024. Let me also at the outset congratulate the University of Vavuniya, Sri Lanka and the Indian institutes including Puducherry University, Anna University and Vellore Institute of Technology for collaborating in this endeavour.

2. The Conference brings together experts from both India and Sri Lanka on the themes of historical heritage, language and literature, traditional communication, education and employment systems, architecture, festivals and rituals. I am confident that the conference discourse will produce valuable scholarship on these subjects. Personally, it is interesting to note that one of the themes of the Conference includes a discussion on cultural globalization, which is even more pertinent for our two countries with a significant diaspora population.

3. The collaboration between Indian and Sri Lankan Universities for this conference is itself a demonstration of the fact that India and Sri Lanka are civilisational twins. Our history, geography and our deep cultural connect demonstrate a shared antiquity, and dictate a shared future.

4. Guided by our Neighbourhood First policy and our SAGAR strategy, India has in recent years reaffirmed that we remain a natural, time-tested, trusted and reliable partner of Sri Lanka. With the adoption of the Connectivity Vision document by our leaders at their summit meeting in July 2023, our relations have acquired new drive and energy to forge ahead. This conference is an instance of our people-to-people linkages that form the centre of our long-term economic partnership.

5. I take this opportunity to wish the organizers, delegates and the stakeholders of the Conference all the best in their endavours. The success of the Conference and other such collaborative activities between out institutes of education excellence is the success of the India-Sri Lanka friendship.

(Santosh Jha)

6-38, Galle Road, Colombo 03, Sri Lanka. Telephone : 0094-11-2394581, 2448333 Fax : 0094-11-2447285
E-mail : hc.colombo@mea.gov.in

இணைத்தலைவரின் வாழ்த்துரை

இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக்கழகம் என்பவற்றுடன் இந்தியாவின் பாண்டிச்சேரி பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம், வேலூர் தொழில்நுட்பக் கழகம் ஆகியவை இணைந்த வகையில் 'தமிழர்களின் கலை மற்றும் கலாசாரம்' என்ற தலைப்பில் ஒழுங்குசெய்யப்பட்ட சர்வதேச ஆய்வு மாநாடு மிகவும் முக்கியமானதும் சிறப்புவாய்ந்ததுமாகும். கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் ஒத்திசைவுடன் தமிழ் கற்கைகள் துறை முன்னெடுக்கும் இம்மாநாடு, தமிழ்க் கலாசாரத்தின் வரலாற்று வேர்களை வெளிக்கொணர்தல், தமிழ்க் கலாசார அடையாளத்தில் மொழி, இலக்கியம், கலைகள், கைவினைப்பொருட்கள், கட்டிடக்கலை ஆகியவற்றின் தாக்கத்தை ஆராய்தல், தமிழ்ச் சமூகத்தை உருவமைக்கும் மரபுகள், சடங்குகள், பண்டிகைகளை ஆராய்தல், சமூகத்தின் வாழ்க்கை முறை மற்றும் கலாசார விழுமியங்களில் அதன் பங்கின் மீது தமிழ் உணவுகளின் தாக்கத்தை ஆராய்தல், உலகமயமாக்கல் மற்றும் நவீனமயமாக்கலின் தாக்கத்தை கருத்தில் கொண்டு, தமிழ்க் கலாசாரத்தின் சமகால வெளிப்பாடுகளைப் பகுப்பாய்வு செய்தல் முதலான விடயங்களை ஆய்விற்கு உட்படுத்தும் ஒரு ஆய்வுக் களமாகும்.

இம்மாநாட்டின்பொருட்டு வரலாற்றுப் பாரம்பரியம், மொழி மற்றும் இலக்கியம்,பாரம்பரிய தொடர்பாடல் அமைப்பு, பாரம்பரியக் கல்வி முறை, வேலை வாய்ப்பு, கலை மற்றும் கைவினை, கட்டிடக்கலைகள், பாரம்பரிய ஆடைகள் மற்றும் விளையாட்டுகள், சமையல் மற்றும் சமையல் மரபுகள், திருவிழாக்கள் மற்றும் சடங்குகள், சமகால தாக்கங்கள் என்னும் உப பிரிவுகளில், பரந்ததொரு தளத்தில் உலகெங்கிலும் உள்ள ஆய்வறிஞர்கள் கலந்துகொள்ளும் வகையில் ஆய்வாளர்களிடமிருந்து பெறப்பட்ட பிரத்தியேகமான ஆய்வு அறிக்கைகளை வெளியிடுவதற்கு குறிப்பாக 105 நீடிக்கப்பட்ட ஆய்வுச் சுருக்கங்களில் 87 ஆய்வுச் சுருக்கங்கள்

மதிப்பீட்டாளரர்களின் பரிந்துரைக்கு அமையத் தெரிவுசெய்யப்பட்டு அவை இரு தொகுதிகளாக்கப்பட்டுள்ளன. அதன் ஒரு தொகுதியாகவே இந்நூல் அமைகின்றது.

ஆய்வு சார்ந்த பணியை முன்னெடுப்பது பல்கலைக்கழகங்களின் மிக இன்றியமையாத செயற்பாடென்ற வகையில் இவ்வாய்வு மாநாடு கிழக்குப் பல்கலைக்கழக வரலாற்றில் முக்கியமானதென்று கருதுகிறேன். அதுமாத்திரமன்றி கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் தமிழ்க் கற்கைகள் துறைக்கு இது முதலாவது சர்வதேச மாநாடு என்பதும் பெருமிதப்படவேண்டியதாகும். இம்மாநாட்டின் மூலம் கிழக்கிலங்கை முக்கிய கவனிப்புப்பெறும் என்பதும் என் நம்பிக்கையாகும். இந்தியா மலேசியா, மொரிசியஸ் உள்ளிட்ட பல நாடுகளிலிருந்து ஆய்வறிஞர்கள் இலங்கையின் கிழக்கு நோக்கி வருகை தருவதற்கும் கிழக்கு மண்ணின் விருந்தோம்பல், கலை மற்றும் கலாசாரத்தினை அறிந்து கொள்வதற்கும் இம்மாநாடு வாய்ப்பளித்தவகையில் இதுவொரு சிறந்த வரப்பிரசாதமாகும். இவ்விதத்தில் இம்மாநாட்டின் வெளியீடாக அமையும் இந்நூல் காலத்தால் அழியாத ஆய்வுக்கோவையாக இருக்குமென்ற வகையில் எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி

பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம்
உபவேந்தர்
கிழக்குப் பல்கலைக்கழகம்

இணைத் தலைவரின் வாழ்த்துச்செய்தி

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகமானது வவுனியாப் பல்கலைகலைக்கழகம், பாண்டிச்சேரிப் பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம், மற்றும் வேலூர் தொழில்நுட்ப நிறுவனம், ஆகியவற்றுடன் இணைந்து நடாத்துகின்ற சர்வதேச மாநாடு - 2024 ற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

இம்மாநாட்டின் முக்கிய கருப்பொருளாக 'சமகால தமிழர்களின் பண்பாடும் வாழ்வியலும்' என்றமையப்பெற்றுள்ளது. சர்வதேச ரீதியில் வாழுகின்ற எம்மவர்களின் வாழ்வியல் பற்றி உலகுக்கு வெளிப்படுத்துகின்ற ஓர் அரிய வாய்ப்பாக இம் மாநாடு அமையப் பெற்றுள்ளமை முக்கிய அம்சமாகும்.

இது மேலும் பல முக்கிய உப கருப்பொருள்களைக் கொண்டுள்ளது: வரலாற்று மூலாதாரங்கள், மொழியும் இலக்கியமும், பாரமபரிய தொடர்பாடல் முறைகள், பாரம்பரிய கல்வி முறைகள், பாரம்பரிய சமூகமும் தொழில் முறையும் போன்ற தமிழர்களின் வரலாற்றை உலகுக்கு வெளிப்பத்துகின்ற பல்வேறு கருப்பொருள்களை கொண்டமைந்துள்ளது. உலகின் செம்மொழிகளில் ஒன்றாகப் புகழப்படுகின்ற எமது தாய் மொழியாகிய தமிழ் மொழியைப் பேசுகின்ற தமிழர்களுடைய தொன்மை மிக்க வரலாற்றைப் பற்றியும் அதன் தொழில்நுட்ப முக்கியத்துவங்கள் பற்றியும் உலக மக்கள் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டியது அத்தியாவசியமாகும். பல விஞ்ஞானிகளால் இன்று ஏற்றுக்கொள்ளப்படுகின்ற பல தொழில்நுட்பவியல் மற்றும் விஞ்ஞானம் சார்ந்த உண்மைகள், பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழனால் கட்டியெழுப்பட்டுவிட்டன. இந்த உண்மைகளை ஆராய்ச்சி அடிப்படையில் முன்வைப்பதற்கு இது ஓர் உன்னத சந்தர்ப்பம் ஆகும்.

இரு நாடுகளின் இணைப்பில் இம்மாநாடு அமையப் பெற்றுள்ளமையினால் நாடுகளுக்கிடையே பரஸ்பர நல்லிணக்கம் கட்டியெழுப்பப்படுவதோடு அவர்களின் கலாசாரங்கள்

விழுமியங்கள் தொடர்பில் நாம் அறிந்துக்கொள்ளக் கூடியதாகவும் அமைகின்றது. சர்வதேச ரீதியில் இரு நாடுகளுக்கிடையான நட்புறவு மேலும் விரிவடையக் கூடியதாகவுள்ளது.

அனைத்து இன மக்களும் ஒற்றுமையுடன் வாழும் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இரு முக்கிய பல்கலைக்கழகங்கள் இணைந்து இம்மாநாட்டினை நடாத்துவது எமது பிரதேச பண்பாட்டு விழுமியங்களை மேலும் வலுப்படுத்துவதாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இம்மாநாட்டினை வெற்றிகரமாக நடாத்துவதற்குப் பங்களிப்பினை வழங்குகின்ற அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றி கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். இம் மாநாடு சிறப்புற நடைபெற எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பேராசிரியர் த. மங்களேஸ்வரன்,
துணைவேந்தர்,
வவுனியாப் பல்கலைக்கழகம்.

முதன்மைப் பதிப்பாசிரியர் உரை

கலை வளர்ப்போம், தமிழ்ப் பண்பாடு காப்போம், போற்றி உலகெங்கும் பரவச் செய்வோம். இந்த உயரிய நோக்கோடு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் பல நாடுகளில் சிறப்பாக செயலாற்றி வருகிறது. இவ்வாண்டு யாழ்ப்பாணத்தில் தம் ஐம்பதாவது ஆண்டினை நிறைவு செய்து பொன்விழா காண்கிறது.

இத்தருணத்தில் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் ஆசியாவில் சிறந்த பல்கலைக்கழகமாகத் திகழ்ந்து தமிழ்த்துறை வாயிலாக 'தமிழர் கலை, பண்பாடு' குறித்த ஆய்வு மாநாட்டினை 13-14 சூன் 2024இல் முன்னெடுக்கின்றது. இப்பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் நுண்மான் நுழைபுலத்துடன் இந்த மாநாட்டினை சிறப்பாக வழிநடத்தி உலக அரங்கில் தமிழர்தம் பெருமைகளை நிலைநிறுத்துவதில் வெற்றியாளர்,. அவருக்கு உற்ற துணையாக நின்று வவுனியா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் த. மங்களேஸ்வரன் இம்மாநாட்டினை முன்னெடுப்பது பாராட்டிற்குரியது.

கடல் கடந்து இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், மொரிசியசு, ரீ யூனியன் மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பேராளர்களை ஒன்றிணைத்து இம்மாநாட்டினை சிறப்பாக நடத்திட என்னை மாநாட்டு அமைப்பாளராக நியமித்தமைக்கு இந்த இரு துணைவேந்தர்களுக்கும் நன்றி கூறக் கடப்பாடுடையேன்.

இந்த இருநாள் ஆய்வு மாநாட்டிற்காகப் பெறப்பட்ட 100க்கும் மேற்பட்ட கட்டுரைகளை மதிப்பீட்டுக் குழுவினர் ஆராய்ந்து 87 கட்டுரைகளை அதன் தரத்தின் அடிப்படையில் மாநாட்டில் எடுத்துரைக்க தேர்வு செய்துள்ளனர். இப்பணியை திரு. த. மேகராசா குழுவினர் மிகச்சிறப்பாகச் செய்து கட்டுரைகளை தொகுத்தளித்துள்ளனர்.

இந்த தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ள கட்டுரைகள் தமிழரின் தொன்மையான வரலாறு, பண்பாடு, கலை, பாரம்பரியம், கல்வி,

விளையாட்டு என பலநிலைகளில் விரிந்துள்ளன. கட்டுரை யாளர்கள் அனைவரும் ஆய்வில் புலமை பெற்றவர்களாகவும் உள்ளது குறிப்பிடத்தக்கது. கட்டுரைகள் ஆய்வாளர்களின் சொந்த கருத்தியலால் உருவாக்கப்பட்டுள்ளதால் பதிப்பாசிரியர் என்ற முறையில் எவ்வித பதிப்புக்கும் உட்படுத்தாமல் அவர்களின் விருப்பப்படியே தொகுக்கப்பட்டுள்ளது.

மாநாட்டின் ஒருங்கிணைப்பாளராக பேராசிரியர் சி. சந்திரசேகரம், செயலர் திருமதி விஜிதா திவாகரன் உள்ளிட்ட மாநாட்டுக் குழுவினர் திறம்பட மாநாட்டுப் பணிகளை முன்னெடுப்பது பாராட்டுக்குரியது.

இம்மாநாட்டின் முத்தாய்ப்பாக டாக்டர் வி.ஜி. சந்தோசம் அவர்கள் இரு திருவள்ளுவர் சிலைகளை கிழக்குப் பல்கலைக்கழக முகப்பிலும் விபுலானந்த அடிகள் இசைக்கல்லூரி வளாகத்திலும் நிறுவப் பெறுவது சிறப்பிற்குரியதாகும். பல்கலைக்கழக பதிவாளர் பகீரதன் அவர்களின் இடையறா ஒத்துழைப்பும், புல முதல்வர் பேராசிரியர் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்களின் ஆர்வம், சிறப்பான செயலாற்றல் மாநாட்டிற்கு சிறப்புச் சேர்க்கின்றது.

இரு தொகுதிகளாக வெளியிடப்படுகின்ற இந்த Ý Œ¾, «è£¬ õ î I N½‹ Ý ƒAô, è† ´ ¬ óèœ “Studies on Art and Culture of Tamils” என ஆங்கிலத்திலும் வெளியிடப்படுகிறது.

இந்நூலாக்க முயற்சியில் விரைவாக வடிவமைப்புச் செய்த திருமதி செல்வி பாஸ்கர், சென்னை, அச்சீட்டிற்கு உதவிய M/s பிரிண்ட் பிராசஸ், சென்னை, அட்டைப்படம் தீட்டிய திரு. நா.சுந்தர், புதுச்சேரி, நூலினை வெளியிட முன்வந்த தமிழ்ப்புதுவை பதிப்பகத்தார் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி.

இந்தியா, மலேசியா உள்ளிட்ட நாடுகளின் பேராளர்களை மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்திலும் வரவேற்று தேவையான ஏற்பாடுகளை செய்துள்ளமைக்காக திரு மாவை சோ. தங்கராசா,

கலாநிதி பகீரதன் அமிர்தலிங்கம், திரு. வரதன், யாழ்ப்பாணம், திரு. MAM சமீம், மட்டகளப்பு, முனைவர் முருகேசு தயாநிதி கொழும்பு, திரு. அ. கஜேந்திரன் மற்றும் திரு. Y. துசியனந்தன், யாழ்ப்பாணம் நன்றிக்குரியவராவர்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தினர் வழக்கறிஞர் அமுது செழியன், தலைவர், டாக்டர் ச. பூலோகநாதன், துணைத்தலைவர், திரு. முருகேசு தங்கராசா, பொருளாளர், மலேசிய ஒருங்கிணைப்பாளர்கள் டாக்டர் திரு. இராமநாயகம், திரு. த. கணேசன், திருமதி பொன்னி வீரப்பன், இந்திய ஒருங்கிணைப்பாளர்கள் முனைவர் மூ. கருணாநிதி, முனைவர் அரங்க மு. முருகையன், தமிழக ஒருங்கிணைப்பாளர் முனைவர் க. திலகவதி, அண்ணாப் பல்கலைக்கழக ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் உமா மகேஸ்வரி, யோகாச்சாரியா நீலமேகம், ரீ யூனியன், திரு. அதியமான் கார்த்திக், நைஜீரியா உள்ளிட்டவர்களுக்கு என் நன்றியை பதிவு செய்கிறேன்.

அன்புடன்

பேராசிரியர் பாஞ். இராமலிங்கம்
இயக்குநர் (பொ)
UGC - மாளவியா மிஷன் ஆசிரியர் பயிற்சி மையம்
புதுவைப் பல்கலைக்கழகம்
பதிப்பாசிரியர்.

பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி

கற்றல் - கற்பித்தற் செயன்முறைகளைத் திறம்பட மேற்கொள்ளலும் ஆய்வுகளை முன்னெடுத்தலுமே பல்கலைக்கழக நிறுவனத்தின் உயரிய செயற்பாடுகளாக விளங்குகின்றன. அந்தவகையில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களும் ஆய்வுச் செயற்பாடுகளில் சிறப்பான துலங்களை வெளிப்படுத்தி வருகின்றன. கலை கலாசார பீடத்தின் ஆராய்ச்சிச் செயன்முறைகளும் அவ்வகையில் குறிப்பிடத்தக்கன. பல்வேறு துறைசார்ந்த ஆய்வுகள் கலை கலாசார பீடத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த வரிசையில் கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் தமிழ் கற்கைகள் துறையும் வவுனியாப் பல்கலைக்கழகம் மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் சிலவும் இணைந்து நடாத்தும் இவ் ஆய்வு மாநாடும் குறிப்பிடத்தக்கது.

எமது பீடத்தின் தமிழ்க் கற்கைகள் துறையினால் நடத்தப்படுகின்ற முதலாவது சர்வதேச ஆய்வு மாநாடு என்ற வகையிலும் இம்மாநாடு சிறப்புப் பெறுகின்றது. தமிழர் கலை மற்றும் கலாசாரம் எனும் தொனிப்பொருளில் அமைந்த பல்வேறு ஆய்வுகள் இம்மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவுள்ளதையிட்டு மகிழ்வடைகிறேன். ஆய்வு மாநாடு ஒன்றைத் திட்டமிட்டுச் செயற்படுத்தி முடிப்பது இலகுவான காரியமல்ல. அத்தகைய காரியத்தைத் தமிழ் கற்கைகள் துறை சிறப்பாக மேற்கொண்டுள்ளது. ஆதலால் அத்துறை சார்ந்தோரின் வினைத்திறனைப் பாராட்டுகிறேன். இத்தகைய மாநாடுகளை இத்துறை தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும் என்றும் வேண்டிக்கொள்கிறேன். அத்தோடு, இவ்வாய்வு மாநாடு சிறப்புற நிகழ பல்வகைகளிலும் பங்களித்த அனைவருக்கும் பீடாதிபதி என்ற வகையில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

கலாநிதி வ.குணபாலசிங்கம்
பீடாதிபதி
கலை, கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

பதிப்பாசிரியர் உரை

'தமிழர் கலை, பண்பாடு: ஆய்வுக்கோவை' என்ற நூல் தமிழர் கலையும் பண்பாடும் என்ற பொருண்மையில் நடாத்தப்பட்ட சர்வதேச ஆய்வு மாநாட்டின் வெளியீடாகும். இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகம், வவுனியாப் பல்கலைக்கழகம் என்பவற்றுடன் இந்தியாவின் பாண்டிச்சேரி பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம், வேலூர் தொழில்நுட்பக் கழகம் ஆகியவை இணைந்த வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டு கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் தமிழ் கற்கைகள் துறை முன்னெடுத்த சர்வதேச ஆய்வு மாநாடு பல்வேறு ஆய்வுக்களங்களைக் கொண்டிருந்தது. குறிப்பாக வரலாற்றுப் பாரம்பரியம், மொழி மற்றும் இலக்கியம், பாரம்பரிய தொடர்பாடல் அமைப்பு, பாரம்பரியக் கல்வி முறை, கலை மற்றும் கைவினை, கட்டிடக்கலைகள், பாரம்பரிய ஆடைகள் மற்றும் விளையாட்டுகள், சமையல் மற்றும் சமையல் மரபுகள், திருவிழாக்கள் மற்றும் சடங்குகள், சமகால தாக்கங்கள் எனப் பரந்ததொரு தளத்தில் உலகெங்கிலும் உள்ள ஆய்வாளர்களுக்கு ஆய்வுகளை முன்வைப்பதற்கான சிறந்த சந்தர்ப்பமாக அமைந்தது. அதன்டிபடி உலகின் பல பாகங்களிலிருந்தும் 105 ஆய்வறிஞர்கள் தமது நீடிக்கப்பட்ட ஆய்வுச் சுருக்கங்களை அனுப்பியிருந்தார்கள். ஆய்வாளர்களுக்கு வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு அமையவும் ஆய்வு நெறிமுறைகளுக்கு அமையவும் எழுதப்பட்ட 87 நீடிக்கப்பட்ட ஆய்வுச் சுருக்கங்கள் உள்நாட்டு, வெளிநாட்டு மதிப்பீட்டாளர்களின் பரிந்துரைகளுக்கு அமைய ஏற்றுக்கொள்ளப்பட்டன. தமிழ் மொழி மூலம் எழுதப்பட்ட 74 நீடிக்கப்பட்ட ஆய்வுச் சுருக்கங்கள் ஒரு தொகுதியாகவும் ஆங்கில மொழி மூலம் எழுதப்பட் 13 நீடிக்கப்பட்ட ஆய்வுச் சுருக்கங்கள் ஒரு தொகுதியாகவும் என இரண்டு தொகுதிகளாக அவை பதிப்பிக்கப்பட்டுள்ளன. அவற்றின் முதற்றொகுதியாக இந்நூல் அமைகின்றது.

கலை, பண்பாடு, வரலாற்று மரபுகள் ஒவ்வொரு இனக்குழுமத்தினதும் தனித்துவமான அடையாளங்களெனலாம்.

ஒருவகையில் இவையே ஒவ்வொரு இனக்குழுமத்தின் இருப்புக்கும் ஆதாரமூலங்களாக விளங்குகின்றன என்றும் கூறலாம். இன்றைய உலகமயமாக்கச் சூழலில் உலகிலுள்ள ஒவ்வொரு இனக்குழுமமும் தமக்கான கலை, பண்பாட்டு மரபுகளையும் வரலாற்று வேர்களையும் பாதுகாப்பதில் கவனம்கொண்டுள்ளன. அதற்காகப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டும் வருகின்றன. இத்தகையதொரு சூழலில் ஆய்வு வெளியீடுகளைப் பிரதான நோக்கங்களுள் ஒன்றாகக்கொண்டு செயற்படுகின்ற உள்நாட்டு , வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் இணைந்து நடத்திய இச்சர்வதேச ஆய்வரங்கு முக்கியத்துவமுடையதாகும். முக்கியமாக தமிழர் கலை, பண்பாடு, வரலாறு சார்ந்த தனித்துவங்களை ஆய்வுநோக்கில் அணுகி பலருமறியச் செய்வதற்கும் ஆவணப்படுத்துவதற்கும் இம்மாநாடு வழிகோலியுள்ளது. இதற்குச் சான்றாக இத்தொகுப்புகள் அமைந்துள்ளன.

உலகமயமாக்கச் சூழலில் சுய பண்பாடும் வரலாறும் கேள்விக்குட்படுத்தப்பட்டிருப்பதை முக்கிய ஆய்வுப் பிரச்சினையாகக் கருதி பல ஆய்வாளர்கள் தமது ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். பின்காலனியக் கருத்தியலில் சுயபண்பாட்டு வேர்களைத் தேடுதலும் திரிவுபடுத்தப்பட்ட வரலாற்றின் உண்மையைக் கண்டறிதலும் திருத்தி எழுதுதலும் இருட்டடிப்புச் செய்யப்பட்ட வரலாற்றை வெளிக்கொணர்தலும் முக்கியமானவையாகும். அக்கருத்தியல்களின் அடிப்படையில் பல ஆய்வுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இத்தகைய ஆய்வுகள் இளம் ஆய்வாளர்களுக்கும் வழிகாட்டுபவையாக அமையும். குறிப்பாக வாழும் பிராந்தியங்கள் சார்ந்து ஆய்வு செய்யப்பட வேண்டிய விடயங்களை நோக்கி ஆய்வாளர்களின் கவனம் செல்வதற்கு உந்துதலளிப்பனவாக அமையும்.

அதிகரித்த மரணங்களுக்கும் நோய்களுக்கும் இன்றைய உணவுப் பழக்கவழக்கள் முக்கிய காரணங்கள் என்பதைப் பலரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். அவ்விதத்தில் பாரம்பரிய உணவுப் பழக்கவழக்கங்களின் முக்கியத்துவத்தை ஆய்வு நோக்கில் அணுகி எழுதப்பட்ட ஆய்வுகளும் இத்தொகுப்பிற்கு

வலுச்சேர்க்கின்றன. கலை வடிவங்கள், வழிபாட்டு மரபுகள், சம்பிரதாயங்கள், பாரம்பரியக் கல்வி முறைகள், தொடர்பாடல்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் சுதேச பண்பாட்டை அடையாளப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. தமிழ் இலக்கியங்களை முன்னிறுத்தி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தமிழர்களின் வாழ்வியல் நெறிமுறைகளையும் சுதேச அறிவியலையும் இனங்கண்டு முன்வைக்கும் வகையிலும் புதிய கோட்பாட்டு வெளிகளைத் திறக்கும் வகையிலும் அமைந்துள்ளன. தவிர சமகாலத்தில் முக்கிய பேசுபொருளாகியுள்ள செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட அறிவியல் - தொழில் நுட்பங்கள் பற்றியும் தற்காலச் சூழலில் தனிமனிதர்களை ஆட்கொள்ளும் உளவியல் பாதிப்புகள் குறித்தும் ஆய்வாளர்கள் ஆய்வுகளை முன்வைத்துள்ளனர். இவ்வாறு பல துறைகள் சார்ந்து பல நோக்குகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் தொகுப்பாக இந்நூல் விளங்குகின்றது.

இந்நூலாக்கமும் ஆய்வு மாநாடும் பலரது கூட்டு உழைப்பின் காரணமாகவே சாத்தியப்பட்டிருக்கின்றது. அவ்விதத்தில் அனைவரும் நன்றிக்குரியவர்களாவர். சர்வதேச ஆய்வரங்கின் பொருட்டு பெருவாஞ்சையுடன் தமது ஆய்வுகளை அனுப்பிவைத்த ஆய்வாளர்களுக்கும் சிறந்த வகையில் இந்நூலைத் தொகுப்பதற்கு உதவிய ஆய்வு மாநாட்டுக்கான தொகுப்புக் குழுவின் உறுப்பினர்களுக்கும் (Editorial Board Members) குறுகிய காலத்தில் நீடிக்கப்பட்ட ஆய்வுச் சுருக்கங்களை மதிப்பாய்வு செய்து உதவிய மதிப்பீட்டுக் குழுவினர்களுக்கும் (Panel of Reviewers) சிறந்த முறையில் எம்முடனான தொடர்பைப் பேணி நூற்றொகுதிகளைப் பதிப்பித்த பேராசிரியர் பாஞ். இராமலிங்கம் அவர்களுக்கும் புதுச்சேரி தமிழ்ப் புதுவைப் பதிப்பகத்தாருக்கும் கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் தமிழ் கற்கைகள் துறையின் சார்பாக உளங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலாநிதி த. மேகராசா
தொகுப்பாசிரியர்
சர்வதேச ஆய்வு மாநாடு - 2024

மாநாட்டு இணைப்பாளரின் வாழ்த்துரை

இலங்கைக் கிழக்குப் பல்கலைக்கழகமானது வவுனியா பல்கலைக்கழகம் – இலங்கை, பாண்டிச்சேரி பல்கலைக்கழகம் – இந்தியா, அண்ணா பல்கலைக்கழகம் – இந்தியா, வேலூர் தொழில் நுட்பக் கல்லூரி – இந்தியா ஆகியவற்றுடன் இணைந்து இவ்வாண்டு (2024) 'தமிழர்களின் கலையும் கலாசாரமும்' என்ற தொனிப்பொருளில் சர்வதேச மாநாட்டினை நடாத்துவது எமது தமிழ்ச் சமூகத்திற்குச் செய்கின்ற பெரும் பணியாகவே நான் கருதுகின்றேன். இத்தகையதொரு பெரு நிகழ்வை ஒருங்கிணைக்கும் பொறுப்பு எமது தமிழ் கற்கைகள் துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதானது எமது துறைக்கும் கலை கலாசார பீடத்திற்கும் பெருமை தேடித் தந்திருக்கின்றது.

ஒரு சமூகத்திற்கு தனித்துவ அடையாளத்தை ஈட்டிக்கொடுப்பதில் அச்சமூகத்தின் கலை, கலாசார, மொழிக் கூறுகளுக்கும் அவை சார்ந்த வரலாறுகளுக்கும் முதன்மையான இடமுள்ளன. அதனாலேயே ஒவ்வொரு சமூகமும் அந்த மரபுகளைப் பேணுவதிலும் வளர்ப்பதிலும் வரலாற்று ஓட்டத்தில் தொடர்ந்து பிரக்ஞையோடு செயற்பட்டு வந்துள்ளது. இதற்குத் தமிழ் சமூகமும் விதிவிலக்கல்ல. தமிழ்ச் சமூகம் தொன்மை மிக்க கலை கலாசார, மொழி வரலாற்றைக் கொண்டது. இந்த வரலாற்றுப் பெருமைகளை கலை, இலக்கிய, மானுடவியல், கல்வெட்டியல், அகழ்வாராய்ச்சி எனப் பல்வேறு துறைசார் ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. அண்மைக்காலமாக நடைபெற்ற கீழடி ஆய்வுகள் இதில் இன்னொரு பரிணாமத்தை ஏற்படுத்தியுள்ள அதேவேளை எதிர்கால ஆய்வுகளுக்கான தேவையையும் அழுத்தியிருக்கின்றன.

அதேவேளை இன்றைய நவீன சமூகத்தில் புதிய மாற்றங்களை உள்வாங்கி எமது கலை, கலாசார மரபுகளில் புதிய மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அவற்றை இன்னும்

முனைப்புறுத்த வேண்டிய சமூகப் பொறுப்பும் எங்களுக்குக் கையளிக்கப்பட்டிருக்கின்றது. அதேவேளை இதற்கு மாறாக நவீன நாகரிக மோகம் காரணமாக எமது கலை, கலாசார மரபுகளில் இருந்து அன்னியப்பட்டுச் செல்கின்ற அல்லது போலிகளை எமது மரபுகளாகப் பார்க்கின்ற போக்கும் இன்று எம்மத்தியில் பரவிக்கொண்டிருப்பதை நாம் உணர்வோம்.

ஆகவே இத்தகையதொரு சூழலில் உலகில் பரந்து வாழும் தமிழர்களின் பிரதேச நிலைப்பட்ட பாரம்பரிய கலை, கலாசார மரபுகளை மட்டுமன்றி அவற்றில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் அடையாளப்படுத்துவதை நோக்காகக் கொண்டு இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. இதற்கும் மேலாக இந்த மாநாட்டில் பல்வேறு நாடுகளிலும் வாழும் புலமையாளர்களும் தமிழ் ஆர்வலர்களும் ஒன்றிணைவதானது பல்கலைக்கழக ரீதியாகவும் தனிப்பட்ட ரீதியாகவும் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தியிருக்கின்றது. குறிப்பாக இந்த ஒருங்கிணைவு எமது பல்கலைக்கழகத்தின் எதிர்கால அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்தும் என்று நாம் நம்புகின்றோம்.

இந்த மாநாடு தொடர்பாக பல்கலைக்கழகங்களுக் கிடையிலான தொடர்பாடலை ஏற்படுத்துவதிலும் மாநாட்டுப் பணிகளைத் திட்டமிடுவதிலும் தொடர்ந்து செயற்பட்டு, வழிப்படுத்தியவர் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கம் அவர்கள். இவரோடு இணைந்து இந்த மாநாட்டை நடத்துவதில் மிக்க அக்கறையோடு பணியாற்றியவர் வவுனியாப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் த. மங்களேஸ்வரன் அவர்கள். புல்கலைக்கழகங்களுக்கு இடையிலான தொடர்புகளை ஏற்படுத்தியும் வெளிநாட்டு பங்கேற்பாளர்கள், ஆய்வாளர்களை ஒருங்கிணைத்தும் தந்ததோடு ஆய்வுக்கோவை உருவாக்கம் மற்றும் நிதி ஈட்டல் உள்ளிட்ட பல பணிகளையெல்லாம் நிறைவேற்றித் தந்தவர் பாண்டிச்சேரி பல்கலைக்கழகப் பேராசிரியர் பாஞ். ராமலிங்கம் அவர்கள். எமது கலை கலாசார பீட விரிவுரையாளர்களையெல்லாம் தமிழ் கற்கைகள் துறையோடு சேர்ந்து இந்த மாநாடு முறையாக

நடைபெற நிர்வாக ஒழுங்குகள் பலவற்றையும் செய்து தந்தவர் எமது பீடாதிபதி கலாநிதி வ. குணபாலசிங்கம் அவர்கள். மேலும், பதிப்பாசிரியர் கலாநிதி த. மேகராசா, செயலாளர் திருமதி விஜிதா திவாகரன், மாநாட்டுக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் இந்த மாநாட்டை நடத்துவதற்குப் பெரும் பங்களிப்புச் செய்தவர்கள். அவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பேராசிரியர் சி. சந்திரசேகரம்
மாநாட்டு இணைப்பாளர்

மாநாட்டுக் குழு

இணைத் தலைவர்கள்	:	பேராசிரியர் வ.கனகசிங்கம் பேராசிரியர் த.மங்களேஸ்வரன்
மாநாட்டு அமைப்பாளர்கள்	:	பேராசிரியர் பாஞ். இராமலிங்கம் முனைவர் வ.குணபாலசிங்கம்
இணைப்பாளர்	:	பேராசிரியர் சி.சந்திரசேகரம்
செயலாளர்	:	திருமதி விஜிதா திவாகரன்
பொருளாளர்	:	இ.சகாயசீலன்
பதிப்பாசிரியர்	:	முனைவர் த.மேகராசா
பதிப்புக்குழு உறுப்பினர்கள்	:	முனைவர் ம.நதிரா திருமதி றூபி வலன்ரீனா பிரான்சிஸ் முனைவர் K. ஸ்ரீகருணாகரன் முனைவர் ம.சோமதாசன் திரு.பா.சுமன்

உள்ளடக்கம்

		பக்கம்
	இணைத்தலைவரின் வாழ்த்துரை பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம்	4
	இணைத் தலைவரின் வாழ்த்துச்செய்தி பேராசிரியர் த. மங்களேஸ்வரன்	6
	முதன்மைப் பதிப்பாசிரியர் உரை பேராசிரியர் பாஞ். இராமலிங்கம்	8
	பீடாதிபதியின் செய்தி கலாநிநி வ.குணபாலசிங்கம்	11
	பதிப்பாசிரியர் உரை கலாநிதி த.மேகராசா	12
	மாநாட்டு இணைப்பாளரின் வாழ்த்துரை பேராசிரியர் சி. சந்திரசேகரம்	15
	மாநாட்டுக்குழு	17
	கட்டுரையாளர்கள்	26
	மதிப்பீட்டுக்குழு	32
	கட்டுரைகள்	
1.	தமிழர் கலை பண்பாடு ஆய்வுகள் பேராசிரியர் பாஞ். இராமலிங்கம்	33
2	திருக்குறளில் ஆசீவகம் ஜெ. அரங்கராஜ் & அ. ஜெ. கிறிஸ்டி	37
3	நாட்டார் கதைகளை ஆவணப்படுத்துவதில் அமைப்பியல் ஆய்வின் வகிபங்கு கோபாலப்பிள்ளை குகன்	47
4	சிலப்பதிகாரத்தில் திணை நிலை இசை முனைவர் இராச.கலைவாணி	55
5	பட்டிப்பளைப் பிரதேச கிராமியப் புலவர் பாடல்களின் சமூகப் பெறுமானம் அருண்ஜா சஜீவன்	67
6	புலம்பெயர் தமிழர் அவல வாழ்வு - தாமரைச்செல்வியின் 'உயிர்வாசம்' நாவலை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு ஜீவகரன் ஷம்சிகா	77

7	கலாசார நோக்கில் 'உடையார் மிடுக்கு' நாடக இலக்கியம் தேவகுமாரி சுந்தரராஜன்	88
8	திருக்குறளில் அச்சமெனும் மெய்ப்பாடு இளஞ்செழியன் ச,	94
9.	திருக்குறள் காட்டும் வாழ்வியல் மென்திறன்கள் முனைவர் அரங்க. மு. முருகையன்,	98
10	சங்க காலப் போர்க் கல்வி முனைவர் கே. பழனிவேலு	104
11	திருவாசகத்தில் மகளிர் விளையாட்டுக்கள் திருச்செல்வம் கிஷாந்தினி,	114
12	'தமிழ்த்தூது' சேவியர் தனிநாயகம் அடிகளாரின் இதழியல் பணிகள் அருட்தந்தை அ. அ. நவரெட்ணம்	123
13	பனங்கூடல் நாவலில் வெளிப்படும் ஈழத்தமிழரின் வாழ்வியல் அம்சங்கள் கிருபாகரன் சிந்துஜா	132
14	க. சட்டநாதனின் சிறுகதைகளில் கையாளப்பட்டுள்ள கலாசாரப் பாரம்பரிய அம்சங்கள் க. மோகனம்பாள்	142
15	கடுநோன்பும் இல்லறத்தார் கடமையும்: தேசம் கடந்து ஒளிரும் தமிழர் பண்பாடு - ஓர் ஆய்வு முனைவர் ரா.சரவணன்,	149
16	உணவு பண்பாடாவதால் ஏற்பட்ட பாதிப்புக்கள் பேராசிரியர் வி. இன்பமோகன் & A. பகீரதன்	153
17	சடங்கின் காட்சியமைப்பும் அதன் அணுகுமுறைகளும்: மட்டக்களப்பு களுமுந்தன்வெளி மாரியம்மன் சடங்கினை மையமாகக் கொண்ட ஆய்வு காராளசிங்கம் அற்புதன்,	165
18	சைவசித்தாந்தத்தில் ஆன்மாவின் பயணமும் அதனை மேம்படுத்துவதற்கான புரிதல்களும் - ஓர் ஆய்வு கே. தவசீலன் & S. கேசவன்	175
19	அறநெறிக்கால சமய, சமூக மரபுகளில் பெண்கள் பற்றிய கதையாடல்: கண்ணகி, புனிதவதி என்போரை முன்னிறுத்திய வாசிப்பு கலாநிதி தி. செல்வமனோகரன்	180
20	மாரியம்மன் வழிபாடும் இஸ்லாமிய சமூக மக்களும் கி.கலைமகள்	189

21	மலையகத் தமிழர் கலாசாரத்தில் சிறுதெய்வ வழிபாடு - ஓர் ஆய்வு சுரேஷ்குமார் டென்சி	193
22	தமிழர்களின் கலை கலாசார பாரம்பரியத்தில் 'காவடி' கலாசாரத்தின் வகிபங்கு சுதாகரன் லோவிகரன்	198
23	தமிழர்களின் கலை, பண்பாட்டு மரபுகளில் உலகமயமாக்கத்தின் தாக்கம் - ஈழத்தமிழர் கூத்துக் கலையை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு கலாநிதி எம்.பி.ரவிச்சந்திரா	203
24	குழந்தைகளுக்குரிய தமிழ் பாரம்பரிய விளையாட்டுக்கள் கற்றுக்கொடுத்த வாழ்வியல் தத்துவம் யே. ஹெரோசினி	211
25	தமிழர் வாழ்வியல் சடங்குகள் - கேகாலை மாவட்டம் தெரணியகலைப் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு பாலரட்ணம் சரண்ஜா	219
26	அடங்காப்பற்று வன்னியில் நாச்சிமார் வழிபாடு - சமூக வரலாற்று ஆய்வு சிவசுந்தரம் கஜானா	228
27	கொற்றவை வழிபாடு : தொல் தமிழர் மரபும் சமஸ்கிருதமயமாக்கமும் கலாநிநி வ.குணபாலசிங்கம்	236
28	சிலப்பதிகாரக் காப்பியத்தின் மூலம் இனங்காணக்கூடிய வாழ்வியல் சடங்குகளும் சம்பிரதாயங்களும்: ஓர் ஆய்வு ந.குணசிவருபன் & ப.தாரணி	248
29	சமூக அமைப்பாக்கத்தில் மரணச்சடங்கு (பட்டிப்பளை பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு) இ.குகநாதன்	255
30	சமகாலச் சூழலில் பாரம்பரிய விளையாட்டுக்களின் தேவையும் முக்கியத்துவமும் க. மோகன்தாசன்	266
31	தமிழ், சமஸ்கிருத இலக்கியங்களில் வீணையின் சிறப்புகள் விநாயகமூர்த்தி சௌமியா	275
32	மரபுரிமைக் களமாகும் ஆற்றுகை மரபுகள் தம்பிராசா விவானந்தராசா	283
33	மலையகத்தில் வீதி நாடகக் கலை - ஒரு விமர்சன ஆய்வு ஜெப்ரி தங்கராஜ்	296

34	ஓர் ஆற்றுகைச் சூத்திரத்தின் இணைவை மகிடியிலும் வல்லாளக் கண்டிமான் கோட்டையழிப்பிலும் அணுகுதல் எஸ். சந்திரகுமார் & முனைவர் கே.ஆர். ராஜாரவிவர்மா	304
35	மட்டக்களப்பு மாவட்ட பாடசாலைகளில் தரம் 9 இற்குத் தமிழ்மொழி மூலம் கணித பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களின் பாடத்தைத் திட்டமிடல் செயற்பாட்டினை ஆராய்தல் கணபதிப்பிள்ளை ஞானரெத்தினம்	315
36	ஆசிரியர்களின் வகுப்பறைக் கற்பித்தலில் பாரம்பரிய மற்றும் நவீன கற்பித்தல் முறைகளின் செல்வாக்கு - ஓர் ஆய்வு கந்தசாமி அபிலாஷ்	323
37	பின்தங்கிய கிராமப் பாடசாலைகளில் கல்வி கற்கும் பெண் மாணவர்களின் இடைவிலகல் (மட்டக்களப்பு மண்முனை தென்மேற்குக் கல்விக்கோட்டப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு) தேவரூபன் ஸியாணி	333
38	பழையசோற்றின் மருத்துவப் பயன்களும் விழிப்புணர்வும் - ஓர் ஆய்வுப் பார்வை மருத்துவர் கணேஸ் ஸ்ரீதரன் & மருத்துவர் சபாரட்ணம் கணேசன்	343
39	பாரம்பரிய உணவு முறைகளும் இன்றைய நிலையும் - யாழ்ப்பாண மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒப்பீட்டாய்வு ஜு.நிருத்திகா, & திரு.ஆர்.சகாயசீலன்,	348
40	யாழ் பல்கலைக்கழகக் கலைப்பீட வெளி மாவட்ட மாணவர்களது பொருளாதார நிலையும் மன அழுத்தமும் நா.தக்ஷாலினி, ரா.விதூஷா, ம.மரியநாயகி ரோகினி & க.கஜவிந்தன்,	356
41	மூன்றாம் நிலைக்கல்வி கற்கும் மாணவர்கள் எதிர்கொள்ளும் உள சவால்கள் : தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினை அடிப்படையாகக் கொண்ட சூழ்நிலை ஆய்வு நா.மு.ஹஸ்ஸான், & திரு.தவராசா தர்ஸன்,	365
42	பல்கலைக்கழக மாணவர்களிடையேயான வன்போக்கு நடத்தைகளும் பாலின வேறுபாடும் ஓர் ஆய்வு ச.கயலினி, அ.ஒக்சிகா & கலாநிதி.க.கஜவிந்தன்,	374
43	கணவனை இழந்த பெண்களின் உளசமூகப் பிரச்சினைகள் ஓர் ஆய்வு பு.குஷாளினி, & க.கஜவிந்தன்,	383
44	பல்கலைகழக மாணவர்களின் கற்றல்சார் மனவழுத்தமும் பாலின வேறுபாடுகளும் விஜிதா.அ. & கலாநிதி க. கஜவிந்தன்	390

45	சங்க இலக்கியங்களில் வாய்மொழி வழக்காற்று மரபுகள் முனைவர் மூ. கருணாநிதி	401
46	எண்பதுகளுக்குப் பின்னரான ஈழத்துத் தமிழ் பேசும் பெண்களின் போர் சார்ந்த கவிதைகள்; - ஓர் ஆய்வு சுதாகினி டெஸ்மன் றாகல்	413
47	தொன்மரபு உணவுகளும் சமையல் முறைகளும் முனைவர் அ. பிரான்சிஸ் லியோ	423
48	கோடுகளையும் வர்ணங்களையும் கையாள்வதனூடாகப் பாடசாலை மாணவர்களின் மனவுணர்வுகளை வெளிப்படுத்தல் டிசாந்தினி நடராசா	432
49	இந்து சமயம்சார் தொல்லியல் சின்னங்களும் அழிந்த நகரங்களும் - பூம்புகார் நகரத்தை அடிப்படையாக கொண்ட ஆய்வு பா.ஜேசினி மதுஷிகா & பேராசிரியர் எஸ்.கேசவன்	438
50	திருவாசகத்தில் விளையாட்டும் சமூகப் பார்வையும் ப.செல்லியம்மாள்	449
51	சங்ககால இலக்கியங்கள் கூறும் பண்டைத் தமிழர்களின் தோற்கருவிகள் பொடிமாத்தையா வேணுகா	451
52	நாட்டிய நாடக வளர்ச்சியில் அரச பாடசாலைகளின் பங்களிப்பு சுமிதா பிரசாந்தன் & கலாநிதி நீலங்க லியானகே	459
53	முதியோர்கள் எதிர்நோக்கும் உளப்பிரச்சினைகள் - ஓர் ஒப்பீட்டு ஆய்வு சுலக்சி. வி, சனிசியா.செ, டிஜானா.ற, கலாநிதி கஜவிந்தன். க	466
54	இலங்கைப் புற உருவப் படத்தில் தரைத்தோற்ற அம்சங்களைக் குறிக்கும் திறனை மேம்படுத்தல் நூகுல்பாய் சப்ராஸ்	476
55	சங்க இலக்கியத்தில் கலை வடிவங்கள் முனைவர் அ.மாலதி	483
56	சமகாலச் செயற்கை நுண்ணறிவில் பண்பாட்டுச் சீரழிவு த.க.மணிஅரசன்	490
57	நீர்வை பொன்னையன் சிறுகதைகளில் ஒடுக்குமுறைக்கெதிரான குரல் ஜென்மம் சிறுகதைத் தொகுப்பினை முன்னிறுத்திய பார்வை லோககீதா.க	502
58	பாரதக்கதை தழுவிய கூத்து முனைவர் முருகு தயாநிதி	511

59	வணிக மேலாண்மைத் திறன்கள்: திவாகர நிகண்டும் மேலாண்மை சிந்தனைகளும் முனைவர் அ.இலட்சுமி தத்தை	521
60	தமிழர் பண்பாட்டு வரலாற்றை மீட்டெடுக்கும் தமிழ்ப் புதினங்கள் : தமிழ் மகனின் ஞாலம் புதினத்தை அடிப்படையாகக் கொண்ட சிறப்புப் பார்வை முனைவர் சு.தமிழ்வேலு	528
61	தமிழர் ஆடை மரபு : இலக்கியம் - ஓவியம் - சிற்பம் முனைவர் வை.மனோகர்	542
62	பண்டைத் தமிழர் வாழ்வியலில் கள் : ஏற்பும் மறுப்பும் திருமதி ஆன் யாழினி சதீஸ்வரன்	544
63	தமிழரின் பழமொழிகளும் பண்பாட்டுச் சொல்லாடல்களும் முனைவர் ச. பட்டம்மாள்	554
64	திருக்கோணேஸ்வரர் ஆலய அமைவிடம் : ஆழ்கடல் சுழியோடல் நுட்பத்தையும் புராணங்களையும் இயற்கையையும் தொடர்புபடுத்திய பூகோள ரீதியான ஓர் ஆய்வு எம். ஸ்ரீசாந்தன்	563
65	மட்டக்களப்புப் பிரதேசத்தில் தொல்லியலும் தமிழ் மொழியின் தொன்மையும் சிவகுரு டிகநாதன்	569
66	மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டையின் வரலாற்றுப் பெறுமதி மிக்க கலைப்படைப்புக்கள் நாகதாஸ் பாரத்	577
67	மத்திய காலக் கிழக்கிலங்கையின் நிர்வாகப் பிரிவுகள் - பற்றுக்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு சு.சுதிர்சனா, & கௌரி லக்சுமிகாந்தன்,	587
68	மத்திய காலக் கிழக்கிலங்கையின் நிர்வாகப் பிரிவுகள் - பற்றுக்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு சு.சுதிர்சனா & கௌரி லக்சுமிகாந்தன்	597
69	கண்டிக் கதிர்காமம் : பெயர் வழக்கும் வரலாறும் எம்.எம்.ஜெயசீலன்,	609
70	தமிழரின் நோய் நீக்கும் யோகக்கலை யோகாச்சாரியா நீலமேகம்	618
71	பட்டினப்பாலையில் பழந்தமிழர் பண்பாடு - ஓர் ஆய்வு. பேராசிரியர் எஸ். கேசவன் & எஸ். விவேகா	623

72	யாழ்ப்பாணத் தமிழர் ஓவிய மரபும், மாற்றமும் சௌவுந்திஸ் தர்மதாஸ்	631
73	நாட்டிய இலக்கண நூல்கள் கூறும் நாட்டியக்காரர்களின் பண்புகள் - சமகால நோக்கு நிலையினூடான விமர்சன ஆய்வு யோகநாதன் துஷாந்தினி	640
74	இலங்கைத் தமிழர் மரபில் பெருங்கற்காலப் பண்பாட்டுக் குறியீடுகள் - ஓர் வரலாற்று ஆய்வு சுந்தரலிங்கம் பிரசாந்தன்	648
75	தமிழ்ப் பண்பாட்டில் பிற பண்பாட்டுத் தாக்கம் : இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் புலம்பெயர் நாவல்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு. ஞா.டிலோசினி,	656
76	மலையக தமிழர்களின், பாரம்பரிய இராமர் பஜனை வழிபாடு: புளத்ஹோப்பிட்டிய பிரதேச செயலகத்திற்குற்பட்ட கந்தலோயா தோட்டத்தை மையப்படுத்திய கள ஆய்வு எஸ்.பி.பருதவனி	665

கட்டுரையாளர்கள்

ஜெ. அரங்கராஜ், இந்தோ ஐரோப்பிய மொழிகள் வேர்ச்சொல் ஆய்வுத் திட்டம் தமிழ் வளர்ச்சித் துறை, சென்னை. <mailto:yallarangan@gmail.com>

அ. ஜெ. கிறிஸ்டி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கோபாலப்பிள்ளை குகன், சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்க் கற்கைகள் துறை கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை, gukank@esn.ac.lk

முனைவர் இராச.கலைவாணி, இயக்குநர், ஏழிசை இசை ஆய்வகம், மயிலாடுதுறை.

அருண்ஜா சஜீவன், பட்டதாரி ஆசிரியர்

ஜீவகரன் ஷம்சிகா, தற்காலிக உதவி விரிவுரையாளர், தமிழ் கற்கைகள் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை. shamshamshi417@gmail.com

தேவகுமாரி சுந்தரராஜன், dsundararaajan@gmail.com.

இளஞ்செழியன் ச, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம். chezhianshanmugam224@gmail.com

முனைவர் அரங்க. மு. முருகையன், உதவிப் பேராசிரியர், புதுவைப் பல்கலைக்கழகச் சமுதாயக் கல்லூரி, புதுச்சேரி. muruguarul@gmail.com

முனைவர் கே. பழனிவேலு, இணைப்பேராசிரியர், சுப்பிரமணிய பாரதி தமிழ் மொழி இலக்கியப் புலம், புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி. kpajanivelou@gmail.com

திருச்செல்வம் கிஷாந்தினி, விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை, இந்துக்கற்கைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். Kishanthiny.t@gmail.com

அருட்தந்தை அ. அ. நவரெட்ணம், முதுநிலை விரிவுரையாளர், கிறிஸ்தவத் துறை, கலை, கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை. navaretnama@esn.ac.lk

கிருபாகரன் சிந்துஜா, sinthuya008@gmail.com

க. மோகனம்பாள், hashinigeetha213@gmail.com

முனைவர் ரா.சரவணன், துறைத்தலைவர், வரலாற்றுத்துறை (முதுகலை மற்றும் ஆராய்ச்சி), பச்சையப்பன் கல்லூரி, சென்னை, thamilannai2004 @yahoo.co.in

காராளசிங்கம் அற்புதன், ஆய்வாளர். atputhan1902@gmail.com

கலாநிதி தி. செல்வமனோகரன், சிரேஷ்ட விரிவுரையாளர், சைவசித்தாந்தத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். tselvan@univ.jfn.ac.lk

கி.கலைமகள், விரிவுரையாளர், கட்புல தொழில்நுட்பக்கலைத்துறை, சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப்பல்கலைக்கழகம், kalaimagalk@esn.ac.lk

சுரேஷ்குமார் டென்சி, முதுகலைமானி மாணவி (வீணை), மகாத்மா காந்தி பல்கலைக்கழகம், கோட்டயம், கேரளா. denshi1995@gmail.com

சுதாகரன் லோவிகரன், (மாணவன்), முதுகலைமாணி இசை,மிருதங்கம் மகாத்மாகாந்தி பல்கலைக்கழகம், திருபுணித்துரா, எர்ணாக்குளம், கேரளா, இந்தியா, lovikaran20@gmail.com

கலாநிதி எம்.பி.ரவிச்சந்திரா, primraj@gmail.com

யே. ஹெரோசினி, herosinijesurasa@gmail.com

பாலரட்ணம் சரண்ஜா, உதவி விரிவுரையாளர், தமிழ்க் கற்கைகள் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம். balarathnamsaranya2@gmail.com

சிவசுந்தரம் கஜானா, உதவி விரிவுரையாளர், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம். skajana99@gmail.com

கலாநிநி வ.குணபாலசிங்கம், சிரேஷ;ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம் இலங்கை, gunapalasingamv@esn.ac.lk

ந.குணசிவருபன், முது தத்துவமாணி மாணவன், kunasivarupankunasivarupan @gmail.com

ப.தாரணி, தற்காலிக உதவி விரிவுரையாளர், மொழித்துறை பிரிவு, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை, thaaranipancha@gmail.com

இ.குகநாதன், kuganathan67@gmail.com

விநாயகமூர்த்தி சௌமியா, இசை ஆய்வாளர்showmiyavinayagam@gmail.com

தம்பிராசா விவானந்தராசா, நடன நாடகத்துறை, சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை. vivanantharasat@esn.ac.lk

ஜெப்ரி தங்கராஜ், உதவி விரிவுரையாளர், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம். jeffrykritheesh97@gmail.com

கணபதிப்பிள்ளை ஞானரெத்தினம், சிரேஷ்ட விரிவுரையாளர், கல்விப்பீடம், திறந்த பல்கலைக்கழகம், இலங்கை, kgnan@ou.ac.lk

கந்தசாமி அபிலாஷ், Email: abiabilash716@gmail.com

எம்.ஏ.எப்.ரிஸ்லா, மொழித்துறை, asmeerisla1@gmail.com

எம்.எச்.எப்.சஹ்னா, புவியியல்துறை, Fathimasahna62@gmail.com கலை மற்றும் கலாசார பீடம், தென்கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை.

தேவரூபன் ஸியாணி, shiyanishiya93@gmail.com

மருத்துவர் கணேஸ் ஸ்ரீதரன், ஹேர்பல் கெல்த் கெயார், சென்ரர், கொக்குவில்,

மருத்துவர் சபாரட்ணம் கணேசன், மருத்துவ அதிகாரி, யாழ் மாநகரசபை, யாழ்ப்பாணம். gsritharan09@gmail.com

செல்வி. ஜு.நிருத்திகா, உதவி விரிவுரையாளர், ஒப்பீட்டுச் சமயமும் சமூக நல்லுறவும் துறை, கலை கலாசாரபீடம், கிழக்குப்பல்கலைக்கழகம். niruththika1997105@gmail.com

ஆர்.சகாயசீலன், சிரேஸ்ட விரிவுரையாளர் நிகூஷ்- மி, ஒப்பீட்டுச் சமயமும் சமூக நல்லுறவும் துறை, கலை கலாசாரபீடம், கிழக்குப் பல்கலைக்கழகம். sahayaseelanr@esn.ac.lk

நா.தக்ஷாலினி, உளவியல் சிறப்புக்கலை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

ரா.விதூஷா, உளவியல் சிறப்புக்கலை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

ம.மரியநாயகி ரோகினி. உளவியல் சிறப்புக்கலை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

க.கஜவிந்தன், சிரேஷ்ட உளவியல் விரிவுரையாளர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். shaliniraja1113@gmail.com

நா.மு.ஹஸ்ஸான், இளமாணி சமூகப்பணி, இரண்டாம் வருட மாணவன் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம். has2k43@gmail.com

தவராசா தர்ஸன், விரிவுரையாளர், சமூகப்பணி பாடசாலை, தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்., thavarasatharshan@gmail.com

ச.கயலினி, உளவியல் சிறப்புகலை மாணவி, யாழ் பல்கலைக்கழகம். skajaliny2018@gmail.com

அ.ஒக்சிகா உளவியல் சிறப்புகலை மாணவி, யாழ் பல்கலைக்கழகம். oxciynavam@gmail.com

கலாநிதி.க.கஜவிந்தன், சிரேஸ்ட உளவியல் விரிவுரையாளர், மெய்யியல் உளவியல் துறை, யாழ்.பல்கலைக்கழகம், kajavinthan@gmail.com

பு.குஷாளினி, உளவியல் சிறப்புகளை மாணவி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். kushaliny1999@gmail.com

க.கஜவிந்தன், சிரேஷ்ட உளவியல் விரிவுரையாளர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

விஜிதா.அ., உளவியல் சிறப்புக்கலை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் francisvijitha@gmail.com

கலாநிதி. க. கஜவிந்தன். சிரேஷ்ட உளவியல் விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். kajavinthan@univ.jfn.ac.lk

முனைவர். மூ. கருணாநிதி. இணைப் பேராசிரியர் &தலைவர். சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம், புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி-605 014.

சுதாகினி டெஸ்மன் றாகல். suthainy@gmail.com

முனைவர். அ. பிரான்சிஸ் லியோ. உதவிப் பேராசிரியர, தமிழ்த்துறை. ஸ்ரீ சாய்ராம் தொழில்நுட்பக் கல்லூரி, மேற்கு தாம்பரம், சென்னை. francisleo.tamil@sairamit.edu.in

டிசாந்தினி நடராசா. முதுதத்துவமாணிப் பட்ட ஆய்வாளர். கிழக்கு பல்கலைக்கழகம் இலங்கை. chelladisha@gmail.com

பா.ஜேசினி மதுஷிகா. தற்காலிக உதவி விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை. கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை. bjmathusika@gmail.com

பேராசிரியர் எஸ்.கேசவன். இந்துநாகரிகத்துறைப் பேராசிரியர், கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை. kesavan@esn.ac.lk

ப.செல்லியம்மாள், தமிழ்ப் பேராசிரியர், எம் ஐ டி வளாகம், அண்ணா பல்கலைக்கழகம், குரோம்பேட்டை. சென்னை. selvimurugan8136@gmail.com

பொடிமாத்தையா வேணுகா. முனைவர் பட்ட ஆய்வாளர். கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை. venu.venuga@gmail.com

முனைவர் அ.மாலதி. தமிழ்த்துறை, புதுவைப் பல்கலைக்கழக சமுதாயகக் கல்லூரி, புதுச்சேரி. smilemalathi@gmail.com

த.க.மணிஅரசன். முதுநிலை காட்சித் தொடர்பியல் துறை, எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம், காட்டாங்குளத்தூர், சென்னை - 603 203, தமிழ்நாடு, இந்தியா.

லோககீதா.க, தமிழ் மொழித்துறை, தேசிய கல்வி நிறுவகம், மகரகம. klgeeth@gmail.com

முனைவர் முருகு தயாநிதி. முதுநிலை விரிவுரையாளர், தமிழ்மொழித்துறை தேசிய கல்வி நிறுவகம், இலங்கை. muruguthayanithy@gmail.com

முனைவர் சு.தமிழ்வேலு, இணைப் பேராசிரியர், தலைவர் தமிழாய்வுத்துறை, அ வ அ கல்லூரி(தன்னாட்சி), மன்னன் பந்தல், மயிலாடுதுறை

முனைவர் வை.மனோகர், தமிழ்ப் பயிற்றுநர், அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி, திருக்குவளை, நாகப்பட்டினம் - 610204, தமிழ்நாடு, இந்தியா. <mailto:dr.manogar2022@gmail.com>

ஆன் யாழினி சதீஸ்வரன். விரிவுரையாளர், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை sanneyalini@yahoo.com

முனைவர்.ச.பட்டம்மாள், முதல்வர், திரவியம் கலை & அறிவியல் மகளிர் கல்லூரி, பெரியகுளம் - 625 605. தேனி மாவட்டம். தமிழ்நாடு. இந்தியா <mailto:pattupugazhini@gmail.com>

நாகதாஸ் பாரத். ஆய்வாளர். <mailto:n.mr.barath@gmail.com>

சு.சுதிர்சனா, உதவி விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை. s.suthi.shana1015@gmail.com

கௌரி லக்சுமிகாந்தன், சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை. gowryl@esn.ac.lk

எம்.எம்.ஜெயசீலன், முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம். jseelanuop@gmail.com

யோகாச்சாரியா நீலமேகம். <mailto:nilabala38@gmail.com>

யோகநாதன் துஷாந்தினி. முனைவர் பட்ட ஆய்வாளர். கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை thushanthiniy@gmail.com

ஞா.டிலோசினி, ஆசிரியர், தி/மூ/கிளிவெட்டி மகாவித்தியாலயம். gnadilog22@gmail.com

யோகாச்சாரியா நீலமேகம், nilabala38@gmail.com.

யோகநாதன் துஷாந்தினி, முனைவர் பட்ட ஆய்வாளர், கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை, thushanthiniy@gmail.com

முனைவர் கே. பழனிவேலு, இணைப்பேராசிரியர், சுப்பிரமணிய பாரதி தமிழ் மொழி இலக்கியப் புலம், புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி, kpajanivelou@gmail.com

எஸ்.பி.பருதவனி, புவியியல் துறை, கலை கலாசார பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம். <mailto:Bawadharani2000@gmail.com>

Prof.Dr.S.Kesavan, Professor in Hindu Civilization, Department of Hindu Civilization, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka. kesavans@esn.ac.lk

Miss.S.Vevoka, M.phil (Scholer), Department of Hindu Civilization, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka. vevokav@ gmail.com.

M.Srishanthan. <mailto:srishanthan7@gmail.com>

Sawunthis Tharmathas, Lecturer at Sri Pada National College of Education, Patana, Nuwara Eliya, Sri Lanka. cartoonthaas@gmail.com

Prof.Dr.S.Kesavan, Professor in Hindu Civilization, Department of Hindu Civilization, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka. kesavans@esn.ac.lk

S.Vevoka, M.phil (Scholer), Department of Hindu Civilization, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka. vevokav@gmail.com

Sawunthis Tharmathas, Lecturer at Sri Pada National College of Education, Patana, Nuwara Eliya, Sri Lanka. cartoonthaas@gmail.com

Suntharalingam Pirashanthan, Govt. teachers' college, kotagala, Sri Lanka. artpirasa@gmail.com

S. Chandrakumar, Research Scholar,Department of Performing Arts, Pondicherry University, Puducherry. E-mail: chandrakumars@esn.ac.lk

Dr. K. R. Rajaravivarma, Associate Professor, Department of Performing Arts, Pondicherry University, Puducherry. E-mail: avkoodam1966@gmail.com

Professor V.inpamohan, Professor in Fine Arts, Department of Fine Arts, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanla.e Mail: inpamohanv@esn.ac.lk

A.Pakirathan, Registrar, Eastern University, Sri Lanla. registrar@esn.ac.lk

K. Thavaseelan, Ph.D Scholar, Faculty of Graduate Studies, Eastern University, Sri Lanka. seelank900@gmail.com

Prof. Dr. (Mrs). S. Kesavan, Professor in Hindu Civilization, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka. (kesavans@esn.ac.lk

K.Mohanathasan, Senior Lecturer, SVIAS, EUSL mohanathasank@esn.ac.lk

மதிப்பீட்டுக்குழு

வாழ்நாட் பேராசிரியர்(திருமதி) அம்மன்கிளி முருகதாஸ் (இலங்கை)
பேராசிரியர் மு.கருணாநிதி (இந்தியா)
பேராசிரியர் பி.ரவிக்குமார் (இந்தியா)
பேராசிரியர் அரங்க மு.முருகையன் (இந்தியா)
பேராசிரியர் கே.திலகவதி (இந்தியா)
பேராசிரியர் உமா மகேஸ்வரி (இந்தியா)
பேராசிரியர் வ.இன்பமோகன் (இலங்கை)
பேராசிரியர் சி.சந்திரசேகரம் (இலங்கை)
பேராசிரியர் கே. ராஜேந்திரம் (இலங்கை)
பேராசிரியர்.தே.முகுந்தன் (இலங்கை)
பேராசிரியர் (டாக்டர்) ஏ.எப்.எம். அஷ்ரப் (இலங்கை)
முனைவர் குமரவேலன் (மலேசியா)
முனைவர். ம. நதிரா (இலங்கை)
திருமதி றூபி வலன்ரினா பிரான்சிஸ் (இலங்கை)
முனைவர் வ.குணபாலசிங்கம் (இலங்கை)
திரு. P. சச்சிதானந்தம் (இலங்கை)
திரு. G. விக்னேஸ்வரன் (இலங்கை)
முனைவர் K. ஸ்ரீகருணாகரன் (இலங்கை)
முனைவர் து.உஷாந்தி (இலங்கை)
முனைவர் செ.அருள்மொழி (இலங்கை)
முனைவர் நா. வாமன் (இலங்கை)
திருமதி தாக்ஷாயினி ராஜேந்திரன் (இலங்கை)
திரு. வெ. அழகரத்தினம் (இலங்கை)
திருமதி.கௌரி லக்ஸ்மிகாந்தன் (இலங்கை)
திருமதி விஜிதா திவாகரன் (இலங்கை)
திரு. சந்துரு மரியதாஸ் (இலங்கை)
முனைவர் ம.சோமதாசன் (இலங்கை)
முனைவர் த.மேகராசா (இலங்கை)
திரு.பா.சுமன் (இலங்கை)

1

தமிழர் கலை பண்பாடு ஆய்வுகள்

பேராசிரியர் பாஞ். இராமலிங்கம்,
புதுவைப்பல்கலைக் கழகம்.

ஆசிய அளவில் சிறந்தப் பல்கலைக்கழகமாகத் திகழும். கிழக்குப் பல்கலைக் கழகம் இலங்கை, திருகோணமலைபகுதியில் 1960ஆம் நிறுவ முயற்சிக்கப் பெற்றது. இதன் மூலம் மட்ட களப்பு மாவட்டத்தில் வந்தாறுமூலையில் 1981 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகக் கல்லூரியாக உருவாகப் பெற்று 1986இல் முழுமையான பல்கலைக்கழகமாக அமைந்தது.

இப்பல்கலைக் கழகத்துடன் இணைக்கப் பெற்றுள்ள சுவாமி விபுலானந்த இசை நடனச் கல்லூரி நொச்சி முனையில் நிறுவப் பெற்றுள்ளது.

தமிழர்தம் வரலாறு, கலை பண்பாடு போற்றும் வகையில் இப்பல்கலைக்கழகத்தில் தமிழ் கற்கைகள் துறை நிறுவப் பெற்றுள்ளது. வரலாற்றுச்சிறப்பு மிக்க இப்பல்கலைக் கழகம் தமிழரின் அடையாளமாகத் திகழ்கிறது. இப்பல்கலைக்கழகத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள பன்னாட்டு ஆய்வு மாநாடு தமிழர்களின் சிறப்பினை எடுத்துரைக்கும் வகையில் ஏற்பாடு செய்யபட்டுள்ளது.

இவ்வாய்வு மாநாடு தமிழரின் கலை, பண்பாட்டு பரிணாமத்தை ஆய்வுநோக்கில் உள்ளடக்கியுள்ளது. குறிப்பாக பண்டைய தமிழர் வரலாறு தொடங்கி தற்கால தகவல் தொழில் நுட்பம் உள்ளடக்கி ஆய்வாளர்கள் தங்களின் ஆய்வுகளை இம்மாநாட்டு ஆய்வரங்கங்களில் விவாதிக்கவுள்ளனர். அதன் பொருட்டு கீழ்க்கண்ட அம்சங்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

தமிழர் கட்டிடக் கலை

தமிழரின் கட்டிடக் கலைக்குச் சான்றாக அமைபவை தமிழர்களின் கோவில்களாகும். குறிப்பிட்டுக் கூறுகையில் தஞ்சை

பெரிய கோவில் தொடங்கி ஆறாம் நூற்றாண்டிற்குப் பிறகு கட்டப்பட்டுற்ற கோவில்கள் தமிழகம் மட்டுபின்றி இலங்கை மலேசியா, கம்போடியா, தாய்லாந்து, மொரிசியசு, ரீயூனியின் உலகெங்கும் உள்ளன. இவற்றை தொகுப்பதும் வரலாற்று மூலமாக பாதுகாப்பதும் இன்றைய தமிழ் கூறும் நல்லுலகம் முன்னெடுக்க வேண்டிய முக்கிய கடமையாகும்.

தமிழரின் சிற்பக் கலை

மிகச்சிறந்த எடுத்துக்காட்டாக மகாபலிபுரத்தைக் குறிப்பிடலாம். அத்துடன் சிற்பக்கலை கோவில்களிலும் வெளிப்படக் காணலாம். இவை இன்றைய நிலையில் மிகச்சிறந்த அடையாளமாகத் திகழ்கின்றன. சிற்பக் கலையுடன் தொடர்புடைய ஓவியக் கலையும் குறிப்பிடத் தக்கதாகும்.

அண்டையில் தமிழ்நாட்டில் அண்ணா பல்கலைக்கழகத்தில் இத்தகையக் கலைகளைப் போற்றும் தமிழ் பாடத்திட்டம் தொடங்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முத்தமிழால் போற்றப்படும் இயல், இசை, நாடகக் கலைகள் தமிழரின் வரலாற்றோடும் தனித்துவத்தோடும் உள்ளன, அவை முறையாக வளர்த்தெடுக்க பல்கலைக்கழகங்கள் முன்வர வேண்டும். அவ்வகையில் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம், அண்ணா பல்கலைக் கழகம், புதுவைப் பல்கலைக்கழகம் சிறந்த துறைகளைக் கொண்டு புதிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இம்முயற்சிகளின் ஆய்வுகள் இம்மாநாட்டில் எழுத்துரைக்கப்படவுள்ளன.

தமிழர் ஆடற்கலை

தமிழர்களின் கரகாட்டம், சிலம்பம், யோகக்கலை போன்றவை தமிழரின் பண்பாடு போற்றி நிற்கின்றன. இச்கலைகள் தற்காப்பு நிலையில் தமிழர்களின் கேடயமாகப் பாதுகாக்கப்படுவதுடன் பல்வேறு அமைப்புகள் இக்கலைகளை வளர்த்து வருகின்றன.

அவ்வாறே பேச்சுக்கலையும் எழுத்துக் கலையும் தமிழர்தம் பெருமை பேசுவதாக அமைந்துள்ளன.

திரைப்படக்கலை

வரலாற்றில் பண்டைய நாடகக் கலை திரைப்படக் கலையாக வளரத் தொடங்கிய 20 ஆம் நூற்றாண்டு மிகப்பெரிய மாற்றத்தையும் முன்னேற்றத்தையும் தமிழர்களிடம் உருவாக திரைப்படக் கலை மிக்க உதவியாக அமைந்தன. பண்பாட்டை படம் பிடித்துச் காட்டுவதுடன் எளிதில் தமிழர்களிடையே பரவி சீரான வளர்ச்சிக்கு வித்துட்டுள்ளது. பழைய பண்பாட்டு பழக்க வழக்கங்களின் கடைபிடிக்க வேண்டியவற்றை முறையாக எடுத்துரைப்பதில் பங்காற்றியுள்ளன.

இன்றைய நிலை

தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப தமிழரின் வாழ்க்கை முறைகளும் விரைவான மாற்றங்களைக் கண்டு வருகிறது. குறிப்பாக கல்வி, தொழில் நுட்பத்தில் தமிழர் குறிப்பிடத் தக்கவகையில் சிறப்பாக பணியாற்றுகின்றனர். வேகமாக வளர்ந்துவரும் தகவல் தொழில் நுட்பத்திற்கு ஏற்ப தமிழ் எழுத்து சீர்திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இன்றைய இளைய தலைமுறையினர் மொழியின் வளர்ச்சியிலும் மிகுந்த அக்கறை செலுத்த வேண்டும். பண்டைய வரி வடிவங்களைப் போற்றிப் பாதுகாப்பதுடன் இன்றைய எதிர்கால வேகத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் மொழி செம்மைப்படுத்த வேண்டும். புதிய சொற்கள் ஆயிரக்கணக்கில் உருவாக்கப்பட வேண்டும். மொழிமாற்றம் செய்யாமல் (Transliteration) புதிய சொற்களை உருவாக்கி மொழியை பலப்படுத்தவேண்டும் எந்த காலத்திற்கும் ஈடுகொடுக்கக் கூடிய வகையில் மொழி வளமாக இருந்தால்தான் பிற மொழி தாக்கத்திற்கு ஆட்படாமல் தனித்துவம் பெற்றுத் திகழமுடியும்.

இத்தகைய முயற்சிகளுக்கு இம்மாநாடு சிறந்த களமாக அமையும். தமிழ் கூறும் நல்லறிஞர்கள் நூற்றுக்கணக்கில் கூடி விவாதித்து மொழியின் பெருமை காப்பதுடன் மொழியை வளப்படுத்துவதில் தங்களின் ஆக்கபூர்வமான பங்களிப்பைச் செலுத்தவேண்டும்.

இம்மாநாடு எதிர் கொள்ளவுள்ள ஆய்வரங்கங்களில் மொழியின் சிறப்பு, கலை, பண்பாடு குறித்து மேற்கொள்ளப்படும் கலந்துரையாடல்களின் அடிப்படையில் உருவாக்கப்படும்

கருத்துருவாக்கம் எதிர்கால தலைமுறையினருக்கு ஒரு உந்துதலை உருவாக்க வேண்டும். கூடி, விருந்துண்டு, சுற்றுலா மாநாடு போல் இல்லாமல் ஆக்கபூர்வமான அறிவுத் தேடலுக்கு அடித்தளம் அமைக்க வேண்டும்.

இம்மாநாடு இலங்கையில் ஓர் ஐம்பது ஆண்டுகால வரலாற்றைப் பதிவு செய்து 1974 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் நகரத்தில் முன்னெடுக்கப்பட்ட நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் நினைவு போற்றி தமிழரின் பண்பாட்டை முன்னிறுத்துகிறது.

இம்மாநாடு சிறப்புற நடைபெற அனைத்து முயற்சிகளையும் முறையாக முன்னெடுக்கும் பேராசிரியர் வல்லிபுரம் கனக சிங்கம் (துணை வேந்தர், கிழக்குப் பல்கலைக்கழகம்) வவுனியா பல்கலைக் கழகத் துணை வேந்தர் பேராசிரியர் த. மங்களேஸ்வரன், சமூக விழிப்புணர்வாளர் திரு மாவை. சோ. தங்கராசா, சிறப்பிற்குரிய உடன்பிறவா சகோதரர் கலாநிதி பகீரதன் அமிர்தலிங்கம் ஆகியோரின் பின்புலமும் ஒத்துழைப்பும் என்றும் எண்ணத்தக்கது.

.

2

திருக்குறளில் ஆசீவகம்

ஜெ. அரங்கராஜ்
இந்தோ ஐரோப்பிய மொழிகள் வேர்ச்சொல் ஆய்வுத் திட்டம்
தமிழ் வளர்ச்சித் துறை, சென்னை.
yallarangan@gmail.com

அ. ஜெ. கிறிஸ்டி
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

முன்னுரை

தெற்காசிய மரபிற் தோன்றிய மெய்யியல் மரபுகளையும் பிறபகுதிகளிற் தோன்றி இந்தியத்துணைக் கண்டத்திற் பரவிய மெய்யியல் மரபுகளையும் தன்னகத்தே உருவான மெய்யியல் மரபுகளையும் ஆவணமாக்கி வைத்துள்ள ஒரே தெற்காசிய மொழி தமிழ் என்பதில் யாதொரு ஐயப்பாடும் எழுதலுக்கு வாய்ப்பில்லை. நீண்ட வலாற்றுத் தொடர்பையும் சமயநிலைப் பயன்பாட்டையும் அறிவுப்புலத் தொடர்பாடலையும் தமிழ்மொழி வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டே பெற்றுவந்துள்ளமையால் மெய்யியல் தளமாக தமிழ்மொழி அமைந்துள்ளதெனலாம். அவ்வாறான மெய்யியற் கருத்துக்களின் தாக்கம் இன்றளவும் தமிழ் மக்களது வாழ்வியலிலே பல்வேறு வடிவங்களில் இடம் பெற்றுள்ளமை இன்றும் காணக்கூடியதாகின்றது. அவ்வகையில், தமிழரின் வாழ்வியலொடு பெரிதும் தொடர்புடையதும் உயர்ந்த சிந்தனை மரபினை உடையதுமாகத் தோன்றிய சமயமே ஆசீவக சமயமாகும். இச்சமயம் குறித்தும் இதன் தோற்றுவாய் குறித்தும் முழுமையாக அறியமுடியாமல் உள்ளபோதும் பிறமொழிகள் யாவற்றைக் காட்டிலும் தமிழிலேயே இச்சமயக் கருத்துக்கள் குறித்தான செய்திகள் மிகுந்து காணப்படுகின்றன. ஆதலால் இவ்வாய்வினை மேற்கொள்ள வேண்டிய தேவை என்பது தமிழின் மெய்யியல் வளத்தினை அறிதலுக்கும் பெரிதும் பயனுடையதாக அமையும். அவ்வகையில், திருக்குறள் கொண்டிருக்கும் இவ்வாசீவக

சமயத்தின் ஊழ் கொள்கை பற்றிய மெய்யியல் சிந்தனை தொடர்பில் ஆராய்தல் இன்றியமையாததாகும்.

ஊழ் கொள்கை

எதுவும் மனித முயற்சியால் நிகழ்வதல்ல. எல்லாம் முன்னமே முடிவு செய்யப்பட்டன. அதன் வழிப்பட்டே அந்நிகழ்வுகள் நிகழ்கின்றன. இதனை நியதி, ஊழ், முறை என்னும் பெயரால் வழங்கினர். 'இல்லது தோன்றா உள்ளன மறையா' என்பதன்வழி எவ்வளவுதான் முயற்சித்தாலும் இல்லாததொன்றினை உருவாக்கலும் உள்ளதை முற்றிலும் அழித்தலும் இயலாது. ஒரு உயர்ந்த இடத்தில் இருந்து கொண்டு நூல்கண்டு ஒன்றினை நீளவிட்டால் அது எவ்வளவு நீளம் உள்ளதோ அவ்வளவு நீளம் நீளமுடியும். அதுபோல் ஊழின் போக்கு எப்படியுள்ளனவோ அவைபோலவே மனிதச் செயல்களும் அமையும். அனைத்து மனிதர்களும் பாகுபாடற்ற நிலையில் ஊழினுக்கும் தற்செயலுக்கும் தமக்கேயுரிய இயல்பிற்கும் கட்டுப்பட்டவர்கள். உயிர்கள் மண்டல நெறியில் எண்பத்து நான்கு இலட்சம் மகாகல்ப ஆண்டுகளுக்கு மீண்டும் மீண்டும் பிறந்து பிறந்து இன்பதுன்பங்களில் உழன்று அதன் பிறகே வீடுபேற்றினை அடைய முடியும். சிலப்பதிகாரம் ஊழின் வழிச் செல்லும் மனித வாழ்வை விளக்குவதில் சிறப்புப் பெறுகின்றது. கர்மாக் கோட்பாட்டினை ஆசீவகர்கள் ஏற்கவில்லை. ஆதலால், இவர்களைக் 'காரணம் வேண்டக் கடவுட் குழாம்' என அழைத்தனர். பழந்தமிழ் மக்களின் எண்ணங்களில் தோன்றிய கருத்தே ஊழ்க் கருத்தும் கருமக் (வினை) கருத்துமாகும். இது ஆரியரின் வருக்கைக்கு முன்பே இம்மண்ணில் தோன்றி நிலவி பரவியதெனலாம். ஏனெனில், தொடக்ககால ஆரியரின் மறைகளில் ஊழ் குறித்தோ வினை குறித்தோவான கருத்தியல்கள் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் தலைவனும் தலைவியும் சந்திக்கக் கூடிய நிகழ்வு ஊழின் வகைமையால் நிகழ்வதென்பதனை

"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோ னாயினுங் கடிவரை இன்றே"

என்ற நூற்பாவில் பாலதாணையின் வழி தலைவனும் தலைவியும் சந்தித்ததாகக் கூறியுள்ளமை ஊழின் செல்வாக்கினை உணர்த்துவதாகும். அதுபோலவே, தொல்காப்பிய களவியலில் தோழி கூற்று இடம்பெறும். 'தலைவரு விழும' என்ற நூற்பாவில் உடன்போக்கில் சென்ற தலைவியை நினைத்துத் துயருறும் தாயின் நிலையினை மாற்ற தோழி உழுவலன்பின் பொருட்டே தலைவி தலைவனுடன் உடன்போக்கில் சென்றதாக நச்சினார்க்கினியர் கூறுவர். உழுவலன்பென்பது ஊழின்வழி ஏற்பட்ட அன்பினாலாகும்.

ஆசீவகம் தொடர்பான செய்திகளைக் கூறும் சங்கப்பாடல்களாகட்டும். சிலப்பதிகாரம், மணிமேகலை, நீலகேசி, சிவஞான சித்தியர் முதலான எந்நூல்களிலுமே மனித முயற்சியின் முதன்மை குறித்து ஆசீவகரின் சிந்தனை என்பது ஏதுமற்ற நிலையினை உடையமையினைக் குறிப்பதாகவே உள்ளது. ஆனால், 'மனிதர்கள் முயலாமல் சோம்பி இருத்தல் வேண்டும்' என்ற கருத்தினையும் ஆசீவகம் ஏற்கவில்லை. முயற்சியும் முயற்சியின்மையும் ஊழின்வழி ஏற்படுவனவே. அதன்வழி, 'முயலுவோர் முயலுவர் முயலாதார் முயலாதுவிடுவர்' என்பதாக அமையும். இவற்றில் கவனிக்க வேண்டியது யாதெனில் ஆசீவகக் கோட்பாடுகள் மனித குலம் அனைத்திற்கும் பொதுவானதாகும். ஏற்றத்தாழ்வுகளை ஆசீவக மெய்யியல் ஏற்றதில்லை. பிற அவைதீக சமயங்களிற் பல ஏற்றுள்ளன என்பது எண்ணத்தகும்.

வீடுபேறு

'உலகில் உள்ள உயிர்களின் எண்ணிக்கை கூடுதலும் இல்லை குறைதலும் இல்லை' என்னும் கொள்கையினை உடையோர் ஆசீவகர். அவர்கள் வீடுபேற்றினை இருநிலைகளில் கொண்டுள்ளனர். ஆவையாவன: மண்டல நெறி மற்றும் செம்போக்கு நெறி என்பனவாகும். மண்டல நெறியில் வண்ணக் கொள்கைகளின் அடிப்படையில் ஒரு உயிர் 84 இலட்சம் மகா கல்ப ஆண்டுகள் மீண்டும் மீண்டும் பிறந்து துன்ப இன்பநிலைகளை மாறிமாறி அடைந்து 84 இலட்சம் மகாகல்ப ஆண்டுகள் நிறைவடைந்தவுடன், இயல்பாகவே வீடுபேற்றினை அடைந்துவிடும். செம்போக்கு நெறியில் கழிவெண்பிறப்பில் வீடு பேறடையும் உயிரானது மீண்டும் பிறக்காது. ஆனால் மண்டலநெறியில் வீடுபேறடையும் உயிர் உலகில் உயிர்களின்

சமநிலையினைப் பேணுதற் பொருட்டு மீண்டும் பிறத்தலுக்கு வாய்ப்பு உண்டு. சமணர்கள் பெண்களுக்கு வீடுபேறில்லை என்பர். ஆனால், ஆசீவகர் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வீடுபேற்றில் வேறுபாடில்லை என்பர்.

தற்செயல்

தற்செயல் நிகழ்வுகள் ஆசீவகத்தில் முதன்மை பெறுவனவாகின்றன. தேவை என்பது தற்செயலுக்கான எதிர்மறைப் பண்பாகும். தேவையைத் தற்செயல் நிறைவு செய்கின்றது எனக் கருதவும் இடமுண்டு. சிலம்பை நல்விலைக்கு விற்றல் வேண்டும் என்ற பொருளீட்டற் தேவை கோவலனைத் தற்செலயாகச் சந்தித்த பொற்கொல்லனிடம் பேசச் செய்தது. தேவையற்ற நிலையிலும் தற்செயல் நிகழும். மாதவியின் மாலையை வாங்க வேண்டும் என்னும் தேவை கோவலனுக்கு இல்லை. ஆயினும், வேண்டினார். ஏனெனில், எதனையும் 'பட்டெனச்' செய்யும் அவனது இயல்பு தற்செயல் நிகழ்வால் அவனைத் தூண்டி மாலையை வாங்கச் செய்தது. தற்செயல் என்பது தேவை, தேவையற்ற என்ற இரண்டு நிலைகளிலும் வினையாற்றக் கூடியது. அதனால், ஒரு மாற்றத்தினை நோக்கி நகர்த்தக் கூடியதாகின்றது.

சதுவா நியதங்கள் (நாற் கொள்கைகள்)

ஆசீவகர்களின் ஊழ்க் கொள்கையின் செயற்பாட்டு முறையினை விளக்கக் கூடியனவாக சதுவா நியதங்கள் என்னும் இந்நாற் கோட்பாடு அமைந்துள்ளது.

1. ஊழின் வழி ஒரு நிகழ்வு நிகழ வேண்டுமென்றிருந்தால் எப்படியும் நிகழும். அதனை யாராலும் தடுத்தலியலாது.
2. எப்படி நிகழ வேண்டும் என எழுத்து முறை செய்யப்பட்டதோ அப்படியே நிகழும்.
3. எந்த அளவு நிகழவேண்டுமோ அதே அளவே நிகழும்.
4. எவ்வளவு கால அளவிற்குள் நிகழவேண்டுமோ அதே கால வரைவினுக்குள் நிகழும்.

திருக்குறளில் ஆசீவக மெய்யியல் சிந்தனைகள்

இனித் திருக்குறளிற் காணப்படும் ஆசீவக சமயக் கருத்துக்களை நோக்குவோம். பௌத்தம் நடுநிலை (மத்தியஸ்தம்) என்னும் கொள்கையினைச் சிறப்பு நிலையில் கடைப்பிடித்தமை போல் ஆசீவகம் ஊழினைத் தனது முதன்மைக் கோட்பாடாகக் கைக்கொண்டதெனலாம். ஆசீவகத்தினளவு ஊழினுக்கு முதன்மை கொடுத்த சமயம் வேறொன்றில்லை எனலாம். திருவள்ளுவரும் தமது நூலில் ஊழினுக்கே பல இடங்களில் முதன்மை கொடுத்துள்ளார். திருக்குறள் அல்லாத மற்ற அறநூல்கள் யாவும் கருமக் கோட்பாட்டினுக்கே முதன்மை கொடுக்க திருக்குறள் மாத்திரமே கருமக் கோட்பாட்டினும் ஊழினுக்கு மிகுதியான முதன்மையினைக் கொடுப்பதாக அமைந்தது எனலாம். ஊழ் குறித்து திருக்குறள் கூறும் கருத்துக்கள் ஆசீவகத்துடன் பொருந்துமாற்றைக் காணலாம்.

திருவள்ளுவர் தம்குறளின் ஊழ் என்னும் மனித வாழ்வை வழிநடத்தும் முறைமை குறித்து விளக்குதற் பொருட்டு ஒரு அதிகாரத்தினையே படைத்துள்ளார். ஊழ் என்னும் அதிகார முன்னுரையில் பரிமேலழகர் அஃதாவது இருவினைப்பயன் செய்தவனையே சென்றடைதற்கு ஏதுவாகிய 'நியதி, ஊழ், பால்முறை, உண்மை, தெய்வம், விதியென்பன ஒருபொருட்கிளவி' என விளக்கங்கூறுவர். ஆனால், இது ஏற்புடையதல்ல. திருக்குறளில் இடம்பெறும் ஊழ் என்னும் சொல் முன்னமே முடிவு செய்யப்பட்டது. மனித வாழ்வினை வழிநடத்துவது என்பதன் அடிப்படையிலேயும் ஊழின்வழி நடந்தே உயிர்களின் வீடுபேற்றினை நோக்கி நகர இயலும் என்னும் முறைமைத் தன்மையை விளக்குவதாகவும் அமையக் காணலாம். ஒருவனுக்கு எது நடக்க வேண்டும் என முன்முடிவு செய்யப்பட்டதோ அதுவே நிகழும். அந்நிகழ்வு எக்காலகட்டத்தில் நிகழவேண்டுமோ அக்காலகட்டத்திலேயே நிகழும். இதனையே ஆசீவக மெய்யியல் மரபு சதுவா நியதங்கள் என வழங்க, குறள் இதனையே,

பேதைப் படுக்கும் இழவூழ் அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை (குறள் 372)

என்று துன்பம் நிகழ்தலும் இன்பம் சேர்தலும் முன்னமே ஊழின் வழி முடிவு செய்யப்பட்டதாகும். இழத்தலும் சேர்த்தலும்

உயர்த்தலும் தாழ்த்தலும் ஊழின் அடிப்படையிலேயே நிகழ்வன என்னும் ஆசிவகக் கருத்தியலை காணக்கூடியதாக உள்ளது.

ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி (குறள் 371)

பொருள் தேடலுக்கான முயற்சியினை உருவாக்குதலும் ஊழின் வழி நிகழ்வதுதான். பொருள் இழப்பிற்கு ஏதுவாகிய மடியினை உருவாக்குவதும் ஊழின் வழிப்பட்டதுவேதான். எவை எவை எவ்வெவ் காலத்து நிகழுமோ அவ்வக் காலத்து நிகழும். ஆக்கமும் கேடும் ஊழின் வழிப்பட்டே நிகழ்வன. இவற்றினுக்குக் காரண காரியத் தேடல் என்பது தேவையற்றதாகின்றது என்னும் ஆசீவக மெய்யியலை இக்குறளிலும் காணலாம். ஊழினை ஆசீவக மரபு குறித்துக் கூறும் நூல்களினையும் தாண்டி ஆகூழ், போகூழ், இழவூழ், ஆகலூழ் என்பனவாகத் திருக்குறளே வகைமை செய்கின்றது. ஊழினைவிட வலியது ஒன்றுமில்லை. எவ்வகையில் முயன்றாலும் ஊழினைக் கடந்து ஒன்றினையும் செய்துவிட லென்பது இயலாது. ஊழே பெருவலிமையினையுடையது. இதனை,

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும். (குறள் 380)

முயற்சி, துணைவலி, அரண், செல்வம், படை மாட்சி என்பனவான எவை சூழினும் அவை ஊழின் முன் வெற்றி பெறுதலியலாது. ஊழின்முன் அவை தோற்றொதுங்கும். இதனையே சிலப்பதிகாரக் கதைப்போக்கு நமக்குத் தெளிவுறுத்தும். கோவலனின் ஊழினை முன்கூட்டியே கனவின்வழி அறிந்த நிலையிலும் அதனைத் தடுத்தலுக்கான முன் முயற்சிகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆனால், சமணக் காப்பியமான சீவகசிந்தாமணியில் சீவகன் ஊழினை எதிர்த்து வெற்றி பெறுபவனாகக் காட்டப்பட்டுள்ளான். இதன்வழி திருக்குறள் சமண மரபிலிருந்து மாறுபட்டு ஆசீவக மரபின் வழி நிற்றலினை அறியலாம். ஊழின் வலியினை கழுவாய்கள் செய்தோ நல்வினைகள் செய்தோ மாற்றுதல் என்பது இயலாத செயலாகும். ஊழினால் விளையும் நன்மைகளை எவ்வாறு துய்க்கின்றோமோ அவ்வாறே அதன் விளைவால் வரும் துன்பங்களையும் துய்த்தலென்பது தவிர்க்கவியலாததாகும். எவ்வகைக் கழுவாயும் தேடிக் கொள்ளவென்பதியலாது. இதனை,

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன் (குறள் 379)

இன்பத்தினையும் துன்பத்தினையும் ஒன்றாகக் கருதுதல் என்பது ஆசீவக மரபு. துன்பத்துள் இன்பம் தேடுதல் என்பது அம்மரபின் கொள்கையாகும். அதனைத் தெளிவுறுத்திய வகைமையிலேயே மேற்கண்ட குறள் அமைந்துள்ளமையினைக் காணலாம். நன்மையும் தீமையும் முன்பே முடிவு செய்யப்பட்டன. மனிதர்களின் செயல்களால் அவை நிகழ்வதில்லை. அவை மனிதர்களுக்கு அப்பாற்பட்டவை என்பதான ஆசீவகத்தின் கருத்தியலை விளக்குவதாகவே மேற்கண்ட திருக்குறள் அமைந்துள்ளது. மனிதர்களின் அறிவினால் எச்செயல்களும் நிகழ்வதில்லை. ஒருவன் அடையக்கூடிய நற்பேறும் ஒருவன் அடையக்கூடிய இழிவும் அவனவன் செயல்களால் நிகழ்வனவல்ல. அவை முன்னமே முடிவானவை. ஒரு நூல் கண்டினை உயர்ந்த இடத்திலிருந்து உருட்டிவிட்டால் அது எவ்வாறு முடியும் வரை நீளுமோ அதுபோலவே முன்னம் முடிவு செய்யப்பட்ட ஊழின் வழிப்பட்டே மனித வாழ்வானது செல்லும். அதில் எவ்விட மாறுதலுக்கும் இடமில்லை. இதனையே வள்ளுவரும்,

இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு (குறள் 374)

என்ற குறளின் வழி கூறுகின்றார். இருவேறு உலகம் என்றமையால் வறுமையும் செழுமையும் ஆகிய பண்பு வேறுபட்ட உலகமென்னும் ஆசீவகக் கொள்கையாகும். இதனை 'ஓரில் நெய்தல் கரங்க' என்ற புறப்பாடலின் கருத்துடனும் ஒப்பிட்டு நோக்கலாம். இவையாவும் ஆசீவகக் கருத்தியலாகவே அமைபவை.

அணுக்கள் புதிதாகத் தோன்றுவதுமில்லை அழிவதுமில்லை மாறுதலும் இல்லை. அணுக்கள் ஒன்று சேர்ந்து பொருட்களை உருவாக்குகின்றன. பின் அவ்வணுக்கள் தனித்தும் பிறக்கின்ற நிலையில் மீண்டும் தாங்கள் பழைய நிலையினையே அடைகின்றன. அணுக்கள் சேரும்பொழுது எந்த அணுதக்களின் விழுக்காடு மோலோங்கியுள்ளதோ அந்த அணுவின் தன்மையையே பெறும் என்பது ஆசீவக மெய்யியல். அதனடிப்படையில் ஒருவன் எத்துனை அறிவினை வளர்க்கும்

முயற்சியை மேற்கொண்டாலும் அவனது உண்மையறிவே வெளிப்படும் என்னும் கருத்தியலில் அமைந்த குறளாக,

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும் (குறள் 373)

என்ற குறள் அமைந்துள்ளமையினைக் காணலாம். நாம் செய்யும் நல்வினையால் நன்மைகள் நடக்கும் என்றும் தீவினையால் தீயது நடக்கும் என்றும் கர்மக் கோட்பாட்டில் ஆசீவகர்களுக்கு நம்பிக்கை இருந்ததில்லை. 'இல்லன தோன்றா உள்ளன மறையா' என்னும் கருத்தியலிலே மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தனர். ஒருவன் அனைத்தும் கற்ற அறிஞனாக இருப்பதும் ஏதுமறியாதோனாக இருப்பதும் முன்னமே முடிவு செய்யப்பட்டன. இவற்றில் அத்தனிமனிதனின் பங்களிப்பு என்பது ஏதுமில்லை. ஆதலால்தான் பழந்தமிழ் புறப்பாடலும் 'பெரியோனென வியத்தலுமிலனே சிறியோனென இகழ்தலுமிலனே' எனப் பாடுகின்றது. இதனையேதான் வள்ளுவரும் ஒருவன் எத்தனை நுட்பமான நூல்களைக் கற்பினும் அவனது உண்மை அறிவின் அடிப்படையிலேயே அவற்றின் நுட்பமும் திறனும் வெளிப்படும் என்று கூறுகின்றார். அதனையொப்பவே இவ்வுலகியல் இன்பங்களை ஒருவன் எவ்வகையிற் எவ்வளவு காலம் துய்க்க வேண்டும் என்பதும் என்னென்னவாறான வளங்களைப் பெற்று வாழவியலுமென்பதும், வளங்களற்ற வாழ்வினையே கொண்டு செல்லவேண்டிய சூழல் அமைவதும், ஊழின் வழிப்பட்டு முன்னமே முடிவு செய்யப்பட்டனவாம். இதனைச் சிலப்பதிகாரத்திலும் காணலாம். மாதவியுடன் உள்ள காலம் முடிந்ததும், சிறிதுகாலம்கூட கூடுதலாக அவளுடன் கோவலனால் இருக்க இயலவில்லை என்பதினைச் சிலம்பு காட்டும் அம்மரபினை ஒத்ததாகவே,

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கு துய்த்தல் அரிது (குறள் 377)

என்ற வள்ளுவரின் குறள் விளக்கிச் செல்லுவதினைக் காணலாம். ஒருவர் வாழ்வில் நிகழ்வுகள் முன்னமே முடிவு செய்யப்பட்டவை. அவை எப்படி நிகழவேண்டும் என்பதெலாம் முன்னமே முடிவு செய்யப்பட்டவை. அதனைக் கடந்து எதுவும் நிகழாது என்பதுவும். முன்னமே முடிவு செய்யப்பட்டவை என்பதாக ஆசீவகக்

கருத்தியலை இக்குறள் கொண்டுள்ளமையினைக் காணக் கூடியதாக உள்ளது. இதனை,

பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம (குறள் 676)

தமக்கே உரியவை தெருவிலே கைவிட்டபோதும் புறத்தே போகா என்பதும் தமக்கு எழுதப்படாதவை எத்தனைதான் முயன்றாலும் கிட்டாதென்பதும் ஆசீவகக் கருத்தியல். அதனை இக்குறளிலே காணலாம்.

ஊழ் குறித்த கருத்துக்களில் வள்ளுவர் சில இடங்களில் முரண்கொள்வதாகக் கூறுவோரும் உண்டு. உற்று நோக்கில் அதனை முரணாகக் கொள்ளலென்பதியலாது. சான்றாக,

தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்(குறள் 619)

பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி (குறள் 618)

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர் (குறள் 620)

என்ற மூன்று குறள்பாக்களையும் கொண்டு அவ்வாறு கூறுவர் ஆனால், ஊழின் உப்பக்கம் காணுதல் என்பதும் முயற்சியை மேற்கொள்ளுதலுமான தன்மைகள் ஆசீவகர்களின் கோட்பாட்டிற்குட்பட்டனவே. அவையும் ஊழின் வழி அமைவனவேயாகும்.

முடிவுரை

வைதீக எதிர்ப்பு நிலையிலுள்ள சமயங்களில் முதலாவதாக விளங்குவது அசீவகமாகும். திருக்குறளில் பொதிந்துள்ள ஆசீவக சமயம் சார்ந்த கோட்பாடுகள் பலவற்றையும் இவ்வாய்வு வெளிப்படுத்தி நிற்கிறது. தெற்காசியாவில் தோன்றிய மெய்யியல் மரபுகளையும், தன்னகத்தே தோன்றிய மெய்யியல் மரபுகளையும் ஒருங்கே கொண்ட ஒரு மொழியாக தமிழ் விளங்குவதை திருக்குறள் மெய்ப்படுத்துகின்றது.

உசாத்துணை நூற்பட்டியல்

சாமிநாதையர், உ. வே. (1898). மணிமேகலை. சாமிநாதையர் நூல்நிலையம்.

அப்பாத்துரைப்பிள்ளை, கா. (1955). நீலகேசி. பாரி நிலையம் , சென்னை.

மணி, சி. சு. (1995). அருள் நந்தி சிவனார் அருளிய சிவஞான சித்தியார் (தெளிவுரை). அருள்நந்தி சிவம் அருள்பணி மன்றம்.

தண்டபாணி தேசிகர், ச. (1950). திருக்குறள் உரைவளம். தருமபுர ஆதீனம்.

விஜயலட்சுமி, ர. (1988). தமிழகத்தில் ஆசீவகர்கள். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

3

நாட்டார் கதைகளை ஆவணப்படுத்துவதில் அமைப்பியல் ஆய்வின் வகிபங்கு

கோபாலப்பிள்ளை குகன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
தமிழ்க் கற்கைகள் துறை
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
gukank@esn.ac.lk

அறிமுகம்

இலங்கைத் தமிழ்ச் சூழலில் நடைபெறுகின்ற பெரும்பாலான நாட்டார் கதை ஆய்வுகள் உள்ளடக்க விபரிப்புகளாகவே உள்ளன. இவ்வாய்வுகளின் நோக்கம் நாட்டார் கதைகள் புலப்படுத்தும் சமூக பண்பாட்டு மரபுகளை விபரிப்பதாகும். கால வரையறைக்குட் பட்டதாகத் தனிநபரொருவரால் மேற்கொள்ளப்படும் மேற்படி ஆய்வுகளின்போது ஆய்வாளரே சேகரிப்பாளராகவும் இருக்க வேண்டிய இடர்பாட்டின் காரணமாக ஆய்வுப் பிரதேசம் முழுவதையும் உள்ளடக்கியதாக கள ஆய்வு மேற்கொள்ளப் படுவதில்லை. அவ்வாறு மேற்கொள்வது நடைமுறைச் சாத்தியமும் இல்லை. இதனால், தெரிவுசெய்யும் முறையின் (Sampling Method) அடிப்படையில் ஆய்வுப் பிரதேசம் வரையறுக்கப்படுகின்றது. குறிப்பிட்ட அப்பிரதேசங்களில் கள ஆய்வை மேற்கொள்ளும்போது உள்ளடக்க ரீதியாக வேறுபாடில்லாத ஒரே கதையைப் பலர் கூறும்போது ஒருவரிடமிருந்து பெற்றுக்கொண்ட கதை மட்டுமே ஆய்வுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறான ஆய்வுகளால் குறித்த பிரதேசத்தில் வாழும் மக்களின் பண்பாட்டு மரபுகளை முழுமையாகவும் தெளிவாகவும் வெளிப்படுத்த முடிவதில்லை.

உள்ளடக்கத்தின் அடிப்படையில் நாட்டார் கதைகளைத் துல்லியமாக வகைப்படுத்துவது சிக்கலான விடயமாகும். இதனாலேயே நாட்டார் கதைகளை வகைப்படுத்துவதும் சில ஆரம்ப ஆய்வுகளுக்குப் பின்னரே நடைபெற வேண்டும் என்றும்

அந்த ஆரம்ப ஆய்வுகளும் நாட்டார் கதைகளின் அமைப்பைப் புறந்தள்ளி நடைபெற முடியாது என்றும் கூறப்படுகின்றது (லூர்து, 1997,1991). எனவே, நாட்டார் கதைகளைச் சேகரிக்கும்போதே அவற்றை அமைப்பியல் கோட்பாட்டின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்து வகைப்படுத்தி ஆவணப்படுத்த வேண்டும். அத்தகைய ஆவணப்படுத்தலே எதிர்கால ஆய்வுகளுக்கு முழுமையாகப் பயன்படும்.

வாய்மொழியாகப் பயின்று வருவதன் காரணமாகப் பல்வேறு வடிவங்களாகத் திரிபடைதல் என்பது நாட்டார் இலக்கியங்களுக்குரிய பொதுப்பண்பாகும். ஒரு நாட்டார் கதை ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பரவும்போது ஒரு பண்பாட்டு எல்லையைவிட்டு மற்றொரு பண்பாட்டு எல்லைக்குப் பரவும்போது அது அந்த இடம், பண்பாட்டுக்கு ஏற்ப மாற்றங்களைப்பெறும் (இராமநாதன், 1997). இதில் கதை கூறுபவரின் ஆக்கத்திறன், கேட்பவரின் ஞாபக சக்தி, கூறப்படும் காலம், இடம் என்பனவும் தாக்கம் செலுத்தும். இதன் காரணமாக ஒரு கதை பல்வேறு வடிவங்களாகத் திரிபடையலாம். இவ்வாறு திரிபடைவதால் ஒரு கதைக்குப் பல மாற்று வடிவங்கள் வழங்குவது இயல்பாகும். கதைகளைச் சேகரிப்பவர் அம்மாற்று வடிவங்களையும் கவனத்தில்கொள்வது அவசியமாகும். ஒரு தகவலாளரிடமிருந்து குறித்தவொரு கதையைப் பெற்றுக்கொண்டோம் என்பதற்காக அதே கருப்பொருளைக் கொண்டதாக மற்றுமொரு தகவலாளர் வழங்கும் கதையைப் புறக்கணிக்க முடியாது. ஏனெனில், அமைப்பியல் ரீதியாக அதுவும் முக்கியத்துவமுடையதாகும். குறித்த கதையின் குறியீட்டுப் பொருளை ஆராய்வதற்கு அக்கதையின் மிகுதியான வடிவங்கள் அவசியமாகும் (Dundes,1984).

மட்டக்களப்புத் தமிழ் நாட்டார் கதைகளைச் சேகரித்தபோது (2010 - 2013) மனிதப் பண்புகளை விளக்கும் வகையில் பல நாட்டார் கதைகள் கிடைக்கப்பெற்றன. உதாரணமாக "செருக்கு மிகுந்த ராணி" (கதைத்தலைப்பு தகவலாளர்களுடையது) என்ற கதையின் இரண்டு வடிவங்கள் கிடைக்கப்பெற்றன. இக்கதையின் உள்ளடக்கத்தில் உணவுக்கே வழியில்லாத நிலையில் வாழும் ஓர் இளைஞனுக்கு இளவரசியைத் திருமணம் செய்யக் கிடைத்த அதிஷ்டம் முக்கியம் பெறுவதைக் கருத்திற்கொண்டு இக்கதை

"அதிஷ்டக் கதைகள்" என்ற வகைப்பாட்டுக்குள் அடக்கப்பட்டது. எனினும், இளைஞனின் பக்கம் உள்ள அதிஷ்டம் மட்டுமன்றி இளவரசியின் அகங்காரம் அடக்கப்படுவதும் கதையில் அழுத்தம் பெறும் உள்ளடக்கமாகும். எனவே, இக்கதையை உள்ளடக்க ரீதியாக வகைப்படுத்தும்போது ஏற்படுகின்ற மேற்படி சிக்கலைத் தீர்த்துக்கொள்வதற்கான ஒரே வழி இந்நாட்டார் கதையை அமைப்பியல் கோட்பாட்டின் அடிப்படையில் வகைப்படுத்துவதாகும். அதுவே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

அமைப்பியல் கோட்பாடு

அமைப்பியல் கோட்பாடே நாட்டாரியலில் அறிவியல் அடிப்படையிலான ஆய்வு வளர்ச்சிக்கு முக்கியமான காரணமாக அமைந்தது. அந்தவகையில், ரஷ்ய அறிஞர் விளாடிமிர் பிராப் 1928 இல் வெளியிட்ட 'நாட்டார் கதைகளின் உள்ளமைப்பு' (Morphology of the Folktales) என்ற நூல் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியது. ஏனைய அறிவியல் துறைகளில் வகைப்படுத்தல் அறிவியல் முறைப்படி நடைபெறுவதுபோல நாட்டார் கதைகளின் வகைப்படுத்தலும் அறிவியல் முறைப்படி நடைபெற வேண்டும் என்று கருதிய பிராப், அஃபனேசவ் (A.N.Afanasiev) என்பவர் தொகுத்த ரஷ்ய நாட்டார் கதைத்தொகுப்பிலிருந்து நூறு கதைகளை அடிப்படைத் தரவுகளாகக்கொண்டு ஆய்வைத் தொடங்கினார். அதனூடாக கதைகளில் மாறாமல் உள்ளார்ந்து கிடக்கும் முப்பத்தியொரு வினைகளை (Functions) அடையாளம் கண்டு கதைகளின் அமைப்பைக் கண்டறிய இதுவே அடிப்படையான அலகு என்று வலியுறுத்தினார்.

பிராப்பின் அமைப்பியல் மாதிரியைப் பயன்படுத்தி வட அமெரிக்க, இந்திய நாட்டார் கதைகளை ஆய்வுக்குட்படுத்திய ஆலன் டண்டிஸ் பிராப் குறிப்பிடும் எல்லா வினைகளும் சமமான அளவிற்கு முக்கியத்துவமுடையனவல்ல என்பதைக் கண்டறிந்தார். இதனால் பிராப்பின் அமைப்பியல் மாதிரியை அப்படியே எடுத்தாளாமல் சுருக்கிப் பயன்படுத்தினார். அதேவேளை, பிராப் வினை என்று குறிப்பிட்டதை டண்டிஸ் கதைக்கூறன் (Motifeme) என்று குறிப்பிட்டார். எனவே, அமைப்பியல் ஆய்விற்கான அலகாகக் கதைக்கூறனைப் பயன்படுத்தலாம் என்று டண்டிஸ் முன்மொழிந்தார் (1964).

அதேவேளை ஒரு குறிப்பிட்ட செயலை நிறைவுசெய்யும் பல்வேறு கதைக்கூறுகளை பிராப் பெயரிட்டு விளக்க முயலாத நிலையில் அக்கதைக்கூறுகளை 'மாற்றுக்கதைக்கூறன்' (Allomotifeme) என்று டண்டிஸ் பெயரிட்டார். பைக் (K.L.Pike) என்னும் மொழியியல் அறிஞர் குறிப்பிடும் உருபன் (Mopheme), மாற்றுருபன் (Allomorph) போல நாட்டார் கதைகளிலும் கதைக்கூறன், மாற்றுக்கதைக்கூறன் இருக்கின்றன என்று குறிப்பிட்டார். டண்டிஸ் தனது ஆய்வினூடாக நாட்டார் கதைகளிலிடம்பெறும் மூலக்கதைக்கூறன் இணைகளின் வரன்முறையை (Sequence) அடிப்படையாகக்கொண்டு ஒரு குறிப்பிட்ட வகைக் கதையை அமைப்பியல் அடிப்படையில் வகைப்படுத்த இயலும் என்றும் ஒரு கதையில் எத்தனை மூலக்கதைக்கூறன் இணைகள் இடம்பெற்றுள்ளன என்பதின் அடிப்படையில் அவ்வகைப்பாடு அமையும் என்றும் குறிப்பிட்டார் (1964). அந்தவகையில், இரண்டு கதைக்கூறன், நான்கு கதைக்கூறன், ஆறு கதைக்கூறன் கொண்ட மூன்று வகையான அமைப்பொழுங்கு மாதிரிகளைக் கண்டறிந்தார். இம்மாதிரிகளைத் தமிழ்க் கதைகளுக்குப் பொருத்தி ஆய்வு செய்யப் பெரிதும் வாய்ப்புள்ளது என்று ஸ்டீபன் குறிப்பிடுகின்றார் (2013). டண்டிஸின் தொடர்பாட்டு ஆய்வு முறையின் (Syntagmatic Analysis) அடிப்படையில் முற்குறிப்பிட்ட 'செருக்கு மிகுந்த ராணி' கதை இங்கு பகுப்பாய்வு செய்யப்படுகின்றது.

செருக்கு மிகுந்த ராணி

டண்டிஸின் தொடர்பாட்டு ஆய்வு முறையின் அடிப்படையில் 'செருக்கு மிகுந்த ராணி' கதையை பகுப்பாய்வு செய்யும்போது அக்கதை குறை / சூழ்ச்சி / ஏமாற்றப்படல் / குறைநீக்கம் என்ற நான்கு கதைக்கூறன்கொண்ட அமைப்பொழுங்கு மாதிரிக்குள் அடங்குவதைக் காணலாம். இதனைப் பின்வருமாறு விளக்கலாம்.

1. பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய நிலையில் வாழும் ஓர் இளைஞன் உண்பதற்கே உணவின்றித் தவித்தல் (குறை)
2. சிங்கத்தை அல்லது புலியைக் கொலை செய்து அதன் உடற்பாகங்களைக் கொண்டு வருபவருக்கே தனது மகளைத் திருமணம் செய்து தருவதாக அரசன் அறிவித்தல் (சூழ்ச்சி)

3. (அரசனின் எதிர்பார்ப்புக்கு மாறாக) முற்குறிப்பிட்ட (உணவிற்கே வழியின்றித் தவிக்கும்) இளைஞனே சிங்கத்தின் உடற்பாகங்களைக் கொண்டு வருதல் (ஏமாற்றப்படல்)

4. குறித்த இளைஞன் அரசனின் மகளைத் திருமணம் செய்து பொருளாதார சுபிட்சம் அடைதல் (குறை நீக்கம்)

மேற்படி நான்கு மூலக்கதைக்கூறன்களும் கதையின் அமைப்பில் அடிப்படையானவையாகும். ஏனெனில், இக்கதையின் இயக்கத்திற்கு இம்மூலக்கதைக்கூறன்களே ஆதாரமாக அமைகின்றன. அவை இரண்டு வடிவங்களிலும் துலக்கமாகத் தெரிகின்றன. இதனால், கதையின் அமைப்பில் சிக்கல் இல்லை. ஆனால், கதையின் எடுத்துரைப்பு முறையில் பெருமளவிலான முன்பின் மாற்றங்கள் உள்ளன. அம்மாற்றங்கள் முதலாவது வடிவத்தில் இளைஞனின் பக்கம் உள்ள அதிஷ்டத்தை நோக்கியனவாகவும் இரண்டாவது வடிவத்தில் இளவரசியின் அகங்காரம் அடங்குவதை நோக்கியனவாகவும் உள்ளன.

ஒரு நாட்டார் கதைக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மாற்று வடிவங்கள் கிடைக்கும்போது ஒரு மூலக்கதைக்கூறனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றுக் கதைக்கூறன்களை அடையாளம் காண்பதற்குச் சந்தர்ப்பம் உண்டு. அவற்றை ஒன்றோடொன்று ஒப்பிட்டுப் பார்க்கும்போதுதான் மாற்றுக் கதைக்கூறன்களின் முழுவீச்சினை உணர முடியும் என்று டண்டிஸ் குறிப்பிடுகின்றார் (1965). ஆகவே, மேற்படி கதையின் மூலக்கதைக்கூறன்களுக்கான மாற்றுக் கதைக்கூறன்களை ஒப்பிட்டுப் பார்ப்பது கதை மாற்றமடைந்துள்ள விதத்தினையும் அம்மாற்றங்களுக்கான காரணங்களையும் விளங்கிக்கொள்ள உதவும்.

"செருக்கு மிகுந்த ராணி" என்ற கதையின் முதலாவது வடிவம் ஆரையம்பதியிலும் (தகவலாளர் : க. மீனாட்சி, வயது 84) , இரண்டாவது வடிவம் கதிரவெளியிலும் (தகவலாளர் : இரா. கிருஸ்ணவேணி, வயது 47) சேகரிக்கப்பட்டது. முதலாவது வடிவத்தில் உணவிற்கே வழியின்றி தெருவில் அலையும் யாரோ ஒரு இளைஞன் அரண்மனையில் எச்சில் இலை உணவுகளை உண்டதாகவும் இரண்டாவது வடிவத்தில் அரண்மனையில் தொழில் செய்யும் வேலைக்காரன் அரசனின் மகள் எறிந்த

வாழைப்பழத்தோலை எடுத்து உண்டதாகவும் கதை உள்ளது. இரண்டு வடிவங்களிலுமே குறித்த இளைஞன் ஒரு பெண்ணைத் திருமணம் செய்யத் தகுதியற்றவன் என்பதைச் சுட்டிக்காட்டும் வகையில் "இவனுக்கு யார்தான் முந்தானை விரிக்கப்போறாளோ" என்ற கூற்று வருகின்றது. இக்கூற்று முதலாவது வடிவத்தில் இளவரசியுடையதாக வருகின்றது. இரண்டாவது வடிவத்தில் அவளுடைய தோழி கூற்றாக வருகின்றது. தோழியின் இக்கூற்றுக்கு இளவரசி, "நான் உயிர் போனாலும் இவனைத் திருமணம் செய்ய மாட்டேன்" என்று பதிலளிப்பது அவளே அவனைத் திருமணம் செய்வதற்கான நிர்ப்பந்தம் ஏற்படப்போகிறது என்பதற்கான சமிக்ஞையாக உள்ளது.

இளவரசிக்கு வீரமுள்ள ஒருவனே கணவனாக அமைய வேண்டும் என்ற தனது விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக அரசன் மேற்கொள்ளும் சூழ்ச்சி இரண்டு வடிவங்களிலும் மாற்றமின்றி இடம்பெற்றுள்ளது. ஆனால், முதலாவது வடிவத்தில் வருவது காட்டில் வாழும் சிங்கம். இரண்டாவது வடிவத்தில் வருவது அரசன் வளர்த்த புலி. எப்படியோ அரசனுக்கு ஏமாற்றமே கிடைக்கிறது. யாரோ சிங்கத்தைக் கொலை செய்ய குறித்த இளைஞன் அதன் உடற்பாகங்களை வெட்டி எடுத்ததாக முதலாவது வடிவம் உள்ளது. இரண்டாவது வடிவத்தில் வேலைக்காரன் தனது தாயிடம் இளவரசியைத் திருமணம் செய்து தரும்படி கேட்டதாகவும், அரசன் அவனை நோக்கி புலியைத் திறந்து விட்டதாகவும், வேலைக்காரன் புலியைத் தனது புத்தி சாதுரியத்தால் கொல்வதாகவும் கதை அமைந்துள்ளது.

இறுதியில் இளவரசியைக் குறித்த இளைஞனுக்குத் திருமணம் செய்துவைப்பதன் மூலம் இளைஞனின் பொருளாதாரத் துன்பமும் நீங்குகிறது. இளவரசியின் அகங்காரமும் அடக்கப்படுகிறது. டண்டிஸின் அமைப்பொழுங்கு மாதிரியின்படி இறுதிக் கதைக்கூறன் "குறைநீக்கம்" என்றே பெயரிடப்பட்டுள்ளது. இக்கதையில் இளைஞனின் குறையே நீக்கப்படுகிறது. எனவே, அமைப்பியல் கோட்பாட்டின்வழி இக்கதையின் உள்ளடக்கத்தை நோக்கும்போதும் இளைஞனின் பக்கம் உள்ள அதிஷ்டமே முன்நிற்கிறது. இதனால் இக்கதையை "அதிஷ்டக் கதை" என்று வகைப்படுத்துவது பொருத்தமானதே.

தொகுத்து நோக்குகின்றபோது குறித்த நாட்டார் கதையின் இரு வடிவங்களும் உள்ளடக்க ரீதியில் எவ்வகையிலும் மாற்றத்திற்குட்படாதனவாயினும் அவற்றின் எடுத்துரைப்பு முறையில் பெருமளவிலான வித்தியாசங்கள் காணப்படுகின்றன. உண்மையில் முதலாவது வடிவத்தில் காணப்படும் எடுத்துரைப்பு முறைகள் இளைஞனின் அதிஷ்டத்துக்கு அழுத்தம் கொடுப்பவை. முதலாவது வடிவத்திலிருந்து வேறுபட்டவையாக இரண்டாவது வடிவத்தில் காணப்படும் எடுத்துரைப்பு முறைகள் இளவரசியின் அகங்காரம் அடங்குவதற்கு அழுத்தம் கொடுப்பவை. இதற்குக் கதை கூறியவர்களின் மனோபாவம் ஒரு காரணமாயிருக்கலாம். முதலாவது வடிவத்தைக் கூறியவரைவிட இரண்டாவது வடிவத்தைக் கூறியவர் முப்பத்தியேழு வயது குறைந்தவராவார். இந்த தலைமுறை இடைவெளி இங்கு கவனத்திற்கொள்ளப்பட வேண்டியதாகும்.

முடிவுரை

நாட்டார் கதைகளைச் சேகரிக்கும்போது ஒரு கதைக்குரியதாகக் கிடைக்கப்பெறும் பல மாற்று வடிவங்களையும் கவனத்திற்கொள்ள வேண்டும். முதலில் அவற்றை மேற்குறிப்பிட்டபடி அமைப்பியல் கோட்பாட்டின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்து கதைக்கூறன்களை அடையாளம் கண்டு அவற்றுக்கான அமைப்பொழுங்கு மாதிரிகளை உருவாக்க வேண்டும். வேறுபடும் மாற்றுக் கதைக்கூறன்களை அடிக்குறிப்பில் குறிப்பிட வேண்டும். இதன்மூலம் உள்ளடக்க அடிப்படையில் நாட்டார் கதைகளைத் துல்லியமாக வகைப்படுத்துவதற்கு தர்க்க ரீதியான நியாயங்களைப் பெற முடியும்.

உசாத்துணைகள்

இராமநாதன், ஆறு. (1997). நாட்டுப்புறவியல் ஆய்வுகள். சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.

குகன், கோ. (2013). கிழக்கிலங்கைத் தமிழ் நாட்டார் கதைகள் புலப்படுத்தும் சமூக பண்பாட்டு மரபுகள் (வெளியிடப்படாத முதுதத்துவமாணி ஆய்வேடு). யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடம்.

லூர்து, தே. (1997). நாட்டார் வழக்காற்றியல் : சில அடிப்படைகள். பாளையங்கோட்டை, நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்.

..... (1991). நாட்டார் கதைகளில் மாந்தர் உறவுநிலை : சிக்கல்களும் கருதுகோள்களும். கி. ராஜநாராயணன் (பதிப்பாசிரியர்) , நாட்டுப்புறக் கதைகள் ஒரு பன்முகப் பார்வை (பக். 25-32), சிவகங்கை, அன்னம் வெளியீடு.

ஸ்டீபன், ஞா. (2013). அமைப்பியல் கோட்பாடும் ஆய்வுகளும். சென்னை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.

..... (2009). தமிழ்ச் சமூகத்தில் வாய்மொழிக் கதைகள். சென்னை, பாவை பப்ளிகேஷன்ஸ்.

Dandes, Alan. (1984). The symbolic Equivalence of Allomotifs : Toords a Method of Analyzing folktales, why? And how?. Paris Du Centre National De la Recherche Scientifique.

..... (1965). The Study of Folklore. University of California.

..... (1964). The morphology of North American Indian Folktales. Helsinki Folklore Fellows Communication.

4

சிலப்பதிகாரத்தில் திணை நிலை இசை

முனைவர் இராச.கலைவாணி
இயக்குநர், ஏழிசை இசை ஆய்வகம், மயிலாடுதுறை.

அறிமுகம்

முந்து தமிழ் நூலாகிய தொல்காப்பியம் திணை வகுத்து அதற்கென முதல், கரு, உரிப்பொருள்களையும் வகுத்துள்ளது. அக்கருப்பொருள்களுள் பறை, யாழ், யாழிலிருந்து தோற்றம் பெறும் பண் ஆகிய மூன்றும் இசை குறித்தனவாக அமைந்துள்ளன. மக்களின் வாழ்வியல் தேவை நிறைவிற்குப் பிறகு தன்னைக் காத்துக்கொள்ள வழிபாட்டுச் சடங்குகளை நாடுகிறான். அச்சடங்குகளில் இசைக் கருவிகளைப் பயன்படுத்தத் தொடங்குகின்றான். தான் வழிபாடு செய்கிறேன் என்பதைப் பிற இனக்குழுக்களுக்குத் தெரிவிக்கவே இசை முழக்கம் இருந்துள்ளது. ஒவ்வொரு நிலத்திற்கும் அந்த நிலத்தின் புழங்கு பொருட்களின் அடிப்படையில் இசைக்கருவிகள் யாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளன. அல்லது அங்கு நிகழ்த்தப்படும் செயல்களின் அடிப்படையில் இசை வடிவங்கள் அமைந்துள்ளன என்பதைச் சங்க இலக்கியச் சான்றுகளின் வழி அறியமுடிகின்றது. சங்க இலக்கியத்தைத் தொடர்ந்து சிலப்பதிகாரத்திலும் இசையும் இசைக்கருவிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை நிறுவுவதாக இவ்வெழுத்துரை அமைந்துள்ளது.

குறிஞ்சித் திணை

சிலப்பதிகார வஞ்சிக்காண்டத்தில் முதலாவதாக அமைந்துள்ள குன்றக்குரவையில் மலை நில மக்களாகி குறவர்கள் இறைவழிபாடு நிகழ்த்தும்போது பல்வேறு இசைக்கருவிகளைப் பயன்படுத்தியுள்ளனர். அவற்றுள் தொண்டகப்பறை முதன்மைக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. குறவர் இனத்துச் சிறுவர்கள் தொண்டகச் சிறுபறையை முழக்கியுள்ளனர் (நற்றிணை104:5). இரவில் ஊர்க்காவல் புரியும் கனவர்கள் தொண்டகப் பறையை

முழக்கியுள்ளனர். மலைநிலத்துக்குரிய பறையாகத் தொண்டகப் பறை அமைந்துள்ளதை உரையாசிரியர்கள் கூற்று வழியாகவும் சங்கப் பனுவல்களின் சான்றுகள் வழியாகவும் அறிய முடிகின்றது. தொண்டகப்பறை என்பது மண்பானையின் வாயைத் தோலால் மூடி அதில் தாள முழக்குகளை இயக்குவது. இரவில் இக்கருவியை இயக்கும் போது அதன் ஒலி கும் கும் என ஆழமான ஒலியாக ஒலிக்கும். இரவில் அமைதியான நேரத்தில் இவ்வொலி தெளிவானதாகவும் அழுத்தமானதாகும் கேட்கும். குன்றக்குரவையில் மலைநிலத்துத் தலைமக்களாகிய குறவர்கள் தங்கள் இறை வழிபாட்டின்போது பல கருவிகளை இசைத்துள்ள பாங்கைக் காணமுடிகின்றது. மதுரையை எரித்த கண்ணகி சின மேலீட்டால் மலையில் வந்து அமர்ந்தாள். அவளைக் கண்ட மலைமக்கள் தாங்கள் வணங்கும் கொற்றவையே அங்கு அமர்ந்திருப்பதாக நினைத்து ஆடிப் பாடி வணங்கி மகிழ்ந்தனர். அவர்கள் தங்கள் நிலத்திற்கே உரிய பறைகளை முழக்கினர்.

சிறுகுடி யீரே சிறுகுடி யீரே
தெய்வங் கொள்ளுமின் சிறுகுடியீரே
நிறங்கிள ரருவிப் பறம்பின் றாழ்வரை
நறுஞ்சினை வேங்கை நன்னிழற் கீழோர்
தெய்வங் கொள்ளுமின் சிறுகுடி யீரே
தொண்டகந் தொடுமின் சிறுபறை தொடுமின்
கோடுவாய் வைமின் கொடுமணி யியக்குமின்
குறிஞ்சி பாடுமின் நறும்புகை யெடுமின் (சிலம்பு.24.11-18)

தொண்டகப்பறை சிறுபறை, கோடு, மணி என்னும் தோற்கருவிகள் மற்றும் காற்றுக்கருவி, கஞ்சக்கருவி ஆகியவற்றை இசைத்துக்கொண்டு குறிஞ்சிப் பண்ணையும் பாடி வழிபாடு நிகழ்த்தியுள்ள மரபார்ந்த செயல்பாட்டை அறியமுடிகின்றது.

முல்லைத் திணை

மதுரைக் காண்டத்தில் ஆய்ச்சியர் குரவையில் முல்லை நிலத்துத் தலை மக்களாகிய ஆய்ச்சியர்கள் ஆநிரைகளை மேய்த்து அதன் பயனாக விளையும் பால், தயிர், வெண்ணெய் முதலானவற்றைத் தாமும் உட்கொண்டு தமக்கருகில் இருக்கும் பிறருக்கும் நல்கி வாழும் எளிமையான நிறைவான வாழ்க்கையை

வாழ்ந்து வருபவர்கள். கவுந்தியடிகள் கோவலன் கண்ணகியை அடைக்கலமாக மாதரியிடம் ஒப்படைத்தார். கண்ணகியின் காற்சிலம்பை விற்க கோவலன் மதுரைக்குப் புலம்பெயர்கிறான். அச்சமயம் ஆயர்களின் இடத்தில் பல்வேறு தீய நிமித்தங்கள் நிகழ்வதை மாதரி கண்ணுற்றாள். தன்னிடத்தில் அடைகலமாக வந்த கோவலனுக்கு ஏதேனும் தீமை விளைந்திருக்குமோ என அச்சப்படுகின்றாள். தான் கண்ட இந்தத் தீய நிகழ்வுகளைப் பிறரும் கண்டு அச்சப்படக்கூடாது என்று எண்ணி தன் மகள் ஐயையை அழைத்து முன்னர் எருமன்றத்தில் கண்ணனும் பலராமனும் கோபியருடன் இணைந்து நிகழ்த்திய குரவைக் கூத்தை நிகழ்த்தச் சொல்கின்றாள். இக்கூத்தில் ஆடலுடன் பாடலும் முதன்மை பெறுகின்றது.

குரவை என்பது எழுவர் அல்லது ஒன்பதிமர் கைகோர்த்து ஆடும் ஓர் ஆடல். இங்கு ஆடலை நிகழ்த்துபவர்களே இசைச்சுரங்களாக அமைந்து பண்ணுப்பெயர்த்தல் என்னும் மகத்தான இசைத் தொழிலைப் புரிந்து ஆடுகின்றன. பண்ணுப்பெயர்த்தல் என்பது ஒரு பண்ணின் நின்ற சுரத்தை அடுத்த சுரத்தில் இடமாற்றி அமைத்துப் புதிய பண்ணைத் தோற்றுவிப்பதாகும். ஐந்திசைப் பண்ணாகிய முல்லைப்பண் முல்லை நிலத்திற்குரிய ஆயர்களின் திணைப் பண்ணாகும். குரலைக் குரலாகக் கொண்டு பண்ணுப்பெயர்த்தால் முல்லையும் (மோகனம்), துத்தத்தைக் குரலாகக் கொண்டு பண்ணுப்பெயர்த்தால் செந்துருத்தியும் (மத்தியமாவதி), கைக்கிளையைக் குரலாகக் கொண்டு பண்ணுப்பெயர்த்தால் இந்தளமும் (இந்தோளம்), இளியைக் குரலாகக் கொண்டு பண்ணுப்பெயர்த்தால் கொன்றையும் (சுத்தசாவேரி), விளரியைக் குரலாகக் கொண்டு பண்ணுப்பெயர்த்தால் விளரியும் (சுத்ததன்யாசி) தோற்றம் பெறுகின்றன.

ஆங்கு,
தொழுவிடை ஏறு குறித்து வளர்த்தார்
எழுவ ரிளங் கோதையார்
என்றுதன் மகளை நோக்கித்
தொன்றுபடு முறையா னிறுத்தி
இடைமுது மகளி னிவர்க்குப்

படைத்துக் கோட்பெய ரிடுவாள்
குடமுத லிடமுறை யாக்குர றுத்தம்
கைக்கிளை யுழையிளி விளரி தாரமென
விரிதரு பூங்குழல் வேண்டிய பெயர்ந்ந்
மாயவ னென்றா ளிளிதன்னை - யாய்மகள்
பின்னை யாமென்றாளோர் துத்தத்தை மற்றைய
முன்னையா மென்றாண் முறை (சிலம்பு.17:13)

மேற்குத் திசையில் தொடங்கி குரலுக்கு இடப்பக்கம் துத்தம், துத்தத்திற்கு இடப்பக்கம் கைக்கிளை, கைக்கிளைக்கு இடப்பக்கம் உழை, இழைக்கு இடப்பக்கம் இளி, இளிக்கு இடப்பக்கம் விளரி, விளரிக்கு இடப்பக்கம் தாரம் என்று அச்சுரங்களாகியப் பெண்களை வரிசையாக நிற்க வைத்துப் பண்ணுப்பெயர்த்தல் நிகழ்த்தப்பட்டுள்ளது.

சங்க மரபை அடியொற்றி முல்லைத் திணைக்குரிய முல்லைப்பண்ணைத் தலைமைப் பண்ணாக அமைத்துப் பண்ணுப்பெயர்த்துப் பாடியுள்ள பாங்கை அறியமுடிகின்றது. மேலும் தொன்ம மாந்தரான நப்பின்னை முதலான மகளிர் இணைந்து ஆடிய ஆடல் என்பதால் குரவைக்கூத்து மிகவும் தொன்மை மிக்கது என்பதும் அறியப்படுகின்றது.

மருதத் திணை

மருதத் திணையில் இசைக்கப்பட்ட பறை கிணையாகும். கிணை என்னும் பெயருக்கு மருதப்பறை, கூத்தர் பறை எனப் பல விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. சங்ககாலத்தில் பாணர்கள் இசைத்து வந்த ஒரு முகப்பறை கிணைப்பறை எனப்படும். கிணைத்தல் என்னும் தொழிற் பெயருக்குக் கிணையைக் கொட்டுதல் என்று பொருள் என்பதைப் பின்வரும் பாடலடிகள் நிறுவுகின்றன.

பொய்யா ஈகைக் கழல்தொடி ஆஅய்
யாவரு மின்மையில் கிணைப்பத் தவாது - புறம்.375:11, 12

இப்பறையின் ஒலி கிண் கிண் என்று ஒலித்ததால் கிணை என்று அழைக்கப்பட்டுள்ளது.

அடியார்க்கு நல்லார் இப்பறையைக் கூத்தர் பறை என்றும் மருதப்பறை என்றும் குறிப்பிட்டுள்ளார். மருத நிலத்தில் உழவுத்தொழில் நடக்கும் பொழுதும் பிற செயல்பாடுகளின் போதும்

இக்கிணைப்பறை முழக்கப்பட்டுள்ளது. தென்கிணைப் பொருநர் இசைத்த கருவி முழவு என்பதையும் சிலப்பதிகாரம் பதிவுசெய்துள்ளது (சிலம்பு. அடியார்.உரை.மேற்.ப.266, 10:38,39).

மதுரை மாநகரில் காலை நேரத்தில் எழுந்த பல்வேறு ஒலிகளில் மள்ளர்கள் மகிழ்ச்சியாக வைகறைப் பொழுதில் இசைத்துள்ள கிணைப்பறையின் ஒலியும் எழுந்துள்ளது என்பதனை, கிணைநிலைப் பொருநர் வைகறைப் பாணியும் - சிலம்பு.13:144 என்னும் பாடலடியால் அறியமுடிகின்றது. சங்க இலக்கிய மரபைப் பின்பற்றி உழவர்கள் தங்களின் தொழிலைத் தொடங்கும் நிலையில் இப்பறை இசைக்கப்பட்டுள்ளதைச் சிலப்பதிகாரமும் வழி மொழிந்துள்ளது.

முதல் முதலாக ஒரு நல்ல நாளில் ஏரைப் பூட்டி உழத் தொடங்குவதைப் பொன்னேர் பூட்டல் என்பர். இவ்வாறு பொன் ஏர் பூட்டி நின்ற உழவர்கள் தம் உழவுக் கருவியாகிய ஏரை வாழ்த்தி நல்ல விளைச்சல் காண வேண்டும் என்று வேண்டிப் பாடும் பாட்டு ஏர்மங்கலம் எனப்படும்.

வயல்களில் நெல் பயிர்கள் நன்றாக விளைந்த பின்பு அவற்றை அறுவடை செய்வர். அவற்றை வீட்டிற்குச் சுமந்து வந்து பரப்பி மாடுகளைக் கொண்டு மிதிக்கச் செய்து நெல்லையும் வைக்கோலையும் தனித்தனியே பிரிப்பர். அப்போது பாடும் பாட்டு முகவைப்பாட்டு எனப்படும்.

அத்தகைய ஏர்மங்கலப்பாட்டு மற்றும் முகவைப்பாடல் ஆகியவற்றைப் பாடும் போது கிணைப்பொருநர்கள் மிகுந்த மகிழ்வுடனும் பெருமிதத்துடனும் தங்கள் கிணைப்பறையை இசைக்கும் செய்தியைச் சிலப்பதிகாரம் பதிவுசெய்துள்ளது.

ஏரொடு நின்றோ ரேர்மங் கலமும்
அரிந்துகால் குவித்தோ ரரிகடன் வுறுத்த
பெருஞ்செய்ந் நெல்லின் முகவைப் பாட்டும்
தெண்கிணைப் பொருநர் செருக்குட னெடுத்த
மண்கணை முழவின் மகிழிசை யோதையும்
பேர்யாற் றடைகரை நீரிற் கேட்டாங் (சிலம்பு.10:135-140)

அடியார்க்கு நல்லார் இதனைக் களவழி வாழ்த்து என்பார் (சிலம்பு. அடியார். உரை.மேற்.பா.10:38,39).

தண்பணைவய லுழவனைத்
தெண்கிணைவன் றிருந்துபுகழ் கிளர்ந்தன்று.
என்பதன் வழித் தெளிவாகிறது.

சிலப்பதிகாரம் பதிவுசெய்துள்ள கிணைப்பறை மருத நிலத்துப் பறையாகவே இடம்பெற்றுள்ளதை அறியமுடிகின்றது

நெய்தல் திணை

நெய்தல் திணைக்குரியதாகச் சிலப்பதிகாரத்தில் அமைந்து வருவன வரிப்பாடல்கள் ஆகும். பல வகையான வரிப்பாடல்கள் சிலப்பதிகாரத்தில் அமைந்துள்ளன. வரி என்னும் வேர்ச்சொல் எழுத்து வடிவம், அடி, கப்பம் என்னும் பல்வேறு பொருண்மைகளில் பயன்படுத்தக்கூடிய ஒரு சொல்லாகும். பாடலைப் பொறுத்தவரை இதன் பொருள் வருணிப்பது என்பதாகும். பண்ணும் திறமும் செயலும் பாணியும் ஒரு செயலன்றி மயங்கிச் சொல்லப்பட்ட எட்டனியல்பும் ஆறனியல்பும் பெற்றுத் தன் முதலும் முடிவும் கெட்டு இயல்பும் முடமுமாக முடிந்து கருதப்பட்ட சந்தியும் சார்த்தும் பெற்றும் பெறாதும் வருவதுதான் தெய்வஞ்சுட்டிய மக்களைப் பழிச்சியும் வரும்' என்று அரும்பதவுரையாசிரியர் குறிப்பிடுகின்றார் (அ.203).

எதனை வருணிக்கின்றோமோ அதன் பெயரைக்கொண்டு இவ்வரிப் பாடல்கள் அழைக்கப்படுகின்றன. ஆற்றை வருணிப்பது ஆற்றுவரி. வேட்டுவர்கள் பாடுவது வேட்டுவ வரி. இப்படிப் பாடப்பெறும் பொருண்மை அடிப்படையில் இவ்வரிப்பாடல்கள் அழைக்கப்படுகின்றன.

சிலப்பதிகார வரிப்பாடல்கள்

சிலப்பதிகாரத்தில் ஆற்று வரி, சார்த்துவரி, முகமில் வரி, கானல்வரி, நிலைவரி, முரிவரி, திணைநிலைவரி, மயங்கு திணைநிலைவரி, சாயல்வரி, வேட்டுவவரி, ஊர்சூழ்வரி, கந்துகவரி (மகளிர் பந்தாடும் போது பாடுதல்) என்னும் வரிப்பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

கானல் என்னும் சொல் கடலும் கடல் சார்ந்த இடமும் ஆகிய நெய்தல் நிலத்தைச் சுட்டுகிறது. கானல் வரி என்னும் தலைப்பிற்குக் கழிக்கானலிடத்து பாடப்பட்ட வரிப்பாடல்கள் என்பது பொருள்.

கானல் வரிப்பாடல் என்பது கழிக்கானல் பொருண்மை பற்றிய வரிப்பாடல் என்பது பொருள். எனவே, கானல் என்னும் சொல் இடத்தையும் பொருண்மையையும் சுட்டும் சொல்லாக இடம்பெற்றுள்ளது.

சிலப்பதிகாரத்தில் கானல் வரியில் ஆற்றைப் புகழ்ந்து பாடுவது ஆற்று வரிப் பாடல் ஆகும். காவிரி ஆற்றை வருணிப்பதால் இது ஆற்று வரி என்று அழைக்கப்படுகின்றது. திங்கள் மலை, மன்னுமாலை, உழவரோதை, மருங்கு வண்டு, பூவார் சோலை, வாழியவன்றன் ஆகிய ஆறு பாடல்கள் ஆற்றுவரிப் பாடல்களாகும். காவிரி என்னும் நங்கை தன் கணவனாகிய சோழ மன்னன் கங்கை என்னும் மங்கையைப் புணர்ந்தாலும் காவிரி நங்கை புலவாது கற்புடன் நிற்பாள் என்னும் பொருண்மையில் பாடியுள்ளார். காவிரி நங்கை கற்உடையவள் என்னும் கருத்தும் சோழன் கங்கை வரை சென்று படையெடுத்துச் சென்ற தகைமையும் ஒரு சேரப் பாடப்பட்டுள்ளது. இப்பாடலில் மும்மை நடை அமைந்து வந்தாலும் இன்றைக்கு இதனைச் சுத்த சாவேரி என்னும் இராகத்தில் தகிட தகதிமி என்னும் எழுமை நடையில் பாடி வருகின்றனர்.

சார்த்துவரி என்பது பாட்டுடைத் தலைவனின் பெயர், ஊர் ஆகியவற்றைப் புகழ்ந்து பாடுவதாகும். இது முகமுடை வரி, முகமில் வரி, படப்பு வரி என மூவகைப்படும்.

முகமில் வரி என்பது முகமொழிந்து ஏனைய வுறுப்புக்களான் வருவது என்பார் அரும்பதவுரையாசிரியர் (சிலம்பு.7:4). காவிரியை எதிர்முகமாக்கும் முறையில் பாடிய திங்கள் மாலை முதலான மூன்று பாடல்கள் முகமுடைய வரிப்பாடல்கள் ஆகும். அதாவது, காவிரியை முன்னிலைப்படுத்திப் பாடியதால் அவை முகவரிப்பாடல்கள் என்று க.வெள்ளைவாரணனார் குறிப்பிடுகின்றார். (வீ.ப.கா.சுந்தரம், தமிழிசைக் கலைக்களஞ்சியம் தொகுதி 4, ப.40) எனவே, அதற்கு எதிர்மறையானது முகமில் வரி ஆகும். துறைமேய வலம்புரி (ஆங்கன் தலைவியை வியத்தல்) அடையல் குருகே (காமமிக்க கழிபடர்கிளவி) நுளையர் விளரி, பிரிந்தோர் பரிந்துரைக்க, பையுணோய்க்கூற (மாலைப்பொழுது கண்டு தலைவி கூறியவை) இவை மூன்றும் முகமில் வரிப்பாடல்களாகும்.

முகம் என்பது பாடலின் முதல் பகுதி. முரி என்பது குற்றெழுத்தால் அமைந்து வருவது. இவை இரண்டும் இணைந்து வருவது நிலைவரி ஆகும். வரிப்பாடல்களில் முரிவரிப் பாடல் மிகவும் சிறப்புத்தன்மை வாய்ந்ததாகும். இதனுடைய யாப்பு அமைப்பால் சிறந்த தாளக்கட்டோடு அமைந்து பாடுவதற்குச் சுவை கூட்டுகின்றது. பொழிதரு நறு, திரைவிரி, வளைவளர் என்னும் மூன்று பாடல்கள் அமைந்துள்ளன. இப்பாடல்கள் கலிவிருத்தம் என்னும் யாப்பு வகையில் அமைந்துள்ளது. தொல்காப்பியம் குறிப்பிடும் 20 வண்ணங்களில் குறில் வண்ணம், குறுஞ்சீர் வண்ணம், உருட்டு வண்ணம் ஆகிய வண்ண அமைப்போடு பொருத்திப் பார்க்கலாம்.

பொழிதரு நறுமலரே புதுமணம் விரிமணலே
பழுதறு திருமொழியே பணையிள வனமுலையே
முழுமதி புரைமுகமே முரிபுரு வில்லிணையே
எழுதரு மின்னிடையே யெனையிடர் செய்தவையே

என்னும் பாடல் அடிகள் தகதிமி தகதிமி தா என ஓர் ஒழுங்கமைவோடு அமைந்து வந்து தாளக்கட்டு நிரம்பத் திகழ்கிறது.

எடுத்த இயலும் இசையும் தம்மில்
முரித்துப் பாடுதல் முரியெனப் படுமே (சிலம்பு.7:14 அரும்.மேற்)

என்பார் அரும்பதவுரையாசிரியர். இயலாகிய சொற்கள் தம்மில் தாளத்தின் இடம் மாறுதல் வேண்டும். பண்ணும் தம்மில் மாறுதல் வேண்டும். இவ்வாறு முரித்துப் பாடுதலே முரிவரி என்னும் விளக்கத்தைப் பெற முடிகின்றது. சுத்ததன்யாசி என்னும் ஐந்திசைப் பண்ணில் அமைத்துப் பாடலாம்.

திணைநிலை வரி என்பது நெய்தல் திணையின் கருப்பொருளும் உரிப்பொருளும் கலந்து வர திணையின் சிறப்பைப் புகழ்ந்து பாடுவதாகும்.

மயங்கு திணை நிலை வரி என்பது அகப்பொருள் பாடல்களாகும். இவ்வகையில் ஆறு பாடல்கள் அமைந்துள்ளன. சாயல் என்றால் இயல்பு என்று பொருள். சாயல் வரி என்பது இயல்பை எடுத்துக்கூறும் வரிப்பாடல் ஆகும். இவை மூன்றும் மெலிதாகச் சொல்லிக் குறை நயப்பித்தல்; ஆற்றுவித்தற்

பொருட்டுத் தோழி இயற்பழிக்க தலைமகள் இயற்பட மொழிந்ததூஉமாம்' என்பார் அரும்பதவுரையாசிரியர் (7:43-45 ப.215). தோழி தலைவனுடைய சிறப்பினைச் சற்றுக் குறைத்துக்கூற தலைவியோ அவன் இயல்பைப் புகழ்ந்து கூறுவதாக அமைந்த அகத்திணைப் பற்றிய பாடலே சாயல் வரியாகும். கைதைவேலி, கானல் வேலி, அன்னந்துணையோ என்னும் மூன்று பாடல்கள் இவ்வகையில் அமைந்துள்ளன.

வரிப்பாடல்கள் இசைக்கூட்டிப் பாடப்படும் பாடல்கள் என்பதற்குச் சிலப்பதிகாரக் கானல்வரியில் சான்றுகள் அமைந்துள்ளன.

பாலைத் திணை

போர்மறவர்களும் ஆறலைக்கள்வர்களும் இசைக்கும் கருவிகள் பல சிலப்பதிகாரத்தில் பதிவுபெற்றுள்ளது. துடி ஓர் இருமுகத் தோற்கருவி ஆகும் துடி பாலை நிலத்திற்குரிய கருவியாகும். இது விரந்து முழக்கப்படும் கருவியாகும். அளவில் சிறியதாக இருந்தாலும் இதன் சொற்கட்டுக்களை அழுத்தி இசைப்பது சற்று கடினமான செயல்தான். இது சிறிய கருவி என்பதால் எடுத்துச் செல்வது எளிதானது. இதன் சொற்கட்டுகள் யாவும் கூடை அல்லது திரள் நடையில் உருட்டுச் சொற்களை உடையதாக இருக்கும். துடி வன்மைக்கருவியாகும். கருவி வகைகளில் துடி இடைக்கருவி ஆகும். மேலும் மத்திமக்கருவியாகவும் பஞ்ச மரபு உரைக்கின்றது.

தொல்காப்பியத்தின் செய்யுளியலில் பால நிலத்து மறவர்கள் தத்தம் துடியருடன் ஊர்ப்புறம் சூழ்ந்தார்கள் என்பதைக் குறிப்பிட்டுள்ளது.

மறங்கடைக் கூட்டிய துடிநிலைசிறந்த
கொற்றவை நிலையும் அகத்திணைப் புறனே
- (தொல்.பொருள்.புறத்.நூ.4.)

துடிபடுத்து வெட்சிமலைய - (தொல்.பொருள்.செய்.நூ.62.)

என்னும் நூற்பாக்களின் வழி துடி எயினர்களால் மட்டுமின்றி போர்க்களத்திலும் பயன்படுத்தப்பட்டது என்பதை அறியலாம். தங்களின் விருப்ப தெய்வமான குலதெய்வத்தைத் தாங்கள் நிகழ்த்தவிருக்கும் போரினை வெற்றிமுகமாகச் செய்ய வேண்டும்

என்று வேண்டுதல் நிகழ்த்துவர். அச்சமயம் துடியை இயக்கிக்கொண்டு கொற்றவையை வழிபடுதலே துடிநிலை எனப்படும்.

வேட்டுவர்கள் மதிப்பிற்குரியவர்களாகக் கருதப்பட்டனர். வேட்டுவர்கள் எயிற்றியிடம் தம் முன்னோர்களின் பெருமைகளை எடுத்துரைக் கின்றனர். வேட்டையில் கவர்ந்து வந்த ஆநிரைகள் கொல்லன், துடியர், யாழ்ப்பாணன் ஆகியோரது வீட்டு முற்றத்திலும் நிறைந்து இருந்தது. முன்னோர்கள் அத்தகைய செல்வ வளம் மிகுந்தவர்கள் என்பதோடு கவர்ந்து வந்த பொருள்கள் இசைக்கலைஞர்களுக்கும் பங்கிட்டு அளிக்கப்பட்டுள்ளன என்பது அறியப்படுகின்றது. இதனை,

இளமா வெயிற்றி யிவைகாணின் னையர்
தலைநாளை வேட்டகத்துத் தந்தநல் லானிரைகள்
கொல்லன் றுடியன் கொளைபுணர் சீர்வல்ல
நல்லியாழ்ப் பாணர்த முன்றி னிறைந்தன (12:15:!-4)

எனும் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

மறவர்கள் துடியுடன் சிறுபறை, வயிர் என்னும் சிறிய ஊதுகருவிகளோடு மிகுந்த அச்சம் தரும் ஒலியை எழுப்பிக்கொண்டு வருவர். நள்ளிருளிலே எதிர்ப்பட்ட விலங்கினங்களை வெல்லுகின்ற புலியைப் போன்றுள்ள அத்தகைய மறவர்கள் தங்கள் கழுத்தைத் தாங்களே அறுத்துக்கொண்டு குருதிப் பலியைக் குமரியாகிய உன் பாதத்தில் அளிப்பர் என்று மறவர்களின் தன்மையைப் பின்வரும் பாடலடிகள் வழி அறியலாம்.

துடியொடு சிறுபறை வயிரொடு துவை
வெடிபட வருபவ ரெயினர்க ளரையிருள்
அடும்புலி யானயவர் குமரி னடிதொடு
படுகட நிதுவுகு பலிமுக மடையே (சிலம்பு.12:20-22.)

துடி எயினர்கள் என்னும் போர் மறவர்கள் பயன்படுத்தும் கருவியாகும். அதன் ஓசை மிகுந்த அச்சத்திற்குரியதாக இருக்கும் என்னும் செய்தியைச் சிலப்பதிகாரமும் பதிவுசெய்துள்ளது.

துண்ணென் துடியொடு துஞ்சு ஊர் எறிதரு
கண்ணில் எயினர் இடுகடன் உண்குவாய் (சிலம்பு.12:2:1,2)

'துண்' எனும் ஓசையுடன் முழங்குகின்ற துடியோடு தூங்குகின்ற ஊரினைக் கொள்ளையிடும் கண்ணோட்டம் இல்லாத எயினர் இடுகின்ற பலிக்கடனை உண்பாயாக என்று இப்பாடல் துடியின் ஓசை 'துண்' என்று ஒலிக்கும் என்னும் ஒலிக்குறிப்பை எடுத்துரைக்கின்றது. மேலும் எயினர்கள் இரவில் ஊரைக் கொள்ளையிடும் பொழுது எழுப்பும் துடியின் ஒலி மிகுந்த அச்சத்தை விளைவிக்கும் என்பதையும் அறியமுடிகின்றது.

முடிவுரை

பல நுட்பங்களைத் தங்களின் வாழ்க்கை அனுபவத்தில் கண்டுணர்ந்து அதன் அடிப்படையில் வாழ்வியல் கூறுகளை முன்னோர்கள் வகுத்து வந்துள்ளனர். சூழ்நிலைக்கேற்பத் தங்களின் பழக்க வழக்கங்கள் பணபாட்டுக் கலாசாரக் கூறுகளை வகைமைபடுத்தி அதனை தொடர்ந்து வரும் மரபாகக் காலங்காலமாகக் கடைபிடித்து வந்துள்ளனர். பொழுதுபோக்குக் கூறுகளாக இம்மரபுகள் பின்னர் மாற்றப்பட்டுள்ளன. தங்களின் செயல்பாடுகளின் பொருண்மையைப் பிறர் அறிந்து கொள்வதற்காகக் கடைபிடிக்கப்பட்ட பழக்கங்கள் தேவை கருதி மரபான வழக்கங்களாகப் பின்பற்றப்பட்டு வந்துள்ளன என்பதற்குச் சிலப்பதிகாரமும் நிலைத்த சான்றாக விளங்குகின்றது.

இசைக்கருவிகளை மென் கருவிகள், வன் கருவிகள் எனப் பகுக்கலாம். இரண்டுமே தொல் தமிழர் வாழ்வில் புழக்கத்திலிருந்தாலும் இனக்குழு, நிலைக்குழு மக்களாக மாறிய பொழுது தோற் கருவிகளே புழங்கு பொருள்களாகப் பயன்பாட்டிலிருந்தன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் வரிசைப்படி நிலங்களை நிலைப்படுத்தும் பொழுது இசைக் கருவிகளின் வளர்ச்சி நிலையையும் பயன்கொள்ளும் தேவைகளும் மாரி வருவதை அறியமுடிகின்றது. வழிபாட்டுச் சடங்குகளிலிருந்து தொழில்நிலைக்கு மேம்பட்ட நிலையினைத் தெளியலாம்.

இசைக்கருவிகள் முதன்மை பெற்றிருப்பது போலவே சிலப்பதிகாரத்தில் தொல் தமிழரின் தொல்லிசையின்

தொடக்கத்தையும் செவ்வியல் இசை வடிவங்களின் உச்சத்தையும் இனம் காணமுடிகிறது. தமிழ்ச் சமூகத் தோற்றக் காலத்திலேயே தமிழிசையின் முழுமைபெற்ற தன்மையினை அறிந்துகொள்ள முடிகிறது. இவ்வெழுத்துரையில் நெய்தல் திணையில் இசைப்பாடல்களின் பல்வேறு வடிவங்களையும் முல்லைத் திணையில் பண்ணுப்பெயர்த்தல் என்னும் இசைத்தொழில் நுட்பத்தின் பல்வேறு பரிமாண மாற்றங்களை உய்த்துணரும் வகையில் எளிய மக்களின் விளையாட்டுச் சூழலில் எடுத்தியம்பியுள்ள இசைத்திறன்களை அறியமுடிகின்றது.

இசை நுகர்விலும் தேர்விலும் வளர்ச்சிப் படிநிலையினை அறிகின்ற பொழுது திணை நிலை மக்களின் செவ்விய பயன்பாட்டு நாகரிகம் வளர்ச்சி எய்தியதைச் சிலப்பதிகாரப் பனுவல் வழித் தெளிவடைய முடியும்.

உசாத்துணை

சாமிநாதையர், (1985), சிலப்பதிகாரம், தமிழ்ப் பல்கலைக்கழகம்

5

பட்டிப்பளைப் பிரதேச கிராமியப் புலவர் பாடல்களின் சமூகப் பெறுமானம்

அருண்ஜா சஜீவன்
பட்டதாரி ஆசிரியர், இலங்கை

அறிமுகம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்குப் பகுதி, விவசாய நிலங்களும் காடுகளும் குளங்களும் நிறைந்து ஒரு விவசாயப் பண்பாட்டுப் பிரதேசமாக விளங்குகின்றது. இப்பிரதேசத்தினைப் படுவான்கரை என்று அழைப்பர். இப்பெருநிலப்பரப்பின் ஒரு பிரிவாக விளங்குவது பட்டிப்பளைப் பிரதேசம். இப்பிரதேச மக்கள் விவசாயப் பண்பாட்டைப் பின்பற்றுகின்றவர்களாக உள்ளனர். சடங்குக் கோயில்களும் கூத்து உள்ளிட்ட கலைப் பாரம்பரியங்களும் இப்பிரதேசத்தின் தனித்துவமெனலாம். இது காரணமாக இப்பிரதேசத்தில் கிராமியப் புலவர்களின் பாடல் மரபும் முக்கியத்துவம் பெற்று விளங்கியுள்ளது. படிப்பறிவு குறைந்த விவசாயப் பண்பாட்டோடு பற்றுக்கொண்ட கிராமியப்புலவர்கள் தமது படிப்பறிவுக்கு எட்டிய வகையில் பாடல்களைக் கட்டிப் பாடியுள்ளனர். இவர்கள் தமது பாடல்களில் பிரதேசத்தில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்கள், இனமுரண்பாடு காரணமாக ஏற்பட்ட ஆக்கிரமிப்புக்கள், அழிவுகள், வழிபாட்டு முறைகள், ஆலய வரலாறுகள், தனிமனித உணர்வுகள் முதலானவற்றை வெளிப்படுத்தியுள்ளனர். இந்நிலையில், அப்பாடல்களை ஆய்வுக்குட்படுத்துவதாக இவ்வாய்வு அமைகிறது.

ஆய்வு நோக்கம்

நவீன கவிதை வழிக் கவிஞர்களும் மரபுவழிக் கவிஞர்களும் வெளிப்படுத்தத் தவறிய விடயங்களை உள்ளூர்ப் புலவர்கள் வெளிப்படுத்தியுள்ளமையை எடுத்துக் காட்டுவது இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது. அத்தோடு இப்பிரதேசத்தில் உள்ளூர்ப்

புலவர் பாடல் மரபு நீண்ட காலமாக நிலவி வந்துள்ளமையினையும், இவர்கள் மக்கள் தளத்தில் நின்று கொண்டு யாவருக்கும் விளங்கக்கூடிய எளிய மொழிநடையில் சமூக விடயங்கள் பலவற்றை வெளிப்படுத்தியுள்ளமையினையும் வெளிக்கொணர்வது இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஆய்வு வரையறை

1950 தொடக்கம் 2000ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பட்டிப்பளைப் பிரதேசத்தில் எழுந்த உள்ளூர்ப் புலவர்களின் பாடல்களை மையப்படுத்தியே இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகின்றது. கையெழுத்துப் பிரதிகளாகக் கிடைத்த பாடல்களைக் கொண்டும் சிறு நூல் வடிவில் வெளிவந்த அச்சுப் பிரதிகளைக் கொண்டும் இவ்வாய்வு அமைகிறது.

ஆய்வு முறையியல்

பட்டிப்பளைப் பிரதேச உள்ளூர்ப் புலவர்களின் பாடல்கள் கள ஆய்வின் மூலம் தேடிப் பெறப்பட்டு, தொகுக்கப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்டு, அவற்றின் பொருள், வெளிப்பாட்டு முறை என்பன விபரண அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளன.

விடயப் பகுப்பாய்வு

உள்ளூர்ப் பாடல் மரபு என்ற ஒரு வகை இலக்கியப் போக்கு கிழக்கிலங்கையில் தனித்துவமுடையதாகக் காணப்படுகின்றது. ஓரளவு எழுத்தறிவைக் கொண்ட கிராமியப் புலவர்கள் வாய்மொழி இலக்கியத்தளத்தில் நின்று கொண்டு பாடல்களை எழுதி மக்கள் மத்தியில் அளிக்கை செய்து வருகின்றனர். இப்பாடல் மரபு பரவலானதும் முக்கியமானதுமான இலக்கிய மரபாக நீண்டகாலமாக மக்கள் மத்தியில் நிலவி வருகின்றது. வாய்மொழி இலக்கிய மரபுகள் வலுவாக வேரூன்றியிருந்த சமூகச்சூழலில் எழுத்து மரபு அறிமுகமானதன் விளைவாக வாய்மொழி மரபிற்குப் பரிச்சயமான மக்கள் தமது வாய்மொழிப் பாடல்களை எழுத்தில் உருவாக்கத் தொடங்கினர். இதனால் இத்தகைய பாடல் மரபை எழுத்து இலக்கிய மரபிற்கும் வாய்மொழி இலக்கிய மரபிற்கும் இடைப்பட்ட எழுத்துசார் வாய்மொழிப்பாடல்கள் மரபாக கொள்வர். இவை எழுதப்பட்டவையாகவும் அதேவேளை வாய்மொழி வழக்கில் வழங்கி வருவனவாகவும் உள்ளன. இப்புலவர்களின்

அச்சுப்பிரதிகள் பெரும்பாலும் 4 தொடக்கம் 12 பக்கங்கள் கொண்ட சிறு நூல் வடிவில் காணப்படும். சில பாடல்கள் துண்டுப்பிரசுரங்களாகவும் அமைகின்றன. இவ்வச்சுப்பிரதிகளை கிராமிய/ உள்ளூர்ப் புலவர்கள் மக்கள் கூடும் இடங்களில் பாடிக்காட்டி விற்பனை செய்கின்றனர். இவை எழுத்தில் உருவாக்கப்பட்டாலும் வாய்மொழி மரபில் காலூன்றியவையாக உள்ளன. அளிக்கையே இப்பாடல்களின் மையமாக அமைகிறது. இப்பாடல் மரபு குறித்து த.மேகராசா பின்வருமாறு கூறுகிறார்:

எழுத்து இலக்கிய மரபு, வாய்மொழி இலக்கிய மரபு என்ற இரு வகை மரபிலிருந்தும் வேறுபட்ட புதுவகையான பாடல் மரபாக அமைவதே எழுத்து மரபு சார் வாய்மொழிப் பாடல் மரபாகும். இவை எழுதப்பட்டவையாகவும் அதேவேளை வாய்மொழி வழக்கில் வழங்கி வருவனவாகவும் காணப்படும் பாடல்களாகும். வாய்மொழிப் பாடல்கள் ஆசிரியர் அற்றனவாகவும் பொதுமைப்படுத்தப்பட்டனவாகவும் காணப்படும். ஆனால், மேற்குறித்த புதுவகையான வாய்மொழிப்பாடல் மரபுக்கு ஆசிரியர் உண்டு. அத்துடன் இவை வாய்மொழிப் புலவர்களால் கையேட்டுப் பிரதியாக எழுதப்பட்டும் அச்சுருவாக்கப்பட்டு பிரசுரங்களாக விற்பனைக்கு விடப்பட்டும் காணப்படும். இவை மக்களை நோக்காகக் கொண்டு பாடப்பட்டு வந்துள்ளன. இவ்விலக்கிய மரபு அதன் மொழி நடை காரணமாக எல்லோரையும் கவரக்கூடிய - எங்கும் பரவலடையக் கூடியதாக விளங்குகின்றது. இத்தகைய இலக்கிய மரபு சார்ந்த புலவர்களை மக்கள் பாட்டுக் கட்டும் புலவர்கள் என்றும் அழைத்து வந்துள்ளனர் (சுயம்பு-03, 2014:35).

மண்முனை தென்மேற்குப் பட்டிப்பளைப் பிரதேசத்தில் இத்தகைய கிராமியப் புலவர்களின் பாடல்கள் பெரு மரபாக இனங்காணப்பட்டுள்ளது. இப்பிரதேச பாட்டுக்கட்டும் கிராமியப் புலவர்களுள் பாலாத்தை (பண்டாரியாவெளி), மா.கேதாரபிள்ளை (முதலைக்குடா), மாரிமுத்து நல்லதம்பி (கற்சேனை), மா.மாசிலாமணி (முனைக்காடு) ப.இ.தாமோதரம் (முனைக்காடு), சி.இரத்தினசிங்கம் (மாவடிமுன்மாரி), குணஞானசெல்வம் (அரசடித்தீவு), கவிக்குயில் சிவஞானம் (முனைக்காடு), பா.நல்லதம்பி (முனைக்காடு), வே.வல்லிபுரம் (மகிழடித்தீவு) முதலானவர்கள் முக்கியமானவர்கள். இவர்களில் கணிசமானோர்

ஆரம்பக் கல்வியறிவு உடையோராகவும், சிலர் கல்வியறிவு பெறாதவர்களாகவும் சோதிடம், நாட்டுவைத்தியம், மாந்திரிகம், அண்ணாவியார் மற்றும் வெள;வேறுபட்ட தொழில் செய்பவர்களாகவும் சமூக அந்தஸ்த்தில் ஏற்றம் இறக்கம் உடையவர்களாகவும் சிலர் சமூகத்தில் மதிப்பிற்குரியவர்களாகவும் சிலர் தொழிலற்றோராகவும் காணப்படுகின்றனர்.

இப்புலவர்கள் தமது கிராமங்களில் அன்றாடம் நடக்கும் முக்கிய சம்பவங்கள் அனர்த்தங்கள், கொலைகள், சொத்துப் பிரச்சினைகள், சமூகசீர்கேடுகள், கோயில் வரலாறுகள் முதலானவை பற்றி அதிகம் பாடியுள்ளனர். இதன் அடிப்படையில் இப்புலவர்களின் பாடல்களைப் பின்வருமாறு பொருள் அடிப்படையில் பிரித்து நோக்கலாம்:

1. சமூகப் பிரச்சினைகள் பற்றிய பாடல்கள்
2. சமயம் சார்ந்த பாடல்கள்
3. அரசியல் சார்ந்த பாடல்கள்

வயல்வெளிகளாலும் இயற்கை வளங்களாலும் சூழப்பட்டு விளங்குகிற பட்டிப்பளை பிரதேசத்தில் வாழுகின்ற மக்கள் அதிகமானோர், குடிசைவீடுகளில் எளிமையான வாழ்க்கை முறையையே வாழ்ந்து வருகின்றனர். இதன் காரணமோ என்னவோ இயற்கையின் சீற்றத்திற்கு அதிகம் முகம் கொடுக்க நேரிடுகின்றனர். சூறாவளி, வெள்ளப்பெருக்கால் ஏற்படும் உயிரிழப்புக்களும் உடைமை இழப்புகளும் இம்மக்களை சொல்லொணாத் துயரங்களில் ஆழ்த்தி விடுகின்றன. இத்தகைய விடயங்களைத் தமது பாடல்களில் பேசுபொருளாக அமைத்து பாடியுள்ளார்கள் உள்ளூர்ப் புலவர்கள.; இப்புலவர்கள் இக்காலப்பகுதியில் வாழ்ந்தமையாலும் இம்மக்கள் அனுபவித்த இன்னல்களையும் துயரங்களையும் தாம் அவர்களோடு இணைந்து அனுபவித்தமையாலும் தமது பாடல்களில் இவற்றைப் பறைசாற்றியுள்ளனர். அந்தவகையில், 1957 ஆம் ஆண்டு உன்னிச்சை, உறுகாமம், கரடியனாறு ஆகிய குளங்கள், பெருமழையால் அணைக்கட்டுக்கள் உடைந்து வெள்ளம் பரவி இப் பிரதேசத்தைத் தாக்கின. இதனை அடிப்படையாகக் கொண்டு மா.கேதாரபிள்ளை வெள்ளக்காவியம் பாடியுள்ளார்.

ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பதில் ஏழில்
ஆளுகின்ற பன்னிரண்டு இருபத்தி ஐந்து
ஆனதொரு நாள் புதன் கிழமை இரவு
அடித்த புயல் வெள்ளப் பெருக்கால் அழிவானதையோ
அழிவான பொருளை தெளிவாக உரைப்பேன்
ஆறுமணி நேரம் அதில் வெள்ளமது பெருகி
ஆளுமனை மீதினில் உள்ளே புகுந்து
ஆட்களைக் கலக்கியே பிள்ளைகளை அள்ளியே
அழுதழுது தெருமுழுதும் ஓடினாரையோ
கட்டிலோடு பெட்டகம் கைப்பேணி உடுப்பு
ஆளுகின்ற சாமான் அரிசிகளும் கூட
ஆளவைத்த பீங்கான் கோப்பைகள் அங்கு
அழிவாகு தென்று அலறி அழுதாரையோ
சட்டிகுடமுட்டிகள் தானழிவானதையோ
தானாளும் பணம் தாளுதென்று அழுதாரையோ
தரணியில் மாந்தர்கள் புலம்பியழுதாரையோ
(தகவல்: த.மேகராசா, 2014:36)

இவ்வாறு பாடும் புலவர் இதே பாடலில் வெள்ளத்தால் வழங்கப்பட்ட உதவிகள், நிவாரணங்கள் பற்றியும் வெளிப்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

1978 ஆம் ஆண்டு சூறாவளி தாக்கிய போதும் படுவான்கரைப் பிரதேசமும் பாதிக்கப்பட்டது. இதனை அடிப்படையாக கொண்டு சூறாவளியின் தன்மை, அதனால் பாதிக்கப்பட்ட ஊர்கள், அதனால் ஏற்பட்ட உயிர்ச் சேதங்கள், இவற்றிக்குக் கொடுக்கப்பட்ட நிவாரணங்கள்;, அதில் இடம்பெற்ற மோசடிகள் முதலான பல விடையங்களை எடுத்துக்கூறும் வகையில் மா.கேதாரபிள்ளை சூறாவளிக் கவாவியத்தை பாடியுள்ளார். இதில் சூறாவளிக்குப் பயந்த மக்கள் பாதுகாப்பான இடங்களில் ஒதுங்கி இருந்த வேளை சிலர் மக்களின் பொருள்களை களவு செய்தமையினையும் வெளிப்படையாகக் கூறியுள்ளார். சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டபோது அதனைப் பெறுவதற்காக மக்கள் ஒருவரை ஒருவர் முண்டியடித்துக் கொண்டு நின்றமையினால் நிவாரணம் கொடுக்க முன்வந்தவர்கள் திரும்பிச் சென்றமையினைக் கூத்துப்பாடல் மெட்டில் பாடியுள்ளனர்.

கவிக்குயில் சிவஞானம் 'சூறாவளி சுப்பன்' என்ற தலைப்பில் இதனை வெளிப்படுத்தியுள்ளார்.

இரண்டு வருடங்கள் தொடர்ச்சியாக மழைபெய்யாமையினால் மண்முனை தென்மேற்கு பிரதேசம் வரட்சியால் வாடியது. 1947 ஆம் ஆண்டு வரட்சியினால் மண்முனையாறு வற்றியது. இது தெரியாத ஒரு விடயம். இதனை அடிப்படையாகக் கொண்டு பண்டாரியா வெளியை சேர்ந்த பாலாத்தை என்ற புலவர் பாடல் கட்டிப் பாடியுள்ளார். ஆறு வற்றியபோது ஊர் மக்கள் சென்று பெரிய மீன்களைப் பிடித்து வண்டிகளில் ஏற்றிச் சென்று காத்தான்குடியில் விற்றுள்ளனர். இதனை இப்புலவர் பாடல்களாக வெளிப்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மனிதர்கள் மேற்கொள்ளும் கொடுமைகள் பாவகாரியங்கள் பற்றியும் கேலி செய்து உள்ளூர்ப் புலவர்கள் பாடல்களைப் பாடியுள்ளனர். அவ்வகையில் குணஞான செல்வம் பாலுடன் தண்ணீரைக் கலந்து வியாபாரம் செய்யும் பத்தப்போடி பற்றிப் பாடியுள்ளார். இப்புலவர் பிறிதொரு பாடலில் களவெடுக்க வரம் கேட்கும் ஒருவரை முன்னிறுத்தி சமூகக் கொடுமையினை கேலி செய்து பாடியுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது. உள்ளூர்ப் புலவர்கள் சிலர் சிறைச்சாலை வாழ்வை அனுபவித்தவர்கள். சிறைச்சாலைகளில் தாம் அனுபவித்த துன்பங்கள் பற்றியும் தமது விடுதலைக்காக பிரார்த்திக்கும் வகையிலும் பாடல்களைப் பாடியுள்ளார். முதலைக்குடாவை சேர்ந்த கேதாரபிள்ளை சிறையில் இருந்து துன்பங்களை அனுபவித்து பின்னர் மீண்டு வந்தவர். இதனை அவர் 'தென் கதிரை முருகன் பேரில் சிறைமீட்ட கும்மி' எனும் பெயரில் பாடியுள்ளார்.

பொழுது உதயமோ தெரியாது இந்த
பூலோக வெளிச்சமோ புரியாது
அழுது புலம்பியும் சீவன் போகுதில்லை
அன்பனே என் சிறை மீளுப்பா
பௌத்திரமாக எனை வைத்து பூட்டியே
பலவாறும் துன்பம் புரிகிறார்கள்
கயிற்றுக்கு இரையாகி போகும் முன்னே வந்து
கந்தா என் சிறை மீளுப்பா
நிறுத்தியிருக்கிறார் தூக்குமரம் அதில்

நெடுகிலும் கயிறுதானிருக்கும்
குறித்தகாலம்வரை பாத்திருக்கிறார்கள் கந்தா
குமரேசா என்சிறைமீளுப்பா

(தகவல்: த.மேகராசா, 2014:48)

அரசியல் சார்பான பாடல்களையும் கிராமியப் புலவர்கள் பாடியுள்ளனர். குறிப்பாக அரசியல்சார் பாடல்களில் அதிகமானவை போரின் கொடுமைகளையும் மக்கள் அனுபவித்த அவலங்களையும் பேசுவனவாக உள்ளன. முரண்பாடுகளும் போராட்டமும் நிலவிய காலகட்டங்களில் மண்முனை தென்மேற்கு பிரதேச மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்தனர். யுத்தத்தில் ஆயுதம் ஏந்தியவர்களும் துன்பப்பட்டவர்களும் உடமைகளை இழந்தவர்களும் கொல்லப்பட்டவர்களும் இப்பிரதேசத்தில் பலர். யுத்த காலத்தில் பாடுவான்கரை மக்களுக்கு இராணுவத்தினர் பல்வேறு கொடுமைப்படுத்தல்களை மேற்கொண்டிருந்தமையினையும் இப்புலவர்கள் பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளனர். போர்க்கால சூழ்நிலைகளில் மக்கள் தங்கள் உயிர்களைக் காத்துக்கொள்ளும் பொருட்டுத் தமது சொந்த இடங்களை விட்டுப் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்தனர். இதனடிப்படையில் மா. கேதாரபிள்ளை பாடிய 'தமிழ் அகதிகளுக்கான மாமாங்கப்பிள்ளையார் தோத்திரம்' என்ற றுல் படுவான்கரை மக்கள் எழுவான்கரை நோக்கி சென்று அனுபவித்த துன்பங்களை எடுத்துக்கூறுகின்றது.

கேதாரபிள்ளைப் புலவர் பாடிய 'இறால் வளர்ப்பு அம்மானை' மிக முக்கியமானதாகும். படுவான்கரைப் பிரதேசத்தில் அரச படையினரால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளுள் இறால் வளர்ப்புப் படுகொலையும் முக்கியமானதாகும். இப்படுகொலை பற்றிப் பலரும் பாடுவதற்குத் தயங்கிய அல்லது தவறிய சூழலில் கேதாரபிள்ளை என்ற உள்ளூர்ப் புலவர் இதனை ஒரு காவியமாகப் பாடியுள்ளார். இதிலுள்ள பின்வரும் வரிகள் எடுத்துக்காட்டத் தக்கவை:

மட்டக்களப்பு மண்முனை பற்றியே கான்
ஏழை வறுமை எங்கும் பிரச்சினையாம்
தொழிலே இல்லை தோழர்கள் வாழ்வதற்கு
வேலை இல்லா திண்டாட்டம் வெகு பிரச்சினை

பசியால் வாடியும் பிள்ளைகள் தான் இருந்து
ஏங்கி உக்கி இறந்தார் கொஞ்சப்போர்
நல்ல சாப்பாடு இல்லை நாட்டிலே அம்மானை
பஞ்சம் பசி தீர்த்து பழைய நாடு திருத்த
வந்த இறால் வளர்ப்பு கொம்பனி...
காட்டை அழிப்பது போல் பொம்பனி
அழிஞ்சி தரமட்டம் ஆக்குகிறார்
எந்த சவமும் போட வில்லை காண்
எண்பந்தி அயிந்து கொம்பனியில்
சுட்டசவம் கொண்டே போய்
ஒரு மெசின் பெட்டி ஏத்தியே காண்
துலைச்சான் கொம்பனியை துரோகி
அழிச்சான் காண் அடியோடு அம்மானை

(தகவல்: த.மேகராசா, 2014:43)

இப்பிரதேசப் புலவர்கள் பாடியுள்ள காவியங்கள், பதிகங்கள், காவடிச்சிந்துகள், அம்மானை போன்றவை அவர்களின் பக்தி உணர்வினை வெளிப்படுதுவதாகவும் குறிப்பிட்ட கோயில்களின் சிறப்பு, இறைபெருமை, கோயில் வரலாறு, விரதமகிமை முதலியன பற்றி எடுத்துரைப்பனவாகவும் உள்ளன. அவ்வகையில், கிராமியப் புலவர்களின் பாடல்களில் கணிசமானவை தமது பிரதேச கோயில்கள் பற்றிய வரலாற்றுப் பாடல்களாகவும் வழிபாட்டுப் பாடல்களாகவும் அமைந்துள்ளன. புலவர்கள் தமது கோயில்கள் சார்ந்த வரலாறுகளை அறிந்தவர்களாக இருந்தனர். இதனால் தாம் அறிந்தவற்றை மக்களும் அறியும் பொருட்டு அவற்றைப் பாடல்களாக கட்டிப்பாடி வெளியிட்டனர். அவ்வகையில் முதலைக்குடாவை சேர்ந்த மா.கேதாரபிள்ளையின காளியம்மன் வரலாற்று காவியம்,தாந்தாமலை வரலாற்று அம்மானை போன்றவை குறிப்பிடத்தக்கன. காளியம்மன் வரலாற்றுக் காவியம் முதலைக்குடா சின்னக்குளத்து காளியம்மனுக்கு ஆலயம் எழுப்பிய வரலாற்றைக் கூறுகின்றது. இதே போன்று இவரது தாந்தாமலை வரலாற்று அம்மானை காடு வெட்டி வெளியாக்கி மக்கள் வணங்குவதற்கொரு தலமாக அமையப்பெற்ற தாந்தாமலையின் வரலாற்றை எடுத்தியம்புவதும் குறிப்பிடத்தக்கது. சில புலவர்கள் தமது சொந்த மன உணர்வுகளையும் பாடல்களாகப் பாடியுள்ளனர். மாவடிமுன்மாரியைச் சேர்ந்த இரத்தினசிங்கம் என்ற

புலவர் தான் இறந்தால் தமது மக்கள், பேரப்பிள்ளைகள் எவ்வாறு சொல்லி அழவேண்டும் என்று சோகம் ததும்ப பாடிய பாடல்கள் இவ்வகையானவையே ஆகும்.

தொகுப்புரை

இவற்றினடியாக நோக்கும் போது உள்ளூர்ப் புலவர்களின் பாடல்கள் சமய, சமூக, அரசியல் மற்றும் சொந்த உணர்வு சார்ந்து சென்றுள்ளமையினை அவதானிக்கமுடிகிறது. வெளிப்படையாகச் சொல்லமுடியாத பல விடயங்களை இப்புலவர்கள் துணிச்சலோடு பாடியுள்ளனர். சிறைச்சாலை வாழ்க்கை, யுத்த அழிவு, அகதி வாழ்வு போன்றவற்றை வெளிப்படையாகப் பாடியுள்ளனர். இத்தகைய விடையங்களை மரபுவழிக் கவிஞர்களோ நவீன இலக்கியப் படைப்பாளர்களோ வெளிப்படுத்தியதாக அறிய முடியவில்லை. மரபு வழி இலக்கிய கர்த்தாக்கள் இக்காலப்பகுதியில் வாழ்ந்திருப்பி;னும் இயற்கை அனர்த்தங்கள், அதனால் மக்கள் அடைந்த இன்னல்கள், ஆலய வரலாறு சாரந்;த விடயங்கள் பற்றி அதிக கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை. நவீன இலக்கிய வடிவங்கள் 2000ஆம் ஆண்டுகளுக்கு பின்னரே பட்டிப்பளைப் பிரதேசத்தில் வளர்ச்சியடையத் தொடங்கியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவ் இலக்கியவாதிகள், இயற்கை அனர்த்தங்கள், யுத்தகால கொடுமைகள் பற்றிப் பேசியிருப்பினும் இப்புலவர்கள் அனுபவித்த விடயங்களை வெளிப்படையாக குறிப்பிடவில்லை என்றே கூறலாம்.

இருப்பினும், இப்புலவர்களின் பாடல்கள் சமூகத்தவர்களால் கவனிக்கப்படாது மறைந்து செல்லும் தன்மை கொண்டனவாக உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. குறிப்பாக இப்புலவர்களின் பாடல்களை இலக்கியங்களாகக் கருதாமையினால் இவை மக்கள் கவனத்திற்கு உட்படுத்தப்படவில்லை. அத்தோடு இவற்றை உருவாக்கும் படைப்பாளிகளைப் புலவர்களாகவோ கவிஞர்களாகவோ மதிக்காமை மற்றும் இப்புலவர்களின் பாடல்கள் கையெழுத்து பிரதிகளாகவும் அதேநேரம் எளிய தாள்களில் அச்சிடப்பட்டு சிறிய அச்சுப்பிரதிகளாகவும் காணப்படுவதால் குறுகிய காலப்பகுதியில் அழிந்து போகக்கூடியதாக உள்ளமை, அதிகமான பாடல்கள் குறிப்பிட்ட புலவரின் மறைவின் பின் பேணுகையற்று அழிந்து போகின்றமை போன்றவற்றை இதற்குக்

காரணங்களாக கூறலாம். மொழிநடை சார்ந்து பலவீனங்கள் இப்புலவர்களின் பாடல்களில் காணப்பட்டாலும் சமூகம் சார்ந்த விடயங்களை மக்களுக்காக பாடும் மக்கள் புலவர்கள் எனும் விதத்தில் இவர்கள் முக்கியத்துவம் உடையவர்களாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உசாத்துணைகள்

கவிக்குயில் சிவஞானம், (1984). கையெழுத்துப் பிரதி.

குணஞான செல்வம், (1989). கூத்துப் பிரதி.

கேதாரபிள்ளை, மா. (1957). வெள்ளக்காவியம்.

கேதாரபிள்ளை, மா. (1985). தென் கதிரை முருகன் பேரில் சிறைமீட்ட கும்மி.

கேதாரபிள்ளை, மா. (1978). சூறாவளிக் காவியம்.

கேதாரபிள்ளை, மா. (2000). தமிழ் அகதிகளுக்கான மாமாங்கப்பிள்ளையார் தோத்திரம்.

கேதாரபிள்ளை, மா. (1987). இறால் வளர்ப்பு அம்மானை.

கேதாரபிள்ளை, மா. (1973). காளி அம்மன் வரலாற்றுக்காவியம்.

மேகராசா, த. (2014). மண்முனை தென்மேற்குப் பிரதேச எழுத்து மரபுசார் வாய்மொழி பாடல் மரபின் பொருண்மை. சுயம்பு - 03, கலாசார பேரவை, மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை.

மேகராசா, த. (2018). சமகால வாழ்வின் ஆவணப்படுத்தலாக அமையும் உள்ளூர்ப் புலவர்களின் பாடல்கள். மூன்றாவது சர்வதேச ஆய்வரங்கு, சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கை நிறுவகம்.

யோகராசா, செ. (2011). தாந்தாமலை வரலாற்று அம்மானை சில அவதானிப்புக்கள். தாந்தாமலை மாட்சி குடமுழுக்கு மலர் 2011 தாந்தாமலை முருகன் ஆலய பிள்ளையார் கோவில் குடமுழுக்கு விழா, மலர் குழு.

6

புலம்பெயர் தமிழர் அவல வாழ்வு - தாமரைச்செல்வியின் 'உயிர்வாசம்' நாவலை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

ஜீவகரன் ஷம்சிகா
தற்காலிக உதவி விரிவுரையாளர், தமிழ் கற்கைகள் துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
shamshamshi417@gmail.com

ஆய்வு அறிமுகம்

ஈழத்தின் மூத்த பெண் எழுத்தாளர்களில் தாமரைச்செல்வியும் ஒருவர். கிளிநொச்சி மாவட்டத்திலே பரந்தனில் பிறந்தவர். 1973 இலிருந்து இன்றுவரை எழுதிவருகின்றார். ஆரம்ப காலங்களில் ஈழத்திலிருந்து எழுதித் தனக்கென இலக்கியவட்டத்திலே பெயரினைப் பதித்தவர். பின்பு அவுஸ்திரேலியாவிற்குப் புலம்பெயர்ந்து சென்று அங்கும் எழுத்துத் துறையில் சிறந்த தடத்தினைப் பதித்துள்ளார். புனைவிலக்கியத்தில் மிக்க ஈடுபாடு கொண்ட அவர், இதுவரை சுமைகள் (1977), விண்ணில் அல்ல விடிவெள்ளி (1992), தாகம் (1993), வீதியெல்லாம் தோரணங்கள் (2003), பச்சைவயல் கனவு (2004), உயிர்வாசம் (2019) ஆகிய நாவல்களைத் தமிழுலகுக்கு வழங்கியுள்ளார். அவற்றுள் 'உயிர்வாசம்' எனும் நாவல் கவனிப்புக்குரியது.

இந்நாவல் தாமரைச்செல்வி எழுதிய நாவல்களிலே ஈழத்துப் போர்ச்சூழலையும் புகலிட மக்களது வாழ்வியலையும் ஒரே பார்வையில் காட்டுவதாய் அமைந்துள்ளது. ஈழத்திலே போர்க்காலத்தில் மக்கள் அடைந்த அவலங்கள், போருக்குப் பின்னரான சூழ்நிலையில் ஈழத்து மக்கள் தாயகத்தில் வாழும்போது அடைந்த நெருக்கடிகள், அதனால் தமது உயிரைப் பணயம் வைத்து அவுஸ்திரேலியாவிற்குச் செல்லும் 'படகுப்பயணம்', அப்பயணத்திலே கடலிலேயே தம் வாழ்நாளை முடித்துக் கொண்டவர்களின் அவலங்களும் அதிலே மீண்டு அவுஸ்திரேலியாவிற்குள் சென்றவர்கள் 'படகு மனிதர்கள்' என்ற

பெயரில் அங்குள்ளவர்களின் நகைப்பிற்கு ஆளாகின்ற அவல நிலையும் எனப் பல்வேறு விடயங்களின் கோர்வையாய் தாமரைச்செல்வி வரைந்த ஓவியமே உயிர்வாசம் நாவல் ஆகும்.

இந்நாவல் தேசிய சாகித்திய விருதினைப் பெற்றது. அத்துடன் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர், கலைஞர்கள் சங்கம் வழங்கிய சிறந்த நாவல் விருதும் இந்நாவலுக்குக் கிடைத்துள்ளது. அவுஸ்திரேலியாவிற்குப் படகிலே சென்ற ஈழத்துத் தமிழ் மக்கள் தொடர்பாக வெளிவந்த முதல் நாவல் என்ற அடிப்படையில்; புகலிட நாவல் வரலாற்றில் உயிர்வாசம் நாவலிற்குத் தனியிடம் உண்டு. இத்தகைய சிறப்பினையுடைய 'உயிர்வாசம்' நாவலில் புகலிட மக்களின் அவல வாழ்வு பதிவாகியுள்ள முறைமையை இவ்வாய்வு கவனம்கொள்கிறது.

இவ்வாய்வானது 'உயிர்வாசம்' எனும் நாவலை முதன்மைநிலைத்தரவாகவும்; அவரது படைப்புக்கள் தொடர்பாக வெளிவந்த கட்டுரைகளை இரண்டாம் நிலைத்தரவாகவும் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாய்வு பகுப்பாய்வு அணுகுமுறை, விவரண அணுகுமுறை ஆகிய ஆய்வு முறையியல்களை அடிப்படையாகக் கொள்கிறது. தாமரைச்செல்வியின் படைப்புக்கள் தொடர்பாக பல ஆய்வுகள் வெளிவந்துள்ளபோதும் 'உயிர்வாசம்' நாவல் குறித்தும் அந்நாவல் சித்திரிக்கும் அவுஸ்திரேலியாவிற்குப் புலம்பெயர்ந்து வாழும் 'படகுமனிதர்கள்' என்று அழைக்கப்படும் மக்களது அவல வாழ்வு தொடர்பாகவும் எவ்வித ஆய்வுகளும் வெளிவரவில்லை. அந்த இடைவெளியை நிரப்பும் வகையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

புகலிட மக்களின் அவல வாழ்வின் சித்திரங்கள்

தமது சொந்த நாட்டினை விட்டு வேறு நாட்டிற்குப் புலம்பெயர்ந்து அங்கே வாழும் மக்களே புலம்பெயர் மக்கள் அல்லது புகலிட மக்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இக்கட்டுரையில் ஆய்வுக்குட்படுத்தப்படும் புகலிட மக்கள் ஈழத்தின் அரசியல், இனப்பிரச்சினைகள் காரணமாக தமது சொந்த நாட்டில் வாழமுடியாத சூழலில் புலம்பெயர்ந்து வேறு நாடுகளில் தஞ்சமடைந்தவர்களே ஆவர். இப்புகலிட மக்கள் அந்நிய நாடுகளில் எவ்வாறான வாழ்க்கை முறையினை வாழ்கின்றனர் என்பதனை வெளிச்சமிட்டுக் காட்டுவதாக உயிர்வாசம் எனும் நாவலை அடிப்படையாகக் கொண்ட இவ்வாய்வு அமைகிறது.

புலம்பெயர் தமிழர் என்கின்ற போது எல்லோரது மனதிலும் அவர்கள் வெளிநாடுகளிலே வளமான வாழ்க்கையை வாழ்கின்றனர் என்ற மனப்பாங்கே உண்டு. ஆனால், அவர்கள்; பல பிரச்சினைகளையும் அவலங்களையும் சந்தித்த வண்ணமே தமது வாழ்வை நகர்த்துகின்றனர் என்பதே உண்மை நிலை.

இந்நிலையில் 'உயிர்வாசம்' என்னும் நாவலை அடிப்படையாகக் கொண்டு ஆராய்கின்ற போது தொழிற்பிரச்சினை, மொழிப்பிரச்சினை, வீசா இல்லாத பிரச்சினை, தாயகம் மீதான ஏக்கம், அகதி வாழ்வு, வேறுபட்ட வாழ்க்கைமுறை, உறவுகளைப் பிரிந்த ஏக்கம் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்குப் புலம்பெயர் தமிழர் ஆளாகியுள்ளமை தெளிவாகிறது.

தொழில் நிலை அவலம்

சொந்த நாட்டில் தொழில் புரியும்பொழுது சமூக வரையறை, தொழில்கள் குறித்த உயர்வு – தாழ்வு மனப்பான்மை ஆகியவற்றால் சில தொழில்களை மேற்கொள்வதைத் தவிர்ப்பவர்கள், தாம் புலம்பெயர்ந்து செல்லும் நாடுகளில் கிடைக்கும் வேலைகள் எல்லாவற்றையும் செய்கின்ற மனநிலைக்கு மாறியமையை நாவல் சித்திரிக்கிறது. நாவலில் வரும் மதி என்னும் பாத்திரம் தனது சொந்த நாட்டில் வேலை தேடும்போது புடவைக்கடையில் வேலை செய்வதை விரும்பாமையையும் அவுஸ்திரேலியாவிற்குப் புலம்பெயர்ந்து சென்றபின் அங்கு கிடைக்கும் எல்லா வேலைகளையும் செய்கின்றவனாக மாறுகின்றமையையும் நாவல் விபரிக்கிறது.

கிழமையில் நான்கு நாட்கள் இந்த வேலை. மற்றைய மூன்று நாட்களும் படிக்க கிறானண்ட் வில்லில் இருக்கும் 'டேவ்' வுக்கு போவான். இவை தவிர்ந்த நேரங்களில் அகப்பட்ட எந்தச் சிறு வேலை என்றாலும் ஓடி ஓடிச் செய்வான்.

"ஒரு கடைக்கு மரக்கறி மூட்டை ஏத்தி இறக்க வேணும். விடிய அஞ்சு மணிக்கு வரவேணும். வாறியா"

"ஓம்"

"கொஞ்சம் கிளீனிங் வேலை இருக்கு. வாறியா ரெண்டு நாள் வேலை"

"ஓம்"

"நாலு மணித்தியாலம் இறைச்சிக்கடையில இறைச்சி வெட்ட வேணும். மேலதிக ஆட்கள் கேட்கினம். வாறியா"

"ஓம்" (உயிர்வாசம் : 11,12)

இவ்வாறு தாம் புலம்பெயர்ந்து சென்ற நாடுகளில் கிடைக்கின்ற சகல தொழில்களையும் செய்யக்கூடிய மனநிலையை அவர்களது வாழ்க்கை முறை அவர்களுக்குக் கொடுக்கின்ற தன்மையினை நாவலில் சிறப்பாகப் பதிவுசெய்துள்ளார். நாவலில் வரும் உருத்திரன், காந்தன் எனும் பாத்திரங்களின் உரையாடலிலும் இதனைக் காணலாம்.

"ஹோட்டலில் கோப்பை கழுவிற வேலை எண்டாலும் கிடைக்கும்தானே"

"அதெண்டால் சரி. வெளிநாடுகளில இருக்கிறவையிட்ட அங்க என்ன வேலை செய்யிறீங்கள் எண்டு ஒருத்தரும் கேட்கிறேலை. அதால என்ன வேலை செய்தாலும் குறைஞ்சு போக மாட்டம்" (உயிர்வாசம் : 372)

தாயகம்மீதான ஏக்கம்

புகலிட நாடுகளில் அவர்கள் வாழப்பழகியபோதும் தமது சொந்த நாட்டினை நினைத்து ஏங்கியவர்களாகவே காணப்படுகின்றனர். புகலிட நாடுகளின் காலநிலைக்குப் பழக்கப்படுவது அவர்களுக்குக் கடினமானதாகவே காணப்படுகின்ற தன்மையும் அவ்வேளைகளில் தங்களது நாட்டுக் காலநிலை அவர்கள் மனதில் ஏக்கத்தை உண்டாக்குவதையும் நாவலின் பின்வரும் பகுதி எடுத்துக்காட்டுகின்றது:

"முன்பு நண்பர்களோடு இருந்த வீட்டிலும் சரி இப்போது இருக்கும் கார்த்தி வீட்டிலும் சரி சூடேற்றி இருக்கவில்லை. அதை வாங்க வசதியும் இல்லை. அப்படியே மூடிக் கட்டிக்கொண்டு படுக்கவேண்டியதுதான். விடிய எழும்புவது என்பது மிக மிகக் கடினமான செயல். நாலைந்து வருசத்துக்கு முன்புவரை வன்னி வெப்பத்துக்குப் பழகிய உடல் இந்தக் குளிரை ஏற்றுக்கொள்ளச் சிரமப்படுகிறது.

இப்படி இந்த வீடுகளில் நடந்து போகின்ற சந்தர்ப்பங்களில் ஊரில் காற்றாட நடந்து திரிந்ததை மனம் சுகமாய் அசை போடுகிறது. மதிக்குப் பிடித்தமான விஷயம் ஊர் எல்லையில் உள்ள வயல்வெளிகளில் வெறுங் கால்களோடு வரம்பில் நடப்பது." (உயிர்வாசம் : 01,02)

மொழிப் பிரச்சினை

தமது தாய்மொழியிலே கதைத்துப் பழகிய சூழலில் இருந்து விடுபட்டு, புகலிட நாடுகளின் மொழிச்சூழலில் வாழவேண்டிய கட்டாயம் புகலிட மக்களுக்கு ஏற்படுகிறது. இதனைத் தாமரைச்செல்வி அகதிகளாக கிறிஸ்தீவில் விடப்பட்டவர்களில் ஒருவரான செல்வம் எனும் பாத்திரத்தின் ஊடாக வெளிப்படுத்துகின்றார்.

"இங்கிலீஸ் படிக்கிறதும் முக்கியம்தானே. படிச்சே தீர வேணும். இல்லாட்டி அவுஸ்திரேலியா போய் குப்பை கொட்ட ஏலாது. இனிவாற காலத்தில் கொம்பியூட்டரும் முக்கியம். எல்லாத்தையும் படிப்பம்" என்றான் செந்தில். (உயிர்வாசம் : 310)

அகதி வாழ்வு

தாயகத்தில் சுதந்திரமாக இருக்கமுடியாத நிலையில் புலம்பெயர்ந்து சென்ற மக்கள், புகலிட நாடுகளிலும் பல காலமாக அகதிகளாகவே வாழவேண்டிய நிலை ஏற்படுகிறது. அவர்களுக்குத் தேவையான உணவு, உடை, இருப்பிடம் போன்ற அத்தியாவசிய தேவைகள் நிறைவேற்றப்படுகின்றபோதும் அவர்கள் மனம் சுதந்திரத்திற்காகவே தங்களை உணர்கின்ற தன்மையைக் காணலாம். இதனைக் கிறிஸ்தீவில் இருந்து டார்வினுக்கு வந்து அங்கு முகாமில் இருப்பவரின் மனநிலையின் ஊடாக எடுத்துக்காட்டுகின்றார்.

"இங்கு இயல்பாய் சுதந்திரமாய் வாழ ஒரு வாய்ப்பு எப்போது கிடைக்கப்போகிறதோ என்ற ஏக்கம் மனதைப் புரட்டிப்போட்டது. பொழுது இருளும் நேரம் மறுபடி முகாமுக்கு அழைத்து வரப்பட்டார்கள். விரக்தியும் சலிப்புமாக இருப்பவர்களின் மனங்களை ஆறுதல்படுத்த வெளி உலகத்திற்கு அழைத்துச்செல்வதாக அவர்கள் நினைத்திருக்கலாம். ஆனாலும் மனம் இன்னமும் பாரமாகிப் போவதாகவே மதி உணர்ந்தான்."

"திரும்பவும் இன்னொரு முகாமுக்கு என்றதும் மனம் சோர்ந்து போனது. இந்த முகாம் வாழ்க்கை ஒன்றும் சிரமமானது அல்ல. நேரத்துக்கு நேரம் சாப்பிட முடிகிறது. கிழமைக்கு ஒரு தடவை வீட்டாரோடு கதைக்க முடிகிறது. ஆங்கில கணினி வகுப்புக்களோடு பகல் பொழுதும் விளையாட்டோடு மாலைப்பொழுதும் கழிந்து போகிறது. ஆனாலும் சுதந்திரமற்ற சிறை வாழ்க்கை போலத்தான் இருக்கிறது. ஊரிலும் இதுபோன்ற ஏன் இதைவிட மோசமான அடைபட்ட வாழ்க்கை வாழ்ந்திருக்கிறார்கள். மதியின் நினைவில் செட்டிக்குளம் முகாமின் முள்ளுக்கம்பி வேலிகளுக்கு உள்ளே வாழ்ந்த துயரமான நாட்கள் எப்போதுமே மறக்க முடியாமல் நெருடிக்கொண்டுதான் இருக்கும். ஆனால் இந்த இடம்வரை இன்று தப்பி வந்தும் சுதந்திரமாக இருக்க முடியவில்லை." (உயிர்வாசம் : 339,341)

சொந்த நாட்டில் வாழமுடியாது என்ற நிலையில் தாம் போகின்ற நாடுகளில் தமக்கான ஒரு வாழ்வு பிறக்கும் எனும் நம்பிக்கையில் புலம்பெயர்ந்து செல்லும் மக்கள், அங்கே பல காலங்கள் அகதிகளாக முகாம்களிலேயே வாழ்கின்றபோது அவர்களது மனம் விரக்தியடைகிறது. இதனை நிரஞ்சன் எனும் பாத்திரத்தினூடாக தாமரைச்செல்வி எடுத்துக்காட்டுகின்றார்.

"இங்க இப்படித் தொடர்ச்சியாய் வைச்சிருக்கிறதும் ஒரு உளவியல் தாக்கத்தை உருவாக்கத்தான். ஏன்ரா இங்க வந்து சேர்ந்தம் எண்டு நினைக்க வைக்கிறதுதான் இவையின்ர நோக்கம் போலக்கிடக்கு.

நிரஞ்சனின் குரலில் சலிப்பு இருந்தது" (உயிர்வாசம் : 343)

இவ்வாறு அகதிகளாக தொடர்ச்சியாக வாழ்கின்றபோது அவர்களது மனதிலே ஏற்படும் விரக்தி, தனிமை போன்ற உணர்வுகளால் அவர்கள் தற்கொலை செய்துகொள்ளும் மனநிலைக்கு ஆளாகின்றமையையும் நாவலின் பின்வரும் பகுதி எடுத்துக்காட்டுகின்றது:

"எங்கட தமிழ்ப் பொடியன்தான் கோக்கோகோலா டின்னை பாதியாய் வெட்டி அதால கழுத்தை அறுத்துத் தற்கொலை செய்யப்போயிட்டான். பங்களாதேஸ் பெடியன் பார்த்திட்டுக் கத்தினதால இப்ப ஆஸ்பத்திரிக்கு ஏத்திக்கொண்டு போகினம்"

"ஓமடா பாவம் விரக்தியில இருந்தவன். ஏன் இப்பிடிச் செய்தானோ தெரியேலை. அந்த இளைஞனை நினைக்கக் கவலையாய் இருந்தது" (உயிர்வாசம் : 350)

அகதிகளாக இருந்து விடுபட்டு வாழ அனுமதிக்கின்றபோதும் படகிலே அவுஸ்திரேலியாவிற்கு வந்தவர்களைப் படகு மனிதர்கள் என்று அழைப்பதையும் அவர்களுக்கு மதிப்பளிக்காமையினையும் தாமரைச்செல்வி எடுத்துக்காட்டுகின்றார்.

"முதுகின் பின்னால் படகில் வந்தவர்கள் என்ற பரிகசிப்பு செய்யப்படும்போது மனம் வருந்தும். அந்த கேலி அவர்களைத் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. அதன் பிரதிபலிப்பு பல பேர் கூடுகிற இப்படியான நிகழ்வுகளில் வெளிப்படையாகவே தெரியும்."

"படகில் அள்ளுப்பட்டு வந்த பெடியளால எங்களுக்கு மதிப்பில்லாமல் போயிட்டுது. நடப்பு நாகரிகம் தெரியாததுகள். படிப்பும் இல்லை. அறிவும் இல்லை. அங்க ரோட்டில திரிஞ்சதுகள் இங்க வந்தும் அதைத்தானே செய்யுதுகள்" (உயிர்வாசம் : 410)

வேறுபட்ட வாழ்க்கைமுறை

புகலிட நாடுகளில் காணப்படும் நடைமுறைகளும் அவர்களது சொந்த நாடுகளின் பழக்கவழக்கங்களும் வெவ்வேறாகக் காணப்படுவதால் புலம்பெயர்ந்தோர் புதிய பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் நிலை ஏற்பட்டது.

இலங்கையில் பிள்ளைகளைக் கண்டிப்பது சாதாரணமான ஒரு செயலாகவே காணப்படுகின்றது. எனினும், மேற்கு நாடுகளில் இது சட்டத்திற்குப் புறம்பான செயலாக விளங்குகிறது. இத்தகைய முரணாக சூழ்நிலைகளைப் புலம்பெயர்ந்து செல்லும் மக்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இதனைத் தாமரைச்செல்வி பின்வருமாறு ஓரிடத்தில் எடுத்துக்காட்டுகின்றார்:

"எங்கட ஊரில தாய் தகப்பன் பிள்ளையள் குளப்படி செய்தால் அடிக்கிறது பெரிய விஷயமில்லை. தன்ர நன்மைக்குத்தான் அவை அடிக்கினம் எண்டு பிள்ளைகளுக்கும் விளங்கும். தாய் தகப்பனும் அதைப் பெரிசாய் எடுக்கிறெலை. சுத்தி இருக்கிறவையும் அதைக் குற்றமாய்ப் பார்க்கிறதில்லை. ஆனா இங்க நிலமை வேற. அதில நிற்கிறதுகள் பாவங்கள். படகில வந்த சனம். மன்னார்

பக்கத்திலயிருந்து வந்ததுகள். பிள்ளை செய்த குளப்படிக்கு அடிச்சுப் போட்டுதுகள். இங்க குழந்தையளை அடிக்கிறது பெரிய குற்றம். மாட்டுப்பட்டுப் போய் நிற்குதுகள். எனக்குத் தெரிஞ்ச ஒரு லோயர் அதுகளோட கதைச்சுக் கொண்டு நிற்கிறார். அவர் ஏதும் உதவி செய்வார்" (உயிர்வாசம் : 415)

இவ்வாறே, புலம்பெயர்ந்து செல்லும் மக்களில் சிலர் தமது பாரம்பரிய பழக்கவழக்கங்களை மறந்து அந்த நாடுகளின் பழக்கவழக்கங்களைப் பின்பற்றும் தன்மையினைப் படகில் அவுஸ்திரேலியாவிற்கு வந்த உயர்ந்த மனிதன் என்று குறிப்பிடப்படும் பாத்திரத்தின் ஊடாக சித்திரிக்கிறார். திருமணம் ஆகாமலே வேறு நாட்டுப்பெண் ஒருவருடன் வாழ்ந்து வரும் அந்த நபரைப் பற்றிப் பின்வருமாறு விபரிக்கிறார்:

"இவ தாய்லாந்து கேர்ள்"

"என்ன மரி பண்ணியிட்டீங்களா...."

"இல்லை. ஆனா சேர்ந்து இருக்கிறம்"

"என்னது.."

"நான் குதிரைப் பண்ணையில வேலை செய்யிறன். பக்கத்தில ஒரு பெரிய ஸ்ரோபரித் தோட்டம் இருக்கு. அங்க இவ வேலைக்கு வாறவ. அப்ப பார்த்துப் பழகினது. பிடிச்சிருந்தது. தனி வீடு எடுத்து சேர்ந்து இருக்கிறம். பிறகு ஒருநேரம் பிடிக்காட்டி பிரிஞ்சிடலாம்." (உயிர்வாசம் : 509)

வாரத்தில் ஒரு நாள் மது குடிக்கும் பழக்கத்தைத் தமது வாழ்க்கைப் பழக்கமாக பழகிக்கொள்வதையும் காணமுடிகிறது. இது திரவியம் எனும் பாத்திரத்தின் ஊடாக எடுத்துக் காட்டப்படுகிறது.

"நான் இருந்த வீட்டில சனி ஞாயிறு குடிப்பினம். வீட்டில இருந்துதான் குடிக்கிறது. அதால பிரச்சினை இல்லை. கொஞ்சம் எனக்கும் தருவாங்கள். வேண்டாம் எண்டாலும் விடமாட்டினம். கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறாய் கொஞ்சம் குடிச்சுப்பார் எண்டு எனக்கும் பழக்கிப்போட்டினம்" (உயிர்வாசம் : 433)

புகலிட நாடுகளின் உணவுப்பழக்கவழக்கங்களைப் பழக வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகின்ற தன்மையையும்

காணமுடிகிறது. இதனைத் தவம் எனும் பாத்திரம், தான் வேலை செய்யும் இடத்தில் உள்ள உணவு பற்றிக் குறிப்பிடுவதிலிருந்து அறியமுடிகிறது.

> "என்ன.... சாப்பாடுதான் பெரிய கஷ்டமாய் கிடக்கு. பேர் தெரியாத சாப்பாடு எல்லாம் சாப்பிட வேண்டியிருக்கு. உப்புமில்லை உறைப்புமில்லை. உருத்திரனின்ர சிக்கன் கறியைச் சாப்பிட வரவேணும் போலக் கிடக்கு" (உயிர்வாசம் : 397)

உறவுகளைப் பிரிந்த ஏக்கம்

உறவுகளை நாட்டில் விட்டு விட்டுத் தனியாக புகலிட நாடுகளில் வாழ்பவர்கள் அவர்களது உறவுகளைச் சந்திக்க முடியாது ஏங்குபவர்களாகக் காணப்படுகின்றனர். நாவலில் வரும் கதிர் தனது மனைவி பிள்ளைகளைப் பிரிந்து அவுஸ்திரேலியாவில் வாழ்கின்றான். அவன் தனது பிள்ளைகளின் நினைவில் தவிப்பதை தாமரைச்செல்வி எடுத்துக்காட்டுகின்றார்.

> "கதிருக்கு நிறையக் கவலைகள் இருந்தன. மனைவி குழந்தைகளை நினைத்து ஏங்கிக்கொள்வதிலேயே அவனது முழுப்பொழுதும் கழிகிறது."

குழந்தைகள் பற்றிப் பேசினாலே கதிருக்குக் கண்கள் கலங்கி விடும். குரல் நெகிழ்ந்து போகும். வாட்ஸ்அப்பில் பிள்ளைகளின் படங்கள் கிளிங் கிளிங் என்று வந்து விழுந்துகொண்டிருக்கும். அவற்றைக் கண்வெட்டாது பார்த்துக்கொண்டே இருப்பான். (உயிர்வாசம் : 417)

வீசா இல்லாத பிரச்சினை

புலம்பெயர்ந்து சென்று வாழ்ந்தாலும் அந்த நாட்டில் வாழும் குடியுரிமையைப் பெற அம்மக்கள் கஸ்டப்படவேண்டி இருந்தது. தற்காலிக விசாகூடச் சிலருக்குக் கிடைப்பது கடினமாகக் காணப்பட்டது.

> "கஷ்டப்பட்டு வேலை செய்தால் காசு உழைக்கலாம்தான். ஒவ்வொரு டொலரையும் எங்கட நாட்டுக் காசோட பெருக்கிப் பார்த்தா சந்தோசம்தான் வருகுது. ஆனாலும், வீசா இல்லையெண்டால் நிம்மதியாய் இருக்க ஏலாதே. அதுதான்

மனசைக் குடைஞ்சுகொண்டிருக்குது. பாப்பம். ஏதோ நடக்கிறதுதான் நடக்கும்" (உயிர்வாசம் : 440)

வீசா கிடைக்காதவிடத்து அந்த நாட்டில் வீசா உள்ளவர்களைத் திருமணம் செய்ய முன்வருகின்றமையையும் நாவல் சித்திரிக்கிறது. நிரந்தர வீசா இல்லாததால் அவர்கள் அந்த நாடுகளில் எந்த உடைமையையும் வாங்க முடியாத நிலை காணப்படுகின்றது. இது தவம் எனும் பாத்திரத்தினூடாக எடுத்துக்காட்டப்படுகிறது.

முடிவுரை

ஒட்டுமொத்தத்தில் நோக்குகின்றபோது, அகதிகளாகவே தொடர்ந்து வாழ்கின்ற தன்மை, புகலிட நாடுகளின் குடியுரிமையைப் பெற முடியாத நிலை, இதனால் உறவுகளைப் பிரிந்து வாழ்கின்ற அவலம், தனிமை, விரக்தி போன்றவற்றினால் தற்கொலை செய்கின்ற நிலைக்கு ஆளாதல், காலங்கள் கடந்தபோதும் 'படகு மனிதர்கள்' என்ற நகைப்புக்கு ஆளாதல் எனப் பல்வேறு விதத்திலும் அவல வாழ்வை அனுபவிக்கும் மக்கள் பற்றிய சித்திரமாக நாவல் விரிந்துள்ளமை புலனாகிறது.

தாமரைச்செல்வி, புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியாவுக்குச் செல்லும்முன்பே ஈழத்தின் சிறந்த படைப்பாளியாக விளங்கியவர். அங்கு சென்றபின் பச்சைவயல்கனவு, வீதியெல்லாம் தோரணங்கள், உயிர்வாசம் ஆகிய மூன்று நாவல்களை எழுதியுள்ளார். அவற்றுள் புலம்பெயர் அனுபவங்களை வாசகர்களுக்கு முன்வைப்பதில் உயிர்வாசம் நாவலே முதன்மை பெறுகிறது. ஏனைய இரண்டு நாவல்களிலும் அவரது சொந்த மண்ணான கிளிநொச்சிப் பிரதேசமே படைப்புக்களமாக காணப்படுகின்றது. புலம்பெயர் நாடுகளில் தமிழர் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்களின் ஒட்டுமொத்த வடிவமாக 'உயிர்வாசம்' நாவல் விளங்குகிறது. நாவலில் இடம்பெறும் பாத்திரங்கள் எதிர்கொள்ளும் அவல வாழ்வை, தனித்த சில பாத்திரத்தின் அவல வாழ்வாக படைப்புகள் ஒருபோதும் காட்டுவதில்லை. இந்நிலையிலேயே புலம்பெயர் தமிழர் அனைவரும் எதிர்கொள்ளும் அவல வாழ்வின் சித்திரத்தைச் சில பாத்திரங்களை மையப்படுத்தி படைப்பின் வழி வெளிப்படுத்தியுள்ளார் தாமரைச்செல்வி என்ற கருத்து வலுப்பெறுகிறது.

உசாத்துணை நூல்கள்

அகளங்கன். "வன்னியின் மூத்த பெண் படைப்பாளி தாமரைச்செல்வி." ஞானம். (மே 2021).

கருணாகரன். "தாமரைச்செல்வியின் புனைவுலகு: வரலாற்றின் அடையாளமும் வரலாற்றை உருவாக்கும் திறனும் கொண்டது." தாய்வீடு. (டிசம்பர் 2023).

சித்திரலேகா மௌனகுரு. (1995). இலங்கைத் தமிழரின் புலம்பெயர் இலக்கியம். நுகேகொட: சுதந்திர இலக்கியவிழா அமைப்புக்குழு.

தாமரைச்செல்வி. (2019). உயிர்வாசம், பரந்தன்: சுப்ரம் பிரசுராலயம்.

பத்மநாதன், க. "எங்கும் பரவும் உயிர்வாசம்". ஜீவநதி. (ஆவணி 2022).

மேகராசா, த. (2020). பன்முக நோக்கில் ஈழத்துப் புகலிடத் தமிழ் இலக்கியங்கள். கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

மேகராசா, த. (2020). "படகு மூலம் புலம்பெயர்வோரின் பயண அனுபவமும் வாழ்வும்." 'சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்'. மலர் 5, இதழ் 1, மதுரை.

7

கலாசார நோக்கில் 'உடையார் மிடுக்கு' நாடக இலக்கியம்

தேவகுமாரி சுந்தரராஜன்
இலங்கை. dsundararaajan@gmail.com

அறிமுகம்

யாழ்ப்பாண சமூகம்மீது அக்கறை கொண்டு பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டதோடு அது தொடர்பாகப் பல இலக்கியங்களையும் வெளிக்கொணர்ந்தவர், பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை. அவரது இலக்கியங்களுள் நாடக இலக்கியங்கள் குறிப்பிடத்தக்கன. யாழ்ப்பாண சமூகம் தொடர்பான பல விடயங்களைத் தம்முள் தேக்கிவைத்துள்ள இந்நாடகங்கள் ஆவணங்களாகப் பாதுகாக்கப்பட வேண்டியனவும் நுணுகி ஆய்வு செய்யப்பட வேண்டியனவுமாக உள்ளன. அவ்வாறான செயற்பாடு இடம்பெறுமெனின் அது நாடகத்துறைக்கும் ஆய்வுத் துறைக்கும் மட்டுமன்றி, யாழ்ப்பாண சந்ததியினருக்கும் பயன் விளைவிக்கும் ஒன்றாக அமையும். அந்தவகையில், இவ்வாய்வு முக்கியம் பெறுகிறது. இத்தலைப்பில் இதுவரையும் எந்தவித ஆய்வுகளும் இடம்பெறவில்லை என்பதே இங்கு ஆய்வு இடைவெளியாக அமைகிறது. இவ்வாய்வில் இந்நாடக இலக்கியம் முதன்மை ஆதாரமாகவும் இவ்வாய்வினைச் செவ்வனே நிறைவு செய்யப் பயன்பட்ட ஏனைய அனைத்து ஆவணங்களும் இரண்டாம் நிலை ஆதாரங்களாகவும் இருக்கின்றன. இவ்வாய்வானது காலத்தின் தேவைக்கேற்ற ஆய்வாகவும் தமிழ் இலக்கிய உலகிற்கும் எதிர்கால ஆய்வாளர்களுக்கும் பயனளிக்கும் ஒன்றாகவும். முன்னோடி முயற்சிகளில் ஒன்றாகவும் அமையுமென்பதில் ஐயமில்லை.

ஆய்வின் நோக்கம்

யாழ்ப்பாணக் கலாசாரப் பாரம்பரியங்களை உடையார் மிடுக்கு நாடகம் எவ்வாறு பிரதிபலிக்கின்றது என்பதை ஆராய்வது ஆய்வின் பிரதான நோக்கமாக அமைகிறது. கலாசாரம் என்றால்

என்ன? அந்த அடிப்படையில் எவ்வெக் கலாசாரப் பாரம்பரியங்களைத் தமது நாடகங்களினூடாகப் பேராசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்? எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்? அதனூடாக அவர் சமூகத்திற்குக் கூறவருவதென்ன? என்பன ஆய்வின் துணை நோக்கங்களாக உள்ளன.

ஆய்வு அணுகுமுறை

பேராசிரியர் இந்நாடகத்தின் மூலம் யாழ்ப்பாணச் சமூகத்தின் கலாசாரப் பாரம்பரியம் பற்றிச் சித்திரித்ததின் உண்மைத் தன்மையை அறிந்துகொள்வதற்கு யாழ்ப்பாணச் சமூகம், அதன் அசைவியக்கம் என்பவற்றின் சமூக, வரலாற்றறிவு அவசியமாகின்றது. எனவே, வரலாற்றியல், சமூகவியல் அணுகுமுறைகள் முக்கியம் பெறுகின்றன. உடையார் மிடுக்கு நாடக இலக்கியம் பிரதிபலிக்கும் கலாசாரப் பாரம்பரியங்கள்

கதைச் சுருக்கம்

உடையாருக்கு இரண்டு பிள்ளைகள். மீனாட்சி காதலிக்கிறாள். உடையார் உத்தியோகத்தர் ஏசண்டருக்கு அவளை மணம் முடித்துவைக்க முற்படுகிறார். இதனால் தணிகாசலம் வீட்டைவிட்டுச் செல்லுகிறான். உடையாரது சொத்துக்கள் திருடப்படுகின்றன. ஏசண்டர் விலகிச் செல்லுகிறார். பலனை எதிர்பாராது சுந்தரம் உதவுகிறான். அவனது நல்ல குணத்தை அறிந்து அவர்களது காதலுக்கு உடையார் உடன்படுகிறார். உடையார் நோய் நீங்கி மீண்டும் மிடுக்குடன் தலை நிமிர்ந்து நடக்கிறார்.

கலாசாரம் சுருக்க விளக்கம்'கலாச்சார்' என்ற வடமொழிச் சொல்லின் வழிவந்த சொல்லே 'கலாசாரம்' என்பது. சமூகவியல் அறிஞர்கள் (Social Scientists) ஒரு மக்கள் குழுமத்தின் வாழ்க்கை முறையே (Way of the life) பண்பாடு என்று குறிப்பிடுகின்றனர். அந்த வகையில், உடையார் மீடுக்கு நாடகம் பிரதிபலிக்கும் கலாசாரப் பாரம்பரியக் கூறுகள் வருமாறு:

சாதிய அடுக்கமைவு

இந்நாடகமானது ஆண்டானாகிய உடையார், அடிமைக் குடிமைகளாகிய கார்த்தி, சீனிக் குட்டி, சின்னத்தம்பி, அம்பட்டன்

ஆறுமுகத்தான் ஆகிய பாத்திர வார்ப்புகள் மூலம் சாதிய அடுக்கமைவினைப் பிரதிபலிக்கின்றது. உடையார், மணியக்காரன், விதானை, நொத்தாரிசு போன்ற நியமனங்களும் ஏனைய சிறப்புப் பட்டங்களும் இவ் உயர் சாதி வேளாளர்களுக்கே வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இதனால் அவர்களிடத்தில் அதிகார வெறியும், ஆணவமும் இயல்பாகவே குடிகொண்டிருந்தன. 'அடா' போட்டுக் கதைப்பதும், "பனையோடை கட்டி சவுக்காலை அடிப்பன்" என்று குறிப்பிடுவதும் நோக்கத்தக்கது.

யாழ் கலாசாரப் பாரம்பரியத்தில் ஆங்கில மோகம், உத்தியோக மோகம் என்பவற்றின் தாக்கம் பற்றியும் சித்திரிக்கப்படுகிறது. 'ஆம், ஆம் எனக்கி மெற்றச் சன்றொஷன்', 'அப்ப நீங்க நிக்றது, நாங்க போயிற்றி வாறது', என்று ஏசண்டுத்துரை தமிழனாக இருந்தும் தமிழ் பேசத்தெரியாமல் பேசுவது சிறந்த உதாரணமாகும். இவ்வாறான ஆங்கிலமோகம், போலி நாகரிக மோகம், சாதிய அடுக்கமைவு என்பன யாழ் கலாசாரத்தைவிட்டு இல்லாதொழிய வேண்டும் என்பதை நகைச்சுவையாகவும் சிந்திக்கத்தக்க வகையிலும் சித்திரிக்கத் தவறவில்லை.

பால்நிலைச் சமத்துவமின்மை: யாழ்ப்பாணத்தில் பேராசிரியருடைய காலத்திலும் அதற்கு முன் பின்னாகவும் பாலினச் சமத்துவம் இருந்திருக்கவில்லையென்பதை அறியமுடிகின்றது. அத்தோடு ஆணாதிக்கவாதம், பெண்ணடிமைத்தனம், பெண்கல்வி மறுக்கப்பட்டமை போன்றனவும் இணைந்திருந்தன. இந்நிலையில், சைவமே தமிழ், தமிழே சைவம் என்ற கோட்பாட்டினை இறுக்கமாகக் கடைப்பிடித்து வந்த ஆறுமுக நாவலரும்கூடத் தமது கல்வித் திட்டத்தினுள் பெண்களுக்கு இடமளிக்கவில்லை. இதற்குப் பால்நிலைப் பாராபட்சமே காரணம். யாழ்ப்பாணத்தில் மரபுவழிச் சூழலில், பெண்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது "பெண்ணாய் பிறந்ததுகள்" , "பெண்பிறப்புகள்" போன்ற தொடர்கள் சாதாரணமாகப் பயன்படுத்தப்பட்டுவந்தன. இவை பெண்பற்றி நிலவும் அடிப்படைப் பால் பாராபட்சத்தினைத் துல்லியமாகக் காட்டுகின்றன. "ஆமோ? அப்படியும் ஆச்சோ? பெண்டுகளெல்லாம் நினைச்ச நினைச்ச பாட்டிலை துவங்கி விட்டினம். என்ன இது பெண்டுகள் இராச்சியமோ? இனியென்ன

ஆம்பிளையளெல்லாம் அடுப்பூதப் போக வேண்டியதுதான். பெட்டைக் கோழி கூவியும் விடியிறதோ? இவளைக் கொறகொற எண்டு இழுத்துக்கொண்டு போய் அவன்ற கையில குடுத்துவிடுகிறன். விருப்பமெண்டால் என்ன, விருப்பமில்லா விட்டால் என்ன. என்ன கோளியைக் கேட்டே ஆணங்காச்சிறது?" என்று உடையாரின் வாயிலிருந்து வரும் வார்த்தைகள் பால்நிலைச் சமத்துவமின்மை, பெண்கல்வி மறுக்கப்பட்டமை, ஆணாதிக்க வாதம் என அத்தனையையும் ஒருங்கே காட்டுவதாக உள்ளது.

சீதன முறைமை

"அசைவுள்ள பொருள்களையும் அசைவற்ற பொருள்களையுஞ் சீதனமாக எழுதிக் கொடுப்பர்.... கலியாணச் சடங்கின்போது சபையோர் முன்னிலையாகச் சீதன உறுதியினை எழுதிச் சாட்சியங்களின் கையொப்பத்தைப் பெற்றுக்கொண்டு கொடுப்பது வழக்கம்" என்கிறது தேச வழமைச் சட்டம். "இனிமல் மெத்தப் பெரிய சம்பளம், சிலவுக்குக் கட்டி மேல் மிச்சம் இருக்கும். சீதனக்காசிலை தொடத் தேவையில்லை. அதுதானே எங்களுக்குந் தேவை" என்பதன் மூலம் சீதன வழக்கம் இயல்பாக இருந்துள்ளமை பற்றிக் குறிப்பிடுகிறது. மேலும், ஏசண்டர், சுந்தரம் ஆகிய பாத்திரங்களைப் பற்றிச் நகைச்சுவையாகச் சிந்திக்கத் தூண்டுவதன் மூலம் சிதனம் என்பது சமூகத்திலிருந்து அகற்றப்பட வேண்டியது என்பதைப் புலப்படுத்துகிறது.

வர்க்க முரண்பாடு: யாழ் கலாசாரப் பாரம்பரியத்தில் பொருள் பண்டத்திற்கு மதிப்பிருந்தமை பற்றி உடையார் பாத்திரத்தின் மூலம் அறிய முடிகின்றது. "இந்தக் காசில்லாட்டால் என்ரை கெதி என்னவாய் முடிஞ்சிருக்கும்? இப்ப இந்தப் பணத்தின் பெலத்தினாலை, என்ன விடயத்தையும் செய்யக்கூடியவனாய் இருக்கிறன்ஞ்.. காசிருந்தபடியால்தான் ஏசண்டரும் இண்டைக்கு இந்த வீட்டுக்கு வந்தார். காசினால என்னதான் வாங்க முடியாது." என்னும் அவரது கூற்று அவர் பணத்தின்மீது கொண்ட பற்றைப் புலப்படுத்துகிறது.

பழமொழிகளின் செல்வாக்கு: ஒரு சமூகத்தின் கலாசாரப் பாரம்பரியங்களைச் சித்திரிப்பதில் பழமொழிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. நீண்டகால அனுபவத்தின் சுருங்கிய வடிவம் என்றும் ஒரு வரியிலோ அல்லது இரண்டு வரிகளிலோ திருக்குறளைப்

போன்று ஆழமான கருத்தினைப் புலப்படுத்த வல்லன. 'பெட்டைக் கோழி கூவியும் விடியுறதோ', 'கோழியைக் கேட்டே ஆணங் காச்சிறது', 'நுண்ணறிவுடையோர் நூலோடுபள(ழ)கினும் பெண்ணறிவென்பது பெரும் பேத மைத்தே' ஆகிய பழமொழிகள் யாழ்ப்பாண கலாசாரப் பாரம்பரியத்தில் இருந்துவந்த பெண்ணடிமைத்தனத்தையும், ஆணாதிக்கப் போக்கையும், பால்நிலைச் சமத்துவமின்மையையும் துல்லியமாகப் புலப்படுத்துகின்றன. 'நெருப்பையும் பஞ்சையும் ஆரடா கிட்டக்கிட்ட வைப்பான்?', 'நிலவுக் கொளிச்சுப் பரதேசம் போறதோ', நெருப்பில்லாமல் புகையுதே' போன்ற உடையார் மிடுக்கில் இடம்பெறும் பழமொழிகளும் யாழ்ப்பாணத்தின் கலாசாரப் பாரம்பரியங்களைப் பிரதிபலிக்கத் தவறவில்லை.

மொழி

யாழ்ப்பாண கலாசாரக் கூறுகளில் மொழியும் முக்கியமானது. அவர்களுடைய கலாசாரப் பாரம்பரியத்தில் ஒன்றாகிய அவர்களுக்கேயுரிய தனித்துவமான மொழிப் பிரயோகத்தை மிகத் தத்ரூபமாக பேராசிரியர் சித்திரித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. முக்கியமான விடயங்களுள் ஒன்று 'ழ'கரம் 'ள'கரமாக ஒலிக்கப்படுதல்.

முடிவுரை

இவ்வாய்வின் மூலம் கலாசாரம், அதன் பாரம்பரியம் பற்றி அறிந்துகொண்ட நாம், உடையார்மிடுக்கு நாடகம் பிரதிபலிக்கும் கலாசாரப் பாரம்பரியக் கூறுகளையும் தெளிவாக அறிந்து கொண்டதோடு, கலாசாரப் பாரம்பரியப் பழைமைவாத, மூடத்தனமான, பிற்போக்கான சிந்தனைகளிலிருந்து யாழ்ப்பாண மக்கள் விடுபடவேண்டும் என்பதையும், ஆங்கில மோகத்திற்காளாகி தமிழையே மறந்து நகைப்புக்குரிய விதத்தில் தமிழ் கதைப்பதும், போலியான நாகரிக மோகத்திற்குட்பட்டு கலாசாரப் பாரம்பரியங்ளைச் சிதைப்பது பற்றியும் நாசுக்காகவும் நகைச்சுவையாகவும் சிந்திக்கத் தூண்டும் விதத்திலும் புலப்படுத்துவதன் மூலம் பல சிறந்த கலாசாரப் பாரம்பரியங்களைச் சிதைக்க முற்படக் கூடாது என்பதையும் புலப்படுத்தத் தவறவில்லை. இவ்வாறு தமது கலாசாரப் பாரம்பரியங்களை

நல்லமுறையில் பேணுவதற்கு வழிகாட்டியவரும், இன்றுவரை இளைய தலைமுறையினர் தமது கலாசாரப் பாரம்பரியங்களை அறிந்துகொள்ளும் வகையில் அவற்றைத் தமது இலக்கியங்கள் வாயிலாக ஆவணப்படுத்தியவருமான பேராசிரியருடைய இந்நாடகம் குறித்த இவ்வாய்வானது இந்நாடகம் தொடர்பாக மேலும் பல கோணங்களில் ஆய்வுகளை முன்னெடுப்பதற்கு முன்னோடி முயற்சியாக அமையுமென்பதில் ஐயமில்லை.

உசாத்துணை நூல்கள்

இராவணா, வெகுசனன். (1966). சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும். புதிய பூமி.

கணபதிப்பிள்ளை, க. (2003). பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் நாடகத் திரட்டு. குமரன் புத்தக இல்லம்.

சிவத்தம்பி, கா. (2000). யாழ்ப்பாணம் சமூகம், பண்பாடு, கருத்துநிலை. குமரன் புத்தக இல்லம்.

சுதர்சன்,செ., யாழினி, ஆன்,ச. (2021). ஈழத்துத் தமிழ் நாடக இலக்கியம். பேராதனைப் பல்கலைக்கழகம்.

தேவகுமாரி,சு. (2021). பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் நாடகங்கள் - சமூக யதார்த்த நோக்கில். இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்.

பத்மநாதன்,சி. (2001). இலங்கைத் தமிழர் தேச வழமைகளும் சமூக வழமைகளும். குமரன் புத்தக இல்லம்.

8

திருக்குறளில் அச்சமெனும் மெய்ப்பாடு

இளஞ்செழியன் .ச
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.
chezhianshanmugam224@gmail.com

முன்னுரை

தமிழ் மொழியின் அறநூல்களில் தலையாயதான திருக்குறள் பல்வேறு வாழ்வியல் சிறப்புக் கூறுகளையும் இலக்கிய, இலக்கணச் சிறப்பு இயல்புகளையும் உடையதாகும். அவ்வகையில், பண்டைத் தொல்லாசிரியரான தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் குறிப்பிடும் உணர்வு சார்ந்த எண்வகை மெய்ப்பாடுகளும் திருக்குறள் எங்கும் விரவிக் காணப்படுகின்றன. அவ்வகை மெய்ப்பாடுகளுள் ஒன்று அச்சம் ஆகும். தொல்காப்பியர் குறிப்பிடும் அச்சம் எனும் உணர்வு குறித்துத் திருவள்ளுவர் ஐம்பதிற்கும் மேற்பட்ட குறட்பாக்களில் குறிப்பிட்டுச் செல்கின்றார். இதன்வழி அச்சம் எனும் உணர்விற்கு அவர் வழங்கியுள்ள சிறப்பிடத்தினை உணரலாம்.

நோக்கம்

தொல்காப்பியர் குறிப்பிடும் எண்வகை மெய்ப்பாடுகளுள் ஒன்றான அச்சமெனும் மெய்ப்பாடு திருக்குறளில் எவ்வெப் பொருண்மைகளில் கையாளப்பட்டுள்ளது என்பதனை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

கருதுகோள்

தொல்காப்பியம் குறிப்பிடும் எண்வகை மெய்ப்பாடுகளுள் அகப்புற நிலைகளில் சமமாகத் தோன்றும் மெய்ப்பாடாக அமைவது அச்ச உணர்வு ஆகும். இவ்வச்ச உணர்வு பெரும்பான்மையும் பிறபொருள் அன்றித் தம்மைப் பற்றியே எழுவதாகும். இவ்வச்ச உணர்வு திருக்குறளில் பல்வகைப் பொருண்மைகளில்

எடுத்தாளப்பட்டுள்ளது என்ற கருதுகோளினை அடிப்படையாகக் கொண்டே இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகிறது.

அணுகுமுறை

தொகுப்புமுறை, பகுப்புமுறை, விளக்கமுறை, ஒப்பீட்டு முறை, பொருண்மையியல் முறை, அகராதியியல் முறை போன்ற ஆய்வியல் அணுகுமுறை இவ்வாய்விலே பின்பற்றப்படவுள்ளன.

ஆய்வின் தேவை

தொல்காப்பிய மெய்ப்பாட்டியலின் அடிப்படையில் திருக்குறளில் காணப்படும் உணர்வுகளை ஆய்வதற்கு இவ்வாய்வானது பயனுடையதாக அமையும்.

திருக்குறளில் அச்ச உணர்வு

தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில்,

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை யென்று
அப்பால் எட்டு மெய்ப்பா டென்ப (மெய்-3)

என்ற நூற்பாவில் எண்வகை மெய்ப்பாடுகளைக் குறிப்பிட்டு, அந்த எண்வகை மெய்ப்பாடுகளில் ஒன்றான அச்ச உணர்வின் தோற்றுக் களன்களாக,

அணங்கே விலங்கே கள்வர்தம் மிறையெனப்
பிணங்கள் சாலா அச்சம் நான்கே (மெய்-8)

என்ற நூற்பாவினை வழங்கிச் சொல்லுவார். தொல்காப்பியம் குறிப்பிடும் அச்ச உணர்வின் தோற்றுக் களங்களோடும் அச்ச உணர்வின் வெளிப்பாட்டு முறைகளோடும் திருக்குறள் குறிப்பிடும் அச்ச உணர்வுகள் குறித்த குறட்பாக்கள் எவ்வகையில் பொருந்திப் போகின்றன என்பன குறித்து இவ்வாய்விலே ஆராயப்படவுள்ளன. அச்சம் என்பது ஒருவனது குற்றத்திற்கு எதிர்நிலையில் நிற்பதாகும். அவ்வகையில், பிறனில் விளைவானிடம் பழி ஏற்படும் என்ற அச்ச உணர்வானது அற்றுப் போய்விடும். அதனாலயே வள்ளுவரும்,

பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்இறப்பான் கண் (146)

என்பதாக கூறுவதினைக் காணலாம். அதனைப் போலவே அச்ச உணர்வே சிலரது வாழ்வியல் இயல்பாய் அமைவதினை,

அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்
அவாவுண்டேல் உண்டாம் சிறிது. (1075)

என்ற குறளில் காணலாம். அச்சம் என்பது பொருளாசையால் கயமை புரியக்கூடியோருக்கு இயல்பாக அமையும் உணர்வாகும். கயமை எனும் தன்மையின் காரணத்தினால் அச்ச உணர்வானது அவர்களிடம் எப்பொழுதும் உள்ளிருக்கும் நிலைக்களனாக தோன்றுவதினைக் காணலாம். மேற்கண்ட இரண்டு குறள்களில் தோன்றும் அச்சவுணர்வும் தன்கண்ணும் பிறர்கண்ணும் என இருபாலும் பற்றி வரும்.

இவை அல்லாத நிலையில் ஏனைய அச்ச உணர்வுகள் பிற பொருட்டே வரும். ஆதலாலேயே 'பிணங்கல் சாலா' எனத் தொல்காப்பியர் குறிப்பிட்டுச் செல்வார். பிறபொருள் பற்றி வரும் அச்ச உணர்வுக்குச் சான்றாக,

அஞ்சுவது அஞ்சாமை பேதமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில் (428)

என்ற குறளினைக் குறிப்பிடலாம்.

இக்குறளில் பழியோடு வருவன பற்றி அஞ்சும் அச்சவுணர்வானது குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட சான்றுகளை ஒப்ப திருக்குறளில் காணப்படும் அச்சவுணர்வும் அதன் தோன்றக் களன் இக்கட்டுரையில் பொருண்மையின் அடிப்படையில் ஆராயப்படவுள்ளன.

முடிவுரை

எண்வகை மெய்ப்பாடுகளில் ஒன்றான அச்ச மெய்ப்பாடு திருக்குறளில் எவ்வகையில் எடுத்தாளப்பட்டுள்ளது என்பதினை இவ்வாய்வின்வழி அறியலாம். அத்தோடு தொல்காப்பிய மெய்ப்பாட்டியலின் இலக்கண முறைமைகளோடு திருக்குறள் பொருத்திப்போகுமாற்றை இவ்வாய்வின்வழி அறியலாகின்றது.

துணைநூற்பட்டியல்

தண்டபாணி தேசிகர். (1950). திருக்குறள் உரைவளம்.

கணேசையர், சி. (ப.ஆ.) (1943). தொல்காப்பியம் பொருளதிகாரம் பேராசிரியர் உரை.

தாமோதரம்பிள்ளை, சி. வை. (1893). தொல்காப்பியம் பொருளதிகாரம் நச்சினார்க்கினியர் உரை.

சிதம்பரனார், வ.உ. (1920). தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணர் உரை.

9

திருக்குறள் காட்டும் வாழ்வியல் மென்திறன்கள்

முனைவர் அரங்க. மு. முருகையன்
உதவிப் பேராசிரியர், புதுவைப் பல்கலைக்கழகச் சமுதாயக் கல்லூரி,
புதுச்சேரி. muruguarul@gmail.com

அறிமுகம்

மனிதனுடைய செயல்பாட்டிற்கு உந்துதலாக இருக்கக்கூடிய ஊக்க உணர்வு, சமூகத்தைக் கட்டொழுக்கத்தோடு வழிநடத்துகின்ற அறிவுரைகள், மனிதன் செயல்படுத்துகின்ற அனைத்து விதமான வெற்றிக்கான வழிமுறைகள், நெறிகள் போன்றன மனித வாழ்வியலுக்கான மென்திறன்களாக அமைகின்றன. ஒரு சமூகத்திற்கு உட்படுகின்ற மக்கள் தங்களுக்குள் முரண்பாடுகள் ஏற்படா வண்ணம் வாழவும் எவ்விதச் சிக்கலுமின்றிச் சுமுகமான நல்லிணக்க வாழ்க்கையை வாழ்வதற்கு முன்னோர்களின் வாழ்க்கையும் அனுபவ மொழிகளும் மென்திறன்களை வளர்த்தெடுக்கும் அறங்களாக, அறிவுரைகளாக அமைந்தன. குறிப்பாகத் தமிழ் இலக்கியங்கள் காலந்தோறும் வாழ்வியல் நெறிகளையும் பண்பாட்டுச் சூழலை வளர்த்தெடுக்கும் வழிமுறைகளையும் புலவர்களின் வழி பதிவுசெய்துள்ளன. எவ்வித வாழ்க்கை சிறந்தது என்பதையும் எவ்வித வாழ்வியல் கூறுகள் தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் பயனளிக்கக்கூடியன என்பதையும் வாழ்வியல் அறமாகத் திருக்குறள் பல்வேறு செய்திகளைப் பதிவுசெய்துள்ளது.

மென்திறன்கள்

மென்திறன்களை வகைப்படுத்திக் கூறும் உலக நலவாழ்வு நிறுவனம் பின்வரும் கூறுகளைச் சுட்டுகின்றது. அவை "1.சிக்கல் அவிழ்ப்பு 2.முடிவு எடுத்தல் 3.புத்தாக்கச் சிந்தனை 4.மேம்பட்ட சிந்தனை 5.கருத்தாடல் திறன் 6.பண்பட்ட மனித உறவுகள் 7. பிறர்

உணர்வுகளை அறிந்து மதித்தல் 8.தன்னிலை விழிப்புணர்வு 9.உணர்ச்சி ஒருங்கிணைப்பு 10.பதற்றம் தவிர்த்தல் 11.வன்மை மென்மைகளைப் பகுத்தாய்தல், காலந்தவறாமை, நெறிப்படுத்துதல், நிர்வாகத்திறன் ஆளுமை வளர்ச்சி" (முனைவர் நிர்மலா, 2018) என்பனவாகும்.

தற்காலத்தில் பகுத்தாயப்பட்டு மனித வாழ்க்கைக்குத் தேவையான சிந்தனைகளை வகைப்படுத்துவதற்கு முன்னமே தமிழரது இலக்கண இலக்கிய சிந்தனை வளர்ச்சி இத்தகு கூறுகளைத் தந்துள்ளன. தனிமனிதர்களுக்கு மட்டுமின்றி ஒட்டுமொத்தச் சமூகமும் நல்லியல்புகளோடு இயங்குவதற்கான கருத்துகளைத் தமிழர்கள் மட்டுமின்றி உலகத்து மக்கள் அனைவருக்குமான பொதுக்கூறுகளாகத் திருக்குறள் பல அதிகாரங்கள் வழி சிறப்பான கருத்துகளைக் கூறி உள்ளது.

மக்கள் மட்டுமின்றி மக்களை நல்வழிப்படுத்தி ஆளுகின்ற தலைவர்களுக்கும் அரசாட்சியில் அங்கம் கொள்கின்ற அனைவருக்குமான அரசியல் சிந்தனைகளை 'இறைமாட்சி', 'இடனறிதல்' அதிகாரங்கள் சுட்டி நிற்கின்றன.

காலம் கருதி நடத்தல் சிறப்பு

நாட்டை ஆளும் மன்னனாக இருந்தாலும், வீட்டை ஆளும் குடும்பத் தலைவனாக இருந்தாலும் ஒன்றை வெற்றியோடு செய்து முடிப்பதற்குத் தன் பலமோ அல்லது செல்வச் சிறப்போ படைமிக்க உரமோ பயன்தராதுபோகும். பொருத்தமில்லாத இடத்தில் கொள்ளும் பகை அதன்வழி ஏற்படும் போர் முதலானவை தக்கப் பலனின்றி வலிமையையும் சிறப்பையும் குன்றச் செய்யும். எனவே, காலம் கருதி இருப்பதும் நாம் எப்படிப்பட்டவருடன் மோதுகிறோம் என்பதை அறிந்து செயல்படுவதும் அனைவருக்கும் சிறப்பை நல்கும். இதைத் திருக்குறள் பாகனுக்கு அஞ்சாமலும் தன்னைக் கொல்ல வரும் எதிரியின் வீரர்களைக் குத்திக்கொள்ளும் வலிமைமிக்க யானையாக இருந்தாலும் அது சேற்றில் அகப்பட்டுக் கொண்டால் சாதாரணமான நரியானது கொன்று அழித்துவிடும் எனும் கருத்தை,

கால்ஆழ் களரின் நரிஅடும் கண்அஞ்சா
வேல்ஆள் முகத்த களிறு (குறள்: 500)

எனத் திருவள்ளுவர் சுட்டுகின்றார். எனவே, வலிமையாகவும் சுற்றம் சூழ படை வலிமை கொண்டும் இருந்தாலும் தாம் எங்கே எப்போது, யாருடன் எதிர்த்துப் போரிட வேண்டும் என்பதைத் தெளிவுபட அறிந்து போரிடத் தயாராக வேண்டும் எனக் கூறுகின்றார்.

திருக்குறள் வழி வாழ்க்கை வெற்றிக்கான மென்திறன் சிந்தனைகள்

பண்பட்ட மனித உறவுகள்

வயது, கல்வி, பண்பு ஒத்த ஆணும் பெண்ணும் இணைந்து கணவனும் மனைவியுமாக இணைந்து வாழும் வாழ்க்கையில் அறநெறியில் பொருளீட்டி அதைத் தன் சுற்றத்தாரும் வாழ பொறுமை முதலிய குணங்களைக் காத்து அழுக்காறு, புறங்கூறல் போன்ற செயல்களை ஒழித்து வாழும் வாழ்க்கையே மிகச் சிறந்த இல்வாழ்க்கைக்கு உரியதாகும். இதை வள்ளுவர்,

இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாந் தலை (குறள்: 47)

எனச் சுட்டுகின்றார். மனித இயல்போடு வாழக் கற்றுக் கொண்டு, பொருள்தேடி தனக்கும் தன்னைச் சார்ந்த மக்களுக்குமாய்ப் பயனான வாழ்க்கையை வாழ்பவரே சிறந்த இல்லறத்தானாவான். இவ்வாழ்க்கையில் தம்மோடு சேர்ந்து வாழும் பெண்ணை இவ்வுலகம் போற்றும் பண்போடு வாழவகை செய்வதும் கணவன் மனைவி இருவருமாகச் சேர்ந்து, உறவுகளுக்கும், தன்னை நாடி வரும் துறவு பூண்டோர், வறிய நிலையில் உள்ளோர் முதலிய அனைவருக்கும் உதவியாக இருந்து வாழ்வான். இத்தகு மென்திறன்களின் கூறான பண்பட்ட மனித உறவுகளைக் கடைபிடித்தலுக்கான பல வழிமுறைகளை இக்குறள் வழி அறியமுடிகின்றது.

பிறர் உறவுகளை அறிந்து மதித்தல்

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை (குறள்: 42)

இல்வாழ்க்கையில் ஈடுபடக் கூடியவர் துறவிகள், உண்ண உணவில்லாத ஏழைகள், ஆதரவற்றோர், தன்னை நாடி வரும்

இரப்போர் என அனைவருக்கும் உதவியாக இருந்து வாழ்தலே சிறப்புடையதாகும்.

மேற்கண்ட மூவர்க்கும் உதவி வாழ்வதோடு தென்புலத்தார், தெய்வம், விருந்து எனச் சுற்றத்தோடு வாழ்ந்து தன்னுடைய சொந்த வாழ்க்கைகளையும் நல்ல முறையில் பேணி வாழ்தலே இல்லறத்தானுக்கு உரிய கடமை என்று கூறுமிடத்து பிறர் உணர்வுகளைப் புரிந்து அவர்களுக்கு உதவி செய்யும் பண்பை வளர்த்துக்கொண்டு வாழும் மென்திறன் பண்பை உணர்த்துவதாக அமைகின்றது.

இதைப் போன்றே இல்லறத்தில் புகும் ஆண் பெண் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு அன்போடு வாழ்தலும் அவ்வாறு வாழும் காலத்து தன்னைச் சார்ந்துள்ள மக்களோடும், சுற்றத்தாரோடும் அன்பு செலுத்தி வாழ்விற்கான பெரியோரின் வழிகாட்டுதல்கள் பிறழாமல் நன்நெறி நடந்து அறப்பண்புடையோராய் வாழ்தலை வள்ளுவர்,

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது (குறள்: 45)

எனக் கூறி வாழ்வின் பயன் பிறருடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு அவர்களுடன் அன்பைப் பேணி வாழ்தலும் அடுத்தவர்க்கு நலன்தரும் அறச் செயல்களைச் செய்து வாழ்வதுமேயாகும் என வலியுறுத்துகின்றார்.

இல்லறத்தாள் இலக்கணம்

திருக்குறள் இல்லற நெறியைக் கூறுமிடத்து ஆண் பெண் இருபாலருக்குமான ஒழுக்க நெறிகளை சுட்டிக் காட்டுகின்றது. இல்லறத்தின் பெண் நல்லொழுக்கமுடையவளாகவும், நல்ல குணத்தோடு தன் கணவனையும் சுற்றத்தாரையும் இன்முகத்தோடு காக்கின்ற பண்புடையவளாகவும், தம் கணவனின் குடும்பத்தின் புகழ் மற்றும் தன்னுடைய குடும்பத்தின் புகழ் குன்றாமல் காக்கின்ற மாண்புடையவளாகவும் விளங்க வேண்டும் என்று கூறுமிடத்து பிறருடைய உணர்வுகள் அறிந்து வாழ்கின்ற வாழ்க்கையின் சிறப்பை உணர்த்துகின்றது.

மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை (குறள்: 51)

தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்
சொற்கத்துச் சோர்விலாள் பெண் (குறள்: 56)

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு (குறள்: 60)

என்ற குறள்களின் வழியாகப் பெண்ணின் வாழ்வியல் இலக்கணம் கூறப்படுவதோடு வாழ்க்கைத் துணையாக வரும் பெண்ணாக அமைபவள் கணவனையும், கணவன் குடும்பத்தையும் தான் சார்ந்துள்ள சமுகத்தையும் நல்வழிப்படுத்தும் தாயாக செயல்படுதல் வேண்டும் என்கிறார். எனவேதான், மனைமாட்சியே ஒரு மனிதனைத் தலைநிமிர்ந்து நடப்பதற்கு வழிவகுக்கும் என வள்ளுவர் குறள்களின் வழி நல்வழி காட்டுகின்றார்.

சமூகத்தில் ஆண் பெண் சார்ந்திருக்கக்கூடிய குடும்பம் நலத்தோடும் வளத்தோடும் புகழோடும் வாழ்வதற்குப் பெண்ணிற்குரிய இலக்கணங்களோடு அமையும் நற்பண்புகள் ஆணுக்கும் அமைந்தால் மட்டுமே வாழ்க்கை சிறப்புறும். அதுவின்றி ஆண் பெண் நன்மக்களோடு வாழ்தல் அரிதாக அமையும். எனவே, ஒத்த குண நலனோடு இணையும் இல்லறம் நல்லறமாக அமைவதற்கு ஆண் பெண் இருபாலரும் பிறர் உணர்வுகளைப் புரிந்து கணவன் மனைவியாக அன்புடன் சேர்ந்து வாழ்தலே சிறப்பான வாழ்க்கை எனத் திருக்குறள் வழி வள்ளுவர் வாழ்வியலுக்கான மென்திறன்களை வகைப்படுத்தி உணர்த்துகின்றார்.

இவ்வாறு பிறரின் உணர்வறிந்து வாழும் வாழ்க்கையே சிறந்த வாழ்க்கைக்கான அடிப்படையாக அமையும், அப்படிப்பட்ட வாழ்க்கையே மனிதர்களை இவ்வுலக வாழ்வில் திறம்பட வாழ்வோராக மாற்றும். வள்ளுவர் இத்தகு வாழ்வு வாழ்பவரையே,

ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும் (குறள்: 214)

எனப் பிறருக்கு உதவி செய்பவர்கள் உயிர் வாழ்பவராகவும் பிறவாழ்வு வாழ்பவரை செத்தார் எனவும் சுட்டுகிறார்.

தன்னிலை விழிப்புணர்வு எனும் மென்திறன் பெற வள்ளுவர் கூறுவன

கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது (குறள்: 772)

மனிதர் தம் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு எளிய செயலைச் செய்து வெற்றிகண்டு மகிழ்ந்து இருப்பதைவிட மிகப்பெரிய திட்டத்தைச் செயல்படுத்தி அத்திட்டம் வெற்றியடையாமல் தோல்வி கண்டாலும் அதைக்கண்டு அஞ்சாது, கலங்கி நிற்காது இயல்பான நிலையில் செயல்படுவதற்கு நம் மனத்தைத் தயார்படுத்திக் கொண்டு வாழவேண்டும் என்கிறார்.

காட்டில் பயந்து ஓடும் முயலைக் கொல்கின்ற அம்பை ஏந்தி வேட்டைக்குத் தயார் ஆவதைவிட சீறி எதிர்த்து வரும் யானையின்மீது எறிகின்ற வேல் அதன்மீது படாமல் குறிதவறி வீழ்ந்துவிட்டாலும் அந்த வேலை கையில் எடுத்துவைப்பதே மேலானது என வள்ளுவர் வலியுறுத்துகின்றார். எனவே, திருவள்ளுவர் காலம் கருதி நடத்தல், பண்பட்ட மனித உறவுகள் பிறர் உணர்வுகளை அறிந்து மதித்தல், தன்னிலை விழிப்புணர்வு போன்ற மென்திறன்களைத் திருக்குறள் வழி வெளிப்படுத்திருப்பதை அறிய முடிகிறது.

உசாத்துணைகள்

செல்வம்,ஆ.தி., நிர்மலா,ஆ.தி. (2018). செம்மொழி இலக்கியங்களில் வாழ்வியல் மென்திறன்கள்.

தண்டபாணி தேசிகர். (1950). திருக்குறள் உரைவளம்.

10

சங்க காலப் போர்க் கல்வி

முனைவர் கே. பழனிவேலு
இணைப்பேராசிரியர். சுப்பிரமணிய பாரதி தமிழ் மொழி இலக்கியப் புலம்
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி.
kpajanivelou@gmail.com

அறிமுகம்

சங்க இலக்கியங்களால் வெளிப்படும் கருத்துகளின் காலத்தைச் சங்க காலம் என்று குறிப்பிடும் வழக்கம் நம்மிடம் இருந்து வருகின்றது. சங்க இலக்கியங்கள் என்று நம்மால் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ள இலக்கியங்கள் சுமார் 450 ஆண்டு கால எல்லையில் எழுதப்பட்டவை என்ற கருத்தினை அறிஞர்கள் பலரும் முன்வைத்துள்ளனர். 450 ஆண்டுகள் என்பது மிகப்பெரிய காலக்கட்டம் ஆகும். இக்கால கட்டங்களில் நிகழ்ந்த பல்வேறு நிகழ்ச்சிகள், கருத்துகள் ஒரு படித்தானவை அன்று என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது. ஒரு கருத்தினைச் சங்க இலக்கியங்கள் முழுதும் தொகுத்து வாசிக்கும்போது அக்கருத்தின் முகிழ்வு, முதிர்வு, மாற்றம், உதிர்வு போன்ற பல்வேறு நிலைகளைக் காணமுடியும். அதனால், சங்க இலக்கியங்கள் முன்வைக்கும் கருத்துகள், மதிப்பீடுகள் போன்றவற்றையும் அக்கருத்துகள், மதிப்பீடுகள் ஆகியவற்றில் ஏற்பட்ட மாற்றங்களையும் நம்மால் விளங்கிக்கொள்ள முடிகின்றது.

சங்க இலக்கியங்களில் சுட்டப்படும் கருத்துகள் சங்க காலத்திற்கு முன்பும் வாழ்ந்த மக்களின் வாழ்முறை, சமூக வளர்ச்சிநிலைகள், கருத்துநிலை வளர்ச்சி ஆகியவற்றையும் பிரதிபலிக்கின்றன. சமூகத்தின் வளர்ச்சிப்போக்கிற்கேற்பப் பல அமைப்புகள் சங்கச் சமூகத்தில் வடிவம் கொண்டுள்ளதையும் காலப்போக்கில் இவ்வமைப்புகளில் சில நிறுவனங்களாக மாறியுள்ளதையும் காணமுடிகின்றது. அதே நேரம் பல அமைப்புகள் தற்காலிகமாகத் தமது நோக்கங்களை நிறைவேற்றியதுடன் காணாமல் போயுள்ளன. சங்ககாலத்தில்

இருந்த பல அமைப்புகள் பிற்காலத்தில் இருக்கவில்லை. அவற்றில் சில வழக்கிழந்து போயுள்ளன. சில வடிவமாற்றங்களைப் பெற்றுள்ளன. இம்மாற்றங்கள் அனைத்தையும் சங்க இலக்கியங்களைக் கொண்டே நம்மால் விளங்கிக்கொள்ள முடிகின்றது.

பொதுவாக எழுத்துக் கல்வி, கலை இலக்கியங்கள் ஆகியவை நகர நாகரிக வளர்ச்சியுடன் தொடர்புகொண்டவையாகும். சங்க இலக்கியங்கள் நகர நாகரிக வளர்ச்சியைப் பதிவுசெய்திருப்பதனால், சங்கச் சமூகம் நன்கு வளர்ச்சிபெற்ற நகர அமைப்பில் வாழ்ந்த சமூகம் என்ற கருத்திற்கு வந்துவிட முடியாது. நகரம் பற்றிய கருத்துகளுக்கு இடையில் "குறுங்காற் குரம்பை" என்னும் சிறு குடிசைகளில் வாழ்ந்த இனக்குழு வாழ்க்கையும் சங்க இலக்கியங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. சங்க கால இனக்குழு வாழ்க்கை வேட்டைச் சமூகத்திலிருந்து வளர்ச்சியடையும் நிலையில் காணப்படுகிறது. ஆடவர்கள் வேட்டைக்குச் செல்லுதல்; வேட்டைப் பொருள்கள் தப்பித்தல்; அதனைத் தேடிக்கொண்டு வரும் ஆடவன் எதிர்ப்படும் பெண்ணுடன் உரையாடுதல் என்னும் அமைப்பு சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றது. இனக்குழுச் சமூகத்தில் வேட்டைக்குரிய விலங்கின்மீது நிகழ்த்தப்பெற்ற போர்களின் வேறு வடிவமே ஆநிரை கவர்தலின்போது ஏற்பட்ட போர்கள் எனலாம். முந்தைய போர் இரைப் பொருளின்மீது நடத்தப்பட, பிந்தைய போர் இரைப் பொருளுக்காக அதன் உரிமையாளன்மீது நிகழ்த்தப்பட்டுள்ளது. இந்த இரு போர்களும் அடிப்படையில் இரைப்பொருள் சார்ந்தது என்பதையும் உணவு தேடுதலின் அடிப்படைகளைக் கொண்டது என்பதையும் உணர வேண்டியுள்ளது. இரையின்மீதான தாக்குதல் இரையை வைத்திருக்கும் இனக்குழுவின்மீதான தாக்குதலாக மாறியுள்ளது. பழந்தமிழகத்தில் இனக்குழு மோதல்கள் தொடர்ச்சியாக நிகழ்ந்துள்ளமையினைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன.

“பழைய குலமரபுக் குழுக்கள் தம்முள் முட்டி மோதிய போரின் விளைவாக வர்க்கங்கள் தோன்றிக்கொண்டிருந்த நிலைமையையே பெரும்பாலான சான்றோர் செய்யுட்கள் பிரதிபலிக்கின்றன” (1991: 124) எனக் கைலாசபதி குறிப்பது அறியத்தக்கது. இனக்குழுக்கள் முட்டிக்கொண்டமை அரசு உருவாக்கத்திற்கான அடிப்படைகளைக்

கொண்டிருந்தாலும் இப்போர்களின் உடனடி நோக்கம் விரிவான பேரரசினை அமைப்பதாக இல்லாமல் உணவு, பண்பாட்டுத் தேவைகளை நிறைவு செய்வததாகவே இருந்துள்ளது.

உணவு உற்பத்தி முறைகளில் ஏற்பட்ட முன்னேற்றமும் நகரங்கள் பல தோன்றியமையும் ஒருமுகப்படுத்தப்பட்ட அரசுகள் உருவானது ஆகியனவும் தொடக்க காலப் போர்களுக்குக் காரணமாக இருந்தன (க. கைலாசபதி, 1991 : 47) என்பர். இதனைச் சங்க இலக்கியத்தில் காணமுடிகிறது. ஆநிரை கவர்தலுக்காகப் போர் நிகழ்ந்துகொண்டிருந்த நிலைமாறி வளர்ச்சியடைந்து, நாடு பிடித்தலுக்காகப் போர்கள் நிகழ்த்தப்பெற்றுள்ளன. ஆநிரை கவர்தலில் நிகழ்ந்த போர்கள் குறுகிய காலத்திலேயே முடிந்துவிட்டன. நாடு பிடித்தலுக்காக நிகழ்ந்த போர்கள் சற்று நீண்ட போர்களாக இருந்துள்ளன.

நெடுநல்வாடை நீண்ட காலம் போரிடப்பெற்றமையைக் காட்டுகிறது. புறநானூற்றுப் பாடல்களும் பதிற்றுப்பத்துப் பாடல்களும் போர்களின் தீவிரத் தன்மையையும் இப்போர்களில் யானைகளும் குதிரைகளும் பெருமளவு பயன்படுத்தப் பெற்றுள்ளமையையும் காட்டுகின்றன. இத்தகு பெரிய போர்களுக்கு முன்கூட்டியே திட்டமிடுதலும் உணவு, பொருளாதாரமும் அவசியமாகும். உணவு, பொருளாதாரத்தை இரும்பின் வரவு மிகுதிப்படுத்தியுள்ளது. இரும்பின் வரவுக்கும் வேளாண்மையின் பெருக்கத்திற்கும் தொடர்பு இருக்கின்றது. இரும்பினைப் பயன்படுத்திய வேளாண்மையினால் ஏற்பட்ட உற்பத்திப் பெருக்கமும் மருத, நகர நாகரிக வளர்ச்சியும் பேரரசு உருவாக்கத்திற்கும் போர்ச்சூழல் ஏற்படவும் காரணமாக இருந்துள்ளன. இரும்புப் பயன்பாட்டிற்கு வந்த பிறகே போர்க்கருவிகள் மிகுதியாக வடிவமைக்கப் பெற்றிருக்கின்றன. "ஆதிச்ச நல்லூரில் அகழ்ந்தெடுக்கப்பட்ட முதுமக்கள் தாழிகளில் இரும்புக் கத்திகள், கூர்வாள்கள், தீட்டிய அம்புகள், சிறுகோடரி, கதிர் அரிவாள்கள், உளி, கைப்பிடிக்கரண்டி, மரம் செதுக்கும் கருவிகள் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன" (கோ. கேசவன், 1979: 15). இவை போர்கள் மிகுதியாக நிகழ்த்தப்பெற்றமையைக் காட்டும் சான்றுகளாகும்.

கலந்துரையாடல்

போர்ப் பயிற்சியின் தொடக்கம்

பழைய இனங்களின் மோதல்கள் பெரிய திட்டமிடுதல் ஏது மின்றிக் கொள்ளையிடும் தன்மையில் நிகழ்ந்துள்ளன. இனக்குழுச் சமூக அமைப்பில் போரில் பங்கெடுப்பதற்கு என்று எந்தத் தனிப்பட்ட குழுக்களும் அமைந்திருக்கவில்லை. இதனால், போர்களில் ஒரு இனக்குழுவில் வாழ்ந்த அனைவரும் பங்கெடுத்துள்ளனர். பேரரசு உருவாக்கத்திற்காகப் போர்கள் அடிக்கடி நிகழ்த்தப்பட்டுள்ளன. போர்களை அடிக்கடி நிகழ்த்த வேண்டிய தேவை ஏற்பட்டதால், குறிப்பிட்ட ஒரு சிலர் திரும்பத் திரும்பப் போரில் ஈடுபடுத்தப்பெற்றுள்ளனர். இவர்கள் வலிமையுடையவர்களாகவும் பயிற்சி பெற்றவர்களாகவும் இருப்பது அவசியம் என உணரப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. போர் நிகழ்வுகளுக்கெனத் தனியே பயிற்சி பெறுதல் போர்கள் அதிக அளவில் ஏற்பட காணரமாக இருந்துள்ளன. பயிற்சி பெற்ற வீரர்களை எந்தப் பணியும் இன்றி வைத்திருத்தல் இயலாது என்பதனால் அவர்களுக்கு வேலை கொடுப்பதற்காகவே போர்கள் தொடங்கப்பட்டுள்ளன. போரில் பங்கெடுப்பதற்கென்று தனிக் குழுவினர் உருவாக்கப்பட்ட பின்னர், போர்களை நிகழத்துவதற்கென்று சில மரபுகள் வகுக்கப்பட்டுள்ளன. இத்தகு போர் நிகழ்வுகளின் படிநிலைகளைத் தொல்காப்பியம் பதிவுசெய்திருப்பதைக் காணலாம்.

நிலையான படையமைப்பு

வட இந்தியாவில் போர் புரிதலுக்கென்றே தனிப்பயிற்சி பெற்றவராகச் சத்திரியர் அறியப் பெறுகின்றனர். இதைப் போலப் போர்த்தொழிலை மட்டும் குலத்தொழிலாகக் கொண்ட ஒரு பிரிவினரைத் தமிழகத்தில் காணமுடியவில்லை. என்றாலும், தமிழக அரச குடியினரைச் சத்திரியர் என்பர். இந்த அமைப்பு வட இந்தியச் சத்திரியர் அமைப்பைத் தமிழகத்தில் பொருத்தும் முயற்சியாகவே உள்ளது. அலெக்சாந்தர் இந்தியாவின்மீது படையெடுத்து வந்தபோது சத்திரியர்கள் அலெக்சாந்தரை எதிர்த்துப் போரிட்டுள்ளனர். (அலெக்சாந்தரின்) எதிர்த் தாக்குதலுக்குச் சத்திரியர்கள் உதவினர்; இக்காலக்கட்டத்தில் சத்திரியர்கள் தங்கள்

நகரத்திற்காக மட்டுமல்லாது, ஊதியம் கருதியும் மற்றை நகரங்களில் பணியாற்றத் தொடங்கினர் (டி.டி. கோசாம்பி, 244) எனச் சத்திரியர்கள் தொழில் வழியிலான போர் முறைகளில் ஈடுபட்டு வந்ததனை டி.டி. கோசாம்பி குறிப்பிடுகின்றார்.

"வேத நாகரிகத்திலும் சிந்துவெளி நாகரிகத்திலும் இல்லாதிருந்த ஒரு புதிய முறை - ஊதியம் பெற்று யுத்தம் செய்கிற ஒரு நிரந்தர ராணுவம் - மௌரிய சக்கரவர்த்திகளின் ஆட்சியில் உருவாகியது" (இ.எம்.எஸ். நம்பூதிரிபாட்,45) எனக் கூறுவர். இந்த அமைப்பே அரசால் உருவாக்கப்பெற்ற முதல் இந்திய இராணுவ அமைப்பாக இருக்கலாம். மௌரிய அரசு நீண்ட பரப்பளவையும் செல்வவளத்தையும் கொண்ட பேரரசு. அது தனது ஆட்சி அதிகாரப் பரவலுக்காகப் போர்ப் படையை நிறுவியிருந்துள்ளது. ஆனால், பழந்தமிழகத்தில் இத்தகைய விரிந்த பேரரசு சங்க காலத்தில் ஏற்பட்டிருக்கவில்லை. இதனால் நிரந்தரப்படை அமைப்பும் சங்கச் சமூகத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்க முடியாது எனலாம்.

தொழில் முறையாகப் போரில் ஈடுபடும் ஒரு பிரிவினரைப் பழந்தமிழகத்தில் காண இயலவில்லை. எனினும், போர் நிகழ்வுகளில் மக்கள் பங்குகொண்டதனைக் காணமுடிகிறது. மறவர் என்பது போரில் ஈடுபடும் வீரர்களைக் குறிக்கும் பொதுச் சொல்லாகக் காணப்படுகிறது. அதே நேரம் ஆண்மக்களைக் குறிக்கும் ஆடவர் என்ற சொல் போர் வீரர்களைக் குறிப்பதை, செருவேட்டுச் சிலைக்குஞ் செங்க ணாடவர் (அகம். 157:4) என்பதனால் உணரமுடிகிறது. தனிப் பயிற்சி பெறாத சாதாரண ஆண்கள் போரில் கலந்துகொண்டமையை இது தெரிவிக்கிறது எனலாம். மூதின் முல்லைப் பாடல்கள் போருக்காக மக்கள் தயார்படுத்தப்பட்டமையைக் காட்டுகின்றன. முதல் நாள் போரில் தமையனையும் மறுநாள் போரில் கணவனையும் இழந்த பெண் ஒருத்தி மறுநாளும் போர்ப் பறையின் ஒலி கேட்டுத் தனது குடியைக் காப்பதற்கிருக்கும் ஒரே மகனையும் போருக்கு அனுப்புகிறாள். இதனை,

இன்றும் செருப்பறைகேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித்து உடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி

ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே (புறம்.279:7-11)

எனப் புறப்பாடல் காட்டுகிறது. இங்கு போருக்குச் செல்லும் மகன் சிறுவயதுடையவனாக உள்ளான். தனது மகனின் வீரத்தைக் குறித்துப் பேசும் பிற பாடல்கள் வயது முதிர்ந்தவளின் மகன் போருக்குச் சென்றதைக் காட்டுகின்றன. இதனை,

வால்நரை கூந்தல் முதியோள் சிறுவன்
களிறு எறிந்து பட்டனன் (புறம். 277:2-3)

நரம்பு எழுத்து உலறிய நிரம்ப மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படை அழிந்து மாறினன் (புறம். 278 : 1-3)

எனும் பாடல்களால் அறியலாம். இங்கு முதியோள் சிறுவன் என்ற தொடர் கவனிக்கத்தக்கதாக உள்ளது. முதியோள் என்ற சொல் வயது முதிர்ந்தவளைக் குறிக்கும் அதே வேளையில் இனக்குழுவின் தலைவியையும் குறிக்கலாம் (இஃது மேலும் ஆய்வுக்குரியதாகும்). முதியவளின் மகன் போருக்குச் செல்லுதலும் கணவனை இழந்த பெண்ணின் ஒரே மகன் போருக்குச் செல்லுதலும் வீரத்தை விதந்தோதுவதாக இருக்கின்றன. எனினும், இது போர் நிகழும் போது வீட்டுக்கு ஒருவர் கண்டிப்பாகப் போரில் கலந்துகொண்டு சண்டையிட வேண்டும் என்ற நிலை இருந்ததையே குறிக்கின்றது. வீட்டுக்கு ஒருவர் சென்று இனக்குழுவுக்காகச் சண்டையிடுதல் என்பது தனி படையமைப்பு உருவாகாத நிலையையே காட்டுகின்றது. இதனால் சங்க காலத்தில் போர் புரிதலுக்கென்று தனிப்பிரிவினர் இல்லாமையையும் நிரந்தரமான தனிப் படையமைப்பு இல்லாமையையும் அறியலாம்.

நிலக்கிழார்களே குறுநில மன்னர்களாக விளங்கினர். அவர்களிடையே இருந்து வேந்தர்கள் தோன்றினர். போர்க்காலத்து மறவர், மழவர், உழவர், குறவர் போன்ற பலவகை மக்களும் படை வீரர்களாகப் பணிபுரிந்தனர். எனவே, போரிடுவதற்கு என்றே பிறந்த சாதியினர் (சத்திரியர்) என்று தமிழ்நாட்டில் அந்தக் காலத்தில் யாரையும் குறிப்பிட இயலாது (தமிழ் நாட்டு வரலாறு, 191) எனப் போர்புரியும் தனிப்பிரிவினர் தோன்றாமைக்குரிய காரணத்தைக் கூறுவர்.

விசி பிணி முரசமொடு மண் பலதந்த
திரு வீழ் நுண் பூண் பாண்டியன் மறவன்
படை வேண்டுவழி வாள் உதவியும்
வினை வேண்டுவழி அறிவு உதவியும்
வேண்டுப வேண்டுப வேந்தன் தேஎத்து
அசை நுகம் படாஅ ஆண்தகை உள்ளத்து
தோலா நல்இசை நாலை கிழவன் (புறம். 179:4-10)

என்ற புறப்பாடல் வேந்தன் வேண்டும்போது படை தருபவர்களாகக் கிழார்கள் இருந்தமையைக் காட்டுகின்றது.

பழந்தமிழகத்தில் போரில் ஈடுபடும் தனிப்பிரிவினர் இன்மையால் குடிமக்கள் அனைவரும் போர் நிகழ்வுகளில் பங்குகொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. உணவுத் தேவையை நிறைவுசெய்து கொள்ள ஒரு தொழிலைக் கற்றிருப்பதுடன் தான் சார்ந்த சமூகத் தேவையை நிறைவுசெய்வதற்கான போர்க் கல்வியைக் கற்க வேண்டிய தேவையும் பின்னர் எழுந்துள்ளது. இதனால் கிழார்களின் வளர்ச்சிக் காலத்தில் முகிழத் தொடங்கிய போர்ப்பயிற்சிக்கான அடிப்படைகள் வேந்தர் காலத்தில் உச்சம் பெற்றிருக்கலாம். கிழார்கள் வேந்தர்களுக்காக நிலையான படைக்குழு ஒன்றினை ஏற்படுத்தி வைத்திருக்கவேண்டிய நிலையில் இருந்துள்ளனர். இத்தகு பயிற்சி பெற்ற மறவர்களை உருவாக்குவதற்கென்று சில பாட முறைகள் அல்லது கல்வி முறைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம். இவற்றை கல்வி என்ற நிலையிலன்றி, ஒரு கலை என்ற நிலையில் கற்பித்திருக்கலாம்.

இடையிரு வகையோ ரல்லது நாடிற்
படைவகை பெறாஅ ரென்மனார் புலவர் (பொருள். 621)

எனத் தொல்காப்பியம் சுட்டுகின்றது. அரசரையும் வணிகரையும் படையைக் கையாளும் தகுதி பெற்றவர்களாகத் தொல்காப்பியம் காட்டுகின்றது. இவ்விருவரும் அற்ற பிறர் படைக்கருவிகளைத் தொடத்தகாதவர்களாகச் சுட்டப்படுவதையும் நோக்க வேண்டியுள்ளது. இத்தொல்காப்பியச் சூத்திரம் வருண அமைப்பைச் சுட்டுகின்றது. ஆனால், சங்க காலச் சமூகத்தினை வருண அமைப்பில் இயங்கிய சமூகமாகக் கொள்ள இயலவில்லை. சங்க பிற்கால நிலையையே தொல்காப்பியம் சுட்டுவதாகக்

கருதவேண்டியுள்ளது. படை பயிற்றுவிற்கும் அமைப்பு பிற்காலத் தமிழகத்தில் உருவாகி இருப்பதைத் தொல்காப்பியம் சுட்டுவதாகக் கருதலாம்.

அரசர் பகையால் அழிந்த அரிய ஊர் முனையை அடுத்த வழியிலுள்ள சிற்றூரில், ஆளில்லாத மன்றத்தே காற்றுவீச வீரத்தன்மையுடைய இருக்கையின் கண்ணே தலைவியின் தோளினை நினைத்துத் தலைவன் மகிழ்ந்தான் (நற்.346:3-11). என நற்றிணை கூறுகின்றது. இங்குக் காட்டபெறும் மன்றத்தினைப் படைப் பயிற்றகமாகக் கொள்ளலாம்.

கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றி
கல்லா இளைஞர் கவளங்கைப்ப (முல்லை. 35, 36)

நெடுஞ்சுழிப் பட்ட கடுங்கண் வேழத்து
உரவுச்சினந் தணித்துப் பெருவெளிற் பிணிமார்
விரவுமொழி பயிற்றும் பாகரோதை (மலை. 325-327)

என யானையைப் பயிற்றுவது காட்டப்பெறுகிறது. இங்கு யானையைப் பயிற்றுதல் என்பது சிறு சிறு பயிற்சியாக இருந்தாலும் அடிப்படையில் யானைக்குப் போர்த் தொழிலினைப் பயிற்றுவதாகவே இருந்திருக்க வேண்டும்.

குதிரைகள் நூலோர் புகழ்ந்து பேசும் மாண்புடையனவாய் அழகான வெள்ளிய பிடரி மயிரைப் பெற்றிருந்தன (பெரு. 487, 488) எனக் கூறப்படுகின்றது. குதிரையின் உயர்வை இது குறித்தாலும் போர்ச் செயலுக்கு ஏற்றதாகக் குதிரைகள் இருந்ததைக் காட்டுகிறது. இக்குதிரைகளுக்கும் யானைகளைப் போன்று போர்த் தொழில் பயிற்றுவிக்கப் பெற்றிருக்கலாம்.

வேனிழற் புலவோர்
கொடைக்கடன் இறுத்தவன் தொல்லோர் வரவும்
(மலை. 88, 89)

என மலைபடுகடாம் கூறுகிறது. விற்போரில் மிகுந்த திறனுடையோரையும், அவருக்குப் பரிசில்கள் அளிக்கப் பெற்றமையையும் இது காட்டுகிறது. இங்கு 'வேனிழற் புலவர்' எனப் போர் புரியும் சிறந்த மறவர் புகழப்பெறுகின்றனர். இவர்கள் விற்போரில் மிகுந்த பயிற்சி பெற்றிருக்கலாம்.

போர்ப்பயிற்சி செய்வதற்காக ஒவ்வொரு சிற்றூரிலும் 'போரவை' என்றும் 'முரண்களரி' என்றும் பயிலிடம் நிறுவினர். ஆண்டுதோறும் போர்ப்பயிற்சியில் சிறப்புற்று விளங்கிய வீரர்களைப் பாராட்டுவதற்காக, விழாக்கள் கொண்டாடினர். பெருநற்கிள்ளி என்னும் சோழ மன்னர் ஒருவர் இளைஞருக்குப் போர்ப்பயிற்சி அளிப்பதில் பெருமுயற்சி செய்தார். (கே.கே. பிள்ளை, 1983 : 76) எனச் சுட்டுவர். சிந்துவெளி நாகரிகத்தின் சமூக அமைப்பை விவரிக்கும் டி.டி. கோசாம்பி, (126)

சிந்து வணிகர்கள் திறமையான காவல் பாதுகாப்பை பெற்றிருக்கவில்லை அல்லது காவல் ஏற்பாடுகளே அங்கு கிடையாதோ என்றும் எண்ணத் தோன்றுகிறது. தங்களுடைய சொந்தப் பொறுப்பில் தங்களையும் தங்கள் செல்வங்களையும் காப்பாற்றிக் கொண்டார்கள். இதன் அழிவு நிகழ்வதற்கு முன்பேகூட இந்நகரங்களுக்குள் திருடர்களும், கொள்ளைக்காரர்களும் இயங்கியதைக் குறிக்கும் சான்று, தோண்டியெடுக்கப்பட்ட சிதைவுகளில் கிட்டியுள்ளது என்று கூறுகின்றார்.

காவலர்களைப் பற்றிய பல்வேறு குறிப்புகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. ஊர்கள்,

அருங்கடி மூதூர் (புறம். 36:7; முல்லை. 7)
அருங்கடி காப்பின்அஞ்சு வருமூதூர் (அகம். 114:12)

எனவும் நகரங்கள்,

கடியுடை வியல் நகர் (புறம். 247:8; 272:4; 390:6)
அங்கடி வியல் நகர் (புறம். 383:6)

எனவும் அழைக்கப்படுகின்றன. இதனால் நகரங்களையும் ஊர்களையும் காவல் காக்கின்ற வழக்கம் பழந்தமிழகத்தில் இருந்தை அறியலாம். திடீர் எனத் தாக்கிக் கொள்ளையிட்டுச் செல்லும் போர்முறை (ஆநிரை கவர்தல்) இதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். நகரங்களில் இருந்த காவலர்கள் பயிற்சி பெற்றவர்களாக இருந்ததை மதுரைக் காஞ்சி,

நூல் வழி பிழையா நுணங்கு நுண் தேர்ச்சி
ஊர் காப்பாளர் (மது. 645, 46)

எனக் காட்டுகின்றது. அரசின் வளர்ச்சியும் நகரத்தில் உருவான செல்வப் பெருக்கமும் பயிற்சி பெற்ற காவலர்களை உருவாக்கி

இருக்கலாம். இவற்றால் போர்க் கல்வி அல்லது போர்ப் பயிற்சி சமூக வளர்ச்சி நிலைக்கேற்ப பழந்தமிழகத்தில், சங்க காலத்தில் உருவாகிவிட்டிருந்ததை அறிய முடிகிறது.

நிறைவுரை

சங்க இலக்கியங்கள் 450 ஆண்டு கால எல்லையில் உருவானவற்றை உள்ளடக்கியிருப்பதனால் பல்வேறு கருத்துகள் முகிழ்த்து வளர்ந்து மாற்றம் பெற்ற நிலையைச் சங்க இலக்கியங்களில் காணமுடிகின்றது. தொடக்கத்தில் திட்டமிடப்படாத மோதலில் இனக்குழுவினர் ஈடுபட்டதும் அக்காலப்பகுதிகளில் வீட்டுக்கு ஒருவர் அழைக்கப்பட்டு போர்கள் நிகழ்த்தப்பட்டதையும் அறியமுடிகின்றது. காலப்போக்கில் வேந்தர்களின் மேலெழுச்சியும் வேந்தர்களுக்குப் படை அளித்து உதவவேண்டிய நிலையில் கிழார் உள்ளிட்ட சீறூர் தலைவர்கள் இருந்த நிலையில் படைப்பிரிவினருக்குப் பயிற்சி அளிக்கும் முறை தோற்றம் பெற்றுள்ளது. இவ்வாறு போர்ப்பயிற்சி அளிக்கும் முறையை நகரங்களின் பெருக்கமும் வணிக நடைமுறைகளின் பெருக்கமும் மிகுதிப்படுத்தியுள்ளதன் அடையாளங்களைச் சங்க இலக்கியங்கள் பதிவுசெய்துள்ளன.

உசாத்துணை நூல்கள்

---- (1983). தமிழ் நாட்டு வரலாறு சங்க காலம் - வாழ்வியல். தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை.

கேசவன், கோ. (1979). மண்ணும் மனித உறவுகளும். சென்னை புக்ஹவுஸ், சென்னை.

பிள்ளை, கே.கே. (1981). தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும். தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை.

கோசாம்பி, டி.டி. (1989). பண்டைய இந்தியா அதன் பண்பாடும் நாகரிகமும் பற்றிய வரலாறு. எஸ்.ஆர்.என். சத்யா (மொ.பெ.), நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.

கைலாசபதி, க. (1991). பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும். நியூ சஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.

11

திருவாசகத்தில் மகளிர் விளையாட்டுக்கள்

திருச்செல்வம் கிஷாந்தினி
விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை, இந்துக்கற்கைகள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை. Kishanthiny.t@gmail.com

அறிமுகம்

தெளிந்த சிந்தனைத் திறனையும் அறிவு வளர்ச்சியையும் உருவாக்குவதோடு மனதிற்கு மகிழ்ச்சியையும் தரும் எட்டுவகை மெய்ப்பாடுகளில் ஒன்று மகிழ்ச்சி. மகிழ்ச்சி உருவாகக் காரணங்களைக் கூறும் தொல்காப்பியர்,

> செல்வம் புலனே புணர்வு விளையாட்டு என்று
> அல்லல் நீத்த உவகை நான்கே

என்று வரையறுத்துள்ளார். அதாவது, செல்வத்தாலும் ஐம்புலன்களாலும் புணர்தலும் விளையாடுதுவதும் உவகை என்னும் மகிழ்ச்சி பிறப்பதற்கு ஏதுவாகும் என்கிறார்.

விளையாட்டுக்களை மண்ணுக்கும் மரபுக்கும் காலத்திற்கும் ஏற்ப ஒவ்வொரு நாட்டு மக்களும் தமக்குத் தாமே உருவாக்கி விளையாடி வந்தார்கள். விளையாடியும் வருகிறார்கள். மக்கள் தம் மண்ணின் மரபு இயல்புக்கேற்ப விளையாட்டுக்களை உருவாக்கி விளையாடி வந்திருக்கிறார்கள். பருவத்திற்கேற்றதாக மட்டுமன்றி, ஆண்பெண் பால் வேறுபாடுகளுக்கேற்ற விளையாட்டுக்களையும் இரவு பகல் விளையாட்டுக்களையும் ஆடி வந்திருக்கிறார்கள். அவற்றுள் மகளிர் குறித்த விளையாட்டுக்களும் அடக்கம்.

ஆய்வின் நோக்கமும் முறையியலும்

மகளிர் விளையாட்டுக்கள் அகத்திணை மரபில் தலைவி தலைவன்மீது கொண்ட காதலின் மேலீட்டினால் அவர்தம் புகழைச் சொல்லி லௌகிக நிலையில் ஆடப்பட்டதாகும். மணிவாசகர் பக்தி மேலீட்டினால் இறைவன்மீது கொண்ட தீராக்காதலை வெளிப்படுத்துவதற்காக இம்மகளிர் விளையாட்டுக்களை

உத்தியாகக் கையாண்டுள்ளார் என்பதை இவ்வாய்வு இனங்கண்டுள்ளது. இந்த ஆய்வுக் கட்டுரையானது விபரண ஆய்வுமுறையிலுக்கு அமைவாகக் கட்டமைக்கப்படுவதோடு பொருத்தமான சந்தர்ப்பங்களில் தரவுகள் உள்ளடக்கப் பகுப்பாய்வு முறையிலுக்கும் உட்படுத்தப்பட்டு கட்டமைக்கப்பட்டுள்ளது.

ஆய்வின் பெறுபேறுகளும் முடிவும்

மாணிக்கவாசக சுவாமிகளால் அருளிச்செய்யப்பட்ட திருவாசகம், சைவத்திருமுறைகள் பன்னிரண்டினுள் எட்டாந் திருமுறையாக வைத்தெண்ணப்படுகிறது. இது ஒப்புயர்வற்ற ஞானப்பனுவல், தத்துவக் கருவூலம், பிறவிப்பிணியைத் தீர்க்கும் பெருமருந்து. திருவாசகத்தில் சிவபுராணம் முதல் அச்சோ பதிகம் ஈறாக ஐம்பத்தொரு பதிகங்கள் உள்ளன. அவற்றுள் மணிவாசகர் திருஅம்மானை, திருத்தெள;ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோள்நோக்கம், திருப்பொன்னூஞ்சல் முதலான பதிகங்களில் விளையாட்டுப் பாடல்களை – மகளிர் விளையாட்டுப் பாடல்களைக் குறிப்பிட்டுப் பாடியுள்ளார்.

பாமர மக்களிடம் இறைநிலையை எடுத்தியம்ப வேண்டும் என்றால் அவர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் புலப்படுத்த வேண்டும். எனவே, சாதாரண மனிதர்களிடமும் கருத்துக்கள் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் நாட்டுப்புற வடிவங்களில் விளையாட்டினைத் தேர்ந்தெடுத்துள்ளார். விளையாட்டுக்களிலும் மகளிர் விளையாடுவதாக அமைந்த விளையாட்டுக்களையே விரும்பித் தேர்ந்தெடுத்துள்ளார்.

மெல்லிய இயல்புடைய பெண்களின் மனதை சமய உணர்வில் பதியச் செய்துவிட்டால் பின் அவர் சென்று ஆடவர்களும் சமயப் பற்றுடையவர்களாவார் என்ற எண்ணத்திலும் பெண்களைச் சார்ந்த குடும்பத்திற்கு மட்டுமல்லாது, அவர்களது சந்ததியினர்க்கும் இறைக்கல்வி சென்று சேரும் என்ற நோக்கத்தினாலும் பெண்டிர்க்கே உரிய விளையாடல்களைத் தேர்ந்தெடுத்துத் தம் பக்தி நெறியை அவ்விளையாட்டுப் பாடல்களில் அமைத்துப் பாடியுள்ளமை சிறப்பாகும்.

இவ்வுலக உயிர்கள் அனைத்தும் பெண்களே. இறைவன் ஒருவனே ஏக நாயகன். இவ்வுலக உயிர்கள் அனைவரையும் பெண்களாக உருவகித்து அனைவரும் இறைவனிடம் காதல்

கொண்டு இறைவனான சிவபெருமானுடைய காதலை எண்ணி ஏங்குவதாகப் பாடல்களை யாத்துள்ளார். இவ்வுலகில் உள்ள அனைத்து உயிர்களும் இறைவன் என்னும் நாயகம் முன்னிலையில் பெண்களேயாவர். இதுவே சன்மார்க்க நெறியின் அடிப்படைத் தத்துவமாகும். மாணிக்கவாசகர் சன்மார்க்க நெறியினராதலால் பெண்களை உலக உயிர்களாக உருவகித்து, அனைத்து உயிர்களும் சிவபெருமானை எண்ணிப் பாடுவதுபோல் மகளிர் விளையாட்டைத் தேர்ந்தெடுத்துப் பாடியுள்ளார் என்று கூறலாம்.

இவ்வுலக உயிர்களாகிய பெண்களுக்கு இறைவன் ஒருவனே ஏகநாயகன். இவ்வாறு அமைந்துள்ள மகளிர் பாடல்கள் உயிர்கள் ஒவ்வொன்றும் தன்னைப் பெண்ணாக - காதலியாக நினைத்துக் கொள்ளத்தக்க வகையில் அமைந்துள்ளன. இப்பாடல்கள் அனைத்தும் மகளிர்தம் கூற்றாகவே அமைந்துள்ளமை என்பது தனிச்சிறப்பாகும்.

அம்மானை

அம்மனை என்பது மகளிர் விளையாட்டுக்களில் ஒன்று. இது இறைவன் புகழ்களை வாயினாற் பாடிக்கொண்டே அம்மனைகளைக் கையிலேந்தி மேலே மாற்றி எறிந்து விளையாடுவதாகும். அம்மனைகள் மூன்று முதல் ஐந்து வரை கொள்வர்.

தருந்தடக்கை முத்தழலோர் மனைகடொறு
மிறைவது தன்மைபாடிக்
கருந்தடங்கண் ணார்கழல்பந் தம்மானைப்
பாட்டயருங் கழுமலமே

எனப் பெரியபுராண உரை சுட்டி நிற்கிறது.

பண்டைப் பரிசே பழவடியார்க் கீந்தருளும்
அண்டம் வியப்புறுமா பாடுதுங்காண் அம்மானாய்
(திருஅம்மானை:9)

பற்றியிப் பாசத்தைப் பற்றறநாம் பற்றுவான்
பற்றிய பேரானந்தம் பாடுதுங்காண் அம்மானாய்
(திருஅம்மானை:20)

தெள்ளேணம்

தெள்ளேணம் என்பது ஒருவித மகளிர் விளையாட்டு ஆகும். மகளிர் சூழவர வட்டவடிவில் நிற்க, நடுவே ஒரு கட்பறை ஒன்றினை வைத்து இரு கைகளிலும் கோள்களைக்கொண்டு அப்பறையில் அடித்துப் பாடி விளையாடுதலாகும். 'பாடிநாம் கொட்டாமோ' என்று அடிகளார் குறிப்பிடுவதால் பாட்டுக்கேற்ப பறைகொட்டி இயற்றப்பெறும் விளையாட்டாகவும் கொள்ளலாம்.

"என் பிறவிக்கருவே ரறுத்தபின் யாவரையும் கண்டதில்லை" (திருத்தெள்ளேணம்:2) என்பதில் பற்றினை அறுத்து ஒழித்தபின் அவ்விறைவன் ஒருவனை அன்றி உலகில் பிறர் ஒருவரையும் நாம் கண்டதில்லை என்பதனால் சிவனோடடைவு எனும் பதிகப்பொருளை அமைத்திருக்கிறார் என எண்ணத் தோன்றுகிறது. அதேபோல, "சிவம் வந்து நம்மை உருக்கும் பணிகொள்ளும்" (திருத்தெள்ளேணம்:3) , "மறந்தேயும் தன்கழல் மறவா வண்ணம் நல்கிய அத்திறம்" (திருத்தெள்ளேணம்:8) என்பவற்றைப் பாடி நாம் தெள்ளேணம் எனும் பறையைக் கொட்டி ஆடுவோமாக என அமைவதைக் காணலாம்.

சாழல்

சாழல் என்பது மகளிர் கைகொட்டியாடும் ஒருவகை விளையாட்டு. இதனை இக்காலத்துச் சோபனம் கொட்டுதல் என்பர். இதன் உட்பொருள் சிவனுடைய காருண்யம் என்பதாகும். அதாவது இறைவன் அருட்சக்தியின் திருவிளையாடல் ஆகும். (அருளம்பலவனார், சு. , 1973:723) பதிகத்தின் அமைப்பு முறையினைப் பார்க்கும்போது சாழல் என்பது வினவுதலும் விடையிறுத்தலுமாகிய விளையாட்டு எனக் கொள்ளலாம்.

ஏடீ தக்கனையும் எச்சனையும் தலையறுத்து தேவர்கணம்
தொக்கன வந்தவர் தம்மை தொலைத்தது தான் என்?
என ஒரு மகளிர் வினவ,
அதற்கு விடையிறுக்கிறாள் மற்றொருமள்.
தொக்கன வந்தவர் தம்மைத் தொலைத்தருளி
அருள் கொடுத்தங்
கெச்சனுக்கு மிகைத்தலை மற்றருளினன் காண் (திருச்சாழல்:5)

அதாவது, தக்கனையும் எச்சனையும் தலையை வெட்டி தேவர் கூட்டத்தில் தொகுதியாக வந்தவர்களை நிலைகுலையச் செய்ததற்கான காரணம் யாது எனும்போது, தொகுதியாக வந்தவர்களை நிலைகுலையச் செய்து அவர்கள் குற்றத்தை நீக்கி அவர்களுக்கு இரங்கி அருள் செய்து அவ்யாகத்தில் யாககர்த்தாவாகிய தக்கனுக்கு குற்றமுடைய ஆட்டுத்தலையைக் கொடுத்தருளினன் இறைவன் என்றவாறாக அமைகிறது.

இதன்படி, "தொக்கன வந்தவர் தம்மைத் தொலைத்தருளி அருள் கொடுத்தும், எச்சனுக்கு (தக்கன்) மிகைத்தலை மற்றருளியும்" நிற்பதனால் இங்கு சிவனுடைய காருண்யம் வெளிப்படுமாற்றை உணர முடிகிறது.

பூவல்லி

பூவோடு கூடிய கொடி என்பது இதன் பொருளாகும். பூ அல்லி எனப் பிரித்து அல்லிப்பூ என்று சிலர் பொருளுரைப்பர். இதுவும் மகளிர் விளையாட்டினுள் ஒன்று. மகளிர் பலர் கூடிப் பூப்பறித்தலும் அவற்றைத் தம் தலையிலும் குலமகன் தலையிலும் சூட்டி மகிழுவதும் மரபு. அங்ஙனம் அவர் பறிக்கின்றபோது இறைவன் புகழைப் பாடுவதாக அமைந்துள்ளது.

திருவாசகத்தில் திருப்பூவல்லி பதிகத்தில் இருபது பாடல்கள் அமைந்துள்ளன. அத்தனை பாடல்களிலும் மாயா மலம் நீங்குதல் முதன்மை பெற்றுள்ளது. "திருவடியென்றலைமேல் வைத்தலுமே துணையான சுற்றங்கள் துறந்தொழிந்தேன்" (திருப்பூவல்லி:1), "பந்தமறுத்தென்னை யாண்டுகொண்ட பாண்டிப்பிரான்" (திருப்பூவல்லி:2), "மாயப்பிறப்பறுத் தாண்டான்" (திருப்பூவல்லி:3), "என்னாகம் உள்புகுந்தாண்டு கொண்டான்" (திருப்பூவல்லி:18) இவ்வாறாக என்னை ஆண்டு கொண்டருளிய இறைவனின் பேரின்பத்தைப் பாடிக்கொண்டே பூப்பறித்து விளையாடுவோம் என்பதாக இப்பகுதி அமைந்துள்ளது.

உந்தியார்

திருவுந்தி என்பது மகளிர் விளையாட்டிலொன்று. இது 'உந்தீபற' என்று முடிவடைவதால் பறந்து விளையாடுகின்ற ஒரு விளையாட்டாகக் கருத இடமுண்டு. இது நான்கு அல்லது ஐந்து

சிறுமியர் நான்கு அல்லது ஐந்து சக்கரங்களை வட்ட வடிவமாக நடுவே நின்று சுற்றுதற்கேற்ற இடைவெளியுடையனவாய்க் காலால் அமைத்துக்கொண்டு அச்சக்கரங்களில் ஒவ்வொருவர் நின்று தங்களுக்குள் செய்யப்படும் சங்கேத முறைப்படி ஒருவர் சக்கரத்தை விட்டு இறங்கி உள்ளே சுற்றி வந்து கொண்டிருக்க மற்றையோர் அவர் கைக்கெட்டாதவாறு வெளியாயிருக்கும் சக்கரங்களை நோக்கி உந்தி பாய்ந்து செல்வர். அங்ஙனம் பாயும்போது நடுவே சுற்றுபவரால் தொடுபட்டவர் உள்ளேவந்து சுற்ற வேண்டியவராவார். இது இவ்விளையாட்டின் முறைமையாகும்.

"சாடியவேள்வி சரிந்திடத் தேவர்கள் ஓடியவாபாடி" (திருவுந்தியார்:5), "அக்கினியின் கையைத் தறித்தான்", "கலங்கிற்று வேள்வி" (திருவுந்தியார்:7) என்பவற்றால் விளைந்த விளைவானது இறைவனின் வெற்றிக்களிப்பாக அமைந்தமையால் இப்பதிகத்தின் உட்பொருள் ஞானவெற்றியாகக் கொண்டு மணிவாசகர் மகளிர் விளையாடுவதாக விளையாடி மகிழ்கிறார்.

தோள்நோக்கம்

தோள் நோக்கமென்பது தோளைப்பார்த்தோ அல்லது தோளைத் தீண்டியோ விளையாடும் மகளிர் விளையாட்டு. 'தோள் நோக்கம் ஆடாமோ' என வருதலால் தோளோடு தோள் பிணைய நின்று ஆடுதலாகவும் கருத வாய்ப்புளது. சிறுமகளிர் அறுவர் வட்டமாகச் சுற்றி நின்று ஒருவர் தோளை மற்றொருவர் நோக்கிக் கவித்த கைகளால் கொட்டிப் பாடிக்கொண்டு ஆடும் விளையாட்டாகும்.

ஊசல்

பெரிய மரக்கிளைகளில் நீண்ட கயிற்றைக் கட்டி அவற்றில் அமர்வதற்கான மரப்பலகையினையும் அமைத்து அதில் அமர்ந்து விளையாடுவதே ஊசலாடுதல் எனப்படும். இவ்விளையாட்டு ஒருவர் ஆட்டுவிக்க இன்னொருவர் ஆடுவதாகவும் ஒருவர் தானாகவே ஆடுவதாகவும் அமையும்.

சீரார் பவளங்கால் முத்தங் கயிறாக
ஆரா அமுதின் அருட்தானள் இணைபாடிப்

போரார்வேற் கண்மடவீர் பொன்னூசல் ஆடாமோ
(திருப்பொன்னூஞ்சல்:1)

எனத் தம் ஆட்டத்திற்கு ஏற்ற இசை நயத்தோடு இறைவன் பெருமைகளைப் பாடி ஆடுவதாக மணிவாசகர் பாடல்களை யாத்துள்ளார். இப்பதிகத்தின் உட்பொருளாக 'அருட்சுத்தி' என்பது அமைந்து விளங்குகின்றது.

மகளிர் விளையாட்டுப் பாடல்கள் சித்திரிக்கும் திருவிளையாடல்கள்

இறைவன் அடிமுடி அறியவொண்ணாத அண்ணாமலையான் என்பதை,

செங்கண் நெடுமாலும்
சென்றிடந்தும் காண்பரிய பொங்கு மலர்ப்பாதம்
(திருஅம்மானை:1)

திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடி
(திருத்தெள்ளேணம்:1)

அலரவனும் மாலவனும் அறியாமே அழல் உருவாய்
(திருச்சாழல்:6)

என்ற பாடலடிகள் மூலமாக உணர்த்தியுள்ளார்.

'சக்தி இன்றேல் சிவமில்லை' என்ற உயரிய சிந்தனையை வெளிப்படுத்தும் 'மாதொரு பாகத்தான்' என்ற இயல்பிலக்கணத்தை பின்வருமாறு உணர்த்தப்பட்டுள்ளது.

கிளிவந்த இன்மொழியாள் கேழ்கிளரும் பாதியனை
(திருஅம்மானை: 18)

பெண்பால் உகந்தான் (திருச்சாழல்:9)

என்று அக்கருத்தைக் கூறி மகளிர் விளையாடுவதாக மணிவாசகர் பதிவுசெய்துள்ளார். மேலும் எளியவர்களுக்கு இரங்கிச் செய்யும் அவனது அருளிச்செயல்களும் விதந்து போற்றப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அவற்றுள் பிட்டுக்கு மண் சுமந்த வரலாறு மகளிரால் போற்றிப்பாடி ஆடப்பட்டதாக மணிவாசகர் பாடுகிறார்.

மண்சுமந்த கூலி கொண்டு அக்கோவால் மொத்துண்டு

புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்
(திருஅம்மானாய்:8)

மதுரையில் பிட்டமுது செய்தருளி
தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட
புண்பாடல் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ (திருப்பூவல்லி:16)

இவ்வுலக உயிர்களுக்காக நஞ்சுண்ட இறைவனின் பெருமையை,

கோலாலம் ஆகிக்குரை கடல்வாய் அன்றெழுந்த
ஆலாலம் உடையான் (திருச்சாழல்:8)

நஞ்சமர் கண்டத்தான் (திருப்பொன்னூசல்: 4)

போன்ற பாடலடிகள் எடுத்துச்சொல்கின்றன.

தொகுப்புரை

இறைவன் ஒருவனே என்ற தத்துவத்தை உலக மக்கள் அனைவருக்கும் துலக்க வேண்டும் என்ற நிந்தையில், அனைவராலும் புரிந்துகொள்ளக்கூடிய வகைமையில் நாட்டுப்புற வடிவங்களுள் ஒன்றாகத் திகழும் விளையாட்டு - மகளிர் விளையாட்டுப் பாடல்களைத் தேர்ந்தெடுத்துப் பாடியுள்ளார். நாட்டுப்புற வடிவமாக இருக்கும் விளையாட்டுக்கள் குறித்த பாடல்களில் இறைநிலையை ஊட்ட முனைந்த போது, அவ்விளையாட்டுப் பெயர்களில் "திரு" என்பது முன்னொட்டாக இணைக்கப்பட்டு அவை தெய்விக நிலைப்படுத்தப்பட்டமையும் கவனித்தற்பாலது. சாழல் - திருச்சாழல், அம்மானை - திருஅம்மானை என்றவாறாகத் தலைப்பிடப்பட்டமையினைக் காணவியலும். ஆகவே, மாணிக்கவாசகர் தன் ஆழ்ந்த உணர்ச்சிகளையும் இறைதிறத்தையும் முழுமையாக வெளிப்படுத்த முகிழ்ப்புக் கொண்டபோது, அவர் மனதில் எழுந்த எழுச்சி, விளையாட்டாக மலர்ந்து, அது மகளிர் களிப்பாக இன்பம் துய்க்கின்றபோது பேரானந்தநிலையில் பரவசப்பட்டு அவற்றைத் தாமே ஆடி மகிழ்வதாக உருவகித்து பாடும் சிறந்த உத்தி முறையாகக் கையாண்டுள்ளார் என்பது வெளிப்படை.

உசாத்துணை நூல்கள்

அருளம்பலவானார்,சு. (1973). திருவாசக ஆராய்ச்சியுரை இரண்டாம் பாகம். ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

இளம்வழுதி, க.பொ. (2004). விளையாட்டுக்கள் அன்றும் இன்றும். பரிதி பதிப்பகம், அண்ணா நகர், கடலூர்.

மணிவாசகர். (ஆ.கு.வி.) திருவாசகப் பேரொளி. தொல்காப்பியர் நூலகம், சிதம்பரம்.

மாணிக்கவாசகர். (2011). திருவாசகம் சில சிந்தனைகள். கவிதா பப்ளிகேஷன், சென்னை.

மாணிக்கவாசகர் சுவாமிகள். (1976). திருவாசகம். இலங்கை சைவநூற் பதிப்பகம், யாழ்ப்பாணம்.

வெள்ளைவாரணன்,க. (2008). பன்னிரு திருமுறை வரலாறு: 8-12 திருமுறைகள். சாரதா பதிப்பகம், சென்னை.

12

‘தமிழ்த்தூது’ சேவியர் தனிநாயகம் அடிகளாரின் இதழியல் பணிகள்

அருட்தந்தை அ. அ. நவரெட்ணம்
முதுநிலை விரிவுரையாளர், கிறிஸ்தவத் துறை,
கலை, கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
navaretnama@esn.ac.lk

அறிமுகம்

தவத்திரு சேவியர் தனிநாயகம் அடிகள் தன் தமிழ் வளத்தை எண்திசையும் பரப்பியவர்; பைந்தமிழை ஆய்ந்தவர்; செந்தமிழில் தோய்ந்தவர்; கிறிஸ்தவமும் தமிழும் தன் இரு கண்களெனக் கொண்டவர்; பல நாடுகளிலும் தமிழைப் பரப்பியவர்; பல நாட்டவரும் தமிழ்க் கலையையும் தமிழ்க் கல்வியையும் தமிழாய்வையும் பெற வித்திட்டவர்; பன்மொழி அறிந்தவர்; பன்னாடு கண்டவர்; மிகச்சிறந்த பேச்சாளர்; இதழாளர். அன்னாரின் பிறப்பின் நூற்றாண்டு மகிழ்வினை (1913 – 2013) தமிழ்கூறும் நல்லுலகம் கொண்டாடி மகிழ்ந்தது. அடிகளார் கத்தோலிக்க குருவானவர்; பல்கலைக்கழக பேராசிரியர்; பேரறிஞர்; செயல் வீரர்; தேசிய உணர்வாளர் எனும் பன்முகத்தன்மையினை தன்னகத்தே உள்ளடக்கிய மாபெரும் கடலாவார். அவரது பணியின் ஓரம்சமாகிய இதழியல் பணியினை இந்த ஆய்வு எடுத்துரைக்கிறது.

தமிழ்த்தூது சேவியர் தனிநாயகம் அடிகள் பல இதழ்களில் எழுதியுள்ளதோடு சில இதழ்களை நடத்தி அவற்றின் ஆசிரியராகவும் இருந்துள்ளார். தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் இதழ்கள் நடாத்தியுள்ளார். இவற்றின் கருப்பொருளானது கல்வி, சமயம், ஆய்வு, தமிழ் சார்புடையதாகும். அவை தொடர்பான விடங்களையே எழுதியுள்ளார். இவரது ஆக்கங்கள் மற்றும் நேர்காணல்கள் போன்றவை பொது இதழ்களிலும் சமய இதழ்களிலும் ஆய்வு இதழ்களிலும் பன்னாட்டு

இதழ்களிலும் ஆண்டு மலர், நினைவு மலர், சிறப்பு மலர், மாநாட்டு மலர் ஆகியவற்றிலும் வெளிவந்துள்ளன.

ஆய்வு முறையியல்

'தமிழ்த்தூது' பேராசிரியர் சேவியர் தனிநாயகம் அடிகளார் தனது எழுத்துப் பணியால் தமிழுக்கு பெருமையும் கீர்த்தியும் சேர்த்த பெருமகனாவார். அவரது இதழியல் பணியினை ஆய்வு செய்வதற்கான ஆய்வியல் முறையாக அவரது எழுத்துக்களையும் அவரது பணியும் வாழ்வும் குறித்த அடுத்தவர்களின் குறிப்புக்களையும் எடுத்து நோக்கும் வண்ணம் இவ்வாய்வானது உரைபொருள் (textual) விளக்கத் திறனாய்வு மற்றும் விளக்கவுரை (interpretive) திறனாய்வு முறையில் அணுகப்படுகிறது.

ஆய்வின் குறிக்கோள்கள்

ஆய்வின் பிரதான நோக்கமாக தமிழ்த்தூது பேராசிரியர் சேவியர் தனிநாயகம் அடிகளாரின் இதழியல் பணிதனை ஒரே பார்வையில் நோக்குவதாகும். இதன் துணை நோக்கங்களாக இதழியல் பணியில் அவரது பன்முகப்பார்வையினை உற்றுநோக்குதல், தமிழுக்கும் கிறிஸ்தவத்திற்கும் இதழியல் பணியினூடாக அன்னார் ஆற்றியுள்ள மகத்தான பங்களிப்பினை மதிப்பீடு செய்வதாகும்.

தமிழ் இதழ்கள்

சிறுமலர், தமிழ் ஒளி ஆகிய தமிழ் இதழ்களின் ஆசிரியராக விளங்கிய அடிகளார் ஞானதூதன், கத்தோலிக்கு சேவை, சத்தியவேத பாதுகாவலன், தமிழ் ஓசை, இளங்கதிர், சமூக மஞ்சரி, கலைப்பூங்கா, தமிழ் நேசன், வீரகேசரி முதலிய இதழ்களிலும் எழுதியுள்ளார்.

சிறுமலர் :

அடிகளார் தென் இந்தியாவின் தூத்துக்குடி மறைமாவட்டத்தில் வடக்கன்குளம் ஆலய திரேசாள் உயர்நிலைப் பள்ளியில் துணைத்தலைமை ஆசிரியராக கடமையாற்றிய காலத்தில் (1940 - 1945) தூய திரேசாளை முதன்மைப்படுத்தி 'சிறுமலர்' எனும் இதழை வெளியிட்டு அதன் ஆசிரியராகப் பணியாற்றினார்.

தமிழ் ஒளி :

'தமிழ் ஒளி' இதழானது மலாயப் பல்கலைக்கழகத்தின் இந்திய மொழித்துறையில் தமிழ்ப் பேரவை சார்பில் 1960ம் ஆண்டில் அதன் தலைவராகவிருந்த முத்து இராசக்கண்ணனரால் தொடங்கப்பட்டது. 1961ல் அடிகளார் அத்துறையின் தலைவராகப் பொறுப்பேற்றவுடன் தமிழ் ஒளி இரண்டாவது இதழைத் தமது வாழ்த்துரையுடன் வெளியிட்டார்.

கத்தோலிக்கு சேவை :

இவ்விதழானது மதுரை கத்தோலிக்க மறைமாவட்டத்திலிருந்து 1941ம் ஆண்டிலிருந்து மாதமிருமுறை வெளிவரத் தொடங்கியதாகும். இதனிலும் அடிகளார் பலவிதமான சமயக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

ஞானதூதன்:

இவ்விதழானது 1928ம் ஆண்டில் தூத்துக்குடியில் ஜே. ரோச் என்பவரால் தொடங்கப்பட்ட கத்தோலிக்க மாத இதழாகும். தனிநாயகம் அடிகளார் தூத்துக்குடியில் இருந்த காலத்தில் சமயச்சார்புடைய கட்டுரைகள் பலவற்றை இவ்விதழில் எழுதினார்கள். இவற்றுள் தூய பெலவேந்திரர் (St. Andrew) வாழ்க்கையைக் கூறும் 'நாளங்காடி வீதியிலே' என்கின்ற அடிகளரின் கட்டுரை குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

சத்தியவேத பாதுகாவலன் :

வார இதழாகிய இதனில் அடிகளார் 1949, 1951, 1954ம் ஆண்டுகளில் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். இவ்விதழில் வெளிவந்த தமது கட்டுரைகளைத் தொகுத்து அடிகளார் 'தமிழ்த்தூது' எனும் நூலினை தூத்துக்குடி தமிழ் இலக்கியக்கழக வெளியீடாக 1952ம் ஆண்டில் வெளியிட்டார்.

தமிழ் ஒசை :

இவ்விதழில் அடிகளார் எழுதிய 'மலரும் மாலையும்' (தொகுதி எண் 2) எனும் கட்டுரை 1952ம் ஆண்டில் வெளிவந்தது.

இளங்கதிர் :

இவ்விதழின் (தொகுதி 11) 1958 - 1959ம் ஆண்டில் அடிகளார் 'ஒற்றுமை அமெரிக்கா' எனும் தலைப்பிடப்பட்ட கட்டுரை எழுதியுள்ளார்.

சமூக மஞ்சரி :

1960ல் இவ்விதழில் 'முதிர்ந்தோர் கல்வியின் விரிவு' எனும் தலைப்பில் அடிகளார் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். மேற்சொன்ன மூன்று இதழ்கள் குறித்த விபரங்கள் தெரியவில்லை.

கலைப் பூங்கா :

இவ்விதழ் இலங்கை இலக்கியக் கழகத்தினால் (Ceylon Literary Academy) வெளியிடப்பட்ட அரையாண்டு இதழாகும். இதிலே அடிகளார் 'திருக்குறளும் கிரேக்க ஒழுக்க இயலும்' எனும் தலைப்பில் கட்டுரை எழுதியுள்ளார்.

தமிழ் நேசன் :

மலேசியா நாட்டிலிருந்து வெளிவருகின்ற நாளிதழாகிய 'தமிழ்நேசன்' அடிகளாரின் படைப்புக்களுக்கு போதிய இடங்கொடுத்து வந்துள்ளது. அந்தவகையில் மலேசியத்தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் 09.06.1963ல் அடிகளார் ஆற்றிய 'மலேசியாவின் தமிழ் எழுத்தாளர்களும் அவர்களின் பணியும்' எனும் உரையினை முழுமையாகப் பிரசுரித்தது. அவ்வாறே உலகத் தமிழ் மாநாடு குறித்த அடிகளாரின் 'தமிழ்த் துறைகளின் உலகக் கருத்தவை' எனும் கட்டுரையினை முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு சிறப்பு மலரில் 16.04.1964ல் வெளியிடப்பட்டது. இன்னும் அடிகளார் மலேசியாவில் நடாத்திய முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் வெற்றிக்காக இவ்விதழ் பெருந்தொகையான நிதியுதவி செய்தது குறிப்பிடத்தக்கதாகும்.

ஈழநாடு:

இவ்விதழில் 'தமிழ் மொழியின் வேர் இயல்' (Tamil Etymology) எனும் தலைப்பில் 1971ம் ஆண்டில் அடிகளார் கட்டுரையொன்று எழுதியுள்ளார்.

பாதுகாவலன்:

1876ல் பிலிப்பையா என்பரால் முதன்முதலில் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட கத்தோலிக்க தமிழ்ப் பத்திரிகை கத்தோலிக்க பாதுகாவலன் ஆகும். முதலில் மாதமிருமுறை வெளிவந்த இவ்விதழ் 1877 தொடக்கம் வார இதழானது. அடிகளார் இலங்கையில் இருந்தபோது பல கட்டுரைகளை இதில் எழுதியுள்ளார். 22.12.1973 இல் அவ்விதழில்; புலவர் வேதநாயகம்பிள்ளை எனும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.

வீரகேசரி:

இலங்கை வீரகேசரி வாரவெளியீட்டில் அவரது மறைவிற்குப் பிற்பாடு அவர் எழுதிய 'வீரமாமுனிவர் தமிழாராய்ச்சிப் பங்களிப்பு செய்த ஐரோப்பியரில் தலைமகன்' எனும் கட்டுரை 05.10.1980ல் வெளிவந்துள்ளது.

கல்கி தீபாவளி மலர்:

சென்னையிலிருந்து வெளிவரும் கல்வி தீபாவளி சிறப்பு மலரின் 1956, 1958ம் ஆண்டு இதழ்களில் அடிகளாரின் கட்டுரை வெளிவந்துள்ளது.

உலகத்தமிழ் மாநாட்டு மலர்:

இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டு மலரில் அடிகளாரின் ஆங்கிலக் கட்டுரையொன்று வெளிவந்துள்ளது. அவரது மறைவுக்குப்பின் ஐந்தாவது மாநாட்டு மலரிலும் அவரது கட்டுரை பிரசுரமாகியுள்ளது.

ஆங்கில இதழ்கள்:

The Bottled Shine, Tamil Culture and Journal of Tamil Studies போன்றவற்றின் ஆசிரியராகவும் மற்றும் The Messenger of the Sacred Heart for Ceylon, The Anthonians இன்னும் பல ஆங்கில இதழ்களிலும் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

The Bottled Shine:

இது யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியின் மாத இதழாகும். அடிகளார் அக்கல்லூரியில் பயிலும் காலத்தில் (1923 –

1930) இவ்விதழின் ஆசிரியராகப் பணியாற்றி உள்ளார். அப்போது அவருக்கு வயது பதினைந்தாகும்.

The Messenger of the Sacred Heart for Ceylon :

கொழும்பில் அடிகளார் குருத்துவ உருவாக்கலுக்கான மெய்யியல் கற்கை கற்கும்போது (1931 - 1934) அங்கிருந்து வெளிவரும் இவ்விதழில் மக்ஸ் பெம்பர்டன் (Max Bombardon) எனும் புனைபெயரில் எழுதியுள்ளார். 1933 - 1935 வரையிலான காலப்பகுதியில் அடிகளாரின் பல கட்டுரைகள் இதில் வெளிவந்துள்ளன. 1945ம் ஆண்டில் அடிகளார் தம் ஆசான் அருட்தந்தை லோங் அடிகளாரின் நினைவு நாளில் ஆற்றிய உரையும் வெளிவந்துள்ளது.

The Anthonians:

இவ்விதழ் அடிகளார் பாலர் பருவ பாடசாலையாகிய ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியின் இதழாகும். அதன் 1942 - 1943ம் ஆண்டு இதழில் 'Poetry of kayts' (ஊர்காவற்துறை கவிதை) என்ற கவிதை எழுதியுள்ளார்.

Tamil Culture (தமிழ்ப் பண்பாடு):

இவ்விதழை அடிகளார் தூத்துக்குடியில் இருந்தபொழுது 1952 - 1966ம் ஆண்டு வரையிலும் அதன் முதன்மை ஆசிரியராக இருந்து நடாத்தினார். இவ்விதழ் ஒரு காலாண்டு இதழாகும். ஆரம்பத்தில் 1952ல் தூத்துக்குடி தமிழ் இலக்கிய கழகத்தின் பொறுப்பில் வெளிவந்த இவ்விதழ் 1955 முதல் சென்னை தமிழ் கலை மன்ற (Academy of Tamil Culture) இதழாக வெளிவந்தது. 1960, 1962, 1965ஆம் ஆண்டுகளில் வெளிவரவில்லை. 1966ஆம் ஆண்டில் சென்னை இலொயோலாக் கல்லூரிச் சார்ந்த அருட்திரு இன்னாசி இருதயம் அடிகளை மேலாண்மை ஆசிரியராக்கொண்டு வெளிவந்தது. அதன் பின்னர் இது வெளிவரவில்லை.

Journal of Tamil Studies (தமிழியல் பற்றிய ஆய்விதழ்):

உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம் (International Association of Tamil Research) 07.01.1964இல் இந்தியாவின் டெல்லியில் ஆரம்பிக்கப்பட்ட பொழுது தமிழ் ஆய்வுகள் Tamil Culture எனும் காலாண்டு இதழினூடாக வெளியிடப்பட வேண்டுமென்று முடிவு

செய்யப்பட்டது. ஆயினும், 1966ல் அது நின்று போனதால் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் (IATR) சார்பில் தனிநாயகம் அடிகளாரை ஆசிரியராக்கொண்டு ஆங்கிலத்தில் அரையாண்டு இதழ் தொடங்கப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி 1969ம் ஆண்டில் Journal of Tamil Studies ஆரம்பிக்கப்பட்டது. அதன் நான்காவது இதழில் (Oct 1970) அடிகளார் இவ்விதழ் IATR நிறுவனத்தின் வெளியீடாக வெளிவரவேண்டுமென்று அறிவித்தார். அவ்வறிப்பின் பிரகாரம் மறுவிதழ் 1972 இல் தான் வெளிவந்தது. அதிலே அடிகளார் Tolkappiam - The Earliest Record (தொல்காப்பியம்) பற்றி கட்டுரை எழுதியுள்ளார். இதுவே அவ்விதழில் அடிகளாரின் கடைசிக் கட்டுரையாகும்.

பிற இதழ்கள் : அவ்வப்போது அடிகளார் ஆண்டு மலர், நினைவு மலர், ஆய்வுக் கழகங்களின் இதழ்கள் ஆகியவற்றிலும் எழுதியுள்ளார். அவை முறையே New Leader, Liturgical Arts, The Times of Ceylon, Paedagogica Historica and Eastern Horizon போன்ற இதழ்களிலும் பல்வேறு கட்டுரைகளை எழுதியுள்ளார்.

அதுமட்டுமல்லாது இலங்கை தேசியக் கல்விக் கழகம் (National Education Society of Ceylon), இலங்கை வரலாற்றியல் சமூகவியல் ஆய்வு (Historical and Social Studies, Ceylon), கீழை இயலாளர் பன்னாட்டுக் கழகம் (International Congress of Orientalists), சென்னைப் பல்கலைக்கழக கீழை இயல் ஆய்வு (Oriental Research of the University of Madras), தென் ஆசிய ஆய்வு, சயாம் கழகம் (South East Asian Studies, Siam Society), மலேசியக் கீழை இயலாளர் சங்கம் (The Malaysian Society of Orientalists), இந்திய, ஈரானிய இந்தோ-ஐரோப்பிய ஆய்வு (Indian, Iranian and Indo-European Studies), அரச ஆசியக் கழகம், இலங்கை (Royal Asiatic Society, Sri Lanka) ஆகிய அமைப்புக்களின் இதழ்கள் அல்லது சிறப்பு வெளியீடுகள் ஆகியவற்றிலும் Catholic Christmas Manuel எனும் ஆண்டு இதழிலும், உலகத் தமிழ் மாநாட்டு நிகழ்ச்சிக் கோவைகளிலும் (Proceedings of the Conference Seminar) அடிகளார் கட்டுரைகள் எழுதியுள்ளார். Strait Times (ஸ்டிரெய்ட் டைம்ஸ்) மற்றும் Indian Express (இன்டியன் எக்ஸ்பிரஸ்) இதழ்களிலும் நேர்காணலுக்கு விடையளித்துள்ளார்.

உலகத் தமிழ் மாநாட்டு மலர், மாநாட்டு நிகழ்ச்சிக் கோவை, கீழை இயலாளர் மலேசியக் கழகக் கருத்தரங்கக் கோவை போன்றவற்றின் இணைப் பதிப்பாசிரியராக இருந்து பதிப்பித்துள்ளார். 'பெனுலிஸ்' எனும் மலாய் இதழில் மலாய் மொழியில் எழுதியுள்ளார்.

முடிவுரை

தவத்திரு தனிநாயகம் அடிகளார் தமது இதழியல் பணியினூடாக தமிழுக்கும் கிறிஸ்தவத்திற்கும் தமிழாய்வுக்கும் பெரும் பங்காற்றியுள்ளார். அவரது மொழிப்புலமை தமிழை உலக அரங்கில் தூக்கி நிறுத்த உதவியது. அவர் ஆசிரியராகப் பணியாற்றிய இதழ்கள் வாயிலாக தமிழாய்விற்கான வழியினை திறந்துவிட்டார் என்றுதான் சொல்ல வேண்டும். மேலும், தமக்கு கிடைத்த வாய்ப்புக்கள் வாயிலாக தமிழை உலகறியச் செய்வதில் வெற்றியும் கண்டார். அன்னாரின் இதழியல் வழி தமிழ்ப் பணிதனை தமிழ் கூறும் நல்லுலகம் என்றும் சிந்தையில் இருத்தி தமிழ் வளர்க்க ஆவன செய்யட்டும்.

உசாத்துணை நூற்பட்டியல்

அமுதன், D. (1993). தனிநாயகம் அடிகளார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

அரசு, வளன். (நவம்பர் 1980). தமிழறிஞர் தனிநாயகம் அடிகளார் அரும்பெரும் பணிகள். தொண்டன், 12(10-11) , 3-5.

ஆழகரசன், அந்தனிஜான், வே. (1984). தனிநாயகம் அடிகளாரின் வாழ்வும் பணியும். தங்கம் வெளியீடு.

தனிநாயகம், சேவியர். (1974). ஒன்றே உலகம். டீ நொபிலி ஆய்வு மையம், லொயோலா கல்லூரி.

நடராஜா, F. X. C. (நவம்பர் 1980). தமிழ் அன்னையின் தவப்புதல்வர் தவத்திரு தனிநாயகம் அடிகளார் வாழ்க்கைக் குறிப்பு. தொண்டன், 12(10-11), 23-30.

..... (2001). தமிழ்த்தூது. தவத்திரு தனிநாயகம் அடிகள் தமிழ் மன்றம்.

..... (1967). திருவள்ளுவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

Filliozat, Jean. (May 1983). Father Thani Nayagam and. His Work: The Creation of IATR. Tamilaram, 39-40.

Thayanathan, S. (May 1983). Published Works of Xavier S. Thani Nayagam. Tamilaram, 97-107.

Collected Papers of Thani Nayagam Adigal. (1995). International Institute of Tamil Studies.

13

பனங்கூடல் நாவலில் வெளிப்படும் ஈழத்தமிழரின் வாழ்வியல் அம்சங்கள்

கிருபாகரன் சிந்துஜா
இலங்கை. sinthuya008@gmail.com

ஆய்வு அறிமுகம்

செங்கை ஆழியான் என்ற புனைபெயரைக் கொண்ட க.குணராசா ஈழத்துப் படைப்பாளிகளுள் முக்கியமானவர். யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைச் சேர்ந்த இவர், இலக்கியத் துறையிலும் கல்வியிலும் சிறந்து விளங்கியதோடு நிர்வாகத்துறையிலும் முதன்மைபெற்று விளங்கினார். 1960களின் பிற்பகுதியில் எழுத்துலகில் முன்னணி வகித்த இவர், நாவல்கள், சிறுகதைகள், ஆய்வு நூல்கள், மொழிபெயர்ப்புகள் எனப் பலதுறைகளில் சிறப்புப் பெற்றார். 50ற்கும் மேற்பட்ட நாவல்களை எழுதியுள்ளார்.

பனங்கூடல் நாவலை அடிப்படையாகக்கொண்டு அந்நாவலில் வெளிப்படும் ஈழத்தமிழரின் வாழ்வியல் அம்சங்கள் என்னும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது நாவலின் கதைக்களமாக விளங்கும் யாழ்ப்பாணத்தின் கலட்டிப் பிரதேசத்தின் பண்பாட்டு அம்சங்கள், வாழ்க்கைமுறை, அக்காலச் சூழல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். செங்கை ஆழியானின் நாவல்கள் அதிகம் சாதிய ஒடுக்குமுறைகள், அதனால் ஏற்படும் விளைவுகள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், சீதனப் பிரச்சினைகள், அரசியல் நடவடிக்கைகள், ஆயுதப் போராட்டங்கள், புலம்பெயர்வாழ் மக்களின் வாழ்க்கை முறைகள், அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், மாறிவரும் பாரம்பரிய கலைகள் போன்ற பல பண்பாட்டு அம்சங்களை வெளிப்படுத்துவதாக அமைகின்றன.

ஆய்வு நோக்கம்

செங்கை ஆழியானின் நாவல்கள் பற்றிய ஆய்வுகள் பெரும்பான்மையாக வெளிவந்தபோதும் பனங்கூடல் நாவலில் வெளிப்படும் ஈழத்தமிழரின் வாழ்வியல் அம்சங்கள் பற்றிய ஆய்வு இதுவரை வெளிவராமையினால் அவற்றை வெளிக்கொணர்வதாகவும் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் செங்கை ஆழியான் பெறும் முக்கியத்துவத்தினை அறிந்துகொள்வதாகவும் இவ்வாய்வு அமைகின்றது.

ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது விளக்கமுறை அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பனங்கூடல் நாவலில் வெளிப்படும் ஈழத்தமிழரின் வாழ்வியல் அம்சங்கள்

ஈழத் தழிழர்களின் வாழ்விடம்

அக்காலத்தில் அனேகமான வீடுகள் மண்ணால் அமைக்கப்பட்டுள்ளதோடு வீட்டின் வெளிப்புறத்திலே திண்ணையும் வீட்டிற்கு வருகைதரும் விருந்தினர்களை உபசரிக்கும் இடமாக தலைவாசலும் அமைக்கப்பட்டிருக்கும். சமயலறை தனியாக அமைக்கப்பட்டிருக்கும். அத்தகைய அமைப்பினை பனங்கூடல் நாவலில் ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார். இந்நாவலின் ஆரம்பமே கலட்டிப் பிரதேசத்தில் வாழும் சுப்பையா என்ற பாத்திரத்தின் வீட்டையும் சுற்றுச்சூழலையும் விபரிப்பதாகவுள்ளது. சான்றாக, "அவரது இரண்டறைகளைக் கொண்ட மண்வீடும் தலைவாசலும் குசினியும் கொட்டிலும் அமைந்திருந்த வளவு ஒரு பனங்காணியாகும்ஞ்" (செங்கைஆழியான், 2015:7) எனும் காட்சியைக் குறிப்பிடலாம்.

இவ்வாறு திண்ணையுடன் கூடிய மண்வீடும் தலைவாசல் அமைப்பும் சமயலறையும் அக்காலத்தில் எவ்வாறு அமைக்கப் பட்டுள்ளது என்பதை ஆசிரியர் எடுத்துக்காட்டுகின்றார். மேலும், வீட்டைச்சுற்றி வேலி அமைப்புமுறை பற்றியும் விளக்கியுள்ளார். வேலிகள் பனை மட்டைகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளதை எடுத்துக்காட்டியுள்ளார். இத்தகைய வீடுகளின் அமைப்பில்

மழைக்காலங்களில் எதிர்கொள்ளும் துன்பங்களும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பனங்கூடல் நாவலில் வெள்ளத்தால் குடிசைவீடுகள் சரிந்து விழுந்தமையும் அதனால் மக்கள் எல்லோரும் பாடசாலை ஒன்றில் அகதியாக தங்கியிருந்த நிலையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதனை, "சுந்தரத்தின் குடிசை நிலத்தில் முத்தமிட்டபடி சரிந்து பிரண்டது..." (செங்கைஆழியான், 2015:26) எனும் ஆசிரியர் கூற்றில் அறிந்துகொள்ளலாம். இவ்வாறு மழைக்காலத்தில் மக்கள் அனுபவிக்கும் அவலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

உணவுப் பழக்கவழக்கம்

வடமாகாணத்திலுள்ள ஒவ்வொரு பிரதேசத்திலும் தனித்துவமான கலாசாரமும் பண்பாடும் காணப்படும். இன்று அவை மருவிக்காணப்படுகின்றன. அந்தவகையில் உணவு, உடை, தொழில்முறை எனப் பல அம்சங்களும் மாறுபட்டுள்ளன. ஆசிரியர் பனங்கூடல் நாவலில் யாழ்ப்பாணத்தின் பிரதான உணவான பிட்டு உணவு வழக்கத்தினை எடுத்துக்காட்டியுள்ளார். தோட்ட வேலைக்குச் செல்லும்போது அவர்களுக்காக வீட்டில் இருப்பவர்கள் உணவு எடுத்துச்செல்வது வழக்கமாக இருந்தது. பனங்கூடல் நாவலிலும் இத்தன்மையினைக் காணமுடிகின்றது. உதாரணமாக, "காலமை எல்லோருக்கும் பிட்டு அவித்து வாறேன்" (செங்கை ஆழியான், 2015:10) எனும் கூற்றைக் குறிப்பிடலாம்.

மேலும், பனை மரத்தின் பயன்களை அக்கால மக்கள் பூரணமாகப் பெற்றிருந்தனர். பனங்கிழங்கு, ஒடியல், ஒடியல்கூழ் என அனைத்து உணவு வகைகளும் அக்காலமக்களின் பசிபோக்க உதவின. அந்தவகையில், பிரசித்திபெற்ற உணவாக ஒடியல்கூழ் இருந்தமையையும் அதற்குப் பயன்படுத்திய பாத்திரங்களையும் இந்நாவலாசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார்.

"ஞாயிறு வந்தால் போதும் கூழ் காய்ச்சுவதற்கான ஆயத்தங்களில் ஆச்சி இறங்கிவிடுவாள். வழக்கமாக கூழ் காய்ச்சும் குண்டான் பானையைக் கழுவி துப்பரவாக்கி அடுக்களைக்குள் வந்துவிடும். அப்பு தவறாது கூழுக்கு தேவையானவற்றைப் பெரிய உமலில் வாங்கி வருவார் அதற்குள் மரவள்ளிக்கிழங்கு, பயற்றங்காய், பலாக்கொட்டை, நண்டு, வெட்டித் துப்பரவு செய்த பாரைமீன் தலைப்பகுதியுடன், கணிசமான

அளவு இறால், ஒரு திருக்கைத்துண்டுக் கீறல் என்பன பிரதானமாக இருக்கும்" (செங்கை ஆழியான், 2015:14).

இவ்வாறு ஆசிரியர் மறைந்துவரும் ஒடியல்கூழை அழகாக எடுத்துரைத்துள்ளார். அத்தோடு உணவுக்காகப் பயன்படுத்தும் அக்காலப் பாத்திரங்களான கூழ் காய்ச்சும் அகன்றவாயைக் கொண்ட குண்டான் பானையையும் பொருட்கள் வாங்குவதற்கு பயன்படுத்தும் உமலின் பயன்பாட்டையும் ஆசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார். கூழ்குடிப்பதற்குப் பலாவிலை பாத்திரமாகப் பயன்படுத்துவதும் தேநீர் அருந்துவதற்கு மூக்குப்பேணி பயன்படுத்துவதும் அக்கால மக்களின் வழக்கம் என்பதை இந்நாவலினூடாக அறியமுடிகிறது.

சாதிப் பிரிவினையும் ஏற்றத்தாழ்வுகளும்

வடமாகாணத்தில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணதில் சாதிப்பரிவுகளும் அதனால் உண்டாகும் பிரச்சனைகளும் அதிகமாகும். தொழில் ரீதியாக ஆரம்பிக்கப்பட்ட பிரிவினைகள் சமூகத்தில் பல கட்டுப்பாடுகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் உருவாக்கின. உயர்சாதி மக்கள் தாழ்த்தப்பட்டவர்கள்மீது பல வரண்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். இந்நிலை காலங்காலமாக சமூகத்தில் நிலவுமொன்றாகும். அந்தவகையில், யாழ்ப்பாண சாதி அமைப்பையும் காலப்போக்கில் அதன் வெளிப்பாடுகள் குறைந்து செல்வதையும் இந்நாவலில் காணமுடிகிறது. ஆசிரியர் இந்நாவலில் சமூகத்தினரது சிந்தனை மாற்றம், எல்லோரும் படிப்பதன் மூலம் ஏற்படும் தொழில் ரீதியான மாற்றம், வருமானம் போன்றன மூலம் சாதிமுறை தகர்த்தெறியப்படுவதையும் கலப்புத் திருமணத்தின் தாக்கத்தையும் வெளிப்படுத்தியுள்ளார். ஒரு சமூகப்புரட்சி மூலமே சமூகத்தின் இத்தகைய கட்டமைப்பை மாற்றமுடியும் என்ற கருத்தை முன்வைக்கும் ஆசிரியர், போராளிகள் அந்த இலட்சியத்திற்கு அடித்தளமாக இருப்பதையும் சமூகமாற்றத்திற்கு அவர்களது பங்களிப்புகளையும் நாவலின் வளர்ச்சியினூடாக எடுத்துரைத்துள்ளார்.

பனங்கூடல் நாவலில் வரும் பிரதான கதாபாத்திரமான சுப்பையா குடும்பம், ஆறுமுகம், பொன்னுத்துரை குடும்பம்

போன்றன உயர் சாதியினராவர். அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களிடமிருந்து விலகியிருப்பதையும் தீண்டாமை நிலையையும் எடுத்துரைத்துள்ளார். ஆசிரியர் இந்நாவலில் தொழிலுக்கு ஆயத்தமாகும் நிலையை விபரித்து சமூகத்தில் நிலவும் சாதிப் பிரிவுகளை வெளிப்படுத்துகிறார். அந்தவகையில், சுந்தரம் எனும் பாத்திரம் மரம் ஏறி கள் விற்கும் தொழில் செய்பவனாகக் காட்டப்பட்டுள்ளான். சான்றாக,

"உள்ளே போன சுந்தரம் குடிசைக்குள்ளே இருந்து வெளியே வரும்போது ஏறுபட்டி, தளநார், இயமனக்கூறுடன் வெளிவந்;தான். முட்டி ஒன்றைக் கொளுவிக்கொண்டான்" (செங்கை ஆழியான், 2015:16) எனும் கூற்றைக் குறிப்பிடலாம்.

மேலும், தொழிலுக்குச் செல்லும் சுந்தரம் வழியில் சுப்பையாவைக் கண்டு உரையாடுவதோடு முடிவில் தன் வீட்டுக்குக் கூழ் குடிக்க வருமாறு அழைக்கின்றார். இவர்களது உரையாடல்களைக் கேட்ட சுப்பையாவின் மனைவி அன்னத்தின் மூலம் உயர்சாதியினரின் தீண்டாமையை ஆசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார். சான்றாக, "நல்லா இருக்குது? சுந்தரம் வீட்ட நக்கப் போறியளோ? அவயள் யாராக்கள்? எங்கட சாதி சனமே? ஆருக்கும் தெரிஞ்சால் மதிப்பினமே? கள்ளுக் குடிப்பது காணாதெண்டு இப்பஞ்நல்லா இருக்குது?" (செங்கைஆழியான், 2015:19) எனும் கூற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வாறு சாதி ஒடுக்குதலை வெளிப்படுத்திய ஆசிரியர் சுப்பையா அன்னத்தின் மகளான கிளி அன்னத்திற்குப் பதில் சொல்வதன் மூலம் சாதியத்திற்கு எதிரான சமூக மாற்றத்தையும் இந்நாவலில் நகர்த்திச் செல்கிறார். சான்றாக, "சுந்தரம் வீட்டில வளர்கிற மாடுகளில் கறக்கிற பால் வாங்கலாம். பனை, தென்னைகளில் சீவுற கள் குடிக்கலாம். அதுகளில குத்தமில்லை.." (செங்கைஆழியான், 2015:19) எனும் கூற்றைக் குறிப்பிடலாம்.

இன விடுதலைப் போராளிகள் அமைப்பு சமூகத்தின் முன்னேற்றத்திற்கு செய்த சேவைகளையும், அவர்களது பணியையும் குறிப்பிடும் ஆசிரியர் அப்போராளிகள் அமைப்பின் மூலம் சாதிக்கட்டமைப்பு தகர்க்கப்படுவதையும் எடுத்துக் காட்டியுள்ளார். சாதியை அடிப்படையாகக் கொண்டு வீட்டில் ஏற்றுக்கொள்ளப்படாத காதலர்களுக்கு போராளிகள்

அமைப்பாலயே திருமணம் நடத்திவைக்கப்பட்ட வழக்கத்தையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

அதுமட்டுமன்றி, இந்நாவலில் ஆசிரியர் தாழ்த்தப்பட்ட மக்கள் குலத்தொழில் புரியாது படித்து முன்னேறிவருகின்ற நிலையை எடுத்துக்காட்டுவதோடு சாதி மாறிய திருமணங்களையும் சமூகம் சிறிது சிறிதாக ஏற்றுக்கொள்வதையும் வெளிப்படுத்தியுள்ளார். சான்றாக, ஆறுமுகத்துக்கும் கணேசுக்குமிடையிலான பின்வரும் உரையாடலில் அறியமுடியும்.

"விசர் கதையள் கதைக்கிறியள்? இப்ப வெளிநாடுகளில் நடக்காததே? பணம், படிப்பு, பதவி என ஒதுக்கி வைச்சியள். அவற்றைத் தேடிக்கொண்டினம். ஒண்டாக் கலியாணம் செய்தால் என்ன? குறைஞ்சா போயிடுவம்? இப்ப சுந்தரத்தின்ர மூத்த மகன் பட்டதாரி. வாத்தி வேலை பார்க்கிறான். குலத்தொழிலே செய்யிறான்? வேலணை சபாபதி சாஸ்திரியின் மகன் கனடாவில லோன்றி நடத்திறான். தள்ளியே வைச்சிட்டம்ஞ்ஞ். கலியாணம் என்பது அவரவர் விருப்பத்தைப் பொறுத்தது. கட்டாயப்படுத்தி வராது" (செங்கை ஆழியான், 2015:24).

மேலும், தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த சுந்தரத்தின் மகன் சின்ராசு உயர்சாதிப் பெண்ணான கிளியை விரும்புவதாகவும் இறுதியில் தீண்டாமையை ஆதரிக்கும் உயர்சாதியினனான ஆறுமுகமே (கிளியின் தாத்தா) அவர்களுக்கு திருமணம் செய்துவைக்க ஒப்புக்கொள்வதாக நாவலை நகர்த்தி சமூக மாற்றத்தை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறு சாதி மாறிய திருமணங்களும் தாழ்த்தப்பட்ட மக்கள் தம் குலத்தொழில் தவிர்த்து படித்து நல்ல நிலைக்கு வருவதும், வெளிநாட்டில உயர்சாதியினர் தாழ்த்தப்பட்ட மக்கள் செய்யும் தொழில் செய்வதுமென ஆசிரியர் சமூகத்தின் மாற்றத்தையும் உண்மைத் தன்மையையும் நாவலின் வளர்ச்சியல் காட்டியுள்ளார். கல்வி, பணம் என்பனவும் போராளி அமைப்பும் சமூக மாற்றத்திற்கு அடிகோலியாக இருப்பதை ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார்.

சீதன வழக்கம்

யாழ்ப்பாணத்தில் தலைவிரித்தாடும் மிக முக்கிய பிரச்சினையாக சீதனமுறை காணப்படுகிறது. பெண்பிள்ளைகளைப்

பெற்றவர்கள் வாழ்வில் எதிர்கொள்ளும் சவாலாக இருக்கும் சீதனமுறை ஏழைகளின் வாழ்க்கையைப் பாதிப்பதோடு சிலரது வாழ்க்கையைக் கேள்விக்குள்ளாக்குகிறது. இவ்வாறு காலங்காலமாகப் பின்பற்றிவரும் சீதனமுறையையும் சீதனம் கொடுப்பதற்கு பெற்றவர்கள் அனுபவிக்கும் துன்பங்களையும் செங்கை ஆழியான் பனங்கூடல் நாவலில் விபரிக்கிறார்.

இந்நாவலில் வரும் சுப்பையா தன் புகையிலைத் தோட்டத்தினால் வரும் பணம் மூலம் தன் மகளுக்கு திருமணம் செய்துவைக்கலாம், நகைகள் செய்ய வேண்டும் என்கின்ற நம்பிக்கையோடு புகையிலைச் செய்கையில் ஈடுபடுகிறார். இதனை உரும்பிராய் வைத்திலிங்கத்திற்கும் சுப்பையாவிற்குமான பின்வரும் உரையாடல் மூலம் அறியமுடிகிறது.

> "எனக்கு இந்தமுறை தேவைகள் பல இருக்கு. மூத்த மகளுக்கு நகையள் செய்ய வேணும். ஒரு வாட்டர்பம் வாங்கவேணும்...." (செங்கை ஆழியான், 2015:11)

யாழ்ப்பாணப் பிரதேசத்து மக்களின் தொழில்கள்

ஈழத் தமிழர்கள் மத்தியில் பல்வேறுபட்ட தொழில்கள் காணப்பட்டன. தொழில்களை அடிப்படையாகக் கொண்டே சாதிகளும் பிரிக்கப்பட்டன. அந்தவகையில், பனங்கூடல் நாவலில் வெளிப்படும் தொழில்முறைகளும் அத்தொழிலுடன் தொடர்புபட்டவர்கள், தொழில்புரியும் சூழல் போன்றன நாவலாசிரியரால் சிறப்பாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. விவசாயம் செய்வது அக்கால மக்களின் பெரும்பாலான தொழிலாகக் காணப்பட்டது. அதிலும் புகையிலைச் செய்கைக்கு பெயர்போன பிரதேசமாகிய தாவடிக் கிராமத்தில் புகையிலைச் செய்கைபற்றியும் புகையிலைப் போறணைகள் மற்றும் தொழிலுக்குத் தேவையான உபகரணங்கள் பற்றியும் இந்நாவலில் விபரிக்கப்பட்டுள்ளது. அத்தோடு தோட்டத்திற்கு நீர் இறைக்கும் சூழலை ஆசிரியர் விவசாயிகளின் தொழிற்பாடுகள் மூலம் பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளார்.

> "அந்தப் பட்டை பனையோலைக் குருத்தினால் அனலைதீவில் இழைக்கப்பட்டது. ஆறு மூலைகளைக் கொண்டது. ஒரு துளி தண்ணீரும் கசிந்துவிடாதிருக்க நெருக்கமாக இழைக்கப்பட்டு

மேற்புறத்தில் பனம் நாரினால் பலப்படுத்தப்பட்டது. ஆறு மூலைகளும் கிணற்றின் மிதிகல்லில் நீரைச் சரிக்கும்போது பட்டையின் ஓலை நொய்துவிடாதிருக்க சுப்பையா லொறி ரியூப்பால் மூலைகளைப் பாதுகாப்பாகக் கட்டியிருந்தார்" (செங்கை ஆழியான், 2015:10)

மேலும், தொழிலை ஆரம்பிக்கும்போது துதி பாடும் முறையையும் எடுத்துரைத்துள்ளார். சான்றாக, "தொந்தியப்பனே போற்றி என்று பாடலை துலாவில் நின்றிருந்த சிவக்குட்டி ஆரம்பித்தான். மிகுதிப் பாடலை எல்லோரும் பாடியவாறு பட்டைக்குண்டில் பட்டை தட்டுப்படும் வரை இறைத்தனர்ஞ.." (செங்கை ஆழியான், 2015:11) என்ற நாவலில் வரும் சம்பவத்தைக் குறிப்பிடலாம்.

மரம் ஏறி கள் விற்பவர்களது தொழில்முறை எடுத்துக்காட்டியதோடு மீன் வியாபாரியின் செயற்பாட்டையும் விபரித்துள்ளார்.

"வெள்ள நீரைக் கிழித்துக்கொண்டு ஒழுங்கையால் மீன்கார சின்னையனின் பெட்டிகட்டின சயிக்கில் செல்வது தெரிந்தது....." (செங்கை ஆழியான், 2015:14)

என்ற சம்பவத்தினூடாக அறியமுடிகிறது.

அரசியல் பிரச்சினைகள்

பனங்கூடல் நாவலில் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் ஈழத்தமிழர்கள் அரசியல் நெருக்கடிக்குள் உள்ளானதையும் அதனால் மக்கள் அனுபவித்த அவல நிலைகளையும் ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார். அந்தவகையில், ஈழவிடுதலைப் போராட்டகாரர்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையேயான யுத்தப் பிரச்சினைகளாலும் இராணுவக் கெடுபிடிகளாலும் மக்கள் எதிர்கொண்ட அவலங்களைப் பின்வரும் சம்பாஷணைகள் மூலம் அறியமுடிகிறது.

"..ஊர் நிலமையும் சரியில்லை. மழைவரும் போல இருக்குது. பொடியளுக்கும் ஆமிக்கும் சண்டை சச்சரவுகள் இன்னொரு பக்கம். என்ன நடக்கப்போகுதோ...." (செங்கை ஆழியான், 2015:12)

மேலும், அரசியல் பிரச்சனைகளால் இளைஞர்களை வீட்டில் வைத்துப் பாதுகாக்க முடியாத சூழ்நிலையையும் அதனால் பெற்றவர்கள் தம் பிள்ளைகளை நாட்டை விட்டு வெளியேற்றும் நிலையையும் ஆசிரியர் வெளிப்படுத்துகிறார். சான்றாக, சம்பந்தருக்கும் சுப்பையாவிற்கும் இடையேயான பின்வரும் உரையாடலைக் குறிப்பிடலாம்.

> "இம்முறை அற்புதமான ஒரு சந்தர்ப்பம் வாய்ச்சிருக்குது. வராத பொடியன்ர இடத்தில உம்மட மோனைப் புகுத்த ஏஜன்ற் எனக்காக ஒத்துக்கொண்டார். இப்படி இனிச் சந்தர்ப்பம் வாய்க்காது. இருபது முப்பதை வைத்துக்கொண்டு அலையுறானுகள். இது உன்ரை மோனுக்கு கிடைத்த அதிர்ஷ்டம் சுப்பையா. யோசியாதை. போனால் ஒரு வரியத்தில உழைச்சிடலாம். போடியளை இங்க வச்சிருக்கிறது நல்லாயில்லை. தட்டாதெரு பழக்கடைப் பொடியனை ஆசுப்பத்திரியிலை வைச்சுப் பிடிச்சிட்டான்கள். தம்பிராசாவின் மகள் இயக்கத்துக்கு ஓடிப்போயிட்டாள். இண்டைக்கும் ஸீஷல் அடிச்சிருக்கான்கள்....." (செங்கை ஆழியான், 2015:12)

மேலும், இராணுவக் கெடுபிடியால் ஏற்படும் அவலநிலைகளை ஆசிரியர் தன் கூற்றாகப் பின்வருமாறு கூறியுள்ளார்.

> "கொள்ளி வைப்பவன் கொழும்பிலிருந்து வரப் பிளேன் கிடைக்காமல் அவனுக்காகக் கருவாடாகிப் பத்துப் பதினைந்து நாட்களாகக் காத்திருந்து ஏமாந்த சடலங்கள் யாழ்ப்பாணத்தில் எத்தனை? கொள்ளி போடப்பிள்ளை இருக்கிறான் என்று பெருமைப்பட்ட ஆண்பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர் இரவல் கொள்ளியில் எரிந்து சாம்பலாகியோர் எத்தனை பேர்?....." (செங்கை ஆழியான், 2015:47)

இவ்வாறாக ஆசிரியர் அக்கால அரசியல் பிரச்சினைகளையும் அதனால் மக்கள் எதிர்கொள்ளும் இன்னல்களையும் எடுத்துக்கூறி நாவலின் வளர்ச்சிக்கு அடிகோலியுள்ளார்.

முடிவுரை

செங்கை ஆழியானின் படைப்புகள் நேரடி அனுபவங்களையும் யதார்த்தத்தையும் கூறுவதன் மூலம் சமூகத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகவே காணப்படுகின்றது. இனப்பிரச்சினை, சாதிப்

பிரச்சினை, சாதாரண மக்கள் சமூகத்தில் எதிர்கொள்ளும் சவால்கள், புலம்பெயர் நாடுகளில் மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் போன்றன பல விடயங்கள் கருத்துச் செறிவுடனும் உணர்வு வெளிப்பாட்டுடனும் அமைகின்றது. இத்தகைய தன்மை ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் அவரது படைப்புகளைத் தனித்துவமாக அடையாளப்படுத்துகின்றன. அந்தவகையில், பனங்கூடல் நாவலில் யாழ்ப்பாணத்தின் கலட்டி பிரதேசத்தின் பண்பாட்டு அம்சங்கள், வாழ்க்கைமுறை, அக்காலசூழல், சூழ்நிலை, சாதிய ஒடுக்குமுறைகள், ஏற்றத்தாழ்வுகள், அதனால் ஏற்படும் விளைவுகள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், சீதனப் பிரச்சனைகள், அரசியல் நடவடிக்கைகள், ஆயுதப்போராட்டங்கள், மனித உறவுகளின் சிக்கல் போன்ற பல பண்பாட்டு அம்சங்களை வெளிப்படுத்துவதாக அமைகின்றன. இத்தகைய தன்மை செங்கை ஆழியானைத் தனித்துவமாக அடையாளப்படுத்துவதோடு ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் இவரது படைப்புகள் முக்கியத்துவம் பெறவும் வழிவகுக்கின்றது.

உசாத்துணைகள்

ஐங்கரன் விக்கினேஸ்வரா. "செங்கை ஆழியானின் நேர்த்திய படைப்பாளுமை" (www.vanakkamlondon.com <http://www.vanakkamlondon.com>).

செங்கை ஆழியான். (2015). பனங்கூடல். கமலம் பதிப்பகம்.

தயாளன், பி. "இலக்கியச் செம்மல் - செங்கை ஆழியான்." (www.keetru.com <http://www.keetru.com>)

ரேணுகா பிரதீப்குமார். (2007). செங்கை ஆழியான் - வாழ்வும் படைப்புகளும். யுனி ஆர்ட்ஸ் லிமிட்டெட்.

14

க. சட்நாதனின் சிறுகதைகளில் கையாளப்பட்டுள்ள கலாசாரப் பாரம்பரிய அம்சங்கள்

க. மோகனம்பாள்
இலங்கை. hashinigeetha213@gmail.com

அறிமுகம்

உலக சிறுகதைகளின் தோற்றத்தின் விளைவாக தமிழகம் மற்றும் ஈழத்தில் சிறுகதைகள் எழுந்ததோடு அவை உருவ, உள்ளடக்க, உத்தி முறைகளில் வித்தியாசமான பண்புகளைக் கொண்டனவாகப் படைக்கப்பட்டன. இதன்வழி பல சிறுகதை ஆசிரியர்கள் ஈழத்தின் பல பகுதிகளிலுமிருந்து சிறுகதைகளை எழுதி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அந்த வரிசையில், ஈழத்தின் யாழ்ப்பாணத்தில் பிறந்த க.சட்டநாதன் முக்கியமானவராகத் திகழ்கிறார். ஈழத்து இலக்கியத்தில் முற்போக்கு இலக்கியத்தின் தீவிர அலை ஓரளவு தணிந்து, தேசிய இனப்பிரச்சினை சார்ந்த கருத்துக்கள் இலக்கியத்தினுள் ஊடுருவத் தொடங்கிய காலக்கட்டத்தின் பிரதிநிதியாக இவரை அடையாளப்படுத்தலாம். அந்தவகையில், ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் குறிப்பிட்ட இடத்தைத் தனதாக்கிக் கொண்ட க.சட்டநாதனின் சிறுகதைத் தொகுப்புகள் முக்கியத்துவம் வாய்ந்தனவாகக் காணப்படுகின்றமையால் அவற்றை ஆய்விற்கு உட்படுத்துவது இன்றியமையாததாகின்றது.

பண்பாடு என்ற சொல்லால் குறிப்பிடும் துறைகளைச் சங்கச் சான்றோர் பண்பு, பண்புடைமை, சால்பு, சான்றாண்மை முதலிய சொற்களால் குறித்துள்ளனர். இச்சொற்கள் வெவ்வேறு இடங்களில் வேறுசில பண்பாட்டுடன் தொடர்புள்ள பொருள்களைக் குறித்து வந்தாலும் பல இடங்களில் பண்பாட்டையே குறிக்கிறது. பண்பாடு அல்லது கலாசாரம் என்பது பொதுவான மனிதச்

செயற்பாடுகளையும், அத்தகைய செயற்பாடுகளுக்கான சிறப்புத் தன்மைகளையும், முக்கியத்துவத்தையும் கொடுக்கும் குறியீட்டு அமைப்புக்களையும் விளக்குகின்றது. ஒரு சமூகத்தின் நடைமுறைகளிலிருந்தே அச்சமூகத்தினுடைய கலாசாரத்தை அறியமுடியும். அவ்வாறாக, மனிதனுடைய வாழ்வில் ஏற்படுகின்ற ஒழுகலாறுகள், நம்பிக்கைகள், விழுமியங்கள், சுற்றி இருக்கும் உணர்வு நிலைகள் முதலியவற்றை கலாசாரத்தினூடாக அறிந்துகொள்ளலாம்.

க.சட்டநாதனின் சிறுகதைகளும் முக்கியமாக பண்டைய காலத்து பாரம்பரிய கலாசார நிலைப்பாடுகளைப் பேசத் தவறவில்லை என்றே கூற வேண்டும். ஒரு படைப்பின் முழுமைத்தன்மையினை உணர்த்துவது அப்படைப்பு தோற்றம் பெற்ற காலத்து மக்களின் உணர்வுகளை அவ்விலக்கியம் சிறப்பாக ஊடுருவிச் செல்கின்றதா என்பதை நோக்கியே ஆகும். அவ்வாறாக க.சட்டநாதனின் சிறுகதைகளும் இலக்கியம் தோற்றம் பெற்றக் காலத்தினுடைய பண்பாட்டை வெளிப்படுத்தியே சென்றிருக்கிறது எனலாம். ஆகவே, இந்த தலைப்பு தொடர்பாக ஆய்வு செய்ய வேண்டியது முக்கியமாகின்றது. க. சட்டநாதன் அவர்களால் எழுதப்பட்ட 'மாற்றம், உலா, புதியவர்கள்' ஆகிய சிறுகதைத் தொகுப்புகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு அவற்றில் கையாளப்பட்டுள்ள கலாசார பண்பாட்டுக் கூறுகளை ஆய்வு வரையறையாகக் கொண்டு இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஈழத்துச் சிறுகதை ஆசிரியர்களில் க.சட்டநாதனின் சிறுகதைத் தொகுப்புக்களை அடிப்படையாகக் கொண்டு ஏற்கனவே சில ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அந்தவகையில், மாற்றம் என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு அனோஜன் பாலகிருஷ்ணன் என்பவரால், 'மாற்றம் – சட்டநாதன் – 03' என்ற தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரையில் மாற்றம் என்ற சிறுகதையை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு கதாபாத்திரங்கள், அதன் பேசுபொருள், சமூகத்திற்கு அதன் மூலம் எத்தகைய கருத்துகள் கூறப்படுகின்றன போன்ற விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

ஜிஃப்ரி ஹாஸனால் எழுதப்பட்ட 'சட்டநாதன் சிறுகதைகள் : பணிய மறுப்பவர்களின் குரல்கள்' எனும் கட்டுரையில் ஒருசில சிறுகதைகளின் பண்புகள், கதாபாத்திரச் சிறப்புகள், அந்த கதாபாத்திரங்கள் வெளிப்படுத்தும் உணர்வு நிலைகள் என்பன சுருக்கமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. அதாவது, 'உலா, வித்தியாசமானவர்கள், அவர்களது துயரம், தரிசனம், தளம்பல், நகர்வு, உறவுகள்' போன்ற சிறுகதைகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு இந்தக் கட்டுரை அமைந்துள்ளது.

தெ.மதுசூதனன் என்பவரால், 'எழுத்தாளர் – க.சட்டநாதன்' என்ற தலைப்பில் எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரையில் 'மாற்றம், உலா' ஆகிய சிறுகதைத் தொகுப்புகள் தொடர்பான மேலோட்டமான ஒருசில கருத்துகள் இடம்பெற்றுள்ளன.

என்.செல்வராஜ் என்பவரின், 'சிறந்த சிறுகதைகள் ஒரு பார்வை – 7' என்ற ஆய்வுக்கட்டுரையில் சட்டநாதனின் 'மாற்றம்' சிறுகதை தொடர்பான ஒருசில விடயங்கள் குறித்து மட்டும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இவற்றை ஒட்டுமொத்தமாக ஒருங்கிணைத்து நோக்கும் பொழுது க.சட்டநாதனின் ஒரு சில சிறுகதைத் தொகுப்புகளை மையமாகக் கொண்ட உதிரியான ஆய்வுகளே மேற்கொள்ளப்பட்டிருந்தமை தெளிவாகின்றது. ஆகையால், க.சட்டநாதனின் 'மாற்றம், உலா, புதியவர்கள்' என்ற சிறுகதைத் தொகுப்புகளில் கையாளப்பட்டுள்ள கலாசார, பண்பாட்டுக் கூறுகள் தொடர்பாக எந்த ஆய்வும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. அதன்பொருட்டு, இந்த ஆய்வானது அந்த இடைவெளியை நிரப்பும் வகையில் க.சட்டநாதனின் மேற்கண்ட மூன்று சிறுகதைத் தொகுதிகளிலும் உள்ள அவருடைய சிறுகதைகள் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

க.சட்டநாதனின் 'மாற்றம், உலா, புதியவர்கள்' ஆகிய சிறுகதைத் தொகுப்புகளில் உள்ளடங்குகின்ற சிறுகதைகளில் கையாளப்பட்டுள்ள பண்பாட்டுக் கூறுகள் யாவை, ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை இலக்கியச் செல்நெறியில் க.சட்டநாதனுடைய சிறுகதைகளின் முக்கியத்துவம் எத்தகையது என்பன போன்ற வினாக்களுக்கு விடை காணும் வகையில் இந்த ஆய்வு அமையவுள்ளது.

ஈழத்துச் சிறுகதை இலக்கியச் செல்நெறியில் க.சட்டநாதனுடைய புனைவாக்கங்கள் புறந்தள்ள முடியாதளவு முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன என்ற கருதுகோள் இருந்தபோதிலும் அவை குறித்த ஆழமான, விரிவான, ஆய்வுகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. அந்த அடிப்படையில், அவருடைய மூன்று சிறுகதைத் தொகுதிகளைப் பண்பாட்டு நோக்கில் ஆய்வு செய்து, ஆவணப்படுத்துவதே இவ்வாய்வின் முதன்மையான நோக்கமாகும். உள்ளடக்கப் பகுப்பாய்வாக அமைந்துள்ள இந்த ஆய்வில் விவரண அணுகுமுறையும், விளக்கமுறை மற்றும் விமர்சன அணுகுமுறைகளும் கையாளப்படவுள்ளன.

ஆய்வு தொடர்பான கலந்துரையாடல்

ஒரு படைப்பாளி தனது புனைகதையில் சித்திரிக்கும் கதைமாந்தர்களை இரத்தமும் சதையுமாக முன்னிறுத்துவதே அவரது படைப்பின் தரத்தையும் நிலைபேற்றையும் நிர்ணயிக்கும். அந்தவகையில், சட்டநாதன் தனது சிறுகதைகளில் சமய வழிபாடும் சடங்குகளும், சாதியம், குடும்பம் – சமூகம் – அதிகாரம் போன்ற பண்பாட்டு அம்சங்களை கூறிக் கதையை விளக்குகின்றார் எனலாம். அவை தொடர்பான தெளிவைப் பெற வேண்டியது முக்கியமாகும்.

சமய வழிபாடும் சடங்குகளும் எனும்போது, சட்டநாதனின் சிறுகதைகளிலும் வழிபாட்டு முறைகள் மற்றும் திருவிழா தொடர்பான கருத்துக்கள் வந்துள்ளன. அதாவது, கோயில் தேர்த் திருவிழா தொடர்பான சில நிகழ்வுகளை 'உலா' என்றச் சிறுகதையில் காணலாம். இந்து சமய மக்கள் மத்தியில் திருவிழா என்பது முக்கிய இடம் வகிக்கின்றது. வருடத்திற்கு ஒருமுறை இறைவனை அலங்காரம் செய்து, தேரில் அமர்த்தி உலா வருவதானது காலங்காலமாக நடந்து வருகின்றது. இதுவொரு ஐதீகமாகவும் நம்பிக்கையாகவும் மக்கள் மத்தியில் நிலவி வருகின்றது. அதாவது, ஊரிலுள்ள பிரச்சினைகள் தீர்ந்து, ஊர் செழிப்பாக வேண்டுமென்பதே இதன் முக்கிய நோக்கமாகும். இச்சிறுகதையில், வைரவர், ஞான வைரவர் போன்ற தெய்வங்கள் தொடர்பாகவும் கூறப்பட்டுள்ளது. இத்தெய்வங்களின் சந்நிதியிலேயே அம்மனின் வேட்டைத் திருவிழா இடம்பெறும்

என்றவொரு கருத்தும் கூறப்பட்டுள்ளது. வசந்த மண்டபம், கொடிமரம், உலா போன்ற திருவிழாவின் போதான அம்சங்கள் தொடர்பாகவும் இச்சிறுகதையில் ஆங்காங்கே கூறப்பட்டுள்ளது.

சாதியம் எனும்போது, 'காலங்கள்', 'மாற்றம்', 'அந்தக் கிராமத்துச் சிறுமி' போன்ற சிறுகதைகளில், சாதியத்தின் நிலையையும் அதன் சமூகத் தாக்கங்களையும் இவர் கூறியுள்ளார் எனலாம். 'காலங்கள்' என்ற சிறுகதையில், காலங்காலமாக சாதியத்தில் மூழ்கி வந்த ஒருவரின் நிலைப்பாடு தொடர்பாகக் கூறப்பட்டுள்ளது. சாதியத்தைப் பெரிதாகப் பேசிவந்த ஒருவர் இறுதியில், அது தவறென்று உணர்ந்து தம்மைப்போலே அவர்களையும் மதிக்கும் நிலை கூறப்பட்டுள்ளது. அவர்கள், அந்தச் சாதிமானுக்கு செய்த உதவிகளை எண்ணியே அவரும் இறுதியில் திருந்துகின்றார் எனப் பாண்பாட்டின் ஓர் அம்சமான சாதியத்தின் பாதிப்புக்கள் பேசப்பட்டுள்ளமையை அறியலாம்.

குடும்பம் - சமூகம் - அதிகாரம் எனும்போது, 'வித்தியாசமானவர்கள்', 'தாம்பத்தியம்' போன்ற சிறுகதைகளில், ஆண்கள் குடும்பங்களைத் தாண்டியும் ஒருவித அதிகாரத்தோடு வேறு பெண்களோடு பாலியல் ரீதியான உறவுகளைப் பேணியமையை அறியமுடிகின்றது. 'வித்தியாசமானவர்கள்' என்ற சிறுகதையில் வரும் குடும்பத்திலுள்ள ஆண்கள் அனைவரும் தலைமுறை தலைமுறையாகத் தமக்கிருந்த பணத்தையும், சாதியத்தையும் அடிப்படையாகக் கொண்டு, பல பெண்களோடு பாலியல் உறவுகளைப் பேணி வந்தமையைக் காணக்கிடைக்கிறது. இங்கு அவர்கள் தமக்கிருந்த குடும்ப மற்றும் சமூக அதிகாரத்தை கையில் வைத்துக்கொண்டு பெண்களோடு உறவு கொள்கின்றமையானது பண்பாடு என்றவாறாகவே நியாயப்படுத்தப்படுகின்றது. 'பொம்பிள சிரிச்சா போச்சி, புகையில விரிச்சா போச்சி' போன்ற தொடர்களும் பெண்களின் மீதான அதிகார, அடக்குமுறைகளையே குறித்து நிற்கின்றதே தவிர, ஆணுக்கென்று எந்த வரன்முறைகளையும் கூறவில்லை. இதுவே, பண்பாடெனவும் பலரால் நம்பப்படுகின்றது. இவை தொடர்பாக பல்வேறு விதத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

அவ்வாறாக க.சட்டநாதனின் சிறுகதைகளினூடாகப் பாரம்பரிய பண்பாட்டம்சங்களின் தாக்கம் எந்தளவு ஊடுருவிச் சென்றுள்ளது

என்பதை அறியமுடிகின்றது. இந்த ஆய்வானது எதிர்கால சந்ததியினருக்குப் பண்பாடு தொடர்பான விளக்கத்தையும் சட்டநாதனின் சிறுகதைகளில் பண்பாட்டம்சங்கள் எவ்வாறு கையாளப்பட்டுள்ளன என்பதையும் விளக்கும் வகையில் அமையும் என்பது உறுதி. அதுமட்டுமல்லாது, இந்த ஆய்வானது 'மாற்றம், உலா, புதியவர்கள்' ஆகிய சிறுகதைத் தொகுப்புக்களை மாத்திரமே அடிப்படையாகக் கொண்ட வகையில் ஆய்வுச்செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், எதிர்காலத்தில் ஆய்வு செய்ய விரும்புவோர் இவை தவிர்ந்த அனைத்து சிறுகதைத் தொகுப்புக்களையும் அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்வதற்கு இந்த ஆய்வானது உறுதுணையாக அமையும் என்பது ஏற்கத்தக்க விடயமாகும்.

முடிவுரை

பண்பாடென்பது, ஒவ்வொரு இனத்திற்கும் மதத்திற்கும் ஏற்ப வேறுபடுகின்றது. இருப்பினும், காலம் செல்லச்செல்ல அவற்றிலும் வேறுபாடுகள் ஏற்படுகின்றமையானது ஏற்க வேண்டிய விடயமாகும். தொழில்நுட்ப வளர்ச்சி என்ற ரீதியில், மக்களும் அதற்கு அடிமையாகித் தமது கலாசாரத்தை மறந்துவிடுகின்றனர். எதிர்கால சந்ததியினரும் அதனுள்ளேயே வாழ முற்படுவர் என்பதும் இயல்பான ஒன்றாகும். இதனால், எமது பண்பாட்டினை அனைவருக்கும் உணர்த்தும் முகமாக சிறுகதைகள் தோற்றம் பெறுவதென்பது பாராட்டத்தக்க விடயமாகும். காரணம் இதன்வழி எதிர்கால இளைஞர், யுவதிகளும் தமது பண்பாட்டை அடையாளங்கண்டு அதன்படி நடப்பதற்கு இலகுவாக அமையும். சிறந்த சிறுகதைகள் பல தலைமுறைகளையும் வாழவைக்கும் என்ற வகையில், க.சட்டநாதனால் எழுதப்பட்ட 'மாற்றம், உலா, புதியவர்கள்' போன்ற சிறுகதைத் தொகுப்புகளில் உள்ளடக்கப்படுகின்ற சிறுகதைகளில் கையாளப்பட்டுள்ள கலாசாரப் பாரம்பரிய அம்சங்கள் எவ்வாறு வெளிக்காட்டப் பட்டிருக்கின்றது என்பதை இவ் இயலின் வழியாக அறியமுடிகின்றது. பண்பாடு எனும்போது, வழிபாட்டு முறைமைகள், சாதியம், குடும்பம் – சமூகம் – அதிகாரம் போன்ற அம்சங்களை ஆசிரியர் அதிகமாகக் கையாண்டிருப்பினும் தமிழர்களின் திருமணச் சடங்கு நடக்கும் முறைமைகள்,

அதனூடான சாத்திர சம்பிரதாயங்கள், உழவுத் தொழில்முறைமை, பூப்புனித நீராட்டு விழா என்பன தொடர்பான கருத்துக்கள் கதைகளில் கையாளப்படாமையையும் சற்று நோக்குதலுக்குரிய விடயமாகும். இருப்பினும், ஆசிரியரின் உச்சபட்ச கற்பனைத் திறனைக் கொண்டு சிறுகதைகள் படைக்கப்பட்டிருக் கின்றமையானது அவரின் சிந்தனைகளின் உயிரோட்டத்தைத் தெளிவாகக் காட்டிநிற்கின்றது எனலாம்.

உசாத்துணை நூற்பட்டியல்

கந்தசாமி,செ.இல. (1973). வேளாண்மையும் பண்பாடும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர்.

கிருட்டிணன்,அ. (1992). தமிழர் பண்பாட்டியல். மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

சட்டநாதன்,க. (1992). உலா. ஸ்டார் லைன் பிரிண்டர்ஸ், கொழும்பு.

சட்டநாதன்,க. (2006). புதியவர்கள் சிறுகதைத் தொகுப்பு. சாரதிநகர்.சென்னை.

சட்டநாதன்,க. (1980). மாற்றம். திருக்கணித ப்ரஸ், சாவகச்சேரி.

தனிநாயகம் அடிகள். (1980). தமிழர் பண்பாடும் அதன் சிறப்பு இயல்புகளும். தந்தை செல்வா அறங்காவற்குழு, யாழ்ப்பாணம்.

15

கடுநோன்பும் இல்லறத்தார் கடமையும்: தேசம் கடந்து ஒளிரும் தமிழர் பண்பாடு - ஓர் ஆய்வு

முனைவர் ரா.சரவணன்
துறைத்தலைவர், வரலாற்றுத்துறை (முதுகலை மற்றும் ஆராய்ச்சி),
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.
thamilannai2004@yahoo.co.in

முன்னுரை

தமிழர் மரபில் நோன்பும் கடமையும் இல்லறத்தார் பின்பற்றும் வகையில் பண்டைய காலம் தொட்டு நிலவிவருகின்றன. தேசத்தைக் கடந்து இந்த வழக்கம் தொடர்ந்து வந்தாலும் சிற்சில மாற்றங்கள் காணப்படுகின்றன. கடுந்தவங்களை துறவியர்கள் மேற்கொள்வதை சாத்திரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. பண்டைய காலத்தில் பின்பற்றப்பட்ட கடுந்தவங்கள் போன்று இன்றைய காலத்தில் காணமுடியாவிட்டாலும் விரதம், நோன்பு, நேர்த்திக் கடன் போன்றவை இல்லறத்தார் நடுவில் அதிகரித்து வருகின்றன. இவை யாவும் மனிதரின் அன்றாட வாழ்வில் சிக்கலிலிருந்து விடுபட்டு இறைவனின் அருளை வேண்டிப்பெறுவதற்கான முயற்சிகள் என்று அறியமுடிகிறது. இவை அனைத்துக்கும் மத நம்பிக்கைகள் அடிப்படையாக இருந்து வந்தாலும், மனிதரின் உடல் மற்றும் மன உறுதி சார்ந்து இந்த வழக்கம் தொடர்கின்றன. ஒவ்வொரு மதத்திலும் கடுநோன்புகள் பின்பற்றப்படுகின்றன. துறவிகள் மட்டுமே பின்பற்றிய கடுநோன்புகளும் இல்லறத்தார்கள் பின்பற்றி வருவதற்கான சமூக மற்றும் உளவியல் காரணங்கள் உண்டா என்பதை ஆராய்வது தேவைப்படுகின்றது. இந்த வகையில் தைப்பூசத் திருவிழாவில் கடுநோன்புகள் எவ்வாறு பின்பற்றப்படுகின்றன, தேசம் கடந்து எவ்வாறு பின்பற்றப் படுகின்றன, தமிழர் அல்லாதாரும் இத்தகைய கடுநோன்பை எவ்வாறு பின்பற்றுகின்றனர் என்பது பற்றி இந்தக் கட்டுரை ஆய்வு

செய்கிறது. மேலும், வளர்ந்து வரும் நுகர்வு மற்றும் அறிவியல் தொழில்நுட்பம் சார்ந்த சமூக சூழ்நிலைகளில் கடுநோன்புக்கு மாறான எளிய வழிபாட்டின் முக்கியத்துவம் பற்றியும் இந்த ஆய்வு வெளிப்படுத்துகிறது.

ஆய்வு வினா

இல்லறத்தாருக்குச் சாத்திரங்கள் எளிய வழிபாட்டை வலியுறுத்திய போதிலும் கடுநோன்புகளை அவர்கள் ஏன் தொடர்ந்து பின்பற்றுகின்றனர்? இறைவனின் அருளைப் பெறுவதற்கு கடுநோன்புகள் எந்த அளவுக்கு உதவுகின்றன? முக்தியைக் காட்டிலும் வாழ்வியல் சிக்கலைத் தீர்க்கவும் வளத்தைப் பெறவும் அதிகளவில் கடுநோன்புகளை இல்லறத்தார்கள் பின்பற்றுகின்றனரா?

ஆய்வின் நோக்கம்

மதம் சார்ந்து கடுநோன்புகள் பின்பற்றப்படுவதற்கான அடிப்படைக் காரணங்கள் பற்றி இந்த ஆய்வு எடுத்துரைக்கிறது. தைப்பூசத் திருவிழாவில் பின்பற்றப்படும் கடுநோன்புகள் பற்றி இந்த ஆய்வு விளக்குகிறது. தைப்பூசத்தின் தேசம் கடந்த ஒரு ஒப்பீட்டை இந்த ஆய்வு மேற்கொள்கிறது. இறுதியாக, வள்ளலார் காட்டிய தைப்பூசத் திருவிழா பற்றி ஒரு மாறான விளக்கத்தை இந்த ஆய்வு எடுத்துக் காட்டுகிறது.

ஆய்வு முறையியல்

பகுப்பாய்வு, விளக்கமுறை, ஒப்பீடு, களப்பணி, மற்றும் நேர்காணல் ஆகிய முறைகளில் இந்த ஆய்வு அமைந்துள்ளது. களப்பணி மற்றும் நேர்காணல் முறைகளில் தருவிக்கப்பட்டவை முதன்மைத் தரவுகளாகவும் நூல்கள், கட்டுரைகள், பத்திரிகைச் செய்திகள் ஆகியவை இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் இந்த ஆய்வில் அமைந்துள்ளன.

மதங்களும் கடுநோன்புகளும்

கடுந்தவங்களும் கடுநோன்புகளும் தொன்றுதொட்டு உலகளவில் இருந்துள்ளன. ஞானத்தை அடைவதற்கு முன்பு புத்தர் பல கடுந்தவங்களை மேற்கொண்டார் என்பதை பௌத்த மத நூல்கள் குறிப்பிட்டுள்ளன (Welch, 1967). சமணத்தின் ஒரு பிரிவான

ஆசீவகம் கடுமையான தவங்களை பரிந்துரைத்துள்ளது. ரிஷிகளும் யோகிகளும் கடுந்தவங்களை மேற்கொண்டதாக இந்துமத புராணங்கள் குறிப்பிடுகின்றன. கிருத்தவம் மற்றும் இசுலாமியத்தில் உடலை வருத்தும் கடுநோன்புகள் உண்டு (Freiberger, 2006, Yates, 1999). துறவிகள் பின்பற்றும் கடுந்தவங்களும் நோன்புகளும் இல்லறத்தார் பெரும்பாலும் பின்பற்றுவதில்லை. ஆனால் தற்காலத்தில், விரதம், நேர்த்திக்கடன், அலகு குத்தல், தீமிதித்தல், பால்குடம், காவடி எடுத்தல் போன்றவை தைப்பூசத் திருவிழாவில் ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்றன. தமிழ்நாடு மட்டுமின்றி, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளிலும் இத்தகைய நேர்த்திக்கடன்கள் நிறைவேற்றப் படுகின்றன. தமிழர் மட்டுமின்றி பிற இனத்தவர்களும் மதத்தவர்களும் இத்தகைய நேர்த்திக் கடனைப் பின்பற்றுவது அவர்கள் நம்பிக்கை சார்ந்து அமைகிறது. வாழ்வியல் மட்டுமின்றி உளவியல் ரீதியான ஒரு சிகிச்சையாக கிழக்கத்திய நாடுகளில் இது காணப்படுகிறது (Watts, 1961). ஆனால், பகவத்கீதை இத்தகைய கடுந்தவங்களையும் நோன்புகளையும் பரிந்துரைக்கவில்லை. 'உடலில் ஆத்மாவாக நான் அமர்ந்துள்ளதை அறியாமல் துன்புறத்தும் தவங்களை மனிதர்கள் செய்கின்றனர்' என்று பகவத்கீதையில் கிருஷ்ணர் குறிப்பிடுகிறார். சத்வகுணம் கொண்டவர்களுக்கு உடலை வருத்தும் தவம் தேவையில்லை என்றும் அவர் குறிப்பிடுகிறார். தைப்பூசத் திருவிழாவில் இன்று பரவலாக நேர்த்திக்கடன் செலுத்துவது நடைமுறையில் உள்ளது. உடலை வருத்தும் அலகு குத்தல் வகைவகையான வேல்கொண்ட காவடியைச் சுமத்தல் ஆகியவற்றை இல்லறத்தார்கள் மகிழ்ச்சியுடன் செய்கின்றனர். இதற்காக அவர்கள் 48 நாட்கள் நோன்பிருந்து, மாமிசம், மது, புகை, பாலுறவு ஆகியவற்றை விலக்கி, தரையில் படுத்து உறங்கி சுகங்களைத் துறந்து நேர்த்திக்கடன் வெற்றிகரமாக நிறைவேற்ற முழு ஈடுபாட்டுடன் செயல்படுகின்றனர். தமிழர் மட்டுமின்றி பிற இனத்தவர் மற்றும் மதத்தவர்களும் இறைவனின் அருள் இந்த வகையில் தமக்குக் கிடைக்கும் என்று நம்பி வருகின்றனர். சில நிகழ்வுகள் அறிவியலுக்கு உட்பட்டு விளக்க முடியும் என்றாலும், அதைக் கடந்தும் சில நிகழ்கின்றன. வாழ்வியலை செழுமையாக்க தேசம் கடந்து தமிழர் பண்பாடு தொடர்ந்து ஒளிர்ந்து வருவது அதன் சிறப்பை உணர்த்துகிறது. கடுநோன்புகளுக்கு மாறாக, வள்ளலார்

தனது வழிபாட்டை நிறுவியிருந்த போதிலும், இல்லறத்தார் முரண்பாடின்றி இரண்டு முறைகளையும் பின்பற்றி வருகின்றனர்.

முடிவுரை

கடுநோன்புகள் வாழ்வியலை அதிகளவு சார்ந்திருக்கிறதே தவிர இறுதியான வீடுபேறு என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. தேசங்கடந்து இத்தகைய கடுநோன்புகள் பின்பற்றப்பட்ட போதிலும் சிற்சில வேறுபாடுகள் காணப் படுகின்றன. தைப்பூசத் திருவிழா நடைமுறையில் வள்ளலார் வகுத்த பாதையை நேர்த்திக்கடன் செலுத்துபவர்கள் முரண்பாடாகப் பார்க்கவில்லை. கடுநோன்பு மேற்கொண்டு நேர்த்திக்கடன் செலுத்துவதால் பயனடைந்துள்ளதாகப் பெரும்பாலோர் குறிப்பிட்டுள்ளனர்.

உசாத்துணை நூல்கள்

Freiberger, Oliver. Ed. (2006). Asceticisrn and Its Critics: Historical Accounts and

Comparative Perspectives, New York: Oxford University Press.

Welch, Holmes. (1967) The Practice of Chinese Buddhism, 1900-1950. Cambridge, MA:

Harvard University Press.

Watts, Alan. (1961). Psychotherapy: East and West, New York: Pantheon Books.

Yates, Nigel (1999). Anglican Ritualism in Victorian Britain, 1830-1910. Oxford University Press.

16
உணவு பண்பாடாவதால் ஏற்பட்ட பாதிப்புக்கள்

பேராசிரியர் வ. இன்பமோகன்
நுண்கலைத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை. inpamohanv@esn.ac.lk

A. பகீரதன்
பதிவாளர், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
Sri Lanka.registrar@esn.ac.lk

அறிமுகம்

இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையேயான உறவின் தொடர்ச்சியை இன்றுவரை பேணும் ஒன்றாக உணவு விளங்குகின்றது. பூர்வீக நிலையிலிருந்து மனித சமூகம் பல மாற்றங்களைப் பெற்று வளர்ச்சியடைந்துள்ளது. இந்த வளர்ச்சிப் போக்கில் மனித சமூகத்தின் உணவுடன் தொடர்புடைய அனைத்துச் செயற்பாடுகளிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எல்லா உயிரினங்களையும் போலேவே மனிதருக்கும் புசிப்புக்கு உரியதாக இருந்த உணவு பண்பாட்டு மயப்படுத்தப்பட்டு பெற்ற வளர்ச்சியையும் அதனுடாக பெற்ற மாற்றங்களையும் தெளிவுபடுத்துவதை நோக்காகக் கொண்ட இந்த ஆய்வு, சமகாலத்தில் மனிதரிடம் நிலவும் உணவுச் செயற்பாட்டுடன் தொடர்புடைய நடைமுறைகள் எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன என்பதையும் எடுத்தியம்பும்.

ஆய்வின் நோக்கம்

உணவு உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத இயற்கையின் கொடை. உணவு பண்பாட்டு மயப்படுத்தப்பட்டதால் உயிர்வாழ்வதற்கான அடிப்படைத் தேவையாக விளங்கிய உணவு பல்வேறுபட்ட பரிமாணங்களைப் பெற்றதொன்றாக வளர்ச்சியடைகின்றது. பண்பாட்டு உணவு பற்றிய கருத்தாக்கம் மனித சமூகத்தில் எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது என்பதை தெரிவுபடுத்துவது இந்த ஆய்வின் நோக்கமாக அமைகின்றது. இந்நோக்கைத் தெளிவுபடுத்துவதற்கு உணவுடன்

தொடர்புடைய செயற்பாடுகள் மனித சமூகத்தில் பூர்வ நிலையில் இருந்து சமகாலம் வரை எவ்வாறான மாற்றங்களைப் பெற்று வளர்ச்சியடைந்துள்ளது என்பதிலும் அம்மாற்றங்களுக்குப் பின்னணியில் இருந்த காரணிகளிலும் இவ்வாய்வு கவனம்கொள்கிறது.

ஆய்வு முறையியல்

இவ்வாய்வு உணவுப் பண்பாடு, பழக்கவழக்கம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட கோட்பாட்டு, நடைமுறை சார்பான விடயங்களைக் கவனம்கொள்கிறது. நடைமுறையில் இருக்கிற கோட்பாடுகளும் வியாக்கியானங்களும் மீள்பரிசீலனைக்குட் படுத்தப்பட்டு புதிய எண்ணக்கரு முன்வைக்கப்படுவதால் விபரிப்பு (Descriptive) மற்றும் புதிதுகாண் (Exploratory) ஆய்வியலின் இணைப்பாக உள்ளது. பண்புசார் ஆய்வு முறை (Qualitative Research Design) இங்கு பயன்படுத்தப்படுகின்றது. இரண்டாம் நிலைத் தரவுகள் (Secondary Data), மூன்றாம் நிலைத் தரவுகள் (Peripheral Readings) என்பனவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப் படுகின்றன. உணவு தேடல், உற்பத்தி, உணவு பண்பாடு சார்பான ஆய்வு நூல்கள், ஆய்வுச் சஞ்சிகைகள், கட்டுரைகள் என்பன இதற்கான மூலங்களாகக் காணப்படும். நம்பிக்கையான கல்விசார் இணையத்தளங்கள் தகவல் பெறும் மூலங்களாக பெரிதும் பயன்படுத்தப்பட்டன. பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பண்பு ரீதியில் பகுப்பாய்வு இடம்பெற்று ஆய்வு முடிவு முன்வைப்புக்களும் இடம்பெற்றன.

கருத்தாடல்

'மனிதர், விலங்குகள் உண்பதனாலும் அல்லது தாவரங்கள் உறிஞ்சியும், அவற்றை உயிருடன் வைத்திருக்க உதவும் பொருட்கள் உணவாகக் கொள்ளப்படத்தக்கவை'(<https://dictionary.cambridge.org/dictionary/english/food>) என்னும் விளக்கம் உணவு என்னும் பதத்திற்கு கிடைக்கிறது. இதனால் உணவு உயிரினங்களின் உயிர்வாழ்வதற்கு அவசியமானது என்னும் புரிதலைப் பெற்றுக்கொள்கின்றோம். இந்த விளக்கத்தில் உள்ளடங்கியிருக்கும் இரண்டாவது விடயம், ஆரோக்கியம் பற்றியதாகும். உயிரினங்கள் உருவானதிலிருந்து இயற்கையான மரணத்தைத் தழுவிக்கொள்ளும் காலம்வரை உயர்வாழ்வதை 'ஆரோக்கிய வாழ்வு' என

வரையறுக்க முடியும். விபத்தாக அன்றி உயிரினங்கள் உயிர்வாழ வேண்டிய காலத்திற்கு முன்னர் மரணத்தைத் தழுவிக் கொள்ளுமாயின் அதில் ஆரோக்கியத்துடன் தொடர்புடைய காரணிகளின் தாக்கம் பெருமளவிலுள்ளது. ஆரோக்கிய வாழ்விற்கு உணவு அவசியம் என்பதால் 'ஆரோக்கிய உணவு' என்னும் பிரயோகம் பிரதானம் பெறுகின்றது.

ஆரோக்கிய உணவு என்பது உயிர் வாழ்வதற்கான இயலுமை அல்லது ஆற்றலை வழங்குவது. உண்ணும் உணவின் அளவு, ஆரோக்கியத்துக்குத் தேவையான உணவுக் கூறுகள், உணவுகளைப் பெற்றுக்கொள்ளும் காலம், உண்பதற்குத் தயார்படுத்தப்படும் முறை எனப் பல காரணிகள் ஆரோக்கிய உணவில் தாக்கம் செலுத்துகின்றன. ஆரோக்கியமின்மையில் உயிரினங்களைப் பாதிப்புக்குட்படுத்தும் நோய்களின் தாக்கம் பிரதானம் பெறுகின்றது. நோய்த் தாக்கத்திலிருந்து தப்பித்துக்கொள்வது, உடல் ஆரோக்கியத்தைப் பேணுவது ஆகிய இரண்டிற்கும் பொருத்தமான உணவுத் தேர்வு அவசியமானது. அனைத்து உயிரினங்களும் அவற்றுக்குத் தேவையான ஆரோக்கிய உணவு கிடைக்கக்கூடிய பகுதிகளிலேயே வாழ்வதற்குப் பழக்கப்பட்டுள்ளதுடன் ஆரோக்கிய உணவையே உட்கொள்ளும் பயிற்சியையும் பெற்றுள்ளன. உயிரினங்கள் உண்ணும் உணவுகள் இயற்கையில் இருந்தே பெற்றுக்கொள்ளப்படுகின்றன அல்லது உற்பத்தி செய்யப்படுகின்றன. ஓர் உயிரி இயற்கையில் நிலைகொண்டிருக்கும் ஏனைய உயிரினங்களை, உயிரினங்களில் இருந்து கிடைக்கும் உணவை உட்கொள்கின்றது. மாறாக இயற்கையில் இருந்து உருவாகாத உயிரியல் தொடர்பற்றவற்றை உணவாக உட்கொள்வதில்லை.

உயிரினங்கள் உணவுத் தேவையைப் பூர்த்திசெய்வதற்காக இயற்கையில் நிலைகொண்டுள்ள தன்னைவிடப் பலமற்ற உயிரினங்களை உணவாக்குகின்றன. இந்தச் செயற்பாட்டின் தொடர்வலையமைப்பை 'உணவுச் சங்கிலி' என்கின்றோம். உணவுச் சங்கிலியின் ஒழுங்கமைப்பு உயிரினங்களின் உணவுத் தேவையின் பூர்த்தியாக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாக அமைந்தாலும் அதில் உயிர் ஆபத்தை ஏற்படுத்தும் இடர்நேர்வுகளை உயிரினங்கள் எப்போதும் எதிர்கொள்கின்றன. இதுவே உயிரினங்களின் வாழ்வதற்கான போராட்டமாகிறது.

இவ்விடத்திலேயே 'தக்கன பிழைக்கும்' (CHARLES DARWIN,1997: 18 -19) என்ற டாவின்சின் கூற்றுச் சரியாகப் பொருந்துகின்றது. உயிரினங்களின் பெருக்கத்தை வரையறுத்து, உலக சமநிலையைப் பேணி, அனைத்து உயிரினங்களினதும் உணவு விநியோகத்தைச் சிறப்பாக மேற்கொள்வதற்கு, இயற்கையால் வடிவமைக்கப்பட்ட ஒரு பொறிமுறையாக உணவுச் சங்கிலியின் செயல் ஒழுங்கு முறை அமைகிறது.

உணவு பண்பாடாதல்

இயற்கையின் பாதிப்புக்களில் இருந்து தப்பித்து உலக வாழ்வை வெற்றிகொள்வதற்கான பொறிமுறைகளை உருவாக்கி இயற்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள உயிரினங்களில் இருந்து மனிதன் ஆற்றல் மிக்கவனாக மேன்நிலை பெறும்போது, அந்தச் செயற்றொடர் பண்பாட்டின் தோற்றுவாயாகிறது. உலக வாழ்வை வெற்றிகொள்வதற்கான மனிதனின் பண்பாட்டு உருவாக்கம் மனிதனுக்குப் பெரும் சவாலானதாக விளங்கிய உணவு விநியோகத்துடன் தொடர்புடைய இடர்பாடுகளில் இருந்து விடுபடுவதற்கு உதவியது.

மனிதர்கள் உணவு உட்கொள்வது 1.பசியைத் தீர்த்துக் கொள்வது. இதில் உயிர்வாழ்வு, உடல் ஆரோக்கியம் ஆகியன அடங்கும். 2.சமூகத் தேவைகளைப் பூர்த்திசெய்வது ஆகிய இரு நோக்கங்களையும் உள்ளடக்கிய செயற்பாடாக அமைகின்றது. பண்பாட்டு நிலைப்படுத்தப்படாத மனிதர்கள் முதல் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவே உணவைப் பயன்படுத்தினர். இரண்டாவது விடயம் உணவை ஒரு பண்பாட்டு வடிவமாக மேலுயர்த்துகின்றது. மனிதர்கள் உணவைச் சேகரிப்பது அல்லது வேட்டையாடுவது மட்டுமல்லாமல், தாவரங்களையும் கால்நடைகளையும் வளர்க்கிறார்கள். உணவைச் சமைக்கிறார்கள், சாப்பிடுவதற்குப் பாத்திரங்களைப் பயன்படுத்துகிறார்கள், உணவுடன் தொடர்புடைய நடைமுறை விதிகளை (Rules for Behavior) உருவாக்குகிறார்கள், சமூக, சமயச் சடங்குகளில் உணவைப் பயன்படுத்துகிறார்கள். இதன்போது உணவு உண்பது ஓர் உயர்ந்த சமூக தூண்டுதலின் பாற்பட்ட விடயமாக பண்பாட்டு உயிரியான மனிதரால் பயன்படுத்தப்பட்டது. உணவுடன் தொடர்புடைய மேற்குறித்த செயற்பாடுகள், உபகரணங்களின்

இணைந்த செயற்பாடு உணவுப் பண்பாட்டை வரையறுக்கின்றது (Folake Olukemi Samuel, 2016: 48).

பண்பாட்டு உணவின் உருவாக்கத்துடன் உணவைப் பெற்றுக்கொள்ளும் முறை, உண்பதற்கு??யதாக தயார்படுத்துதல், உண்பதற்காக ஒன்று கூடுதல், உண்ணும் முறை, உண்ணும் சந்தர்ப்பங்கள், விசேட உணவின் பிரயோகம் போன்ற விடயங்களில் மனிதன் ஏனைய உயிரினங்களில் இருந்து முற்றிலும் வேறுபடுகின்றான். உணவைப் பெற்றுக்கொள்வது, சேமிப்பது, பதப்படுத்துவது போன்ற செயற்பாடுகளுக்குக் கருவிகளையும் உபகரணங்களையும் பயன்படுத்துகின்றனர். உணவீட்டத்தின் போது மனிதர் எதிர்கொண்ட அபாய நேர்வுகள் தவிர்க்கப்படுவதுடன் உணவு விநியோகமும் நேர்த்தியான முறையில் நடைபெறுகின்றது.

பண்பாட்டு உயிரியான மனிதன் உணவுச் சங்கிலிச் செயற்றொடல் குறித்த ஒரு கட்டத்தில் தக வைக்கப்பட்டிருந்த நிலை மாறி அனைத்து உயிரினங்களையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் மிக்கவனாக மாறுகின்றான். இதன்போது வாழ்வின் உறுதியற்ற தன்மை மிகக் குறைந்த வீதமுடையதாக மாற்றமடைய மனித சமூகம் பல்மடங்கு பெருக்கமுறுகின்றது. பெருக்கமுற்றுச் செல்லும் மனித சமூகத்தின் உணவுத் தேவையைப் பூர்த்திசெய்வதற்கேற்ற விகிதத்தில் உணவு உற்பத்தியும் மேம்படுத்தப்படுகின்றது. இதன்போது தாவரங்கள், விலங்குகள், நீர் வாழ் உயிரினங்கள் மனித உழைப்பையும் மனிதரால் கண்டுபிடிக்கப்பட்ட கருவிகளையும் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட வேண்டிய தேவை உருவாகின்றது. இக்கட்டத்தில் பூர்வநிலையில் கடைப்பிடிக்கப்பட்ட இயற்கையில் இருந்து உணவைப் பெற்றுண்ணல் என்னும் நிலை மிக மிகக் குறைந்த அளவில் சில பூர்வ குடிகளிடம் மாத்திரம் பின்பற்றப்படுகிறது. கால வளர்ச்சியில் உணவைப் பெற்றுக்கொள்ளும் இயற்கையரண்கள் மனித சமூகத்தின் பல்வேறு வாழ்வியல் தேவைகளுக்கு அவசியமானதாகும்போது பண்பாட்டு மயப்படுத்தப்பட்ட மனித சமூகம் பூர்வகுடிகளை இயற்கையில் இருந்து அந்நியப் படுத்துவற்கான திட்டங்களை மேற்கொள்கின்றது.

மனித சமூகத்தின் வளர்ச்சிப் படிநிலையில் 1) பூர்வ காலத்தில் இயற்கையில் இருந்து உணவைப் பெற்றுண்டு, 2) அதன் அடுத்தகட்ட வளர்ச்சியாக தமக்குத் தேவையான உணவைத் தாங்களே உற்பத்தி செய்தும், இயற்கையில் இருந்தும் பெற்றுண்டு 3) அடுத்த கட்ட வளர்ச்சியாக உற்பத்தி செய்தும் உற்பத்தி செய்ய முடியாத உணவுகளை ஏனைய உற்பத்தியாளர்களிடம் இருந்து பெற்றுண்டு (பண்டமாற்றுப் பொருளாதாரம்) 4) இறுதியாக தேவையான அனைத்து உணவுகளையும் உணவு விநியோகத்தை மேற்கொள்ளும் நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளும் நிலை உருவாகின்றது. இந்தப் படிமுறை வளர்ச்சியில் இறுதி நிலையில் உணவு வர்த்தகப் பொருளாக மாற்றமடைகின்றது.

உணவு வர்த்தகப் பொருளானதும் இலாபம் ஈட்டல் என்னும் கருத்தாக்கமும் பிரதானம் பெறுகின்றது. இக்கட்டத்தில் முழுக்க முழுக்க உணவு விநியோகம் ஒரு நிறுவனப்படுத்தப்பட்ட செயற்பாடாக மாற்றமடைகின்றது. இதன் போது உற்பத்தியாளர், விநியோகிஸ்தர், இடைத்தரகர் என உணவுடன் தொடர்புடையதொரு பெரும் வலையமைப்பு ஏற்படுத்தப் படுகின்றது. உணவு விநியோகத்துடன் தொடர்புடைய அனைத்துச் செயற்பாடுகளும் பலம் பொருந்திய நிறுவனங்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டு ஒழுங்குபடுத்தப் படுகின்றன. உணவு விநியோகம் தொடர்பான சர்வதேச தராதரங்களைப் பரிந்துரைக்கும் சட்டங்களின் அமுலாக்கமும் அவற்றைப் பின்பற்றி உணவை உற்பத்தி செய்தல், விநியோகிகத்தல் போன்றனவும் மேற்கொள்ளப்படுகின்றதன.

பண்பாட்டு மயப்படுத்தப்பட்ட உணவில் 1. குறித்த மக்கள் தொகுதியினர் வாழும் சூழலில் காணப்படும் இயற்கை வளங்களான காலநிலை, நிலமைப்பு, மண் வளம், நீர், கனியவளம் போன்ற அம்சங்கள், 2. மக்களின் நம்பிக்கை, தொடர்பாடல் திறனுடன் தொடர்புடைய மதம், கல்வி, எழுத்தறிவு மட்டம், தொடர்பாடல் முறைமைகள் 3.பழங்குடியினர், குடியேற்றவாசிகள், வெள்ளையினத்தவர், கறுப்பினத்தவர், ஆசிய மக்கள், கிழக்காசிய மக்கள், லத்தின் அமெக்கர் எனப் பல கிடைகளாக விரிவடையும் இன அடையாளம், 4.குறித்த சமூகத்தில் நிலவும் வேட்டை, சேகரிப்பு, விவசாயம், மீன்பிடித்தல், உணவு பதப்படுத்துதல், சேமிப்பு, போக்குவரத்து, சமையல்" போன்றவற்றுடன்

தொடர்புடைய தொழில்நுட்பங்கள்" (Folake Olukemi Samuel, 2016: 48) ஆகியவற்றுக்கும் உணவுத் தேர்வுக்கும் இடையே தொடர்பு நிலவியது. உணவில் பிராந்திய, இன அடையாளங்களை முன்மொழிகின்றது. சமூகத் தனித்துவத்தை வெளிக்காட்டும் பண்பாட்டுக் கூறுகளில் உணவிற்கும் முக்கியத்துவம் இருந்தது.

உணவு வர்த்தகம் காலனத்துவ ஆட்சியை உள்ளடக்கிய காலத்தில் முனைப்பாக முன்னெடுக்கப்பட்டு, உலகமயமாக்கல் செயற்றொடரின்போது மேலும் வளர்ச்சியுறுகின்றது. இதன்போது பண்பாட்டுத் தனித்துவத்தைப் பேணிய உணவு பொதுமைப்படுத்தப்படுகின்றது. இது ஓரினவாக்க கருத்தியலை நடைமுறைச் சாத்தியமாக்கும் செயற்றொடராகிறது. "இச்செயற்பாட்டை ஆசிய மக்கள் மேற்கத்திய மயமாக்கம் என்றும் ஐரோப்பியர் அமெரிக்க மயமாக்கம் என்றும் அமெரிக்கர்கள் உலகமயமாக்கம் (Globalization) எனவும் குறிப்பிடுகின்றனர். பண்பாட்டு ஓரினவாக்கத்திற்கான இன்னொரு பெயராக McDonaldazation எனும் சொல் (துரித உணவுக்கு அடிமையாகும் (Fast Food) மக்கள் குழுவினரைக் குறிப்பதற்கு McDonaldization என்னும் சொல் கையாப்படுகின்றது) பயன்படுத்தப்படுகிறது" (Leuthold, Steven, M., 2011P: 18).

மக்கள் அவர்களுக்குத் தேவையான உணவை இயற்கையில் இருந்து பெற்றுண்ட, தாமே உற்பத்தி செய்துண்ட போது உணவு மக்களின் வாழ்வியல் தேவைகளைப் பூர்த்திசெய்யும் ஒன்றாகவும், சமூக நியமங்களைப் பேணுவதாகவும், பாதுகாப்புமிக்கதாகவும் இருந்தது. ஆனால், விநியோகஸ்தரிடம் இருந்து உணவைப் பெற்றுக் கொள்ளும் நிலை உருவாகும்போது உணவின் மூலம் மனிதன் தகவைத்திரு?த அத்தனை அம்சங்களும் செயலிழக்கின்றன. வர்த்தக நிறுவனங்கள் தமது உணவு விநியோகத்தை இலாபம் ஈட்டும் தொழிற்றுறையாக முன்னெடுப்பதற்கு மேற்கொள்ளும் தந்திரோபாயங்கள், மக்கள் நிலைப்பட்ட கேள்வியைப் பூர்த்திசெய்வதற்கு மேற்கொளளும் பிரயத்தனங்கள் உணவின் மூலம் அடையப்பட்ட ஆரோக்கியம் உள்ளிட்ட சமூக நலன்கள் பிரதானம் பெற்ற இடத்தில் "சுவை உணவு" என்னும் கருத்தாக்கத்தைப் பிரதானப்படுத்தியது.

சுவையுணவு என்னும் கருத்தாக்கம் கீழைத்தேச நாடுகளுக்கு காலனித்துவ ஆட்சியாளர்களினாலேயே அறிமுகப்படுத்தப்

படுகின்றது. அது உலகமயமாக்கச் சூழலில் மேலும் விரிவு படுத்தப்படுகிறது. இக்குறிப்பில் அடுத்து மக்கள் முன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இப்புதிய உணவு பண்பாட்டுடன் தொடர்புடைய அம்சங்கள் ஏற்படுத்தும் சமூகப் பாதிப்புக்கள் தொடர்பான பதிவு அவசியமானதாக உள்ளது.

பாதிப்புக்கள்

உணவு வர்த்தகப் பொருளானதுடன் பணப் பயிர் பொருளாதாரத் திட்டம் (Cash crop Economies) அமுகப்படுத்தப் படுகிறது. இதில் ஓரினப் பயிர் உற்பத்தி (Monocultures) பிரதானம் பெற்றதால் பாரம்பரிய விவசாயத்தில் "சேனைப் பயிர்ச்செய்கை" (Shifting Cultivation), "இடைநிலை வேளாண்மை" (Intermediate farming) ஆகியவற்றுக்கு வாய்பில்லாமல் போகிறது. இதனால் பாரம்பரிய விவசாயம் வழங்கிய நன்மைகள் இல்லாமல் போகின்றன. இது பொருளாதார ரீதியான நன்மைகளை மாத்திரமே நோக்காகக் கொண்டதால் சுற்றுச் சூழல் பாதிப்பு (எடுத்துக்காட்டாக இயற்கையில் காணப்பட்ட பல உணவுத் தாவரங்கள் அழிவுற்றன), பாரம்பரிய விவசாய உற்பத்தியின் வீழ்ச்சி என்பனவற்றுக்கு காரணமாக அமைகின்றது. இதனால் பல பருவகாலங்களில் கிடைக்கும் பழ வகைகள், காய், கறிகள் அழிவுற்றன. மேலும், காலனித்துவ ஆட்சியாளர் வர்தகப் பொருளாதார மையங்களான பெருந்தோட்டங்களில் சுதேசிகளை வேலைக்கமர்த்தியதால் அவர்களால் "வாழ்வாதார விவசாயம்" தன்னை மேற்கொள்ள முடியாத நிலையும் ஏற்படுகிறது. அத்துடன் வாழ்வாதாரத் தேவைகளுக்காக இன்னொரு தாப்பினரை மொத்தமாகச் சார்ந்திருக்கின்றனர் (Ken Albala, 2013:158). புதிய வாழ்க்கைச் சூழல் தேவையற்ற தேவைகளை தவிர்க்க முடியாத தேவைகளாக மக்களிடம் திணித்ததுடன் அத்தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக ஓய்வின்றி (Busy Life) உழைக்க வேண்டி ஏற்படுகிறது. இதன்போது அடிப்படைத் தேவையான உணவு பின்நிலைப்படுத்தப்படுகிறது.

வாழ்க்கை மாற்றத்தால் பாரம்பரியமாக கடைப்பிடிக்கப்பட்டு வந்த உணவுப் பழக்கத்தைக் கைவிட்டு மக்கள் புதிய உணவுப் பழக்கங்களுக்கு மாறுகின்றனர். இதனால் ஊட்டச்சத்துக் குறைபாடு, நோய்தாக்கம் ஆகியன அதிகரிக்கின்றன. உணவுப் பாதுகாப்பின்மை, உடல் ஆரோக்கியத்திற்குத் தேவையான

உணவைப் பெற்றுக் கொள்ளமுடியாமை போன்ற பாதிப்புக்கள் இதனால் ஏற்படுவதுடன் தொற்றாத நோய்களின் (Non-Communicable Diseases) அதிகரிப்பு பெரிய சமூகப் பிரச்சினையாக உருவெடுக்கின்றது. நீரிழிவு, பல்வேறு புற்றுநோய்கள், இரத்த அழுத்தம், இரத்தக் கொழுப்பின் அளவு அதிகரிப்பு ஆகியவை இந்நோய்களில் பிரதானமானவை (Permani C. Weerasekara and athor, 2018).

நகரமயமாக்கம், உலகமயமாக்கம் செல்வாக்கைச் செலுத்தத் தொடங்கும் போது, பாரம்பரிய உணவுப் பழக்கத்திற்கு ஒத்துப்போகாத வேறுபட்ட உணவுப் பழக்கத்திற்கு மக்கள் வழிநடத்தப்படுகின்றனர். புதிய உணவுப் பழக்கவழக்கங்கள் மேற்கத்திய உணவுப் பண்பாட்டைப் பிரதிபலிப்பதுடன் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களை அதிகளவில் உள்ளடக்கியிருந்தது. பாரம்பரிய உணவு விநியோக முறைக்கு மாற்றீடாக உருப்பெற்றுள்ள பல்பொருள் விற்பனைச் சந்தை வலையமைப்பு (Supermarket Chain) சர்வதேச தரநிர்ணயத்தைக் கொண்ட புதியதும் பதப்படுத்தப் பட்டதுமான உணவுகளை அறிமுகப்படுத்தியது. இது உலகமயமாக்கத்தின் விளைவாகும். பாரம்பரிய உள்ளூர் உற்பத்திகள் இதன்போது புறக்கணிக்கப்படுவதுடன் உள்ளூர் உற்பத்திகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலையும் ஏற்படுகின்றது.

உணவுப் பழக்கத்தில் ஏற்பட்ட மாற்றங்களால் காலங்காலமாக மக்களால் பின்பற்றப்பட்டு வந்த பாரம்பரிய உணவில் இருந்த ஆரோக்கியம், சமூக ஒற்றுமை, கூட்டுணர்வு போன்ற விடயங்களை மக்கள் தொலைத்துவிடுகின்றனர். எடுத்துக்காட்டாக, விசேட நிகழ்வை நடத்துவதற்காக உருவாக்கப்பட்ட பொது மண்டபத்தின் உருவாக்கம் சமூகங்களால் நடத்தப்படும் விசேட சமூக நிகழ்வுகளையும் அங்கு மேற்கொள்ளப்படும் உணவு விநியோகத்தையும் ஒரு வர்த்தக செயற்பாடாக மாற்றிவிடுகின்றது.

உலகமயமாக்கப்பட்ட உணவு வலையமைப்புக்கள் மூலம் விநியோகிக்கப்படும் பதப்படுத்தப்பட்ட உணவுகள் மிகப்பெரிய ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ளன என்றும் மக்கள் நம்புகின்றனர். எடுத்துச் செல்வது, உணவு தயாரிப்பது போன்றவற்றுக்கு இலகுவானது, பதப்படுத்தப்படாத

உணவுகளைவிட நீண்ட ஆயுளைக் கொண்டவை என மக்கள் நம்பினர். இவற்றில் பொறிக்கப்பட்டுள்ள தரநிர்ணய முத்திரை இந்நம்பிக்கைக்கான அடிப்படையாகும். இவற்றைவிட இந்த உணவுகளை உண்பதை சமூகத் தராதரங்களைப் பேணுமொன்றாகவும் மக்கள் கருதினர். இதனால் உள்ளூர் உற்பத்தியைத் தவிர்த்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களில் கூடுதலானளவு ஆர்வம் காட்டுகின்றனர்.

மக்கள் சுவையூட்டிகள், அதனை ஒத்த பிற உணவுப் பொருட்களுக்கு (Sauces, Tinned or Package Stuff, Soup Cubes, Chutneys) கூடுதலான பணத்தைச் செலவிடுகின்றனர். இவை இயற்கையில் இருந்து பெறப்படாத செயற்கைச் சுவையூட்டிகளை உள்ளடக்கியவை. இச்சுவையூட்டிகளின் அறிமுகம் உணவு வர்த்தகத்தை மேன்படுத்தும் திட்டத்தின் பாற்பட்டது. இயற்கை உணவில் இருந்து கிடைக்கும் உடல் ஆரோக்கியத்திற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை இவற்றில் எதிர்பார்க்க முடியாது. இதனுடன் தொடர்புடைய பிரச்சினைகளில் ஒன்றாகவே உலகமயமாக்கத்தின் விளைவாக துரித உணவுப் பழக்கத்திற்கும் அடிமையாதலைக் குறிப்பிடலாம். ஏனெனில், பொதுமைப்படுத்தப் பட்ட இந்த உணவு விநியோகம் ஓர் ஆர்வமாகப் (Passion) பார்க்கப்படுகிறதேயன்றி மக்களின் உடலியல் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை.

நவீன வாழ்க்கைச் சூழலில் குடும்ப அமைப்பில் ஏற்பட்ட மாற்றத்தால் பெண்களின் இடம் நிலைமாற்றம் பெறுகின்றது. நவீன சமூக அமைப்பில் பெண்ணின் பொருளாதார ஈட்டம் வாழ்க்கைச் செலவைச் சரி செய்ய அவசியமாகிறது. நிறை உணவை வழங்கும் நிறுவனமாகச் செயற்பட்ட வீட்டால் சமகாலத்தில் அதனை முழுமையாக வழங்க முடியாதுள்ளது. இதனைவிட நவீன சமூக அமைப்பிற்கு பாரம்பரிய குடும்ப மைப்பிற்குள் ஒட்டிக்கொண்டிருந்த உணவுப் பண்பாட்டை நவீன நுகர்வோர் சமூகத்தை நோக்கி நகர்த்தியதில் முக்கிய பங்குண்டு" (Michael Wacker, 2020:1-17). இதன்போது பணங்கொடுத்து உணவைப் பெற்றுக்கொள்ளும் கடைகள், துரித உணவு விற்பனை நிலையங்கள் போன்றன தோன்றுகின்றன. சமையல் நிபுணர்கள் (The Chefs) பாரம்பரிய சமையல் குறிப்புகளை மறுகட்டமைத்து மீண்டும்

உருவாக்குகிறார்கள், உணவை மகிழ்ச்சிக்கான பொருளாக மாற்றுகிறார்கள் (Paolo Corvo, 2015:25).

உலகமயமாக்கல் சூழலில் சுத்தமான குடிநீர் தொடர்பான பிரச்சினை மக்கள் எதிர்கொள்ளும் முக்கிய விடயமாக இன்று மாறியுள்ளது. பணம் செலுத்தி மக்கள் தாகம் தீர்பதற்காக நீரைப் பருக வேண்டிய நிலையை புதிய பல்தேசியக் கம்பனிகளின் நிர்விநியோகத் திட்டம் உருவாக்கியுள்ளது. இம்மாற்றத்தில் நீர் நஞ்சாதல் பற்றிய மக்கள் மத்தியில் நிலவும் அச்சம் கூடுதலான அளவு தாக்கம் செலுத்துகின்றது. நீர் நஞ்சாவதில் விவசாயத்தில் இரசாயன உரம், கிருமி நாசினிகளின் பயன்பாடு காரணமாக இருந்தாலும் நீர் நஞ்சாதல் பற்றி மக்கள் மத்தியில் உருவாக்கப்படும் கற்பிதங்களும் நீர் வியாபாரத்தில் பிரதானம் பெறுகின்றன. 17ஆம் நூற்றாண்டில் கண்டியரசனால் சிறைப்பிடிக்கப்பட்டு கண்டி கொண்டு செல்லப்பட்ட ரொபேட் நொக்ஸ்ஸின் நீரோடைகளில் நீர் அருந்திச் சென்றது பற்றிய வர்ணனை சுதேசிகளுக்குக் கற்பனைக் கதையாகவே இன்றுள்ள (ரொபர்ட் நொக்ஸ், 2020:215).

முடிவுரை

அனைத்து உயிரினங்களையும் போன்று மனிதனுக்கும் உணவு உயிரியல் தேவையாகப் பயன்பட்டது. மனித சமூகம் பண்பாட்டு மயப்படுத்தப்பட்ட பின்னர் உணவும் ஒரு பண்பாட்டுப் பொருளாக மாற்றமடைகின்றது. இம்மாற்றத்தின்போது பூர்வ நிலையிலிருந்து மனித சமூகம் கடைப்பிடித்து வந்த பல்வேறு நடைமுறைகளும் படிப்படியாக மாற்றமடைகின்றன. இம்மாற்றததில் காலனித்துவம், உலகமயமாக்கம் ஆகிய இரண்டும் முக்கிய பங்கு வகிக்கின்றன. இம்மாற்றத்தில் அடிப்படையானதாக உணவு உற்பத்தி, விநியோகம், நுகர்வு ஆகியன நிறுவனப்படுத்தப்பட்டு வர்த்தகப் பொருளாக மாறுவதுடன் உணவுடன் தொடர்புடைய அனைத்து விடயங்களும் பல்வேறுபட்ட சமூகப் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன.

உசாத்துணை

ரொபர்ட் நொக்ஸ். (2020). இலங்கைத் தீவுடன் ஒரு வரலாற்றுத் தொடர்பு. கொழும்பு: இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

ஸ்டீபன்,ஞா. (2010). தொல்காப்பியமும் இனவரைவியல் கவிதையும். சென்னை: நியூ சென்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.

Charles Darwin. (1997). On The Origin Of Species By Means of Natural Selection or The Preservation Of Favoured Races In The Struggle For Life. London: John Murray. First Edition 1859.

Ken Albala. (2013). Food: A Cultural Culinary History. America: The Teaching Company.

Michael Wacker. (2020). "History of eating habits, food cultures and traditions in Western Europe". Nutritional and Health Aspects of Food in Western Europe <https://www.sciencedirect.com/science/book/9780128131718> Nutritional & Health Aspect-Traditional&Ethnic Food. Elsevier Inc.

Permani C. Weerasekara and athor, (2018). "Nutrition Transition and Traditional Food Cultural Changes in Sri Lanka during Colonization and Post-Colonization". Foods. Published online: https://www.ncbi.nlm.nih.gov/pmc/articles/PMC6068551/. 7(7): 111.

Paolo Corvo. (2015). Food Culture, Consumption and Society. UK: Palgrave Macmillan.

Leuthold, Steven, M. (2011). Cross-Cultural Issues in Art: Frame for Understanding. New York: Routledge.

Folake Olukemi Samuel. (2016). "Food Cultures". Community Nutrition for Developing Countries. Canada: Athabasca University Press, Edmonton. (pp.47-53). https://www.researchgate.net/publication/341322093_Food_Cultures. P:48 <https://www.researchgate.net/publication/341322093_Food_Cultures.%20P:48>. <https://dictionary.cambridge.org/dictionary/english/food>, 06.03.2024.

17

சடங்கின் காட்சியமைப்பும் அதன் அணுகுமுறைகளும்: மட்டக்களப்பு களுமுந்தன்வெளி மாரியம்மன் சடங்கினை மையமாகக் கொண்ட ஆய்வு

காராளசிங்கம் அற்புதன்
ஆய்வாளர். இலங்கை. atputhan1902@gmail.com

ஆய்வு அறிமுகம்

சடங்கானது அதன் வழிபாட்டு முறையிலும் நிகழ்த்துகை முறையிலும் பல்வேறு ஆற்றுகை அம்சங்களையும் அழகியல் அம்சங்களையும் தனித்துவமாகக் கொண்டுள்ளது. இதற்குச் சான்றாக மட்டக்களப்பில் நிகழ்த்தப்படும் அனைத்து மதம் சார்ந்த, மதம் சாரா தமிழர் சடங்குகளையும் குறிப்பிடலாம். இருந்தும் தற்கால வளர்ச்சிற்கு ஏற்ப சடங்கிலும் மாற்றங்கள் நிகழ்வதனைக் காணமுடிகின்றது. காட்சியமைப்பின் முக்கிய விடயமாக அமைவது வடிவம் (Design). இவ் வடிவம் பல்வேறு வகைகளில் ஆற்றுகைகளில் வகைப்படுத்தப்படுகின்றது. இதனைப் பொருட்களின் வடிவமைப்பு, ஒளியமைப்பு, உடையமைப்பு, முகமூடியமைப்பு, கைப்பொருட்களின் வடிவமைப்பு, ஒப்பனை, கண்காட்சி, ஒலியமைப்பு என வகைப்படுத்தலாம். அரங்கில் இவை அத்துறை சார்ந்த கைதேர்ந்தவர்களினால் தனித்தனியே வடிவமைக்கப்பட்டு இயக்குனரின் உருவாக்கத்திற்கும் (Creation) கற்பனைக்கும் (Imagination) ஏற்ப ஒன்று சேர்த்து ஆற்றுகையாளனுடைய ஆற்றுகைக்கு வலுச்சேர்க்கின்றது.

ஒரு சடங்கினுடைய காட்சியமைப்பானது ஒரு சமூகத்தினுடைய பிரதிபலிப்பாகும். சமூகத்தினரே நிகழ்த்துபவர்களாகவும் பார்ப்போராகவும் ஆற்றுகையாளர் களாகவும் வடிவமைப்பாளர்களாகவும் காணப்படுவர். சடங்கில் காட்சியமைப்பானது ஆற்றுகையாளர்களுக்கு மாத்திரம் இன்றி

பார்வையாளர்கள், பக்தர்கள் உணர்வுகளோடு தொடர்புபட்டு அதனூடாக முற்றிலும் புனித இடமாக அந்த வெளி உணரப்படுகின்ற தன்மையினைக் காண முடிகின்றது. அதுமாத்திரமின்றி சடங்கில் இடம்பெறும் காண்பிய உரையாடல் (Visual dialogue) தனிச்சிறப்பு வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. ஒரு வெறுமை வெளியானது செயற்பாட்டு வெளியாக மாறுவதற்குக் காட்சியமைப்பு சடங்கில் முதன்மையானதாகக் காணப்படுகின்றது. சடங்கில் நிகழ்வுகள் தொடங்குவதற்கு முன்பே உள உடல் ரீதியான மாற்றத்தினை ஏற்படுத்தும் தன்மையினைச் சடங்குக் காட்சியமைப்புக்கள் கொண்டுள்ளன. இங்கு பொருட்கள் (Set & Materials) ஒளி (lights) உடையமைப்பு (Costumes) கைப்பொருட்கள் (props) முக அலங்காரம் (masks) சொற்கள் (text) சத்தம் (sound) இசை (music) நறுமணம் (smell) போன்ற பல தொட்டு உணரக்கூடிய, தொட்டு உணர முடியாத அம்சங்கள் சடங்கின் காட்சியமைப்பில் தனித்துவமாக வெளிப்படுவதனைக் காணமுடியும்.

வடிவமைப்பாளர் வடிவமைப்புக்களில் தான் நினைத்த விடயங்களைக் கொண்டுவருவதற்கு மிகுந்த ஈடுபாடு கொள்கின்றார். இதனைச் சிறந்த ஆற்றல் வளம் எனக் கூற முடியும். தூண்கள், மரத்தளபாடங்கள், பொருட்கள் ஆகியன அந்த வடிவமைப்பில் முக்கியம் பெறுகின்றன. இவற்றை ஒரு முன்மாதிரியாகவே கொள்ள முடியும். ஆனால், உண்மை என்னனெ;றால் இந்தப் பொருட்கள் வெளியினை வரையறுக்கின்றன. இங்கு ஓர் அதிர்வு ஏற்படுகின்றது. இதனூடாகத் தூண்டுதல் நிகழ்கிறது (Satyabrata Rout,12021, ப. 21).

களுமுந்தன்வெளி மாரியம்மன் சடங்கும் தனக்கான காட்சியமைப்பையும் அணுகுமுறைகளையும் கொண்டுள்ளது. மக்கள் அவர்களுடைய வாழ்க்கைக் கண்ணோட்டத்திற்கமைய சடங்கு நிகழும் வெளியினைக் காட்சிப்படுத்துகின்றனர். இது அந்தச் சமூகத்தின் அறிவு சார்ந்தும் அனுபவம் சார்ந்தும் உணர்வு சார்ந்தும் இடம்பெறுகின்றது. இதனூடாக அந்தச் சமூகத்தினுடைய அறிவாற்றல், அனுபவம், பண்பாட்டு ரீதியாகக் கடத்தப்படும் முறை ஆகியவற்றை விளங்கிக்கொள்ள முடியும்.

சடங்கின் காட்சியமைப்பினை விளங்கிக்கொள்ளல்

மட்டக்களப்பில் வழிபடப்படும் தெய்வங்களை சிறு தெய்வங்கள் மற்றும் பெரும் தெய்வங்கள் என்று வேறுபடுத்தி நோக்கலாம். சிறு தெய்வ வழிபாட்டு முறையில் மாரியம்மன், பேச்சியம்மன், பத்திரகாளியம்மன் அதே போன்று வீரபத்திரர், வைரவர், நாகதம்பிரான் போன்ற பல தெய்வங்களைக் குறிப்பிடலாம்.

பாரம்பரிய சடங்கின் காட்சியமைப்பானது அரங்குக் காட்சியமைப்பிலிருந்து மாறுபட்டதாகவே காணப்படுகின்றது. பொதுவாக காட்சியமைப்பு எனும்போது காண்பிய அம்சங்களை ஒருங்கிணைத்துக் கூறுவதாகக் கொள்ளப்படுகின்றது அதாவது வெறுமை வெளியில் (Empty Space) காட்சிப்படுத்தப்படும் பொருட்கள் (Empty Space) தொடக்கம் உடை ஒளி, ஒலி வாசனைப் பொருட்கள், வர்ணங்கள் வரை சடங்கின் காட்சியமைப்பில் ஆதிக்கம் செலுத்துவது மாத்திரமின்றி அரங்கக் காட்சியமைப்பிலிருந்து மாறுபடும் தன்மையினையும் காணலாம். சடங்கினை நிகழ்த்தும் சமூகம் சடங்கு வெளியினை சடங்கின் தன்மைக்கும் பண்பிற்கும் கருவிற்கும் ஏற்பக் கட்டி எழுப்புகின்றனர். இக்காட்சியமைப்பானது ஆற்றுகைக்கு முன், ஆற்றுகை, ஆற்றுகைக்குப் பின் எனப் பலதரப்பட்ட வகிபங்கினை வகிக்கின்றது.

தமிழ் மந்திரங்களால் உடுக்கு, தவில் வாத்தியங்கள் ஒலிக்க பூசை செய்து உருக்கொள்வோர்மீது தேவதைகளை ஏற்றி ஆடச்செய்து அதாவது தெய்வமாடுவோர் ஆவேசம் கொண்டு ஆடத்தக்கதான சூழ்நிலையினை மந்திரங்களாலும் காவியப்பாடல்களாலும் உடுக்கை முதலியவற்றாலும் உண்டாக்கி வைப்பர் (கந்தையா.வி.சி, 1983 ,ப 137). தெய்வமாடுவோர் ஆவேசம் கொண்டு ஆடத்தக்கதான சூழ்நிலையினை உண்டாக்கி வைப்பர் எனும் போது இங்கு சடங்கினை நிகழ்த்துவதற்கான சூழல் பல வழிகளில் உருவாக்கப்படுகின்றது என்பது புலனாகின்றது இதில் சடங்குச் சூழலை உருவாக்கும் முதன்மை அம்சமாகக் காட்சியமைப்பை இன்றைய சூழ்நிலையில் உணர முடிகின்றது.

சடங்கு என்பது வாழ்வியல் குறியீட்டு அம்சங்கள், பொருத்தமான நடத்தை முறைகள் ஊடாக தன்னார்வமாக

சமூகங்களால் நிகழ்த்;தப்படும் ஆத்மீகமான செயல்வடிவமாகும். இச்சடங்கானது செயற்பாடுகளை அனுபவ வழியில் அறிவது . இதனால் ஒவ்வொரு சடங்குக்கும் ஒரு தனித்த பங்கு, பண்பு, செயல், காரண காரியம் உண்டு என்ற வகையில் ஒவ்வொரு சடங்கும் தனித்த தன்மையினைக் கொண்டது. 'புராதன வெறியாட்டு வழிபாடுகள் இன்றும் உயிர்த்துடிப்புடன் நடத்தப்படுகின்றன' (மௌனகுரு. சி, 2014:28) என்கின்றார். இதனூடாக இன்றும் தனிச்சிறப்புடனும் பாரம்பரியத்துடனும் சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன எனக் கருத முடியும். இது காட்சியமைப்பிலும் செல்வாக்குச் செலுத்தலாம். இருந்தும் தற்காலச் சூழலையும் சடங்கில் காட்சியமைப்பு உள்வாங்கியுள்ளமையினைக் காணலாம்.

பாமேலா கோவட் கூறும் போது வெளி, உரையாடல், ஆய்வு, கலை, ஆற்றுகையாளர், பார்ப்போர் இவற்றின் உண்மைத்தன்மை காட்சி உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்கின்றது என்கின்றார். சடங்கானது கிராம மக்களினால் நிகழ்த்தப்படுவது. இங்கு நிகழ்த்துகையாளர்கள், ஆற்றுகையாளர்கள், பார்ப்போர், வடிவமைப்பாளர்கள் எனப் பலர் மறைமுகமாகச் செயற்படுகின்றனர.;

திருமலை சுந்தாவின் கருத்திற்கமைய 'எல்லாச் சடங்குகளுக்கும் அவற்றிக்கெனத் தனித்தனியே பல சமயச்சடங்குகள் இருப்பதனை நாம் அறிவோம் (திருமலை சுந்தா, 2007, ப 321). இத்தனித்தன்மை சடங்கின் வெளியிலும், அமைப்பிலும் தாக்கம் செலுத்துகின்றது. சடங்கின் காட்சியமைப்பில் புலக்காட்சி மாத்திரமின்றி புல உணர்வுகளாலும் உணரக்கூடிய தன்மை முக்கியமானதாகும். இதனைத் தனிச்சிறப்பு எனக் கூற முடியும். அரங்கக் காட்சியமைப்பினை ஆற்றுகை இடம்பெற்றுக்கொண்டு இருக்கும்போது தொட்டு உணர்ந்து அதன் அனுபவத்தினைப் பெறுவது மிகக் குறைவு. ஆனால், சடங்கில் ஆற்றுகையாளனைத் தாண்டி பார்ப்போரும் ஆற்றுகையாளர்கள் என்ற நிலைக்குள் செல்கின்ற தன்மையினைக் காணமுடிகின்றது. நிகழ்த்துவோர், ஆற்றுவோர், பார்ப்போர் சம வெளித்தளத்திலே தங்களுக்கான பங்கினை வகிக்கின்றனர்.

நறுமண நுகர்வு சடங்கோடு பிணைந்த புதிய அனுபவத்தினைத் தருவதோடு தண்ணீர் தெளித்தல், தீர்த்தம் குடித்தல், பொட்டு,

சந்தனம், குங்குமம் வைத்தல், பிரசாதம் உண்ணல் போன்ற பல செயற்பாடுகள் காட்சியமைப்போடு தொடர்புடையதாகவும் வலுச்சேர்ப்பதாகவும் அமைகின்றது. இது மாத்திரமின்றி ஆற்றுகையாளர்களின் பணிகளைப் பக்தர்களான பார்ப்போர் இணைந்து நிகழ்த்துவதும் சிறப்பிற்குரியது. உதாரணமாக, தீப் பாய்தல், சாட்டை அடித்தல், ஊர் சுற்றல், தீர்த்தம் ஆடுதல் எனப் பலவற்றைக் கூறமுடியும். இவை காட்சியமைப்பின் ஒரு பகுதியாகவே சடங்கில் காணப்படுகின்றன.

மட்டக்களப்பு மாரியம்மன் கோயிற் சடங்குகளில் பாடல்கள், கதைகள், வரலாறுகள் காட்சியமைப்பிற்கு மிகவும் துணைபுரிகின்றன. தாலாட்டு, அம்மானை, அகவல், ஊஞ்சல் பாடல், குளுர்த்தி போன்ற பல பாடல்கள் காட்சியமைப்பை விரிவுபடுத்துகின்றன. எட்வார்ட். பி. டைலர் பண்பாட்டை வரைவிலக்கனப்படுத்தும் போது பண்பாடு என்பது நம்பிக்கை, கலை, நெறிமுறை, கூட்டம், பழக்கவழக்கங்கள் இவையெல்லம் சேர்ந்தவை எனக் குறிப்பிடுகின்றார். அதேபோன்று மாலினோஸ்கி மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ மனிதத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் பொருட்கள், சாதனங்கள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றின் ஒன்று சேர்க்கையே பண்பாடு என்கின்றார். அதுமாத்திரமின்றி ஜுபர், பண்பாடு பற்றிக் குறிப்பிடும்போது அறிவு, மனப்பான்மை, பொருட்கள் என்பவற்றை உள்ளடக்கியதெனவும் இவையெல்லாம் தலைமுறை தலைமுறையாகப் பகிர்ந்துகொள்ளப்பட்டு வருவது எனவும் கூறுகின்றார் (தில்லைநாதன். எஸ், 2008, ப. 10-12). மேற்கூறப்பட்டவர்களின் கருத்துக்களின்படி பொருட்கள் பண்பாட்டின் கூறாக கொள்ளப்படுகின்றன. எனவே, இந்தப் பொருட்களின் பயன்பாடு என்பது அந்தந்த சமூகத்தின் வாழ்க்கை முறையில் முக்கியம் பெறுகின்றது. அந்தவகையில், அவர்கள் நிகழ்த்துகின்ற சடங்கிலும் தாக்கம் செலுத்துகின்றது. ஆகவே, சடங்கில் இப்பொருட்கள் காட்சியமைப்பிற்கான கூறுகளாகவே அமைகின்றன.

ஆய்வுப் பிரச்சினை

காட்சியமைப்பு பற்றி அரங்கில் நுணுக்கமான ஆய்வுகள் இடம்பெற்ற போதிலும் பாரம்பரியமான வழிபாட்டு முறைகளோடு

தொடர்புடைய மட்டக்களப்புச் சடங்கின் காட்சியமைப்பு சார்ந்து ஆய்வுகள் இடம்பெறாமை ஆய்விற்கான இடைவெளியாகக் காணப்படுகின்றது. சடங்கின் காட்சியமைப்பானது அத்துடன் ஏன் தனித்துவமானதாகக் காணப்படுகின்றது, சடங்கின் காட்சியமைப்பு ஏனைய அரங்கக் காட்சியமைப்பிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது, தனித்துவத்திற்கான முக்கிய அம்சங்கள் யாவை ஆகியற்றை ஆய்வுப் பிரச்சினையாகக் கொள்ளமுடிகின்றது

கருதுகோள்

சடங்கின் காட்சியமைப்பானது தனித்துவமானதும் தனிச்சிறப்பு வாய்ந்ததுமாகும். இது அரங்கக் காட்சியமைப்பிலிருந்து வேறுபடுகின்றது.

ஆய்வு முறையியல்

விளக்கமுறையியல் (Exploratory method) இவ்வாய்வில் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாய்வில் பண்புசார் ஆய்வு முறையியல் (Qualitative research design) எனும் ஆய்வு நுணுக்கம் பின்பற்றப்படுகிறது. நேர்காணலும் (Unstructured Interview) குறிப்பிட்ட குழுவினருடனான கலந்துரையாடலும் (Group discussion) ஆய்வுக்கான கருவிகளாகப் (Research tools) பயன்படுத்தப்படுகின்றன. பண்புசார் அடிப்படையில் தகவல்கள் ஆராயப்படுகின்றன. பண்புசார் ஆய்வின் அடிப்படையில் பரிந்துரைகளும் முடிவுகளும் பெற்றுக்கொள்ளப்படும். இவ்வாய்வின் முதலாம் நிலைத்தரவாக பங்குபற்றல், அவதானம், நேர்காணல் என்பனவும் இணையம், வெளியீடுகள், சஞ்சிகைகள், புத்தகங்கள், பத்திரிகைகள் இரண்டாம் நிலைத் தரவாகவும் அமைகின்றன.

ஆய்வின் நோக்கம்

சடங்கின் காட்சியமைப்பினை ஆராய்ந்து கண்டறிதல், சடங்கின் காட்சியமைப்பு ஏனைய காட்சியமைப்பிலிருந்து வேறுபடுமாற்றினை அடையாளப்படுத்துதல், சடங்கின் காட்சியமைப்பினைக் கையாளும் விதத்தினை ஆராய்தல், சடங்கின் காட்சியமைப்பினை அரங்கில் பயன்படுத்துவதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்து பயன்டுத்தல் அதற்கான முக்கியத்துவத்தினைத் தற்காலத்தில் வழங்குதல், சடங்கின்

காட்சியமைப்பில் பல்வேறு விதமான ஆய்வுகளை மேற்கொள்ளத் தூண்டுதல் ஆகியவற்றை இவ்வாய்வு நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

கலந்துரையாடலும் முடிவும்

சடங்கானது தனக்கான காட்சியமைப்பினைத் தனித்துமாகக் கொண்டுள்ளதுடன் அதனூடாக வழிபாடுகளை முன்னெடுக்கவும் வலுப்படுத்தவும் முனைகின்றது. அந்தவகையில், சடங்கின் காட்சியமைப்பிற்குப் பல்வேறு அம்சங்கள் துணை புரிகின்றன. சடங்கில் பயன்படுத்தப்படும் சடங்கோடு தொடர்புடைய காட்சிப்பொருட்கள், கைப்பொருட்கள், உடை, ஒப்பனை, ஒலி, ஒளி, வர்ணங்கள் போன்ற பல கூறுகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவை பயன்படுத்தப்படும் சடங்கு வெளிக்கும் சூழலுக்கும் ஏற்ப மாறுபடும் தன்மையினைச் சடங்கில் காணமுடிகின்றது.

சடங்கின் காட்சி அணுகுமுறையானது தனித்தன்மை கொண்டது. சடங்கின் காட்சியமைப்பானது ஆற்றுகைக்காக மாத்திரமின்றி அதைத் தாண்டி அச்சூழலில் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் தன்மை கொண்டது. இங்கு காட்சியமைப்பானது ஆற்றுகையோடு மாத்திரம் நின்றுவிடுவதல்ல. பிரதான ஆற்றுகை இல்லாத போதும் அதனுடைய வகிபங்கினைச் சடங்குக் காட்சியமைப்பு நிறைவேற்றிக் கொண்டே இருக்கின்றது. அதாவது சடங்கின் காட்சியமைப்பானது பிரதான சடங்கில் மாத்திரமன்றி பூசைகள் முடிந்த பிற்பாடும் அடுத்தநாள் பிரதான சடங்குவரை பார்ப்போர் அல்லது பக்தர்களுக்கு சடங்குச் சூழலினை (ritual environment) ஏற்படுத்திக்கொண்டே இருப்பதனைக் காணலாம்.

சடங்கின் காட்சியமைப்பில் பாணியினை ஒரு வரையறைக்குள் கொண்டுவருவது கடினமாகும். மக்கள் அல்லது சமூகம் தங்களுக்கான சொந்தச் செயன்முறைகளூடாக காட்சியமைப்பை வெளிப்படுத்துகின்றனர். வாழ்க்கையின் சில பிரசன்னத்தை சடங்கின் காட்சியமைப்பில் கொண்டுவருவதும் சடங்கின் கருவையும் சூழலையும், பண்பினையும் காட்சியம்சங்களினூடாக பிரதிநிதித்துவப்படுத்துவதும் சடங்கின் காட்சியமைப்பில் காணலாம். இதனை Representational style எனக்கூறுவர். அதேபோன்று வாழ்கைப் பிரதிநிதுத்துவமல்லாத வெளிப்பாடுகளை

Non- representational style எனும் தன்மையினையும் சடங்குக் காட்சியமைப்பு தன்னகத்தே கொண்டுள்ளமையினைக் காணலாம். இதில் வர்ணங்கள், கோடுகள் ஆகியன முக்கியப்படுத்தப் படுகின்றன.

சடங்கில் விளக்கக்காட்சிப் பாணி (Presentational style) எனப்படும் காட்சி முறையானது வெளிப்படுவதனைக் காணலாம். இது கோடுகள், வர்ணங்கள், வடிவங்கள் போன்றவற்றின் பிரசன்னத்துடன் ஆற்றுகையாளனின் பிரசன்னமும் இணையும் தன்மையினைக் கொண்டது. அரங்கத்தன்மையுடன் கூடிய பாணி இதிற் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஒரு சமூகத்தின் பண்பாட்டுமுறையினையும் அழகியலையும் புரிந்துகொள்ள சடங்கு ஓர் முக்கிய அம்சமாகக் காணப்படுகின்றது. உண்மையான வாழ்க்கைத்தன்மையினைப் பிரதிபலிக்க முயற்சிக்கின்றது. உண்மைத்தன்மை, நடத்தையூடாக அல்லது செயற்பாட்டினூடாகக் கட்டியெழுப்பப்படுகின்றது. இது பார்ப்போர் அல்லது பக்தர்களுக்கு நம்பும் உணர்வைக் கொடுக்கின்றது. இதனை Pictorial or realistic design எனக் கூறுவர்.

சடங்கின் காட்சியமைப்பில் குறியீடு அல்லது குறிப்பாகத் தெரிகின்ற வடிவமைப்பு (Symbolic or Suggestive Design) காணப்படுகின்றது. இது குறியீடுகளினால் பிரதிநிதித்துவப் படுத்துவது ஆகும். முக்கியமான அம்சங்களைத் தேர்ந்தெடுத்து சடங்கு வெளியைக் காட்சிப்படுத்த பயன்படுத்துகின்றன. இத்தன்மை சடங்கில் காணப்படுகின்றது. இந்த அணுகு முறையூடாக மெய்மை சார்ந்த தன்மைகளை குறியீடுடாக வெளிப்படுத்துவதனைக் காணலாம்.

சடங்கு, குறியீடு அல்லது குறிப்பாகத் தெரிகின்ற காட்சியமைப்பைத் தவிர துண்டு துண்டான (Fragmental) காட்சியமைப்பினை வெளிப்படுத்துகின்றது. ஒரே கதையில் வரும் காட்சிகள் வெவ்வேறு இடங்களில் காட்சிப்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இங்கு காட்சியமைப்பு மாத்திரமின்றி கதையும் துண்டு துண்டாக நிகழ்த்தப்படுகின்றமையைக் காணலாம். இதனூடாக அழகியல் வெளிப்பாடு சிறப்பாக வெளிப்படும் தன்மையினைக் கூறலாம்.

சடங்கின் காட்சியமைப்பில் பரந்துபட்ட சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன. ஒரே நேரத்தில் நான்கு பக்கப் பார்வையாளர்கள் அல்லது வட்ட வடிவில் இருந்து பார்க்கும் தன்மை மாத்திரம் இன்றி பார்வையாளர்களின் திசைக்கேற்ப காட்சியமைப்பு தனது பங்கினை முற்று முழுதாகப் பார்வையாளர்களின் சுவை, உணர்விற்கு ஏற்ப அளிக்கின்ற தன்மையினைக் காணலாம். இங்கு வெளிப்படைத்தன்மையினைக் காணமுடியும். சடங்கில் உணர்வைக் கடந்து. ஆழ்மனதில் கற்பனை உலகத்தை ஆராயும் தன்மை கொண்டது. அதாவது, உணர்விற்கு அப்பால் (Unconscious mind) தோன்றும் கற்பனைத்தன்மை உள்மனதூடாக ஒன்றைப் புரிந்துகொள்ளும் தன்மையினைக் குறிப்பிடலாம். இதனைச் சடங்குக் காட்சியமைப்பில் உணர முடிகின்றது. இது பார்ப்போருக்கு மாத்திரமின்றி ஆற்றுகையாளர்களுக்கும் பொருந்தக்கூடியது.

இவ்வாய்வின் ஊடாக சடங்கின் காட்சியமைப்பினை நோக்கும்போது காட்சியமைப்பானது தனித்துவமானதாகவும் உணர்வு ரீதியாகவும் அழகியல் ரீதியாகவும் தனது சொந்த அணுகுமுறையினைக் கொண்டும் காணப்படுகின்றது. ஏனைய அரங்கக் காட்சியமைப்பிலிருந்தும் கண்காட்சியிலிருந்தும் வேறுபட்டுத் தனித்துவ அம்சங்களுடன் காணப்படுகின்றது. காட்சியமைப்பில் வெளி, பொருட்கள், உடை. ஒப்பனை, வர்ணங்கள், ஒளி, ஒலி, கண்காட்சி போன்ற பல அம்சங்கள் காணப்பட்டாலும் இவை தனக்கான தனிப்பண்புகளையும் தனித்துவத்தினையும் கொண்டு தனக்கான பணியினை முற்றுமுழுதாக நிறைவேற்றுகின்ற தன்மையினைக் காணலாம்.

உசாத்துணை

கந்தையா,வி,சீ. (1983). மட்டக்களப்புச் சைவக் கோயில்கள் 1, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

சுகந்தி சுப்பிரமணியம். (2006). மட்டக்களப்பு மாவட்டக் கிராமிய வழிபாட்டுச் சடங்குகளும் அவை தொடர்பான பாடல்களும், இலண்டன் தமிழ் இந்து மன்றம்.

திருமலை சுந்தா. (2007). சடங்கு, அம்மன் பதிப்பகம்.

தில்லைநாதன், எஸ். (2008). மட்டக்களப்புக் கோயில்களும் தமிழர் பண்பாடும், எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், மட்டக்களப்பு.

நடராசா. தி.ஙீ.சி.(1980). மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்க்கையும், இந்து வாலிப முன்னணி, மட்டக்களப்பு.

மௌனகுரு,சி. (2014). மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள், குமரன் பதிப்பகம்.

Satyabrata Rout,(2012) Understanding scenography, Niyogi Books, New Delhi.

நேர்காணல்

திருச்செல்வம், வ., தலைமைக் குரு, வயது 42, களுமுந்தன்வெளி

கோவர்த்தனன், உ., விவசாயம், வயது 20, களுமுந்தன்வெளி

யோகநாதன், ஆ., விவசாயம், வயது 52, களுமுந்தன்வெளி

காளி, தெய்வமாடுபவர், வயது 54, களுமுந்தன்வெளி

18

சைவசித்தாந்தத்தில் ஆன்மாவின் பயணமும் அதனை மேம்படுத்துவதற்கான புரிதல்களும் - ஓர் ஆய்வு

கே. தவசீலன்
கலாநிதிப் பட்ட ஆய்வாளர், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
Sri Lanka.seelank900@gmail.com

பேராசிரியர் S. கேசவன்
இந்து நாகரிகத்துறைப் பேராசிரியர் , கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
Sri Lanka.kesavans@esn.ac.lk

ஆய்வு அறிமுகம்

இந்திய மெய்யியல்கள் அனைத்திற்கும் இறுதி நிலைப்பட்டதாக சைவசித்தாந்தம் விளங்குகின்றது. இது பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் உண்மைகளைக்கூறி திரிபதார்த்த நிச்சயமாய், சைவத்தின் முடிந்த முடிவாய் அமைந்து காணப்படுகிறது. சைவசித்தாந்தம் தனக்கான தோற்றத்தினை வேதகாலத்திலிருந்து கொண்டிருந்தாலும்கூட தெளிவான கருத்தமைவுகளை பன்னிரு திருமுறைகளிலே கொண்டு விளங்குகின்றது. அதனைத் தொடர்ந்து சோழர் காலத்தில் எழுதப்பட்ட மெய்கண்ட சாத்திரங்களின் அடிப்படையில் சைவசித்தாந்தம் ஒரு முழுமை பெற்ற கோட்பாடாக நிலைத்து நிற்கிறது. சைவசித்தாந்தத்தின் முக்கிய அம்சங்களுள் ஒன்றாக 'ஆன்மா' காணப்படுகிறது. ஆன்மா என்பது சைவசித்தாந்தத்தில் பசு என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. இதன் பயணமானது விடுதலை நோக்கியதாகும். ஒவ்வொரு மானிடப்பிறவியும் உலகியல் வாழ்வினை எவ்வாறு வாழ வேண்டும் என்பதனை அறியாமல் பல இன்னல்களைத் தினம்தினம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. அதில் இருந்து விடுதலை பெறுவதற்கு ஒவ்வொரு மானிடப்பிறப்பும் எவ்வாறு பயணிக்க வேண்டும் என்பது பற்றிய புரிதல்களை மேம்படுத்துவதே இக்கட்டுரையின்

முக்கிய நோக்கமாகும். எனவே, சைவசித்தாந்தத்தில் காணப்படுகின்ற ஆன்மாவின் பயணம் குறித்த கருத்தமைவுகளைப் பகுப்பாய்வு செய்வதன் மூலமாகத் தற்கால வாழ்வினைச் செம்மையாக வாழ்வதற்கான புரிதல்களை ஏற்படுத்தும் வகையில் இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகிறது.

ஆய்வு நோக்கம்

சைவசித்தாந்த அடிப்படை நூல்களில் இழையோடியுள்ள ஆன்மாவின் பயணம் குறித்த கருத்தமைவுகளைப் பகுப்பாய்வு செய்வதன் மூலமாக தற்காலத்தில் இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் சமுதாயத்திற்கு ஆன்மாக்களின் பயணம் எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றிய புரிதல்களை மேலும் துலங்கச் செய்து அதன்வழி அவர்களது வாழ்வியலை செம்மைப்படுத்தல் இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஆய்வுப் பிரச்சினை

சைவசித்தாந்த மெய்யியல் ஆன்மாவின் பேரின்பப் பெருவாழ்விற்கு வழிகாட்டியாக இருக்கின்ற போதிலும் உலகியலில் வாழ்கின்ற மனிதர்கள் பல இன்னல்களை அனுபவிக்கின்றனர். இந்நிலையில், அதற்குரிய காரணத்தைக் கண்டறிவதே இவ் ஆய்வின் பிரச்சினையாக அமைகிறது.

ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது முதன்மைத் தரவுகளாக மெய்கண்ட சாத்திரங்களையும், இரண்டாம் நிலைத் தரவுகளாக சைவசித்தாந்த ஆன்மா மற்றும் அதன் போக்கு தொடர்பாக வெளிவந்த நூல்கள், கட்டுரைகள் போன்றவற்றைக் கொண்டும் கட்டமைக்கப்படுகிறது. அடிப்படையில் இது விபரண ஆய்வாகவே அமைகிறது. பொருத்தமான சந்தர்ப்பங்களில் வரலாற்று ஆய்வு முறையும் பகுப்பாய்வு மற்றும் ஒப்பீட்டு ஆய்வு முறையியலும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆய்வின் எல்லை

சைவசித்தாந்த அடிப்படை நூல்களில் காணப்படுகின்ற ஆன்மா பற்றிய விடயங்களை மாத்திரம் ஆய்வு எல்லையாகக்கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

ஆய்வுப் பெறுபேறும் கருத்துரையும்

ஆன்மாக்கள் பாலினமற்றது. சாதி மதம் அற்றது. இந்த ஆன்மா ஓர் உடலைப் போர்த்திக்கொள்ளும் போதுதான் அது பாலினமுள்ள பல பிறவிகள் ஆண்பாலாகவும் பெண்பாலாகவும் பிறப்பெடுத்து பரம்பொருளைச் சென்றடைகிறது. அநாதிப்பொருளான ஆன்மாவானது தான் செய்த வினையின் காரணமாக துன்பச்சக்கரத்தில் உழன்றுகொண்டிருக்கின்றது. இவ்வாறு துன்பத்தில் இருக்கின்ற ஆன்மாவின்மீது இரக்கம் கொண்டு இறைவன் தனு, கரண, புவனங்களைப் படைத்து ஆன்மா செய்த வினைகளுக்கேற்ப மனிதனாகவோ மிருகமாகவோ பறவையாகவோ மரம், செடி, கொடியாகவோ உருப்பெற்று அதற்குரிய பலன்களை அனுபவித்துப் பிறவியில் இருந்து விடுபட்டு விடுதலையாகிய இறை திருவடியை அடைவதற்காக அவற்றோடு ஆன்மாவை இறைவனே கூட்டிவைக்கின்றான்.

ஆன்மா பயணிக்கும் எல்லாப் பிறவிகளிலும் மனிதப்பிறவி சிறந்தது. மனிதப்பிறவி அடைந்தவுடன் சிந்தனைக்கு ஏற்ப நடக்கக்கூடிய சுதந்திரம் ஆன்மாவிற்குக் கிடைக்கிறது. இந்த மனிதப்பிறவியில் துன்பங்களுக்கும் இன்பங்களுக்கும் மாறி மாறி உட்படுத்தப்படுகிறது. ஆன்மா அதனுடைய பற்றுக்களைக் கொஞ்சம் கொஞ்சமாகத் துறக்கக் கற்றுக்கொள்கிறது. அனுபவத்திற்கு ஏற்ப ஆன்மா விழித்துக்கொள்கிறது. நம் உடல் வெறும் ஒரு சட்டை. நமது உடைமைகளும் உறவுகளும் எவையும் எமக்குச் சொந்தமில்லை என்றும் சீக்கரமே அழிந்துவிடும் என்றும் புரிந்துகொள்கிறது. எல்லா உயிரினத்தோடும் அன்பு செலுத்தத் தொடங்கி விடுகிறது. நான் யார்? நான் ஏன் இங்கே பிறந்தேன்? நான் எதற்காகப் பிறந்தேன்? நான் எங்கே போய்ச் சென்றடைவேன்? நான் தாயா? தந்தையா? மகனா? மனைவியா? கணவனா? இப்படி எந்த உறவிற்கும் நாம் பொருந்தாது போலும் என்று ஆண் பெண் பாகுபாடு இன்றியும் சிந்திக்கத் தொடங்கி விடுகிறது

சைவசித்தாந்தம் இறைவனடி சேர்தலையே ஆன்மாவின் பயணத்தின் இறுதி இலக்காக எடுத்தாளுகின்றது. ஆன்மாவின் பயணத்தின் இலக்கை அடைவதற்குரிய வழிகளாக சைவநாற்பாதங்களையும் குரு, இலிங்க, அடியார் வழிபாடு சார்ந்த

பயணங்களையும் மேற்கொள்ள வேண்டுமென சைவசித்தாந்தம் சுட்டியுள்ளது. அந்தவகையில், ஆன்மாவானது இறைவன் திருவடியே எமக்குப் பேரின்பம் தரவல்லது என்பதனை உணர்ந்து ஒவ்வொரு ஆன்மாவும் இறைவனை நோக்கிப் பயணிக்குமாயின் விடுதலை சாத்தியமாகும் என்பதனை விபரிப்பதாக இவ்வாய்வு அமைகிறது.

தொகுப்புரை

மேற்படி ஆய்வின் வழி சைவசித்தாந்தம் குறிப்பிடும் ஆன்மாவின் பயணமானது தனது விடுதலையை நோக்கியதாக அமைந்திருக்கின்றது எனவும் அதற்குரிய வழிகளாக சரியை, கிரியை, யோகம், ஞானம் முதலிய நால்நெறிகளையும் குரு, இலிங்க, சங்கம வழிபாட்டு முறைகளையும் அத்தோடு இறைவன் நினைவை எப்பொழுதும் நினைவுபடுத்தக்கூடிய விபூதி, உருத்திராக்கம் அணிதல், பஞ்சாட்சர மந்திரம் செபித்தல், அகப்பூசை செய்தல் முதலிவற்றையும் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் குறிப்பிடுகிறது. இதனை ஒவ்வொரு ஆன்மாவும் புரிந்து சிறப்பாகச் செய்து வருவதன் மூலம் இன்னல்களில் இருந்து விடுபட்டுப் பேரின்பத்தைத் தருவதாகிய இறை திருவடியை அடையலாம் என்பதனைச் சைவசித்தாந்தம் வெளிப்படுத்தி நிற்கிறது. ஆகவே, ஆன்மாவின் பயணம் சைவசித்தாந்தம் குறிப்பிடுவது போல இறைவனை நோக்கி அமையுமாக இருந்தால் துன்பம் துளியும் இல்லாத பேரின்பப் பெருவாழ்வை அடையமுடியும் எனலாம்.

உசாத்துணைகள்

ஞானகுமாரன், நா., (2012). சைவசித்தாந்தத் தெளிவு, தூண்டி வெளியீடு, யாழ்ப்பாணம்.

கலைவாணி இராமநாதன், (1998). சைவசித்தாந்த மெய்ப் பொருளியல், கார்த்திகேயன் பிறைவேட் லிமிட்டெட், கொழும்பு.

செல்வமனோகரன், தி., (2017). காஷ்மீர சைவமும் சைவசித்தாந்தமும், சேமமடு பதிப்பகம், கொழும்பு.

இராமநாதபிள்ளை, ப., (உ.ஆ.), (1969). உமாபதி சிவாச்சாரியாரின் சிவப்பிரகாசம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

அருணைவடிவேல் முதலியார், சி., (உ.ஆ), (1984), சிவஞானபோத சிற்றுரை விளக்கம், ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமையாதீனம்.

சிவபாதசுந்தரம், க., (1980). உமாபதிசிவாச்சாரியார் திருவருட்பயன், சைவப்பரிபாலன சபை, யாழ்ப்பாணம்.

கந்தையா, மு., (1978). சைவசித்தாந்தச் செழும் புதையல்கள், ஈழத்துச் சித்தாந்த சைவவித்தியா பீடம், யாழ்ப்பாணம்.

வச்சிரவேலுமுதலியார், க., (உரை), (1977). சிவஞானபாடியத் திறவு, சென்னைப் பல்கலைக்கழகம்.

சிவஞானமுனிவர், (1936). சிவஞானமாபாடியம், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

இரத்தினசபாபதி, வை., (1988). (பதிப்பு), மெய்கண்ட சாத்திரங்கள், சைவசித்தாந்தத் துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

இறையன்பன், (1978). திருமந்திரம் மூலமும் விளக்க உரையும், மணிமேகலைப் பிரசுரம், சென்னை.

செந்திநாதையர், (1993). சிவஞானபோத வசன அலங்கார தீபம், சைவவித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை.

திருவிளங்கம், மு., (2010). (உ.ஆ.), சிவஞானசித்தியார் சுபக்கம், சிவதொண்டன் சபை, யாழ்ப்பாணம்.

அருணைவடிவேலு முதலியார், சி., (2005). முப்பொருள் இயல்பு, சைவசித்தாந்தப் பெருமன்றம், மயிலாப்பூர்.

செல்லத்துரை, அ., (ஆ.இ), தாயுமானசுவாமிகள் திருப்பாடல்கள், சிவதொண்டன் நிலையம், செங்கலடி.

தேவசேனாபதி, வ, ஆ., (1981). சைவசித்தாந்தத்தின் அடிப்படைகள், சென்னைப் பல்கலைக்கழக மெய்யுணர்வு மேல்நிலைக் கல்வி நிறுவனம், சென்னை.

வேதநாதன், மா., (2009). சிவஞானபோதச் சிற்றுரையும் விளக்கமும், சைவசித்தாந்த ஆய்வு நிறுவனம், யாழ்ப்பாணம்.

19

அறநெறிக்கால சமய, சமூக மரபுகளில் பெண்கள் பற்றிய கதையாடல்: கண்ணகி, புனிதவதி என்போரை முன்னிறுத்திய வாசிப்பு

கலாநிதி தி. செல்வமனோகரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், சைவசித்தாந்தத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். tselvan@univ.jfn.ac.lk

அறிமுகம்

இயற்கை நெறிப்பட்டதும் திணையியல் தளத்தினதாகவும் இருந்த தமிழர் வாழ்வியலில் ஏற்பட்ட பல்வகையான பாதிப்புக்களும் களப்பிரரின் வருகையோடு இணைந்து வைதிக, அவைதிக நெறிகளின் வருகையும் கருத்தியல் பரப்புகையும் புதிய அத்தியாயங்களை தமிழகத்தில் ஆரம்பித்து வைத்தன. அறமும் துறவும் முதன்மையுற்றது. ஆண்களின் ஆன்மீக முன்னேற்றத்திற்கு பெண்கள் தடையாகவும் மயக்கமாயைகளாகவும் கூறப்பட்டு இரண்டாம் பிரஜைகளாக ஒடுக்கப்பட்டனர். அறத்தை நிலைநிறுத்தும் திருக்குறள், நாலடியார் உள்ளிட்ட பதினொரு அறநூல்கள் தோற்றம் பெற்றன; காப்பியங்கள் வெளிவந்தன.

நிலப்பாகுப்பாட்டை அடிப்படையாகக் கொண்ட திணையியல் முதன்மைப்படுத்தப்பட்டு நிலவுடைமையாளரின் செல்வாக்கு ஓங்கியிருந்த சூழலில் இயற்கை வாழ்வின் சிதைவு, புதிய அரசு, புதிய கருத்தியல்களின் வருகை என்பனவற்றோடு நிலவுடைமையாளர்களையும் புறந்தள்ளி வீழ்குடி உழவராக்கி (சிலப்பதிகாரம், 5:40-44) வணிக சமூகம் மேலெழுகிறது. அந்தணர், அரசர், வணிகர் எனும் கருத்தியல் முதன்மையுறுகின்றது. அரசருக்கு சமமானதும் சமாந்தரமானதுமான இடம் வணிகர்களுக்கு வழங்கப்படுகிறது. அவர்களின் எழுச்சி சமண, பௌத்த எழுச்சியாக சமயவியல் தளத்தில் அமைகிறது. பெண்கள்

வீட்டுக்குள்ளே முடக்கப்பட்டு அழகியல், பண்பாட்டியல், காமவியல், பண்டங்களாக பாவனைப்படுத்தப்படுகிறார்கள்;. 'கற்பு' பேரறமாக பெண்ணுக்கே உரிய அறமாக முன்னிறுத்தப்படுகிறது. பெண்கள் இருவகையினர்; பொதுமகளிர் - ஆண்களின் பொதுவுடைமை, கற்புடை மகளிர் - ஆணின் தனியுடைமை என வரையறுக்கப்படுகிறார்கள். இந்த சமூக, சமய கட்டுமானத்தில் கண்ணகி, புனிதவதி கதைகள் உருவாக்கம் பெறுகின்றன.

ஆய்வுப்பிரச்சினை

அறநெறி காலத்தில் வணிக சமூகத்தின் அசைவியக்கத்தின் வழி உருவான சிலப்பதிகாரக் கண்ணகியும் காரைக்கால் அம்மையார் புராண புனிதவதியும் அதுவரை இருந்த சமூக, சமய வாழ்வில் புதுவது புரிகின்றனர். அவர்களைப் பற்றிய இக்கதைகளின்; மையமென்ன, அவை அக்கால சமய, சமூக மரபுகளில் எத்தகைய தாக்கத்தைச் செலுத்தின, எதனைப் புலப்படுத்திநிற்கின்றன என்பதே இங்கு ஆய்வுப்பிரச்சினையாகக் கொள்ளப்படுகின்றது.

ஆய்வின் நோக்கம்

அறநெறிக்கால சமய, சமூக அசைவியக்கத்தைப் புரிந்துகொள்ளலும் பெண்களின் வகிபங்கை அறிதலும் பிரதான நோக்கம் ஆகும். கண்ணகி, புனிதவதி எனும் பெண்களின் கதைகளின் ஒத்ததன்மை, அவற்றின் உருவாக்கம், அக்கதையாடல்கள் உணர்த்தும் சமூக, சமய அசைவியக்கம் என்பவற்றை அறிதல் துணை நோக்கமாகும்.

ஆய்வு முறையியல்

இந்த ஆய்வில் வரலாற்றுமுறை, விபரணமுறை, ஒப்பீடு முதலான ஆய்வுமுறைகள் தேவைக்கேற்ப பயன்படுத்தப் படுகின்றன.

அறநெறிக்கால சமய, சமூக அசைவியக்கம்

தமிழகச் சமூகத்தில் நிலவிவந்த தொன்மையான சமய, சமூக கதையாடல்களின் வழி இலக்கியங்கள் தமது கதையாடல்களை நிகழ்த்துவது வழமையானதே. புதிய கதையாடல் முன்னதை முன்னகர்த்தியோ அடுத்த பரிமாணத்தோ அன்றி மறுதலித்தோ

கட்டமைக்கப்படலாம். இளங்கோ சிலப்பதிகாரத்தை மரபு வழிவந்த கதைக்கருத்துக்களையும், செய்திகளையும் இசைப்பா வடிவங்களையும், வடமொழி மூலம் வந்த சில கதைகளையும் ஆதாரமாக கொண்டு சிற்சில சரித உண்மைகளை அடிப்படையாக கொண்டு காப்பியத்தை ஆக்கியளித்துள்ளார் (Cheistiar,A.C. 1956:196-206). இது காரைக்கால் அம்மையார் புராணத்துக்கும் பொருந்தும்.

அறநெறிக்கால சோழநாட்டில் - புகாரில் கணிகையரும், ஆடல்மகளிரும் அவருடனான வாழ்வும் நிறைந்து கிடந்தது. செல்வம் செழித்தது: பாண்டிநாட்டில் - மதுரையிலும் இவற்றுக்குப் பஞ்சமிருக்கவில்லை. அத்தோடு நிர்வாகச் சீர்கேடுகளும் களவு முதலானவையும் இருந்தன. இவ்விரு தேசங்களும் வணிகர்களால் நிரம்பியிருந்தன. அவர்களது அரசியல், சமயவியல் செல்வாக்குகள் பெருகிக்காணப்பட்டன. சேரநாட்டு இயற்கையோடு ஒட்டிய வைதிகர்களுக்கு முதன்மையளிக்கின்ற, சிறந்த நிர்வாகமும் அரச விசுவாசமும் பேதமற்ற வாழ்வும் உடையதாக இருந்துத (நடராசன்,தி.சு.,2015:40). எக்குலப் பெண்ணாயினும் அவள் ஆணுக்கு அடங்கியவளாக - அடக்கப்பட்டவளாகவே காணப்பட்டாள். ஆண்கள் முன்னிலைப்படுத்தப்பட்டனர். வணிகர்களின் சமயமாக இருந்த சமணம் பெண்ணான்மாக்களுக்கு விடுதலை இல்லை என்றும் ஆண் ஆன்மாவாக மாறும்போதே விடுதலை என்றும் கூறிற்று. ஆண்மையவாத சமயங்களால் மண்ணாசை, பொன்னாசை என்பவற்றோடு பெண்ணாசையையும் துறத்தலே விடுதலைக்கான வழியாகவும் துறவாகவும் வற்புறுத்தியது. புத்தரின் யசோதரைத் துறவு முக்கியம் பெற்றது.

வைதிகமே நால்வருணத்தை முன்னெடுத்தது. அதற்கு எதிரான குரலை ஆரம்பத்தில் சமண, பௌத்தம் முன்வைத்ததெனினும் பிற்காலத்தில் மௌனம் காத்தன் ஏற்றுக்கொண்டன. இளங்கோ அந்தணர், அரசர், வணிகர் எனும் பகுப்புக்களை அவற்றுக்குரிய தனித்துவமான பண்புகளோடு சித்திரிக்கிறார். உழுகுடி, பஞ்சகம்மாளர், கைவினைஞர், ஆயள்வேதர், பாணர், கணிகையர், ஆடற்கூத்தியர், ஏவர் பெண்டிர் எனப்பல குடிகளும், தொழில்களும் அறநெறிக்காலத்தில் காணப்பட்டுள்ளன (நடராசன்.தி.சு.,2015:57). பல்வேறு கோயில்களும் (சிலப்பதிகாரம், 5:169-173,14:7-12) சமயங்களும் காணப்பட்டன. சமண, பௌத்த கருத்தியல்,

பிரயோகவியல் இறுக்கமும், பல்லவர்களின் ஆட்சியதிகாரத் துளிர்ப்பும் வணிக சமூகத்தின் சிதைவும் தமிழகத்தில் மாற்றங்களை உருவாக்கத் தொடங்கின. சமயக்கட்டமைப்பு கூர்மையானதாகவும், ஆற்றலுடையதாகவும் வளர்ச்சி பெறுவதை இளங்கோ தன் காப்பியக்கட்டமைப்போடு இணைத்துரைக்கிறார். சிலம்பு சமய உரையாடல்களின் களமாகத் திகழ்கிறது. பல்லவர்களின் வருகை, வணிகர்களின் சிதைவு என்பன நிலவுடைமைச் சமுதாயத்தின் எழுச்சிக்கு வித்திடுகின்ற சூழலை உருவாக்குகிறது.

கண்ணகி, புனிதவதி பற்றிய கதையாடல்கள்

சங்க இலக்கியத்தில் வையாவிக் கோப்பெரும்பேகன் எனும் குறுநில மன்னனால் இன்னொரு பெண்காரணமாகத் துறக்கப்பட்ட மனைவி கண்ணகி பற்றி கபிலர், பரணர், வன்பரணர் அரிசில் கிழார், பெருங்குன்றூர் கிழார் எனும் ஐந்து புலவர்களால் பாடியுள்ளனர்(புறம்.143-147). இதேவேளை மருதன் இளநாகனார் எனும் புலவர் மருதத்திணைப்பாடலில்

'ஏரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும்
குருகார் கழனியின் இதணத்து ஆங்கண்
ஏதிலாளன் கவலை கவற்ற
ஒருமுலை யறுத்த திருமா வுண்ணி' (நற்றிணை,216)

எனும் வரிகள் கவனத்துக்குரியன. ஏதிலாளனுக்காக முலையறுத்தல், வேங்கை மரத்தின் கீழ் நிற்றல் எனும் இரு சம்பவங்களும், கண்ணகி என்ற பெயரும் சிலப்பதிகாரக் கதைக்கான மூலக்கருவாகின்றன. இவற்றின் அடுத்தகட்ட வளர்நிலைக் கதையாடலே பெரியபுராணத்தில் வருகின்ற புனிதவதியின் கதை எனக் கூறலாம். இவை தொல்காப்பியம் சுட்டும் தொன்மைச் செய்யுள்வகை சார்ந்தவை (கைலாசபதி,க.,2001,ப-239).

வணிக சமூகத்தின் ஆடம்பரம், ஆரவாரம், பொருளாதார சமூகத்தகுதி, பின்புலம், அரசு, அரசுக்கு சமனான செல்வாக்கு என்ற பலதரப்பட்ட இஜீயங்கியல்களும் சமூக, சமய நிலைகளும் பல. உயர் குடிப்பெண்கள் மீது திணிக்கப்படும் சமூகச் சுமைகள் மற்றும் ஆண்களின் நடத்தைகள், வணிககுணாம்சங்கள், விடுபடு மனநிலைகளை உருவாக்குகின்றது.

1. கண்ணகி, புனிதவதி எனும் இரு பெண்களும் பெருங்குடி வணிககுலத்தில் பிறந்தவர்கள். பெற்றவர்களும், திருமண செய்தவர்களும் பெருநிதியத்தை உடையவர்கள், ஆகவே சமூக, பொருளாதார அந்தஸ்தில் இணையற்றவர்கள்.

2. இவ்விரு பெண்களுக்குமான திருமணங்கள் பெற்றோரால் நிச்சயிக்கப்பட்டு பெருமெடுப்பில் நிகழ்த்தப்பட்டன. இரு பெண்களும் தனிக்குடித்தனம் போயினர். இருவருக்கும் அளவற்ற சீதனம் வழங்கப்பட்டது.

3. சிறந்த இல்வாழ்க்கை வாழ்ந்த இப்பெண்கள் ஒரு கட்டத்தில் கணவனைப் பிரிகின்றனர். அவர் வரவுக்காக காத்திருக்கின்றனர். பிரிந்த கணவன் வந்ததோடு புகாரை விட்டு நீங்கவும் பொருள் தேடவும் கண்ணகியை அழைக்க அவனோடு போகிறான்; பொருள் தேடலுக்காக கணவனுடனான உடன்போக்கு செல்லும் முதற்பெண்ணாக கண்ணகி விளங்குகிறாள். புனிதவதி, பொருள் வயிற் பிரிதல் போல பிரிந்து சென்று திரும்பி வராத கணவனை நீண்டகாலத்தின் பின் இருப்பிடம் தெரிந்து பெற்றோரும் உற்றவர்களும் அழைத்துச்செல்ல தன்னிடம் விட்டுச் செல்கிறாள். இருவருமே தம் சொந்த தேசம் திரும்பவேயில்லை.

4. பிரிந்த கணவர் இருவரும் வேறுவேறு பெண்களுடன் வாழ்கின்றனர். அவர்களுக்கு குழந்தைகள் பிறக்கின்றன. அவை இரண்டுமே பெண்குழந்தைகள். கண்ணகிக்கும் புனிதவதிக்கும் பிள்ளைகள் இல்லை.

5. கணவனின் மரணத்துக்கும் கண்ணகியின் கடுஞ்சினம் மற்றும் பத்தினி தெய்வமாதலுக்குமான காரணமாய் அமைவது ஒற்றைச் சிலம்பு; பாண்டிமாதேவியின் சிலம்பும் கண்ணகியின் மற்றைய சிலம்பும் அவள் தன் தரப்பை நிறுவ உதவுகிறது. கணவனின் பிரிவுக்கு காரணம் ஒற்றை மாங்கனி; இரண்டாவது மாங்கனி இறையருளின் வெளிப்பாடாகவும் புனிதவதி தன் தரப்பை நிறுவ மூன்றாவது மாங்கனியும் உதவுகிறது. ஆக, கண்ணகியின் கதையில் மூன்று சிலம்புகள்; புனிதவதி கதையில் மூன்று மாங்கனிகள்.

6. கணவன் இறந்த செய்தி அறிந்த கண்ணகி தன் கணவன் நெருப்பில் மூழ்க, கைமை பூண்டு, துறை மூழ்கும் கவலையை மகளிரைப் போல் இம்மையும் இசையொரீ, யினைந் தேங்கி யழிவலோ (சிலம்பு,18:42-45) எனப் பொங்கியெழுகின்றாள். நீதி கேட்டு வென்ற கண்ணகி தன் இடமுலையை கையால் திருகி எறிந்தாள். கணவனைத் தேடிச் சென்றபோது அவன் மறுமணம் புரிந்து வாழ்வதையறிந்த புனிதவதி பதைபதைத்துப் போகவில்லை. கணவனின் நிரந்தர பிரிவை அறிந்த பின் பேய்வடிவை வேண்டிப் பெற்றார். (பெரியபுராணம் 1765). இருவரும் 'பெண்' எனும் அடையாளத்தை அழித்து நின்றனர்.

இந்நிகழ்வுகளின் பின்பான விடயங்களில் அவரவர் சார்ந்த சமயங்களின் இயங்குதளங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. கண்ணகி தன் முலைதிருகி எறிந்து தன்னை ஒறுத்ததோடு மதுராபுரியையும் எரியூட்டி பிறரையும் ஒறுக்கிறார். இது சமணத்துக்கு மாறு எனினும் வீரபத்தினி எனத் தன்னை நிலைநாட்டும் செயலெனலாம். பஞ்சமும் பசியும் மழையற்ற அச்சநிலையும் வீரபத்தினியை பத்தினித் தெய்வமாக்குகின. இளங்கோவின் சமணச் சார்பு கண்ணகியை நேரடியாக தெய்வமாக்கவில்லை. மதுரையை விட்டுப் புறப்பட்ட கண்ணகி மேடு பள்ளம் தாண்டி நெடுவேள் குன்றம் கடந்து பூத்த வேங்கை மரத்தின் கீழ் இரங்கி அழுதவாறு 14 நாட்கள் காத்திருந்து தன் கணவனைக் கண்டு அவனுடன் வானுலகம் சென்றாள். பெண் ஆன்மா இறைநிலை பெற முடியாது என்று சமணம் சுட்டுவது குறிப்பிடத்தக்கது. ஆணின் துணையின்றி பெண் இயங்க முடியாத - கற்பின் வழி கணவன் துணையோடு இயங்குகின்ற தன்மையையே 'கோ நகர் பிழைத்த கோவலன் தன்னோடு, வான் ஊர்தி ஏறினாள்' (சிலப்பதிகாரம், 23:198-199) எனும் இளங்கோவின் வரிகள் எடுத்துக்காட்டுகின்றன. இந்நிலை இளங்கோவின் மரபார்ந்த அதன்னின்றும் மீள முடியாது போன மனோநிலைக்கு சான்று ஆகும். ஒற்றை முலைச்சியான அவளது கோலம் இன்று அரிதாகவே சித்தரிக்கப்படுகின்றது. கையில் சிலம்பேந்திய தலைவிரி கோல, அவலநிலை உருவமே கண்ணகியின் தெய்வ உருவாக ஓவியமாக விளங்குகின்றது.

பிறந்த காலத்திலிருந்து சிவ பக்தையாக புனிதவதி திகழ்கின்றார். கணவன் தன் இரண்டாம் மனைவியோடும் பெண் மகவோடும் வந்து தாள் பணிகின்றான். 'உன் அருளாலே வாழ்கின்றேன் என்கின்றான்; ஆதலால் பொற்பதம் பணிந்தேன் என்றான்' (பெரியபுராணம் 1763). நிரந்தர பிரிவை உணர்ந்த புனிதவதி இவனுக்காக தாங்கிய வனப்பு நின்ற தசைப் பொதிய கழிந்து உன்னிடம் ஏகி நின்தாள் போற்றும் பேய்வடிவு அடியேனுக்கு வேண்டும் (பெரியபுராணம் 1865) என வேண்டி பேயுருப் பெற்றாள். சைவம், ஆணாகிய சிவபெருமானின் உடலை உடல் அழகைப் பாட பேயுருப் பெண்ணுக்கு இடம் கொடுத்தது. தேசாந்திரியாக காடு மேடெல்லாம் கடந்து வடதேசம் சென்றடைந்து பின் தன் தலையால் கயிலைமலை ஏறிச் சென்றவர் புனிதவதி. இவரைக் கண்ட உமையம்மையிடம் சிவன் 'இவள் நம்மைப் பேணும் அம்மை காண்' என்று உரைத்து புனிதவதியை 'அம்மையே' என விளிக்க, அம்மையார் இறைவனை 'அப்பா' என விளித்தார் என்று புராணத்தை கட்டமைக்கின்றார். அத்தோடு அம்மைக்கு திருவடிப் பேறும் கிடைத்தது எனத் தெளிவுற உரைக்கின்றார். புனிதவதியின் பேயுருவே இன்றும் சிற்பமாக, சிலையாக, ஓவியமாக எங்கும் விளங்குவதைக் காண முடிகின்றது.

இவ்விரு பெண்களும் மாதருள் மாணிக்கங்களாய் கற்பின்; செழுத்திருக்களாய் கணவனைத் தெய்வமாகப் போற்றுபவர்களாய் சித்தரிக்கப்படுகின்றனர். தன் கணவன் கொலை உண்டபோது காய் சினம் கொண்டவளாய் தன் கணவன் கள்வன் அல்லன் எனும் அறத்தை நிலைநாட்டி பல பாடுகள்பட்டு அழுது மங்கல அணிகலன்களை துறந்து கைமைநிலை அடைந்தவளாய் காத்திருந்து கணவனைக் கண்டு அவனுடன் வானுலகம் புகும் உலகியல் பெண்ணாக, கணவன் புகழ் பாடும் விசுவாச மனைவியாகச் சித்திரிக்கப்படுகின்றாள். அக்காலத்தில் பெண் ஒருவர் அரண்மனை புகுந்து அரசனின் தவறை சுட்டி வாதிடுதலும் ஞாயிற்றைப் பார்த்து என் கணவனோ கள்வன் என வினவிய போது இல்லை எனக் காய்கதிரோன் உரைத்த பல்வேறு அற்புத செய்திகளும் கண்ணகியின் சமூக இயல்புக்கு மாறான நடத்தைகளே. ஆயினும் வீரபத்தினியாக, அருளும் தெய்வமாக சமயவியலாளர்களாலும் மக்களாலும் போற்றப்படுகின்றார்.

பேயுரு பெறுதல் என்பது பல்பரிமாண சமூகவியல் கருத்துக்களைக் கொண்டமைந்த ஒரு விடயமாகும். சமூக இயல்புக்கு மாறாக புனிதவதி வணிகர்குல சமயமாகிய சமணத்தை பின்பற்றாது சைவமரபை பின்பற்றி சிவபெருமானை வணங்கி வருதல், மனைவியின் கால்களில் கணவன் விழுந்து வணங்குதல், தன் முதல்மனைவி பெயரை தன் குழந்தைக்கு சூட்டுதல் என்பன அக்காலச் சமூகச் சூழலில் மிகப்பெரும் மரபு - நடத்தை மீறலாகவே கருதப்பட்டிருக்கும். ஆதலால் அவர் பேயானார் - பேயாக்கப்பட்டார். கணவன் அல்லாத ஆணின் (அது கடவுளாயினும்) உடலழகைப் பாடுதல், ரசித்தல் என்பன அச்சமூகத்தின் நடத்தைக்கு முழு எதிர்மாறானது. ஆதலால் தலைகீழாக நடந்தவரானார.; இந்தவகையில் இவ்விரு பெண்களும் சமூகமும் சமயமும் வைத்திருந்த நியதிகளை, சமூக ஒழுக்கங்களை மீறியவர்களாக - மாற்றியமைத்தவர்களாக புதுவிதிகளை உருவாக்கியவர்களாகக் காணப்பட்டுள்ளார்கள்.

முடிவுரை

அக்கால சமூகம் விதித்திருந்த கட்டுப்பாடுகளை மீறி இவ்விரு பெண்களும் பொது வெளிக்கு வருதலும் வாதம் புரிதலும் அற்புதங்கள் செய்தலும் அக்கால சமூக சமயச் சூழலில் புதியவையாகும.; கண்ணகி பற்றிய கதையாடல் வைதிக, அவைதிக எனும் எதிர் தளங்கள் இரண்டாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இன்றுவரை கண்ணகி தெய்வமாக ஆராதிக்கப்படுகின்றார.; புனிதவதியின் கதை அறநெறிக்காலத்துக்கு உரியதாயினும் சோழர் காலத்தில் எழுதப்பட்டது. பெரியபுராணம் எனும் பெரும் கதையாடலுள் அமைந்த ஒரு கதையாடல்; காலதேச வர்த்தமானத்துக்கேற்ப அது திட்டமிட்டு ஆக்கப்பட்டது. சமண, சைவத் தளங்களில் பேசப்பட்ட இக்கதைகளின் மையக்கரு பெண்கள் அக்கால சமூக சமய விதிமுறைகளை மீறி புத்தாக்கம் செய்தனர் என்பதுதான். பெண்ணுக்குள் இருக்கும் ஆற்றலானது கற்பு, திருமணம், கடமை, அடக்கம் எனும் பெயர்களால் சமூகத்தாலும் சமயத்தாலும் அடக்கப்படுவதும் அதை மீறி எழும் அவரது எழுச்சி அக்கால சமூக சமய கருத்தியல் - செயல்நிலை மாற்றங்களை ஏற்படுத்த வல்லதாய் இருப்பதையும் இக்கதையாடல்கள் வெளிப்படுத்துகின்றன. எத்தகைய மாற்றங்கள்

நிகழ்ந்த போதும் முலை மட்டுமே பெண்ணின் பிரதான அடையாளமாக்கப்படுதல் இன்றுவரை நீக்கமுறவில்லை. கண்ணகியின் கதையாடல் சமயம் கடந்த சமயத்தை, புதிய பெண்தெய்வத்தைத் தமிழ் சமூகத்திற்கு தந்தது. புனிதவதி சிவனடியாராய் பாவலராய் மட்டுமே உருநிலைப்படுத்தப்பட்டார.; ஆயினும் புனிதவதியின் வருகையே சைவ பக்தியியக்க எழுச்சிக்கும் தமிழர் மெய்யியலாக சைவசித்தாந்தம் உரைக்கப்படுவதற்கும் அடிப்படை ஆயிற்று. அந்தவகையில் அக்கால சமூக சமய தளங்களில் பாரிய தாக்கங்களை செலுத்தியவர்கள் இவர்கள் .இவ்விரு பெண்கள் பற்றிய கதைகள், புத்தாக்கம் செய்யப்பட்டுக் காலந்தோறும் பெண்கள் பற்றிய உரையாடல்களுக்கான பன்முகத்தளங்களை விரித்துக்கொண்டே இருப்பதற்கு துணை நிற்கின்றன.

உசாத்துணை

நடராசன், தி.சு., (2015), சிலப்பதிகாரம் மறு வாசிப்பு, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை

மாணிக்கனார், அ., (உரை), (2002), பெரியபுராணம், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.

வேங்கடசாமிநாடார், ந.மு,(உரை), (1999), சிலப்பதிகாரம் கழகவெளியீடு, சென்னை.

புலியூர் கேசவன்(உரை), (2018), சிலப்பதிகாரம். பாரி நிலையம், சென்னை

இராசகோபாலன் சரளா, (1997), சிலம்புவழிச்சிந்தனைகள், ஒளிப்பதிப்பகம், சென்னை

கைலாசபதி,க., (2001), அடியும் முடியும், குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை

சூரியமூர்த்தி கோமதி, (2012), காரைக்காலம்மையார், சாகித்திய அகாதெமி, புதுதில்லி.

செல்வமனோகரன், தி, (2017), தமிழில் மெய்யியல், தூண்டி இலக்கியவட்டம், யாழ்ப்பாணம்.

நிர்மலா.பெ, (2009), தமிழ்ப்பண்பாட்டில் பால் வேற்றுமைப் பதிவுகள், பல்கலைப் பதிப்பகம்,சென்னை

20

மாரியம்மன் வழிபாடும் இஸ்லாமிய சமூக மக்களும்

கி.கலைமகள், விரிவுரையாளர், கட்புல தொழில்நுட்பக்கலைத்துறை,
சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப்பல்கலைக்கழகம், kalaimagalk@esn.ac.lk

அறிமுகம்

இலங்கையில் உள்ள வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் காணப்படும் மாரியம்மன் கோயில் வழிபாட்டுச்சடங்குகளில் இஸ்லாமிய சமூக மக்களின் பங்குபற்றல் குறித்ததாக இவ்வாய்வு அமைகின்றது. இலங்கையின் கிழக்கு, வடக்குப் பகுதிகளில் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் இணைந்து வாழுகின்றனர். இவர்கள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட போதும் தங்களை இஸ்லாமிய மக்கள் என அடையாளப்படுத்தும் மக்களாவர். பண்பாட்டு ரீதியாக குடி சார் சமூகக்கட்டமைப்பினைப் பின்பற்றுபவர்களாகவும் உள்ளனர். தமிழ், இஸ்லாமிய சமூகங்கள் பண்பாடு சார்ந்த ஒத்த தன்மைகளையும் அதேபோல் தனித்தன்மைகளையும் கொண்டுள்ளன.

இலங்கையின் போர்க்காலச் சூழல் மொழிசார் அடையாளப்படுத்தலை ஏற்படுத்தியது. அதன் பெறுபேறாக ஒவ்வொரு சமூகமும் தத்தமது தனித்தன்மைகளைக் கொண்டு அடையாளப்படுத்தியது. தனித்தன்மை ரீதியான அடையாளப்படுத்தல் சமூகங்களிடையே வேறுபாடுகளையும் பாரபட்சங்களையும் முரண்பாடுகளையும் ஆழப்படுத்தியுள்ளது. ஆனாலும் இரு சமூகங்களும் வாழ்வியல் முறையில் ஒன்றில் ஒன்று தங்கியதாகவும் பண்பாட்டு கடத்தல்களை கொண்டதாகவும் இயங்குகின்றன.

ஆய்வு நோக்கம்

இவ்வகையில் பண்பாட்டில் இரு சமூகங்களும் நம்பிக்கை ரீதியாக இணையும் கூறுகளில் இவ் ஆய்வு கவனம்செலுத்த முனைகின்றது.

கருத்தாடல்

தர்க்கா(கொடிப்பள்ளி) இல் தமிழ்மக்களும் இணைந்து வழிபடுதலும் நேர்த்தி செலுத்தலும் இடம்பெற்று வந்திருப்ப தனையும் அவதானிக்கலாம். இதேபோல் மாரியம்மன் சடங்கு வழிபாடுகளிலும் முஸ்லிம் மக்கள் பங்களிப்பினை அவதானிக்க கூடியதாக உள்ளன. இதனை இரண்டுவிதமாக அறியலாம். அவை, மாரியம்மன் கோயில் வழிபாட்டுடன் இணைந்த நம்பிக்கைகள், மற்றையது நோய்களுடன் இணைந்த வாழ்வியலில் பின்பற்றப்படும் நம்பிக்கைகள் போன்றவையாகும்.

மாரியம்மன் – அம்மை நோய் தொடர்பான நம்பிக்கை முஸ்லிம் மக்களிடையே காணப்பட்டுள்ளது. வவுனியா கிடாசூரி, மணலாறு, கொக்குத்தொடுவாய், நாவற்குடா போன்ற இடங்களில் அமைந்துள்ள மாரியம்மன் கோயிலில் செய்யப்பட்ட கள ஆய்வில் சேகரிக்கப்பட்ட தகவல்கள் ஊடாக இப்பிரதேசங்களில் உள்ள மாரியம்மன் கோயில் சடங்கிற்கான பொருட்களை வழங்கக் கூடியவர்களாகவும் நேர்த்தி செய்பவர்களாகவும் முஸ்லிம் சமூக மக்கள் இருந்து வந்துள்ளதனை அறிந்துகொள்ளமுடிகின்றது. அத்தோடு அம்மை நோய்த் தொற்றிலிருந்து பாதுகாக்கக் கடைப்பிடிக்கும் பழக்கவழக்கங்கள் திருநீறுபோடுதல், எதிர்காலத்தினைக் கணித்தல் தொடர்பான நம்பிக்கை, கடலில் அதிகளவு மீன்கள் பிடிபட பூசாரியிடம் இருந்து நீர் ஓதிக் கொண்டு தொழில் செய்யும் உபகரணங்களில் ஊற்றினால் அதிகளவான மீன்பிடிபடும் போன்ற நம்பிக்கைகள் முஸ்லிம் மக்களிடையே நிலவிவந்துள்ளன. இவற்றின் ஊடாகவே தமிழ், முஸ்லிம் சமூக மக்களுக்கிடையிலான பண்பாட்டு உறவினை அறிய முடிகின்றது.

எல்லைக்கிராமங்களாக வாழும் தமிழ், இஸ்லாமிய சமூகத்தவர்களிடம் அதிகளவான பண்பாட்டு ஒற்றுமைத் தன்மைகளைக் காணலாம். ஒத்த நம்பிக்கைகளைக் கொண்டவர்களாகவும் கொடுத்தும் வாங்கி;யும் வாழும் பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டவர்களாகவும் உள்ளனர். இங்கு சேகரிக்கப்பட்ட தகவல்கள் போருக்கு முன்னரான வாழ்வியல் முறையில் கடைப்பிடிக்கப்பட்டவையாக காணப்படுகின்றன. தற்காலத்தில் இத்தகைய பண்பாட்டு உறவினைக் காண்பது அரிதாகவே காணப்படுகின்றது.

இலங்கையில் இனம் என்னும் சொல் வலுவடைந்த அரசியல் சொல்லாகக் காணப்படுகின்றது. இனத்தினை மையப்படுத்திய அரசியல் ஓட்டத்தில் மாற்றத்திற்குள்ளான வழிபாட்டுக் கூறுகளில் காணப்படும் இருசமூகப்பங்களிப்பினையும் இறுக்கமான பண்பாட்டு அடையாள உருவாக்கலின் தேவைப்பாட்டினையும் பேசுவதாய் இக்கட்டுரை அமைகின்றது. இக்கட்டுரையானது வரலாற்றின் மீதான விமர்சனத்தினையோ மதிப்பீட்டினையோ முன்வைக்கவில்லை. சடங்குக் கூறுகளிருந்து வழக்கொழிந்து போயுள்ள இரு சமூகப் பங்குப்பற்றலுடனான பண்பாட்டு அடையாளத்தினை முன்வைக்க முயலுகின்றது.

முஸ்லிம் சமூக மக்களுக்கும் பத்ததி வழிபாட்டுச் சடங்கிற்குமான தொடர்பினையும் இரு சமூகங்களுக்கிடையிலான பண்பாட்டுத் தொடர்பு தற்போதைய சூழலில் வழக் கொழிந்தமைக்கான காரணங்களையும் ஆராய்கின்றது. சமூகம் தன் வாழ்வியலில் கடைப்பிடிக்கும் நம்பிக்கைகள் இரு சமூகங்களின் பண்பாட்டு உறவினைப் பேணி வருகின்றன என்பதனை நோக்காகக் கொள்கின்றது. எனவே சமூகங்களின் மாற்றத்திற்கான காரணங்களை அடையாப்படுத்தலே இவ் ஆய்வின் முதல்தர பிரச்சினையாகின்றது. அத்துடன் பண்பாட்டு ரீதியாகத் தனிமைப்படுத்தலுக்கான சமூகப்பிரச்சினையை விவாதிப்பதும் இவ் ஆய்வின் பிரச்சனையாகின்றது.

முடிவுரை

பண்பாட்டு ஊடாட்டம் என்பது இன்றைய சூழலில் குறிப்பாக யுத்தத்திற்குப் பின்னரான வாழ்வியலில் இருந்து வழக்கொழிந்து போனமைக்கான காரணங்களைத் தேடுவதாய் தமிழ், இஸ்லாமிய மக்களிடையே காணப்பட்ட பண்பாட்டு உறவினையும் ஆராய்கின்றது.

உசார்த்துணை நூல்கள்

Imtiaz Ahmad, (1984). Ritual and Religion Among Muslims in India, New Delhi: Manohar Publication.

Senevirathe, H.L, (1992). Identity, Consciousness and the Past - Forging or Caste and Community in India and SriLanka.

Senevirathe, H.L. (ed) Identity and the Conflation of Past and Present . Calutta : Delhi Oxford Universitiy Press.

ஹாபிஸ் செய்யிது அஹமது, ஏ.கே, (1968). முஸ்லிம் தமிழ்ப் பாரம்பரியம், கொழும்பு: அரசு வெளியீடு.

கணபதிப்பிள்ளை, க, (1956). தமிழர் வரலாறு, கொழும்பு: சுதந்திரன் அச்சகம்.

பரமசிவம்,தொ. (2022). தெய்வங்களும் பண்பாட்டு அசைவுகளும், சென்னை:நியுசெங்சுரி புக்கவுஸ் வெளியீடு.

ரொமீலா தாப்பார், (2000). சோமநாதர் – வரலாற்றின் பல குரல்கள், கமரராலயன் (மொழிபெயர்ப்பு), சென்னை: நியுசெஞ்சுரி புக்கவுஸ் வெளியீடு:

முத்தையா,இ. (2010). அடித்தளமக்களின் குறியீட்டுப் பயணவெளிகள், சென்னை: நியுசெஞ்சுரி புக்கவுஸ் வெளியீடு.

பனுவல் சமூக பண்பாட்டு விசாரணை, சமூக பண்பாட்டு விசாரணைக்கான கூட்டிணைப்பு, கொழும்பு. இரண்டாவது இதழ் 2004

கிளாட் ஆல் வாரஸ், (2016). அறிவியல் வளர்ச்சி மற்றும் வன்முறை, ஆயி. நடராஜன். இரா (மொழிபெயர்ப்பு), எதிர்வெளியீடு.

21

மலையகத் தமிழர் கலாசாரத்தில் சிறுதெய்வ வழிபாடு - ஓர் ஆய்வு

சுரேஷ்குமார் டென்சி
முதுகலைமானி மாணவி (வீணை), மகாத்மா காந்தி பல்கலைக்கழகம்,
கோட்டயம், கேரளா. denshi1995@gmail.com

ஆய்வு அறிமுகம்

பிரித்தானிய காலனித்துவவாதிகளால் தமிழகத்திலிருந்து இலங்கைக்குத் தென்னாட்டுக் கூலித் தொழிலாளர்களாக தேயிலை கோப்பி போன்ற பயிர்ச்செய்கைகளுக்காக ஒப்பந்தத்தின் பெயரில் அழைத்து வரப்பட்டவர்களே மலையகத் தமிழர்கள் என்று இன்றும் அழைக்கப்படுகின்றனர். இவ்வாறு அழைத்து வரப்பட்டவர்களில் பெரும்பாலானோர் தமிழர்களாகவும் இந்துக்களாகவும் காணப்பட்டனர். இவர்கள் வாழத் தொடங்கிய நாட்டில் கலை, கலாச்சாரம், மதம், மதநம்பிக்கைகள், மதச் சடங்குகள், பண்பாடுகள் என்பவற்றையும் கட்டி எழுப்பி பாதுகாத்தும் வந்தனர். இவர்களுக்கென்று தனித்துவமான ஒரு சில மதச் சடங்குகளும் வழிபாட்டு முறைகளும் காணப்பட்டன.

ஆய்வுப் பிரச்சினை

மனித சமூகங்களுக்கிடையே காணப்படும் சிறுதெய்வ வழிபாடுகள் மக்களின் நம்பிக்கைகளோடு எவ்வாறு செயல்படுகின்றன, வாழ்வியல் பின்னணியில் இவை எவ்வாறு தொடர்புபடுகிறன, மலையக மக்களின் சிறுதெய்வ வழிபாடானது அவர்களி;ன் தொன்மை, தனித்துவம், சமூக பண்பாடு என்பவற்றைப் பிரதிபலிக்கின்றதா? என்பனவே இவ் ஆய்வின் பிரச்சினைகளாகக் காணப்படுகின்றன.

ஆய்வின் நோக்கம்

மலைக பிரதேச மக்களால் மேற்கொள்ளப்படும் சிறு தெய்வ வழிபாடானது அவர் சமூக கட்டமைப்போடு எவ்வாறு பங்களிப்பு

செய்திருக்கின்றது எனவும் எவ்வாறான சிறு தெய்வங்களை வணங்குகின்றார்கள் என்பதை பற்றியும் அதற்கான காரணங்கள் என்ன என்பவற்றையும் ஆராய்வதோடு, வழிபாடுகளின் தொன்மை பற்றியும் அவற்றில் உள்ள தனித்துவமான விடயங்கள் என்ன என்பதைப் பற்றியும், இவ் வழிபாட்டிற்கும் சமூகம் சார்ந்த வரலாற்றுக்கும் இடையேயான தொடர்புகள் என்ன என்பதையும், நம்பிக்கைசார் கருத்துக்கள் என்ன என்பதையும் ஆராய்வதே ஆய்வின் நோக்கங்களாகும்.

ஆய்வு முறையியல்

இவ்வாய்வில் சமூகவியல், மொழியியல், ஒப்பியல், வரலாற்றியல், கோட்பாட்டியல் போன்ற ஆய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் முதலாம் நிலைத் தரவுகளாக மலையகப் பிரதேசங்களான கண்டி, மாத்தளை ஆகிய இடங்களில் மதகுருமார்களிடம் பெறப்பட்ட நேர்காணல் மற்றும் அவதான முறை மூலம் பெறப்படும் தகவல்கள் போன்றவற்றைக் கொண்டும், இரண்டாம் நிலைத் தரவுகளாக சிறு தெய்வங்கள் தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள் பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆய்வு கட்டுரைகள், இணையதள குறிப்புகள் போன்றவையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

கலந்துரையாடல்

மனித சிந்தனையின் முதன்மையான விளைவாக நிகழ்ந்த ஒன்று வழிபாடாகும். விலங்குகளாக திரிந்த மனித இனம் இயற்கையின் சீற்றத்தைப் புரிந்து கொள்ள முடியாமலும் அதற்குக் கட்டுப்பட்டு அச்சத்தோடும் கூட தனக்கு உதவியதை எண்ணி நன்றி உணர்வோடு செயல்பட்டதாலும். சீற்றங்களில் இருந்து தம் இனத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும், இயற்கை அனர்த்தங்களை குறைக்கவும் இயற்கையிடமே அவன் கையேந்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து மனிதர்கள் மெல்ல மெல்ல இயற்கையை வணங்கத் தொடங்கினார்கள். அவை காலப்போக்கில் பரிணாம வளர்ச்சி அடைந்து கலை, கலாசாரம், தெய்வ வழிபாடு என்று பல பெயர்களாக மாற்றமடைந்தது. மக்களுக்கும் தெய்வங்களுக்கும் இடையில் பிணைப்பினை ஏற்படுத்துவது சடங்குகள் மற்றும் வழிப்பாட்டு முறைகளாகும்.

இவ்வாறு மலையக மக்கள் வாழ்வில் சமய வழிபாட்டு முறையானது பின்னிப்பிணைந்த ஒன்றாகக் காணப்படுகின்றது. சிறுவயது முதல் பல வழிபாட்டு நடைமுறைகளோடு வளர்ந்த இவர்கள் தமது வாழ்வியலில் முக்கியமான அம்சமாக மதச் சடங்குகளை நம்பத் தொடங்கினார்கள் அந்த வகையில் மலையகத் தமிழர்களிடம் சிறு தெய்வ வழிபாடு பற்றியும் அவை வாழ்க்கை நிலையோடு எவ்வாறு தாக்கம் செலுத்தி உள்ளது என்பது பற்றியும் ஆராயும் ஆய்வாகவே இவ் ஆய்வு காணப்படுகின்றது.

சிறுதெய்வ வழிபாடானது மலையக மக்களிடையே காணப்படும் மிக முக்கியமான வழிபாடுகளில் ஒன்றாகும். இது முக்கியமாக முன்னோர்களின் வழிகாட்டலின் அடிப்படையில் பரம்பரையாகக் கடத்தப்பட்டு வருகின்றது. வீட்டுத் தெய்வ வழிபாடு, குலமட்ட வழிபாடு, இனமட்ட வழிபாடு, முன்னோர், வழிபாடு என பல வகைகளில் காணப்படுகின்றது பொதுவாக மலையக மக்கள் இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்டு இவ்வழிபாட்டு முறைகளைத் தொடர்ச்சியாக பரம்பரை பரம்பரையாக கொண்டு நடத்தி செல்கின்றனர். இவற்றின் அடிப்படையில் இன்றும் மலையக மக்களிடையே பெரும்பாலும் வழிப்படக்கூடிய கிராமியத் தெய்வங்களாக பத்தினி அம்மன், காளியம்மன், ஆத்துக்காளி, மதுரை வீரன், மாடசாமி, முனி ரோத முனி, கருப்பன் சாமி, கவாத்து சாமி, மலைச்சாமி, முனியாண்டி, பைரவர் ஆகிய தெய்வங்களை வழிபடுகின்றனர்.

அவ்வாறே மேலும் குடும்ப மட்ட வழிபாடு, குலமட்ட வழிபாடு, சமூக மட்ட வழிபாடு என்றும் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்ட தன்மையை கொண்டும் தனித்துவமான விடயங்களைக் கொண்டும் காணப்படுகின்றது. சிறுதெய்வ வழிபாடு வெறுமனே ஒரு சடங்காக மாத்திரம் அன்றி வழிப்பாட்டு முறைகளோடு ஒன்றிணைந்து கலை கலாசார வளர்ச்சிக்கும் பாரிய உதவியை மேற்கொண்டுள்ளது. சில கிராமத் தெய்வ வழிபாட்டுக்களின் போது பாடல்கள் மூலமும், கூத்து முறைகள் மூலமும் தம்முடைய பக்தியை வெளிப்படுத்துகின்றனர். அத்துடனே கிராமிய இசையும் ஒன்றிணைந்து தமிழர்களின் கலைகளை வளர்க்கவும் துணைநிக்கின்றது என்றால் மிகையாகாது.

முடிவுரை

மலையக மக்களின் நம்பிக்கை அடிப்படையில் சிறு தெய்வங்கள் இன்றும் உயிர் வாழ்கின்றன என்றும் அவை தம்முடைய குடும்பத்தையும் பரம்பரையையும் காவல் காத்து வருவதோடு தனக்கு வரும் அசாத்தியமான சூழ்நிலைகளை அழித்து எப்போதும் கூடவே இருந்து தங்களை காத்தும் வருகின்றன என்பதும் அவர்களின் மிகப்பெரிய நம்பிக்கையாக இருக்கிறது. தொழில் முறைக்கொண்டு நோக்கும் போது கவாத்து சாமி, மலைச்சாமி போன்ற தெய்வங்கள் தங்களுக்கு உதவியை வழங்குகின்றன என்றும், தேயிலை கவாத்து வெட்டும் போதும் அதனை நன்றாக செழிப்புற கொடுக்க வேண்டும் என்ற நம்பிக்கைக்காக கவாத்து சாமியை வணங்குவதும் மற்றும் மலைகளில் வேலை செய்யும் எல்லோருக்கும் பாதுகாப்பை கொடுப்பதற்காக மலைச்சாமிக்கு சடங்குகளை செய்வதும் இவர்களின் மிகப்பெரிய மதச் சடங்குகளில் ஒன்றாக காணப்படுகின்றது.

இவ்வாறு சிறுதெய்வ வழிபாடானது சமூக ஏற்றத்தாழ்வுகளையும் புலப்படுத்துகின்றது .சாதி சார்ந்த முறைகளிலும் சில மாற்றங்களைக் கொண்டு காணப்படுகின்றது. ஆயினும் சாதி, தொழில் சார்ந்து ஏற்றத்தாழ்வுகள் இருப்பினும் ஒரே சமூகம் ஒரே குடும்பம் தன்னுடைய உறவுகள் என்ற ஒற்றுமைக்காகவும் அதனை பேணிப் பாதுகாக்கும் முறைகளும் மிக அருமையாகவே உள்ளன. அந்தவகையில் சிறுதெய்வ வழிபாட்டுச் சடங்குகளும், வழிபாட்டு முறைகளும் தன்னுடைய குடும்பம் சார்ந்தும், தன்னுடைய சமூகம் சார்ந்தும் ஒன்றிணைந்து அதனை மேற்கொள்வதனால் மன அமைதியையும், திருப்தியையும், சமூக ஒற்றுமையையும் மேம்படுத்தி வருகின்றது. அத்தோடு இன்றும் தோட்டப்புற மக்கள் சமய கலாசார பண்பாட்டினையும் சடங்கு முறைகளையும் காப்பாற்றி வருவது சிறப்பான விடயமாகும்.

உசாத்துணைப் பட்டியல்

சிவதம்பி கார்த்திகேசு, (1993). பண்பாட்டு பின்புலம்உதயம் நிறுவனம்.

வேல் முருகு, நா., (1993). மலையக மக்களின் சமய நம்பிக்கைகளும் சடங்கு முறைகளும் - வாசகர் பதிப்பகம்.

கனகரத்தினம் .இ .வை, (2016). ஈழத்து நாட்டார் வழிப்பாடு தமிழ்த்துறை பேராதனைப் பல்கலைக்கழகம் - குமாரர் அச்சகம்.

வடிவேலன், பே. (1997). மலையகத்தின் மாரியம்மன் வழிபாடும் வரலாறும் - யுனி ஆர்ட் பிறைவட் லிமிடட்.

22

தமிழர்களின் கலை கலாசார பாரம்பரியத்தில் 'காவடி' கலாசாரத்தின் வகிபங்கு

சுதாகரன் லோவிகரன்
முதுகலைமாணி இசை, மிருதங்கம் மகாத்மாகாந்தி பல்கலைக்கழகம்,
திருபுணித்துரா, எர்ணாக்குளம், கேரளா, இந்தியா.
lovikaran20@gmail.com

ஆய்வு அறிமுகம்

தமிழர்கள் தம் வாழ்வியலை கலை கலாசார பாரம்பரியங்களுடன் கொண்டு நடத்தும் இனக் குழுமமாகும். இத்தகைய இனக் குழுமத்தில் காவடியாட்டம் ஆடல்கலை வடிவிலும், இறை வழிபாடுகளில் சடங்கு மற்றும் சம்பிரதாயரீதியாகவும் முன்னெடுக்கப்படுகின்றது. இத்தகைய கலை வடிவம் உலகத்தில் தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் கலை, கலாச்சாரரீதியாகக் காணப்பட்டாலும் இலங்கைத் திருநாட்டில் தமிழர்களின் வாழ்வியலில் எத்தகைய பங்கு வகிக்கின்றது என்பது தொடர்பாகவும், காவடியாட்டம் பிரதேசத்துக்கு பிரதேசம் வேறுபட்ட சூழலில் வாழும் மக்களின் சமூகக் கட்டமைப்பினை பொறுத்து மாறுபட்ட போக்கில் காணப்படும் முறையினையும் இவ்வாய்வு ஆராய்கிறது. இத்தோடு இலங்கை வாழ் தமிழர்கள் மத்தியிலும், வேறுபட்ட இனக்குழுமத்தின் மத்தியிலும் காவடியின் அமைப்பு எவ்வாறு காணப்படுகின்றது என்பது தொடர்பாகவும் இவ்வாய்வில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் காவடியாட்டம் ஆரம்ப காலத்தில் எவ்வாறு காணப்பட்டது என்பது குறித்தும், தற்கால நவீன யுகத்தில் காணப்படும் வேறுபாட்டினையும் இவ்வாய்வு தெளிவாகக் கூறியுள்ளது.

மேலும் தமிழர் கலை கலாசாரத்தில் காவடியாட்டம் மிகவும் பெருமைமிக்க பேசும் கலையாகக் காணப்பட்டாலும் ஏனைய இனத்தவர்களின் கலாசாரத்திலும் காணப்படும் செல்வாக்கினையும்

சிறு பகுதியாகக் கூறமுற்பட்டுள்ளது. இத்தோடு இவ் ஆய்வின் எல்லையாக இலங்கை வாழ் தமிழர்கள் மத்தியில் காவடியாட்டம் பெரிதும் பின்பற்றப்படும் கலாசாரமாக காணப்பட்டாலும் கிழக்கிலங்கையில் காரைதீவில் மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோத்சவத்தின் இறுதி நாளான தீத்தோட்சபத்தில் பக்தர்களால் முன்னெடுக்கப்படும் காவடியாட்டத்தின் கட்டமைப்புகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் ஆய்வின் நோக்கம், எல்லை, குறிக்கோள் என்பவற்றை கொண்டு காவடியாட்டம் ஆரம்பகால முதல் தற்கால நவீன யுகம் வரை தமிழர்கள் கலைகலாசார பாரம்பரியத்தில் எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளது என்பது குறித்து இவ் ஆய்வின் அறிமுகம் கூறி நிற்கின்றது.

ஆய்வின் நோக்கம்

இலங்கை வாழ் தமிழர்களின் முருக வழிபாட்டில் காவடியாட்ட கலாசாரம் பெரிதும் பின்பற்றப்படும் சமயச்சடங்காகும். இத்தகைய கலாசார அம்சமானது ஏனைய தமிழர்கள் கலாசாரத்திலும் நிறைந்து காணப்படுகிறது. இருப்பினும் வடக்கு மற்றும் கிழக்கிலங்கையிலும், காவடி அமைப்பு எத்தகைய வேறுபட்ட அமைப்பில் காணப்படுகின்றது எனவும், தமிழர் கலாசாரத்தில் காணப்படும் காவடியாட்டத்தின் வரலாற்று ஆதாரத்தினை வெளிக்கொண்டுவரும் நோக்குடனும், இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தோடு கிழக்கிலங்கை காரைதீவு மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் மஹோட்சவத்தின் இறுதி நாளான தீத்தோட்ஷபத்தில் பக்தர்களால் எடுக்கப்படும் காவடி திருவிழாவினை உலக மக்களுக்கு உரக்கச் சொல்வதாகவும் இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆய்வு முறையியல்

தமிழர் கலை கலாசார அம்சங்கள், வரலாற்று ஆதாரங்களைக் கொண்டு இவ்வாய்வு ஆராயப்பட்டதனால் வரலாற்று ஆய்வாகவும், மேலும் இவ்வாய்வு முழுமையாக வடக்கு, கிழக்கு பகுதிகளில் காணப்படுகின்ற காவடி அமைப்பு மற்றும் அது பயன்படுத்தப்படும் ஆலயங்கள் சார்ந்து பல தகவல்களைத் திரட்டியமையினால் நேரடி கள ஆய்வாகவும், இத்தோடு வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில்

காணப்படுகின்ற தமிழர் கலை கலாசாரத்தின் காவடி ஆட்டம் சார்ந்த விடயங்களைத் தொகுத்து கூறியுள்ளமையினால் இது தொகுப்பாய்வாகவும் கருதப்படுகின்றது.

ஆய்வுப்பொருள்

தமிழர்களின் கலைகலாசார பாரம்பரியத்தில் காவடிக் கலாசாரத்தின் வகிபங்கு என்னும் தலைப்பினை கொண்ட இவ் ஆய்வானது ஆய்வின் முதலில் காவடிக் கலாசாரத்தின் அறிமுகம் என்னும் உப தலைப்பின் ஊடாக காவடியாட்டம் எனப்படுவதன் பொருள் குறித்தும், காவடியாட்டம் சடங்கு சம்பிரதாய ரீதியாகப் பின்பற்றப்படும் தெய்வ வழிபாடுகள் சம்பந்தமாகவும், நடன நிகழ்த்துக்கலை வடிவங்களில் ஒரு பாகமாக காணப்படும் கிராமிய நடனக் கூறுகளுள் ஒன்றாகவும் திகழும் ஆட்டமாக காவடி ஆட்டத்தின் இரு வேறுபட்ட தளத்தினைக் கூறி நிற்கின்றது. இத்தோடு ஆரம்பக் காலத்தில் காவடி எத்தகைய கருப்பொருளுடன் பேணப்பட்டுள்ளது என்பதனையும் தற்காலத்தில் தமிழர் கலை கலாசாரத்தில் எத்தகைய இடத்தில் காணப்படுகின்றது என்பது தொடர்பாகவும் விளக்கியுள்ளது.

மேலும் இவ்வுலகத்தில் வாழும் தமிழர் சமுதாயத்தில் பெரிதும் பயன்படுத்தப்படும் காவடியாட்டம் பிறஇனத்தவர் மத்தியிலும் காணப்படும் விதத்தினையும், பிரதேசம் மற்றும் இன வாரியாகப் பிரித்துக் கூறியுள்ளது. இதனை அடுத்து தமிழர் பாரம்பரிய புராண இதிகாச ஆதாரத்தின்பால் காவடியாட்டம் தோற்றம் பெற்ற வரலாற்றினை காவடியாட்டத்தின் புராண வரலாறு என்னும் இரண்டாவது உப தலைப்பின் மூலம் இயம்பி நிற்கின்றது.

இதனைத் தொடர்ந்து காவடியின் வகைப்பாடு என்னும் தலைப்பில் தமிழர் கலாசாரத்தின் காணப்படும் காவடிகளின் வகைப்பாடுகளையும், அதற்கமைய காவடி எடுப்பதற்கான நோக்கத்தினையும் இலக்கியத்தின்பாலும் நடைமுறை நம்பிக்கைகளின் மூலமும் கூறி நிற்கின்றது. இத்தோடு இலங்கைத் திருநாட்டில் காணப்படும் சிறப்புமிக்க முருக ஆலயங்களையும் அதன் பெயர்ப் பட்டியலையும் கூறியுள்ளது. இதனை அடுத்து இலங்கையில் பிரதேச ரீதியாகக் காணப்படும் வேறுபட்ட காவடி அமைப்புகளை அதன் உருவாக்கத்தின்பால் வேறுபடுத்திக் காட்டியுள்ளது. இத்தோடு ஆய்வின் மூலமாகக் காணப்படும்

காரைதீவுப் பிரதேசத்தில் மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோட்சவத்தின் இறுதி நாளில் நடைபெறும் ஆடிவேல் தீர்த்தத்தில் பின்பற்றப்படும் காவடி திருவிழா குறித்த ஆய்வு தகவல்களுடன் ஆய்வு முற்றுப் பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து ஆய்வின் முடிவுரையுடன் தமிழர் கலை கலாசார பாரம்பரியத்தில் காவடியாட்டமும், இத்தகைய காவடி ஆட்டத்தின் கட்டமைப்புகளை கூறியும் தலைப்பிற்கும் ஆய்வு எல்லை, நோக்கங்களுக்கு பொருத்தப்பாடு கூறியும் இவ்வாய்வு ஆய்வாளரால் முற்றுப்பெற்றுள்ளது.

ஆய்வு முடிவுரை

தமிழர்கள் கலை கலாசார ரீதியாக பல்வேறுபட்ட கலை அம்சங்களை தம்மகத்தே கொண்டுள்ளனர் இவற்றுள் காவடியாட்டமும் ஒன்றாகும். இத்தகைய கலை வடிவம் பிரதேசங்களுக்கு பிரதேசம் வேறுபட்ட போக்கில் காணப்படுகின்றது. இத்தோடு காவடியாட்டத்தின் மூலமாகக் காணப்படும் காவடிகள் பல்வேறு வகைப்பாடுகளைக் கொண்டுள்ளன. மேலும் அத்தகைய காவடிகள் குறித்து சிறப்பு வழிபாடுகளும் காணப்படுகிறன. மேற்குறிப்பிடப்பட்ட காவடி வகைப்பாடு எல்லா பிரதேசங்களிலும் பின்பற்றப்படுவதில்லை. மேலும் ஆடிவேல் திருவிழா ஆடி மாசத்தில் முருகனுக்காக 15 நாட்கள் பின்பற்றப்படும் திருவிழாவாகும். இத்தகைய 15 நாட்களின் பின்னர் இறுதி நாளான முருகனின் தீர்த்தக் கரையில் தீர்த்தம் ஆடச் செல்லும்போது பக்தர்கள் காவடி தூக்கி பக்தியுடன் முள்ளு குத்தி, முருகன் ஆலயத்தில் இருந்து புறப்பட்டது முதல் தேரோடும் வழியாக தீர்த்தக்கரை அடைந்து பின்னர் ஆலயம் வந்து சேர்வது முதல் காவடிகள் படைசூழ் அன்றைய ஆடிவேல் திருவிழா கலாசார ரீதியாக பெரிதும் விமர்சையாகக் கொண்டாடப்படுகின்றது. இத்தோடு வேறுபட்ட சமூகத்தவர் மத்தியிலும் அவரவர் வரன்முறைகளுக்கும், கட்டமைப்புகளுக்கும் ஏற்ப காவடியாட்டம் ஒரு தமிழர் கலையாக பின்பற்றப்படுகின்றது. இதன் அடிப்படையில் தமிழர்கள் கலைகலாசாரத்தில் காவடியாட்டம் முருக வழிபாடுகளில் பெரிதும் கூறும் அளவுக்கு கலை திருவிழாவாகப் பின்பற்றப்படுகின்றது என்பதனை இவ்வாய்வின் முடிவுப் பொருளாக கூற முடியும். இத்தோடு இனம் சார்ந்தும், பிரதேசம் சார்ந்தும், வேறுபட்ட கட்டமைப்புகளில்

காவடித் திருவிழா அல்லது காவடியாட்டம் பின்பற்றப்படுகின்றது. என்பது ஆய்வின் கருப்பொருளாகும்.

உசாத்துணை

அறிவுராஜ், நா., ஆ. குமார், (2023). தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும், ஐந்தாம் பதிப்பு.

இணையவழி

<https://tamil.timesnownews.com/spirituality/thaipoosam-2024-kavadi-special-different-types-of-kavadi-article-107100299>

<https://en.wikipedia.org/wiki/Kavadi_Aattam>

https://www.karaitivu.org/search?updated-max=2024-01-31T06%3A22%3A00%2B05%3A30&max-results=7#PageNo=3 <https://www.karaitivu.org/search?updated-max=2024-0131T06%3A22%3A00%2B05%3A30&max-results=7>

23

தமிழர்களின் கலை, பண்பாட்டு மரபுகளில் உலகமயமாக்கத்தின் தாக்கம் - ஈழத்தமிழர் கூத்துக் கலையை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

கலாநிதி எம்.பி.ரவிச்சந்திரா
விரிவுரையாளர், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, இலங்கை.
primraj@gmail.com

அறிமுகம்

இலங்கை சுதந்திரத்திற்குப் பின் ஐம்பதுகளில் ஏற்பட்ட அரசியல் சமூக பொருளாதார மாற்றம், அந்தப் பின்புலத்தில் முகிழ்த்த சுதேசிய சிந்தனை, தனிச் சிங்கள சட்டம், தமிழ் அரசியல் விழிப்புணர்வு என்பன தமிழர் தம் சுதேசிய சிந்தனையை விழிப்படையச் செய்தது எனலாம். இதன் காரணமாக பாரம்பரிய கலைத் தேடலும் பண்பாடும் புத்துணர்ச்சி பெறுகிறது. பாமரருக்குரிய கலையாக இருந்த கூத்து கற்றோரும் பார்த்து இரசிக்கும் கலையாக அளிக்கை செய்யப்படுகிறது.

இவ்வாறாக கூத்துக்கலை சமூக அரங்காக, சமூக மாற்றத்திற்கான அரங்காக, அரசியல் பேசும் அரங்காக, பிணி நீக்க அரங்காக பல்வேறு பரிமாணங்களை இலங்கைத் தமிழ்க் கலைத் துறையில் பெற்றுள்ளது. ஆயினும், நமது கூத்துக்கலை கிராமங்களில் முன்பிருந்த நிலையில் இருந்து மிக மிக அருகிய வழக்கிலுள்ளது. அதே வேளை கிராமத்திலும் நகரத்திலும் கூத்துக்கள் முழுமையான கூத்தளிக்கையாக இல்லாமல் நவீன நாடக அம்சங்களை உள்வாங்கி இருந்தன. அல்லது நவீன நாடகங்கள் கூத்து கலையின் அம்சங்களை உள்வாங்கி இருந்தன. இராவணேசன், சங்காரம், பொய் கால் குதிரை, மாயமான், தெரு வெளி அரங்கு, நவீன பத்மாசுரன், செம்பவளக் காளி, தாடகை வதம், நெருப்புக்குள் வாழ்வு போன்ற பலவற்றை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

ஈழத் தமிழர்களின் கலை பண்பாட்டு மரபுகளின் இத்தகைய நிலைகளுக்கு இக்காலகட்டத்தில் ஏற்பட்ட சமூக அசைவியக்கம், இயற்கை அனர்த்தங்கள், தொற்று நோய்த் தாக்கம், பொருளாதார முடக்கம் போன்ற காரணங்களைக் கூறலாம். இவற்றுக்கு மேலாக உலகமயமாக்கத்தின் தாக்கத்தினால் ஏற்பட்ட தொழில்நுட்பப் புரட்சியையும் குறிப்பிடலாம்.

சமூக அசைவியக்கத்துக்கு கடந்த 30 ஆண்டுகளாக இடம்பெற்ற தொடர்ச்சியான போர் முக்கியமான காரணமாகும். 1983ல் இடம்பெற்ற இன வன்முறை, 1987 இல் ஏற்பட்ட வடமராட்சி இராணுவ நடவடிக்கை, 1988 தொடக்கம் 1989 வரையில் மேற்கொள்ளப்பட்ட இந்திய இராணுவ நடவடிக்கை, 1990 இல் மேற்கொள்ளப்பட்ட இலங்கை இராணுவ நடவடிக்கை, 1996 இல் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை. (சூரிய கதிர்), அதனைத் தொடர்ந்து வன்னியை மையமாகக் கொண்ட இராணுவ நடவடிக்கை (பல கட்டங்கள்), 2006 இல் இருந்து 2009 மே மாதம் வரை முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை, விடுதலை ஸ்தாபனங்களுக்கிடையிலான முரண்பாடுகள், 2019 இடம்பெற்ற ஈஸ்டர் குண்டு தாக்குதல் ஆகியன இவ்வகையில் குறிப்பிடத்தக்கன.

இவற்றைத் தொடர்ந்து ஏற்பட்ட 1957 வெள்ளப்பெருக்கு, 1963, 1978 இடம்பெற்ற சூறாவளி, 2004 இல் இடம் பெற்ற ஆழிப்பேரலை (சுனாமி), 2010, 2011, 2014யில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குகள், 2020, 21, 22 காலப்பகுதியில் ஏற்பட்ட கொரோனா பெரும் தொற்று நோய், 2022 தொடக்கம் 24 வரை உச்சமடைந்த பொருளாதார முடக்கம் ஆகிய இயற்கையனர்த்தங்கள் குறிப்பிடத்தக்கன. இவற்றைக் கடந்த நிலையில், உலகமயமாக்கத்தின் தாக்கம் காரணமாக ஏற்பட்ட தொழில்நுட்பப் புரட்சியின் அடிப்படையில் பல விளைவுகள் ஏற்பட்டன.

இவற்றை நாம் கருத்தில் கொள்வது முக்கியமானது. தொடர்ச்சியான போர் அச்சம் காரணமாக பாரம்பரிய தொழில்களைக் கைவிட்டமை, வெளிநாடுகளுக்கு மக்கள் புலம்பெயர்ந்தமை, கிராமத்திலிருந்து நகரத்திற்குப் புலம்பெயர்ந்தமை, இளம் தலைமுறை தொடர்ச்சியாக கல்வியில் நாட்டம் செலுத்தியமை, கல்விக்கு ஏற்ற தொழில் நாடியமையாலும்

பாதுகாப்புக் கருதியமையாலும்; புதியதொரு மத்திய வர்க்கம் உருவாகியமை, போர்ச்சூழலும் தொடர் உழைப்பும் தொடர் கல்வியும் கலைகளைப் பேணுவதிலுள்ள நாட்டத்தைக் குறைத்தமை, போர்ச்சூழல் காரணமாக வடக்குக் கிழக்கில் ஏற்பட்ட போக்குவரத்துத் தடைகள், நேரக் கட்டுப்பாடுகள், ஊரடங்குகள், போர்ச் சூழலும் புலம்பெயர்வும் மாற்று நாகரிக சிந்தனையைத் தோற்றுவித்தமை முதலானவை குறிப்பிடத்தக்கன எனலாம்.

இயற்கை அனர்த்தத்தின் பின் ஏற்பட்ட பண்பாட்டு மாற்றம், கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக ஏற்பட்ட நாடு தழுவிய செயற்பாட்டு முடக்கம், ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் காரணமாக ஏற்பட்ட அச்ச நிலை, பொருளாதார முடக்கத்தின் காரணமாக ஏற்பட்ட பணவீக்கம், அரசியல் ஸ்;திரமின்மை, போராட்டங்கள், புரட்சிகள், நாடு தழுவிய வறுமை நிலை, பணவீக்கம், பாடசாலைகள், அலுவலகங்கள், தொழில் நிலைகளின் முடக்கம், இறக்குமதித் தடைகள் ஆகியனவும் தாக்கம் செலுத்தியுள்ளன. மேலும், 2000 ஆம் ஆண்டில் ஏற்பட்ட உலகமயமாக்கத்தின் சிந்தனை விளைவால் தொழில்நுட்பப் புரட்சியின் தாக்கம் காரணமாக இணையத்தளப் பயன்பாடு, டிஜிட்டல் யுகம், தொழில் புரட்சி, தொழில்நுட்பப் புரட்சி எனச் சமூகம் அடைந்த மாற்றங்களும் எமது கலையிலும் கலை வாழ்விலும் தாக்கத்தை செலுத்தி உள்ளதோடு எமது பண்பாட்டு மாற்றத்திலும் தாக்கத்தைச் செலுத்தி உள்ளன. கலைஞரையும் படைப்பாளிகளையும் காவுகொண்டுள்ளன. இந்த அழிவுகளுக்குப் பின்னால் ஏற்பட்ட உலகமயமாக்கத்தின் சிந்தனை வெளிப்பாடு காரணமாக ஏற்பட்ட தொழில்நுட்பப் புரட்சியில் இருந்து எமது கலையையும் பண்பாட்டையும் எவ்வாறு மீட்டெடுக்கப் போகின்றோம் என்ற வினா எழுகின்றது.

மேலும், இன்று சர்வதேச மட்டத்தில் ஏற்பட்ட கொள்கை வகுப்புகள், வல்லரசுகளுக்கு இடையேயான ஆதிக்கப் போட்டிகள், சம உடமை பொருளாதாரக் கொள்கை தோல்வி கண்டு முதலாளித்துவம் நோக்கிய நகர்வுகள் மேற்கொள்ளப்பட்;டமை, திறந்த பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதாகக் கூறி முதலாளித்துவ சுரண்டல் பொருளாதார முறை வளர்முக நாடுகளில் அபிவிருத்தி என்னும் போர்வையில் மேற்கொள்ளப்பட்டமை ஆகியவற்றால் இதனால் பாரிய

முதலீடுகளை மேற்கொள்வதாகக் காட்டி வளர்முக நாடுகளின் பொருளாதாரம் ஏப்பம் விடப்படுகின்றது. வல்லரசுகளின் உலகமயமாதல் சிந்தனை மிலேனியத்தில் ஒரே மொழி, ஒரே மதம், ஒரே பண்பாடு, ஒரே நாடு என்ற சிந்தனைப் போக்கின் வீரியம் பொருளாதார உற்பத்தி முறைகளிலும் தாக்கத்தைச் செலுத்தியது. இதனால் தொழில் நுட்பப் போட்டி நிலை உருவாக்கப்படுகின்றது.

இத்தொழில் நுட்ப போட்டி நிலை காரணமாக கணினி யுகத்தின் வளர்ச்சி, சர்வதேச வலைப்பின்னல், டிஜிட்டல் யுக எழுச்சி என்பன முதலாளித்துவ வர்க்கத்தினரிடம் மாத்திரமல்லாமல் மத்தியர வர்க்கத்திடமும் கிராமத்தில் இளம் தலைமுறைகளிடமும் செல்வாக்குச் செலுத்தத் தொடங்குகின்றன. இதன் தாக்கத்தை எமது தென்னிந்திய சினிமாத் துறையில் காண முடிகின்றது. துரதிஷ்டவசமாக இலங்கைத் தமிழ் மக்களிடம் சினிமா இரசனை வளர்ந்த அளவிற்குச் சினிமா தயாரிக்கும் சிந்தனை பெரிய அளவில் வளரவில்லை. மேலும், சினிமாத் துறையின் துல்லியமான காட்சி அமைப்புகள், பொய்மையை மெய்மையாகக் காட்டும் காட்சி அமைப்புகள், முப்பரிமாண சினிமாக்களைத் தயாரிக்கும் பரிசோதனை முயற்சிகள், டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இசை அமைத்தல், புகைப்படங்கள் எடுத்தல் என நவீன தொழில்நுட்ப ஆதிக்கம் தொலைக்காட்சி, வானொலி, சினிமாத்துறை என்பவற்றில் செல்வாக்கு செலுத்துகின்றது.

இந்தக் கவர்ச்சிக்கு முன்னால் எமது கூத்துக்கலையை எவ்வாறு சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு செல்லலாம், நமது மக்களின் இரசனைக்குரிய கலையாக மீளளிப்புச் செய்யலாம் என்பன இன்று நம் முன் உள்ள சவால்களாகும். நாம் வாழும் இன்றைய நவீன காலத்தில் உலகின் அனைத்துப் பண்பாடுகளுமே விரைந்து மாற்றத்தைப் பெற்று வரும் காலமாகும். மாற்றத்துக்கு உட்படாத பண்பாடு இல்லை எனலாம். ஒவ்வொரு பண்பாட்டிலும் மாற்றங்கள், பல காலமாக நிகழ்ந்து வந்தாலும் இடம், காலம் ஆகியவற்றுக்கு ஏற்ப மாற்றத்தின் அளவு வீதம் வேறுபடுகின்றது.

இவ்வகையில் ஒரு சமுதாய வாழ்வில் மாற்றம் வளர்ச்சி ஆகியவற்றைக் காட்டிலும் வேறு எந்த நிகழ்வும் அச்சமுதாயத்திற்குப் பெரும் சவாலாக இருக்க முடியாது. ஒரு பண்பாட்டின் அனைத்துத் துறைகளிலும் மாற்றங்கள் நிகழ்ந்து

விடுவதில்லை. அதே போல ஒரு பல்லின சமுதாயத்தில் உள்ள அனைத்துப் பிரிவினரிடமும் ஒரே வகையில் மாற்றங்கள் நிகழ்வதில்லை. நம் சொந்தக் கலை, பண்பாட்டை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

ஐரோப்பியரின் வருகைக்கு முன்பு இருந்த கூத்துக்கலைக்கும் ஐரோப்பியரின் வருகைக்குப் பின்பு இருந்த கூத்துக்கலைக்கும் பெண் வேடம் தாங்கி வருபவர் தன்னைப் பெண்ணாக அடையாளப்படுத்தக் கையில் தாங்கி வந்த பொருளில் ஏற்பட்ட மாற்றத்தை எடுத்துக்காட்டாகக் கூறலாம். கிளிக்குப் பதிலாக கைக்குட்டையைத் தமிழ்க் கூத்தில் எப்போது இணைத்துக் கொண்டார்கள். பண்பாட்டு மாற்றம் ஒரு சிக்கலான நிகழ்வாகும். இதைப் பல காரணிகள் தீர்மானிக்கின்றன. கண்டுபிடிப்புகள், புரட்சி, நவீனமாதல் முதல் உலகமயமாதல் வரை இன்று அது விரிந்து கிடக்கின்றது.

மரபுச் சமுதாயங்கள் தொழில்மயமான நாடுகளின் தொழில்நுட்ப முறைகளையும் சமுதாய பண்பாட்டு முறைகளையும் ஏற்கும் நிகழ்வே நவீனமாதல் எனப்படுகிறது. நவீனமாதலின் அனைத்துப் பிரிவுகளிலும் மேம்பட்ட கருவிகளைப் பயன்படுத்துதல், உற்பத்தி முறைகளைத் தற்சார்பு முறைக்குக் கொண்டு வந்து பின்னர் உற்பத்தி முறைக்கு வழி கோலுதல், உற்பத்தி முறைகளைத் தொழில்மயமாக்குதல், இதற்கு உயர்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த முயலுதல், அங்காடி பொருளியலுக்குள் நுழைதல், நகர வாழ்க்கையை மேற்கொள்ளுதல், மைய அரசு முறையை ஏற்க முனைதல், உறவுமுறை சாராக் குழுக்களை ஏற்படுத்துதல், புதுப் புனைவுகளையும் மாற்றங்களையும் பெரிதும் விரும்புதல் என அனைத்தும் நவீனமாதலில் அடங்கும். இந்த வகையில் கூத்துக்கலையும் பல கால தேசவர்த்தமானங்களைக் கடந்து நவீனமாதல் செல்வாக்குக்கு உட்பட்டிருக்கின்றது. ஆதலால்தான், இன்றும் தமிழரின் தேசிய அடையாளமாக கூத்து நோக்கப்படுகின்றது.

இந்த நவீனமாதல் சிந்தனை உலகமயமாக்களின் தவிர்க்க முடியாத ஒரு கூறாக உள்ளது. வாழ்க்கை அனுபவ உணர்வின் வெளிப்பாடு கலையாகவும் இலக்கியமாகவும் உருவெடுக்கும். அது

ஒருவனது சொந்த வாழ்வில் அனுபவித்து, உணர்வது மட்டுமின்றி பிறரது அனுபவங்களில் இருந்தும் பெற்றுக்கொள்வது. மனிதனோ மனித நாகரீகமோ இன்றோ நேற்றோ திடீரென்று தோன்றியது அல்ல. ஆரம்பம் முதல் இன்று வரை மனிதன் எத்தனையோ சவால்களை, இடையூறுகளை போராடித்தான் வென்று முன்னேறி இருக்கின்றான் என்பதை வரலாறு உணர்த்துகின்றது. வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கலை இலக்கியங்களில் இவ் வரலாற்றுப் போராட்டங்களில் தாக்கங்களை கண்டுகொள்ள முடியும். இது கூத்துக்களுக்கும் விதிவிலக்கான ஒன்றல்ல. காலத்தின் இயல்புகளையும் தேவைகளையும் உணராது வரலாற்றையும் மரபையும் நோக்குவது தவறாகும்.

இந்த வகையில் கூத்தை அதனை ஆக்கிய மக்கள் வாழ்ந்த பகைப்புலத்தில் வைத்து மதிப்பிட வேண்டும். சமூக வளர்ச்சியில் கலை பண்பாட்டில் ஏற்பட்ட மாற்றத்தின் அடிப்படையில் எந்தப் படிநிலையில் நிற்கையில் பிறந்தது இக்கூத்துக்கலை என்பது நோக்கப்பட வேண்டும். அவ்வாறு மதிப்பிடவும் நோக்கவும் இயலாதவர்கள் மரபைப் பற்றிப் பேசுவது இக்கலைக்குக் குந்தகமாகவே அமையும். இவ்வகை சமூகப் பொருளாதார முறைமைகளில் புரட்சிகரமான மாற்றங்களை விரும்பும் பொதுவுடைமை வாதிகள் மரபுகளுக்கு மதிப்பளிப்பதில்லை என்ற தவறான எண்ணம் சிலரிடம் உண்டு. ஆனால், மனித முன்னேற்றத்திற்கு உதவும் மரபுகளை அவை எந்தக் காலத்தினைச் சேர்ந்தவையாக இருப்பினும் எந்த இனத்தினுடையதாக இருப்பினும் அவற்றை மதிக்கவும் தம் முதுசங்களாகச் சுவீகரித்துக் கொள்ளவும் பொதுவுடைமை வாதிகள் தயங்குவதில்லை.

கலை கலைக்காகவே தோன்றி கலைக்காகவே முடிவது என்றெல்லாம் கூறுபவர்கள் மரபுகளை அறியவோ மதிக்கவோ தவறக்கூடும். ஆனால், மனித வளர்ச்சியை ஒட்டி இலக்கிய வளர்ச்சியைப் பார்க்கும் பொதுவுடைமைவாதிகள் இவ்வாறு நோக்குவதில்லை. அதே வேளை தேசிய மரபைப் பேணும் விளைவால் உலக இலக்கிய வளர்ச்சியைக் காண மறுப்பதன் மூலம் பார்வையையும் வளர்ச்சியையும் ஒடுக்கிவிடலாம். எனவே, சொந்தக் கால்களில் நின்றுகொண்டு வளர்ச்சிக்கான வழிவகைகளைக் காண நாலா திசைகளிலும் பார்வையைச் செலுத்திக்கொண்டு தேசிய உணர்வையும் ஒருமைப்பாட்டு

உணர்வையும் செயலூக்கத்தையும் வளர்த்தற் பொருட்டு மரபுகள் தேடப்படுவதும் பேணப்படுவதும் உண்டு. இது நமது கூத்துக் கலைக்கும் பொருந்தும். உலகமயமாக்களின் விளைவுகளில் இதனை நாம் அனுசரித்தே ஆக வேண்டும்.

தொகுப்புரை

தமிழர்களின் கலை பண்பாட்டு மரபுகள் சமூக அசைவியக்கம், இயற்கை அனர்த்தங்கள், கொரோனா பெருந்தொற்று, பொருளாதார முடக்கம் எனப் பல சவால்களைச் சந்தித்துள்ளது. இந்தப் பின்புலத்தில் உலகமயமாக்கத்தின் தாக்கத்திற்கு ஈடுகொடுக்கக்கூடிய வகையில் நமது மரபுக் கலைகளும் பண்பாடும் மாற்றங்களை உள்வாங்காவிட்டால் அவை உலகமயமாக்களின் தாக்கத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் போகும். எனவே, மாற்றங்களைக் காலத்துக்கு ஏற்ற வகையில் ஏற்றுக்கொண்டு முன்னோக்கிச் செல்லுதல் வேண்டும். தொழில் புரட்சி, தொழில்நுட்பப் புரட்சி, டிஜிட்டல் யுகம் ஆகியவற்றுக்கு ஏற்ற முறையில் உலகமயமாக்கலின் தாக்கத்திற்கு முகம் கொடுக்கக்கூடிய சவால்களை எமது மரபுக் கலையில் நாம் கையாளுதல் வேண்டும். இக்கலையை மேம்படுத்த மேடை அமைப்பு, ஒப்பனை, இசை, ஒலியொளி அமைப்புக்களில் மாற்றங்களை உள்வாங்க வேண்டும். அவ்வாறு உள்வாங்கும்போது ஒரு தொழில் துறையாக, புதிய தொழில்நுட்ப முயற்சிக்கு உட்பட்டதாக மாற்றமடையும். அத்தோடு சர்வதேச மட்டத்துக்குக் கொண்டு செல்வதற்கு, சர்வதேச தரம் வாய்ந்த ஒரு கலைத் துறையாக மாற்றுவதற்கு இதனை ஒரு தொழிற் துறையாக உல்லாசப்பயணத்துறையுடன் இணைக்க வேண்டும். அப்போதுதான் எமது பாரம்பரியங்களையும் மரபுகளையும் கலைகளையும் தொடரறாத் தொடர்புகளுடன் பேணுவதற்கு முடியும்.

உசாத்துணை

சிதம்பரநாதன்.க. (2000). சமூக நெருக்கடி நிலையில் அரங்கின் பரிமாணங்கள், யாழ் பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை.

பக்தவக்சல பாரதி (2002). தமிழர் மானுடவியல், சென்னை.

பக்தவச்சல பாரதி (2003). பண்பாட்டு மானுடவியல், புதுச்சேரி, சென்னை.

மதிசூதனன். தெ. (1997). அரங்கின் பரிமாணங்கள், ஜீவாகரன் ராஜகிரிய, இலங்கை.

ரவிச்சந்திரா. எம்.பி. (2014). ஈழத்துத் தமிழ்க் கூத்து - ஒரு பார்வையும் பதிவும், மட்டக்களப்பு, இலங்கை.

24

குழந்தைகளுக்குரிய தமிழ் பாரம்பரிய விளையாட்டுக்கள் கற்றுக்கொடுத்த வாழ்வியல் தத்துவம்

யே. ஹெரோசினி
இலங்கை. herosinijesurasa@gmail.com

அறிமுகம்

மனிதனது வாழ்விலும் பண்பாட்டிலும் விளையாட்டுக்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. மனிதனது உடல் நலத்திற்கும் உள நலத்திற்கும் விளையாட்டுக்கள் ஆற்றிவந்த பங்களிப்பு அளப்பரியது. விளையாட்டு என்பது ஒருவர் தனது ஓய்வு நேரத்தில் இயல்பாக ஈடுபடும் செயல்பாட்டினை குறிப்பதாகும். இது ஒருவரின் ஆக்கச் சிந்தனையினை அதிக அளவில் வெளிப்படுத்துகின்ற செயலாகும். குழந்தைகளின் உடலும் உள்ளமும் வலுப்பெற பாரம்பரிய விளையாட்டுக்கள் அவசியமானவை பாரம்பரிய விடயங்களைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்பதன் அடிப்படையில் ஒவ்வொரு வருடமும் சித்திரை 18ஆம் திகதி உலக பாரம்பரிய தினம் கொண்டாடப்படுகின்றது. எனவே, சிறுவர்களுக்கான பாரம்பரிய விளையாட்டுக்கள் அழிந்துவிடாமல் எதிர்கால தலைமுறைக்குக் கொண்டு செல்வது இன்றியமையாதது. வைகாசி மாதம் 28ஆம் திகதி சர்வதேச குழந்தைகள் விளையாட்டு உரிமை தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. நவீன விளையாட்டுக்கள் உருவாகுவதற்கு அடிப்படையாக அமைந்தது பாரம்பரிய விளையாட்டுக்கள் ஆகும். பாரம்பரிய விளையாட்டுக்கள் விளையாட்டோடு இணைந்து வரலாற்றையும் வாழ்வியல் தத்துவத்தினையும் கற்றுக்கொடுத்துள்ளது. பாரம்பரிய விளையாட்டுக்களாக சுங்கரக்காய், பல்லாங்குழி, குட்டன் சோறு, சொப்பு சாமான்கள், தாயம், ஆடுபுலி ஆட்டம், சதுரங்கம், உறியடி, கண்ணாமூச்சி, கபடி, கோகோ, நீச்சல் போட்டி, சில்லுக்குச்சி, ஓடிப்

பிடிக்கும் விளையாட்டு போன்றவற்றில் ஈடுபட்டுள்ளார்கள். பாரம்பரிய விளையாட்டுக்களானவை வாழ்க்கைப் பாடங்களை கற்றுத்தரும் நிலையில் உருவாக்கப்பட்டுள்ளன. எனவே தமிழர்கள் கண்டுபிடித்த விளையாட்டுக்கள் குழந்தைகளின் உடல் நலம், மனநலம், சிந்தனை, மொழி, பண்பாடு, கணிதம், நிர்வாகம், வாழ்வியல், விடாமுயற்சி போன்ற அனைத்தையும் மேம்படுத்தக்கூடியதாக இருந்துள்ளன. உலகமயமாக்கல் சூழ்நிலையில் அனைத்தும் தனக்குத்தான் என்ற சுயநல மனோபாவம் அதிகரித்து வருகின்ற நிலையில் பாரம்பரிய விளையாட்டுக்கள் ஊடாக வெளிப்பட்ட வாழ்வியல் தத்துவத்தினை ஆய்விற்குட்படுத்துதல் வேண்டும்.

மனித சமூகத்தின் கூட்டு வாழ்க்கை ஆரம்பிப்பதற்கு முன்பே விளையாட்டுக்கள் ஆரம்பிக்கப்பட்டுச் செல்வாக்குப் பெற்றுவிட்டன. இதனால் மனித நாகரிக வரலாற்றில் பல்வேறு படிமுறைகளுக்கும் உரிய பல விளையாட்டுக்கள் தோற்றம் பெற்று வளர்ந்து வந்துள்ளன. அவை அனைத்து இடங்களிலும் ஒரே மாதிரியான விளையாட்டாக அமையவில்லை. பொதுவாக பாரம்பரிய விளையாட்டுக்களில் பயன்படுத்தப்பட்டுள்ள பொருட்கள் குறிப்பிட்ட பிரதேசத்தில் பெறப்பட்டனவாக இருந்துள்ளன. அத்தோடு குறித்த பிரதேசத்தில் பெறக்கூடிய இயற்கையின் வளங்களை நுகர்வதற்கு உதவுவதாக அல்லது இயற்கையால் ஏற்படும் சவால்களைச் சமாளிக்கப் பயிற்சி அளிப்பனவாக பாரம்பரிய விளையாட்டுக்கள் விளங்கின. குழந்தைகளுடைய விளையாட்டு இடங்களாக திண்ணைகளும் வீதிகளும் காணப்பட்டுள்ளன. சமகாலக் குழந்தைகள் தொலைபேசி மற்றும் கணனியில் உள்ள விளையாட்டுக்களில் அதிகளவு கவனம் செலுத்தியுள்ளார்கள். இதனால் சுய கற்றல், பேச்சுத்திறன் போன்றவை பாதிக்கப்படுகின்றன. சமகால தொழில்நுட்ப வளர்ச்சியால் உருவான விளையாட்டுக்கள் குழந்தைகளிடத்தில் வன்மம், கோபம், எரிச்சல், பொறாமை போன்ற கசப்புணர்வுகளை உருவாக்கியுள்ளன. ஆய்வில் இரு கருதுகோள்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. பாரம்பரிய விளையாட்டுக்கள் குழந்தைகளிடையே பல்வேறு வாழ்வியல் தத்துவங்களை வளர்த்துள்ளன,பாரம்பரிய விளையாட்டுக்கள் வாழ்வியல் தத்துவத்தின் பிரதிபலிப்பே ஆகும் என்பவையே அவையாகும்.

ஆய்வின் நோக்கம்

பாரம்பரிய விளையாட்டுக்கள் மூலமாக பல்வேறு வாழ்வியல் கருத்துக்கள் குழந்தைகளிடையே புடமிடப்பட்டுள்ளன. எவ்வாறான வாழ்வியல் தத்துவமானது புடமிடப்பட்டுள்ளது என்பதனை அடையாளம் காணல், அவற்றில் வெளிப்பட்ட வாழ்வியல் தத்துவங்களை எதிர்கால சந்ததியினர் உள்வாங்கச் செய்வதற்கான ஆர்வத்தினை ஏற்படுத்துதல், அவற்றைப் பகுப்பாய்விற்கு உட்படுத்துதல். அவ்விளையாட்டுக்களில் மிளிர்ந்த வாழ்வியல் தத்துவம் தொடர்பான பிரக்ஞையை சமகால குழந்தைகளுக்கு எடுத்துரைத்தல் என்பன இவ்வாய்வின் நோக்கங்களாகின்றன.

ஆய்வின் முறையியல்

இவ் ஆய்விற்கு உய்த்தறிவு, தொகுத்தறிவு மற்றும் விபரண ஆய்வு முறையியல்கள் கையாளப்பட்டுள்ளன. குழந்தைகளுக்கான பாரம்பரிய விளையாட்டுக்கள் தொடர்பான தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் ஆவணங்களில் இருந்து தொகுக்கப்பட்டுள்ளன. இதற்காக தொகுத்தறிவு முறையியல் ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளது. பாரம்பரிய விளையாட்டுக்களில் வெளிப்பட்ட வாழ்வியல் தத்துவம் தொடர்பான சிந்தனையினை விபரித்துக் கூறுவதற்காக விபரண ஆய்வு முறையியல் கையாளப்பட்டுள்ளது. குழந்தைகளிடையே பாரம்பரிய விளையாட்டுக்கள் மூலமாக ஆழப்படுத்தப்பட்டுள்ள வாழ்வியல் தத்துவத்தினை வெளிப்படுத்துவதற்காக உய்த்தறிவு முறையியல் உபயோகிக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய விளையாட்டுக்களால் குழந்தைகளுக்குக் கிடைத்த நன்மைகள்

பாரம்பரிய விளையாட்டுக்களால் குழந்தைகள் பல நன்மைகளை அடைந்துள்ளார்கள். மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ள பாரம்பரிய விளையாட்டுக்கள் உடலைப் பாதுகாக்கும் விளையாட்டுக்கள் எனப் பெருமைகொள்ளலாம். ஒவ்வொரு விளையாட்டிலும் பல நன்மைகளைப் பெற்றுக்கொண்டுள்ளார்கள். சிந்தனைத்திறன், கவனத்திறன், பார்வைத்திறன் என ஒவ்வொரு விளையாட்டிலும் பல்வேறு மருத்துவ பலன்களைப் பெற்றுக்கொண்டுள்ளார்கள். பாரம்பரிய

விளையாட்டுக்கள் செலவு குறைந்தவையாக விளங்கின. மகிழ்ச்சியையும் ஆரோக்கியத்தையும் சிறப்பாகத் தந்தன. குறிப்பாக மூளை, கண், கை, கால், வாய் என அனைத்து பகுதிகளுக்கும் பயிற்சியாக அமைந்தன. பாரம்பரிய விளையாட்டுக்களில் குழந்தைகள் ஈடுபடும் பொழுது மூளையின் அனைத்துப் பகுதியும் சமமாக இயங்கப்பட்டுள்ளதுளூ உடல் வளர்ச்சியினையும் மன வளர்ச்சியையும் வழங்கியுள்ளது. புலன்களுக்கு சிறந்த பயிற்சியினை உருவாக்கியுள்ளது; பொருள்களின் உண்மையான தன்மைகளை அறிவித்துள்ளது; இயல்பூக்கங்களை நன்னெறியில் அறிவித்துள்ளது; கற்பனையாற்றலை வளர்த்துள்ளது; குழந்தைகளுக்கு நம்பிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது; சீரான உடற்பயிற்சியாக அமைந்துள்ளதுளூ உறவுகளை வளர்த்துக் கொள்வதற்கான சூழலை உருவாக்கியுள்ளது; வெற்றிக்கு அடித்தளமாக அமைந்துள்ளது; பிறரை மதிக்கும் மனப்பாங்கை உதயமாக்கியுள்ளது. பாரம்பரிய விளையாட்டுக்கள் குழந்தைகளுக்கு ஒற்றுமை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, குழு உணர்வு, விடாமுயற்சி ஆகியவற்றைக் கற்றுக் கொடுத்துள்ளன. உடல் வலிமை, நோய் எதிர்ப்பு சக்தியினை கொண்டவர்களாக வளரச் செய்துள்ளன.

பாரம்பரிய விளையாட்டுக்கள்

பல்லாங்குழி விளையாட்டு

மொத்தம் 14 குழிகளைக் கொண்ட பலகைகளில் புளியம் விதை, சோழி, குன்னி முத்து போன்றவற்றைக் கொண்டு விளையாடி உள்ளார்கள். இது ஒவ்வொரு குழியிலும் ஐந்து காய்கள் வைத்து விளையாடும் விளையாட்டாகும். இவ்விளையாட்டு எதுவுமே நிரந்தரம் இல்லை என்பதையும் எந்த இடத்தில் இருந்தாலும் பொறாமை, புகழ்ச்சி ஆகியவை இல்லாமல் இருக்க வேண்டும் என்பதையும் கற்றுக் கொடுத்துள்ளது. மேலும் குழந்தைகளினுடைய கணிதத் திறனை வளர்ப்பதற்கு விரல்களுக்குச் சிறந்த பயிற்சியாகவும் அமைந்துள்ளது. இழப்பில் ஈடுகட்டும் ஆற்றலை அளித்துள்ளது. தன்னம்பிக்கையினை விருத்தியடையச் செய்துள்ளது. இவ் விளையாட்டினால் குழந்தைகளின் சேமிப்புத் திறன் மேலோங்கி உள்ளது.

தாயம்

தாயம் இரண்டு அல்லது நான்கு பேர் இணைந்து தாயம் மற்றும் காய்களைக் கொண்டு விளையாடும் சதுரங்க விளையாட்டு ஆகும். ஒவ்வொருவரும் நான்கு காய்களைக் கொண்டு விளையாடுவர். முதலில் யார் சதுரங்கப் பலகையைச் சுற்றி மற்றவரின் காய்களை வெட்டி அவர்களிடம் இருந்து தப்பித்துத் தனது கட்டத்தின் உச்சிக் கொம்பு ஏறி கனி பெறுவார் என்பது சுவாரஸ்யம் கூட்டும் அம்சமாகும். காய்களை வெட்டி வீழ்த்தும் பொழுது மீண்டும் முயற்சி செய்து முன்னேற வேண்டும் என்ற உத்வேகத்தினை வழங்கியுள்ளது. சாதுர்யம் மற்றும் மன ஆற்றல் மேம்படுத்தப்படுகிறது. எத்தனை முறை ஒருவர் உங்களை தாக்கினாலும் அந்த காய் போன்று மீண்டும் முயற்சி செய்து சாதிக்க வேண்டும் என்பதே விளையாட்டின் வாழ்வியல் தத்துவமாகும்.

பரமபதம்

இது டைஸ் பயன்படுத்தி விளையாடிய விளையாட்டாகும். ஏணியில் ஏறியும் பாம்பு கொத்தி இறங்கியும் எனப் பல ஏற்றத்தாழ்வுகளைச் சந்திக்கும் விளையாட்டு ஆகும். இவ்விளையாட்டு மூலம் வாழ்வில் பல்வேறு ஏற்றத்தாழ்வுகள் நிலவும் என்பதனையும் சுட்டிக்காட்டுகிறது. ஆனால், எந்த சூழ்நிலைகளையும் சமாளிக்க வேண்டும் என்பதையும் உணர்த்துகிறது.

சுங்கரக்காய் விளையாட்டு

சிறு கற்களைக் கொண்டு விளையாடும் சுங்கரக்காய் விளையாட்டு கண் மற்றும் கைகளின் செயல்திறனை மேம்படுத்துகிறது.

கோலி குண்டு விளையாட்டு

குழந்தைகள் தங்களின் சிறிய விரல்களால் பின் புறமாக சற்று அழுத்தி பச்சை அல்லது நீல நிறக் கண்ணாடி குண்டை கொண்டு மற்ற குண்டினை அடிப்பார்கள். இதில் குழந்தைகள் சிறிய இலக்குகளை எவ்வாறு அடைவது எப்படி என்பதனைக் கற்றுக்கொள்வார்கள். கண் பார்வையினை கூர்மையாக்குகிறது. மணிக்கூட்டு நரம்புகள் புத்துயிர் பெற உதவிபுரிகிறது.

சொப்புச்சாமான் விளையாட்டு

இவ் விளையாட்டானது குழந்தைகளிடையே ஒற்றுமை உணர்வு சேமிப்பு பகிர்ந்து உணவு உட்கொள்ளுதல் போன்ற பண்புகளை வளர்க்கிறது. களிமண் கொண்டு சிற்பங்கள் போன்ற கலைப்படைப்புக்களைக் குழந்தைகள் தயாரிக்கிறார்கள். இதன் ஊடாக குழந்தைகளுக்குக் கற்பனைத்திறன் அதிகரிக்கிறது.

பாண்டி ஆட்டம்

இவ் விளையாட்டானது குழந்தைகளுக்குக் கால்களின் செயற்றிறனை மேம்படுத்துகிறது. பம்பரம் விளையாடுகையில் நுண்திறன் விருத்தியடைந்துள்ளது. ஓடி ஆடி விளையாடும் பாரம்பரிய விளையாட்டுக்கள் குழந்தைகளை உள்ளத்தளவில் உற்சாகப்படுத்துகிறது. உடல் பருமன் அடைவதைத் தடுத்துள்ளது. இரத்த ஓட்டத்தினைச் சீராக்குகிறது.

சமகாலத்தில் விளையாட்டுக்களினால் குழந்தைகள் எதிர்கொள்ளும் சவால்கள்

சமகாலத்தில் அடுத்த வீட்டில் இருக்கும் நபர்களையே அடையாளம் தெரிந்துகொள்ள முடியாத அளவிற்கு வாழ்க்கைமுறை மாறி உள்ளது. குழந்தைகள் ஒன்றுகூடி விளையாடும் அளவிற்கு இடவசதியும் இல்லை. வீட்டுக்குள் அமர்ந்தபடி தொலைபேசி மற்றும் கணனியில் தனிமையில் விளையாடுகின்றனர். இவ்வாறான பல்வேறு விளையாட்டுக்களில் குழந்தைகள் ஈடுபடுவதனால் உடலிலும் உள்ளத்திலும் பல்வேறு பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளன. கண் பார்வை பாதிப்பு, பசியின்மை, அதீத கோபம் மற்றும் குணாதிசய பிரச்சினைகள் என ஏராளமான பாதிப்புக்களை உண்டாக்குகின்றன.

குழந்தைகளின் உடல், சமூக மனவெழுச்சி மற்றும் அறிவு வளர்ச்சியில் பாரம்பரிய விளையாட்டின் வகிபாகம்

உடல் உறுப்புக்கள் அனைத்தும் பாரம்பரிய விளையாட்டின் மூலம் வளர்ச்சியடைய உதவிபுரிந்துள்ளது. குழந்தைகள் தங்கள் பருவக் குழந்தைகளிடம் ஆரோக்கியமான இடைவினை புரிவதற்கான அடித்தளம் விளையாட்டுக்களினால் வழங்கப்பட்டுள்ளது. பாரம்பரிய விளையாட்டுக்களினால்

குழந்தைகள் பிறருடன் இணைந்து விளையாட, சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு விளையாட, நம்பிக்கை, விட்டுக்கொடுத்தல், உதவுதல் போன்ற சமூகத் திறன்களை பெற்றுக் கொள்ள உதவுகிறது. பயம், கோபம், பொறாமை, பொறுமை, மகிழ்ச்சி, பாதுகாப்பு உணர்வு, குழு உணர்வு போன்ற மனவெழுச்சிகள் குழந்தைகளிடையே விருத்தியடைகின்றன. பாரம்பரிய விளையாட்டின் ஊடாக குழந்தைகளின் பொது அறிவு, அனுபவ அறிவு, மொழி அறிவு விருத்தியடைகின்றன. இவ் விளையாட்டுக்கள் ஆக்கச் சிந்தனை, மனத்திறன்கள், செயல்திறன்களுடன் அறிவுத்திறனைக் குழந்தைகளுக்கு வளர்க்கின்றன. குழந்தைகளின் விளையாட்டில் மகிழ்ச்சி, மேம்பாடு, அறிவு வளர்ச்சி, உணர்ச்சி வெளிப்பாடு, உள்ளுணர்வு, உடல் ஆற்றல், மரபும் சூழ்நிலையும் செல்வாக்குச் செலுத்துகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

முடிவுரை

சமகாலத்தில் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை மிகக் குறைவு. குழந்தைகள் தங்களது உ;டல் திறன்களை திடமாக்கிக் கொள்ளும் பரிசோதித்துக் கொள்ளும் களங்களில் விளையாட்டு முக்கியமானது. அதிகமான பாரம்பரிய விளையாட்டுக்கள் குழந்தைகளின் உடல் வலிமையை தாங்குதிறனை, வேகத்தினை, உற்சாகத்தினை, ஒருங்கியக்கத்தினை பயிற்சிக்கு உட்படுத்துகின்றன. பாரம்பரிய விளையாட்டுக்கள் சமூக அக்கறை, சமூக நல்லுணர்வினை வளர்த்துள்ளன. குழந்தைகளின் விளையாட்டு உரிமையையும் பங்கேற்பு உரிமையையும் உறுதி செய்யாமல் ஏனைய எவ்வுரிமையையும் உறுதி செய்ய இயலாது. பாரம்பரிய விளையாட்டுக்களுக்கான முக்கியத்துவத்தினைப் பாடசாலைகள் மூலமாக நிலைநாட்டுவதை உறுதி செய்தல் வேண்டும். குழந்தைகள் அறிவுமிக்கவர்களாக மாறுவதில் நேரத்தை செலவிடுவதைப் போன்று ஆரோக்கியமானவர்களாக வளர்வதற்கு உதவுவது பெற்றோரின் பொறுப்பாகும். பாரம்பரிய விளையாட்டுக்களின் ஊடாக வெளிப்பட்ட வாழ்வியல் தத்துவத்தினை எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துரைத்தல் வேண்டும். பாரம்பரிய விளையாட்டுக்களில் பல காணாமல் போய்விட்டன. நினைவுகளில் காணப்படும் சில விளையாட்டுக்களையாவது எதிர்கால தலைமுறையினருக்கு

மீண்டும் அறிமுகப்படுத்த முன்வருதல் வேண்டும். எனவே விளையாட்டுக்கள் குழந்தைகளின் உடல் நலம், மனநலம், சிந்தனை, மொழி, பண்பாடு, கணிதம், நிர்வாகம், வாழ்வியல், விடாமுயற்சி போன்ற அனைத்தையும் மேம்படுத்தக் கூடியனவாக உள்ளன.

உசாத்துணை நூல்கள்

எதிர்மன்னசிங்கம், எ., (2017). கிழக்கிலங்கைத் தமிழ் மக்களின் பண்பாட்டுப் பாரம்பரியம். மட்டக்களப்பு: வணசிங்கா அச்சகம்.

கமலா, க., (2015). சிறுவர் - சிறுமிகளுக்கான பாரம்பரிய விளையாட்டுக்கள். தமிழ்நாடு: நிவேதிதா பதிப்பகம்.

சூர்யகுமாரி, த., (2015). ஒற்றுமையை வளர்க்கும் பாரம்பரிய விளையாட்டுக்கள். நர்மதா பதிப்பகம்.

மகேஸ்வரலிங்கம், க., (2008). மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும். கொழும்பு: தமிழ்ச்சங்கம்.

வேதநாயகம், ம., (2019). எருமைத்தீவு வாழ்வியலும் வரலாற்றுப் பதிவுகளும். மட்டக்களப்பு: எருமைத்தீவு கமநல அமைப்பு

ஜெயலட்சுமி, (2018). தமிழர் பண்பாடும் பாரம்பரிய விளையாட்டுக்களும். தமிழ்நாடு.

25

தமிழர் வாழ்வியல் சடங்குகள் - கேகாலை மாவட்டம் தெரணியகலைப் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

பாலரட்ணம் சரண்ஜா
தற்காலிக உதவி விரிவுரையாளர், தமிழ்க் கற்கைகள் துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம். balarathnamsaranya2@gmail.com

ஆய்வு அறிமுகம்

ஈழத்துத் தமிழ் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகளில் சடங்குகள் குறித்த ஆய்வுகளும் முக்கியம் பெறுகின்றன. அத்தகைய ஆய்வுகள் கிழக்கிலங்கை, வட இலங்கை, மலையகம் ஆகிய பிராந்தியங்களை முதன்மைப்படுத்தியே வெளிவந்துள்ளமையை தமிழ் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வின் வளர்ச்சியினையும் போக்கினையும் நோக்கும்போது புரிந்துகொள்ளலாம். அண்மைக்காலத்தில் இப்பிராந்திய எல்லைகள் குறுக்கப்பட்டு சிறுசிறு மக்கள் கூட்டம் ஆய்வின் எல்லைப் பரப்பாக அமைவதனைக் காணலாம். இந்நிலைப்பட்ட ஆய்வுகள் நுண்ணாய்வுகளுக்கான களங்களாக அமைகின்றன. இந்நிலையிலேயே மலையகம் என்ற பிராந்திய எல்லைக்குட்பட்ட கேகாலை மாவட்டத்தின் ஒரு பகுதியாகிய தெரணியகலைப் பிரதேசத்தை ஆய்வு எல்லையாக வரித்துக்கொண்டு அம்மக்களின் வாழ்வியல் சடங்குகளை நுண்ணாய்வுக்கு உட்படுத்துவதனைப் பிரதான நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. இவ் ஆய்வுப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் பெரும்பாலும் பெருந்தோட்டத் தொழிலை மேற்கொள்பவர்கள் ஆவர். தமிழர் சடங்குகளைப் பொதுவாக வாழ்வியற் சடங்குகள், கோயிற் சடங்குகள் என இருவகைப்படுத்துவர். இவ்விரு வகையுள் இவ்வாய்வானது வாழ்வியற் சடங்குகளை மாத்திரம் கவனம்கொள்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

மலையகத் தமிழரின் வாழ்வியற் சடங்குகள் குறித்துச் சில ஆய்வுகள் வெளிவந்துள்ளன. இருப்பினும், மலையகம் முழுவதும் ஒரே மாதிரியான சடங்காசாரங்கள் பேணப்படுவதில்லை. பல்வேறு சடங்குகளிலும் மலையகம் முழுமைக்குமான பொதுவான அம்சங்கள் பல காணப்பட்டாலும் மக்கள் குழுவினருக்கேற்ப பல்வேறு நுண்மையான வேறுபாடுகளையும் அவதானிக்க முடிகிறது. அத்தகைய நுண்மையான வேறுபாடுகளை இனங்காண சிறுபிராந்தியங்களை அல்லது மக்கள் குழுவினரை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுகள் அவசியமாகின்றன. அவற்றின் வாயிலாகவேதான் நுண்மையான வேறுபாடுகளையும் பொதுவான சடங்கியல் முறைமைகளையும் அடையாளம் காண முடியும். அத்தகைய நோக்குநிலையை அடிப்படையாகக் கொண்ட ஆய்வாக இது அமைவது குறிப்பிடத்தக்கது.

கள ஆய்வு மூலம் பெறப்பட்ட தரவுகளை முதலாம் நிலைத்தரவுகளாகவும் தமிழர் சடங்குகள் தொடர்பாக வெளிவந்த ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகளை இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. விபரண அணுகுமுறை, ஒப்பீட்டு அணுகுமுறை ஆகியன இவ்வாய்வில் கைக்கொள்ளப்படுகின்றன.

பிறப்புடன் தொடர்புடைய சடங்கு

ஒரு மனிதன் பிறந்தது முதல் இறப்பது வரையிலாக அவனது வாழ்வியலோடு தொடர்புபட்ட வகையில் பின்பற்றப்படுகின்ற சடங்குகள் வாழ்வியல் சடங்குகள் ஆகும். பிறப்புடன் தொடர்புடைய சடங்குகள், பூப்புனித நீராட்டுச் சடங்கு, திருமணச் சடங்கு, வளைகாப்புச் சடங்கு, மரணச் சடங்கு என அவற்றின் பட்டியல் நீளும்.

குழந்தை பிறந்து முப்பதாம் நாள் குழந்தையின் நலன் வேண்டி முதல் சடங்கு மேற்கொள்ளப்படுகின்றது. இது 'முப்பது நாள் சடங்கு' என அழைக்கப்படுகின்றது. குழந்தை பிறந்த தினத்திலிருந்து முப்பதாம் நாள் உறவினர்களை அழைத்துப் பெயர் சூட்டும் வைபவம் நிகழும். குருக்களை வீட்டிற்கு அழைத்துக் குழந்தைக்குத் தீர்க்க ஆயுள் கிடைக்க வேண்டி 'ஆயுஸ் ஹோமம்' கிரியை செய்வார்கள். குழந்தையின் பிறந்த நேரத்தைக் கணித்து கிரக தோஷங்கள் பார்த்து அவற்றிற்கான நிவர்த்தி பூஜைகளும்

இடம்பெறும். அன்றைய நாளிலே பெண்குழந்தையெனில் 'காது குத்துதல்' நிகழ்வும் ஆண் குழந்தையெனின் 'மொட்டை இடும் நிகழ்வும்' இடம்பெறும். குல தெய்வக் கோயிலிலோ அல்லது வீட்டிலோ தெய்வத்திற்குப் பூஜை கொடுத்ததும் தாய்மாமன் மடியில் குழந்தைகளை அமர்த்தி இவ்விரு சடங்குகளும் மேற்கொள்ளப்படும். இறுதியாக தொட்டிலிடுதல் சடங்கு இடம்பெறும். தாய்மாமன் தொட்டில் கட்டி முதலில் குழந்தையை தொட்டிலில் போடுவார். சடங்கிற்கு வந்த உறவினர்கள் குழந்தையை ஆசீர்வாதம் செய்வார்கள். பின் விருந்துபசாரத்தோடு இச்சடங்கு நிறைவுபெறும். இச்சடங்கில் தாய்மாமன் முதன்மை பெறுவது குறிப்பிடத்தக்கது. இது தாய்வழிச் சமுதாய மரபையும் அதன் அறாத் தொடர்ச்சியையும் காட்டுகிறது.

மஞ்சள் நீராட்டுச் சடங்கு

ஒரு பெண் பூப்படைந்ததும் குருக்களிடம் உரிய முறைப்படி ஜாதகத்தை கணித்துச் சுப நேரம் குறித்து முதலில் குடிசை (தென்னையோலையில்) கட்டுதல் நிகழ்வு இடம்பெறும். இந்நிகழ்வு பெண்ணின் தாய்மாமனால் நிகழ்த்தப்படும். ஐந்து சுமங்கலிப் பெண்களை அழைத்துப் பூப்படைந்த பெண்ணுக்குத் தண்ணீர் வார்ப்பார்கள். தண்ணீர் வார்த்த பின் குடிசையின் வாசலில் கீழே குறுக்காக உலக்கையை வைத்து உலக்கையைத் தாண்டி குடிசைக்குள் பெண்ணை அனுப்புவார்கள். பெண் பூப்படைந்த தினத்திலிருந்து குடிசையைப் பிரிக்கும் வரையிலும் வண்ணாரிடம் இருந்துதான் சேலை (புடவை) வாங்கி அணிய வேண்டும் என்பதும் மரபாகும்.

சுபநேரம் பார்த்து ஒற்றைபடையாக வரும் ஒரு நாளில் (7,9,11) தாய்மாமன் குடிசையைப் பிரிப்பார். குடிசையைப் பிரித்ததும் அதிகாலை காகம் கரையும் முன் தாய்மாமன் பிரித்த குடிசையை வீட்டிற்கு வெளியே அல்லது பின்புறத்தில் எரிக்க வேண்டும். பின் பெண்ணை வீட்டிற்கு அழைப்பதற்கான சடங்கு இடம்பெறும். விடியும் முன் வீட்டின் முற்றத்தில் பெண்ணை அமர்த்தி சீக்காலி சுத்துவார்கள். அதனையே 'வண்ணார் சடங்கு' என்று குறிப்பிடுகின்றனர். சுபநேரம் பார்த்து வீட்டிற்குக் குருக்களை அழைத்து ருது சாந்தி வைபவம் செய்வார்கள். அன்றைய தினமோ அல்லது அடுத்த நாளிலோ உறவினர்களை அழைத்து வீட்டிலோ

மண்டபத்திலோ பூப்புனித நீராட்டு விழா இடம்பெறும். அன்றைய தினம் தாய்மாமன் தன் உறவுகளுடன் சீர் கொண்டு வருவார். சீர் கொண்டு வந்ததும் சீக்காலி சுற்றும் சடங்கு நடைபெறும். பின் தாய்மாமன் கொண்டு வந்த சீர் புடவையை அணிந்து பெண் மண்டபத்திற்கு வர, குடும்பத்தார் பெண்ணை ஆசிர்வாதம் செய்வார்கள்.

இந்நிகழ்விலும் தாய்மாமன் முதன்மை பெறுவதை அவதானிக்கலாம். அதேவேளை சுமங்கலிப் பெண்கள் தண்ணீர் வார்ப்பதும் உலக்கையைத் தாண்டுவதும் குடிசையை எரிப்பதும் ஆகிய நிகழ்வுகள் மலையகத் தமிழரின் நம்பிக்கையின் வெளிப்பாடுகளாகும். இச்செயற்பாடுகளின் பின்புலத்தில் மரபார்ந்த நம்பிக்கைக் கருத்துருவாக்கங்கள் பல குடிகொண்டுள்ளன.

சீமந்தச் சடங்கு

ஆய்வுக்கெடுத்துக்கொண்ட பிரதேசத்தில் திருமணச் சடங்கானது மலையகத்தின் ஏனைய பிரதேசங்களில் நிகழ்வது போலவே இடம்பெறுகின்றது. ஆதலால், அச்சடங்கு குறித்த நோக்குநிலை தவிர்க்கப்படுகிறது. திருமணச் சடங்கின் தொடரச்;ச்ஜீயான – தாய்மையினைக் கொண்டாடுகின்ற – சீமந்தச் சடங்கு சில தனித்துவங்களைக் கொண்டுள்ளமையினை ஆய்வுப் பிரதேசத்தில் அவதானிக்க முடிகிறது. ஆய்வுப் பிரதேசத்தில் ஆரம்ப காலங்களில் பெரும்பாலும் இச்சடங்கு இடம்பெறவில்லை. சமகாலத்தில் பரவலாக இடம்பெறுகின்றது. குழந்தையைப் பிரசவிக்கவிருக்கும் தாய்க்கு 7 அல்லது 9 மாதங்களில் இச்சடங்கு மேற்கொள்ளப்படுகின்றது.

பிரசவத்தின்போது தாய்க்கும் குழந்தைக்கும் எந்தவித ஆபத்தும் நிகழாமல் இருப்பதற்காக லக்ஷ்மி பூஜை செய்வார்கள். ஐந்து வகை சாதம் (புளிப்பு, இனிப்பு, காரம், துவர்ப்பு, கசப்பு ஆகிய சுவைகளாலனவை), தின்பண்டங்கள், பழவகைகள் போன்றவற்றைக் கருவுற்ற பெண்ணின்முன் பரப்பி, அவளுக்கு ஆரத்தி சுற்றி, அவளது கரங்களில் வளையல் இட்டு, பெண்ணின் கன்னங்களில் சந்தனம் பூசி, அவள்மீது பன்னீர் தெளித்து பெரியோர்கள் ஆசீர்வாதம் செய்வார்கள். இச்சடங்கு தீய சக்திகள் கருவுற்ற பெண்ணை நெருங்காதிருக்கும் பொருட்டு மேற்கொள்ளப்படுகின்றது. இச்சடங்கும் மலையகத் தமிழரின்

நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. உளவியல்சார் சிந்தனையில் நோக்குகையில் கருவுற்றவளை மகிழ்வுறுத்தும் நிகழ்வாகவும் பக்கபலமாக உறவுகள் உள்ளன என்ற நம்பிக்கையை வழங்குவதாகவும் இச்சடங்கு அமைவதனைப் புரிந்துகொள்ள முடிகிறது.

மரணச் சடங்கு

மரணச் சடங்குகளை நோக்குகையில் கோடி எடுத்தல், நீர்மாலை எடுத்தல், வாய்க்கரிசி போடுதல், ஸ்ரீ தேவி வாங்குதல், மந்தக் குடம் உடைத்தல், கொள்ளி வைத்தல் எனப் பல சடங்கு முறைகள் இறந்தவரை அடக்கம் செய்யும் தினத்தன்று மேற்கொள்ளப்படுகின்றன. இறந்தவரின் உடல் வீட்டில் இருந்து வெளிமுற்றத்திற்கு எடுத்துவரப்படும். பின் வண்ணார் உறவினர்களுடன் கோடி கொண்டுவருவார். அதன்பின் இறந்தவர்களின் மகன்மார், மருமகன்மார், பேரன்மார்களில் யாரேனும் மூவருடன் (நீர்மாலை எடுப்போர்) வண்ணார் ஆற்றங்கரைக்குச் சென்று பூஜை செய்து நீர்மாலை எடுத்துவருவார்.

பின், வண்ணார் தயாரித்த அரப்பை (அரப்பு என்பது ஒரு வகையான மூலிகை. ஐவகை எண்ணெய் சேர்த்துத் தயாரிக்கப்படுவது) உறவினர்கள் புறங்கைகளால் இறந்தவரின் தலையில் தேய்ப்பர். பின்னர் நீர்மாலை எடுத்து வந்த குட நீரைச் சவப் பெட்டியைச் சுற்றி ஊற்றுவார்கள். இதன் பின்னர் வாய்க்கரிசி போடும் சடங்கு இடம்பெறும். இச்சடங்கு முடிந்ததும் ஸ்ரீ தேவி வாங்கும் சடங்கு இடம்பெறும். இறுதியாக திருமணமானவர் எனின் 'மாங்கல்ய அறுப்பு' சடங்கு இடம்பெறும். இச்சடங்கு முடிந்ததும் சிவபுராணம் படித்து சவப்பெட்டியைத் தூக்கிச் செல்வார்கள். சவப்பெட்டியைத் தூக்கிச்செல்லும்போது வீட்டிலிருக்கும் பெண்களில் யாரேனும் ஒருவர் மண்சட்டியில் சாணியைக் கரைத்துத் தெளித்துச் செல்ல வேண்டும். முட்டியிலுள்ள சாணி முடியும் இடத்தில் முட்டியை உடைத்துவிட்டுப் பெண் வீடு திரும்புவார்.

பாடமாத்தி (சந்தி)யில் இறந்தவரின் பெண்பிள்ளை அல்லது மருமகள் மந்தக்குடம் உடைப்பார்கள். சுடுகாட்டில் இறந்தவரின் மகன் கொள்ளிக்குடம் உடைப்பார். சவப்பெட்டியைக் குழிக்குள் இறக்கியதும் கொள்ளிவைத்தவர் முதல் பிடி மண் போடுவார். பின்

மற்றைய எல்லோரும் ஒவ்வொரு பிடி மண் குழியில் போடுவார்கள். பின் குழியை மூடி அதன் மேல் நவதானியங்களைத் தூவி, பால் ஊற்றி கொள்ளிவைத்தவர் தலைமுடி எடுப்பார். அதனோடு அன்றைய நாள் சடங்கு முடிவடைந்துவிடும். இதன் பின் 5 நாள் சுடுகாட்டிற்குச் சென்று புதைக்குழியின் மேல் பால் ஊற்றி, தென்னைமரம் ஊன்றி வருவார்கள். வரும் வழியில் ஆற்றங்கரைக்குச் சென்று வாழைக்காயைத் தலையை சுற்றி வெட்டி ஓடும் ஆற்றில் விட்டு, குளித்துத் வீடுதிரும்புவார்கள். அன்யை நாள் ஸ்ரீதேவி வைத்த இடத்தில் இறந்தவருக்கு பிடித்தமான பல வகையான இனிப்பு, கார உணவுகளைச் சமைத்துப் படையல் வைத்துப் பூஜை செய்வார்கள்.

8 ஆம் நாள் பயிர் அவித்து பூஜை செய்வார்கள். 16 ஆம் நாள் அன்று 9 மணி, 12 மணி, அதிகாலை 4 மணி என்று மூன்ற சாம பூஜை நடைபெறும். 16 ஆம் நாள் சடங்கை வண்ணாரே நிகழ்த்துவார். ஸ்ரீதேவி வைத்த இடத்தில் பச்ச பந்தல் இட்டு செங்கலில் இறந்தவரின் உருவத்தை வடித்து வெள்ளைத் துணிகட்டி (ஒரு பாத்திரத்தில் பசும்பால் எடுத்து பாலில் அக்கல்லை வைத்துப்) படையல் இட்டு, பூஜை செய்து ஒப்பாரி வைப்பார்கள். 9 மணி பூஜையில் இறந்தவருக்குப் பிடித்தமான சகல உணவுகளும் படைக்கப்படும். 12 மணி பூஜையில் அவித்த பயறு, கடலை படைக்கப்படும். 4 மணி பூஜையில் வெண் பொங்கல் படைக்கப்படும். 4 மணி பூஜை முடிந்ததும் ஸ்ரீதேவி உட்பட பூஜை செய்த இடத்தில் உள்ள எல்லாவற்றையும் ஆற்றங்கரையில் கரைத்துவிடுவார்கள். விடிந்ததும் குருக்களை வீட்டிற்கு அழைத்து அந்தியேட்டிக் கிரியை நடைபெறும். இறந்து ஒரு வருடமானதும் இறந்தவருக்கு வருஷ சடங்கு நடைபெறும். இம்மரணச் சடங்கின் பல அம்சங்கள் மலையகத் தமிழரின் மரணச் சடங்கோடு ஒத்திருப்பினும் சில விடயங்கள் தனித்துவமானவையாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

முடிவுரை

மனிதனுடைய வாழ்வியல் அம்சங்களில் சடங்குகள் முதன்மையான இடத்தைப் பிடிக்கின்றன. மனிதன் குறிப்பிட்ட சூழலில் கூட்டாக வாழப்பழகிக்கொள்கின்றபோது நம்பிக்கைகளின் அடிப்படையில் சில விடயங்களைப் பின்பற்றுகின்றான்.

காலப்போக்கில் அவை அச்சமுதாயத்தின் சடங்காசாரங்களாக மாறிவிடுகின்றன. பல சந்தர்ப்பங்களில் அவற்றில் அறிவியல் பூர்வமான அம்சங்களும் நிறைந்திருக்கின்றன. வெறுமனே சடங்காசாரங்கள் என்ற வட்டத்துள் மாத்திரம் நோக்கவியலாது. இக்கருத்து ஆய்வுப் பிரதேச மக்களின் வாழ்வியற் சடங்குகளுக்கும் பொருந்தும்.

கேகாலை மாவட்ட தெரணியகலை பிரதேச தமிழ் மக்களால் பின்பற்றப்படுகின்ற சடங்குகள் அனைத்திலும் தமிழகத்தின் பண்பாட்டுப் பிரதிபலிப்புகளை அதிகமாகக் காணலாம். தமிழகத்திலிருந்து பெருந்தோட்டத்துறை நிர்மாணத்தின் பொருட்டு அழைத்துவரப்பட்ட மக்களின் சந்ததியினராக இப்பிரதேச மக்கள் விளங்குவதால் தமிழக பண்பாட்டின் தாக்கம் அதிகம் உண்டு.

இப்பிரதேச மக்கள் பின்பற்றுகின்ற வாழ்வியல் சடங்குகளில் 'தாய்மாமன்' என்பவரின் பங்கு அதிகமாக உள்ளது. தாய்மாமன் என்பவர் குறித்த பெண்ணின் தாயின் தமையன். தாய்க்குத் தமையன்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் உறவுகளில் தாய்க்குத் தமையன் முறையில் உள்ளவர்கள் அல்லது தந்தையின் தமக்கையர்களின் கணவன்மார் தாய்மாமனாக இருந்து சடங்குகளைப் புரிவார்கள். முக்கியமாக ஒரு பெண் குழந்தை பிறந்தது முதல் அவள் பூப்படைந்து திருமணமாகும் வரை தாய்மாமனின் பங்கு அளப்பரியதாகின்றது.

அவ்வாறே வண்ணாரும் இப்பிரதேச சடங்குகளில் முக்கியம் பெறுகின்றார். இப்பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் சில சந்தர்ப்ப சூழ்நிலைகளால் குருக்களின் சடங்குகளைத் தவிர்க்கின்ற போதும் வண்ணாரின் சடங்கு முறைகளைத் தவிர்ப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பூப்புனித நீராட்டுச் சடங்கில் 'வண்ணாத்திச் சடங்கு' என்பது முக்கியமானது. குடிசை கட்டுதல், குடிசை பிரித்தல், சீக்காலி சுத்துதல் போன்ற சடங்கு முறைகளில் இவரது பங்கும் முக்கியமானது. மரண சடங்கிலும் இவருடைய பங்கு அளப்பரியதாகின்றது. இறந்தவரை அடக்கம் செய்யும் நாளன்று இடம்பெறுகின்ற சடங்குகள் அனைத்தும் இவராலேயே மேற்கொள்ளப்படுகின்றன. கோடி எடுத்தல், நீர்மாலை எடுத்தல், வாய்க்கரிசி போடுதல், ஸ்ரீ தேவி கொடுத்தல், மாங்கல்ய அறுப்பு

எனப் பல சடங்கு முறைகள் இவராலேயே மேற்கொள்ளப்படுகின்றன. மரணச் சடங்கில் இடம்பெறுகின்ற 16 ஆம் நாள் சடங்கும் இவராலேயே மேற்கொள்ளப்படுகின்றது. இப்பிரதேச மக்களின் வாழ்வியல் சடங்குகளில் தாய்மாமன் மற்றும் வண்ணாரின் பங்கு இன்றியமையாததாகின்றது. இப்பிரதேசத்தில் குறிப்பிட்ட ஒரு குடும்பத்தினரே 'வண்ணார்' தொழிலைச் செய்துவருகின்றனர். குறித்த தொழிலைச் செய்வதற்காகவே அவர்களுடைய முன்னோர் இங்கு வரவழைக்கப்பட்டதாக பிரதேசவாசிகள் கூறுகின்றனர்.

மலையகத் தமிழர் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகளைப் பொறுத்தவரையில், நாட்டார் இலக்கியங்கள், கூத்துக்கலை குறித்த ஆய்வுகளே பெரும்பாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சடங்குகள் குறித்த ஆய்வுகளின் போதாமையினை உணரமுடிகிறது. சடங்குகள் குறித்த பொதுப்பார்வைகளும் நுண்மையான பார்வைகளும் அவசியமாகின்றன. இந்நிலையில், இவ்வாய்வானது ஒரு பிரதேசத்தின் சடங்காசார நிகழ்த்துதல்கள் குறித்த பார்வையை முன்னிறுத்துகிறது. மலையக சடங்குகள் குறித்த விரிவான ஆய்வுகள் வெளிவர வேண்டிய அவசியப்பாடு உணரப்படுகிறது. அவ்வாறு வெளிவரும்பட்சத்தில் நுண்ணாய்வுகளுக்கும் ஒப்பீட்டாய்வுகளுக்குமான களம் விரிவடையும். அந்த விரிவின் தொடர்ச்சியாக இலங்கையின் ஏனைய பிராந்தியங்களில் வாழும் தமிழரின் சடங்காசார நிகழ்வுகளில் இருந்து மலையகத் தமிழரின் சடங்காசாரங்கள் வேறுபடும் விதம் குறித்த பண்பாட்டாய்வுகளும் உத்வேகம் பெறும்.

உசாத்துணை நூல்கள்

சந்திரசேகரம்,சி. (2020). ஈழத்துத் தமிழ் நாட்டார் வழக்காற்றியல். கொழும்பு: குமரன் புத்தகம்.

சிவத்தம்பி, கா. (1993). இலங்கை மலையகத் தமிழரின் பண்பாடும் கருத்துநிலையும். கண்டி: உதயம் நிறுவன வெளியீடு.

பக்தவத்சல பாரதி. (2002). தமிழர் மானிடவியல். சிதம்பரம் : மெய்யப்பன் தமிழாய்வகம்.

லூர்து,தே. (1997). நாட்டார் வழக்காற்றியல் : சில அடிப்படைகள். பாளையங்கோட்டை : நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்.

நேர்காணல்

மோகன் – கேகாலை மாவட்ட தெரணியகலை பிரதேச வண்ணார்

ரமேஷ்சர்மா – கேகாலை மாவட்ட தெரணியகலை பிரதேச ஆலய குருக்கள்

26

அடங்காப்பற்று வன்னியில் நாச்சிமார் வழிபாடு - சமூக வரலாற்று ஆய்வு

சிவசுந்தரம் கஜானா
உதவி விரிவுரையாளர், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.
skajana99@gmail.com

ஆய்வு அறிமுகம்

இலங்கையின் வடபுலத்தில் பெரு நிலப்பரப்பாக இருந்த அடங்காப்பற்று வன்னிப் பிரதேசத்தில் பலவித வழிபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இலிங்க மற்றும் நாக வழிபாடுகளைத் தொடர்ந்து விசேடமாகச் சக்தியின் பல வடிவங்கள் வழிபடப்பட்டு வருகின்றன. காளி, முத்துமாரி அம்மன், சப்த கன்னிமார், கண்ணகை அம்மன் போன்ற பெண் தெய்வ வழிபாடுகள் புராதன காலம் தொடக்கம் இடம்பெற்று வந்தவையாகும். தற்போது நாகபூசணி அம்மன், கருமாரியம்மன் போன்ற பெண் தெய்வ ஆலயங்களின் தொகைகளும் அதிகரித்து வருகின்றன. இதன் காரணமாக புராதன வழிபாடுகள் கைவிடப்பட்டு வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இங்கு வாழ்ந்த மக்கள் பெண்களுக்கு முக்கிய இடம் கொடுத்துள்ளமை வழிபாடுகள் மூலம் தெளிவாகின்றது. பெருநிலப் பரப்பில் பெண்களைக் கௌரவிக்கும் பாரம்பரியம் தொன்று தொட்டு இருந்துள்ளது. விசேடமாக மனித குலத்தில் பிறந்து புனிதமான செயல்களைச் செய்ததன் காரணமாகப் பெண்களைக் கௌரவித்துள்ள பண்பு குறிப்பிடத்தக்கது. அவர்களுள் சிலரைத் தெய்வங்களாக வணங்கும் பாரம்பரியமும் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வன்னிப் பெருநிலப்பரப்பின் வரலாற்றில் கௌரவிக்கப்பட்டுள்ள பெண்கள் வரிசையில் தெய்வங்களாக வழிபடப்பட்டவர்கள் இருந்தாலும் சிலர் வன்னி வரலாற்றில் முக்கிய இடம் பிடித்தவர்களாகவும் இருக்கின்றனர். அவர்கள் பற்றிய விபரங்களும் தெய்வங்களாக வழிபடப்பட்டவர்களின் தகவல்களும் ஆய்வுக்குரியவையாகும். இந்நிலையில்

இவ்வாய்வானது அத்தகைய தெய்வங்களில் ஒன்றான நாச்சிமார் குறித்து ஆராய்வதாக அமைகிறது.

இவ்வாய்வானது அடங்காப்பற்று வன்னியில் நாச்சிமார் வழிபாட்டின் தோற்றப் பின்புலத்தை ஆராய்வதனையும் அப்பிராந்தியத்தில் அவ்வழிபாடு பெறும் முக்கியத்துவத்தை வெளிக்கொணர்வதனையும் பிரதான நோக்கங்களாகக் கொண்டுள்ளது. இவ் ஆய்வானது, பகுப்பாய்வு அணுகுமுறை, விபரண அணுகுமுறை, வரலாற்று அணுகுமுறை ஆகியவற்றைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அடங்காப்பற்று என அடையாளப்படுத்தப்படும் ஆய்வுப் பிரதேசமானது, வடக்கில் கிளிநொச்சி மாவட்டத்தையும் மேற்கில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவு, புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தோடு வவுனியா மாவட்டத்தையும் தெற்கில் திருகோணமலை மாவட்டத்தையும் கிழக்கில் இந்தியப் பெருங்கடலையும் எல்லையாகக் கொண்டுள்ளது.

கள ஆய்வின் மூலம் சேகரிக்கப்பட்ட வாய்மொழிக் கதைகளையும் புலமையாளர்களுடன் நிகழ்த்திய நேர்காணல்களையும் முதன்மை ஆதாரங்களாகக் கொண்டும் மேற்படி ஆய்வுப் பரப்புடன் தொடர்புடைய நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் முதலியனவற்றையும் இணையத்தளங்களில் இருந்து எடுக்கப்பட்ட தகவல்களையும் இரண்டாம் நிலைத் தரவுகளாகக் கொண்டும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாச்சிமார் – தோற்றத் தொன்மம்

கி.பி. நான்காம் ஐந்தாம் நூற்றாண்டுகளில் இலங்கைமீது படையெடுத்து வந்த சோழ மகாராசா திருகோணமலைப் பிரதேசத்தில் கோயில்களைக் கட்டினார். குளங்களைத் திருத்தியமைத்தார். அவற்றிலிருந்து வருமானத்தைப் பெற்றுக் கோயில்களையும் குளங்களையும் பராமரிக்கத் தென்னிந்திய வன்னிய குலத்தவர்களை அழைத்து வந்து குடியேற்றினார். வன்னிய குலத்தவருள் இருந்த தலைவர்கள் 'வன்னியனார்' எனவும் தலைவர்களுடைய மனைவியர் 'வன்னிச்சியர்' எனவும் அழைக்கப்பட்டதாக வரலாற்றால் அறியமுடிகிறது. கணவன்மார் உயிரிழக்கும்போது உடன்கட்டை ஏறும் வழக்கத்தை இந்த வன்னிச்சிமார் கொண்டிருந்தனர். உடன்கட்டை ஏறிய வன்னிச்சி

'நாச்சிமார்' என அழைக்கப்பட்டு கௌரவப்படுத்தப்பட்டதாக வாய்மொழி வழக்காறுகள் எடுத்தியும்புகின்றன.

இலங்கையின் வட புலத்திற்குத் தென்னிந்திய வன்னியர்கள் பல முறை வருகை தந்துள்ளனர். 14ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கையில் இருந்த சோழ இளவரசனுக்கு மணப்பெண்ணை அழைத்து வந்த 60 வன்னியர்கள் பெருநிலப்பரப்பின் வரலாற்றில் சிறப்பாக குறிப்பிடப்படுகின்றனர். மணப்பெண்ணிற்குக் காவலாக வந்த வன்னியர்களுள் 59 பேருக்கு பாணன்கமம் இராஜதானியிலிருந்து நிர்வாகம் செலுத்துவதற்கான குடியுரிமை வழங்கப்பட்டமை தெரியவருகிறது. யாருக்கும் அடங்காமல் சுதந்திரமாக இருந்த இயக்கர், நாகர் குலத்தவர்களை அடக்கித் திறை சேகரித்து யாழ்ப்பாண இராஜதானிக்கு வழங்க வேண்டும் என்ற உத்தரவும் இவர்களுக்குப் பிறப்பிக்கப்பட்டிருந்தது. இதன் மூலம் பாணன்கமம் இராஜதானி யாழ்ப்பாண இராஜதானியுடன் தொடர்புடையதாக விளங்கியமையும் ஏற்கனவே வன்னிய குலத்தவர்கள் பாணன்கமத்தில் வாழ்ந்துள்ளமையும் தெளிவாகிறது.

பெருநிலப்பரப்பின் அடங்காப்பற்று வன்னிப் பிரதேசத்தில் இருந்த இயக்கர், நாகர் குலத்தவர்களுடன் ஏற்பட்ட மோதலினாலும், வன்னியர்களுக்குள் தலைமைப் பதவிக்கு ஏற்பட்ட போட்டிகள் காரணமாகவும் மொத்தமாக 54 வன்னியர்கள் உயிரிழந்தனர். மிகுதி 5 வன்னியனார்களும் பாணான்காமத்தை ஐந்து பிரிவுகளாகப் பிரித்து நிர்வாகம் செய்தனர். பின்னர் தமது குடும்பத்தினருடன் சேர்ந்து வாழ்வதற்குத் தாய்நாடு திரும்ப எண்ணிய வன்னியனார்கள் முல்லைத்தீவுப் பிரதேசத்திலிருந்த இளஞ்சிங்க மாப்பாணரை அழைத்துப் பாணன்காமத்திற்கு வன்னியனாராக நியமித்து, நிர்வாகத்தை ஒப்படைத்தனர். வன்னியர்களுக்குப் பின்னர் முதன் முதலில் பாணன்காமத்தில் முல்லைத்தீவு மாப்பாண குலத்தவர்களுடைய நிர்வாகம் ஆரம்பித்தமை இதன் மூலம் தெளிவாகிறது. மாப்பாண குலத்தவர்கள் தலைமைப் பொறுப்பை ஏற்றாலும் அந்தப் பதவிக்கு 'வன்னியனார்' என்ற பெயர் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

வன்னியனார்கள் ஐவரும் யாழ்ப்பாணத்திலிருந்த அரசரிடம் உத்தரவு பெற்று படகில் இந்தியா திரும்பினர். அவர்கள் சென்ற படகு திமிங்கிலத்தால் தாக்குண்டு அனைவரும் உயிரிழந்தனர். இதேநேரம் மதுரையிலிருந்த வன்னிச்சிமார் தமது கணவன்மாரைத் தேடிப் படகில் வந்து காங்கேசன்துறை செல்விவாய்க்கால் இறங்குதுறையில் இறங்கினர். கடைசியாக கடல் வழியாக நாடு திரும்பிய ஐந்து வன்னியனார்களுக்கும் என்ன நடந்தது என்பதை அறியாத இளஞ்சிங்க மாப்பாணன், வன்னியர்கள் 54 பேரும் உயிரிழந்த செய்தியை வன்னிச்சியருக்கு அனுப்பிவைத்தான். கணவன்மார் உயிரிழந்த செய்தியைக் கேட்ட வன்னிச்சியர்கள் தமது பாரம்பரியத்தின்படி தீமூட்டி அதில் இறங்கித் தமது உயிரை மாய்த்துக்கொண்டனர். இவர்கள் 'நாச்சிமார்' என யாழ்ப்பாணப் பிரதேசத்திலும் வழிபடப்பட்டுள்ளனர். எஞ்சியவர்களுள் ஒருவர் நுவரகலாவெளவிற்குச் சென்றார். மிகுதி ஐவரும் பாணன்காமத்திற்கு வந்தனர். தமது கணவன்மார் உயிருடன் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையில் அவர்கள் திரும்பி வரும் வரை பாணன்காமத்தில் நிர்வாகம் செய்வதற்கு முல்லைத்தீவு இளஞ்சிங்க மாப்பாணனுடன் ஒப்பந்தம் செய்துகொண்டனர். ஒப்பந்தத்தின்படி வன்னியனார்கள் திரும்பி வரும் வரை பாணன்காமத்தை ஐந்து பிரிவுகளாகப் பிரித்து வன்னிச்சியர்கள் நிர்வாகம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

கி.பி.1505களின் பின்னர் இலங்கையில் அன்னியர் ஆட்சி ஆரம்பித்தது. வடபுலத்தின் கரையோரங்களைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் றோமன் கத்தோலிக்க மதத்தைப் பரப்பினர். பின்னர் 1558களில் மன்னாரிலிருந்து பெருநிலப்பரப்பின்மீது படையெடுத்து வந்தனர். பாணன்கமத்திலிருந்த ஐந்து வன்னிச்சிமாரும் ஆண் வேடம் பூண்டு போர்த்துக்கேயருடன் போர் தொடுத்தனர். இந்தத் தாக்குதலில் போர்த்துக்கேயர் தோல்விகண்டனர். யுத்த நடவடிக்கைகளுக்கு மேலும் செலவு செய்ய விரும்பாத போர்த்துக்கேயர் என்று கூறி மன்னாருக்குத் திரும்பிச் சென்றுவிட்டனர்.

தென்னிந்தியா திரும்பிச் சென்ற வன்னியனார்கள் கடலில் உயிரிழந்த செய்தியைக் கேள்வியுற்ற வன்னிச்சிமார் இனிமேல் தமக்குப் பாதுகாப்பில்லை என்று கருதினர். கணவன்மார் உயிரிழந்த பின்னர் உயிர்வாழாமை அவர்களுடைய பாரம்பரியம் என்பதால்,

கொடிய விசமான கார்த்திகைக் கிழங்கை அரைத்துச் சாப்பிட்டு உயிரிழந்தனர். இவர்களும் நாச்சிமார் என்று அழைக்கப்பட்டுத் தெய்வங்களாக மதிக்கப்பட்டனர். வன்னிச்சிமாரின் மறைவுக்குப் பின்னர் முல்லைத்தீவு இளஞ்சிங்க மாப்பாணருடைய பரம்பரையினர் பாணன்காமத்தில் வன்னியனார் பதவி வகித்ததாக வரலாற்றால் அறியமுடிகிறது. இதற்குப்பின்னர் இடம்பெற்ற ஆங்கிலேயருடைய ஆட்சிக் காலத்தில் பெயர்கள் சுருக்கப்பட்டு வன்னி என்ற பெயர் வந்துள்ளமை வரைபடங்களாலும் வரலாறுகளாலும் தெளிவாகிறது. வன்னிச்சியர்களே வன்னி என்ற பெயர் வருவதற்கு மூல காரணமாக இருந்துள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் நிர்வாகக் காலத்தில் வன்னியனார் பதவி வகித்த பண்டாரம், அவர்களுக்கு எதிராகத் தாக்குதல்களை நடத்தியுள்ளார். 1793களில் ஒல்லாந்தருக்கும் 1803களில் ஆங்கிலேயருக்கும் எதிராக நடத்திய தாக்குதல்களில் இவர் கடைப்பிடித்த யுத்த தந்திரங்கள், வீரதீரச் செயல்கள் என்பன அப்பிரதேசத்தின் அடையாளங்களாகக் குறிப்பிடப்படுகின்றன. பண்டாரம் வன்னியனாரின் தாக்குதல் நடவடிக்கைகள் பற்றிய விபரங்கள் அந்நியர்களுடைய குறிப்புகளில் நிறையவே காணப்படுகின்றன. பண்டாரம் வன்னியனார் திருமணம் செய்யவில்லை. ஆனால், அவருக்கு குருவிச்சி என்ற பெயரில் ஒரு காதலி இருந்ததாக மரபுவழிக் கதைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தாக்குதல்களின்போது பண்டாரம் வன்னியனார் உயிரிழந்ததாகத் தகவல்கள் பரவின. இதனால் அவரைக் காதலித்த குருவிச்சி, கார்த்திகைக் கிழங்கை அரைத்துச் சாப்பிட்டு உயிர்விட்டபோது அவரோடு சேர்ந்து அவரது தோழியும் உயிரை மாய்த்ததாகக் கூறப்படுகிறது. குருவிச்சியின் வாழ்புலத்திற்கு அருகில் உற்பத்தியாகி ஓடும் சிற்றாறு ஒன்றிற்கு 'குருவிச்சி ஆறு' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்த விபரங்களைக் கூறுவதாக 'குருவிச்சி நாச்சி தாயார் சலிப்பு' என்ற ஒப்பாரிப் பாடலும் பாடப்பட்டுள்ளது. இதனால் குருவிச்சியும் 'குருவிச்சி நாச்சியார்' என்று அழைக்கப்பட்டுக் கௌரவப்படுத்தப்பட்டுள்ளார்.

நாச்சிமார் வழிபாட்டு மரபு

நாச்சிமாருக்கான வழிபாட்டு மரபுகள் யாவும் ஆகமம் சிற்ப சாத்திரம் சாரதா முறையிலேயே மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இன்றும் இவை பல இடங்களில் ஆகமம் சிற்ப சாத்திர விதிகளுக்கு உட்படாத வகையிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வட்டுவாகல், கணுக்கேணி மற்றும் முள்ளியவளை போன்ற இடங்களில் மேற்கொள்ளப்படும் வழிபாடுகள் இதற்குச் சான்றாகும். இங்கு வட்டுவாகல் ஆலய வழிபாட்டு மரபுகள் விளக்கம்பெறுகின்றன.

சண்டன், முண்டன் ஆகிய அரக்கர்கள் பெண்ணின் கருவில் தோன்றாத கன்னியால் மட்டுமே தமக்கு மரணம் ஏற்படலாம் என்று வரம் பெற்றனர். அவ்வரத்தின் காரணமாக அட்டூழியங்கள் பல செய்து வந்தனர் என்றும் இவர்களைக் கொன்று இவர்களின் தொல்லைகளுக்கு ஆளாகிச் சிரமப்பட்ட காத்யாயன முனிவரைக் காக்க வேண்டி சப்தமாதர் அவதாரம் எடுத்தனர் என்றும் அவர்களை அழித்த பின்னர் அடங்காப்பற்று வன்னியில் சப்தமாதர் குடியேறினர் என்றும் பின்னர் கொடிய விசமான கார்த்திகைக் கிழங்கை அரைத்துச் சாப்பிட்டு உயிரிழந்தனர் என்றும் வட்டுவாகல் ஆலயத்தின் தோற்றத் தொன்மம் எடுத்துரைக்கிறது. ஆரம்பத்தில் இச்சப்த கன்னி நாச்சியாருக்கு வட்டுவாகற் கரைகளில், தெருக்களின் சந்திப்புகளில் ஏழு கற்கள் அல்லது பெண் உருவங்கள் கொண்டு கூரை மற்றும் சுவர் இல்லாத சிறு கோவில்களை அமைத்தனர் என்பது வரலாறு கூறும் செய்தியாகும்.

இன்றைக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் செல்வபுரத்திற்கு அருகே வட்டுவாகற் கரையில் காணப்படும் வட்டுவாகல் சப்த நாச்சியார் அம்மன் கோவிலில் பன்னிரு வயதுக்கு உட்பட்ட சிறுமியரைத் தெய்வமாகக் கருதி விரதம் இருக்கச் செய்து அவர்களை வழிபடும் பழக்கம் தொடர்ந்து வருகிறது. இவர்கள் வெறும் பாவாடை மட்டும் உடுத்தியிருப்பர். மேலாடை கிடையாது. நிறைய நகைகளை அணிந்து மேலுடம்பை மறைத்திருப்பர். இறுதி நாளன்று கிராமத்துப் பெண்கள் மதுக்குடம் ஏந்தி ஊர்வலம் வருவர். (மதுக்குடம் என்பது விரிந்த தென்னம்பாளை செருகி வைத்த குடம் ஆகும்) இவை அனைத்தும் வளமைக் குறியீடுகளாக இவ்வழிபாட்டில் இடம்பெறுகின்றன.

தொகுப்புரை

உலகத் தோற்றத்தில் மிக ஆற்றல் பெற்ற ஓர் உயிர் என்றால் அது பெண்தான். அவளால்தான் இந்த உலகை உயிர்ப்பிக்கவும் வளப்படுத்தவும் முடியும். உலகின் ஆதி வழிபாடு பெண்ணை வழிபடும் வழக்கிலிருந்தே தொடங்குகின்றது. உலகம் முழுவதும் பெண்;தெய்வ வழிபாடுகள் காணப்படுகின்றன. அவ்வகையில் சில தொன்மங்களின் அடிப்படையில் இந்தியாவில் தோன்றிய நாச்சிமார் வழிபாடு இலங்கையின் அடங்காப்பற்று வன்னியிலும் பரவியுள்ளது. கணவன்மார்களுக்காக உயிரை விடும் அளவிற்குப் பெண்களின் மனத்துணிவு இருந்ததன் காரணத்தாலும், அதன் மூலம் தமது கற்பின் மகிமையை வெளிப்படுத்தியுள்ளமையாலும் நாச்சிமார் பெருநிலப்பரப்பின் கௌரவத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார்கள் என்று மக்கள் கருதுகின்றனர். இவர்களே சர்வ வல்லமை படைத்த காவல் தெய்வங்கள் என்று மக்களால் நம்பப்படுகின்றனர். அதனால் நாச்சிமாரை வழிபடும் இம்மரபு இன்றும் தொடர்கிறது.

உசாத்துணை

அருண்,க. (2022). 'நாட்டார் கலை இலக்கிய மரபு - ஓர் ஆய்வு'. சிலம்போசை, முல்லைத்தீவு: கரைதுறைப்பற்று பிரதேச செயலகம்.

அருணா, செல்லத்துரை. (2003). பண்டாரவன்னியன் - குருவிச்சி நாச்சியார் - வன்னிப் பாரம்பரிய வரலாற்று நாடகம். கொழும்பு: அருணா வெளியீட்டகம்.

அருணா, செல்லத்துரை. (2004). அடங்காப்பற்று (வன்னி) வரலாறு- 1. கொழும்பு: அருணா வெளியீட்டகம்.

அருணா, செல்லத்துரை. (2005). அடங்காப்பற்று - சுதேசத் தலைமைகள். கொழும்பு: அருணா வெளியீட்டகம்.

சுப்பிரமணியம், வே. (2007). வன்னியின் கதை, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

பத்மநாதன், சி. (1970). வன்னியர். பேராதனை: சைவப்பிரகாச அச்சகம்.

நேர்காணல்

வே. இராஜேந்திரம், வயது 60, அதிபர், முள்ளியவளை.

வே. குமாரகுலசிங்கம், வயது 67, ஓய்வு பெற்ற ஆசிரியர், முல்லைத்தீவு.

கு. ஞானப்பிரகாசம், (வயது 49), கடற்தொழில், முல்லைத்தீவு.

எ. சபரிமுத்து, வயது 74, ஓய்வு பெற்ற முகாமைத்துவ உதவியாளர், தண்ணீரூற்று.

சி. சபேசன், வயது 63, பூசாரி, சிலாவத்தை.

கு. ஞானப்பிரகாசம், வயது 79, ஓய்வு பெற்ற ஆசிரியர்,விவசாயம், முல்லைத்தீவு.

நா. நடனசபாபதி, வயது 82, ஓய்வு பெற்ற ஆசிரியர், முல்லைத்தீவு.

இ. மோகனராஜ், வயது 52, மட்பாண்டத் தொழில், வட்டுவாகல்.

ல. யோகதீபன், வயது 68, கூலித்தொழில், ஒட்டுசுட்டான்.

27

கொற்றவை வழிபாடு : தொல் தமிழர் மரபும் சமஸ்கிருதமயமாக்கமும்

கலாநிதி வ.குணபாலசிங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை. gunapalasingamv@esn.ac.lk

அறிமுகம்

தாய்த்தெய்வ வழிபாடு உலகின் மிகத் தொன்மையான வழிபாடுகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. உலகெங்கும் தோன்றியிருந்த நதிக்கரை நாகரிகங்கள் பலவற்றில் தாய்த்தெய்வ வழிபாட்டின் எச்சங்களைக் காணமுடிகின்றது. தமிழர் வழிபாட்டு மரபிலும் தாய்த்தெய்வ வழிபாடு புராதனமானதாக விளங்கியது. அதற்குச் சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட தொல்லியல் சின்னங்களும் பழந்தமிழர் இலக்கியங்களும் சான்றுகளாகின்றன. பழந்தமிழகத்திலே கொற்றவை, காடுகாள், சேட்டை, பிடாரி போன்ற பெண்தெய்வங்கள் வழிபடப்பட்டமையை இலக்கியச் சான்றுகள் வழியாக அறிகிறோம். இத்தெய்வங்களுள் கொற்றவை வழிபாடே முதன்மை பெற்றிருந்தது. அவள் பற்றிய செய்திகளை அவளுக்கான வழிபாட்டு மரபுகளையும் பழந்தமிழ் இலக்கியங்கள் விரிவாக எடுத்துக்கூறுகின்றன. இந்நிலையில், தமிழரின் தொன்மையான தெய்வமான கொற்றவைக்கு எவ்விதமான வழிபாடுகள் நிகழ்த்தப்பெற்றன என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

சங்க இலக்கியங்கள் விபரிக்கும் கொற்றவைக்கான வழிபாட்டு முறைமை

கொற்றவை வழிபாடு தமிழகத்தினைப் பொறுத்தமட்டில் ஆதி தாய்த்தெய்வ வழிபாட்டில் இருந்தே பரிணமித்தது என அறியலாம். அதன்படி போர்த்தெய்வமாக கொற்றவையைப் போற்றிய செய்தியை 'கொற்றவை நிலை' என்று தொல்காப்பியம்

சுட்டிக்காட்டுகின்றது. இக்கொற்றவைக்கு எள்ளுருண்டை, நெற்பொரி, அவரை, துவரை, அவல், நிணம், குடல், குருதி ஆகியன நிவேதனமாக படைக்கப்பட்டது பற்றிப் புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடுகின்றது. அதனை விபரிக்கும் பகுதி பின்வருமாறு :

அணங்குடை நோலை பொரி புழுக்கல் பிண்டி
நிணங்குடர் நெய்த்தோர் நிறைத்தும் கணம்புகலக்
கையிரிய மண்டைக் கணமோடி காவலற்கு
மெய்பிரியத் தான் முந்துறும்

(புலியூர்க்கேசிகன்(உ.ஆ) , 2017)

இப்பாடல் மூலம் எள்ளுருண்டையும் நெற்பொரியும் அவரை, துவரையும் அவலும் நிணமும், குடரும்; குருதியும் ஆகியவற்றால் நிறைவித்துத் தனது பூதத்திரள்கள் விரும்பி தனது கையிலே இருத்திய மண்டையையும் பூதகணங்களையும் உடையவளாகக் கொற்றவை கண்முன் காட்சிப்படுத்தப்படுகின்றாள்.

சங்ககாலத்தில் கொற்றவை வழிபாடானது துர்க்கை வழிபாடாக போற்றப்பட்டது. அதற்கமைய துர்க்கைக்கு (காளி) பலிகொடுத்து வணங்கியமை பற்றிச் சங்ககால இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு துர்க்கை வழிபாடு பயங்கரமான வழிபாடாக அமைந்திருந்தது. துர்க்கைக்கு வழிபாடாற்றுபவர்கள் கையில் நூலொன்றினை அடையாளமாகக் கட்டும் வழக்கம் சங்ககாலத்தில் இருந்ததாக குறுந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்காலத்தில் நிலவும் துர்க்கை வழிபாட்டிலும் இம்மரபினைக் காணலாம்.

மேலும், சங்ககால இலக்கியங்களில் வெற்றித் தெய்வமாக மிளிரும் துர்க்கைக்குரிய விழா பற்றிய விடயங்களையும் எடுத்தியம்புகின்றன. துர்க்கைக்குரிய திருவிழாவைப் பற்றிக் குறுந்தொகையில் கூறப்பட்டுள்ளது. அதற்கமைய இவ்விழா தொடங்கும் போது கையில் காப்புக் கட்டுதல் பற்றியும் விழா இறுதியில் காப்பினைக் களைத்து விடுதல் பற்றியும் குறிப்பிட்டுள்ளது. இத்துர்க்கைத் திருவிழா பற்றிய குறிப்புக்கள் சிலப்பதிகாரத்தின் மதுரைக் காண்டத்தில் வேட்டுவ வரியிலும் இடம்பெற்றுள்ளன. இவ்வேட்டுவ வரியில் 'கொற்றவை விழா'

எனும் வழிபாடு கொற்றவைக்கு இயற்றப்பட்டதாக அறியக்கிடைக்கின்றது.

சிலப்பதிகாரம் விபரிக்கும் கொற்றவைக்கான வழிபாட்டு முறைமை

சங்கமருவிய காலத்து முக்கிய இலக்கியங்களில் ஒன்றாகிய சிலப்பதிகாரத்திலேயே கொற்றவைக்கான வழிபாட்டு முறை தெளிவாக எடுத்தியம்பப்படுகின்றது. இதனைக் கீழ்வரும் பாடல் வரிகள்மூலம் அறிந்துகொள்ள முடியும் :

திரிதரு கோட்டுக் கலைமேல் ஏற்றிப்
பாவையும்,கிளியும், தூவி அம்சிறைக்
கானகக் கோழியும், நீனிற மஞ்ஞையும்
பந்தும்,கழங்கும், தந்தனர் பரசி;
வண்ணமும், சுண்ணமும்,தண்ணறுஞ் சாந்தமும்
புழுக்கலும், நோலையும், விழுக்குடை மடையும்
பூவும், புகையும், மேவிய விரையும்,
ஏவல் எயிற்றியர் ஏந்தினர் பின்வர
ஆறெறி பறையும், சூறைச் சின்னமும்
கோடும், குழலும், பீடுகெழு மணியும்
கணங்கொண்டு துவைப்ப, அணங்குமுன்நிறீ,
(வசந்தா வைத்தியநாதன். ,ப.120.)

இப்பாடலின் கருத்துப்படி 'கொற்றவைக் கோட்டத்தில் தேவி கலைமானின்மீது எழுந்தருளியிருந்தாள். அவள் திருமேனிக்கு வண்ணம், சந்தனம் பூசப்பெற்றன. தேவியின் திருவுருவத்திற்குமுன் பல்வகை மரங்கள் சூழ்ந்த பலித்தளம் இருந்தது. அதில் கொற்றவை தரும் நன்மைகளுக்கு வேட்டுவர் தரும் விலையான மலரும் அவரை, துவரை போன்ற புழுக்குக் கறிகளும் நிணச்சோறும் பலியுணவாகப் படைக்கப்பட்டன. பூ, நறும்புகை, வாசனைத் திரவியங்கள், பந்து, கிழங்கு, பாவை ஆகியனவும் வழிபாட்டில் இடம்பெற்றன. கிளி, கானக்கோழி, மயில் ஆகிய பறவைகளும் அவளின் முன்னிலையில் விடப்பட்டன. அவளை அமரி, குமரி, கௌசி, சமரி, சூலி, நீலி எனப் பல பெயர்களால் விளித்து மகிழ்ந்தனர். பறை, சின்னம், துத்தரிக் கொம்பு, குழல், மணி முதலிய இசைக்கருவிகளையும் இவளைத் தொழும்போது இசைத்தனர்' என்று கொற்றவையின் வெறியாடல் நிகழ்வு குறிப்பிடப்படுகின்றது.

சிலப்பதிகாரத்தின் வேட்டுவ வரிகள் இச்செய்திகளைக்; குறிப்பிட்டுச் செல்கின்றன.

மேலும், வண்ணக்குழம்பும் சுண்ணப்பொடியும் குளிர்ந்த நறுஞ் சந்தனமும் புழுக்கலும் எள்ளுருண்டையும் தினைச்சோறும் பூவும் புகையும் விரையும் ஆகியவற்றைப் பணி செய்யும் மறகுலப் பெண்கள் தாங்கி வந்தனர். அவ்வளவில் வழிப்பறிக்க முழங்கும் பறையும் சூறையிடுங்காலத்திலே ஊதும் சின்னமும் கொம்பும் குழலும் மணியும் ஒருங்கே சேர்த்து ஒலியெழுப்புமாறு அக்குமரியின் முன்னாலே நிறுத்தப்பெற்றன. பின்னர் தான் தந்த வெற்றியின் விலையாகப் பலியேற்று உண்ணும் ஐயையின் மலரிட்ட பலிபீடத்தை முதலில் தொழுதனர். அதன்பின் மானை ஊர்தியாக் கொண்ட கொற்வையைக் கைதொழுது போற்றினர்.;

இதைவிட சிலப்பதிகாரத்தில் கூறப்படுகின்ற கொற்றவை வழிபாடு தொடர்பான செய்திகளுள் தலைப்பலி தொடர்பான தகவல்கள் குறிப்பிடத்தக்கன. இத்தலைப்பலியானது கொற்றவை வழிபாட்டுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகவும் விளங்குகின்றது.

'கொற்றவை வெற்றித் தெய்வமாகக் கருதப்பட்டதால் போர்க்காலங்களில் வீரர்கள் தங்களுக்கு வெற்றி பெற்றுத் தருமாறு பெரும்பாலும் கொற்றவைக்குத் தலையைக் கொடுத்தனர். போரில் வெற்றி பெற்ற பிறகும் இத்தலைப்பலி இடப்பட்டது. போரிலே அடைந்த வெற்றிக்கு நன்றிக் கடனாற்ற எயினர்கள் தங்கள் தலையை அறுத்து அங்கிருந்து பொங்கி எழும் குருதியை விலையாக ஏற்றுக்கொள்ளுமாறு கொற்றவையை வேண்டினர். பலியிட முனைந்த மறவர்கள் தங்கள் குலக்குமர் ஒருத்தியைக் கொற்றவையாக பாவித்தனர். அக்குமரியை அழகுபடுத்தியபின் கலைமானின் முதுகிலே ஏற்றிவைத்து வண்ணக்குழம்பு, சுண்ணப்பொடி, சந்தனம், சோறு, எள்ளுருண்டை, கொழுப்புச் சாதம், பூ, மணப்பொருட்கள் முதலியவற்றைப் படைத்து வணங்கினர். பலியிடும் சமயம் பறை, ஊதுகுழல் ஆகியவை ஒலிக்கும். வீரர்கள் முதலில் பலிபீடிகையையும் பின் கொற்றவையையும் தொட்டு வணங்கியபின் தலைப்பலி இட்டனர்.'

சிலப்பதிகாரத்தில் கொற்றவைக்குரிய திருக்கோவில் வழிபாடு பற்றியும் கூறப்படுகின்றது. உயிர்களுக்குப் பல்வேறு வகையிலும் எருமைத் தலையையும் மனித உடலையும் கொண்டு விளங்கும்

மகிடாசுரன் தீங்கிழைத்துக் கொண்டிருந்தான். இவனைக் கொற்றவையானவள் அழித்து உயிர்களைக் காத்தாள். இதன் பொருட்டு பண்டைப் பெருமக்கள் மகிடாசுரன் அழிந்ததை வெற்றியாகக் கொண்டு அன்னைக்குத் திருக்கோயில் எடுப்பித்து வழிபட்டு வந்தனர். இதன் வாயிலாக கொற்றவைக்குத் திருக்கோயில் வழிபாடு தோன்றியது. இத்தகைய செய்திகள் சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ளதை சான்றுகள் வாயிலாக அறியலாம்.

'ஐயைதன் கோட்டம் அடைந்தனர்'

'ஐயை கோட்டத்து எய்யா ஒருசிறை'

'மலைபுரை மாடம் எங்கணும் கேட்பக்

'கலையமர் செல்வி கதவம் திறந்தது'

'கொற்றவை வாயில் பொற்றொடி தகர்த்து'

(வசந்தா வைத்தியநாதன்,ப.124)

இவை கொற்றவையின் திருக்கோயில் வழிபாட்டுக்குத் தக்க சான்றுகளாகும். புத்த சமய நூலான மணிமேகலையும் காடமர் செல்வியாகிய பெண் தெய்வம் பற்றியும் அத்தெய்வத்திற்கான வழிபாடு பற்றியும் குறிப்பிடுகின்றது.

கொற்றவை வழிபாட்டின் உருமலர்ச்சி கலிங்கத்துப்பரணிப் பாடல்களிலும் ஆங்காங்கே காணக் கிடைக்கின்றது. 'காடு கெழு செல்விக்குப் பரணி நாளில் கூழும் துணங்கையும் கொடுத்துத் தொழுதனர்' என்ற செய்தியை இப்பரணிப் பாடல்கள் அடையாளம் காட்டுகின்றன.

பல்லவர் காலச் சிற்பங்கள் உணர்த்தும் கொற்றவைக்கான வழிபாட்டு முறைமை

கொற்றவைக்குக் கோயிலிருந்த குறிப்பைச் சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய இலக்கியங்கள் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது. சங்க மற்றும் சங்கமருவிய காலத்தில் கொற்றவைக்குக் காடுதான் கோயிலாக காணப்பட்டிருந்தது. இயற்கையாலான காடும் மரங்களும் அவளின் ஆலயக் கூரைகளாயிருந்தன. பிற்பட்ட காலமாகிய பல்லவர் காலத்தில் தமிழகத்தில் முதன்முறையாக நிலையான ஆலயங்கள் அமைக்கப்படலாயின. குடைவரை,

மலைதளி, கற்றளி எனும் படிமுறைப் பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில் ஆலயங்கள் உருவாக்கம் பெற்றிருந்தன. அதன்படி பல்லவர்களால் அமைக்கப்பட்ட இந்நிலையான கோயிலமைப்பு முறையில் கொற்றவைக்கும் ஆலயம் எழுப்பப்பட்டது. மாமல்லன் கட்டிய கோயில்களிலே கொற்றவைக்கும் ஓர் கோயிலமைத்தான் என அறியக் கிடைக்கின்றது. இக்கோயில் பற்றி இரா.கலைக்கோவன் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் :

'தளப்பரப்பில் நிற்கும் இரண்டு தளிகளுள் முதல் தளி ஒரு தள விமானமாய் அமைந்துள்ளது. அது கொற்றவைக்காய் அர்பணிக்கப்பட்டிருந்த போதும் இத்தளியை திரௌபதை ரதம் என்று அழைப்பதிலேயே அனைவரும் மகிழ்கின்றனர்.'

அக்கோயிலின் முற்புறக் கோட்டங்களிலே கொற்றவையின் சிற்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றுள்ளும் கிழக்குக் கோட்டச் சிற்பமே முழுமைபெற்றுள்ளது. சிற்ப சாஸ்திர விதிப்படி வடிக்கப்பட்டது போல உள்ளது. இவ்வடிவம் மகிடன் தலைமேல் வெற்றிப் பெருமிதத்தோடு அழகு பொலிந்து நி;ற்கும் திருவுருவமாக வடிக்கப்பட்டுள்ளது.

இதே போன்று கொற்றவைக்குப் பலி நிவேதனம் அளிக்கப்படும் காட்சியானது வராக குடைவரைக் கோயிலின் சிற்ப தொகுதியிலும் காணப்படுகின்றது.

மாமல்லபுரத்தில் திரிமூர்த்திக் குகைக்கோயிலுக்குப் பக்கத்திலுள்ள ஒரு பாறையில் புடைப்புச் சிற்பமாக கொற்றவையின் உருவம் ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. இவ் உருவத்தினைச் சிலர் துர்க்கை என்றும் குறிப்பிடுகின்றனர். மாமல்லன் காலத்தில் அமைக்கப்பட்ட மற்றொரு கொற்றவையின் திருவுருவம் திருச்சிராப்பள்ளிலையில் சிற்பமாகவுள்ளது. இவ்வாறான கொற்றவையின் சிற்பங்கள் அனைத்திலும் காணக்கூடிய பொதுவான அம்சம் யாதெனில், கொற்றவையின் காலடியில் இரண்டு மனிதர் தரைமேல் மண்டியிட்டு அமர்ந்திருக்க, அவர்களில் வலது புறம் இருப்பவன் வழக்கம் போலத் தன் தலையை தானே வாளினால் அறுத்துக் கொள்கின்றாள் என்பதாகும்.

இச்சிற்பங்கள் வீரன் ஒருவன் தன் வழிபடு தெய்வமாகிய கொற்றவைக்குத் தன் தலையைப் பலியிடுவதைக் காட்டுகின்றன.

உயிரைப் பொருளென மதியாமல் வெற்றியையே உயிராகக் கருதும் வீரர்கள் கொற்றவை கோயிலில் சென்று தங்கள் அரசன் வெற்றி பெற வேண்டும் என்று வரம் வேண்டி தங்கள் தலையைத் தாங்களே அறுத்துப் பலியிட்டுக் கொற்றவையின் திருவடிகளில் வைப்பது பண்டைக் காலத்துத் தமிழர்களின் வழக்கமாகவும் வீரமாகவும் காணப்பட்டுள்ளது. தலைப்பலியை நவகண்டம் என்றும் குறிப்பிடும் வழக்கமுண்டு. இந்நரபலியிடும் வழிபாட்டினைப் பற்றி,

'மருவூர் மருங்கின் மறங் கொள் வீரரும்
பட்டின மருங்கிற் படைகெழு மாக்களும்
முந்தச் சென்று முழப்பல் பீடிகை
வெந்திறன் மன்னற் குற்றத்தை யொழிக்கெனப்
பலிக்கொடை புரிந்தோர் வலிக்குவரம் பாகெனக்
கல்லுமிழ் கவணினர் கழிப்பிணிக் கறைந்தோற்
பல்வேற் பரப்பினர் மெய்யுறத் தீண்டி';

(வசந்தா வைத்தியநாதன், ப.127)

என்னும் சிலப்பதிகார அடிகள் மூலம் அறியலாம். அதேபோன்று கலிங்கத்துப் பரணியும்; தக்கயாக பரணியும் இச்செய்தியைக் குறிபிடுகின்றன.

வடமொழியின் செல்வாக்கு தமிழகத்தில் ஊடுருவத் தொடங்கியது தொடக்கம் சமயம், கலை, கலாசாரம், மொழி என்று அனைத்துத் துறைகளும் மாற்றங்களுக்கனகு உட்பட்டன. அதன்படி தமிழர்களின் கடவுளர்களுடன் வடமொழிக் கடவுளர்களின் இயல்புகளும் பெரும்பாலும் ஒத்துச் சென்றமையினால் இருதரப்புப் பண்பாடுகளும் தம்முள் சமரசம் செய்துகொண்டன. அச்சமரசத்தின் அடிப்படையில் மெதுமெதுவாக ஆரியமயமாக்கலுக்குட்பட்ட வழிபாடுகளில் இக்கொற்றவை வழிபாடும் உள்ளடங்கும்.

அதன்படி வடமொழி மரபு வழியாக உருத்திரனோடு சிவனுடன் உமையும் இணைக்கப்படுகின்றாள். இம்மரபே பின்நாட்களில் தமிழகத்தில் சோமஸ்கந்த மூர்த்தமாக பரிணமிப்பதற்கும் காரணமாகியது எனலாம். இம்மரபை இரா.கலைக்கோவன் அவர்கள்,

'குறிஞ்சித் தெய்வமான முருகன் கொற்றவையின் மகன் என்பது சங்ககாலத்திலேயே அறியப்பப்பட்டிருந்த செய்தியாகும். முருகனைச் சிவபெருமானின் மகனாக அறிமுகப்படுத்தும்

கலித்தொகைப் பாடலடியைப் பெரும்பாணாற்றுப்படைச் செய்தியுடன் இணைத்துப்பார்த்தால் சிவன், கொற்றவை ஆகியோர் தாய், தந்தையாகவும் முருகன் அவர்களின் மகனாகவும் சங்க மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வழிபடப்பட்டமை தெளிவாகத் தெரியவரும். ஆனால், இவ்விலக்கியங்கள், கொற்றவையின் கணவராக சிவபெருமானைக் காட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. முருகனை வைத்தே அம்மையும் அப்பனும் இணையும் சங்க அதிசயம் கூர்ந்து சிந்திக்கத்தக்கது. பல்லவர் காலத்தில் வழக்கிற்கு வந்த சோமஸ்கந்த தொகுதிக்கு இச்சங்கச் சிந்தனையே தூண்டுகோலாய் அமைந்திருக்கலாம்' என்று கூறுகின்றார்.

சிலப்பதிகாரமும் சிவபொருமானின் பண்புகளைக் கொற்றவைக்கு ஏற்றிப் பாடியுள்ளது என்பதனை முன்னரே குறிப்பிட்டோம். இந்நூலில் கொற்றவை பற்றியும் உமை பற்றியும் கூறப்பட்டுள்ள போதிலும் கொற்றவைக்கு அதிக முக்கியத்துவத்தினைச் சிலம்பு வழங்கியுள்ளது. இருப்பினும், திருமாலின் தங்கையாகக் கொற்றவை அறிமுகமாவதும் திருமாலின் அடையாளக் கருவிகளான சங்கையும் சக்கரத்தையும் அவளது கருவிகளாகக் காட்டுவதும் சிலப்பதிகாரத்திலேயேதான். இதன் பின்னரே தமிழ்ச் சிந்தனைகளும் ஆரியச் சிந்தனைகளும் வலுப்பெற்றுக் கொற்றவையானவள் உமை, துர்க்கை என்று பெயர் மாறி சிவபெருமானிலிருந்து பிரிக்கமுடியாத சக்தியாக மாற்றம் பெற்று விடுகின்றாள்.

'சிந்துவெளி நாகரிகப் பெண் தெய்வம் பிற்காலத்தில் இந்து சமயத்தில் சக்தியாக மிளிர்ந்தது என்று நாம் கொள்ள முடியுமானால் பழந்தமிழரின் கொற்றவை சைவ சித்தாந்தத்திலும் சிவனுடைய சக்தியாக உருமாறியது என்று கொள்ளலாம்' என்று கைலாசபதி குறிப்பிடுகின்ற கருத்தும் இவ்விடத்தில் சிந்திக்கத்தக்கது. இவ்வாறாக கொற்றவை பற்றிய சிந்தனைகள் வளர்ச்சியடைந்து வந்துள்ளதை அறிகின்றோம். சங்க காலத்திலும் அதன் பின்வந்த சங்கமருவிய காலத்திலும் அதிக முக்கியத்துவம் பெற்றிருந்த கொற்றவை வழிபாடு சங்க காலத்தின் நடுப்பகுதியிலேயே தமிழகத்திற்கு வருகை தந்த வடமொழிச் செல்வாக்கினாலும், சமண பௌத்த மதங்களின் செல்வாக்கினாலும்

சற்றே மாற்றமுற்றது. பிற்பட்ட காலங்களில் கொற்றவை வழிபாடானது சற்றே தளர்வுற்றது.

பிற்காலத்தில் கொற்றவை துர்க்கை எனும் பெயரைப் பெறுவதற்கு இதற்கு அடிப்படையாய் அமைந்தது ஆரியமயமாக்கலின் செல்வாக்காகும். இத்துர்க்கைக்குப் பூஜை செய்வோர் அல்லது வழிபாடு இயற்றுவோர் கையில் நூல் ஒன்றினைக் கட்டிக்கொள்வர் என்று குறுந்தொகைப் பாடலொன்று குறிப்பிடுகின்றது என்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையினைச் சேர்ந்த திருமதி சோதிமலர் ரவீந்திரன் அவர்கள் குறிப்பிடுகின்றார். இக்கொற்றவை எனும் தெய்வம் தமிழர்களின் ஆதி தெய்வமாகவிருந்து பிற்பட்ட காலங்களில் துர்க்கை எனும் தெய்வமாக மாற்றப்பட்டு வணங்கப்பட்டுள்ளார் என்பதனை ஆங்கில எழுத்தாளர் Chitralekha Singh Prem Nath அவர்கள் குறிப்பிடுகின்றார். அவரின் கட்டுரையிலிருந்து சில சான்றுகள் பின்வருமாறு :

Kali is symbol of world destruction. From her early representations at Ellora, the tradition persists of her being imaged as an emaciated. Yet beautiful women with sunken eyes.thirsty lips and frame of bones. The most exquisite representation of Kali is at Bhuvaneswar and Jupur in Orissa and at Devagram in Bengal. The Kali was called 'kortavai' in shanka kala. She shows with deer. This shanka kala period is disciribeing old Tamil people's life. Old Tamil peoples were preyed 'kortavai'. 'kortavai' was very important god of Tamil adventures. After longly days kortavai was rechanged, the maha kali. Nowadays Tamil country peoples are Worship is 'kali'. There are many names of kali. Thurka, Thara, Bhavathy, cowry and etc.

இவைமட்டுமல்லாது அன்னை பார்வதியின் பல்வேறு அம்சங்களின் அவதாரக் கதைகளையும் குறிப்பிட்டு விளக்கியுள்ளார்.

'பாய்கலைப்பாவை பாடற்பாணி
ஆசான் திறத்து அமைவரக் கேட்டு'

எனவரும் குறிப்பால் பண்டைப் பெருமக்கள் கொற்றவையைப் பாடியிருந்தனர்;. இப்புகழாரங்கள் பிற்காலத்தில் பாடல் வடிவங்கள்

தோன்ற வழிவகுத்தன எனத் தெரிகிறது. பாலை நிலைத் தெய்வமாகிய கொற்றவையைப் புகழ்ந்து பாடும் தேவபாணியை ஆசான் விளக்கும் திறத்தால் பாடக்கேட்டு என்பது இதன் பொருளாகும். இதன் தொடராகப் பல புலவர்களும் கொற்றவையைப் பாடிப் பரவியிருந்தனர். சாக்தம் எனும் தனிச் சமயமாகவும் சண் மதங்களின் ஒன்றாகவும் சக்தி வழிபாடு வளர்சியடைந்தது.

தேவி மகாத்மியம் ஸ்ரீ சூக்தம் போன்ற வடமொழி இலக்கியங்களும் கொற்றவையின் நிலையிலிருந்து மாற்றமடைந்ததன் பின்னர் தோன்றிய காளி வழிபாடு பற்றிய செய்திகளைக் குறிப்பிடுகின்றன. பின்வந்த காலத்தில் நாயக்கர் காலத்தினைச் சேர்ந்த அபிராமிப்பட்டர் முதலிய சாக்த உபாசகர்களும், ஆதி சங்கராச்சாரியார், குமரகுருபரர் போன்றேரும் துர்க்கை குறித்துக் குறிப்பிடுகின்றனர். அபிராமிப்பட்டரின் அபிராமி அந்தாதியிலே,

> நாயகி நான்முகி நாராயணிகை நளின பஞ்ச சாயகி
> சாம்பவி சங்கரி சாமளை சாதி நச்சுவாயகி மாலினி
> வாராகி சூலி மாதவியென்றே ஆயகியாதி யுடையாள்
> சரணம் அரண் நமக்கே (சிவ வழிபாட்டு மலர்: 2009, ப.65)

என்ற பாடல் இடம்பெறுகின்றது. அப்பாடலிலே 'சூலி' என்ற பெயர் இடம்பெறுகின்றது. இப்பெயர் சங்ககாலத்திலே கொற்றவைக்குக் கூறப்பட்ட பெயர்களில் ஒன்று என்பதும் இவ்விடத்தில் நினைவுகூரத்தக்கது. அது போலவே மலையாள மாந்திரிக நூல்களும் கொற்றவை பற்றிக் கூறுகின்றன. 'காளி வாலை' எனும் பழைய மாந்திரிக நூலிலே,

> கங்காள ரூபி காளி பிடாரி கருணைமிகும் ஆங்காளி
> சாமுண்டி யோகினியாமளை அம்பரத்தி மங்காதெனும்
> சுடர் ஒளி பரவ வருவாய்; சர்வேஸ்வரி சிவகாளி
> சிங்கமீதில் அருள்புரிவாய் என் தாய் திரிபுரை கொற்றவையே
> (மந்திர ஏடு.)

என்றவாறு கொற்றவையானவர் குறிப்பிடப்படுகின்றமை கிராமிய சிறு தெய்வ வழிபாட்டிலும்கூட கொற்றவை குறித்த சிந்தனைகள் புரையோடி வந்துள்ளன என்பதனைக் காணலாம். இன்றும்கூடச் சிறு தெய்வ வழிபாட்டில் காளிக்கு மிருக பலியிடும் வழக்கம் நிலவி

வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இச்சிறுதெய்வ கிராமிய வழிபாடு பொரும்பாலும் ஆரியமயமாக்கலுக்கு உட்படுத்தப் படாமையினால் பண்டைத் தமிழர்களின் கொற்றவை வழிபாட்டுச் சாயல்கள் இன்றும் சிறு தெய்வ வழிபாட்டில் சற்று மாற்றமுற்ற பாணியில் இடம்பெறுகின்றன எனலாம்.

முடிவுரை

ஒட்டுமொத்தமாக நோக்கினால், சிந்துவெளியில் ஆரம்பமாகிய தாய்த்தெய்வ வழிபாட்டின் வரலாறானது பல்வேறு மாற்றங்களினூடாகவும் பல்வேறு பரிணாமங்களினூடாகவும் வளர்ச்சி கண்டு, கொற்றவையாய் தமிழகத்தில் பரிணமித்து, பின்னர் ஆரியமயமாக்கலுக்குட்படுத்தப்பட்டு துர்க்கை, காளி எனும் தெய்வங்களாகப் புத்துருவம் தரித்து, இன்றுவரை இந்துக்களிடையே சிறப்புற்று விளங்குகின்றது என்று குறிப்பிட முடியும். அதேவேளை வேறு கோணங்களின் வாயிலாகவும் இக்கொற்றவை வழிபாடு உலகின் பல்வேறுபட்ட நாகரிகங்களிலும் சிறப்புப் பெற்று விளங்குகின்றது என்பதனையும் மறுப்பதற்கில்லை.

உசாத்துணை நூல்கள்

கோவிந்தனார்.கா., (1996) பெரும்பாணாற்றுப்படை, எழிலகம், திருவந்திபுரம்.

சிதம்பரனார்.சாமி. (2004), பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

சுந்தரமூர்த்தி.கு, (1991) , சங்க இலக்கியங்களில் சமய நோக்கு, தருமை ஆதினம், அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம், மயிலாடுதுறை.

சுப்புரெட்டியார்.ந., (1957). கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி, செல்வி பதிப்பகம், காரைக்குடி.

பத்மநாதன்.சி.(பதி), இரகுபரன்.க.(பதி),பிரசாந்தன்.ஸ்ரீ.(பதி), (2011). அறநெறிக் காலமும் தமிழகப் பண்பாட்டு மரபுகளும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம். யுனி ஆர்ட்ஸ் பிறைவேட் லிமிட்டட், கொழும்பு.

பத்மநாதன்.சி. (பதி), (2007). சங்க இலக்கியமும் சமூகமும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு..

பரராஜசிங்கம்.க., (2017). சிந்துவெளி நாகரிகமும் தமிழரும், மட்டக்கள்ப்பு தமிழ்ச் சங்கம், மட்டக்களப்பு.

புலியூர்க்கேசிகன், (2009), பரிபாடல் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை.

புலியூர்க்கேசிகன், (2009), பரிபாடல் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை.

புலியூர்க்கேசிகன், (2009) . பதிற்றுப் பத்து, பாரி நிலையம், சென்னை..

வித்தியானந்தன்.சு., (2003). தமிழர் சால்பு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு-சென்னை.

Chitralekha Singh Prem Nath, (2000), ''Hindu goddeses'', Creast Publishing House, New Delhi.

28

சிலப்பதிகாரக் காப்பியத்தின் மூலம் இனங்காணக்கூடிய வாழ்வியல் சடங்குகளும் சம்பிரதாயங்களும்: ஓர் ஆய்வு

ந.குணசிவருபன்,
முது தத்துவமாணி மாணவன், இலங்கை.
kunasivarupankunasivarupan@gmail.com

ப. தாரணி,
தற்காலிக உதவி விரிவுரையாளர், மொழித்துறை பிரிவு,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
thaaranipancha@gmail.com

அறிமுகம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் ஐம்பெரும் காப்பியங்கள் சிறப்பிடம் பெறுவதினைக் காணலாம். சங்கமருவிய காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்களுள் சிலப்பதிகாரமும் சிறப்பிடம் பெறுகிறது. ஐம்பெரும் காப்பியப் பெயர்கள் பெண்கள் அணியும் அணிகலன்களின் பெயரிலே அமைந்துள்ளமையினைக் காணலாம். அந்த வகையில் சிலப்பதிகாரம் சிலம்பு என்னும் மகளிர் அணியும் காலணி பெயரினால் அமைந்துள்ளமையோடு அறநிலைகளில் இல்லற நிலையை வெளிப்படுத்துகின்றமையைக் காணலாம். சிலப்பதிகாரம் சேர நாட்டவரான இளங்கோ அடிகளால் கி.பி இரண்டாம் நூற்றாண்டளவில் இயற்றப்பட்டது. சோழ நாட்டின் தலைநகரமாக விளங்கிய பூம்புகாரைச் சேர்ந்த கோவலன் மற்றும் அவனது மனைவி கண்ணகி பற்றிய வாழ்க்கை வரலாற்றினை எடுத்துரைக்கும் காப்பியமாக இது அமைகின்றது. சிலப்பதிகாரம் 'இயலிசை நாடகக் காப்பியம்' எனச் சிறப்பிக்கப்படுகின்றது. அதாவது முத்தமிழ்களான இயல், இசை, நாடகம் என்னும் மூன்றினையும் வெளிப்படுத்தி இருப்பதோடு இக்காப்பியம் கோவலன் எனும் குடிமகனை பாட்டுடைத் தலைவனாகக்

கொள்வதனால் 'குடிமக்கள் காப்பியம்' எனவும் அழைக்கப்படுகிறது. மனிதன் வையகத்தில் பிறந்து வாழ்ந்து வரும் காலகட்டத்தில் அவனது வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்ததாக சடங்கு சம்பிரதாயங்கள் காணப்படுகின்றன. அவை பிறப்புச் சடங்கு, ருது சோபன சடங்கு, திருமணச் சடங்கு, இறப்புச் சடங்கு போன்றவைகளாக அமைகின்றமையைக் காணலாம். பிறப்பு தொடக்கம் இறப்பு வரையில் மனிதன் தன் வாழ்வில் சடங்கு முறைகளை பேணல் அவசியமானதாக அமைகின்றது. இக்காப்பியத்தின் கதை மாந்தர்களின் ஊடாக குறிப்பாக கண்ணகி, கோவலன், பாண்டிய மன்னன் மற்றும் மாதவி ஊடாக வாழ்வியல் சடங்கு முறைகளை இனங்காணக்கூடியதாக அமைகிறது. கண்ணகி காப்பியத்தில் அறம், பொருள் மற்றும் இன்பம் பற்றிய நிலைகள் எடுத்துரைக்கப்படுவதோடு காப்பிய நாயகியான கண்ணகி மூலம் மனித வாழ்வின் கற்பு நெறிமுறைகளும் இனங்காணக்கூடிய வகையில் அமைந்துள்ளமையினைக் காணலாம்.

ஆய்வுப் பிரச்சினை

கண்ணகி காப்பியமானது அறம், பொருள், இன்பம் மற்றும் அறச்சிந்தனைகளை எடுத்துக் கூறுவதாக அமைகின்ற வேளையில் வாழ்வியல் சடங்கு முறைகளும் சம்பிரதாயங்களும் எடுத்துரைக்கப்படுகின்றதா? என்பது இவ்வாய்வின் பிரச்சினையாக கருதப்படுகின்றது.

ஆய்வின் நோக்கங்கள்

இவ்வாய்வின் பிரதான நோக்கமாக கண்ணகி காப்பியத்தில் வாழ்வியல் சடங்கு முறைகளை எடுத்துரைத்தல், துணை நோக்கங்களாக சிலப்பதிகார இலக்கியம் கூறும் பெண்நிலை பற்றி எடுத்துரைத்தல் மற்றும் சிலப்பதிகாரம் வழியே எடுத்தாளப்பட்ட அறச்சிந்தனைகளை இனங்காணல் போன்றன அமையவுள்ளன.

ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது பண்பியல்சார் பகுப்பாய்வாக அமையவுள்ளது. முதல்நிலைத்தரவுகளாக இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகார மூலநூலும் இரண்டாம் நிலைத்தரவுகளாக சிலப்பதிகாரம் மற்றும் வாழ்வியல் நெறிமுறைகள் தொடர்பாக வெளிவந்த ஆய்வுக்கட்டுரைகள், பத்திரிகைக் குறிப்புக்கள்,

இணையத்தளம் மற்றும் சஞ்சிகைக் குறிப்புகள் பயன்படுத்தப்பட உள்ளன.

கலந்துரையாடல்களும் பெறுபேறுகளும்

தமிழிலுள்ள ஐம்பெருங்காப்பியங்களில் முதன்மை பெறுவது இளங்கோவடிகளால் இயற்றப்பட்ட சிலப்பதிகாரமாகும். இயல், இசை மற்றும் நாடகம் என்னும் முத்தமிழும் இந்நூலில் காணப்படுவதால் இது முத்தமிழ் காப்பியம் எனவும் அழைக்கப்படுகிறது. இந்நூலானது காவிரிபூம்பட்டிணத்தில் பெருங்குடி வணிகர் மரபில் உதித்த கண்ணகி, கோவலன் வரலாற்றினைக் கூறுகின்றமையினைக் காணலாம். சிலப்பதிகாரம் புகார் காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்னும் மூன்று காண்டங்களை உடையது. இந்த மூன்று காண்டங்களிலும் முப்பது காதைகள் அமைந்துள்ளன.

சடங்குகள் மனித வரலாற்றுடன் இணைந்ததாக காணப்படுகின்றன. இந்து மக்களின் வாழ்க்கையானது சடங்குகளோடும் சம்பிரதாயங்களோடும் பின்னிப் பிணைந்தாகக் காணப்படுகிறது. ஒருவரது பிறப்பு முதல் தொடங்கும் சடங்கானது அவர் இறந்த பின்னரும் தொடருகின்றமையினைக் காணலாம். இந்துப் பாரம்பரியத்தில் வாழ்க்கை வட்டச் சடங்குகள், தொழிற்சடங்குகள், கோயிற்சடங்குகள் என பல்வேறுபட்ட சடங்குகள் மக்களினால் பேணப்பட்டு வருகின்றமையினைக் காணலாம். அந்தவகையில் சிலப்பதிகாரக் காப்பியத்தின் மூலம் இனங்காணக்கூடிய வாழ்வியல் சடங்குகளும் சம்பிரதாயங்களும் பற்றி நோக்குவோம்.

பிறப்பு சடங்கு

கோவலன் ஊடாக ஆண் குழந்தைக்குச் செய்ய வேண்டிய பிறப்பு சடங்குகள் பற்றி அறிய முடிகின்றது. ஆண் குழந்தை பிறந்து ஐந்து திங்களின் பின்னர் அக்குழந்தைக்கு பஞ்சாயுதங்கள் அணிவிக்கப்படுகின்றன. பஞ்சாயுதங்கள் என்பது ஐந்து வகையான ஆபரணங்களை குறிக்கின்றது. அத்துடன் தோள் வளையிடல் செய்து அரைக்கு அரைநாண் அணிவிக்கப்படுகின்றமையை காணலாம். இன்றைய காலகட்டத்திலும் இத்தகைய சடங்கு முறைகள் இந்து மக்கள், கிறிஸ்தவ மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்று காணப்படுவதினைக் காணலாம். (த.மேகராசா,2015:30)

அன்னப்பிராசனம்

குழந்தை பிறந்து ஆறு திங்களின் பின்னர் அன்னம் ஊட்டப்படும். இவ் சடங்கு கோவில் அல்லது வீடுகளில் குழந்தையின் தாய்மாமன் இல்லது பெரியவர்களினால் இனிப்பு கலந்த பொங்கல் ஊட்டப்படும். இவ் சடங்கு முறையினை கோவலனுக்கு பாலடிசில் கொடுக்கப்பட்டமையினோடு ஒப்பிட்டு நோக்கலாம் (த.மேகராசா, 2015: 30). பாலடிசில் என்பது பாலோடு இனிப்பு, அரிசி கலந்து செய்யும் ஒருவகையான பொங்கல் வகையாகும். அனைத்து மதங்களை பின்பற்றும் மக்கள் மத்தியில் அன்னப்பிராசனம் இன்று செல்வாக்கு பெற்று காணப்படுகின்றது. வித்தியாரம்பம் - குழந்தைக்கு நான்கு வயதினை கடந்த பின்னர் பெரியவர்களால் அரிசியில் ஏடு தொடக்கப்படும். இந்நிகழ்வானது வித்தியாரம்பம் எனப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் வித்தியாரம்ப சடங்கானது கோவலனுக்கு சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டமையினை காணமுடிகிறது. அதாவது கோவலனின் ஐந்து வயதில் அவனுக்கு வாய்பாடம் சொல்லி கொடுத்து தென்கலை, வடகலை பயிற்றுவித்துள்ளமையினைக் காணலாம்(த.மேகராசா, 2015:30)

ருது சோபன சடங்கு

பெண்கள் பருவம் அடைந்த பின்னர் மேற்கொள்ளும் மிக முக்கியமான ஒரு சடங்கு முறையாகும். சிலம்பு.மங்கல வாழ்த்து 22-24 பாடல் வரிகளின் ஊடாக கண்ணகி பருவம் அடைந்த பின் இடம்பெற்ற சடங்கு முறைகளை அறிய முடிகிறது. ('ஈகை வான் கொடி அன்னாள் ஈராறு ஆண்டு அகவையாள்....') கண்ணகி பருவம் அடைய அவளுக்கு இச்சடங்கு மேற்கொண்டமையைக் காணலாம். வணிக குலத்தில் பிறந்த கண்ணகிக்கு அக்;குல மரபின்படி ருது சோபன சடங்கு மேற்கொண்டமையினைக் காணலாம்.

திருமணம்

மானிட வாழ்க்கையில் மிக முக்கியமானதொரு சடங்காக திருமணச்சடங்கு அமைகிறது. இவ்சடங்கு முறையானது ஆணும் பெண்ணும் இல்லற வாழ்வில் இணைந்து வாழ்வதற்கான அங்கீகாரத்தினை வழங்குகின்றது. கண்ணகியின் திருமணம் பற்றி புகார்க் காண்ட மங்கல வாழ்த்துப் பாடல் கூறுகிறது.

'நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்கீழ்....'

'தீ வலம் செய்வது காண்பார்....'

சிலப்பதிகாரத்தில் கண்ணகி கோவலன் திருமணமானது திருமண சடங்கு சம்பிரதாயங்களின் அடிப்படையில் நிகழ்ந்தமையைக் காணலாம். விரிவாக நோக்கின், திருமண நாளன்று முரசுகள், மத்தளங்கள் மற்றும் சங்குகள் என்பன முழங்கின. மாலைகள் பொருந்திய உச்சியுடன் கூடிய மண்டபத்தில் நீலப்பட்டிலான விதானத்தின் கீழ் அமைந்த அழகிய முத்துப் பந்தரிடத்தே வானில் செல்லும் சந்திரன் ரோகிணியைச் சாரும் நல்ல நாளில் மிகவும் வயதான அந்தணன் வேத விதிப்படி சடங்குகளை நடத்த கோவலனும் கண்ணகியும் தீயினை வலம் வந்தனர். (சிலம்பு.மங்கல வாழ்த்துப்பாடல்.செய்யுளடி.41-53)

இறப்புச்சடங்கு

இக் காப்பியத்தில் இந்து மரபின்படி இறப்பு சடங்கு மேற்கொள்ளப்பட்டமையினைக் காணலாம். குறிப்பாக பாண்டிய மன்னனுக்கு மேற்கொள்ளப்பட்ட சடங்கினை குறிப்பிடலாம். கணவன் இறந்த பின்பு மனைவி நோற்கும் ஒரு நோன்பாக கைம்மை நோன்பு காணப்படுகிறது. கணவனை இழந்த பெண்கள் விதவைக்கோலம் பூண்டும் நீர்நிலைகளில் நீராடி பாவம் போக்கித் திரியும் பாவிகளாக ஆக்கப்பட்டிருந்தனர் (த.மேகராசா,2015;57). குறிப்பாக கோவலன் இறந்த பின்பு மாதவி விதவைக்கோலம் பூணாமல் நீர் நிலைகளில் நீராடி கைம்மை நோன்பு நோன்பு நோற்கவில்லை. மாறாக துறவறம் பூணுகின்றமையைக் காணலாம். இதனூடாக மறைமுகமாக சிலப்பதிகாரத்தில் கைம்மை நோன்பு பெண்களினால் அனுஸ்டிக்கப்பட்டமையினை இனங்காணலாம். இந்து சம்பிரதாயம் முறையாக அக்காலத்தில் கைம்மை நோன்பு நோற்றல் காணப்பட்டுள்ளது. இன்றைய காலகட்டத்திலும் சில பிரமாண சமூகத்தில் இச்சம்பிரதாயம் காணப்படுகின்றது.

உடன்கட்டை ஏறுதல் தொடர்பான சில விடயங்களும் கண்;ணகி காப்பியத்தில் காணமுடிகிறது. தமிழ்நாட்டில் வழங்கும் பெரிய எழுத்து கோவலன் கதை, கோவலன் கதை மற்றும் கோவலன் சரித்திரம் முதலான கண்ணகி இலக்கியங்களில் கோவலனுடன் மாதவியும் உடன்கட்டை ஏறுவதாக

குறிப்பிடப்பட்டுள்ளமையும் சுட்டிக்காட்டதக்காகும் (த.மேகராசா, 2015; 98). மேற்கூறப்பட்ட விடயம் மூலம் சிலப்பதிகார காலத்தில் உடன்கட்டை ஏறும் சடங்கு முறை காணப்பட்டுள்ளமையை அறியலாம்.

ஏனைய சில சம்பிரதாயங்கள்

உணவு உண்ணல் - கணவனுக்கு உணவு சமைத்து பரிமாறும் பண்பு ஒவ்வொரு மனைவியிடத்தும் காணப்படுகின்ற பண்பாக அமைகிறது. அன்றைய காலகட்டத்தில் இப்பண்பானது ஒரு சம்பிரதாயமாக காணப்பட்டமையைக் சிலப்பதிகாரம் மூலம் நாம் காணக்கூடியதாக அமைகிறது. விரிவாக நோக்கின், கண்ணகி உணவு சமைத்து முடித்த பின்னர் 'கோவலனின் பாதங்களை வணங்கி நிலத்தில் நீர் தெளித்து மெழுகி வாழையின் குருத்தில் உணவு இட்டு அமுதம் உண்க அடிகள்' என்று அன்புடன் கூறுகிறாள்.(கொலைக்களக்காதை 29-43). அத்தோடு 'அடிசில் ஆக்குவதற்கு அமைந்தநற் கலங்கள்..' (சிலம்பு.அடைக்கலகாதை 20-21) எனும் பாடல் வரிகளும் கண்ணகி உணவு சமைத்து கோவலனுக்கு வழங்கியமை எடுத்துக் காட்டுகிறது. சாப்பிட்ட பின்னர் வெற்றிலை பாக்கு கணவனுக்கு கொடுத்தலும் ஒரு சம்பிரதாயமாக காணலாம். அதனை, 'உண்டினிது இருந்த உயர்பே ராளற்கு...' எனும் பாடல் வரியின் மூலம் இனங்காண முடிகிறது. இன்றைய காலகட்டத்தில் கண்ணகி அம்மன் சடங்கின் போது சமைத்து உணவு பரிமாறும் பண்பு பச்சை கட்டுதல் என்ற சடங்காக இடம்பெறுகின்றமையினைக் காணலாம்.

முடிவுரை

பொதுவாக பெண்மையின் பெருமையையும் அறத்தின் வெற்றியையும் எடுத்துக்கூறும் காப்பியம் என்ற வகையில் சிலப்பதிகாரம் முக்கியத்துவம் பெறுகிறது. மனிதனது வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்ததாக சடங்கு சம்பிரதாயங்கள் காணப்படுகின்றன. இவை பக்தி மற்றும் ஒழுக்கத்துடன் தொடர்புடையவையாக அமைகின்றன. பல வாழ்வியல் சடங்குகள் காணப்படுகின்றன. அவை பலவிதமான பண்பாட்டுக் கோலங்களை மக்களுக்கு வழங்குகின்றன. சிலப்பதிகாரத்தில் பிறப்புச்சடங்கு, அன்னப்பிராசனம், வித்தியாரம்பம் ருது சோபனச் சடங்கு, திருமணம் மற்றும் இறப்பு சடங்கு போன்ற வாழ்வியல்

சடங்கு சம்பிரதாய முறைகள் மேற்கண்ட விதத்தில் காணப்படுகின்றனமையக் காணலாம். இதன் மூலம் சிலப்பதிகார காலகட்டத்தில் வாழ்ந்த மக்கள் இத்தகைய சடங்கு சம்பிரதாயங்களைப் பின்பற்றியுள்ளார்கள் தமது பண்பாடுகளைப் பேணியுள்ளனர். அம்முறைமைகள் இன்றைய காலகட்டதிலும் மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்று காணப்படுகின்றன.

உசாத்துணை நூல்கள்

சண்முகம் செட்டியார்., ஆர்.கே, (1945), சிலப்பதிகாரம், புதுமலர் நிலையம், சென்னை.

சஞ்சீவி.ந., (2005), சிலப்பதிகார விருந்து, காவ்யா வெளியீடு, சென்னை.

சிவஞானம், ம.பொ., (2006), சிலப்பதிகார திறனாய்வு, பூங்கொடி பதிப்பகம்.

சுதாகர், கு., (2011), கண்ணகி கதைகள், பாவை பிரின்ரஸ், சென்னை.

மேகராசா, த., (2015), சிலப்பதிகார பாத்திரங்களும் கண்ணகி வழக்குரை பாத்திரங்களும், மட்டக்களப்பு.

29

சமூக அமைப்பாக்கத்தில் மரணச்சடங்கு (பட்டிப்பளை பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

இ.குகநாதன்
முது தத்துவமாணிப்பட்ட ஆய்வாளர், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
kuganathan67@gmail.com

அறிமுகம்

ஒவ்வொரு சமூகமும் பேணி வரும் மொழி, பண்பாடு, கலை, தொழில் குறித்த மரபுகள் தொடர்ச்சியாய் கைமாறவும், பேணவும், பாதுகாக்கவும் உரிமையுடையனவாகும். இன்றைய சூழலில் வெவ்வேறு சமூகப் பிரிவினரும் கொண்டாடும் மரபுகள், பண்பாடுகள் பல மாறுதல்களைக் கண்டுதான் வந்திருக்கின்றன. அவை ஏற்றும், ஏற்காமலும், திணிக்கப்பட்டும், திட்டமிட்டும் ஆதிக்க அறிவின் பிடியில் பௌதீக மற்றும் சமூக எதார்த்தத்தை விட அதிக ஆற்றல் கொண்ட மிகை எதார்த்தத்தினை உள்வாங்கியே இன்றைய நிலையை எட்டியுள்ளன. இன்னும் ஒரு படி மேல் நோக்கின் உலகமயமாக்கம், காலனியம், சமஸ்கிருத பரவலாக்கங்களின் கொள்கைகள் தமிழர் பண்பாட்டு வாழ்வு மரபுகளை கபளிகரம் செய்து தமக்கு ஏற்றால் போல் தமது நோக்கத்தினை வெகுஜனப்படுத்தவும் அதன் மூலம் பன்னாட்டு பெரு நிறுவனங்கள் உலக மூலதனத்தை விருத்தி செய்யவும், தடையாக உள்ள உள்ளூர் பண்பாடு மற்றும் மரபுசார் அறிவியல்களை முற்று முழுதாக அழித்து நிர்மூலப் படுத்துவதையே கருத்தில் கொண்டு செயல்படுத்தின.

சடங்குகள் பல்வேறு நோக்கங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறன. குடும்பங்கள் தழைக்க, நோயின்றி வாழ, பழி பாவங்களைப் போக்க, துன்ப துயரங்கள் விலக, உறவுகள் நீடிக்க, எதிரிகளை தண்டிக்க, இயற்கையை வசப்படுத்த, விஞ்சிய

ஆற்றலைப் பெற என்றவாறு பல்வேறு நோக்கங்கள் மற்றும் எதிர்பார்ப்புகளை முன்னிட்டு சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. இத்தகைய சடங்குகள் மக்களினால் கூட்டாக மேற்கொள்ளப்படுபவையாகவும் உள்ளன. தமிழர் பண்பாட்டில் பல வகையான வாழ்க்கைவட்டச் சடங்குகளைக் கொண்டுள்ளன. பிறப்பு, பெயர் சூட்டுதல், காது குத்துதல், பிறந்தநாள் விழாக்கள், பருவமடைதல், திருமணம், வளைகாப்பு, இறப்பு, நினைவுநாள் கடைப்பிடித்தல் என பல அடங்குகின்றன. இதில் மரணச்சடங்கு ஏனையவற்றைவிட உணர்வு நிலைப்பட்ட செயல்பாடுகளும் பல்வேறு பண்பாட்டு அம்சங்களும் காணப்படும் ஒன்றாக விளங்குகின்றது.

தமிழர் மத்தியில் காணப்படும் மரணச்சடங்குகள் பிரதேசத்துக்கு பிரதேசம் வெவ்வேறு வகையில் பன்முகப்பட்டவை. அவை நிகழ்த்தப்படும் காலம், இடம், சூழல், தேவை, நோக்கம் போன்ற காரணிகளை முன்வைத்து அவற்றின் தன்மைகள் வேறுபடுகின்றன. ஒவ்வொரு சமூகத்தின் சடங்குகளும் தனித்தன்மைகள் கொண்டிருப்பினும் பண்பாடுகளுக்கு இடையில் நிகழும் சடங்குகளை ஒப்பிட்டு ஆராயும் போது இவற்றுக்கிடையே பொதுத்தன்மைகள் காணப்படுவதையும் அறிய முடிகிறது. (பக்தவத்சல பாரதி 2002:183)

இவ்வாய்வின் எல்லையாகக்கொள்ளப்படுவது மட்டக்களப்பு பட்டிப்பளை பிரதேசம். இங்கு ஏனைய பிரதேச நடைமுறைகளை விடவும் சற்று வித்தியாசமான மரணச்சடங்கு முறைகள் உள்ளன. குறிப்பாக குடிமரபின் தாக்கம் அதனூடான மரணச்சடங்கின் கட்டமைப்பும் ஆக்கப்பட்டு தொடர்ச்சியாக பேணப்படும் தன்மையினை அவதானிக்க முடியும். இப்பிரதேச மக்களின் இச்சடங்கு முறைமையில் குடிசார் நடைமுறைகள் உள்ளீர்க்கப்பட அடிப்படைக் காரணமாய் அமைவது கொட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் குடிமுறை சடங்குப் பாரம்பரியமாகும். இவ்வாலய நடைமுறைப் பண்பாடுகளின் இயக்கமே மரணச்சடங்கிலும் தாக்கம் செலுத்துகின்றது.

தமிழ் பண்பாட்டில் எண்ணிக்கையில் அதிக சடங்கு முறைகள் காணப்படுகின்ற போதும் ஆய்வுத் தலைப்பிற்கு அமைவாக மரணச்சடங்கு முறையில் உள்ள மரபு, விதி, சமூகம்சார் விடயங்கள்

என்பவற்றைக் கொண்டு மரணத்திற்கு முன்னும் பின்னுமுள்ள சடங்குகளின் ஒழுங்கமைப்புகள், இறந்தவர்களின் குடும்பங்களின் மனநிலையில் அவர்களது துக்கத்தில் சமூகத்தின் பங்கெடுப்புகள், சடங்குகள் எவ்வாறு பாதிக்கப்பட்டவர்களின் உளவியல் ஆற்றுப்படுத்தலில் தாக்கம் செலுத்துகின்றன என்பதையெல்லாம் மானிடவியல் நோக்குடன் ஆராயப்படுகின்றது.

ஆய்வின் நோக்கம்

ஒரு சமூகம் தங்களது வழக்காறுகளாக இருந்து வருகின்றதை அதன் அமைப்பாக்கத்தை பேணுவதற்கு அல்லது பலமாக வைத்துக்கொள்வதற்கு எவ்வாறு அறிவு, திறன், நுட்பத்தை கொண்டுள்ளது என்பதை அறிதல், சமகால உலகமயமாக்க கொள்கை பரவலாக்கம் மனிதர்களின் தன்னிறைவு உற்பத்தி மற்றும் சுயசார்பான சமூக பண்பாட்டு அறிவியல்களையும் இல்லாது செய்து நுகர்வுச் சமூகமாகவும் சமூகத்தில் இருந்து பிரித்து தங்களை மட்டும் சிந்திக்கின்ற தனியன்களாகவும் ஆக்கும் நிலையில் சமூக கட்டமைப்பு ஓர் மரணச்சடங்கில் எவ்வாறு தமது பங்களிப்பினை வழங்குகின்றது என்பதனை புரிதல் ஆகியவை இவ்வாய்வின் நோக்கங்களாக அமைகின்றன.

ஆய்வு முறையியல்

ஒரு சமூகத்தின் பண்பாட்டு மரபுசார் மரணச் சடங்குபற்றி ஆய்வு செய்வதற்காக வரலாற்றியல் ஆய்வுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், சமூகவியல் ஆய்வுநுட்பம், பண்புசார் ஆய்வு முறைமை என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மரணச் சடங்கும் அதன் ஒழுங்குமுறையும்

மனிதர் தோன்றிய காலம் முதல் சடங்குகளும் தோன்றி விட்டன. மனித வாழ்வியலில் சடங்குகள் நீங்காத இடம் பிடித்துள்ளது. சடங்கினை வாழ்வுச் சடங்கு, இறப்புச் சடங்கு என பிரித்தும் பார்க்கலாம். இறப்புச் சடங்கு செய்யப்படுவதன் நோக்கம் தாங்க முடியாத துக்கத்தை வெளிப்படுத்த, இறந்தவர்கள் கடவுளர்களாக இருந்து அவர்கள் குடும்பத்தை வழிநடத்தவும், அக்குடும்பத்திற்கும் இறந்தவருக்கும் உள்ள உறவை முறித்து கடவுளின் பாதத்தை சென்றடையவும் என்ற நம்பிக்கையில் பல

நெறிமுறைகள் செய்யப்படுகின்றன (முனைவர் இரா.பிரித்தா aranejournal.com).

ஆய்வின் எல்லைக்குட்படுத்தப்பட்ட படுவாங்கரைப் பிரதேசம் நகரத்தை அண்டிய பிரதேசங்களைவிட கலை, கலாசார, பண்பாட்டு மரபு முறைவுகளுடன் மக்கள் இணைந்து வாழுகின்ற ஓர் தன்மையினைக் அவதானிக்க முடியும். இதற்கு அடிப்படை நகரமயமாக்கத்தின் தாக்கம் குறைவாக உள்ளமையாகும். மேலும் முப்பது வருட கால யுத்தத்தின் பிடியில் இப்பிரதேசம் காணப்பட்டதும் இன்னுமொரு காரணமாகும். கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் சடங்கு சம்பிரதாயங்கள் குடிமுறை மரபிற்குட்பட்டவையாக காணப்படும் சந்தர்ப்பத்தில் அதன் இறுக்கம் சார் விதிமுறைகள் மரணச் சடங்கு நெறிமுறையிலும் தாக்கம் செலுத்துகின்றது எனலாம்.

பிரதேசத்தில் குடிமுறை

பிரதேசத்தில் தற்போதைய நிலையின் அடிப்படையில் கீழ்வரும் குடிகள் காணப்படுகின்றன. உலகிப்போடிகுடி, கலிற்ககுடி, படையாட்சிகுடி, பணிக்கனார்குடி, கச்சிலாகுடி, கோப்பிகுடி, பெத்தான்குடி சட்டிகுடி, பொன்னாச்சிகுடி என்பனவாகும். இனி மரணச்சடங்கில் காணப்படும் செயலொழுங்கு முறையினை ஆராயலாம். இது ஒரு ஒழுங்குமுறையில் நிகழ்த்தபடும்.

ஒப்பாரி வைத்தல்

ஒருவர் இறந்தவுடன் அக் குடும்பத்தில் இருப்போர் சத்தமிட்டு ஒப்பாரி வைப்பர். ஒப்பாரி சத்தம் கேட்டவுடன் அயல் சூழலில் உள்ள அனைவரும் ஒன்றிணைவர். அவ்விடத்தில் ஆரம்ப கட்ட வேலைகளை செய்வர் வேலி பிரித்தல், வளவினை சுத்தப்படுத்தல், பந்தல் நாட்டுதல் என பல அடங்கும். ஒப்பாரி செய்து அழுதலில் இறந்தவரின் பெருமைகளை சொல்லி பாடல் வடிவில் அழுகின்ற முறையை அவதானிக்கலாம். அவ்வூரில் ஒப்பாரிப் பாடல்கள் பாடக்கூடிய பலர் இருப்பர் மரண செய்தி கேட்டவுடன் அவர்கள் அவ்விடத்தில் வந்து விடுவர். பட்டிப்பளை பிரதேச மரணச்சடங்குகளில் ஒப்பாரி வைத்தல் மரணச்சடங்கில் கலந்து கொள்கின்றவர்கள் தமது உறவுகள் வந்தவுடன் அவர்களை கட்டி அணைத்து அழுகின்ற முறையினை காணலாம்.

எண்டழகு ராசாவே ராசாவே .....
என்னை விட்டு போனியே ராசாவே ராசாவே

என பல்வேறு வகையில் பாடு போரின் கற்பனைக்கு அமைவாக ஒப்பாரிப் பாடல் அமையும்.

சாவியளம் சொல்லுதல்

ஒரு வீட்டில் இறந்த செய்தியை ஏனையோருக்கு எடுத்துச் செல்லும் நபரை சாவியளம் சொல்லி என்றும் இழவு சொல்லி என்றும் அழைப்பர். இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள், போக்குவரத்து இல்லாத அன்றைய சூழலில் அயல் கிராமங்களுக்கு சென்று குறித்து நேரத்துக்குள் இறந்தவர் செய்தியை அறிவித்து அவர்களை அழைத்து வரும் பொறுப்பு இவருக்கு உண்டு. மிக விரைவாக செயல்படக்கூடிய ஒருவராகவும் ஆளிடைத் தொடர்பு கொண்டவராகவும் இவர் காணப்படுவார்.

பறையடித்தல்

மரணச் சடங்கில் இறந்தவரின் வசதி வாய்ப்பினை அடிப்படையாகக் கொண்டு பறையிசை நிகழ்த்தப்படும். இது ஒருவர் இறந்து விட்டார் என்பதனை பிறருக்கு அறிவிப்புச் செய்வதாக இப்பறை அறிவிப்பு அமையும். இதற்காக பறையர் சமூகத்தைச் சேர்ந்த கலைஞர்கள் அழைக்கப்பட்டு அவர்களுக்கு பொருத்தங்கள் பேசி அதன் மூலம் அவர்களை வழிநடத்தும் பண்பு காணப்படும் இதற்கு பொறுப்பாக அக்கிரமத்தில் ஒருவர் இருப்பார். அவர் பறையிசைக் கலைஞர்களை அழைத்து வரவும், அவர்களுக்கான வசதிகளை செய்து கொடுக்கவும் உரியவராவர்.

பாடை கட்டுதல்

பாடைகட்டுதல் என்பது நுணுக்கமும் அறிவும் கொண்ட செயற்பாடாகும். இறந்தவர்களின் உடலை தூக்கிச் செல்வதற்கான வலிமையாகவும், அளவுடையதாகவும் கட்டுதல் வேண்டும். அத்துடன் பாடைகட்டும்போது விதிமுறைகளுக்கு அமைவாக அதன் முடி மற்றும் அழகியலுடன் கட்டுதல் அவசியம். பாடைகட்டுதற்கு அதிக பணம் செலவழிப்பதில்லை பெரும்பாலும் இயற்கை உள்ளீடுகளை இதற்கு அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. பாடை கட்டும் பணியை அக்கிராமத்தில் அனுபவமும் அறிவும்

உள்ளவர்களே செய்வர் காணப்படுவர் அவர்களே பாடைகட்டும் வேலைப் பாடுகளைச் செய்வர்.

கூரை முடி வைத்தல்

குடிப் பாரம்பரியம் உள்வாங்கபட்டதன் பின் அதாவது முக்குகச் சட்டத்தின் கீழ் கூரை முடி வைத்துக் கொள்ளும் பண்பாடு உருவாகின்றது. இறந்தவர்களின் குல கௌரவத்தை எடுத்துக்காட்டி அவருக்கு மரியாதை செய்வதற்காக இவை செய்யப்படுகின்றன. சலவை தொழிலாளர் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரே இதனைச் செய்வார். இறந்தவரின் வீட்டின் மேற்கூரையில் கும்பங்கள் வைத்து சடங்கு செய்யும் முறையினை இது குறிக்கின்றது.

முக்குகர் குடிப் பிரிப்புகளை வைத்தே கும்பங்களின் எண்ணிக்கை அமையும். இது பற்றி 'சாதித் தெய்வ கல்வெட்டு' எனும் தலைப்பில் கீழ்வரும் குடிப்பகுப்பில் என்ன குடியில் அமைகின்றாரோ அதற்கு ஏற்றால் போல் உலகிப்போடி குடி -13, கலிங்க குலத்தவர் -11, படையாட்சி குடி -09, வேளாளருக்கு-07, ஏனைய குடிகளுக்கு - 03 எனும் அடிப்படையில் கூரைமுடிகள் அமையும். இதனை நன்மைக்கும் தீமைக்குமான கும்ப வரிசை கல்வெட்டுப் பாடல் பின்வருமாறு கூறுகிறது:

வரிசை செய் திட்ட மரபெக் காலமும்
பூசுரன் நிரலரசன் வணிகருழவர்
சிறைகள் பதினெட்டு டனவர்கள்
பெருவரிசை தீர்த்துட்ட செய்தியது கேள்

இறந்தவரின் உடலை குளிப்பாட்டுதல்

இறந்தவரின் உடலை சுத்தம் செய்யும் சடங்காக இது அமையும். ஒரு கட்டில் அல்லது உயரமான ஒரு பலகையில் இறந்தவரை வைத்து துணியினால் சுற்றி பிடித்து தண்ணீரைக் கொண்டு அவர் மேல் ஊற்றுவர். 'இறக்கப் போயினும் சிறக்க போக வேண்டும்' எனும் பழமொழியும் இப்பிரதேசத்தில் புழங்கு நிலையில் உள்ளது. (அருள்ராஜசிங்கம், வயது-68) எனவே கணவனை இழந்த பெண்கள் மூவர் மூன்று குடங்களில் நீர் எடுத்து வர அதற்கு மேல் இருவர் வெள்ளை பிடித்து வருவர். இறந்தவர் ஆண் அல்லது பெண் என்பதற்கு அமைவாக தாய் தந்தை கணவன் அல்லது மனைவி பிள்ளைகள் என யாரோ ஒருவர் குளிப்பாட்டும் செயலில் ஈடுபடுவர்.

இறந்தவரை சாமூலை பக்கம் தலை வைத்து (சாமூலை என்பது தென்மேற்குத் திசையாகும்) தலைப்பகுதியில் தேங்காய் எண்ணெய் விளக்கும் வைக்கப்படும்.

வீட்டில் செய்யும் கடமைகள்

இறந்தவரை மயானம் கொண்டு செல்வதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன் மரணம் நடைபெற்ற வீட்டில் செய்யும் கடமை இதுவாகும். மயானத்திற்கு பெண்கள் செல்ல இயலாது என்பதனாலேயே இக்கடமை வீட்டில் நடைபெறுகிறது. ஆண்களாலேயே முதற்கடமை செய்யப்படும் இருவர் மேலே வெள்ளை பிடிக்க தலையில் மஞ்சள் கலந்த அரிசியினை வட்டி எனும் பாத்திரத்தில் எடுத்து வெள்ளைத் துணியினால் மூடி இறந்தவரின் உடலை எட்டு முறை வலம் வந்து அவரது அருகில் முழங்காலில் பின்புறமாக கையை பின் வைத்து மூன்று தடவை அரிசி மற்றும் தண்ணீரை தெளிப்பர். பின் ஏனைய குடிகள் கடமைகளைச் செய்வர் இவை, உலகிப்போடிகுடி- 07, கலிங்ககுடி- 06, படையாட்சிகுடி - 05, பணிக்கனார்குடி- 04, கச்சிலாகுடி - 03, கோப்பிகுடி - 02, பெத்தான்குடி - 01 எனும் எண்ணிக்கையில் அமையும் (வே. மகேஸ்வரத்தினம் 2015:18).

தொடராய் குடும்பத்தின் ஏனைய உறவினர்களால் வாய்க்கரிசி போடப்பட்டு வாயில் தண்ணீர் விட்டு காலையும் கழுவுவர். பின்னர் பட்டினத்தார் பாடல் மற்றும் தேவாரம் பாடி பாடையில் தூக்கி வைத்து இறுதியில் பாடையின் நடுவில் அமையும் முடி கம்பில் பொருத்தப்பட்டு வீட்டின் வாயிலை விட்டு வெளியேறும்போது மூன்று தடவை முன் பின் இழுத்து நகர்த்தப்படும். மயானம் செல்லும் வளியில் பறையிசை கலைஞர்களால் சந்தி மறித்தும் ஆடப்படும்.

மயானத்தில் நடைபெறும் கடமைகள்

மயானத்துக்குச் சென்றவுடன் பாடையினை தூக்கி மூன்று தடவை மடுவினை சுற்றி ஓரிடத்தில் வைத்து பெட்டியினை வெளியே எடுத்து வீட்டுக்குச் சென்று இறந்தவரின் உடலை பார்க்க முடியாதவர்களுக்காக மீண்டும் திறந்து காண்பிக்கும் நடைமுறை உண்டு. இதன் போது கொள்ளிக்குடம் ஏந்தி வந்தவர் முதலில் மடுவில் வைக்கப்பட்ட பிணத்தில் மூன்று தடவை மண் போட்டு

நீரும் ஊற்றுவார். தொடர்ந்து ஏனையோரால் மண் போடப்படும். நான்கு மூலைகளிலும் நான்கு இளநீர் வைத்து தேவாரம் பாடுவர். தொடர்ச்சியாய் இறந்தவருக்கு கடமை செய்தவர் கொள்ளிக்குடத்தை தலையில் வைத்து மூன்று தடவை சுற்றி கீழே போட்டு பின்னே பார்க்காமல் மயானத்தை விட்டு வெளியேறுவர்.

இங்கு பறையர் சமூகத்தைச் சேர்ந்த பறையிசைக் கலைஞரால் நிலம் கூறும் நிகழ்வும் நடைபெறும் அவர் பறையில் இசைத்து 'மேலே வானம் சாட்சி கீழே பூமி சாட்சி ஆறடி நீளம் இரண்டடி அகலம் கொண்ட நிலத்தை..... என்று தொடங்கி நிலத்தை விற்பர். அதன்போது ஒரு இறைசால் என்று பெறுமதியை முன் வைக்க ஏனையோரும் தொடர்ச்சியாக விலையினை கூற இறுதியில் ஏழு இறைசால் வரைக்கும் கொண்டு சென்று பினனர்; ஊர்த் தலைவரால் அரிசி,பணம்,வெள்ளைத்துணி என்பன அவருக்கு வழங்கப்படும். இறைசால் என்பது அக்காலத்தில் பயன்படுத்திய பணத்தின் பெயரை குறிக்கின்றது.

மாத்து மாற்றுதல்

இறந்தவரின் உடலை அடக்கம் செய்து விட்டு வரும் வழியில் மாத்து மாற்றுகின்ற எனும் செயற்பாடு நடைபெறும். இதனை ஊரத்;தலைவர் வழிநடத்திச் செல்வார். சலவைத் தொழிலாளர் சமூகத்தில் இருந்து குறித்த மரணச் சடங்கில் கலந்து கொள்பவர் இதில் உறவினர்கள் இருக்கத்தக்கதாக மாத்திடுவார். அப்போது மன்முனை தேசம், மட்டக்களப்பு அதன் பின்பு ஏனைய கிராமங்களின் பெயர்களை கூறி ஒவ்வொரு துணியாக எடுத்து போடுவார் இறுதியில் விதானை, ஊர்ப்போடி, உடையார் ஆகியோருக்கும் மாத்து சொல்லப்படும்.

மரணச் சடங்கின் மரபும் மாற்றமும்

மரணச் சடங்கு பண்பாட்டு மரபுகள் இப்பிரதேச மக்களிடையே அதன் அமைப்பாக்க ரீதியில் மாற்றம் பெற்று இருக்கத்தான் செய்கின்றன. குடி மற்றும் சமஸ்கிருத தாக்கங்கள் அதிகமான மரபுசார் நெறிமுறைகளை மாற்றி இருக்கின்றன. அத்துடன் தற்கால நவீன இலத்திரனியல் தொடர்பாடல் மற்றும் ஏனைய சாதனங்களும் இதற்குப் பங்களிப்புச் செய்திருக்கின்றன.

குறிப்பாக சாவியளம் சொல்லும் முறை தற்போதைய சூழலில் மிகக்குறைவு இதனை இன்றைய நவீன தொழில்நுட்ப சாதனங்கள் மாற்றிவிட்டதன. மரணம் நிகழ்ந்தவுடன் செய்தியை அறிவிப்பதற்காக பறை இசைத்தல் நடைபெறும் அவை தற்கால சூழலில் குடும்ப கௌரவம், அந்தஸ்தினை வெளிப்படுத்துகின்ற முறைமையினை அவதானிக்க கூடியதாக உள்ளது. பாடை கட்டுதலிலிருந்து அதனோடு இணைந்த அனைத்து செயற்பாடுகளும் பல மாற்றங்களை எதிர்கொண்டுதான் இருக்கச் செய்கின்றன. பிரதேச மக்களிடையே காணப்படாவிடினும் அதனை அண்டிய ஏனைய பிரதேசங்களில் அவதானிக்கும்போது உலோக கம்பிகளால் பாடை கட்டி இழுத்துச் செல்லும் தன்மைகளையும் அவதானிக்க முடியும். இவை போன்று மாத்து மாற்றுதல், கடமைகள் செய்தல் என்ற பல்வேறு நிலையில் மரபுகள் மாற்றம் பெற்றிருக்கின்றன.

மரணச் சடங்கின் ஒழுங்கு அமைப்பு என்பது முற்போக்கு அல்லது பிற்போக்கு என்பதை தாண்டி ஒரு சமூகம் இச்சடங்கு நடைமுறைகளை எவ்வாறு அதன் அமைப்பாக்கத்தில் இறுக்கமாக கொண்டுள்ளது என்பதனை புரிதல் அவசியமானது

மரணச் சடங்கில் சமூக பங்களிப்பு

ஒரு சமூகம் தமது அறிவு, நுட்பம், பங்கீடலை பயன்படுத்தும் ஒரு முறை மரணச்சடங்கில் காணப்படுகிறது. இறந்தவரின் வசதி, வாய்ப்பு, கௌரவம் என்பவற்றைத் தாண்டி இறுதிச் சடங்கில் சமூகம் கலந்து கொண்டு தமது பங்களிப்பை ஏதோ ஒரு வகையில் செய்கின்ற தன்மையினை அவதானிக்க முடியும்.

அறிவு இன்றைய உலகமயமாக்கலில் எத்துறை வேகத்தில் வளர்ச்சி அடைந்து வருகிறதோ அதேவேகத்தில் அதன் சமூக பண்பை இழந்து வருகிறது என்பார் நா.முத்துமோகன்(2017:6). இவ்வாறான சூழலில் சமூக ஈடுபடல் கூட்டாக இணைதல், குடும்பத்தின் துயரில் பங்கு கொள்ளுதல், பந்தல் அமைத்துக் கொடுத்தல், சாவியளம் சொல்லுதல், பாடைகட்டுதல், கூரைமுடி வைத்தல், கடமைசெய்தல், தேவாரம் பாடுதல், அம்மானை பாடுதல், மயானம்வரை சென்று இறுதிச் சடங்குகளில் பங்குகொள்ளல், உணவு சமைத்துச் செல்லுதல், பொருளாதார நிலையில் கீழ்நிலையில் உள்ளவர்கள் இறந்திருப்பின்

அவர்களுக்கு முடிந்த பணம் மற்றும் ஏனைய உதவிகளை செய்தல், இரங்கல் செய்தி ஆற்றல் என்ற பல்வேறு பங்களிப்பினை ஓர் சமூக அமைப்பாக்கத்தில் வலுவாக மரணச்சடங்கு கொண்டுள்ளது. இவை இன்றைய சூழலில் தன்னிறைவு மற்றும் சுயசார்பான இருப்பியலை பரவலாக்கம் செய்யவும், நீடித்து நிலைத்து நிற்கும் சமூக அபிவிருத்தியை பேணவும் ஓர் ஆரோக்கியமான சமூக கட்டமைப்பை கொண்டு செல்ல வெகுஜனப்படுத்தப்பட வேண்டியவையாகும்.

இறந்தவரின் குடும்ப உறவுகளின் மனரீதியான உணர்வுகள் விவரிக்க முடியாதவை. அவை உளவியல் நோக்கில் அணுக வேண்டியவை இந்நிலையினை புரிந்து சமூக அமைப்பாக்கம் உளவியல் ஆற்றுப்படுத்தலை அல்லது குணப்படுத்தலை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குகிறது. இவை குறித்த குடும்பத்தின் சகல நிகழ்வுகளிலும் பங்கெடுப்பதன் மூலம் ஒப்பாரி வைத்தல், கட்டி அணைத்து அழுதல், இறந்தவர்களின் பெருமைகளை இரங்கல் செய்தியாக தெரிவித்தல், இரவு வேளைகளில் கூட்டாக வந்து தங்கி நின்று பொழுதினை கழித்தல் அம்மானை பாடுதல் என அனைத்திலும் உளவியல் ரீதியாக ஆற்றுப்படுத்துகின்ற முறையினை அறியலாம்.

முடிவு

சமூக அமைப்பாக்கத்தில் மரணச் சடங்கு எனும் தலைப்பிலான இவ்வாய்வு ஓர் சமூகம் தன்னை வலுப்படுத்தவும், பலப்படுத்தவும் சில பொறிமுறைகளைக் கொண்டு இருக்கிறது. சடங்கு ஒன்றினை செய்வதன் ஊடாக அச்சமுகம் ஓர் அமைப்பிற்குள் அல்லது இறுக்கத்திற்குள் இருக்கும். அதேவேளை அந்தச் சடங்கு செய்ய வேண்டுமெனில் குறித்த சமூகம் சிறந்தமுறையில் தன்னை தயார்படுத்தி ஆரோக்கியமானதோர் நிலைக்குள் இருக்க வேண்டும். இவை சுழற்சி முறையில் நடைபெறும் இதனை இவ்வாறு காட்டலாம்.

பட்டிப்பளை பிரதேசசத்திலுள்ள மரணச் சடங்கு பண்பாட்டு முறைமை ஒரு சமூகத்தை அமைப்பாக்கம் செய்வதில் பல்வேறு விடயங்களைக் கொண்டுள்ளது என்பதனை சமூகப் பங்களிப்பு மற்றும் மரணச் சடங்கில் காணப்படும் செயலொழுங்கு கட்டமைப்புகள் மூலம் நிரூபிக்க முடியும்.

மரணச் சடங்கு முறையிலுள்ள பிற்போக்கு அல்லது சமகாலத்திற்கு எதிரானதாக கருதும் சில விடயங்களை உரையாடலுக்கு உட்படுத்தல் அவசியமானது. குறிப்பாக குடிமரபு ரீதியாகவுள்ள உயர்வு,தாழ்வு என்ற பகுப்பும், கூட்டாக இயங்குதலில் அல்லது ஒரு பொதுவெளியில் குறித்த ஒரு சமூகத்தை கீழானவர் எனக்காட்டுவது அச்சந்தர்ப்பத்தில் அவ்வாறான தரப்பினரின் மனநிலைசார் உணர்வுகள் குறிப்பாக கூறின் கூரைமுடி வைத்தல் மற்றும் சுற்றிவந்து கடமை செய்யும் போது காட்டப்படும் பாரபட்சம் போன்றவையும், விளிம்புநிலை சமூகங்களான பறையர்,நாவிதர்,சலவைத் தொழில் செய்வோர் மரணச்சடங்கில் பார்க்கப்படும் விதம் என்பவையும், இச்சடங்கில் பெண்கள் பற்றிய புரிதலும் முக்கிமானவை. அவர்கள் வெறுமனே அழுகின்றவர்களாகவும், ஊதியம் செய்கின்றவர்களாகவும் கட்டமைக்கப்பட்டுள்ள ஆணாதிக்க சிந்தனை மேலும் ஆழமாக பார்க்கப்பட வேண்டியவை. மீளுருவாக்கம் செய்யப்பட வேண்டியவை. சமஸ்கிருத ஊடுருவல் மற்றும் உலகமயமாக்கம், காலனிய ஆதிக்கத்திற்கு முன்னிருந்த தொன்மையான மரணச்சடங்கின் செயலொழுங்கு என்ன? அதனை மாற்றியதில் அல்லது மாற்றுவதன் தேவையின் தொடர் ஆய்வும் உரையாடலும் அவசியமானவை

உசாத்துணை

பக்தவக்சல பாரதி, (2002), தமிழர் மானிடவியல், திருச்சி அடையாளம்.

பெர்னாட்சா.ச, முத்துகமரன்.பி, (2016). இந்திய கலை வரலாறு, சாமிநாதர் நூல்நிலையம்.

முத்துமோகன்.ந. (2014). பின்னை நவீனத்துவமும் மார்க்சியமும். செஞ்சுரி வுக்கவுஸ்.

விவேகானந்தராசா. த,(2014), உறவுகளின் பாலமாய் இழவுசொல்லிகள், மறுகா.

முத்துமோகன். ந, (2017), அறிவின் உலகமயமாக்கலும் அறிவுச் சமூகங்கள் பண்பாட்டில் வேர்கொள்ளல், மொழிதல், தொகுதி, 4, 1-13.

பிரித்தா. இரா, முனைவர், (09.,இல 5.2021), புறநானூற்றில் இறப்புச் சடங்குகள், அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

30

சமகாலச் சூழலில் பாரம்பரிய விளையாட்டுக்களின் தேவையும் முக்கியத்துவமும்

க. மோகனதாசன்
சிரேஷ்ட விரிவுரையாளர், SVIAS, EUSL, இலங்கை.
mohanathasank@esn.ac.lk

ஆய்வு அறிமுகம்

உலக மயமாக்கலும் உயர் தொழில் நுட்பமும் இன்று உலகைத் தன் பிடிக்குள் வைத்திருக்கின்றன. அடுத்த நிமிடம் என்ன மாற்றம் நிகழப் போகிறது என்ற ஆச்சரியப் பொழுதுகளாக மாறியிருக்கும் அதேவேளை எம்மைச்சூழ ஒரு இனம் புரியாத பயமும் சேர்ந்துகொள்கிறது. அடுத்த தலைமுறை எவ்வாறு வாழப்போகிறது எனும் ஏக்கம் மரபார்ந்த பண்பாட்டடையாளங்களுடன் வாழ்ந்த ஒவ்வொரு சமூகத்திற்கும் ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகின்றது. தொழில் நுட்ப சாதனங்களின் நெரிசல் மிகுந்த இன்றைய சூழ்நிலையில் பல பண்பாட்டுத் தாக்குதல்களை நாம் உணரத்தவறியிருக்கிறோம். பகைவர் யார் நண்பர் யார் என்று தெரியாத நெரிசல், போர்க்குணம் உறைந்து கையாலாகாத்தனம் வலுத்த நடைமுறை வாழ்வை நமக்கு பரிசாகத் தந்திருக்கிறது. ஆனாலும் இம்மண்ணில் இன்னும் ஏராளம் மிச்சமிருக்கின்ற வாழ்வியலை, பாரம்பரியத்தை, கலையை அவற்றின் பண்பாட்டு வழித்தடத்தில் சென்று கட்டமைத்தலும் பாதுகாத்தலும் மிக முக்கிய தேவைகளாகின்றன. இந்தப் பின்னணியில் சமகாலத்தின் தீவிரத்தைத் தணிப்பதற்கு பாரம்பரிய விளையாட்டு சாத்தியமாஸீலீன்றாகக் கருதப்படுகிறது.

பாரம்பரிய விளையாட்டுகள் என்பவை வெறும் விளையாட்டுக்கள் மட்டுமல்லாமல் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் எடுத்துச் சொல்லும் வரலாற்று ஆவணங்களாகவும் கவனிப்புக்குள்ளாகின்றன. வீரம், விவேகம், மகிழ்ச்சி, விடாமுயற்சி, தன்னம்பிக்கை, அறிவுத்திறன்,

சகிப்புத்தன்மை இவற்றினைப் பாரம்பரிய விளையாட்டுகள் கற்றுக் கொடுத்தன. ஆனால் தற்பொழுது ஆதிக்கம் செலுத்துகின்ற காணொளி விளையாட்டுக்கள் மற்றும் கைப்பேசிப் பாவனை என்பன சிறுவர்களினது மட்டுமல்லாது பெரியவர்களினதும் கவனத்தைத் திருப்பியுள்ளன. இந்த இலத்திரனியல் உபகரணங்கள் மீதான கவனக் குவிப்பினால் மனச்சோர்வு, மனஉளைச்சல் மற்றும் உடல் உழைப்பு குறைவதால் ஏற்படும் பாதிப்புக்கள் என்பவற்றுக்கு இதில் ஈடுபடுகின்றவர்கள் ஆளாகின்றனர். ஆகவேதான் இவற்றிலிருந்து மீள்வதற்காக பாரம்பரிய விளையாட்டுக்களை ஒரு கருவியாகப் பயன்படுத்;த முடியுமா எனும் அடிப்படையில் இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

ஆய்வின் நோக்கம்

ஆய்வின் பிரதான நோக்கமாக காணொளி விளையாட்டுக்களில் ஈடபடும் இளம் சமூதாயத்தை திசை திருப்புதலாகும்.

வழக்கொழிந்து போகும் பாரம்பரிய விளையாட்டுகளை மீட்டலும் தொடர் செயற்பாடுகளின் மூலம் அவற்றினை தக்கவைத்தலும்.

ஆய்வு முறையியல்

ஆய்விற்கான அடித்தளங்களை விபரிப்பதால் விபரிப்பு முறையியலும், விமர்சன ரீதியில் அணுகுவதால் விமர்சன முறையியலும் பிரதானமாகப் பயன்படுத்தப்படுகிறது. அத்தாடு பின்காலனித்துவ, பின் நவீனத்துவ சிந்தனைகளின் அடிப்படையில் கொள்கைகளைப் பிரயோகிப்பதாகவும் முறையியல் அமைந்துள்ளது.

உள்ளடக்கம்

இன்றைய காலக்கட்டத்தில் பாரம்பரிய விளையாட்டுக்களைப் பற்றிய விழிப்புணர்வு மக்களிடம் அதிகளவில் காணப்படவில்லை. இதற்கு முக்கியக் காரணம் மேற்கத்திய நாடுகளின் விளையாட்டுக்கள் மட்டுமே அதிக விளம்பரத்தின் மூலமாக மக்களின் மனதில் பதிந்திருப்பதாகும். இதனால் நமது பண்பாட்டு விளையாட்டுக்களை முழுவதுமாக மறக்கும் நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது. மறந்துவிட்ட ஒரு நிகழ்வையோ அல்லது

பண்பாட்டையோ நினைவு கூறச் செய்வது ஒரு ஆய்வாளரின் கடமையாகின்றது. அந்த வகையில் பாரம்பரிய விளையாட்டுக்களைப் பற்றிய ஆய்வு முக்கியம் பெறுகின்றது.

மனிதனின் இயல்பூக்கமே அவனது நடத்தைகளுக்குக் காரணம் என்றார் சிக்மண்ட் பிராய்ட் எனும் உளவியல் அறிஞர். மனித நடத்தை மீது சமூகவியல் தன்மை ஆதிக்கம் செலுத்தியதை விட உடலியல் தன்மை ஆதிக்கம் செலுத்தியதே அதிகம் என ஆராய்ச்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளன. மனிதன் தன் இயல்பூக்கங்களை இல்லாமல் செய்யும் அல்லது கட்டுப்படுத்தும் சமூக அமைப்பில் வாழும் பொழுது அவனால் சுதந்திரமாகச் செயற்பட முடியவில்லை. அதனால் தன் காலத்தின் சமூக ஒழுக்கங்களுடன் முரண்படுகின்றான். அதனால் ஒருவகையான சமூகக் குழப்பத்திற்கு உள்ளாகின்றான். இந்த இடத்தில்தான் அவனது சுதந்திரம் குறித்த எண்ணம் நமக்குத் தேவையாகின்றது. இவ்வாறான சூழலில், அவன் தன் இயல்பூக்கங்களைக் கட்டவிழ்த்து வெளிப்படுத்துவதே விளையாட்டாகப் பரிணமிக்கிறது எனலாம்.

'ஆலையிலே சொலையிலே ஆலங்காட்டிச் சந்தையிலே...'

'தெத்தாத உஞ்சில் தெத்தாத...'

'சங்கிலி புங்கிலி கதவத்திற...'

'புள்ளையார் கட்டைக்கு ஆட்டம்...'

'மாம்பழம் வந்து குட்டிக் குட்டிப்போட்டு ஓடு...'

'சாஞ்சாடம்மா சாஞ்சாடு...' 'ஆலாப் பற பற... 'ஆனையாடுமாம் புள்ள ஆனையாடுமாம்...' கிள்ளிக்கிள்ளி புறாண்டி...''

இந்தச் சொற்களைக் கூட இன்று நம்மத்தியில் கேட்க முடியாதுள்ளது. ஈழத்தினைப் பொறுத்தவரையில் நாட்டில் இருக்கின்ற பெருஞ் சிறப்புகளை மக்கள் மறந்து வருகிறார்கள். சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு தெருக்களில் சிறுவர்களும், சிறுமியர்களும் மாலை வேளைகளில், பல்வேறு கிராமங்களிலும், நகரங்களிலும் பாரம்பரிய விளையாட்டுக்களை விளையாடி மகிழ்ந்திருக்கிறோம். ஆனால் தற்போது தெருக்களில் இவ்விளையாட்டுக்கள் காணமுடிவதில்லை. தகவல் யுகம் மகிழ்ச்சி

அளிக்கிறது. ஆனாலும் ஊர்ப்புற விளையாட்டுக்களும் அதன் தத்துவமும் மறைந்துவிடும் சூழல் உருவாகியுள்ளது.

இன்று காணொளி விளையாட்டுகள் மிக விஞ்சிவிட்டன. காணொளிகள் குழந்தைகளின் கற்பனைகளைத் தின்றுவிடும் கைங்கரியத்தைக் கச்சிதமாய்ச் செய்துவிடுகின்றன. நம்முடைய பாரம்பரிய விளையாட்டுகள் என்பவை வெறும் விளையாட்டு மட்டுமல்ல. நம் பண்பாட்டையும் எடுத்துச் சொல்லும் ஆவணம். வீரம், விவேகம், மகிழ்ச்சி, விடாமுயற்சி, தன்னம்பிக்கை, அறிவுத்திறன், சகிப்புத்தன்மை இவற்றினை கற்றுக் கொடுத்தன. பாரம்பரிய விளையாட்டுகள். கம்பு சுழற்றி கவி நடனம் புரிந்தான், மாட்டின் கொம்பு பிடித்து வீரத்தினை காட்டினான். ஆடுபுலி ஆட்டம் என்பதொரு விளையாட்டு. இதனை ஆடுவதற்கு கணிப்பொறியும், கால்குலேட்டரும் தேவையில்லை. ஆனால் கூர்மையான அறிவு இருக்க வேண்டும். இந்த விளையாட்டை விளையாடினால் மதியால் எதையும் வெல்லலாம் என்ற உந்து சக்தி உள்ளத்தில் ஏற்படுவதை அனுபவித்து பார்க்க முடியும். தாயம், சொட்டாங்கல், பல்லாங்குழி போன்றவை பள்ளிப்படிப்பு இல்லாதவர்களுக்கு கணக்குப் பாடத்தை கற்பித்துத் தந்தன.

அத்தோடு சிறுவர் தம் விளையாட்டு எண்ணம் தொலைக்காட்சி, கணினி விளையாட்டு ஆகியவற்றால் கவரப்பெற்று விளையாட்டு, ஆடல், பாடல், விடுகதை போன்றவற்றிற்கு நேரம் இல்லாமல் போயிற்று. விளையாட்டைக் காண்பவர்களாக மட்டுமே இக்காலக் குழந்தைகள் வளர்ந்து வரும் சூழல் உருவாகிவிட்டது. இதனால் விளையாடும்போது படிக்கப்படும் கதைப்பாடல்களும் கேள்விக்குறியாகிவிட்டன.

பிள்ளையின் மூளையானது தனது சூழலை மிக நுணுக்கமாக ஆராய்ந்து அதனைப் பயனுள்ளவாறு ஒன்றுதிரட்டக்கூடிய நிலையில் உள்ளதென நோபர்ட் பிஷர் கூறுகிறார் (The child's Brain is programmed to scan the environment for patterns of meaning). சிறுவர்களுக்கு பண்பு வளர்ச்சி (Characteristic Growth), உளவியல் வளர்ச்சி (Mental Growth/Maturity) அறிவு வளர்ச்சி (Intelligence Growth) எனும் அகவய ரீதியான வளர்ச்சியினை சிறுவர்களிடையே ஏற்படுத்துவதில் பங்களிப்புச் செய்கின்ற, தைரியமூட்டி அவர்களின் மன எழுச்சிகளுக்கு உத்தரவாதமளிக்கின்ற, உளவியல் ரீதியான

வளர்ச்சிக்கு அதிகாரமளிக்கின்ற, சுய சிந்தனையையும் தன்னாற்றலையும் ஊக்குவிக்கின்ற பாரம்பரிய விளையாட்டுக்களை பயில்நிலையில் தொடர்வதற்கான சாத்தியப்பாடுகளை வழங்கப் போகின்றோமா? அல்லது சிறுவர்களை கூட்டுணர்விலிருந்து பிரித்து தனியன்களாக மாற்றுகின்ற காணொளி விளையாட்டுக்களை கண்டும் காணாமல் விட்டுவிடப் போகின்றோமா? எனும் கேள்விகளுக்கான சாத்தியமான பதில் தற்போது மிக அவசியமாகின்றது.

பாரம்பரிய விளையாட்டுக்கள்: சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள், இளைஞர்களுக்கான விளையாட்டுக்கள், வளர்ந்தவர்களுக்கான விளையாட்டுக்கள், பெண் பிள்ளைகளுக்கான விளையாட்டுக்கள் என ஒவ்வொரு வயதுப் பிரிவினருக்குரியதாக வெவ்வேறாகவும் இருக்கின்றன. எல்லோரும் விளையாடக் கூடியதாக பொதுவாகவும் இருந்திருக்கின்றன. உடலுறுதிக்கும், அறிவுத்திறனுக்கும், மகிழ்வுக்குமாகப் பயின்று வந்த பாரம்பரிய விளையாட்டுக்களை இன்றைய தலைமுறையினர் அறிந்திருக்கமாட்டார்கள். அந்தக் காலங்களில் இந்த விளையாட்டுக்கள் தொடர்பான கிராமியப் பாடல்கள், குழூவுக்குறிகள், பழமொழிகள், மரபுத்தொடர்கள் ஆகிய விடயங்களும் மக்களுடன் இணைந்திருந்தன. இளைஞர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் மாலை வேளைகளில் விளையாடுவதற்கான நேரங்களை ஒதுக்கி குழுக்களாகச் சேர்ந்து விளையாடுவார்கள். கிளித்தட்டு மறித்தல், கிட்டியடித்தல், அம்பெறிதல், போர்த்தேங்காய் அடித்தல், வண்டிச்சவாரி, கோழிச்சண்டை, பட்டம் ஏற்றுதல் போன்றவற்றை விளையாடுவார்கள். வயது வந்தவர்கள் தாயம், பல்லாங்குழி, நாயும் புலியும் ஆகியவற்றை விளையாடுவார்கள். பொதுவாக அக்காலத்தில் பெண் பிள்ளைகள் கெந்தி விளையாட்டு, கயிறடித்தல், கொக்கான் வெட்டுதல், பல்லாங்குழி, ஊஞ்சலாடுதல் ஆகிய விளையாட்டுக்களை விளையாடினார்கள். ஒவ்வொரு விளையாட்டும் தன்னளவில் பல நன்மைகளை நம்மில் ஏற்படுத்துகின்றன. இவற்றினை அறிஞர்களின் ஆராய்ச்சிக் குறிப்பீடுகளுடன் எடுத்து நோக்குவோம்.

மிகுதி ஆற்றல் கொள்கை (Surplus Energy Theory)

ஜெர்மன் நாட்டுத் தத்துவஞானி ஸ்கில்லர் என்பவரும் ஆங்கில நாட்டு இயற்கைத் தத்துவவாதி. ஸ்பென்சர் என்வரும் கூறிய இக்கொள்கை, ஸ்கில்லர் ஸ்பென்சர் கொள்கை என்றே அழைக்கப்படுகிறது. குழந்தைகள் விளையாடுகிறார்கள் என்றால், அது அவர்களின் மிகை உணர்ச்சியின் உற்சாகத்தாலும் மிகுதியான ஆற்றலை வெளிப்படுத்துவதற்கான உணர்வினாலும் உந்தப்படுகிறார்கள் எனக் கூறப்படுகின்றது. இதனால் அவர்களுக்கு மீயாற்றல் அதிகரிக்கும் நிலை உருவாகின்றது. இதுவே அவர்களுக்கான சாதிக்கும் எண்ணத்தையும் மன உறுதிப்பாட்டினையும் ஏற்படுத்தி விடுகின்றது.

எதிர்பார்ப்புக் கொள்கை (Anticipatory Theory)

காரல் குஷரூஸ் என்பவரால் முன்மொழியப்பட்டிருக்கும் இக்கொள்கையின் சாராம்சமாக 'எதிர்கால வாழ்க்கையை எப்படி சமாளிக்க வேண்டும் என்பதை இளஞ்சிறார்கள் விளையாடிக் கற்றுக் கொள்கின்றார்கள்' எனக் கூறப்பட்டுள்ளது. அதாவது எதிர்கால புதிர்நிறைந்த வாழ்க்கையை வெற்றிகரமாக, சந்திக்க இப்பொழுதே அவர்கள் ஆயத்தமாகி விடுகிறார்கள். அத்தோடு தமது எதிர்பார்ப்புக்களையும் தம்மையறியாது மெல்ல மெல்ல அடையத் தொடங்குகிறார்கள் எனக் கூறப்படுகிறது.

பொழுதுபோக்குக் கொள்கை (Recreational Theory)

பாரம்பரிய விளையாட்டுக்கள் என்பது புதிய சக்தியை உற்பத்திசெய்கின்றன. அதாவது, வாழ்க்கையில் ஏற்படும் மந்த சூழ்நிலையை, எரிச்சல் நிலையை விலக்கி, ஒரு சுவையான, சுகமான மாற்றத்தை பாரம்பரிய விளையாட்டுக்கள் ஏற்படுத்திவிடுகின்றன என்கிறது பொழுதுபோக்குக் கொள்கை. நாம் வாழ்வது நவீன காலம். நாகரிகக் காலம். நுணுக்கமான விடயங்கள் அதிகம். அதற்கு அதிகக் கவனம் தேவைப்படுகிறது. அதனால் நுண்ணிய புலன்கள் எல்லாம் அதிகமாக உழைத்து, விரைவில் களைத்துப் போகின்றன. அப்படிப்பட்ட களைத்த அவயவங்களின் அசதியைப் போக்கி, ஆனந்தத்தை ஊட்ட வல்லனவாக விளையாட்டுக்கள் விளங்குகின்றன. இதனைக் கொள்கை ரீதியாக முன்வைத்தவர்களாக கேம்ஸ்பிரபு மற்றும் பு.று.வு. பேட்ரிக் ஆகியோர் காணப்படுகின்றனர்.

புனர்வினை கொள்கை (Recapitulatory Theory)

இன்றைய மக்கள் நாகரிகத்தில் திளைத்தாலும், அவர்கள் வாழ்க்கை ஆதிகால மக்கள் நடத்திய செய்முறைகளிலிருந்து முற்றிலுமாக விடுபடாமல்தான் தொடர்கிறது. வேட்டைக்குச் சென்றது, வில் அம்பைப் பயன்படுத்தியது. ஒடி ஒளிந்து விளையாடியது, விரட்டிப் பிடித்தது, கல்லெறிந்தது, குகைகள் அமைத்தது, உறங்கப் பாதுகாப்பு இடம் உருவாக்கிக் கொண்டது போன்ற பழைய காரியங்களின் பிரதிபலிப்பாகவே இன்றைய நிகழ்ச்சிகள் பல நம்மிடையே நிறைந்துள்ளன. இந்த பழைய அனுபவங்களையும், வாழ்க்கைச் சூழ்நிலைகளையும் நினைவுபடுத்தி, அவற்றைத் தொடர்ந்து செய்வதிலே அடைகிற இன்பமே பாரம்பரிய விளையாட்டுக்களில் ஈடுபட வைக்கிறது என்கிறார், ஸ்டேன்லிஹால் எனும் அறிஞர்.

உள்ளுணர்வுப் பயிற்சி கொள்கை (Instinct Practice Theory)

நமக்குள்ளே ஏற்படுகின்ற உணர்வுகள் எல்லாம் நாம் செய்கின்ற செயல்களை உருவாக்கி நடத்துவனவாக உள்ளன. ஆகவே, விளையாட்டுக்கள் எல்லாம், முழுமை பெறாத உணர்வுகள் வடித்து வைத்த செயல்களாக உருவகம் பெற்றன என்கிறார் இந்தக் கொள்கையை உருவாக்கிய பேராசிரியர் மெக்டொகல் என்பவர். விளையாட்டுக்கள் எல்லாம் உணர்ச்சிகளின் வெளிப்பாடே. சண்டை போடும் உணர்வுகள், சமத்காரமாக செயல்பட்டு உருவாக்கி மகிழும் உணர்வுகள், தம்மை தரணியில் உயர்த்திக் கொள்ளவேண்டும் என்று தலை தூக்கி நிற்கிற சுய மதிப்பு உணர்வுகள், பிறருடன் போட்டியிட விரும்புகிற உணர்வுகள் எல்லாம் விளையாட்டுக்களிடையே புகுந்து விழிப்புணர்ச்சியும் வேகமும் பெற்றுக்கொள்கின்றன. சிறப்புப் பயிற்சிகளைப் பெறுகின்றன.

உணர்ச்சி வெளிப்பாட்டுக் கொள்கை (Catharsis Theory)

இந்தக் கொள்கைக்குத் தந்தையாக விளங்குபவர் கிரேக்க தத்துவஞானி அரிஸ்டாட்டில் ஆவார். 'வாழ்க்கையில் விளைகின்ற வேண்டத்தகாத நிகழ்ச்சிகள் மனிதர்களை வேதனைக்குள்ளாக்கு

கின்றன. கலக்கம், கண்ணீர், சோதனை எல்லாம், மனிதரது இதயத்தை வேதனைப்படுத்துகின்றன. ஏதாவது துன்பம் கலந்த நாடகங்களைப் பார்க்கும்போது அந்த வேதனைகள் வடிந்து வெளியேற வாய்ப்புகள் ஏற்படுகின்றன. ஆகவே, துன்ப நாடகங்கள் மக்களது துயரங்களைத் துடைத்து எறிவது போல, உடல் துன்பங்களும் உதறப்படுவற்கு விளையாட்டுச் செயல்கள் உதவுகின்றன; ஒத்துழைக்கின்றன; உறுதியளிக்கின்றன' என அரிஸ்ரோட்டிலின் கதாசிஸ் தத்துவம் விளையாட்டுக்களுடன் பொருத்திப் பார்க்கப்படுகிறது. இயற்கையான முறையில் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் போது சக்தியை சிதறடிக்கும் சந்தர்ப்பம் குறைந்து, வேதனை மனநிலை வெளியேறி புதுசக்தியும் பெருகி வருகிற உயர்ந்தநிலை உருவாகிறது என்பதுதான் இந்த பாரம்பரிய விளையாட்டுக்களில் இயல்பாக இருக்கின்ற நுட்பங்களாக அமைகின்றன. இவற்றோடு பாரம்பரிய விளையாட்டுக்கள் இன்னும் பல சிறப்பம்சங்களைக் கொண்டு காணப்படுகின்றன.

முடிவுரை

ஒரு சமுதாயம் தன்னுடைய கடந்தகால வரலாற்றையும் பண்பாட்டையும் மறந்துவிட நேர்ந்தால் அச்சமுதாயம் அழிவுப்பாதையை நோக்கிச் செல்கிறது என்பதை வரலாறு மக்களுக்கு பாடமாகும். எனவே, மறைந்து வருகின்ற நாட்டுப் பண்பாட்டை நிலைநிறுத்த பாரம்பரிய விளையாட்டுக்களை மீள பயில்நிலைக்குக் கொண்டுவருவது முக்கியம் ஆகும்.

மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும், சமுதாயத்தில் தாங்கள் மதிக்கப்பட வேண்டும் என்றே விரும்புகின்றனர். இந்த ஆசையை, விளையாட்டு மூலமும் நிறைவேற்றிக் கொள்கின்றனர். விளையாட்டில் ஈடுபடுகிறபோது, பலதரப்பட்ட ஆண்கள், பெண்களுடன் பழகும் வாய்ப்புகள் நிறையவே கிடைக்கின்றன. அவர்கள் பழகும் வட்டம் நாளுக்கு நாள் பெரிதாகிக் கொண்டே வருகிறது. அதன் காரணமாக, அவர்களுடைய சமூகப் பழக்கவழக்கங்களும், பண்பாடுகளும், நடத்தைகளும் செம்மையடைகின்றன; செழுமை பெறுகின்றன.

உசாத்துணை

பாலசுப்பிரமணியம். இரா .(1981). தமிழர் நாட்டு விளையாட்டுகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

புகழேந்தி.இ., (2008). கிராமத்து விளையாட்டுகள், விகடன் பிரசுரம்.

Bruce, T. 1987. Early Childhood Education London: Hodder and Stoughton.

Hendricks, B. 2001. Designing for Play. Aldershot, Ashgate.

31

தமிழ், சமஸ்கிருத இலக்கியங்களில் வீணையின் சிறப்புகள்

விநாயகமூர்த்தி சௌமியா,
இசை ஆய்வாளர், இலங்கை. showmiyavinayagam@gmail.com

ஆய்வு அறிமுகம்

தந்தி வாத்தியங்களுள் மிகப்பெருமை வாய்ந்ததாகவும், சிறப்பானதாகவும் கருதப்படுவது வீணையேயாகும். வீணையின் சிறப்புக்கள் தமிழ், சமஸ்கிருத இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளமையை காணமுடிகின்றது. இவ்விலக்கியச் சான்றுகளினூடாக, ஆரம்பகாலத்திலிருந்து தற்காலம் வரை வீணை குறித்த கருத்துக்களும், அதன் வடிவமைப்பும் எவ்வாறு மாற்றம்பெற்று வந்துள்ளன என்பதுவும் வீணையின் முக்கியத்துவமும் இவ்வாய்வினூடாக எடுத்துரைக்கப்படுகின்றது. குறிப்பாக ஆரம்பகால வீணையில் இருந்து புதிய வீணையின் உருவாக்கம், வீணையின் பரிணாம வளர்ச்சி அதன் சிறப்பு என்பன இன்றும் பேணப்படுகின்றதா? என்ற கேள்வி எழுவது தவர்க்கமுடியாததாகும். அதனை மையப்படுத்தி புரதான வீணை எத்தகைய பரிமாண வளர்ச்சி பெற்று இருக்கின்றது என்பதையும் வீணையின் வளர்ச்சிப் பாதை பற்றி அடுத்த தலைமுறையினர் அறிகின்றார்களா? என்பதையும் ஆய்வு வினாக்களாக முன்வைத்து இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகின்றது.

ஆய்வு நோக்கம்

புராதன வீணைகள் எத்தகைய பரிமாண வளர்ச்சி பெற்று இருக்கின்றன என்பதையும் இனி வரும் தலைமுறையினர் வீணைகள் குறித்த தெளிவான புரிதலை எட்டவேண்டும் என்பதையும் நோக்கங்களாகக்கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

ஆய்வு முறையியல்

பண்புசார் ஆய்வு அணுகுமுறையின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இலக்கியங்களிலிருந்தும் வீணை குறித்து எழுதப்பட்ட ஆய்வுகளிலிருந்தும் தரவுகள் பெறப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு முன்வைக்கப்படுகின்றன.

யாழும் வீணையும்

இசைக்கருவிகளின் அரசி என்று சிறப்பிக்கப்படும் வீணை வாத்தியம் தெய்வீக உணர்வினைப் பெற்று இருப்பதால் இந்த இசைக்கருவியைத் தென்னிந்தியாவில் மக்கள் ஏராளமானோர் விரும்பிக் கற்கின்றார்கள். இந்திய சாஸ்திரத்தினைப் பிரதிபலிக்கும் வாத்தியமாகவும் இது விளங்குகின்றது. இசையின் நுட்பத்தினையும் தத்துவத்தினையும் இவ் வீணை வாத்தியத்தின் மூலம் தெளிவாக வெளிப்படுத்த முடியும்.

தமிழ் மொழியிலும் சமஸ்கிருத மொழிலும் ஆயிரக்கணக்கான இலக்கியங்கள் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்விரு மொழிகளில் எழுந்துள்ள இலக்கியங்களில் இசை பற்றியும் வாத்தியம் பற்றியும் நிருத்திய கலையின் முக்கியத்துவம் பற்றியும் கூறப்பட்டுள்ளன. தமிழ், சமஸ்கிருத இலக்கியங்களில் சாஸ்திரம், நீதி, தர்மம், இலக்கியம், காதல், வீரம் என்று குறிப்பிட்டு இருப்பதுடன் இசை பற்றியும் வாத்தியம் பற்றியும் அதிகமான குறிப்புகள் உள்ளதை உணரமுடிகின்றது. தமிழ் இலக்கியங்களாக எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், பக்தி இலக்கியங்கள், காவியங்கள், புராணங்களும் வடமொழி இலக்கியங்களாக வேதம், உபநிடதம், புராணங்கள், இதிகாசங்கள் ஆகியனவும் காணப்படுகின்றன.

தமிழ், சமஸ்கிருத இலக்கியங்கள் வீணை வாத்தியத்தின் தொன்மையையும் சிறப்பினையும் முக்கியத்துவத்தையும் எடுத்துரைக்கின்றன. வீணை வாத்தியம் தந்தி வாத்தியமாக காணப்பட்டாலும், வீணைக்கு ஆதாரமே 'செங்கோட்டு யாழே' ஆகும். இதன் தொன்மையைக் கொண்டு யாழின் தோற்றமே வீணையின் தோற்றத்திற்கு காரணமென்று குறிப்பிடுகின்றார்கள். இதன் வழிதான் வளர்ச்சியடைந்து வீணையின் உருவத்தினைப் பெற்றது என்று வரலாறுகள் கூறுகின்றன. வில்லால் வாசிக்கப்படும்

கருவிகளையும் மற்றும் பிற உபகரணங்களால் வாசிக்கப்படும் கருவிகளையும். வீணை என்ற சொல்லால் குறிப்பிடுகின்றனர்.

தமிழ் இலக்கியங்களில் வீணை

ஒப்பற்ற முதுபெரும் சமயகுரவரும் தொண்டருமான அப்பர் அடிகள் தம் தேவாரத் திருப்பதிகத்தில் இறைவனுடைய திருவடி நிழலை, வீணையின் இன்னொலிக்கு ஒப்பிட்டுள்ளார். 'மாசில் வீணையும் மாலை மதியமும் வீசு தென்றலும்' என்ற பாடல் வீணையின் ஏற்றத்தை எடுத்துக்காட்டுவதற்கு சிறந்த சான்றாகும் (இசையும் யாழும், பக்.203; 204).

சிவபெருமானின் பல திருக்கோலங்களில் 'வீணாதாரர்' என்பதும் ஒன்று. 'பிரலயம்' என்று கூறும் யுக முடிவில் இவ்வுலகம் முற்றாக அழிந்து விடும். அப்போது உலகம் நீரால் மூழ்கி இருக்குமாம். இந்நிலையில் சிவபெருமான் மீண்டும் உலகைத் தோற்றுவிக்க எண்ணங்கொண்டு வீணையைக் கையில் கொண்டு அதனை அழகாக இசைத்து உலகை நாதத்தால் உருவாக்குகின்றார் என்று புராணங்கள் கூறுகின்றன. இக்கருத்தைத் திருநாவுக்கரசு சுவாமிகளும் 'பெருங்கடல் மூடிப் பிரளயங் கொண்டு பிரமனும் போய் இருங்கடன் மூடி இறந்தான்' என்ற தேவாரத்தால் கூறுகின்றார் (சம்ஸ்க்ருத இலக்கியங்களில் இசைக்கருவி -1, பக் : 2).

வீணையிசை இனிமையானது என்கிறார் மாணிக்கவாசகர்.

'இன்னிசை வீணையி லிசைந்தோன் காண்க
ஆன்னதொன் றவ்வயி னறிந்தோன்.....'

அதேபோன்று பெரிய புராணத்தில் சேக்கிழார் யாழின் வகைகளைக் குறிப்பிடுமிடத்து 'ஏதமில் விபஞ்சி வீணை யாழொலி ஒரு பாலேத்தும்' என்று வீணையைக் குறிப்பிடுகிறார்.

கடைச்சங்க காலத்திலும், அதற்கு முன் தோன்றி இலக்கியங்களில் வில் யாழும், பேரியாழும் குறிப்பிடப்பட்டுள்ளன. சகோடயாழும், மகர யாழும், செங்கோட்டியாழும் சிலப்பதிகாரம் - மணிமேகலை - பெருங்கதை - சீவகசிந்தாமணி ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ளதை காண முடிகின்றது. அவற்றை பின்வரும் பாடல் வரி மூலம் அறியலாம்.

'தீத்தொடை மகர வீணைத் தெளவிளி யெடுப்பித்...' (சீவகசிந்தாமணி - காந்தருவதத்தை) (சிலப்பதிகாரத்தின் இசைச் செல்வங்கள், பக் : 32,33)

'மகர வீணையின் கிளை நரம்பு வடித்த' (மணிமேகலை)

மேலும் பத்துப்பாட்டினுள் பெரும்பாணாற்றுப்படை என்னும் நூல் வில் யாழைப் பற்றியும் அதன் உறுப்புகளைப் பற்றியும் மிகத் தெளிவுபட விளக்குகின்றது. இவற்றைப் பின்வரும் பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன:

'குமிழிகள் புழற் கோட்டுத் தொடுத்த மரற்புர் நரம்பின்

வில்யா ழிசைக்கும்' (சம்ஸ்க்ருத இலக்கியங்களில் இசைக்கருவி - 1, பக் : 1)

கம்பராமாயணத்தில் கம்பர் வீணையை நயமான பண்ணிசைக் கருவி என்றும் இதன் இனிமையானது தேன் போன்றது என்றும் 'நல்லியல் மகர வீணைத் தேனுக' எனும் பாடலை அடியில் குறிப்பிடுகின்றார்.

அதனைத் தொடர்ந்து தேம்பாவணியில் வீரமாமுனிவர் தேவாலயத்தில் பல விதமான இசைக்கருவிகள் ஒலிப்பதைக் கூறுமிடத்து, வீணையையும் குறிப்பிடுகின்றார். அப்பாடல் வரிகள் பின்வருமாறு:

'முருடொடு பம்பை ஒலிவயிர் ஒலிகள்
முரசொடு வளையொலி ஒலித்த'

சமஸ்கித இலக்கியங்களில் வீணை

வடமொழி இலக்கியங்களில் வீணையின் தோற்றத்தை வர்ணிக்கும் பொழுது 'நித்திரை வயப்பட்ட உமாதேவியின் தோற்றத்தினை கொண்டு பரமேஸ்வரன் வீணை' படைத்ததாகக் கூறப்பட்டுள்ளது.

ரிக் வேதத்தில் கடவுளால் தெய்வீக வீணை சிருஷ்டிக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. கடவுளால் சிருஸ்டிக்கப்பட்ட தெய்வீக வீணைக்கும் சிரம், வயிறு, நாக்கு, தசைகள், ஒலி, ஸ்பரிசம், தோல் முதலியவை உள்ளன. மனித உடலுக்கும், மனிதனால் படைக்கப்பட்ட மர வீணைக்கும் இடையே

ஒரு அழகிய ஒப்பீட்டினை ரிக் வேதம் கூறுகிறது. மனிதனால் உருவாக்கப்பட்ட வீணையை 'காச்டமாயி வீணை அல்லது மனுசி வீணை' (Kashtamayi or Manushi vina) என்று ரிக் வேதம் குறிப்பிடுகின்றது.

மனிதத் தலை - மனிதனின் தோளில் நிறுத்தப்பட்டிருக்கும் வீணையின் சுரைக்காய்க்கும்

வயிறு - அம்பானா (Resonator) என்றறியப்படும் வீணை தண்டத்தின் உள்பகுதியில் காணப்படும் பகுதிக்கும்

மனித நாக்கு - வீணைத் தந்திகளை மீட்டுவதற்கும்

தசை நாண்கள் - வீணையின் தந்திகளுக்கும்

குரல் - இசைக்கும்

மனித உடல் - இது தோலினால் போர்த்தப்பட்டுள்ளது போல், வீணையும் போர்த்தப்பட்டுள்ளதற்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது. (நாடும் மக்களும் இசைக்கருவிகள், பக் : 125)

ரிக் வேதத்தில் 100 தந்திகளைக் கொண்ட வீணை காணப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. இவ்வீணையே 'வான வீணை' என்று அழைக்கப்படுகிறது.

'மருதா வனம் சத்த சன்ங்யாபிஸ் தந்த்ரிபிர் யுத்தம் வீணா விஷேசம் தமந்தோ வதயந்திரி வதயந்தி' (Sayana, Acharya. The commentary on the Rgveda, Vide, the rgveda Samhita, vols, i-vii (1810); Bombay)

வால்மீகி, நாரத முனிவரிடமிருந்து வீணை மீட்டக்கற்றுக் கொண்டார். அவரிடமிருந்து இராமனின் புத்திரர்களான லவனும் குசனும் இக்கலையினைப் பயின்று, பின் இராமனின் அரசவைக்கு சென்று ராம சரித்திரத்தைப் பாடும்பொழுது வீணையைச் சுருதி கூட்டித் தாளத்தோடு பாடியதாகவும் நம்பப்படுகிறது. அவற்றை 'பாட்யே கேயே ச மதுரம் ப்ரமானைதிரிபி அனிவிதம்' என்ற சுலோகம் மூலம் அறியலாம்.

மகாபாரதம் விராட பருவத்தில் (அஞ்ஞாத வாசம்) அர்ஜுனன் பிரகன்னளையாக இருந்து நாட்டியம், வீணை முதலியவற்றை விராடன் மகள் உத்தரைக்குக் கற்பித்தார். இதிலிருந்து அர்ஜுனன்

வீணை வாசிப்பதில் வல்லவர் என்பது புலப்படுகின்றது. இவர் உபயோகித்த வீணை ஏழு தந்திகளுடையதாக (சப்தா தந்திர பிரதித வோகா) இருந்தது என்று கூறுகின்றனர்.

சௌர்ந்தர்யலஹரியானது (கி.மு 508) பழமையான நூலாகும். ஆதிசங்கர் சௌர்ந்தர்யலஹரியில் அம்பாளை வர்ணிக்கையில் சிவபெருமானின் பல விதமான திருவிளையாடல்களை சரஸ்வதிதேவி தன்னுடைய வீணையில் வாசிக்கத் தொடங்கினாள். இதனை ஆமோதித்துப் பாராட்டும் முகமாக நீ 'ஆஹா' என்று மொழியத் தொடங்கியவுடனேயே, உன் மொழிகள், தன் வீணையின் நாத இனிமையை விட மேலாக இருப்பதால், தனது வீணையை சரஸ்வதி உறையிலிட்டு மூடி வைத்து விட்டாள்; என்று கூறுகின்றார். இதனைப் பின்வரும் ஸ்லோகத்தில் அறியலாம். 'விபஞ்ச்யா காயந்தீ விவித - மபதானம் பசுபதே' (சுப்ரமணியம். சு, அம்பிகை அழகுவெள்ளம் ப. 66).

கி.பி. பதினொராம் நூற்றாண்டில் நாரதர் என்பவரால் 'சங்கீத மகரந்தம்' என்னும் நூல் இயற்றப்பட்டது. இவர் 'நகஜ' என்று நரம்பிசைக் கருவியைக் குறிப்பிடுகின்றார். நாரதமுனி பதினெட்டு வகையான வீணைகள் உள்ளன என்பதை, 'வீணாத்யாயத்தில' அழகாக எடுத்துக் கூறுகின்றார். இவர் கச்சபி, குப்சிகா, சித்திரா, வகந்தி, பரிவாதினி, செயா, கோசாவதி, செயஸ்தா, நகுலி, மகதி, வைஷ்ணவி, பிராமி, இரௌத்திரி, இராவணி, சரசுவதி, கின்னரி, சௌராந்தி, கோசகா என்ற பதினெட்டு வகையான வீணைகளைப் பற்றிப் பின்வரும் ஸ்லோகத்தில் குறிப்பிட்டுள்ளார்: 'கச்சபி குப்ஜிகா சித்ரா வகந்தி பரிவாதினீ ஜயா கோஷாவதி ஜேஷ்டா நகுளிஷேடேதி கீர்த்திகா' (Bhagyalakshmi. S, Lakshna Grandhas in music page. 58).

மேலும் சங்கீத சார சங்க்ரகம் என்னும் நூலில் வீணை பற்றிய பல விடயங்கள் கூறப்பட்டுள்ளது. இதில் பிரம்ம வீணை, விஷ்ணு வீணை, ருத்ர வீணை என்ற மூன்று வித வீணைகளைப் பற்றிக் கூறியுள்ளார். பிரம்ம வீணை 24 மெட்டுக்களையும், விஷ்ணு வீணை 12 மெட்டுக்களையும், ருத்ர வீணை 12 மெட்டுக்களையும் கொண்டன என்கிறார். 'ப்ரஹ்மவீணை யடஞ்சு பத்ரம்புக ஸுரல வத்த வெலயுசுண்டு வருஸ நொகடி' (சங்கீத சார சங்க்ரஹம், The Music Academemy Journal, 1940).

வடமொழியில் வீணை என்ற சொல் குடம், பானை என்ற பொருளைக் குறிக்கும். முற்காலத்தில் இரண்டு பானைகளின் மேல் மூங்கிலை வைத்து அதன்மீது நரம்பினை இறுக்கக் கட்டி வீணையைச் செய்திருந்தனர் எனச் சொல்வோருமுண்டு. சங்ககாலத்தில் தோன்றிய யாழே இடைக்காலத்தில் கின்னரி (கின்னரம்) என்ற இசைக்கருவியாகி, இக்காலத்தில் வீணையாக மாற்றம் பெற்றது. நாமகளான சரஸ்வதி தேவி 'வீணா தாராணியாகவும'; சிவபெருமான் 'வீணாதா தட்சிணாமூர்த்தியாகவும்' விளங்குகின்றனர். அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றைக் கொடுக்கக்கூடிய வீணையின் இசை மனதை அமைதிப்படுத்தும் சக்தி வாய்ந்ததாகும்.

நரம்புக் கருவிகளின் வளர்ச்சிக்கு 'ஆதி கருவி' யாழ். அது முற்றிலும் மறைந்து அதன் வழி வந்தது வீணை. வீணையின் பரிமாண வளர்ச்சிக்கு ஆதாரமே யாழாகும். பண்டைய காலம் தொட்டு வீணை வாசிக்கப்பட்டு வந்தாலும் கி.பி. 17ம் நூற்றாண்டில் தான் கண்டறியப்பட்டது. முதலில் யாழ் என்ற இசைக்கருவிதான் அரண்மனையில் வாசிக்கப்பட்டு வந்தது. இதில் ஒரு இராகம் மட்டுமே வாசிக்க முடியும். ஆதலால், தச்சர் நவீன வடிவத்திலும் அழகிய தோற்றத்துடன் உருவாக்கி பலவித இராகங்கள் மெட்டுக்கள் இசைக்கும் படி வடிவமைத்து கொடுத்தார். 17ஆம் நூற்றாண்டில் தஞ்சையை ஆண்ட ரகுநாத நாயக்கரின் (1544 – 1626) காலத்தில் வாழ்ந்த கோவிந்த தீட்சிதர் என்பவர் தற்போது 24 மெட்டுக்களுடன் கூடிய வீணையை அமைத்துக் கொடுத்தார். இவரால் வடிவமைக்கப்பட்ட வீணை ஸ்வரம், இராகம், தாளம் மூன்றினையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இவர் வடிவமைத்த வீணையைத் 'தஞ்சாவூர் வீணை' என்றும் 'சரஸ்வதி வீணை' என்றும் சிறப்பித்துச் சொல்வர். ஆரம்ப காலத்தில் யாழ் என்னும் இசைக்கருவி பரிணாம வளர்ச்சியடைந்து காலப்போக்கில் வீணை என்னும் உருவத்தினைப் பெற்றது.

தமிழ், சமஸ்கிருத இலக்கியங்களில் வீணை பற்றிய குறிப்புகள் பதிவுகள் செய்யப்பட்டிருக்குமாற்றை அறியும் நோக்கிலும், புராதன வீணைகள் எத்தகைய பரிமாண வளர்ச்சி பெற்று இருக்கின்றது என்பதனை அறியும் நோக்கிலும், ஆரம்பகால வீணையில் இருந்து புதிய வீணையின் உருவாக்கம், வீணையின் பரிணாம வளர்ச்சி

அதன் சிறப்பு என்பன இன்றும் பேணப்படுகின்றதா? என்பதைக் கண்டறியும் நோக்கிலும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

முடிவுரை

கலைகளிலே தலை சிறந்த கலையாக சங்கீதம் விளங்குகின்றது. இது கீதம், வாத்தியம், நிருத்தியம் என மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சங்கீதம் என்பது இசையாளர்களின் சிந்தனையிலும், கற்பனை வளத்திலும் தோன்றும் ஒன்றாக காணப்படுகின்றது. இசையில் பாட்டு, வாத்தியம் இரண்டும் மனிதனின் கண்களாக மிளிர்கின்றன. இசை என்பது மனித வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்ததாகவும் மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை, ஊறிக்கிடப்பனவாகவும் உள்ளன. அந்த வகையில், இசைக்கருவி என்பது இசையொலியின் பல நுட்பங்களைத் தெரிந்து கொண்டு, இசையின் மூலமாக வாத்திய இசையின் மேன்மையை எடுத்துரைப்பதாகும். அத்தகைய இசைக்கு ஆரம்ப காலம் முதல் இன்று வரை காணப்படும் பழமையான வாத்தியம் வீணை ஆகும். ஆனால் நவீன கால மாற்றத்தின் காரணமாக வீணையை அவர்களின் வசதிக்கேற்ப அதன் உருவமைப்புகளில் மாற்றம் செய்து வருகின்றார்கள். ஆனால், அதன் வாசிப்பு முறையிலோ, சுருதி முறையிலோ எவ்வித மாற்றமும் இல்லை. வீணை ஒரு அற்புதமான இசைக்கருவியாகும்.

உசாத்துணை நூல்கள்

அருளம்பலவனார். சு., (1993). திருவாசக ஆராய்ச்சியுரை, பாரி நிலையம்

இராகவன். அ., (1971). இசையும் யாழும். கலை நூற் பதிப்பகம், பாளையங்கோட்டை,

தண்டபாணி. கே., (1989). இசையே உலகம், ஸ்ரீ செல்வ நிலையம்

தாமரைக்கண்ணன் ஆச்சாரி. இரா, (2018). மாயோன் படைத்த இசைக்கருவிகள்

பொன்னையா பிள்ளையவர்கள். க, (1948). இசையியல் - 5, இரண்டாம் பதிப்பு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சிதம்பரம், ஸ்ரீ முகுந்தன் அச்சுக்கூடம்

புலியூர்க் கேசிகன். (1961). மணிமேகலை, பாரிநிலையம் 184 பிராட்வே

32

மரபுரிமைக் களமாகும் ஆற்றுகை மரபுகள்

தம்பிராசா விவானந்தராசா
நடன நாடகத்துறை, சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை. vivanantharasat@esn.ac.lk

அறிமுகம்

ஒரு சமூகம் தலைமுறைகள் கடந்து தமக்குள் பயின்று வரும் பண்பாட்டு வாழ்வும் வளமும் அதன் மரபுரிமையாகின்றது. இவ்வாழ்வைத் தொடர்ந்து பயில்வதில் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் சிக்கல்கள் இச்சமூகங்களின் மரபுரிமைச் சிக்கல்களாகின்றன. வாழ்வியலே சமூக அடையாளத்தை வடிவமைக்கும் நிலையில், வாழ்வியற் சிக்கல்கள் அடையாளச் சிக்கல்களாகவும் அமைகின்றன.

இயல்பான தமது அடையாளங்களை வெளிப்படுத்த முடியாத சூழலிலும் பிற சமூக (பெருஞ்சமூக) அடையாளங்களை ஏற்றுக்கொண்டாகவேண்டிய சூழலிலும் இருப்பது கிழக்கிலங்கையின் எண்ணிக்கையில் குறைந்த சமூகங்கள் எதிர்கொள்ளும் பிரதான சிக்கல்களாக இருக்கின்றன. எண்ணிக்கையில் குறைந்த நிலையில் இருப்பதும் பெருஞ் சமூகத்தின் மத்தியில் வாழ்க்கைச் சூழலைப் பெற்றிருப்பதும் சமூகக் கலப்பினையும் மாற்றுருவங்களின் ஏற்பினையும் இயல்பாக்கியிருக்கின்றன. தொடர் இடப்பெயர்வுகளும் துண்டாடும் குடியேற்றத் திட்டங்களும் இது வரை இருந்துவந்த சமூக அமைப்பின் இறுக்கத்தைத் தளர்த்தியிருக்கின்றன.

இத்தகைய சிக்கல்களை எதிர்கொண்ட நிலையிலும் தமது பண்பாட்டு மரபுரிமைகளைக் காக்கும் முன்னெடுப்புக்களில் எண்ணிக்கையில் குறைந்த சமூகங்கள் ஈடுபட்டே வருகின்றன. இந்நிலையில், பண்பாட்டு மரபுரிமைகளாகவும் மரபுரிமைகளின் பயில்வுக் களங்களாகவும் இச்சமூகங்களின் ஆற்றுகைகள் மிகுந்த கவனிப்பைப் பெறுகின்றன.

கிழக்கிலங்கைப் போர்த்துக்கீசியப் பறங்கியர் சமூகத்தின் பண்பாட்டு மரபுரிமைக்களமாக இச்சமூகத்தின் ஆற்றுகைகள்

இயங்கும் முறைமையினை இவ்வாய்வு கவனப்படுத்துகின்றது. இனவரைவியல் முறையில் திரட்டப்பட்ட தகவல்கள், ஆற்றுகைப் பகுப்பாய்வு மற்றும் அரங்கமானிடவியல் கோட்பாட்டறிவுகளின் துணையில் பகுத்தாராயப்பட்டு விளக்கமுறையில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

கிழக்கிலங்கைப் போர்த்துக்கீசியப் பறங்கியர்

17ஆம் 18ஆம் நூற்றாண்டின் காலனித்துவ ஒல்லாந்தர்களிடமிருந்து போர்த்துக்கீசிய மொழி பேசும் யூரேசியர்களாகப் (Eurasian) 'பர்கர்கள்' (Burghers), தங்கள் பெயரடையாளத்தைப் பெற்றுள்ளனர் (மெக்கில்வ்ரே, டென்னிஸ் பி. 2007: 325). பின்னர் உள்நாட்டில் திருமணமான ஐரோப்பியர்கள், அவர்களின் சந்ததியினர் எல்லோரும் இந்த வார்த்தையால் (பர்கர்) அழைக்கப்படலாயினர். எனினும் இலங்கைத் தமிழ்ச் சூழலில் 'பறங்கியர்' என்றே பர்கர்கள் அழைக்கப்படுகின்றனர். அவர்கள் பேசும் போர்த்துக்கீசிய கலப்புமொழி 'பறங்கி' என்றவாறே வழங்கப்படுகின்றது. 'பறங்கி' எனும் சொல் தமிழ்நாட்டில் இருந்து புழக்கத்தில் வந்ததாகவும் (ஞானபாரதி, வி. 2016: 8) கருதப்படுகின்றது. பிரித்தானியர் ஆட்சியில், பர்கர் (Burgher) என்ற உத்தியோகச் சொல் இலங்கையின் அனைத்துக் கலப்பு ஐரோப்பிய குடிமக்களுக்கும் பயன்படுத்தப்பட்டது.

இன்று, 'இலங்கைப் போர்த்துக்கீசியப் பர்கர்' , 'பறங்கியர்' என்ற பெயரிலான ஒரு சமூகமாக நிலை பெற்றிருக்கின்றனர். மாத்தறை, கண்டி, அம்பாந்தோட்டை, மன்னார், யாழ்ப்பாணம், கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் போர்த்துக்கீசியப் பறங்கியர் வாழ்ந்து வருகின்றனர். எண்ணிக்கையில் குறைந்த சமூகங்களுள் ஒன்றாக அடையாளப்படுத்தப்படும் இச்சமூகம் நீண்ட தமது பண்பாட்டு வரலாற்றை, வாழ்வியலைத் தக்கவைத்த சமூகமாகவும் இருக்கிறது. இலங்கையின் பிற சமூகங்கள் தழுவித் தம் வயப்படுத்தியிருக்கும் பண்பாட்டு நடைமுறைகள் சிலதின் மூலவராகவும் விளங்குகின்றது. இலங்கையில் பறங்கியரது பூர்வீக இடமாகக் கொள்ளப்படும் நிலையில் கிழக்கு மாகாணம் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. இன்றுவரை போர்த்துக்கீசியப் பறங்கியர் செறிந்துவாழும் பிரதேசமாக கிழக்கு மாகாணம் காணப்படுவதும் இதன்

பின்னணியாகின்றது. மொத்தத்தில் போர்த்துக்கீசியர், ஒல்லாந்தர் இலங்கை வரவிலும் ஆட்சியிலும் கிழக்குக் கரையோரம் பெற்ற செல்வாக்கும் இங்கு நிலைபெற்ற அவர்களது அரசியல் வாழ்வும் இதற்கான அடிப்படையாயிருக்கின்றன. கிழக்கு மாகாணத்தில் நகரிலும், புறநகர்ப் பகுதிகளிலும் சில கிராமங்களிலும் இச்சமூகம் வாழ்ந்து வருகின்றது.

கிழக்கிலங்கையில் பெருஞ் சமூகங்களது பண்பாட்டு நடைமுறைகளிலிருந்து தனித்துவமான மொழி, பெயர், தொழில், மணவுறவு, உடற்றோற்றம் (நிறம்), உணவுமுறைகளைப் பறங்கியர் சமூகம் பயின்று வருகின்றது. எனினும் இத்தனித்துவங்களைத் தக்கவைப்பதில் பல்வேறுபட்ட சிக்கல்களையும் இச்சமூகம் எதிர்கொண்டு வருகின்றது.

கிழக்கிலங்கைப் போர்த்துக்கீசியப் பறங்கியர் சமூகத்தின் ஆற்றுகைகள்

கிழக்கிலங்கை போர்த்துக்கீசிய பறங்கியர் சமூகத்தின் அரங்க ஆற்றுகைகளாகப் பின்வருவனவற்றை அடையாளங்காண முடிகிறது. இவ்வாற்றுகைகளைப் பொதுவாக இசை, நடன அரங்க ஆற்றுகைகள் என வரையறை செய்ய முடியும்.

கஃப்றிங்ஹா (Kaffrinha), லான்சஸ் (Lances), சிகோத்தி (Chikoti/ Chicota), பைலா (Baila), பாஸ்கா நாடகம், கதைப்பாடல் (ஙிணீறீறீமீபீ), நாட்டுப்புறப்பாடல் போன்ற ஆற்றுகைகள் பறங்கியர் சமூகத்தினரிடம் பயில்வில் உள்ளன. இசை, நடனம் இணைந்து செல்ல அதன் பின்னணியில் உடலை ஆற்றுகை செய்யும் குழு அளிக்கைகளாக இவை இருக்கின்றன. இவற்றுள் இன்றுவரை மிகப் பிரபல்யமானதாகவும் பரவலாக நிகழ்த்தப்படுவதுமாகவுள்ள கஃப்றிங்ஹா ஆற்றுகையை முன்வைத்து இவ்வாய்வு நிகழ்த்தப்பட்டுள்ளது.

கஃப்றிங்ஹா (Kaffrinha)

கஃப்றிங்ஹா, கஃப்ரின்ஜா எனும் அழைப்பிலும் அறியப்படுகிறது. எனினும் 'கஃப்ரின்ஜா' என்பது 'கஃப்றிங்ஹா' என்பதன் டச்சு எழுத்துப்பிழையினால் நிகழ்ந்ததென்றும் சொல்லப்படுகின்றது (ஜெயசூர்யா, சிஹான் ரூ சில்வா 2000). இதேபோன்று கஃப்றிங்ஹா ஆற்றுகை தொடர்பாகச்

சொல்லும்போது 'பைலா' என அழைக்கும் சந்தர்ப்பங்களையும் கவனிக்கமுடிகிறது. இத்தகைய தொடர்புபடுத்தலுக்கான காரணங்கள் சொல்லப்படினும் இவ்விரு வடிவங்களும் தம்மளவில் தனித்துவம் மிக்கவை என்பதும் தெளிவான ஒன்றே.

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் போர்த்துக்கீசிய இசையியல் குறித்த முன்னோடி ஆராய்ச்சியாளர்களுள் ஒருவரான சி.எம். பெர்ணாண்டோ கூறுவதுபோல கஃப்ரிங்ஹா தனிச்சிறப்பு வாய்ந்த ஒரு ஆற்றுகை. இதன் தனித்துவம் என்பது ஒழுங்கற்ற தாளத்திற்கு ஒத்திசைந்திடும் நகர்வும் வேகமான உடல் அசைவும் ஆகும். இத்தகைய சிறப்புக் காரணமாகவே போர்த்துக்கீசியரினால் அறிமுகமான இவ்வடிவம் அவர்களைத் தொடர்ந்த காலனித்துவக் காலத்திலும் நிலைப்பெற்றது. இன்றுவரை அதன் தொடர்ச்சி நீண்டிருக்கிறது. உயிரோட்டமான ஆற்றல் மிக்க சமுதாய அரங்காக இருக்கும் நிலையிலேயே பறங்கியரது கொண்டாட்ட நிகழ்வுகளில் தவிர்க்கமுடியாத பகுதியாக இருந்துவருகிறது. இலங்கைப் பறங்கியரை அடையாளப்படுத்தும் அடையாள அரங்காக கஃப்ரிங்ஹா அறியப்பட்டிருக்கின்றது.

மரபுரிமைக் களமாக ஆற்றுகைகள்

போர்த்துக்கீசிய கலப்பு (portuguese creole) மொழியும், கத்தோலிக்க மதமும் (R.C) கிழக்கிலங்கைப் போத்துக்கீசியப் பறங்கியர் சமூகத்தின் முதன்மையான அடையாளங்களாகச் சொல்லப்படுபவை. இவற்றுடன் இச்சமூகத்தை அடையாளப்படுத்துவதில் அவர்களது இசை, நடன அரங்க ஆற்றுகைகளும் முதன்மை வகிக்கின்றன.

பறங்கியரல்லாத தமிழ், சிங்களச் சமூகத்தினரும் கத்தோலிக்க மதத்தினைப் பின்பற்றுகின்றனர். மேலும் போத்துக்கீசியக் கலப்பு மொழியாகிய, 'பறங்கி' அச்சமூகத்தினருக்கிடையிலான வீட்டுப் பயன்பாட்டு மொழியாகவே இருந்து வருகிறது. அயலிலிருக்கும் பெரும்பான்மைச் சமூகங்களுடன் உறவு கொள்ளலிலும், அச்சமூகங்களது மொழிச் செல்வாக்குக் காரணமாகவும் வெளித் தொடர்பாடலில் பறங்கி பயன்படுத்தப்படுவதாக இல்லை. இந்நிலையில் தமக்குள்ளும் பிற சமூகத்தினர் மத்தியிலும் பறங்கியரைத் தனித்துவப்படுத்துவதாக அவர்களது அரங்க ஆற்றுகைகள் விளங்குகின்றன என்பது குறிப்பிட்டுச்

சொல்லக்கூடியது. மேலும் இவ்வாற்றுகை அரங்குகளினூடாக வெளிப்படும் பாடல்கள் பறங்கியிலேயே அமைந்திருக்கின்றன. ஆற்றுகை, உடை, ஒப்பனை வடிவமைப்பு உள்ளிட்ட பலவும் பண்பாட்டு மரபு சார்ந்ததாக இருக்கின்றன.

அரங்க ஆற்றுகைகளுக்கான கட்டாய நடைமுறைகளாகச் சொல்லப்படுபவை அச்சமூகத்தின் பண்பாட்டு நடைமுறைகளைப் பயில்வில் வைத்திருப்பதற்கான திட்டமிட்ட ஏற்பாடுகளாக இருக்கின்றன. மறுபுறம் இப்பண்பாட்டுப் பயில்வில் அரங்கின் வகிபங்கைத் தெளிவுபடுத்துபவையாகவும் அவை அமைந்துவிடுகின்றன.

பறங்கியர் சமூகத்தினரே அவர்களது ஆற்றுகைகளில் ஆற்றுநராகப் பங்கெடுக்க முடியும் என்பது மேற்படி நியதிகளுள் ஒன்று.

பறங்கியர் சமூகக் கொண்டாட்ட நிகழ்வுகளில் கஃப்றிங்ஹா ஆற்றுகை தவிர்க்கமுடியாததாக இருப்பதோடு இதன் ஆற்றுநர்களாக இச்சமூகத்தினரே இருக்கின்றனர். பிற சமூகத்தினருடன் கலப்பு மணவுறவு கொண்ட பறங்கியர் ஒருவர் கொண்டாட்ட நிகழ்வுகளில் பங்கெடுக்க முடியும் எனினும் இசை, நடன ஆற்றுகைகளில் பங்கெடுக்க முடியாது என்பது நியதியாக இருக்கிறது. இதில், ஒரு விதிவிலக்கு இருப்பதும் இங்கு மிகுந்த கவனிப்பிற்குரியது.

'பறங்கியர் சமூக ஆம்பிளயல் மற்ற சமூகத்தில மாறிக்கட்டுனா ஆடலாம்; பொம்பிளயல் மாறிக் கட்டுனா அதுக்க வரவே ஏலாது' (செலர், நியூட்டன், மட்டக்களப்பு, அவுட்ஸ்கோன், ரவுட்ஸ்மன், டச்பார்).

இங்கு ஆண்களுக்கு விதிவிலக்களிப்பதற்கு ஒரு முக்கிய காரணம் இருக்கிறது. பறங்கியர் சமூக அடையாளங்களுள் ஒன்றாக அவர்களது குடும்பப் பெயரும் (surname) முக்கியமானது. இப்பெயரடையாளம் தந்தையின் பெயருடனேயே வருகிறது.

தந்தை பறங்கியராக இருக்கையில் அவரது பிள்ளையின் பெயர், தந்தையின் பெயருடன் அவர்களது குடும்பப் பெயரும் சேர்ந்ததாகவே இருக்கிறது. பறங்கியர் சமூக ஆண் வேறு சமூகத்துப் பெண்ணை மணமுடித்தாலும் அவர்களது பிள்ளையின்

பெயர்வழி பறங்கியர் சமூக அடையாளம் தொடர்ந்து வந்துவிடுகிறது. சமூக அடையாளமும், சமூகத்தினர் எண்ணிக்கையும் இதனால் இழக்கப்படவில்லை என்பது கவனத்திற்குரியது.

எனினும் பறங்கியர் சமூகப்பெண் ஒருவர் வேறொரு சமூகத்து ஆணை மணம் முடிக்கையில் இந்நிலைமை வேறொன்றாக அமைந்துவிடுகிறது. எடுத்துக்காட்டாக தமிழ்ச் சமூகத்து ஆண் ஒருவரைத் திருமணம் செய்கையில் அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைக்குத் தந்தையின் பெயர் (தமிழ்ப் பெயர்) மட்டும் முதல் எழுத்தாக அல்லது முதற் பெயராக வைக்கப்படுகிறது. இப்பெயர் அடையாளத்தில் பறங்கிப் பெண்ணின் அடையாளம், அவர் வழியான வாரிசுகளது அடையாளம் இல்லாமல் போய்விடுகிறது. இதன் காரணமாகவே ஆண் கலப்பு மணம் அல்லது புறமணம் கொண்டாலும்கூட பறங்கிப் பெண் கொள்வது விரும்பப்படுவதில்லை.

இதனை நடைமுறையாக்கும் பொருட்டே பறங்கியர் சமூகக் கொண்டாட்ட நிகழ்வுகளின், அரங்க ஆற்றுகைகளில் மேற்படி நியதியை மீறி மணவுறவு கொள்ளும் பெண்கள் பங்கெடுக்க அனுமதிக்கப்படுவதில்லை. இத்தகைய மணமுறைகளை விரும்பாமைக்கும் கொண்டாட்ட ஆற்றுகைகளில் பங்கெடுப்பதில்தடை விதிக்கப்படுவதற்கும் மேலும் சில நுட்பமான பண்பாட்டு நோக்குகள் இருப்பதையும் அறியமுடிகிறது.

'இப்ப மிக்ஸ் மேரேச்சுக்கள் நடக்குறதால இரண்டு கொமுயுனிற்றி ஆகுது. தமிழாக்கள முடிச்சா தமிழ்க் கொமுயுனிற்றி வந்திடுவாங்க. அப்ப தமிழிலதான் கதைக்க வேண்டிவரும். தமிழிலதான் கூடுதலாக் கதைப்பாங்க. ஏனெண்டா இரண்டு தரப்பினருக்கும் தெரிஞ்ச மொழியாத் தமிழ் இருக்குது. இப்ப மட்டக்களப்ப எடுத்துக்கொண்டா தமிழாக்கள்தான் அதிகம். அப்ப, அடுத்த ஜெனரேஷனுக்கு நம்மட மொழியப் பேசுறது குறையுது' (புளொயிட், பாலையூற்று, திருகோணமலை).

இதன்பொருட்டே பறங்கியர் சமூகத்து திருமணம் முதலான பொது நிகழ்வுகளில் பறங்கியை மட்டுமே பேசவேண்டும் என்ற எழுதப்படாத நியதி கடைப்பிடிக்கப்படுகிறது. இன்றைய சூழலில் இந்நடைமுறையில் தளர்வுகள் இருப்பினும் இம்மரபு

கடைப்பிடிக்கப்பட்டே வருகிறது. போர்த்துக்கீசியக் கலப்பு மொழியிலேயே கஃப்றிங்ஹா பாடல்கள் பாடப்படுகின்றன. ஆற்றுகைக்கான மற்றுமொரு நியதியையும் இங்கு நோக்கலாம்.

ஆற்றுகைக்கான உடையாகப் பறங்கியர் சமூகப் பண்பாட்டு உடையே இருக்க வேண்டும் என்பது அந்நியதியாகும்.

பெண்கள் நீளமான சட்டையும், ஆண்கள் முழுநீளக் காற்சட்டை, மேற்சட்டை, கழுத்துப்பட்டி, மேலங்கி என்பவற்றை அணிவது கட்டாயமானதாக இருக்கிறது. இந்த ஆடைகளே திருமணம் முதலான கொண்டாட்ட நிகழ்விற்கான பறங்கியரது பாரம்பரிய உடையாகவும் இருக்கிறது. இம்மரபை வலியுறுத்தும், ஊக்குவிக்கும் நடைமுறையாகவே அவர்களது பாரம்பரிய உடை, ஒப்பனையே அரங்க ஆற்றுகைகளுக்கானதாகவும் அமைந்திருக்கின்றன. மற்றொரு வகையில் சொல்வதாயின், அரங்கும் மரபார்ந்த வழக்காறுகளில் ஒன்றாகவே இருக்கிறது.

ஆற்றுகையில் பங்கெடுக்க மேற்படி மரபார்ந்த உடை அவசியம் என்பதையும், இல்லாதபோது அவர்கள் பங்கெடுக்க விரும்பினும் அனுமதிக்கப்படுவதில்லை. விதிவிலக்காக பெண்கள் தொப்பி இல்லாமலும், ஆண்கள் மேலங்கி இல்லாத நிலையிலும் ஆற்றுகையில் பங்கெடுக்கும் சந்தர்ப்பங்களும் வழங்கப்படுகிறது. எனினும் இவ்வனுமதியை இசைக்குழுவிடம் ஆற்றுகைக்கு முன்பாகக் கேட்டுப் பெற்றேயாக வேண்டியிருக்கிறது. இது மரபை வழிநடத்துபவர்களாக, நிகழ்வை ஒருங்கிணைப்பவர்களாகக் கலைஞர்கள் இருப்பதன் வெளிப்பாடாக இருக்கிறது எனலாம்.

இதைவிட, ஆற்றுகையின்போது ஆட்டக் கலைஞர்கள் முறையாக ஆடாது, ஆட்டத்தில் தவறுவிட்டால் அதற்கான தண்டனையாக, அவர்களிடமிருந்து தவறுக்கான பதிலிருப்பை இசைக்குழுவிற்கு வழங்கவேண்டியிருக்கிறது. உரிய பைலா முடிவுற்றதும் அல்லது ஆற்றுகையின் இடைவேளையின்போது ஆட்டத்தில் விடப்பட்ட பிழை சுட்டப்படுகிறது. இசைக்குழுவிலுள்ள ஓரிருவர் ஆட்டவெளியில் (அரங்கில்) துணி ஒன்றை விரித்து தமது இசைக்கருவியினை அதன்மேல் வைத்து பிழைகுறித்த தமது எதிர்ப்பைத் தெரிவிப்பர். பிழையைச் சுட்டிக்காட்டி அதற்கான பதிலிறுப்பைக் கோருவர். ஆட்டக்கலைஞர் அது தவறு குறித்து உரையாடி, விவாதித்துப் பின்

ஏற்றுக்கொள்வர். விவாதமானது பறங்கி மொழியிலேயே நடைபெறுகிறது. பின்னர் தவறை ஏற்றுக்கொண்டதன் குறியீடாகவும், இசைக்குழுவிடம் ஆற்றுகையைத் தொடர்ந்து நடத்தக்கோரியும் அவர்களுக்குப் பதிலிறுப்புக்கள் வழங்கப்படுகின்றன. கீழே வைக்கப்பட்ட வாத்தியக்கருவிகளை எடுத்துக்கொடுத்து நிகழ்வைத் தொடரக் கேட்டுக்கொள்வர். இதனை ஆட்டக்கலைஞராகவும் நிகழ்வின் ஏற்பாட்டாளராகவும் இருப்பவரே முன்னின்று நிறைவேற்றுகிறார். இசைக்குழுவினரும் ஆற்றுகையைத் தொடர்ந்து நடத்துவர். பதிலிறுப்பாக சாராயம், மது வகைகளே கேட்கப்படுகின்றன.

இங்குத் தவறும் தண்டனையும் கொண்டாட்டத்துக்குரியதாக இருக்கிறது. ஒருவகையில் இது ஆரவாரத்தைத் தூண்டும் சமூக நாடகமாக அரங்கேறுகிறது. இத்தகைய சந்தர்ப்பங்களை எதிர்பார்த்தபடி தாம் இருப்போம் எனக்கூறும் இளம் வயலின் கலைஞர் ரவுட்ஸ்மென் அவுட்ஸ்கோன், 'பிழைவிட்டால் ஆடுறவங்க அவங்களாகவே நம்மளப் பார்ப்பாங்க' என்று சொல்லிச் சிரிக்கிறார்.

இதேவேளை புதிய ஜோடிகள் ஆடும்போது விடக்கூடிய சிறிய தவறுகளை சூழ்ந்திருந்து பார்த்துக்கொண்டிருக்கும் உறவினர்கள் குறிப்பாக முதியவர்கள் திருத்திவிடுகின்றனர். பிழைகளைக் கண்ணுற்று கிண்டலடிப்போரும், உற்சாகப்படுத்துவோருமாக அருகே பார்ப்போர் சூழ்ந்திருக்கின்றனர். முதன்முதலில் ஆடுவோரும் பலமுறை ஆடியோரும் ஒரே குழுவில் ஆடுவதுண்டு; சிறியவர் முதியவர் சேர்ந்தாடுவதும் உண்டு. இந்த ஆட்ட அரங்கிற்கென பிரத்தியேகமான முற்கூட்டிய பயிற்சிகள் இல்லை என்பதையும் இவ்வாற்றுகைக் களங்களே பயில்வுக்களங்கள் என்பதையும் இங்குக் கவனத்திற்கொள்ள வேண்டியிருக்கின்றது. இது சமுதாய அரங்கின் தனித்துவமான பண்புகளுள் ஒன்றாகும். எவ்வாறாயினும் ஆற்றுகை நேர்த்தியானதாகவே நிகழ்ந்தேறுகிறது.

பார்ப்போராக இருப்போரும் இசைக்குழுவோடு சேர்ந்து பாட முற்படுவதுண்டு. இங்குப் பிறர் பாடப்பாடக் கேட்டுப் பாடுவது, பாடுபவரோடு உடன் சேர்ந்து பாடுவது என்பவையோடு உடனே பாடல்களைக் கட்டிப்பாடும் சந்தர்ப்பங்களும் உண்டு.

கட்டிப்பாடுவதென்பது பெரும்பாலும் நகைச்சுவையும் கிண்டல்களும் மிக்கதாக இருக்கின்றது. மேலும் உடன் கட்டிப்பாடுவதென்பது பாடுவதும், கட்டுவதும் (கட்டிப்பாடுவதும்) ஒரே சமயத்தில் நடைபெறுவது. இதற்கு மொழியறிவும், இசையறிவும் உடனமைந்து செல்லும் ஆக்கத்திறனும் அவசியமெனக் கண்டோம். இவற்றுக்கான வாய்ப்பையும் மரபு வளத்தையும் இந்த ஆற்றுகைக் களங்கள் வழங்குகின்றன. மரபு அறிவே மரபு உரிமையாகும் நிலையில் பண்பாட்டு மரபுரிமைக்கான களங்களாக இயங்கும்; மரபுரிமைகளுள் ஒன்றாக இவ்வரங்க ஆற்றுகைகள் அமைந்துவிடுகின்றன.

பண்பாட்டு நிகழ்த்துகையாக கஃப்றிங்ஹா ஆற்றுகையைப் புரிந்துகொள்வதற்கான மற்றுமொரு தக்க எடுத்துக்காட்டாக இருப்பது ஆட்டக்கலைஞர்களாகப் பங்கெடுப்போர் யார் யார் என்பதாகும்.

முன்பகுதியில் குறிப்பிட்டபடி பறங்கியரே ஆற்றுநராகப் பங்கெடுக்க முடியும். இதேவேளை முதல் ஆற்றுகையில் (first baila) யார் யார் ஜோடி சேர்ந்து ஆடவேண்டும், என்னென்ன ஆட்டக்கோலங்கள், இசை, பாடல் எவை எவையென திட்டமிட்ட நியதியிலேயே நடைபெறுகின்றன.

கலியாணக் கொண்டாட்டத்து ஆற்றுகை எனில் முதல் பைலாவில் பின்வரும் நாலு ஜோடிகளே ஆட்டக்கலைஞர்களாகப் பங்கெடுப்பது மரபு.

மணமகன் + மணமகள்

மாப்பிள்ளைத் தோழன் + மணமகள் தோழி

மணமகன் அப்பா + மணமகன் அம்மா

மணமகள் அப்பா + மணமகள் அம்மா

அடுத்துவரும் பைலாக்களில் அதாவது ஆட்டங்களில் மாப்பிள்ளை, மணமகள் தத்தியினர் (தரப்பினர்) நான்கு, எட்டு என ஜோடிகளாக இணைந்து பங்கெடுக்கின்றனர். இரு தரப்பினரது இணைவின் பிரதிபலிப்பாகவும், இணைவின் குறியீடாகவும், இணைவிற்கான ஏற்பாடாகவும் இது இருக்கின்றது. மரபுரிமைக் களமாக அரங்கின் இயங்குதலைப் புரிவதற்கான தக்க எடுத்துக்காட்டாகவும் இதனை விளங்கிக்கொள்ள முடிகிறது.

இத்தகைய சடங்குக் கொண்டாட்டங்களில் ஆற்றுகைக் கலைஞர் குழுவிற்கு வழங்கப்படும் அங்கீகாரம் பண்பாட்டுப் பயில்வில் அரங்கின் வகிபங்கையும் தெளிவுபடுத்துகிறது. திருமணத்தின் பின்னரான கொண்டாட்டக் கூடல்களில் நிகழ்த்தப்படும் ஆற்றுகைகளின்போது மட்டுமன்றி, திருமணச் சடங்கின் ஒவ்வொரு படிநிலைகளிலும் இசைக்கலைஞர்களது இணைப்பாக்கம் அவசியமாயிருக்கின்றது.

மேலும் நிகழ்வின் ஏற்பாட்டாளரும் (organizer) ஆற்றுநராகப் பங்கெடுப்பது என்பது இவ்வரங்குகளின் தனித்துவமான பண்பாக இருக்கின்றது. உதாரணமாக சாமத்தியச் சடங்கு விழாவினை ஏற்பாடு செய்யும் பூப்பெய்திய குறித்த பெண் பிள்ளையின் தந்தை, கஃப்றிங்ஹா நடன ஆற்றுகையில் மகளுடன் சேர்ந்து முதல் ஜோடியாக நடனமாடுகிறார். உறவினர்கள் உடன் சேர்ந்து ஆடிப்பாடி தமது மகிழ்வையும், சமூகமாகத் தமது இணைப்பையும் உயிர்ப்பிக்கிறார்கள்.

அமைதியாக ஆரம்பமாகும் நிகழ்வு மெது மெதுவாக உருவேறுகிறது. ஆட்கள் சேரச் சேர அந்த இடமும் ஆரவாரம் மிக்க கூட்டுக் கொண்டாட்ட வெளியாகி முழுவதுமே தளமாற்றமடைகின்றது. ஆடல், பாடல், ஆர்ப்பரிப்புக் கூச்சல்கள், உணவு, உற்சாகபானம் (மது) மற்றும் எல்லாம் இணைந்து ஒரு சமூகக் களியாட்ட வெளியாகத் தெரிகிறது. திறந்தநிலை ஆற்றுகைகளாக இவை தொடர்கின்றன. சமூகம் கூடி மகிழ்ந்து புத்துயிர்ப்புறும் விழாவாக இது அரங்கேறுகிறது.

இக்கூட்டிணைவும் கொண்டாட்டமும் சமூகமாக தமது இயக்கத்தையும் இருப்பையும் நிலைப்படுத்துவது. இந்நிலையிலே பறங்கியர் சமூக அரங்க ஆற்றுகைகள் அவர்களது மரபுரிமைக்கான களமாக இயங்குவது வெளிப்படையாகின்றது.

உள்ளூரில் மட்டுமன்றி, நாடு கடந்து தமது பூர்வீகத் தொடர்புகளை இணைப்புச்செய்யும் வாய்ப்பினை இவ்வாற்றுகைகள் வழங்கியிருக்கின்றமையும் இங்கு குறிப்பிட வேண்டியது. 'Burgher Union' பறங்கியர் சார்பில் சமூகக் கலைஞர்கள் சிலர் போர்த்துக்கல் (Portugal) நாட்டில் நடைபெற்ற கலைத் திருவிழாவில் (2019) பங்கெடுத்துள்ளார்கள் (பாத்தலோட், ஏழ்., வாழைச்சேனை); இது இலங்கைப் பறங்கியர் சமூகத்தினை

உலகளவில் அறிமுகப்படுத்துவதோடு, தலைமுறைகள் கடந்து சமூக வரலாற்றுத் தொடர்பை அறியப்படுத்தும் ஊடகமாக ஆற்றுகைகளின் இயக்கத்தினையும் தெளிவாக்குகின்றது.

முடிவுரை

கூட்டான சமூகப் பங்கேற்பிலும் அப்பங்கேற்பிற்குக் களம் அமைத்துக்கொடுக்கும் நிலையிலும் பறங்கியர் சமூக ஆற்றுகைகள் மரபுரிமைக் களமாகச் செயற்படுகின்றன.

ஆற்றுகைக்கான நியதிகள் பண்பாட்டு மரபுரிமைகளைப் பயிலும் உத்திகளாகவும் அமைந்திருக்கின்றன.

பெருஞ்சமூகப் பண்பாட்டு மேலாண்மைகளுக்குள் கிழக்கிலங்கை போர்த்துக்கீசியப் பறங்கியர் சமூகத்தின் பண்பாட்டு மரபுரிமைகளை நிலைபெறச் செய்யும் இச்சமூக ஆற்றுகைகள் ஒருநிலையில் பண்பாட்டு மரபுரிமைகளாகவும் அடையாளங்கொள்கின்றன.

சான்றாதாரங்கள்

பக்தவத்சல பாரதி. (2019) (2002). தமிழர் மானிடவியல். புத்தாநத்தம்: அடையாளம்.

பரமசிவன், தொ. (2019). மஞ்சள் மகிமை. நாகர்கோவில்: காலச்சுவடு.

விக்டர், ஞானபாரதி. (2016). பறங்கியர் சமூகமும் லான்சஸ் நடனமும் - மட்டக்களப்பு நகரை மையப்படுத்திய ஆய்வு. இளங்கலைமானிப்பட்ட ஆய்வேடு. சுவாமி விபுலாநந்த அழகியற் கற்றைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை. மட்டக்களப்பு.

வெற்றபிறவுன், நேல்சன் றேகன். (2012). மட்டக்களப்பு பறங்கியர் சமூகச் சடங்குகள். களப்பு. கார்த்திகை 2012: 29-31. (தொ.ர்). த. மலர்ச்செல்வன். மாவட்ட செயலகப் பண்பாட்டுப் பிரிவு,மாவட்ட செயலகம், மட்டக்களப்பு.

Barthelot, Earl. (2017). The Portuguese Burghers of Sri Lanka. Eds. S. Pathmanathan and Malani Endagama, In People of Sri Lanka (pp.197-212). Colombo: Ministry of National Coexistence, Dialogue and Official Languages, Government of Sri Lanka.

Douglas, Mary. (1966). Purity and Danger: An Analysis of the Concepts of Pollution and Taboo. New York: Routledge & Kugan Paul Ltd.

Jayasuriya, Shehan De Silva. 2000. The Portuguese Cultural Imprint on Sri Lanka. Lusotopie, 7.1: 253-259.

McGilvray, Dennis. 1982 .Dutch Burghers and Portuguese mechanics: Eurasian ethnicity in SriLanka. Comparative Studies in Society and History. 235-263.

அவுட்ஸ்கோன், ரவுட்ஸ்மன்., கஃப்ரிங்ஹா கலைஞர், வயது 21, டச்பார், கல்லடி.. 18.02.2019 & 14.01.2020.

நியூட்டன், செலர்., பறங்கியர், கஃப்ரிங்ஹா கலைஞர், வயது 72, மட்டக்களப்பு, 21.02.2019 & 08.01.2019.

பாத்தலோட், ஏழ்., பறங்கியர், கணினி பிரயோக உதவியாளர் (சிகிகி)), வயது 45, வாழைச்சேனை. 12.06.2018, 21.02.2019. & 07.01.2020.

பாத்தலோட், புளொயிட்., பறங்கியர், வங்கி உதவியாளர், வயது 51, பாலையூற்று, திருகோணமலை, 05.01.2020.

பிளெமிங் கிளிப்டன், செலர்., பறங்கியர், கஃபிரிங்ஹா கலைஞர். வயது 27, சம்மாந்துறை, 21.02.2019 & 14 - 15.01.2020.

ஸ்ரெபா, புளொய்ட்., பறங்கியர், வயது 47, பாலையூற்று, திருகோணமலை. 05.01.2020.

33

மலையகத்தில் வீதி நாடகக் கலை - ஒரு விமர்சன ஆய்வு

ஜெப்ரி தங்கராஜ்
உதவி விரிவுரையாளர், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்,
இலங்கை. jeffrykritheesh97@gmail.com

அறிமுகம்

நாடகம், ஒருவரோ அன்றிப் பலரோ மேடையில் தோன்றித் தம் நடிப்பாலும் உரையாடல்களாலும் ஒரு நிகழ்ச்சியையோ அல்லது கதையையோ காண்போருக்குக் காட்டுவதாகும். இத்தகைய நாடகத்தின் வளர்ச்சிநிலை பல்மரிமாணம் கொண்டது. அவற்றுள் நவீன நாடக அரங்கின் தோற்றம், தமிழ் நாடக வளர்ச்சியில் முக்கியம் பெறுகிறது. நவீன நாடக அரங்குகளின் தோற்றத்துடன் மக்களை நேரடியாக நாடகங்களுடன் இணைக்கும் போக்கும் உருவாகத் தொடங்கியது. மக்கள் நாடகங்களைப் பார்வையிட அரங்குகளுக்குச் செல்வதை மாற்றி, மக்களை நோக்கி நாடகங்களே வருகை தந்து ஆற்றுகை நிகழ்த்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. அவ்வரங்கச் செயற்பாடுகளில் வீதி நாடகங்கள் முக்கிய இடத்தினைப் பெறுகின்றன (சிவத்தம்பி,கா., திலகநாதன்,க., மௌனகுரு,சி., 1999). இக்கூற்று மலையக நாடக ஆக்க முறைமைகளுக்கும் பொருந்தும்.

தென்னிந்தியாவிலிருந்து பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் நிமித்தம் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டு, பல்வேறு பகுதிகளில் குடியேற்றப்பட்ட மக்கள் இன்று மலையகத்தவர் என்ற அடையாளத்துடன் வாழ்ந்துவருகின்றனர். அம்மலையகத் தமிழர்களின் சமூக அரசியல் அசைவியக்கங்களைப் பேசுவதற்கும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் முக்கியமான அரங்காக இவ்வீதி நாடகங்கள் விளங்குகின்றன. இருபத்தோராம் நூற்றாண்டு நவகாலனித்துவ யுகமாக இன்றளவும் நகர்ந்து கொண்டிருக்க பல்தேசிய கம்பனிகளின் ஊடுருவல், அவற்றால் மலையக சமுதாயத்தில் ஏற்பட்ட சமூக, பொருளாதார, பண்பாட்டு

மாற்றங்கள் மலையக வீதிநாடக ஆக்கத்தில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தின.

இந்நிலையில், 2000ஆம் ஆண்டிற்குப் பின்னர் மலையகத்தில் தத்துவார்த்தத் தளத்தில் இயங்கிவரும் தனிநபர்கள், அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், கலை இலக்கிய அமைப்புக்கள் போன்றன வெவ்வேறான வகையில் வீதிநாடகங்களை நடாத்துவதனைக் காணக்கூடியதாய் உள்ளது. அவ்வாறு ஆற்றுகை செய்யப்பட்ட வீதிநாடகங்களில், தெரிவுசெய்யப்பட்ட சிலவற்றை அடிப்படையாகக் கொண்டு, அவற்றின் பிரதிகளையும் ஆற்றுகைகளையும் அவதானித்து, அவை எடுத்துக்கொண்ட சமுதாயப் பிரச்சினைகள் என்ன என்பதனையும் அவற்றை அவை எவ்வாறு பேசியுள்ளன என்பதனையும் விரிவாக ஆய்வதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

ஆய்வு முறையியல்

மலையக வீதிநாடகப் புலம் சார்ந்து எழுந்துள்ள ஆய்வுகள், மலையக நாடக வரலாற்றை ஆவணப்படுத்தும் ஆய்வுகளில் பொதுநிலைத் தளத்திலும், நாடக ஆளுமைகள் அவர்தம் வரலாற்றைப் பதிவுசெய்யும் நூல்களில் குறிப்புகளாகவும், மலையகத்தில் வீதி நாடகங்களை மேற்கொண்ட அரங்கச் செயற்பாட்டாளர்களின் அனுபவப்பகிர்வுகளாகவும், வீதி நாடகங்களைப் பற்றிய பொதுவான விமர்சனப் பதிவுகளாகவும், பத்திரிகைச் செய்திகளாகவுமே வெளிவந்திருக்கின்றன.

இவற்றைக் கடந்து இருபத்தோராம் நூற்றாண்டில் மலையகத்தில் பல்வேறு அமைப்புகளினாலும், நாடகக் கலைஞர்களாலும் தயாரிக்கப்பட்ட வீதிநாடகங்களின் பிரதிகளையும் ஆற்றுகைகளையும் முதன்மை ஆதாரங்களாகக் கொண்டு அவை பேசும் மலையக மக்கட் சமூகத்தையும் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் பற்றிய ஆழ்ந்த விரிவான ஆய்வுகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இதனை ஆய்வு இடைவெளியாகக் கொண்டு, 2000ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு வரையில் மலையகப் பகைப்புலத்தில் எழுந்த, இலங்கையில் பல இடங்களில் ஆற்றுகை செய்யப்பட்ட, ரா. கவிஷானின் விட்டில் பூச்சி, தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் சிவ. ராஜேந்திரன் எழுதி இயக்கிய ஜெகன்நாதன்

வருகிறார், களரி அரங்க நிதியம் மு. காளிதாஸின் பஞ்ச சாமுராய், வெளிநாட்டுப் பெண், கந்தலோயா பாடசாலை மாணவர் ர.கஜன் எழுதி இயக்கிய இந்தப் பாதையில் செல்வோம் ஆகிய வீதிநாடகங்களை ஆய்வு எல்லையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பண்புசார் ஆய்வாக அமைந்துள்ள இவ்வாய்வு பிரதானமாக கள ஆய்வு மூலம் கிடைக்கப்பெற்ற தகவல்கள் மற்றும் வீதி நாடகப் பிரதிகள் போன்றவற்றை முதன்மை ஆதாரங்களாகக் கொண்டே மேற்கொள்ளப்பட்டுள்ளது. கள ஆய்வில், குறிப்பாக நாடக ஆசிரியர்கள், இயக்குனர்கள், நடிகர்கள், பார்வையாளர்களுடனான நேர்காணல் மூலம் கிடைக்கப்பெற்ற தகவல்களைப் பகுப்பாய்வு செய்வதற்காகப் பகுப்பாய்வு அணுகுமுறையையும், நாடகப்பிரதிகளின் உள்ளடக்கங்கள் பேசும் விடயங்களை விளக்குவதற்காக விளக்கமுறை அணுகுமுறையும், இந்நாடகங்கள் பேசும் மலையக சமுதாயப் பிரச்சினைகளை கண்டறிந்து ஆராய்வதற்கு சமுதாயவியல் அணுகுமுறையையும் கைக்கொண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

நாடகங்களின் பேசுபொருள்

மலையகத் தமிழரின் கலை இலக்கியங்கள் பெரும்பாலும் அவை தோன்றுகின்ற பகைப்புலத்தையும், தோன்றும் காலப்பின்னணிசார்ந்த சமூகப் பிரச்சினைகளையும் பிரதான பேசுபொருளாகக் கொண்டமைவது இயல்பானதே. 'மலையகம் எனும் சொல்லின் வரையறையுடன் தொடங்கிய 60களில் மலையக மக்களின் இருப்பு நோக்கிய இலக்கியங்கள் படைக்கப்பட்டன. நாடகங்கள் மேடை நாடக வடிவில் இடதுசாரி, திராவிட இயக்க கருத்துக்களைப் பிரதிபலித்தன. 70களில் மலையகத் தொழிற்சங்கத் தலைமைகளை விமர்சிக்கும் நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. 80களில் மலையக மக்கள் அன்றாடம் படும் வேதனைகளை முன்வைத்து நாடகங்கள் நடிக்கப்பட்டன. 90களில் தேசிய தன்னடையாளங்களை நோக்கிய மேடைநாடகங்கள் அரங்கேற்றப்பட்டன' (சற்குருநாதன்.ஜெ, 2002). இருபத்தோராம் நூற்றாண்டில் வீதியேற்றப்பட்ட நாடகங்களை நோக்குமிடத்து அவை பெரும்பாலும் மலையகத் தமிழர் இதுவரை காலமும் எதிர்கொண்ட பிரச்சினைகளைப் பேசுவதுடன் அவற்றைத் தாண்டிய சமகால சமூக அரசியல் விடயங்களையும் பிரச்சினைகளையும் பேசுபொருளாகக் கொண்டுள்ளன.

தொழிலாளர் பிரச்சினைகள்

ஆரம்ப காலங்களில் மலையகத் தமிழர்களின் பிரதான சீவனோபாயமாக இருந்தவை பெருந்தோட்டத் துறை சார்ந்த தொழில்களேயாகும். தோட்டங்கள் தனியார்மயமாதல், நகரமயமாக்கம் இவற்றுடன் பெருந்தோட்டத் தொழிற் துறையில் ஏற்பட்ட சரிவுகள் காரணமாக மலையகத் தமிழர்கள், குறிப்பாக இளைஞர்கள் தலைநகரத்தை மையப்படுத்திய தொழில்களைப் புரிவதற்காக உள்நாட்டிலேயே புலம்பெயர்ந்தனர். இவற்றோடு உயர்கல்வியின் பின்னர் அரசாங்க, தனியார் தொழிற்துறைகளிலும் சிலர் இயங்கினர். இந்நாடகங்களைப் பொறுத்தவரையில் இருவிதமான தொழிலார்களது பிரச்சினைகள் அதிகளவில் பேசுபொருளாக உள்ளமை அதானிக்கப்பட்டுள்ளது. முதலாவது, இன்றளவும் பெருந்தோட்டத் துறையில் வேலைசெய்யும் தொழிலாளர்கள், இரண்டாவது தலைநகரத்தை மையப்படுத்திய தொழில்களில் ஈடுபடுபவர்களாவர். இவ்விரு தொழிலாளர் சமூகங்களினதும் பிரதான பிரச்சினைகளாக இருப்பவை வேலைக்கேற்ற வேதனம் கிடைக்காமை, முதலாளித்து சுரண்டல், மனித உரிமை மீறல்கள் என்பனவாகும். இவற்றில் வேதனப் பிரச்சினை, முதலாளித்துவ சுரன்டல் போன்றவற்றை பஞ்ச சாமுராய் நாடகத்தின் உரையாடல் பின்வருமாறு பதிவுசெய்கின்றது:

மேனகா : ஒரு நாள் அப்பா காசு கேட்டு கோல் பன்னியிருந்தார் நானும் காசு கேட்டே மாத்தயா அபே தாத்தா கோல் கலா, தாத்தாட சல்லி ஓனேலு.. மகே படிய தென்ன நோனாத்தெக்க தெபெல் கந்தோருவட்ட கிஹில்லா எவன்னாங்

மஹத்தயா: நோனாட கதா கரன்ன (மேனகா உள்ளே சென்று எஜமானியுடன் வருகின்றாள்)

நோனா : எய் மொக்கத

மஹத்தயா: மெயாட படி (சம்பளம்) ஓனேலு

நோனா : சல்லி.... உனக்குப் போன மாசம் சல்லி கொடுத்தது தானே இப்ப என்ன சல்லி

உரிமை மீறல்களின் காலாந்தரத் தொடர்ச்சியினை ஜெகன்நாதன் வருகிறார் என்ற வீதி நாடகத்தில் வரும் ஒரு வசனம் பின்வருமாறு பதிவுசெய்கின்றது:

நடிகர் 2 : நேரம் இல்ல... நேரம் இல்ல... நேரம் இல்ல இன்னக்கி 150 வருசத்துக்கு முன்னர் தொழிலாளிங்க தமது உரிமைக்காகப் போராடுனாங்க. தலைவர்கள் எட்டு மணி நேர வேலைக்காகப் போராடி தூக்குக்கும் போனாங்க. ஆனால் இன்னக்கி 12 மணித்தியாலம் வேல செய்யுறோம் வருத்தம் வந்து சாகுறோம்.

இவ்வாறாக தொழிலாளர்கள் சார்ந்த பிரச்சினைகள் பொதுவாகவே எல்லா வீதி நாடகப்பிரதிகளிலும் இழையோடுகின்றன.

பெண்கள் சார்ந்த பிரச்சினைகள்

சமூகத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான அடக்குமுறைகளும் துஷ்பிரயோகங்களும் காலாதி காலமாக நிகழ்ந்தவண்ணமே இருக்கின்றன. அவற்றின் பண்புகளும் பரிமாணங்களும் மட்டுமே மாற்றமடைந்துள்ளன. மலையகத் தமிழர் சமூகத்துப் பெண்களை எடுத்துநோக்குமிடத்து, அச்சமூகத்தின் மேல்நிலையாக்கத்திற்கு அவர்களின் பங்கும் பணியும் கனதியானது. எனைய தமிழ்ச் சமுதாயத்துப் பெண்களைக்காட்டிலும் அவர்களுக்கான பிரச்சினைகள் தனித்துவமானவை. ஆணாதிக்கம் தாண்டி, வர்க்க ரீதியாகவும் ஒருவித இரட்டை அடக்குமுறைக்கு அவர்கள் உள்ளாவதினைக் காணக்கூடியதாகவுள்ளது. இதனைத் தெரிவுசெய்யப்பட்ட வீதி நாடகப் பிரதிகள் வெளிப்படுத்துகின்றன. அவற்றைத் தொகுத்து நோக்குமிடத்து உள்நாட்டில் எதிர்கொள்ளும் சவால்கள், மத்திய கிழக்கு நாடுகளில் எதிர்கொள்ளும் சவால்கள் என்று இரண்டு தளங்களில் பார்க்க இயலும்.

உள்நாட்டில் எதிர்கொள்ளும் சவால்கள் :

மலையகப் பெண்கள் ஒரு நாளின் அதிகமான நேரத்தினை வேலைக்களங்களிலேயே செலவிடுகின்றனர். இச்சந்தர்ப்பங்களில் அவர்கள் தொழில், உரிமை மற்றும் பாலியல் ரீதியாக சுரண்டப்படுகின்றனர். இதனை விட்டில் பூச்சிகள் என்ற வீதி நாடகம் பின்வருமாறு பதிவுசெய்கின்றது:

'வழமை போல் துரை வந்ததும் கங்காணி வளைந்து நெளிகிறான். துரை ராசாத்தியின் கையை காட்டி ஏதோ பேச

கங்காணி அனைவரையும் அங்கு போ... அங்கு போ... என விரட்டுகிறான். ராசாத்தி மட்டும் தனியாக நிற்க அருகில் வந்த துரை பலாத்காரம் செய்கிறான்.'

மத்திய கிழக்கு நாடுகளில் எதிர்கொள்ளும் சவால்கள் : இரண்டாயிரமாம் (கி.பி. 2000) ஆண்டுக்குப் பிறகு மலையகத்திலிருந்து ஏராளமான பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப் பணிப்பெண்களாக செல்லத்தொடங்கினர். தோட்டங்கள் தனியார்மயப்படுத்தப்படல், வாழ்க்கைச்செலவின் அதிகரிப்பு உள்ளிட்ட பல சமூக பொருளாதார காரணிகள் இந்நிலைக்குச் செல்வாக்குச் செலுத்தின. தம்மையும் தம் சார்ந்த குடும்பத்தையும் பொருளாதார ரீதியில் ஸ்தீரப்படுத்திக்கொள்ளும் பொருட்டே இவர்கள் சொந்த நாட்டைவிட்டு பொருளீட்டப் புலம்பெயர்ந்தனர். ஆனால், இந்த நோக்கம் நிறைவேறாமையினையை அதிகமாக காணக்கூடியதாய் உள்ளது. உழைக்கச் சென்ற இடத்தில் அதிக வேலைப்பளு, பாலியல் கொடுமைகள், குறைந்த சம்பளம் போன்ற துன்பங்களை இப்பெண்கள் சந்திக்கின்றனர். இந்த நிலையினை வெளிநாட்டுப்பெண் என்ற வீதி நாடகம் அப்பட்டமாகப் பேசுகின்றது.

மூன்று பெண்பிள்ளைகள், ஒரு ஆண்பிள்ளையும் கொண்ட குடும்பமொன்றின் தாயாக வரும் வள்ளி என்ற குடும்பத்தலைவி மத்திய கிழக்கு நாடு நோக்கிப் பயணமாகின்றாள். அங்கு சென்றது முதற்கொண்டு அவள் சொல்லொணாத் துன்பங்களில் பாதிக்கப்படுவதினை நாடகம் காட்டி நிற்கின்றது. அதிக வேலையால் அவதிப்படும் அவளுக்கான உணவு வேதனம் என்பன முறையற்றவிதத்திலேயே கிடைக்கின்றது. அவற்றை சகித்துக்கொண்டு குடும்ப நிலைக்காக உழைக்கும் அவளுக்கு வீட்டு எஜமானால் ஏற்படும் பாலியல் கொடுமைகளையும், அடித்துத் துன்புறுத்தப்படல் சூடு வைத்தல் போன்ற இன்னபிற கொடுமைகளையும் இந்நாடகம் பதிவு செய்கின்றது. இதன் அடுத்த கட்டத்தில் உயர்தரத்தில் கற்கும் அவளது மூத்த பெண்பிள்ளை தாயின் சகோதரனால் வன்புணர்விற்கு உள்ளாக்கப்படுகின்றாள். அவளது சகோதரிகள் கூலி வேலையினை நோக்கித் தள்ளப்படுகின்றனர். பெண்வர்க்கம் முகங்கொடுக்கும் பல்பரிமாண

இன்னல்களை இந்நாடகத்தில் கண்டு கொள்ளக் கூடியதாய் உள்ளது.

மலையக இளைஞர் சமூகம் எதிர்கொள்ளும் சிக்கல்கள்

இருபத்தோராம் நூற்றாண்டு சமகால மலையகத்தில் சமூக பொருளாதார பண்பாட்டு மாற்றங்கள் மலையக இளைஞர்கள் மத்தியில் நேர் மற்றும் நேர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தின. கல்வி தொழில் வாய்ப்புக்கள் புத்துருவாக்கம் பெற, மலையக இளைஞர்கள் பல தளங்களில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். இதனை இந்நாடகங்களில் ஆங்காங்கே காணக்கூடியதாய் உள்ளது. நேர்மறையான தாக்கங்களை எடுத்தாளும் பட்சத்தில் இவ்வீதி நாடகங்கள் சிலவற்றின் பிரதான கருவாகவே இவை பேசப்பட்டுள்ளமையினை அறியக்கூடியதாய் உள்ளது. தோட்டங்களில் அதிகரித்துவிட்ட இந்தியத் தொலைக்காட்சி அலைவரிசைகளின் நுகர்வு, இதனால் ஏற்பட்ட கலாசார மாற்றங்கள், மதுப்பாவனை, போதைப்பொருள் கலாசாரம் என்பவற்றை மிக விளக்கமாகவும் அவற்றால் இளைஞர்கள் எதிர்கொள்ளும் சவால்களை நுட்பமாகவும் பேசுவது இங்கு அவதானிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, இந்தப் பாதையில் செல்வோம், பஞ்ச சாமுராய் போன்ற நாடகங்களைக் குறிப்பிடலாம். அவற்றிலிருந்து எடுத்துக்காட்டு வசனமொன்று பின்வருமாறு தொடர்கிறது:

அது மட்டுமா? இப்ப இஸ்கூல் போற பொடியங்க எல்லாம் போதபொருள் பாவிக்க பழகிட்டாங்க மாவா, டப்பி, டமார் போன்ற போதப் பொருளுக்கு அடிமையாகிட்டாங்க. இங்க உள்ள இளைஞர்களும் அப்பாமார்களும் இது தொடர்பா தெளிவோட செயற்படனும்.

வரலாற்றுச் சுவடுகளைத் தற்காலத் தலைமுறையினருக்குக் கடத்துதல்

மலையகத் தமிழர்களின் அடிப்படை வாழ்வியல் உரிமைகளான குடியுரிமை, வாக்குரிமை, காணியுரிமை, சம்பள உயர்வு, உட்கட்டமைப்பு வசதிகள் போன்றன மறுக்கப்பட்டு அவர்கள் கொத்தடிமைநிலையில் வாழ்ந்த நிலையில் அவற்றைப் பெற்றுக்கொள்வதற்காகப் பல போராட்டங்கள் தனிநபர் மற்றும்

அமைப்பு ரீதியில் முன்னெடுக்கப்பட்டன. இவற்றினை முன்னின்று செயற்படுத்தி வெற்றிகண்டவர்கள் மற்றும் உயிர்த்தியாகம் செய்தவர்களை இம்மக்கள் மறந்துவிடக் கூடாது என்பதற்காகவும், அவர்களை முன்னுதாரணமாகக் கொண்டு இக்கால சமூக்கத்தினரை விழிப்புணர்வுக்கு இட்டுச்செல்லும் நோக்கத்துடனும் இவ்வீதி நாடகங்கள் சில கட்டமைக்கப் பட்டுள்ளன. தொன்மவியல் சார்ந்த ஒரு பார்வையிலும் இந்நாடகங்களை நோக்கக்கூடியதாக உள்ளது. இப்பண்புகளை ஜெகன்நாதன் வருகிறார் என்ற வீதிநாடகத்தில் சிறப்பாகவும், விட்டில் பூச்சி என்ற பிரதியில் பொதுவாகவும் அடையாளம் காணக்கூடியதாய் உள்ளது.

நடிகன் 2 : காலையில் சொன்னதே மறந்து போச்சி ஒங்களுக்கு எங்க வரலாறுல நடந்தது ஞாபகம் வரப்போகுது. 1948 ல நடந்தது குடியுரிம பறிச்சது 1958 கலவரம் 1977 கலவரம் டெவன் தோட்டத்துல லட்சுமணன் தியாகி ஆனது 1983 கருப்பு ஜூலை 1986ல இருந்து வருசா வருசம் திருவிழா மாதிரி நடந்த கலவரம் 1000 ரூவா சம்பளப் போராட்டம் இது எல்லாம் ஞாபகம் வருமா?

தொகுப்பாகப் பார்க்குமிடத்து இவ்வீதி நாடகங்களில் மலையகத் தமிழரின் பல்தளப் பிரச்சினைகளும் சிக்கல்களும் தீவிரமாகப் பேசப்பட்டுள்ளன. இவற்றைச் சித்திரிப்பதற்குப் பின்புலங்களாக மலையக சமூக அரசியல் விடயங்கள் கொள்ளப்பட்டுள்ளன.

முடிவுரை

கருத்துநிலைத் தளத்தில் நோக்குமிடத்து இருபத்தோராம் நூற்றாண்டில் மலையக சமூகமும் அவர்களது பிரச்சினைகளும் இக்காலப்பகுதியில் எழுந்த மலையக வீதி நாடக ஆற்றுகைகளிலும் பிரதிகளிலும் எவ்வாறு காட்டப்பட்டுள்ளன என்பதினை ஆராய்வது அவசியமாகின்றது. இப்பின்னணியில் 2000 - 2022 காலப்பகுதியில் மலையகத்தில் எழுந்த வீதிநாடகப் பிரதிகளிலும் அவைசார்ந்த ஆற்றுகைகளிலும் பெரும்பாலும் அவை எழுந்த காலத்தில் மலையகச் சமூகச் சூழலில் நிலவிய தொழிலாளர் பிரச்சினைகள், பெண்கள் சார்ந்த பிரச்சினைகள், மலையக இளைஞர் சமூகம்

எதிர்கொள்ளும் சிக்கல்கள், மலையகத் தமிழரின் வரலாற்றுச் சுவடுகளைத் தற்காலத் தலைமுறையினர்களுக்குக் கடத்துதல் மூலமான மீட்டுருவாக்கம் போன்றவற்றைக் கருவாகக்கொண்டே கட்டமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை இலக்கியங்களில் பேசுவதைவிட வீதி நாடகக் கலையினூடாகப் பேசுவதன் மூலம் மலையகத் தமிழரிடையே இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான விழிப்புணர்வையும் தேவையுணர்தலையும் உற்பத்தித்திறனுள்ள முறையில் கொண்டு வர இயலும் என்பது உறுதியாகும். மலையகப் பகைப்புலத்தில் எழுந்துள்ள வீதிநாடகங்களைக் கால அடிப்படையில் அணுகி, அவை பேசும் சமூக அரசியலை அடையாளப்படுத்தி ஆராய்வது அவசியமாகின்றது.

உசாத்துணைகள்

அந்தனி ஜீவா. (2007). சிறகு விரிந்த காலம். உடத்தலவின்னை : சிந்தனை வட்டம்.

சக்திபெருமாள். (1979). தமிழ் நாடக வரலாறு. மதுரை: வஞ்சிக்கோ பதிப்பகம்

சிவத்தம்பி, கா., திலகநாதன், க., மௌனகுரு, சி., (1999). அரங்கு ஓர் அறிமுகம். வெள்ளவத்தை : நியு கார்த்திகேயன் பிறின்டர்ஸ்.

மௌனகுரு, சி., (2003). அரங்கியல். கொழும்பு : பூபாலசிங்கம் பதிப்பகம்.

சற்குருநாதன்., ஜெ. (2002). 'சமூக நிகழ்வுகளை உள்வாங்கிய சில வீதிநாடகங்கள்' புதிய மலையகம், இதழ் - 01.

தேஜா.க. (2004). 'நாடகக் கலைஞர் பிரளயனுடன் ஓர் நாள்', பயில்நிலம், இதழ் - 04

34

ஓர் ஆற்றுகைச் சூத்திரத்தின் இணைவை மகிடியிலும் வல்லாளக் கண்டிமான் கோட்டையழிப்பிலும் அணுகுதல்

சு. சந்திரகுமார்
Research Scholar,Department of Performing Arts,
Pondicherry University, Puducherry. chandrakumars@esn.ac.lk.

முனைவர் கே.ஆர். ராஜரவிவர்மா
Associate Professor, Department of Performing Arts, Pondicherry University, Puducherry. avkoodam1966@gmail.com

அறிமுகம்

இந்தியாவில் புதுச்சேரியில் சடங்காற்றுகையாகக் காணப்படும் மயானக்கொள்ளைப் பெருவிழாவில் ஒரு நாள் 'வல்லாளக் கண்டிமான் கோட்டையழிப்பு' நிகழ்வு சடங்காற்றுகையாக நிகழ்த்தப்படுகின்றது. இதில் வல்லாள மன்னனின் மனைவி நிஷசினியின் மண்ணால் ஆன உருவம் கோட்டையாக உருவாக்கப்படுகின்றது. நிஷாசினியின் விசாலமான மண்ணாலான உருவம் ஆற்றுகையின் மையப்பொளாக உள்ளது. இதனை மையப்படுத்தி மக்கள் சுற்றி நின்று பார்க்கின்றனர். இந்தப் 'படுகள உருவத்தைச் சுற்றி' வல்லாள மன்னன் வரலாற்றுடன் தொடர்புபட்ட கதை கூத்தரால் வாத்திய இசைக்கேற்ப கேலி – கிண்டல் செய்து நிகழ்த்தப்பட்டது. இதனைச் செய்யும் பொழுது உருவத்தைச் சுற்றிச்சுற்றி வந்து நிகழ்த்துவர். தொடர்ந்து ஒவ்வொரு வரவும் நிகழ்வு வெளிக்குள் நுழைந்து தமக்கான செயற்பாட்டைச் செய்யும். பின்னர் அங்காளம்மன் தேரில் நிகழ்விடத்திற்குள் (கோட்டைக்குள்) நுழைந்து நிஷாசினியின் உருவத்தைச் சிதைத்து விடுவாள். இந்த ஆற்றுகைச் சூத்திரமுறையே மகிடியாற்றுகையில் இணைத்துள்ளமையை அறிய முடிகின்றது. இது மேலும் பல ஆற்றுகை வேர்களைத் தேட விளைகின்றது. ஆற்றுகையிலும்

ஆற்றுகை வெளியிலும் பொதுவான 'ஆற்றுகைச் சூத்திரம்' காணப்படுகின்றது. இதனை மையப்படுத்தியதாகவே இவ்வாய்வு அமைகின்றது.

வல்லாள ராசாவின் கதைக் கட்டமைப்பு

வல்லாள மகாராசன் கி.பி 1700ஆம் ஆண்டில் திருவண்ணாமலையில் ஆட்சிசெய்துள்ளான். இவனது கதையில் கற்பனையும், வரலாறும் சேர்கின்றது. தெய்வமும் நம்பிக்கையும் இணைக்கப்படுகின்றது. வல்லாள ராசனுக்குக் குழந்தை இல்லை. அவன் ஒரு சிவபக்தன் ஆவான். சிவனை வணங்கி சிவபெருமானிடம் குழந்தைவரம் கேட்கிறான். நீயே எனக்குக் குழந்தையாகப் பிறக்கவேண்டும் என்று கேட்கிறான். 'நீ வந்து குழந்தையாகப் பிறக்கவேண்டும்' எனும் வார்த்தையே இரண்டு விதமாகப் பின்னப்பட்டுள்ளது (நேர்காணல், ஆதிராமன், 26.04.2024). அவனது மனைவி நிஷாசினியுடன் சிவபெருமான் சேர்ந்து இருந்ததால் கருத்தரிக்கின்றமை. இந்தக் கரு மனிதரில் உருவானதால் கருவை அழிக்க அங்காளம்மன் வரும் கதை. இக்கதை தமிழ் நாட்டில் 'வல்லாள மகாராசா' எனும் பெயருடன் தெருக்கூத்தாக ஆடப்படுகின்றது இதனை விட வேறு வாய்மொழிக் கதைகளும் காணப்படுகின்றன (நேர்காணல், வெங்கடேசன், 15,04.2024).

வல்லாளக் கண்டிமான் கோட்டையை அழித்தல் நிகழ்வும் மகிடி ஆற்றுகை நிகழ்வும்

வருடா வருடம் வல்லாள மன்னனின் வரலாற்றுக் கதையுடன் தொன்மத்தை இணைத்து அங்காளம்மன் கோயில் முன்றலிலும், முழு ஊரையும் நிகழ்வு வெளியாகக் கொண்டு மயானக்கொள்ளை நிகழ்கின்றது. இந்த விழாவின் ஒரு நாள் சடங்காற்றுகையாக (Ritual Performance) அமைவதே 'வல்லாளக் கண்டிமான் கோட்டையழிப்பு' விழா. இந்த விழாவில் கோட்டைக்குள் பிரசவத்திற்காகக் கிடக்கும் அவனது மனைவி நிஷாசினி பெரிய உருவமாகச் செய்யப்பட்டாள். இங்கு அவளது பிரசவத்தை அங்காளம்மன் மருத்துவிச்சியாக வந்து பார்ப்பதாகவும், அழிப்பதாகவும் நிகழ்த்தப்படுகிறது.

நிசாந்தினியின் உருவ அமைப்பும் சடங்கும்

நிஷாசினியைக் கோயில் முன்றலில் உள்ள வெளியில் ஊர்மக்கள் ஒருங்கிணைந்து நாள் முழுவதும் செம்மண்ணால் மிக நீண்ட உருவமாகச் செய்து அந்த உருவத்தின் மேல் வர்ணங்கள் பூசி அலங்கரித்து வடிவமைத்து வைத்திருந்தனர். பொருத்தமான வர்ணங்கள் அவளது முக அலங்காரத்தில் சேர்க்கப்பட்டிருந்தன. கூந்தல் விரிந்து கிடந்தது. சேலை உடுத்திருக்கும் முறை தத்துருவமாகத் தோன்றியது. கைகளில் வளையல்கள், மோதிரம், கால்களில் கொலுசு முதலான அணிகலன்களை அணிந்திருந்தாள். இது ஓர் அரசியின் தோற்றத்தின் உருவத்தை மையப்படுத்தி வடிவமாக்கப்பட்டிருந்தது.

அவளது வயிறு பிள்ளை வயிற்றுடன் இருப்பதைப் போன்று பெரிதாகக் தோன்றியது. அலங்கரிப்புக்குப் பச்சை, மஞ்சள், ஊதா, கறுப்பு வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. அந்த உருவம் புராண, வரலாற்றுக் கதையுடன் தொடர்புபட்டதால், அதற்கேற்ப நிகழ்வு அமைந்திருந்தது. இது வல்லாள ராசனின் மனைவி நிஷலீசினி பிள்ளை வயிற்றுடன் கிடப்பதாகப் பாவனை செய்யப்பட்ட உருவமாகும். இது சுமார் 35 அடிக்குமேல் காணப்பட்டது. இந்த மண் உருவம் பெரும் எடுப்பாகக் காட்சியளித்தது. பெரிய முகம், அதற்கேற்ப கை, உடல், கால் என்பன காணப்பட்டன.

ஊர்மக்கள் இரவு ஏழு மணியளவில் இந்த உருத்தைத் தெய்வமாக வணங்கி, கற்பூரங்கொழுத்தி வழிபட்டனர். பின்னர் ஓர் ஆடு நிஷாசினியின் கால் பக்கமாக வைத்துப் பலியிடப்பட்டது.

நிகழ்த்துகைக் கட்டமைப்பு

முதலில், வல்லாளனின் கதை கூத்துக் கலைஞர்களால் உடுக்கு, தாளம் வாசித்து ஊர்மக்களுக்குச் சொல்லப்பட்டது. ஊர்மக்கள் பக்தியுடனும், ஆற்றுகை நிலையிலும் இதனைப் பார்த்தனர். பங்குகொண்டனர் - கருத்துப் பரிமாறினர். அதன் பின்னர் ஒவ்வொரு வரவும் வந்து நிஷாசினியின் படுகள உருவத்தைச் சுற்றியே கதையை நிகழ்த்தியது.

கூத்து வாத்தியாரால் வல்லாள ராசாவின் கதை கூறப்பட்டது. தாளத்திற்கு வாத்தியம் இசைத்தனர். கதை தெரிந்த ஏனைய

இரண்டு கூத்தர் கூற, மற்றைய வாத்தியக்காரர் அதற்கு 'ஆம், இல்லை' என நகைச்சுவையாகப் பதில் கூறினர். இவர்கள் தொடர்ச்சியாக அங்கத உத்தியுடன் உரையாடினர். கதைசொல்லி (வாத்தியார்) கேள்வி கேட்கப் பதில் சொல்ல அதற்கு வாத்தியக்காரர் இரட்டை அர்த்தச் சொற்களிலும், நையாண்டியுடனும், குறியீட்டுடனும் பதிலளித்தனர். பார்ப்போரை அங்கத நிகழ்த்துகை உணர்வில் வைத்திருந்தமை புலப்பட்டது. அத்துடன், கதை சொல்லியும், தாளக்காரரும் வரும் பாத்திரத்துடன் அங்கதமாக உரையாடி மகிழ்ந்து, நிஷாசினியின் படுகள உருவத்தைச் சுற்றி வந்தனர். அந்த இடத்திலும் அங்கதப் பேச்சில் வலுவடையும்.

பின்னர் குறத்தி வரவு இடம்பெற்றது. இந்நிகழ்வில் இந்தக் குறத்தி வரவு முக்கியமானது. ஒருவர் குறத்தி வேஷம் கட்டி பெரிய ஆரவாரத்துடன் உள் நுழைந்தார். அவரை நிகழ்த்துகை வெளிக்குள் நிற்கும் கதை சொல்லிகளும், வாத்தியக்காரரும் விசாரித்து, வந்த விடயம் பற்றிக் கூறுவதுமாக அமைந்தது. இது படுகள உருவத்தைச் சுற்றி நிகழ்த்தப்பட்டது. கையில் தடியுடன் உள்நுழைந்த குறத்தி விருத்தம் சொல்லி தன்னை அறிமுகப்படுத்தினாள். அவள் வந்து நின்றதும், அவளை வாத்தியக்காரர் கிண்டாலகத் தொட்டனர். இதற்கு குறத்தி 'ஒருத்தன் பின்னால புடுங்கிறான், ஒருத்தன் சைட்ல புடுங்கிறான், ஒருத்தன் முன்னால புடுங்கிறான்' என இரட்டை அர்த்தத்துடன் பேச கதை சொல்லி 'அம்மா மேல கை வைக்காதடா' என்று சொல்ல, மீண்டும் அவள் 'வேற எதிலையாவது வைச்சிறப் போறீங்க...' என்று அங்கதமாப் பேசினாள்.

தொடர்ந்து குறத்தியுடன் வாத்தியாரும், வாத்தியக்காரும் செல்வதும், அங்கதத்துடன் உரையாடி நகைப்பதும், மிகைப்படுத்திக் கொள்வதுமாகக் கதைச் சூழமைவு விரிவாகியது. சுற்றியிருக்கும் பார்ப்போர் சிரித்து மகிழ்ந்து கொண்டாடுவதும் நிகழ்த்துனருடன் எதிர்வினை கொள்வதும் வலுப்பெற்றது.

அடுத்தகட்டமாக வல்லாள மன்னன் வரவு இடம்பெற்றது. வல்லாள மகாராசா தாள வாத்தியங்கள் ஒலிக்க நிஷாசினியின் படுகள உருவத்தைச் சுற்றி ஆடி, ஆரவாரத்துடன் வருகின்றனர். ஒருவர் 'கோவிந்தா கோவிந்தா' எனக் கூறிக் கொண்டு அவருக்குப் பூமாலை அணிவித்தார். அரசன் ஒருவன் கூத்தில் வேஷம் கட்டி

வருவது போன்று வல்லாள ராசன் முடி, புஜம், இடுப்புப்பட்டி, மாலை, தாடி அணிந்து வந்தார். அவரைப் பார்த்து ஒருவர் 'மகாராசாவ சுரண்டாதீங்கடா. அவர் தண்டனை தருவார்' என கூற, 'அவர்ற மயிரப் பிடுங்காதீங்கடா' என்று மற்றுமொருவர் கேலி செய்தார். இவ்வாறு அங்கதத்துடன் வரவேற்கப்பட்ட மகாராசாவை வைத்து குறத்தியைப் பயமுறுத்துவதும், அவள் எனது கையில் பிரம்பு இருப்பதாகக் கூறுவதும் இடம்பெற்றது.

பின்னர் கூத்து வாத்தியார் 'நம்ட தேசத்திற்குப் புதுசா ஒரு குறத்தி வந்திருக்காளாம்' என்று வல்லாள மன்னனிடம் கூற, அவன் 'அட அட..' என்று இழுத்து நகைத்து கொஞ்சிற மாதிரிப் பாவனை செய்தான். அப்பொழுது வாத்தியக்காரர் 'அது குறத்தி கவனம்' என்று கூறினான். பின்னர் ராசன் 'குறத்தியா எங்க அந்தக் குறத்தி' என்று தன்னைச் சுதாகரித்துக் கொண்டு கேட்டான். அதன் பின்னர் வல்லாளன் 'நிஷாசினிதான் என் பொண்டாட்டி, அவள் படுத்துக்காள். வந்து பாறன்டா...' என்று நிஷாசினியின் மண் உருவத்தைக் காண்பித்துக் கூறினான்.

கூத்து வாத்தியார் ராசாவைக் குறத்தியிடம் காண்பித்து 'இதுதான் மகாராசா' என்று அறிமுகப்படுத்த, அவள் உடனே, 'இவன் பேய் மாதிரி நிற்கான். இவன் மகாராசாவா?' என அங்கதப்படுத்தினாள். பின்னர் மகாராசாவை அப்பொழுதான் பார்த்தது போன்று பாவனை செய்து, 'ஐயோ எஜமான் எஜமான்' என்று வல்லாள ராசாவைக் குறத்தி அழைத்து சமாளித்து, குறி சொல்கிறாள்.

இவர்கள் நிஷாசினியின் உருவத்தைச் சுற்றி வந்து மறுபடியும் பாட்டுப்பாடி, மீண்டும் குறிசொல்வதும் தொடர்கிறது. குறத்தி 'மகாராசாவைப் பற்றி ஒரு பாட்டுப் பாடப் போறனுங்க என்று கூறி, முந்தி முந்தி வந்தானம் முண்டக்கண்ணன் வந்தானாம், கோடிக்கோடி வந்தானாம் கோடி மசிரு வந்தானாம்' என்று அவனுடைய கண்ணைப் பற்றிப் பாடி, அவனது உடல் நிலையை நகைத்தாள். ராசாவும் அவளை உடல் அங்கதத்தினூடாகக் கீழ்நிலைப்படுத்தினான்.

இந்த நிகழ்த்துகை வெளியில் பாடல், உரையாடல், இசை, எள்ளல், நகைத்தல் முதலியன அங்கத விளையாட்டுடன் நடைபெற்றன. இவ்வாறான அங்கதம் நிறைந்த உரையாடல்,

அதற்கேற்ப ஒவ்வொரு வரிக்குமான வாத்திய இசை வெளிப்பாடு குறிப்பிடத்தக்கன. அத்துடன் குறத்தி, வல்லாள ராசா போன்றோரின் ஆட்ட அசைவுகளும், நடிப்பும் மிகையாக அமைந்திருந்தன.

அங்காளம்மனே மருத்துவிச்சியாகப் பிரசவம் பார்க்க வருவது அடுத்த வரவாக இடம்பெற்றது. மருத்துவிச்சி வேஷம் கட்டி வந்து வல்லாள ராசன், கூத்து வாத்தியார், வாத்தியக்காரர் போன்றோருடன் அங்கதமாக உரையாடினாள். இந்த மருத்துவிச்சி நிஷாசினியின் வயிற்றிலுள்ள குழந்தையைக் கலைத்து அழிப்பதாக அமைந்திருந்தது. இதில் துன்பியலான காட்சி வலுவடைந்தாலும், மக்கள் அதன் இரத்தப்பெருக்கு சிவனுடையது என்று நம்பி தாமும் அதனைத் தம் உடலில் பூசிப் பிள்ளை வரம் வேண்டுவதாகக் கூறப்பட்டது. சிலர் அதனை வாங்கி உட்கொண்டனர். இறுதியில் வல்லாள மன்னனும் தாக்கப்பட்டான். 'கருவை அழிக்கும் பொழுது இரத்தம் சிந்தக்கூடாது என்பதற்காக அங்காளம்மன் அவ்விடத்தில் காட்டேரியாக மாறுகிறாள்' (நேர்காணல், ஆதிராமன், 26.04.2024) எனவும் கூறப்படுகிறது

அதனைத் தொடர்ந்து துணைத் தெய்வங்களின் வரவு இடம்பெற்றன. இவர்கள் ஆரவாரத்துடன் தமக்குரிய வேஷத்துடன் உள்நுழைந்து சிறிதளவாகச் சிதைந்த நிஷாசினியின் உருவத்தை மெல்ல மெல்லச் சிதைத்தனர். இதன்போது ஆரவாரமும் கூட்டுணர்வும் வெளிப்பட்டது. இறுதியில் கோயிலின் தாய்த் தெய்வமான அங்காளம்மன் தேரில் வந்து குறித்த தேரில் நிஷாசினியின் மண் உருவத்தைத் தகர்த்து அழிப்பதாக முடிவடையும். அங்காளம்மனுக்குத் துணையாகப் பாவாடைராசனும், அவனது படைகளும் வந்து உதவினர். இது மகிடி அரங்க ஆற்றுகையின் நிகழ்களத்தினையும், வடிவத்தையும் ஒத்தது. மகிடி அரங்கு சமகால சமூக பண்பாட்டு அரசியல் அரங்காகும். இந்த அரங்கு சடங்குக் கட்டமைப்புப் போல இணைந்த நிகழ்த்துகையாகக் காணப்படுகிறது.

ஆற்றுகைச் சூத்திரமும் அதன் இணைவும்

மையம் - மையத்தைச் சுற்றி நிகழ்த்துகை நடக்கும் - நிகழ்த்துகை வெளியைச் சுற்றிக்கயிறு கட்டி மக்கள் சுற்றி நின்று பார்த்துப் பங்குகொள்வது, இதிலுள்ள ஆற்றுகைச் சூத்திரமாகும்.

இது இது வல்லாளக் கண்டிமான் சடங்காற்றுகையிலும் மகிடி ஆற்றுகையிலும் ஒன்றாக உள்ளது.

இங்கு முன்னர் கூறியதன்படி, நிஷாசினியின் உருவம் மையப் பொருளாக்கப்பட்டு ஆற்றுகைச் சூத்திரமாகத் (Formula of Performance) தோன்றுவது வெளிப்படுகின்றது. இந்த ஆற்றுகை உருவாக்கச் சூத்திரம் முன்னோர்களின் படைப்பாக்க எண்ணக்கருவாகும். இது சடங்கை மையப்படுத்தியது. 'வல்லாளக் கண்டிமான் கோட்டையின்' வெளியில் அவனது மனைவி நிஷலீசினியின் உருவம் மையப்படுத்தப்பட்டு நிகழ்த்தப்படுவது நிலவுகின்றது. இந்த மையம் பொருளாக அல்லது நபராக அல்லது வேறு விடயமாகவும் இருக்கலாம். பொருளை அல்லது நபரை ஆற்றுகையில் மையப்படுத்துவது அதனைச் சுற்றித் தமது ஆற்றுகையை வடிவமாக்குவதும் முக்கியமான அழகியல் வெளிப்பாடாகும்.

மட்டக்களப்பு மகிடி ஆற்றுகையில் காணப்படும் கும்பமும் கம்பமும் முக்கிய மையமாகும். அவ்வாறே வல்லாளக் கண்டிமான் கோட்டையிலுள்ள நிஷாசினி உருவமைய சடங்காற்றுகையும் ஒரே சூத்திரத்தில் இணைவது கவனத்திற்குரியது. திறந்தவெளி ஆற்றுகைச் சூத்திரங்களின் வடிவம் தமிழ்ப் பண்பாட்டில் வலுவாகவுள்ளது. இரண்டிலும் ஆற்றுகை வெளிக்கான கட்டமைப்பில் நடைபெறும் சம்பவங்களின் சூத்திர உருவாக்க இணைவு கவனிக்க வேண்டியவை.

நிஷாசினியின் உருவம் குறியீடாகவும், மையமாகவும் வைக்கப்பட்டு, அங்காளம்மனின் கதை நிகழ்த்தப்பட்டது. வல்லாள ராசனின் மனைவி நிஷாசினி பிள்ளை வயிற்றுடன் கிடக்கும் மண்ணுருவம் மையமாகும். இவ்வுருவமும் அதனைச் சுற்றி நிலவும் சடங்கு நிலைப்பட்ட நம்பிக்கை நிகழ்வும், கதையின் ஆற்றுகை முறையும், சுற்றி நின்று மக்கள் பார்த்து ஆரவாரப்பட்டு பரவசமாடைவதும் முக்கியமானவை.

மையம் முக்கிய கூறாக அமைதல்: இரண்டும் வெவ்வேறு கதைக்கட்டமைப்பாக, ஆற்றுகையாக இருந்தாலும் அதன் ஆற்றுகைச் சூத்திரம் பொதுமைப்பாட்டுடன் காணப்படுகின்றது. மையத்தைச்சுற்றி, அல்லது குறித்த பொருளைச்சுற்றி உரையாடுவது முக்கியமானவை. குறிப்பாக, நிஷாசினியின் பெரிய உருவம்

வல்லாளக் கண்டிமான் கோட்டையின் குறியீடாக அமைந்தது. இது நிஷாசினியின் வாழ்வியல் கூறாக வெளிப்படுகின்றது. அவ்வாறே, மகிடியில் நிகழ்விடத்தில் அமைக்கப்பட்டுள்ள கம்பம், அதனைச் சுற்றியுள்ள பிரதான கும்பம், சிறியகும்பம், மடை போன்றன மையப்படுத்தப்பட்டு நிகழ்த்துகையின் பிரதான மக்கள் வாழ்வியல் இணைவுக் கூறுகளாக உள்ளன.

பண்பாட்டுக் குறியீடு: மனிதருடன் புணர்ந்து சிவபெருமான் பிள்ளை பெற்றுக் கொள்ளக்கூடாது எனும் பார்ப்பனிய நிலையை உணர்த்துகின்றது. இதனால், நிஷாசினியின் வயிற்றில் உள்ள சிவனின் குழந்தையைப் பிறக்கவிடாமல் தகர்ப்பதாகக் கதை நிகழ்த்தப்படுகிறது. இந்தக் கரு அவளது வயிற்றில் இறந்தநிலையில் உள்ளது. இதனை மருத்துவிச்சியாக வந்த அங்காளம்மனால் வெளியில் எடுத்து, குடலை மாலையாக்கி (பலியிடப்பட்ட ஆட்டுக் குடல்) அணிவதும் நிகழ்ந்தது. இலங்கையில் ஆடப்படும் மகிடி ஆற்றுகையில் சடங்கு நிலைசார்ந்த நம்பிக்கைத் தன்மை இல்லை. ஆனால், அது சடங்குப் பந்தல் போன்று அமைத்து அதற்கமைய மந்திரதந்திர விளையாட்டுக்களைச் செய்துபோல் நிகழ்த்தி மையத்தில் உள்ள கும்பத்தை எடுப்பதுபோன்று செய்து காட்டப்படுகிறது. இரண்டிலும் இலக்கை அடைவதும், தாக்குவது காணப்படுகிறது.

நிகழ்த்துகையை நடத்துபவர்: கூத்து வாத்தியார் வல்லாள ராசாவின் கதையைச் சொல்வது, பாடுவது, இசைப்பது, வேஷம் கட்டி வருவோருடன் உரையாடி அங்கதப்படுத்துவது, நிகழ்வை நடத்திச் செல்வது என முக்கியமான நாடக நடத்துனராகச் செயற்படுகிறார். இதற்குத் தாளக்காரரும் வாத்தியக்காரரும் துணைபுரிவர். மகிடி அரங்கிலும் அண்ணாவியும் தாளக்காரரும் முக்கிய நாடக நடத்துனர்களாகத் திகழ்கின்றனர். வேஷம் கட்டிவரும் பாத்திரங்களை அழைத்துவருவது, நிகழ்த்துனருடன் அங்கதமாக உரையாடுவது, மத்தளம் அடித்துத் தாளம் சொல்வது, பாடுவது நிகழ்த்துகையை ஒருங்கிணைப்பது, அவர்களும் பாத்திரங்களாக மாறுவது என அமையும்.

அத்துடன், கூத்து வாத்தியார் நிகழ்த்துனருடன் உரையாடுவதும் அங்கதப்படுத்துவதும், சமகாலப் பிரச்சினையுடன் இணைத்து மகிழ்விப்பதும் வெளிப்படுகின்றது. குறத்தியும் வல்லாள

ராசனின் அமைச்சர்களும் அரசனுடன் அங்கதத்துடன் பேசுவதும், கேலி செய்வதும் இரண்டிலும் உள்ளது. அவ்வாறே, மகிடி அரங்கில் அண்ணாவியாரும் தாளக்காரரும் உடையார், போலிஸ், விதானை ஆகியோருடன் உரையாடுவர். தொடர்ந்து, நிகழ்த்துகை வெளியின் மையத்தில் இருக்கும் கம்பத்தையும் கும்பத்தையும் பற்றி எடுத்துக் கூறுவர். அங்கதம் செய்து அதிகாரத்தைக் கீழ்நிலைப்படுத்த உதவினார்.

குறிப்பாக, கூத்துவாத்தியார் வல்லாளக் கண்டிமான் கோட்டையழிப்பு நிகழ்வில் வரும் வேஷக்காரர்களின் ஒவ்வொரு வரவுடனும் அங்கத நிலையில் பேசி உரையாடி, மகிழ்வித்துக் கதையை நகர்த்துவார். குறத்தி, வல்லாள ராசன், மருத்துவிச்சி, அங்காளம்மன் ஆகியோரை உரிய முறையில் நிகழ்த்துகை வெளிக்குள் அழைத்து வருகிறார். மகிடி நிகழ்த்துகையில் சீடப்பிள்ளைகளின் வரவு, உடையார், போலிசார், விதானையார் வரவு, அம்மன் வரவு, முனிவர் வரவு, குறவர்கள் வரவு எல்லாம் தாளக்கட்டுடன் நிகழ்விடத்திற்குள் அழைத்துவருகிறார். பிரதான கம்பத்தைச் சுற்றி ஆடிப்பாடிப் பேசி நிகழ்த்துகின்றனர். எனவே, இரண்டு நிகழ்விலும் பாத்திரங்களை அண்ணாவியாரும், கூத்துவாத்தியாரும் நிகழ்விடத்திற்குள் அழைத்து வருவது குறிப்பிடத்தக்கது.

ஆற்றுகை வெளியின் வடிவமைப்பு: இரண்டு ஆற்றுகைகளும் திறந்த வெளியாக அமைகின்றன. நிஷாசினியின் உருவத்தை மையப்படுத்திய வெளி கோட்டையாகச் சித்திரிக்கப்படுகிறது. இதனைச் சுற்றி நிகழ்த்துகை செய்யப்படும். அதற்கு அடுத்தபடியாக இடைவெளிவிட்டுக் சுற்றிக் கயிறு கட்டப்பட்டிருந்தது. இந்தக் கயிற்றுக்கு வெளியில் நின்று பார்ப்பவர்களாக மக்கள் காணப்பட்டனர். உட்கார்ந்து இருந்து பார்ப்பது இங்கில்லை. சுமார் மூன்று மணிநேரம் நின்றே பார்த்து மகிழ்ந்து, கொண்டாடி, பங்குகொண்டனர். மகிடியிலும் கம்பத்தைச் சுற்றி கதையைச் செய்து காட்டினர். அதற்கு சற்றுத் தூரத்தில் சுற்றிவரக் கயிறு கட்டியிருக்கும். இங்கு மக்கள் உட்காராமல் நின்று பார்த்து மகிழ்ந்து பங்குகொள்கின்றனர். சடங்குகளில் இதன் தன்மை அதிகமாக உள்ளது. மட்டக்களப்புச் சடங்கு வெளியும் இந்த மாதிரியான நிகழ்த்துகை வெளியையே கொண்டுள்ளது. இதனை எல்லாம்

அறிந்த பாரம்பரிய ஆற்றுகை நிபுணர்களே மகிடி அரங்காக வடிவமைத்து முன்னெடுத்து வந்துள்ளனர்.

இறுதியாக, இரண்டு நிகழ்த்துகைகளையும் பார்த்த து.கௌரீஸ்வரனும் இதனையே சுட்டுவதும் அறிதலுக்குரியது. திறந்த வெளியில் மக்கள் நின்று பார்த்து - மகிழ்ந்து - தேவை ஏற்படின் பங்குகொள்வது, மையத்தில் உருவம் காணப்படுவது, கதை ஒன்றை விரிவாக நகைப்புடன் விபரித்து, அண்ணாவியும் வாத்தியக்காரரும் கதை சொல்லி மகிழ்விப்பது முக்கிய சூத்திரமாகும் (நேர்காணல், கௌரீஸ்வரன், 15.04.2024).

எனவே, ஒவ்வொரு வரவும் நிழ்த்துகை வெளிக்குள் வந்து மையத்தை நிலைகுலைப்பது அல்லது தன்வயப்படுத்துவது காணப்படும். மகிடி ஆற்றுகையில் இவ்வகைச் சூத்திரமே உள்ளது. மையத்தில் கம்பம் நடப்பட்டு சீடப்பிள்ளைகள் அதனைச் சுற்றி நான்கு மூலையிலும் கும்பத்துடன் வைக்கப்பட்டிருப்பர். இதுவே பிரதான மையமாகும். கதைக்கு ஏற்ப வரவுகள் வந்து அங்கத விளையாட்டுகளைச் செய்து ஈடுபவர். இறுதியில் கும்பம் எடுப்பது அல்லது மையத்திற்குள் வேறு தரப்பினர் உள்நுழைவது முக்கிய மையம் ஆக்கிரமிப்பாகும். பார்ப்போர் சுற்றியிருந்து பார்த்து பங்குகொண்டு மகிழ்வர். இதுவே அந்த ஆற்றுகைச் சூத்திரத்தின் மூலவேர்.

இந்த ஆற்றுகை சூத்திரத்தை வடிவமைத்த முன்னோர்கள் தனித்துவமான கலை, சடங்கு, ஆற்றுகை சார்ந்த நிபுணர்களாவர் என்பது கவனிக்கத்தக்கது.

முடிவுரை

புதுச்சேரி முத்தியால்பேட்டை அங்காளம்மன் கோயில் முன்றலில் மண்ணால் பெரிய ஓர் உருவம் செய்து அதனை மையப்படுத்தி, வழிபட்டுச் சுற்றிச்சுற்றி கதையை நிகழ்த்துவதும், பாத்திரங்களின் வரவும், மைய தன்வயப்படுத்தப்படுவதும், மக்கள் சுற்றியிருந்து பார்த்து மகிழ்வதும் நிலவுகின்றது. இந்தச் சூத்திரம் மகிடி ஆற்றுகை வடிவத்துடன் ஒத்துப் போகின்றமை கவனத்திற்குரியது.

நேர்காணல்

ஆதிராமன், மு. கூத்துக்கலைஞர், நாட்டுப்புறவியல் எழுத்தாளர். வயது 61. இலக்கம் 55 மாரியம்மன் கருவெளிகுப்பம், புதுச்சேரி -08. 26.04.2024.

வெங்கடேசன், ஏ. கௌரவ உதவி விரிவுரையாளர், நாடகத் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், வயது 51. இலக்கம் 39, பிள்ளையார் கோவில் வீதி, அங்காளம்மன் நகர், முத்தியால்பேட்டை, புதுச்சேரி. 15.04.2024.

கௌரீஸ்வரன், து. விரிவுரையாளர். நுண்கலைத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை. 15.04.2024.

35

மட்டக்களப்பு மாவட்ட பாடசாலைகளில் தரம் 9 இற்குத் தமிழ்மொழி மூலம் கணித பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களின் பாடத்தைத் திட்டமிடல் செயற்பாட்டினை ஆராய்தல்

கணபதிப்பிள்ளை ஞானரெத்தினம்
சிரேஷ்ட விரிவுரையாளர், கல்விப்பீடம், திறந்த பல்கலைக்கழகம், இலங்கை
kgnan@ou.ac.lk

அறிமுகம்

ஆசிரியர்களின் பணிகளில் முதன்மையானது கற்பித்தலாகும். மாணவர்களுக்கு உயர்தர கற்றல் வாய்ப்புகளை வழங்குவதிலும் மாணவர்களின் கற்றலை வளர்ப்பதிலும் ஆசிரியர்களின் கற்பித்தல் முக்கிய பங்கு வகிக்கிறது என்ற கருத்தில் பரந்த உடன்பாடு உள்ளது (Schleicher, 2016). அத்தோடு இது நேரடியாக மாணவர்களின் எதிர்காலத்துடன் தொடர்பட்டதுடன் மாணவர்களின் கல்வி அடைவிலும் பெருஞ் செல்வாக்குச் செலுத்துகின்றது. வெற்றிகரமான கற்பித்தலினூடாக பாடம் பற்றிய சாதகமான மனப்பாங்கினையும் ஆசிரியர் பற்றிய புலக்காட்சியையும் மாணவர்களுக்கு ஏற்படுத்த முடியும். வெற்றிகரமான கற்பித்தலை நடாத்துவதற்கு ஆசிரியர்களுக்குக் கற்றல் - கற்பித்தலுடன் தொடர்புபட்ட பல்வேறு அறிவு மற்றும் திறன்கள் அவசியமானவை. கற்பித்தல் என்பது பாடத்தைத்; திட்டமிடல், பாடத்தை நடைமுறைப்படுத்தல், கணிப்பீடு-மதிப்பீடு நடாத்துதல் மற்றும் ஆசிரியர்களின் ஆளுமை போன்ற நான்கு முக்கிய அம்சங்களைக் கொண்டுள்ளது (Hough& Duncan, 2000). இவற்றுள் 'பாடத்தைத் திட்டமிடல்' என்பதனைத் தத்துவார்த்த எண்ணக்கருவாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கணிதத்தை எவ்வாறு திறம்படக் கற்பிக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டும் ஆதாரமாக கணித ஆசிரியர்கள் பாடத்திட்டத்தைக் கருதுகின்றனர். ஒரு குறிப்பிட்ட

பாடத்தைச் சிறப்பாகக் கற்பிப்பதற்கான ஆசிரியர்களின் விரிவான விளக்கமாக பாடத்திட்டம் கருதப்படுகிறது. இது பயனுள்ள கற்பித்தலுக்கான இன்றியமையாத கருவியும் மற்றும் உகந்த கற்றலுக்கான முக்கியமான வழிகாட்டுதலுமாகும் (Iqbal et al.,2021).

ஆய்வாளரின் வசதி மற்றும் விருப்புக்கு அமைவாகவும் நோக்கத் தெரிவு அடிப்படையிலும் இவ் ஆய்வில் ஆய்வுப் பிரதேசமாக மட்டக்களப்பு மாவட்டம் மற்றும் கணித பாடம் என்பன கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன. கனிஷ்ட இடைநிலை வகுப்புகளில் இறுதியானதாகவும் சிரேஷ்ட இடைநிலை வகுப்புகளில் ஆரம்பமானதாகவும் தரம் 9 கருதப்படுகின்றது. இதனால் தரம் 9 இற்கான பாடநூலில் அதிகமான கணித அடிப்படை எண்ணக்கருக்கள் அமைந்துள்ளன. தரம் 9 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்குக் கணித பாடத்தில் சரியான எண்ணக்கருவாக்கம் ஏற்படும் போதே தொடருகின்ற தரம் 10, 11 வகுப்புகளிலும் போதுமான கணிதபாட விளக்கத்தை மாணவர் பெற்றுக்கொள்ளுவதற்கு வாய்ப்பு அதிகமாகும். இதன் காரணமாக இவ் ஆய்வில் தரம் 9 இற்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் இலக்குக் குழுவாகக் கருதப்பட்டுள்ளனர்.

பாடசாலைகளில் இடைநிலை வகுப்புகளில் பல்வேறுபட்ட தகைமைகளைக் கொண்ட ஆசிரியர்கள் கணிதபாடத்தைக் கற்பித்து வருகின்றனர். பல்வகைமை கொண்ட இவர்களின் பாடத்தைத் திட்டமிடல் செயற்பாடு வேறுபட்டதாக இருக்க வாய்ப்புள்ளது. இது தமிழ் மொழி மூல மாணவர்களின் கணித எண்ணக்கரு விருத்தியிலும் கணிதபாட அடைவிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இதனை ஆய்வுப்பிரச்சினையாகக் கொண்டு கலப்பு ஆய்வு வடிவத்தில் 'விளக்கமளிக்கும் தொடர் வடிவம்'; எனும் அணுகுமுறையியலைப் பயன்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் தரம் 9 இல் கணிதபாடம் கற்பிக்கும் தமிழ்மொழி மூல ஆசிரியர்களின் பாடத்தைத் திட்டமிடல் செயற்பாட்டினை அளவீடு செய்வதனையே பிரதான நோக்கமாக இவ் ஆய்வு கொண்டுள்ளது.

ஆய்வு முறையியல்

குடித்தொகை

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்குடா, மட்டக்களப்பு மத்தி மற்றும் மட்டக்களப்பு மேற்கு ஆகிய ஐந்து கல்வி வலயங்கள் உள்ளன. இக் கல்வி வலயங்களில் 1AB, 1C மற்றும் வகை II பாடசாலைகளில் தரம் 9 இல் கணித பாடத்தை மொத்தமாக தமிழ் மொழி மூலமான 168 ஆசிரியர்கள் கற்பித்து வருகின்றனர். இவர்கள் அனைவரும் இவ் ஆய்வின் குடித்தொகை ஆகும்.

மாதிரிகளின் எண்ணிக்கை மற்றும் மாதிரியெடுப்பு முறை

கருதப்பட்ட குடித்தொகையானது கல்வி வலயங்கள், பாடசாலை வகைகள், நியமன வகைகள் மற்றும் பாலினம் என்ற அடிப்படையில் படையாக்கப்பட்டு Krejcie &; Morgan (1970) என்பவரின் மாதிரிகளின் அளவைத் தெரிவுசெய்யும் அட்டவணைக்கு அமைவாக இவ் ஆய்வில் மாதிரிகளின் அளவு 112 ஆக தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது குடித்தொகையில் 67 சதவீதமாகும். இதற்கமைய 59 பாடசாலைகள் எழுமாறாகத் தெரிவுசெய்யப்பட்டு இப்பாடசாலைகளில் தரம் 9 இல் கணித பாடத்தைக் கற்பிக்கும் 112 ஆசிரியர்கள் எழுமாறாகத் தெரிவுசெய்யப்பட்டனர். இதன் விபரம் அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளது. அத்துடன் குழு நிலை நேர்காணல் மூலம் பண்பறி தரவுகளைப் பெறுவதற்காக ஒவ்வொரு கல்வி வலயத்தில் இருந்தும் அவ்வலயத்திற்கான கணிதபாட உதவிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் கணிதபாட ஆசிரிய ஆலோசகர் அடங்கலாக பாடசாலைகளில் உள்ளக மேற்பார்வையில் ஈடுபடுகின்ற சிரேஷ்ட ஆசிரியர்கள் அறுவர் உட்பட ஒரு வலயத்திற்கு எட்டுப் பேர் என்ற ரீதியில் படையாக்கப்பட்டு ஐந்து கல்வி வலயங்களிலிருந்தும் மொத்தமாக 40 பேர் எழுமாறாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆய்வுக் கருவிகள், தரவு சேகரிப்பு முறைகள் மற்றும் தரவுப்பகுப்பாய்வு நுட்பங்கள்

கணித பாட ஆசிரியர்களின் பாடத்திட்டச் செயற்பாட்டினை அவதானிப்பதற்காக 12 தரநிர்ணயங்களைக் கொண்ட அவதானிப்புப் படிவமும் சுய பிரதிபலிப்பு மற்றும் குழு நிலை

நேர்காணல் மூலம் பண்புசார் தரவுகளைப் பெறுவதற்காக 9 வினாக்களைக் கொண்ட ஒரு வினாப்பத்திரமும் ஆய்வாளரினால் தயாரிக்கப்பட்டன. முற்சோதனை மற்றும் நிபுணத்துவ ஆலோசனைகள் மூலம் ஆய்வுக் கருவிகளின் தராதரம் உறுதி செய்யப்பட்டது. பெறப்பட்ட தொகைசார் தரவுகள் விபரணப் பகுப்பாய்வு நுட்பங்களையும் பண்புசார் தரவுகள் கருப்பொருள் மற்றும் ஒப்பீடு முறைகளையும் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்படடுள்ளன.

அட்டவணை 1 :

கல்வி வலயங்கள் ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட மாதிரிகள் பற்றிய சுருக்கமான விபரங்கள்

கல்வி வலயங்கள்	பாடசாலைகள்	ஆசிரியர்களின் எண்ணிக்கை	சதவீதம்
மட்டக்களப்பு	18	31	27.7
மட்டக்களப்பு மேற்கு	9	19	17.0
மட்டக்களப்பு மத்தி	13	17	15.2
கல்குடா	6	18	16.1
பட்டிருப்பு	13	27	24.0
மொத்தம்	59	112	100

(மூலம் : ஆய்வாளரினால் தயாரிக்கப்பட்டது)

ஆய்வு முடிவுகள்

தொகைசார் பகுப்பாய்வின் முடிவுகள்

பாடத்தைத் திட்டமிடல் என்ற அம்சத்தின்; கூட்டலிடை (38.76) மிகவும் குறைவாகவும் நியம விலகல் (24.97) மிகவும் அதிகமாகவும் உள்ளதால் குறித்த ஆசிரியர்கள் பாடத்தைத் திட்டமிடுவதில் மிகவும் குறைவான நிலையில் உள்ளனர். பாடத்தைத் திட்டமிடல் என்ற அம்சத்தில் ஆசிரியர்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகள் மிகவும் குறைவாக இருப்பதனை உரு 1 தெளிவாகப் புலப்படுத்துகின்றது.



உரு 1 பாடத்தைத் திட்டமிடல் எனும் அம்சத்தில் ஆசிரியர்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் சதவீதங்கள்; தொடர்பான விபரம்

உருவிலிருந்து புள்ளிகள் அதிகரித்துச் செல்லும்போது புள்ளிகளைப் பெற்றுக்கொண்டவர்களின் சதவீதங்கள் குறைந்து கொண்டு செல்வதனையும் 43.80% ஆனோர் 40 இலும் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளதனையும் அறிய முடிகின்றது.

பாடத்தைத் திட்டமிடும்போது கருத்தில்கொள்ளப்பட வேண்டிய மிக முக்கியமானதாகக் கருதப்படும் அம்சங்களில் ஆசிரியர்கள் மிகவும் குறைவான நிலையில் உள்ளனர் என்பதனை அட்டவணை 2 வெளிப்படுத்துகின்றது.

அட்டவணை 2 :

40 இலும் குறைவான புள்ளிகளைக் பெற்றுக்கொண்டவர்களின் சதவீதங்கள்

தர நிர்ணயங்கள்	குறைவு (0-40)
மாணவர்களின் பல்வகைமை கருத்தில் கொள்ளப்பட்டிருத்தல்	79.5%
பொருத்தமான நேரப் பங்கீடு காட்டப்பட்டிருத்தல்	75.1%
பொருத்தமான கற்பித்தல் முறை மற்றும் நுட்பங்களின் தெரிவு	61.6%

பொருத்தமான கற்றல் வளங்களைத் தெரிவுசெய்திருத்தல்	56.3%
ஆசிரியர் மற்றும் மாணவர் செயற்பாடுகள் தெளிவாக காட்டப்பட்டிருத்தல்	50.1%
நோக்கத்திற்கேற்ப மதிப்பீட்டு வினாக்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல்	50.0%

மூலம் : ஆய்வாளரினால் தயாரிக்கப்பட்டது

பண்புசார் பகுப்பாய்வு முடிவுகள்

பாடத்தைத் திட்டமிடுவது தொடர்பான பிரதிபலிப்புக்கள்

அதிகமான ஆசிரியர்கள் பாடத்திட்டத்தைத் தயாரிப்பதில்லை. அவ்வாறு தயாரிப்பவர்களும் வெவ்வேறு வகையாக எழுதுகின்றனர். எது பொருத்தமானது என்பது பற்றி அவர்களில் எவருக்குமே தெளிவில்லை. குறிப்பாக ஆசிரியர் செயற்பாடு, மாணவர் செயற்பாடு, கற்பித்தல் முறை, கற்பித்தல் வளங்கள், மதிப்பீட்டு வினாக்கள் மற்றும் நேரப்பங்கீடு என்பனவற்றிற்கு அதிக ஆசிரியர்கள் பாடக்குறிப்பில் முக்கியத்துவம் கொடுத்திருக்க வில்லை. ஆசிரியர்களில் பலர் கற்பித்தலின் வெற்றியை நோக்கமாகக் கொள்ளாமல் நிருவாகத்தைத் திருப்திசெய்கின்ற செயற்பாடாகவே பாடக்குறிப்பை எழுதுகின்றனர்.

கல்வி வலயத்திற்கு வலயம் பாடக்குறிப்பின் மாதிரி வேறுபட்டுள்ளது. அத்துடன் ஒரே பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்களும் வேறுபட்ட மாதிரிகளைக் கொண்ட பாடக்குறிப்பு வைத்துள்ளனர். பாடக்குறிப்பின் முக்கியத்துவம் அதன் தேவைப்பாடு பற்றி மாவட்டத்திலுள்ள தமிழ் மொழி மூல கணிதபாட ஆசிரியர்கள் போதுமான விளக்கம் கொண்டிருக்கவில்லை.

விதப்புரைகள்

சாத்தியப்படக்கூடியதும் பொருத்தமானதுமான ஒரு பாடத்திட்ட மாதிரியை இனங்கண்டு அதனை வலய மட்டத்திலாவது நடைமுறைப்படுத்த வேண்டியது வலயக் கல்விப் பணிப்பாளர்களின் கடமையாகும். முக்கியமாக பாடசாலைக் கலைத்திட்ட அமுலாக்கத்திற்குப் பொறுப்பாகவுள்ள தேசிய கல்வி நிறுவகம் அனைத்துப் பாடசாலைகளிலும்; இரண்டாம் நிலை

வகுப்புகளுக்காவது பொருத்தமான பாடத்திட்ட மாதிரியை அறிமுகஞ் செய்து அதனை நடைமுறைப்படுத்துவதற்கு ஆவண செய்தல் வேண்டும்.

பாடத்திட்டம் எழுதுவது தொடர்பான பயிற்சிகளைப் பொருத்தமான வளவாளர்களைக் கொண்டு தொடர்ச்சியாக வழங்க வேண்டியதும் முக்கியமானதாகும்;. பாடசாலையில் உள்ளக மற்றும் வெளியக மேற்பார்வைகளின்போது பொருத்தமான முறையில் பாடத்திட்டம் எழுதப்படுவதனை உறுதிசெய்வதும் அவசியமானதாகும்

எதிர்கால ஆய்விற்கான முன்மொழிவுகள்

மட்டக்களப்பு மாவட்டத்தை ஆய்வுப் பிரதேசமாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வேறு மாவட்டங்களுக்கும் மற்றும் தேசிய ரீதியிலும் இவ் ஆய்வை விரிவுபடுத்தப்படுவது பொருத்தமானதுதாகும். தரம் 9 இற்குக் கற்பிக்கும் ஆசிரியர்களை அடிப்படையாகக் கொண்டே இவ் ஆய்வு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஏனைய தரங்களுக்கும் இதனை விரிவுபடுத்துவது அவசியமாகும்.

ஏனைய மொழி மூல ஆசிரியர்களையும் மாதிரிகளாகக் கொண்டு அனைத்துப் பாடங்களுக்கும் இது தொடர்பாக விரிவான ஆய்வு அவசியமாகும். ஆசிரியர்கள் பாடத்திட்டம் எழுவதில் ஆர்வமற்று இருப்பதற்கான காரணங்களை அறிவதற்கான விரிவான ஓர் ஆய்வு வேண்டப்படுகின்றது.

உசாத்துணைகள்

Creswell, J.W. (2014) 'Research design: Qualitative, quantitative and mixed methods approaches (4th ed)', SAGE [Preprint].

Hough, J.B. and Duncan, J.K. (1970) 'Teaching: description and analysis', Reading, Mass., Addison-Wesley Pub. Co. [Preprint]

Iqbal, Md.H., Siddiqie, S.A. and Mazid, Md.A. (2021) 'Rethinking theories of lesson plan for effective teaching and learning', Social Sciences & Humanities Open, 4(1), p. 100172. Available at: https://doi.org/10.1016/j.ssaho.2021.100172.

Schleicher, A. (2016) Teaching Excellence through Professional Learning and Policy Reform. OECD. Available at: https://doi.org/10.1787/9789264252059-en.

சின்னத்தம்பி இ க. (2011). கல்வி ஆய்வியல். கொழும்பு: சேமமடு பதிப்பகம்.

பக்கீர் ஜஃபார் இ ப. கா. (2015). தொகைசார் பகுப்பாய்வில் கருதுகோள் சோதனை. கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

பக்கீர் ஜஃபார் இ ப. கா. (2014). வெற்றிகரமான வகுப்பறைக் கற்பித்தல் பாடத்தைத் திட்டமிடல். கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

தேசிய கல்வி ஆணைக்குழு (1992). தேசிய கல்வி ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கை (ஏ-1992). கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களம்.

36

ஆசிரியர்களின் வகுப்பறைக் கற்பித்தலில் பாரம்பரிய மற்றும் நவீன கற்பித்தல் முறைகளின் செல்வாக்கு - ஓர் ஆய்வு

கந்தசாமி அபிலாஷ்
இலங்கை. abiabilash716@gmail.com

ஆய்வு அறிமுகம்

கல்வி மனித நாகரிகத்தின் மிக முக்கியமான பகுதிகளில் ஒன்றாகும், ஏனெனில், ஒரு நாட்டின் கல்வியின் வளர்ச்சி அதன் எதிர்கால வளர்ச்சியுடன் நெருக்கமாகத் தொடர்புடையது. பாரம்பரிய கற்பித்தல் முறை மாணவர்களுக்குப் புத்தக அறிவை வழங்க ஆசிரியர்களை மையமாகக் கொண்டது. புதிய சகாப்தத்தின் வளர்ச்சியுடன் அறிவியலும் தொழில்நுட்பமும் வளர்ச்சியடைந்துள்ளன. மக்களின் சிந்தனை பரந்துபட்டதால் மாணவர்கள் பாடப்புத்தகங்களிலிருந்து கற்க விரும்புவது மட்டுமின்றி, புதுமையான அறிவால் ஈர்க்கப்படுகிறார்கள். கற்பித்தலின் தரத்தை மேம்படுத்தவும் மாணவர்களுக்குச் சிறந்த கல்வியை வழங்கவும் நவீன கற்பித்தல் முறைகளில் பல தொழில்நுட்பக் கருவிகள் பயன்பாட்டிலுள்ளன.

ஆய்வுப் பின்னணி

அன்று தொட்டு இன்றுவரை மனப்பாடம் செய்வதற்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு ரீதியான மாற்றத்திற்குக் கொடுப்பது குறைவாகவுள்ளது. 21ஆம் நூற்றாண்டுக்கான தேர்ச்சிகளைப் பெறும் வகையில் ஆசிரியர்கள் இன்று பல சவால்களை எதிர்கொள்கின்றனர். இச்சூழலில் மாணவர்களுக்குப் பொருத்தமான கற்பித்தல் முறை, பாட உள்ளடக்கம், வகுப்பறை நுட்பங்கள் என்பவற்றிற்கிணங்க, மாணவர்களை மையமாகக் கொண்ட வகுப்பறைகளில் இரண்டு வெவ்வேறு கற்பித்தல் முறைகளில் நன்மைகளும் தீமைகளும் உள்ளன. பாரம்பரிய கற்பித்தல் முறைகள் மற்றும் நவீன கற்பித்தலில் புதிய

தொழில்நுட்பங்களின் விளைவுகளை விவாதித்து, ஒப்பிட்டுப் பார்த்து கற்பித்தலின் திறனையும் தரத்தையும் மேம்படுத்தும் பின்னணியில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

ஆய்வின் முக்கியத்துவம்

நவீன கற்பித்தலுக்கும் பாரம்பரிய வகுப்பறைக்கும் உள்ள வேறுபாடு, கற்பித்தல் முறைகளில் உள்ள வேறுபாடு மட்டுமல்ல, புதிய யோசனைகள், பழைய கருத்துகளின் அடிப்படையிலான வேறுபாடாகும். மாணவர்ளுக்கான கற்றலை விரைவுபடுத்தவும், 21ஆம் நூற்றாண்டுக்கான வகுப்பறைச் சவால்களைத் தீர்ப்பதில் ஆசிரியர்களின் திறன்களை வலுப்படுத்தும் வகையிலும், விசேட பயிற்சித் திட்டங்கள், வினைத்திறனான கற்பித்தலை ஊக்குவிக்கும் நெறிமுறைகள் என்பவற்றின் அடிப்படையில் நவீன வகுப்பறைக் கற்பித்தலில் பாரம்பரிய மற்றும் நவீன கற்பித்தல் முறைகளின் செல்வாக்கினை ஆராய்வதும், எதிர்கால ஆய்வுக்கான ஆழமான புரிதலுக்கும் இவ்வாய்வு முக்கியமானதாகும்.

ஆய்வின் பொது நோக்கம்

மட்டக்களப்புபு பிரதேசத்தில் ஒருங்கிணைந்த வகுப்பறைக் கற்பித்தலில் நவீன மற்றும் பாரம்பரிய கற்பித்தல் முறைகளின் நன்மைகளையும் தீமைகளையும் ஆராய்ந்து, ஆசிரியர்களின் வகுப்பறைக் கற்பித்தலில் மாணவர்களின் சூழ்நிலை, கற்பித்தல் நோக்கம், சாத்தியமான தடைகளுக்கேற்ப பொருத்தமான கற்பித்தல் முறையைத் தெரிவுசெய்து, முறையாக நடைமுறைப்படுத்துவதற்கான ஆலோசனைகள் வழிமுறைகள் ஆகியவற்றை முன்வைத்தல் இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது.

ஆய்வின் சிறப்பு நோக்கங்கள்

பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களின் கல்விப் பின்னணியை அறிதல், வகுப்பறைக் கற்பித்தலில் நவீன, பாரம்பரிய கற்பித்தல் முறைகளின் நன்மைகளை ஆராய்தல், வகுப்பறைக் கற்பித்தலில் நவீன, பாரம்பரிய கற்பித்தல் முறைகளின் தீமைகளை ஆராய்தல், சிறந்த வகுப்பறைக் கற்பித்தலுக்கான ஆலோசனைகளையும் வழிமுறைகளையும்

முன்வைத்தல் ஆகியன ஆய்வின் சிறப்பு நோக்கங்களாக அமைகின்றன.

ஆய்வு வினாக்கள்

பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களின் கல்விப் பின்னணியை அறிவது எவ்வாறு?

வகுப்பறைக் கற்பித்தலில் நவீன, பாரம்பரிய கற்பித்தல் முறைகளின் நன்மைகள் எவை?

வகுப்பறைக் கற்பித்தலில் நவீன, பாரம்பரிய கற்பித்தல் முறைகளின் தீமைகள் எவை?

சிறந்த வகுப்பறைக் கற்பித்தலுக்கான ஆலோசனைகள், வழிமுறைகள் எவை?

ஆய்வு முறையியல்: இது ஒரு கலப்பு ஆராய்ச்சி அணுகுமுறையுடன் கூடிய அளவை நிலை ஆய்வாகும்.

தரவு சேகரிப்பு முறை: இந்த ஆய்விற்கான தரவுகளைச் சேகரிக்க வினாக்காத்து, நேர்காணல், ஆவணங்கள் பயன்படுத்தப் பட்டன.

அட்டவணை-1: வலய மட்ட அடிப்படையிலான குடித்தொகைப்பரம்பல் - கல்குடா

கல்குடா வலய மட்ட விபரம்									
கோட்டம்	பாடசாலை வகை					ஆளணியினர்			
	தேசிய பாடசாலை	1AB	1C	வகை II	வகை III	மொத்தம்	மாண வர்கள்	ஆசிரி யர்கள்	அதி பர்கள்
1 ஏறாவூர் பற்று 2	-	03	01	04	15	23	9466	350	18
2 கோறளைப் பற்று	01	02	06	17	17	41	11771	564	26
3 கோறளைப் பற்று வடக்கு	-	01	03	09	07	20	4695	270	13
மொத்தம்	01	06	09	30	39	85	25932	1184	57
	85								

(மூலம்;வலயக் கல்வி அலுவலகம், திட்டமிடல் பிரிவு)

அட்டவணை-2: மாதிரிக் குடித்தொகை விபரம்

பாடசாலைகள்	வகை	துலங்கியோர்					
		மொத்த ஆசிரியர்கள்	மொத்த மாணவர்கள்	சிரேஷ்ட இடைநிலை ஆசிரியர்கள்	அதிபர்கள்	மாணவர்கள்	பெற்றோர்கள்
A	தேசிய பாடசாலை	68	1046	50	1	5	5
B	1C	34	700	24	1	5	5
C	1AB	56	1100	30	1	5	5
D	1AB	42	850	30	1	5	5
E	1C	37	375	16	1	5	5
மொத்தம்		237	4071	150	05	25	25

(மூலம்: ஆய்வாளரினால் தயாரிக்கப்பட்டது, 2024)

நோக்க மாதிரி அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட 5 பாடசாலைகளில் 5 அதிபர்களும், இலகு எழுமாற்று மாதிரி அடிப்படையில் 150 சிரேஷ்ட இடைநிலை (தரம்10&11) ஆசிரியர்களும், 5 பாடசாலைகளில் இருந்தும் 1:5 என்ற அடிப்படையில் 25 மாணவர்களும், தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களில் 1:1 என்ற அடிப்படையில் 25 பெற்றோர்களும் ஆய்விற்காகத் தெரிவு செய்யப்பட்டனர்

தரவுப் பகுப்பாய்வு: பெறப்பட்ட தரவுகள் அளவுசார், பண்புசார் முறையில் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு Microsoft Exel - 2017 முறையினைப் பயன்படுத்தி சலாகை, வட்ட வரைபுகள், முப்பரிமாண வரைபடம் மூலமாக பகுப்பாய்வு செய்யப்பட்டு வியாக்கியானமும் கலந்துரையாடலும் மேற்கொள்ளப்பட்டது.



உரு-2: பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களின் கல்விப் பின்னணி

பாடசாலைகளில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்



உரு-3: வகுப்பறைக் கற்பித்தலில் ஆசிரியர்களுக்கு போதுமான பயிற்சிகள்



உரு-4: கற்பித்தல் முறைகளின் நன்மை, தீமை பற்றிய ஆசிரியர்களது துலங்கல்

அட்டவணை-3: நவீன கற்பித்தலில் ICT, டிஜிட்டல் அறிவை வகுப்பறைகளில் பிரயோகிப்பது தொடர்பாக ஆசிரியர்களது திருத்தமான துலங்கல்

	வலுவாக ஏற்றுக் கொள்கிறேன்	ஏற்றுக் கொள்கிறேன்	கூறமுடியா துள்ளது	ஏற்றுக்கொள்ள வில்லை	வலுவாக ஏற்றுக் கொள்ளவில்லை
புள்ளிகள்	5	4	3	2	1
துலங்கல்கள்	30	80	10	10	20
	150	320	30	20	20

1.00 - 1.8 வலுவாக ஏற்றுக்கொள்ளவில்லை

1.81 - 2.6 ஏற்றுக்கொள்ளவில்லை

2.61 - 3.4 கூறமுடியாதுள்ளது

3.41 - 4.2 ஏற்றுக்கொள்கிறேன்

4.21 - 5.0 வலுவாக ஏற்றுக்கொள்கிறேன்

மொத்தம்:540 பெறுபேறு: 540/150 = 3.60

இதன்படி, இணைபுக்குணகம்(3.60) 'ஏற்றுக்கொள்கிறேன்' என்பதைச் சுட்டுகிறது. ஆகவே, ஆசிரியர்கள் நவீன கற்பித்தல் முறைகளில் உடன்பாடு கொண்டுள்ளனர்.

அட்டவணை-4: பாடசாலையில் ஆசிரியர்களது துலங்கல் (சராசரி மதிப்பீடு)

பாடசாலையில் ஆசிரியரது துலங்கல்	இணைபுக் குணகம்
வகுப்பறையில் பயன்படுத்தும் நவீன கற்பித்தல் பற்றி நீங்கள் எப்படி உணருகிறீர்கள்?	3.41
பாடசாலையின் இலக்கு மற்றும் ICT நடைமுறைகளுக்கும் இடையே உள்ள உறவு	3.53
பாடசாலை தொழில்முறை மேம்பாட்டுத் திட்டத்தில் தொழில் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டவரா?	3.30
பாடசாலையின் நீங்கள் ICT இனை வகுப்பறையில் பயன்படுத்துகிறீர்களா?	3.51

பாடசாலையில் பாரம்பரிய கற்பித்தலில் பாடசாலையின் அனுசரணையின் அளவு	3.35
பாடசாலையில் நவீன கற்பித்தலில் கல்விக்கான செயற்பாடுகள், கண்காணிப்புக்கள், மதிப்பீடுகள்	3.56
நவீன கற்பித்தல் நடைமுறையில் அதிபர்கள் ஏனைய பாட ஆசிரியர்களின் ஆதரவு	3.30
மாணவர்களது டிஜிட்டல் கற்பித்தல் மதிப்பீட்டில் உங்கள் விழிப்புணர்வு, ஆதரவின் அளவு	3.30
எல்லாப் பாடங்களிலும் மாணவர்களது புள்ளிப் பகுப்பாய்வு, மதிப்பீடு, பரிகார கற்பித்தல், சிகிச்சைமுறை, கற்பித்தல் டிஜிட்டல் சாதனங்கள், நவீன கற்பித்தல் முறைகளில் ICT பயன்படுத்தப்படுகிறதா?	3.56

(உரு-4: கற்பித்தல் முறை பற்றிய அனைவரினதும் துலங்கல்)



உரு-5: நவீன கற்பித்தலில் ஐஊவு பயன்பாடு தொடர்பாக ஆசிரியரது துலங்கல்

முடிவுகள்

கல்குடா வலயத்தின் சிரேஷ்ட இடைநிலை ஆசிரியர்களின் கல்விப் பின்னணியில் அதிகமான ஆசிரியர்கள்(34.30 %) டிப்ளோமாதாரிகளாவர். பெரும்பாலான ஆசிரியர்கள் மிசிஜிஇல் 'போதிய அறிவின்மை' காரணமாக பாரம்பரிய கற்பித்தல் முறையை அதிகம் நாடினர் என்பதுவும் கண்டறியப்பட்டது. ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் தடைகளுக்குப் பிரதான காரணம் போதிய பயிற்சியின்மையாகும் (அதிபர்கள்40 %, ஆசிரியர்கள்55 %, பெற்றோர்கள்30 %). அந்தவகையில், பாரம்பரிய கற்பித்தல்

முறையில் கையாள்வது இலகு(59 %), நேர விரயம் குறைவு(38 %), வாண்மைத்துவ மேம்பாடு(32 %), பாதுகாப்பு, உடல் பாதிப்பு தாக்கம் குறைவு(30 %) காரணமாக வகுப்பறைகளில் பயன்படுத்துவது நன்மையாகும்.

பாரம்பரிய கற்பித்தல் முறையானது விரைவு, நம்பகம், தகுதி, வாண்மைத்துவம், தொழில்முறைமேம்பாடு, மதிப்பீடு என்பவற்றில் தீமையளிக்கின்றன. நவீன கற்பித்தல் முறையில் உள்ள செயற்றிட்டங்கள், கருத்தரங்குகள், நிகழ்ச்சிகள்(53 %), வாண்மைத்துவ மேம்பாடு(68 %), தொழில்முறை மேம்பாடு, மதிப்பீடு(57 %) தொடர்பில் அதிக பங்களிப்பு வகிக்கிறது. நவீன கற்பித்தல் முறையில் விரைவு, நம்பகம், தகுதி, நியாயம் ஆகியவற்றின் அடிப்படையில் நன்மையானதாகும். எனினும் பாதுகாப்பு, உடல் பாதிப்பு தாக்கம் அதிகம்(70 %), கையாள்வது கடினம்(41 %), நேர விரயம் அதிகம்(62 %) தொடர்பில் நவீன முறையானது தீமையானதாகும்.

றிஞிறி மதிப்பீட்டுச் செயற்பாடுகள் இவ்வலயத்தில் சிறப்பாக உள்ளது. எனினும், வகுப்பறை நடைமுறையில் கற்பித்தல் முறைகளைத் தெரிவுசெய்வதில் மிசிஜிஇன் பங்களிப்பு அதிகமாகும். பாடத்திட்டம் தொடர்பான ஆசிரியர்களின் திறன்கள், மதிப்பீடு, கணிப்பீடு முதலானவை கல்குடா வலயத்தில் ஓரளவு சிறப்பாக உள்ளது. பாடசாலைகளில் ஆசிரியர்களின் வகுப்பறைச் செயற்பாடுகளில் அதிபர்களின் பங்களிப்பு அதிகமாகும். கல்குடா வலயத்தில் ஐஊவு பாடசாலைக் கல்வியை நடைமுறைப்படுத்தப் போதிய ஆதரவு, நிதி நடைமுறைகள், வளங்கள் போதுமானதாக இல்லை. மட்டக்களப்பு மாவட்டத்தில் ICTஇன் நடைமுறைகளில் வலயவாரியாக மாறுபாடுகள் உள்ளன. ICTஐ பாடசாலையுடன் இணைப்பதற்கான தரக் குறிகாட்டிகளான இணையம், வலைப்பதிவுகள், சமூக ஊடகங்கங்கள் போன்றவை வகுப்பறைகளில் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன.

விதந்துரைப்புக்கள்

கொவிட்-19 இன் வருகையானது ஒட்டுமொத்த கல்வியுலகில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி விட்டது. எனினும், மாணவர்களின் சூழ்நிலை, கற்பித்தல் நோக்கம், சாத்தியமான தடைகளுக்கு ஏற்ப எந்தக் கற்பித்தல் முறையை எவ்வாறு, எப்படி சரியாகப்

பயன்படுத்துவது மட்டுமின்றி கற்பிக்கும் முறைகளில் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும். இன்றைய பாடசாலைகளில் பாடசாலைகளின் தரத்தையும், ஆசிரியர்களின் றிஞ்சி இனைத் தீர்மானிப்பதிலும் ICT திறன்களின் பயன்பாடானது மிகவும் முக்கியமானதாக அமைகின்றது.பொதுவாக ஒவ்வொரு ஆசிரியரும் மாணவர்களுக்கு ICT இன் முக்கியத்துவம், நன்மை, தீமை பற்றிய விழிப்புணர்வை வழங்க பாடசாலை மட்டக் குழுக்களை உருவாக்கலாம். அந்தவகையில், ஒவ்வொரு பாடசாலையிலும் PDP மதிப்பீடு செய்யப்பட வேண்டியது அவசியமாகின்றது. அதற்கான உள்ளக மேற்பார்வை, சிறப்புக் குழுக்கள், செயற்றிட்டங்கள், நிகழ்ச்சிகள் என்பன மாகாண, வலய ரீதியாக வலுப்பெற வேண்டும்.

வகுப்பறைக் கற்பித்தலில் ICT மேம்பாட்டிற்கு போதுமான மனித, பௌதீக வளங்களை நெறிப்படுத்தி ஆசிரிய துணைக்குழுக்களை உருவாக்கி செயற்படுத்தலாம்: கணினி ஆய்வுகூடங்கள், வெளிநாட்டு புலமைப்பரிசில்கள், NVQ வகுப்புக்கள் முதலானவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம். ICT ஒருங்கிணைப்பின் மூலம் புதிய நோக்கங்களையும் குறிகாட்டிகளையும் பாடசாலைகளில் உருவாக்க வேண்டும். மாகாண, வலய ரீதியாக இடம்பெறும் செயற்றிட்டங்களை துரிதப்படுத்த வேண்டும். உதாரணமாக ICT தொடர்பான பெற்றோர் விழிப்புணர்வு, JEP> SBPTD> EPSI> GEMP ஆகியவற்றின் மூலமாக ஆசிரியர்களும் பெற்றோரும் பாடசாலையில் மதிப்புமிக்க வளங்களாக, பாடசாலைகளில் சிறந்த பயிற்சித் திட்டத்தை உருவாக்குவதில் தங்களைப் பங்காளிகளாகப் பார்க்க ஊக்குவிக்கப்பட வேண்டும்.

உசாத்துணைகள்

அருள்மொழி, செ. (2017). கற்பித்தலுக்கான உளவியல். மட்டக்களப்பு: துர்க்கா பிரின்டர்ஸ்.

கருணாநிதி, மா. (2008). கற்றல் கற்பித்தல் மேம்பாட்டுக்கான வழிமுறைகள். கொழும்பு: சேமமடு பதிப்பகம்.

சின்னத்தம்பி, மா.(2004). ஆசிரியர்களின் வகிபங்கும் அந்தஸ்தும், அகவிழி-(01). கொழும்பு: வின்சு பப்ளிகேசன்.

சோபா, பா. (2013). இலங்கையின் கட்டாயக்கல்வி நடைமுறைகள். மட்டக்களப்பு: சக்தி அச்சகம்.

Anderson, C. R. Traditional Versus Modern Teaching Methods Amongst Special Education Students and Enhancing Students' Self-Concept: A Comprehensive Literature Review. (2022).

Covill, A. E. College students' perceptions of the traditional lecture method. College Student Journal, 45(1),92+.(2011) <https://www.researchgate.net/publications/368491>

Boumová, V. Traditional vs.modern teaching methods: Advantages and disadvantages of each. Doctoral dissertation, Masarykova univerzita, Filozofická fakulta.(2008).

Jackson, J., andG. Ash. (2017). Science achievement for all: Improving science performance and closing achievement gaps. Journal of Science Teacher Education23(7):723-744.

<https://www.essaysauce.com/education-essays/application-of-multimedia-in-education/>

LIST OF ABBREVIATION: ICT- Information and Communication Technology, PDP- Professional Develoment Project, PD- Professional Develoment

37

பின்தங்கிய கிராமப் பாடசாலைகளில் கல்வி கற்கும் பெண் மாணவர்களின் இடைவிலகல்

(மட்டக்களப்பு மண்முனை தென்மேற்குக் கல்விக்கோட்டப் பாடசாலைகளை அடிப்படையாகக்கொண்ட ஆய்வு)

தேவரூபன் ஸியாணி
இலங்கை. shiyanishiya93@gmail.com

ஆய்வு அறிமுகம்

இயற்கையுடன் கூடி வாழ்ந்த மனிதர்கள் இயற்கைக்குப் பயந்தும் வாழ்ந்தார்கள் தன் அறிவுக்கு அப்பாற்பட்டு உணர்வு நிலையில் நின்று தமது வாழ்வியலுடன் சில நம்பிக்கைகள் அல்லது மனப்பாங்குகளை உருவாக்கிக் கொண்டார்கள். தான் கட்டியெழுப்பிய நம்பிக்கைகளின் அடிப்படையில் தொடர்ந்து வாழவும் பழகிக்கொண்டார்கள். பின்னர் அவை அம்மனிதர்களது பாரம்பரிய நம்பிக்கைகளாகவும் பழக்கவழக்கங்களாகவும் மாறிப்போயின. தொன்றுதொட்டு பேணப்பட்டு வருகின்ற நம்பிக்கைகளையும், பழக்கங்களையும் மீறி செயல்படுபவர்களை தண்டித்தும் கொண்டனர். இது காரணமாக இத்தகைய பாரம்பரிய நம்பிக்கைகள் மனிதனின் வாழ்வியலில் பிரிக்க முடியாத ஒரு அங்கமாக மாறிப்போயின. இத்தகைய நம்பிக்கைகள் அல்லது பழக்கவழக்கங்கள் அறிவு நிலைக்கு அப்பாற்றபட்டு உணர்வு நிலை சார்ந்து கட்டமைக்கப்பட்டமையால் இன்றைய அறிவியக்கச் சூழ்நிலையில் பெரும்பாலும் பொருத்தமற்றனவாகவும் பிற்போக்குத்தன்மை கொண்டனவாகவும் விளங்குகின்றன.

நவீன சிந்தனைத் தளத்தில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டபோதிலும் இன்றும் சில கிராமங்களில் அறிவியக்கத்திற்கு

அப்பாற்பட்டனவாகிய இத்தகைய சமூக நம்பிக்கைகள் - பழக்கவழக்கங்கள் பேணப்பட்டே வருகின்றன. இக்கருத்தியலின் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களான கொல்லநுலை, மாவடிமுன்மாரி, நாற்பதுவட்டை ஆகிய மூன்று கிராமங்களிலுள்ள பாடசாலைகளை மையப்படுத்தி பெண் மாணவர்களின் இடைவிலகல் குறித்து இவ்வாய்வு அமைகிறது.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரை என அழைக்கப்படுகின்ற பிரதேசம் மிக நீண்ட காலமாக யுத்தத்தால் பாதிக்கப்பட்டதோடு பொருளாதாரம், கல்வி, வைத்திய வசதிகள் சார்ந்து மிகவும் பின்தங்கிய நிலையிலும் இருந்து வருகிறது. இப்பெரு நிலப் பரப்பிலுள்ள பல கிராமங்களில் இன்று பல்வேறு ஆரோக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றபோதிலும் இப்பிரதேசத்தின் எல்லைக்கிராமங்களில் பாடசாலைக் கல்வி பின்னடைந்த நிலையிலேயே காணப்படுகின்றது. குறிப்பாக மாணவர்கள் இளவயதில் பாடசாலைக் கல்விக்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற நிலை காணப்படுகின்றது. மாணவர்களின் இடை விலகலுக்குப் பொதுவான பல காரணங்கள் உள்ளபோதிலும் பெண் மாணவர்களின் இடைவிலகல் அதிகமாகக் காணப்படுவதனால் அவர்களின் இடைவிலகலுக்கு அடிப்படைக்காரணங்கள் இருக்கவேண்டும் என்ற வகையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்;றது. அதனடிப்படையில் படுவான்கரைப் பிரதேசத்தின் மண்முனை தென்மேற்குக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட எல்லைக் கிராமங்களில் பாடசாலைக் கல்வியைத் தொடருகின்ற மாணவர்கள் இடை விலகிப் போகும் சந்தர்ப்பங்கள் அதிகமாக காணப்படுகின்றன. அதிலும் பெண்களின் இடைவிலகலானது மாவடிமுன்மாரி, நாற்பதுவட்டை, கொல்லநுலை ஆகிய மூன்று கிராமங்களை ஆய்வுப் பிரதேசமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

ஆய்வுப் பிரச்சினை

கிராமியப் பண்பாட்டோடு மிகவும் பின்னிப்பிணைந்தன வாகவும் கல்வி, பொருளாதாரம், வைத்திய வசதிகள், போக்குவரத்து முதலானவை சார்ந்து பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றன

வுமான கிராமப் பாடசாலைகளில் மாணவர்களின் இடைவிலகல் இன்றும் பெரும் பிரச்சினையாகவே உள்ளது. அதிலும் குறிப்பாக பெண் மாணவர்களின் இடைவிலகல் கூடுதலாகக் காணப்படுகின்றது. இதற்கான காரணம் என்னவென்பது அறியப்படவேண்டியதாகும். இதுவே இவ்வாய்வின் ஆய்வுப்பிரச்சினையாகும்.

ஆய்வு நோக்கம்

மட்டக்களப்பு மண்முனை தென்மேற்குக் கல்விக்கோட்ட எல்லைக் கிராம பாடசாலைகளில் பெண் மாணவர்களின் இடைவிலகலானது தொடர்ந்தவண்ணமாகவே இருக்கின்றது. இத்தகைய ஆரோக்கியமற்ற செயற்பாடு இன்றைய தலைமுறையினரை மட்டுமல்லாது அடுத்து வரும் புதிய தலைமுறையினரையும் பாரிய சவால்களுக்கு முகம் கொடுக்கச்செய்யும். ஆகவே மாணவர்களின் இடைவிலகலுக்கான காரணங்களைக் கண்டறிந்து சமூகத்திலே விழிப்புணர்வை எற்படுத்தி இடைவிலகலை எதிர்காலத்தில் களையும் வகையிலேயே இவ் ஆய்வின் பொது நோக்கமும் சிறப்பு நோக்கங்களும் அமைந்துள்ளன.

பொதுநோக்கம்

மட்டக்களப்பு மண்முனை தென்மேற்குக்கல்விக் கோட்ட எல்லைக் கிராம பாடசாலைகளில் பெண் மாணவர்களின் இடைவிலகலுக்கான காரணிகளை கண்டறிந்து அக் காரணிகளை இழிவளவாக்குவதன் மூலம் எதிர்கால சந்ததியினரை நவீன காலத்திற்கு ஏற்றாற் போல் வழிப்படுத்துவதே இவ்வாய்வின் பொதுநோக்கமாகும்.

சிறப்பு நோக்கம்

எல்லை கிராமப்பகுதி பாடசாலைகளில் பெண் மாணவர்களின் இடைவிலகலுக்கான காரணங்களைக் கண்டறிதல்.

இக்காரணங்கள் இச்சமூகத்தில் எவ்வாறான சவால்களை ஏற்படுத்துகின்றன என்பதனை இனங்காண்டு அதற்கான பரிந்துரைகளை முன்வைத்தல்.

ஆய்வு முறையியல்

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பிரதேசத்திலுள்ள மண்முனை தென்மேற்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட எல்லை கிராமங்களாகிய கொல்லநுலை, மாவடிமுன்மாரி, நாற்பதுவட்டை ஆகிய கிராமங்கள் இவ்வாய்விற்காகத் தெரிவு செய்யப்பட்டன. ஆய்வு நோக்கத்தினை அடைந்து கொள்வதற்காக பண்பு ரீதியான ஆய்வு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வானது சமூக விஞ்ஞான ஆய்வு என்ற அடிப்படையில் இதன் முதலாம் நிலை நுட்பமுறையாக நோக்கமாதிரியின் அடிப்படையில் 20 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு வினாக் கொத்து மூலம் தரவுகள் பெறப்பட்டன. மேலும் கிராம அதிகாரிஇ ஆலய தர்மகர்த்தா, கிராமத் தலைவர்கள், முதியோர்கள், பழைய மாணவர்கள் ஆகியோரிடம் நேர்காணல்களும் கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்பட்டு முதலாம் நிலைத் தரவுகள் பெறப்பட்டன. மட்டக்களப்பு மாவட்ட மாணவர்களின் இடைவிலகலுடனும் பண்பாட்டு நடைமுறைகளுடனும் தொடர்புடைய ஆய்வுக் கருத்துக்கள் இரண்டாம் நிலைத் தரவுகளாகக் கருத்திற்கொள்ளப்பட்டன. அவை அனைத்தும் பகுப்பாய்வு செய்யப்பட்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பகுப்பாய்வும் கலந்துரையாடலும்

உலக நாடுகளில் மட்டுமன்றி இலங்கையிலும் கூட பாடசாலைக் கல்வி நவீனப்படுத்தப்பட்டு வருகின்றமை அறிந்ததொன்றாகும். தென்னாசிய நாடுகளுள் இலங்கையே எழுத்தறிவு வீதம் கூடிய நாடாகவும் காணப்படுகின்றது. எனினும் கல்வியறிவினூடான முற்போக்குச் சிந்தனைகள் இலங்கைச் சூழலில் பரவலாக வளர்ச்சிபெறவில்லையென்றே கூறமுடியும். குறிப்பாக விவசாயப் பண்பாட்டோடு மிகவும் நெருங்கிய பிணைப்புடையனவாகவும் பொருளாதாரம், போக்குவரத்து, சுகாதார வசதிகள் குறைந்தனவாகவும் அதன் காரணமாகப் பின்தங்கிய நிலையிலும் உள்ள கிராமங்களில் கல்வி சார்ந்த விழிப்புணர்வு போதுமான அளவு ஏற்படவில்லையென்றே கூறலாம். குறித்த கிராமங்களில் இன்றுவரையும் தொடருகின்ற மாணவர் இடைவிலகல் இதற்கான சான்றாகவுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒரு பகுதியாகக் காணப்படுகின்ற படுவான்கரைப் பிரதேசத்திலுள்ள எல்லைக்

கிராமங்களில் இந்நிலை அதிகமாகக் காணப்படுகின்றது. இக்கிராமங்களில் கல்வி கற்கின்ற ஆசிரியர்கள் பாடசாலைகளில் வளப் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் அதேவேளை மாணவர்களை பாடசாலைக்கு வரவழைப்பதிலும் சவால்களையே எதிர்நோக்குகின்றனர். வெகு தொலைவிலிருந்து எல்லைக் கிராமப் பாடசாலைகளுக்குச் செல்லுகின்ற ஆசிரியர்கள் மாணவர்களின் வீடுகளுக்குப் பிள்ளைகளைத் தேடிச் செல்கின்ற துயர நிலை காணப்படுகின்றது. அதேவேளை பெண்பிள்ளைகளைப் பருவம் அடைந்த பின்னர் பாடசாலைகளுக்கு அனுப்புவதற்குப் பெற்றோர் அக்கறை காட்டாத நிலையும் உள்ளது. இதனால் இடைவிலகலில் ஒரு பகுதியினர் பருவம் அடைந்த பெண் பிள்ளைகளாக உள்ளனர். குறிப்பாக மட்டக்களப்பு மேற்கு வலயத்தில் பெறப்பட்ட தகவலின்படி கடந்த மூன்று வருடங்களில் ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்ட கொல்லநுலை, மாவடிமுன்மாரி, நாற்பது வட்டை ஆகிய கிராமப் பாடசாலைகளைச் சேர்ந்த 37 பெண் மாணவர்கள் இடைவிலகியுள்ளனர். இதற்கான காரணம் கண்டறியப்படவேண்டியது அவசியமாகும்.

குறித்த கிராமங்களை மையப்படுத்திப் பெறப்பட்ட தகவல்களைப் பகுப்பாய்வு செய்ததன் அடிப்படையில் பெண் மாணவர்களின் இடைவிலகலுக்குப் பின்வரும் காரணங்கள் கிடைக்கப்பெற்றன. அவை பகுப்பாய்வுசெய்யப்பட்டு இங்கு முன்வைக்கப்படுகின்றன.

எல்லைக் கிராமப்பகுதிப் பாடசாலைகளில் கல்வி கற்கும் பெண் மாணவர்களின் இடைவிலக்கலுக்கான காரணங்கள் எவை எனக் கண்டறியும் பொருட்டு பாடசாலை ஆசிரியர்களிடமும் ஊர் மக்களிடமும் வழங்கப்பட்ட வினாக்கொத்து மற்றும் நேர்காணல்கள் என்பவற்றுக்கு அமைவாக சில காரணங்கள் கண்டறியப்பட்டன. அதற்கு அமைய வறுமை நிலையை 12 சதவீதமானவர்களும், எழுத வாசிக்கத் தெரியாமையை 09 சதவீதமானவர்களும், கற்றலில் ஆர்வமின்மையை 07 சதவீதமானவர்களும் கூறியதோடு ஏனைய 72 சதவீதமானவர்கள் வழங்கிய காரணங்கள் இக்கிராமங்களில் காணப்படுகின்ற சமூக நம்பிக்கைகள், பண்பாட்டு நடைமுறைகள் சார்ந்தனவாகவே காணப்பட்டன.

போக்குவரத்து பாதுகாப்பற்றதாகக் காணப்படுதல்

எல்லைக் கிராமங்களாகக் காணப்படுகின்ற குறித்த கிராமங்கள் காடுகள் நிறைந்தவை. மக்கள் செறிவு குறைந்தவை. குறிப்பாக மக்கள் ஒரு குறிப்பிட்ட இடப் பரப்பினுள் வசிக்காது பரந்த பிரதேசத்திற்குள் வாழும் நிலை காணப்படுவதனால் 6 தொடக்கம் 10 கிலோமீற்றர் தொலைவிலிருந்தும் மாணவர்கள் பாடசாலைக்குக் கல்வி கற்கச் செல்லவேண்டிய நிலை காணப்படுகின்றது. காடுகள் சூழ்ந்ததும் மக்கள் நடமாட்டம் குறைந்ததுமான பாதைகளினூடாக பருவமடைந்த பெண் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வதை பெற்றோர் விரும்பாத நிலை காணப்படுகின்றது. இக்கருத்தினை 32 வீதமானவர்கள் முன்வைத்தனர். தொலை தூரங்களிலிருந்து காட்டு வழிகளினூடாகப் பெண் மாணவர்கள் சென்று வருதல் பாதுகாப்பற்றது என்று கருதுவது பெண்களை மென்மையானவர் களாகவும் பலமற்றவர்களாகவும் கருதுகின்ற மனநிலை என்பதற்கும் அப்பால் ஆண்களால் வளர்ந்த பெண் பிள்ளைகளுக்கு பாலியல் சார்ந்த துன்புறுத்தல்கள் ஏற்படுத்தப்படலாம் என்பதையும் நேர்காணல்களின்போது 40 வீதமானவர்கள் குறிப்பிட்டனர். ஆண்களுக்குச் சமனாக பெண்களும் உலக அளவில் நாளும் சாதனைகளை நிகழ்த்தி வருகின்ற சூழலில் போக்குவரத்துப் பயணங்களின்போது பெண்களுக்கு உடலிலயல் சார்ந்த துன்புறத்தல்கள் ஏற்படும் என்பதனைக் கருத்திற்கொண்டு வளர்ந்த பெண் பிள்ளைகளைத் தொடர்ந்தும் கல்வி கற்க விரும்பாமையை அல்லது அனுமதிக்காமையை இவ்வாய்வினூடாக அறிய முடிந்தது.

பெண் பிள்ளைகள் அதிகம் படிக்கத்தேவையில்லை என்ற மனப்பாங்கு

ஆண்களை முதன்மைப்படுத்துகின்ற மனப்பாங்கு இன்றும் இக்கிராமங்களில் காணப்படுவதை இவ்வாய்வினூடாகக் கண்டறிய முடிந்தது. பெண் பிள்ளைகள் வீட்டுக் கடமைகளைச் செய்பவர்கள் என்றும் கணவனைத் தெய்வமாகக் கருதி பணிவிடைகளை மேற்கொள்கின்றவர்கள் என்றும் குழந்தைகளைப் பெற்று வளர்ப்பவள் என்றும் கருதுகின்ற மனப்பாங்கு ஆழ ஊறிப்போன சமூகச் சூழலில் பெண் பிள்ளைகள் அதிகம் படிக்கத் தேவையில்லை என்ற முடிவை எட்டுவதென்பது

தவிர்க்கமுடியாததாகும். இதனடிப்படையிலேயே 18 வீதானவர்கள் பெண் பிள்ளைகள் அதிகம் படிக்கத் தேவையில்லை என்ற மனப்பாங்குடையவர்களாக உள்ளார்கள் என்பதை அறிய முடிந்தது.

பருவமடைந்த பெண் பிள்ளைகளை வீட்டைவிட்டு வெளியே அனுப்ப விரும்பாமை

பெண் பிள்ளைகளை பெற்றார் வெளியிடங்களுக்கு அனுப்பி கல்வி கற்க விரும்பாமையினால் அவர்கள் இடைவிலகலை எதிர்கொள்கின்றனர் என்ற காரணத்தை 12 சதவீதாமானவர்கள் முன்வைத்தனர். ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட மூன்று கிராமங்களிலும் உயர்தரம் படிப்பதற்கான வசதிகளைக் கொண்ட பாடசாலைகள் இல்லை. அதனால் க.பொ.த. சாதாரண தரம் வரைக் கல்வி கற்று சித்தியடைந்த மாணவர்களும் கூட தமது ஊரையும் பெற்றாரையும் பிரிந்து செல்ல விருப்பமில்லாத நிலை காணப்படுகின்றது. அத்தோடு மாணவர்கள் கல்வி கற்பதற்கு விரும்பினாலும் தமது பிள்ளைகள் தம்மோடு இருப்பதே பாதுகாப்பானது என்று கருதுகின்ற பெற்றோரும் காணப்படுகின்றனர். இக்காரணங்களினால் பெண் பிள்ளைகள் தொடர்ந்தும் கல்வி கற்பது பெரும் சவாலாகவே உள்ளது. அத்தோடு இடைவிலகும் நிலையும் தொடருகின்றமையைக் காணலாம்.

இளவயதில் திருமணம் செய்து வைக்கும் பழக்கம்

இளவயதில் பிள்ளைகளுக்குத் திருமணத்தைச் செய்துகொடுக்கின்றமையினால் அவர்கள் இடைவிலகிக்கொள்கின்றனர் என்ற காரணத்தை 10 சதவீதமானவர்கள் முன்வைத்தனர். எல்லைக் கிராமங்களில் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் கலவன் பாடசாலைகளாகவே காணப்படுகின்றன. பெண் பிள்ளைகள் பருவமடைந்த பின்னர் அவர்களுள் உளவியல் ரீதியான மாற்றங்களினால் உண்டாகும் கட்டிளமைக்கால பிரச்சினைகளில் குறிப்பாக எதிர்ப்பாற்கவர்ச்சியினை சுமூகமாக கையாளும் நிலையை விடுத்து பெற்றோரில் ஒரு பிரிவினர், அவர்களை பாடசாலைகளில் இருந்து இடைவிலக்குவதுடன் இளவயதில் திருமணம் செய்து வைப்பதன் ஊடாக அப்பெண் பிள்ளைகளை எளிதில் பாதுகாத்து விட்டோம் என்ற மனநிலையை பெறுகின்றனர். பெற்றோரில் பிறிதொரு சாரார் தமது கிராமங்களில்

காணப்படுகின்ற இளவயது திருமண நடைமுறைகளுக்கு அமைய பெண் பிள்ளைகளுக்குத் திருமணம் பற்றிய எண்ணத்தை ஊட்டி திருமணத்தினையும் செய்து வைக்கின்றனர். இதுவும் இக் கிராமங்களில் பெண் பிள்ளைகளின் கல்வி இடை நிற்பதற்கு காரணமாக அமைந்துள்ளது.

முடிவுரையும் பரிந்துரைகளும்

'பின்தங்கிய கிராமப் பாடசாலைகளில் கல்வி கற்கும் பெண் மாணவர்களின் இடைவிலகல்' என்ற ஆய்வானது மண்முனை தென்மேற்குக் கல்விக்கோட்டப் பாடசாலைகளை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வுப் பகுப்பாய்வில் இடைவிலகலுக்கான காரணங்கள் கண்டறியப்பட்டு அதன் பிரகாரம் முடிவுகளும் பரிந்துரைகளும் முன்வைக்கப் பட்டன.

முடிவுகள்

இவ்வாய்வின் அடிப்படையில் பெண் மாணவர்களின் இடைவிலகலுக்கான காரணங்களாக வறுமையை 12 சதவீதமானவர்களும், எழுத வாசிக்கத் தெரியாமையை 09 சதவீதமானவர்களும், கற்றலில் ஆர்வமின்மையை 07 சதவீதமானவர்களும் முன்வைத்தனர். 72 சதவீதமானவர்களின் காரணங்கள் குறித்த கிராமங்களில் காணப்படுகின்ற சமூக நம்பிக்கைகள், பண்பாட்டு நடைமுறைகள் சார்ந்தனவாகவே காணப்பட்டன. குறிப்பாக பெண் மாணவர்களுக்குப் போக்குவரத்து பாதுகாப்பற்றதாகக் காணப்படுதல்இ பெண் பிள்ளைகள் அதிகம் படிக்கத்தேவையில்லை என்ற மனப்பாங்கு, பருவமடைந்த பெண் பிள்ளைகளை வீட்டைவிட்டு வெளியே அனுப்பப் பெற்றார் விரும்பாமைஇ இளவயதில் திருமணம் செய்து வைக்கும் பழக்கம் ஆகிய காரணங்களின் அடிப்படையிலேயே பெண் பிள்ளைகள் இடைவிலகுவதாகக் குறிப்பிட்டனர். இக்காரணங்களை ஆழ்ந்து நோக்குகின்றபோது பெண்கள் குறித்து இக்கிராமத்திலுள்ள ஒரு சாராரிடம் காணப்படுகின்ற நம்பிக்கைகள், பழக்கவழங்கங்கள் சார்ந்த பிற்போக்குக் கருத்தியலே காரணம் என்பதைக் கண்டறியமுடிகின்றது. மேலும் பெண்களை மென்மையானவர் களாகவும், வீட்டுக்கடமைகளை மேற்கொள்கின்றவர்கள் என்பதால் அதிகம் படிக்கத்தேவையில்லை என்றும் அவர்களுக்கு

திருமணமே பாதுகாப்பானது என்றும் கருதுகின்ற மனநிலையும் வெளிப்படுகிறது.

பரிந்துரைகள்

பின்தங்கிய கிராமப் பாடசாலைகளில் கல்வி கற்கும் பெண் மாணவர்களின் இடைவிலகலை இழிவளவாக்க ஆய்வாளரினால் இவ் ஆய்வின் ஊடாக சில பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

வறுமையை காரணமாகக் கொண்டு இடைவிலகலை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு அரசாங்கத்தின் ஊடாகவோ அல்லது சமூக அறக்கட்டளைகளின் ஊடாகவோ கல்வி சார் நிதி உதவிகளை பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

அரசோஇ சமூக அமைப்புகளோ மக்கள் மத்தியில் அதிகமான பெண் கல்வி விழிப்புணர்வு செயற்பாடுகளை அம் மக்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் மேற்கொள்ளுதல். உதாரணம்: வீதி நாடகங்கள்

அத்தோடு எதிர்கால சமுதாயத்தில் பெண்களின் வகிபாகத்தை புரிய வைப்பதன் ஊடாகவோ பெண்களுக்கு அதிகரித்த தலைமைத்துவ பயிற்சியை வழங்குவதன் ஊடாகவோ பெண்களை வலுப்படுத்த முடியும். இதனுடாக சமமான வாய்ப்பை வழங்குவதன் மூலம் பெண்களுக்கு உலக நடவடிக்கைகள் தெரிந்து விஞ்ஞான ரீதியாக சிந்திக்கும் ஆற்றல் அதிகரிக்கும். ஒவ்வொரு விடயத்தையும் விஞ்ஞான ரீதியாக சிந்திக்க வைக்கும் சில கருத்தரங்குகளை மேற்கொள்ளுவதன் மூலம் அவ்விடத்திற்கு பின்னால் உள்ள காரண காரிய தொடர்பை விளக்க முடியும்.

பெண் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் அதன் மூலம் ஏற்படும் சமூக, பொருளாதார, வளர்ச்சி போன்றவை தொடர்பான சமூக ஆதரவை திரட்டும் நோக்குடன் கல்வி நிறுவனங்களும் அரசாங்கங்களும் செயற்பட வேண்டும். உதாரணம்: இக் கிராமப் பாடசாலைகளை க.பொ.த.உயர்தரத்தினை கொண்ட பாடசாலைகளாக தரம் உயர்த்த வேண்டும்.

பல்வேறு அடிப்படைகளில் பின்தங்கிய நிலையிலுள்ள பெண்களுக்குத் தொடர்ந்தும் கல்வி கற்பதற்கான சூழலை ஏற்படுத்த பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும்.

உசாத்துணைகள்

முத்துலிங்கம்,ச., (2016). கல்வியும் உளவியல், கொழும்பு: சேமமடு பதிப்பகம்.

முனைவர் காந்தி.கா. (2008) தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், கொழும்பு: சேமமடு பதிப்பகம்.

மேகராசா,த., (2015). 'மட்டக்களப்பு படுவான்கரைப் பிரதேசத்தின் இன்றைய கல்வி நிலை: சவால்களும் சாத்தியப்பாடுகளும்', சுயம்பு, மலர் 04, பட்டிப்பளை: மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகம்.

38

பழையசோற்றின் மருத்துவப் பயன்களும் விழிப்புணர்வும் - ஓர் ஆய்வுப் பார்வை

மருத்துவர் கணேஸ் ஸ்ரீதரன்,
ஹேர்பல் கெல்த் கெயார், சென்ரர், கொக்குவில்,
gsritharan09@gmail.com

மருத்துவர் சபாரட்ணம் கணேசன்,
மருத்துவ அதிகாரி, யாழ் மாநகரசபை, யாழ்ப்பாணம்.

அறிமுகம்

தமிழரிடையே பல தலைமுறைகளாக வழக்கத்தில் இருக்கும் ஓர் உணவு 'பழையசாதம்' ஆகும். இது ஓர் எளிய உணவுமுறை. ஆனால், இதிலுள்ள சத்துக்கள் ஏராளம். கிராமங்களில் வெயிலில் வாடி வதங்கி வருபவர்கள் உரிமையோடு கேட்கும் உணவு இதுவாகும். உடல் உஷ்ணத்தைக் குறைப்பதோடு உடலுக்குச் சக்தியையும் சேர்த்துத் தரும் அற்புத ஆகாரமாகும் (Caius,1986). ஆங்கிலேயர்களின் வருகையினால் அறிமுகமான கோப்பி, தேநீர் போன்றவை இதனை மெல்ல மெல்ல ஓரங்கட்டிவிட்டது. பழைய சோறு இருக்குமிடத்தில் தமிழர் பாரம்பரியத்தில் ஆரோக்கியத்தைப் பேணிப் பாதுகாத்து வந்த பழையசோற்றை ஏழைகளின் உணவு என்று சொல்ல ஆரம்பித்துவிட்டனர். தற்போது கோதுமைப்பண்டங்களான பாண், றொட்டி என்பன காலை உணவாக மாறிவிட்டதாலும் துரித உணவுகளின் பெருக்கம் நாளாந்த உணவு முறையில் குடிகொண்டதாலும் இன்று நாம் நாளுக்கொரு வியாதிகளுடன் வாழ்ந்து வருகின்றோம். பெண்களின் இனவிருத்தி மண்டலம் இந்தத் துரித உணவுகளின் பழக்கத்தினால் பாதிக்கப்படுகிறது. இதனால் மனித இனம் அழிவடைந்து போகும் நிலை உருவாகியுள்ளது. இந்த நிலை நீடிக்குமானால் எமது அடுத்த சந்ததியின் இழப்பை எம் கண்முன்னே பார்க்கும் கடைசி சந்ததியாக நாம் இருக்க வேண்டிய நிலை உருவாகும். எனவே, எம் மூதாதையர் கைக்கொண்ட உணவுமுறைகளையும் அதன்

மருத்துவ பயன்களையும் எமது அடுத்த சந்ததிக்குக் கொண்டு சென்று விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். அந்த வகையில் பழைய சோற்றின் மருத்துவ குணங்களை ஆராய்ந்து மீண்டும் மக்கள் மத்தியில் கொண்டு செல்வதே இவ் ஆய்வின் இலக்காகும். பழையசோற்றின் மருத்துவ குணங்களை ஆராய்வதுடன் மக்களின் பாவனைக்குத் தூண்டுவதும், விழிப்புணர்வை ஏற்படுத்துதலும் இவ்வாய்வின் பிரதான நோக்கங்களாகும். கள ஆய்வு, பிரயோக ஆய்வு என்னும் முறையியல்களின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

பழையசோறு தயாரித்தல்

நாம் இரவு மிஞ்சும் சோற்றினைத் தண்ணீர் ஊற்றி வைக்க வேண்டும். இரவு இச்சோறானது நொதித்தலுக்கு (திமீக்ஷீனீமீஸீமீணீமீவீஷீஸீ) உட்பட வேண்டும். அதற்கான குறிப்பிட்ட காலம் இரவு ஆகும். பானையை முழுவதுமாக மூடிவிடாமல் சிறிது காற்றோட்டம் இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். இதற்காக வெய்யில் காலத்தில் 8-10 மணிநேரமும் மழைக் காலத்தில் 10-12 மணிநேரமும் எடுத்துக்கொள்ளலாம். இதற்குச் சிறந்த பாத்திரம் மண்பானையாகும். அடுத்த நாள் இந்தப் பழைய சாதகத்தினுள் வெங்காயம், பச்சைமிளகாய் அல்லது ஊறுகாய் சேர்த்துக்கொள்வார்கள்.

மருத்துவ குணங்களை ஆராய்தல்

பழையசோற்றில் புளிப்புச்சுவை உருவாகும். இதற்குக் காரணம் இலத்திரிக்கமிலம் (Lactic acid Bacteria) ஆகும். இதில் அதிக அளவில் புரதச்சத்து, இரும்புச்சத்து, பொட்டாசியம் ஆகியவை காணப்படுகின்றன. நொதித்தலுக்கு உட்பட்ட சோற்றில் இலக்ரோபசிலஸ் உள்ளிட்ட உடலுக்கு நன்மை தரும் நுண்ணுயிர்கள் நிறைந்துள்ளன. விற்றமின்கள், தாது உப்புக்கள், நார்ச்சத்துக்கள், அமினோ அமிலம் என்பன உள்ளன. (க்ஷிவீக்ஷீ .மீமீ.ணீறீ.2005).

பொதுவாக விற்றமின் சி, இரும்பு, கல்சியம், பொட்டாசியம், சோடியம், துத்தநாகம் எனத் தாதுக்களும், விற்றமின்களும்

இருப்பதால் மனிதனின் உடலுழைப்புக்குத் தேவையான சக்தியைக் கொடுக்கிறது. வெய்யில் காலத்தில் உடலைக் குளிர்ச்சியாக வைத்திருக்க உதவுகிறது (Majumdar,1960). இதில் அரிதான விற்றமின் B6 மற்றும் B1 (udhia.2000) காணப்படுவதால் மற்ற உணவுகளைவிட ஆரோக்கியமானது. உணவு சமிபாடடையவும் நோயெதிர்ப்புச் சக்தியை உருவாக்கவும் உதவுகிறது. அறுவைச் சிகிச்சை மருத்துவர்கள் பழைய சோற்றைக் கொடுத்து, மூலம் குடல் சார்ந்த நன்மைகள் குறித்து ஆராய்ந்து Irritable Bowel Syndrome,crons disease, Ulcerative colitis, Mouth ulcers, Gastritis உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது (.Das .et.al.2000). இதனால் அறுவைச்சிகிச்சை செய்யாமலேயே அவர்கள் பூரணசுகம் அடைந்ததை அவதானிக்க முடிந்தது.

வெங்காயத்தின் தன்மை இரத்தத்தில் உள்ள கொழுப்பைக் கரைக்க உதவுவதால் பழைய சோற்றுடன் சிறிய வெங்காயம் வைத்து உண்பது பயன்தரும். இது மாரடைப்பு நோய் வராமல் தடுக்கிறது (Juliano,1985). இதில் உள்ள நீராகாரம் உடலில் உள்ள நச்சுப்பொருட்களை வெளியேற்றுவதுடன் இரத்த அழுத்தத்தைச் சீராக்கிறது (Mishra,2005). வெய்யில் காலத்தில் நம் உடலில் அதிகரிக்கும் பித்தத்தைச் சமநிலைப்படுத்தி உடலையும் மனதையும் சாந்தப்படுத்துவதால் முகத்தில் பொலிவு கூடும்.

புதிய நோய்த்தொற்றுக்கள் எதுவும் ஏற்படாமல் தடுக்கும்; வனப்பைத்தரும்; இளமைத் தோற்றத்தைத் தக்க வைக்கும்; உடலுக்கு நன்மை தரும் பக்ரீரியாக்கள் அபரிதமான அளவில் இதில் இருக்கின்றன, காலையில் இதனைச் சாப்பிடுவதால் வயிறு தொடர்பான நோய்கள் குணமாகும், உடலில் அதிகமாக இருக்கும் உடல் உஷ்ணத்தைப் போக்கும், ஒவ்வாமைப் பிரச்சினைகளுக்கும் தோல் தொடர்பான வியாதிகளுக்கும் நல்ல தீர்வு தரும், எல்லாவிதமான வயிற்றுப் புண்களுக்கும் பழையசோறு வரப்பிரசாதமாகும். இவ்வுணவு நார்ச்சத்துத் தன்மையைக் கொண்டிருப்பதால் மலச்சிக்கலைத் தீர்க்கும், உடல் சோர்வை விரட்டும், இரத்த அழுத்தம் சீராகும், உயர் இரத்த அழுத்தம் இருப்பவர்களுக்கு அதைப் படிப்படியாகத் தணியச்செய்யும் என்று

பழையசோற்றின் நன்மைகள் பலவற்றை அமெரிக்கன் உணவுக் கட்டுப்பாட்டு அமைப்பு பட்டியலிட்டுள்ளது (Chaudhary,2001).

முடிவுரை

நம் முந்தைய தலைமுறையினரின் வாழ்வியலில் இருந்து பல அம்சங்களைப் பழமை என நிராகரித்து விடுகிறோம். கால மாற்றத்திற்குத் தகுந்தாற்போல் அறிவியலில் பரிணாமம் நிகழ்ந்து நவீனமாகி வருவது அவசியமானது. ஆனால், நமது முந்தைய தலைமுறையினரின் வாழ்வியலில் உள்ள நல்ல அம்சங்களை நவீனம் என்கிற பெயரில் நிராகரித்துவிடக்கூடாது. பொதுவாக மேற்கத்தைய நாடுகளில் குடல் தொடர்பான நோய்கள் பல காணப்பட்டன. ஆனால், தற்போது நம் நாட்டிலும் அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. வாழ்வியல் மாற்றம் மற்றும் முறையற்ற உணவுப்பழக்கத்தின் விளைவே இதுவாகும். இவ்வாறான சூழலில் தினசரி காலையில் முதல்நாள் இரவு ஊற வைத்த பழைய சோற்றைத் தொடர்ந்து சாப்பிடுகிறவர்களுக்கு குடல் சார்ந்த நோய்கள் ஏற்படாது. தற்போது வயதானவர்களுக்கு மட்டுமன்றி இளம் வயதினருக்கும் மலச்சிக்கல் பெரிய பிரச்சினையாக உள்ளது. குடல் சம்பந்தப்பட்ட குடல்புண், குடல்புற்றுநோய்களின் தாக்கம் அதிகமாக உள்ளது. குடல் நலம்தான் உடல்நலத்துக்கு அடிப்படையானது. உடல்நலப் பிரச்சினைகள் தொடர்பாகச் செலுத்தப்படும் ஊசிகள், மருந்துகள், நாம் சாப்பிடும் இறைச்சி வகைகள் எனப் பலவற்றிலும் நோய் எதிர்ப்பு மருந்துகள் (கிஸீமீ வீ-தீவீவஷீமீ வீநீ) நிறைந்திருக்கின்றன. இவை உடலில் அதிகம் சேர்வதால் குடலுக்கு நன்மை செய்யும் பக்ரீரியாக்களையும் சேர்த்து அழித்துவிடுகின்றன. இந்த நன்மை செய்யும் பக்ரீரியாக்கள் சமிபாட்டுக்கு உதவுவதோடு குடலுக்குத் தேவையான சில விற்றமின்களையும் உற்பத்தி செய்கின்றன. அவை அழிக்கப்படும்போது சமிபாட்டுப் பிரச்சினை உட்பட குடல் சார்ந்த பிரச்சினைகளுக்கும் ஆளாக நேரிடுகிறது. நாம் தற்போது உண்ணும் துரித உணவுகளிலே அதிக உப்பு, காரம், எண்ணெய் சேர்க்கப்பட்ட உணவுகள் நன்மை செய்யும் நுண்ணுயிர்களின் எண்ணிக்கையைக் குறைக்கின்றன.

இதற்கு மாறாக, பொதுவாக நாம் சாப்பிடுகிற அரிசியில் சமைக்கப்பட்டு ஊற வைக்கப்பட்ட பழைய சோற்றில்

பக்ரீரியாக்களின் எண்ணிக்கை மிகுந்து நல்ல விளைவை உண்டாக்குகிறது. இதனாலேயே தற்காலத்தில் பழையசோற்றை உண்ணவேண்டியதன் அவசியம் உணரப்படுகிறது.

உசாவியவை

Caius JF. The medicinal and poisonous plants of India (Reprint). Pbl. Scientific Publishers, Jodhpur, India. Oudhia P. 1999. Medicinal weeds in rice fields of Chhattisgarh (India). International Rice Research Notes 1986; 24(1):40.

Das GK, Oudhia P. Rice as a medicinal plant in Chhattisgarh. NBPGR Newsletter, India, 2000, 122:46.

Oudhia P. Traditional medicinal knowledge about green leaf hopper, Nephotettix spp. in Chhattisgarh (India). International Rice Research Notes 2000; 25(3):40.

Mishra B. More crop per drop. The Hindu Survey of Indian Agriculture, Ram N. (Ed.), Kasturi and sons Ltd., National press, Chennai, 2005, 2:41-46.

Chaudhary RC, Tran DV. Specialty rices of the world - a prologue. Specialty Rices of the World: Breeding, Production, and Marketing. (Chaudhary RC and Tran DV, Ed.). FAO, Rome, Italy; and Oxford & IBH Publishing Co. Pvt. Ltd., New Delhi, India, 2001, 3-14.

Juliano BO. Rice Chemistry and Technology. American Association of Cereal Chemists, USA 1985; 757.

MajumdarGP,BanerjiSC.KrsiParasara. The Asiatic Society, West Bengal, Calcutta, India, 1960.

Vir OM, Singh BB, Tomar BS. Specialty rice for therapeutic purposes, good health and processed food products. Proceedings of the National Symposium on Basmati Rice Research: Current Trends and Future Prospects, 67 Sep 2005. SVBP University of Agriculture and Technology, Meerut, Uttar Pradesh, India, 2005, 65-72.

39

பாரம்பரிய உணவு முறைகளும் இன்றைய நிலையும் - யாழ்ப்பாண மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒப்பீட்டாய்வு

ஜ. நிருத்திகா,
உதவி விரிவுரையாளர், ஒப்பீட்டுச் சமயமும் சமூக நல்லுறவும் துறை,
கலை கலாசாரபீடம், கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.
niruththika1997105@gmail.com

ஆர். சகாயசீலன்,
சிரேஸ்ட விரிவுரையாளர் Gr- I, ஒப்பீட்டுச் சமயமும் சமூக நல்லுறவும் துறை,
கலை கலாசாரபீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
sahayaseelanr@esn.ac.lk

ஆய்வின் அறிமுகம்

யாழ்ப்பாணத்து பண்டைய கால உணவு வகைகள் பெரிதும் முக்கியத்துவமுடையன. ஏனெனில் ஆரோக்கியமாகவும், நலத்துடனும், பரம்பரை தழைக்கவும், சத்துடனும், பல்லாண்டு காலம் வாழ்வதற்கும் உணவு முக்கியமான கருப்பொருளாகும். யாழ்ப்பாணத்து உணவுகளாக, கிழங்கு வகைகள், பிட்டு, பாற்கஞ்சி, பலகார வகைகள், பழங்கள், கூழ்வகைகள், இலை வகைகள், மாப்பொருட்கள் அளவாக அடங்கிய உணவுகள், சம்பல் (பச்சடி) வகைகள், கருவாடு வகைகள், மீன் வகைகள் என்பனவும் முக்கியத்துவம் பெற்றுவிளங்கின. இத்தகைய பாரம்பரிய உணவுப்பண்பாடு முற்று முழுதாகவே இன்று மாற்றமடைந்துள்ளது. பாரம்பரியமாகப் பேணப்பட்டு வந்த உணவுமுறைகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டு புதிய ஆரோக்கியமல்லாத உணவுகளின் வருகையால் பாதிக்கப்பட்ட மக்களை மீண்டும் பாரம்பரிய யாழ்ப்பாணத்து உணவுப்பண்பாட்டு முறைகளை மீள்கொண்டு வருவதன் மூலம் ஆரோக்கியமான எதிர்காலத்தை உருவாக்கும் நோக்கமாகவே இவ்வாய்வு காணப்படுகின்றது.

ஆய்வின் நோக்கம்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாரம்பரிய உணவு முறைகளையும் அதனால் ஏற்படும் ஆரோக்கியம் சார் நன்மைகளையும், இவற்றின் தேவைகளையும் தற்கால மற்றும் எதிர்கால சந்ததிக்கு எடுத்துக்கூறி அதனைப் பின்பற்ற வைத்தல் இவ்வாய்வின் நோக்கமாகவுள்ளது.

ஆய்வுப் பிரச்சினை

யாழ்ப்பாணத்தில் பின்பற்றப்பட்ட பாரம்பரிய உணவு முறைகளிலும், அதன் வளர்ச்சி நிலைகளிலும் சமகால நாகரிகம் ஏற்படுத்திய தாக்கத்தினையும், அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் கண்டறிவது ஆய்வுக்குரிய பிரச்சினையாகும். பாரம்பரிய முறைகளில் செய்யப்படும் உணவுகள் மறைக்கடிக்கப்பட்டு அவை ஆரோக்கியமல்லாத உணவுகளாக காணப்படுகின்றமையினால் தற்கால மானிடர்களும், எதிர்காலச் சந்ததியும் நோய்களை எதிர் கொள்கின்றார்கள். இதனை மாற்றுவதற்கான மாற்று வழியைக் கண்டறிதலே ஆய்வின் பிரச்சினையாகும்.

ஆய்வு முறையியல்

யாழ்ப்பாண மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டும் தற்காலம் எனும் தொழில்நுட்ப வளர்ச்சிக் காலத்தை ஆய்வு எல்லையாகக் கொண்டும் மேற்கொள்ளப்படும் இவ்வாய்வின் முதன்மைத் தரவுகளாக அளவை முறைத்தகவல்கள் (கள ஆய்வுகள், நேர்காணல், வினாக்கொத்து) பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகளாக நூல்கள் மற்றும் சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத்தளத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றைப் பயன்படுத்தி வரலாற்றுப் பகுப்பாய்வு, விமர்சனப் பகுப்பாய்வு, விபரணப் பகுப்பாய்வு போன்ற முறைகளினூடாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வுக் கருதுகோள்

பாரம்பரிய உணவு முறைகளை மீள்கொண்டு வருவதன் மூலம் தற்கால, எதிர்கால மக்களை ஆரோக்கியமான வாழ்க்கை நிலைக்கு வழிப்படுத்தமுடியும்.

யாழ்ப்பாணத்து பாரம்பரிய உணவுப் பண்பாடு

பாரம்பரிய உணவுப் பழக்கத்தில் காய்கறிகளை பச்சையாக சாப்பிடும் வழக்கம் இருந்தது அதனை 'பச்சடி' என்றே அழைத்தனர். மாங்காய்ப்பச்சடி, விளாங்காய்ப்பச்சடி, தக்காளிப்பச்சடி, தூதுவளைப்பச்சடி, மிளகாய்ப்பச்சடி, நெல்லிக் காய்ப்பச்சடி, வேப்பம்பூப்பச்சடி, செவ்வரத்தம் பூப்பச்சடி, வல்லாரைப்பச்சடி, கறிவேப்பிலைப்பச்சடி, மொசு மொசுக்கைப்பச்சடி எனப் பலவகையான பச்சடிகள் செய்யப்பட்டன. நெல்லரிசிச்சோறு, தினையரிசிச்சோறு, கறிவகை. புட்டு வகை உணவானது. குரக்கன், ஒடியல், மரவள்ளி என்பவற்றின் மாவிலே புட்டு அவித்து அதனுடன் சோற்றைக் குறைத்து உண்ணுவர். மாச்சத்து மேலதிகமாகச் சேர்வதை இது தடுத்தது. கறிவகையில் மரக்கறியும் மீனும் சேர்க்கப்பட்டது. (சுவாமிகள், ஸ்ரீ, டீ.,2000, 117), பயறு, தயிர், நெய் என்பன மரக்கறி உணவாளரிடையே முக்கியமாகக் கருதப்பட்டன. காய்கறி வகையிலும் குளிர், சூடு என்ற வேறுபாடு பார்க்கப்படும். வெண்டி, சுரை, பூசணி, பீர்க்கு, புடோல் என்பவை குளிர் மரக்கறி வகைகளாகவும் கத்தரி, முருங்கை, மிளகாய், பயற்றங்காய் என்பன வெப்பமரக்கறிகளாகவும் பாகற்காய் முக்கியமான உடல் நலத்திற்கு ஏற்றதாகவும் கருதப்பட்டன. (தியாகராஜா, சுதர்மன்.,2022, ப: 119). நண்டு, றால், கணவாய், மட்டி போன்றவை உடம்பின் சூட்டை அதிகரிக்கும் எனக் கருதப்பட்டது. நெத்தலி, சுறா, ஒட்டி, ஓரா, திருக்கை, செம்பாரை, நகரை, துள்ளுமண்டை போன்றவை குளிர்மையானவையாகக் கருதப்பட்டன. சூரை, கீரை என்பன நோய் தருவனவாக கருதப்பட்டன. சிறுவர், குழந்தைகளின் சமிபாட்டு நிலைக்கேற்ற உணவுகள் தயாரிக்கப்பட்டன. பல்லு முளைக்காத குழந்தைகளுக்குக் கஞ்சித் தெளிவு, பனங்கட்டித் தண்ணீர், வரகரசிமாக்களி போன்றவற்றை உப உணவாக வழங்குவர். கீரை வகைகளை அவித்து அதன் தண்ணீரையும் சிறப்பான பானமாகப் பருகும்வழக்கம் காணப்பட்டது. தூதுவளை இலை, அறக்கீரை, மணத்தக்காளி இலை, கற்பூரவள்ளி இலை என்பவற்றினை சிறப்பானவையாகக் கருதினர். முதியவர்களின் உடல் நிலைக்கேற்ப இலகுவில் சமிபாடடையக் கூடிய உணவுகளாக கஞ்சி, கூழ், கரையல் என்பன தயாரிக்கப்படும். பாற்கஞ்சி, புளிக்கஞ்சி, உப்புக்கஞ்சி, இலைக்கஞ்சி என கஞ்சி பலவகைப்படும். ஒடியற்கூழ், பனங்கட்டிக்கூழ், குரக்கன்மாக் கூழ்,

உழுத்தம்மாக் கூழ், எனக் கூழிலும் பலவகையுண்டு. பல்லில்லாத முதியவர்கள் சிறப்புணவாகக் கரையல் விசேடம் பெற்றிருந்தது. (வேதநாயகன்,நா.,அருள்நேசன்,மா,2018, பக்:18-21).

திருமணம், இறப்பு, வழிபாடு போன்ற பொது நிகழ்வுகளில் யாழ்ப்பாணத் தமிழர்களின் உணவுப் பழக்கம் பல சிறப்பம்சங்களைக் கொண்டதாக உள்ளது. அதாவது சோறு, கறிவகைகள், இலைக்கறி, பருப்பு, குழம்பு, பிரட்டல் கறி, சம்பல் வகை, பொரியல் வகைகள் எனவும் முக்கியத்துவப்பட்டது. உணவுப் பழக்க வழக்கங்களில் கூட பழமையைப் பேணி பண்பாட்டின் அடிப்படை உன்னத நிலையைக் காட்டுகின்றது. மா சாப்பாட்டு வகைகள், நெல் அரிசிச்சோறு, அரிசி மாப்புட்டு, இடியப்பம், தோசை, இட்லி, றொட்டி, பால், அப்பம், இலைக்கஞ்சி, பால்கஞ்சி, ஒடியல்புட்டு, ஓடியல்கூழ், மரக்கறிக்கூழ், மாமிசக் கூழ், மரவள்ளித்துவையல், மரவள்ளிப்பால் கிழங்கு, இராசவள்ளிக்கிழங்கு, புழுக் கொடியல், பனாட்டு, பனங்காய், மோதகம், கொழுக்கட்டை என்பனவற்றை தமது உணவாகப் பேணி வருகின்றனர். கர்ப்பிணிப் பெண்களுக்கு முதல் மூன்று மாதங்களுக்கு, புளிப்பான காய்களை இச்சந்தர்ப்பத்தில் தாய்மையடைந்த பெண்கள் உண்பது பழக்கமாகவுள்ளது. மாங்காய், இலந்தைக்காய். விளாங்காய், நெல்லிக்காய் என்பவை இவற்றுள் குறிப்பிடத்தக்கவை. செவ்விளநீர், மோர், ஊறுகாய்த் தண்ணீர் என்பவற்றைப் பருகுவர். மாதுளம்பழம். தோடம்பழம், கொய்யாப்பழம் என்பவற்றை விரும்பியுண்பர். இக்கால கட்டத்தில் கர்ப்பிணிப் பெண்களால் விரும்பப்படும் உணவுவகைகளை யாத்தீன், ஆசைப் பண்டம் என்னும் சொற்றொடர்களால் சிறப்புடன் அழைத்தனர். மீன்வகைகள், மரக்கறிவகைகள் என்பவற்றைச் சேர்த்து ஒடியற்கூழ் ஆக்கிக் கொடுப்பர். கொத்தமல்லி, சீரகம், மிளகு, செத்தல் மிளகாய், உள்ளி, வேர்க்கொம்பு, சாறணை, மஞ்சள் என்பன சேர்த்து உணவினை தயார்படுத்துவார்கள்.

யாழ்ப்பாணத்து உணவுப் பண்பாட்டின் இன்றைய நிலை

யாழ்ப்பாணத்து உணவுப் பழக்கங்கள் இந்தியப் பண்டைக்காலத் தமிழர் உணவுப் பழக்கங்களாகவே இருக்கும் என்ற கருத்துக் காணப்படுகிறது. ஆனாலும், பல நூற்றாண்டுகளாகவே யாழ்ப்பாணத்துக்கு, தென்னிந்தியாவின் பல

பகுதிகளில் இருந்தும் நேரடிக் குடியேற்றங்கள் இருந்து வந்துள்ளதுடன், பண்பாட்டுத் தொடர்புகளும், வணிகத் தொடர்புகளும் தொடர்ச்சியாக இருந்து வந்துள்ளன. இதைவிட, பிற்காலத்தில் பல நூற்றாண்டுகளாக யாழ்ப்பாணத்தை ஆண்டுவந்த போத்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்றவர்களின் காலங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட உணவு வகைகளும், பழக்க வழக்கங்களும் கூட யாழ்ப்பாணத்து உணவுப் பழக்கங்களில் கலந்துள்ளதைக் காணமுடிகிறது. யாழ்ப்பாணத்தவர்களின் உணவுப் பண்பாடு அன்றாட வாழ்க்கை முறைகளின் அடிப்படையிலும் மாறுபடுகின்றது எனலாம். (சிவசண்முகராஜா.சே.,2002, ப:13)

உலகமயமாக்குதல், நகரமயமாக்குதல் மற்றும் பொருளாதார மாறுதல்களால் நமது உணவுப் பழக்கங்கள் மாறியிருக்கின்றன. ஒவ்வொரு குடும்பத்தின் கலாசாரத்துக்கும் பழக்க வழக்கங்களுக்கும் ஒத்துப்போகும் வகையிலான உணவுகளுக்கு உள்ளூரில் கிடைக்கும். கடைகளில் விற்கப்படும் உணவுப் பொருள்களில் அதிக இனிப்பு, மாச்சத்து, கொழுப்புச் சத்து, உப்பு மற்றும் உணவுப் பொருள்களைப் பதப்படுத்த சேர்க்கப்படும் இரசாயனப் பொருள்கள் ஆகியவை மிகவும் அதிகமாக உள்ளன. உடல் பருமன் பிரச்சினை உள்ளது. உடல் உழைப்பு மற்றும் உடற்பயிற்சி குறைந்து வருவதே உடல் பருமன் பிரச்சினைக்கு முக்கிய காரணமாக அமைகிறது. (அய்யாசாமிப்பிள்ளை,ச., 2000, ப:23) உணவு என்பது ஒவ்வொரு சமூகத்திற்கும் வேறுபட்ட ஒன்றாகும். வடமாகாணமாக காணப்படும் யாழ்ப்பாணத்தில் நிறைய பனை மரங்கள் சார் உணவுகளாகவே காணப்படகின்றன. (அய்யாசாமிப்பிள்ளை,ச., 2000, ப:12). இது நீண்ட கால உணவு மரபு ஆகும். ஆனால் இப்பொழுது சந்தையில் இருக்கக் கூடிய கோதுமை மாவினுடைய வரவிற்குப் பின்பு மிக இலகுவாகவும் மலிவாகவும் நல்ல ஊட்டச் சத்து நிறைந்த அந்த பனை விதைகள் ஏராளமாக குவிந்து கிடக்கின்றன. ஆனால் அவைகளை எடுத்து உணவாக்கிக் கொள்வதற்கு இந்த சமூகம் மறந்து விடுகிறது.

உணவுப் பண்பாடு என்பது யாழ்ப்பாணத்தில் அவ்வாறாகவே காணப்படுகின்றது. சூழலில் இருக்கக் கூடிய அந்த வளத்தை எடுத்து அதைத் தனக்கேற்ற உணவாக மாற்றிக் கொள்வதுதான் உணவுப் பண்பாடு என்பார்கள். (இரகுநாதன்,ம., 2009).

யாழ்ப்பாணத்தில் மிகவும் முக்கியமாகப் போற்றப்படும் உணவு வகைகளை மறந்தாலும் கூட ஆரம்ப காலங்களிலிருந்து பேணப்படு வரும் பருவகால உணவு முறைகள் பல காணப்பட்டன. அவை தற்காலப் பாணியில் மறந்தும், மறக்கடிக்கப்பட்டும் வருகின்றன. அவையாவன, கர்ப்பிணிப் பெண்கள், பூப்படையும் பெண்கள் போன்றவர்கள் சரியான உணவுமுறைகளைக் கையாளுவதில்லை இதனால் பல நோய்கள் வருவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாகவே உண்டு. சில நேரங்களில் இறப்புக்கள் ஏற்படவும் வாய்ப்புக்கள் அதிகமாகவே காணப்படுகின்றன. (கலைக்கேசரி, 2011, ப:35).

பருவகால உணவு முறையானது யாழ்ப்பாண மாவட்டத்தில் மெல்ல மெல்ல அருகிவிட்டது எனலாம். வேலைவாய்ப்பிற்குச் செல்வோர்களும், புலம்பெயர் நாடுகளுக்கு செல்வோர்களிடமும் பாரிய மாற்றம் ஏற்பட்டு கடைகளிலும், வாங்கி உண்ணும் முறைகளும் மிகக்கூடுதலாகவே காணப்படுகின்றன (சிவசண்முகராஜா.சே., (2002, ப:). விசேட தினங்களில் பெரும்பாலும் உணவுகளாகக் காணப்படுவன பலகாரம், பிரியாணி, இறைச்சி வகைகள், இனிப்புவகைகள் (மேலைத்தேய இனிப்பு வகைகள்), போன்றன தற்காலத்தில் காணப்படுகின்றன. அறுசுவை உணவுகள் காணப்பட்டாலும் அவை மேலைத்தேயப் பாணியிலே காணப்படுகின்றன. ஒவ்வொரு திருமண மண்டபத்திலும், சடங்கு விழாக்களிலும், பண்டிகை நாட்களிலும் கூட இவை அனைத்துமே காணப்படுகின்றனவாகும். (சிவலிங்கராஜா,எஸ்., 2014, ப:12)

பூப்பெய்தல் பெண்களுக்கான உணவு முறைகள் எனும் போது சில வீடுகளில் மட்டுமே பாரம்பரிய முறையிலான உணவுகள் ஓரளவு வழங்கப்படுகின்றன. முற்று முழுதாக அழிந்துவிட்டது எனக் கூற முடியாது. இம்முறை அருகிவருகின்றது என்றே கூற வேண்டும். (சிவலிங்கராஜா,எஸ்., 2014, ப:13. மக்களின் ஆசையே இவற்றிற்குக் காரணமாகும். வெளிப்படையாக நாம் உண்ணுவ தில்லை என்று கூறினாலும் கே.எப்.சீ(KFC) கடைகளில் அதிகம் காண்பது இவர்களையே என மருத்துவர் பிரதீபன் கூறுகின்றார். மருத்துவ ஆலோசனைகளே இவர்களுக்கு அதிகம் வழங்கப் படுகின்றது. இந்நிலைகள் தற்காலத்தில் அதிகமாகவே மக்களிடம் பரவிக் காணப்படுகின்றன. (சிவலிங்கராஜா,எஸ்.,2014, ப:14),

உணவு முறை மாற்றத்தினால் யாழ்ப்பாணத்தில் ஏற்படும் பாதிப்புக்கள்

பாரம்பரிய உணவு முறைகளும் இன்றைய நிலையும் எனும் போது யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்படும் முக்கியமான பிரச்சினையாகக் காணப்படுவது ஆரோக்கியம் இல்லாமை ஆகும். எமது உடல் ஆரோக்கியத்திற்கும், நாம் உண்ணும் உணவுக்குமிடையே நிறையத் தொடர்புண்டு. தேவையான உணவு வகைகளை உண்ணாது விட்டாலும் உடல் ஆரோக்கியம் குன்றிவிடும். இன்று பரவலாக பெருகி வரும் தொற்றாநோய்கள் தொற்று நோய்களையெல்லாம் பின்தள்ளி மனிதரை வதைக்கின்றன. அதிக மரணங்களை இதய நோய்களும், பக்கவாதமுமே இன்று ஏற்படுத்துகின்றன. அடுத்து புற்று நோயும், நீரிழிவு உயர் குருதி அமுக்கமும் அதிகரித்து வருகின்றன. (சிவத்தம்பி,கா,பேராசிரியர்., 2000, ப:34)

முடிவுரை

இன்றைய தலைமுறையினர் பலரும் பாஸ்ட் பூட் (திணீவமீ யீஷீஷீபீ) பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளனர். இயற்கையாக வீட்டில் சமைத்த உணவை உண்பதைக் குறைத்து வருகின்றனர். இன்றைய அவசர உலகில் பலரும் இயற்கையான உணவைப் பின்தள்ளி விட்டு நவீனமாக தயாரிக்கப்பட்ட உணவு வகைகளை உண்கிறார்கள். ஆரோக்கியம் என்பது வெறுமனே உணவுப் பொருட்களில் மட்டும் இல்லை. அவை தொன்மையைச் சார்ந்து இருக்கும் போது தான் அங்கு ஆரோக்கியமும், பண்பாட்டைப் போற்றும் தன்மையும் பிறக்கின்றன. முன்னோர்களின் பழமையை மீளக்கொண்டு வருவதையே இவ்வாய்வு நோக்கமாகக் கொண்டுள்ளது. உணவுப் பண்பாட்டின் இன்றைய நிலையானது நாகரிக மோகம் என்பனவற்றால் அந்த உணவுப்பழக்கவழக்கம் கைவிடப்பட்டது. அதன் விளைவாக, ஆரோக்கியக் குறைபாடுகள், தொற்றா நோய்கள் என பலவீனமான சமுதாயம் ஒன்று நம்மிடையே உருவெடுத்துள்ளது. எனவே தான் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க வேண்டிய கடமை அனைவருக்கும் இருக்கிறது என்பதை இவ்வாய்வு வலியுறுத்துகிறது.

உசாத்துணைகள்

அய்யாசாமிப்பிள்ளை,ச., (2000), உணவும் வாழ்வும், தமிழ் நாடு இயற்கை மருத்துவச் சங்கம் - 625020.

இரகுநாதன்,ம., (2009), ,பண்டைத் தமிழர் பண்பாட்டுத் தடங்கள்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சிவலிங்கராஜா,எஸ்., (2014), யாழ்ப்பாணப் பண்பாடு மறந்தவையும் மறைந்தவையும், குமரன் புத்தக இல்லம் கொழும்பு.

சிவத்தம்பி,கா,பேராசிரியர்., (2000), யாழ்ப்பாணம்: சமூகம், பண்பாடு, கருத்துநிலை, வெளியீடு: குமரன் அச்சகம் கொழும்பு.

சுவாமிகள், ஸ்ரீ, டீ.,(2000), உணவும் வாழ்வும், தமிழ்நாடு இயற்கை மருத்துவ சங்கம் மதுரை- 6250020.

துஸ்யந்தினி,க,(2022), யாழ்ப்பாணம் வாழ்வியலும் பண்பாடும் கட்டுரைத்தொகுப்பு.

அபியின் பக்கம், (2012), பாதுகாக்கப்பட் வேண்டிய யாழ்ப்பாணத்தின் தனித்துவம் மிக்க சொத்து, Blogspot.com நாளிதழ்; கட்டுரைத்தொகுப்பு.

ஆண்டு மலர்., (2022), யாழ்ப்பாணம், யாழ்ப்பாண மாவட்ட பண்பாட்டுப் பேரவை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

கலைக்கேசரி, (2011), மறந்தவையும் மறைந்தவையும், Registered bz the Department of zPosts of srb lanka>„ கட்டுரைத் தொகுப்பு.

சிவசண்முகராஜா.சே., (2002), யாழ்ப்பாண மக்களின் சைவ உணவுப் பழக்கவழக்கங்கள், சித்தமருத்துவவளர்ச்சிக் கழகத்தின் வெளியீடு

40

யாழ் பல்கலைக்கழகக் கலைப்பீட வெளி மாவட்ட மாணவர்களது பொருளாதார நிலையும் மன அழுத்தமும்

நா.தக்ஷாலினி, ரா.விதூஷா, ம.மரியநாயகி ரோகினி
உளவியல் சிறப்புக்கலை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
shaliniraja1113@gmail.com

க.கஜவிந்தன்,
சிரேஷ்ட உளவியல் விரிவுரையாளர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஆய்வின் அறிமுகம்

இலங்கையானது ஆரம்ப காலம் தொடக்கம் இன்று வரை அபிருத்தி அடைந்து வரும் நாடுகள் என்ற பிரிவிற்குள்ளேயே உள்ளடக்கப்படுகின்றது. இலங்கைப் பொருளாதார நெருக்கடி என்பது 2019 இல் தொடங்கிய இலங்கை நாட்டில் நடந்து வரும் நெருக்கடியாகும். 1948 இல் சுதந்திரம் பெற்ற பின்னர் நாட்டில் ஏற்பட்ட மிக மோசமான பொருளாதார நெருக்கடி இதுவாகும். 2010 ஆம் ஆண்டிலிருந்து, இலங்கையின் வெளிநாட்டுக் கடன் கடுமையாக உயர்ந்தது. 2019 இல் அது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 88 வீதத்தை எட்டியது. கோவிட் 19 பெருந்தொற்றால் ஏற்பட்ட உலகளாவிய பொருளாதார மந்த நிலையின் தொடக்கமானது நெருக்கடியை விரைவுபடுத்தியது. இலங்கை அரசாங்கத்தின் முறையற்ற நிதி முகாமைத்துவம் முறையற்ற கொள்கை உருவாக்கம் முறையற்ற பட்ஜெட் வடிவமைப்பு, போதியளவு நிதி கையிருப்பிலில்லாமை போன்ற காரணிகள் பொருளாதார நெருக்கீட்டிற்கு பெரிதும் வழிசமைத்துள்ளன. இவ்வாறு இலங்கை சடுதியாக பொருளாதார விருத்தி அடைந்ததன் காரணமாக இலங்கையில் பல்வேறு துறையினரும் பாதிக்கப்பட்டனர். அதில் குறிப்பிடத்தக்கவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள். பொதுவாக வெளி மாவட்டத்தில் இருந்து ஏனைய மாவட்டங்களுக்கு சென்று கல்வி கற்கக்கூடிய பல்கலைக்கழக

மாணவர்கள் இயல்பாகவே நிதி தொடர்பில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ளனர். இவ்வாறான சந்தர்ப்பத்தில் பொருளாதார நெருக்கடியின் விளைவாக விலைவாசிகள் அதிகரிக்கப்பட்டமை, தங்குமிடங்களுக்கான வாடகை பணம் அதிகரிக்கப்பட்டமை மற்றும் அரசாங்கத்தினால் உதவித்தொகையில் நிறுத்தப்பட்டமை என பல்வேறு பொருளாதார ரீதியான நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளனர். இது இவர்களின் கற்றல் சார் நிலைமையில் கற்றலில் கவனமின்மை, கற்றல் சார் மன அழுத்தம், பெறுபேர்களில் தளர்வு போன்ற சவால்களை ஏற்படுத்தியுள்ளது. மேலும் பொருளாதார ரீதியாக மாணவர்களுக்கு உதவி தொகை கிடைக்காத சந்தர்ப்பங்களில் மாணவர்கள் அதிகமாக கடன்களை பெற்றுக் கொள்பவர்களாகவும் ஒருவேளை உணவை உண்ணாதவர் களாகவும், தமது சொந்த தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாத அளவிற்கு கஸ்டப்படுகின்றனர். இவ்வாறான பொருளாதார நெருக்கடி காரணமாக சில மாணவர்களால் பல்கலைக்கழக நிகழ்வுகள், சுற்றுலாக்கள் மற்றும் ஏனைய மேலதிக வகுப்புகள் வெளிவரியான கற்கை நெறிகள் போன்றவற்றில் பங்கு கொள்ள முடியாதுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாக உள்ளது. இது மாணவர்களில் அதிகரித்த கவலை, விரக்தி, தனிமை உணர்வு அதிகப்படியான கோபம், எரிச்சல் போன்ற ரீதியில் எதிர்மறையான மனவெழுச்சிகளை ஏற்படுத்தியுள்ளது.

எனவே இன்றைய காலத்தின் வாழ்க்கையின் ஆதாரமாக காணப்படும் கல்வியில் குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்கள் இப் பொருளாதார நெருக்கடி காலங்களில் வெளிமாவட்ட மாணவர்களது பொருளாதார நிலை தொடர்பாகவும் அவர்களது மனஅழுத்தம் தொடர்பாகவும் மதிப்பிடுதல் மற்றும் முறையான பரிந்துரைகளை முன்வைத்தலே இவ் ஆய்வின் நோக்கமாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்தவகையில் இவ்ஆய்விற்காக யாழ் பல்கலைக்கழகத்தில் கலைப்பீடத்தில் கல்வி கற்கும் மூன்றாம் வருட வெளி மாவட்ட மாணவர்கள் உட்படுத்தப்பட்டனர்.

ஆய்வு நியாயப்பாடு

அண்மைக்கால பொருளாதார நெருக்கீட்டால் வெளி மாவட்ட பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்கொள்ளும் மன அழுத்த

நிலைமையானது யாழ் பல்கலைக்கழகத்தில் மட்டுமின்றி இலங்கையில் ஒவ்வொரு பல்கலைக்கழகத்தின் வெளி மாவட்ட மாணவர்களும் எதிர்கொள்ளும் பொதுவான பிரச்சனையாக காணப்படுகின்றது.

இலங்கையில் ஏனைய பல்கலைக்கழகங்களை விட ஒப்பிட்டளவில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் மாணவர்களது எண்ணிக்கை அதிகமாகவும் அதில் குறிப்பாக வெளி மாவட்ட மாணவர்களின் அனுமதி என்பது அதிகரித்தே காணப்படுகின்றது. கலைத்துறை மட்டுமின்றி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் ஏனைய துறைகளிலும் தெரிவாகும் மாணவர் தொகையில் 70 வீத மாணவர்கள் வெளி மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்து பவர்களாக உள்ளனர். இந்நிலையில் வெளி மாவட்டங்களிலிருந்து யாழ் பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்து கல்வி கற்கும் மாணவர்கள் பல பொருளாதார ரீதியான சவால்களுக்கு முகம் கொடுக்கின்றனர். இதனால் அவர்களுக்கு மனஅழுத்தம் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படுகின்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இதுவரை வெளிமாவட்ட மாணவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் பொருளாதார நிலையும் மனஅழுத்தமும் குறித்து தனித்துவமான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. ஆகையால் குறித்த ஆய்வானது யாழ்பல்கலைக்கழகத்தில் கலைப்பீடத்தில் கல்வி பயிலும் மூன்றாம் வருட மாணவர்களின் பொருளாதார நிலையையும் மனஅழுத்தமும் ஆழமாக நோக்கப்படவுள்ளமை யினால் குறித்த ஆய்வானது சமகாலத்தில் பொருத்தமாக உள்ளது என நியாயப்படுத்தலாம்.

ஆய்வு நோக்கம்

பொது நோக்கம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மூன்றாம் வருட வெளி மாவட்ட மாணவர்களின் பொருளாதார நிலைக்கும் மனஅழுத்தத்திற்கும் இடையிலான இணைவினை விபரித்தல் இவ்வாய்வின் பொது நோக்கமாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மூன்றாம் வருட வெளி மாவட்ட மாணவர்களின் பொருளாதார நிலையை

மதிப்பிடுதல், அம்மாணவர்களது குடும்பத்தின் மாத மொத்த வருமானத்திற்கும் மன அழுத்தத்திற்கு மிடையிலான இணைவினை மதிப்பிடல், வெளி மாவட்ட மாணவர்களது தனிப்பட்ட மாதச் செலவினை மதிப்பிடல், மாணவர்களது கற்கைக்காக கிடைக்கப்படும் புலமைப்பரிசில்களுக்கும் மனஅழுத்தத்திற்கு மிடையிலான தொடர்பை இனங்காணல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மூன்றாம் வருட வெளி மாவட்ட மாணவர்களுக்கு அவர்களது குடும்பத்தினர் மூலம் கிடைக்கப்பெறும் மாத பணத்தொகைக்கும் மன அழுத்தத்திற்குமிடையிலான தொடர்பை இனங்காணல்.

ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது இலங்கையின் வட மாகாணத்தில் உள்ளடங்கும் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை மையப்படுத்தியதாக பண்புசார் முறையினையும் அளவுசார் முறையினையும் அடிப்படையாகக் கொண்ட கலப்பு ஆய்வு வடிவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வுக்கு உட்படுவோர்

யாழ் பல்கலைக்கழகத்தில் கலைப்பீடத்தில் கல்வி பயிலும் வெளி மாவட்ட மூன்றாம் வருட மாணவர்கள் ஆய்வில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

ஆய்வில் இருந்து விலக்கப்படுவோர்

யாழ் பல்கலைக்கழகத்தில் கலைப்பீடத்தில் கல்வி பயிலும் வெளி மாவட்ட மூன்றாம் வருட மாணவர்களில் வாய் பேச முடியாதவர்கள் மற்றும் காது கேளாதோர் ஆய்விலிருந்து விலக்கப்படுகின்றனர்.

ஆய்வு மாதிரி

யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மூன்றாம் வருட வெளி மாவட்ட மாணவர்களிலிருந்து 30 மாதிரிகள் ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் 15 ஆண்களும் 15 பெண்களும் மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மாதிரித் தெரிவு முறை

யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மூன்றாம் வருட வெளி மாவட்ட மாணவர்களில் 15 ஆண்களும் 15 பெண்களும் எழுமாற்று மாதிரி முறை மூலம் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஆய்வுக்கருவிகள்

முதலாம் நிலை தரவு, இரண்டாம் நிலை தரவிற்கு அமைய தரவுகள் திரட்டப்பட்டன. நேர்காணல்கள், வினாக்கொத்துக்கள் மதல்நிலைத்தரவுகளாப் பெற்றுனக்கொள்ளப்பட்டன. நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுகட்டுரைகள், பத்திரிகைகள் முதலானவற்றிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் இரண்டாம் நிலைத் தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டன. இவ்ஆய்வில் மனதால் உணரப்பட்ட அழுத்த அளவுகோல் (Percived Stress Scale) பயன்படுத்தப்பட்டுள்ளது.

தரவுப் பகுப்பாய்வு

தரவுசேகரிப்பு முறைகள் மூலம் பெறப்பட்ட தரவுகள் ,தகவல்கள் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு பண்புசார் பகுப்பாய்வு செய்யப்பட்டதோடு வினாக்கொத்தினூடாக பெறப்பட்ட தரவுகள் ணிஜ்நீமீறீ மென்பொதியின் உதவியுடன் விபரண புள்ளிவிபரவியல் பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டு அட்டவணைகள், வரைபடங்கள் மூலமாக ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்தப்பட்டன.

முடிவுரைகளும் பரிந்துரைகளும்



இவ்ஆய்வின் முடிவுபடி யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மூன்றாம் வருட வெளி மாவட்ட மாணவர்களில் 90 வீதமானோர் மிதமான மனஅழுத்தத்தையும் 10 வீதமானோர் அதிகமான மனஅழுத்தத்தையும் அனுபவிக்கின்றனர்.

பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய சிறு சிறு மாற்றங்கள் கூட மக்களது முழு வாழ்க்கையும் பாதிப்பதாகவே உள்ளன. இதற்கு கல்வி ஒன்றும் விதிவிலக்கல்ல. ஆரம்ப நிலையிலிருந்து உயர்நிலை கல்வி என அனைத்திற்கும் நிதி என்பது மிக மிக அத்தியாவசியமான ஒன்றாகவே உள்ளது. ஆனால் இலங்கையில் அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் மாணவர்கள் விசேடமாக பல்கலைக்கழகத்தின் கல்வி கற்கக்கூடிய வெளி மாவட்ட மாணவர்கள் தமது கற்றல்சார் செயற்பாடுகளை சரிவர மேற்கொள்வதற்கு பல சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். உரிமை உண்டு. எனவே அண்மைக்கால பொருளாதார நெருக்கடியினால் பல்கலைக்கழக வெளி மாவட்ட மாணவர்கள் எதிர்கொள்ளும் உளவியல் சவால்கள் என்ற தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் வெளி மாவட்ட மாணவர்கள் பொருளாதார ரீதியான வெளிப்பாடு, நடத்தை ரீதியான வெளிப்பாடு, உறவாடல் ரீதியான வெளிப்பாடு, கற்றல் ரீதியான வெளிப்பாடு, அறிகை ரீதியான வெளிப்பாடு, மனவெழுச்சி ரீதியான வெளிப்பாடு ஆகிய அனைத்திலும் சவால்களை எதிர்கொள்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

தனது சொந்த இடத்தை விட்டு கல்விக்காக வந்துள்ள இம்மாணவர்கள் தனக்கு எவ்வாறான சவால்கள் ஏற்படினும் தனது கல்வியை சிறப்பாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற நோக்கிலேயே செயல்படுகின்றனர். பொருளாதார ரீதியாக ஏற்பாடு சவால்களை கூட சமாளித்துக் கொண்டு தனது கல்வியில் அதிகமானோர் கவனம் செலுத்துகின்றனர். சில மாணவர்களின் பெறுபேற்றில் தளர்வு நிலை காணப்பட்டாலும் முழுமையாக கற்றலில் கவனமின்மை என கருதி விட முடியாது. ஓரளவுக்கு சிறந்த புள்ளிகளையே பெற்றுள்ளனர.; அவ்வாறே இங்கு குறிப்பிடத்தக்க ஒரு விடயம் இம்மாணவர்களின் விரிவுரைக்கான வரவு என்பது அதிகமாகவே உள்ளது. எனவே பொருளாதார நெருக்கடியிலும் தனது கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க தயாராக உள்ள மாணவர்களுக்கு பரிந்துரைகளை முன் வைத்தலும்

தீர்வுகளை பெற்று தருதலும் அரசாங்கத்தினதும் பல்கலைக்கழக நிர்வாகத்தினரும் கடப்பாடாகவே உள்ளது அதற்கான சில பரிந்துரைகளை நோக்கலாம்.

மேலதிக கொடுப்பனவுகளை பெற்றுக் கொடுத்தல்

ஆய்வில் இருந்து பெறப்பட்ட தகவலுக்கு அமைய அதிகமான மாணவர்கள் மகாபொல மற்றும் Bursary ஆகிய இரண்டு உதவி கொடுப்பனவுகளையே தங்கி வாழ்கின்றனர். அரசாங்கத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார தளம்பல் நிலையை தான் உதவித்தொகைகளை சரியான ரீதியில் பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. எனவே இதனை புலம்பெயர் தமிழர்கள் மற்றும் ஏனைய நலன் சார் அமைப்புகள் என்பவற்றின் மூலம் பல்வேறு பல்கலைக்கழக நலன்புரி சேவைக்கு உட்பட்ட வகையில் புலமை பரிசீல்களைப் பெற்றுக் கொள்வதற்கு பல்கலைக்கழகமும் மாணவர் ஒன்றியமும் முனைப்பாக செயல்பட வேண்டும். மேலும் ஆய்வுகளில் இருந்து பெறப்பட்ட உண்மை யாதெனில் அதிகமாக உதவி கொடுப்பனவை நாடுகின்ற மாணவர்களுக்கே மீண்டும் மீண்டும் உதவி தொகை வழங்கப்படுகின்றது. இதனை பல்கலைக்கழக நலன்புரி சேவையானது கருத்தில் கொண்டு முறையாக விசாரித்து யார் உண்மையில் பொருளாதார ரீதியாக இறுக்கமான நிலையில் உள்ள மாணவர்கள் என்பதனை கண்டறிந்து அவர்களுக்காக உதவியினை பெற்று தருதல் சிறப்பான ஒன்று.

மாணவர்களுக்கான உணவு தேவைகளை பூர்த்தி செய்தல்.

ஏனைய பல்கலைக்கழகங்களில் இல்லாத ஒரு வரவேற்றத்தக்க விடயமாக சமுதாய சமையலறை என்பது யாழ் பல்கலைக்கழகத்தில் இயங்கி வருகின்றது. இது அதிகமாக பொருளாதார ரீதியாக பின்தங்கிய மாணவர்களுக்காக யாழ் பல்கலைக்கழக நிர்வாகத்தினால் ஏற்படுத்தப்பட்ட ஒரு திட்டமாகும். எனினும் இச் சமுதாய சமையலறையில் அனைத்து மாணவர்களாலும் உணவினை பெற்றுக்கொள்ள முடியாத நிலை உள்ளது. எனவே உண்மையாக கஸ்டப்படும் மாணவர்கள் கூட இதனிலிருந்து பயன்பெற முடியாத சூழ்நிலை ஏற்படுகின்றது. இதனை கருத்தில் கொண்டு அனைத்து மாணவர்களும் உணவினை பெற்றுக்கொள்ளும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுத்தல் வேண்டும்.

மாணவர்களுக்கான கல்வி சாதனங்கள் அல்லது வளங்களை பெற்றுக்கொடுத்தல்

யாழ் பல்கலைக்கழகத்தில் கொரோனா காலங்களில் மாணவர்களுக்கான நிகழ்நிலை விரிவுரைகளை நடத்துவதற்காக கைபேசிகள் (Smart phones) வழங்கப்பட்டமை பாராட்டத்தக்கது. அவ்வாறே கல்விக்கான வளங்களை பெற்றுக் கொள்ள முடியாத மாணவர்களுக்கு நலன் சார் அமைப்புகள் புலம்பெயர் தமிழர்களின் நன்கொடைகள் ஊடாக மடிக்கணினி உள்ளிட்ட சில வளங்களை தற்காலிகமாக பெற்றுக் கொடுத்து அதனை அவர்கள் தமது இறுதியாண்டினை பூர்த்தி செய்த பின்னர் மீண்டும் பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்குமாறு ஒரு செயற்பாட்டினை மேற்கொள்ளல் வரவேற்கத்தக்கது. மேலும் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் பயன்பாட்டுக்கென ஒரு கணினி ஆய்வு கூடம் காணப்படுகின்றது. அதனை மாணவர்கள் எவ்வேளையிலும் பயன்படுத்தலாம் எனினும் இது தொடர்பான தெளிவு என்பது மாணவர்களிடையே இன்றளவும் காணப்படவில்லை. எனவே ஒவ்வொரு துறைகளூடாக அல்லது மாணவ ஒன்றியம் ஊடாக இது தொடர்பான அறிவுறுத்தல்களை மாணவர்களுக்கு பெற்றுதர வேண்டும். பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கான நலன்புரி சேவைகளை சரியான முறையில் வழங்குவதனால் மாணவர்கள் தங்கள் உள நெருக்கீடுகளில் இருந்து அவர்களால் மீண்டுவருவதற்கு உதவியாக அமையும்.

உசாத்துணைகள்

தயாசோமசுந்தரம், சிவயோகன்.சா (2010). 'தமிழ்ச் சமுதாயத்தில் உளநலம்' , சாந்திகம், யாழ்ப்பாணம்.

நந்தகுமார்.வை, (2008), 'ஆய்வு முறையியல் - முறைகளும் நுட்பங்களும்' , யுனி ஆர்ட்ஸ் பிறைவேட் லிமிட்டெட், கொழும்பு

Piumika.S ,(2023).''Perceived Stress among Srilankans during the economic crisis: an Online survey'',

Tony Malim and Ann Birch, (1998). 'Introductory Psychology', Macmillan Press.Ltd: London.

Aturupane H, Little AW (2021). General education in Sri Lanka. In: Sarangapani PM, Pappu R (eds) Handbook of Education Systems in South Asia.

Long, Bridget T. (2007). "The Contributions of Economics to the Study of College Access and Success." Teachers College Record. Long, Bridget T. and Erin K. Riley. (2007) "Financial Aid: A Broken Bridge to College Access?" Harvard Educational Review

41

மூன்றாம் நிலைக்கல்வி கற்கும் மாணவர்கள் எதிர்கொள்ளும் உள சவால்கள் : தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினை அடிப்படையாகக் கொண்ட சூழ்நிலை ஆய்வு

நா.மு.ஹஸ்ஸான்,
இளமாணி சமூகப்பணி, இரண்டாம் வருட மாணவன்
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம், இலங்கை. has2k43@gmail.com

தவராசா தர்ஸன்,
விரிவுரையாளர், சமூகப்பணி பாடசாலை, தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம், இலங்கை. thavarasatharshan@gmail.com

அறிமுகம்

இன்றைய நவீன உலகில் உயர்கல்வியென்பது ஒவ்வொரு மனிதனுடைய கட்டாயத் தேவையாகவுள்ளது. இதன்விளைவாக பெற்றோர்களும், சமுதாயமும் பிள்ளைகள் மூன்றாம் நிலைக்கல்வியில் குறைந்தபட்சம் ஒரு பட்டப்படிப்பினையேனும் மேற்கொள்ள வேண்டுமென்று எதிர்ப்பார்க்கின்ற சூழல் காணப்படுகின்றது. இதனால் மாணவர்களும் பெற்றோர்களும் பல சவால்களை எதிர்கொண்டு தங்கள் உயர் கல்விக் கனவை நனவாக்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்கின்றனர். இலங்கையில் முறைசார் மூன்றாம் நிலைக் கல்வியைப் பல்கலைக்கழகம், உயர்கல்வி நிறுவனம், வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் என்பன மாணவர்களுக்கான பட்டப்படிப்பை வழங்குகின்றன. இலங்கையைப் பொறுத்தவரை பல்கலைக்கழக வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளாத மாணவர்கள் தமது மூன்றாம் நிலைக் கல்வியை உயர்கல்வி நிறுவனங்களிலும், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களிலும், உள்ளூர் பல்கலைக்கழகங்களின் வெளிவாரிப் பிரிவுகளிலும்; கற்கின்ற சூழ்நிலை காணப்படுகின்றது.

குறிப்பாக உயர் கல்வி நிறுவனங்களில் கற்பதற்காக நகரத்திற்குச் செல்லும் மாணவர்கள் பலதரப்பட்ட உள சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். அவ்வாறு கற்கச் செல்லும் மாணவர்கள் எதிர் நோக்குகின்ற உள சவால்களை ஆய்வு செய்ய வேண்டியது தற்காலத்தின் தேவையாகக் காணப்படுகின்றது. இலங்கையில் அமைந்துள்ள தேசிய சமூக அபிவிருத்தி நிறுனத்தில் மூன்றாம் நிலைக் கல்வியினை மேற்கொள்ளும் மாணவர்கள் பல்வேறுவிதமான உளச் சவால்களை எதிர்கொண்டு வருகின்றமையை அடிப்படையாகக்கொண்டு இவ்வாய்வு அமைகிறது.

ஆய்வின் நோக்கம்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவன இளமாணி மாணவர்கள் எதிர்நோக்கும் உள சவால்களைக் கண்டறிந்து அவற்றிற்கு பொருத்தமான சமூகப்பணி இடையீடுகளை மேற்கொள்வதற்கான பரிந்துரைகளை வழங்குதல் இவ்வாய்வின் பிரதான நோக்கமாகவும் மூன்றாம் நிலைக்கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஏற்படும் உளரீதியான சவால்களை அடையாளப்படுத்தல், மூன்றாம் நிலைக்கல்வி கற்கும் மாணவர்களுக்கு உளரீதியான சவால்களை ஏற்படுத்தும் காரணிகளை இணங்காணுதல் ஆகியவை உப நோக்கங்களாகவும் அமைகின்றன.

ஆய்வுமுறையியல்

ஆய்வானது பண்பு ரீதியான ஆய்வாகக் காணப்படுவதோடு, ஆய்வுக்கான தரவு சேகரிப்பு முறையாக முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தகவல்கள் திரட்டப்பட்டன. முதலாம் நிலைத் தகவலானது ஆய்வுக் குடித்தொகையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 10 வீத மாணவர்களிடம் நோக்க மாதிரி அடிப்படையில் அவதானம் மற்றும் பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட நேர்காணல் மூலம் மாணவர்களிடம் தரவுகள் திரட்டப்பட்டதுடன் விரிவுரையாளர்கள், பெற்றோர், பணிப்பாளர் போன்றோரிடம் பிரதான தகவல் தருனருடனான நேர்காணல் தரவு திரட்டல் கருவி மூலம் தரவுகள் திரட்டப்பட்டதுடன் இரண்டாம் நிலைத் தகவல்களான மாணவர் அடையாள அட்டை, பெறுபேற்று அறிக்கை, பதிவாளர் பிரிவு அறிக்கை போன்றவற்றின் மூலமும்

தரவுகள் திரட்டப்பட்டு கருத்தியல் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டது.

தரவுப்பகுப்பாய்வு

ஜனநாயகத்தரவுகள்

பால் நிலை

ஆய்வில் பங்கேற்றவர்களின் அடிப்படையில் உயர்கல்வி கற்பதற்காக செல்லும் மாணவர்களின் 35வீத இளைஞர்களாகவும் 65 வீத யுவதிகளாகவும் காணப்படுகின்றனர். மேலும் நாட்டின் தற்போதய பொருளாதார நெருக்கடியான சூழ்நிலை காரணமாக அரச தொழிலை வழங்குவதிலும், தன்னார்வத்தொண்டு நிறுவனங்களின் தொழிற்பாடு குறைவடைந்து காணப்படுவதினாலும், சமூகப்பணித் தொழில்வாய்ப்பை பெற்றுக்கொள்வதில் மட்டுப்பாடு காணப்படுகிறது. இதனால் இளமானி சமூகப்பணி பாடநெறியில் ஆண் மாணவர்களின் நுழைவு குறைவாகக் காணப்படுகிறது.

திருமணநிலை

ஆய்வில் பங்கேற்ற இளமானி மாணவர்களில் 15 வீத மாணவர்கள் திருமணமாகியும் 85 வீத மாணவர்கள் திருமணமாகாத நிலையிலும் தங்களின் இளமாணிப் பாடநெறியினை மேற்கொள்கின்றனர். திருமணமான 15 வீத இளமானி மாணவர்களில் 80 வீத மாணவர்கள் பெண்களாக காணப்படுவதுடன் அவர்களில் 85 வீத மாணவர்கள் இஸ்லாமிய சமயத்தினை பின்பற்றக் கூடியவர்களாகவும் காணப்பட்டனர். இது முஸ்லிம் பெண் மாணவர்களின் மத்தியில் அவர்களது கலாசார, பண்பாட்டு சூழ்நிலையைப் பிரதிபலிப்பதினையும், இந்து மற்றும் கிறிஸ்த்தவ சமயத்தைப் பின்பற்றும் 15 வீத பெண்கள் தங்கள் குடும்ப சூழ்நிலை காரணமாகவும் திருமனணத்தின் பின்னர் தங்கள் கல்வி நடவடிக்கையினை மேற்கொள்கின்றனர். மேலும் திருமணமாகாத 85 வீத மாணவர்களில் 45 வீத இஸ்லாமிய பெண் மாணவர்கள் திருமணமாகாத நிலையிலும் தங்களது கல்வியைத் தொடருகின்றனர். இது முஸ்லிம் பெண்கள் மத்தியில் அவர்களது கல்வியில் ஏற்பட்ட மாற்றம் அவர்களின் திருமண வயதெல்லையிலும் நீடிப்பை ஏற்படுத்தியிருப்பதனையும், இந்து

மற்றும் கிறிஸ்த்தவ சமயத்தைப் பின்பற்றும் 55 வீத பெண்கள் திருமண சுதந்திரம் உள்ளவர்களாக இருப்பதினை ஆய்வின் முடிவுகளில் இருந்து அறியக்கூடியதாக உள்ளது.

பெற்றோரின் நிலை

ஆய்வில் பங்கேற்றவர்களில் பெறப்பட்ட தகவல்களுக்கு அமைவாக இளமாணி மாணவர்களில் 25 வீத மாணவர்கள் தங்களது பெற்றோர்களில் தந்தை அல்லது தாயை இழந்தவர்களாக, தனிப்பெற்றோர் குடும்பத்திலிருந்து தங்களது உயர்கல்வியை மேற்கொள்பவர்களாகவும், 75 வீத இளமாணி மாணவர்கள் தங்களது தாய்,தந்தை இருவரின் ஆதரவுடனும், குடும்ப ஆதரவுடனும் தங்களின் கல்வி நடவடிக்கையினை மேற்கொள்கின்றனர்.

குடும்ப உறுப்பினர்களைச் சந்தித்தல்

இளமாணி பாடநெறியினை மேற்கொள்ளும் மாணவர்களில் 05 வீத மாணவர்கள் தங்களது வீடுகளில் இருந்து கல்வி நிறுவனத்திற்கு வருகை தருவதுடன் 45 வீத மாணவர்கள் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை தங்களது வீடுகளுக்குத் திரும்புகின்றனர். மேலும் ஒரு மாத காலத்தில் வீடுகளுக்கு திரும்பும் 25 வீத மாணவர்களும் இரண்டு மாத கால இடைவெளியில் 10 வீத மாணவர்களும் மூன்று மாத கால இடைவெளியில் 15 வீத மாணவர்களும் தங்களது வீடுகளுக்கு செல்கின்றனர்.

மாணவர்களின் வருமானம்

வருமானத்தில் பங்களிப்பை மேற்கொள்பவர்கள்

மூன்றாம் நிலைக் கல்வி மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கான செலவுகளைச் சமாளிப்பதற்காக அவர்களுடைய வருமானத்தில் பங்களிப்பை மேற்கொள்ளும் குடும்ப உறுப்பினர்களில், தனி ஒருவரின் உழைப்பில் குடும்ப வாழ்க்கையையும் கல்வி நடவடிக்கையை மேற்கொள்ளும் 55 வீத மாணவர்களும், இரு நபர்களின் பங்களிப்புடன் குடும்ப வாழ்வாதாரமும் கல்வி நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் 30 வீத மாணவர்களும், மூவரின் பங்களிப்புடன் குடும்ப வாழ்க்கையையும் கல்வி நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்

05 வீத மாணவர்களும் தங்களது குடும்ப உறுப்பினர்கள் அல்லாத வேறு நபர்களிடம் அல்லது பகுதி நேர தொழில் மூலம் வருமானத்தைப் பெறக்கூடிய 10 வீத மாணவர்கள் ஆய்விலிருந்து கண்டுபிடிக்கப்பட்டனர். இவர்களில் தனி ஒருவரின் வருமானப்பங்களிப்பை மேற்கொள்ளும் மாணவர்களின் குடும்பங்களில் குடும்பத் தலைவரே வருமானத்தில் பங்களிக்கக் கூடியவராக காணப்படுவதுடன் சில குடும்பங்களில் வயதான பெற்றோர்கள் காணப்படுவதனால் ஆண் பிள்ளைகள் குடும்ப பொறுப்பினை மேற்கொள்ளக் கூடியவர்களாகவும் தங்களது சகோதரர்களின் கற்றல் செயற்பாட்டிற்கான செலவுகளையும் அவர்களே பொறுப்பேற்றுக்கொள்ளக் கூடியவர்களாகவும் காணப்படுகின்றனர்.

அரச நிதியுதவி

மூன்றாம் நிலைக் கல்வி மாணவர்களின் வருமானத்தில் பங்களிப்புச் செய்யும் ஒரு காரணியாக அரச நிதி உதவியும் இடம்பெறுகிறது. அந்த வகையில் ஆய்வில் பங்குபற்றிய இளமாணி மாணவர்களில் 70 வீத மாணவர்களுக்கு அரச நிதி உதவி (மகாபொல மற்றும் பேர்சரி) என்பன கிடைக்கிறது. மேலும் 30 வீத மாணவர்களுக்கு எந்தவித அரச நிதி உதவிகளோ அல்லது ஏனைய நிதி உதவிகளோ கிடைக்கப் பெறவில்லை. இவ் இளமாணி மாணவர்களில் 70வீத மாணவர்கள் தங்களது கற்றல் செயற்பாட்டிற்கு தேவையான போதுமான பணத்தினை பெற்றுக்கொள்ள முடியாமல் ஏனைய மாணவர்கள் மற்றும் அவர்களுடைய சக நண்பர்களிடம் கடன் வாங்குபவர்களாகவும் குடும்பத்திடம் மேலும் பணத்தினை வேண்டி நிற்பவர்களாகவும் காணப்படுகின்றனர். மேலும் இவ் உயர் கல்வி கற்கும் மாணவர்களில் 30வீத மாணவர்கள் போதுமான வருமானத்தைக் கொண்டிருப்பதுடன் எந்தவித மேலதிக பணத்தேவைகளும் இல்லாதிருப்பதை அவதானிக்கக்கூடிதாக உள்ளது.

உளரீதியான சவால்கள்

மூன்றாம் நிலைக் கல்வி மாணவர்களில் 85வீத மாணவர்கள் உளரீதியான சவால்களுக்கு முகங்கொடுத்து வருவதுடன் 15வீத மாணவர்கள் எந்தவித உளரீதியான சவால்களுக்கும் முகம் கொடுக்கவில்லை என்பது ஆய்வின் முடிவுகளின் மூலம் தெரிய

வருகின்றது. இதில் உளரீதியான சவால்களுக்கு முகங்கொடுக்கும் 85வீத மாணவர்களில் தற்கொலை எண்ணம், தனிமையிலிருத்தல், கற்றல் பலவீனம், தூக்கம், கோபம், அழுகை, போன்ற வேறுபட்ட மனவெழுச்சி ரீதியான உளச் சவால்களுக்கு உள்ளாகியிருப்பது ஆய்வின் மூலம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

தனிமையிலிருத்தல்

மூன்றாம் நிலைக் கல்வி மாணவர்களில் உளரீதியான சவால்களுக்கு முகங்கொடுக்கும் மாணவர்களில் 50 வீத மாணவர்கள் தனிமையில் இருப்பதை விரும்புவர்களாக காணப்படுகின்றனர். அதாவது மொத்த ஆய்வில் பங்குபற்றியிருந்த 42.5 வீத மாணவர்கள் தனிமையை விரும்புபவர்களாகக் காணப்படுகின்றனர். இதன் மூலம் மாணவர்களின் நண்பர்களின் நம்பிக்கையற்ற தன்மை, அதிக செலவீனம் மற்றும் மாணவர்களுக்கு இடையே தங்களது அந்தஸ்து, மரியாதை பாதிக்கப்படுதல் மாணவர்களுக்கு உளரீதியான தாக்கத்தினை ஏற்படுத்துவதினையும் தனிமைப்படும் எண்ணம் அவர்களது உளரீதியான சவாலினை ஏற்படுத்தக்கூடியதாகவும் இருப்பதினையும் ஆய்வின் முடிவுகள் வெளிப்படுத்தக்கூடியதாக உள்ளது.

தற்கொலை எண்ணம்

உளரீதியான சவால்களை எதிர்கொள்ளும் மாணவர்களில் தணிமையை விரும்பும் மாணவர்களுல் 2.5 வீத மாணவர்களுக்கு தற்கொலை உணர்வு ஏற்பட்டிருப்பது ஆய்வின் முடிவுகளின் மூலம் தெரிய வருகிறது. மாணவர்களின் குடும்ப சூழ்நிலை மற்றும் சமூக பொருளாதார நிலை, காரணமாக அவர்களுக்கு ஏற்படுகின்ற விரக்திநிலை மற்றும் மாணவர்களுக்கு மத்தியில் அவர்களுடைய தாழ்மை எண்ணங்கள் சிந்தனைகள் அவர்களைத் தனிமைப்படுத்தித் தற்கொலை எண்ணத்தினை உண்டுபன்னுவதினை ஆய்வின் மூலம் அவதானிக்க கூடியதாக உள்ளது.

தூக்கம், கோபம், அழுகை, பயம் போன்ற வேறுபட்ட மனவெழுச்சி வெளிப்பாடு

மூன்றாம் நிலைக் கல்வி மாணவர்களில் உள ரீதியான சவால்களுக்கு முகம் கொடுக்கும் மாணவர்கள் அதிக நேரம் தூங்குதல், சக மாணவர்களோடு முரண்பட்டுக் கொள்ளுதல், தனிமையில் அழுதல், வகுப்பறைகளில் விரிவுரையாளர்களைக் கண்டு பயப்படுதல், போன்ற வேறுபட்ட மனவழுச்சிகளை வெளிப்படுத்துகின்றனர். மாணவர்களின் வீட்டுச் சூழலில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் அவர்களுடைய மனவெழுச்சியில் செல்வாக்கு செலுத்துவதனையும் அதன் காரணமாக அவர்கள் உளச் சவாலுக்கு உட்படுவதனையும் ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்துகின்றன.

சமூகப்பணி இடையீடு

மூன்றாம் நிலைக் கல்வி மாணவர்களில் உள சமூக சவால்களுக்கு முகம் கொடுத்துள்ள மாணவர்களில் 70வீத மாணவர்கள் தங்களுக்கான உளநல ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பொருத்தமான உளநல ஆலோசகர்களிடமும் விரிவுரையாளர்களிடமும் பெற்றுக்கொண்டுள்ளதுடன் 30 வீத மாணவர்கள் எந்தவித ஆலோசனைகளையோ, வழிகாட்டல் களையோ பெற்றுக் கொள்ளவில்லை. எந்தவித உளநல ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பெற்றுக் கொள்ளாத 30 வீத மாணவர்களில் 2.5 வீத மாணவர்கள் தீவிர தற்கொலை எண்ணம் கொண்டவர்களாகவும் 21.25 வீத மாணவர்கள் தனிமையை விரும்புவர்களாகவும் கோபம், பயம், அழுகை போன்ற வேறுபட்ட மனவெழுச்சிகளை வெளிப்படுத்தக் கூடியவர்களாகவும் வகுப்பறைகளிலும் விடுதியிலும் அதிக நேரம் உறங்கக் கூடியவர் களாகவும் 6.25 வீத சமூகப்பணி மாணவர்கள் தங்களுடைய உளசமூக சவால்களை தாங்களாகவே சமாளித்துக்கொள்ளும் திறன் உடையவர்களாகவும் காணப்படுகின்றனர்.

முடிவுரையும் பரிந்துரையும்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் மூன்றாம் நிலைக் கல்வியை மேற்கொள்ளுகின்ற மாணவர்கள் தங்களுடைய பட்டப்படிப்பினை மேற்கொள்வதில் பல்வேறு வகையான உள,சமூக சவால்களை எதிர்கொண்டு வருவது ஆய்வின் மூலம் உறுதியாகிறது. ஆகவே இவ் ஆய்வானது மூன்றாம் நிலைக் கல்வி மாணவர்கள் தங்களது பட்டப்படிப்பினை மேற்கொள்ளும் போது

எதிர்கொள்கின்ற உள சமூக சவால்களைக் கண்டறிந்து அவற்றைக் குறைப்பதற்கான பரிந்துரைகளை மேற்கொண்டுள்ளது. மேலும், இவ் ஆய்வானது மூன்றாம் நிலைக் கல்வி மாணவர்களின் பொருளாதார பற்றாக்குறை உள நெருக்கீடு, தனிமைப்படுதல், கற்றல் பலவீனம், வகுப்பறையில் தூக்கம், கோபம், அழுகை, பயம் போன்ற பல்வேறுபட்ட உணர்ச்சிவெளிப்பாடு மற்றும் சமூகத்தினுடைய தாக்கம், பாலியல் ரீதியான தொந்தரவு, வயது அடிப்படையில் மாணவர்களின் பிரிவு, குடும்பப்பின்னணி போன்ற காரணங்களினால் மாணவர்கள் உள, சமூக சவால்களினை அடைவதினை இவ்வாய்வின் மூலம் இனங்காணப்பட்டுள்ளது. எனவேதான் இவ்வகையான சவால்களை நிவர்த்தி செய்வதில் கல்வி நிறுவனம் மற்றும் விரிவுரையாளர்கள், பெற்றோர்கள், நிறுவனம் அமைந்துள்ள பிரதேசவாசிகள் முக்கிய இடம் பெறுவதோடு உள, சமூக சவால்களை இல்லாமல் செய்து மாணவர்களின் தன்னம்பிக்கையை மேம்படுத்துவதில் நிறுவனம் சார்ந்த செயற்பாடுகளை மேற்கொண்டு இந்நாட்டில் சேவையாற்றுவதற்கு சிறந்த ஆளுமை மிக்க மாணவர்களை வழங்குவது இன்றியமையாததாகும்.

பரிந்துரைகள்

மூன்றாம் நிலைக் கல்வி மாணவர்களின் உளநலனை ஆற்றுப்படுத்தும் முகமான செயலமர்வுகளை குறைந்தது மாதத்திற்கு ஒரு தடவை நிகழ்த்துதல்.

மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய உள நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்கான உளநல ஆலோசனைகளை பொருத்தமான உளவியலாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான சிறந்த பாதுகாப்பான இட ஒதுக்கீட்டினை பெற்று கொடுத்தல்

கற்றல் செயற்பாட்டுக்கு மேலதிகமான ஓய்வு நேரங்களில் மகிழ்ச்சியாக இருப்பதற்கான இட ஒதுக்கீடுகளை வழங்குதல்.

உசாத்துணை

Banu, M.N.N. (2016). இந்திய வம்சாவழி மலையக மாணவர்கள் பல்கலைகழகத்தில் எதிர் நோக்கும் சவால்கள்: இலங்கை தென்கிழக்கு மாணவர்களை மையப்படுத்திய ஆய்வு. South Eastern University Arts Research Session.

Hajara,M.M.S. & Rifka,M.U.F. (2022). முஸ்லிம் பெண்கள் கல்வி கற்பதில் எதிர்நோக்கும் சவால்களும் அவற்றிற்கான தீர்வுகளும்: சம்மாந்துறை கல்வி கோட்டத்தை மையப்படுத்திய ஓர் ஆய்வு. Department of Economics and Statistics, Faculty of Arts and Culture, South Eastern University of Sri Lanka.

Ravichandran, T.K. (2015). SIGMUNTD FREUD Ulappaguppaaivu Arivial: function of ID. Chennai: J.K Offset Printers.

Sumaiya,M.S.F., Farwin.T.R., & M.F.F. Safna.M.F.F.(2021). Covid - 19 காலப்பகுதியில் பல்கலைக்கழக மாணவர்களின் ஓய்வு நேரப்பயன்பாடு: தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப்பீடத்தை மையப்படுத்திய ஆய்வு. 8th International Symposium, FIA, SEUSL.

Thayalini,K. , & Jeyapiratheeba,A. (2014). சமூக பொருளாதார நிலை பற்றிய ஆய்வு : திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளிப் பிரதேசசெயலாளர் பிரிவினை மையப்படுத்தியது. International Research Conference. University of Jaffna.

Tharshan,T., & Jeevasuthan.S. (2022). பெண்தலைமைத்துவ குடும்பங்களின் பேணத்தகு வாழ்வாதாரம்: கரைச்சி பிதேச செலகத்தை அடிப்படையாக கொண்ட ஆய்வு. E-Journal of Social Work 7 (1): (P.47-60).

Tharshan,T. (2022). Participation of the Youth in Formal Tertiary Education: Researching the Factors and the Trends influencing in it. Training Division: National Institute of Social Development. Sri Lanka.

கனேசராஜா,கே (2017). கல்வி உளவளத்துணையும் அதன் பிரயோக ரீதியான பிரச்சினைகளும். கலை கலாசார பீடம். இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

டேமியன், எஸ். (2005). உளவளத்துணை. நல்லூர்: Boasco Artone Printers.

42

பல்கலைக்கழக மாணவர்களிடையேயான வன்போக்கு நடத்தைகளும் பாலின வேறுபாடும் ஓர் ஆய்வு

ச.கயலினி, அ.ஒக்சிகா

உளவியல் சிறப்புகலை மாணவி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை..
<mailto:skajaliny2018@gmail.com>, oxciynavam@gmail.com

கலாநிதி.க.கஜவிந்தன்,

சிரேஸ்ட உளவியல் விரிவுரையாளர், மெய்யியல் உளவியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,இலங்கை. kajavinthan@gmail.com

ஆய்வின் அறிமுகம்

வன்போக்கு நடத்தை என்பது மனிதகுலத்தின் முக்கியமான பிரச்சினையாக இருந்து வருகிறது. உளவியலாளர்கள் தொடர்ந்து வன்போக்கு நடத்தை என்றால் என்ன என்பதைக் கண்டுபிடிக்க முயன்றனர். வெவ்வேறு நபர்கள் வெவ்வேறு வழிகளில் அதை வரையறுக்கிறார்கள். சிலர் இது தீங்கு செய்ய விரும்பாத மற்றொரு நபருக்கு தீங்கு விளைவிக்கும் நோக்கம் கொண்ட நடத்தை என்று கூறுகிறார்கள். வன்போக்கு நடத்தை என்பது இயல்பிலேயே காணப்படுகின்றது எனக் கூறிவிட முடியாவிட்டாலும் இயல்பில் அதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு என்பதே பொருளாகும்.தன்னை அல்லது பிறரை,வேறு உயிரியை பாதிப்பு ஏற்படுத்துவதாக அமையும் நடத்தைப்போக்கு வன்போக்கு நடத்தை எனக் கூறலாம். இது உடல் சார்ந்ததாகவோ, வாய்மொழி சார்ந்ததாகவோ, நேரடியாகவும் மறைமுகமாகவும், இவ் வன்போக்கு நடத்தையானது வெளிப்படுத்தப்படுகின்றது. இந் நடத்தையினை கோபம், சண்டை, வாய்ப்பேச்சுப் போன்ற பல்வேறு வடிவங்களில் வெளிப்படுத்துகின்றனர். உளவியல் துறையில் மட்டுமன்றிச் சமூகவியல், மானுடவியல் போன்ற பல துறைகளிலும் உயிர்கள் வாழும் அனைத்து இடங்களிலும் இவ் வன்போக்கு நடத்தையின் தொடர்பு காணப்படும். (Kaya et al. (2012).

இன்றைய வன்போக்கு நடத்தை என்பது இளம் பருவத்தினரிடையே பொதுவான பிரச்சனைகளில் ஒன்றாகக்

காணப்படுகிறது. சமீபத்திய இரண்டு ஆண்டுகளில், இளம் பருவத்தினரிடையே வன்போக்கு நடத்தை மற்றும் வன்முறை அளவுகள் கடுமையாக அதிகரித்துள்ளன. வன்போக்கு நடத்தை மாணவர்களின் கல்விச் சாதனை, உணர்ச்சி, மன மற்றும் உளவியல் வளர்ச்சி மற்றும் கல்வி செயல்திறன், பல்கலைக்கழக சூழல் ஆகியவற்றை எதிர்மறையாக பாதிப்பதுடன் முன்கூட்டியே கட்டுப்படுத்தப்படாவிட்டால், அது எதிர்காலத்திலும் வன்முறை சம்பவங்களை ஏற்படுத்தக்கூடும். இது வன்முறை மற்றும் குற்றச் செயல்களுக்கும் வழிவகுக்கிறது, சில சந்தர்ப்பங்களில் இது உளப்பிரச்சினைகளோடு; நெருக்கமாகத் தொடர்புடையது. வன்போக்கு நடத்தை உடல் ரீதியாகவும் வாய்மொழியாகவும் காட்டலாம். உடல் வன்போக்கு நடத்தை என்பது மற்றவர்களை உதைப்பது, அடிப்பது, குத்துவது அல்லது சுடுவது போன்றவற்றை உள்ளடக்குகிறது.

மாணவர்களிடையேயான வன்போக்கு நடத்தை தற்போதைய சூழலில் ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு சவாலான பிரச்சினையாகவே உள்ளது. வன்போக்கு நடத்தை இல்லாத குழந்தைகளை விட பதிலளிக்கக்கூடிய வன்போக்கு நடத்தையுடையவர்கள் கணிசமாக அதிக ஆர்வத்துடன் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர் (வெஸ்கராமி மற்றும் அவரது சகாக்கள். (Veiskarami et al), அக்தர் & குஷ்வாஹா (Akhtar & Kushwaha) வன்போக்கு நடத்தை விடயத்தில் பெண்களை விட ஆண்கள் அதிக புள்ளிகள் பெற்றுள்ளனர். தாலுக்தார் & டெகா (Talukdar & Deka)மேலும் ஆண் இளம் பருவத்தினர் பெண்களைவிட கணிசமாக வன்போக்கு நடத்தை மனப்பாங்கு இருப்பதைக் கண்டறிந்துள்ளனர். பெண்களை விட ஆண்களுக்கு அதிக உடல், நேரடி மற்றும் மறைமுக வன்நடத்தை காணப்படுவதாக ஷேக் மற்றும் அவரது சகாக்கள் (Sheikh et al) தெரிவிக்கப்பட்டுள்ளனர். தத்தா ரூ, பிர்தூஷ் (Datta & Firdoush) 66.5 வீத குழந்தைகள் உடல்ரீதியாக வன்போக்கு நடத்தை போக்கைக் கொண்டுள்ளனர் என்கிறார். 56.8 வீத பேர் வாய்மொழி வன்போக்கு நடத்தை போக்குகளைக் கொண்டுள்ளனர். குமார்;(Kumar) கலைப்பிரிவு மாணவர்களை விட விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள் மிகவும் வன்போக்கு நடத்தையுடையவர்கள் என்பதைக் கண்டறிந்தார். அரசு கல்வி நிறுவனங்களில் படிக்கும்

மாணவர்களை விட, தனியார் கல்வி நிறுவனங்களில் படிக்கும் மாணவர்களிடம் அதிக வன்நடத்தை இருப்பதாகவும் இவர்களது ஆய்வில் தெரியவந்துள்ளது.

ஆய்வின் நோக்கங்கள்

ஆண், பெண் மாணவர்களிடையே வன்போக்கு நடத்தை, உடல், வாய்மொழி நடத்தை, கோபம் மற்றும் விரோதத்தின் அளவு என்பவற்றை மதிப்பிடுவதையும் வன்போக்கு நடத்தையைக் குறைப்பதற்கான வழி வகைகளை அறிந்துகொள்வதையும் இவ்வாய்வு நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

ஆய்வின் கருதுகோள்கள்

பெண் மாணவர்களைவிட ஆண்களுக்கு வன்போக்கு நடத்தை அளவில் அதிகமாகக் காணப்படுகிறது, ஆண் மாணவர்கள்; மற்றும் பெண் மாணவர்களிடையே குறிப்பிடத்தக்க சராசரி வேறுபாடு வன்போக்கு நடத்தையில் காணப்படுகிறது, பெண்களை விட ஆண்களுக்கு உடல் மற்றும் வாய்மொழி வன்போக்கு நடத்தை அதிகமாக இருக்கிறது, ஆண் மாணவர்கள்; மற்றும் பெண் மாணவர்களிடையே குறிப்பிடத்தக்க சராசரி வேறுபாடு உடல் மற்றும் வாய்மொழி வன்போக்கு நடத்தை அதிகளவில் காணப்படுகிறது, பெண்களை விட ஆண் மாணவர்களிடம் கோபமும் குரோதமும் அதிகமாக இருக்கின்றன என்பவை இவ்வாய்வின் கருதுகோள்களாக அமைகின்றன.

ஆய்வு முறையியல்

யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தின் கலைப்பீடம் ஆய்வுப் பிரதேசமாகத் தெரிவு செய்யப்பட்டது. யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் கலைப்ப்றிட பல்வேறு துறைகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 100 மாணவர்களின் மாதிரியை எடுத்து ஆய்வு நடத்தப்பட்டது. ஆய்வாளன் ஒவ்வொரு பாடத்தையும் தனிப்பட்ட முறையில் சந்தித்து, அவர்களுடன் நல்லுறவை ஏற்படுத்தி, ஆய்வில் பங்கேற்பதற்காக அவர்களின் ஒப்புதலைப் பெற்றனர். பின்னர் அவர்களிடம் வன்போக்கு நடத்தை வினாக்கொத்து வழங்கப்பட்டது. கேள்வித்தாளை நிரப்பத் தொடங்கும் முன், ஒவ்வொரு பாடத்திற்கும் தேவையான வழிமுறைகள் கொடுக்கப்பட்டன. 10-15 நிமிடங்களுக்குப் பிறகு,

மாணவர்கள் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வித்தாளை ஆய்வாளரிடம் ஒப்படைத்தனர் மற்றும் அவர்களின் ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. ஆய்வின் நோக்கங்களுக்கு ஏற்ப, ஷிறிஷிஷி 23 மென்பொருள் பதிப்பைப் பயன்படுத்தி தரவு பகுப்பாய்வு செய்யப்பட்டது.

ஆய்வுக் கருவிகள்

புஸ் மற்றும் பெரி (Buss and Perry)ஆல் கட்டமைக்கப்பட்டு தரப்படுத்தப்பட்ட வன்போக்கு நடத்தை வினாக்கொத்து மாணவர்களிடையே வன்போக்கு நடத்தை அளவை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டது. இந்த அளவுகோல் 4 வெவ்வேறு வன்போக்கு நடத்தைகளை அளவிடுகிறது. உடல் வன்போக்கு நடத்தை (PA), வாய்மொழி வன்போக்கு நடத்தை (VA)> கோபம் (A), மற்றும் விரோதம்; (H). அளவுகோல் ஐந்து விடைகளுடன் 29 வினாக்களை கொண்டுள்ளது, இந்த உருப்படிகளில் 27 உருப்படிகள் நேர்மறை உருப்படிகள், 1,2,3,4,5 என மதிப்பெண் பெற்றவை, 2 உருப்படிகள் 5,4,3,2,1 என எதிர்மறையாக மதிப்பெண்களையும் பெற்றன.

தரவுப் பகுப்பாய்வு

அட்டவணை 1: ஆண்மாணவர்கள்; மற்றும் பெண்மாணவர்களிடையே வன்போக்கு நடத்தை மதிப்பெண்களின் சராசரி, S.D, SED மற்றும் t-மதிப்பைக் காட்டுகிறது.

Variable	பாலினம்	No	Mean	S.D	SEM	df	T-Value
வன்போக்கு	ஆண்கள்	50	76.27	12.04	1.71	97	4.2**
நடத்தை	பெண்கள்	50	64.21	14.76	2.23		

** Significant at 0.01 level.

இவ் ஆய்வின் முக்கிய கண்டுபிடிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. மேலே உள்ள அட்டவணை 1 இலிருந்து, வன்போக்கு நடத்தையைப் பொறுத்தவரை ஆண்களின் சராசரி மதிப்பெண்கள் (வி=76.27) பெண்களின் சராசரி மதிப்பெண்களை விட (வி=64.21) அதிகமாக இருப்பதாகத் தெரிகிறது. அட்டவணை S.D, SEM மற்றும் ஆண்

மாணவர்கள்; மற்றும் பெண்மாணவர்கள் பெறப்பட்ட t-மதிப்பைக் காட்டுகிறது. ஆண்கள் S.D, =12.04, SEM=1.71, பெண்கள், S.D, =14.76, SEM=2.23) உள்ளதுடன் புள்ளிவிவர ரீதியாக குறிப்பிடத்தக்க வேறுபாடு ஆண் பெண்களுக்கிடையே (p <0.01) காணப்படுகிறது.

அட்டவணை I, ஆண் மாணவர்கள்; மற்றும் பெண் மாணவர்களிடையே வன்போக்கு நடத்தை மதிப்பெண்களின சராசரி, S.D, SED மற்றும் t-மதிப்பைக் காட்டுகிறது.

Factors	Gender	No	Mean	S.D	SEM	df	T-Value	P- Value
உடலியல் ரீதியான வன்போக்கு	ஆண்கள்	50	20.98	7.17	1.01		2.25*P	<0.05
	பெண்கள்	50	18.40	8.51	1.20	98		
வாய்மொழி ரீதியான வன்போக்கு	ஆண்கள்	50	11.54	3.80	0.53		2.13*P	<0.05
	பெண்கள்;	50	9.72	4.58	0.64	98		
கோபம் ரீதியான வன்போக்கு	ஆண்கள்	50	18.48	4.83	0.68		4.17**P	<0.01
	பெண்கள்	50	14.08	5.65	0.79	98		
குரோதம் ரீதியான வன்போக்கு	ஆண்கள்	50	25.28	5.59	0.79		1.99*P	<0.05
	பெண்கள்	50	22.94	6.02	0.85	98		

* Significant at 0.05 level, ** Significant at 0.01 level

அட்டவணை-2 இல், பெண்களை விட ஆண்கள் அதிக உடல் ரீதியான வன்போக்கு நடத்தை, வாய்மொழி வன்போக்கு நடத்தையையும், கோபம் மற்றும் விரோதப் போக்கைக் காட்டுவதாகக் காட்டப்பட்டுள்ளது. ஆண்கள் மற்றும் சிறுமிகளின் சராசரி, S.D, SEM மற்றும் t-மதிப்பு கண்டறியப்பட்டது [உடல்வழி வன்போக்கு நடத்தை , (M=20.98, S.D=7.17, SEM=1.01), (ªð‡èœ, M=18.40, S.D=8.51, SEM=1.20)> t-=2.25, H,0.05][வாய்மொழி வன்போக்கு நடத்தை , (ஆண்கள் M=11.54, S.D=3.80, SEM=.53)> (பெண்கள் M=9.72, S.D=4.58, SEM=.64), t-value=2.13, P<0.05> கோபம், (ஆண்கள் M=18.48, S.D=4.83, SEM=.68)> (பெண்கள்,

M=14.08, S.D=5.65, SEM=.79>t-value=4.17,P<0.01)>t-மதிப்பு=4.17> P<0.01],[பகைமை, (M=25.28,S.D=5.59, SEM=.79)> M=22.94, S.D=6.02, SEM=.85) மற்றும் T-value=1.99, P<0.05,

முடிவுகளும் பரிந்துரைகளும்

தற்போதைய ஆய்வின் முடிவுகள், வன்போக்கு நடத்தை பெண்களை விட ஆண்களிடம் அதிகம் என்றும், பெண்களை விட ஆண்கள் அதிக உடல் ரீதியான வன்போக்கு நடத்தையுடையவர்கள், வாய்மொழி வன்போக்கு நடத்தை,கோபம் மற்றும் விரோதப் போக்கு ஆகியவற்றைக் காட்டுகின்றனர். பாலின அடிப்படையிலான முடிவுகளைக் கருத்தில் கொண்டு, பெண்களை விட ஆண்கள் வன்போக்கு நடத்தையின் அளவு அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டது. ஆண்களின் சராசரி மதிப்பெண்கள்; (M=77.28)பெண் மாணவர்களை விட(M=65.20) அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டது. எனவே,முதல் கருதுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனால், பெண்களை விட ஆண்கள் அதிக வன்போக்கு நடத்தையுடையவர்கள் என்று சொல்லலாம். எங்கள் கண்டுபிடிப்பு பெட்டன்கோர்ட் & மில்லர் (Bettencourt & Miller)ஆல் ஆதரிக்கப்படுகிறது, அவர்கள் தங்கள் ஆராய்ச்சி ஆய்வில் அதே முடிவுகளைக் கண்டறிந்தனர், பெண்களை விட ஆண்கள் மிகவும் வன்போக்கு நடத்தையுடையவர்கள் என்று தெரிவித்தனர். இதேபோல் மாலிக் & கத்யால் (Malik & Katyal;) (பெண்களை விட ஆண்களே அதிக வன்போக்கு நடத்தையுடையவர்கள் என்பதை எடுத்துரைத்தனர்.ஆண்கள்; மற்றும் பெண் மாணவர்களின் வன்போக்கு நடத்தை மதிப்பெண்களுக்கு இடையே குறிப்பிடத்தக்க சராசரி வேறுபாடுகள் (ஜீ<0, 01) இருந்தன, எனவே, ஆய்வின் இரண்டாவது கருதுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே, எங்கள் கண்டுபிடிப்புகள் தாலுக்தார் அவரது சகபாடிகள் (Talukdar & Etal) நடத்திய ஆய்வில் குறிப்பிடத்தக்க பாலின வேறுபாடுகளைக் கண்டறிந்தனர். பெண்களை விட ஆண்களே அதிக வன்போக்கு நடத்தையுடை யவர்கள்; என்று அவர்கள் மேலும் உறுதிப்படுத்தினர்;.

உடல் மற்றும் வாய்மொழி வன்போக்கு நடத்தையில்;(M=21.98> M=11.54) ஆண்களின் மதிப்பெண்கள் கணிசமாக அதிகமாக இருப்பதாக மேலும் கண்டுபிடிப்புகள்

வெளிப்படுத்துகின்றன.பெண் மாணவர்களின் சராசரியை விட (வி=18.42> வி=9.74). எனவே எங்கள் மூன்றாவது கருதுகோளும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே பெண்களை விட ஆண்கள் உடல் ரீதியாகவும், வாய்மொழியாகவும் வன்போக்கு நடத்தை உள்ளவர்கள் என்று குறிப்பிடலாம். இவ் ஆய்வின் முடிவுகளை ஒவ்வோர் (Onukwufor) ஆய்வின் முடிவுகள் கோடிட்டுக் காட்டுகிறதுடன் அவர் ஆய்வின் படி உடல் வன்போக்கு நடத்தையில் பெண்களை விட ஆண்களே அதிக வன்போக்கு நடத்தை உள்ளவர்கள் என்பதையும் முடிவுகள் வெளிப்படுத்தின.

வன்போக்கு நடத்தை (T=2.25> df 98) மற்றும் வாய்மொழி வன்போக்கு நடத்தை (T=2.13> df 98) ஆகிய இரண்டின் t-மதிப்புகள் 0.05 அளவில் குறிப்பிடத்தக்க அளவில் காணப்படுவதால், இரு குழுக்களின் உடல் மற்றும் வாய்மொழி வன்போக்கு நடத்தையில் குறிப்பிடத்தக்க சராசரி வேறுபாடுகள் காணப்படுவதால் நான்காவது கருதுகோளும் ஏற்கப்படுகிறது. மேலும் இவ் ஆய்வில் பெண்களை விட ஆண்களுக்கு அதிக கோபமும் விரோதமும் இருப்பதைக் காட்டுகிறது. கோபத்தைப் பொறுத்தமட்டில் ஆண்களின் சராசரி (M=18.48)பெண்களின் சராசரி (M=14.08)விட அதிகமாகக் காணப்படுகிறது, அதே சமயம் ஆண்களுக்கு பெண்களை விட அதிக அளவு விரோதம் உள்ளது, மேலும் அவர்களின் சராசரி (M=25.28) சராசரியை விட அதிகமாக உள்ளது. (M=22.96) பெண்களின் விரோதம், எனவே ஐந்தாவது கருதுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆண்கள் மற்றும் பெண்களிடையே கோபம் மற்றும் விரோதப் போக்கில் குறிப்பிடத்தக்க சராசரி வேறுபாடுகள் இவ் ஆய்வில் கண்டறியப்பட்டது.

இறுதியாக இவ் ஆய்வின் அடிப்படையில் வன்போக்கு நடத்தையில் குறிப்பிடத்தக்க பாலின வேறுபாடு காணப்படுகிறது. பெண்களை விட ஆண்கள்; மிகவும் வன்போக்கு நடத்தையுடைவர்கள், அதே நேரத்தில் உடல், வாய்மொழி வன்போக்கு நடத்தையில், கோபம் மற்றும் விரோதம் ஆகியவை பெண் மாணவர்களை விட ஆண் மாணவர்களிடையே அதிகம் காணப்படுகின்றன. இன்றைய நாட்களில் வன்போக்கு நடத்தை என்பது அனைத்து வயது மாணவர்களிடையேயும் காணப்படும்

பொதுவான பிரச்சினைகளில் ஒன்றாகும். பாடசாலை ஆரம்பப் பிரிவு முதல் பல்கலைக்கழகம் வரையிலான மாணவர்கள் பல்வேறு அளவிலான வன்போக்கு நடத்தையை வெளிப்படுத்துகின்றனர், இது வளரும் சமூகத்திற்கு சவாலாக உள்ளது. மாணவர்களிடம் வன்போக்கு நடத்தையிருந்தால், அவர்களது எதிர்காலம் கேள்விக்குறியாகும். எனவே மாணவர் சமூகத்தின் ஒவ்வொரு நிலையிலும் ஆசிரியர்கள், உளவியலாளர்கள் மற்றும் உளவள ஆலோசகர்களால் பல்வேறு தளர்வு நுட்பங்கள் மற்றும் ஆலோசனை செயல்முறைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

உசாத்துணைகள்

1. Buss AH, Perry M (1992) the aggression questionnaire. J PersSoc <https://www.ncbi.nlm.nih.gov/pubmed/1403624>

2. Kevin JS, Carl EP, Cecilia S (2001) Quality of parent/ adolescent <http://journals.sagepub.com/doi/abs/10.1177/027243160102100 2003?journalCode=jeaa> attachment and aggression in young adolescents. Journal of Early <http://journals.sagepub.com/doi/abs/10.1177/027243160102100 2003?journalCode=jeaa> Adolescence 21(2): 182-203. <http://journals.sagepub.com/doi/abs/10.1177/027243160102100 2003?journalCode=jeaa>

3. Kohli and malik, A. (2009). Level of aggression: a gender based study. Indian psychological review, 72(3A),155-160

4. Kumar R (2012) Aggression among secondary school students in relation to their emotional competence. International Journal of Education and Allied Sciences 4(2): 97-102.

5. Nelson. (2006). Causes of Students' Aggressive Behaviour at Secondary School Level.Journal of Literature, An International Peer-reviewed Journal,11(49A)

6. Olweus, D. (1978). Aggression in schools: bullies and whipping boys. Washington

7. Onukwufor JN (2013) Physical and verbal aggression among adolescent <http://www.eajournals.org/wp-content/uploads/

Physical-and-Verbal-Aggression-among-Adolescent-Secondary-School-Students-in-Rivers-State-of-Nigeria2.pdf> secondary school students in rivers state of Nigeria. British Journal of <http://www.eajournals.org/wp-content/uploads/Physical-and-Verbal-Aggression-among-Adolescent-Secondary-School-Students-in-Rivers-State-of-Nigeria2.pdf> Education 1(2): 62-73. <http://www.eajournals.org/wp-content/uploads/Physical-and-Verbal-Aggression-among-Adolescent-Secondary-School-Students-in-Rivers-State-of-Nigeria2.pdf>Psychol 63(3): 452-459. <https://www.ncbi.nlm.nih.gov/pubmed/1403624>

8. Talukdar RR, Deka RS (2014) A study on aggression level among adolescents. International Journal of Social Scence and Humanities Research 2(4): 91-94.

9. Vitaro F, Brendgen M, Tremblay RE (2002) Reactively and proactively <https://www.ncbi.nlm.nih.gov/pubmed/12030595> aggressive children: antecedent and subsequent characteristics. J Child <https://www.ncbi.nlm.nih.gov/pubmed/12030595> Psychol Psychiatry 43(4): 495-505. <https://www.ncbi.nlm.nih.gov/pubmed/12030595>

43

கணவனை இழந்த பெண்களின் உளசமூகப் பிரச்சினைகள் ஓர் ஆய்வு

பு.குஷாவினி,
உளவியல் சிறப்புகளை மாணவி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
kushaliny1999@gmail.com

க.கஜவிந்தன்,
சிரேஷ்ட உளவியல் விரிவுரையாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

ஆய்வின் அறிமுகம்

தமிழ் சமுதாயத்தினைப் பொறுத்த வரையில் கணவனை இழந்த பெண்களின் தொகையானது குறிப்பிடக் கூடியளவு அதிகரித்த நிலையிலேயே காணப்படுகின்றது. குறிப்பாக வடபகுதியில் இதன் அதிகரிப்பானது இரட்டிப்பான அளவிலேயே காணப்படுகின்றது எனலாம். போர், இயற்கை அனர்த்தம், விபத்துக்கள், நோய்த்தாக்கங்கள் போன்ற பல்வேறுபட்ட காரணிகளின் விளைவாக அதிகரித்த அளவிலான கணவனை இழந்த பெண்கள் காணப்படுகின்றனர். எமது சமுதாயமானது வெளிப்படையாக இவ்வாறான கணவனை இழந்த பெண்களை விதவைகள் என்ற முத்திரையை இட்டு ஒதுக்கி வைக்கின்ற பரிதாபநிலை பரவலாகக் காணப்படுகின்றது. வெளிநாடுகளைப் பொறுத்தவரையில் சமூகரீதியான அவர்களின் இடைவினையானது சுமூகமான நிலையிலேயே காணப்படுகின்றது. ஆனால் எமது தமிழர் சமுதாயத்தினைப் பொறுத்தவரையில் இவ்வாறான பெண்கள் உளவியல், உடலியல், சமூக, பொருளாதார ரீதியான சவால்களை எதிர் கொள்கின்றார்கள். ஆனால் இதனைப் பற்றியோ இதன் விளைவுகளைப் பற்றியோ எமது சமுதாயம் சிந்திப்பதில்லை. சிந்திப்பதற்கான பல்வேறு சந்தர்ப்பங்கள் கிடைத்தும் அவற்றை பொருட்படுத்துவதில்லை என்றே குறிப்பிடவேண்டும். இவ்வாறான பெண்களை சமுதாயம் அலட்சியம் செய்வதானது இவர்களை மேலும் உளவியல் தாக்கங்களிற்கு உட்படுத்துகின்றது. ஆனால்

உண்மையில் இவ்வாறான பெண்களை சமுதாயத்தின் ஒரு அங்கமாக கருதி அவர்களுக்கான உரிமை, தேவைகள் போன்றவற்றை பூர்த்தி செய்வது ஒவ்வொரு சமூக அங்கத்தினரதும் கடமையாகும்.

ஆய்வின் நோக்கம்.

பொதுவாக கணவனை இழந்த பெண்கள் ஒவ்வொரு சமூகத்திலும் காணப்படுகின்றனர். விதவைகள் என்ற முத்திரையைத் தவிர எமது சமுதாயம் அவ்வாறான பெண்களை வெளிக் கொண்டுவர விரும்புவதில்லை எனக் குறிப்பிடலாம். ஆனால் இவ்வாறான கணவனை இழந்த பெண்கள் ஒரு குடும்பத்தலைவன் செய்ய வேண்டிய அனைத்து கடமைகளையும் தேவைகளையும் தமது பிள்ளைகளுக்காகவும் ஏனைய குடும்ப அங்கத்தினருக்காகவும் தனித்து நின்று போராடி குடும்பப் பொறுப்பை சுமந்து நிற்கின்றார்கள். இவற்றையெல்லாம் அவர்கள் நிறைவேற்றினாலும் அவர்களது தனிப்பட்ட வாழ்வில் உடலியல், உளவியல் சமூக ரீதியிலான பல்வேறுபட்ட வடிவங்களில் சவால்களை எதிர்நோக்கி வருகின்றனர். இவர்களுடன் மனம்விட்டு உரையாடவோ, இப் பெண்களின் மனக்குமுறல்களை வெளிக் கொணரவோ எவரும் விரும்புவதில்லை. தயக்கம், எவ்வாறு உரையாடுவது, போன்ற காரணங்கள் தொடர்பாடலுக்கு தடையாக உள்ளது எனலாம். எனவே இவ் ஆய்வின் மூலம் இயன்றளவு அவர்களுடன் உரையாடி இவ்வாறான சவால்களை அவர்கள் மூலமாக வெளிக் கொணர்ந்து சமுதாய மக்களிடையே வெளிப்படுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் கணவனை இழந்த பெண்களின் மனப் பாரத்தினை இதன்மூலம் குறைப்பதுமே இவ் ஆய்வின் நோக்கமாகும்.

ஆய்வின் கருதுகோள்கள்

கணவனை இழந்த பெண்கள் உளவியல் சமூக ரீதியான சவால்களை எதிர்கொள்கின்றார்கள்.

கணவனை இழந்த பெண்கள் சமூக ரீதியான அழுத்தத்திற்கு உட்படுகின்றார்கள்.

கணவனை இழந்த பெண்களே அதிகளவில் உளவியல் ரீதியான தாக்கத்திற்கு உட்படுகின்றார்கள்.

வயதான கணவனை இழந்த பெண்கள் குறைந்த அளவே உளவியல் ரீதியான தாக்கத்திற்கு உட்படுகின்றார்கள்.

ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது வவுனியா மாவட்டத்தில் உள்ள தெற்கு பிரதேச சபையால் புதுக்குளம் என்கின்ற கிராமத்தில் உள்ள கணவனை இழந்த பெண்களிடம் மேற்கொள்ளப்பட்டது. இக்கிராமத்தில் உள்ள 15 பெண் தலைமைத்துவ குடும்பங்களில் உள்ள பெண்களிடம் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. கணவனை இழந்த பெண்களிடம் இருந்து பெறப்பட்ட தகவல்கள் அனைத்தும் நேர்காணல் மூலம் பெறப்பட்டதாகும். கிராமத்தில் உள்ள 15 கைம்பெண்களின் வீடுகளிற்கும் சென்று நேரடியாக கலந்துரையாடி பெறப்பட்ட தரவுகள் தகவல்கள் மூலமாக அளவியல் மற்றும் பண்பியல் ரீதியாக இவ்வாய்வு முன்னெடுத்துச் செல்லப் படுகின்றது.

இவ் ஆய்வுக்காக, கணவனை இழந்த பெண்களின் உளசமூக பிரச்சினைகளை வெளிக்கொணரும் வினாக்கொத்தானது தரவு சேகரிக்க பயன்படுத்தப்பட்டது. இவ்வினாக்கொத்தில் மொத்தம் 12 வினாக்கள் உள்ளது. அதில் முதல் 6 வினாக்கள் உள பிரச்சினையையும், இறுதி 6 வினாக்கள் சமூக பிரச்சினைகளையும் வெளிக்கொணருவதாக இவ்வினாக்கொத்து தயாரிக்கப்பட்டது. அத்துடன் பண்பியல் ரீதியான ஆய்வுக்காக தனிநபர் விபரம் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

தரவுப் பகுப்பாய்வும் முன்வைப்பும்

கணவனை இழந்த பெண்கள் எதிர்கொள்கின்ற சமூக உளவியல் சவால்கள் என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது 15 கணவனை இழந்த பெண்களிடம் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வில் 25 தொடக்கம் 65 வயதிற்கு மேற்பட்ட கணவனை இழந்த 15 பெண்களில் மேற்கொள்ளப்பட்டது. இவ் 15 பெண்களிடமும் ஒவ்வொரு வயதுப் பிரிவினரிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு வருமாறு:

வயதுத் தொகை

25 - 35 02

36 - 45 02

46 - 65 05

65 ? 06

இப்பதினைந்து பெண்களிடம் பெறப்பட்ட தகவலின் படி அதிகளவான பெண்கள் அதிகமாக உள ரீதியான பாதிப்பை விடவும் சமூக ரீதியான பாதிப்புகளுக்கே அதிகம் உட்படுகின்றார்கள் எனக் குறிப்பிட்டிருந்தனர். அதிலும் குறிப்பாக சமூக சுப நிகழ்வுகளுக்கு தம்மை ஒதுக்கி வைக்கும் போது மிகவும் மனவேதனை அடைவதாக குறிப்பிட்டு இருந்தனர்.

திருமண நிகழ்வு, சுப காரியங்கள், கோயில் திருவிழாக்கள் போன்ற நிகழ்வுகளில் தாமாகவே ஒதுங்குவதாகவும் குறிப்பிட்டிருந்தனர். அதற்கான காரணத்தினை வினவிய போது தம்மைப் பற்றி ஊர்மக்கள் ஏதும் விமர்சித்து விடுவார்களோ என்ற பயத்தினால் தாமே ஒதுங்கி விடுவதாக குறிப்பிட்டிருந்தனர். மேலும் 25 வயது தொடக்கம் 35 வயதிற்கு மேற்பட்ட இளவயது கணவனை இழந்த பெண்கள் உடலியல் மற்றும் உளவியல் ரீதியான சவால்களை எதிர்கொள்கின்றனர் எனக் குறிப்பிட்டனர். இவ்வாறானவர்கள் பாதுகாப்பு தொடர்பாக அதிக சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் பாலியல் இடர்பாடுகள், மாதவிடாய் கோளாறுகள் போன்றவை தமக்குள் பாரிய சிக்கல்களை ஏற்படுத்துவதாகக் குறிப்பிட்டு இருந்தனர். 02 பெண்கள் ஒரே விதமான பிரச்சினைகளை குறிப்பிட்டு இருந்தனர்.

36-45 வயதிற்கு உட்பட்ட கணவனை இழந்த பெண்கள் பொருளாதாரம், பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து அதிக கவலை கொள்பவர்களாவும் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகனை எதிர்கொள்பவர்களாகவும் குறிப்பிட்டு இருந்தனர். இவ் வயதுப் பெண்கள் சுயதொழில் செய்பவர்களாக காணப்பட்டனர். குறிப்பாக வீட்டுத்தோட்டம், கோரி, மாடு வளர்த்தல் போன்றவற்றில் ஈடுபடுகின்றனர். இவ்வாறான பெண்கள் வேற்று ஆணுடன் சாதாரணமாகப் பேசும் போதும் கூட அதனை தப்பான கண்ணோட்டத்தில் பார்ப்பதாக இவ்வயதுப் பெண்கள் குறிப்பிட்டு இருந்தனர். இதனால் சமூக உறவுச் சிக்கலினை அதிகம் எதிர்கொள்வதாக குறிப்பிட்டு இருந்தனர்.

46 வயதுக்கும் 65 வயதிற்கும் உட்பட்ட 5 கணவனை இருந்த பெண்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி இவர்கள் சமூக ரீதியான தாக்கத்தினை விட அறிகை ரீதியாக பல்வேறுப்பட்ட சவால்களை எதிர்நோக்குவதாகக் குறிப்பிட்டனர். இவர்கள் குறிப்பிட்டதற்கு இணங்க குழப்பமான உணர்வுகள் தனிமை உணர்வு பிறரிடம் நம்பிக்கை அற்ற தன்மை போன்றவை காணப்படுவதாகக் குறிப்பிட்டு இருந்தனர்.

65 வயதிற்கு மேற்பட்ட கணவனை இழந்த 06 பெண்களிடம் பெறப்பட்ட தகவல்களின் படி நித்திரையின்மை, அன்புக்கான ஏக்கம், விரக்தியுணர்வு, ஒதுங்கியிருத்தல், உணவுப்பிரச்சினை போன்ற பல்வேறுபட்ட சிக்கல் நிலைமையினை எதிர்கொள்வதாக குறிப்பிட்டு இருந்தனர். இதிலிருந்து இவ்வயதுப் பெண்கள் உளவியல் ரீதியான சவால்களை அதிகம் எதிர்கொள்வதாகக் குறிப்பிட்டு இருந்தனர். தாம் தனிமையாக இருப்பது போன்ற உணர்வு அடிக்கடி ஏற்படுவதாகக் குறிப்பிட்டனர். மனதில் அடிக்கடி குழப்பமான எண்ணங்கள் தோன்றுவதால் மனதை ஒரு முகப்படுத்தி செயற்பட முடியாமல் உள்ளதாக குறிப்பிட்டனர்.

இப் 15 பெண்களிடமும் வினவப்பட்டதன் அடிப்படையில் கணவனின் இறப்பின் கால அளவிற்கும், இவர்களின் உளவியல் தாக்கத்திற்கும் தொடர்பு இருப்பதாக கண்டு கொண்டேன். 03 வருடத்திற்குள் கணவனை இழந்த பெண்கள் அதிகம் உணர்ச்சி வசப்பட்டு பேசுபவர்களாகவும் ஏனைய பெண்கள் சாதாரணமாக பேசுபவர்களாவும் காணப்பட்டனர். வருட இடைவெளி அதிகமாக மனப்பக்குவம் ஏற்பட்டு விட்டதாகவும் சில பெண்கள் குறிப்பிட்டு இருந்தனர். இளவயது கணவனை இழந்த பெண்கள் தமது பிள்ளையின் எதிர்காலம், வருமானம், சுயதொழில் என வெள;வேறுபட்ட காரியங்களில் நேரத்;தை செலவிடுவதாக குறிப்பிட்டு இருந்தனர். ஆனால் 65 வயதிற்கு மேற்பட்ட கணவனை இழந்த பெண்கள் வீட்டிலேயே அதிகம் இருப்பதால் இழப்புத்துயர் அடிக்கடி நினைவுக்கு வருவதாகவும் குறிப்பிட்டு இருந்தனர்.

முடிவுகளும் பரிந்துரைகளும்

கணவனை இழந்த பெண்கள் உளவியல் ரீதியாக சவால்களை எதிர்கொள்கிறார்கள் என்ற கருகோள் நிரூபிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி சமூக ரீதியான

அழுத்தத்திற்கு உட்படுகின்றார்கள் என்ற கருதுகோளும் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டுள்ளது. இளவயதில் கணவனை இழந்த பெண்களே அதிகளவில் உளவியல் ரீதியான தாக்கத்திற்கு முகம் கொடுக்கின்றார்கள் என்றும், வயதான கணவனை இழந்த பெண்கள் குறைந்த அளவே உளவியல் ரீதியான தாக்கத்திற்கும் உட்படுகிறார்கள் என்ற எனது கருதுகோளானது பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் வைத்து நோக்கும் போது கருதுகோள் நிராகரிக்கப்படுகின்றது. குறிப்பாக இளவயதில் கணவனை இழந்த பெண்களை விட வயதான கணவனை இழந்த பெண்களே அதிகளவில் உளவியல் ரீதியான தாக்கங்களிற்கு உட்படுகின்றார்கள் எனலாம். எனவே இவற்றினை தொகுத்;து நோக்கும் போது 50வீத அளவில் கருகோள் நிரூபிக்கப்பட்டுள்ளது. கணவனை இழந்த பெண்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி அனைத்துப் பெண்களுமே உளவியல், உடலியல் சமூக ரீதியான சவால்களை எதிர் கொள்கின்றார்கள். எனினும் வயது வேறுபாடு இதில் பாரிய செல்வாக்குச் செலுத்துகிறது எனலாம். எனினும் இவர்கள் இதனை வெற்றிகரமாக கையாள்கிறார்கள் என்றே குறிப்பிடலாம். வீட்டுச்சுமைகள் அனைத்தையும் தாமே முன்னின்று செயற்பட்டு தமது கடமைகளையம் பிள்ளைகளின் கடமைகளையும் நிறைவேற்றுபவர்களாக உள்ளனர். எனவே எமது சமுதாயத்தைப் பொறுத்தவரையில் கணவனை இழந்த பெண்கள் பல்வேறுபட்ட சவால்கள், தாக்கங்களை எதிர்கொண்டாலும் கூட தமது பொறுப்புக்கள், கடமைகளை சரிவர நிறைவேற்றுகின்றார்கள் என்றே குறிப்பிடலாம். எனினும் மேலும் இவர்களில் பொருளாதாரத்தினை ஈடு செய்வதற்காகவும், தனிமையைப் போக்குவதற்காகவும் சமூக குழுக்கள், சுயதொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுத்தல் மேலும் இவர்களை உற்சாகப்படுத்துவதாகவும் தைரியமூட்டுவதாகவும் அமையும் என்ற முடிவுக்கு வரலாம்.

உசாத்துணைகள்

Vithana, E. (2011). Prevalence of war-related mental health conditions and association with displacement status in postwar Jaffna District, Sri Lanka. The Journal of the American Medical Association, 306(5), 522-531.

Jayawickreme E., Jayawickreme, N. & Miller, E. (2010). Triumphalism, fear and humiliation: The psychological legacy of Sri Lanka's civil war. Dynamics of Asymmetric Conflict, 3(3), 208-222. doi: 10.1080/17467586.2010.531031.

Ozer, E.J., Best, S.R., Lipsey, T.L., Weiss, D.S. (2003). Predictors of posttraumatic stress disorder and symptoms in adults: A meta-analysis. Psychological Bulletin, 129 (1), 52-73. doi: 10.1037/0033-2909.129.1.52

Rivara, P.R. et al. (2014). Parental injury and psychological health of children. Pediatrics, 1-

Silva, K.T. (2012). Demographic impact of the war, changes in sex ratio and their possible effects on vulnerability and psychosocial stress in civilian populations in Northeast Srilanka

Silva, K.T., Sivakanthan, S. & Wickramasinghe, W.M.K.B. (2012). Report on Community Consultations on Underlying Causes of Poverty in Selected Conflict-affected Areas in Sri Lanka. CARE International, Colombo.

Somasundaram, D. (2004). Short- and long-term effects on the victims of terror in Sri Lanka. Journal of Aggression, Maltreatment & Trauma, 9, 215- 228. doi: 10.1300/J146v09n01_26

Wickrama, K.A.S. & Wickrama, K.A. (2008). Family context of mental health risk in tsunami affected mothers: Findings from a pilot study in Sri Lanka. Social Science and Medicine. 66(4). pp. 994-1007.

44

பல்கலைகழக மாணவர்களின் கற்றல்சார் மனவழுத்தமும் பாலின வேறுபாடுகளும்

விஜிதா.அ.
உளவியல் சிறப்புக்கலை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
francisvijitha@gmail.com

கலாநிதி. க. கஜவிந்தன்
சிரேஷ்ட உளவியல் விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
kajavinthan@univ.jfn.ac.lk

ஆய்வின் அறிமுகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமானது இலங்கையில் வடமாகாணத்தில் அமையப்பெற்றுள்ளது. இவ் ஆய்வானது கல்வியாண்டு 2022 இல் கல்வி பயிலும் கலைப்பீடம் முதலாம் வருட மாணவர்களை அடிப்படையாகக் கொண்டது. முதலாம் வருடத்தில் கல்விப் பயிலும் 600 மாணவர்களில் எழுமாற்று ரீதியாக 80 பெண் மாணவிகளும் 20 ஆண் மாணவர்களும் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டார்கள். பல்கலைக்கழக மாணவர்களின் நல்வாழ்வு மற்றும் கல்வி செயற்றிறனைப் பாதிக்கும் பொதுவான பிரச்சினைகளில் ஒன்றாக மனவழுத்தம் காணப்படுகிறது. அந்த வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் கற்றல் சார் மனவழுத்தகத்தில் மற்றவர்களுடனான தொடர்பு, தனிப்பட்ட காரணிகள், கல்விசார் காரணிகள், சூழல் சார் காரணிகள் என்பன தாக்கம் செலுத்தியுள்ளன.

சூழலியல் காரணிகள் கற்றல்சார் மனவழுத்தத்தில் தாக்கம் செலுத்தியுள்ளன. அந்த வகையில் வெளி மாவட்ட மாணவர்கள் புதிய இடத்தில் தங்கி இருந்து தமது கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்வது கற்றல் சார் மனவழுத்தத்தில் பெரிய சவாலாகக் காணப்பட்டது. பாதுகாப்பு, விடுமுறைகள், பெற்றோரை பிரிந்து விடுதியில் தங்கியிருத்தல், பிடிப்பில்லாத வாழ்வியல் முறை, போக்குவரத்து, உடைக் கலாசாரம், மொழிக் கலாச்சாரம் என்பன பெரும் சவால்களாக காணப்பட்டன. அத்துடன் பல்கலைக்கழகத்தில் விரிவுரை அறைகளைக் கண்டறிதல்,

காலநிலை, விடுதியின் வடிவமைப்பு என்பனவும் முக்கிய தலையீடுகளாகக் காணப்பட்டன.

பிறருடனான தொடர்பை ஏற்படுத்தல் மற்றும் உறவாடல்களைத் தொடர்ந்து கட்டி எழுப்புதல் என்பன கற்றல் சார் மனவழுத்தத்தில் மிக முக்கியமாகத் தாக்கம் செலுத்தியுள்ளன. அந்த வகையில் புதிய சூழலில் புதிய ஆண் நண்பர்கள் பெண் நண்பர்களை அடையாளம் காணுதல் உறவைக் கட்டியெழுப்புதலில் பெரிதும் தடையாகக் காணப்பட்டது. மற்றும் தங்கி இருப்பவர்களுடனான கருத்து முரண்பாடு, மொழி நடை பிரச்சினைகள், அவர்களுடன் இணைந்து தொழிற்படல் மற்றும் பல்கலைக்கழகத்தில் புதிய நண்பர்களுடன் இணைந்து செயல்படல், விரிவுரையாளர்களுடனான தொடர்பாடல், குடும்பப் பிரச்சினைகள் என்பன கல்வி சார் மனவழுத்தத்தில் செல்வாக்கு செலுத்தியுள்ளன.

தனிப்பட்ட காரணிகளை நோக்கும்போது சாப்பாட்டுப் பழக்க வழக்கங்களில் ஏற்பட்ட மாற்றம், பொருளாதார நெருக்கடி, உடல்நிலை பாதிப்புகள் என்பனவும் தூக்கப் பழக்க வழக்கங்களில் ஏற்பட்ட மாற்றம், படிப்பினையும் வேலையையும் இணைத்து நோக்குதல், பொறுப்புக்களை ஏற்க வேண்டிய நிலைகள் என்பனவும் பெரும் சவால்களாகக் காணப்பட்டன.

கல்விசார் காரணிகள் மனவழுத்தத்தில் பாடத்தை தெரிவு செய்தல் தொடர்பான குழப்ப நிலை, பாடத் தெரிவின் பின் ஒப்படைகள், பரீட்சைகள், கணனிசார் பிரச்சினைகள், விரிவுரைகளைத் தவறவிடல், குறைந்த மதிப்பெண்கள் என்பன பெரும் சவால்களாகக் காணப்பட்டன. அந்த வகையில் மேற்குறிப்பிட்ட காரணிகள் அனைத்தும் கல்வி சார்ந்த மனவழுத்தத்தில் செல்வாக்கு செலுத்தியுள்ளமையைக் காண முடிந்தது.

ஆய்வின் நோக்கங்கள்

பல்கலைக்கழக மாணவிகளுக்கு கற்றல் சார் மனவழுத்தம் உள்ளதா எனக் கண்டறிதல்

தனிப்பட்ட காரணிகளால் மாணவர்கள் மன அழுத்தத்தை எதிர்கொள்வதில் பாலின வேறுபாடு உள்ளதா என்பதைக் கண்டறிதல்

கல்விசார் காரணிகளால் மாணவர்கள் மன அழுத்தத்தை எதிர்கொள்வதில் பாலின வேறுபாடு உள்ளதா என்பதைக் கண்டறிதல்

சூழல் காரணிகளால் மாணவர்கள் மன அழுத்தத்தை எதிர்கொள்வதில் பாலின வேறுபாடு உள்ளதா என்பதைக் கண்டறிதல்

பொருளாதாரப் பிரச்சினைகளால் மாணவர்கள் மன அழுத்தத்தை எதிர்கொள்வதில் பாலின வேறுபாடு உள்ளதா என்பதைக் கண்டறிதல்

கருதுகோள்கள்

பல்கலைக்கழக மாணவர்களுக்கு கற்றல் சார் மனவழுத்தம் உள்ளது.

தனிப்பட்ட காரணிகளால் மாணவர்கள் மன அழுத்தத்தை எதிர்கொள்வதில் பாலின வேறுபாடு உள்ளது

கல்விசார் காரணிகளால் மாணவர்கள் மன அழுத்தத்தை எதிர்கொள்வதில் பாலின வேறுபாடு உள்ளது

சூழல் காரணிகளால் மாணவர்கள் மன அழுத்தத்தை எதிர்கொள்வதில் பாலின வேறுபாடு உள்ளது

பொருளாதாரப் பிரச்சினைகளால் மாணவர்கள் மன அழுத்தத்தை எதிர்கொள்வதில் பாலின வேறுபாடு உள்ளது

ஆய்வு முறையியல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிங்கள மற்றும் தமிழ் மாணவர்கள் கல்வி கற்கின்றனர். அந்த வகையில் பல்கலைக்கழக முதலாம் வருட மாணவர்களின் கல்வி சார் மனவழுத்தம் தொடர்பான ஆய்வுக்கு யாழ் மாவட்டத்தில் உள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீடம் ஆய்வுப் பிரதேசமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது எனவே மாணவர்களின் கற்றல் சார் மனவழுத்தத்தை அறிந்து கொள்வதற்காக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வானது விபரணப் புள்ளியல் ஆய்வு வடிவத்தினை (Descriptive Research Design) கொண்டதுடன் அளவியல் பண்பியல் ரீதியாகத் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியாண்டு - 2022 இல் கல்வி பயிலும் முதலாம் வருட மாணவர்களின் கற்றல் சார்ந்த மன அழுத்தம் குறித்து ஆய்வு தொடர்பான தரவுகளை பெற்று கொள்வதற்கான அனுமதி பெறப்பட்ட பின்னர் மாணவர்களிடம் வினாக்கொத்து மற்றுத் தனிநபர் விபரம் வழங்கப்பட்டு தரவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. முதலாம் வருட மாணவர்களில் எழுமாறாக 80 பெண்களும் 20 ஆண்களும் தெரிவு செய்யப்பட்டு, அவர்களிடமிருந்து பெறப்பட்ட தரவுகள் அளவு சார், பண்புசார் அடிப்படையில் விபரணப் புள்ளியியல் ஆய்வு வடிவமைப்பிற்கு உட்படுத்தப்பட்டதுடன் சமூக விஞ்ஞான புள்ளியியல் (SPSS-23) மென்பொதியின் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு கருதுகோளின் வலிதான தன்மை நிறுவப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முதலாம் வருட கலைப்பீட மாணவர்களின் கற்றல் சார் மன அழுத்தத்தைக் கண்டறியும் நோக்கில் இவ்வாய்விற்கு தனிநபர் விபரமும் வினாக்கொத்து மூலம் தரவுகளும் பெறப்பட்டன. இவ் ஆய்விற்காக கற்றல்சார் மனவழுத்த வினாக்கொத்து(Undergraduates Academic Stress scale developed by Yumba, Wyclifee) கொடுக்கப்பட்டது. இவ் வினாக்கொத்தில் மாணவர்களின் கற்றல்சார் மனவழுத்தம் தொடர்பான 04 பிரிவுகளுக்கு உட்பட்ட 33 வினாக்கள் கொண்ட வினாக்கொத்து பயன்படுத்தப்பட்டது.

தரவு பகுப்பாய்வுகள்

இந்த ஆய்வில், சமூக அறிவியலுக்கான புள்ளியியல் தொகுப்பு பயன்படுத்தப்பட்டு தரவு பகுப்பாய்வு செய்யப்பட்டது. மாதிரியானது சராசரி வயது 21, 22 வயதுடைய 100 முதலாம் வருட மாணவர்களைக் கொண்டிருந்தது (SD= 3,217). முக்கியமாக ஆண் மாணவர்களை விட பெண்கள் அதிகம் பதிலளித்தார்கள். மேலும், முதலாம் ஆண்டு இளங்கலைப் பட்டதாரிகளே பதிலளித்தவர்களில் பெரும்பான்மையானவர்கள். மாதிரிகள் மூலம் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இவ்வாய்விற்கான தரவுப் பகுப்பாய்ப்பானது பின்வரும் அடிப்படையில் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு மாறி, மாறிலிகளுக்கு இடையிலான வித்தியாசம், தொடர்புகள் போன்றன கண்டறியப்பட்டன. இத்தொடர்புகளின்

அடிப்படையில் ஒப்பிட்டு அடிப்படையிலான அடிப்படையில் தரவுகளைப் பெற்றுக்கொள்ள T-Test> வித்தியாசங்களை கண்டுபிடிக்க Mean பயன்படுத்தப்பட்டது. இவற்றின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு பின்வருமாறு பகுப்பாய்வு முடிவுகள் பெறப்பட்டன,

அட்டவணை 1- பாலின அடிப்படையில் மாணவர்களின் உறவு நிலை காரணிகளின் அழுத்தங்களின் புள்ளிவிவரங்கள்

மனவழுத்ததின் வகைகள்	Sex			
	Men		Women	
	Mean	Std. Deviation	Mean	Std. Deviation
உறவு நிலைக்காரணிகள்				
1. பிறருடனான உறவுகளில் மாற்றம்	2,76	1,03	2,71	1,01
2. தங்கி இருப்பவர்களுடன் முரண்பாடு	2,56	1,13	2,80	1,10
3. பிறருடன் சேர்ந்து தொழிற்பட தெரியாது	2,69	1,30	2,88	,886
4. ஆண் நண்பர்கள் பெண் நண்பர்களுக்கு இடையில் சச்சரவு	3,00	1,34	3,73	,963
5. புதிய ஆண் நண்பர்கள பெண் நண்பர்கள்	3,00	1,29	3,51	1,10
6. குடும்ப பிரச்சினை	2,76	1,30	3,41	1,22
7 . தவறான எண்ணத்தினால் ஏற்படும் விரக்தி	2,94	1,26	3,13	1,06

உறவுக் காரணிகள் - பெண் மாணவர்கள் தங்கள் ஆண் சக நண்பர்களின் சராசரியுடன் ஒப்பிடும்போது (M=3,00) காதலன்/ காதலியுடன் சண்டையிடுவதன் அடிப்படையில் அதிக மதிப்பெண்களைப் (M=3,73) பெற்றுள்ளனர். இருப்பினும், விடுதிகளில் ஒன்றாகத் தங்கும் காரணிகளால் ஆண் மாணவர்கள் குறைந்த சராசரியும் (2,56),பெண் மாணவர்கள் மற்றவர்களுடனான உறவில் மாற்றம் காரணமாக குறைந்த சராசரி (M=2,71) மதிப்பெண்களையும் பெற்றனர். எனவே இக் கருதுகோளும் நிறுவப்பட்டது.

அட்டவணை - 2 பாலின அடிப்படையில் மாணவர்களின் தனிப்பட்ட காரணிகளின் அழுத்தங்களின் புள்ளிவிவரங்கள்

மனவழுத்ததின் வகைகள்	Sex			
	Men		Women	
	Mean	Std. Deviation	Mean	Std. Deviation
தனிப்பட்ட காரணிகள்				
8. தூக்கப்பழக்கவழக்கங்களில் மாற்றம்	3,45	1,20	3,41	1,13
9. சாப்பாட்டுப்பழக்கவழக்கங்களில் மாற்றம்	3,06	1,17	3,14	1,15
10 பாலியல் பழக்கங்களில் மாற்றம்	2,34	1,09	2,39	1,17
11 பொருளாதார ரீதியான நெருக்கடிகள்	3,57	1,09	3,52	1,22
12. படிப்பையும் வேலையையும் சேர்த்து குழப்பிக் கொள்ளுதல்	3,30	1,23	3,26	1,25
13 . மதுசார பாவனையில் மாற்றம்	3,03	1,40	2,59	1,35
14 . ஆரோக்கிய பிரச்சினைகள்	2,96	1,40	3,17	1,29
15. இரத்தக் கொதிப்பு	3,75	1,09	3,75	1,13
16 . குறைவான சமூகத் தொடர்பு	2,84	1,27	3,12	1,32
17 . புதிய பொறுப்புக்கள்	3,27	1,17	3,09	1,18

தனிப்பட்ட காரணிகள் - மாணவிகள்; சராசரி (M=3,75) ஆண்களின் சராசரியை விட ((M=3,57) நிர்ணயிக்கப்பட்ட எதிர்பார்ப்புகளின் அழுத்தம் காரணமாக இருப்பினும், ஆண் மாணவர்கள் (M=2,34) மற்றும் பெண் மாணவர்கள் ; (M=2,34) (அட்டவணை 1) ஆகிய இருவருக்குமே தனித்திருத்தல் பழக்கவழக்கங்களில் மாற்றம் அவ்வப்போது ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இக் கருதுகோளும் நிறுவப்பட்டது.

அட்டவணை -3 பாலின அடிப்படையில் மாணவர்களின் கல்விசார் காரணிகளின் அழுத்தங்களின் புள்ளிவிவரங்கள்

மனவழுத்ததின் வகைகள்	Sex			
	Men		Women	
	Mean	Std. Deviation	Mean	Std. Deviation
கல்விசார் காரணிகள்				
18 வகுப்பறை வேலை சுமை அதிகம்	3,69	1,21	3,92	1,03
19. குறைந்த மதிப்பெண்கள்	3,54	1,39	3,43	1,15
20 அதிகளவு நேரம் கற்றல்	3,18	1,33	3,80	3,81
21 மொழிசார் பிரச்சினைகள்	2,69	1,33	2,53	1,35
22. குறைந்த அளவு ஆதரவு	2,78	1,16	3,31	6,59
23 பரீட்சைகள்	3,09	1,28	3,40	4,01
24. அதிக ஒப்படைகள் வேலைகள்	2,38	1,25	3,03	4,26
25. எழுத்து வேலைகளைப் பிற்போடுதல்	2,87	1,26	3,37	3,68
26. விரிவுரைக்கு சமூகமளிப்பதில் தவறுதல்	2,75	1,17	3,45	1,25

கற்றல்சார் காரணிகள் - அதிகரித்த கல்விச் சுமை பெண் மாணவர்களுக்கு (M= 3, 92) காணப்படுவதை போல் ஆண் மாணவர்களும் (M=3,69) அதிக சராசரி மதிப்பெண்களைப் பெற்றுள்ளனர் இருப்பினும் பெண் மாணவர்கள் தங்கள் ஆண் நண்பர்களைவிட அதிக மன அழுத்தத்தில் இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த வகையில், மொழிச் சிக்கல் காரணிகள் பெண் மாணவர்களுக்கு (M=2, 53) குறைவான மன அழுத்தமாகத் தோன்றின, மேலும் ஆண் மாணவர்களுக்கு (M=2,38) குறைவாகக் காணப்படுகிறது. எனவே இக் கருதுகோளும் நிறுவப்பட்டது.

அட்டவணை- 4 பாலின அடிப்படையில் மாணவர்களின் சூழலியல் காரணிகளின் காரணிகளின் அழுத்தங்களின் புள்ளிவிவரங்கள்

மனவழுத்ததின் வகைகள்	Sex			
	Men		Women	
	Mean	Std. Deviation	Mean	Std. Deviation
சூழல் காரணிகள்				
27 . குறைந்த அளவு விடுமுறைகள் மற்றும் ஓய்வு நேரம்	2,63	1,22	3,27	1,33
28. கணினி பிரச்சினைகள்	2,45	1,22	2,46	1,17
29 பிடிப்பில்லாத வாழ்வியல் பழக்கங்கள்	2,72	1,25	2,76	1,33
30. அமைதியான வேலை	2,72	1,03	2,93	1,20
31. பெற்றோர்களுக்கிடையிலான விவாகரத்து	2,46	1,36	2,57	1,47
32 பழக்கம் இல்லாத சூழ்நிலைக்கு உள்ளாதல;	3,00	1,29	2,75	,99
33. புதிய நகரத்திற்கு செல்லுதல்	2,48	1,32	2,56	1,18

சூழலியல் காரணிகள்-மாணவர்கள் புதிய சூழ்நிலையில் அவர்கள் வாழ்வதால், ஆண் மாணவர்களுடன் (M=3,00) ஒப்பிடும்போது, பெண் மாணவர்களுக்கு (M=3,27) அதிக சராசரி மதிப்பெண்களைப் பெற்றுள்ளதுடன் அழுத்தங்களையும் அதிகம் கொண்டுள்ளனர். இருப்பினும், ஆண் மாணவர்களுக்கு, பெற்றோருக்கு இடையேயான விவாகரத்து குறைந்த சராசரி (M= 2,46) காணப்படுகிறது, மற்றும் பெண் மாணவர்களுக்கு தொழில்நுட்ப சிக்கல்கள் குறைந்த சராசரி (M=2,46) மதிப்பெண்களைப் பெற்றுள்ளார்கள். ஆண் மற்றும் பெண் மாணவர்கள் இடையிலான வேறுபாடு புள்ளிவிவர ரீதியாகக் குறிப்பிடத்தக்கதாக இல்லை. மாணவர்கள் அதிகரித்த வகுப்புப் பணிச்சுமை காரணமாக அதிக மன அழுத்த நிலைகளை அனுபவித்தனர், அதைத் தொடர்ந்து அழுத்தம் மற்றும் பல மணிநேர படிப்புகள் மற்றும் நிதிச் சிக்கல்கள் எப்போதாவது கணினி சிக்கல் காரணிகளை வலியுறுத்துகிறது. இருப்பினும், அனைத்து 33 அழுத்தங்களுக்கும் மன அழுத்தத்தின் உணர்வில் பாலின

வேறுபாடு இல்லை. பாலின வேறுபாடு ஒரு சில மன அழுத்தத்தைப் பொறுத்தவரை மட்டுமே உள்ளது. அதிகரித்த வகுப்பு வேலை சுமை, பல மணிநேர படிப்பு, அழுத்தம் மற்றும் நிதிச் சிக்கல்கள், காதலன்/காதலியுடன் சண்டையிடுதல், சமூக ஆதரவின்மை, பல்கலைக்கழக நிர்வாக ஆதரவின்மை, போன்ற காரணங்களால் பெண் மாணவர்கள் ஆண்களை விட அதிக மன அழுத்தத்தை அனுபவித்தனர். சில விரிவுரைகளாலும், விடுமுறைகள் அல்லது இடைவேளையின்மை மற்றும் உடல்நலப் பிரச்சினைகள் காரணமாகவும் அழுத்தத்தை எதிர் நோக்கினர். எனவே இக் கருதுகோளும் நிறுவப்பட்டது.

அட்டவணை -5 ஆண் மற்றும் பெண் மாணவர்களின் சராசரி மற்றும் நிலையான விலகல்

மனவழுத்ததின் வகைகள்	Mean	Std. Deviation
உறவுகள் தொடர்பான காரணிகள்	3,12	,64
தனிப்பட்ட காரணிகள்	3,19	,67
கல்விசார் காரணிகள்	3,26	1,39
சூழலியல் காரணிகள்	2,77	,79

இதற்கு நேர்மாறாக, சில ஆண் மாணவர்கள் பெண் மாணவர்களைவிட ஒப்பீட்டளவில் அதிக மன அழுத்தத்தை அனுபவித்தாலும் மதுவைப் பயன்படுத்துவதில் மாற்றம் மற்றும் அறிமுகமில்லாத சூழ்நிலைகளில் இருக்கும்; போதும் மன அழுத்தத்தை அனுபவித்தனர்;. இருப்பினும், ஆண் மற்றும் பெண் மாணவர்கள் இருவரும் நெருக்கமான பழக்கவழக்கங்களில் மாற்றம், தூங்கும் பழக்கம் ஆகியவற்றால் அவ்வப்போது ஒரே மாதிரியான மன அழுத்தத்தை அனுபவித்தனர்.எனவே இக் கருதுகோளும் நிறுவப்பட்டது.

முடிவுகளும் பரிந்துரைகளும்

மாணவர்கள் பெரும்பாலும் பாடச் சுமை மற்றும் கல்வி மதிப்பீடு நடைமுறைகள் மற்றும் தனிப்பட்ட, குடும்பம் மற்றும் சமூகக் காரணிகளால் குறைந்த அழுத்தத்தால் ஏற்படும் அழுத்தத்தால் வலியுறுத்தப்பட்டனர். கணிசமான சரிசெய்தல் மற்றும் புதிய அனுபவங்கள் தேவைப்படும் பல புதிய சவாலான மற்றும்

அச்சுறுத்தும் சூழ்நிலை அழுத்தங்கள் தொடர்பான காரணிகளால் முதல் ஆண்டு மாணவர்கள் அதிக அளவு கல்வி அழுத்தத்தை அனுபவிப்பதாகவும் கண்டுபிடிப்புகள் தெரிவிக்கின்றன. மாணவிகள்; ஆண்களுடன் ஒப்பிடும்போது, அதிகரித்த வகுப்புப் பணிச்சுமை, நல்ல மதிப்பெண்களைப் பெறுவதற்கான அழுத்தம், அதிகப்படியான ஒப்டைகள் மற்றும் தெளிவற்ற தேடல்கள் போன்ற மன அழுத்தத்திற்கான ஆய்வுகள் காரணமாகவும் அதிக அளவு மன அழுத்தத்தை உருவாக்கும் காரணிகளாக ஆய்வுகள் காட்டுகின்றன. இதன் விளைவாக, ஆண் மற்றும் பெண் இருபாலருக்கும் மன அழுத்தத்தைப் பற்றிய கருத்துகளில் எந்த வித்தியாசமும் இல்லை. அனைத்து 33 அழுத்தங்களும் ஆண் மற்றும் பெண் மாணவர்களுக்கு மன அழுத்தமாக காணப்பட்டன. இருப்பினும் ஆண் மற்றும் பெண் மாணவர்கள் அனுபவிக்கும் மன அழுத்தத்தின் அடிப்படையில் வேறுபாடு உள்ளது.

உசாத்துணைகள்

1. Campbell,R.L,& Svenson, L.W.(1992).Perceived level of stress among University Undergraduate students in Edmonston, Canada. Perceptual and Motor Skills,
2. Cohen, F. et al (1984). “Behavioral Health: A Handbook of Health Enhancement and DiseasePrevention. New York: Wiley, 1984.
3. Keinan,G. & Perlberg, A.(1986). Sources of stress in Academe: The Israeli Case. Higher Eduv´cation, Vol.15,No.1/2,73-88
4. Lazarus, R.S. and Launier, R (1978) “Stress related Transactions between person and Environment” in Pervin, L.A.and Lewis, M (Eds) Perspectives on Interactional Psychology. New York: Plenum Press,
5. Lazarus, R.S. & Cohen, J.B. (1977). “Environmental Stress”. Human Behavior and Environment. (Vol 2) New York: Plenum.
6. Lazarus, R.S. (1966). Psychological Stress and the Coping Process. New York: McGrawHill.

7. Lazarus,R.S & Folkman,S.(1984). Stress, appraisal, and Coping. New York: Springer

8. Shirom, A.(1986). Students' stress. Higher Education, Vol.15

45

சங்க இலக்கியங்களில் வாய்மொழி வழக்காற்று மரபுகள்

முனைவர். மு. கருணாநிதி
இணைப் பேராசிரியர் &தலைவர், சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம்,
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி.

அறிமுகம்

ஒரு சமுதாயத்தின் நீண்ட நெடிய வரலாறும் பாரம்பரியமும் இலக்கியத்தின் வாயிலாக வெளிப்படுகின்றன. காலங்காலமாகத் தோன்றிவரும் எழுத்திலக்கியங்கள் இவற்றைத் தெளிவாக வெளிக்காட்டி நிற்பதே இதற்குச் சான்றாகும். அதுபோலவே காலங்காலமாக வாய்மொழி வாயிலாகவே வெளிப்பட்டு வரும் இலக்கிய வகையான நாட்டுப்புற இலக்கியம் என்பதும் சமுதாயத்தின் வாழ்வு, வரலாறு, வளர்ச்சி, மாற்றம், சிறப்பு, அமைப்புப் போன்றவற்றை ஏதேனும் ஒரு முறையில் குறிப்பாகவோ வெளிப்படையாகவோ, உணர்த்தி வருகிறது. இவ்வாறு இரண்டு வகையான இலக்கியங்களும் சமுதாய விளக்கத்திற்கும் சமுதாய மாற்றம் மற்றும் வளர்ச்சி குறித்த விளக்கத்திற்கும் மிகவும் அவசியமாகின்றன. இத்தகைய இலக்கியங்களை முறையாகவும், தெளிவாகவும் வெளிப்படையாகவும் நிறைவாகவும் ஒப்பிட்டு ஆய்வு செய்ய வேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது.

ஆய்வு நோக்கம்

செவ்வியல் இலக்கியங்கள் என்று கொண்டாடப் படுகிற சங்க இலக்கியங்களில் நாட்டுப்புறப் பாடல்களின் சாயல்கள் படிந்துள்ளன. பழமொழி விடுகதைகள் போன்ற வாய்மொழி வழக்காறுகளும் இடம்பெற்றுள்ளன. அவற்றில் சிலவற்றை எடுத்துரைப்பதைதான் இக்கட்டுரையின் ஆய்வு நோக்கம்.

ஆய்வுச் சிக்கல்

எழுத்திலக்கியங்கள் தோன்றுவதற்கு முன்னரே வாய்மொழிப் பாடல்கள்,வாய்மொழி வழக்காறுகள் காலம் காலமாக

மக்கள் வழக்காற்றில் வழங்கி வந்தன. பின்னாளில் பாடல் இயற்றும் புலவர் பெருமக்கள் வாய்மொழி வழக்காற்று மரபுகளையும் எடுத்தாள வேண்டிய தேவை, பயன்படுத்திக் கொள்ள வேண்டிய சூழல் ஏன் ஏற்பட்டது என்பதுதான் ஆய்வுச் சிக்கலாக இக்கட்டுரையில் முன் வைக்கப் பெற்றுள்ளது.

ஆய்வுக் கருதுகோள்

சங்க இலக்கியங்ககளில் ஒரு காதல் நிகழ்ச்சியையோ, வீரம் சார்ந்த நிகழ்வையோ கற்பனை செய்து பாடும்போது, அந்நிகழ்வு நிகழ்கிற நிலம், பொழுது, பறவை, விலங்கு, மரம், பூ முதலிய இயற்கைப் பொருள்கள் ஆகியவற்றை அமைத்துப் பாடும் மரபு நெடுங்காலமாக இருந்து வந்தது. ஊர் ஊராக மக்கள் எழுதாமலே பாடிவந்த நாட்டுப் பாடல்களிலே அந்த மரபு இருந்து வந்தமையால், புலவர்கள் அந்த மரபுகளை அவ்வாறே கையாண்டு இலக்கியம் படைத்தனர் என்பதுதான் இக்கட்டுரையின் கருதுகோள்.

நாட்டுப்புறப் பாடல்கள்

தொல்காப்பியர் 'பண்ணத்தி' என்ற ஒன்றின் இலக்கணத்தைக் கூறுகிறார்.

> "பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்
> பாட்டி னியல பண்ணத்தி யியல்பே"
>
> (தொல்.பொருள்.செய். 180)

இதற்குப் "பழம் பாட்டினூடு கலந்த பொருளே தனக்குப் பொருளாகப் பாட்டும் உரையும் போலச் செய்யப்படுவன 'பண்ணத்தி' என்றவாறு" என்று பேராசிரியர் உரை எழுதியுள்ளார். பின் மெய் வழக்கில்லாத புற வழக்கினைப் பண்ணத்தி என்ப. இஃதும் எழுதும் பயிற்சியில்லாத புறவுறுப்புப் பொருளைப் பண்ணத்தி என்பது. அவையாவன நாடகச் செய்யுளாகிய பாட்டு மடையும் வஞ்சிப் பாட்டும் மோதிரப் பாட்டும் முதலாயின் அவற்றை மேலதே போலப் பாட்டென்றாராயினர். 'நோக்கு முதலாயின உறுப்பு இன்மையின் என்பது அவை வல்லார் வாய்க் கேட்டுகணர்க' என்று பண்ணத்தியைப் பற்றிச் சில இயல்புகளைக் கூறியுள்ளார். தொல்காப்பியர் கூறும் பண்ணத்தி நாட்டுப்புறப் பாடல்களைக் குறிக்கின்றது எனலாம்.

நாட்டுப்புறப் பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள் முதலான வாய்மொழி சார்ந்த வழக்காற்றுக் கலைகள் அனைவராலும் நிகழ்த்தக் கூடியனவல்ல. நன்கு பொருத்தப்பாட்டுடன் சொல்லுந்திறன், பாடுந்திறன் விளையாடுந்திறன் பெற்றவர்களாலே நிகழ்த்த முடியும். இதனைச் சங்க இலக்கியங்களே சான்று பகர்கின்றன. "பாணன், துடியன், பறையன், கடம்பன் என்ற நான்கு வகைப் பழங்குடிகளைப் பற்றிச் சங்க இலக்கியம் சாற்றும். இசைக் கருவிகளால் பெயர் பெற்ற இம் மக்களுடன் பாடினி, விறலி, அகவன்மகள், வேலன், வயிரியர், கோடியர் ஆகிய சங்க இலக்கிய மாந்தர்கள் வாய்மொழப் பாடலின் வள்ளல்கள் ஆவர்." ஆடலினாலும் பாடலினாலும் இசைக் கருவிகளை இசைக்கும் இனிமையாலும், ஏனையோரைத் தம்பக்கம் இழுக்கும் ஆற்றல் பெற்றிருந்தனர். பண்ணமை நல்யாழைக் கையேலேந்தி பாண்கடன் இறுக்கும் வள்ளியோரை நாடிப் பரிசில் பெறச் சென்ற பாணர்கள் பாடிய பாடல்கள் வாய்மொழிப் பாடல்களே. 'வாய்மொழிப் புலவர்' எனப் பரிபாடல் விளக்குகிறது.'வாய்மொழி வாயர் நின்புகழ் ஏத்த' எனப் பதிற்றுப்பத்துப் பகர்கிறது. ஆகவே சங்கப் பாடல்களில் இடையிடையே எத்தனையோ நாடோடிப் பாடல்கள் இடம்பெற்றிருப்பதை அறியமுடிகின்றது. ஆடியும் பாடியும் அருவியில் திளைத்தும் அகங்குழைந்தும் அவர்கள் கழித்த நாட்கள் அளவில. அவர்தம் ஆடலோடாயப் பாடல்கள் இணைந்து செல்லும் வகையில் கூட்டான நாட்டுப்பாடல்களாகவே பெரும்பாலும் இருந்தன எனக் காண முடிகின்றதன்றோ! என அ.மு.ப. கூறுவதைச் சு. சண்முகசுந்தரம் சுட்டியுள்ளார; இவர் கூற்றின்படிச் சங்க இலக்கியங்களில் அந்தந்த நிலங்களுக்கு ஏற்ப பாடப்பெற்ற நாட்டுப்புறப் பாடல்களைக் கீழ்க்காணுமாறு வகைதொகைப்படுத்தலாம்.

சங்க இலக்கியங்களில் ஐவகைப் (நிலங்கள்) பாடல்கள்

சங்க இலக்கியங்கள் நாட்டுப்புற வழக்காற்று மரபுகள் பலவற்றைப் பின்பற்றியுள்ளன. இவ்விலக்கியங்களில் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐவகை நிலங்களிலும் வாழும் மக்கள் அந்தந்த நிலங்களுக்கு ஏற்ற வகையில் பாடியும் ஆடியும் இன்புற்றக் காட்சிகளைக் காண முடிகின்றன. ஐவகை நிலங்களுக்குரிய பாடல்கள் சங்க இலக்கியங்களில்

இடம்பெற்றுள்ள பான்மையைச் சான்றுகளுடன் எடுத்துக்காட்டியுள்ளார். அவற்றை நாட்டுப்புறப் பாடல்கள் என்றும் கூறுவதில் தவறில்லை.

குறிஞ்சி நிலப் பாடல்கள்

'வள்ளுயிர் தெளவிளி இடையிடை பயிற்றிக்/கிள்ளை ஓப்பியும்' (குறு. 99-101) 'கிளிகடி மகளிர் விளிபடு பூசல்' (மலை.329)என்பவை கிளிகடி மகளிர் பாடல்களைச் சுட்டும்.

'இன்னும் பாடுக பாட்டே அவர்/நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே' (குறு.23)என்ற குறுந்தொகை மூலம் குன்றைப் பாடும் பாடலை அறியலாம்.'குறவர் தம் பெண்டிரோடு வான்தோய் மீமிசை அயரும் குரவை' (மலை.320-312)என்று மலைபடுகடாத்தில் குரவைப் பாடலையும் அறிகிறோம்.

'அணங்கென உணரக் கூறி வேலன்/ இன்னியங் கறங்கப் பாடி' (நற்.222,10-11) என்ற நற்றிணை வேலன் பாடலைக் குறிக்கிறது.'தினைக்குறு மகளிர் இசைபடுவள்ளை' (மலை. 342),'பாவடி உரல பகுவாய் வள்ளை' (குறு. 89, 1) ஆகியன வள்ளைப்பாடலை விளக்கும்.

'பொய்தல மகளையாய்ப் பிறர்மனைப் பாடிநீ/எய்திய பலர்க்கீத்த பயம்' (கலி.59,16-17)என்பது சடங்குப் பாடலைக் குறிக்கும். இவ்வாறு குறிஞ்சி நிலத்தில் பல்வேறு வகையான நாட்டுப்புறவியல் தன்மையிலான பாடல்களைக் காணலாம்.

முல்லை நிலப் பாடல்கள்

'குரவை தழீஇயாம் மரபுளிப் பாடித்
தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுதும்' (கலி.103,75-76)

என்று குரவைப்பாடலையும்,

'மன்றுதொறும் நின்றகுரவை சேரிதொறும்
உரையும் பாட்டும் ஆட்டும் விரைஇ'
(மதுரைக்காஞ்சி,115-116)

என்ற அடிகள் குரவைக் கூத்து, உரை, பாட்டு, ஆட்டம் இவற்றுடன் நடந்த சிறப்பினை இயம்புகிறது.

'பாடுகம் வம்மின் பொதுவன் கொலையேற்றுக்
கோடு குறுசெய்த மார்பு' (கலி. 104, 63-64)

என்று பெண்டிரின் பாடலையும், முல்லை நிலத்தில் பாடக் கேட்கிறோம்.

மருதநிலப் பாடல்கள்

'தமர் பாடும் துணங்கையுள்
அரவம் வந்தெடுப்புமே' (கலி.70,13-14)

என்று துணைங்கைப் பாடலையும்,'அள்ளல் தங்கிய பகடுறு விழுமம்/கள்ளார் களமர் பெயர்கும் ஆர்ப்பே' (மது.259-270)என்று உழவுப்பாடலையும், மருத நிலத்தில் கேட்கிறோம்.

'ஒள்ளிழை மகளிர் உயர்பிறை தொழூஉம்/
புல்லென் மாலை' (அகம்.239)

'தொழுதுகாண் பிறையில் தோன்றியாம் நுமக்கு/அரியமாகிய காலை' (குறு.178)என்று, பிறைதொழும் வழக்கமானது இன்றைய ராவண்டைப் பாடலைக் குறிக்கும். 'இரண்டாயிரம் ஆண்டுகட்கு மேலாக இருந்துவரும் நாகரிகத்தின் சின்னமாக ராவண்டைப் பாட்டு என்ற நாட்டுப்பாடல் இலக்கியம் மகளிரிடையே இன்றும் வழங்கி வருகின்றது'. என்பார் தமிழண்ணல்.

நெய்தல் நிலப் பாடல்கள்

'நீர்த்தெவ்வும் நிரைத்தொழுவர
பாடுசிலம்பும் இசை' (மது.89-90)

என்று நீர்இறைப்போர் பாடலையும்,

'பரதவர; மகளிர் குரவையொ டொலிப்ப' (மது.94)

என்று குரவைப் பாடலையும்,

'சேயுயர் ஊசற்சீர் நீஒன்று பாடித்தை' (கலி.131,24)

என்று ஊசற் பாடலையும்,

'மடலூர்ந் தொருத்தி
அணிநலம் பாடிவரற்கு' (கலி.141,5-6)

என்று மடல் பாடலையும் நெய்தல் நிலத்தில் கேட்கிறோம்.

பாலைநிலப் பாடல்கள்

'ஆறலைகள்வர் படைவிட அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை' (பொரு.21-22)

என்று பாலைப் பாடலைப் பாலையில் பாடக் கேட்கிறோம். ஆதலால், 'சங்க இலக்கியங்களில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, என்னும் ஐவகை நிலங்களிலும் வாழும் மக்கள் அந்தந்த நிலங்களுக்கு ஏற்றவகையில் பாடியும் ஆடியும் இன்புறுங் காட்சிகளைக் காணமுடிகிறது. நாட்டுப்புறப்பாடல்கள் சங்க காலச் சமுதாயத்தில் மிகவும் குறிப்பிடத்தக்க வாய்மொழி வழக்காற்று மரபுகளில் ஒன்றாக இருந்துள்ளது என்பது தெளிவாகிறது.

பழமொழிகள்

வாய்மொழி வழக்காற்றுக் மரபுகளில் நாட்டுப்புறப் பாடல்களுக்கு அடுத்ததாகக் குறிப்பிடத்தகுந்தன பழமொழிகள். 'ஒருவர் கூற்றுக்குச் சான்றாகத் திகழ்வது பழமொழி' என்று பொருள் கூறலாம். பழமொழி என்ற சொல்லாட்சி தொல்காப்பியத்தில் இல்லை. பழமொழிக்கு விளக்கம் கூறுகையில் தொல்காப்பியர்,

"நுண்மையும் சுருக்கமும் ஒளியும் உடைமையும்
மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி" (தொல்.பொருள்.செய். 177)

என்று குறிப்பிடுகிறார். கருதிய பொருளை விளக்கும் வகையில் நுண்மை, சுருக்கம், தெளிவு, மென்மை ஆகிய பண்புகளுடன் பழமொழி விளங்கும் என்பது இதன் பொருள். எனவே, தொல்காப்பியர் பழமொழிக்கு விளக்கம் தருகிறார் என்பதையும் சான்று தரவில்லை என்பதையும் அறிந்து கொள்ள இயலுகின்றது.

உரையாசிரியரும் பழமொழியும்

பேராசிரியர் தொல்காப்பியத்துக்கு உரை எழுதும்போது முதுமொழிக்கும் பொருள் விளக்கம் செய்கிறார். அத்துடன் ஒரு சான்றும் தருகிறார்.

"உழுத உழுத்தஞ்செய் ஊர்க்கன்று மேயக்
கழுதை செவியரிஞ் தற்றால்"

என்று பேராசிரியர் சான்றாகத் தரும் பழமொழி, 'தோட்டத்தினுள் நுழைந்து பயிரைக் கன்று மேய்ந்துவிட்டுச் சென்றது. அதனால் அதற்கான தண்டனையாகக் கழுதையின் செவியை அறுப்பது போன்றதாகும்' என்பது இதன் பொருளாகும். இதற்கு இணையாக இன்று 'தேங்காத் திங்கறவன் ஒரு பக்கம், தெண்டங் கொடுக்கிறவ ஒரு பக்கம்', 'பழி ஒரு பக்கம், பாவம் ஒரு பக்கம்' முதலான பழமொழிகளை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

சங்க காலமும் பழமொழியும்

"நன்று செய்மருங்கில் தீதுஇல்" என்னும்
தொன்றுபடு பழமொழி" (அகம். 101)

என்று அகநானூறுதான் முதலில் 'பழமொழி' என்ற சொல்லைக் குறிப்பிடுகின்றது. 'தொன்றுபடு பழமொழி' என்பதால் அகநானூறு எழுதப்பட்ட சங்க காலத்திற்கு முன்னரே பழமொழி வழக்கில் இருந்தது என்பதை அறிகிறோம்.

"இறக்குங்கால் முகனும் தாம்
கொடுக்குங்கால் முகனும் வேறாதல்" (கலித்.)

என்பது கடன் பற்றிய பழமொழியாகும்.

"பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்
வாயே யாகுதல் வாய்த்தனம் தோழி" (அகம். 66)

சங்க மருவிய காலத்தில் பழமொழி

சங்க கால இலக்கியங்களைக் காட்டிலும் சங்க மருவிய கால இலக்கியங்களில் பழமொழியின் செல்வாக்கு மிகுதி எனலாம். இதனை, "திருக்குறளின் தாக்கத்தை நாம் பழமொழியில் காண்கிறோம். நாலடியாரின் தொடர்கள் பல நாட்டில் வழங்கிய பழமொழிகளாகவே தோன்றுகின்றன. அவைபோன்ற பல தொடர;கள் பழமொழி நானூற்றில் பழமொழிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மற்றும் இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம் போன்ற நூல்களிலும் பழமொழிகள் சில இடம்பெற்றுள்ளன. இவற்றால் இக்காலத்தில் நாட்டுப்புற இலக்கியத்திலுள்ள பழமொழிகள் பதினெண்கீழ்க்கணக்கு இலக்கியக் காலத்தில் இலக்கிய மெருகு கொடுக்கப்பட்டு அறத்துறை இலக்கியத்தின் ஒரு பகுதியாகப்

பயன்படுத்தப்பட்டமை புலனாகிறது" என்று திருநாவுக்கரசு கூறுவார் (மேற்கோள்: சு. சண்முகசுந்தரம் : 1980: 166)

இவரின் கூற்று கீழே கொடுக்கப்பெற்றுள்ள சான்றுகளினூடாக மெய்ப்பிக்கப்படுகிறது.

திருக்குறள்: அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்

பழமொழி : அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

நாலடி நானூறு: 'ஒருவர் பொறை நட்பு'
'கைக்குமாம் தேவரே தின்னினும் வேம்பு'

சிலப்பதிகாரம் : நீ அறிந்திலையோ நெடுமொழி அன்றோ!

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகப் பழமொழி நானூறு என்ற நூல் கருதப்படுகிறது. இந்நூலின் ஆசிரியர் முன்றுரையரையனார். 400 பழமொழிகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை விளக்கிச் சான்றுகள் தருவதுபோல் 400 பாடல்களைத் தந்துள்ளார்.

விடுகதை

வாய்மொழி வழக்காற்று மரபுகளில் பழமொழிகளுக்கு அடுத்து மிகவும் குறிப்பிடத்தக்கவை விடுகதைகள். விடுவிக்கப்பட வேண்டிய புதிர்களை விடுகதை எனலாம். இவற்றுக்குப் புதிர், அழிப்பான் கதை, வெடி, நொடி என்று வேறு பெயர்களும் உண்டு. விடுகதையின் வரலாறு தொல்காப்பியத்தில் தொடங்கி இன்றுவரை தொடர்கிறது. செம்மொழி இலக்கியங்களிலும் இவை குறித்த பதிவுகள் இடம்பெற்றுள்ளன.

தொல்காப்பியரும் விடுகதையும்

யாப்பு முறை ஏழு வகைப்படும் என்ற தொல்காப்பியர; அவை எவையென விளக்குகையில்

பாட்டு உரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதசொல்லோடு அவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெயர் எல்லை அகத்தவர் வழங்கும்

யாப்பின் வழியது என்மனார புலவர்
(தொல்.பொருள்.செய்.79)

என்று உரைக்கிறார். அடிவரையில்லாத யாப்பு வகையினையும் தொல்காப்பியர் உரைப்பார். அவை

நூலினான உரையினான
நொடியொடு புணர்ந்த பிசியினான
ஏது நுதலிய முதுமொழியினான
மறைமொழி கிளந்த மந்திரத்தான
கூற்றிடை வைத்த குறிப்பினான (தொல்.பொருள்.செய். 165)

என்பனவாகும். இவற்றில் பிசி என்பது விடுகதையாகும். பிசிக்கு விளக்கும் தருகையில்

ஒப்பொடு புணர்ந்த உவமத்தானும்
தோன்றுவது கிளந்த துணிவினானும்
என்றிரு வகைத்தே பிசிவகை நிலையே

என்றுரைக்கிறார். உவமையாக அமைவது, தெளிவுபட வருவதும் என விடுகதை இரண்டுவகையில் அமையும் என்கிறார்.

உரையாசிரியர்களும் விடுகதைகளும்

தொல்காப்பிய உரையாசிரியர்களான இருவர்; நான்கு விடுகதைகளைத் தொகுத்துத் தருகின்றனர்.இளம்புரணர் உவமை பற்றி வந்த விடுகதைக்குச் சான்றாக,

அச்சு போலே பூப் பூக்கும்
அமலே யன்னக் காய்காய்க்கும்

என்று விடுகதையை விடையில்லாமல் தருகின்றார் பேராசிரியர் மூன்று விடுகதைகளைத் தருகின்றார். அவை,

1.பிறை கவ்வி மலை நடக்கும் (விடை:யானை)

2.முத்துப்போல்பூத்து / முதிரில் களா வண்ண / நெய்த்தோர் குருதி/ நிறங்கொண்டு வித்துதிர்த்து(விடை: கமுகு)

3.நீராடான் பாரப்பான்/நிறஞ் செய்யான் நீராடில்/ ஊராடு நீரிற் காக்கை (விடை:நெருப்பு)

இவை இவர்கள் வாழ்ந்த இடைக்காலத்தில் தமிழகத்தில் வழங்கிய விடுகதைகளாக இருக்கலாம்.

சங்க இலக்கியங்களும் விடுகதைகளும்

தொல்காப்பியர் உரையாசிரியர்கள் விடுகதைக்கு விளக்கம் தந்தார்கள்; சங்கப்புலவர்கள் விடுகதைப் பண்புடன் பல பாடல்களை இயற்றியுள்ளர்; இவர்கள் காலத்திய விடுகதைகள் இவர்களுடைய பாடல்களில் இடம்பெறவில்லை. ஆனால் இவர்கள் விடுகதையைத் தழுவி எழுதியுள்ளனர;

மலையிடை இட்ட நாட்டரும் அல்லர்
மரந்தலை தோன்றா ஊரரும் அல்லர்(குறுந்.203)

ஐதேய்ந்தன்று பிறையுமன்று
மைதீர்ந்தன்று மதியுமன்று
வேயமன்றன்று மலையுமன்று
வமன்றன்கு சுனையுமன்று (கலித்.55)

குறுந்தொகை, கலித்தொகைப் பாடல்களில் எதிர்மைப் பண்பில்லை ஆனல் அமைப்பு உள்ளது. இவர்கள் காலத்தில் வழங்கப்பட்ட விடுகதைகள் இவர்களுக்கு இவ்வாறு எழுத தூண்டுதலாக அமைந்திருக்கலாம்.

மேலும் சிறார்கள் தமக்குள் விலங்குகள் பற்றிய கதைகளைக் கூறியும் விடுகதைகளைப் போட்டுக் கொண்டும் விளையாடுவர். இதனை,

"பைம்பூண் சேய் பயந்தமர் மோட்டுத்
துணங்கை அம் செல்லிக் கணங்கு நொடித்தாங்கு"

எனப் பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது.

நிறைவுரை

வாய்மொழி வழக்காற்று மரபுகளில் ஒன்றான நாட்டுப்புறப் பாடல்கள் சங்க இலக்கியங்களில் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐவகை நிலங்களிலும் வாழும் மக்கள் அந்தந்த நிலங்களுக்கு ஏற்ற வகையில் பாடியும் ஆடியும் இன்புற்ற காட்சிகளைக் காணமுடிகின்றது.

வாய்மொழி வழக்காற்றுக் மரபுகளாகக் கருதப்படுகிற நாட்டுப்புறப் பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், விளையாட்டுக்கள் முதலானவை குறித்த பதிவுகள் சங்க இலக்கியங்களில் பெருமளவில் இடம்பெற்றுள்ளன.

சங்க காலத்தில் நிகழ்த்தப்பெற்ற பழமொழிகள், விடுகதைகள், விளையாட்டுகள் அதே வடிவிலோ அல்லது சிற்சில மாற்றம் பெற்ற வடிவிலோ இன்றும் நிகழ்த்தப்பெறுகின்றன.

சங்க இலக்கியங்களில் காணப்பெறுகிற வாய்மொழி வழக்காற்றுக் கலைகள் அக்காலச் சமுதாயத்தையும் பண்பாட்டையும் வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன.

துணைநின்ற நூல்கள்

அகநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட், சென்னை, 2004.

ஐங்குறுநூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட், சென்னை, 2004.

கலித்தொகை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட், சென்னை, 2004.

குறுந்தொகை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட், சென்னை, 2004.

சிலப்பதிகாரம் மூலமும் உரையும், பொ.வே. சோமசுந்தரனார் உரைக்குறிப்புடன், கழக வெளியீடு, 1970.

சிறுபாணாற்றுப்படை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட், சென்னை, 2004.

சண்முக சுந்தரம், சு., நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1980.

திருக்குறள், பரிமேலழகர் உரை, ஸ்ரீ செண்பகா பதிப்பகம்,

தொல்காப்பியம் பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1979.

தொல்காப்பியம், பொருளதிகாரம், பேராசிரியர் உரை, பதிப். கு. சுந்தரமூர்த்தி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 2012.

நற்றிணை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட், சென்னை, 2004.

நாலடியார் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, 2013.

பட்டினப் பாலை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட், சென்னை, 2004.

பதிற்றுப் பத்து மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட், சென்னை, 2004.

பரிபாடல் மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட், சென்னை, 2004.

பெரும்பாணாற்றுப்படை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட், சென்னை, 2004.

பொருநராற்றுப்படை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட், சென்னை, 2004.

மதுரைக்காஞ்சி மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட், சென்னை, 2004.

மலைபடுகடாம் மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட், சென்னை, 2004.

46

எண்பதுகளுக்குப் பின்னரான ஈழத்துத் தமிழ் பேசும் பெண்களின் போர் சார்ந்த கவிதைகள் - ஓர் ஆய்வு

சுதாகினி டெஸ்மன் றாகல்
இலங்கை. suthainy@gmail.com

அறிமுகம்

எண்பதுகளைப் பொறுத்தவரை ஈழத்துத் தமிழ்பேசும் பெண் கவிதைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்படுவதை அவதானிக்க முடிகிறது. இக்காலப் பகுதியில் உயர்கல்வி கற்கும் பெண்கள் தொகை அதிகரித்து பெண்ணியச் சிந்தனைகள் பரவத் தொடங்கியது. இதன் விளைவாக பெண்கள் அமைப்புகள் தோற்றம் பெற்றன. அத்துடன் பெண்கள் சஞ்சிகைகள், கலை இலக்கியப் படைப்புகள் வெளியாகியமையும் குறிப்பிடத்தக்கது. தமிழீழ விடுதலை இயக்கங்களில் பெண்கள் இணைத்து இயங்கினர். இவ்வாறான இயக்கங்கள் சமூக விடுதலைக்காகவும் குரல் கொடுத்தன. ஈழத்தில், எழுதுபதுகளில் இருந்து புதுக்கவிதை வடிவம் செல்வாக்குப் பெற ஆரம்பிக்கின்றது. இவ்வாறான சிறப்பான சமூக, அரசியல், கலை, கல்வி, இலக்கிய மாற்றச் சூழல் பெண் கவிஞர்களுக்கு வாய்ப்பாக அமைந்தது.

எண்பதுகள் அளவில் பெண்ணியச் சிந்தனையுடன் கூடிய எதிர்ப்புணர்வு தமிழ்பேசும் பெண்கள் கவிதைகளில் மெல்ல மெல்ல வேரூன்றத் தொடங்கி காலப் போக்கில் ஆழப்பதிந்து போவதை அவதானிக்க முடிகிறது. பெண்கள் போராட்டச் சூழலில் இருந்து கொண்டே கவிதையூடாகத் தமது உணர்வுகளை வெளிப்படுத்தத்தினர். பொதுவாகத் தமிழ் இலக்கியத்தில் போர் பற்றிய கவிதைகளுக்கு ஒரு நீண்ட மரபுண்டு, சங்க காலம் தொடக்கம் சமகாலம் வரை போர் சார்ந்த பாடல்கள், கவிதைகளுக்கு முக்கிய இடமுண்டு. ஆயினும், எண்பதுகள் காலப்பகுதிகளில் ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் மாற்றத்தை ஏற்படுதிய அளவிற்கு இந்திய தமிழ் இலக்கியப் பரப்பில் பெண்

கவிஞர்களின் கவிதைகளில் பேசப்படாத புதிய விடயமாகக் காணப்படுகின்றது. ஈழத்துத் தமிழ் பேசும் பெண்களின் கவிதைகள் போராட்டம் சார்ந்த கவிதைத் தொகுதிகளாகவும் தனித் தொகுதிகளாகவும் கூட்டு முயற்சிகளாகவும் வெளிவந்தமையைக் காணமுடிகிறது.

பெண்ணியச் சிந்தனைகள் எழுந்ததையடுத்து தமிழ்பேசும் பெண்கள் கவிதைகளில் ஏற்பட்ட மாற்றங்கள், சமூகப் பெறுமானங்கள் போன்றவற்றை இனங்காட்டல், தமிழ் பேசும் பெண்கள் கவிதைகளின் தனித்துவத்தை இனங்காணல், போர் சார்ந்த கவிதைகளில் ஈழத்து தமிழ் பேசும் பெண்களுக்கென தனித்துவமான இலக்கியப் பாரம்பரியமொன்று இருக்கிறது என்பதைப் பெண்கள் கவிதைகள் மூலம் வெளிப்படுத்தல் ஆகிய நோக்கங்களினடிப்படையில் இவ்வாய்வு முன்னெடுக்கப் பட்டுள்ளது.

இவ்வாய்வானது பெண்களின் கவிதைகளை அடப்படையாகக் கொண்டு அமைவதனால் பெண்ணிய ஆய்வு அணுகுமுறையும், பெண்களின் போர்சார்ந்த கவிதை நோக்கப்படுவதால் வரலாற்றியல் அணுகுமுறையும் பின்பற்றுகிறது.

கருத்துரை

1958, 1981, 1983களிலே தமிழர்களுக்கு எதிராக இனக்கலவரங்களினால் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் இறக்க நேர்ந்தது. உடைமைகளை இழந்த தமிழர் அதிகளாயினர். இக் கசப்பான பின்னணியிலே தான் தன்னுணர்வுடன் கிளர்ந்த தமிழ் இளைஞர்கள் தங்கள் உரிமைகளுக்காக ஆயுதம் தாங்கிப் போராடத் தொடங்கினர். இப்போராட்டம் எழுபதுகளின் பிற்பகுதியில் ஆரம்பித்தது. எண்பதுகளிலும் தொண்ணூறுகளிலும் யுத்தமாக மாற்றம் கொண்டது. இத்தருணங்களில் போராட்டங்களில் பெண்களும் இணைந்து கொண்டனர். போர்க்களத்தில் நின்றும், அதன் வெளியேயும், புலம்பெயர்ந்தும் பெண்கள் தமது அரசியில் உணர்வுகளைத் தயங்காமல் அம்பலப்படுத்தினர். தமிழ்ப் பிரதேசங்களில் வீரமும் விடுதலை உணர்வும் மேலோங்கி வந்த அதே வேளையில் அவலங்களும் மிகுந்து வந்தன. இத்தகைய சூழலின் யதார்த்தத்தைப் பிரதிபலிப்பதற்கு ஏனைய இலக்கிய

வடிவங்களைவிட கவிதையே மிகவும் பொருத்தமான வடிமாகத் திகழ்ந்தது.

இன உணர்வையும் போராட்டத்தையும் வெளிப்படுத்தும் கவிதைகள் எனும் போது பொதுவாக எல்லோரும் ஆண்களின் கவிதைகளையே சான்றுகளாகக் கையாள்வது வழக்கம். உதாரணமாக சேரனின் யமன், இரண்டாவது சூரிய உதயம், வ.ஐ.ச ஜெயபாலனின் சூரியனோடு பேசுதல், புதுவை இரத்தினத்தினுடைய நினைவழியா நாட்கள், அ. யேசுராசாவின் அறியப்படாதவர்களின் நினைவாக போன்ற தனித் தொகுதிகளிலும் மரணத்துள் வாழ்வோம், கல்லறை மேலான காற்று முதலான பலரது கவிதைத் தொகுதிகளில் இருந்தும் கவிதைகளை எடுத்தே இனவுணர்வு சார்ந்த கவிதைகளுக்கு ஆதாரமாகப் பெரும்பாலான ஆய்வாளர்கள் எடுத்தாள்வதுண்டு.

இலங்கை அரசியல் போக்குகளை விமர்சித்தும், போராட்டச் சூழலில் நின்று கொண்டுப் பல பெண் கவிஞர்கள் கவிதைகளை யாத்துள்ளனர். போரும் இழப்பும் பெருவாரியாக பெண்களையே பாதித்துள்ளன. குடும்பத்தில் இரண்டாம் பட்சமாகப் கருதப்படும் பெண், ஆண் தலைமைத்துவத்தின் கீழ் வழிநடத்தப்படும் பெண் யுத்த சூழலில் கணவனை, சகோதரனை, மகனை இழந்த நிலையில் குடும்பப் பொறுப்பை ஏற்கவேண்டியவளாகிறாள். அத்தோடு இன விடுதலைக்காக போரக்களத்தில் தன் உயிரையும் தியாகம் செய்கிறாள். சில சந்தர்ப்பங்களில் எதிரிகளால் துஷ்பிரயோகத் திற்கும் உள்ளாக்கப்பட்டார்கள். இவ்விடயங்களுக்கெதிராக எதிர்ப்புக் குரல் கொடுக்கும் பெண்கள் கவிதைகள் எழத்தொடங்கின. எண்பதுகளில் வெளிவந்த சொல்லாத சேதிகள் அதை தொடர்ந்து வெளியான புலம்பெயர்ந்த தமிழ்பேசும் பெண்களின் மறையாத மறுபாதி போன்ற கவிதைத் தொகுதிகளிலும் தமிழ் சமூகத்தின் அரசியல் நிலைமைகள் தொடர்பான எதிப்புணர்வுகளைப் பதிவு செய்யத் தொடங்குகின்றன.

1980ளிலிருந்து தற்காலம் வரையான இந்த கால்நூற்றாண்டு காலம் இலங்கையின் தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் அரசின் இராணுவ நடவடிக்கைகள், அதற்கு எதிரான தமிழ்த்தேசிய இயக்கங்கள், இராணுவ நடவடிக்கைகள் என்பன அதிகரித்த

காலகட்டமாகும். 1983 யூலையில் நிகழ்ந்த தமிழருக்கெதிரான மோசமான வன்முறை, வடக்கு கிழக்கு பகதிகளில் அரசிற்கு எதிரான யுத்தத் தாக்குதல்கள், 1987 இல் இந்திய அமைதிப்படைக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையேயான யுத்தம், 90, 91 இரண்டாம் ஈழப்போர், 1995 – 2006 யுத்தம் எனத் தொடர்ந்தன. போரின் விளைவுகள் இலங்கை மக்கள் அனைவரையும் வெவ்வேறு விதத்தில் பாதித்தன. உயிரிழப்பு, சொத்து அழிவு, மக்கள் தம் வாழிடங்களிலிருந்து இடம் பெயர்ந்து வாழ நிர்ப்பந்திக்கப்படல், எனப் போரின் விளைவுகள் மக்களின் வாழ்க்கையை புரட்டிப் போட்டன. இத்தகைய ஒரு காலகட்டத்தில் தான் பெண்களும் அதிக அளவில் கவிதையாக்கத் தொடங்கினர். இவ்வகையில் இப்போர்க்களம் பற்றிய அவர்களது மன உணர்வுகளும் விசாரணையும் விமர்சனமும் இக்கவிதைகளில் இடம்பெறுவது வியப்பில்லை. (சித்திரலேகா.மௌ :2008 :05)

1980களுக்குப் பின் ஈழத்தின் பல்வேறு கவிஞர்கள் போர்சார்ந்த கவிதைகளை தொகுதிகளாகவும், சஞ்சிகைகள், பத்திரிகைகள் வாயிலாகவும் வெளிப்படுத்தி வருகின்றனர். எழுதாத உன்கவிதை (2001), வானதியின் கவிதைகள் (1990), கஸ்தூரியின் ஆக்கங்கள் (1992), பாரதியின் காதோடு சொல்லிவிடு (1992), சிவரமணி கவிதைகள் (1993) , தூயவளின் நிமிர்வு (1993), செல்வி சிவரமணி கவிதைகள் (1997), ஒளவையின் எல்லை கடத்தல் (2000), வெளிச்சம் கவிதைகள் (2005), ஆணையிறவு (2000), வானம் எம்வசம் (1995), செம்மணி (1990), யுத்த காலத்தில் பெண்கள் (2002), பெயரிடப்படாத நட்சத்திரங்கள், ஆழியாளின் உரத்துப் பேச (2000) என பட்டியல்படுத்திக்கொண்டு செல்லலாம். வன்னி நில வாழ் மக்களின் வாழ்வியல் அவலங்களை பெண்ணியவாதப் படைப்புக்களுக்கூடாக வெளிக்கொணர்ந்த இதழ்களாக வெளிச்சம், சுதந்திரப் பறவைகள், எரிமலை, ஈழநாதம் போன்றவை காணப்படுகின்றன. இத்தகைய கவிதைத் தொகுப்புகளில் இடம்பெற்ற கவிதைகளில் போர்சார்ந்த உணர்வு, போர்க்கள அனுபவங்கள், போர் மீதான வெறுப்பு, இழப்புக்கள், பிரிவு, அகதி வாழ்வு, நிச்சயமற்ற வாழ்வியல் நிலைமைகள் போன்ற விடயங்கள் பேசப்படுகின்றன.

போர் சார்ந்த கவிதைகளைப் பொறுத்தவரை அவை வெளிப்படுத்தும் உணர்வுகளின் அடிப்படையில் அழகியல்

அம்சத்தை எதிர்பார்க்க முடியாத நிலை உள்ளது.ஏனெனில் போரினால் ஏற்படும் இழப்புக்களும் வலிகள் நிறைந்த வாழ்வையும் சித்திரிக்கும் பொழுது அத்தகைய எதுகை மோனை மொழி உத்திகளை எதிர்பார்க்க முடியாது. எனினும் போர் சாந்த பெண்களின் கவிதைகளில் போர் மீதான அவர்களது வெறுப்பும் போரினால் ஏற்பட்ட துன்பமும் வெளிப்படையாகவே பேசப்படுகின்றன. வித்தியாசமான படிமங்கள், குறியீடுகள் வாயிலாக அவர்களது கவிதைகள் கட்டமைக்கப்படுவதைக் காண முடிகின்றது. உதாரணமாக 'சிவரமனியின் யுத்த கால இரவொன்றின் நெருக்குதல்' எனும் தலைப்பில் அமைந்த கவிதையில்,

'சிறிய குருவியினுடையதைப் போன்ற அவர்களின் அழகிய காலையின் பாதையின் குறுக்காய் வீசப்படும் ஒவ்வொரு குருதி தோய்ந்த முகமற்ற மனித உடலும்' எனத் தொடங்கிய கவிதையில்

'எங்களதுடைய சிறுவர்கள் சிறுவர்களாக இல்லாது போயினர்..'
(சிவரமணி:1993:பக்-3

என்று ஏக்கத்துடன் முடிவடைகின்றது. அம்புலியின் கவிதை பின்வருமாறு தொடர்கிறது:

கணவன் துணையென்று
கூறிய சமூகத்திலிருந்து பெண்ணொருத்தி தனியே கிளம்பி
தடையுடைத்துத் தற்கொலை செய்தாள்.
பகையுலவும் குகையுள்
வெற்றிச் சமருக்காய்
உருமாறி ஒருத்தி
உளவு பார்க்கச் சென்றாள் (அம்புலி:2004: பக்-17)

என அமையும் அம்புலியின் கவிதைகளில் பெண் போராளிகள் படைகளை வழிநடத்தும் தலைவியராகவும், எல்லையைக் காப்பவராகவும் செயற்பட்டதுடன் எதிரிகளை அழிக்கவென தற்கொலைப்படையாளியாகவும், உளவாளியாகவும் இயக்கமுற்ற அவர்களின் செயற்பாடுகள் வெளிப்பட்டு நிற்கின்றன. கணவனின் துணையின்றி வழிநடக்கத் தெரியாதவளாகக் கட்டமைக்கப்பட்ட பெண்ணின் இருப்பு போராட்ட அனுபவங்களினூடாக மாற்றியமைக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

போர்க்காலத்தில் பாலியல் வல்லுறவு, சித்திரவதை, ஆட்கடத்தல், கொலைகள், பாலியல் துஸ்பிரயோகம் எனப் பெண்ணுக்கெதிராக நிகழ்ந்த வன்முறைகள் பெண்ணுணர்வையழித்து அவள் அடையாளத்தைச் சிதைக்க முயன்றன. இனத்துவ அடிப்படையில் நிகழ்த்தப்பட்ட இவ்வன்முறைகள் உளவியல் ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தின. யுத்த காலத்தில் அரச படைகளின் வன்முறைகளினால் கோணேஸ்வரி, கிருஸாந்தி, ராகினி எனப் பல பெண்கள் கொலைசெய்யப்பட்ட வேளையில் ஆக்கிரமிப்பிற்கும் அரச படைகளுக்கும் எதிரான பெண் குரல்கள் ஆக்கிரோசமாக எழுந்தன.

ஆழியாளின் மன்னம்பேரிகள் என்ற கவிதை இத்தகையை கொடுமைகளுக்கு எதிரான குரலாக ஒலிக்கிறது.

காலப் பொழுதுகள் பலவற்றில்
வீதி வேலி ஓரங்களில்
நாற் சந்திச் சந்தைகளில்
பிரயாணங்கள் பலவற்றில் கண்டிருக்கிறேன்

(ஆழியாள்:2000:பக்-19)

மன்னம்பேரி 1971 இல் படையினரால் கைது செய்யப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டாள். கோணேஸ்வரி 1997இல் இவரது வீட்டிற்துச் சென்ற படையினர் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கியதுடன் அவரின் யோனியில் கிரனெட் வைத்து வெடிக்கச் செய்து சிதறடித்துச் சென்றனர். (யுத்தகாலத்தில் பெண்கள் பக் : 96) கோனோஸ்வரிகள் குறியீடாக்கி எழும் கலாவின் கோணேஸ்வரிகள் கவிதை வெளிப்படையாக எதிர்ப்பை தெரிவிக்கின்றது.

'வீரர்களே
உங்கள் வக்கிரங்களைத் தீர்த்துக் கொள்ளுங்கள்
என் பின்னால்
என் பள்ளித் தங்கையும் உள்ளாள்
தீர்ந்ததா எல்லாம்
அவளோடு நின்று விடாதீர்
எங்கள் யோனிகளின் ஊடே

நாளைய சந்ததி தளிர்விடக் கூடும்
ஆகவே
வெடிவைத்தே சிதறடியுங்கள்...'

இவ்விதமாக பெண்களுக்கு எதிராக இடம்பெற்ற யுத்தக் கொடுமைகளை பெண்களின் கவிதைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

போராளியான ஒரு பெண் தன்னுள் இருக்கும் எதிர்ப்புணர்வு தாயிடம் இருந்து வந்ததாகவும் தன் உரிமைப் போராட்டத்தில் தன்னையே இழந்து போகாமல் இருக்கத் தாயிடம் ஆசிர்வாதம் வேண்டுவதாக இக்கவிதை அமைந்துள்ளது.

ஒரு தேசத்தின் இருளை
விடியலை நோக்கி அசைக்கும்
ஆயிரமாயிரம் பேருடனான
என் பயணமும்
ஒரு நாள்
இலக்கை அடையும்.....(கப்டன் வானதி : 2001 : 03)

யுத்த காலத்தில் மிகவும் கொடுமையானது இடம்பெயர்வுகளும், அகதி வாழ்வுமாகும். அதிலும் தாம் வாழ்ந்த கிராமத்து வாழ்வியலை மீட்டி மீட்டி கண்ணீர் துளிர்க்கும் கவிதைகள் ஏராளம். மல்லிகை இதழில் வெளியான நாச்சியாந்தீவு பர்வீனின் கவிதை இத்தகைய நினைவலையை இயல்பாக முன்வைக்கின்றது.

நானும் நீயும்
ஓடிப் பிடித்து விளையாடிய
ஒற்றையடிப்பாதை
காடுபத்தி
காணாமல் போயிருந்தது
(நாச்சியாந்தீவு பர்வீன்:2005:பக்:12)

என விரிகிறது அக்கவிதை. தொண்ணூறுகளில் ஒரு ஒலிபெருக்கி அறிவித்தல் மூலம் வடக்கில் இருந்து இஸ்லாமிய சமூகத்தை வெளியேற்றியச் செய்திகளையும் தமிழ் பேசும் இஸ்லாமியப்

பெண்களின் கவிதைகள் வெளிப்படையாகவே பேசின. போராட்ட வாழ்வில் இணைந்து கொண்ட தனது கணவனின் வருகைக்கான நம்பிக்கையுடன் காத்திருக்கும் பெண்ணின் மனவுணர்வுகளும் கவிதைகளில் பதிவு செய்யப்படுள்ளது.

வீட்டின் முன் வீதியால் சீறிக் கொண்டே பாய்ந்தது
ஒரு இராணுவ வண்டி.....
இப்போது நடுநிசி நேரம்
படலைத் திறக்கும் சத்தம் கேட்கிறது.
நிச்சயமாக யாரும் வந்திருக்கப் போவதில்லை
ஆயினும் துயருறும் பெண்ணின் இதயத்தில் இருந்து
எழும் நம்பிக்கையும் அதற்கான ஏக்கத்தையும்
தூர விலக்கி என்னால் நடக்க முடியவில்லை

(ரேவதி: 2009, பக்-26)

ஒலிக்காத இளவேனில் கவிதைத் தொகுப்பில் இடம்பெறும் 'முடிவில்லா யுத்தம்' எனும் இக் கவிதையில், விடுதலைப் போராட்டத்தில் இணைந்த கணவனின் நிச்சயமற்ற வருகை குறித்த பெண்ணின் உறுதியான நம்பிக்கை புலப்படுத்தப்படுகின்றது. உறவுகளின் பிரிவு தரும் ஏக்கம், அவர்கள் வருவார்களா என்ற விசாரிப்புக்கள், வருவார்கள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கைகள் போன்றன இத்தகைய கவிதைகளில் வெளிப்படுத்தப்படுகின்றன.

இலங்கையில் நிலவிய போர்க்காலச் சூழல்,அதன் பாதிப்புக்கள்,அரசியல் நிலவரங்கள் என சகல தளத்தில் நின்றும் இலங்கை தமிழ் பேசும் பெண்கள் கவிதைகளில் தம் உணர்வலைகளைப் பரப்பி நின்றமையை காணக் கூடியதாகவுள்ளது.

முடிவுரை

பெண்களின் போர்சார்ந்த கவிதைள், அவற்றின் உள்ளடக்கம்,மொழிநடை, கவிதை சொல்லும் முறைமைகள் வாயிலாக அவர்களது தனித்துவ கவிதைப் போக்கை அறிந்து கொள்ள முடிகின்றது. அத்துடன் வரலாற்று ரீதியான

பார்வையூடாகவும், பெண்நிலைக் கண்ணோட்டத்துடனும் ஆராயும்போதுதான் பொதுவாகக் கட்டமைக்கப்பட்ட மொழிப் பாரம்பரியத்தில், பெண்களின் தனித்துவ மொழிக் கையாள்கையை இனங் காணக்கூடியதாகவுள்ளது. எனவே, இவ்வாய்வின் மூலம் ஈழத்தில் தமிழ் பேசும் பெண்கள் பல்வேறுபட்ட தடைகள், விமர்சனங்கள் மத்தியில் பெண்கள் தமக்கான தனித்துவமான போர் சார்ந்த உணர்வுகளை வெளிப்படுத்தும் கவிதைப் பாரம்பரியத்தை நிலைநிறுத்தியுள்ளனர் என்பது தெளிவாகின்றது.

உசாத்துணை நூல்கள்-

அம்புலி, (2004). மீண்டும் துளிர்க்கும் வசந்தம், அறிவமுது பதிப்பகம், கிளிநொச்சி.

ஊடறு(தொகுப்பு), (2002). ஊடறு, ஊடறு வெளியீடு.

ஊடறு(பதிப்பு) ,(2011) பெயரிடப்படாத நட்சத்திரங்கள், ஊடறு வெளியீடு.

கப்டன் வானதி வெளியீட்டகம்,(2001). எழுதாத உன் கவிதை (தமிழீழப் பெண்கள் கவிதைகள்), கப்டன் வானதி வெளியீடு, கிளிநொச்சி.

கமலரூபன். பொ, (2001). எண்பதுகளுக்குப் பின் ஈழத்துப் புதுக் கவிதை, கமலரூபன் நினைவுச் சபை, கரவெட்டி.

சித்திரலேகா மௌனகுரு , பதிப்பாசிரியர், (1993). சிவரமணி கவிதைகள், பெண்கள் ஆய்வு வட்டம், மட்டக்களப்பு.

சித்திரலேகா மௌனகுரு (தொகுப்பாசிரியர்), (1986). சொல்லாதசேதிகள், பெண்கள் ஆய்வு வட்டம், யாழ்ப்பாணம்..

பெண்கள் தொடர்பூடகக் கூட்டமைப்பபு, (2002), யுத்தகாலத்தில் பெண்கள், கொழும்பு.

மங்கை.அ, (2007). பெயல் மணக்கும் பொழுது, மாற்று, சென்னை.

மேஜர் பாரதி, (1992). காதோடு சொல்லிவிடு, வெளியீட்டுப் பிரிவு, விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு.

யோகராசா. செ, (2007). ஈழத்து நவீன கவிதை.(புதிய உள்ளடக்கங்கள்- புதிய தரவுகள்-புதிய போக்குகள்) குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

விஜயலட்சுமி.ச, (2002), தமிழ்க் கவிதைகளில் பெண்ணுரிமை, திபார்க்கர், சென்னை.

வெளிச்சம் வெளியீடு, (1996). வெளிச்சம் கவிதைகள், விடுதலைப் புலிகள் கலைப் பண்பாட்டுக் கழகம், நடுவப் பணியகம், தமிழீழம்.

றஞ்சி. தேவா (தொ.ஆ), (2007). இசைபிழியப்பட்ட வீணை, ஊடறு வெளியீடு சுவிஸ்லாந்து.

சரிநிகர், (1993). இதழ்-30 (செப்ரெம்பர்), இலங்கை.

47

தொன்மரபு உணவுகளும் சமையல் முறைகளும்

முனைவர் அ. பிரான்சிஸ் லியோ
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
ஸ்ரீ சாய்ராம் தொழில்நுட்பக் கல்லூரி, மேற்கு தாம்பரம், சென்னை.
francisleo.tamil@sairamit.edu.in

முன்னுரை

'ஒப்புடன் முகமலர்ந்து உபசரித் துண்மை பேசி
உப்பிலாக் கூழிட்டாலும் உண்பதே அமிர்தமாகும்
முப்பழமொடு பாலன்னம் முகங்கடுத் திடுவாராயின்
கப்பிய பசியினொடு கடும்பசியாகும் தானே.'

என்று உணவைப் பற்றியும் விருந்தோம்பல் பற்றியும் எடுத்துரைக்கிறது. விவேகசிந்தாமணிப் பாடல். உணவினைப் பற்றிக் கூறவந்த புலவர் அக்காலத்து சிறந்த உணவாக மா, பலா, வாழை என்கிற முக்கனியையும் பாலுடன் கலந்த அரிசிச் சோற்றையுமே குறிப்பிடுகிறார். இவ்வாறு சங்க இலக்கிய காலம் முதல் இன்று வரை தமிழக வரலாற்றில் உணவுப்பழக்க வழக்கங்களில் பல்வேறு மாறுதல்கள் ஏற்பட்டுக்கொண்டே வருகின்றன.

உயிர் வாழ உணவு மிக முக்கியமான ஒன்று. ஆரோக்கிய உணவு என்றாலே நம் நினைவுக்கும் வருவது வீட்டில் அம்மா சமைத்துக்கொடுக்கும் உணவுகள்தான். நமக்கு தேவையான சத்துக்களைத் தரக்கூடிய உணவுகளைப் போதுமான அளவிற்கு உண்பதுதான் ஆரோக்கிய உணவு என்பதாகும். அப்படிப்பட்ட உணவு வகைகளை சங்ககால மக்கள் சமைத்து உண்டு மகிழ்ந்தனர் என்பதை இவ்வாய்வு எடுத்துரைக்கிறது..

தொல்காப்பியர் கூறும் உணவு முறை

தொல்காப்பியர் அக்காலத்து உணவு முறைகளைப் பற்றிப் பலவாறு பகுத்துக்கூறுகிறார். இவர் குறிஞ்சி நிலத்து உணவை தினை, மூங்கில், நெல் என்றும் முல்லை நிலத்து உணவை வரகு

என்றும் மருத நிலத்து உணவை நெல் என்றும் நெய்தல் நிலத்து உணவை உப்பும் மீனும் விற்று வாங்கிய உணவு என்றும் பாலை நிலத்து உணவை வழிப்பறி செய்த உணவுப்பொருள் என்றும் பொதுவாக வரையறை செய்துள்ளார்.

சங்ககால சமையல் கருவிகள்

இன்று நாம் சமையல் செய்வதற்கு பல்வேறு வகையான கருவிகளைப் பயன்படுத்தி வருகிறோம். குறிப்பாக மாவரைக்கும் எந்திரம், எரிவாயு அடுப்பு என நாகரிக வளர்ச்சிக்கேற்பவும் அறிவியல் முன்னேற்றத்தினாலும் பல்வேறு இயந்திரங்களை பயன்படுத்துகிறோம். ஆனால் சங்ககால மக்கள் சமையல் வேலைகளைச் செய்வதற்கு இன்று பயன்படுத்துவதற்கு இணையான கருவிகளைப் பயன்படுத்தினார்கள் என்பது வியப்பூட்டுவதாக அமைகிறது. அடிமனை, கணிச்சி, நீர்முகப்பான், மத்து, உரல் உலக்கை, மட்பாண்டங்கள் என சமையல் பொருட்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.

நற்றிணையில் சமையல் முறை

சங்ககால மக்களின் உணவு முறை மற்றும் சமையல் முறைகள் நற்றிணையில் அழகாகக் காட்டப்பட்டுள்ளன.

'எல்லி வந்த நல்லிசை விருந்திற்கு
கிளர்; கிழை அரிவை நெய்துழந்து
அட்டவிளர் ஊன் அம்புகை எறிந்த
நெற்றி சிறுநுண் பல்வியர் பொறித்த
குறுநடைக்கூட்டம் வேண்டுவோரோ'
நற்றிணை- 41(5-10)

அக்காலத்தில் மக்கள் பெரும்பாலும் உணவினை நீரிட்டு, அவித்தல், வறுத்தல், சுடுதல், வற்றலாக்குதல், எண்ணையிலிட்டுப் பொரித்தல், ஊறவைத்தல் போன்ற முறைகளைப் பின்பற்றினர், மேற்குறித்த பாடல் தலைவி இரவில் வந்த விருந்தினருக்கு நெய்விட்டுக்கொழுப்புகள் நிறைந்த ஊனைச் சமைக்கிறாள் என்று பொருள்படுகிறது. இவ்வகையான உணவு வகைகள் உடல் நலத்திற்கு ஏற்றவையாக இருந்தன. மேலும், உணவைச் சுவையுறச் சமைப்பதிலும், உண்பதிலும் அம்மக்கள் சிறந்து விளங்கினர்.

புலவு நாற்றத்தைக்கொண்ட மீனை உப்பிட்டுக் காயவைத்து அவற்றைப் பறவைகள் கவர்ந்து கொண்டு செல்லாமல் காவல் காத்து நிற்பவர்கள் பரதவ குலத்துப் பெண்கள். உழாது உப்பு விளைவிக்கும் உழவர்களாகிய பரதவர் குவித்து நிரப்பி வைத்திருக்கும் உப்பை விலை கொள்ளுவாராகிய உப்பு வணிகரை எதிர்பார்த்து நிற்பார்கள்.

ஐவகை நிலங்கள் கூறும் உணவு முறை

சங்ககால மக்கள் அசைவ உணவையே பெரிதும் விரும்பி உண்டனர். பண்டைத் தமிழக மக்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களாகப் பகுத்து வாழ்ந்தனர். இதனால் ஒவ்வொரு நிலத்திற்கும், உணவுகளின் வகைகள் மாறுபட்டிருந்தன. குறிஞ்சி நிலமக்கள் மலையில் விளைந்த தினையைச் சோறாக்கியும் நெய்யில் பொரிக்கப்பட்ட இறைச்சியையும் உண்டனர் என்பதை,

'பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குரூ உக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவீர்'
(மலைபடுகடாம்) (168-169)

முல்லைநில மக்கள் பால், தயிர், வெண்ணெய், மோர் போன்ற பொருட்களுடன் நண்டுகளின் இறைச்சியோடு கலந்த சோற்றை உண்டனர்.

'இருங்கிளை ஞெண்டின் சிறுபார்ப்பு அன்ன
பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவீர்'
(பெரும்பாண்- 167-168)

மருதநில மக்கள் வெண்சோற்றையும், நண்டும் பீர்க்கங்காயும் கலந்த கூட்டையும், பழைய சோற்றையும் உண்டனர். அவலையும் வேகவைத்து உண்டதாகக் கூறப்படுகிறது.

நெய்தல் நிலமக்கள் இறால்மீன், வயல்ஆமை போன்றவற்றையும் நெல்லை இடித்து மாவாக்கி செய்த உணவையும் ஆண்பன்றிக்கு கொடுத்து அதை கொழுக்கச் செய்து, கொழுத்த பன்றியின் இறைச்சியை உண்டனர்.

பாலைநில மக்கள் இனிய புளிக்கறி இடப்பட்ட சோற்றையும் ஆவின் சூட்டு இறைச்சியையும், நாய் பிடித்து வந்த உடும்பின் பொரியலையும் சேர்த்து உண்டனர் என்பதை,

'எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு
தேமா மேனிச் சில்வளை ஆயமொடு
ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவீர்'
(சிறுபாண் - 175-177)

என்ற பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

வேதியர்களின் வீட்டில் புலால் இல்லாத மரக்கறி உணவையும் இராசன்னம் என்ற ஒருவகை நெல்லில் செய்த சோற்றுடன் மாதுளம் பிஞ்சைப் பிளந்து, மிளகுப்பொடியும் கருவேப்பிலையும் கலந்து. பசு வெண்ணெயிலே வேகவைத்து பொரியலோடு உண்ட செய்தி பெரும்பாணாற்றுப் படையில் (304-310) குறிப்பிடப்பட்டுள்ளது.

கள் வகைகள்

சங்ககால மக்களிடத்தில் கள்குடிக்கும் பழக்கம் பெரும்பான்மையாக இருந்ததுள்ளது. கள் பயன்தரக் கூடியதாகவும் இருந்திருக்கின்றது. சங்க காலத்தில் அரசன் முதல் புலவர்கள் வரையில் கள் உண்ணும் பழக்கம் உடையவர்காளக இருந்துள்ளனர். தென்னங்கள், பனங்கள், அரிசிக்கள் என்று பலவகையான கள் வகைகள் இருந்தன. குறிஞ்சி நில மக்கள் அங்குக் கிடைக்கும் மூங்கில் அரிசியைக் கொண்டு கள் தெளிவைத் தயாரித்துள்ளனர். தேனால் செய்த கள்ளை குறைவில்லாமல் குடித்துள்ளனர். பாம்புசினந்து எழுந்தது போன்ற எழுச்சியைத் தரும் கள் தெளிவைக் குடித்துள்ளனர். அகல் விளக்கால் தீமூட்டி கரும்புகையோடு செந்தீ பறக்கக் காய்ச்சிய பழையதாகிய களிப்பை தருகின்ற தேறல் என்னும் கள் தெளிவைக் குடித்துள்ளனர் என்பதை,

'இல் அடு கள்,ன் தோப்பி பருகி' (பெரும்பாண் 142)

எனும் வரியும்,

'அவையா அரிசி அம்களித் துழவை
மலர்வாய்ப் பிழாவில் புலர ஆற்றி
பாம்பு உறை புற்றின் குரும்பி ஏய்க்கும்
பூம்புறநல் அடை அளைஇத் தேம்பட
எல்லையும் இரவும் இருமுறை கழிப்பி

வெந்நீர் அரியல் விரல்அலை நறும்பிழி'
(சிறுபாண் 275 - 281)

என்ற பாடல்வரிகளும் உணர்த்துகின்றன. அதேபோல் பதிற்றுப்பத்தில் காணப்படும் பாடலொன்று

'உண்மின் கள்ளே அடுமின் சோறே
ஏறுக திற்றி ஏற்றுமின் புழக்கே
வருநர்க்கு வரையாது பொலங்களிர்ந் தெளிர்ப்ப
இருள் வணர ஒலிவரும் புரிய அவிழ் (ஐம்பால் 18:1:6)

என்று கூறப்படுகிறது.

கள்ளை உண்பீராக! சோற்றைச் சமைப்பீராக! தின்னப்படும் ஊண் கறியை அறுப்பீராக! கறி வகைகளை உலையில் ஏற்றுவீராக! என்பது இதன்பொருள். இதன்மூலம் கள்ளும் சோறும் இறைச்சியும் சேரநாட்டு மக்களின் முக்கிய உணவாக அமைந்தமை பெறப்படும்.

தினைகளின் பல்வேறு வகைகள்

சோறு சேரநாட்டு மக்களின் முக்கிய உணவாக இருந்ததை 'அடுமின் சோறெ' என்ற அடி உணர்த்துகிறது. நெல்லின் வகை நிலத்துக்கு நிலம் மாறுபடும். மருதநில மக்கள் செந்நெல் சோறும் மலை நில மக்கள் வெண்ணெல் சோறும் உட்கொண்டனர். செந்நெல் மஞ்சள் நிறமுடைய தானியமென்றும் வெண்ணெல் ஒருவகையான காட்டரிசி என்றும் கூறுவர். சோற்றைப் பல வகையில் பக்குவப்படுத்திச் சேரர்கள் உண்டதை பதிற்றுப்பத்து விளக்குகிறது. சோற்றிலே நெய்கலந்தும், இறைச்சி வகைகளையும் கலந்து சமைத்தார்கள். சேரநாட்டுத் தமிழர்கள் ஆட்டிறைச்சியை வெண்ணெல்லோடு சமைத்தனர் என்பதை,

'அருவி தந்த பழஞ்சிதை வெண்காழ்
வருவிசை தவிர்த்த கடமான் கொழுங்குறை
முளவுமாத் தொலைச்சிய பைந்நிணப் பிளவை'
(பதிற்றுப்பத்து- 174 -185)

என்ற பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

சிற்றுண்டியும் பழையசோறும்

சங்ககாலத் தொண்டை மண்டலப்பகுதிகளில் இன்று உள்ளதுபோல் அன்றும் சிறிய சிறிய உணவுக் கடைகளில்

பலவகையான சிற்றுண்டிகள் விற்கப்பட்டு வந்துள்ளன. அவ்வுணவுகள் சுத்தமாகவும், முழுக்க முழுக்க மக்களின் பசியை ஆற்றுகின்ற வகையில் ஆப்பம், இட்டலி, தோசை, உப்புமா, பொங்கல், இடியாப்பம், பனியாரம், ஆகிய உணவுகளை செய்து விற்பனை செய்துள்ளனர். அப்ப வாணிகர் கரிய சட்டியில் பாகுடனே வேண்டுவனவற்றை சேர்த்து நூல் போல் அமைத்த வட்டமான அதாவது இக்கால இடியாப்பம் போன்று ஒரு வகைச் சிற்றுண்டியைச் செய்தனர் என்பதை,

'கார் அகல் கூவியர் பாகொடு பிடித்த
இழைசூழ் வட்டம் பால் கலந்தவை போல்'
(பெரும்பாண் 377-378)

என்றபாடல் தொடர்கள் காட்டுகின்றன.

மதுரைக் கடைத்தெருக்களில் சிற்றுண்டிக் கடைகள் இருந்தன. அவற்றில் பாகில் சமைத்த நல்ல வரிகளையுடைய தேன் இறாலைப் போன்ற மெல்லிய அடைகள் செய்யப்பெற்றன. பருப்பையும் தேங்காயையும் உள்ளீடாகக் கொண்ட சர்க்கரை கூட்டிப்பிடித்த 'மோதகம்' அதாவது இன்றைய போளி போன்ற தின்பண்டம் செய்யப்பெற்றது.

இனிய பாகொடு சேர்த்துக் கரைத்த மாவைக்கொண்டு அப்ப வணிகர் பல சிற்றுண்டிகளைச் செய்தனர் என்பதைப் பின்வரும் மதுரைக்காஞ்சிப் பாடல் தொடர்கள் விவரிக்கின்றன:

'நல்வரி இறாஅல் புரையும் மெல்லடை
அயிர் உருப்பு உற்ற ஆடமை விசயம்
காவவொடு பிடித்த வகைஅமை மோதகம்
தீஞ்சேற்றுக் கூவியர் தூங்குவனர் உறங்க'
(மதுரைக்காஞ்சி 624 -627)

சிறுபிள்ளைகள் காலையில் பழைய சோற்றை உண்டனர். பழைய சோற்றின் மேல் வெறுப்பு ஏற்பட்டால் அவலை இடித்து உண்டனர் என்பதை,

'கருங்கை வினைஞர் காதல் அம்சிறாஅர்
பழஞ்சோறு அமலை முனை, வரம்பில்.
புதுவை வேய்ந்த கவிகுடில் முன்றில்

அவல்எறி உலக்கைப் பாடுவிறந்து அயல
(பெரும்பாண் 223-226)

என்ற பாடல்வரிகள் உணரத்துகின்றன.

பல்வேறு வகை உணவுகள்

தினைமா

தினைமா பண்டைத் தமிழர்கள் விரும்பி உண்ட உணவுப்பொருளாகும் தினைமா 'நுவணை' எனப்பட்டது. இடித்து நுண்ணிதாக்கப்பட்ட மாப்பொருள் என்பதால் இது 'மென்றிணை நுவணை' எனப்பட்டது.

இறைச்சி

பதிற்றுப்பத்தில் சேரநாட்டு மக்கள் இறைச்சி வகையை மிக விரும்பி உண்டனர். ஆட்டிறைச்சியையும், மாட்டிறைச்சியையும் பெரும்பாலும் கள் அருந்தும்போது அதிகமாக விரும்பி உண்டனர். இறைச்சியைத் துவரை, அவரை போன்றவற்றுடன் அரைத்து ஒரு வகையான துவையலையும் பண்டைய நாளில் செய்துள்ளனர். 'குய்யிடுதல்' என்பது தாளிதம் செய்தல் எனப்பொருள்படும். இவை பண்டைத்தமிழரின் உணவுக்கலையறிவைக் காட்டுகிறது.

பழங்கள், கிழங்குகள்

சேரநாட்டு தமிழர்கள் பழவகைகளையும் கிழங்கு வகைகளையும் உணவாகப்பயன்படுத்தினர். முழவு போன்றமைந்த பெரிய பலாப்பழத்தை உண்டனர். வழிச்செல்வோர்க்கு அவர்கள் களைப்பை போக்க தேன் நிறைந்த முட்டை போன்ற வடிவத்தையுடைய பழங்களும், அதோடு சேர்த்து கிழங்கு வகைகளும் உணவாக அமைந்திருக்கின்றன.

கருப்பஞ்சாறு

கரும்புச்சாறை மருத நில மக்கள் விரும்பி அருந்தியுள்ளனர். அம்மக்கள் நெல்லுக்கு வேலியாக கரும்பை நடுவர். அது வளர்ந்து நெல்லின் வளர்ச்சியைக் கெடுத்தால் அதை அரிந்து பிழிந்து சாறு பெறுவர். இன்று வீடுதேடி வரும் விருந்தினர்க்கு தேனீர் போன்ற சுவை பானம் தருவது போல அன்று கரும்புச்சாறை கொடுத்துள்ளனர். பெரும்பாணாற்றுப்படை பாணன்,

'மருத நிலத்தில் தங்கினென்றாயின்
கரும்பின் தீஞ்சாற்றைக் கொள்ளலாம்'

என்று கூறுவது மேற்கூறிய கூற்றுக்கு வலுச்சேர்க்கிறது

முடிவுரை

சங்ககால தமிழர்கள் சைவம், அசைவம் என்ற இரண்டு உணவுகளையும் வகை வகையாக சமைத்து உண்டனர் என்பதற்குப் பெரும்பான்மையான சங்கப்பாடல்களைச் சான்றுகளாகக் காட்டலாம். தனியாக உண்ணும் பழக்கம் தமிழர்களுக்கு என்றுமே கிடையாது என்பதை,

'மருந்தே ஆயினும் விருந்தொடு உண்'

என்னும் சங்கப்பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

சங்ககால மக்கள் அசைவ உணவையே மிகுதியாக உண்டனர். ஆனால், பிற்காலத்தில் தோன்றிய நீதி இலக்கியங்களான திருக்குறள், இன்னா நாற்பது, இனியவைநாற்பது ஔவையார் பாடல்கள் அனைத்தும் புலால் உண்ணுதல் மிகவும் பாவச்செயல் எனவும் சைவ உணவே மிகவும் சிறந்தது எனவும் பறைசாற்றுகின்றன.

'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்'

என்று திருக்குறள் கூறுகிறது. எது எப்படியாயினும் எவற்றை உண்டாலும் அளவொடு உண்டால் உடலுக்கு எந்தத் தீங்கும் ,ல்லை. உணவே மருந்து என்ற நிலைமாறி மருந்தே உணவு என்ற அவல நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இன்றைய காலக்கட்டங்களில் நாகரிகம் என்ற பெயரில் முழுவதும் சமைக்கப்படாத விரைவு உணவுகளால் மனிதர்களுக்கு பல்வேறு கொடிய நோய்கள் வருவது தொடர்கதையாகி வருகிறது. எனவே குழந்தைகள் முதல் பெரியவர் வரை ஆரோக்கியமான உணவுகளை உண்டு நோயற்ற வாழ்வு வாழ வழிவகை செய்ய வேண்டும்.

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்.

என்ற வள்ளுனின் வாக்கைப் பின்பற்றினால் நோயற்ற இனிமையான வாழ்க்கையை வாழலாம் என்பதே உண்மையிலும் உண்மை.

துணைநூற்பட்டியல்

சுப்பிரமணியன் ச.வே., (2003). பத்துப்பாட்டு

பரமசிவன், தொ. (2001). பண்பாட்டு அசைவுகள்

பாலசுப்ரமணியன், கு.வே. (2004). நற்றிணை., நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

துரைசாமி பிள்ளை.சு (1951). புறநானூறு மூலமும் உரையும்

குருநாதன் (மற்றும் பலர்)., (1988). சங்கஇலக்கியப் பொருட்களஞ்சியம், தஞ்சாவூர்.

48

கோடுகளையும் வர்ணங்களையும் கையாள்வதனூடாகப் பாடசாலை மாணவர்களின் மனவுணர்வுகளை வெளிப்படுத்தல்

டீசாந்தினி நடராசா
முதுதத்துவமாணிப் பட்ட ஆய்வாளர்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
chelladisha@gmail.com

அறிமுகம்

மானிடர் ஆரம்பம் முதல் இன்றுவரை தனது வாழ்வியல் முறைமையிலே கலையினை இன்றியமையாத ஒன்றாக இணைத்துக் கொண்டே கடத்தி வந்துள்ளனர். இவ்வகையில் ஓவியம், சிற்பம், இசை, நாடகம், காவியம் ஆகிய கலைகள் மக்களது வாழ்க்கைக்கு பிரயோகம் உள்ள முறையில் உருவாக்கப் பட்டிருக்கின்றன. இவற்றில் ஓவியம் பெரும் பழமையானதும் இயற்கையுடன் கலந்ததுமாகும். அகக்கண்ணில் தோன்றிய வடிவை புறவடிவமாகத் தெரிவிக்கும். இவ்வோவியத்தின் பரப்பு, கோடுகள், வண்ணங்கள், சுவர் அல்லது ஓவியம் வரைவதற்கான தளம், தூரிகை, ஒளியும் நிழலும் என்பவற்றை உள்ளடக்கங்களாக கொண்டு அமைந்துள்ளது.

ஆய்வின் நோக்கம்

பாடசாலை மாணவர்களின் மனவழுத்தங்களை வர்ணங்கள், கோடுகள் என்பனற்றை ஊடகங்களாகக்கொண்டு வெளிப்படுத்தி அவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களிலிருந்து விடுவித்து உள ஆற்றுப்படுத்தலை ஏற்படுத்த முடியும் என்பதனை எடுத்துக் கூறுவதாக இவ்வாய்வு அமைகிறது.

ஆய்வு முறையியல்

மட்டக்களப்பு மேற்கு வலயம் மற்றும் மட்டக்களப்பு வலய மாணவர்களை அடிப்படையாகக்கொண்டு விபரண மற்றும் கள

ஆய்வு முறைமையியல்களுக்கு அமைய இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கருத்தாடல்

மனிதன் குகை ஓவியங்களைப் படைத்த காலமிருந்து இன்றுவரை ஓவியங்கள், கோடுகள், வர்ணங்கள் மூலம் மனநிலை மற்றும் வாழ்வியல் மாற்றங்களை வெளிப்படுத்திக் கொண்டுதான் வந்திருக்கின்றான். கடந்த இருபது ஆண்டுகளாக சுனாமி, யுத்தம் என்பவற்றிலிருந்து இளம்பராயத்தினரை மீண்டெழச்செய்யும் கருவியாக – ஒரு சிகிச்சை முறையாக ஓவியங்கள் பயன்படுத்தப் பட்டுவருவதைக் காணமுடியும். சமகாலச் சூழலில் பாடசாலை மாணவர்கள் பல்வேறுவகையான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துவருகின்றார்கள். அதனால் இளையவர்கள் தற்கொலை செய்துகொள்வதும் அதிகரித்திருகின்றது. மாணவர்களின் மன அழுத்தங்களைக் குறைத்து அவர்களை ஆரோக்கியமான பாதைக்கு வழிப்படுத்துவதற்கு முயல்தல் அவசியமானதாகும். அந்த வகையில் ஓவியப்பட்டறை நிகழ்த்தி மாணவர்களின் மனவுணர்வுகள் வெளிப்படுத்தப்பட்டமை குறித்து இங்கு நோக்கப்படுகின்றது.

ஓவியப்பட்டறை முதல் நிலை

மாணவர்களின் ஆழ்மன வெளிகளுக்குள் செல்வதற்கு தடையாக உள்ள தற்காலிக எதிர்வினைகளை மாற்றவேண்டிய நிலைப்பாடு காணப்பட்டமையால் மாணவர்களை குறிப்பிட்ட நேரத்துக்கு சமுகமளிக்கச் செய்து அவர்களை மன ஒருநிலைப்படுத்தும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டது. மாணவர்களுக்கு ஓவியக் கடதாசிகள், தூரிகைகள், பென்சில்கள், பேனைகள், வர்ணக் கலவைகள் , கட்டிகள் கொடுக்கப்பட்டன. அதில் அவர்களுக்குப் பிடித்தமான ஒன்று அல்லது பல ஊடகங்களைத் தெரிவுசெய்து ஓவியக் கோடுகளை, கிறுக்கல்களை அவர்கள் கை போகின்ற போக்கிலும் மனம் போன போக்கிலும் சுதந்திரமான முறையில் கிறுக்கச் சொல்லப்பட்டது. முதலில் மெதுவாகக் கிறுக்கல் வேண்டும். படிப்படியாக அவர்களது மனநிலையினைப் பொறுத்து கொஞ்சம் கொஞ்சமாக வேகத்தினைக் கூட்டி தற்காலிக மனவுணர்வை அத்தாளிலே இறக்கி வைக்கும்படியாக வழிகாட்டப்பட்டது. பின்னர் அவை பல

துண்டுகளாகக் கிழித்து எடுக்கப்பட்டு வீசப்பட்டன. இவ்வாறு செய்வதன் மூலம் மாணவர்களின் கோப உணர்வு சோர்வு நிலை கவலை விரக்தி என்பன தூக்கியெறியப்படுவதாக உணரப்பட்டது.

ஓவியப்பட்டறையின் இரண்டாம் நிலை

பட்டறையில் கலந்துகொண்ட எல்லா மாணவர்களும் ஓவியம் பற்றிய போதிய அறிவு இல்லாதவர்களாக இருந்தமையினால் வரையும் முறை தொடர்பான ஒரு வழிகாட்டலினை மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்கவேண்டிய தேவையிருந்தது. மாதிரி ஒன்றினைக் கோட்டு வடிவில் வழங்கி அதன் விளக்கங்களுமளிக்கப்பட்டு வர்ணம் தீட்டும் முறையும் கற்றுக்கொடுக்கப்பட்டது. அதனை கருத்தில் கொண்டு மாணவர்கள் ஒழுங்கு முறையில் வர்ணக் கலவையினைப் பாவித்து கொடுக்கப்பட்ட வரைபடத்திற்கு முறையாக வர்ணம் தீட்டினார்கள்.

ஓவியப்பட்டறையின் மூன்றாம் நிலை

இதன்போதுதான் மாணவர்களின் மனதில் ஆழமாகப் பதிந்துள்ள மனத் தாக்கங்களை வெளிப்படுத்தும் கோடுகள் வர்ணங்கள் ஊடான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. நீண்ட நாட்களாக மாணவர்களின் மனதினைப் பாதித்ததும் மறக்க முடியாமல் உறுத்தலாகக் காணப்படும் சம்பவங்களும் தான் அடைய நினைக்கும் ஆனால் அதனை அடைவதற்குப் போராடும் மனநிலையின் ஏக்கங்களும் பிறரால் தன்னை அறியாமலே துஷ்பிரயோகம் செய்யப்பட்ட மற்றவருடன் பகிர்ந்துகொள்ள

முடியாத சம்பவங்களும் வரைதல் மூலம் வெளிப்படுத்தப்பட்டன. இவ்வோவியச் செயற்பாட்டின் மூலம் மாணவர்களிடையே பல்வேறு விடயங்கள் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. தங்களுக்கென்றே கொடுக்கப்பட்ட செயற்பாடுகளை ஒவ்வொருவரும் தங்களது நெருங்கிய நண்பர்களை அருகாமையில் வைத்துக்கொண்டு குழுவாக செயற்பட விரும்பினார்கள். ஓவ்வொரு படைப்புக்களும் அவதானிக்கப்பட்டதன் அடிப்படையில் சில குறிப்பிட்ட வர்ணங்களை மட்டுமே அதிகளவினில் பாவிக்கும் ஆர்வம் கொண்டிருந்தார்கள். மற்றைய சிலர் இயற்றையில் கிடைக்கும் சில பொருட்களைக் கொண்டு அதனைப் பயன்படுத்தி ஓவியமாக்கினார்கள்.

மாணவன் - 01 தான் முதலிலே கசக்கியெறிந்த காகிதக்கழிவை ஒரு வடிவமாக நினைத்து அதனைக் கோடுகளால் வரைந்து காட்டினார். மாணவன் - 02 முற்றுமுழுதாக கறுப்பு வர்ணத்தினை மட்டுமே முழுமையாகப் பாவித்து அவ்வர்ணத்தினால் மட்டுமே காகிதத்தினை முழுமைப் படுத்தியிருந்தார். மாணவி - 03 நீல நிறக் கடலில் கறுப்பு நிறமுள்ள டொல்பின் வகை மீனொன்று அரைவாசி நீரிலும் தலைப்பகுதி ஆகாயத்தினை நோக்கியவாறும் பாய்ந்த வண்ணம் வரைந்து வர்ணம் தீட்டியிருந்தாள். மாணவன் - 04 தன்னையொரு கதாநாயகனாக காட்டிக்கொள்வதில் ஆர்வம் காட்டுவதனால் தான் வரைந்த ஓவியத்தில் தன்னையொரு பிறரைக் கவரும் உருவப்படமாக வர்ணம் தீட்டியுள்ளான். மாணவன் - 05

தனது ஓவியத்தில் அகோரமான ஒரு வரைபடத்தை வர்ணங்களால் தீட்டியுள்ளான். மாணவி-06 கிராமப்புறமொன்றில் இருந்து வந்த மாணவியின் ஓவியத்தில் மத்தியில் ஒரு சிறுமி பயத்தில் ஒடுங்கிய வண்ணமிருக்க சுற்றி வளைத்து கருப்பு உருவமொன்று கைகளை நீட்டிய வண்ணமும் போதைப் பொருட்களும் கூரான ஆயுதங்கள் மிதந்த வண்ணமும் உள்ள காட்சி காட்டப்பட்டுள்ளது. மாணவி - 07; இளவயதில் திருமணம் செய்து கொடுக்கும் சமூகச் சூழலில் உள்ள மாணவி ஒருத்தி இளவயது திருமணத்தால் அதிகளவான பெண் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதினால் கிராமச் சூழலும் இன்றும்கூட கல்வியில் முன்னேறாமல் இருப்பதினை அந்த ஓவியத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். இவைதவிர தனது தந்தையின் மது பாவனை பழக்கத்தினால் குடும்பம் சீர்கெட்டு போதல், போதை அடிமையினால் இளம்பராய மாணவர்கள் அழிவுப்பாதையினை நோக்கிச் செல்லுதல், உறவுகளிருந்தும் தனிமைப்படுத்தப்படுதலும் ஒதுக்கப்படுதலும் ஏழைக் குடும்பத்தில் பிறந்திருப்பதினால் தனது ஆசைகளையும் விருப்பங்களையும் மறைத்து வாழுதல் போன்ற கஷ்டமான சூழல் அமைவுகளை மாணவர்கள் தங்களது ஓவியங்களில் வெளிப்படுத்தியிருப்பதனை அவதானிக்க முடிந்தது.

முடிவுரை

பட்டறையின் முடிவில் மாணவர்களின் மனநிலையில் அமைதியும் சந்தோசமும் நிலைநிறுத்தி இருப்பதினை அவதானிக்க முடிந்தது. மாணவர்களின் அறிவாற்றல் மற்றும் உணர்திறன், செயல்பாடு, சுயமரியாதை, சுய விழிப்புணர்வு மற்றும் உணர்ச்சி ரீதியான பின்னடைவு ஆகியவற்றை மேம்படுத்த ஓவியங்களின் கோடுகளையும் வர்ணங்களையும் பாவிக்கமுடியும். அத்தோடு இது மோதல்களைத் தீர்ப்பதற்கும் துயரத்தைக் களைவதற்கும் உதவக் கூடிய சிறந்த முறை என்பது ஆய்வின் முடிவாகும்.

உசாத்துணை நூல்கள்

கிருஸ்ணராஜா, சோ. (2008). அழகியல். சேமமடு பதிப்பகம்.

சிவகுமார், மணியம். (2009). அடிப்படை உளவியல். சேமமடு பதிப்பகம்.

நௌபர், யூ, எல், எம். (2010). உளவியல்சார் உளவளத்துணை அணுகுமுறை. குமரன் புத்தக இல்லம்.

பரணிதரன், க. (2020). உளவியல் கட்டுரைகள். பரணி அச்சகம்.

மகேந்திரன்,சி. (2014). தொன்மைச் சான்றுகள் புலப்படுத்தும் ஆடலமைதி, லயஞான பாரதி. பொய்கை பதிப்பகம்.

விக்னேஸ்வரன், எஸ், கே. (2015). குழந்தைகளுக்கும் உங்களுக்கும் இடையே. குமரன் புத்தக இல்லம்.

றமீஸ்,ஏ. (2016). சமூகவியல் சமூக மானுடவியல் அடிப்படை எண்ணக்கருக்கள். சேமமடு பதிப்பகம்.

ஜெயராசா, சபா. (2014). சூழலியல் உளவியல் கலை வடிவங்கள். சேமமடு பதிப்பகம்.

ஜெயராசா,சபா. (2012). உளவியல் ஊடுதலையீடுகள். சேமமடு பதிப்பகம்.

ஜெயராம கிருஸ்ணன், த, ரூ ஜெயச்சந்திரன், பு. (2017). உணர்ச்சிகள் உருவாக்கும் உடல் நோய்கள் - சிகிச்சையும் தடுப்பு முறையும். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

ஜெயராசா, சபா. (2008). உளவியல் முகங்கள். சேமமடு பதிப்பகம்.

49

இந்து சமயம்சார் தொல்லியல் சின்னங்களும் அழிந்த நகரங்களும் - பூம்புகார் நகரத்தை அடிப்படையாக கொண்ட ஆய்வு

பா.ஜேசினி மதுஷிகா
தற்காலிக உதவி விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை
கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.
bjmathusika@gmail.com

பேராசிரியர் எஸ்.கேசவன்
இந்துநாகரிகத்துறைப் பேராசிரியர்,
கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.
kesavan@esn.ac.lk

ஆய்வு அறிமுகம்

இந்து சமயத்தின் பண்பாடுகளை உள்ளடக்கிய பல நாகரிகங்கள் அழிந்து போயுள்ளன. அவ்வாறு அழிந்த பூம்புகார் நகரம் பற்றிய ஆய்வாகவே இவ்வாய்வு காணப்படுகின்றது. அழிவடைந்து செல்லும் இந்துசமயம் சார் தொல்லியல் சின்னங்கள் மூஹ்ம் இவ்வழிந்த நகரத்தின் வரலாற்றுத் தொன்மையானது மறைக்கப்பட்ட ஒன்றாகவே காணப்படுகின்றது. எனவே இவ் மரபுரிமைச் சின்னங்களை பேணி, எமது பண்பாடு, கலாசாரம், வாழ்க்கை முறை என்பவற்றை சமூகத்திற்கு எடுத்துக்கூறுதல், இந்து சமயம்சார் தொல்லியல் சின்னங்களையும், அழிந்த இப் பூம்புகார் நகரத்தையும் பற்றிய உண்மையான தகவலை மக்களிற்கு உணர்த்துதல் பழம் பெரும் வரலாற்றைக் கொண்ட தொல்லியல் சின்னங்களை ஆவணப்படுத்தல் என்பவற்றை அடிப்படையாக கொண்டு இவ்வாய்வு அமைகின்றது.

இப்பூம்புகார் நகரம் அழிந்தமையினால் இதன் உண்மையான வரலாற்றை மக்கள் ஏற்க மறுக்கின்றனர். இந் நகரங்களில் நடைபெற்ற ஆராய்ச்சிகள் பற்றிய பாமர மக்கள் இன்றளவும்

பெரிதும் அறிந்திலார். இந் நகரங்கள் பற்றிய இந்துக்கள் உண்மைத் தன்மையான வரலாறு இந்துக்களே அறியாவண்ணம் உள்ளது. இந்துக்களின் பெருமை இந்துக்களே அறியாவண்ணம் உள்ளமையினால் வேற்று மதங்கள் உரிமை கொண்டாட முன்வருவது எனப் பல விடயங்களை நாம் செய்திகள் ஊடாக நாளாந்தம் அறியக்கூடியதாகவும் உள்ளது. இவ்வாய்வானது வரலாற்றாய்வு விவரண ஆய்வு பண்புசார் ஆய்வு ஆகிய முறைகளைப் பின்பற்றி செய்யப்படுகின்றது.

பூம்புகார்

பூம்புகாரைப் போற்று வாராதலின் நாமும் பூம்புகாரைப் போற்றுவோம் என்று இளங்கோவடிகளால் புகழப்பட்டது இந்நகரம். புகார் என்றால் ஆறு கடலில் சங்கமம் ஆகும் இடம் பூம்புகார் என்பது காவிரியாறு கடலில் புகும் இடம். இந்நகருக்கு பூம்புகார், (செங்கதிர்ச் செல்வன் திருக்குலம் விளங்கும்-மணிமேகலை) காவிரிப்பூம்பட்டினம், காகந்தி, சம்பாபதி, புகழ் மூதூர், மண்ணகத்து வான்பதி, சோழபட்டினம், சபேரிஸ் எம்போரியம், கோலபட்டணம் என்று பல பெயர்கள் உண்டு. அகநானூறு, புறநானூறு, பட்டினப்பாலை, முத்தொள்ளாயிரம், சிலப்பதிகாரம், மணிமேகலை, தேவாரம், திருத்தொண்டர் புராணம் முதலிய தமிழ் நூல்களும், மிளிர்ந்தன. (அறுவர்; 1973:64) ஜாதகக் கதைகள். புத்தவம்சாத்தகதா முதலிய பிராகிருத நூல்களும், தாலமி எழுதிய பூமிநூல், பிளினி எழுதிய நூல், பெரிப்ளஸ் மெரிஸ் எரித்ராய் முதலிய வெளிநாட்டார் எழுதிய நூல்களும், கல்வெட்டுகளும் இந்நகரின் சிறப்பைக் குறிக்கின்றன.

பூம்புகார் நகரம்

நகரமைப்புக் கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது பூம்புகார் நகரம். இந்நகரின் பொற்காலம் முடிந்து இது கடல் கொள்ளப்பட்டுவிட்டது என்றாலும் வரலாற்றிலிருந்தும் இலக்கியங்களிலிருந்தும் இதன் அமைப்பையும் பெருமையையும் நன்கு அறிந்துகொள்ள முடிகின்றது. சிலப்பதிகாரம், மணிமேகலை, பட்டினப்பாலை முதலிய நூல்களில் இதன் சிறப்பு நன்கு தெரிகின்றது. கி.பி. முதல் நூற்றாண்டில் மேற்கு நாடுகளிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்தவர்களாலேயே காவிரிப்பூம்பட்டின நகரம் பெயர்சுட்டிப் புகழப்பட்டிருக்கிறது.

இந்நகரத்திற்குச் செல்லும் பிரதானசாலை சோழமன்னர்களின் கல்வெட்டுக்களில் பட்டினப்பெருவழி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. காவிரிப்பூம்பட்டினப் பெருநகர் மூன்றுபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது(மருவூர்ப்பாக்கம் (சிலப்பதிகாரம், 5: 7 – 39) 2. பட்டினப்பாக்கம் (சிலப்பதிகாரம், 5: 40 – 58), 3.நாளங்காடி)

இந்த மூன்று பிரிவுகளும் அடுத்தடுத்து அமைந்திருந்த விதம் நகரமைப்பின் பண்பட்ட நிலைக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமையக்கூடியது ஆகும். மருவூர்ப்பாக்கம் புகார் நகரின் கடற்கரை ஓரமாக அமைந்திருந்த பகுதி. அகநகராக உட்புறம் அமைந்திருந்த பகுதியே பட்டினப்பாக்கம். இந்த இரண்டு பாக்கங்களுக்கும் இடையில் இருந்த இடம் நகரத்தின் வணிகப் பகுதியாக (commercial) அமைந்திருந்தது. அதற்கு நாளங்காடி என்று பெயர். அல்லங்காடி என மற்றொரு பகுதியும் இருந்திருக்கிறது. இது சோலை சூழ்ந்த பகுதியாகும். காவிரிப்பும்பட்டினத்தின் முழுப்பகுதியும் இம்மூன்று பெரிய பிரிவுகளுள் அடக்கிவிடும்.

ஐவகை மன்றங்கள்

மன்றம் என்ற சொல் ஊர் நடுவே பலரும் கூடும் பொது இடம் எனப் பொருள். பட்டினப்பாக்கப் பகுதியில் காவிரிப்பூம்பட்டின நகரத்தின் ஐம்பெரும் மன்றங்களும் அமைந்திருந்தன. இம்மன்றங்கள் நகரின் பொது மக்கள் கூடுமிடங்களாக அமைந்திருந்தன என்று தெரிகிறது (அவையாவன: 1.வெள்ளிடை மன்றம் 2. இலஞ்சி மன்றம் 3.பூத சதுக்கம் 4. நெடுங்கல் நின்ற மன்றம் 5.பாவை மன்றம்)

கோயில்கள்

காவிரிப்பூம்பட்டின நகரின் அமைப்பில் பல்வேறு கோயில்கள் இருந்திருக்கின்றன. அவை கோட்டங்கள் என்று வழங்கப்படுகின்றன. சிவன் கோட்டம், திருமால் கோட்டம் பலராமன் கோட்டம், இந்திரன் கோட்டம், முருகன் கோட்டம், சூரியன் கோட்டம், சந்திரன் கோட்டம், புத்தர் கோட்டம். அருக தேவன் கோட்டம். எனப் பல கோட்டங்கள் காணப்படுகின்றன. இதனைச் சிலப்பதிகாரம் "அமரர் தருக்கோட்டம் வெள்யானைக் கோட்டம்" (சிலப்பதிகாரம் – 43) எனக் கூறும். அத்துடன் இந்திர

விகாரம் ஏழு, மணிவண்ணன் கோட்டம்- சக்கரவாளக் கோட்டம் என கோயில்கள் இருந்தமைக்கான சான்றுகளும் கிடைக்கின்றன

சமய நூல்களில் பூம்புகார்

"நுதன் விழிநாட்டத்திறையோன் முதலாப் பதி வாழ் சதுக்க பூதம் ஈறாக" (அறுவர்;.1973:31) எல்லாக் கடவுளர் கோயிலும் இருந்த பூம்புகார் நகரில் பல்வேறு சமயத்தாரும் வாழ்க்கை நடத்தினர். பௌத்த, சமண சமயத்தைச் சார்ந்தோரும், இந்து மதத்தின் இருபெரும் உட்பிரிவுகளான சைவ, வைணவப் பெரியோர் வழிவந்தோரும் ஒருங்கே வாழ்ந்த காலம். ஆதலின் சமயச் சார்புடைய நூல்களில் புகார் நகர் பற்றியும், அந்நகரில் எழுந்தருளியுள்ள தத்தமது சமயக் கோயில்கள் பற்றியும், மக்களது சமயவாழ்க்கை பற்றியும் குறிப்புகள் உள்ளன.

சைவ சமயக் குரவர்களான அப்பரும், சம்பந்தரும் புகார் நகரத்து எழுந்தருளியுள்ள இறைவனைத் தங்கள் பதிகங்களில் பெருமைப்படுத்தியுள்ளனர். திருஞானசம்பந்தர் காவிரிப்பூம் பட்டினத்துப் பல்லவனீச்சரத்தைப் பதிகங்களில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "சுழியிலாருங் கடலிலோ தந்தெண்டிரை" என்றும் "காரரக்குங் கடல்கிளர்ந்த காலமெலாமுணரப்" என்றும் 'வங்கமாரு முத்தமிப்பிவார் கடலூடலைப்பப்" எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், 'பட்டினத்துப் பல்லவனீச்சரம்" என்றும் 'பட்டினத்துறைப் பல்லவனீச்சரம்' என்றும் இவ்வூர் அழைக்கப்பட்டது.

புகாரில் அமைந்துள்ள திருச்சாய்க்காட்டைப் பற்று சம்பந்தர் 'வாய்த்த மாளிகை சூழ் தருவண்புகார்மாடே" (தேவாரம் - 4:81.2) எனும் பாடல்; வரிகளில் விவரிக்கிறார். திருச்சாய்க் காட்டுறை இறைவனை அப்பர்பிரான் தன்னுடைய "மத்த யானையின் கோடும்" எனும் பதிகத்தில் குறித்துள்ளார். இதனூடாக, யானைத்தந்தமும், மயில்பீலியும் இங்கு சிறப்பாகக் கிடைத்துள்ளன. இவை பண்டைய காலத்தில் சிறந்த வியாபாரப் பொருள்களாகத் திகழ்ந்தன. அதேபோன்று முத்து, மணி, சங்கு முதலியவையும் இங்கு நிறைந்திருந்தன எனப் பாடுகிறார்.

பூம்புகார் அழிந்தமைக்கான காரணங்கள்

நாகை மாவட்டம் பூம்புகார் அருகே சுமார் 11 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கடலில் மூழ்கிய ஒரு பிராமாண்ட நகரம் தான் உலகில் முதன் முதலில் தோன்றிய நவீன நகர நாகரிகமாக இருக்கக்கூடும் என்று இங்கிலாந்தைச் சேர்ந்த ஆழ்கடல் ஆராய்ச்சியாளர் கிரஹாம் ஹான்காக் என்பவர் கண்டறிந்துள்ளார். இவர் கடந்த 2001 ஆம் ஆண்டு. பூம்புகார் கடற்பகுதியில் மேற்கண்ட தீவிர ஆழ்கடல் ஆராய்ச்சியின் மூலம் இந்த உண்மையைக் கண்டறிந்துள்ளார். இந்த ஆராய்ச்சிக்குத் தற்போதைய வரலாற்று ஆய்வாளர்களின் கருத்தான "மெசபடோமியா' (தற்போதைய ஈராக்) பகுதியில் சுமேரியர்களால் சுமார் 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நகர நாகரிகம் தோற்றுவிக்கப்பட்டது என்பது தவறானது எனத் தெரிவிக்கிறது.

இவரது பல கண்டுபிடிப்புகள் வரலாற்று உலகில் முக்கியமானவை. இந்திய அரசின் கட்டுப்பாட்டில் கோவாவில் அமைந்துள்ள 'தேசிய ஆழ்கடல் ஆராய்ச்சிக் கழகம்' என்ற நிறுவனம். கடந்த 1990ஆம் ஆண்டு வாக்கில் வரலாற்றுப் புகழ் பெற்ற பூம்புகார் நகர கடற்பகுதியில் ஒரு ஆய்வினை மேற்கொண்டது. இந்த மூழ்கிய நகரம் குறித்த தனது ஆராய்ச்சியைத் தொடர்ந்த ஹான்காக் இந்த நகரம் கடலில் சுமார் 75 அடி ஆழத்தில் (Under World - The Mysterious Orgins of Civilization) புதையுண்டிருப்பதைக் கண்டறிந்தார். இன்றைக்கு சுமார் 17 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு "ஐஸ் ஏஜ்" எனப்படும் பனிக்கட்டி காலத்தின் இறுதி பகுதியில் தட்பவெப்ப மாறுதல்கள் காரணமாக, பனிப்பாறைகள் உருகியதன் விளைவாக பல நகரங்கள் கடலுள் மூழ்கியதாக வரலாறு தெரிவிக்கின்றது. (Graham Honcock, 2002:78)

இத்தகைய பனிக்கட்டி உருகும்நிலை, சுமார் 7 ஆயிரம் ஆண்டுகாலம் தொடர்ந்ததாக வரலாறு தெரிவிக்கின்றது. பூம்புகார் அருகில் இருந்த இந்நகரம், சுமார் 75 அடி ஆழத்தைப் புதையுண்டு இருப்பதைப் பார்க்கும்போது, இந்த நகரம் சுமார் 11 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மூழ்கியிருக்கக் கூடும் என்று ஹான்காக் கருதினார். தனது ஆராய்ச்சியைப் பற்றி விபரங்களை அவர் இங்கிலாந்து நாட்டு மில்னே என்பவரிடம் தெரிவித்தார். அதன்மீது

ஆராய்ச்சி மேற்கொண்ட கிலன்மில்னே, ஹான் காக்கின் கருத்து சரிதான் என உறுதிப்படுத்தினார். சுமார் 11 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கடல்மட்டம் 75 அடி உயர்ந்திருக்கக் கூடும் என்றும். அதனை வைத்துப் பார்க்கும்போது இந்த நகரம் 11 ஆயிரத்து 500 ஆண்டுகால பழமை வாய்ந்தது என்ற முடிவினையும் அறிவித்தார்.

2016-ல் நாமறிந்த ஆழிப்பேரலையான சுனாமி, அதற்கு முன்னால் பலமுறை உலகின் பல கடற்கரை நகரங்களை அழிவடையச் செய்திருக்கிறது என்பது வரலாற்றுத் தகவல், நம்முடைய சங்க இலக்கியத்திலும், வரலாற்றிலும் மிகப்பெரிய வணிகநகராக இருந்த பூம்புகார் என்னும் காவிரிப்பூம்பட்டினமும் அப்படி ஒரு கடல்கோளால்தான் அழிந்திருக்கிறது. அதை வரலாற்றாய்வாளர்கள் பலரும் பல்வேறு ஆய்வுகளின் மூலம் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள்.

பூம்புகார் நகரின் கடற்கரையில் உப்பளத்தின் அருகே மணற்குன்று ஒன்றில் இருந்த மன்னன் கிள்ளிவளவனைப் பார்த்து, "பாணர் ஒருவர், -- உன் மாநகர், கடல் வயிறு கூடம்" (மணிமேகலை 24: 62-65) என்று எச்சரித்ததாக, மணிமேகலையின் பாட்டி சித்திராபதி, இராசமாதேவியிடம் கூறுகிறார். இந்தக் குறிப்பு ஆபுத்திரன் நாடு அடைந்த காதையில் காணப்படுகிறது. தொடந்து, மணிபல்லவத் தீவுக்கு ஆபுத்திரனோடு சென்ற மணிமேகலையிடம், அத்தீவிலிருந்த புத்தபீடிகையை காத்துவந்த தீவதிலகை பலர் தொழு பாத்திரம் கையில் ஏந்திய மடவரல் நல்லாய் நிந்தன் மாநகர் கடல் வயிறுபுக்கது (மணிமேகலை 125: 174-175) என்றும், "வானவன் விழாக்கோள் மாநகர் ஒழிந்தது" (25.197) என்றும், "விரிதிரை வந்து வியன் நகர் விழுங்க, ஆய் இழைத் தாயரும் வருந்தாது ஏகி. வஞ்சியுள் புக்களர்" (மணிமேகலை 25: 203-206) என்றும், கூறுகிறார்.

ஆகவே இந்நகரங்கள் இயற்கையின் சீற்றத்தினால் அதாவது, கடல்கோள், வறட்சி போன்றவற்றின் காரணத்தினாலேயே அழிந்துள்ளது என்பது தெரியவருகின்றது. இனிவரும் காலத்தில் தொழிநுட்ப பயன்பாட்டைக் கொண்டு கடல் ஆராய்ச்சிகள் செய்யும் போது, இந்நகரங்களை அண்டிய கடல்கள், கடற்கரையோரங்கள், ஆழ்கடல் பாறைகள், மண், கடல்தாவரங்களை ஆய்வு செய்தால் மட்டுமே உண்மையான

காரணங்கள் வெளியே தெரியவரும். ஓர் நகரம் அழிந்துவிட்டது என அப்படியேவிட்டால் அதிலிருந்து எமது பண்பாடும் அழிந்துவரும். அதை தேடினாலே உண்மையான வரலாறுகள் வெளிக்கொணரப்படும்.

பூம்புகார் அகழாய்வு தொல்லியல் சின்னங்கள்

கருங்கல் சிற்பங்கள்

ஐயனார் கற்சிற்பம்

இவ் அய்யனார் சிலை செவ்வக வடிவான பீடத்தின் மீது இடது காலை மடித்து வைத்து, வலது காலைக் குத்திட்டு அமர்ந்த நிலையுடன் காணப்படுகிறது. வலது கரம் வலது காலின் மீதுவைத்து தொங்கும் கரமாக உள்ளது. இடது கரம் உடைந்துள்ளது. கழுத்தில் பதக்கமும், மார்பில் புரிநூலும், வயிற்றில் உதிரபந்தமும், கையில் காப்பும், தோளில் கேயூரமும் அணிசெய்கின்றன. தலைப்பகுதி விரிசடையாகக் காட்டப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் உயரம் 96 செ.மீ, அகலம் 40 செ.மீ ஆகும். இச்சிற்பத்தின் காலம் கி.பி 9ஆம் நூற்றாண்டாகும். முற்காலச் சோழர் கலைப்பாணிக்கு இச்சிற்பம் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

விநாயகர்

விநாயகர் சிற்பம் பூம்புகாரில் கடற்கரைப்குதியில் சேகரிக்கப்பட்டதாகும். இச்சிற்பம் பீடத்தின் மீது அமர்ந்த நிலையில் காணப்படுகிறது. இது இடம்புரி விநாயகர். இச்சிற்பத்தின் உயரம் 69 செ.மீ. அகலம் 45 செ.மீ. காலம் கி.பி 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிற்காலச் சோழர் கலைப்படைப்பாகும். இச்சிற்பம் மங்கிய வெள்ளைநிறக் கல்லால் வடிவமைக்கப்பட்டுள்ளது. (முத்துசாமி .கோ 2008:22)

விசுவாமித்திரர் - மேனகை சிற்பம்

மேனகையின் இரண்டு கரங்களும் விசுவாமித்திரரின் தோளின் மீது வைத்து, முகத்தை விசுவாமித்திரரின் முகத்தில் முத்தம் கொடுக்கும் பாவனையில் கட்டி அணைத்தபடி உணர்ச்சியைத் தூண்டும் வகையில் இச்சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. மேனகையின் வலது கால் விசுவாமித்திரரின் இடுப்பின் மீது வைத்துள்ளது. மேனகையின் தலைமுடி கீழே இடுப்பவரை தொங்குகிறது.

மார்பகங்களில் கச்சை கட்டப்படாமல் நிர்வாண நிலையில் மேனகையின் உருவம் காட்டப்பட்டுள்ளது. விசுவாமித்திரர் மேனகையின் உருவம் ஒரே கல்லில் வடிக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் உயரம் 32 செ.மீ அகலம் 16 செ.மீ. 100 ஆண்டுகட்கு முற்பட்டதாகும்.

மரச்சிற்பங்கள்

அம்மன்

இச்சிற்பம் பூம்புகாரில் கிடைத்ததாகும். அம்மன் வட்ட வடிவான பீடத்தின் மீது நின்ற நிலையில் காணப்படுகிறது. வலது கரம் தொங்கும் கரமாகவும், இடது கரம் அபயமுத்திரையிலும் காணப்படுகிறது. மார்பில் கச்சை கட்டப்பட்டுள்ளது. கழுத்தில் ஆரமும், மற்றொரு பெரிய ஆரமும் அணி செய்கின்றன. தலையில் கொண்டை இடதுபுறம் கட்டப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் உயரம் 45 செ.மீ.அகலம் 13 செ.மீ. இச்சிற்பம் சுமார் 100 ஆண்டுகள் பழமையானதாகும். (முத்துசாமி .கோ 2008:23)

திருநீற்றுமாடம்

இது ஒரே மரத்தால் செய்யப்பட்டதாகும். மேற்பகுதி தொங்குவதற்கு வசதியாக ஒன்றொடொன்று இணைத்து சங்கிலி போல் அமைந்தும், கீழ்ப்பகுதி இரண்டு கிண்ணங்கள் போன்ற அமைப்பும் உள்ளன. உயரம் 62 செ.மீ. அகலம் 30 செ.மீ. சுமார் 200 ஆண்டுகள் பழமையானதாகும். மரச்சங்கிலியை யானை ஒன்று தனது தும்பிக்கையில் பிடித்திருப்பது போல் மேலே யானை உருவம் செதுக்கப்பட்டுள்ளது. ஒரே மரப்பலகையில் கோர்வையாக சிவச்சின்னங்களை நேர்த்தியாகச் செதுக்கியிருப்பது தமிழக மரத்தச்சரின் கலைத்திறமையை உணர்த்துகிறது

தாய்த்தெய்வ உருவங்கள்

நாகபட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், மேலப்பெரும்பள்ளம் - வீராலி என்ற இடத்தில் கிடைத்த முதுமக்கள் தாழியின் வெளிபுறத்தில் அமைக்கப்பட்டிருந்த உருவங்களாகும். இரண்டு தாய் உருவங்களில் ஒன்று வயதானதாகவும், மற்றொரு உருவம் இளமையாகவும் செய்யப்பட்டுள்ளது. காதுகள் இரண்டும் யானைக் காதுகள் போல்

அகலமாக உள்ளன. மார்பகங்கள் இரண்டும் சரிந்து கீழே தொங்கும் நிலையில் வயதான தோற்றத்தை பிரதிபலிக்கும் வகையில் காட்டப்பட்டுள்ளது. இரண்டு கரங்களும் அகன்று, விரிந்து தொங்கும் நிலையில் உள்ளது. (பூம்புகார் ஆழ்கடல் அகழ்வைப்பகக் கையேடு-24)

உயரம் 12 செ.மீ. அகலம் 8 செ.மீ. ஆகும். மற்றொரு பெண் உருவம் இளமையாக காட்டப்பட்டுள்ளது. தலையில் கொண்டை வலதுபுறத்தில் காட்டப்பட்டுள்ளது. மார்பகங்கள் இறுக்கமாக கச்சை அணிந்து இளமை தோற்றத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளது. இடது கரம் இடது புறம் இடுப்பின் மீது வைத்து காணப்படுகிறது. இப்பெண்ணின் தொடை பருத்து வடிவமைக்கப்பட்டுள்ளது. வலது கரம் உடைந்துள்ளது. இடுப்பில் ஒட்டியாணம் காணப்படுகின்றது. உயரம் 13 செ.மீ. அகலம் 10 செ.மீ. இது கி.பி. 4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்;.

சுடுமண் இறை உருவம்

பூம்புகார் தீப்பாய்ந்தாள் அம்மன் கோயிலின் தலத்தரு பூவரவு ஆகும். இதன் அடிப்பகதியிலிருந்து கிடைத்ததாகும். இது ஆண் உருவமாகும். கைகள், கால்கள் உடைந்தள்ளன. தலையில் மகுடம் காட்டப்பட்டுள்ளது. உருண்டையான முகம், காதுகளில் பத்ரகுண்டலங்கள் அணி, கழுத்தில் மணிமாலை காணப்படுகிறது. அரச குடும்பத்தின் உருவமாகக் கம்பீரமாக காட்டப்பட்டுள்ளது. உயரம் 15 செ.மீ. அகலம் 8 செ.மீ.காலம் கி.பி. 3ஆம் நூற்றாண்டாகும்.

சிலம்பு

இச்சிலம்பின் சுற்றளவு 50 செ.மீ நீளம் 17 லு செ.மீ அகலம் 14 செ.மீ எடை 4305 கிராம். சிலம்பின் முகப்பின் நடுவில் உயர்ந்த மேடாகவும் தலைப்பின் மேல் நான்கு இதழ்களுடைய மலர் போல அமைக்கப்பட்டுள்ளது. சுற்றி இரண்டு கோடுகள் வட்டமிட்டு அதன் நடுவில் பல புள்ளிகள் அமைக்கப் பெற்றுள்ளது. (பூம்புகார் ஆழ்கடல் அகழ்வைப்பகக் கையேடு-31) இதனைச் சுற்றி 25 சிறுசிறு வட்டவடிவங்கள் அமைக்கப்பெற்றுள்ளது. அதைச் சார்ந்து சிலம்பின் வளைவில் இருபுறமும் இதேபோல் பக்கத்திற்கு நான்காக எட்டு சிறு வடிவங்கள் அமைக்கப் பெற்றுள்ளது. அதைச்

சார்ந்த சிலம்பின் வளைவில் இருபுறமும் இதேபோல பக்கத்திற்கு நான்காக எட்டு சிறு வடிவங்கள் அமைக்கப் பெற்றுள்ளது. உள்ளே பரல்கள் போடுவதற்கு ஏற்ற வகையில் கூடாக அமைந்துள்ளது. பரல்கள் உள்ளே இட்டு இணைத்தது போன்று காட்சி அளிக்கிறது. காலில் அணிவதற்கு ஏற்ற வகையில் வளைவான வடிவம் அமைக்கப் பெற்றுள்ளது. மென்மையான கனமற்ற உலோகத்தால் செய்யப்பட்டள்ளது. கீழே சின்ன சலங்கைகள் கட்டி தொங்கவிட மூன்று வளைவுகள் உள்ளன. (முத்துசாமி .கோ 2008:31)

முடிவுரை

பூம்புகாரில் கிடைத்த தொல்லியல் சின்னங்கள் நாகை மாவட்டத்தில் உள்ள பூம்புகார் கலைக்கூடத்தில் வைக்கப்பட்டு உள்ளன. மேலும் அறிவியலாளர்கள் பூம்புகாரின் ஆரம்ப காலகட்டத்தின் சரியான இருப்பிடம் அதன் வயதும், பின்னர் ஏற்பட்ட மாற்றல்கள் இடம்சார்ந்தது பரிணாம வளர்ச்சி, காவிரி நதியின் முகப்பில் உள்ள இடம் பற்றிய விடயங்கள் தொடர்பாக விவரங்கள் இன்றும் கிடைக்கப்பெறாமல் இருப்பதனால் அவற்றினை நீருக்கடியில் புகைப்படம் எடுத்தல் தொலைதூரத்திலிருந்து இயக்கப்படும் வாகனத்திலிருந்து கடல்படுக்கை துளையிடுதல் போன்றவற்றின் மூலம் உண்மைத் தன்மையை ஆராயமுற்படுகின்றனர். மேலும் பூம்புகார் அழிவதற்கான காரணம் ஆராயப்படும் என அழகப்பா பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் தெரிவித்துள்ளது என்பவை இவ்வியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காலத்தின் தேவையினையும் இன்றைய காலகட்டத்தில் ஆரம்பம் தொடக்கம் இன்றுவரை மனித முக்கியத்துவத்தினையும் கருத்திற்கொண்டு வாழ்வின் பண்பாடுகள், கலாசாரங்கள், பாரம்பரியங்கள் எவ்வகையில் மக்களோடு ஒன்றித்து காணப்படுகின்றன என்பதற்கு நம்பகரமாணதோர் அம்சமாகக் காணப்படுவது இந்துசமயம்சார் தொல்லியல் சின்னங்களும் அழிந்த நகரங்களுமாகும். ஒவ்வொரு நகரமும் தனது பண்பாடுகள் வரலாற்று பாரம்பரியங்கள் மற்றும் கலாசார விழுமியங்களை நுணுக்கமாகவும் ஆழமாகவும் பதிவு செய்ய வேண்டியதன் அவசியத்தைக் கொண்டுள்ளது.

அழிவடைந்து செல்லும் இந்துசமயம்சார் தொல்லியல் சின்னங்களின் மூலம் இவ்வழிவந்த நகரங்களின் வரலாற்றுத் தொன்மையினை வெளிக்கொணர்தல், இவ் வழிவந்த நகரங்களின் வரலாற்றுத் தொன்மையானது தற்காலத்தில் ஏற்றுக்கொள்ளப் பட்டதும் வெளிவரப்படாத மறைக்கப்பட்ட ஒன்றாகவே காணப்படுகின்றது. எனவே இம்மரபுரிமை சின்னங்கள் பேணி எமது பண்பாடு, கலாசாரம், வாழ்க்கை முறை என்பவற்றை சமூகத்துக்கு எடுத்துக் காட்டுதல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே இவ் ஆய்வானது அமைந்துள்ளது.

உசாத்துணை

அறுவர்., (1973). தமிழ்நாடு அரசு, தொல்பொருள் ஆய்வுத்துறை.

அப்பாத்துரைப்பிள்ளை.கே.,(1941). திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

அன்புதேவா.கொ.அ., (1987). இந்தியாவின் போன்கார்-லேவின்,கி.ம, வரலாறு.

அருள்மொழி.ஈ.க.., (2008). பூம்புகார், ஆழ்கடல் அகழ்வைப்பகக் கையேடு

இராஜவேலு.சு, திருமூர்த்தி.கே., (1995). தமிழ்நாட்டுத் தொல்லியல் அகழாய்வுகள், பண்பாட்டு வெளியீட்டகம், சென்னை.

சொக்கலிங்கம்.கு., (2009), இந்து நாகரிகம் குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

தங்கமணி.கெ.டி.கே., (1988),"மணிமேகலை பற்றி", நியு செஞ்சரி புக் ஹவுஸ், சென்னை.

திருகூடசுந்தரம்.பொ.,(1967),"சிலப்பதிகாரம்", அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.

50

திருவாசகத்தில் விளையாட்டும் சமூகப் பார்வையும்

ப. செல்லியம்மாள்
தமிழ்ப் பேராசிரியர், எம் ஐ டி வளாகம்,
அண்ணா பல்கலைக்கழகம், குரோம்பேட்டை. சென்னை.
selvimurugan8136@gmail.com

விளையாட்டுக்கள் மன மகிழ்ச்சிக்கும் உடல் வளர்ச்சிக்கும் உதவுவன. போட்டி மனப்பான்மையைத் தூண்டி ஆளுமைப் பண்பை மேலோங்கச் செய்பவை. விளையாட்டுக்களில் பல்வேறு வகையான விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. இவை வாழ்க்கைக்குப் பெரிதும் பொருந்துவனவாக உள்ளன. இதனையே வள்ளுவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றி கொட்டி கொளல். (குறள் 401)

அன்றாட வாழ்வியல் சிக்கலைக் களைவதற்கும் தெளிவான முடிவுகளை எடுப்பதற்கும் பிரச்சினைகளைச் சமாளிக்கவும் விளையாட்டுக்கள் உதவுகின்றன. இவ்விளையாட்டுக்கள் வயதுக்கும் மனநிலைக்கும் ஏற்ப மாறுபடுகின்றன. சிறுவர் விளையாடுவன. ஆண்கள் விளையாடுவன, பெண்கள் விளையாடுவன எனப் பல்வேறு வகைகள் உள்ளன.

விளையாட்டுக்கள் உள்ளத்தை உவகைகொள்ளச் செய்கின்றன் உடல் வலிமை பெற உதவுகின்றன, உணர்வுகளுக்கு ஊட்டம் தருகின்றன, மகிழ்ச்சிக்குக் கருவியாகவும் விளையாட்டுக்கள் அமைகின்றன. தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றான பிள்ளைத்தமிழில் பருவத்திற்கேற்ற விளையாட்டுக்கள் கூறப்படுகின்றது.

பொதுவாக விளையாட்டுக்களை வெறுப்பவர்கள் இருக்க முடியாது. பக்தி இலக்கியமாகிய திருவாசகத்தில் மாணிக்கவாசகர் அம்மானை, திருச்சுண்ணம், தெள்ளேணம், சாழல், உந்தி பறத்தல், தொள்நோக்கம், ஊசல், பந்து முதலான விளையாட்டுக்களைக்

குறிப்பிட்டுப் பாடியுள்ளார். விளையாட்டுக்கள் பற்றியும் விளையாட்டுக்களில் பொதிந்துள்ள சமூக நோக்கங்கள் குறித்தும் ஆய்வதாக இக்கட்டுரையானது அமைகிறது.

விளையாட்டின் வழியாக கற்றல் போதிக்கப்படுகின்றது. அதன் மூலம் மத நல்லிணக்கம் கடைப்பிடிக்கப்பட்டு நாகரிகத்தை ஏற்படுத்துவதாகவும் அன்று முதல் இன்றுவரை விளையாட்டுக்கள் வளர்ந்து வருகின்றன. விளையாட்டுக்கள் மூலம் வீரம், ஊக்கம், உழைப்பு, நட்பு, இரக்கம், நேர்மை, அறம் என்று அனைத்துப் பண்புகளும் கற்றவர்கள் கல்லாதவர்கள் என்ற பாகுபாடு இன்றி ஒவ்வொருவரின் உள்ளத்துக்குள்ளும் குடிகொள்கின்றது.

இன்றைய சூழலில் புற விளையாட்டுக்கள் குறைந்து அக விளையாட்டுக்கள் மிகுந்து வருவதைக் காண முடிகிறது. இதுவே இன்றைய மாணவர்களின் மன அழுத்தத்திற்கு முக்கிய காரணமாக அமைகிறது. எதையும் எதிர்கொள்ளும் ஆற்றல் குறைந்து விடுகிறது. நம் முன்னோர்கள் யாவற்றையும் பல உலக நன்மை கருதியே செயல்படுத்தி உள்ளனர் என்பதை இத்தருணத்தில் உணர முடிகிறது.

இந்நிலையில், திருவாசகத்தில் சொல்லப்பட்ட விளையாட்டுக்கள் அனைத்தும் பெண்களை மையப்படுத்தி அமைந்துள்ளமையை ஆய்வதாகவும் பெண்களின் மதிநுட்பம் குறித்து ஆய்வதாகவும் இவ்வாய்வு அமைகிறது.

51

சங்ககால இலக்கியங்கள் கூறும் பண்டைத் தமிழர்களின் தோற்கருவிகள்

பொடிமாத்தையா வேணுகா
முனைவர் பட்ட ஆய்வாளர்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
venu.venuga@gmail.com

அறிமுகம்

கலைகள் இன்றி ஆத்மார்த்த ரீதியான மனித வாழ்வு முழுமை பெற முடியாது. இக்கலைகள் எல்லோரையும் மகிழ்விக்கும் தன்மை வாய்ந்தவையாகும். ஆதி காலத்து மனிதன் நாகரிகம் அடைந்து நற்பண்பு பெற்ற காலம் முதல் இசைக்கலை வளர்ந்து வருகிறது. மனிதன் படிப்படியாக வளரத் தொடங்கிய போது இயற்கையாக காடுகளில் கிடைக்கும் மூங்கில்கள், விலங்குகளின் தோல்கள் போன்றவற்றைக் கொண்டு அவனது தனிப்பட்ட இரசனைக்கு ஏற்ப இசைக்கருவிகளைச் செய்ய முற்பட்டான். இவ் இசைக்கருவிகின் பயன்பாடு காலப்போக்கில் மனித வாழ்வில் இசையில் தொடங்கி இசையோடு முடிவதனை -குழந்தையின் பிறப்பில் தாலாட்டுத் தொடங்கி, மனிதரின் இறப்பு ஒப்பாரியில் முடிவது வரை காணமுடிகின்றது. உலக பேரிலக்கியங்களோடு ஒப்பிடத்தக்க உயர்வு பெற்றுத் திகழ்பவை சங்க இலக்கியங்களாகும். சங்க இலக்கியங்கள் பதினெண் மேல்கணக்கு நூல்கள் என அழைக்கப்படுகிறது. அவை பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும் ஆகும். இசை உணர்வின் எழுச்சியால் இசைப்பாடல்கள் தோன்றுகின்றன. சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் பண்டைத் தமிழரின் இசைப் புலமையை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன. சங்க இலக்கியங்களின் ஊடாக சங்க காலத்தில் வழக்கில் காணப்பட்ட பல வகையான இசைக் கருவிகளைப் பற்றி நாம் அறியக்கூடியதாக உள்ளது. அந்த வகையில் இவ்வாய்வுக் கட்டுரையானது 'சங்ககால இலக்கியம் கூறும் பண்டைத் தமிழரின் தோற்கருவிகள் எனும் தலைப்பில் அமைகிறது.

தோலால் போர்த்தப்பட்ட கருவிகள் தோற்கருவிகள் என்று அழைக்கப்படுகின்றன. இசையில் உயிராகக் கருதப்படும் தோற்கருவிகள் பல உள்ளன. முழவு, முரசு, தண்ணுமை, பறை, துடி, பம்பை, கிணை, தடாரி, தவில் போன்றவை அனைத்தும் வீரத்தை உணர்த்த, செய்தியை அறிவிக்க, கிளிகளை விரட்ட, வெறியாடல் நிகழ்த்த, வெற்றியை அறிவிக்க என்று பலவற்றிற்கும் தோற்கருவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. தோற்கருவிகள் இசைக்குத் துணையாகவும் செய்திகளை ஓரிடமிருந்து மற்றோரிடம் அனுப்புவதற்கும் பயன்பட்டன. முற்காலத்தில் தோற் கருவிகளின் துணை கொண்டு ஒரு மலையிலிருந்து மற்றொரு மலைக்குச் செய்தியை அறிவிப்பதற்காகப் பயன்படுத்தியுள்ளனர். இதன் மூலம் பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள மக்களுக்கும் செய்தியை அறிவித்திருந்தனர். மேலும் போர் நிகழப் போவதை அறிவிக்கவும், போர்நிறுத்தத்தை அறிவிக்கவும், அரசனின் ஆணையை அறிவிக்கவும், வெள்ளப்பெருக்கு போன்ற ஆபத்தான செய்திகளை அறிவிக்கவும்; தோற்கருவி பயன்பட்டது. மேலும் இசைக்கு உதவியாகவும் நடனத்திற்குத் துணையாகவும் இசை, நடன நிகழ்ச்சிகளில் தோற் கருவிகள் பயன்படுத்தப்பட்டன. கோயில்களில் இறைவழிபாடு நடைபெறும் பொழுது, குறிப்பாக கோயில்களில் இருந்து இறைவன் பவனி வரும் போதும் இறைவனுக்கு ஆராதனை நிகழ்த்தும் போதும் தோற்கருவிகள் வாசிக்கப்படுகின்றன. சில தோற்கருவிகளின் மூலம் தினைப் புலத்தை கொள்ளையிட வரும் பறவைகளையும் விலங்குகளையும் ஒலி எழுப்பி விரட்டி அடித்துள்ளனர். இந்த தோற்கருவிகளை தயாரிக்கும் போது மிகுந்த கவனத்துடன் இருந்துள்ளனர். அதன் ஒலிகளுக்கு ஏற்ப பல்வேறு தோல்களைப் பயன்படுத்தியுள்ளனர். இந்தத் தோற்கருவிகளை தயாரிக்க ஆவின் உடைய வஞ்சித தோல், இறந்த பசுவின் தோல், மான்தோல் போன்ற தோல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனை மலைபடுகடாத்தில்

'மான் தோல் சிறு பறை கறங்கக் கல்லென
வான்தோய் மீமிசை அயரும் குரவை'

(மலைபடுகடாம்,அடிகள் 321-322)

என்ற இப்பாடலின் மூலம் மான் தோலையும் தோற்கருவிகளுக்கு போர்த்த பயன்படுத்தினர் என்பது புலனாகிறது.

அகநானூற்றில்,

'ஓடா நல்ஒற்று உரிவை தைஇய
ஆடுகொள் முரசம் இழுமென முழங்க'

(அகநானூறு, பாடல், 334 1-2)

என்ற பாடலடி தோற்கருவிகள் புலியோடு போரிட்டு வென்ற காளையினது தோலால் செய்யப்பட்டது என்பதை விளக்குகிறது.

முரசு

தோற்கருவிகளுள் முக்கியமாக முரசு என்ற கருவி பயன்பட்டு வந்தது. அரசனுடைய வெற்றிச் சின்னங்களில் முரசும் ஒன்றாகும். இக் கருவியானது பெரிய உருவில் அமைந்த கொட்டாகும். கண்ணை மூடி உள்ள தோலாலும் இறுக்கிக் கட்டப்பெற்ற தோல் வாராலும் முரசு செய்யப்பட்டது. குறந்தடி கோல் கொண்டு முரசினை முழக்கம் செய்தனர். முரசு பல வகைப்படும். அவற்றுள் முக்கியமானது அரசவை முரசு. இதைப் பகை மன்னரின் காவல் மரத்தால் செய்திருப்பர் என்று பதிற்றுப்பத்து கூறுகின்றது.

'கடம்பறுத் தியற்றிய வலம்படு வியன்பணை
ஆடுநர் பெயர்த்துவந் தரும்பனி தூஉய்க்
கடிப்புக் கண்ணுறா உந்தொடித் தோளியவர்'

(பதிற்றுப்பத்து, பாடல், 17: 5-7)

பகைவனின் காவல் மரமாகிய கடம்ப மரத்தை அறுத்து அதைக்கொண்டு வெற்றியைத் தரும் அகலமான முரசும் செய்தனர். பகைவரை வெல்லும் வீரர்கள் அம்முரசை மலர் தூவி வழிபடுவர். முரசு அடிப்போர் தோள் வளை அணிந்து தம் கோலினால் அடித்து முழக்குவர்.

'திண்பிணி முரசம் இழுமென முழங்க
சென்றமர் கடத்தல் யாவது'

(புறநானூறு பாடல், 93: 1-2)

என்ற புறநானூற்றுப் பாடல் போர்முரசின் பாங்கை விளக்குகின்றது. இது இழுத்துக் கட்டப்பெற்ற வாரால் அமைந்தது. வீர உணர்வை ஊட்டவல்லது என்று கூறப்பட்டுள்ளது.

முழவு

முழவு பலாப்பழம் போன்றும் பனை மரத்தின் அடிப்பகுதி போன்றும் காணப்பட்டது என்று உவமைகளால் புலவர்கள் விளக்கிக் காட்டியுள்ளனர்.

'முழவு முதல் அரைய தடவு நிலைப் பெண்ணை'
(குறுந்தொகை, பாடல் 301:1)

இதில் பெரிய பனை மரத்தின் அடிப்பாகத்தை உடையது முழவு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பனை மரத்தடி, பலாப்பழம் ஆகியவற்றைக் கொண்டு ஒப்புமையாகக் கூறப்படுவதால் முழவு மிகப் பெரியதாக இருந்திருக்க வேண்டும் என்று கருத முடிகின்றது. விழாக்காலங்களில் முழவு சிறப்பாக முழங்கப் பெற்றுள்ளதை,

'பெரிதும் சான்றோர் மன்ற விசிபிணி
முழவுக்கண் பலரா விழவுடை ஆங்கண்'
(நற்றிணை, பாடல், 220: 5-6)

பெரிய மயக்கமுற்றவர்களாக இருந்த ஊரினர் திருவிழாக்காலங்களில் நன்கு இறுகக் கட்டிய முழவினை ஒலித்துள்ளனர் என்று இந்த நற்றிணை பாடல் சுட்டி நிற்கின்றது.

பலவிதமான இசைக் கருவிகளுக்கு முழவு உறுதுணையாக நின்று உள்ளது என்பதை, 'விசிப்பிணிக் கொண்ட மண்கனை முழவின்

பாடினி பாடும் வஞ்சிக்கு'
(புறநானூறு, பாடல் 15: 23-24)

என்ற புறநானூற்றுப் பாடல் மூலம் உணர முடிகின்ற

தட்டை

தட்டை என்பது தினைப்புல காவலில் கிளிகள் முதலான பறவைகளை விரட்டுவதற்காக அடித்து முழக்கப்படும் கருவியாகும். நற்றிணையில் இரு பாடல்களில் தட்டையைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

'செவ்வாய் பாசினம் கடி இயர் கொடிச்சி
அவ்வாய்த் தட்டையொடு அவணை ஆக என'
(நற்றிணை, பாடல், 134: 4-5)

சிவந்த வாயை உடைய பசுங்கிளி கூட்டத்தினை ஓட்ட அழகு பொருந்திய பெண்கள் தட்டையைத் தட்டிக்கொண்டு தினைப்புனத்தினைக் காத்துள்ளனர்.

'செவ்வாய் பாசினம் கவரும் என்று அவ்வாய்த்
தட்டையும் புடைத்தனை கவனணயும் தொடுக்க என'
(நற்றிணை; 206: 3-4)

தினைக் கொல்லையில் கதிர்களை உண்ணக் கருதி கிளிக்கூட்டம் வரும். அவற்றைத் தட்டையை வாசித்து விரட்டினர் என்பதை இப்பாடல் அடிகள் குறிப்பிடுகின்றன.

தண்ணுமை

பண்டைய காலத்தில் தண்ணுமை மிகச்சிறந்த தாள இசைக் கருவியாக விளங்கியுள்ளது. தண்ணுமையை போர்க் களத்தில் முழக்கியுள்ளனர். அந்த இசை முழக்கத்தைக் கேட்டுப் போர் வீரர்கள் வீறுகொண்டு வேட்கையுடன் போராடியுள்ளனர். இக்கருவியைப் பற்றிப் புறநானூறு பாடல் ஒன்று விளக்கியுள்ளது.

'மறப்படை நுவலும் அரிக்குரல் தண்ணுமை
இன்னிசை கேட்ட துன்னரு மறவர்
வெற்றி தரும் வேட்கையர் மன்றம் கொண்மார்
பேரமர் உழந்த வெருவெரு பறந்தலை'
(புறநானூறு, பாடல், 270: 8-11)

தண்ணுமையின் அரித்த குரல், வீரர்களைப் போருக்கு அழைக்கிறது. அதன் ஒலி அவர்களுக்கு வீரமுறுக்கு ஏற்றுகிறது. அவர்கள் தம்மை மறந்து போருக்கு முந்துகின்றனர். போரில் வெற்றிபெற துடித்து எழுகின்றனர். இவ்வாறு தண்ணுமை குரலில் வெறியூட்டும் ஆற்றல் இங்கு குறிப்பிடப்படுகிறது.

துடி

உடுக்கு அல்லது உடுக்கையே துடி ஆகும். இக்கருவி மரத்தால் செய்யப்பட்டது. அதன் இரு கண்களும் தோலால் மூடப்பட்டு தோல் வாரால் இழுத்துக் கட்டப்பட்டிருக்கும். உடுக்கு என்ற கருவியே துடி என்று அழைக்கப்பட்டதை பொருநராற்றுப்படை,

'துடியடி யன்ன தூங்குநடை குழவியொடு

பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்கென'
(பொருநராற்றுப்படை ,அடிகள், 125 -126)

எனும் அடிகள் மூலம் அறிய முடிகிறது.

கிணை

இரு கண்களிலும் அடித்து இயக்கப்படும் தாள இசைக்கருவி கிணை ஆகும். இதனை இசைப்போரை 'கிணைவர்' என்று அழைத்தனர். சங்க காலத்தில் மிக முக்கிய கருவியாக 9 கிணை விளங்கியது. அழகிய கண்களை உடைய கிணையை அதிரும்படி அடித்து இசை எழுப்பியுள்ளனர்.

'அங்கண் மாக்கிணை அதிர வொற்ற'
(புறநானூறு ,பாடல் , 373 :31)

என்று புறநானூற்று அடி விளக்குகிறது. போர்க்களத்தில் பல்வேறு இசைக்கருவிகள் முழங்கப்படும். அதனிடையே இணையர் தங்கள் கருவியைத் தட்டிப் பாடியுள்ளனர்.

'பாடின் தெண்கிணை பாடுகேட்டஞ்சிய போரடு தானை'
(அகநானூறு, பாடல், 226: 15-16)

கிணைவரின் பாடலை கேட்டு எதிரிப்படை அஞ்சி நடுங்குகிறது. கிணை இழுத்துக் கட்டப்பட்டுள்ள வாரை உடையது. இதன் ஒலி இனிமையானது. பாடி, பரிசில் பெறும் இரவலர்கள் நாள்தோறும் கிணையை வாசித்துக் கொண்டு திரிந்தனர் என்று கூறப்பட்டுள்ளது.

பறை

பறை என்னும் தோற்கருவி மிகத் தொன்மையானது. அரசு அறிவிப்புகளை மக்களுக்குத் தெரியப்படுத்த பறையடிக்கும் வழக்கம் முற்காலத்தில் இருந்தது. குறிஞ்சி நிலத்திற்குத் தொண்டகப்பறை, முல்லை நிலத்திற்கு ஏறுகோட்பறை, மருத நிலத்திற்கு நெல்லரி பறை, நெய்தல் நிலத்திற்கு மன்கோட்பறை, பாலை நிலத்திற்கு கோட்பறை என்று ஐவகை நிலத்துக்கும் ஐவகைப் பறைகள் கூறப்பட்டுள்ளன. முருகனுக்கு நிகழ்த்தப்படும் பூசையில் கிணைப்பறையை ஒலித்தும் முரசினை ஒலித்தும் பாடல்கள் பாடப்பட்டுள்ளன எனும் செய்தியை,

'ஊழ் உற முரசின் ஒலி செய்வோரும்'

(பரிபாடல் ,பாடல்,8:81)

எனும் பரிபாடல் அடி வெளிப்படுத்துகின்றது. இவ்வாறு தொன்மை மிகு தோற்கருவியான பறை இன்றும் வழக்கில் உள்ளது.

தவில்

தவில் பீப்பாய் வடிவான ஒரு கருவி. ஒரு மரத்துண்டைக் குடைந்து செய்யப்படுவது. இரண்டு பக்கங்களிலும் தோலால் போர்த்தப்பட்டிருக்கும். சணல் கயிற்றால் ஆன வளையங்கள் அத் தோலைச் சுற்றியிருக்கும். ஆறு அல்லது ஏழு மூங்கில் குச்சிகள் ஒன்றாக இணைத்துக் கட்டப்பட்டிருக்கும். ஒன்றோடு ஒன்றாக இணைக்கப்பட்ட தோல்வார்களால் வளையங்கள் இணையும்.

திறந்தவெளி இசை நிகழ்ச்சிகளில் தவில் தோளில் தொங்க விடப்பட்டிருக்கும். வாசிப்போர் முன் பக்கமாகத் தொங்கவிட்டுக் கொண்டு நின்று கொண்டே வாசிப்பர். தவில் கோயில் மேளவாத்தியங்களில் ஒன்று. அது பூசை காலங்களிலும் உற்சவங்களிலும் திருமணம், பண்டிகை முதலிய சடங்குகளிலும் கொட்டப்படுகின்றது.

முடிவுரை

'சங்ககால இலக்கியங்கள் கூறும் பண்டைத் தமிழர்களின் தோற்கருவிகள்' என்ற தலைப்பில் இவ் ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது. சங்ககாலத்துக்கு முற்பட்ட காலத்திலும் அதற்கு பிந்திய காலத்திலும் பல்வேறு இசைக்கருவிகளின் பயன்பாடுகள் காணப்பட்ட போதும் இந்த ஆய்வானது சங்க இலக்கியப் பாடல்களை அளப்படையாகக் கொண்டு அவற்றில் இடம் பெறுகின்ற தோற்கருவிகள் பற்றி மட்டுமே ஆராயப்பட்டுள்ளது. இவ் இலக்கியங்களில் ஏராளமான இசைக்கருவிகள் பண்டைய மக்களின் பயன்பாட்டில் இருந்துள்ளமையும் தெரிய வருகின்றது.

இவ் ஆய்வின் மூலம் பண்டைய காலத்தில் காணப்பட்ட தோற்கருவிகள் பற்றி அறியக் கூடியதாக உள்ளது. ஒலியை ஓர்ந்து அறியும் ஆற்றலும் காலக்கட்டுக்குள் அதை முறையாக அடக்கி ஆளும் திறனும் நுட்பமாகப் பெற்ற தமிழர்களின் இசைப்புலமையை சங்ககால இலக்கியங்களைக் கொண்டு

அறியமுடிகின்றது. சங்ககால மக்கள் இயற்கையிலிருந்து எழும் ஒலிகளைக் கேட்டு அவற்றின் இனிமையைச் சுவைத்து பல்வேறு இசைக்கருவிகளைக் கண்டுபிடிக்கும் திறமையுடையவர்களாக விளங்கியுள்ளனர். இவையே தற்கால இசைக்கருவிகள் தோன்றுவதற்கு அடித்தளமாக அமைந்துள்ளன.

துணை நூல்கள்

அடைக்கலசாமி. எம்.ஆர். (1960). தமிழ் இலக்கிய வரலாறு. ராசி பதிப்பு. சென்னை. முதற்பதிப்பு.

ஆளவந்தார். ஆர். (1985). தமிழர் தோற்கருவிகள். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். சென்னை முதற்பதிப்பு.

இராமநாதன். லெ.பெ. (1973). எட்டுத்தொகைச் செல்வம். முத்தையா நிலையம். சென்னை, முதற்பதிப்பு.

இராமநாதன். லெ.பெ.(1971). பத்துப்பாட்டு வளம். முத்தையா நிலையம். சென்னை. முதற்பதிப்பு.

தேவகி.ம (1997) தமிழிசை அரங்க கருவிகள். ஜெயராம் பிறஸ்.

வள்ளியம்மை. மு.(2008). ஐங்குறுநூறு ஆய்வுக்கோவை. குறிஞ்சிப் பதிப்பகம். மதுரை. முதற்பதிப்பு.

52

நாட்டிய நாடக வளர்ச்சியில் அரச பாடசாலைகளின் பங்களிப்பு

சுமிதா பிரசாந்தன்
Government Teachers' College, Kotagala, Sri Lanka
sumithanesan@gmail.com

கலாநிதி நீலங்கா லியாங்கே
Department of Dance, Drama & Theatre
Swami Vipulananda Institute of Aesthetic Studies (SVIAS),
Eastern University, Sri Lanka. nilankal@esn.ac.lk

அறிமுகம்

பாடசாலைகளில் பரதநாட்டியகலைக் கற்பிக்கப்படுவதுடன் இணைந்த செயற்பாடுகளாக நாட்டிய போட்டிகள், ஆற்றுகைகளுக்கான வாய்ப்புக்கள், பாடசாலை சார்ந்த நிறுவனங்களில் நடைபெறும் ஆற்றுகை நிகழ்வுகள், கலை விழாக்கள் எனப் பல்வேறு நிகழ்வுகளில் நாட்டிய நாடகங்கள் ஆற்றுகை செய்யப்படுகின்றன. மாணவப் பருவத்தில் பரதநாட்டியக் கலையினை வளர்த்துக் கொள்வதில் வகுப்பறைக் கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளைத் தாண்டி மாணவர்களுக்கு நாட்டிய நாடகங்களில் பங்குபற்றக் கிடைக்கும் வாய்ப்புக்கள் பரதநாட்டியக் கலை வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்துகின்றமையை பின்னணியாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பரதநாட்டியம் என்பது நாட்டியம், நிருத்தம், நிருத்தியம் என்று மூன்று பிரிவுகளைக் கொண்டது. பாவ இராக தாள சேர்க்கையில் பரதம் அல்லது கூத்துப் பிறக்கிறது. தமிழ் இலக்கியங்களில் நடனம் கூத்து, ஆடல், நடம், நிருத்தம் என்ற சொற்களால் குறிக்கப்பட்டது. இன்று நடனக் கலையைச் சமூகத்தில் உள்ள அனைத்துப் பிரிவினரும் கற்றுத் தேறலாம், அதனை ஒரு தொழிலாகக்

கொள்ளலாம் என்ற நிலை உருவாகியுள்ளது. பரதநாட்டியக் கல்வி என்பது பரதக்கலையின் வளர்ச்சியை உள்ளடக்கியது, இது பார்வைக்கும் செவிக்கும் விருந்தளிக்கும் கலைவடிவமாகும். இக்கலைவடிவம் படைப்பாற்றல் தன்மையுடையது என்பதுடன் கற்பனை, கற்பனைச் சிந்தனை, உணர்ச்சி, உணர்வு, ஆன்மீகத் தேவைகளை உருவாக்குதல் போன்றன இதில் உள்ளடங்கியுள்ளன. பிள்ளைகளின் இயற்கையான திறன்களை வளர்ப்பதற்கும் பரதநாட்டியச் செயற்பாடுகள் பற்றிய ஆழமான விழிப்புணர்வுக்கான நிலைமைகளை உருவாக்குவதற்கும் முறைசார்ந்து ஈர்ப்பது அவசியம் (Butler J.1988).

நாட்டிய நாடகங்களில் பழமையான மரபுகளைக் கண்டுணர்ந்தும் புதுமைப் போக்குகளை வெளிப்படுத்தியும் நாட்டுப்புற வடிவங்களே நாட்டிய நாடகமாக செவ்வியலாக்கம் பெற்றுள்ளன என்பதை இவ் ஆய்வு வெளிப்படுத்தி நிற்கின்றது.

இந்த ஆய்வில் நாட்டிய நாடகத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றி ஆராய்ந்துள்ளதுடன், நாட்டிய நாடகங்களின் ஆடலும் பாடலும் தொடர்பான உட்கூறுகள் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. இங்கு இவ் ஆய்வுக்கான முற்தரவுகள் காணப்பட்டாலும் இலங்கையில் நாட்டிய நாடகம் தொடர்பில் ஆராயப்படவில்லை என்பது இந்த ஆய்வுக்கான அவசியத்தினை வெளிப்படுத்தி நிற்கின்றது (கற்பகம். செ:2005).

இலங்கைப் பாடசாலைகளில் பரதநாட்டியக் கலையின் அங்கமாகக் காணப்படும் நாட்டிய நாடகங்கள் பற்றிய முழுமையான ஆய்வுகள் இதுவரை இடம்பெறவில்லை. இதனால் இவ் ஆய்வு முக்கியத்துவமுடையதாகக் காணப்படுகின்றது.

பாடசாலைகளில் நாட்டிய நாடகங்கள் பற்றிய ஆய்வு அதன் உள்ளார்ந்த கலை மற்றும் கலாசார மதிப்பிற்காக மட்டுமல்லாமல், இலங்கைச் சமூகம், வரலாறு மற்றும் அடையாளத்தின் சிக்கல்களைப் புரிந்துகொள்வதில் அதன் பரந்த தாக்கங்களுக்கும் இவ் ஆய்வு முக்கியத்துவமுடையதாகும்.

இவ் ஆய்வில் எண்ணக்கரு சார்ந்து நாட்டிய நாடகங்கள் தொடர்பில் பல்வேறு பண்பாடு சார்ந்த ஆடல்கள் காணப்பட்டாலும் இங்கு இலங்கையில் உள்ள தமிழ்மொழி மூலமான அரச

பாடசாலைகளில் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள நுவரெலியா கல்வி வலயத்திற்குள் காணப்படும் பாடசாலைகளில் பரதநாட்டியப் பாடத்தினைக் கற்பிக்கும் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வு அமையப்பெறுகின்றது. ஆய்வின் தேவை கருதி ஆய்வின் கால எல்லை கடந்த பத்தாண்டுகளை கால வரையறையாகக் கொண்டு (2014 தொடக்கம் இன்றுவரை) மேற்கொள்ளப்படுகின்றது.

ஆய்வுப் பிரச்சினை

பாடசாலைகளில் பரதநாட்டியக் கலை வளர்ச்சியில் நாட்டிய நாடகங்களின் பங்கு தெளிவாக வெளிக்கொணரப்படவில்லை என்பது இங்கு ஆய்வுப் பிரச்சினையாகக் கொள்ளப்படுகின்றது.

ஆய்வின் நோக்கங்கள்

நாட்டிய நாடக உருவாக்கத்தில் அரச நிறுவனங்களின் பங்களிப்பு எனும் இவ் ஆய்வானது பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது:

- பாடசாலைகளில் நாட்டியக் கலை வளர்ச்சியில் நாட்டிய நாடகத்தின் பங்கினைக் கண்டறிதல்
- நாட்டிய நாடக உருவாக்கத்தில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்களை இனங்காணல்

ஆய்வு முறையியல்

இந்த ஆய்வானது அளவைநிலை ஆய்வாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆய்வுச் செயன்முறையின் பொருத்தப்பாட்டினைத் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளும் நோக்குடன் ஆய்வாளனால் தரவு சேகரிப்பு, பகுப்பாய்வு, ஒழுங்கமைத்தல், நியாயித்தல் மூலம் உண்மையை அறிவதற்கான சிறந்த அணுகுமுறையாக பண்பு ரீதியான ஆய்வு, அளவு ரீதியான ஆய்வு ஆகிய இரு ஆய்வு அணுகுமுறைகளும் பிரயோகிக்கப் படுகின்றது. இந்த ஆய்வின் மாதிரிகளாக நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள நுவரெலியா கல்வி வலயத்தில் கடமையாற்றும் பரதநாட்டியப் பாடத்தினைக் கற்பிக்கும் 23 ஆசிரியர்களும் அழகியல் பாடத்துக்கான சேவைக்கால ஆசிரிய

ஆலோசகர்களும் ஆய்வாளரால் மாதிரிகளாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆய்வின் நோக்கத்தை அடைந்துகொள்வதற்காகத் தரவுகள் பண்புசார் நுட்ப முறைகளைப் பயன்படுத்தியும் கணிய நுட்ப முறைகளைப் பயன்படுத்தியும் புள்ளிவிபரப் பகுப்பாய்வு முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் கொடுக்கப்பட்டு வியாக்கியானம் செய்யப்படுவதுடன் பகுப்பாய்வும் அவற்றுக்கான பொருள் கூறலும் இடம்பெற்றுள்ளது. முதலாம் நிலைத்தரவுகள் (வினாக்கொத்து, குழுகலந்துரையாடல்) மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் (வலயமட்ட ஆவணங்கள்) கணினி மென்பொருட்களைப் (SPSS 29) பயன்படுத்தி பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

முடிவும் கலந்துரையாடலும்

அட்டவணை 1: பாடசாலைகளில் நாட்டியக் கலை வளர்ச்சியில் நாட்டிய நாடகத்தின் தற்போதைய நிலை தொடர்பான பகுப்பாய்வு

பரிமாணம்	N	Mean	Std. Deviation
மாணவர் பங்களிப்பு	23	2.64	.653
பாடசாலை நிர்வாகப் பங்களிப்பு	23	3.86	.899
மேடையமைப்புக்களின் வசதி	23	2.77	.992
பக்கவாத்தியக் கருவிகளின் வசதி	23	2.14	.683
ஏனைய பாட ஆசிரியர்களின் ஒத்துழைப்பு	23	2.59	.608
பெற்றோர் பங்களிப்பு	23	3.95	.699

ஆய்வில் பங்கேற்ற ஆசிரியர்களில் பெரும்பான்மையினர் பொருத்தமான மேடையமைப்புக்கள் இல்லை எனவும் (M=3.86,SD=.992) நாட்டிய நாடக ஆற்றுகைக்கான பயிற்சிகளில் ஈடுபடுவதற்காக பாடசாலை நிர்வாகப் பங்களிப்பு வழங்கப்படுவதில்லை எனவும் (M=3.95,SD=0.899) வலுவாக ஏற்றக்கொண்டுள்ளனர். மேலும், போதிய பாடவேளை ஒதுக்கப்படாமை, பக்கவாத்தியக் கருவிகளின் கிடைப்பனவு போதாமை, மாணவர் பங்குபற்றல், ஏனைய பாட ஆசிரியர்களின்

ஒத்துழைப்பின்மை, பெற்றோர்களின் பங்களிப்பு குறைவாக இருப்பதனையும் ஏற்றுக்கொண்டனர் என்பதனை மேலுள்ள தரவுகள் குறித்து நிற்கின்றன.

அட்டவணை 2: நாட்டிய நாடக உருவாக்கத்தில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பான பகுப்பாய்வு

பரிமாணம்	N	Mean	Std. Deviation
நாட்டிய நாடகப் போட்டிகளில் மாணவர்களை ஈடுபடுத்தல்	23	3.68	.893
நாட்டிய நாடக ஆற்றுகைகளுக்கான நிதிக் கிடைப்பனவு	23	4.64	.758
மாணவர்களை நாட்டிய நாடக பாத்திரங்களுக்குத் தெரிவுசெய்தல்	23	4.36	.727
தொடர் ஒத்திகைகளுக்கான வாய்ப்புக்கள்	23	4.18	.840
பக்கவாத்தியக் கலைஞர்களின் கிடைப்பனவு	23	4.36	.822

இந்த ஆய்வில் பங்கேற்ற ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் நாட்டிய நாடகப் போட்டிகளில் மாணவர்களை ஈடுபடுத்தல், நாட்டிய நாடக ஆற்றுகைகளுக்கான நிதிக் கிடைப்பனவு, மாணவர்களை நாட்டிய நாடக பாத்திரங்களுக்குத் தெரிவுசெய்தல், தொடர் ஒத்திகைகளுக்கான வாய்ப்புக்கள், பக்கவாத்தியக் கலைஞர்களின் கிடைப்பனவு நாட்டிய நாடக உருவாக்கத்தில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்பன காணப்படுவதனை வலுவாக ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இவ் ஆய்வில் ஆசிரியர்களுடனான குழுக் கலந்துரையாடல்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளின் அடிப்படையில் பின்வரும் முடிவுகள் கண்டறியப்பட்டுள்ளன. அதாவது, நுவரெலியா மாவட்டத்தில் காணப்படும் காலநிலையானது தொடர் பயிற்சிகளுக்குச் சவாலாகக் காணப்படுகின்றது என்பதனை வெளிக்காட்டுகின்றனர். மேலும், ஏனைய அழகியல் பாட ஆசிரியர்கள் நாட்டிய நாடக

ஆற்றுகைகளுக்குப் பயனுறுதிமிக்க பங்களிப்பினை வழங்குவதில் ஆர்வம் போதுமானதாக காணப்படவில்லை எனவும் பக்கவாத்தியங்களை இசைப்பதற்கான கலைஞர்கள் மாவட்டத்தில் போதியளவு காணப்படாமையால் வெளி மாவட்டங்களிலிருந்து பக்கவாத்தியக் கலைஞர்களை அழைக்கும்போது அவர்களுக்கான கொடுப்பனவுகளுக்காக அதிக நிதிச் செலவு ஏற்படுவதாகவும் வெளிப்படுத்துகின்றனர். அதிகமான மாணவர்கள் லயக்குடியிருப்புக்கள் சார்ந்தவர்களாக காணப்படுவதால் தொடர் பயிற்சிகளைத் தாமாக வாழ்விடங்களில் மேற்கொள்வதற்கான வாழ்வியல் சூழமைவு காணப்படவில்லை எனவும் ஆசிரியர்கள் கலந்துரையாடல்களில் வெளிப்படுத்தினர்.

சேவைக்கால ஆசிரியருடனான கலந்துரையாடலின் மூலமும் சில விடயங்கள் கண்டறியப்பட்டன. நுவரெலியா மாவட்ட காலநிலை பெரும் சவாலாக உள்ளமை, தமிழ்த் தினப்போட்டிகள் மற்றும் தேசியமட்டப் போட்டிகளிற்கு மாணவர்களை பங்குபற்றச் செய்வதில் ஆசிரியர்கள் தயங்குகின்றமை ஆகியன அவற்றுள் குறிப்பிடதக்கன என்று கூறுகின்றார். 25% ஆசிரியர்களே மாணவர்களைக் கலை நிகழ்வுகள் மற்றும் போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்கு ஆர்வமாக உள்ளனர் எனவும் கூறுகின்றார். அதிகமான மாணவர்கள் லயக்குடியிருப்புக்கள் சார்ந்தவர்களாக காணப்படுவதால் தொடர் பயிற்சிகளைத் தாமாக வாழ்விடங்களில் மேற்கொள்வதற்கான வாழ்வியல் சூழமைவு காணப்படாததனால் நாட்டிய நாடக ஆற்றுகைகளில் ஈடுபடுவதற்குத் தயங்குகிறார்கள் எனவும் குறிப்பிடுகின்றனர். அத்துடன் ஆவணக் கற்றாய்வின்படி இரண்டு பாடசாலைகள் தொடர்ச்சியாக நாட்டிய நாடக உருவாக்கத்தில் ஈடுபடுவது தெரியவந்தது.

எதிர்காலத்திற்கான விதப்புரைகள்

நாட்டிய நாடக வளர்ச்சியில் அரச பாடசாலைகளின் பங்களிப்பு எனும் இவ் ஆய்வில் ஆய்வாளரால் பின்வரும் விதப்புரைகள் முன்வைக்கப்படுகின்றன. தொடர் பயிற்சிகளை வழங்குவதற்கான வசதிகளை ஏற்படுத்துதல், நுவரெலியா மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பக்கவாத்தியங்களை இசைக்கும் ஆர்வமுள்ள மாணவர்களை இனங்கண்டு நீண்ட கால நோக்கில் பயிற்சிகளை வழங்குதல், பாடசாலைகளில் தொடர்ச்சியாக கதை

சொல்லும் நாட்டிய முறைக்குள் நின்று நிகழ்வுகளை நடாத்தி மாணவர்களை பங்குபற்றச் செய்தல், மாணவர்கள் சுயமாக பயிற்சியில் ஈடுபடுவதற்கான வசதிகளைப் பாடசாலைகளில் ஏற்படுத்திக் கொடுத்தல், பெற்றோருக்கான விழிப்புணர்வினை ஏற்படுத்தி நாட்டிய நாடக ஆற்றுகைக்கான பங்களிப்புக்களை அதிகரித்தல், மாணவர்களின் ஆற்றுகை சார்ந்த ஆர்வத்தினை அதிகரிப்பதற்காகப் பாடசாலை மட்டத்தில் தொடர்ச்சியாக மன்ற நிகழ்வுகள் மற்றும் கலை நிகழ்வுகளில் மாணவர்களை பங்குபற்றச் செய்வதற்கான செயற்பாட்டுத் திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தல், ஏனைய மாவட்டங்களில் நாட்டிய நாடகங்களைச் சிறப்பாக ஆற்றுகை செய்யும் பாடசாலைகளை இனங்கண்டு அவர்களுடன் இணைந்து பயிற்சிகளை மேற்கொள்வதற்கான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல், பாத்திர வெளிப்பாடு மற்றும் அரங்க ஆற்றுகைகளுக்கான நாடகத்துறை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடன் இணைத்து பயிற்சிபெற வாய்ப்புக்களை கண்டறிந்து செயற்படுத்துதல் என்பன விதப்புரைகளாக முன்மொழியப்படுகின்றன.

உசாத்துணை நூற்பட்டியல்

கற்பகம், செ. (2005). நாட்டிய நாடகங்களில் பாடலும் ஆடலும். குகன் பதிப்பகம், திருவாரூர் மாவட்டம்.

கார்த்திகா, க. (1979). காலந்தோறும் நாட்டியக் கலை. எக்ஸ்பிறஸ் செய்தித்தாள் வெளியீடு, கொழும்பு.

Albright, A.C. (2010). Choreographing Difference: The Body and Identity in Contemporary Dance. Wesleyam, CT (Wesleyan University Press).

Blair S.N, Cheng Y, and Holder, S. (2001). Is physical activity or physical fitness more important in defining health related benefits? Medicine and Science in Sport and Exercise (379 - 399).

Jagadeeswari, S. (2015). "Comparative study on flexibility among yoga and Bharatanatyam practicing student". International Journal of Physical Education, Sports and Health, Kalapet, Pondicherry India. PP 01-04.

53

முதியோர்கள் எதிர்நோக்கும் உளப்பிரச்சினைகள் - ஓர் ஒப்பீட்டு ஆய்வு

சுலக்சி. வி, சனிசியா.செ, டிஜானா.ற
உளவியல் சிறப்புக்கலை மாணவி, மெய்யியற்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

கலாநிதி கஜவிந்தன். க
சிரேஷ்ட விரிவுரையாளர், மெய்யியற்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

ஆய்வின் அறிமுகம்

முதியோர்கள் எமது மூத்த குடிமக்கள் ஆவர். அவர்கள் தமது நீண்ட கால அனுபவத்தினால் எமக்கு நல்ல போதனைகளைப் புகட்டி சிறப்பான வாழ்வுக்கு வழிகாட்டுபவர்கள். அவர்களைப் பேணிப்பாதுகாப்பது நம் எல்லோருடைய தலையாய கடமையாகும். இன்றைய காலத்தில் அதிகரித்து வரும் சனத்தொகைக்கு ஏற்பவும் இறப்புக்களின் வீதம் குறைவடைந்து காணப்படுவதாலும் முதியோர்களின் குடித்தொகை அதிகரித்துக் கொண்டு வருகின்றது. இவ் அதிகரிப்பிற்கேற்ப முதியோர்களின் பிரச்சினைகளும் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. அந்த வகையில், முதியோர் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற் காகவே அக்டோபர் முதலாம் திகதியை உலக முதியோர் தினமாக கடந்த 1990 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச்சபை அறிவித்துள்ளது. அதன்படி ஒவ்வோர் ஆண்டும் இந்த நாள் உலக முதியோர் தினமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. முதியோர் சுகந்திரம், பங்களிப்பு, வயதானவர்களை மதித்தல் போன்றவை உலக முதியோர் தினத்தின் முக்கிய நோக்கங்களாகும். அந்த வகையில், முதியோர்களின் தேவைகள் முழுமையடைதலும், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு மட்டுமன்றி சமூக, கலாசார, அரசியல் ரீதியிலும் அவர்களின் பங்களிப்பு உறுதி செய்யப்படுதலும் வேண்டும்.

நாள் முழுவதும் கஸ்டப்பட்டு உழைத்துத் தமது பிள்ளைகளுக்காகவே வாழ்ந்த முதியோர்கள் ஓய்வாக இருக்கும் இக்காலப் பகுதியில்தான் தம் பிள்ளைகளுடன் இணைந்து வாழவும் உறவுகள், சமூகத்தினருடன் இணைந்து வாழவும் எண்ணுவர். அவர்களது அன்பிற்காகவும் பாசத்திற்காகவும் ஏங்குவர். ஆனால், பிள்ளைகள் தம் பெற்றோரை முதுமையான காலப்பகுதியில் அவர்களை சுமையாக கருதிப் புறக்கணித்துவிடுகின்றனர். மேலும், அவர்கள் உறவுகளினாலும் சமூகத்தினராலும் புறக்கணிக்கப் படுகின்றனர். முதியோரின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதில்லை. அவர்களைக் குடும்பத்தினரும் சமூகமும் ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. அவர்களின் கருத்துக்களை யாரும் செவிமடுப்பதில்லை. இவ்வாறான புறக்கணிப்பினால் முதியோருக்குத் தம்மைக் கவனிக்க யாருமே இல்லை என்ற ஏக்கம் ஏற்படுகிறது. இதனால் வெறுமையை உணர்தல், பயம், பதற்றம், மனச்சோர்வு காணப்படல், வாழ்க்கையில் விரக்தி ஏற்பட்டு இறப்புக்காகக் காத்திருத்தல், தன்னைப் பற்றியும் தான் வாழும் சூழல் பற்றியும் தெளிவில்லாத நிலை அடைதல் போன்றன ஏற்படுகின்றன. இவ் உளத்தாக்கங்களினால் அவர்கள் விரைவில் நோய்வாய்ப்பட்டு இறக்கவும் நேரிடுகின்றது. இந்நிலையில் எமது வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருக்கும் முதியோர்களின் உளப்பிரச்சினைகளை கண்டறிந்து அவர்களைப் பேணிப் பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தல் அவசியமானதாகும்.

ஆய்வுப் பிரச்சினை

உலகத்தின் பொக்கிஷங்களாகக் காணப்படும் முதியோருக்கு இக்காலப்பகுதி மிகவும் நெருக்கடிகளைக் கொடுப்பதாக உள்ளது. இக்காலப்பகுதியில் அவர்களுக்கு ஏற்படும் உடல், உள மாற்றங்களாலும் குடும்பத்தினரதும், சமூகத்தினரதும் புறக்கணிப்பினாலும் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அந்தவகையில், முதியோருக்கு ஏற்படும் உளப் பிரச்சினைகளைக் கண்டறிவதே இவ் ஆய்வின் நோக்கமாகும். மேலும், முதியோர் எந்தளவிற்கு முக்கியமானவர்கள் என்றும் அவர்களை ஒவ்வொருவரும் பேணிப்பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவும் நாம் முயலுகின்றோம்.

ஆய்வின் நோக்கம்

முதியோர்களின் உளப் பிரச்சினைகளைக் கண்டறிதல், முதியோரின் உளத்தாக்கத்துக்கும் பால்நிலைக்கும் இடையிலான தொடர்பை அறிதல், வீட்டில் வாழும் முதியோரினதும் முதியோர் இல்லத்தில் வாழும் முதியோரினதும் உளப் பிரச்சினைகளைக் கண்டறிதல், முதியோரின் உளப் பிரச்சினைகளில் பிள்ளைகளின் செல்வாக்கினை அறிதல் ஆகியவற்றை இவ்வாய்வு நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

கருதுகோள்

முதியோர்கள் பல்வேறுபட்ட உளப்பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர், முதியோர்களில் ஆண்களைவிட பெண்களே அதிகம் உளத்தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர், வீட்டில் இருக்கும் முதியோரைவிட முதியோர் இல்லத்தில் இருக்கும் முதியோரே அதிகம் உள ரீதியான பிரச்சினைகளுக்கு உள்ளாகின்றனர், முதியோர்கள் எதிர்நோக்கும் உளப் பிரச்சினைகளுக்குப் பிள்ளைகளே பெரும்பாலும் காரணமாக உள்ளனர் ஆகியவற்றை கருதுகோள்களாக முன்வைத்து இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

ஆய்வு முறையியல்

இவ் ஆய்வானது யாழ் மாவட்டத்தின் வேலணைப் பிரதேசத்தையும், கைதடி முதியோர் இல்லத்தையும் அடிப்படையாகக் கொண்டது. இவ் ஆய்விற்கு வேலணைப் பிரதேசத்தில் வாழும் முதியோர் பத்து (10) பேரும் கைதடி முதியோர் இல்லத்தில் வாழும் முதியோர் பதினைந்து (15) பேருமாக மொத்தம் 25 பேர் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்டு ஆய்விற்கு உட்படுத்தப்பட்டனர்.

தரவுப் பகுப்பாய்வும்

முதியோர்கள் எதிர்நோக்கும் உளப்பிரச்சினைகள் தொடர்பான விடயங்களும் நேர்காணல் மூலம் பெறப்பட்ட தரவுகளும் வினாக்கொத்துக்கள் மூலம் பெறபட்ட தரவுகளும் அளவியல், பண்பியல் அடிப்படையில் இங்கு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

அட்டவணை:- 01 ஆய்வுக்கு உட்படுவோர் பற்றிய விபரம்

ஆய்வுப் பிரதேசம்	மொத்த எண்ணிக்கை		ஆண்		பெண்	
	எண்ணிக்கை	வீதம்	எண்ணிக்கை	வீதம்	எண்ணிக்கை	வீதம்
வேலணைப் பிரதேசம் - வீட்டில் வாழ்வோர்	10	40%	6	24%	4	16%
கைதடி முதியோர் இல்லத்தில் வாழ்வோர்	15	60%	7	28%	8	32%
மொத்தம்	25	100%	13	52%	12	48%

வீட்டில் மற்றும் முதியோர் இல்லத்தில் வாழும் முதியோர் பற்றிய விபரம்



முதியோரின் உளப்பிரச்சினைகளை அறிவதற்காக ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட வேலணைப் பிரதேசத்தில் வாழும் முதியோர் மற்றும் கைதடி முதியோர் இல்லத்தில் வாழும் முதியோரில் மொத்த விகிதத்தில் 48% ஆனவர்கள் பெண்களாகவும் 52% ஆனவர்கள் ஆண்களாகவும் காணப்படுகின்றனர். மேலும், வீட்டில் வாழும் முதியோர்கள் 40% ஆனவர்களில் ஆண்கள் 24% ஆகவும் பெண்கள் 16% ஆகவும் காணப்படுகின்றனர். முதியோர் இல்லத்தில் வாழும் முதியோரில் 60% ஆனவர்களில் ஆண்கள் 28%ஆகவும் பெண்கள் 32% ஆகவும் காணப்படுகின்றனர்.

அட்டவணை:- 02 உளப்பிரச்சினைகளை எதிர்நோக்கும் முதியோர் பற்றிய விபரம்

ஆம்		இல்லை	
எண்ணிக்கை	வீதம்	எண்ணிக்கை	வீதம்
18	72%	7	28%

இங்கு ஆய்விற்காக எடுத்துக்கொண்ட முதியோர்களில் உளப்பிரச்சினைகளை எதிர் நோக்குபவர்களாக 72% ஆனோரும் உளப்பிரச்சினைகளை எதிர்நோக்காதவர்களாக 28% ஆனோரும் காணப்படுகின்றனர்.

இவ் ஆய்வுக்காக எடுத்துக்கொண்ட முதியோரில் 52% ஆனவர்கள்; ஆண்களாகவும் 48% ஆனவர்கள் பெண்களாகவும் காணப்படுகின்றனர். 52% ஆன ஆண்களில் 40% ஆனோருக்கு உளவியற்தாக்கங்கள் காணப்படுகின்றன. 12% ஆனோர் உளவியல் தாக்கங்களைக் கொண்டிருக்கவில்லை. பெண்கள் 48% ஆனோரில் 32% ஆனோருக்கு உளவியற் தாக்கங்கள் காணப்படுவதுடன் 16% ஆனோர் உளவியற் தாக்கங்களைப் பெரிதும் கொண்டிருக்கவில்லை.

அட்டவணை:- 04 முதியோரின் உளப்பிரச்சினைகளில் வாழ்விடம் தொடர்பான விபரம்

முதியோரின் அமைவிடம்	ஆம்		இல்லை	
	எண்ணிக்கை	வீதம்	எண்ணிக்கை	வீதம்
வீட்டில் வாழ்வோர்	8	32%	2	8%
முதியோர் இல்லத்தில் வாழ்வோர்	10	40%	5	20%

இவ் ஆய்வுக்காக எடுத்துக்கொண்ட முதியோரில் 40மூ ஆனோர் வீட்டில் வாழுகின்றனர். இவர்களில் 32மூ ஆனோர் உளப்பிரச்சினைகளை எதிர்நோக்குவோராகவும் 08%மானோர் உளப்பிரச்சினைகளை எதிர்நோக்காதவர்களாகவும் காணப் படுகின்றனர். முதியோர் இல்லத்தில் வாழும் 60% ஆன முதியோரில் 40%ஆனோர் உளப்பிரச்சினைகளை

எதிர்நோக்குவோராகவும் 20% ஆனோர் உளப்பிரச்சினைகளை எதிர்நோக்காதவர்களாகவும் காணப்படுகின்றனர்.



அட்டவணை:- 04 முதியோரின் உளப் பிரச்சினைகளில் பிள்ளைகளின் செல்வாக்குத் தொடர்பான விபரம்

ஆம்	இல்லை
68%	32%



இவ் ஆய்வுக்காக எடுத்துப்கொள்ளப்பட்ட முதியோர்களில் 68மூ ஆனோர் தாம் எதிர்நோக்கும் உளப்பிரச்சினைகளுக்கு பிள்ளைகளே அதிகம் காரணம் எனக் கூறியுள்ளனர். 32% ஆனோர் அதனை முற்றுமுழுதாக ஏற்க முடியாது எனக் கூறியுள்ளனர்.

கருதுகோள் பரிசீலிப்பு

இவ்ஆய்வில் நான்கு வகையான கருதுகோள்கள் முன்மொழியப்பட்டு பரிசீலிக்கப்பட்டன. அவற்றின் அடிப்படையில் முடிவுகள் பின்வருமாறு:

1. முதியோர் உளப்பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்

இதனை எமது ஆய்வின் அடிப்படையில் பார்க்கும்போது முதியோரில் அதிகளவானோர் உளப்பிரச்சினைகளை எதிர்நோக்கு பவர்களாக காணப்படுகின்றனர். ஏனெனில், நாம் ஆய்வுக்காக எடுத்துக்கொண்ட முதியோரில் 72% ஆனவர்கள் உளப் பிரச்சினைகளை எதிர்நோக்குபவர்களாக காணப்படு கின்றனர்.

2. முதியோரில் ஆண்களைவிட பெண்களே அதிகம் உளத்தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர்.

இதனை எமது ஆய்வின் அடிப்படையில் நோக்கும் போது பெண்களை விட ஆண்கள்தான் அதிகமாக உளத்தாக்கங்களுக்கு ஆளாகியுள்ளனர். எமது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட் 52% ஆண்களில் 40% ஆனோர் உளத்தாக்கங்களுக்கு உள்ளாகி யுள்ளனர். 40% ஆன பெண்களில் 32% ஆனோரே உளத்தாக்கங் களுக்கு உள்ளாகியிருக்கின்றனர். 16% ஆனோர் பெரிதும் உளத்தாக்கங்களுக்கு உட்படவில்லை. இதனால் எமது கருதுகோள் நிராகரிக்கப்பட்டுள்ளது.

3. வீட்டில் வாழும் முதியோரைவிட முதியோர் இல்லத்தில் வாழும் முதியோரே அதிகம் உளப்பிரச்சினைகளுக்கு உள்ளாகின்றனர்.

இதனை எமது ஆய்வின் அடிப்படையில் நோக்கும்போது வீட்டில் வாழும் முதியோர்கள் 40% முதியோரில் 32% ஆனோர் உளத்தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர். 08% ஆனோர் உளத் தாக்கங்களுக்கு உள்ளாகவில்லை. ஆனால், முதியோர் இல்லத்தில் வாழும் 60% ஆனோரில் 40% ஆனோரே உளத்தாக்கங்களுக்கு உட்பட்டுள்ளனர். 20% ஆனோர் உளத்தாக்கத்திற்கு உட்படவில்லை. அந்த வகையில் முதியோர் இல்லத்தில் வாழும் முதியோரைவிட வீட்டில் வாழும் முதியோர்களே அதிகம் உளப் பிரச்சினைகளுக்கு உள்ளாகின்றனர். இதனால் எமது கருதுகோள் நிராகரிக்கப் பட்டுள்ளது.

4. முதியோரின் உளத் தாக்கத்திற்கு பிள்ளைகளே அதிகளவில் காரணமாகின்றனர்

இக்கருதுகோளினை எமது ஆய்வின் அடிப்படையில் எடுத்துநோக்கும்போது 68% ஆன முதியோர்கள் இதனை ஏற்றுக்கொண்டதுடன் 32% ஆனவர்கள் இதனை முற்று முழுதாக ஏற்றுக்கொள்ள முடியாது எனக் கூறியுள்ளனர். அந்தவகையில், எமது ஆய்வின் அடிப்படையில் முதியோரின உளத்தாக்கத்திற்கு பிள்ளைகளே பிரதான காரணமாவர் எனும் கருதுகோள் நிரூபிக்கப்பட்டுள்ளது.

முடிவுகளும் பரிந்துரைகளும்

முதியோரின் உளப்பிரச்சினைகள் தொடர்பான இவ் ஆய்வானது முதியோருக்கு உளப்பிரச்சினைகள் காணப்படுவதை நிரூபிப்பதாய் உள்ளது. எமது ஆய்வின் மூலம் பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாக வைத்து நோக்குகின்றபோது கீழ்வரும் விடயங்களை எம்மால் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது :

- முதியோர்களில் அதிகளவானோர் உளப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.
- முதியோர்களில் பெண்களைவிட ஆண்களே அதிகமாக உளத்தாக்கத்திற்கு உள்ளாகின்றனர்.
- வீட்டில் வாழும் முதியோரைவிட முதியோர் இல்லத்தில் வாழும் முதியோருக்கு உளப்பிரச்சினைகள் குறைவாகவே காணப்படுகின்றன.
- முதியோர் எதிர்நோக்கும் உளப்பிரச்சினைகள் பிள்ளைகளின் கவனிப்பின்மையாலேயே அதிகம் ஏற்படுகின்றது.

பரிந்துரைகள்

இவ் உலகில் வாழும் அனைத்து ஜீவராசிகளுக்கும் பரிணாம மாற்றங்கள் ஏற்படும். அதனை யாரும் மாற்றியமைக்க முடியாது. அந்தவகையில், இவ் உலகில் வாழும் அனைவரும் முதுமை என்பதை சந்தித்தே ஆக வேண்டும். இம்முதுமைக் காலத்தில் முதியோரை ஒவ்வொருவரும் பேணிப்பாதுகாப்பது அவசியமாகும்.

குறிப்பாக ஒவ்வொரு பிள்ளையும் தன் பெற்றோரை அவர்களது முதுமைக்காலத்தில் பேணிப்பாதுகாக்க வேண்டும். முதுமை நிலையை அடைந்துவிட்டாலே ஏக்கம் வந்துவிடும் இந்தச் சமயத்தில் அவர்களுக்கு ஆறுதல் அளிப்பதும் அவர்களின் தாழ்வு மனப்பான்மையைப் போக்குவதும் நாம் அவர்களுக்குக் கொடுக்கும் சின்னச் சின்ன அங்கிகாரமுமே அந்த ஏக்கத்தை இல்லாமல் செய்வதுமே அவர்களுக்கு நாம் கொடுக்கும் நோய் போக்கும் மருந்தாகும். அவர்களது உடல் நலம் அவர்களின் மனநலத்தை சார்ந்துதான் காணப்படுகின்றது. அந்தவகையில் முதியோர்களின் பெரும்பாலான உடல் நோய்க்கு அவர்களது உளப்பிரச்சினைகளே காரணமாகக் அமைகின்றது. ஆதரவான பேச்சும் அன்பான கவனிப்பும் இருந்தால்தான் அவர்கள் மனமும் உடலும் நலமாகவே இருக்கும். மேலும், வீட்டில் கொண்டாடும் நிகழ்வுகளின்போது அவர்களையும் கலந்துகொள்ள வைப்பதும் அவர்களிடம் ஆலோசனைகள் கேட்பதும் அவர்களுக்கு ஒருவித மகிழ்ச்சியைக் கொடுக்கும். அவர்களது தேவைகளை நிறைவேற்றல், அவர்களது சுகாதாரத்தில் கவனம் எடுத்தல், அவர்களது கருத்துக்களுக்கு மதிப்பளித்தல், அவர்களுக்கான மருத்துவ வசதிகள், சமூக அந்தஸ்து, அவர்களது உரிமைகள், அவர்களுக்கான பாதுகாப்பு போன்றவற்றை பெற்றுக்கொடுப்பதன் மூலம் முதியோரை உளப்பிரச்சினைகளிலிருந்து விடுவிக்க முடியும். மேலும், அரசாங்கமும் நிறுவனங்களும் முதியோர்களின் உடல் - உளநலனில் கவனம் செலுத்த வேண்டும்.

உசாத்துணை நூல்கள்

நித்யா வே. ரூ கருணாநிதி (2018). முதியோர் பராமரிப்பில் தாக்கம் செலுத்தும் காரணிகள்: முதியோர் இல்லத்தில் வாழும் முதியோருக்கும் தமது வீடுகளில் வாழும் முதியோருக்குமான ஒப்பீடு. கலை கலாசர பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம். இலங்கை.

Amiri, M. (2018). Problems faced by old age people. The International Journal of Indian Psychology. 6(3): 53-63. DOI: 10.25215/0603.026.

Attanayake, C. (1984). The Theory of Demographic Transition and Sri Lanka's Demographic Experience. Journal of Arts and

Letters; Special Silver Jubilee Issue; (12): 1-19. Sri Lanka: University of Sri Jayewardenepura.

Balasuriya S, Nugegoda D. B. (1993). Health aspects of an urban elderly population. Social Science and Medicine. 40(4): 437-442.

De-Silva, W. I. (2005). Family transition in South Asia: Provision of social services and social protection. Asia- Population Journal. 20(2): 13-6. DOI: 10.18356/62708564-en

Govil, P., & Gupta, S. (2016). Domestic violence against elderly people: A case study of India. Advances in Research. Sep 5: 110-121. DOI: 10.4236/aar.2016.55011.

54

இலங்கைப் புற உருவப் படத்தில் தரைத்தோற்ற அம்சங்களைக் குறிக்கும் திறனை மேம்படுத்தல்

நூகுல்பாய் சப்ராஸ்
இலங்கை. noohusabras1984@gmail.com

ஆய்வின் அறிமுகம்

சமகாலக் கல்வி முறைமையில் சமநிலை ஆளுமை வலியுறுத்தப்படுவதுடன் ஒவ்வொரு பிள்ளையும் அறிவு, திறன், மனப்பாங்கு சார் தேர்ச்சிகளில் உயர் திறனை அடைய வேண்டும் எனும் நோக்கிலேயே கலைத்திட்டமானது வடிவமைக்கப்படுகிறது. மனித குலத்தினை உயர்வான குடியாகக் காட்டுவதற்குக் கல்வி அறிவு என்பது சிறந்ததோர் அடையாளச் சின்னமாக உள்ளது. இயற்கை வளங்களினைப் பாதுகாத்து அதன் நிலைத்திருப்பிற்கும் அவற்றின் மூலமான அபிவிருத்திக்கும் உதவுவதில் கல்வி இன்றியமையாததாகும். ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு அந்நாட்டு மக்களிடம் உள்ள கல்வி அறிவு என்பது மிகப் பிரதானமாக உள்ளது (இராஜேஸ்வரன், 2005). நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமான சொத்தாக இக்கல்வி காணப்படுகின்றது. ஒரு நாட்டின் அபிவிருத்தியில் புவியியற் கல்வியின் அறிவு என்பது மிக முக்கியமானதாக உள்ளது. பல பிரிவுகளினை உள்ளடக்கியுள்ள புவியியற் கல்வியானது மனிதனை பல்வேறுபட்ட திறன்களைக் கொண்டனவாக உருவாக்குகின்றது (தர்சனா, 2016). இப்புவியியற் கல்வியானது கிறிஸ்துக்கு முற்பட்ட காலம் முதலே பாபிலோனியர்கள், யூதர்கள், கிரேக்கர்கள் போன்றவர்களிடம் பிரபலம் பெற்று இருந்தது. இவ்வாறாறு பழமை வாய்ந்த இப்புவியியற் கல்வியானது உலக நாடுகளில் ஓர் சமூக விஞ்ஞான கற்கையாகவும் விஞ்ஞான ரீதியான கற்கையாகவும் இடம்பெற்று வருகின்றது (செல்வம், 2004).

புவியியல் பாடமானது தரம் 6 தொடக்கம் தரம் 9 வரை கட்டாயம் படிக்க வேண்டிய ஒரு பாடமாகவும் க.பொ.த. சாதாரண தரத்தில் ஒரு தொகுதிப் பாடமாகவும் காணப்படுகின்றது. கிண்ணியா கல்வி வலயத்திலுள்ள தேசிய பாடசாலையான தி/கிண்/ கிண்ணியா மத்திய கல்லூரியில் தரம் 7 இல் கல்வி கற்கும் மாணவர்கள் இவ்வாறு கலைத்திட்டத்தில் முதன்மைப்படுத்தப்படும் புவியியல் பாடத்தில் இலங்கையின் தரைத்தோற்ற அம்சங்களை அடையாளம் கண்டு இலங்கை புற உருவப் படத்தில் குறித்துக்காட்டுவதில் இடர்படுகின்றனர். ஆகையினால், இலங்கையின் தரைத்தோற்ற அம்சங்களைக் கற்று அவற்றை இலங்கை புற உருவப் படத்தில் தெளிவாக குறித்துப் பழகும்போது க.பொ.த. சாதாரண தரத்தில் தொகுதிப் பாடமான புவியியல் பாடத்தைத் தெரிவுசெய்வதற்கு ஒரு வாய்ப்பாக அமையும் என்பதை அவதானிக்க முடியுமாக உள்ளது. புவியியல் பாடத்தில் இலங்கை புற உருவப்படத்தினூடாக இலங்கையின் தரைத்தோற்ற அம்சங்களை அடையாளம் காணல் என்ற திறனை விருத்தி செய்வதனூடாக மாணவர்கள் தாம் வாழும் நாட்டின் பௌதீக, மானிடப் புவியியல் அம்சங்களைப் பாதுகாப்பதுடன் அவற்றைப் பயன்படுத்துவதற்கான தேர்ச்சி, சிந்தனை மனப்பாங்கை வளர்த்துக்கொள்வதுடன் வாழ்வின் சவால் மிக்க சந்தர்ப்பங்களை வெற்றி கொள்வதற்கு உதவும் ஏனைய திறன்களை வளர்த்துக்கொள்ளவும் முடியுமாக இருக்கும் என்ற அடிப்படையில் புவியியல் பாடத்தில் இலங்கையின் தரைத்தோற்ற அம்சங்களை இலங்கை புற உருவப் படத்தில் சரியாக குறித்துக்காட்டும் திறனை மேம்படுத்துதல் என்பதனை ஆராய்வதற்காகவே இவ்வாய்வானது அமையப்பெற்றுள்ளது.

ஆய்வின் குறிக்கோள்

இலங்கையின் புற உருவப் படத்தில் இலங்கையிலுள்ள நதிகள் மற்றும் கடனீரேரிகளை குறித்துப் பெயரிடும் ஆற்றலை விருத்திசெய்வதே இவ்வாய்வின் குறிக்கோளாகும்.

ஆய்வு முறையியல்

இந்த ஆய்வானது இலங்கை புற உருவப் படத்தில் இலங்கையின் பௌதீக அம்சங்களை குறித்துக்காட்டுவதில் ஏற்படும் இடர்பாட்டினை ஆராய்வதை நோக்கமாகக்

கொண்டுள்ளது. இதனடிப்படையில் செயல்நிலை ஆய்வு முறையில் (Action Research Method) இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், செயல்நிலை ஆய்வுகள் நிஜ உலகில் நடத்தப்படுகின்றமையால் தகவல் சேகரிக்கும் போதும், பெற்ற தகவல்களைப் பயன்படுத்தும் போதும், தீர்வினை வழங்கத் தலையிடும்போதும் ஆய்வாளர் பின்பற்ற வேண்டிய விஞ்ஞான பூர்வ நடைமுறைகளைப் பின்பற்றி முடிவுகள் முன்வைக்கப் பட்டுள்ளன.

மாதிரித் தெரிவு

கிண்ணியா கல்வி வலயத்திலுள்ள தேசிய பாடசாலையான தி/கிண்/கிண்ணியா மத்திய கல்லூரியில் தரம் 7 இல் கல்வி பயிலும் மாணவர்கள் ஆய்வுக் குடியாக தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு முற்சோதனை நடாத்தப்பட்டு அதில் 20 மாணவர்கள் ஆய்வு மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். செயல்நிலை ஆய்வுகளில் ஆய்வுக்கான மாதிரிகளை தெரிவுசெய்ய அநேகமாக கற்பித்தலின்போது இனங்காணப்பட்ட பிரச்சினை தொடர்பாக முற்சோதனை நடாத்தப்பட்டு ஆய்வு மாதிரியை தெரிவுசெய்யும் முறையே பயன்படுத்தப்படுகின்றது என்ற அடிப்படையில் இம்முறை இணைத்துக்கொள்ளப்பட்டது.

தரவு சேகரிக்கும் கருவி

இவ்வாய்வில் மாதிரிகளாகக் கொள்ளப்பட்ட மாணவர்களிடம் இருந்து தரவுகளைப் பெற்றுக்கொள்ள முதலாம் நிலைத் தரவு சேகரிப்புக் கருவியாக வினாக்கொத்து, நேர்காணல் மற்றும் அவதானிப்பும் இரண்டாம் நிலை தரவு சேகரிப்புக் கருவியாக ஆவணக்கற்றாய்வும் பயன்படுத்தப்பட்டன. சேகரிக்கப்பட்ட தரவுகள் அட்டவணைகளாகவும் வரைபுகளாகவும், MS-Excel மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

தரவுப் பகுப்பாய்வு

ஆய்வுக்கான மாதிரிகளைத் தெரிவுசெய்வதற்காக மாணவர்களுக்கு இலங்கையின் தரைத் தோற்ற அம்சங்களை குறித்துப் பெயரிடுதல் தொடர்பாக முற்சோதனை நடாத்தப்பட்டது தொடர்பான தரவுப் பகுப்பாய்வு

இல	பெயர்	புள்ளி	இல	பெயர்	புள்ளி	இல	பெயர்	புள்ளி
1	A	22	11	K	28	21	U	26
2	B	21	12	L	31	22	V	24
3	C	18	13	M	29	23	W	83
4	D	19	14	N	90	24	X	82
5	E	17	15	O	26	25	Y	29
6	F	85	16	P	19	26	Z	28
7	G	23	17	Q	81	27	A1	81
8	H	20	18	R	31	28	A2	27
9	I	78	19	S	79	29	A3	29
10	J	77	20	T	27	30	A4	87

மாணவர்களின் கற்றல் நடவடிக்கையைப் பாதிக்கின்ற பல்வேறுபட்ட அகவயக் காரணிகள் மற்றும் புறவயக் காரணிகள் காணப்படுகின்றன இந்தவகையில், இவ்வாய்வில் மாணவர்களின் கற்றலுக்குத் தடையான காரணிகளாக கற்பித்தலை விளங்கிக்கொள்ள முடியாமை, வளப் பற்றாக்குறை, சுய கற்றலில் ஆர்வம் இன்மை மற்றும் தொடர்ச்சியாக பாடசாலைக்குச் சமூகம் தர முடியாமை ஆகியன இனங்காணப்பட்டன. இதனடிப்படையில் சவால்களை எதிர்நோக்கிய மாணவர்களுக்கு முறையான வழிகாட்டல் ஆலோசனை சேவை வழங்கி அவர்களை நெறிப்படுத்திய பின்னர் இலங்கையின் புற உருவப் படத்தில் இலங்கையிலுள்ள நதிகள் மற்றும் கடனீரேரிகளை அடையாளப்படுத்தும் முகமாக செயற்பாட்டுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அந்தவகையில், செயற்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட பிற்சோதனையில் மாணவர்கள் சிறப்பாகத் துலங்கியதை பின்வருமாறு நோக்க முடியுமாக உள்ளது

இலங்கையின் புற உருவப் படத்தில் இலங்கையிலுள்ள நதிகள் மற்றும் கடனீரேரிகளை குறித்துப் பெயரிடுவதை இனங்காணல்

உரு 1

இல	1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13	14	15	16	17	18	19	20
பெயர்	A	B	C	D	E	G	H	K	L	M	O	P	R	T	U	V	Y	Z	A2	A3
புள்ளி	65	68	76	74	77	80	81	78	78	77	79	76	80	81	72	69	70	72	76	72

இலங்கையின் புற உருவப் படத்தில் இலங்கையிலுள்ள நதிகள் மற்றும் கடனீரேரிகளை குறித்துப் பெயரிடுவதை இனங்காணல்

உரு 2



கண்டுபிடிப்புகளும் கலந்துரையாடல்களும்

ஆசிரியர் மாணவர்களுக்குக் கற்பிக்கும்போது வெறுமனே ஏட்டுக் கல்வியுடன் மாத்திரம் நின்று விடாது கற்பித்தலானது அனுபவத்தையும் மையமாக வைத்து அமைய வேண்டும் எனக் கண்டறியப்பட்டுள்ளது இது ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் அமைந்துள்ளது. வகுப்பறையில் விரிவுரைக் கற்பித்தல் மாத்திரம் இடம்பெற்றால் அது மாணவர்களினது ஞாபகத்தில் நிலைத்திருக்கும் அளவு குறைவாக இருக்கும். ஆனால், கற்பித்தலானது செயற்பாட்டின் ஊடாக அமையும்போது ஞாபகத்தின் அளவு அதிகரிக்கும். மாணவர்கள் தனியாள் வேறுபாடுகளுக்கேற்ப அவர்களினுடைய ஆற்றல்களிலும்

வேறுபட்டுக் காணப்படுவர். ஆகையினால், தரைத்தோற்ற அம்சங்களை இலங்கைப் புற உருவப் படத்தில் குறிக்கும் திறனை மேம்படுத்துவதற்காக ஒளிப் படங்கள், மேந்தலை எறியி, பல்லூடக எறியி போன்ற பொருத்தமான கற்பித்தல் துணைச் சாதனங்களை பயன்படுத்தி கற்பிக்கும்போது மாணவர்களின் ஆற்றல்களும் திறன்களும் அதிகரிக்கும். வினைத்திறனான ஆசிரியர் – மாணவர் இடைத் தொடர்பினால் மாணவர்களிடம் உள்ள கூச்சம், பயம், தாழ்வு மனப்பாங்கு என்பன நீங்கி கற்றல் நடவடிக்கையில் ஆர்வத்துடன் ஈடுபடுவர். மேலும், மாணவர்களின் சிறந்த துலங்கள்களுக்கு வெகுமதிகளை வழங்கும்போது கற்றல் நடவடிக்கையில் மாணவர்களின் ஆர்வத்தை மேலும், அதிகப்படுத்தலாம். மாணவர்களுக்கு கற்றல் தொடர்பாக முறையான வழிகாட்டல்களை மேற்கொள்ளும்போதும், மாணவர்கள் தொடர்ச்சியான கற்றல் நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக வீட்டு வேலைகளை வழங்கித் தொடர்ச்சியான கண்காணித்தல் நடவடிக்கையில் ஆசிரியர் ஈடுபடும்போதும் மாணவர்கள் சுய கற்றலில் ஆர்வமுடையவர்களாகவும் பாடசாலைக்குத் தொடர்ச்சியாக வருகை தரக் கூடியவர்களாகவும் காணப்படுகின்றனர். மேலும், பாடசாலையில் சிறந்த வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் நடவடிக்கையை ஏற்படுத்துவதற்குத் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப ஆய்வுகூடம் போன்ற தேவையான வளங்களை ஒழுங்குபடுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது ஏனெனில், பாடத்திற்குப் பொருத்தமான வளங்களைக் கொண்டு கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது மாணவர்களின் ஈடுபாடும் கற்றலின்பால் அதிகரிக்கின்றது என்பதைக் காணக்கூடியதாக உள்ளது

விதப்புரைகள்

- அகக்காட்சி சரியாகவும் விரைவாகவும் மாணவர்களிடத்தே ஏற்படுவதை ஆசிரியர் உறுதிப்படுத்த வேண்டும்.
- வகுப்பறையில் சரியான புலக்காட்சியை ஏற்படுத்தக்கூடிய கல்வித் தொழிநுட்பங்களைக் கற்பித்தலின்போது பயன்படுத்துவதில் அக்கறையுள்ளவர்களாக ஆசிரியர்கள் திகழ வேண்டும்.

- ஆசிரியர்கள் கற்பித்தல் கோட்பாடுகளை மிகச் சரியான முறையில் பொருத்தமான நேரத்தில் வகுப்பறைக் கற்றலின்போது பயன்படுத்த வேண்டும்;.
- ஆசிரியர் வாண்மை விருத்திக்கான சந்தர்ப்பங்களைச் சரியான முறையில் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்;.
- பாடத்திற்குப் பொருத்தமான கற்பித்தல் முறையைப் பயன்படுத்தும் ஆற்றலை ஆசிரியர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.
- ஆசிரியர் வகுப்பறையில் தனியாள் வேறுபாடுகளுக்கு ஏற்ப கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபடுட வேண்டும்.
- ஆசிரியர் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு பொருத்தமான துணைச் சாதனங்களை தெரிவுசெய்தல் வேண்டும்.

உசாத்துணை

தர்சனா, ந. (2016). புவியியற் கற்கை நெறியும் அதன் முக்கியத்துவமும். யாழ்ப்பாணப் புவியியலாளன்.

செல்வம், ந. (2004). புவியியல் கற்பிக்கும் முறைகள். சாந்தா பப்ளிகர்ஸ். சென்னை.

தேசிய கல்வி நிறுவகம் (2016). ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி (புவியியல் தரம் - 7). சமூக விஞ்ஞானத் துறை, மகரகம.

முத்துலிங்கம், ச. (2015). கல்வி உளவியல். லங்கா புத்தகசாலை. குணசிங்கபுர. கொழும்பு.

சுவர்ணராஜா, க. சின்னத்தம்பி. (2007). அறிகைத் தொழிற்பாடும் ஆசிரியரும். குரு வெளியீடு, வவுனியா.

Department of Examination. (2016). Performance of Candidates of G.C.E (O/L) Examination. Sri Lanka: Research and Development Branch, National Evaluation and Testing Service, Department of Examination.

55

சங்க இலக்கியத்தில் கலை வடிவங்கள்

முனைவர் அ.மாலதி
தமிழ்த்துறை, புதுவைப் பல்கலைக்கழக சமுதாயகக் கல்லூரி, புதுச்சேரி.
smilemalathi@gmail.com

முன்னுரை

பண்ணை ஆதாரமாகக் கொண்டு விளைந்ததே பாடல் எனலாம். பாடலில் பல வகையுண்டு. அக்காலப் பாடல் சடங்குமுறைப் பாடலில் இருந்து மன்னர் சார்ந்த பாடலாக மாறியபோது அது தனி அடையாளம் பெற்றது. 'பாடல் பற்றிய பயனுடைய எழாஅல்' என்று பொருநராற்றுப்படையில் (56) குறிப்பு உள்ளது. ஏழ் இசையை அடிப்படையாக வைத்து பின்னப்பட்ட பாடல்கள் திணைசார் மக்களிடம் தோன்றிப் பின்னர் பாண் மரபினரால் வளர்த்தெடுக்கப்பட்டது. அதனைப் புலவர் சமூகம் ஏடிலக்கியத்தில் பதிவுசெய்தனர். பாடல், வரி, செய்யுள், உரு, உருப்படி, பனுவல், பா, யாப்பு என்று பாடல் பலசொல் ஒரு பொருளாக ஆளப்பட்டிருக்கிறது.

பாடல் அடிகளை ஒத்த தாளத்துடனும் பண்ணுடனும் வரிவரியாகப் பாடுவதால் வரி எனப்பட்டது. எழுத்து, அசை, சீர், தளை, அணி மற்றும் வனப்புகளால் செய்யப்படுவதால் செய்யுள் எனப்பட்டது. பண், தாளம் முதலிய இசை வடிவாக உருவாக்கப் படுவதால் உரு, உருப்படி எனப்பட்டது. பாட்டுடைச் செய்யுள் இசைப்பாட்டுகளை இடையிடையே கொண்ட தொடர்நிலைச் செய்யுள் என இவற்றை விளக்கலாம்.

ஆய்வு நோக்கம்

சங்ககால மக்கள் பல கலைகளில் சிறந்து விளங்கினர். பாட்டுக்கலையைப் பற்றி ஆராய்வதை நோக்காகக்கொண்டு இவ்வாய்வு அமைகிறது.

முரற்கை, முரற்சி

இசைக்கருவியில் இருந்து எழும் ஒலியைத் தாளத்தோடு அமைத்து, பின்னர் கலைஞரால் பாடலாகப் பாடப்படும்போது ஒலி, தாளம் என்பதை முரற்கை, முரற்சி எனும் சொல்லால் குறிப்பர்.

"நசைஇனன் வதிந்த கிடக்கை, பாணர்
நரம்புஉளர் முரற்கை போல்" (ஐங்குறுநூறு 402:2-3)

"..... பாணர்
நரம்பு உளர் முரகை போல" (ஐங்குறுநூறு 402:19-20)

"நின்ற முரற்கை நீக்கி நன்றும்" (புறநானூறு 376:13)

எனும் அடிகளின் ஊடப் பாணரின் யாழ் நரம்புகளில் இருந்து எழும் ஒலிக்கு முரற்கை என்று பொருள் கூறுவர். 'இன்புறு முரற்கை நும் பாட்டு விருப்பு ஆக' என்று மலைபடுகடாம் (390) தாளத்தோடு அமைந்த நும் பாடல் என்று கூறுவதில் இருந்து தாளத்தைக் குறிக்கவும் முரற்கை எனும் சொல் பயன்பட்டுள்ளது. இதனை,

"நரம்பின் முரலும் நயம் வரும் முரற்சி
விறலியர் வறுங்கைக் குறுந்தொடி செறிப்ப"
(மதுரைக்காஞ்சி 217-218)

மேற்சுட்டிய அடிகளில் இருந்து அறியலாம். முரற்சி என்பது விறலி பாடிய பாடலால் அறியமுடிகிறது.

பனுவல்

பனுவல் என்பது பாட்டு, இசைநூல், கேள்வி என்ற பொருள்களைத் தருகின்றது. இசைப் பேரகராதி உயர்ந்த இசையமைப்புப் பாடல்களைப் பனுவல் என்று கூறுகிறது. 'கை கவர் நரம்பின் பனுவற் பாணன்' என்று நற்றிணை (200) குறிப்பிடுகிறது. யாழ் மீட்டுவதில் வல்ல பாணன் யாழ் நரம்பில் யாவரும் விரும்பும் இனிய பாடலைப் பாடினான் என்பதை,

"களங்கனி அன்ன கருங்கோட்டுச் சீறியாழ்ப்
பாடு இன் பனுவற் பாணர் உய்த்தென"(புறநானூறு 127:1-2)

இப்பாடல் சுட்டுகிறது. களாப்பழத்தின் நிறத்தை ஒப்ப கரிய கோட்டையுடைய சிறிய யாழைக்கொண்டு இனிய பாட்டைப் பாடுவதில் வல்லவர்கள் பாணர் என்பதனைக் கீழ்காணும் அடி உணர்த்துகிறது.

"வரி நவில் பனுவல் புலம் பெயர்ந்து இசைப்ப"
(புறநானூறு 136:6)

விறலி பின்வர வரி பொருண்மையோடு பாடப்படும் இசைப்பாடல்கள் நிலத்திற்கு நிலம் மாறும். அத்தகைய இசைப்பாடலை யான் பாடினேன் என்று ஒரு பாணன் கூறுகிறான் என்பதிலிருந்து அவர்களின் இசை வல்லமையை அறிய முடிகிறது.

நூல்

"பனிவரை மார்பன் பயந்த நுண்பொருட்
பனுவலின் வழாஅப் பல்வேறு அடிசில்"
(சிறுபாணாற்றுப்படை 240-241)

எனும் அடியின் மூலம் அக்காலத்தில் சமையல் குறிப்புகள் இருந்துள்ளதை அறியமுடிகின்றது. சமையல் நூலில் கூறப்பட்டுள்ள அனைத்து அடிசில் உணவையும் பாணர்க்கு வழங்கினர் என்று கூறும் இடத்தில் பனுவல் என்பது நூல் என்ற பொருண்மையில் இடம்பெற்றுள்ளது.

"நல்இசை நிறுத்த நயம்வரு பனுவல்
தொல்இசை நிறீஇய உரைசால் பாண்மகன்"
(அகநானூறு 352:13-16)

புகழமைந்த பாண்மகனானவன் இனிய இசைத் தமிழ் நூலை எண்ணின் முறைப்படி இயற்றிய பண்ணைக் காட்டினும் அவன் புதுமையாக இயற்றிய திறத்தைக் காட்டினும் எனும் செய்தி வழிப் பாணர்கள் பனுவல் செய்ததையும் பாடலோடு சேர்த்து இசை நூலும் செய்துள்ளனர் என எண்ணிட இடம் உண்டு.

படிப்பறிவு பெற்ற பாண்மரபினர் இது போன்ற இசை நூல்களைப் படைத்திருக்க வாய்ப்பு உண்டு அல்லது அக்கால பாண்மக்கள் பாடியதை அவர்களின் வழித் தோன்றல்கள் மரபுவழியில் இது போன்ற இசை நூல்களாக அல்லது பனுவல்களாகக் கொடுத்திருக்க வாய்ப்பு உண்டு அவற்றில் ஒன்றுகூட இன்று கிடைக்கவில்லை என்பது வருத்தற்குரியது.

அகவினம்

அகவு என்றால் அழைத்தல் என்று பொருள். இதனை இசையோடு சேர்த்து அழைத்துப் பாடும் இயல்பையுடைய அகவர்

இனத்தார் பாடும் ஒருவகை இசைப்பாடலாக இந்த அகவினத்தை அறிய இடம் உண்டு. 'அகவினம் பாடுவாம் தோழி - அமர்கண்' என்றும், 'அகவினம் பாடுவாம், நாம்?' என்று கலித்தொகை (40:1,7) பாடல் குறிப்பிடுகின்றன. அகவுநர்கள் இப்பாட்டினைப் பாடியிருக்க வாய்ப்பு உண்டு.

வள்ளைப்பாட்டு, உலக்கைப்பாட்டு

வள்ளைப்பாட்டு அல்லது உலக்கைப்பாட்டு என்பது நெல்லை உரலில் இட்டு உலக்கையால் குத்தும்போது பாடும் பாடல் ஆகும். இதனைப் பெண்கள் குழுவாகப்பாடும் போது ஒரு பெண் இன்னொரு பெண்ணைப் பார்த்து 'வள்ளை அகவம் வா' என்று அழைத்துப்பாடுவது மரபு என்பதை கலித்தொகை (42:8) குறிப்பிடுகிறது. வள்ளைப்பாடினைத் திணைசார் மக்கள் பாடுவது என்று 'திணைக் குறுமகளிர் இசைபாட்டு வள்ளையும்' மலைபடுகடாம் (342) பாடல் எடுத்துரைக்கிறது.

"வெள்ளி விழுந்தொடி மென்கருப்பு உலக்கை
.....
காஞ்சி நீழல் தமர்வளம் பாடி
ஊர்க்குறுமகளிர் குறுவழி விறந்த" (அகநானூறு 286:1-5)

ஊரில் உள்ள இளம் பெண்கள் மெல்லிய கருப்பங்கழியினை வெள்ளியால் செய்யப்பட்ட உலக்கையைக் கொண்டு, கொடி போன்ற தம் இடை அசையுமாறு மணலைக் குவித்து காஞ்சிமரத்தின் நிழலில் தம் கற்றத்தாரின் அருமை பெருமைகளைப் புகழ்ந்து வள்ளைப் பாட்டினைப் பாடுவர்.

உழிஞைப்பாட்டு

உழிஞை என்பது பகைவர் மேல் படை எடுத்துச் செல்லும் இயல்பைப் பாடுதல் ஆகும்.

"தொடை படு பேழியாழ் பாலை பண்ணி
பணியா மரபின் உழிஞை பாட"
(பதிற்றுப்பத்து 46:5-6)

பாண்மரபினர் மகளிர் நரம்புக் கட்டுப் பொருந்திய பேரியாழில் பாலைப்பண் அமைத்துப் பகைவர்களுக்குப் பணியாத இயல்பை உடைய உழிஞைப்பாட்டைப் பாடினர்.

வஞ்சிப்பாட்டு

வஞ்சி என்பது புறத்திணைகளுள் ஒன்று. இதனைத் தொல்காப்பியம்

"வஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்
அஞ்சதகத் தலைச்சென்று அடல்குறித் தன்றே"
(தொல்காப்பியம், பொருளதிகாரம் 1008)

என்று கூறுகிறது. சுருங்கச் சொல்லின் பகை மன்னர் நிலத்தைக் கவர்தல் வஞ்சி ஆகும்.

"யா பலகொல்லோ? பெரும வார் உற்று
விசி பிணிக்கொண்ட மண் கனை முழவின்
பாடினி பாடும் வஞ்சிக்கு" (புறநானூறு 15:22-24)

வாரினால் இழுத்துக் கட்டப்படப்பெற்ற மார்ச்சனையைக் கொண்டு மண் தடவிய தண்ணுமையை முழக்கி மன்னன் படையெடுத்துச் சென்ற தன்மையைப் பாடினி பாடுவாள். இதனை மேற்குறித்த வஞ்சி பாடல் விளக்குகிறது. மேலும்,

"வாடா வஞ்சி வாட்டும் நின்
பீடுகெழு நோன் தாள் பாடுங்காலே" (புறநானூறு 39:17-18)

"வாடா வஞ்சி பாடினேன் ஆக" (புறநானூறு 394:9)

வாடா வஞ்சி என்பது மன்னன் பகைமேற் சென்று யாராலும் அழிக்க முடியாத நிலத்தை அழித்த வந்தமையைப் பாடுவது என்பதை அறியமுடிகிறது. இவ்வாறு புறத்திணையைப் பாண் மரபினர் வகுத்துள்ளனர் என்பதை இவ்வகைப்பாடல் மூலம் புலப்படுகிறது.

காஞ்சிப்பாடல்

இதனை காஞ்சிப்பண் எனவும், காஞ்சிப்பாடல் எனவும் கூறுகின்றனர். காஞ்சி என்பது நிலையாமையைக் குறிக்கும். இது புறத்திணைகளுள் ஒன்று. காஞ்சி என்பது ஒருவகைப் பூவாகும்.

"காஞ்சிதானே பெருந்திணைப் புறனே"
(தொல்காப்பியம், பொருளதிகாரம், 1023)

"இன்னகை மனைவி பேஎய்ப் புண்ணோன்

துன்னுதல் கடிந்த தொடா அக்காஞ்சி"
(தொல்காப்பியம், பொருளதிகாரம், 1025)

காஞ்சித்திணை என்பது பெருந்திணை என்னும் அகத்திணையின் புறனாகும் என்று தொல்காப்பியர் கூறுவார். பெருங்காஞ்சி மறக்காஞ்சி எனக் காஞ்சித்துறையில் 20 வகைகள் உள்ளன. அவற்றில் ஒன்று பேய்க்காஞ்சி ஆகும். பேய்க்காஞ்சி என்பது போர்க்களத்தில் இறந்தவர் உடலைப் பேய்களிடமிருந்து பாதுகாக்கப்பாடுவதாகும்.

"இசை மணி எறிந்து காஞ்சி பாடி" (புறநானூறு 281:5)

"வேம்பு சினை ஒடிப்பவும் காஞ்சி பாடவும்" (புறநானூறு 296:1)

எனும் இரண்டு பாடலுமே போர்க்களத்தில் இறந்த உடலைப் பாதுகாக்கும் நோக்கில் பாடப்பட்டது தான். எனவே போர்க்களத்தில் இறந்துபட்ட வீரர்களைக் காக்கும் வண்ணம் பாடிய பாடலாக இக்காஞ்சிப்பண் அல்லது காஞ்சிப்பாடலை அறியமுடிகிறது.

கானம், பாடல்

கானம் என்பது இக்காலத்தில் பாடல் எனக் குறிக்கப்படுகிறது. ஆனால் அக்காலத்தில் காடு என்பதே கானம் என அழைக்கப்பட்டது.

காடு - கான் - கானம் - கானல் - கானகம் எனத் திரிந்தது. எனவே காட்டைப் பாடுதல் கானம் பாடுதல் என ஆகியது. கானல் வரியையும் இதனுடன் ஒப்பு நோக்கத்தக்கது.

"சீறியாழ் செவ்வழி பண்ணி யாழ நின்
கார் எதிர் கானம் பாடினேமாக" (புறநானூறு 144:2-3)

"கொண் பெருங் கானம் பாடல் எனக்கு எளிதே"
(புறநானூறு 154:13)

மாலைக் காலம் வர சிறிய யாழில் இரங்கற் பண்ணாகிய செவ்வழி என்னும் பண்ணை இசைத்து மழையை ஏற்றுக்கொண்ட பெரிய காட்டைப் புகழ்ந்து பாடுவது. இதனையே கானம் பாடுதல் என்பர். கானல்வரி என்பது ஆற்றோரம் அமர்ந்து பாடும் பாடல். இதுபற்றி சிலப்பதிகாரத்தில் குறிப்பு உள்ளது.

முகவைப்பாடல்

களத்தில் நெல்லைப் போரடிக்கும் போதும், பொலி போடும் போதும் நெல்லை அளக்கும் போதும் பாடும் பாடல் முகவைப்பாடல் ஆகும்.

"பணைமருள் நெடுந்தாள் பல் பிணர்த் தடக்கை
புகர்முக முகவைக்கு வந்திசின் - பெரும"
(புறநானூறு 371:19-20)

முழுமதி போன்ற வாராற் கட்டப்பட்ட என் தடாரிப் பறையை அகன்ற கண் அதிரும்படி அறைந்து சிறுபறையைக் கொட்டிக் கொண்டு பனை போன்ற தோளையும், பெரிய கைகளையும் உடைய களம் கிழவோனே உன் நெற்களம் நாடி முகவைப் பாடல் பாடி அரிசி பெறவந்தேன் என்று பாண்மரபினன் ஒருவன் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. இவ்வாறாகப் பாண்மரபினர் நெற்களம் சென்று அங்குள்ள கிழாரை வாழ்த்தி அவர்களிடம் நெல் அரிசி பெறுவது உண்டு. அப்போது அங்குப் பாடும் பாடலே முகவைப்பாடலாகும்.

முடிவுரை

சங்ககால மக்கள் கலைகளில் சிறந்து விளங்கியதோடு மட்டுமல்லாது அவர்களின் பாண்பாட்டிலும் கலைகள் கலந்திருந்தன. சங்க கால மக்கள் இசை, பாடல், ஆடல், நாடகம், கட்டிடம், ஓவியம், சிற்பம் போன்ற பல கலைகளில் சிறந்து விளங்கினர். அப்படிப்பட்ட சிறந்த கலைகளில் ஒன்றான பாட்டுக்கலையைப் பற்றி இக்கட்டுரை ஆராய்ந்துள்ளது.

உசாத்துணைகள்

பரிமணம்,அ.மா.,பாலசுப்பிரமணியன்,கு.வெ. (பதி), (2004). பத்துப்பாட்டு, முதற் பகுதி, சென்னை: நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ்

பரிமணம்,அ.மா.,பாலசுப்பிரமணியன்,கு.வெ.(பதி),(2004).பத்துப்பாட்டு, இரண்டாம் பகுதி, சென்னை: நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ்

புலியூர்க்கேசியன்(உ.ஆ), (2014). மூன்றாம் பதிப்பு, புறநானூறு,சென்னை: கங்கை புத்தகநிலையம்

56

சமகாலச் செயற்கை நுண்ணறிவில் பண்பாட்டுச் சீரழிவு

த.க.மணிஅரசன்
முதுநிலை காட்சித் தொடர்பியல் துறை,
எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம், காட்டாங்குளத்தூர்,
சென்னை.

முன்னுரை

நமது அன்றாட வாழ்வில் உணவு, நீர், காற்று போன்ற அத்தியாவசப் பொருள்களைப் போன்று கணினியும் அலைபேசியும் இன்றியமையாதனவாக மாறிவிட்டன. இந்நிலையில் நமது வாழ்வில் ஒளி போல வந்ததுதான் செயற்கை நுண்ணறிவு. இந்தச் செயற்கை நுண்ணறிவு அன்றாட இயல்பு வாழ்க்கையின் செயல்பாடுகளை எளிதாக்குகின்றது. உலகில் நிகழும் செய்திகளை எளிதில் அறிந்திட முடிகின்றது. செயற்கை நுண்ணறிவு என்பது கணினி அறிவியலின் ஒரு சிறந்த அடுத்தகட்ட வளர்ச்சியாகும். இது பொதுவாக மனிதனின் அறிவைக் கொண்டு செயல்படக் கூடியதாகும். இது மனித நுண்ணறிவிற்குத் தேவைப்படும் பணிகளைச் செய்யக்கூடியது ஆகும். கற்றல், பகுத்தறிதல், சிக்கலைத் தீர்க்கும் திறன், கருத்து, மொழி, புரிதிறன் மற்றும் முடிவெடுப்பது வரை பரந்துபட்ட வரம்பைக் கொண்டுள்ளது.

ஆய்வு நோக்கம்

21 ஆம் நூற்றாண்டில் அனைத்து அறிவுத்துறையிலும் செயற்கை நுண்ணறிவு என்னும் அறிவியல் நுண் கண்டுபிடிப்பு வலம் வரத் தொடங்கியுள்ளது. பல துறைகளில் இது வரவேற்பிற்குரியதாக அமைந்தாலும் மனித வள மேம்பாட்டுத்துறையில் சிக்கலுக்குரியதாக எதிகாலத்தில் அமையும். குறிப்பாக மனிதநேயம், மனித உறவுகள், பண்பாட்டு, நாகரிக விழுமியக் கூறுகளில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தத் தொடங்குகிறபொழுது தேக்கநிலை உருவாவதுடன்

எதிரிடை கருத்து நிலையை உருவாக்கும் என்னும் சிந்தனையை முன் வைப்பதாக இவ்வெழுத்துரை அமையும்.

ஆய்வு எல்லை

தமிழ்ச்சமூகத்தின் பண்பாட்டு ஒழுகலாறுகள் குறிப்பாக விருந்து போற்றுதல், உறவைப் பேணுதல் முதலானவற்றில் செயற்கை நுண்ணறிவை இணைத்து மேம்படுத்துவது குறித்த கருத்துருக்களை எல்லையாகக் கொண்டு அமைகிறது.

ஆய்வுக்கருதுகோள்

பொருளாதாரமே வாழ்க்கை என்று இயந்திர கதியில் இயங்கிக் கொண்டிருக்கின்ற மனிதர்கள் மனித உறவுகளைப் பேணுவதிலும் விருந்து போற்றுவதிலும் பின் தங்கி இருக்கின்ற நிலையில் செயற்கை நுண்ணறிவால் உருவாக்கப்படுகின்ற மானுட குணங்கள் சிறிதும் இல்லாத இயந்திரங்கள் இவ்விழுமியங்களைப் போற்றிப் பராமரிக்க இயலாது என்பதைக் கருதுகோளாக முன்மொழிகிறது.

ஆய்வு அணுகுமுறை

கணினி அறிவியலின் அடிப்படையில் பகுப்பு முறை அணுகுமுறையும் விளக்கமுறை அணுகு முறையும் பின்பற்றப்பட்டுள்ளது.

பண்பாட்டுச் சீரழிவு

அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியில் செயற்கை நுண்ணறிவானது சமூகத்தின் அனைத்துத் தளங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தகவல் தொடர்பு ஊடகங்களின் உருவாக்கத்திற்குச் செயற்கை நுண்ணறிவுத்தொழில் நுட்பம் பெரிதும் துணைநிற்கிறது. ஊடகங்களில் பயன்படுத்தப்பெறும் மென்பொருளின் கட்டமைப்பு மையப் புள்ளியாகப் பயன்படுகிறது. அலைக்கற்றை உதவியோடு ஊடகங்கள் வளர்ச்சி பெற்றிருக்கின்ற சூழலில் செயற்கை நுண்ணறிவு அவ்விடத்திற்குத் தன்னைத் தக்கவைத்துக் கொள்ள முயற்சி செய்கிறது.

பண்பாட்டு நாகரிகம் என்பது மரபுகளின் தொடர்ச்சி, இம்மரபுகளை மானுட அறிவு மட்டுமே கடத்தும். செயற்கை

நுண்ணறிவு என்கின்ற உருவாக்கப்பெறுகின்ற அறிவுத்தளம் பின்னடைவையே ஏற்படுத்தும். அப்பின்னடைவுகளின் கூறுகள் தொடர்ந்து விவாதிக்கப்பெறும்.

கலை மற்றும் படைப்பாற்றல்

செயற்கை நுண்ணறிவு அல்கோரிதம் கலை, இசை, இலக்கியம் மற்றும் பிற படைப்புகளை உருவாக்க முடியும். இது மனிதனுக்கும் இயந்திர படைப்பாற்றலுக்கும் இடையிலான கோட்டை மங்கலாக்கிக் கலையின் தன்மை மற்றும் படைப்பாற்றல் பற்றிய கேள்விகளை எழுப்புகின்றது. காட்டாகச் செயற்கை நுண்ணறிவின் மூலம் உருவாக்கப்பட்ட கலைகள் பிறரைப் புண்படுத்தும் வகையிலும் அமையும். மேலும் இதில் தவறான எடுத்துக்காட்டுக்கள் அளிக்கப்படுகின்றன.

நுண்கலைகள் மனிதனின் ஆழ் மனத்திலிருந்து புறச்சூழலில் சரியான தகவமைப்பின் போது தோற்றம் பெறுவதாகும். குறிப்பாக ஆடல் கலை பார்வையாளர்களின் நுகர்திறனுக்கேற்ப வேகமும் விறுவிறுப்பும் பெறும். பார்வையாளர்களின் அரங்க ஈடுபாட்டை ஆடல் கலைஞர் உணரும்பொழுது அசுர சாதகம் நிகழும். இத்தைகைய ஈடுபாட்டை செயற்கை நுண்ணறிவு வழியாக நிகழ்த்துக்கலையை நிகழ்த்துகிறபொழுது பெறமுடியாது. அத்தகையச் சூழல்களில் அரங்கக் கலை பின்னடைவை நோக்கியே செல்லும்.

ஊடக நுகர்வு

செயற்கை நுண்ணறிவு இயங்கும் பரிந்துரை அமைப்புகள் நாம் உட்கொள்ளும் உள்ளடக்கத்தைப் பாதிக்கின்றது நமது பண்பாட்டு விருப்பங்களையும் ஆர்வங்களையும் வடிவமைக்கின்றது. Netflix, Spotify மற்றும் YouTube போன்ற இயங்கு தளங்கள் நுகர்வோரின் கடந்தகால நடத்தை மற்றும் விருப்பங்களை அறிந்துகொள்ள செயற்கை நுண்ணறிவு அல்கோரிதங்களைப் பயன்படுத்துகின்றது.

மொழி மற்றும் தொடர்பு

இயற்கை மொழிச் செயலாக்கம் (NLP) தொழில்நுட்பம் கிமி சாட்போட்கள், மெய்நிகர் உதவியாளர்கள் மற்றும் மொழி, மொழிபெயர்ப்புக் கருவிகளைச் செயல்படுத்துகிறது. இந்த

அமைப்புகள் நாம் எவ்வாறு தொடர்பு கொள்கிறோம், ஒருவருக்கொருவர் எவ்வாறு தொடர்பு கொள்கிறோம் என்பதைப் பாதிக்கிறது.

மொழி வளர்ச்சிக்கு மிகப் பெரிய பங்களிப்பைக் கணினித் துறை தந்துள்ளது. குறிப்பாக மொழி கற்றல், கற்பித்தல் துறையில் புதிய விளக்கங்கள் கிடைத்திருக்கின்றன. மொழிபெயர்ப்புத் துறையிலும் 1980களில் தொடங்கி பல்வேறு மாற்றங்களும் உயர்வுகளும் நிகழ்ந்திருக்கின்றன. இன்றைய செயற்கை நுண்ணறிவு வளர்ச்சிக்குப் பிறகு மேற்குறிபிட்டத் துறைகளில் செயல்பாடுகள் உயர்ந்திருக்கின்றன. என்றாலும் பல்வேறு மொழிகளின் சொற்களுக்கு இணையான பெயர்ப்புச் சொற்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. மொழி பெயர்க்கின்ற பொழுது சொற்கள் மொழிபெயர்க்கப்படுகின்றன; ஆனால் தொடரமைப்புகள் உள்வாங்கி மொழிபெயர்க்கப்படுவதில்லை. இது இயந்திர மொழிபெயர்ப்பின் குறைபாடாகவே தொடர்ந்து வருகிறது. குறிப்பாகத் திட்டமிட்டுக் கவிதைகளை மொழிபெயர்க்கின்ற பொழுதும் உடனடியாக மேடை பேச்சுகளை மொழிபெயர்க்கின்ற பொழுதும் படைப்பாளி / பேச்சாளருடைய உள்ள உணர்வை மொழிபெயர்க்க இயலாத பின்னடைவைச் செயற்கை நுண்ணறிவு காலத்திலும் எதிர்கொள்கிறோம்.

பண்பாட்டுப் பாதுகாப்பு

பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பாதுகாத்தல் மற்றும் மீட்டெடுப்பதில் கிமி உதவ முடியும். எடுத்துக்காட்டாக, கிமி அல்கோரிதம் பண்டைய நூல்கள் அல்லது கலைபொருட்களைப் பகுப்பாய்வு செய்து விளக்குகின்றன. வரலாற்றாசிரியர்கள் மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் பண்பாட்டு அறிவைப் புரிந்து கொள்ளவும் பாதுகாக்கவும் உதவுகின்றன. ஒவ்வொரு சமூகத்தின் பண்பாட்டிலும் நுண்கூறுகள் உள்ளன. அவற்றை மொழி வழி கடத்த இயலாது. உணர்வு வழி மட்டுமே கடத்த இயலும். பெண், பெண்மை, பெண் உணர்வு, குழந்தைப்பேறு, குழந்தையிடம் காட்டும் பாசம், குழந்தையின் வளர்ச்சியிலும் உயர்விலும் மன நிறைவு கொள்ளுதல் என்பனவற்றைச் செயற்கை நுண்ணறிவின் மூலம் உருவாக்கப்பட்ட பெண்ணிடம் எதிர்பார்க்க இயலாது.

சார்பு மற்றும் பன்முகத்தன்மை

கிமி அமைப்புகள் சமூகத்தில் இருக்கும் சார்புகளை நிலை நிறுத்தலாம் அல்லது குறைக்கலாம். கவனமாக வடிவமைக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படாவிட்டால் கிமி அல்கோரிதம் ஏற்கனவே உள்ள பண்பாட்டுச் சார்புகளைப் பிரதிபலிக்கும் மற்றும் பெருக்கி நியாயமற்ற விளைவுகளுக்கு வழிவகுக்கும். பண்பாடு மற்றும் சமூகத்தின் பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கத்தை மேம்படுத்துவதற்கு கிமி இல் சார்புநிலையை நிவர்த்தி செய்வது முக்கியமானதாகும்.

இந்தியச் சமூகம் கன்னியாகுமரி தொடங்கி காஷ்மீர் வரை பல்வேறு இனக்குழுக்களாகப் பிரிந்தும் சேர்ந்தும் வாழ்ந்து வருகின்றது. வேற்றுமையில் ஒற்றுமை, ஒற்றைப் பண்பாடு என்னும் கூற்றுகள் எழத் தொடங்கியிருக்கின்ற இன்றையச் சூழலில் ஒவ்வொரு மொழி வழித் தேசிய இனங்களுக்குள்ளும் பல்வேறு இனக்குழுக்கள் உள்ளன. நிலவியல், நீரியல், உடற்கூறியல் என்னும் பல தளங்களில் பண்பாட்டுத் தகவமைப்பு வேறுபட்டு அமையும். அவ்வேறுபாட்டுத் தன்மைகளுக்குள் ஒற்றுமைத் தன்மை ஊடாட்டமாக ஊடுபாவாக அமைந்து சிறக்கும். சான்றுக்குப் பொதுச் சமூகமாக வாழ்கிற இந்துக்கள் என்கின்ற தலைமைச் சமூகத்தில் வருண அடிப்படையிலான பாகுபாடுகள் நிலவுகின்றன. ஒரு தெய்வ வழிபாட்டிற்குள் பல்வேறு வழக்காறுகள் உள்ளன. இவ்வழக்காறுகளைக் குறிப்பிட்ட இனக்குழுவினர் பின்பற்றி வருகின்றனர். இச்செய்திகளுக்கு முரணாக இந்துக்கள் இஸ்லாமியர் என்னும் இரு சமயக் குழுவினரிடையே தனித் தனியான வழிபாட்டு மரபுகள் உள்ளன. அதே நேரத்தில் இரு குழுவினரும் அவர்களுடைய சமய வழிபாட்டு மரபுகளில் இணைந்து செயல்படுகின்ற தன்மையையும் அறிய முடிகின்றது. இக்கூறுகளை மனித அறிவு பகுத்தும் தொகுத்தும் திறனாய்ந்தும் தெளிவுபடுத்திக் கொள்கிற சூழல்கள் அமையாத நிலையில் செயற்கை நுண்ணறிவு வழியாக ஈடுபடுகிற பொழுது பிறரைப் புண்படுத்துகின்ற செயல்பாடுகள் நிகழ்ந்தேறிவிடும்.

கிமி பொழுதுபோக்கு மற்றும் கேமிங்

தொழில்நுட்பம் கிமி உருவாக்கிய கதாபாத்திரங்கள், செயல்முறை உள்ளடக்க உருவாக்கம் மற்றும் டைனமிக் கதை

சொல்லல் போன்ற கூறுகள் மூலம் பொழுது போக்கு அனுபவங்களை மேம்படுத்துகிறது. கேமிங்கில் கிமி இயங்கும் ழிறிசிகள் (இயக்கமுடியாத எழுத்துக்கள்) மிகவும் யதார்த் தமான மற்றும் ஈர்க்கக்கூடிய விளையாட்டு அனுபவங்களை வழங்க முடியும். அதே சமயம் வன்முறை கலந்த பாலியல் வன்புணர்வோடு கூடிய வெறியூட்டக்கூடிய விளையாட்டுகள் தனி மனித ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் சீரழிக்கின்றன.

சமூக ஊடகம் மற்றும் செல்வாக்குப் பண்பாடு

கிமி கருவிகள் சமூக ஊடகப் பகுப்பாய்வுகளின் போக்குகளைக் கண்காணிக்கவும் பயனர் நடத்தையைப் பகுப்பாய்வு செய்யவும் மற்றும் செல்வாக்குச் செலுத்துபவர்களைஅடையாளம் காணவும் பயன்படுத்துகின்றன. இது சமூக ஊடகத் தளங்களின் இயக்கவியலைப் பாதிக்கிறது. மேலும் போக்குகள் மற்றும் பண்பாட்டு இயக்கங்களை வடிவமைக்கின்றது. இன்றைய ஊடக உலகில் விரைவாகத் தருதல் முந்தித் தருதல், உடனடிச் செய்தி என்னும் பொருண்மைகளில் போட்டியின் காரணமாகத் தவறான தகவல்களை வெளியிடுகின்ற நிலைகள் நிலவிவருகின்றன.

நெறிமுறை மற்றும் தத்துவப் பிரதிபலிப்புகள்

கிமி இன் வளர்ச்சியானது நெறிமுறைகள், தத்துவம் மற்றும் மனித குலத்தின் இயல்புகள் பற்றிய விவாதங்களைத் தூண்டுகிறது. கிமி தொழில் நுட்பங்களின் நெறிமுறைத் தாக்கங்கள், வேலை வாய்ப்பு மீதான தாக்கம், தனியுரிமை கவலைகள் மற்றும் கிமி மனித நுண்ணறிவை மிஞ்சும் சாத்தியம் போன்ற வினாக்கள் எழுகின்றன.

ஒட்டுமொத்தமாக கிமி பண்பாடுடன் பன்முக வழிகளில் குறுக்கிடுகிறது. பண்பாட்டு கலைப்பொருட்கள் மற்றும் வெளிப்பாடுகளை நாம் எவ்வாறு உருவாக்குகிறோம், நுகர்கிறோம், உணர்கிறோம் என்பதை மாற்றி அமைக்கிறது. கிமி தொழில் நுட்பங்கள் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருவதால் அவற்றின் பண்பாட்டு தாக்கங்கள் பெருகிய முறையில் குறிப்பிடத்தக்கதாக மாறும். எனவே கவனமாகப் பரிசீலனைச் செய்வதும் நெறிமுறை பிரதிபலிப்புச் செய்வதும் தேவைப்படுகின்றது.

மீடியா நுகர்வு

கிமி அல்கோரிதம் பயனர்களின் விருப்பங்களின் அடிப்படையில் உள்ளடக்கப் பரிந்துரைகளைத் தனி பயனாக்குகிறது. இது வடிகட்டி குமிழ்கள் மற்றும் எதிரொலி அறைகளை உருவாக்க வழிவகுக்கிறது. இது பண்பாட்டுப் பன்முகத் தன்மை மற்றும் புதிய சிந்தனைகளின் வெளிப்பாடு ஆகியவற்றைப் பாதிக்கலாம்.

ஒரு விளம்பரத்தில் எதை வெளிப்படுத்துவது எதற்கு முக்கியத்துவம் தருவது என்பதில் மனித மூளை தடுமாறி பிழையான காட்சியையே முன்னிருத்தி வருகிறது. சான்றுக்கு ஒரு குளியல் சோப்பு விளம்பரத்தில் எந்தக் காட்சிக்கு முக்கியத்துவம் தருவது கேமரா கோணத்தை வைப்பது என்பதில் செயற்கை நுண்ணறிவு சரியான முடிவெடுக்க முடியாத சூழலைத்தான் செயல்படுத்தும்.

மொழி மற்றும் தொடர்பு

கிமி இயங்கும் மொழி மாதிரிகள் மக்கள் இயங்குதளத்திலும் (ஆன்லைன்) அமைதிதளத்திலும் (ஆஃலைன்) தொடர்பு கொள்ளும் விதத்தை வடிவமைக்கலாம். அவை எழுத்து நடைகள், பேச்சு முறைகள் மற்றும் புதிய மொழிகள் அல்லது பேச்சு வழக்குகளின் வளர்ச்சியையும் பாதிக்கின்றன. தமிழ் மொழியைப் பொருத்தவரை பல்வேறு வட்டார வழக்குகள் உள்ளன. புலமை சான்ற தனிநபர்கள் ஒரு சில வழக்குகளை உரிய மொழி வழங்குத் திறனோடு (ஸ்லாங்) பேசுவர். செந்தமிழ் சேர் நிலம் என்ற வரையறையில் பேசும் திறன் கொண்ட தரப்படுத்தப்பட்ட மொழி நடையே கருவிகளுக்கு உள்ளீடாகச் சேர்க்கப்பெறும். அத்தகையச் சூழலில் கரிசல்காட்டு வட்டார வழக்கைப் பயன்படுத்துகின்ற படைப்பாளனின் சொல் வழக்காறுகளைச் செயற்கை நுண்ணறிவின் வழி உணர்ந்து வெளிப்படுத்த முடியாத நிலை உருவாகும்.

இயல்பாக ஒரு மனிதரிடம் உரையாடலைத் தொடங்குகின்ற பொழுது ஹலோ என்றோ வணக்கம் என்றோ சொல்லித் தொடங்குகிற வழக்கம் உண்டு. இது செயற்கையானது. இயற்கையாகச் சாப்டியா, எப்ப வந்த, மூஞ்சி வாட்டமா இருக்கே என்று தொடங்குவதுதான் இயல்புநிலை. இதனை உணர்ந்து

செயற்கை நுண்ணறிவுக் கருவிகள் எப்படி எப்பொழுது எவ்வாறு தொடங்கி முடிப்பது என்பதை அல்கோரிதம் வழி செயல்படுத்த முடியாது.

படைப்பாற்றல் மற்றும் கலை

கிமி கருவிகள் கலை வெளிப்பாட்டின் புதிய வடிவங்களை உருவாக்கும்கலை முதல் இசை அமைப்பு வரை செயல்படுத்துகிறது. அவர்கள் படைப்பாற்றல் பற்றிய பாரம்பரிய கருத்துகளுக்குச் சவால் விடுகின்றன. படைப்பு செயல்பாட்டில் மனித கலைஞர்களின் பங்கு பற்றிய கேள்விகளை எழுப்புகின்றனர். ஒவ்வொரு கலைக்கும் மரபுத் தொடர்ச்சி என்ற கூறு உண்டு. அதனை அரிச்சுவடி என்று சொல்வர். அதைக் கற்றால்தான் நிகழ்த்துதலைத் திறம்பட அரங்கேற்ற முடியும்.

வேலை மற்றும் வேலை வாய்ப்பு

கிமி தொழில்நுட்பங்களால் இயக்கப்படும் ஆட்டோமேஷன் வேலை சந்தையை மறு வடிவமைக்கிறது. இது வேலை வாய்ப்பு முறைகள், திறன் தேவைகள், ஊதியப் பகிர்வு ஆகியவற்றில் மாற்றங்களுக்கு வழிவகுக்கிறது. இது வேலை, வெற்றி மற்றும் சமூக இயக்கம் குறித்த பண்பாட்டு அணுகு முறைகளைப் பாதிக்கலாம்.

நெறிமுறைகள் மற்றும் சார்பு

கிமி அமைப்புகள் தாங்கள் பயிற்றுவிக்கப்பட்ட தரவுகளிலிருந்து சார்புகளைப் பெறுகின்றன. அவை சமூக ஏற்றத் தாழ்வுகளை நிலைநிறுத்தலாம் அல்லது அதிகப்படுத்தலாம். உள்ளடக்கிய மற்றும் சமமான பண்பாட்டு நெறிமுறைகளை வளர்ப்பதற்கு இந்தச் சார்புகளை நிவர்த்தி செய்வது மிகவும் முக்கியமானது. முடிவுகள் எடுக்கப்படவேண்டிய சிக்கல்களுக்குத் தரவுகளைக் கொண்டு பகுப்பாய்வு செய்து வன்மை மென்மை களை கூறாய்வு செய்து முடிவெடுக்க வேண்டும். அதேச் சூழலில் சூழலுக்கு ஏற்ப முடிவுகள் மாறக்கூடும். அச்சூழலை உள்வாங்கிக் கொள்கிற தன்மை செயற்கை நுண்ணறிவிற்கு இல்லை.

கல்வி மற்றும் கற்றல்

கிமி இயங்கும் கல்வித் தொழில்நுட்பங்கள் தனிப்பயனாக்கப் பட்ட கற்றல் அனுபவங்களையும் உலக அளவில் அறிவிற்கான

அணுகலையும் வழங்குகின்றன. மக்கள் எவ்வாறு திறன்களையும் அறிவையும் பெறுகிறார்கள், கல்வி மற்றும் அறிவு சார் நோக்கங்களை நோக்கிப் பண்பாட்டு அணுகுமுறைகளை வடிவமைக்கிறார்கள். உலகம் முழுமையும் ஒற்றைக்குடையின் கீழ் ஆளுகை செலுத்த அனைவரும் விரும்புகின்றனர். குறிப்பாகக் கல்வித் துறையை அவ்வாறு கொண்டு செலுத்திவிட முடியும் என்று கருவிகளை நம்பும் கல்வியாளர்கள் கருதுகின்றனர். ஆகையினால் ஒரே மதிரியான கல்வி முறையினை உலகம் முழுமையும் கொண்டு செலுத்த விரும்புகின்றர். கல்வியியல் தொடர்பான ஆய்வு முடிவுகள் மாணவர்களின் கொள்திறனுக்கு ஏற்ப நிறை, குறை கல்வித்திறன் உடைய மாணவர்கள் எனப் பகுத்துள்ளனர். அதற்கேற்ப கற்பித்தல் திறனும் மாறுபடவேண்டு,. மாணவர்களின் உள்வாங்குத் திறனுக்கு ஏற்ப ஆசிரியர்கள் கற்பித்தல் முறையை வகுப்பறைச் சூழலில் மாற்றிக் கொள்வர். செயற்கை நுண்ணறிவு இச்சூழலைச் செயல்படுத்த முடியாது.

அடையாளம் மற்றும் பிரதிநிதித்துவம்

ஊடகங்கள், இலக்கியம் மற்றும் பிற பண்பாட்டு கலைப்பொருட்களில் தனிநபர் மற்றும் குழுக்கள் எவ்வாறு பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்றன என்பதை வடிவமைப்பதில் கிமி தொழில்நுட்பங்கள் பங்கு வகிக்கின்றன. இது அடையாளம், பன்முகத்தன்மை, உள்ளடக்கம் ஆகியவற்றின் உணர்வைப் பாதிக்கலாம். ஒவ்வொரு தனிமனிதனுக்கும் சமூகத்தில் தனித்த அடையாளம் உண்டு. அவன் படைப்பாளியாக இருந்தால் சமூகத்துக்கும் தனக்குமான உறவையும் பிரதிபலிப்பையும் வெளிப்படுத்துவான். அத்தகைய படைப்பாற்றல் தன்மை கருவிகளுக்கு இல்லை. இலக்கியம் என்பது சொற்களுடைய கூட்டமைப்பு மட்டுமன்று. சமூகத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்பர். சமூக ஒழுகலாறுகளையும் சமூகச் சிக்கல்களையும் உற்றுநோக்கித் தேவைக்கேற்ப இலக்கிய உருவாக்கங்களைப் படைப்பாளிக்கள் உருவாக்குவர். அத்தகைய தன்மை செயற்கை நுண்ணறிவிற்கு வாய்க்கப்பெறாது.

கண்காணிப்பு மற்றும் தனியுரிமை

கிமி உந்துதல் கண்காணிப்பு தொழில்நுட்பங்கள் தனியுரிமை, சுதந்திரம், சுயாட்சி பற்றிய கவலைகளை எழுப்புகின்றன. அவை

கண்காணிப்பு நிறுவனங்களின் மீதான நம்பிக்கை, பாதுகாப்பு, தனிப்பட்ட உரிமைகளுக்கு இடையே உள்ள சமநிலை ஆகியவற்றின் மீதான பண்பாட்டு அணுகு முறைகளைப் பாதிக்கின்றன. கடந்தகாலங்களில் சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் என்னும் சிந்தனைகளை முன்னிறுத்தி உலக நாடுகள் ஆதிக்கச் சக்திகளிடமிருந்து விடுதலை பெற்றன. உலகின் வல்லாதிக்கம் பெற்ற நாடுகளின் ஜனநாயகத் தன்மையை நிலைநிறுத்த ஐக்கிய நாடுகள் சபை உருப் பெற்றது. தனிமனித உரிமையையும் கடமையையும் வலியுறுத்தியது. தனியார்மயம், தாராளமயம் பரவி இருக்கிற இன்றைய விரைவுச் சூழலில் மனிதத்தன்மை வினாக்குறியாகி வருகிறது.

பண்பாட்டுப் பாரம்பரிய பாதுகாப்பு

பண்பாட்டுப் பாரம்பரியத் தளங்கள், கலைப்பொருட்கள் மற்றும் மொழிகளை டிஜிடல் மயமாக்கவும் பாதுகாக்கவும் கிமி கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. அவை பண்பாட்டு வளங்களை அணுகுவதை எளிதாக்குகின்றன. மேலும் பண்பாட்டுப் பன்முகத்தன்மையைப் பாதுகாப்பதில் முக்கிய பங்களிக்கின்றன. ஒவ்வொரு தேசிய நிலப்பகுதியும் பல்வேறு இனக்குழுக்களால் ஒருங்கிணைக்கப் பெற்றுள்ளன. பண்பாட்டுப் பன்முகத்தன்மையை நிலைபெற வைக்க வேண்டும் என்றால் இனக்குழுக்களின் பண்பாட்டு அடையாளங்களைப் பாதுகாக்கவேண்டிய தேவை உள்ளது. இனக்குழுக்களின் அடையாளங்கள் புறக்கணிக்கப்படுகிற பொழுது பன்முகத்தன்மை சிதையும். இத்தகைய நுண்பண்பாட்டுக் கூறுகளை ஏற்றும் பாதுகாத்தும் வரவேண்டிய தேவை உள்ளது.

உடல் நலம் மற்றும் நலவாழ்வு

கிமி தொழில்நுட்பங்கள் சுகாதாரம் வழங்கல், மனநல ஆதரவு, நலவாழ்வு தலையீடுகளை மாற்றுகின்றன. அவை ஆரோக்கியம், நோய், நலவாழ்வு ஆகியவற்றை மேம்படுத்துவதில் தொழில்நுட்பத்தின் பங்கு பற்றிய பண்பாட்டு அணுகுமுறைகளைப் பாதிக்கின்றன. மனிதனின் உடல் நலனையும் உள்ள நலனையும் மனிதர்கள் மட்டுமே உய்த்துணர முடியும். பல நேரங்களில் மனித மனம் ஆழ்கடல் போன்று சலனமற்று இருக்கமான சூழ்நிலையில் இருக்கும். இத்தகைய சூழ்நிலையில் அணுக்கமான கலந்துரையாடல் வழி (கவுன்சிலிங்) சலனத்தைக் களையலாம்.

உடல்நலம் குறைபாடு உடைய சூழலில் அன்பான ஆதரவான மொழியே அவரைத் தேற்றும். ஆறுதலாகப் பேசும் செவிலியர்களும் குடும்ப நலம் குறித்து உரையாடும் மருத்துவர்களுமே சிறந்தவர்களாக அடையாளப்படுத்தப்பெறுவர். மருந்து எடுத்துக்கொண்டால் நோய் தீரும்; எத்தகைய மருந்தை எப்பொழுது எவ்வளவு தேவைக்கேற்ப சூழலுக்கேற்ப அளிக்கவும் மாற்றவும் செய்வர். இதனை செயற்கை நுண்ணறிவு செயல்படுத்தாது.

இந்தக் காரணிகள் சிக்கலான வழிகளில் தொடர்பு கொள்கின்றன. பண்பாட்டு விதிமுறைகள், மதிப்புகள், நடைமுறைகளை கிமி எவ்வாறு பாதிக்கிறது என்பதை வடிவமைக்கிறது. சமூகத்தில் கிமி தொழில்நுட்பங்களின் பொறுப்பான வளர்ச்சியையும் வரிசைப்படுத்தலையும் மேம்படுத்துவதற்கு இந்த இயக்கவியலைப் புரிந்து கொள்வது அவசியமாகும்.

முடிவுரை

செயற்கை நுண்ணறிவு என்கின்ற வரம் மானுடச் சமூகத்திற்குக் கிடைத்தற்கரிய பேறு. நிலவியல், நீரியல், வானியல் வரை அனைத்துத் தளங்களிலும் ஆய்வை மேம்படுத்தச் செயற்கை நுண்ணறிவு பயன்படுகிறது. மனிதன், உலகின் கண்டுபிடிப்புகளில் உன்னதமான உயிரியாவான். அவனைச் சார்ந்த வாழ்வியல் வட்டங்களை அவனைப் போன்ற மனிதர்களைக் கொண்டே வளர்த் தெடுத்துக்கொள்ள வேண்டும். அறிவியல் கண்டுபிடிப்பு களான கருவிகள் அனைத்தும் மனிதனை மனிதத் தன்மை யிலிருந்து மாற்றுவதற்குத் துணைசெய்யக்கூடியன. ஆகையினால் மனிதனால் உருவாக்கப்படுகிற கருவிகள் மனிதத் தன்மையை மேம்படுத்த உதவிசெய்யாது என்பதைக் கடந்தகால வரலாறுகள் உணர்த்தியுள்ளன. அதன் தொடர்ச்சியாக நுண்ணறிவு என்னும் அறிவுத்தளமும் மனிதனைச் சார்ந்த பண்பாட்டு, நாகரிக விழுமியங்களைப் பாதுகாக்கவும் வளர்த்தெடுக்கவும் துணை செய்யாது என்பதை இவ்வெழுத்துரை முன்மொழிந்துள்ளது.

பயன்பட்ட இணையத்தளங்கள்

https://aicontentfy.com/en/blog/impact-of-ai-on-content-diversity-and-cultural-sensitivity#:~:text=AI%20can%20re cognize%20patterns%20and,reinforce%20existing%20biases%20and%20stereotypes<https://aicontentfy.com/en/blog/impact-of-ai-on-content-diversity-and-cultural-sensitivity%20>

<https://www.walkingthetalk.com/hubfs/2021%20PDFs/Reports%20and%20white%20papers/Future%20Impact%20of%20AI%20on%20culture%20-%20Walking%20the%20Talk.pdf>

<https://medium.com/@aarafat27/the-cultural-impact-of-artificial-intelligence-d6631425574d>

57

நீர்வை பொன்னையன் சிறுகதைகளில் ஒடுக்குமுறைக்கெதிரான குரல் - ஜென்மம் சிறுகதைத் தொகுப்பினை முன்னிறுத்திய பார்வை

லோககீதா. க,
தமிழ் மொழித்துறை, தேசிய கல்வி நிறுவகம், மகரகம், இலங்கை.
klgeeth@gmail.com

அறிமுகம்

ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் நீர்வை பொன்னையன் அவர்கள் தவிர்க்க முடியாத ஒருவராக விளங்குகின்றார். யாழ்ப்பாணத்தின் நீர்வேலி என அழைக்கப்படும் விவசாயக் கிராமத்தில் பிறந்த இவர் முற்போக்கு இலக்கிய செயற்பாட்டாளராக இயங்கியமையும் குறிப்பிடத்தக்கது பாடசாலைக் கல்வியை யாழ்ப்பாணத்தில் பூர்த்திசெய்து பின் இந்தியாவின் கல்கத்தாவில் கலைப்பட்டத்தையும் நிறைவுசெய்தார். இயல்பாகவே அவருக்கிருந்த மானிட நேயம் கல்கத்தாவில் கல்வி கற்கச் சென்ற காலத்தில் மெருகூட்டப்பட்டு சமூக விடுதலைச் சிந்தனை குறித்த செயற்பாட்டாளராக மாற்றியது. கல்கத்தாவிலிருந்து திரும்பி, விவசாயியாகத் தன் வாழ்க்கையை ஆரம்பித்தார். தன் இடதுசாரிச் சிந்தனைகளை வெளிப்படுத்த இலக்கியகாரராக மாறினார். தன் சமூகத்தின் மீதான பார்வையை சிறுகதைகளாக வெளிப்படுத்தினார். ஒரு இயக்கச் செயற்பாட்டாளராக செயற்பட்ட அதேவேளை இலக்கியகாரராகவும் இயங்குகின்ற சூழலில் முற்போக்கு இயக்கம், முற்போக்கு எழுத்தாளர் சங்கம் என்ற எண்ணக்கருக்கள் உருவாகி வளர்ச்சிபெற்றன. இவ்வளர்ச்சியின் ஆரம்பப் புள்ளியாக மறுமலர்ச்சி இயக்கத்தின் செயற்பாடுகள் அமைந்தமை முக்கிய காரணியாகும். ஆரம்பகால எழுத்தாளர்களது தொடர்வளர்ச்சியாகவே நீர்வையும் எழுத்துலகில் பிரவேசிக்கின்றார். இச்சூழலில் எழுந்த எழுத்தாளர்களுள் தொடர்ச்சியாக எழுதி வந்தவராக நீர்வை

பொன்னையன் விளங்குவதோடு பொது அமைப்புகளிலும் இணைந்து பணியாற்றினார் இலங்கைத் திரைப்படக் கூட்டுத் தாபனம், விபவி, இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் போன்ற வற்றிலும் இணைந்து பணியாற்றியதோடு இறக்கும் வரை இலக்கிய செயற்பாட்டாளராக இயங்கி வந்தமை முக்கிய அம்சமாகும்.

இந்த அடிப்படையில் இவரது சிறுகதைகளில் சமூகத்தின் அவலங்கள், தேவைப்பாடுகள், சாதாரண மக்கள் மீது திணிக்கப் பட்ட ஒடுக்குமுறைகள் என்பன காலத்துக்காலம் வேறுபடும் பொழுதெல்லாம் இவரது சிறுகதைகளில் அவை வெளிக்கொணரப் பட்டன. இதனூடாக, அவர் சமூகத்தில் காணவிளைந்த மாற்றம், அவரது படைப்புப் பணி என்பன முக்கிய பங்கு வகிப்பதனை அவதானிக்க முடிகின்றது. இது தொடர்பாக இவரது ஜென்மம் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள ஒடுக்குமுறைக்கெதிரான குரல் என்ற மையக்கருத்தில் ஆய்வு செய்தலும் இச்சிறுகதைகள் ஊடாகப் பேசவேண்டிய பல அம்சங்களை வெளிக்கொணர்தலும் அவசியமாகிறது.

ஆய்வுப் பிரச்சினை

ஈழத்தின் முற்போக்கு எழுத்தாளர்களுள் முக்கியமான ஒருவராகப் பார்க்கப்படும் நீர்வை பொன்னையனின் படைப்புக்களில் காலத்துக்காலம் சாதாரண மக்களின் வாழ்வியல் போராட்டங்களை மையப்படுத்திய விடயங்கள் வெளிக்கொணரப் படுகின்றன. அந்தவகையில் ஈழத்தில் தமிழ் மக்கள் மீது இலங்கைப் பேரினவாதிகள் மேற்கொண்ட ஒடுக்குமுறைகளுக்கு எதிரான குரல் மற்றும் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் மீது ஆட்சியாளர்கள் மேற்கொண்ட வன்முறைகள் மற்றும் அவற்றுக் கெதிரான குரல் நீர்வை பொன்னையனின் படைப்புகள் ஊடாக எவ்வாறு வெளிக்கொணரப்பட்டுள்ளன என்பதும் ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் இவை எத்தகைய வகிபங்கினை ஆற்றியுள்ளன என்பனவும் ஆய்வுப் பிரச்சினையாக எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

ஆய்வு நோக்கம்

நீர்வைபொன்னையனது ஜென்மம் சிறுகதைத் தொகுப்பிலுள்ள கதைகள் ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டங்களின் பதிவுகளாகக்

காணப்படுகின்னறமையால் அவை பற்றி நோக்கவேண்டியது காலத்தின் தேவையாகவும் காணப்படுகின்றது. இவரது சிறுகதைகளின் உள்ளடக்கம் தொடர்பாக பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் குறித்த தொகுப்பில் உள்ள கதைகள் தனித்துப் பார்க்கப்படவேண்டியவையாகக் காணப்படுகின்றன. இவ்வாய்வு முழுமையான ஆய்வுக்குரிய திறவுகோலாகவும் அமையும்.

ஆய்வு முறையியல்

இவ்வாய்வு நீர்வை பொன்னையனின் ஜென்மம் சிறுகதைத் தொகுப்பு, நினைவலைகள் என்ற வாழ்க்கை வரலாற்று நூல் இரண்டினையும் முதன்மை ஆதாரங்களாகவும் நீர்வை பொன்னையனின் ஆக்கங்கள் தொடர்பான கட்டுரைகள், சஞ்சிகைகளில் இடம்பெற்ற மதிப்பீடுகள் என்பனவற்றை இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் கொண்டு அவை எளிய பகுப்பாய்வு முறைக்கு உட்படுத்தப்பட்டு விவரண முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நீர்வை பொன்னையன் சிறுகதைகளில் ஒடுக்குமுறைக்கெதிரான குரல்

காலங்காலமாக சாதாரண பொதுமக்கள் மீது அரசு பிரயோகிக்கும் அடக்குமுறைகள் மக்களின் குரல் வளையை நெரிக்கும் போது புரட்சி வெடிக்கும் என்பதில் எத்தகைய சந்தேகமும் இல்லை. இத்தகைய புரட்சிகள் சாதாரண மக்களின் ஒற்றுமையை, அவர்கள் விரும்பும் மாற்றத்தை எடுத்துக் காட்டுகின்றன. அவ்வாறுதான் ஈழத்திலும் காலத்திற்குக் காலம் ஆட்சிப் பீடம் ஏறும் அரசினால் தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு அவர்களது வாழ்வியல் கேட்விக்குட்படுத்தப்பட்ட போது விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வாறே நிலவுடமை அதிகாரிகள் மற்றும் முதலாளி வர்க்கத்தினரால் சாதாரண மக்களின் வாழ்வியல் உரிமைகள் பறிக்கப்பட்டபோது சாதாரண மக்கள் பேதமின்றி ஒன்று திரண்டு ஒடுக்குமுறைக் கெதிராகக் குரல் எழுப்பியுள்ளனர். இத்தகைய நிகழ்வுகள் வரலாற்றுப் பதிவாக ஆவணப்படுத்தப்படுகின்ற அதேவேளை படைப்பாளிகளாலும் காலத்திற்குக் காலம் இலக்கியங்களின் மூலமும் வெளிக்கொணரப்படுகின்றன. அந்தவகையில் நீர்வை

பொன்னையன் தான் வாழ்ந்த காலப்பகுதியில் அப்பாவி மக்கள் மீது பிரயோகிக்கப்பட்ட ஒடுக்குமுறைகளுக்கெதிரான குரலை தன் சிறுகதைகள் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார். அவ்வாறுதான் ஜென்மம் சிறுகதைத் தொகுப்பில் உள்ளடங்கியுள்ள விடியல், முடிவிலிருந்து ஆரம்பம், லங்கா தகனம், எழுச்சி, மே தினம் போன்ற சிறுகதைகள் சாதாரண பொது மக்கள் மீது அதிகார வர்க்கத்தினரால் பல்வேறுவகைகளில் திணிக்கப்படும் ஒடுக்குமுறைகளையும் அவற்றக்கெதிராக மக்கள் ஒன்றுதிரண்டு புரட்சிகளை நடாத்துவதையும் மையப்படுத்திய சிறுகதைகளாகவே காணப்படுகின்றன. ஒடுக்குமுறைக்கெதிராக மக்கள் எழுப்பும் குரல்கள் தனியே தன் மொழிசார்ந்தவர்களுக்காக மட்டுமல்லாது, சர்வதேசம் நோக்கியும் படைப்புகள் ஊடாகக் குரல் கொடுக்கின்றமை இவரது சிறுகதைகளில் காணப்படுகின்ற சிறப்பம்சமாகும். அவரது படைப்புகளில் மையப்படுத்தப்பட்டுள்ள குரல்கள் மொழி இன பேதம் இன்றி ஒடுக்குமுறைக் கெதிரான மக்கள் புரட்சி என்ற புள்ளியிலேயே மையப்படுத்தப்பட்டுள்ளன.

ஆய்வு வரையறையைக் கருத்தில் கொண்டு, ஜென்மம் சிறுகதைத் தொகுப்பில் உள்ளடங்கியுள்ள சிறுகதைகளின் அடிப்படையில் அதிகார வர்க்கத்தின் அடக்குமுறைக்கெதிரான குரல், இன ஒடுக்கு முறைக்கெதிரான குரல், ஏகாதிபத்திய ஒடுக்குமுறைக் கெதிராக சர்வதேசத்தை நோக்கிய பார்வை என்ற அடிப்படையில் அவரது சிறுகதைகளை நோக்கமுடிகின்றது. இச்சிறுகதைகள் காலத்திற்குக் காலம் நிகழ்ந்தேறிய வரலாற்றுச் சம்பவங்களை அடியொற்றி எழுதப்பட்டமையால் ஈழத்துப் படைப்பிலக்கியங்களில் முன்னிலைப்படுத்தப்படும் சாதாரண மக்களின் வாழ்வியல் போராட்டங்கள் அடக்குமுறைகளும் அவற்றுக்கெதிரான மக்கள் புரட்சிகளும் முன்னிலைப்படுத்தப் படுவதனையும் அவதானிக்கமுடிகின்றது.

அதிகார வர்க்கத்தின் அடக்குமுறைக்கெதிரான குரல்

முடிவிலிருந்து ஆரம்பம் என்ற சிறுகதையில் நீர்வைபொன்னையன் ஒடுக்குமுறைக்கெதிரான மக்கள் புரட்சி காலந்தோறும் வெள;வேறு வடிவங்களில் இடம்பெற்றமையை பதிவுசெய்கிறார். தனியே வரலாற்றுப் பதிவாக எழுதிச் செல்லாது சிறுகதை அமைப்புக்கேற்ப அதன் வடிவம் குன்றாது

முன்னெடுத்துச் செல்லுகின்றமை ஒரு படைப்பாளன் படைப்பின் உருவம், உள்ளடக்கம் மீது கொண்டிருக்க வேண்டிய அக்கறையை எடுத்துக்காட்டுகின்றது. தன் கணவனை மக்கள் போராட்டத்தில் இழந்து பின் தன் மகனையும் மக்கள் போராட்டத்திற்கு அனுப்பி வைக்கும் வீரத்தாயை சங்க காலத்தில் மட்டுமல்ல தற்காலத்திலும் பார்க்க முடியும் என்பதாகப் படைத்துள்ளார். மக்கள் ஒடுக்குமுறைக் கெதிரான குரல்கள் ஒருபோதும் ஓய்வதில்லை என்பதையும் எடுத்துக்காட்டுகின்றார்.

அவன் அவசரமாகச் செல்கின்றான்.

சென்றுகொண்டிருக்கும் அவனுடைய முதுகுப் புறத்தைப் பார்த்த படியே அவள் நிற்கின்றாள்.

இதே மாதிரித்தான், இவனைப் போலைதான் அண்டைக்கு அவரும்.....

அவளுடைய கணவனின் உருவம் அவள் கண் முன் நிழலாடுகின்றது.

அவளுடைய கண்கள் குளமாகின்றன.

தன்னுடைய கணவனோடு அவளும் இதே வேகத்தில் பல ஊர்வலங்களில் சென்றிருக்கின்றாள். கூட்டங்களில் பங்கு பற்றியிருக்கின்றாள். அப்போது அவள் கணவனும் இதே பூரிப்போடுதான் கதைத்திருக்கிறான். ஆனால் இன்று அவள் கணவன்?

அவள் கணவனை மக்கள் போரட்டத்தில் இழந்திலிருந்தாலும் தன் ஒரே மகனையும் அதில் முழுமனதோடு அனுப்பிவைக்கும் பங்கும் தமிழ்தாய்க்கு மட்டுமே உரித்தான வைராக்கிய மனநிலையைக் காட்டுவதோடு ஒடுக்குமுறைகள் ஒவ்வொரு தலைமுறையிலும் தொடர்வதையும் ஆசிரியர் சுட்டிச் செல்கின்றார்.

இச்சிறுகதையில் தந்தை மகன் போராட்டத்தை மட்டுமன்றி சாதாரண பொதுமக்கள் மீது ஆட்சியாளர்கள் மேற்கொள்ளும் வன்முறைகளையும் அதற்கெதிரான மக்கள் போராட்டங்களையும் குறிப்பிட்டுக் கூறுகின்றமை ஆவணப் பதிவாகவும் காணப்படுகின்றது. எடுத்துக் காட்டாக,

''பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களின் வேலை நிறுத்தத்தின் போது காட்டுமிராண்டித்தனமாக மாணவர்களைத் தாக்கினார்கள் பொலிஸார்.

இ.போ.ச வேலை நிறுத்தத்தின் போது தனது தந்தை பொலிஸ்காரரரால் கொடூரமாக அடிக்கப்பட்டு ஒரு கிழமையால் இறந்தார்.

மே மாதம் இருபத்தேழின் பின் -

மக்கள் அரசாங்கம் உதித்த மறுநாள் -

மக்கள் விரோத நடவடிக்கையிலீடுபட்ட எரி வீட்டுப் பத்திரிகைக் காரியாலயத்தின் முன், தேர்தல் முடிந்த பின் பின்பு மக்கள் ஆர்ப்பாட்டம் செய்த பொழுது பொலிஸாரால் அவர்கள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டார்கள்.

புஞ்சி பொரளையில் சோமபால என்ற இளைஞன் பொலீஸ் வெறியாட்டத்திற்கு இரையாகிச் செத்தான்.''

இவ்வாறு ஆட்சியாளர்களால் அப்பாவிப் பொதுமக்கள் தாக்கப் பட்டு அவர்கள் ஒடுக்கப்படுகின்ற போது மக்களின் புரட்சிகள் பதிலளிக்கத் தவறுவதில்லை என்பதை ஆசிரியர் பல்வேறு சம்பவங்கள் ஊடாக எடுத்துக்காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இன ஒடுக்கு முறைக்கெதிரான குரல்

லங்கா தகனம் என்ற சிறுகதை ஊடாக ஆசிரியர் 1983ஆம் ஆண்டு காலத்தின் இனக்கலவரத்தற்கு அழைத்துச் செல்வதோடு தமிழ் மக்களைக் காப்பாற்றுவதற்காகப் போராடிய அப்பாவிச் சிங்களச் சகோதரர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டமையையும் ஆழமாகப் பதிவு செய்துள்ளார். இதன்மூலம் ஒடுக்குமுறை இனமொழி பேதங்களைக் கடந்து எல்லோருக்கும் சமத்துவ வாழ்வு வேண்டி நிற்பதை எடுத்துக் காட்டுகின்றது. தமிழர்களைக் உயிரோடு கொன்றொழித்த சிங்களப் பேரினவாதத்தின் கைப்பொம்மைகளை நோக்கி ஜெயவீர வெதமாத்தயா என்ற தனிமனிதன் போராடுவதையும் அவரது வார்த்தைகளால் காடையர்கள் கூனிக்குறுகி தலைகுனிந்து நிற்பதும் அரசியல் வாதிகளின் தலைக்குனிவையும் அவர்களது அவமானங்களையும் பட்டவரத்தனமாக துணிச்சலுடன் முன்வைக்கிறார்.

''வெதமாத்தயா கேற்றைத் திறவுங்கோ! திறவுங்கோ!
முர்க்கத்தனமாய்க் கத்துகின்றனர்.
உதுதானோடா சிங்களவன்ரை வீரம்
வெதமாத்தயா ஆவேசமாய்ச் சாடுகின்றார்.

கொதித்துக் கொண்டு நின்ற அந்தக் கொலைகாறர் ஜெயவீரவை வியப்பாய்ப் பார்க்கின்றனர்.

கேவலம் வெறுங்கையோடை தன்னந்தனியனாய் நிக்கிற ஒரு பெண்பிள்ளையை ஐம்பது ஆம்பிளையள் ஆயுதங்களோடை கொல்லத் துரத்துறதுதான் சிங்களவன்ரை வீரமோடா?

ஜெயவீர வெதமாத்தயாவின் ஆக்ரோஷ வார்த்தைகள் சாட்டையடியாய் அந்த இனவெறிக் கொலைகாரர்களைச் சாடி, முட்டி மோதுகின்றன.''

சாதாரண பொதுமக்கள் எல்லோரும் சமத்துவ வாழ்வு வாழ முற்படுகையில் ஆட்சியாளர்களின் சுயநலத் தன்மை, அடக்குமுறையை விரும்பும் ஏகாதிபத்தியத்தின் கைக்கூலிகளுக்கு எதிராக காலங்தோறும் போராட்டங்கள் உலகில் எல்லா இடங்களிலும் நிகழ்ந்தேறுகின்றமையை எடுத்துக்காட்ட முடிகின்றது. இத்தகைய போராட்டங்களில் தனிமனித போராட்டங்களாலும் அப்பாவி மக்கள் மீதான ஒடுக்கு முறைக் கெதிராக குரல் எழுப்பப்படும் அவ்வாறு எழுப்பப்பட வேண்டிய தேவையையும் ஆசிரியர் ஜெயவீர வெதமாத்தயாவினூடாகச் சொல்லிச் செல்கின்றார்.

ஏகாதிபத்திய ஒடுக்குமுறைக் கெதிராக சர்வதேசத்தை நோக்கிய பார்வை

ஜென்மம் சிறுகதைத் தொகுப்பில் தனியே ஈழத்தில் இடம்பெற்ற ஒடுக்குமுறைக்கெதிரான குரலாக எழுதப்பட்ட சிறுகதைகளைத் தாண்டி எழுச்சி என்ற சிறுகதை நீர்வை பொன்னையனின் சர்வதேசத்தை நோக்கிய குரலாக ஒலிக்கின்றது. ஒடுக்குமுறையையும் அதிகார வர்க்கத்தின் அடக்கு முறையையும் விரும்பாத ஒரு புரட்டசியாளன் உலகின் எந்த மூலையில் மக்களின் குரல் நசுக்கப்பட்டாலும் அதற்கெதிராகக் குரல் எழுப்புவான். நீர்வை பொன்னையன் வியட்னாம் மக்கள் மீதான அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து அதற்காக ஈழத்து மக்கள்

நிகழ்த்திய போராட்டங்களைப் பேசுவதாக எழுச்சி சிறுகதை அமைந்துள்ளது. பொலிசாரின் எதிர்ப்புக்களை மீறி சாதாரண பொதுமக்கள் வெற்றிகரமாக மேற்கொண்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தையும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதி மக்கள் புரட்சியால் விரட்டப்பட்டதையும் முன்வைத்து சர்வதேச ஒடுக்கு முறைக்கெதிரான குரலாக எழுப்புவதனை அவதானிக்க முடிகின்றது.

''அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒழிக!
ஒரு வஜ்ஜிரக் குரல் முழங்குகின்றது.
அமெரிக்க யுத்த வெறியனே!
வியட்னாமை விட்டு!
பல குரல்கள் கோஷிக்கின்றன.
கோஷங்கள் வானை முட்டிச் சாடுகின்றன.
சுலோக அட்டைகள் வாகத்தில் உயர்கின்றன.

கற்களும் போத்தல்களும் முட்டைகளும் பல திசைகளிலிருந்து வந்த பென்ஸ் காரைத் தாக்குகின்றன.

ஒரு கூழ் முட்டை அமெரிக்க ஏகாதிபத்திய யுத்த வெறியனின் கன்னத்தில் வந்து விழுகின்றது. ''

என மேற்குலக ஏகாதியத்தியத்திற்கு எதிராக ஒரு சிறுதீவின் மக்கள் குரல் எழுப்புவதை தனது சிறுகதையில் பதிவு செய்துள்ளமை கவனத்திற்கொள்ளப்பட வேண்டியது.

இது தனியே ஒரு சமூக செயற்பாட்டாளனாகவோ எழுத்தாளனாகவோ அன்றி ஒரு எழுத்தாளனின் தன் நாடு கடந்து யாவரும் மக்கள் என்பதையும் அவரது சர்வதேசப் பார்வையையும் எழுத்தாளனது புரட்சி நோக்கையும் ஒருங்கே புலப்படுத்தி நிற்கின்றன. இவ்வாறாக இவரது ஜென்மம் சிறுகதைத் தொகுப்பில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிரான குரல்கள் பல்வேறு தொனிகளில் ஓங்கி ஒலிப்பதைக் காணமுடிகின்றது.

முடிவுரை

ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் நீர்வை பொன்னையனின் சிறுகதைகள் அவர் வாழும் சிறு கிராமத்திலிருந்து சர்வதேசம் வரை விரிந்து செல்லும் தன்மையை வெளிப்படுத்துகின்றன. ஒரு படைப்பாளனுக்கு இருக்க வேண்டிய

சமூக நோக்கு, ஒடுக்குமுறைக்கெதிரான புரட்சி என்பவற்றை ஆவணப்படுத்தி வழங்கும் பெட்டகமாக இருக்கும் தன்மையினையும் நீர்வையின் ஜென்மம் சிறுகதைத் தொகுப்புகொண்டுள்ளது.

உசாத்துணை

நீர்வை பொன்னையன், (2005). ஜென்மம், மீரா பதிப்பகம்

இரவீந்திரன்.ந, முன்னோடிகள் நால்வர், முற்போக்கு இலக்கிய எழுச்சி,(ப:125 -135), பூபாலசிங்கம் பதிப்பகம்,

முற்போக்கு கலை இலக்கியப் பேரவை, (2006). படைப்பு - பதிவு - பிரசாரம் நீர்வை பொன்னையனது சிறுகதைகளை முன்னிறுத்தி...,பக்: 175 - 202, முற்போக்கு இலக்கியத்தில் புனைகதைச் சுவடுகள், பூபாலசிங்கம் பதிப்பகம்

நீர்வை பொன்னையன், (2004). நாம் ஏன் எழுதுகிறோம், மீரா பதிப்பகம்

58

பாரதக்கதை தழுவிய கூத்து

முனைவர் முருகு தயாநிதி
முதுநிலை விரிவுரையாளர், தமிழ்மொழித்துறை
தேசிய கல்வி நிறுவகம், இலங்கை.
muruguthayanithy@gmail.com

ஆய்வு அறிமுகம்

பாரதக்கதை மக்கள் மத்தியில் விழுமிய பண்புகளை மேலெழச் செய்யும் தன்மைகொண்டு, பண்டையகாலமிருந்து கதைகூறும் முறையில் பரப்பப்பட்டு அல்லது கடத்தப்பட்டு வருகின்றது. ஆரம்ப காலங்களில் சூதர்கள் இக்கதைகளை பரப்பியதாக அறிகின்றோம். பண்டைய தமிழ்ச் சமூகத்தில் தொடராகக் கேட்கப்பட்டுவந்த இத்தகைய கதை, தாதன் வருகையினைத் தொடர்ந்தே மட்டக்களப்புத் தமிழகத்தில் மேலெழுவதனை தாதன் கல்வெட்டு புலப்படுத்துவதன்வழி கண்டுகொள்கின்றோம். எனவேதான், தாதன் வருகையினைத் தொடர்ந்து இக்கதையுடன் தொடர்புடைய நிகழ்த்துகலையும் படைப்புக்களும் எழுகின்றன. பொதுவாக 15ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இக்கதை பரவியமைக்கான ஆதாரம் கல்வெட்டின்வழி புலனாகின்றது. இவ்வாறான பின்னணியில் நோக்கும்போது, பாரதக்கதையுடன் தொடர்புடைய படைப்புக்களில், அக்கதையின் பொருண்மையினைக்கொண்டு அதிக கூத்துக்கள் எழுந்தமையினைக் கண்டுகொள்ளமுடிகின்றது. குறிப்பாக மட்டக்களப்புத் தமிழகத்தில் எழுந்த கூத்துக்களுள் அரைவாசிக்கு மேற்பட்ட கூத்துக்கள் பாரதக்கதையினைத் தழுவியவை. அத்தோடு, அவை மக்கள் மத்தியில் இன்றும் செல்வாக்குடைய கதைகளாகவும் அதனோடு தொடர்புடைய ஏனைய ஆக்கவடிவங்களாகவும் மேலெழுகின்றன.

ஆய்வு நோக்கம்

பாரதம் தழுவிய கூத்துக்களைக் கண்டுகொள்வதோடு, வாளபிமன் நாடகத்திற்கு முன்னர் பாரதக்கதையுடன்

தொடர்புடைய கூத்துக்கள் எழுந்திருக்கின்றமையினையும் கண்டுகொள்ளுதல்.

தமிழ்நாட்டில் பாரதக்கதை

பாரதயுத்தம் இடம்பெற்ற காலத்தைத்தொடர்ந்து திரௌபதி வழிபாடு பல்லவர் காலத்தில்தான் மேலெழுகின்றது. குறிப்பாக குப்தர்கள், கதம்பர்கள், வாகாடர்கள், சோழர்கள், சாளுக்கியர்கள் மற்றும் இராட்டிரகூடர்களின் இடைவிடாததாக்குதல்களைப் பல்லவர்கள் சந்தித்தபோது, அனீவர்கள் செய்வதறியாது திணறினர். அப்போதுதான் அவர்களுக்கு திரௌபதியின் தொன்மம் மேலெழுகின்றது. பாரதத்தினை முடித்துவைத்த பத்தினியாகிய திரௌபதியின் கதையினை நாடெங்கும் பரப்பினர். பாரதக்கதையின் உட்கருத்துக்களைப் பிரசாரத்திற்காகப் பயன்படுத்தினர், திரௌபதியின் வீரத்தினை பட்டிதொட்டியெல்லாம் குவியச்செய்தனர். இதற்காகக் கூத்தாடுதல், பாரதக்கதை படித்தல் என்ற யுத்தியினைக் கையாண்டனர். இவ்வாறான தொடரிலே பல்லவ மன்னர்களால் பாண்டவர்களுக்கு இரதங்கள் அமைக்கப்பட்டபோது, திரௌபதிக்கும் தனி இரதம் ஒன்றை கருங்கல்லினால் அமைத்தனர்.

சோழர் காலத்தில் பாரத, இராமாயணக் கதைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளமையினை அக்காலக் கல்வெட்டுக்களின்வழி கண்டுகொள்ளமுடிகின்றது. திருக்கோயில்களில் மகாபாரதம், இராமாயணம் என்பன வாசிக்கப்பட்டன. இவ்வாறு வாசிப்போருக்கும் விரிவுரை செய்வோருக்கும் ஊர்ச் சபையினர் இறையிலி நிலம் அளித்துள்ளனர். இவை பாரதப் பங்கு, பாரதப் புறம், பாரத விருத்தி, மகாபாரத விருத்தி என்று கல்வெட்டுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. பல்லவர் காலத்தில் பாரத மண்டபம் ஏற்படுத்தியதும், அவற்றில் பாரதம் படிப்போருக்கு மானியம் அளிக்கப்பட்டதையும் கூரம் செப்பேடு பதிவுசெய்கின்றது. நட்டாலம் சங்கரநாராயணர் கோவில் முன்புறமுள்ள பாறையில் உள்ள கல்வெட்டு "ஸ்ரீநட்டாலத்து ஆழ்வார் கோயிலில் மகாபாரதம் வாசிப்பதற்குக் கண்ணன் என்பவர் நிலக்கொடை வழங்கியுள்ளார்" என்கிறது. காஞ்சி மகாபெரியவர் சந்திரசேகரேந்திர சரசுவதி சுவாமிகள் மகாபாரதம் குறித்த செய்தியினை 13.09.1962 பதிவு செய்துள்ளார். இவ்வாறாக நாயக்கர் காலத்தில் கட்டப்பட்ட

மண்டபங்களில் பாரதம், இராமாயணம் தொடர்பான சிற்பங்கள் கும்பகோணம், மதுரை, தாரமங்கலம், திருநெல்வேலி, திருவில்லிபுத்தூர், தென்காசி, கிருட்டிணாபுரம், சுசீந்திரம், தர்மபுரி ஆகிய திருக்கோயில்களில் காணப்படுகின்றன. (இணையம் கோ.உருத்திராடம்) விஷ்ணுவினுடைய பத்து அவதாரங்களும் சிற்பமாக வடிக்கப்பட்டன. பண்டைக்காலம் தொட்டு வணங்கப்பட்டு வந்த துர்க்கை அம்மனும் மகிஷாசுரமர்த்தினி உருவங்களும் தூண்களில் வடிக்கப்பட்டுள்ளன. அத்தோடு சிவதுர்க்கை, விஷ்ணுதுர்க்கை வடிவங்களும் காணப்படுகின்றன.

பாரதக் கதையில் பத்தினித் தெய்வமான திரௌபதி, 14ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர்தான் வழிபடு தெய்வமாக பார்க்கப்படுகின்றாள். பல்லவர் காலத்திலே பாரதம் தொடர்பான குகைச் சிற்பங்களும் வில்லிபாரதப் பிரசங்கங்களும் காணப்பெற்றமைக்கான சான்றுகள் கிடைப்பினும், திரௌபதி அம்மன் வழிபாடு 14ஆம் நூற்றாண்டின் இறுதித் தொடக்கந்தான் கோயில் சடங்காகத் தமிழகத்தின் வழக்குப் பெற்றிருக்கவேண்டும். வில்லி பாரத்தை அடிப்படையாக் கொண்ட கூத்துக்கள் வில்லி பாரதப் பிரசங்கத்தைப் போலவே, 15ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே இங்கு நடைபெற்றிருக்க வாய்ப்புண்டு. ஆயினும், திரௌபதி அம்மன் கோயில்கள் தோன்றிய 15ஆம் நூற்றாண்டின் தொடக்கமே அவ்வழிபாட்டோடு தொடர்புடைய கதை தழுவிவரும் தெருக்கூத்தும் எழுந்தது. (தெருக்கூத்து நடிப்பு : 1999)

சென்னை, கடலூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், விழுப்புரம், வேலூர், திருவண்ணாமலை கள்ளக்குறிஞ்சி, திருப்பத்தூர், இராணிப்பேட்டை ஆகிய வட மாவட்டங்களில், திரௌபதி அம்மன் வழிபாடு முக்கிய வழிபாட்டு முறைகளில் ஒன்றாக அமையப்பெறுகின்றது. வடதமிழகத்தை தமிழகத்தின் தொண்டை மண்டலப் பகுதிகள் என அழைப்பர். இது, தொல் தமிழ்க் குடியின் தாய் தெய்வ வழிபாட்டு முறையின் நீட்சியாகவே பார்க்கப்படும். திரௌபதிக்கான தனிக் கோயில்கள் வட தமிழகத்தில் மட்டுமே அதிகமாக உள்ளன. ஆய்வாளர்களின் கருத்துப்படி தென்னிந்தியாவின் முதல் திரௌபதி அம்மன் கோயில், விழுப்புரம் மாவட்டம் செஞ்சிக்கு அருகே உள்ள, மேலச்சேரி கிராமத்தில் உள்ளது என்பர். செஞ்சியை மையப்படுத்தி உருவான திரௌபதி தொன்மத்தின் தனித் தன்மையை நிறுவியதில்

அடைக்கல பாரதியார், ஆதிகேசவ பாரதியார் முதலிய பாட்டு வாத்தியார்களின் பங்கு முக்கியமானதாகும். மேலும், மேலச்சேரி திரௌபதி வழிபாட்டிலிருந்து குருஷேத்திரம் வரையிலான திரௌபதி பண்பாட்டு தொன்மத்தை ஆய்வு செய்தவர் ஆல்ப்ஹில்த்மெய்தல் என்கிற ஆய்வறிஞர். இவர் எழுதிய, The Cult of Draupadi, Mythologies: From Gingee to Kurukestra நூலில், தமிழகத்தில் பல்லவர் ஆட்சிக் காலத்தில் பாரதக்கதை வெகுவாகப் பரவியதன் விளைவாக, திரௌபதி வழிபாடு பரவலானது என்கிறார். மேலும், செஞ்சிக்கு அருகேயுள்ள மேலச்சேரியைத் தென்னிந்தியாவின் திரௌபதி வழிபாடு உருவாவதன் தொடக்கப் புள்ளியாக நிறுவுவதுடன், தமிழகத்தில் காணப்படுகிற திரௌபதி வழிபாடு தனக்கென ஒரு தொன்மத்தை உருவாக்கியிருப்பதாகவும், அந்தத் தொன்மம் செஞ்சியை மையமாகக் கொண்ட அரசுகளின் வரலாற்றோடு இணைந்ததாகவும் உள்ளது என்கிறார். (இணையம்) திரௌபதி அம்மன் வழிபாட்டிற்கும் தெருக்கூத்துக்கும் இடையே நெருங்கிய தொடர்புண்டு. தெருக்கூத்தினை ஆய்வு செய்த அமெரிக்க ஆய்வாளர் ரிச்சர்ட் பிராஸ்கா, திரௌபதி வழிபாட்டை ஆய்வு செய்த ஹில்ட பெய்டல் போன்றோர், "திரௌபதியம்மன் கோயில் சார்ந்து தெருக்கூத்து உருவாகியிருக்க வேண்டும்" என்பது போன்ற கருத்தை முன்வைக்கின்றனர். அதற்கு தொடர்ந்து பத்துக்கும் மேற்பட்ட நாட்கள் நடக்கும் பாரதக் கூத்துகள் காரணமாக உள்ளன. இன்று திரௌபதி அம்மன் கோவில் திருவிழா காலத்தில் மட்டுமே மக்கள் பாரதக் கதை சொற்பொழிவைக் கேட்டும் பாரதக் கூத்தைப் பார்த்தும் வருகின்றனர்.

இலங்கையில் பாரதக்கதை

கொங்கு தேசத்தில் இருந்து தாதன் மட்டக்களப்புத் தமிழகத்திற்கு வந்தமையினைத் தாதன் கல்வெட்டு உறுதிசெய்கின்றது. இவனுடைய வருகைக் காலம் பற்றி இக்கல்வெட்டு குறிப்பிடாவிட்டாலும், எதிர்மன்னசிங்கன் ஆட்சிக்காலத்தில் அவன் வந்தமையினை இக்கல்வெட்டு உறுதிசெய்கின்றது. எதிர்மன்னசிங்க மன்னன் தோப்பாவையினைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்தான். (இன்றைய பொலநறுவை) இவனை மட்டக்களப்புத் தமிழகத்தின் கடைசி மன்னன் என்பர். இவனுடைய ஆட்சிக்காலம் காலம் கி.பி.1538 - 1582 வரையுமாகும். இவனுடைய ஆட்சிக்காலத்தில்தான் தாதன்

திருக்கோயிலில் இம்மன்னனைச் சந்தித்திருக்கின்றான் என்பதனை இக்கல்வெட்டு மேலும் உறுதிசெய்கின்றது. இக்கல்வெட்டுப்படி தாதன் வங்கதேசம், கலிங்கதேசம், மலையாளதேசம், அத்தினாபுரம் முதலிய தேசங்களுக்குச் சென்று பாரதக்கதையினைப் பரப்பிய பின்னரே, தென்னிலங்கையில் உள்ள கலிங்ககுலத்தோர்க்கு இக்கதையினைப் பரப்பும் நோக்குடன் வருகை தந்தமையினை உறுதிப்படுத்துகின்றான். அவ்வாறெனின், இக்கதை 15ஆம் நூற்றாண்டு காலத்திற்குப் பின்னர்தான் தமிழ்நாட்டில் பரவியிருக்கின்றமையினை அறிகின்றோம்.

தாதன், திருக்கோயிலில் வைத்துப் பாரதக்கதையினை மக்களுக்குப் பிரசாரம் செய்துகொண்டிருக்கின்றான். அவ்வேளையில் அங்கு சென்ற எதிர்மன்னசிங்க மன்னனுக்கு இக்கதையின் உள்ளீட்டினை விளக்கியபோது, அக்கதையினால் தூண்டப்பட்ட அம்மன்னன், அதனை மட்டக்களப்புதோறும் பரப்பும்படி கேட்டிருக்கின்றான். அப்போதுதான் வனமும் வனாந்தரமும் கடலும் இணைந்த ஒரு பிரதேசம் தேர்ந்தெடுக்கப்படுகின்றது. அந்த இடந்தான் இன்றைய பாண்டிருப்பு என்பதனை மட்டக்களப்பு பூர்வசரித்திரம், மட்டக்களப்பு மான்மிகம் என்பன அடையாளப்படுத்துகின்றன. இங்கு பாரதக்கதை ஆற்றுகைவடிவில் காட்டப்படுகின்றது. அதாவது, விஷ்ணுவுடன் பாண்டவர்கள் வைகுந்தம் சேர்ந்த பகுதி இந்த ஆற்றுகை வடிவில் மேலெழுகின்றது. இவ்வாறு அன்று ஆற்றுகை செய்யப்பட்ட வடிவத்தினை ஒட்டியே இன்று பாண்டிருப்பில் உள்ள திரௌபதி அம்மன் ஆலயத்தில் பதினெட்டுநாட்கள் சடங்கு இடம்பெறுகின்றது.

பாரதக் கதை தழுவிய கூத்து

இலங்கையில் பாரதக்கதை தழுவிய கூத்துக்கள் அதிகம் ஆற்றுகை செய்யப்படுகின்றன. இன்றுவரைக்கும் கணபதி ஐயர் எழுதிய வாளபிமன் நாடகமே முதல் நாடகமாகக் கொள்ளப்படுகின்றது. இந்த நாடகம் 1709 தொடக்கம் 1794 காலத்தில் எழுதப்பட்டது என்பர். ஆனால் அராலியூர் முத்தக்குமாரப் புலவரும் 1836ஆம் ஆண்டு வாளபிமன் நாடகத்தை எழுதியதாக மு.வி.ஆசீர்வாதம் எழுதிய "மனம்போல் மாங்கல்யம்" என்ற நாட்டுக்கூத்து நூலில் வரும் விபரப்பட்டியலில்

காட்டப்படுகின்றது. மட்டக்களப்பில் பயில்நிலையில் உள்ள வாளபீமன் நாடகத்தில் பாரதக் கதாபாத்திரங்கள் வருகின்றன. ஆனால், அக்கதையில் வரும் உள்ளீடு அல்லது பொருண்மை பாரதக்கதையுடன் தொடர்புபடவில்லை என்பதனைக் கருத்திற்கொள்ள வேண்டும். இவ்வாறான தொடரில் தருமபுத்திர நாடகம் மானிப்பாய் சுவாமிநாதர் (1765 - 1824) என்பவரால் எழுதப்பட்டதாக ஈழத்து தமிழ்க்கவிதைக்களஞ்சியம் அடையாளப் படுத்துகின்றது. இக்கூத்து முற்றிலும் பாரதக்கதையுடன் தொடர்புடையது. இவ்வாறான தொடரில் வீ.சி.கந்தையா இராமநாடகம், வீரகுமாரநாடகம், தருமபுத்திரநாடகம், பப்பிரபாக நாடகம், பதினெட்டாம்போர், குருக்கேத்திரன்போர், சூரசம்மாரம், குசலவநாடகம், பாண்டவர் வனவாசம், அநிருத்தநாடகம், பவளவல்லிநாடகம், அலங்காரரூபன்நாடகம், நரேந்திரநாடகம் முதலிய இருபத்தைந்துக்கு மேற்பட்ட நாடகங்களைக் குறிப்பிட்டு, இவற்றில் அநிருத்தநாடகம், அலங்காரரூபநாடகம், வீரகுமாரநாடகம், இராமநாடகம், தருமபுத்திரநாடகம் என்பவை தவிர ஏனைய நாடகங்களை மட்டக்களப்பின் பல்வேறு பிரதேசங்களில் இருந்த அண்ணாவிமார்களே எழுதியுள்ளனர் என்கின்றார். மட்டக்களப்புத் தமிழகம் (ப.64) இவற்றை நோக்கும்போது, 1964ஆம் ஆண்டு காலத்தில் இருபத்தைந்துக்கு மேற்பட்ட கூத்துக்களே ஆற்றுகைசெய்யப்பட்டிருக்கின்றன. ஆனால், இதனைத் தொடர்ந்து வந்த காலங்களில் அதிக கூத்துக்கள் எழுதப்பட்டு ஆற்றுகை செய்யப்பட்டிருப்பதனைக் கண்டுகொள்ளமுடிகின்றது. இவருடைய குறிப்பில் இருந்து நோக்கும்போது பெரும்பாலும் பாரதக்கதையுடன் தொடர்புடைய கூத்துக்கள் சில, கணபதி ஐயருடைய காலத்திற்கு முன்னரே எழுதப்பட்டமை தெரியவருகின்றது. ஆனால், அவற்றின் காலத்தினை வரையறுக்கமுடியாதுள்ளது. குறிப்பாக 13,14ஆம் போர், 15, 16ஆம் போர், 17, 18ஆம் போர் முதலிய கூத்துக்களை எழுதியவர்களின் பெயர் இதுவரை கண்டுகொள்ளப்படவில்லை. ஆனால், இக்கூத்துக்கள் ஏனைய பிரதேசங்களிலும் பதிவுசெய்யப் படவில்லை. குறிப்பாக 18ஆம் நாள் யுத்தம் காலத்தால் முந்திய கூத்தாக எழுகின்றது. எனவே, பாரதக்கதையுடன் தொடர்புடைய கூத்துக்கள் பல்வேறு பொருண்மையில் பேசப்படுவதற்குக் காரணம், இக்கதை மக்கள் மத்தியிலே இயல்பாகச் சென்றடைந்துள்ளது.

குறிப்பாக பாரதம் தழுவிய கூத்துக்கள் மட்டுமன்றி பாரதப்படிப்பு, பாரத அம்மானை, கஞ்சன் அம்மானை, வைகுந்த அம்மானை, திரௌபதி அம்மானை முதலிய அம்மானைகளும் பாரதக் கதையின் உள்ளீட்டினை மக்கள் மத்தியில் அம்மானை படித்தல் என்ற வகையில் கொண்டு செல்கின்றன. இவ்வாறான பெருமாற்றத்தால் பண்டைய காலம்தொடக்கம் பாரதக்கதையுடன் தொடர்புடைய பல்வேறு ஆற்றுகலைகள் தோற்றம்பெறத் தொடங்கின. அவற்றுள் மேடைநாடகம், கூத்து முதலிய ஆற்றுகலைகளைக் குறிப்பிடமுடிகின்றன.

தென்மோடி வடமோடிக் கூத்து

மட்டக்களப்புத் தமிழகத்தில் பயிலப்படும் தென்மோடிக் கூத்துக்கள் முப்பத்து நான்கினையும் வடமோடிக்கூத்துக்கள் எழுபத்தி இரண்டினையும் மட்டக்களப்பு மரபுவழி நாடகம் தருகின்றது. (ப.ப.260-263) தென்மோடிக் கூத்துக்களுள் ஏழு கூத்து பாரதக்கதை தழுவியதாக அமைய 27 கூத்துக்கள் ஏனைய கதைகளைத் தழுவி நிற்கின்றன. வடமோடிக் கூத்துக்களுள் முப்பத்தைந்து கூத்தக்கள் பாரதக்கதையினைத் தழுவி நிற்க, முப்பத்து ஏழு கூத்துக்கள் ஏனைய கதைகளைத் தழுவியுள்ளன. தற்போதைய தேடலின்படி பாரதக்கதை தழுவிய தென்மோடிக் கூத்துக்கள் இருபத்தேழும், வடமோடிக்கூத்துக்கள் ஐம்பத்திரண்டும் கிடைக்கின்றன. இவைதவிர நூற்றுப் பதினொரு கூத்துக்கள் ஏனைய கதை தழுவிய கூத்தக்களாக காணப்படுகின்றன.

பாரதம் தழுவிய தென்மோடிக் கூத்து

மட்டக்களப்புத் தமிழகத்தில் ஆற்றுகை செய்யப்பட்டுவரும் தென்மோடிக் கூத்துக்களாக அல்லி நாடகம் இரணியசம்ஹார நாடகம், இந்திரகுமாரன் நாடகம், இராவணன் மோட்சம், கடோற்கஜன் வதை, கந்தன் கருணை, கற்புக்கரசி நாடகம், கஜமுகன்வதை, கீசகன் வதை, சகுந்தலாவதி நாடகம், சத்தியவான் சாவித்திரி நாடகம், சாம்பேந்திரன் நாடகம், சித்திரபுத்திர நாடகம், சூரசங்காரம், நளச்சக்கரவர்த்தி அல்லது நளமகாராசன் நாடகம், நளாயினி, பாசுபதம் நாடகம், பாஞ்சாலன் சபதம், பாதுகை பட்டாபிசேகம், மன்மத தகனம், மார்க்கண்டேயன் நாடகம், வனவாசம் நாடகம், நளாயினி நாடகம், துரோபதி திருமணம் நாடகம், சத்தியவான் சாவித்திரி, ஜயாதிராசன் நாடகம் அல்லது ஜயாதி

மோட்சம் முதலிய தென்மோடிக்கூத்தக்கள் அடையாளப் படுத்தப்படுகின்றன.

பாரதம் தழுவிய வடமோடிக் கூத்து

மட்டக்களப்புத் தமிழகத்தில் ஆடப்படுகின்ற வடமோடிக் கூத்துக்களாக அரிச்சந்திரன் நாடகம், அல்லி நாடகம், அரிச்சந்திரன் மயாண காண்டம், அருச்சுனன் நாடகம், அசுவத்தாமன் யுத்தம், அசுவமேதயாக நாடகம், ஆஞ்சநேயர் நாடகம், ஆதிசிவன் யுத்தம், இடும்பன் போர் , எட்டாம்போர், கங்கையின் மைந்தன், கடோற்கஜன் சண்டை, கற்பரசி, கன்னன் சண்டை, காண்டாவனத் தகனம் கிருஷ்ணன்தூது, கீசகன் சண்டை, குருதட்சணை, குருகேத்திரன் போர், சராசந்தன் போர், சந்தனு மகாராசன் நாடகம், சயிந்தவன் நாடகம், சத்தியபாமா நாடகம், சித்திர புத்திரன் நாடகம், சித்திரசேனன் சண்டை, சிவராத்திரி கூத்து, சுபத்தரை கல்யாணம், சுவேதனன் சண்டை, சூரியபுத்திரன், நாரதர் கலகம், தருமபுத்திரன் நாடகம், தமயந்தி நாடகம், தருமர் அஸ்வமேத யாகம், தருமர் அசுவமேதி யாகம், திருமுருகன் கலியாணம், துரோணர் வில்வித்தை, துரோணர் மோட்சம், நரகாசூரன் வதை, துரோபதை வில்வளைவு, பகாசூரன் சண்டை, பதிமூன்றாம் பதிநான்காம் போர், பதினைந்தாம் பதினாறாம், பதினேழாம் பதினெட்டாம் போர், பகதத்தன்போர், பப்புரபாகன் நாடகம், பகாசூரன் நாடகம், பரசுராமர் சண்டை அல்லது பரசுராமர் யுத்தம், பார்வதி கல்யாணம், பிரத்தியும்மன் நாடகம், புரூரவச்சக்கரவர்த்தி நாடகம், மகாபாரதம் பத்தாம் நாள் யுத்தம், மகாபாரதப் பகலிரவுப்போர், மணிமாறன் சண்டை, மார்க்கண்டன் நாடகம், மாயமேகினி, வனவாசம் நாடகம், வானர யுத்தம், விராடபர்வம் நாடகம், வைகுந்தம் நாடகம் முதலிய கூத்துக்களைக்கொள்ளமுடிகின்றது.

முடிவு

பாரதக்கதையும் அக்கதையில் வரும் திரௌபதி வழிபாடும் பாரத காலத்தினைத் தொடர்ந்து, பல்லவர் காலத்தில் மேலாதிக்கம் பெற்றிருக்கின்றமையினைக் கண்டுகொள்கின்றோம். குறிப்பாக பல்லவர்காலத்தில் இடம்பெற்ற போரினைத் தடுக்கும் தெய்வம் என்ற அடிப்படையில் இவ்வழிபாடு மேலெழுந்திருக்கின்றது. இவ்வழிபாட்டினை மக்கள் மத்தியில் பரப்பும் தன்மையில் பாரதப்படிப்பு, கூத்து என்பன செல்வாக்குடையனவாக

இருந்திருக்கின்றன. தொடர்ந்து பாண்டவர்களுக்கு இரதக்கோயில் அமைத்தல் என்ற நிலையில் திரௌபதிக்கும் கோயில் அமைக்கப்பட்டிருக்கின்றது. சோழர்காலத்திலும் நாயக்கர் காலத்திலும் பாரதக்கதையுடன் தொடர்புடைய கதைகளும் ஆக்கங்களும் சிற்பங்களும் எழுந்திருக்கின்றன. ஆனால் திரௌபதி வழிபாடு பற்றித் தெளிவான பதிவுகள் இடம்பெறவில்லை. ஆனால், 14ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே திரௌபதி தெய்வமாக வணங்கப்படுகின்றாள். இக்காலத்திற்குப் பின்னரே அத்தெய்வம் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் சிறப்புப்பெற்றிருக்கின்றதோடு தெருக்கூத்து, கூத்து என்ற வடிவங்களும் அதனைத் தொடர்ந்து மேலெழுந்திருக்கின்றன. இலங்கையில் 15ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியைத் தொடர்ந்து இந்த வழிபாடு இடம்பெற்றிருக்கின்றமையினை தாதன் கல்வெட்டு அடையாளப்படுத்துகின்றது. எனவே, பாரதக்கதையும் அதனுடன் தொடர்புடைய திரௌபதி வழிபாடும் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் சமகாலத்தில் தோற்றம் பெற்றிருப்பது தெரியவருகின்றது. இவ்வாறு நோக்கும்போது பாரதக்கதையுடன் தொடர்புடைய கூத்து மற்றும் அம்மானைகள் என்பன தாதன் வருகையினைத் தொடர்ந்து எழுந்திருப்பதற்கான வாய்ப்பு ஏற்படுகின்றது. எனவே, கணபதி ஐயருடைய வாளபிமம் நாடகமோ, தருமபுத்திர நாடகமோ எழுவதற்கு முன்னரே, பாரதக்கதை மட்டக்களப்புத் தமிழகம்தோறும் பரப்பப்பட்டிருப்பது புலனாகின்றது. எனவே, கணபதி ஐயர் கூத்துக்களை எழுதும் முன்னரே பாரதக்கதையுடன் தொடர்புடைய பல்வேறு கூத்துக்கள் எழுந்திருப்பதற்கான வாய்ப்பு ஏற்படுகின்றது. வாளபிமன் நாடகத்தினை முத்தக்குமார கவிராயரும் எழுதியிருக்கின்றமையினால் ஒரு தலைப்பில் இரண்டு நாடகங்கள் எழுந்திருக்கின்றன. முன்னையது வடமோடியாகவும் பின்னையது தென்மோடியாகவும் நிற்கின்றது. இவ்வாறு நோக்கும்போது மட்டக்களப்புத் தமிழகத்திலும் வாளபீமன் நாடகம் எழுந்திருக்கவேண்டும். அவ்வாறாயின் காணபதி ஐயருடைய வாளபிமன் நாடகம் எது என்பது கேள்வியாகின்றது? இதனை ஆய்வுலகம் தேடியறிய வேண்டும்.

மேற்கோள்கள் (References)

பத்திரிகைகள்

கைலாசம், வே., (-), தமிழகத் தென் மாவட்டங்களில் அரவான் வழிபாடு, தன்னனானே : இதழ் 14.

மௌனகுரு,சி., (1993). பாண்டிருப்புத் திரௌபதை அம்மன் கோயில் பாரதச் சடங்கு - ஒரு நாடகநிலை நோக்கு, தமிழ் சாகித்திய விழா மலர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

புத்தகங்கள்

கமலநாதன், ச.இ., கமலநாதன் கமலா., (2005). மட்டக்களப்பு பூர்வசரித்திரம், குமரன் புத்தக இல்லம்,கொழும்பு - சென்னை.

கந்தையா, வீ.சி., (1964). மட்டக்களப்புத் தமிழகம், ஈழகேசரி பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம், யாழ்ப்பாணம்.

மௌனகுரு, சி., (1998). மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள், விபுலம் வெளியீடு, மட்டக்களப்பு.

59

வணிக மேலாண்மைத் திறன்கள்: திவாகர நிகண்டும் மேலாண்மை சிந்தனைகளும்

முனைவர் அ.இலட்சுமி தத்தை
உதவிப்பேராசிரியர்.
சுப்பிரமணிய பரதியார் தமிழ் மொழி மற்றும் இலக்கியப் புலம்
புதுவைப் பல்கலைக்கழகம். புதுச்சேரி. இந்தியா
lakshmi.duttai@pondiuni.ac.in

முன்னுரை

மேலாண்மையியல் என்பது இன்றையக் கல்விப்புல அறிவியலில் எல்லாத் துறைகளிலும் வேரூன்றியுள்ளது. கல்வியியல், மொழியியல், மருத்துவம், அறிவியல், வணிகம், பொருளாதரம் என எல்லாத் துறைகளிலும் வளர்ந்து உச்சம் தொட்டுள்ளது மேலாண்மை சிந்தனை. இன்றைய வணிக மைய உலகத்தில "மேலாண்மை" தொடர்பான கல்வி அதிமுதன்மையான நிலையில் உள்ளது. சிறுவணிகம் செய்ய விழைவோர் தொடங்கி பெரு வணிகம் செய்ய விழைவோர் வரை மேலாண்மை திறன் கற்றுத்தரப்படுகின்றது. இந்த மேலாண்மை ஆளுமையை "திறன் மேம்பாட்டுக் கல்வி" என்ற ஆளுகையின் கீழ் "வணிக மேலாண்மைத் திறன்கள்" என்ற கல்வியாகப் போதிக்கின்றனர். அறிவியல் சிந்தனைகளின் பெருவெளியாக இருப்பன செம்மொழி இலக்கியங்கள். தமிழர்களின் வணிக மேலாண்மைத் தொடர்பான அறிவியல் மீள்வாசிப்புக்கு உட்படுத்தவேண்டிய ஆழமான துறையாகும்.

நோக்கம்

தமிழனின் புறவாழ்வில் போருக்கு இணையாக வணிகம் இடம் பெற்றிருந்தமையைத் தமிழிலக்கியங்கள் வழி அறிய இயலும். தமிழன் அயல்நாடுகளுக்கும் சென்று வணிகம் செய்தமைக்குப் பல சான்றுகள் கொட்டிக்கிடக்கின்றன. சங்ககாலக் குலப்பிரிவு நிலையில் தொழில் வழி அமைந்த பிரிவுகளாகிய அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் ஆகியோர் தத்தம் கடமைகளையாற்றிச் சமுதாய ஆக்கத்திற்குத் துணை நின்றனர். பொருளாதார

வருவாயை ஈட்டுதற்குத் தொழிலும் அது சார்ந்த வணிகமும் முதன்மையிடம் பெறும். சமுதாயம் சிறப்பாக அமையவும் மக்கள் வாழ்க்கைமுறை சிறக்கவும் பொருள் தேவை. உலகத்துத் தொழில்களுள் மேலானதாகக் குறிப்பிடப் பெறும் தொழில்கள் உழவும் வணிகமும் ஆகும். இவ்விரண்டும் பண்டைத் தமிழகத்தில் சிறப்புற்று விளங்கின என்பதை

வியன்மேவல் விழுச் செல்வத்
திருவகையா னிசை சான்ற
சிறுகுடிப் பெருந்தொழுவர் (468 - 473)

என மதுரைக் காஞ்சி கூறுகின்றது. இவ்வாய்வின் நோக்கம் தமிழர்களின் வணிக மேலாண்மை குறித்த சிந்தனைகளை இன்றைய சமகால வணிக மேலாண்மைசிந்தனைகளுடன் ஒப்பாய்வு செய்வதே ஆகும்.

ஆய்வு அணுகுமுறை

1. தரைவணிகம், கடல்வணிகம், கரையோர வணிகம், நடுக்கடல் வணிகம் என நான்கு நிலை வணிகம் தமிழகத்தில் இருந்துள்ளமையை மயிலை சீனி. வேங்கடச்சாமி அவர்கள் குறிப்பிடுகின்றார்.

2. தமிழ் இலக்கியப் பரப்பில் பல வகைப்பட்ட தொழில் மற்றும் வணிகம்செய்தமைக்கான சான்றுகள் கிடைக்கின்றன என கா. சுப்பிரமணியன் குறிப்பிடுகின்றார்.

3. கணியன் பாலன்(2015) கருத்துப்படி வணிகத்தையும் வணிகனையும் அரசனே போற்றியுள்ளான் என்பதன் மூலம் வணிகத்தின் முக்கியத்துவம் விளங்குகின்றது என்கின்றார்.

4. Trade and commerce of Ancient Tamilagam(2020) என்ற கட்டுரை ஐவகை நிலங்களில் வெவ்வேறு தொழில்கள், வணிகம் வாழ்க்கையோடு இணைந்திருந்தன, வணிகர்களால் தமிழகம் சிறப்பும் செழிப்பும் கொண்டு விளங்கியது என்கின்றது.

5. கிருஷ்ணன்(2019) அவர்கள் தன் ஆய்வின் மூலம் வணிகர்களின் பண்புகளாகப் பட்டினப்பாலை 6 குணங்களைக் குறிப்பிடுகின்றது என்கின்றார். தமிழக

வணிகர்கள் மேலைநாட்டு வணிக அமைப்புடன் நெறுங்கியத்தொடர்பில் இருந்துள்ளனர் என்றும் பதிவிடுகின்றார்.

மேற்குறிப்பிட்டுள்ள ஆய்வுச்செய்திகளை முன்னோடிகளாகக் கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் இலக்கியங்களுக்கு இணையாக இலக்கணங்களும் மொழி இலக்கணங்களைத் தாண்டி, தமிழனின் வாழ்வியலையும் இலக்கணப்படுத்தியுள்ளன. வணிகம் தொடர்பான விதிமுறைகளும் தமிழ் இலக்கணிகளால் வரையறுக்கப்பட்டுள்ளமை இன்றையச் சூழலுக்கும் பொருந்துகின்றன. வணிகர்கள் அல்லது தொழில்முனைவோருக்கான தகுதிப்பாடுகள் அல்லது தொழில்முனைவோர் எப்படி இருத்தல் வேண்டும் என்பதை "திவாக நிகண்டு" என்ற இலக்கண நூல் தருகின்றது. திவாகர நிகண்டுடன் இன்றைய மேலாண்மைச் சிந்தனைகளை ஒப்பாய்வு முறையில் ஒப்பிட்டு ஆய்வு செய்வதாக அமைகின்றது இந்தக் கட்டுரையின் ஆய்வு முறை.

திவாகர நிகண்டு

வணிகர்களுக்குரிய குணங்கள்:

திவாகர நிகண்டு என்ற நூல் கி.பி.8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திவாகர முனிவரால் இயற்றப்பட்டது. மொத்தம் 9500 சொற்களுக்கு விளக்கம் கிடைக்கும் நிலையில், சிறப்பு என, இதில் பலபொருள் தரும் 384 சொற்கள் உள்ளன. சங்க கால இலக்கியச் சொற்களே அதிகம். பிற்காலச் சொற்கள் குறைவு. குணங்கள் என்ற தலைப்பில் நிகண்டு பல சொற்களுக்கு விளக்கம் தருகின்றது . அந்த நிலையில் வணிகம், வணிகன் இவற்றைப் பற்றிய பல்வேறு செய்திகளைப் பதிவு செய்துள்ளது.

தனிமையாதல், முனிவிலனாதல்
இடனறிந்தொழுகல், பொழுதொடு புணர்தல்
உறுவது தெரிதல், இறுவதஞ்சாமை
ஈட்டல், பகுத்தல் என்றிவையெட்டும்
வாட்டமில்லா வணிகரதியற் குணம் (தி.நி பா:299)

என்ற சேந்தன் திவாகர நிகண்டுவின் 299 வது பாடல் ஒரு வணிகனுக்கு அமையவேண்டிய (அ) இருக்க வேண்டிய குணங்கள் இவை இவை என விளக்குகின்றது.

1. தனிமையாதல்	-	தனிமையைப் பேணல்
2. முனிவினாதல்	-	கோபமின்மை
3. இடனறிந்தொழுகல்	-	இடமறிந்து பேசுதல்
4. பொழுதொடு புணர்தல்	-	நேரத்தில் செயல் புரிதல் + காலத்தோடு கடமைபுரிதல்
5. உறுவது தெரிதல்	-	வரப்போவதை அறிதல்
6. இறுவதஞ்சாமை	-	இழப்புக்குறித்து அஞ்சாதிருத்தல்
7. ஈட்டல்	-	பொருளீட்டல்
8. பகுத்தல்	-	பொருளைப் பகுத்தளித்தல்

இவையனைத்தும் ஒரு வணிகன் எப்படி இருக்க வேண்டும்என்பதை வரையறை செய்வதாக அமைந்துள்ளது.

தமிழர்களின்வரலாற்றில் வணிகம் ஓர் மைல் கல்லாகத் திகழ்ந்துள்ளது.தமிழர்கள் கடல் கடந்து சென்றும் வணிகம் செய்ததற்கான சான்றுகள் காணப்படுகின்றன.

மேற்கண்ட தமிழிலக்கியச் செய்திகளை இன்றைய மேலாண்மையியல் சிந்தனைகளுடன் பொருத்திப் பார்க்கும் முயற்சியே இப்பகுதியில் இடம்பெறுகின்றது. 20 ஆம் நூற்றாண்டில் வளர்ந்த கல்வியே வணிக மேலாண்மை. இந்தியாவிலும் இக்கல்வி மிக வேகமாகப் பரவிவிட்டது. வணிகம் செய்பவருக்கான கல்வியாக இக்கல்வித் திகழ்கின்றது. பல பாடப் பிரிவுகளை உள்ளடக்கிய இக்கல்வியில் மேலாண்மை அடிப்படைகள் (Principles of Management) என்ற பாடமும் ஒன்றாகும். இதில் இலக்கு நோக்கிய மேலாண்மை (Management by Objectives) என்ற பகுதியில் வணிகனின் தகுதிப் பாடுகள் விளக்கம் பெற்றுள்ளன.

1. Nurturing Solitude
2. Emotional intelligence(Emotional Quant)
3. Timely conversation

4. Smart working
5. Right thing at the right time
6. Sensing the Future
7. Risk taking ability
8. Profit maximization
9. Sharing the Profit.

மேற்கண்ட மேலாண்மையியல் கருத்துகள்

1. விற்பனையில் தன்னைத் தானே வடிவமைத்துக் கொண்டு மற்றவரிடமிருந்து வேறுபடுத்திக் கொள்ளல் அல்லது தனித்தன்மையுடன் இருத்தல்
2. தன்னிடம் பணியாற்றும் பணியாளர்களின் உணர்வுகளை அவர்கள் இடத்திலிருந்து உணந்து கொள்வதும் அவர்களது உணர்வுகள் பணிச்சூழலைப் பாதிக்காவிதத்திலும் பார்த்துக்கொள்ளுதல் வேண்டும்.
3. வணிகத்தில் பேச்சாற்றல் மிக முக்கியம். தன்னுடய விற்பனைப் பொருளை சந்தைப் படுத்துவதற்கு சரியான பேச்சாற்றல் தேவை.
4. சுயத் தொழில் செய்பவர்கள் தன் தொழிலில் கடின உழைப்போடு காரிய உழைப்பும் வேண்டும். சிறிய வாய்ப்புக் கிடைத்தாலும் அதனைத் தன் தொழில் சார்ந்து பயன்படுத்திக் கொள்ளும் காரிய உழைப்பு தெரிந்திருத்தல் வேண்டும்.
5. போட்டி நிறைந்த இந்த உலகத்தில் சரியான் நேரத்தில் சரியான செயலைத் தன் வணிகத்தில் செய்ய வேண்டும். இதற்கு சரியான திட்டமிடல் வேண்டும்.
6. நோக்கம் மிக முக்கியமானது. நோக்கத்தைச் சரியாக் முன்னெடுக்கும் போதுதான் எதிர்காலத்தில் சந்திக்கும் அல்லது எதிர்கொள்ளும் அனைத்தையும் சரிசெய்ய இயலும்.
7. இடர் ஏற்கும் குணம்: தொழிலில் பல சிக்கல்கள் வரும். அதனை எதிர்கொள்ளும் திறன் மிகச் சிறந்தது.

8. 8&9. தொழில் செய்வதன் நோக்கமே பொருளீட்டல். இதில் உச்சமாகப் பொருளீட்டும் போது நமக்குக் கிடைத்த இலாபத்தில் பணியாளர்களுக்குப் பங்கு தருதல் வேண்டும்.

வணிக மேலாணமையின் ஒன்பது கருத்துக்களை அப்படியே திவாகரத்துடன் ஒப்புமைப் படுத்தலாம்.

வ.எ	திவாகரம்	மேலாண்மை
1.	தனிமையாதல்	மற்றவரிடமிருந்து வித்தியாசப்படுத்துதல்
2.	கோபமின்மை	உணர்வுப் பூர்வமாக அணுகுதல்
3.	இடமறிந்து பேசுதல்	வியாபாரப் பேச்சு
4.	பொழுதொடு புணர்தல்	நேரத்தில் செயல் புரிதல், காலத்தோடு கடமையாற்றுதல்
5.	வரப்போவதை அறிதல்	எதிர்காலத்தை உணர்தல்
6.	இழப்புக்குறித்து அஞ்சாதிருத்தல்	இடர் ஏற்கும் குணம்
7.	ஈட்டல்	பொருளீட்டல்
8.	பகுத்தல்	இலாபத்தைப் பகிர்தல்

முடிவுரை

பல நூற்றாண்டு இடைவெளியினூடாக நாம் கற்கும் இந்த வணிகக் கல்வி, தமிழர்களின் தலையாயத் தொழிலாக இருந்தமையைப் பல நூல்கள் வழி உணரமுடிகின்றது.சங்க காலச் சமுதாயத்தில் வணிகர் சிறப்பிடம் பெற்றனர். வணிகர் தமக்கோதிய அறநெறியினின்றும் தவறாதும் இல்லற நெறியினின்றும் பிறழாதும், மணி, பொன், முத்து ஆகிய பல்வேறு பண்டங்களை விற்போராக விளங்கினர் என மதுரைக் காஞ்சி பதிவுசெய்கின்றது. ஊதியம் ஈட்டுவதையே நோக்கமாக்க் கொள்ளாது வாணிகம் செய்வதன் மூலம் அறத்தையே ஊதியமாக் ஈட்டும் அறநெஞ்சினை உடையவர்களாகவும் தமிழர்கள் திகழ்ந்தனர் என்று பட்டினப்பாலையும் பதிவுசெய்கின்றது. "அறநெறி பிழையாது வணிகம் இயற்றும் வேத வணிகர்" என நச்சினார்க்கினியர்

பத்துப்பாட்டு உரையில் குறிப்பிடுவது அறநெறியில் வாணிகம் செய்பவர் வணிகத்தில் வேதம் படைப்பவர்கள் எனக் கொள்ளலாம். இக்காலத்தைப் போல கள்ளச் சந்தை, கலப்படமும், கறுப்புப் பணமும் போற்றாது, வணிகர்கள் அருள் உள்ளமும் அறநேர்மையும் உடையோராகத் திகழ்ந்துள்ளனர்.

துணைநூல்கள்:

சுப்பிரமணியன், கா. ,(2011). சங்ககாலச் சமுதாயம். நியு செஞ்சுரி புக் ஹவுல். சென்னை.

ந.சுபிரமணியம், ந. , (2010). சங்ககாலச் சமுதாயம். நியு செஞ்சுரி புக் ஹவுல். சென்னை.

மயிலை சீனி. வேங்கடசாமி.(1974). பழங்காலத் தமிழர் வாணிகம் (சங்க காலம்) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட்., 41-பி, சிட்கோ இண்டஸ்ட்டிரியல் எஸ்டேட்,சென்னை - 600098.

கணியன் பாலன். 26.04.2015. பழந்தமிழர் கடல் வணிகம். கீற்று.காம். <https://www.keetru.com/index.php/2018-01-12-05-57-50/2014-03-08-04-39-26/2014-03-14-11-17-85/28402-5>

பண்டையத் தமிழகத்தில் பொருளியல் நிலை. உரையாடல். https://ta.wikipedia.org/.

60

தமிழர் பண்பாட்டு வரலாற்றை மீட்டெடுக்கும் தமிழ்ப் புதினங்கள் :

தமிழ் மகனின் ஞாலம் புதினத்தை அடிப்படையாகக்கொண்ட சிறப்புப் பார்வை

முனைவர் கூ.தமிழ்வேலு
இணைப் பேராசிரியர், தலைவர்
தமிழாய்வுத்துறை, அ வ அ கல்லூரி(தன்னாட்சி),
மன்னன் பந்தல், மயிலாடுதுறை

முன்னுரை

தமிழருடைய அரசர் வரலாறு எழுதப்பட்ட அளவிற்கு அவர்களின் சமுதாய வரலாறும் பண்பாட்டு வரலாறும் நாகரிக வரலாறும் கால முறைப்படி அறிவியல் அடிப்படையில் இது நாள் வரை எழுதப் பெறவில்லை. எழுதியுள்ள சிலரும் தங்களுடைய போக்குகளுக்கு ஏற்ப ஒரு பகுதிச் செய்திகளையே வெளிப்படுத்தி உள்ளனர். இந்நிலையில் கடந்த நூற்றாண்டில் எழுந்த புத்திலக்கிய வகையான புதினங்கள் பல தளங்களில் தமிழர் வரலாற்றைப் படைப்பாற்றல் சிந்தனைக்கு ஏற்ப மறு பிரதி ஆக்கம் செய்துள்ளன. கதைக்கருவினைத் தெரிவு செய்யும் பொழுது காலம் கடந்து நிற்கும் பணியினைப் படைப்பாளிகள் தம் பணிகள் வழி தந்துள்ளனர். வரலாற்றுப் புதினங்களை எழுதுகின்ற பொழுது தொலைநோக்குச் சிந்தனையோடு பதிவை உருவாக்கியுள்ளனர். படிக்கின்ற தமிழர் இதுதான் அந்தக் காலத்தின் வரலாறு, பண்பாடு, நாகரிகம், சமூகம் என்பதாக உய்த்துணரும் ஒரு நிலைப்பாட்டினை அடைந்திருக்கின்றனர். இந்நிலையில் பதிவு பெற்றுள்ள வரலாறு சரியான நிலையில் பதிவு பெற்றுள்ளதா என்பதை மீள் உருவாக்கம் செய்யும் எழுத்துரையாக இவ்வாய்வு அமைகிறது.

ஆய்வு நோக்கம்

வாசிப்புப் பழக்கம் குறைந்து வருகின்ற காலச் சூழலில் தமிழ்ப் பண்பாட்டுச் சிந்தனையினைப் படிக்கவும் பயன்

கொள்ளவும் கவனம் குறைந்துள்ள சூழலில் கடின படிப்புக்குக் கொண்டு செலுத்தாமல் எளிய நிலையிலான படிப்பில் அவர்களைக் கட்டொருமைப்பாடு உள்ளவராக மாற்றுவதற்குப் புதின இலக்கியங்கள் துணை செய்யும் என்கின்ற அடிப்படையில் வரலாற்றை முன்னெடுக்கின்ற புதினங்களை இளையோர் படிக்க வேண்டும் என்கின்ற நோக்கத்தில் இவ்வெழுத்துரை அமைகிறது.

ஆய்வு எல்லை

இவ்வெழுத்துரை தமிழருடைய வரலாற்றுப் பக்கங்களை வெளிப்படுத்துகின்ற வரலாற்று நூல்களையும் தமிழ் மகனுடைய புதினங்களில் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட ஞாலம் என்னும் புதினத்தையும் ஆய்வு எல்லையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது.

ஆய்வுக் கருதுகோள்

தமிழர்களின் வரலாறு எழுதப் பெறவில்லை; தமிழர்களுக்கு வரலாற்று அறிவு இல்லை: என்னும் சிந்தனையைப் பின்தள்ளி தமிழர்கள் வரலாற்றோடு வாழ்ந்தவர்கள். தமிழர் தத்தம் காலங்களில் தேவைப்படும் கால பரிமாணங்களுக்கேற்ப படைப்புகளைக் கொடுத்துள்ளனர். அப்படைப்புகள் அக்காலத்தின் சமூகப் பதிவுகளை உள்ளடக்கியே வெளிவந்துள்ளன. அப்படைப்புகளிலிருந்து அக்காலத்தின் வரலாற்றை மீட்டெடுக்க முடியும் என்னும் சிந்தனைகளை முன்னிறுத்துகின்ற கருத்தியல்களைக் இவ்வாய்வு கருதுகோள்களாகக் கொண்டு அமைகிறது .

ஆய்வு அணுகுமுறை

இவ்வாய்வுக் கட்டுரை வரலாற்றியல் அணுகுமுறை, ஒப்பியல் அணுகுமுறை, விளக்கவியல் அணுகுமுறை முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பெற்றுள்ளது.

புதினமும் பொருண்மையும்

அச்சுச் சாதனம் உருவாக்கத்தின் பொழுது அச்சகத்திற்குப் பணி தருவதற்காகவும் முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்குப் படிப்பதற்குப் பிரதியைத் தருவதற்காகவும் புதின இலக்கியம் தோற்றம் பெற்றது. ஆங்கில இலக்கியத்தினுடைய தழுவலாக

மொழிபெயர்ப்பாகப் புதின இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. தொடக்க காலத்தில் மொழிபெயர்ப்பு இலக்கியங்களாக வந்த புதினம் தொடர்ந்து சமூகம், வரலாறு, குடும்பம், கோட்பாட்டு ரீதியான புதினங்கள் என வளர்ந்து வந்தது. அப்படி வளர்ந்து வந்த தன்மையில் சமகால, கடந்த கால வரலாற்றைக் கதைக் கருவாகக் கொண்டு நாவல்கள் படைக்கப்பட்டன. அப்படைப்புகளில் சில காலத்தை வென்று நின்று உள்ளன. குறிப்பாகக் கல்கியின் பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம் பிரபஞ்சனின் மானுடம் வெல்லும் முத்துநாகுவின் சுளுந்தி முதலானவை தடம் பதித்துத் தமிழ் படைப்புலகில் ஒரு பெரிய சமூகப் தாக்கத்தை உருவாக்க உடன் நின்றவையாகும்.

தமிழ்மகன் புதினங்கள்

பா.வெங்கடேசன் என்னும் இயற்பெயருடைய தமிழ் மகன் வெள்ளை நிறத்தில் ஒரு காதல்(1984), மானுடப் பண்ணை(1996), சொல்லித் தந்த பூமி(1997), ஏ வி எம் ஸ்டுடியோ ஏழாவது தளம்(2007), வெட்டுப்புலி(2009) ஆண்பால் பெண்பால்(2011), வனசாட்சி(2012), ஆபரேஷன் நோவா(2014), தாரகை(2016), நான் ரம்யாவாக இருக்கிறேன்(2018), படைவீடு(2020), பிரம்ம ராட்சஷ்(2021), வேங்கை நங்கூரத்தின் ஜீன் குறிப்புகள்(2017) என்னும் புதினங்களை எழுதியுள்ளார். பூமிக்குப் புரிய வைப்போம், ஆறறிவு மரங்கள் என்னும் கவிதை தொகுதிகளையும் எட்டாயிரம் தலைமுறை, சாலை ஓரத்திலே வேலையற்றதுகள், மீன்மலர், அமில தேவதைகள், மஞ்சு அக்காவின் மூன்று முகங்கள் என்னும் சிறுகதைத் தொகுப்புகளையும் எழுதியுள்ளார்.

வேங்கை நங்கூரத்தில் ஜீன் குறிப்புகள் என்னும் புதினம் தொல்பழங்காலத்து நிகழ்விலிருந்து தொடங்கி சோழர் காலத்தின் முற்காலச் சோழர் காலம் பிற்காலச் சோழர் காலம் தற்காலம் எதிர்காலம் என முத்திறப்பாட்டுச் சிந்தனையோடு வரலாற்றோடு எதிர்காலவியல் சிந்தனையோடு படைப்பைத் தந்துள்ளார். படைவீடு என்னும் புதினம் தமிழகத்தின் வட மாவட்டங்களில் குறிப்பாகக் காஞ்சிபுரத்தை ஒட்டிய பகுதியில் நிலவிய பதிமூன்றாம் நூற்றாண்டு தொடங்கிய அயலவர் படை ஆதிக்கத்தின் போது அங்கு நிலவிய சம்புவராயரின் ஆட்சி நிலைப்பாட்டினைப் பதிவு செய்கிறார். இப்புதினம் தமிழக வரலாற்றில் புறக்கணிக்கப்பட்ட

ஒரு குறிப்பிட்ட சமூகத்தினுடைய வரலாற்றுப் பதிவினைப் பதிவு செய்து அவர்களுடைய எழுச்சி தமிழக வரலாற்றில் எத்தகைய பின் விளைவுகளை உருவாக்கியது என்பதை வெளிப்படுத்துகிறது. வெட்டுப்புலி என்னும் புதினம் கடந்த இரண்டு நூற்றாண்டு கால வரலாற்றை எடுத்தியம்புவதாக அமைகிறது. தீப்பெட்டியில் இடம்பெற்ற புகைப்படம் தமிழ்ச் சமூக வரலாற்றில் ஏற்படுத்திய அலையைப் பதிவு செய்கிறது.

வரலாற்றியலும் புதினமும்

இலக்கியப் படைப்பு தாம் எழுந்த காலத்தின் சமூக அரசியல் பொருளாதாரம் குறித்த சிக்கல்களைப் பதிவு செய்கின்றது. அத்தகைய இலக்கியங்களைத் திறனாய்வு செய்கிற போது அவ்வக் கால அரசியல் நிலை, பொருளாதார நிலை, சாதி, சமயம் முதலான கூறுகள் வெளிப்படுத்தப் பெறுகின்றன. இவ்வாறு சமூகம் சார்ந்த வரலாற்றுப் பதிவை ஆராய்வது வரலாற்றியல் அணுகுமுறையாகும். வரலாற்றின் காலம் இடம் மிக முக்கியமானதாகும். கதைக்கள நிகழ்வுகள் அத்துடன் இணைக்கின்றன. ஒரு கொள்கை காலந் தோறும் எவ்வாறு பின்பற்றப்பட்டுள்ளது என்று பார்ப்பதும் ஒரு கூறாகும்.

மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரம் தொடங்கி பிரபஞ்சனின் மானுடம் வெல்லும் என்னும் புதினம் பின்னர் கல்கியினுடைய பொன்னியின் செல்வன் ஊடாக இவ் வரலாற்றுப் போக்கினை உய்த்துணர முடியும். ஆர் கே. நாராயணனின் Waiting for Mathama மார்க்கண்டேயாவின் A Handful of Rice எனும் புதினங்கள் தனிமனித ஒழுக்கத்தை வெளிப்படுத்தக் கூடியவனாக அமைந்திருக்கின்றன. வரலாற்றுக் கண்ணோட்டம் காலந்தோறும் மாறக்கூடியன. கதை நாயகர்களும் கதையை நிகழ்த்திய நிகழ்ச்சிகளுமே மாறாதவை. ஒரு தளத்தில் இருந்து எழுதப்பட்ட வெவ்வேறு கதைகளை நாம் ஒப்பாய்வு செய்து பார்க்கிற பொழுது இதை உணர முடியும். வெண்மணி தொடர்பான கதைக்களனிலிருந்து வந்த படைப்புகளை ஆராயும் போது அறிய முடியும்.

புதினங்கள் உள்ளத்து உணர்ச்சியினுடைய வெளிப்பாடாக அமையும். அவ்வுணர்ச்சிக் குவியல் ஒரு சில நேரங்களில் பொதுவெளிக்கு ஏற்ப தன்னைப் பூடகமாக மாற்றிக் கொண்டு வரும்.

அவ்வகையில் வரலாற்றுப் புதினங்கள் என்பவை புனைவுகளை இணைத்துக்கொண்டு வரலாற்றைக் குறைத்துச் சொல்லுகிற நிகழ்வுகள் அமையும். சில நேரங்களில் வரலாற்றை மீட்டெடுத்து பதிவு செய்கின்ற அமைப்பில் இடம்பெறும். அவ்வகையில் முத்துநாகுவின் சுளுந்தியும் தமிழ் மகனின் புதினங்களும் அமைவதை உணர முடிகின்றன.

ஞாலமும் காலமும்

ஞாலம் என்னும் புதினம் தமிழ்மகன் அவர்களால் 2023 இல் எழுதப்பட்டது. 160 ஆண்டுகளுக்கு முந்தைய வரலாற்றை மீள் உருவாக்கம் செய்கிறது. அத்திப்பாக்கம் வெங்கடாசல நாயக்கர் என்னும் ஒரு தனி மனிதன் அக்காலக் கட்டத்தில் அரசோடும் சமூகத்தோடும் நகர் உருவாக்கத்தோடும் தொடர்பு கொண்டு எழுந்த, எழுப்பிய கோட்டோவியங்களை வெளிப்படுத்துகிறது. செங்கல்பட்டு மாவட்டமும் சென்னை மாநகரம் எவ்வாறு தன்னுடைய கடந்த காலங்களில் தன்னுடைய இருப்பைத் தக்க வைத்திருந்தது என்பதைக் கால பரிமாணத்தில் எழுதுகின்ற எழுத்துரையாக அமைகிறது. கிழக்கிந்தியக் கம்பெனி ஆங்கிலேய அரசாகப் புணரமைத்துக் கொண்ட காலத்தில் எழுந்த அசைவுகளை வெளிப்படுத்துகிறது. வெங்கடாசல நாயகரின் பார்வையில் 19 ஆம் நூற்றாண்டின் தமிழின எழுச்சியைப் பதிவு செய்துள்ளது.

ஞாலமும் நிலமும்

ஆங்கிலேய அரசின் எல்லீசு துரை, கலெக்டர் வால்ஸ், லசிங்டன், சுமீத் முதலானோரின் நில உரிமை தொடர்பான பிழையான முடிவுகளால் வஞ்சிக்கப்பட்ட விவசாயிகளின் கதையினை நிலத்தினுடைய கதையினை வெளிப்படுத்துகிறது. தமிழ் மண்ணின் நிலம் தமிழர்களிடம் இருந்திருக்க வேண்டும். அதுதான் வரலாறு.(தஞ்சை இராஜராஜேச்சுரம் என்னும் பெரிய கோயில் இராசராச சோழனால் கட்டப்பட்டது. ஆனால் இன்று தஞ்சை மராட்டிய மன்னனின் வாரிசான போன்ஸ்லே வசம் உள்ளது. முறையே தமிழக அரசிடமோ தமிழர்களிடமோ கோயில் உரிமை இருந்திருக்கவேண்டும்). உழைக்கும் மக்களிடம் இருந்த தமிழர் நிலம் அயலவர்களிடம் எவ்வாறு சென்று சேர்ந்தது என்னும் கருதுகோளை அடிப்படையாகக் கொண்டு நிலத்தினை மீட்க

முயலும் முயற்சி செய்கின்ற ஒரு தனி மனிதன் உழைப்பைச் சமூக சிந்தனையை வெளிப்படுத்துகிறது. ஆங்கிலேய ஏகாதிபத்திய அரசு தான் செய்த அல்லது தன்னைச் சார்ந்தவர்கள் செய்த சூழ்ச்சியினால் தமிழருடைய நிலம் இழப்புக்கு உள்ளாக்கப்பட்டது. மட்டுமின்றி அந்நிலத்திலேயே கூலி தொழிலாளியாக மாற்றப்பட்ட ஒரு இனத்தினுடைய வரலாற்றைப் பதிவு செய்துள்ளார்.

மன்னவேடு என்னும் பொருண்மையில் நில தானமாகக் கொடுக்கப்பட்ட நிலத்தை உரிய மக்களிடம் இருந்து ஆங்கிலேய அரசுக்கு முந்தைய அயலக மன்னர்களின் வழியாக மேல் வர்க்கத்தைச் சார்ந்த மக்களுக்கு மாற்றம் செய்து தரப்பட்டுள்ளது. அம்மாற்றத்தினை மீண்டும் உரிய மக்களுக்கு மீட்டு தருகின்ற ஒரு உரிமை போராட்டத்தைத் தனி நபராக முன்னெடுத்து செல்லுகிற நிகழ்வை விளக்குகிறது. பஞ்சம நில மீட்பு என்கின்ற போராட்டம் காஞ்சிபுரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிகழ்ந்து வருகிறது. மீட்டெடுக்கப்பட்டிருக்கின்றன .அதன் முன்னோடியாக மன்னவேடு நிலங்கள் குறித்து, உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்த ஒரு வரலாற்று நிகழ்வைப் பேசுகிறது. நிலம் உழைப்பாளி இடமிருந்து கைப்பற்றப்படுவதும் உழைப்பாளியை உழைக்கும் சூழலில் இருந்து விலக்கி வைப்பது காலம் காலமாக இருந்து வருகிற அரசகுல சூழ்ச்சிகளாகும்.

தாது வருஷபஞ்சம்

அரசு தன்னுடைய நிதி ஆதாரங்களை மக்களுக்கு உதவியாக வழங்குகின்ற பொழுது நேரடியாக இலவசமாக வழங்காமல் அதன் ஒரு பகுதியாக மக்களுடைய உழைப்பைப் பெற்றுக்கொண்டு ஊதியம் வழங்குகின்ற ஒரு நிலைப்பாடு உண்டு. அவ்வரிசையில் பதினெட்டாம் நூற்றாண்டினுடைய நிறைவு பகுதியில் தென்னிந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் ஏற்பட்ட மிகப்பெரிய பசி நோயினால் மக்கள் மாண்டனர். .அவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்வதற்காகச் சென்னை நகரில் பங்கிக்ஹாம் கால்வாய் என்னும் ஒரு மாபெரும் நீர் வழித்தடத்தை உருவாக்குகின்ற செயல்திட்டத்தை ஆங்கிலேய கவர்னர்கள் உருவாக்கினார்கள். இரயில் தடங்களை உருவாக்கினர். இங்குப் பணி செய்தால் பசிக்குக் கஞ்சி காய்ச்சி ஊத்துவார்கள். குறைந்த அளவு ஊதியம் கிடைக்கும். குறைந்த அளவு உணவுப் பொருள்

கிடைக்கும் என்கின்ற உறுதியைத் தந்தனர். இதன் வழியாக வறண்ட நிலப் பகுதிகளில் வேளாண் தொழிலில் ஈடுபட்ட மக்கள் சென்னை நகரை நோக்கிப் புலம்பெயரத் தொடங்கினார்கள். அவர்களுடைய வாழ்வு உயிர் பெற்று உயரத் தொடங்கியது.

மக்கள் உணவுத் தேவைக்காக உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தம்முடைய கிராமத்தை விட்டு நகரை நோக்கிப் புலம்பெயரத் தொடங்கினர். அவர்களுடைய வாழ்வு அவர்களுடைய நிலத்தில் இருந்து மீட்கப்பட்டது அல்லது விலக்கப்பட்டது என்கின்ற நிலைப்பாட்டை அறியாமலேயே அவர்கள் புலம்பெயர்ந்தார்கள். மக்கள் தமிழகத்தின் கடை கோடியில் இருந்தும் ஆந்திர நிலப்பகுதிகளிலிருந்தும் சென்னை நகரை நோக்கிப் புலம்பெயர்ந்தனர். இப்புலப்பெயர்வுகள் அவருடைய வாழ்வைத் தக்க வைத்துக் கொள்கிற தகவமைத்துக் கொள்கிற நிலைப்பாட்டைத் தந்தன. ஆனால் அவர்கள் உள்நாட்டிலேயே அகதிகளாக உருவாக்கப்பட்டனர் என்ற நிலைப்பாட்டினைத் தாது வருஷ பஞ்சத்தைக் குறித்த ஆங்கிலேய அதிகாரிகளின் ஆவணங்களும் குறிப்பிடுகின்றன.

சரபோசியும் இராமலிங்கரும்

தஞ்சை மராட்டிய மன்னன் இரண்டாம் சிவாஜி இறப்புக்குப் பிறகு வாரிசு இல்லாத ஒரு நிலைப்பாடு உருவாக்கியது. வாரிசு இல்லாத அரசுகள் அரசப் பகுதிகள் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தோடு இணைத்துக் கொள்ளுதல் என்னும் செயல்பாட்டு முறையின் அடிப்படையில் தஞ்சையைப் பிரிட்டிஷ் அரசு எடுத்துக் கொள்ள முயற்சி செய்கிறது. இரண்டாம் சிவாஜியின் மனைவியர் தங்களுக்கு ஓய்வூதியம் வேண்டும் என்று நீதிமன்றத்தில் முறையிடுகின்றனர். அந்த வழக்கு நிகழ்வதை எடுத்தியம்புகிறார்.சிவாஜியின் மனைவியருடைய எண்ணிக்கையும் அவருடைய வயதும் அக்காலக் கட்டத்தினுடைய பெண்களுடைய வாழ்வியலை வெளிப்படுத்தக் கூடியதாக அமைகிறது. அதே சூழலில் வெங்கடசல நாயகருடைய வளர்ப்பு மகள் காதல் வயப்பட்டு தங்களுடைய சூளையில் வேலை பார்க்கும் எளியவனோடு வீட்டை விட்டு வெளியேறுகின்ற சூழலில் அவர்களுடைய வாழ்வு கேள்விக்குறியாக மாறிப்போனதை தெளிவுபடுத்துகிறது.

வெங்கடாசலநாயகர் தான் வாழ்ந்த வீட்டுக்குப் பக்கத்தில் ஏழு கிணறு என்னும் பகுதியில் ஒரு இளைஞனாக இருக்கின்ற ராமலிங்கம் தன்னைவிட வயது குறைவான இருந்த போதும் அவனிடத்தில் ஒரு ஈடுபாடும் அவனுடைய செயல்பாடுகளை உற்று நோக்கும் தன்மையும் புதினத்தில் இடம்பெறுகின்றன. அக்காலக் கட்டத்தில் இந்து மதம் என்கின்ற சமயத்தில் ஏற்பட்டிருக்கின்ற புறத்தாக்கங்களில் இருந்து மீட்டுருவாக்கம் செய்வதற்காக இப்படிப்பட்ட ஆளுமைகள் வேண்டும் என்பதை நாயகர் எண்ணுகிறார். அதனுடைய வெளிப்பாடு ராமலிங்கம் என்கின்ற கதை மாந்தரை இணைத்துக் கொள்கிற தன்மை நாயகர் இந்து மத ஆசார ஆபாச தர்ஷினி என்கின்ற நூலைத் தன்னுடைய நண்பர் முனுசாமியுடன் இணைந்து எழுதுகிறார். அந்த நூல் சமய சடங்கு ஆச்சாரங்களில் கேள்விகளை எழுப்பி அவற்றைத் தருக்க சிந்தனைக்கு உருவாக்குகிறார்.

இப்புதினம் எழுந்த காலச் சூழலில் ஏழை எளிய பெண்ணுக்கும் உயர் சமூகத்துப் பெண்ணுக்கும் உரிய அங்கீகாரம் இல்லாததை அறிய முடிகிறது. சிறுவயது பெண்கள் திருமணம் செய்து கொள்வதும் அவர்கள் கைம்பெண்ணாக மாறுவதும் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. அரசர்கள் எண்ணற்ற மனைவியரை உடன் வைத்திருந்தனர் அவர்களோடு மன உறவு என்பது இல்லாமல் இருந்ததையும் அறிய முடிகிறது. பெண்ணுக்கான பாலியல் முரண்களும் பாலியல் அத்துமீறல்களும் அக்காலக் கட்டத்தில் இருந்ததை அறிய முடிகிறது. சமய உலகில் ஒரு மறுமலர்ச்சியை உண்டு பண்ண வேண்டிய தேவை இருந்தமையைத் தென்னிந்தியாவில் ராமலிங்க அடிகளாருடைய வரலாற்றில் இருந்து அறிந்து கொள்ள முடிகிறது. அதனை வெங்கடாசல நாயகர் முன்மொழிந்து வழிமொழிந்து இருப்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது. சமூக சீர்திருத்தம் என்பது சமய சீர்திருத்தத்திலிருந்து தொடங்கப்பட வேண்டும் என்பதை இப்புதினம் பலப்பட எடுத்துரைத்துள்ளது.

சென்னை நகர உருவாக்கம்

சென்னையின் முதல் ரயில் பாதை, நீர்வழிப் பாதை, நாணயங்கள் அச்சிடப்படும் இடம், ஸ்டான்லி மருத்துவமனை, அச்சகங்களுடைய நிலைப்பாடு, உயர் நீதிமன்றங்களுடைய

இயல்பு, கொத்தவால் சாவடி இடம், சூளை மேடு, பீரங்கிமேடு, ஏழு கிணறு முதலான பகுதிகள் கருப்பர் நகரத்திலும் வெள்ளையர் நகரத்திலும் இனம் பிரித்துக் காட்டுகின்ற சூழல் வண்டலூர் பல்லாவரம் முதலான பகுதிகள் நகரில் இருந்து வெளியே இருக்கின்ற கிராமப் பகுதிகளாகப் பதிவு செய்கின்ற தன்மை குறிப்பிடத்தக்கவை. சென்னை நகரம் வெங்கடாசல நாயகர் வீட்டைச் சார்ந்து வளர்ந்துள்ளமையைக் காட்டுகிறார்.

தமிழின மீட்சியும் சமய உலகமும்

தமிழர் அரசியலில் உயர்நிலை பெற வேண்டும் என்றால் நில உரிமை வேண்டும், கல்வி அறிவு வேண்டும் என்கின்ற இரண்டு தளங்களை முன்னெடுக்க தமிழ் மகன் தன்னுடைய பதிவாக்கங்களை உருவாக்கியுள்ளார். செங்கல்வராய நாயகருடைய அறக்கட்டளை பச்சையப்ப முதலியாருடைய அறக்கட்டளை என்கின்ற இரண்டு கூறுகளை இக்கதையின் இணைகளன்களாகப் பதிவு செய்கிறார். செங்கல்வராய நாயகர் தன்னுடைய நாற்பது வயதுகளின் அடைந்த அறிவுத் தெளிவினால் தன்னுடைய சொத்துடைமைகளை அனைத்தும் பொதுவுடமை ஆக்கி அதற்கு ஓர் அறக்கட்டளை நிறுவி அதன் வழி கல்வி நிறுவனங்களை உருவாக்க வழிவகை செய்கிறார். தங்குமிடக் கல்வித் தந்து அனைத்துத் தரப்பு மக்களையும் முன்னேற்றுவதற்கான வழிவகைகளை உருவாக்குகிறார்.

அதே சூழலில் வெங்கடாசல நாயக்கர் சதுர் வேதி மங்கலம் போன்று மன்னவேடு என்னும் நில உரிமையை மீட்டெடுக்க அரசுடனும் ஆதிக்க சாதியினருடனும் போராடுகின்ற முன் முயற்சியைப் பதிவு செய்கிறார். அதற்காக வட மாவட்டங்களில் களப்பணி செய்வதற்காகப் பாயாக்காரி முகவராக அரசின் சார்பில் செயல்பட்டுத் தகவல்களைத் திரட்டி அரசுக்கு அறிக்கையாகத் தாக்கல் செய்கிறார். அதன்படி சென்னையில் இருக்கின்ற மாவட்ட ஆட்சியர் சென்னை மாகாணத்தின் கவர்னர் இங்கிலாந்து பாராளுமன்றத்தின் பிரதமர் இங்கிலாந்து இராணி முதலானோர் வழிகாட்டுதலோடு இழந்த நிலப்பகுதியை மீண்டும் அவர்களிடம் கொண்டு சேர்க்கின்ற ஒரு செயலைப் பதிவு செய்தார்.

தன்னுடைய நண்பனின் உதவியோடு இந்துமத ஆசார ஆபாச தர்ஷினி என்னும் நூலினை எழுதி அக்காலக்

கட்டத்திலேயே மக்கள் மத்தியில் கொண்டு சென்றிருக்கிறார். உழைப்பும் கல்வியும் உங்களை உயர்த்தும் சமயமும் சடங்குகளும் உங்களைத் தாழ்த்தும் என்னும் பிரச்சாரத்தை முன்னிறுத்திய நூலாகும். இதற்காக ஒரு இதழையும் உருவாக்கி அந்த இதழை உலக அளவில் பதிவு செய்து இருக்கின்ற தன்மையையும் இந்நூல் விளக்குகிறது.

உழைப்புச் சுரண்டலும் நில மிராசும்

தமிழகத்தில் வட மாவட்டங்களாகக் கருதப்படுகின்ற சென்னை செங்கல்பட்டு ஆற்காடு மாவட்டங்களில் சமூக நிலை பேராக்கத்திற்கு வன்னியர் சமூகத்திற்கு மாபெரும் இடம் உண்டு. அவ்விடத்தை விஜயநகர பேரரசும் நாயக்க அரசுகளும் இஸ்லாமிய பேரரசுகளும் மடைமாற்றி அக்காலக் கட்டத்தில் முதன்மைச் சமூகமாக இருந்த நாயக்கர் சமூகத்திற்கும் முதலியார் சமூகத்திற்கும் உரிமை படைத்துத் தந்துள்ளனர். ஆந்திர நிலப் பகுதியில் இருந்து தமிழ் நிலப் பகுதிக்குக் குடியேறிய இவ்விரு சமூகம் தமிழர்களிடமிருந்த நிலங்களை அரசினுடைய ஆதிக்க ஆணையோடு பறிமுதல் செய்து இணைத்து கொண்டிருக்கின்றனர். இது இந்நிலப் பகுதியின் உழைக்கும் சமூகமாக இருந்த வன்னியர் ஆதிதிராவிடர் என்னும் இரு சமூகத்திற்கும் பேரிழப்பாக அமைந்திருப்பதை இன்றைய போராட்ட வரலாறுகள் வெளிப்படுத்துகின்றன. இவ்வரலாற்றுக்குப் பின்னணியில் இருக்கின்ற சமூகக் காரணிகளைத் தமிழ் மகன் மிகத் தெளிவாகப் பதிவு செய்துள்ளமை வரலாற்றில் தெளிவை உண்டு பண்ணுகிறது. மன்னவேடு என்பதும் பஞ்சம நிலம் என்பதும் நமக்கு அன்னியப்பட்டு போய் இருப்பதை வெளிப்படுத்துகிறார். இதனை இன்றைக்குத் தமிழகத்தில் உயர் சமூகமாக இருக்கின்ற பிராமணர்களுக்கு அடுத்த நிலையில் இருக்கும் பிள்ளைமார் என்கின்ற சமூகம் தஞ்சை மாவட்டங்களில் நிலச்சுவான்தார்களாக வாழ்ந்து எழுச்சி பெற்று இருப்பதைப் போன்று வடமாவட்டங்களில் முதலியார்களும் நாயக்கர்களும் எழுச்சி பெற்று இருக்கிறார்கள். அவ் எழுச்சிக்கான இடைவெளியை இட்டு நிரப்புகின்ற பணியைச் செய்ய வேண்டிய தேவை உள்ளதைக் கருத்துகள் வழி பதிவு செய்கிறார்.

அரசும் மிராசும்

தஞ்சை சரபோஜி மன்னனின் வாரிசுரிமை இல்லாத பொழுது அவருடைய நிலம் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தினால் கைப்பற்றப்பட்டன. அதனைத் தொடர்ந்து ஏழை எளிய மக்களின் நிலங்கள் அரசின் உதவியோடு மிராசுகளுக்குக் கிடைத்தன. பாயாக்காரிகளுக்கும் மிராசுதாரர்களுக்குமான விவாதம் என்னும் நூலினை வெங்கடாசல நாயக்கர் என்கின்ற தனிநபர் பதிவு செய்கிறார். அவர் ஆங்கிலேய அரசோடும் மிராசுகளோடும் தருக்க ரீதியாக நிகழ்த்திய உரிமைப் போராட்டத்தை நிலை நிறுத்தி அவர்களுடைய நிலத்தை மீட்டு தந்த செயலாதிக்கத்தை வெளிப்படுத்துகிறது. இச்செயலாதிக்கத்திற்குப் பேச்சுவார்த்தைக் காகச் செல்கிற போது நாயகர் மட்டும் தனியாக நிற்க மிராசுகளும் மிராசுகளினுடைய உடன் வந்தவர்களும் ஆதிக்கச் சிந்தனையோடு எழுத்துப்பூர்வமாகவும் ஆரவாரத்தோடும் கருத்தியல்களைப் பதிவு செய்த பொழுது ஆங்கிலேய மாவட்ட ஆட்சித் தலைவர் இதனை உணர்ந்து நாயகருக்குத் துணையாக நின்று தன்னுடைய முன்னாள் அதிகாரிகள் செய்த தவற்றைத் திருத்த முயற்சி செய்கிறார். அந்த முயற்சியினுடைய வெளிப்பாடாக இங்கிலாந்து நாடாளுமன்றத் திற்கும் மகாராணிக்கும் அனுப்பிய விண்ணப்பங்களைப் பரிந்துரைக்கிறார். அவர்களிடமிருந்து செய்திகளைப் பெற்று மீண்டும் நாயகருடைய வெற்றிக்கும் அடித்தள மக்களுடைய வாழ்வியல் வெளிப்பாட்டிற்கும் துணையாக நிற்கிறார்கள். ஆனால் போர்ச் சமூக மக்களாக வாழ்ந்த வன்னியச் சமுதாயமும் ஆதிதிராவிட சமுதாயம் இன்றைய நிலையில் எழுச்சி பெறாமல் அடிமையாகவே வாழ்ந்து வருவதை வடதமிழ் மாநாட்டில் சமூக வரலாற்றில் அடையாளம் காணவும் இதற்கான காரணி இப்புதினம் எழுப்புகின்ற கல்வியும் நிலமும் அவர்களுக்கு இன்னமும் வந்து சேராத தன்மையை வெளிப்படுத்தி நிற்கிறது.

வேங்கடாசலநாயகர்

அத்திப்பாக்கம் வெங்கடாசலநாயகர் என்னும் தனிமனிதர் சுண்ணாம்பு வியாபாரமும் செங்கல் வியாபாரம் செய்து சென்னை மாநகரின் கட்டிட வளர்ச்சிக்குத் துணையாக இருந்திருக்கிறார். தான் மட்டும் தொழில் வல்லுனராக இல்லாது தன்னைச் சார்ந்தவர்களையும் வணிகத்தளத்திற்கு இணைத்து அவர்களையும்

உயர்த்திய சிந்தனையை அறிய முடிகிறது. பள்ளிக்கூட ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வுக்குப் பிறகு சமூகப் பணியாற்று வதற்காகவும் வணிகத்திற்காகவும் வருகை தந்து சமூகப் பணியின் வழியாக வணிகத்தை இழந்து நிலை நின்ற ஒரு மாமனிதர் வெங்கடாசலநாயகர் இவரைத் தமிழக வரலாற்றிலும் தமிழ்ச் சமூக வரலாற்றிலும் பண்பாட்டு வரலாற்றிலும் நாகரிக வரலாற்றிலும் கல்வி வரலாற்றிலும் ஏன் சாதி வரலாற்றிலும் பரவலாக அறியப்படாத மனிதராகவே உள்ளார். ஆனால் தந்தை பெரியார், ஆனைமுத்து அய்யா, குருசாமி, அண்ணா, பாவேந்தர், அ கி பரந்தாமன், பழமலை, வீ.அரசு, வாலாஜா வல்லவன் முதலானோர் வழி இவருடைய வரலாறு அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பதிவு பெற்று இருக்கின்றது. அப்பதிவுகளில் சிந்தனையாளன் என்கின்ற மாத இதழ் தொடர்ந்து இவர் எழுதிய இந்துமத ஆசார ஆபாச தர்ஷினி என்கின்ற நூலையும் பாயாக்காரிகளுக்கும் மிராசுதாரர்களுக்குமான வாதம் என்கின்ற நூலையும் தேடிக் கொண்டே இருந்தது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்தப் புதினத்தினுடைய நாயகன் வெங்கடாசல நாயகர் என்கின்ற நபர் உருப்பெற்று இருக்கிறார். இவருக்கு என்று குடும்ப வரலாறு கிடைக்காத சூழலில் புதின ஆசிரியர் அவருடைய குடும்பத்தை உருவாக்குகிறார். அதன் வழியாக அவருடைய வாழ்வியல் வட்டத்தைச் சமூக வெளிப்பாட்டைப் பதிவு செய்துள்ளார். இதைப் போன்று இவரைப் போன்று பல நூறு தனிமனிதர்கள் வட்டார வரலாற்றில் நிலை நிறுத்த வேண்டியவர்கள் ஆனால் அவர்களைச் சாதி அடிப்படையில் அணுகிப் புறம் தள்ளி உள்ளோம். அல்லது அவர்களுக்கான இடத்தை மறுதலித்துள்ளோம். வெங்கடாசல நாயகர் என்பவர் 90 களுக்குப் பிறகு தமிழ்ச் சமூக வரலாற்றில் குறிப்பிடத் தகுந்தவராக வலம் வரத் தொடங்கினார். ஆனால் அவரை 20, 30 ஆண்டுகளுக்குப் பிறகு இன்றைக்கு ஒரு வரலாற்று நாயகராக உருப்பெற்று இருக்கின்ற அந்தத் தன்மையை நாம் உருவாக்கியிருக்கிறோம்.

தமிழ்ப்பண்பாட்டு மீட்டுருவாக்கம்

நிலமும் பொழுதும் மானுடச் சமூகத்தின் அடையாளங் களும் ஒன்று. அச்சமூக அடையாளத்தை அவர்களின் அனைத்துத் தளங்களிலும் பொருத்தியும் உயர்த்தியும் பார்த்து இருக்கிறது. இது சமூக வரலாற்றிலும் அறிவியல் வரலாற்றிலும்

கண்டறியப்பட்ட உண்மையாகும். ஐன்ஸ்டினுடைய ஜிவீனீமீ ணீஸீபீ ஷிஜீணீநீமீ என்கின்ற அந்தச் சிந்தனை தொல்காப்பியருடைய முதற்பொருள் என்கின்ற சிந்தனையோடு தொடர்புடையது. ஆனால் காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும் என்னும் பழமொழிக்கு இணங்க தொடக்கச் சமூகங்கள் அறிவு சமூகங்களாக உருப்பெறாது போயின. தமிழ்ப் பண்பாட்டின் மீட்டுருவாக்கம் என்பது தமிழ்ச் சமூகத்தினுடைய வெற்றியாக அமைய வேண்டும். சமூகத்தினுடைய அனைத்துத் தளங்களிலும் வென்றெடுக்கக் கூடியதாக அமைய வேண்டும். ஒவ்வொரு நாட்டிலும் ஆதிக்கச் சமூகங்கள் எழுச்சி பெற்று அவர்களே அந்த நாட்டினுடைய அடையாளம் என்பதாகத் தங்களைப் பதிவு செய்து கொள்கின்றனர். இதிலிருந்து முரண்டு, முரண் கொண்டு தமிழ்ச் சமூகத்தினுடைய அடையாளம் என்பது ஆதிக்க சாதிகளினுடைய அடையாளம் அன்று; உழைக்கும் வர்க்கத்தினுடைய அடையாளம் தான் என்பதை வெளிப்படுத்த வேண்டிய தளத்தில் இருபத்தியோராம் நூற்றாண்டில் நின்று கொண்டிருக்கிறோம். தமிழ்ச் சமூகத்தின் மீட்டுருவாக்கம் என்பது தமிழர்களுடைய எழுச்சியை அடிப்படையாகக் கொண்டது. தமிழரின் எழுச்சி என்பது உழைக்கும் வர்க்கத்தினுடைய எழுச்சியாக அமைய வேண்டும். உழைக்கும் வர்க்கத்தை ஆதிக்க வர்க்கம் மூடி மறைக்க முயலும் முயற்சி நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. இன்றைக்கு முதல் தலைமுறை படிப்பாளிகள் பட்டதாரிகள் உருவாகி வந்துள்ள இந்தச் சூழலில் பட்டதாரிகள் உருப்பெற்று விடக்கூடாது என்பதற்காகப் புதிய கல்விக் கொள்கை என்கின்ற அடிப்படையில் பல்வேறு இடையூறுகளை மாற்றம் என்கின்ற அடிப்படையில் கொண்டு வந்து நிலை நிறுத்துகின்றனர். தடைகள் தகர்க்கப்பட வேண்டிய சூழல்களில் படித்த கல்வியாளர்கள் அதைப் பற்றி எந்தவிதமான சலனமும் இல்லாமல் கடந்து சென்று கொண்டிருக்கிறார்கள். பண்பாட்டு ரீதியிலும் நாகரிக ரீதியிலும் நாம் நம்மை இழந்து கொண்டிருக்கிறோம். அந்த இடத்தில் இருந்து மீளுவதற்கு ஒரு சிலர் உழைத்துக் கொண்டு இருக்கிற பொழுதும் நாம் நம்மை இழந்து விட்டோம் என்பதை உணராது ஆட்டு மந்தை கூட்டம் போலப் பின் தொடர்ந்து சென்று கொண்டிருக்கிறார்கள். இந்த ஆட்டு மந்தை கூட்டத்திற்கு நல்லதொரு மேய்ப்பன் கிடைக்காது ஒவ்வொரு காலகட்டத்திலும் தடுமாறுகிறார்கள். கடந்த கால வரலாறுகளைப் படிக்கிற பொழுது தான் தற்காலத்தின் உடைய

கடக்க வேண்டிய தூரத்தினுடைய அளவை உணர முடியும். அறிய முடியும். அந்த அறிகின்ற அறிவு கல்வியின் வழியாகத்தான் பெற முடியும். பொருளாதாரத்தின் வழியாகத்தான் பெற முடியும். அதன்படியாகத்தான் தமிழ் பண்பாட்டைத் தமிழ் சமூகப் பண்பாட்டை மீளுருவாக்கம் செய்ய முடியும்.

முடிவுரை

மகாபாரதம் இராமாயணம் என்னும் இதிகாசங்கள் இந்தியச் சமூகத்தைச் கட்டமைக்க உதவி செய்திருக் கின்றன. ஒரு பகுதியாகக் கதைகளின் கதைகளாக அந் நூல்கள் இடம் பெற்றிருக்கின்றன. அதன் வழி ஒவ்வொரு காலகட்டத்திலும் கதைகளே வரலாற்றைப் பதிவு செய்யவும் பரப்பவும் துணை செய்து இருக்கின்றன. தமிழ் மகன் தன்னுடைய ஞாலம் என்னும் புதினத்தின் வழி சற்றொப்ப 150 ஆண்டுகாலத்திற்கு முந்தைய வரலாற்றினைப் பதிவு செய்திருக்கிறார். இப்பதிவின் வழி அக்கால சமூகச் சூழலை உணர முடிகிறது. அறிய முடிகிறது. அறிந்த அச்சூழலை வெளிப்படுத்துகின்ற சான்றாவணமாக எழுத்துரை அமைந்துள்ளது. இப் புதினம் மட்டுமின்றிப் படை வீடு ஜீன் குறிப்புகள் வெட்டுப்புலி முதலான புதினங்களும் தமிழ்ச் சமூகத்தின் அடுத்த கட்ட நகர்வுக்கான வரலாறுகளை இன எழுச்சிக்குரிய அடையாளக் கருத்தியல்களைப் பதிவு செய்துள்ளமை என்பது குறிப்பிடத்தக்கது.

உசாத்துணை

தமிழ்மகன், 2023, ஞாலம், மின்னங்காடி பதிப்பகம், சென்னை.

61

தமிழர் ஆடை மரபு : இலக்கியம் - ஓவியம் - சிற்பம்

முனைவர் வை.மனோகர்,
தமிழ்ப் பயிற்றுநர், அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி,
திருக்குவளை, நாகப்பட்டினம், தமிழ்நாடு, இந்தியா.
dr.manogar2022@gmail.com

அறிமுகம்

மனிதர்களின் அடிப்படைத் தேவையாக உணவு, உடை, இருப்பிடம் அமைகின்றது. மனிதர்கள் இயற்கையாக கிடைக்கக்கூடிய காய்கள், பழங்கள் மற்றும் தேவைக்கு ஏற்ற தானியங்களை உற்பத்தி செய்து உணவு தேவையினைப் பூர்த்தி செய்து கொள்கிறனர். மனிதர்கள் சூழலுக்கும் வசதிக்கும் ஏற்ப தங்களின் வாழ்விடத்தை அமைத்துக் கொண்டனர்.

தொடக்க காலத்தில் ஆடையின்றி இயற்கையோடு இயற்கையாக வாழ்ந்த மனித இனம் பரிணாம வளர்ச்சி மாற்றத்தினால் உடலை மறைப்பதற்கு இலை, தழை, மரப்பட்டைகளைப் பயன்படுத்தினர். மேலும், சிந்தனை வளர்ச்சியின் காரணமாக வாழ்விடத்திற்கும் கால நிலைக்கும் ஏற்றார் போல மரவுரி, தோலாடை, நூலாடை, பட்டாடை எனப் பலவகை ஆடைகளை அணிந்தனர்.

ஒரு சமூகத்தின் பழக்கவழக்கம், பண்பாட்டு, வாழ்வியல் சார்ந்த பதிவுகளை இலக்கியங்களிலும் கலை வடிவங்களிலும் படைப்பாளர்கள் பிரதிபலிக்கின்றனர். அதனூடாக, தமிழர் ஆடை மரபினைத் தமிழ் இலக்கியம் பதிவு கொண்டுள்ளது. இது குறித்து இவ்வாய்வு அமைகிறது.

ஆய்வுப்பொருள் குறித்த கருத்தாடல்

வடிவமைக்கப்பட்டுள்ள ஆடை அமைப்புகளையும் கொண்டு அக்கால மக்கள் பயன்படுத்திய ஆடை வடிவமைப்பினைச் சிற்ப நூல்களின் வழி ஆடைகளின் வடிவமைப்பு அதன் வகைகளினை

அறிய கோயில்களில் வடிக்கப்பட்டுள்ள ஓவியங்கள், சிற்பங்கள் புறச்சான்றாக அமைகின்றன.

"உண்பது நாழி உடுப்பது இரண்டே" என்ற புறநானூறு (189) அடிகள் ஆடையினை மேலாடை, கீழாடை என இரண்டு வகையாகக் கூறுகின்றன. சமூகத்தில் அவரவர் வாழ்வியலுக்கு ஏற்றார் போல ஆடையினையும் தமிழர்கள் அணிந்துள்ளனர். கலை சார்ந்த அறிவினால் பல்வேறு வகையான ஆடைகளையும் அதில் வேலைப்பாடுகளோடு கூடிய ஆடையினையும் உடுத்தியுள்ளனர்.

பிங்கல நிகண்டு பல்வேறு ஆடையினை வகைப்படுத்தியுள்ளது. ஓவியங்கள், சிற்பங்கள், பொதுவாக அந்தச் சமூகத்தில் பார்த்தவற்றைத் தன் கற்பனையுடன் பதிவு செய்யும் கலையாக அமைகின்றது.

சிற்பத்திற்கென்று பல இலக்கண நூல்களை வகுத்துள்ளனர். அதில் சிற்பங்களின் ஆடை, அணிகலன்கள் பற்றிய செய்திகளைக் காண முடிகிறது. மேலும் ஓவியங்களில் தீட்டியுள்ள ஆடை வடிவமைப்பினைப் பார்க்க முடிகிறது.

முடிவுரை

தமிழர்களின் ஆடை மரபினை இத்தகைய வடிவங்களின் வழியாக, தமிழ்ச் சமூகத்தில் உண்டு என்பதை விவாதிக்கும் விதமாக ஆய்வின் போக்கு அமைத்துள்ளது.

62

பண்டைத் தமிழர் வாழ்வியலில் கள் : ஏற்பும் மறுப்பும்

ஆன் யாழினி சதீஸ்வரன்
விரிவுரையாளர், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை
sanneyalini@yahoo.com

அறிமுகம்

ஒரு சமூகத்தில் விரும்பி ஓம்பப்படும் ஒரு பண்பாடு பிறிதொரு சமூகத்தில் விரும்பப்படாததாகவோ அல்லது விலக்கப்பட்ட தாகவோ காணப்படலாம். இதற்கு அவ்விரு சமூகங்கள் வாழும் நிலப்பரப்பு, அதன் புவியியல், அது சார்ந்து நிலவும் உயிரினப் பரம்பல், அச்சமூகங்கள் பின்பற்றும் மதங்களின் கொள்கைகள் முதலானவை காரணங்களாக அமையலாம். அவ்வாறே ஒரே சமூகத்துள்ளே நீண்ட காலமாக நிலவிய, கொண்டாடப்பட்ட ஒரு பண்பாடு பின்வந்த காலப்பகுதியில் விலக்கப்பட வேண்டியதாகக் கருதப்படுவதற்கும் அல்லது விலக்கப்படுவதற்கும் வெறுக்கப்படுவதற்கும் கூட குறிப்பிடத்தக்க சமூகப் பின்புலங்கள் காணப்படும். இவ்வாறான சமூகப் பின்புலங்கள் ஒரு சமூகத்தின் பண்பாட்டுப் பாரம்பரியத்தையே மாற்றியமைக்கக்கூடிய அளவு வலுவானவையாகவும் காணப்படக்கூடும்.

சங்கத் தமிழ்ச் சமூகத்தினது பண்பாடானது, அந்நிய மக்களின், அவர்களது கொள்கைகளின், அவர்களது நம்பிக்கைகளின், அவர்களது தேவைப்பாடுகளின் அடிப்படையிலான பண்பாடுகளைத் தமிழ்ச் சமூகம் தனக்கானதென நம்பவும், ஏற்கவும், பின்பற்றவும் தலைப்படாத காலத்துக்குரிய அல்லது அவ்விதம் நம்பவும், ஏற்கவும், பின்பற்றவும் தலைப்பட்ட ஆரம்ப காலத்துக்குரியதாகும். ஆகவே, இந்தப் பண்பாடு பெருமளவிற்கு ஓர் இனக்குழுமத்துக்கான தனித்துவக் கூறுகளாலானதாயிருந்தது. இவ்விதம் பிற பண்பாட்டமிசங்கள் கலக்காத ஓர் இனக்குழுமத்தின் பண்பாடென்பது, தான் வாழும் இயற்கைச் சூழலிலிருந்து பெற்றுக்கொள்ள முடியுமாய் இருந்த, தன் தேவைக்கும்

மகிழ்ச்சிக்கும் வாழ்வின் நிலைப்புக்கும் அவசியமெனக் கருதிய பொருட்களையும், தன் வாழ்வியல், தனதும் தன் முன்னோர்களினதும் அனுபவங்கள், அவர்களது உளத் தூண்டல்கள் என்பவை சார்ந்த நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், கலைகள், சடங்குகள் போன்ற அமிசங்களையும் மட்டுமே சார்ந்து அமைந்திருக்கும். பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளும் அத்தன்மையினவே என்பவற்றுக்கான சான்றுகளை சங்கத் தமிழ் இலக்கியங்கள் தருகின்றன. இந்த அடிப்படையிலே சங்கத் தமிழ்ச் சமூகத்தின் உணவுசார் பண்பாட்டையும் அடையாளம் காண முடிகின்றது. இந்த உணவுசார் பண்பாட்டின் ஒரு கூறாக 'கள்' உம் காணப்படுகிறது. புளித்தல் என்ற அர்த்தத்திலான கடு- என்பதை அடியாகக் கொண்டு பிறந்த கள், களித்தலுக்குரிய ஒன்றாக சங்கத் தமிழ்ச் சமூகத்தால் கொண்டாடப்பட்டிருக்கிறது. இன்றைய பயில்நிலையின்படி கள் என்பது பனை, தென்னை அல்லது கித்துள் மரங்களிலிருந்து வடித்தெடுக்கப்படும் போதையூட்டும் பானத்தையே குறிக்கின்றது. இருப்பினும், பண்டைக்காலத் தமிழ்ச் சமூகத்தில் இவற்றோடு கூடவே தேன், நெல்லரிசி, பூக்கள், பழங்கள் என்பவற்றைப் புளிக்கவைத்துப் பெறப்படும் பானங்களும் கள் என்றே குறிப்பிடப்பட்டிருக்கின்றன என்பதை சங்க இலக்கியங்கள் வழி அறிய முடிகின்றது.

சங்கத் தமிழரின் அகத்தையும் புறத்தையும் பேசிய சங்கப்பாக்கள் காதல், வீரம், உழைப்பு எனப் பல்தளங்களிலும் அவர்களது வாழ்வியலோடு, உணவோடு இணைத்தும் உணவாகவும் உணர்வாகவும் கள் இணைந்திருந்ததை வெளிச்சமாக்குகின்றன. ஆனால், சங்க காலத்தைத் தொடர்ந்துவந்த காலத்துக்குரியனவாகக் கருதப்படும் அறநூல்களும் முதல் காப்பியங்களும் பின்னாளில் படைக்கப்பட்ட கம்பராமாயணம், திருமந்திரம் முதலான இலக்கியங்களும் ஆதித்தமிழ்க் குழுமத்துக்கானதாயிருந்த 'கள்' பண்பாட்டை முற்றிலும் மறுக்கின்றன. திருக்குறள், நாலடியார் முதலியன கள்ளுண்ணாமை பற்றிப் பேச தனி அதிகாரங்களையே ஒதுக்கியுள்ளன. சங்ககாலத் தமிழ்ச் சமூகம் தொடர்ச்சியான போர்களாலும் நெறி மீறிய காதலாலும் சீர்குலைந்ததனால் அதனைச் சீரமைக்க தமிழில் அறநூல்கள் தோன்றின எனக் கூறுவதைப் போலவே, சங்கச் சமூகம்

கள்ளால் சீரழிந்ததன் விளைவே கள் மறுப்புப் போதனைகள் என இந்நிலைக்குப் பொதுவாகக் காரணம் கூறப்பட்டுவருகின்றது. நாகரிகமடையா மனித இனத்தின் பண்பாடே கள்ளண்ணல் என்றும், இவ்விதம் நாகரிகமடையாதிருந்த தமிழ்ச் சமூகம் நாகரிகமடைந்ததன் பின்னால் நாகரிகமடைந்த சமூகத்துக்குரியதான கள்ளுண்ணாமை எனும் பண்பாட்டை நோக்கி நகர்ந்தது; பஞ்ச சீலங்களைப் போதித்த பௌத்தமும் கூடவே சமணமும், நெறிமுறைப்படுத்தப்பட்டு தமிழ்ச் சமூகத்துள் காலூன்றிய வைதீகமும் அறவழிச் சமூக உருவாக்கத்தின் பொருட்டு பஞ்சமா பாதகங்களுள் கள்ளையும் ஒன்றாக்கின என்பனவாய்க் கற்பிக்கப்படும் காரணங்களும் உள. ஆனால், இந்தக் காரணங்களுக்குப் பின்னால் நிலவும் அரசியல் நுணுக்கமாக ஆராயப்படவேண்டியதாய் இருக்கின்றது.

சங்க இலக்கியங்கள் காட்டும் தமிழர் பண்பாடு குறித்து பல கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும்பாலானவையும் தமிழ்ப் பண்பாட்டின் ஒரு கூறாகவேனும் கள்ளுண்ணுதலைச் சுட்டவே இல்லை. ஆயினும், சங்கத் தமிழர் வாழ்வியலில் கள் என்பது குறித்து நேரடியாகப் பேசும் மிகச் சில கட்டுரைகள் காணப்படுகின்றன. இவை சங்க இலக்கியங்களில் கூறப்படும் கள்ளின் வகைகள், அவை உருவாக்கப்பட்ட விதங்கள் முதலியவற்றைப் பட்டியலிட்டுத் தருவதோடு நின்று விடுகின்றன. இக்கட்டுரைகளில் கள் என்பது தமிழர் உணர்வோடும், வாழ்வியலோடும் எவ்விதம் கலந்திருந்தது என்பது விளக்கமாக ஆராயப்படவில்லை. இவ்விதமே, சங்கமருவிய கால அற இலக்கியங்களில், குறிப்பாக திருக்குறளில் கள்ளண்ணாமை எவ்விதம் வலியுறுத்தப்பட்டிருக்கிறது என்பது குறித்தும் பல கட்டுரைகள் எழுதப்பட்டிருக்கின்றன. இவையும் கள்ளுண்ணாமையின் அவசியத்தை வலியுறுத்துவதற்கு வள்ளுவத்தைத் துணைகொண்டிருக்கின்றனவே அல்லாது, அக்கருத்தியலுக்கான நுண்ணரசியலை வெளிப்படுத்தும் நோக்கில் எழுதப்பட்டவையாக அமையவில்லை. இந்நிலையில், அகத்தையும் புறத்தையும் என்று பொதுவாகக் குறிப்பிட்ட போதிலும் சங்கத் தமிழரின் வாழ்வியலில் ஊடுபாவியிருந்த அறத்தையும் பேசிய சங்க இலக்கியங்களில் வெளிப்படுத்தப்படா கள்ளுண்ணாமை எனும் கருத்தியல் பிற்காலத்தில் மிக முக்கிய

அறங்களுள் ஒன்றாக தமிழ்ச் சமூகத்துள் முன்னிறுத்தப்பட்டதன் - இன்னொரு வகையில் கூறினால், சங்க இலக்கியங்கள் காட்டியதன்படி அக்கால மக்களால் விரும்பிப் பின்பற்றப்பட்ட உணவுப் பண்பாடான கள்ளுண்ணுதல் பிற்காலத்தில் பஞ்சமா பாதகங்களுள் ஒன்றாக முன்னிறுத்தப்பட்டதன் - பின்னணியில் தொழிற்பட்ட அரசியலையும், அந்த அரசியல் கைக்கொண்ட மிக நுணுக்கமான உத்திகளையும் ஆராய வேண்டிய தேவைப்பாடு இருக்கிறது. இந்தத் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்தலே இந்த ஆய்வுக்கான நோக்கமாக அமைந்தது.

ஆய்வு அமைப்பும் ஆதாரங்களும் ஆய்வு முறைகளும்

ஆய்வு நோக்கத்தின் அடியாக இந்த ஆய்வானது மூன்று பிரதான பிரிவுகளாக அமைந்துள்ளது.

1. பண்டைத் தமிழர் வாழ்வியலில் 'கள்'

இப்பகுதியில் பண்டைத்தமிழர்தம் உணவுப் பண்பாட்டில் கள்ளுக்குக் கொடுக்கப்பட்டிருந்த முதன்மை விளக்கப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்கள் குறிப்பிட்டதன்படி கள்ளின் வகைகள், அவை பெறப்பட்ட முறைகள், கள் அருந்தப் பயன்படுத்தப்பட்ட கலங்கள் என்பவற்றோடு அக்கால மக்கள் கள் அருந்திய சந்தர்ப்பங்களும் விரிவாக நோக்கப்பட்டுள்ளன. போரின் வெற்றியிலும் வேளாண்மைப் பெருக்கத்திலும் வேட்டைப்பொருள் மிகுதியிலும் கலவிப்பொழுதின் களிப்பிலுமென்று கொண்டாட்டப்பொழுதுகளில் மட்டுமல்லாது, வேலோன் முதலாய தம் தெய்வங்களின் வழிபாட்டிலும் வழிபாடுசார் சடங்குகளிலும், அச்சடங்குகள் சார் கலை வடிவ ஆற்றுகைகளிலும் கள் அருந்தப்பட்டிருக்கிறது; இறப்புச் சடங்குகளில் படையல் பொருளாகவும் பயன்பட்டிருக்கிறது. விருந்தினர்க்கும், நாடி வந்த கலைஞர்களுக்கும் மிகச் சிறந்த வழியில் விருந்து ஓம்பப்படுவதன் அடையாளமாக ஊனுடன் கள் வழங்கும் வழக்கம் நிலவியிருக்கிறது. உடல் நலம் சார்ந்த நோக்கிலும் கள் அருந்தப்பட்டிருக்கிறது. கள் உடலுக்கு வெப்பத்தைத் தருவதனால் குளிரில் இருந்து தம்மைப் பாதுகாக்கவும் உடலுக்கு வலிமையையும் ஊக்கத்தையும் தருவதனால் நீண்ட வழிநடந்த களைப்பை நீக்கவும் சங்ககால மக்கள் கள்ளை அருந்தியிருக்கின்றனர். கட்பாவனையின்

பக்க விளைவுகளைத் தவிர்க்கும் முறைகளையும் அவர்கள் அறிந்திருக்கின்றனர்.

இந்த அடிப்படையில் அக்காலத் தமிழ்ச் சமூகத்தின் வாழ்வியலோடு உணர்வுபூர்வமாக கள் பிணைந்திருந்தது என்பது இப்பகுதியில் நிறுவப்பட்டுள்ளது. இப்பகுதிக்கான ஆதாரங்களாக பதினெண் மேற்கணக்கு நூல்கள் குறிப்பாக, புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுற்தொகை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை என்பன கொள்ளப்பட்டுள்ளன. பகுப்பாய்வு முறையில் தகவல்கள் பகுத்து நோக்கப்பட்டுள்ளதோடு பகுக்கப்பட்ட தகவல்களை விபரிக்க விபரிப்பு முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு சமூகம், அதன் மக்கள், அவர்கள் பண்பாடு குறித்து நோக்குவதனால் இப்பகுதி சமுதாயவியல் அணுகுமுறையின் பாற்பட்டதாய் அமைந்திருக்கின்றது.

2. சங்கமருவிய கால இலக்கியங்களும் கள்ளுண்ணாமையும்

இப்பகுதியில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் குறிப்பாக திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, இன்னா நாற்பது ஆகிய நூல்களில் கள்ளுண்ணாமை அறமாக நிலைநிறுத்தப்பட்டுள்ள தன்மை, கள்ளுண்ணாமையை வலியுறுத்தப் பயன்படுத்தப்பட்டுள்ள உத்திகள் என்பவை விரிவாக நோக்கப்பட்டுள்ளன. இந்நூல்களில் கள்ளுண்ணல் தவிர்க்கப்படவேண்டிய பண்பாடென்பதற்குச் சொல்லப்படும் காரணங்கள் தர்க்கபூர்வமானவையாக அமையவில்லை. மாறாக, தாயால் வெறுக்கப்படல், ஊர் மக்களால் எள்ளப்படல், சான்றோரால் மதிக்கப்படாமை, அரசராயின் பகையரசரால் அஞ்சப்படாமை, புகழிழப்பு, நாணிழப்பு முதலான கருத்துரீதியான விளைவுகள் கூறப்படுவதன் மூலமே கள்ளுண்ணல் விலக்கப்படவேண்டியதெனச் சொல்லப்படுகின்றது. முதற்காப்பியங்களான சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் கூட கள்ளுண்ணல் அருவருக்கத்தக்க பாவமாகவே காட்டப்பட்டிருக்கின்றது. இவற்றில், நாகரிகமடையாத மனிதரே கள்ளுண்பவர், கள்ளுண்டால் தீய நடத்தைக்கு ஆளாகுவர் முதலான விடயங்கள் கதைப்போக்கின் சில சம்பவங்களினூடாக நேரடியாகவும் மறைமுகமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இப்பகுதியிலும் பகுப்பாய்வு, விபரிப்பு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு, உத்திகளை விளக்குமிடத்து, விளக்க முறையும் உளவியல் அணுகுமுறையினடியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

3. கள்ளுண்ணாமை தமிழ்ச்சமூகத்துக்கான அறமாக மாற்றப்பட்டதன் அரசியல்

வணிக வர்க்கத்தின் ஆதரவோடு எழுச்சி பெற்ற அவைதீக மதங்கள் தமிழ்ச் சமூகத்தினுள் நிலைபெற்றதன் பின்னால், அவை சார் அறங்களே தமிழ் மக்களுக்கான அறங்களாக வலியுறுத்தப்படுகின்றன. பஞ்ச சீலங்களுள் ஒன்றாக பௌத்தம் கூறும் கள்ளுண்ணாமை பஞ்சமா பாதகங்களுள் ஒன்றாக கள்ளுண்ணல் கட்டமைக்கப்பட வழி செய்கின்றது. இன்னும், வணிக சமூகத்தின் நலனும் கள்ளுண்ணாமை இக்காலத்தில் வலியுறுத்தப்படக் காரணமாகிறது. சுமகாலத்திலும் பிற்காலத்திலும் வைதீகத்தாலும் கள்ளுண்ணாமை அறமாகப் பேசப்பட தமதாக்கல் கொள்கை வழிகோலுகிறது. இவற்றை விரித்துப் பேசும் இப்பகுதி சங்க, சங்கமருவிய கால அரசியல், சமூக, சமயப் பண்பாடுகள் குறித்துப் பேசும் நூல்கள் மற்றும் கட்டுரைகளைத் துணை ஆதாரங்களாகக் கொள்கிறது. விளக்க, விபரிப்பு முறைகளைப் பயன்படுத்தியிருப்பதோடு, வரலாற்றுப் பின்புலத்திலான பண்பாட்டியல் ஆய்வாக இப்பகுதி அமைந்துள்ளது.

ஆய்வு முடிவுகள்

சங்ககால மக்களின் வாழ்வியலில் கள்ளுண்ணல் பண்பாடு முதன்மை பெற்றிருந்த போதும், அதைத் தொடர்ந்து வந்த காலப்பகுதிகளில் அப்பண்பாடு முற்றிலும் வெறுக்கப்படத்தக்கதொன்றாக கட்டமைக்கப்படுவதற்கான காரணங்களாக கீழ்வருவனவற்றை இந்த ஆய்வு முன்வைத்துள்ளது.

1. அவைதீக மதங்களின் கருத்தியல் : சமண பௌத்த மதங்கள் தமிழகத்துள் செல்வாக்குப் பெற்றதன் பின்னால், அவை தமிழகத்துக்கு வெளியேயான இந்தியச் சமூகத்துக்குரிய பொது அறங்களைத் தமிழ்ச் சமூகத்துக்குரியனவாக மாற்ற முனைந்தன. இந்தவகையில்,

அம்மதங்களுக்குரிய பொது அறமான கள்ளுண்ணாமையும் தமிழ்ச்சமூகத்துள்; திணிக்கப்படுகிறது. தமிழகத்தின் நிலவியல், வாழ்வியல் சார்ந்த 'கள்' பண்பாடு குறித்த எவ்வித உணர்கையும் இல்லாமல் இந்தத் திணிப்பு நிகழ்ந்திருக்கின்றது.

2. வணிக சமூகத்தின் நலன்கள் : வணிகசமூகத்தினர் சமண பௌத்த மதங்களை ஆதரிப்பதற்கு, அவர்களது தொழில் சார் நலன்களை உறுதி செய்துகொள்ள அம்மதக் கருத்தியல்கள் உதவி செய்தன என்பதை ஆய்வாளர்கள் காரணமாகக் காட்டுவர். தமிழ் சமூகம் போர்க்குணச்சமூகம். ஆகோள் பூசல் முதலாய் மண் கொள் யுத்தங்கள் வரை சங்க இலக்கியங்களும் அக்கால நடுகற்களும் எமக்குக் காட்டும் இந்தப் போர்ச்சூழல் வணிகத்துக்கு இடையூறானது. மன்னருக்கு நிகராய் வளம் பொருந்தியிருந்த வணிக வர்க்கத்தினரை சிலம்பு காட்டுகிறது. இத்தனை வளத்துடன் உள்நாட்டில் மட்டுமன்றிப் பிற நாடுகளுடனும்; வர்த்தகம் புரியும் வலியுடன் வாழ்வதற்கு உகந்த சூழல் தமிழகத்தில் காணப்பட்டது. யானைத் தந்தங்கள், வாசனைத் திரவியங்கள், முத்துக்கள் என நீண்ட, பெருஞ்செல்வம் ஈட்டக்கூடிய வணிகப்பொருட்களும், அவற்றைப் பிற நாடுகளுக்குக் கொண்டுசெல்லவும் பிற நாடுகளிலிருந்து பொருட்களை இங்கே கொணரவுமான கப்பல் பயணங்களுக்குத் தோதாயமைந்த துறைமுகங்களும், இவை தொட்டமைந்த பட்டினங்களும் இந்தப் பயணங்களை ஆபத்தின்றித் தொடரக்கூடிய வகையில் காலநிலையைக் கணிக்கக் கூடிய நாள், கோள் குறித்த தமிழரின் செம்மையான அறிவும் என்பதாய் இச்சூழல் அமைந்தது. இருப்பினும், இங்கு நிகழ்ந்த யுத்தங்கள் வணிக வர்க்கத்தினரின் சொத்துக்களின் பாதுகாப்புக்கும் இடையறா இயங்குகைக்கும் இடையூறாய் அமைந்தன. ஆக, யுத்தத்தின் விளைவான கொலை, யுத்தப் பொருள் அபகரிப்பு, யுத்த ஊக்கிகள் ஆகியவற்றை எதிர்க்கும் கொல்லாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை அறங்கள் தமிழ்ச் சமூகத்துள் புகுத்தப்பட வேண்டியவையாகின.

3. வைதீகத்தின் உத்திகள்: சங்கமருவிய காலத்து அறநூல்களில் துறவையும் துறவு சார் அறங்களையும் முன்னிறுத்திய பௌத்த, சமண மதத்தவர்களால் எழுதப்பட்டவற்றில் மட்டுமன்றி, வைதீக மதத்தவர்களால் எழுதப்பட்டவற்றிலும் கள்ளுண்ணல் பாதகமாகவே காட்டப்பட்டிருக்கிறது. இதனை, அவைதீக மதங்களை மேவியெழுவதற்கு அவற்றின் செல்வாக்கான கூறுகளை உள்வாங்கிக்கொண்ட வைதீகத்தின் 'தமதாக்கல்' உத்தியாகக் கருதலாம். இன்னொருபுறம், தமிழகத்துள் சங்க காலத்தின் பிற்பகுதியில் தொடங்கி சங்கமருவிய காலத்தில் பாண்டியர் துணையோடு வளர்ந்து பிற்காலத்தில் பேரெழுச்சி பெற்ற பார்ப்பனியத்தின் வர்ணப்பாகுபாட்டு, பெண் அடக்குமுறைக் கொள்கைகளுக்கும் பார்ப்பனிய ஆதரவோடு வளர்ந்த மீயதிகாரம் கொண்ட அரசுருவாக்கத்துக்கும் அச்சுறுத்தலாய் விளங்கிய, தமிழருக்கே உரித்தான பண்பாடுகளை தமிழ்ச்சமூகத்துள் இருந்து விலக்க அவைதீகக் கோட்பாடுகளில் தமக்குப் பொருத்தமானவற்றை வைதீகம் ஏற்றுக்கொண்டதன் விளைவாகவும் இதனைக் கருதலாம். ஏனெனில், உழவர், வலைஞர், எயினர், பாணர் என சாதாரண மக்கள் முதலாய் புலவர்கள் மன்னர்கள் என கல்வியிலும் அதிகாரத்திலும் உயர்ந்திருந்தோர் ஈறாக, -பெண்கள் உட்பட- அருந்திய கள் வாழ்வின் பல நிலைப்பட்டோரும் கூடியுண்ணும் பண்பாட்டைக் கொண்டிருந்த தமிழ்ச்சமூகத்தின் ஒரு சிறப்புணவு. அரசரும் படை வீரரும் புலவரும் பாணரும் ஆண்களும் பெண்களும் எனக் கூடிக் கள்ளுண்டமையை சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. இத்தகு கூட்டுவாழ்க்கை ஏலவே கூறப்பட்ட பார்ப்பனியத்தின் வாய்ப்பட்ட வைதீகத்துக்கு அச்சுறுத்தல் என்ற வகையிலும் கள்ளுண்ணல் சங்கமருவியகால மற்றும் பிற்கால வைதீக இலக்கியங்களிலும் பாதகமாகக் காட்டப்பட்டிருக்கலாம்.

முடிவுரை

பண்டைத் தமிழர் வாழ்வியலில் கள்: ஏற்பும் மறுப்பும் எனும் தலைப்பிலான இந்த ஆய்வானது சங்க காலத்து இலக்கியங்களை ஆதாரமாகக்கொண்டு பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் கள்

பெற்றிருந்த முக்கியத்துவத்தையும் சங்கமருவிய கால இலக்கியங்களை ஆதாரமாகக்கொண்டு பின்னாளில் அது விலக்கப்பட்டதொன்றாக மாற்றப்பட்டதன் பின்னணியையும் அதற்கு அக்கால இலக்கியகாரர் கையாண்ட உத்திகளையும் ஆராய்ந்துள்ளது. மேலும், தமிழகத்துக்கு வெளியேயான இந்தியச் சூழலுக்குப் பொருந்திப்போன, தம் மதக் கோட்பாடுகளுக்குப் பொருத்தமான, பொதுவான அறங்களை தமிழச்சமூகத்துள் நுழைக்க முனைந்த அவைதீக மதங்களினதும், இடையறாத தம் வணிக நடவடிக்கைகளுக்குத் தடையாயிருந்த யுத்தத்தின் ஓர் ஊக்கியினை விலக்க விரும்பிய வணிக வர்க்கத்தினதும், சமூக அடுக்கமைவுகளைப் பேணவும், ஒற்றை அதிகார அரசினை உருவாக்க வும் விரும்பி அவைதீகத்தின் அறங்களைத் தமதாக்கிக் கொண்ட வைதீக மதங்களினதும் செயற்பாடுகளே ஆதித் தமிழ்ச் சமூகத்தின் மிக முக்கிய உணவுப் பண்பாடான கள் பிற்காலத்தில் விலக்கப்படவேண்டியதாக பின்தள்ளப்பட்டதன் பின்னணி எனும் முடிவுக்கு இந்த ஆய்வு வந்திருக்கிறது.

உசாத்துணைப் பட்டியல்

நூல்கள்

கைலாசபதி,க., (1999: மூன்றாம் பதிப்பு) பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், குமரன் பப்ளிஷர்ஸ்.

சாமிநாதையர்,உ.வே., (1985), இளங்கோவடிகள் அருளிச்செய்த சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்குநல்லாருரையும், தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு

நாராயணவேலுப்பிள்ளை,எம்., (2000) பதினெண் கீழ்கணக்கு நூல்கள், நர்மதா பதிப்பகம்.

பரமசிவம்,தொ., (2001), பண்பாட்டு அசைவுகள், காலச்சுவடு பதிப்பகம்.

புலியூர் கேசிகன், (2005), மணிமேகலை, பாரிநிலையம்

மாணிக்கம், அ., சங்க இலக்கியங்கள், வர்த்தமானன் பதிப்பகம்

ராஜ் கௌதமன், (2006), பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும் - சமூக விமர்சனம், தமிழினி பதிப்பகம்.

வேலுப்பிள்ளை,ஆ., (1999: 3ஆம் பதிப்பு), தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், இலங்கைப் புத்தக நிலையம்.

கட்டுரைகள்

தமிழ்நாடன், (2011), கள்ளும் ஓர் உணவே, பக்தவத்சல பாரதி (தொகு), தமிழர் உணவு (பக்.167-181), காலச்சுவடு பதிப்பகம்.

மகேஸ்வரன்,வ., (2011), ஆசாரக்கோவையும் அறமும், பத்மநாதன்,சி.,இரகுபரன்,க.,பிரசாந்தன்,ஸ்ரீ. (தொகு), அறநெறிக்காலமும் தமிழகப் பண்பாட்டு மரபுகளும் (பக்.375-381), இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

ஆய்வுச் சஞ்சிகைக் கட்டுரைகள்

குமார், சீ., (2018) பதினெண்கீழ்க் கணக்கில் அறவாழ்வியல் கட்டமைப்பு, சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், மலர்: 3 இதழ்: 2 தொகுதி: மிமி (111- 115)

இணையக் கட்டுரைகள்

மூலிகை மணி (2012.03.20) சங்ககாலத் தமிழர்களும் கள்ளும் https://www.keetru.com

தலை வணங்கா தமிழன் (201006.21) சங்க காலத்தில் மது(கள்); <http://thalaivanankatamilan.blogspot.com>

63

தமிழரின் பழமொழிகளும் பண்பாட்டுச் சொல்லாடல்களும்

முனைவர் ச.பட்டம்மாள்,
முதல்வர், திரவியம் கலை & அறிவியல் மகளிர் கல்லூரி,
பெரியகுளம். தேனி மாவட்டம். தமிழ்நாடு. இந்தியா
pattupugazhini@gmail.com

முன்னுரை

மனித இன வரலாற்றில் மொழியின் தோற்றம் பற்றி அறுதியிட்டுக் கூற இயலாத தன்மை காணப்படுவது போன்றே தொடக்க கால மக்களின் இலக்கியமான வாய்மொழி இலக்கியத்தின் கால எல்லையை வரையறுக்க இயலுவதில்லை. மனித இனம் என்று தன் எண்ணங்களைப் பிறருடன் பகிர்ந்து கொள்ள முற்பட்டதோ, அன்றே மொழியின் தோற்றம் உருப்பெற்றது. அதே போன்று மனித இனம் தன் சிந்தனைத் திறனை என்று கூர்மையாக்கிக் கொள்ள முற்பட்டதோ அன்றே வாய்மொழி இலக்கிய வகை (Oral Literature) கருக்கொண்டது. உலக மொழிகளின் இலக்கிய வரலாற்றை நோக்குவோமேயானால், எழுதா இலக்கிய கருக்களே, பின் எழுதப்பட்ட இலக்கியங்களாகப் புதுமை வடிவமும், பொலிவும் பெற்றுப் பயின்று வருகின்ற உண்மை நிலை புலனாகும்.

நாட்டுப்புற பழமொழிகள் பல்வேறு ஆய்வுப் போக்குளில் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. இத்தகைய ஆய்வுப் போக்குகளைத் தமிழக நாட்டுப்புறவியல் ஆய்வாளர்களும், மேலை நாட்டுப்புறவியல் ஆய்வாளர்களும் மேற்கொண்டு வருகிறார்கள். இதுவரை பழமொழிகளின் அர்த்தத்தை ஆய்வாளர்கள் வாசிப்பு அடிப்படையில் புரிந்து கொண்டு ஆய்வு செய்தனர். இதனையடுத்து அமைப்பியல் கோட்பாட்டினர் (Structural) பழமொழிகளை அமைப்பியல் அடிப்படையில் ஆய்வு செய்தனர். அடுத்து நாட்டுப்புறவியலாளரும், அமெரிக்க நாட்டுப்புற அறிஞருமான ஆலன் டண்டிஸ் போன்றோர் பழமொழிகளைச் சூழலியல் கோட்பாட்டின் (Contextural) அடிப்படையில் ஆய்வு

செய்தனர். தே.லூர்து போன்றோரும் சூழலியல் அடிப்படையில் விளக்கியுள்ளனர். இப்படி பழமொழிகள் பல்வேறு அணுகுமுறைகளில் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இக்கட்டுரை பழமொழிகளை பண்பாட்டு சொல்லாடல்களாகவும், உரையாடல்களாகவும் வளர்த்தெடுக்கிறது.

பழமொழிகள் தம்மளவில் பொருள் பொதிந்தவை. இதனை இலக்கியங்களைக் கொண்டும், வரலாற்று ஆவணங்களைக் கொண்டும், மொழியியலைக் கொண்டும், வைத்திய அறிவைக் கொண்டும் அவ்வழக்காறுகளை அர்த்தப்படும் செயலிலிருந்து நாம் ஒருமுறையியலைக் கற்றுக்கொள்ள முடியும். வழக்காறுகளும், எழுத்துப் பிரதிகளும் ஒன்றையொன்று மறுப்பவை அல்ல, மாறாக ஏராளமான ஊடாட்டங்களையுடைவை. சிறிது காலம் முன்பு வரை வாய்மொழி வழக்காறுகள் மரபான மூட நம்பிக்கைகளையும், பாரம்பரிய அதிகார அமைப்புகளையும், பாதுகாக்கக்கூடியவை என்ற கருத்தைக் கொண்டிருந்த சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி, ரஷ்ய நாட்டைச் சேர்ந்த கம்யூனிசவாதியான மாக்சிம் கார்க்கி போன்ற எழுத்தாளர்களின் தலையீட்டிற்குப் பின்பு வழக்காறுகளின் பரிமாணங்களைப் புரிந்து கொண்டு தங்களது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டது. சோவியத் கட்டமைப்பில் நடைபெற்ற இந்த மாற்றம், உலகின் பல்வேறு நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் இயக்கங்களிலும் பிரதிபலித்து, அப்படியானதொரு தமிழகப் பிரதிபலிப்பாகவே நா.வானமாமலையும் அவரது ஆய்வுக்குழுவும் திகழ்ந்தன.

வாய்மொழி வழக்காறுகள்

வாய்மொழி வழக்காறுகள் ரசனை அடிப்படையிலே கையாளப்பட்டு வந்த சூழலில் அவற்றின் சமூகப் பாத்திரம் இன்றியமையாதது என்ற செய்தியுடன் வந்து சேர்ந்த நா.வானமாமலையின் தலையீடு தமிழ்ச்சூழலை மாற்றியமைக்கவே செய்தது. 1960களில் வேறொரு திசையின் வழியாக நாட்டுப்புறவியலின் அறிமுகம் தமிழகத்தில் பரவத் தொடங்கியது. பல்கலைக்கழகங்களிலும் ஆய்வு மையங்களிலும் பெரும் பதவியை வகித்து வந்த ஆய்வாளர்கள் பழமொழி, விடுகதை, கதைப்பாடல், நாட்டுப்புறப்பாடல், சடங்குமுறைகள், தெருக்கூத்து போன்ற தொடர்ச்சியாக நடத்திய ஆய்வுகளும், அவற்றின்

நேர்த்தியும் பல்கலைக்கழகப் பேராசியர்கள் பலரையும் நாட்டுப்புறவியலின்பால் திருப்பிவிட்டது. பழமைமிக்க நாகரிகங்கள் பலவற்றையும், பல்வேறுபட்ட மொழிகளையும், பல்வேறுபட்ட சமயங்களையும், வழிபாடுகளையும், எண்ணற்ற சாதிகளையும், இனக்குழுக்களையும், நெடிய வரலாற்றையும் கொண்ட இந்திய நாட்டில் பல்வேறு மரபுகள் ஒன்றேடொன்று ஊடாடியும், இணையாகவும், குறுக்காகவும், நெடுக்காகவும் ஓடிக் கிடைக்கின்றன. இதனை மனதில் கொண்டு தான் நாட்டுப்புற வழக்காறுகளை அறிவுப்பூர்வமாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது.

சொல்லாடல் பற்றிய விளக்கம்

சொல்லாடல் என்ற சொல்லாட்சி Discourse என்ற ஆங்கிலச் சொல்லுக்குரிய மொழிபெயர்ப்பாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. சமூக அறிவியலாளர்களும், மொழிபெயர்ப்பாளர் களும் வான்டிஜ் போன்றோரும் சேர்ந்து முதன்முதலாகச் சொல்லாடலுக்கான பரிமாணங்களை வரையறை செய்தார்கள்.

'சொல்லாடல் என்பது ஒரு எளிமையான இயங்கியல் (dialectic) மட்டுமல்ல இதற்குள் வளமான கூறுகள் நிறைந்து கிடக்கின்றன. மொழி, இலக்கணம், கலந்துரையாடல், சமூகம், பண்பாடு தொடர்பான அனைத்து விதப் பகுப்பாய்வு அணுகுமுறைகளிலும் சொல்லாடல் ஊடுருவிச் செல்கிறது'

ஒரு மொழியின் வெளிப்பாடாக சொல்லாடல் உள்ளது. மொழி என்பது பேச்சு மொழி, எழுத்துமொழி மட்டுமல்ல. மனிதனுடைய அனைத்து வெளிப்பாடுகளும் மொழியின் மூலமாகவே இயக்கப்படுகின்றன. ஒரு மொழியை வெளிப்படுத்துகின்ற சூழலுக்கேற்பவும் அம்மக்களினுடைய பண்பாட்டிற்கு ஏற்பவும் சொல்லாடல் கட்டமைக்கப்படுகின்றது. சொல்லாடல் என்பது அதிகார உறவுகளில் வெளிப்படுகின்ற சமூக முரண்களின் விளைபொருளாகும்.

பண்பாட்டுச் சொல்லாடல்கள்

இயற்கையாக அமைந்துள்ள ஒன்றின் மீது தன்னுடைய கருத்துக்களாலும், உழைப்பினாலும் வகையாற்றிப் புதிய ஒன்றாக மாற்றியமைப்பது பண்பாடாகும். உதாரணமாக கற்கள்

சிலைகளாகவும், சிற்பங்களாகவும், மண்பானைகளாகவும் மனித உழைப்பினால் உருவாக்கப்படுகின்றன. இதன் தொடர்ச்சியாகப் பானைக்குள்ளும், சிலைக்குள்ளும் மனிதனின் கருத்துக்கள் ஊடுருவி அல்லது திணிக்கப்பட்டு இந்தச் சிலை யாரரால் செய்யப்பட்டது, யாருக்காகச் செய்யப்பட்டது, எதற்காகச் செய்யப்பட்டது, செய்யப்பட்டவரின் சாதி, மதம், மொழி இதுபோன்ற வினாக்களுக்குரிய பதில்களால், கருத்துக்களால் எவ்விதப் பண்பாடாக மாற்றம் பெறுகின்றது.

இதுபோன்ற சொல்லாடல்களும் எவ்விதமாக கட்டமைக்கப்படுகின்றன. மனிதர்கள் சொல்லாடலை மொழியின் மூலமாக வெளிப்படுத்துக்கிறார்கள். ஒரு மொழி நன்கு அறிந்தவர்களுக்கு அந்த மொழியிலுள்ள சொற்களும், தொடர்களும் பொருளை உணர்த்துவதோடு நின்று விடுவதில்லை. அவர்களின் மனதில் பொருளோடு நிழலாடும், சில கருத்தியல் சாயல்களையும் உணர்த்துகின்றது.

தொடக்கத்தில் மொழியியல் அறிஞர்கள், மொழியில் உள்ள சொற்கள், தொடர்கள், வாக்கியங்கள் ஆகியவற்றின் அமைப்பை அவற்றின் பொருண்மை அவற்றைப் பயன்படுத்துகின்ற சூழல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் தராமல் ஆய்வு செய்தனர். இதற்கு உதாரணமாக 1957ல் வெளி வந்த நோம்சாம்ஸ்கியின் (ழிஷீணீனீ சிலீஷீனீடீளீஹ்: 1957) ஆய்வுகளைக் கூறலாம். 1970க்குப் பின்னர் தொடர் வாக்கியங்கள் ஆகியவற்றின் அமைப்பை ஆய்வு செய்யும்போது அவற்றின் பொருண்மைக் கூறுகளுக்கும் முக்கியத்துவம் தரப்பட்டது. இருப்பினும் சூழல் தொடர்ந்து நிராகரிக்கப்பட்டே வந்தது.

ஆனால் மொழியியல் அறிஞர்களுக்கு முன்னரே மானிடவியல் ஆய்வாளர்கள் சிலர் மொழியின் சூழலுக்கு முக்கியத்துவம் தரத் தொடங்கினர். எடுத்துக்காட்டாக மாலினோஸ்கி கருத்துக்களைக் கூறலாம். மாலினோஸ்கி திரோப்ரையந்த் தீவில் வாழும் இனக்குழு மக்களைப் பற்றி ஆய்வு செய்தார். அவர்களுடைய மொழியியல் உள்ள சொற்கள், தொடர்கள், வாக்கியங்கள் ஆகியவற்றின் பொருண்மையைப் புரிந்துகொள்ள வேண்டுமெனில் அவை பயன்படுத்தப்படும் சூழலையும் அறிந்து கொள்ள வேண்டும் எனக் கண்டறிந்து

கூறினர். இதன் பின்னர் மொழியியல் அறிஞர்களும் சூழலுக்கு முக்கியத்துவம் தரத் தொடங்கினர்.

ஓர் உறுப்பு மற்ற உறுப்புகளோடு பல்வேறு நிலைகளில் தொடர்புடையதாக விளங்குகிறது. நிகழ்த்துநர் நிகழ்த்துதல் வாயிலாகப் பார்வையாளரைத் தூண்டுகிறார். பார்வையாளர் தம்முடைய எதிர்வினைகளின் வாயிலாக நிகழ்த்துநரைத் தூண்டுகிறார். நிகழ்த்துநருக்கும் பார்வையாளருக்கும் இடையே உள்ள உறவானது நிகழ்த்துதலின் போது வெளிப்படும் பனுவலின் (Performance Text) வடிவம், தன்மை ஆகியவற்றைத் தீர்மானிப்பதற்கு சூழல் முக்கிய காரணி.

பண்பாட்டு பார்வையில் பழமொழி

ஆய்வாளர் தகவலாளரைச் சந்தித்து தகவல்களை சேகரிக்கும் போது தகவலை கேட்டவுடன், தகவலாளர் சொல்ல முன்வருவதில்லை. திடீரென்று கேட்டால் எப்படி சொல்ல முடியும், அதற்கென்று நேரம் பொழுது இல்லையா, என்று கேட்க, மீண்டும் மீண்டும் தகவலாளரைச் சந்தித்து பழமொழிகளை தகவலாளர் சொல்லும் போது வாழ்க்கையோடு வாழ்க்கை ஒன்றிப்போய் தாங்கள் வாழ்க்கையில் பெற்ற அனுபவங்களை எதார்த்தமான சூழலில் சொல்லும் விதம் கலை நயத்தோடு இருந்தது. தனது வாழ்க்கையில் ஏற்பட்ட துன்பங்களை, சந்தோஷங்களை பழமொழியாக அதனைத் தனக்குள் உருவகப்படுத்தி வெளிப்படுத்தும் விதமே ஒரு பண்பாட்டுச் சொல்லாடலாக உணர முடிகிறது. அதனைப் பின்வரும் பழமொழி மூலம் அறியலாம். ஒரு நாய், தன் குட்டிக்கு உணவு தேடும்போது நடந்த சம்பவத்தை கதை வடிவில் பழமொழி சொல்லப்படும் விதமே அருமை.

ஓர் ஊரில் ஆண் நாயும், பெண் நாயும் வாழ்ந்து வந்த சமயத்தில், பெண் நாய் கர்ப்பமாக இருந்ததால், அதனால் இரை தேடி போக முடியாததால், ஆண் நாய் தினமும் திருட்டுத்தனமாக உணவைத் தேடி பெண் நாய்க்கு கொண்டு வந்து கொடுத்தது. இப்படி தினமும் செய்யும் போது, ஒருநாள், இந்த ஆண்நாய் உணவு திருடும்போது சிக்கிவிட, அதனை அவ்வீட்டில் உள்ளவர்கள் அடித்து குப்பையில் தூக்கிப் போட்டு விட்டனர். இந்த சமயம் பார்த்து பெண் நாய்க்கு பிரசவம் ஆகிவிட்டது. உடனே பெண்

நாய்க்கு பசிக்க ஆரம்பித்ததால் இன்னும் ஆண் நாய் காணமோ அழுது கொண்டு வரும்போது

நீங்க படலடச்ச வீட்ட பாங்கா
தொரைப்பீங்களே எஞ்சாமி
கதவடச்ச வீட்ட காரணமா
தொரைப்பீங்களே எஞ்சாமி

என்று சொல்லி அழுது வரும்போது குப்பையில் கிடந்த ஆண்நாய், நான் சாகல பிள்ள, அரகுறையத்தா அடுச்சாங்க, அது நாள, நா பொழச்சுட்டேன் பிள்ளை

ஓடி வந்தேன் ஒழிஞ்சு வந்தேன்
சும்மா இரு பிள்ள சும்மா இரு
நாடி வந்தேன் நடுச்சு வந்தேன்
சும்மா இரு பிள்ள சும்மா இரு
ஒம் பச்ச மேளு நச்சு விடும்
சும்மா இரு பிள்ள சும்மா இரு

என்று சொல்லி பெண் நாய்க்கு ஆறுதல் கூறி வீட்டிற்குக் கூப்பிட்டுச் சென்றது. இப்பழமொழி கேட்போரை மனமுருகி அழ வைக்கிறது.

இந்தப் பழமொழி, வாழ்க்கையில் வறுமை வந்தாலும், அதனை சரிசெய்து, குடும்பத்தை விட்டுக் கொடுக்காமல் வாழ்பவள் தான் பெண். அப்படியிருக்க, குறைவாக இருந்தாலும், அதனை நிறைவாக எண்ணி குடும்பத்தின் மானத்தைக் காப்பாற்ற வேண்டும். அதை விட்டுவிட்டு கிழவி நாட்டாமைத்தனத்தை இங்கு காட்டக்கூடாது என்பதை வெளிப்படுத்தும் பழமொழியாக,

கொண்டாடா குருணி
குத்துரண்டா பதக்கு

வரவுக்கு ஏற்ற செலவினை செய்யாமல், வரவு எட்டணா, செலவு பத்தணா என்று போனால் குடும்பம் நடுத்தெருவில் நிற்கும் என்பதை எடுத்துக்கூறும் பழமொழியாக விளங்குகிறது. குடும்பத்தில் ஏதாவது குறை இருந்தால், அதனைச் சுட்டிக் காட்டாமல், சமாளித்து வாழ்க்கை நடத்துவது நல்ல பெண்ணுக்கு அழகு என்பது நம் பண்பாடு அல்லவா. அடுத்ததாக,

கானக் கருங்குயிலே

களையெடுக்கும் பெண்மயிலே
நீலக் கருங்குயிலே
நான் நிக்கட்டுமா போகட்டுமா

ஆண், பெண் ஆகிய இருவருக்கும் இடையில் உள்ள உறவை விளக்கும் சூழலில் இந்தப் பழமொழி சொல்லப்படுகின்றது. அத்தை மகனை, மாமன் மகன் உறவை விளக்கும் இந்தப் பழமொழி உறவுகளின் மகத்துவத்தைச் சொல்வதாக அமைகிறது. கிராமங்களில் இன்னும் இந்த உறவு வலுவானதாகவே இருக்கிறது. திருவிழாக் காலங்களில் மகிழ்ச்சியாக உறவாடி, கைகோர்த்து செல்லும் காலம் எக்காலம் என்று ஏங்க வைக்கிறது இந்த உறவு.

அடுத்ததாக,

நாடி எண்ண தேச்சாலும்
நயன கொண்ட போட்டாலும்
குலுக்கி நடந்தாலும் - இனி
கொமரியாகப் போறதில்ல

என்ற பழமொழி, என்ன தான் கிழவி நல்லா தலையைச் சீவி, நல்ல சேலை கட்டி நடந்தாலும், கிழவி கிழவி தான். அவள் குமரியாக மாட்டாள் என்பதைச் சொல்லும் விதத்தில் இப்பழமொழி அமைந்துள்ளது. தல நெறைய எண்ணைய தேச்சு, குமரி மாதிரி நடந்தாலும் வயதை குறைத்துக் காட்டாது என்று கிராமங்களில் உறவுகளை கேலி, கிண்டல் செய்து வயிறு குலுங்க சிரிக்க வைத்தும் உறவுகளை ஒன்றிணைப்பதோடு இப்பழமொழியின் அர்த்தம் அமைகிறது. அடுத்ததாக,

மம்பட்டி தோலுட்டு
மடதொரக்க போரவறே
மடய தொறந்து விடு
நா மங்க வந்து நீராட

என்ற பழமொழி குடும்பத்தை ஆண், பெண் இருவரும் சேர்ந்து 'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது' என்ற குறளிற்கு ஏற்ப இருவரும் ஒருவருக்கு ஒருவர் அன்பு கொண்டு, உரிமையோடு பிறர் நலம் பேண வாழ்தல் நல்லறம் என்பதை இப்பழமொழி உணர்த்துகிறது.

முடிவுரை

இக்கட்டுரை தமிழரின் பழமொழிகளும், பண்பாட்டுச் சொல்லாடல்களும் என்னும் தலைப்பில் அமைக்கப்பட்டுள்ளது. காலத்தின் அருமை கருதியும், கட்டுரையின் அளவு கருதியும் மிக சுருக்கமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால் மேலைநாட்டு அறிஞர் பெருமக்கள் கூறிய கோட்பாட்டு அணுகுமுறைகளையும், தமிழகச் சூழலில் தமிழறிஞர்கள், ஆய்வாளர்கள் கையாளப்பட்ட கருத்துக்களையும் ஒன்றிணைத்து அதிலுள்ள பாரதூரமான இடைவெளிகளையும் பற்றி கதைக்க முன்வைத்துள்ளது. மேலும், பழமொழி நிகழ்த்தும் சூழலை முன்வைத்து நகர்த்தப்பட்டுள்ளது. மேலும் இக்கட்டுரையின் நோக்கமானது மக்களிடையே உள்ள ஏற்றத்தாழ்வுகள், முரண்பாடுகள், அதிகாரவர்க்கத் தன்மை, ஆண்டான் அடிமை உறவுமுறை ஆகியவற்றை விரிவாக கலந்துரையாடலில் விவாதிக்க காத்திருக்கிறது. வாருங்கள் விவாதிக்கலாம், மேற்குறிப்பிட்ட கருத்துக்களை தங்களிடம் முன்வைத்து அதற்குரிய வினாக்களுக்காக காத்திருக்கின்றேன்.

துணைநூற்பட்டியல்

முத்தையா, முனைவர் .இ (தொகுப்பாசிரியர்) (2010). தமிழர் பண்பாட்டு வெளியில் நிகழ்த்துக்கலைகளும் உலகநோக்கும், காவ்யா வெளியீடு , கோடம்பாக்கம், சென்னை -24

கணேஷ்வரி ஆ. (2000). மதுரை மாவட்ட விடுகதைகள் பன்முக ஆய்வு முனைவர் பட்ட ஆய்வேடு, மதுரை காமராசர் பல்கலைக்கழகம். மதுரை - 21.

முத்தையா. ,இ. (2010). அடித்தள மக்கள் தொடர்பான பண்பாட்டுச் சொல்லாடல்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை

நீதிமலர் (2007). தலித் பெண் படைப்புகளில் பண்பாட்டுச் சொல்லாடல்கள்

இளநிலை ஆய்வேடு, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை - 21.

ஜெயமோகன் (2009). பழமொழிகள் - ஓர் ஆய்வு (கட்டுரை) தமிழ்ப் பதிப்பகம், சென்னை

முனைவர்.ஞா.ஸ்டீபன் (2016). அமைப்பியல் கோட்பாடும் ஆய்வுகளும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

லூர்து, தே. (2000). நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை.

ரெஜித்குமார் (2000). நாட்டுப்புற இயல் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

லூர்து. ,தே. (1988). நாட்டார் வழக்காறுகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

ஸ்டீபன்,ஞா. (2009). தமிழ்ச் சமூகத்தில் வாய்மொழிக் கதைகள், பாவை பதிப்பகம்.

64

திருக்கோணேஸ்வரர் ஆலய அமைவிடம் : ஆழ்கடல் சுழியோடல் நுட்பத்தையும் புராணங்களையும் இயற்கையையும் தொடர்புபடுத்திய பூகோள ரீதியான ஓர் ஆய்வு

எம். ஸ்ரீசாந்தன்
இலங்கை. srishanthan7@gmail.com

ஆய்வு அறிமுகம்

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மும்மலைகள் சூழ்ந்த முக்கோண (திரிகோண) வடிவில் இயற்கையாக அமைந்திருக்கும் காரணத்தால் திரிகோணமலை என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்பது பொதுவான கருத்தாகும். இங்கு கோணேஸ்வரர் கோயில் கொண்ட காரணத்தினால் திருக்கோணேஸ்வரம், திருகோணமாமலை, திருக்கோணசலம் எனப் பல பெயர்களால் இம்மலை அழைக்கப்படுகின்றது. திருஞானசம்பந்தர் 'திருகோணமாமலை அமர்ந்தாரே' என்று பாடியுள்ளார். அருணகிரிநாதர் அருளிய திருப்புகழிலும் 'திருகோணமலை' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

திருகோணமலை சேஷத்திரம் புராணகாலத்திலிருந்தே புனித ஸ்தலமாக சைவ மக்களினால் பேணப்பட்டு வந்தமையை வாய்மொழியாகவும் புராணங்களின் வாயிலாகவும் ஏனைய வரலாற்றுச் சான்றுகள், ஆய்வு நூல்கள் வாயிலாகவும் அறிய முடிகிறது. ஒருசமயம் கோபம் கொண்ட வாயு பகவான் மாகமேரு பர்வதத்தைப் பெயர்த்தெடுத்த பொழுது உடைந்து விழுந்த ஒரு துண்டே திருகோணமலை நிலப்பரப்பு என்றும் புராணங்களில் கூறப்பட்டுள்ளது. சிவனுக்கு உகந்த சேஷத்திரங்களில் கோணேஸ்வரம் ஒன்றாகும் எனவும் குறிப்பிடப்படுகின்றது. அகத்திய முனிவர் தெற்கு நோக்கித் திருகோணமலைக்கு வந்து

திருக்கோணேஸ்வரத்தில் தமது தவத்தினை முடித்தார் என்றும் தசஷண கைலாய மான்மியம் கூறுகின்றது.

இராமாயண காலத்தில் இராவணன் வழிபட்ட திருத்தலமாக கோணேஸ்வரம் விளங்குகின்றது. அவன், தான் பெற்ற தவத்தின் வலிமையால் இம்மலையைப் பெயர்த்தெடுக்க பாரிய வாளால் வெட்டினான் என்றும் அவனால் வெட்டப்பட்ட பகுதி இராவணன் வெட்டு என்றும் நம்பப்படுகிறது.

கிமு. 3544 இல் ஒரு கடற்கோள் ஏற்பட்டு அந்தக் கடற்கோளில் கோணேசர் கோவிலின் பெரும்பகுதி கடலில் மூழ்கியதாகவும் வரலாறுகள் கூறுகின்றன. இராஜவழிய என்ற வாழி நூல் இராமாயண காலத்திற்குப் பின்னர் கடற்கோள் ஏற்பட்டது எனக் குறிப்பிடுகிறது. ஆரம்பத்தில் மூன்று கோவில்கள் இருந்தது ஆனால் தற்போது 01 கோவில் மட்டுமே கோணேசர் மலை உச்சியில் காணப்படுகின்றது. எனவே இக்கோவில் அமைந்துள்ள அமைவிடம், இயற்கையான பூகோள அமைப்பு திருகோணமலையின் இக்கால முக்கியவத்துவம் அதன் அமைப்பு, புராணங்கள், அஸ்திரங்களுடன் எவ்வாறு தொடர்புபடுகின்றது. பாரிய இயற்கை அனர்த்தங்களில் இருந்து எவ்வாறு மக்களைப் பாதுகாக்கின்றது. ஆலய அமைவிடத்திற்கும் இலங்கைத் தீவின் பாதுகாப்பிற்கும் உள்ள தொடர்பு சமய அறிவியலினூடாக விஞ்ஞானத்தின் அறிவியலை ஆராய்தல் இதன் நெருங்கிய தொடர்புகள் போன்றன இந்த ஆய்வின் மூலம் வெளிப்படுத்திக் காட்டப்படுகின்றது. மேலும் அடம்ஸ் வாடியா, குலரத்தினம் போன்றவர்களின் கருத்துக்களும் இவ்வாய்விற்காக திருகோணமலைக் கடற் பரப்பினுள் சென்று ஆய்வு செய்வதற்கு நவீன ஆழ்கடல் சுழியோடல் நுட்பம் பயன்படுத்தப்பட்டு கடல் ஆழ்பகுதி குறிப்பிட்ட சில மீட்டர்கள் ஆராயப்பட்டமை விசேட அம்சமாகும். எனவே இந்த ஆய்வின் மூலம் பல உண்மைக் கருத்துக்கள், ஆச்சரியமான விடயங்கள், புராணத் தத்துவங்கள் என்பன வெளிக் கொண்டுவரப்பட்டுள்ளன.

ஆய்வின் நோக்கம்

திருகோணமலை நிலப்பரப்பினைப் புராணங்களோடும் சமய தத்துவங்களோடும் தொடர்புபடுத்தி முக்கியத்துவத்தை எடுத்துரைத்தல், அது இயற்கையுடன் தொடர்புபடும் விதத்தினை

வெளிப்படுத்தல், பூகோள ரீதியாக இந்த நிலப்பரப்பு பெறும் முக்கியத்துவத்தை விஞ்ஞான அறிவியல் ரீதியாகத் தேடிப்பெற்றுக்கொண்ட ஆதாரங்களை வைத்து நிரூபித்துக் காட்டுதல் ஆகியன இந்த ஆய்வின் பிரதான நோக்கங்களாக காணப்படுகின்றன.

ஆய்வு எல்லை

இந்த ஆய்வின் எல்லையாக சுமார் 6000ஆம் ஆண்டிற்கு முற்பட்ட இராமாயண காலத்திலிருந்து பார்க்கப்படுகின்றது இராவணனின் காலப்பகுதி அதற்கு பிற்பட்ட 16ம் 17ம் நூற்றாண்டு மற்றும் இன்றைய காலப்பகுதிகளும் இந்த ஆய்வு எல்லையாக அமைவதுடன் கடல் மட்டத்திலிருந்து 95அடி ஆழமான கடலின் ஆழப்பகுதி இந்த ஆய்விற்காக நேரடியாக சென்று ஆராயப்பட்டது சிறப்பம்சமாகும். எனவே இங்கு பழைய புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள காலமும் தற்போதைய நவீன காலத்தில் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி கடலில் அடித்தளத்தை கண்டறியப்பட்ட 95அடிக்கு மேற்பட்ட கடல் அடித்தள பகுதிகளும் ஆய்வின் எல்லைகளாக காணப்படுகின்றன.

ஆய்வின் கருதுகோள்

இந்த ஆய்வின் கருதுகோளாக இலங்கையின் திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் அமைவிடம் பூகோள ரீதியாக மிக முக்கியத்துவம் வாய்ந்த ஓர் அம்சமாகும். புராணங்களில் குறிப்பிடப்படும் சான்றாதாரங்கள் மற்றும் சமய கருத்துக்களில் கூறப்படும் விடயங்கள் மூலம் இந்நிலப்பரப்பு அஸ்திர வடிவமாக காணப்படுகின்றது. இந்த திருக்கோணேஸ்வரர் ஆலய நிலப்பரப்பு பலம் வாய்ந்ததும் சக்தி வாய்ந்ததும் திடமான இயற்கை அனர்த்தங்களுக்கு ஈடு கொடுக்கக்கூடிய அபூர்வ சக்தி கொண்டதும் இயற்கையான ஒரு பாதுகாப்புப் பர்வதமாகவும் காணப்படுகின்றது என்பனவே இவ்வாவின் கருதுகோளாகும்.

ஆய்வுப் பிரச்சினை

திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் அமைவிடம் புராணங்களுடன் இயற்கையுடனும் பூகோளரீதியாக ஓர் அஸ்திரமாகவும் மற்றும் இயற்கையாக தோன்றியதா அல்லது

கண்ட உயர்வு கொள்கைகளின் படி உருவானதா என்ற முடிவுகளில் உண்மையைக் கண்டறிவதும் இந்த நிலப் பரப்பின் முக்கியத்துவத்தை பல்வேறு கோணங்களில் ஆராய்வதும் இங்கு முக்கிய ஆய்வுப் பிரச்சினைகளாகும்.

ஆய்வு முறையியல்

இவ்வாழ்வானது முதலாம் நிலை தரவுகள், இரண்டாம் நிலைத் தரவுகள் சேகரிப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரலாற்று ரீதியாகவும் ஒப்பீட்டு ரீதியாகவும் கள ஆய்வாகவும் மேற்கொள்ளப்படுகின்றது இங்கு முதலாம் நிலைத் தரவுகளாக நேரடியாக கடலின் 95 அடிக்கு மேற்பட்ட ஆழப் பகுதிக்கு சென்று கடல் அடித்தளத்தை பார்வையிடுவதன் மூலமும் அங்கு சேகரிக்கப்பட்ட தகவல்களை பெற்றுக் கொண்டு நேர்காணல்கள் மூலமும் பெறப்பட்ட தகவல்களும் வரலாற்று மூலாதரங்கள், ஆய்வுக்கட்டுரைகள், பத்திரிகைகள் இணைய ஒலி, ஒளி வடிவங்கள் போன்றவை பயன்படுத்தப்பட்டுள்ளன.

தொகுப்புரை

இலங்கையின் திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய அமைவிடம் (ஆழ்கடல் சுழியோடல் நுட்பத்தை பயன்படுத்தி) புராணங்களுடனும் இயற்கையுடனும் தொடர்பு படுத்தி பூகோள ரீதியான ஆய்வு என்ற இவ் ஆய்வின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளில் பல புதுமையான விடயங்களும் உண்மையென நம்பக்கூடிய ஆச்சரியமூட்டும் தகவல்களும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய தரவுகளும் கண்டறியப்பட்டன. புராணங்களுடனும், மத கருத்துக்களுடனும் திருகோணமலை பகுதி தொடர்புபடும் விதம் இயற்கையுடன் அது அமைப்பு ரீதியாக பெற்றுக் கொண்டுள்ள முக்கியத்துவம் மற்றும் பூகோள ரீதியாக பெற்றுள்ள மிக முக்கியமான பங்கு என்பன ஆராயப்பட்டன. இந்த மலைப்பகுதியில் கடலில் நீந்துள்ள பகுதியின் முனைப்பகுதியில் கோவில் அமைக்கப்பட்டதன் சமய காரணங்கள், இயற்கைப் பாதுகாப்பு என்பன ஓரளவு கண்டறியப்பட்டு இந்நிலப்பரப்பு இயற்கையில் இருந்து இயற்கை அனர்த்தங்களில் பாரிய அழிவுகளில் இருந்து எவ்வாறு மக்களையும் ஏனைய உயிரினங்களையும் பாதுகாத்து வருகின்றது என்ற விஞ்ஞான

ரீதியான உண்மைகள் ஓரளவு கண்டறியப்பட்டன. இவற்றுக்கான சான்றாதாரங்கள் பறவை விலங்குகளுடன் ஒப்பிட்டு பல உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டன. எனவே இந்த ஆய்வின் மூலம் நிலப்பரப்பிற்கும் நீர்ப்பரப்பிற்குமான பாதுகாப்பு அம்சங்களும் கண்டறியப்பட்டன. ஆகவே இந்த முக்கியத்துவம் மிக்க ஆய்வின் முடிவிலே ஆராயப்பட்ட சான்றுகள் இயற்கை அம்சங்கள், பூகோள அமைப்புகள் என்பன இயற்கையுடனும் புராண இலக்கியச் சான்றுகள் ஊடாகவும், கர்ண பரம்பரைக் கதைகள் ஊமாகவும், நேரடியாக பெறப்பட்ட ஆதாரங்களையும் பயன்படுத்தி இவ் அமைவிடமும் அந்த நிலப்பரப்பும் பூகோள ரீதியான இலங்கையின் பாதுகாப்பு அஸ்திரமாக இயற்கையின் அருங்கெடையாகவும் கடவுளின் படைப்பின் சிறப்பம்சமாகவும் கருதப்படுவதுடன் இந்துப்புராணங்களில் குறிப்பிடப்படும் கருடாஸ்திரங்களுடனும் நெருங்கிய தொடர்புள்ள அமைப்பாக காட்சியளிக்கின்றது. இலங்கையை பாதுகாக்கும் பலம்வாய்ந்த இயற்கை சக்தியாக கொள்ள முடியும் என்ற முடிவிற்கு வருவதற்கு இந்த ஆய்வின் மூலம் பெறப்பட்ட தரவுகளும் ஆதாரங்களும் விஞ்ஞான ரீதியான விளக்கங்களும் சமய கருத்துக்களும் சான்று பகிருகின்றன.

எனவே இந்த ஆய்வு ஓர் அறிமுக ஆய்வாக மேற்கொள்ளப்பட்டு ஏற்றுக்கொள்ளக்கூடிய இந்த தரவுகளை இந்த ஆய்வின் மூலம் நிரூபிக்க கூடியதாக அமைந்தது எனவே இந்த ஆய்வானது மேலும் விரிவாக ஆய்வு செய்யப்பட வேண்டிய ஒரு முக்கிய விடயமாகக் கருதப்படுகின்நது. எதிர்காலத்தில் இலங்கையின் பாதுகாப்பும் மனித குலத்தினை அழிவிலிருந்து மீட்டெடுப்பதற்குரிய சக்தியாகவும் இந்த திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயமும் அந்நிலப்பரப்பும் காணப்படுகின்றது. எனவே இந்த நிலப்பகுதியை பாதுகாக்க வேண்டியது எமது அரசின் கடமையாகும் அத்துடன் ஒட்டுமொத்த பூகோள அமைப்பின் பிரகாரம் பஞ்ச ஈச்சரங்கள் அமைந்துள்ள வரிசையில் திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயம் மிக முக்கியம் வாய்ந்த இயற்கை அமைப்பாக காணப்படுவதனால் பூகோள ரீதியாக இந்த நிலத்திணிவு பாதுகாக்கப்பட வேண்டிய அவசியத்தை இந்த ஆய்வின் மூலம் உலகிற்கு உணர்த்தப் படுகின்றது.

உசாத்துணைகள்

நவரத்தினம்,க. (2004). இலங்கையில் கலைவளர்ச்சி, குமரன் புத்தக இல்லம்.

ஜுவராஜ்,த. (2021). கொட்டியாரப்பற்று வன்னிபங்கள், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.

அருள்சுப்பிரமணியம்,த. (2014). திருக்கோணேச்சரம், யுனிஆட்ச் பிறைவட் லிமிட்டட்.

அருள் சுப்பிரமணியம்,கே. (2015). திருக்கோணேச்சரம், யுனிஆட்ச் பிறைவட் லிமிட்டட்.

பத்மநாதன்,சி. (2015). இலங்கையில் இந்துசமயம், குமரன் பதிப்பகம் புத்தக இல்லம்.

வடிவேல்,இ. கோணமலை அந்தாதி, இந்துகலாச்சார அலுவல்கள் திணைக்கம்.

சி.பத்மநாதன். திருக்கோணேசுவரம், (2022). குமரன் புத்தக இல்லம்.

செல்லத்துரை. கோணேஸ்வரம், (2015). குமரன் புத்தக இல்லம்.

மீன்பிடி படகு செலுத்துனர் கையேடு, கொழும்பு சர்வதேச கடல்சார் தொழில்நுட்பக் கல்லூரி

நடராஜா, வே.க. (2016). பண்டைய இலங்கை, குமரன் புத்தக இல்லம். - 2016.

முத்துக்குமரன,ஆர். சென்ரல் கல்சரல் பன்ட் ஒப் சிறிலங்கா, மரைன் ரைம் ஆக்கோளர்ஜி யுனிட் பிஎச்டி

தயானந்த,ஏ.எம்ஏ. மகிந்த கருணாரெத்தின 2, நியூ மரிடைம் ஆர்கலோஜிகல் டிஸ்கவறீஸ் இன் த ஈஸ்டர்ன் ப்ரொவின்ஸ் ஒஃப் சிறிலங்கா.

நேர்காணல்

பிரபாகரன், ஆர். அண்டர் வோட்டர் டைவர், திருகோணமலை.

சிவகணேஸ்வரன், ஆலய பரிபாலன சபை உறுப்பினர்.

பிலிசியன் பெர்ணாண்டோ, அண்டர் வோட்டர் டைவர், திருகோணமலை.

திரு.சீலன், அண்டர் வோட்டர் டைவர், திருகோணமலை.

65

மட்டக்களப்புப் பிரதேசத்தில் தொல்லியலும் தமிழ் மொழியின் தொன்மையும்

சிவகுரு டிகநாதன்
கலாநிதிப்பட்ட ஆய்வாளர்,. கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை.
diganath@gmail.com

ஆய்வின் அறிமுகம்

கி.மு மூன்றாம் நூற்றாண்டு முதலாக கி.பி நான்காம் நூற்றாண்டு வரை தென்னாசியத் துணைக் கண்டத்தில் ஆவணங்கள் எல்லாம் பிராமி எனும் வகைக்குரிய வரிவடிவங்களில் எழுதப்பட்டன. தமிழகத்தில் வழங்கிய எழுத்துமுறை தமிழ்ப்பிராமி என்று சொல்லப்படும். அதிலே தமிழுக்குச் சிறப்பான எழுத்துக்கள் அமைந்துள்ளதால் அது அவ்வாறு சொல்லப்படும். பிராகிருதத்தில் இல்லாதனவும் தமிழ் மொழிக்கே சிறப்பானவையுமான ழ,ள,ற,ன என்னும் எழுத்துக்கள் தமிழ்ப் பிராமியில் மட்டுமே காணப்படும். இவ்வெழுத்துக்குரிய ஒலிப் பெறுமானங்கள் பிராகிருத மொழியிற் காணப்படுவதில்லை. எனவே அவற்றுக்கு வரிவடிவம் கொடுக்கும் சிறப்பான இவ்வெழுத்துக்களைத் தமிழகத்தில் உருவாக்கியுள்ளனர். இப்பொழுது வழக்கிலுள்ள தமிழ், தெலுங்கு, கன்னடம், சிங்களம், ஹிந்தி, வங்களி, மராத்தி முதலிய தென்னாசிய மொழிகளில் எழுதப்படும் எழுத்து முறைகள் யாவும் பிராமி வரிவடிவங்களை அடிப்படையாகக் கொண்டவை. இதுபோன்ற ஒரு வளர்ச்சி ஐரோப்பாவிலும் ஏற்பட்டது. ஆங்கிலம், பிரெஞ்சு மொழி, இத்தாலிய மொழி, ஸ்பானிய மொழி, ஜேர்மனிய மொழி முதலானவற்றின் எழுத்து முறைகள் உரோமின் வரிவடிவங்களை ஆதாராமாகக் கொண்டு வளர்ச்சி பெற்றவை.

இலங்கையிற் பெருந்தொகையான பிராமிச் சாசனங்கள் காணப்படுகின்றன. அவை பெரும்பாலும் மலைகளிலும், பெருங்கற் பாறைகளிலும் அமைந்துள்ள குகைத்தளங்களிலும் வெட்டப்பட்டுள்ளன. இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலே தரையிலமைந்த பெருங்கற்பாறைகளிற் பிராமிச் சாசனங்கள் காணப்படுகின்றமை

ஒரு சிறப்பம்சமாகும். இலங்கைப் பிராமிச் சாசனங்கள் தமிழ்ப் பிராமியின் செல்வாக்கினால் ஏற்பட்ட வேறொரு பிரதானமான அம்சமும் உண்டு. தமிழ்ப் பிராமியிலும் அசோகப் பிராமியிலும் அ,ஈ,ம என்னும் எழுத்துக்கள் வெவ்வேறு விதமாகவே எழுதப்பட்டுள்ளன. இந்த இரண்டு வகையான எழுத்துக்களும் இலங்கையிற் பிராமி வரிவடிவமுறை வழக்கற்றுப் போகும் வரை பயன்படுத்தப்பட்டுமை கவனிக்கவேண்டிய ஒரு பிரதான அம்சமாகும். இரு வேறு மொழிகளான தமிழ், பிராகிருதம் என்பவற்றுக்குரிய வரிவடிவங்கள் இலங்கைச் சாசனங்களில் ஆதி முதல் அந்தம் வரை காணப்பட்டமை அவ்விரு மொழிகளும் இச் சாசனங்கள் எழுதப்பட்ட காலப்பகுதியில் இலங்கையில் வழங்கிவந்தமைக்குரிய அடையாளங்களாகும்.

ஆய்வு முறையியல்

இவ்வாய்வுக்கான தரவுகள் பண்பு ரீதியான அணுகுமுறை களைப் பயன்படுத்திச் சேகரிக்கப்பட்டன. அவற்றைப் பகுப்பாய்வு செய்வதற்கு விபரண புள்ளிவிபரவியல் (DescriptiveStatistics) பயன்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய நுட்பங்கள் மூலம் பரந்த நோக்கங்கள் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. இந்த முறை தரம் வாய்ந்த தரவுகளைப் பெற்றுக்கொண்டு சரியான முடிவுகளைப்பெற உதவுகின்றது.

ஆய்வின் நோக்கங்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படுகின்ற தொல்லியல் சான்றுகளை எடுத்துக் கூறி அவற்றினூடாகத் தமிழ் மொழியின் தொன்மையினையும் மட்டக்களப்பில் தமிழ் மொழியின் பயன்பாட்டு நிலையினையும் எடுத்துக் கூறுதல் இவ்வாய்வின் நோக்கமாகும்.

மட்டக்களப்புத் தேசத்துப் பெருங்கற் பண்பாட்டுச் சின்னங்கள்

மட்டக்களப்பு தேசம் என்பது கிழக்கிலங்கையில் வெருகலாற்றுக்குத் தென்பால் குமணை வரை பரந்திருக்கும் பெருநிலப்பகுதி. அதில் எழுவான்கரை, படுவான்கரை என்ற பிரிவுகள் உண்டு. அவற்றின் பெயர்கள் பூர்வீகமானவை. நிலவமைப்பின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சுத்தமான தமிழ்ப் பெயர்கள். அரசாங்கம் 1962 இல் பழைய மட்டக்களப்பு

மாவட்டத்தின் தென்பகுதியைப் பிரித்து அம்பாறை என்ற ஒரு புதிய மாவட்டத்தை உருவாக்கிவிட்டது. எனவே, இலங்கைத் தமிழர் வாழும் பகுதிகளிலே மிகப் பெரிதும் சில தனியான பண்புகளைக் கொண்டதுமான மட்டக்களப்பு தேசம் இரு கூறுகளாகிவிட்டது. அங்கு வாழும் தமிழர்களின் பேச்சு வழக்கு மிகவும் புராதனமானது. தமிழ் நாட்டில் வழக்கற்றுப் போய்விட்ட சில சொற்கள் இன்னும் அவர்களிடையே வழங்கிவருகின்றன.

மட்டக்களப்புத் தேசத்துக்குரிய மிகவும் பழைமையான தொல்பொருட் சின்னங்கள் இருவகைப்படும். அவை பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்கள், பிராமிக் கல்வெட்டுக்கள் என்பனவாகும். அவற்றிடையே சில பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்கள் காலத்தால் முற்பட்டவை சோழ மண்டலக் கரையிலுள்ள காவிரிப்பூம் பட்டினம் போன்ற துறைமுகப் பட்டினங்கள் வழியாக ஏற்பட்ட கடல்வழிப் பிரயாணங்கள் மூலமாக ஆதி இரும்புக் காலத்துக்கு உரியதான பெருங்கற் பண்பாடு தென்னிந்தியாவில் இருந்து மட்டக்களப்புத் தேசத்துக்கும் பரவியது. ஆனால் அங்கு இதுவரை முறையான தொல்லியல் மேலாய்வுகளோ, அகழ்வாய்வுகளோ குறிப்பிடத்தக்க அளவிலே இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மிக முக்கியமான ஆதி இரும்புக்காலத் தொல்லியல் தளம் கதிரைவெளியில் காணப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிராமிக் கல்வெட்டுக்கள்

மட்டக்களப்பு மாவட்டத்துப் போரதீவுப் பற்றிலுள்ள ஊர்களிலொன்று வெல்லாவெளி. முற்காலங்களில் அது நாதனை வன்னியனாரின் ஆட்சி வலயத்தில் அடங்கியிருந்தது. இங்கு கிடைக்கப்பெற்ற கல்வெட்டு வசனம் பின்வருமாறு:

பெருமகநே ஏகசமதய லேணே

முதலாவது சொல்லைப் பெறுத்தவரையிற் சில அம்சங்களில் எமது கருத்து வேறுபடுகின்றது. சொல்லின் இரண்டாவது எழுத்து று என்று கொள்ளக்கூடிய வகையிலே தெளிவாகத் தெரிகின்றது. தமிழ் மொழியில் ர,ற மயக்கம் ஆதிகாலம் முதலாக வந்துள்ளது என்பதற்கு இது நல்லதோர் உதாரணமாகும். இந்தச் சொல்லின் இறுதியான- என்னும் எழுத்தினை நே என்று அடையாளங் காண்பதிற் பிரச்சினை எழுகின்றது. பிராமியிலே நே என்னும் எழுத்து - என்ற வடிவத்தை பெற்றிருக்கும். ஆனால் கல்வெட்டிற் காணப்படுவது வேறுவிதமாகவே அமைந்துள்ளது. ந என்னும் எழுத்திலுள்ள நேர் தண்டினை இடதுபுறமாக வளைத்து எழுதி, ஏகாரக் குறியீடான அகலப்பாட்டிலுள்ள சிறிய கோட்டினை வலப்பக்கத்தின் தலைப்பாகத்தில் இணைத்துள்ளனர் எனக் கருதமுடிகின்றது. எனவே, அச்சொல்லினைப் பெறுமகனே என்று அடையாளங் காண்பதே பொருத்தமானது. ர, ற மயக்கத்தின் காரணமாகப் பெருமகன் என்பது இங்கு பெறுமகன் என்ற வடிவத்தைப் பெற்றுள்ளது. இலங்கைப் பிராமிச் சாசனங்களில் இங்குதான் பெருமகன் என்ற சொல் காணப்படுகின்றது. வெல்லாவெளிக் கல்வெட்டின் முதலாவது சொல்லில் று ,ம ,ன என்னும் மூன்று தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும். பழந்தமிழ் நூல்களில் மிகுதியாகக் காணப்படும் பெருமகன் என்ற சொல்லின் மறுவடிவமே இலங்கைப் பிராமிச் சாசனங்களில் பருமக என வந்துள்ளது. பருமகள என்பது அதன் பெண்பால் வடிவமாகும்

பெரும்பாண்

மற்றைய சாசனமும் இதுவும் ஒரே காலத்து வரிவடிவங்களில் எழுதப்பட்டுள்ளன. அவை கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்கு

உரியவை என்று கருதலாம். அக்காலத்திலே எழுத்துக்களுக்குக் குறியீடுகளை இடும் வழக்கமில்லை. அதனால் ஒரே சொல்லாக அமைந்த இச்சாசனத்தைப்; பெரும்பண, பெரும்பண், பெரும்பாண, பெரும்பாண் என நான்கு விதங்களிலே வாசிக்கலாம்.

முதலாம் பகுதியான பெரும் என்பது ஒரு பெயர்ச்சொல் எச்சமாகவே வருகின்றது. அதனோடு வரும் விகுதி மூன்று வேறு சொற்களாக கொள்ளக்;கூடியதெனினும் அச் சொற்கள் யாவும் பண் என்பதை அடிப்படையாகக் கொண்டவை: அவை பண், பாண, பாண் என்பனவாகும். பண் என்னுஞ் சொல் பாட்டு, இசை, வாய்மொழிப்பாடல் என்பவற்றைக் குறிக்குமென்று சென்னைத் தமிழ்ப் பேரகராதியில் விளக்கியுள்ளனர். (VOL V,1982,ப.2596). பாண் என்பது பண் என்பதிலிருந்து தோன்றியது என்று அந்நூல் கூறும். பாண் என்பது பாணர் சாதியியாரையுங் குறிக்கும் என்றுஞ் சொல்லப்படுகின்றது. பெரும்பாண் என்ற சொல் பெரும்பாணர் என்பதற்கு நிகரானதென்றும் சென்னைத் தமிழ்ப் பேரகராதி விளக்குகின்றது. (அவர்கள் யாழ் வாசிக்கும் பாணர்சாதி வகையார்) Madras Tamil Dexicow vol,v p,2879 பெரும்பாணாற்றுப்படை, பொரும்பாணப்பாடி, பெரும்பாண் அரைசர் என்ற சொற்களின் பகுதியாகப் பெரும்பண் என்ற சொல் அமைந்திருக்கின்றது.

வெல்லாவெளியிலே ப,ணக என்ற பிராகிருதமயமான சொல்லுக்குப் பதிலாக பெரும்பாண் என்ற தூய தமிழ்ச் சொல்லைப் பயன்படுத்தியுள்ளனர். அவ்வாறு குறிப்பிடப்படும் தேரர் தமிழராதல் வேண்டும். எனவே அங்கிருந்த பள்ளி தமிழ்ப் பௌத்தப் பள்ளியாகும்.

வெல்லாவெளியில் ஒரு சமணப் பள்ளி

இலங்கையிற் கிடைத்த முதலாவது பிராகிருதம் கலந்த தமிழ்ச் சமணம் தொடர்பான சாசனம் என்பதால் அதனைத் தமிழ் மொழியில் எழுதியுள்ளனர். தமிழகத்துப் பிராமிச் சாசனங்கள் எல்லாம் தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ளன. அவை பெரும்பாலும் சமணம் தொடர்பானவை. எழுத்துக்களின் தண்டுகள் கீழ்நோக்கி நீண்டும் பின் இடப்புறமாக வளைந்தும் காணப்படுகின்றன. எழுத்தின் மேலான இகரக் குறியின் அடையாளம் எழுத்தின் வலப்பக்கத்திலிருந்தும் இடப்புறமாக வளைந்து காணப்படுகின்றது. இவ்வம்சங்கள் வல்லிபுரச்

செப்பேட்டிலும் காணப்படுகின்றன. இலங்கையிலே கிடைக்கின்ற, வேறு பல பிராமிச் சாசனங்களிலும் அவை உள்ளன. அச்சாசனத்தின் வரிவடிவங்களின் அமைப்பு ஆந்திர தேசத்து இகஷ்வாகு வம்சத்தினரின் ஆட்சிக் காலத்துக்குரிய சாசனங்களில் உள்ளதனைப் பெரிதும் ஒத்திருக்கின்றது. எனவே, இச்சாசனம் கி.பி. மூன்றாம் நான்காம் நூற்றாண்டுகளுக்குரியதாகும். சாசனத்தின் வாசகம் மேல்வருமாறு அமைந்துள்ளது: சிப்புக3ல க3மி குரத்தி மீ குரத்தி வேமி பெருவணிக சம காலத்தவர் படித்து விளங்கிக் கொள்ளும் முறையிலேயே சாசனங்கள் எழுதப்படும். ஆயினும், 17 நூற்றாண்டுகள் கழிந்த பின்பு அதனைப் படிக்கும் பொழுது பொருள்மயக்கம் இருப்பது போலத் தோன்றும். பிராமிச் சாசனங்கள் சொற் சுருக்கமானவை.

வெல்லாவெளிக் கல்வெட்டிலே காணப்படும் பெருவணிக என்பது ஒரு வணிகக் குழுவின் தலைவனைக் குறிக்கும் என்று கொள்ளலாம். வணிகர் செல்லும் பாதைக்கு அண்மையிலே சமணத் துறவியர் பள்ளி அமைந்திருந்ததென்றுங் கருதலாம். இலங்கையிலே சமணப் பள்ளி பற்றிய சாசனக் குறிப்பு வேறெங்கும் காணப்படுவதில்லை.

தொகுப்புரை

இலங்கையிலே தமிழ் மொழியின் செல்வாக்கு கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்திலிருந்து ஏற்பட்டுள்ளது என்பதற்கு வெல்லாவெளிக் கற்சாசனங்கள் உறுதியான ஆதாரங்களாகும். தமிழ் மொழி பேச்சு மொழியாகப் புராதன காலம் முதலாக வழங்கியமைக்கு கலவோடுகளில் காணப்படும் சொற்கள்,

தமிழ் எழுத்துக்கள், மசாசாத்தன், உதிரன் முதலான பெயர்கள் பொறித்த பழங்காலக் காசுகள், ஆனைக்கோட்டை முத்திரையில் கிடைத்த கோவேத(ன்) போன்ற தமிழ்ப் பெயர் வடிவங்கள் முதலியவை சான்றாக உள்ளன. இவற்றைப் பற்றிய கட்டுரைகளும் நூல்களும் வெளிவந்துள்ளன. அவை பெரும்பாலும் இலங்கையின் வடபகுதியான யாழ்ப்பாணம், பூநகரி முதலிய இடங்களிலும் அகுறுகொட என்னும் தென்னிலங்கையிலுள்ள ஊரிலிருந்தும் கிடைத்தவை. இலங்கையின் பல பாகங்களிலும் காணப்படுகின்ற பிராமிக் கல்வெட்டுக்களிற் பிராகிருத மொழி வாசகங்களோடு தமிழ்ச் சொற்களும் கலந்து வருகின்றன. ஆயினும், கற்பாறைகளில் எழுதிய தமிழ்ப் பிராமிச் சாசனங்கள் கிடைக்கின்றமை வெல்லாவெளிக்குரிய தனியான சிறப்பாகும். அவ்வாறான இரு கல்வெட்டுக்களில் ஒன்று சமணம் தொடர்பானதுளூ மற்றையது தமிழ் பௌத்தம் சார்ந்தது. இலங்கையில் இதுவரை அடையாளங் காணப்பட்டவற்றுள் சமணம் சார்ந்த முதலாவதும் தனித்துவமான கல்வெட்டு இங்கு மட்டுமே கிடைத்துள்ளது. அதன் காலம் தமிழகத்திலே சமண சமயத்தின் செல்வாக்கு வளர்ச்சிபெற்ற காலமாகும். ஈழத்திற்கும் தமிழகத்திற்கும் இடையான சமய, பண்பாட்டுத் தொடர்புகள் பற்றிய ஆய்வுகள் இவற்றால் ஒரு புதிய பரிமாணத்தைப் பெறுகின்றன.

வெல்லாவெளிக் கல்வெட்டுக்களிற் காணப்படும் பெரும்பாண், குரத்தி, மீ, பெருவணிக என்ற நான்கும் இலங்கையிலுள்ள வேறு பிராமிக் கல்வெட்டுக்களிற் காணப்படாதனவாகும். இவற்றில் முதல் மூன்றும் தமிழகத்துப் பிராமிச் சாசனங்களிற் காணப்படாதவை. அத்துடன் பண்டைய தமிழ் இலக்கியங்கள் பலவற்றிலே காணப்படும் பெரு(று)மகன் என்ற சொல் சாசனவழக்கில் மாற்றமடையாத தமிழ் வடிவத்தில் இங்கு மட்டுமே காணப்படுகின்றமை மற்றுமோர் அம்சமாகும். அதன் மாற்றுவடிவமான சொல்லின் (பருமகன்) பிராகிருத மயமாகிய வடிவமே இலங்கைப் பிராமிச் சாசனங்கள் பலவற்றில் காணப்படுகின்றது. கிழக்கு மாகாணத்தின் மாவட்டங்களிலுள்ள, இதுவரை அடையாளங் கண்டு பிரதிசெய்யப்படாத பிராமிக் கல்வெட்டுக்களைப் படியெடுத்து ஆராயப்படுமிடத்து இங்கு குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பான சில வினோதமான விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

இவ்விடயம் தொடர்பாகத் தேடலும் ஆய்வுகளும் மேற்கொள்ளப்படுவது அவசியமாகும்.

உசாத்துணை நூல்கள்

இந்திரபாலா, கா, (2006). இலங்கையில் தமிழர் ஒர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

பத்மநாதன், சி, (2016). இலங்கையில் தமிழர் வரலாறு, கிழக்கிலங்கையில் நாகரும், தமிழரும், இந்துசமய கலாசார அலுவலகள் திணைக்களம், காலி வீதி, கொழும்பு, 4,

புஸ்பரட்ணம், ப, (2003). பண்டைய இலங்கையில் தமிழும் தமிழரும், கொழும்பு தமிழ் சங்கம்.

சென்னைத் தமிழ்ப் பேரகராதி VOL V,1982,1982,ப.2596.

Madras Tamil Dexicow vol,v p,2879.

பட்டினப்பாலை. கடியலூர் உருத்திரன் கண்ணார், (2000). மதுரைச் தமிழ் சங்கம்,

Boarter,J. (2005). archaeology Technology: Methods, Tools and Techniques for

Effective Research . University of Education, Winneba, Ghana Parnavitana, S, (1970). Inscriptions of Ceylon Volume, Department of archaeology, Ceylon,

Mahavansa, x:95-100, Department of archaeology, Ceylon, 1968.

66

மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டையின் வரலாற்றுப் பெறுமதி மிக்க கலைப்படைப்புக்கள்

நாகதாஸ் பாரத்
ஆய்வாளர், இலங்கை.
n.mr.barath@gmail.com

அறிமுகம்

இலங்கைக்கு வருகை தந்த முதலாவது ஐரோப்பிய இனத்தவரான போர்த்துக்கேயர்இ தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்தும் நோக்கத்தோடுஇ இலங்கையில் பல்வேறு இடங்களில் கோட்டைகளை அமைத்துக் கொண்டனர். மட்டக்களப்பில் கோட்டையின் அவசியத்தினை உணர்ந்த பின்னர்இ 1628ஆம் ஆண்டு மட்டக்களப்பிலும் கோட்டையினை அமைத்துக் கொண்டனர். போர்த்துக்கேயரிடமிருந்து கோட்டையினைக் கைப்பற்றிய ஒல்லாந்தர்இ 1684ஆம் ஆண்டு அதனை பலமான பாதுகாப்பு அரணாக மாற்றியமைத்தனர். இன்று காணப்படுகின்ற கோட்டையானது ஒல்லாந்தரினால் கட்டப்பட்ட கோட்டையாக காணப்படுவதால் தான்இ இன்றும் மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டை என்ற பெயரிலேயே அழைக்கப்படுகின்றது. அதன் பின்னர் ஒல்லாந்தரிடமிருந்து பிரித்தானியர் கோட்டையினை கைப்பற்றி மீண்டும் பாதுகாப்பு அரணாக மாற்றியமைத்து இதனை அரசியல் விடயங்களை மேற்கொள்ளுகின்ற கச்சேரியாகப் பயன்படுத்தினர். இன்று வரை இது மட்டக்களப்பு மாவட்டத்தின் கச்சேரியாகவே காணப்படுகின்றது.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆகிய ஐரோப்பிய இனத்தவர்களின் ஒரே கலைப்படைப்பாக மட்டக்களப்பு ஒல்லாந்த கோட்டை காணப்படுகின்றது. மட்டக்களப்பு ஒல்லாந்த கோட்டையினையும், அங்கு காணப்படுகின்ற கலைப்படைப்புகளினது சிறப்புக்களையும், மக்கள் அறிந்து கொள்ளாமல் காணப்படுகின்றனர். இதனால் மட்டக்களப்பு

ஒல்லாந்த கோட்டையும், அங்கு காணப்படுகின்ற கலைப்படைப்புக்களும் அழிந்து போவதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்றது. ஆகவே கோட்டையையும், அங்கு காணப்படுகின்ற கலைப்படைப்புகளின் முக்கியத்துவத்தினையும், அதனை பாதுகாக்கும் அவசியத்தினையும் எடுத்துக்கூறிஇ இவ் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

ஆய்வு நோக்கம்

மட்டக்களப்பு ஒல்லாந்த கோட்டையில் காணப்படுகின்ற வரலாற்றுப் பெறுமதி மிக்க கலைப்படைப்புகளின் சிறப்புக்களை கண்டறிதல் இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். மட்டக்களப்புக் கோட்டையில் காணப்படுகின்ற போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் காலத்துக் கலைப்படைப்புகளை அறிந்து கொள்ளல்; இவ்வாய்வின் உப நோக்கங்களாகும்.

ஆய்வு முறையியல்

இவ் ஆய்வானது விவரண அளவீட்டு ஆய்வு வடிவத்தில் அமைந்துள்ளது. மட்டக்களப்பு ஒல்லாந்த கோட்டையில் காணப்படுகின்ற வரலாற்றுப் பெறுமதி மிக்க கலைப்படைப்புகளின் சிறப்புகளை இவ்வாய்வு ஆராய்வதால் இவ்ஆய்விற்கு விவரண அளவீட்;டு ஆய்வு பொருத்தமானதாக அமைந்துள்ளது. மாதிரிகளிடமிருந்து பல்வேறு முறைகளில் புள்ளிவிபரவியல், பகுப்பாய்விற்கு அளவிடக்கூடிய தரவுகள் திரட்டப்படுவதற்;கும்இ திரட்டப்பட்ட தரவுகளினால் குடித்தொகை பற்றிய விவரணத்தை மேற்கொள்ளவும், இவ்வாய்வு முறை பொருத்தமானதாக இருப்பதாலும், தலைப்பு பற்றிய முழுமையான புரிதலை பெறுவதற்கு இயலுமானதாக இருப்பதனாலும், இத்தலைப்பிற்கு இவ்வாய்வு முறை தெரிவு செய்யப்பட்டது. ஆய்வு குடித்தொகையாக மட்டக்களப்பு கச்சேரியின் உயர் அதிகாரிகள் 5பேர் (தற்போதைய அதிகாரி, மாற்றம் பெற்றுச்சென்ற அதிகாரிகள், ஓய்வு பெற்ற அதிகாரிகள்), கச்சேரியின் ஏனைய அதிகாரிகள் 5பேர் (தற்போதைய அதிகாரிகள், மாற்றம் பெற்றுச்சென்ற அதிகாரிகள், ஓய்வு பெற்ற அதிகாரிகள்), கலாசார உத்தியோகத்தர் 5பேர் (தற்போதைய அதிகாரி, மாற்றம் பெற்றுச்சென்ற அதிகாரிகள், ஓய்வு பெற்ற அதிகாரிகள்), மட்டக்களப்பு தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் 5பேர் (தற்போதைய அதிகாரி, மாற்றம்

பெற்றுச்சென்ற அதிகாரிகள், ஓய்வு பெற்ற அதிகாரிகள்) கோட்டையினை ஆய்வு செய்த ஆய்வாளர்கள் 5பேர், போன்றவர்கள் காணப்படுகின்றனர். இவ்வாய்வின் முதல்நிலைத்தரவு சேகரிப்பதற்காக வினாக்கொத்து, நேர்காணல் போன்ற ஆய்வுக்கருவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மட்டக்களப்பு கச்சேரியின் உயர் அதிகாரிகள், கச்சேரியின் ஏனைய அதிகாரிகள், கலாசார உத்தியோகத்தர்கள், மட்டக்களப்பு தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள், கோட்டையினை ஆய்வு செய்த ஆய்வாளர்களிடமிருந்து நேர்காணல் மூலமும் தரவுகள் திரட்டப்பட்டன.

கலந்துரையாடல்

பீரங்கிகள், காவற்கூடு, மணி அடிக்கும் கோபுரம், சிறைச்சாலை, சமாதி, கல்வெட்டு, ஆயுதக்கிடங்கு, அகழி, கோட்டையின் இறங்குதுறை, கிணறு, கச்சேரியின் தூண் அமைப்பு, டயறிக்குறிப்புகள், அட்டவணைகள், வரைபுகள் என ஆய்வுக்காகத் திரட்டப்பட்ட தகவல்கள் இங்கு முன்வைக்கப்படுகின்றன.

உரு 4.1 : மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டையில் காணப்படுகின்ற பீரங்கிகள்

இரும்பினால் செய்யப்பட்டு, சில்லுகள் பூட்டப்பட்டு, அசைக்கக்கூடிய 42 பீரங்கிகள் கோட்டையின் மேற்தளத்தில் காணப்பட்டுள்ளன. அவற்றோடு போருக்குத் தயாரான நிலையிலும் பீரங்கிகள் மேற்தளத்தில் காணப்பட்டுள்ளன. இந்த 42 பீரங்கிகளும்

கோட்டையின் மதிலில் 'ப' வடிவில் வெட்டப்பட்ட இடைவெளியில் பொருந்தி, போருக்கு தயார் நிலையில் வைத்து உள்ளனர். இவ்வாறு மேற்தளத்தில் காணப்பட்ட பீரங்கிகள் ஒவ்வொன்றாக காணமல் போய்யுள்ளன. 1988 ஆண்டு இரும்பு, செம்பு ஆகிய உலோகங்களினால் செய்யப்பட்ட 11 பீரங்கிகள் இருந்ததாக Dutch Forts in Sri Lanka Military monuments in Ceylon" என்ற நூலில் ஆசிரிய Mrphpa H .W. A நெல்சன் கூறுகின்றார். ஆனால் தற்போது மேலே 1 பீரங்கியும், வாசலில் 2 பீரங்கிகளும் காணப்படுகின்றன.

உரு 4.2 : மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டையில் காணப்படுகின்ற சமாதி

இன்று காணப்படுகின்ற மட்டக்களப்பு ஒல்லாந்த கோட்டையினை வடிவமைத்தவரின் சமாதியாகவே இது கருதப்படுகின்றது. அதாவது போர்த்துக்கீசருக்கு பின்னர் கோட்டையினை மீண்டும் பலமுள்ள ஒரு கோட்டையாக வடிவமைத்த ஒல்லாந்த கட்டுமான உயர் அதிகாரியின் சமாதி எனக் கூறப்படுகிறது.

உரு 4.3 : மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டையில் காணப்படுகின்ற காவற்கூடு

கோட்டையினை பாதுகாப்பதுக்கும், எந்த நேரமும் அதில் இருந்து அவதானிப்பதற்காகவும், 4 பக்க மூலைகளிலும் வெளிச்சத்தினை வைப்பதன் மூலம், இரவில் வருகின்ற கப்பல்கள் இலகுவாக அடையாளத்தினை கண்டுபிடித்து வருவதற்காகவும், அடுத்து வெளிச்சத்தினை வைக்காமல் இருப்பதன் மூலம், கோட்டை தவிர்ந்த ஏனைய இடங்களை 4 மூலையில் இருந்து அவதானித்து கொள்வதுக்கும், இது பயன்படுத்தப்பட்டுள்ளது. கோட்டையின் பாதுகாப்பிற்காக 4 பக்க மூலைகளிலும், 4 காவற்கூடு காணப்படுகின்றது. இந்த காவற்கூடுகள் போர்த்துக்கீசர் காலத்தில் கட்டப்பட்டுள்ளன.

உரு 4.4 : மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டையில் காணப்படுகின்ற மணி அடிக்கும் கோபுரம்

ஒல்லாந்தர் காலத்தில் தகவல்களை மக்களுக்கு அறிவிப்பதற்காகவும், நிர்வாக கட்டளைகளை மக்களுக்கு தெரிவிப்பதற்கும்; இது பயன்படுத்தப்பட்டுள்ளது. தகவல்களை கோட்டையில் மேற்சுவரில் இருந்து கீழ் உள்ள மக்களுக்கு தெரிவித்துள்ளனர். இது ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலத்தின் அதிகமாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

உரு 4.5 : மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டையில் காணப்படுகின்ற கல்வெட்டு

1959.09.29 ஆண்டு வீரகேசரி பத்திரிகையின் அடிப்படையில், ஒரு டச்சுக்கு கோவில் ஒன்று இருந்துள்ளது. ஆனால் இப்போது நாம் அதனைக் காண முடியாது. இக் கச்சேரியின் பிரதான கட்டடத்துக்கு நேர்கோணத்தே அமைந்திருந்தது. என்ற தகவல் மூலம் கல்வெட்டின் அடிப்படையில் டச்சுக் கோயில் ஒன்று இருந்துள்ளது என்பது தெரிவாகின்றது.

தமிழ் மொழிபெயர்ப்பு

இத்தேவாலயம் 1740ஆம் ஆண்டு மாசி மாதம் 18திகதி கட்டப்பட்டது. இதன் அடிக்ககல் பிரதான உத்தியோகத்தர் திரு. ஆர். டி. ரேமண்ட் வுயூக் என்பவரது மனைவி மேடம் Mrs. MAM De moor ஆல் நாட்டப்பட்டது.

உரு 4.7 : மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டையில் காணப்படுகின்ற ஆயுதக் கிடங்கு

இவ் அறைக்குள் சூரிய வெளிச்சம், காற்று வருவதற்காக மதிலின் மேற்புறம் சிறிய வெளிகள் கூரைகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. 28அடி நீளமும், 26அடி அகலம் கொண்டு 3 பக்கம் அடைக்கப்பட்டு ஒரு பக்கம் இரும்புக் கதவினால் மூடப்பட்டுள்ளது. மேற்படி அறையிலிருந்து வெளிச்செல்லும் சுரங்கப்பாதை முற்றாக அடைக்கப்பட்டுள்ளது. இது போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலத்திலும் ஆயுதக்கிடங்காக பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அடுத்து இலங்கை இராணுவமும் யுத்தகாலப் பகுதியில் ஆயுதங்களை வைத்து பாவித்த ஒரு இடமாகப் காணப்படுகிறது. 2011ஆம் ஆண்டு இங்கு

காணப்பட்ட ஆயுதங்கள் அனைத்தையும் இராணுவத்தினால் எடுத்து செல்லப்பட்டுள்ளது.

உரு 4.8 : மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டையில் காணப்படுகின்ற அகழி

இக் கோட்டையைச் சுற்றி வடக்கு, கிழக்கு ஓரங்களில் மட்டக்களப்பு வாவியும், தெற்கு, மேற்கு ஓரங்களில் ஆழமான அகழியும் காணப்படுகின்றது. கோட்டையின் மேற்குப்புற அகழிக்குள் சரக்கு வள்ளங்கள், படகுகள் வரக்கூடிய வகையில் அகழியின்; இரு கரையிலும் கொங்கிரீட் கட்டுக்கள் அமைக்கப்பட்டு, படகுகளை கட்டிவைப்பதற்கான சிறு தூண்களும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் ஒல்லாந்தரால் மட்டக்களப்பில் நிர்மானிக்கப்பட்ட கோட்டைக்கு கப்பல் வந்துநிற்கக் கூடியதும், பழுதடைந்த கப்பல்களை திருத்துவதற்கான, செவ்வகவடிவில் அமைந்த நீர்த்தொட்டி ஒன்றை அமைத்துள்ளனர். இந்த நீர்த்தொட்டி சுமார் 100அடி நீளத்தையும், 25அடி அகலத்தையும் கொண்டுள்ளதுடன், இத்தொட்டி கற்களினால் மிக அழகாக நிர்மானிக்கப்பட்டுள்ளதுடன், கப்பல்களில் ஏற்பட்டுள்ள பிழைகளை திருத்துவதற்கு வசதியாக, நீரை தொட்டியில் உள்வாங்கும், வெளியேற்றும் வசதிகளை கொண்டதாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

இச்சிறைச்சாலையினுள் இரும்பினால் மூடியகதவு காணப்படுகின்றது. அந்தகதவினை மூடிப்பாதுகாப்பதற்காக, 6 கம்பிகளைக் கொண்ட இரும்புக்கதவும் காணப்படுகிறது. உள்ளே பின் பகுதி வில்வளைவு கொண்ட சுவர்ப்பகுதியில் நீள் சதுரவடிவம்

கொண்ட சிறு ஜன்னல் காணப்படுகின்றது. இந்தச் சிறைச்சாலை ஆட்சியாளருக்கு எதிராக செயற்படுகின்ற புரட்சியாளர்களுக்கு உரித்தானது. இந்தச் சிறையினுள் ஒளி, காற்று, குடிநீர், எதுவும் கிடைக்கப்படமாட்டாது. என்பதுதான் சிறைச்சாலையின் பிரதான அம்சம் ஆகும்.

உரு 4.10 : மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டையில் காணப்படுகின்ற கச்சேரியின் தூண் அமைப்பு

கிரேக்கத் தூண்களான டொறிக் தூண்களும்இ மட்டக்களப்பு கோட்டையினுடைய கச்சேரியில் காணப்படுகின்ற தூண்களும் அதிக ஒத்த தன்மைகளைக் கொண்டே காணப்படுகின்றன. இங்கு 14 தூண்கள் காணப்படுகின்றது. கீழே சதுர வடிவமான அடித்தளத்திற்கு மேலே உருண்டையான தூண் வடிவம் காணப்படுகின்றது. இதற்கு மேலே 2சதுர வடிவமான அடித்தளத்திற்கு மேலே மாடியினைத் தாங்கியவாறு, இதனோடு சேர்ந்த உருண்டை வடிவமான தூண்களும் காணப்படுகிறன.

முடிவுரை

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மட்டக்களப்பு ஒல்லாந்த கோட்டையானது, தற்போது மட்டக்களப்பு கச்சேரியாக இயங்கி வருகின்றது. ஆகவே அங்கு வருகை தருகின்ற மக்கள் மட்டக்களப்பு ஒல்லாந்த கோட்டையின் முக்கியத்துவத்தினை அறியாமல், கச்சேரியின் செயற்பாடுகளுக்கு மாத்திரம் முக்கியத்துவத்தினை கொடுத்து வருவதால், இங்கு காணப்படுகின்ற மட்டக்களப்பு கோட்டையும்இ கலைப்படைப்புகளும் அழிவடைந்து கொண்டு வருகின்றது.

மட்டக்களப்பு ஒல்லாந்த கோட்டையில் காணப்படுகின்ற கச்சேரியினை வேறோரு இடத்துக்கு மாற்றி, பின்னர் மட்டக்களப்பு ஒல்லாந்த கோட்டையினை தொல்லியல் திணைக்களத்திடம் ஒப்படைப்பதன் மூலமும், கச்சேரிக்கு வருகை தரும் மக்களுக்கு மட்டக்களப்பு ஒல்லாந்த கோட்டையின் முக்கியத்துவத்தையும், அங்கு காணப்படுகின்ற கலைப்படைப்புகளின் சிறப்புகளையும், அதனை பாதுகாக்க வேண்டிய அவசியத்தையும் விளக்குவதன் மூலமும், மேலும் பாதுகாப்பு உத்தியோர்களை நியமித்து மட்டக்களப்பு கோட்டையையும், அங்கு காணப்படுகின்ற கலைப்படைப்புகளையும் பாதுகாப்பதன் மூலம் மட்டக்களப்பு ஒல்லாந்த கோட்டையினை பாதுகாக்க முடியும்.

மட்டக்களப்பு ஒல்லாந்த கோட்டையின் முக்கியத்துவத் தினையும், வரலாற்றுப் பெறுமதி மிக்க கலைப்படைப்புகளின் சிறப்புக்களையும், கட்டட நிர்மானிப்பின் சிறப்புக்களையும் மட்டக்களப்பு பிரதேச மக்கள் அறிந்ததன் மூலம் இன்னும் பல நூற்றாண்டுகளாக இதனை பாதுகாக்க முடியும்.

மட்டக்களப்பு ஒல்லாந்த கோட்டையினையும்இ அங்கு காணப்படுகின்ற வரலாற்று பெறுமதி மிக்க கலைப்படைப்புகளின் சிறப்புக்களையும்இ வெளி உலகுக்கு கொண்டு வருவதன் மூலம்இ வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உலக மரபுரிமைகளில் ஒன்றாக யுனஸ்கோவினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

உசாத்துணைகள்

இளையதம்பி, மு, (1959). இலங்கைச்சரித்திரம், ஸ்ரீலங்கா அச்சகம், யாழ்ப்பாணம்.

இளையதம்பி, மு,(1959). இலங்கைச்சரித்திரமும் உலக சரித்திரமும பாகம் ஐ;, ஸ்ரீலங்கா அச்சகம், யாழ்ப்பாணம்.

கதிர்காம நாதன், (1967). இலங்கை வரலாறு, ஆனந்தா அச்சகம் யாழ்ப்பாணம்.

கிருஸ்ணராஜா, செ, (1999, 2005). இலங்கை வரலாறு பாகம் மி, பிறைநிலா வெளியீட்டகம் யாழ்ப்பாணம்.

கிருஸ்ணராஜா, செ, (2002, 2005). இலங்கை வரலாறு பாகம் மிமி, பிறைநிலா வெளியீட்டகம் யாழ்ப்பாணம்.

குலரத்தினம், கா, (1959). இலங்கை புவியல் வளம், இலங்கை அரச கரும மொழித்திணைக்களம்.

குணபாலசிங்கம், த, (1993). மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி, சென் ஜோசப் கத்தோலிக்க அச்சகம் மட்டக்களப்பு,

குணராசா, க, (2008, 2013). இலங்கைச் சுருக்க வரலாறு, கமலம் பதிப்பகம் யாழ்ப்பாணம்.

சில்வா, எஸ், எவ், டி, (1953). இலங்கைச்சரித்திரமும் உலக சரித்திரமும், ஸ்ரீலங்கா பப்ளிஸிங் கொம்பனி கொழும்பு.

விஜயரெட்ன, எ, (2013). மட்டக்களப்பு வரலாறு, எழுநா ஊடக நிறுவனம்.

நடராசா, தி.ஙீ.சி, (1962). மட்டக்களப்பு மான்மியம், மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப் பேரவை.

நிக்கலஸ், கூஷி.ணி, (1966). இலங்கைச்சரித்திரம் , ஆசீர்வாதம் அச்சகம் யாழ்ப்பாணம்.

Gopalasingam, s, 2005, Historical Research, Athavan Press Batticaloa.

Rajaruthnam pillai, 1930, History of Ceylon, Christian Literature Society Colombo

ஆண்டு மலர், ஆய்வுக்கட்டுரைகள்

கதிர்பாரதிதாசன், 2011 புராதன மட்டக்களப்பு துறைமுகம் - தேனகம், பிரதேச செயலக கலாச்சார பேரவை மன்முனை வடக்கு, மட்டக்களப்பு.

சித்திரலேகா, மௌ, 2011, மட்டக்களப்பின் வரலாற்று சின்னங்கள் - தேனகம், பிரதேச செயலக கலாச்சார பேரவை மண்முனை வடக்கு, மட்டக்களப்பு.

தங்கேஸ்வரி, க, 2011 மட்டக்களப்பிலுள்ள போர்த்துக்கேய டச்சுக் கோட்டை தேனகம், பிரதேச செயலக கலாச்சார பேரவை மண்முனை வடக்கு, மட்டக்களப்பு.

67

இலங்கைக்கும் தென்னிந்தியாவிற்கும் இடையிலான வர்த்தக உறவுகள்

(10 - 13 ஆம் நூற்றாண்டு கால இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகளை மையப்படுத்திய ஆய்வு)

கிறிஸ்டினா நிரோஜினி மோசஸ்ரூபன்
விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
nirojinic@esn.ac.lk

அறிமுகம்

வரலாற்று நிகழ்வுகளைக் குறிப்பிடும் இலக்கியங்களில் இடைச்செருகல், கற்பனை, மிகைப்படுத்தல், பக்கச்சார்பு என்பன காணப்படுகின்றமையால் இவற்றிற்கிடையே அவைகளின் உண்மைத் தன்மையை நிரூபிக்க சான்றுகள் அவசியமாகின்றன. இதனடிப்படையில் இலக்கிய ஆதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள உண்மைகளை உறுதிப்படுத்துவதில் கல்வெட்டுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இலங்கையில் காணப்படும் பெரும்பாலான தமிழ் கல்வெட்டுகள் கி.பி பத்தாம் நூற்றாண்டிற்கும் பன்னிரெண்டாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவையாகும். இலங்கையில் காணப்படும் பெரும்பாலான தமிழ் கல்வெட்டுகள் பல்வேறு நன்கொடைகள் தொடர்பான செய்தியைக் குறிப்பிட்டுள்ளன. தமிழ் கல்வெட்டுக்கள் வெளிப்படுத்தும் வரலாற்றுச் செய்திகளை அரசியல், பொருளாதாரம், சமூகம், சமயம் என வகைப்படுத்தமுடியும். பொருளாதாரச் செய்திகளில் ஒன்றாக இலங்கைக்கும் உலகின் பிற நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் முக்கியமானதாகும்.

இலங்கையில் கிறிஸ்துவுக்கு முன்பிருந்தே பொருளாதாரம் முறையாகப் பின்பற்றப்பட்டு வந்ததை மகாவம்சக் குறிப்புக்களில் காணலாம். குவேனி கப்பலில் வந்த வணிகர்கள் தொடர்பான செய்தி மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது (மகாவம்சம், அத்தியாயம்

7, செய்யுள் 24). வங்காள விரிகுடா ஒரு முக்கிய வர்த்தக மையமாகப் பயன்படுத்தப்பட்டதற்கான இலக்கிய மற்றும் தொல்பொருள் சான்றுகளும் உள்ளன. இந்தியா, சீனா, அரேபியா, பெர்சியா, கிரீஸ், ரோம், மியான்மார் போன்ற நாடுகளுடன் இலங்கை வர்த்தக உறவுகளைக் கொண்டிருந்தது. சர்வதேசப் புகழ் பெற்ற மாதோட்டம், கோகர்ண போன்ற இலங்கையின் பழங்கால துறைமுகங்களினூடாக வெளிநாட்டு வர்த்தகம் நன்நிலையை அடைந்தது.

தென்னிந்திய வர்த்தக நிறுவனங்கள் இலங்கையில் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளன. அனுராதபுர காலத்திலிருந்தே இத்தகைய வணிக நிறுவனங்கள் செயற்பட்டுள்ளதை தமிழ் கல்வெட்டுக்கள் மூலம் அறியலாம். அநுராதபுரத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்ட நான்கு நாட்டார் கல்வெட்டில் கி.பி ஒன்பதாம் நூற்றாண்டில் தென்னிந்திய வர்த்தக குழு அநுராதபுரத்திலுள்ள மாக்கோதைப் பள்ளியை கட்டியதோடு, ஏதோ ஒரு ஆபத்தை எதிர்கொண்ட தங்கள் நாட்டில் உள்ள சில தமிழர்களின் பெயரில் ஒரு விளக்கை தானமாக வழங்கியதாக அந்தக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. நான்கு நாட்டவர்கள் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்பதை தென்னிந்திய கன்னட சாசனங்கள் குறிப்பிடுகின்றன. வியாபாரிகளான அவர்கள் 'அய்யாவொளேய ஐந்நூறுவரு ஸ்வாமிகளு' என்னும் வணிக கணத்தோடு பந்தமானவர்கள் என்பதை இந்திரபாலா வலியுறுத்துகின்றார். சாசனம் குறிப்பிடும் தமிழ் வணிகர்கள் நானாதேசிகனின் முன்னோடிகளாவர் (பத்மநாதன்.சி., 2006:44).

அக்காலத்து வணிகக் குழுக்களில் பொதுவாக ஐந்நூற்றுவர் என்ற பெயரால் பொதுவாக அறியப்படுவோர் தென்னிந்தியா, இலங்கை, தென்கிழக்கு ஆசியாவில் வர்த்தகம் மட்டுமன்றி வேறு முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் 'அய்யப்பொழில்', 'திசையாயிரத்து ஐந்நூற்றுவர்', 'நானாதேசிய திசையற்று ஐந்நூற்றுவர்', 'வீர வலஞ்சியர்', 'நானாதேசியர்' போன்ற பலவகைப் பெயர்களால் அறியப்படுகின்றனர் (இந்திரபாலா.கா., 2006:276). ஐந்நூற்றுவர் ஒரு சக்திவாய்ந்த வர்த்தக நிறுவனமாகும், இது பின்னர் தெற்காசியா மற்றும் தென்கிழக்கு ஆசியா முழுவதும் இடைக்காலத்தில் விரிவடைந்தது என்பது பேராசிரியர் இந்திரபாலாவின் கருத்தாகும். ராணி லீலாவதியின் கல்வெட்டில்

பல்வேறு நாடுகளால் உருவாக்கப்பட்ட ஒரு வர்த்தக நிறுவனமான 'நானாதேசி வியாபரன்' பற்றிய குறிப்புண்டு (Epigraphic Zeylonica I,1912:179, Line 19).

பதுளை தூண் கல்வெட்டு ஹேப்பட்டிகம என்ற சந்தையின் விதிகள், நிர்வாகம் தொடர்பான விடயங்களை சிங்கள மொழியில் பதிவு செய்துள்ளது. இது மூன்றாம் உதய மன்னன் காலத்திற்குரியதென பேராசிரியர் செனரத் பரணவிதான கருதுகின்றார். ஹேப்பற்றிகம என்ற கிராமத்தின் நிர்வாகத்திற்காக இயற்றப்பட்ட சில விதிகளை வெளியிடுவதே இக்கல்வெட்டின் நோக்கமாகும். மஹியங்கனைக்கு விஜயம் செய்தபோது மன்னரிடம் உள்ளூர் நீதிபதிகள் செய்த புகாரின் விளைவாக சில வணிக நிறுவனங்களுக்கு அரசரால் வழங்கப்பட்ட விடயங்கள் சாசனத்தில் உள்ளன. பத்தாம் நூற்றாண்டு இலங்கையில் விவசாயிகள் மற்றும் வணிகர்களின் வாழ்க்கையைப் பற்றிய சில நுண்ணறிவுகளை வழங்குகின்றன. உள்ளூர் வணிக மற்றும் பிற நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்கவும், கொலைகாரர்களைக் கைது செய்யவும் மற்றும் பிற வழிகளில் அரச அதிகாரிகளுக்கு நீதி நிர்வாகத்தில் உதவவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதைக் காணலாம் (Epigraphic Zeylonica III,1994:74). ஹேப்பட்டிகம வணிகக்கிராமமாக விளங்கியுள்ளதை கல்வெட்டு விளக்குகின்றது (Epigraphic Zeylonica III,1994:75, A, Line42). மாவட்ட தலைமைப் பொறுப்பு தமிழர்களுக்கு வழங்கப்படக் கூடாது என்றும் ஹேப்பட்டிகமவிலுள்ள பெண்களை அவர்களுக்கு திருமணம் செய்து கொடுக்கக்கூடாது என்ற குறிப்புக்கள் அக்கல்வெட்டில் காணப்படுகின்றன (Epigraphic Zeylonica III,1994:77, D, Line 14 - 16). இதனூடாக தமிழர்கள் இலங்கையில் வாணிபத்தில் செல்வாக்குச் செலுத்தியமை புலனாகின்றது.

ஆய்வின் நோக்கம்

கிறிஸ்துவுக்கு முன்பிருந்தே இலங்கைக்கும் தென்னாசியாவுக்கும் இடையில் பொருளாதாரத் தொடர்புகள் நிலவியதை இலங்கைத் துறைமுகங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள், பாளி இலக்கிய ஆதாரங்கள், கல்வெட்டுச் சான்றுகள் தெளிவுறுத்துகின்றன. இவற்றினடிப்படையில்; 10-13 ஆம் நூற்றாண்டுப் பகுதியில் இலங்கைக்கும் தென்னாசியாவுக்கு

மிடையில் நிலவிய வரலாற்று உறவுகளில் வணிகத் தொடர்பை ஆராய்வதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். வர்த்தக உறவினூடாக இலங்கை அடைந்த முன்னேற்றங்களை ஆராய்வது துணை நோக்கமாகும்.

ஆய்வு முறையியல்

முதன்னிலைத் தரவுகளாக மகாவம்சம், சூளவம்சம், ராஜாவலியா போன்ற நூல்களும் Epigraphia Zeylanica, Inscriptions of Ceylon பேராசிரியர் செ.பரணவிதான, பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை, பேராசிரியர் சி.பத்மநாதன், பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை, பேராசிரியர் கா.இந்திரபாலா ஆகியோரின் நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள் இரண்டாம் நிலைத் தரவுகளாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக்காக அநுராதபுரம் நான்கு நாட்டார் கல்வெட்டு, பொலன்னறுவை, வாஹல்கட, பதவியா, விஹாரேஹின்ன, களுத்துறை, புதுமுத்தாவ, கல்தெம்பிட்டிய, தெதியமுல்லை, இலக்கட்டு எப, அதரகல்ல, மணற்கேணி, ஆன உளுந்தாவ போன்ற தமிழ் கல்வெட்டுகளிலிருந்தும் பதுளைக் கல்வெட்டு, லீலாவதியின் சிங்களக் கல்வெட்டுகளிலிருந்தும் தரவுகள் பெறப்பட்டுள்ளன.

இவ்வாய்வில் ஏலவே வாசிக்கப்பட்டு தொகுக்கப்பட்ட கல்வெட்டுப் பிரதிகள் பயன்படுத்தப்படவுள்ளன. இவ்வாய்வு முறையானது வரலாற்றடிப்படையில் பகுப்பாய்வாக அமைந்துள்ளது.

ஆய்வின் கருதுகோள்

இலங்கைக்கும் தென்னிந்தியாவிற்கும் இடையிலான வர்த்தக உறவுகள் கி.பி 10-13 ஆம் நூற்றாண்டுகளுக்கிடையில் தனித்துவமானதாக விளங்கின.

ஆய்வின் முக்கியத்துவம்

10 - 13 ஆம் நூற்றாண்டு காலத்தில் இலங்கைக்கும் தென்னிந்தியாவிற்கும் இடையிலான வர்த்தக உறவில் மீள்பார்வை செலுத்தி வரலாற்றை மீளக்கட்டியெழுப்புதல் இவ்வாய்வின் முக்கியத்துவமாகும். வாணிப நடவடிக்கையை வெளிக்காட்டும் தமிழ் கல்வெட்டுக்கள் ஆய்வுக் காலப்பகுதியில் அதிகளவு

காணப்படுகின்றமையால் சமகாலத்து சிங்களக் கல்வெட்டுக்கள் குறிப்பிடும் வணிகச் செய்திகளுடன் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது. இக்காலப்பகுதில் நிலவிய தமிழ், சிங்கள நல்லுறவுத் தன்மையும் ஆய்வில் வெளிப்படுத்தப்படும்.

கலந்துரையாடல்

ஐந்நூற்றுவர்

இந்தியாவில் சோழர்களின் அதிகாரம் விரிவடைவதற்கு முன்பு இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் பரவிய கழகம் பின்னர் சோழர்களின் அனுசரணையில் தங்கள் கடற்படை சக்தியைப் பயன்படுத்தி தெற்காசியா முழுவதும் பரவியது (வேலுப்பிள்ளை. ஆ., 1971:46,47). தென்னிந்தியா, தாய்லாந்து, சீனா, இந்தோனேசியா, மியன்மார் ஆகிய நாடுகளில் இந்த நிறுவனத்தைக் குறிப்பிடும் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பதினொராம் நூற்றாண்டு முதலாக இலங்கையில் ஐந்நூற்றுவர் தொடர்பான சாசனக் குறிப்புக்கள் கிடைக்கின்றன. வணிக கணத்தவர்கள் கோயிலுக்கும் பொதுநல அமைப்புகளுக்கும் வழங்கிய நன்கொடைகளை பதிவு செய்கின்றன. வேறு சில சாசனங்கள் வீர பட்டினங்களின் உருவாக்கத்தைக் குறிப்பிடுகின்றன. களுத்துறையிலுள்ள கல்வெட்டு ஒரு காளி கோவில் தென்னிந்திய வர்த்தக நிறுவனமான ஐந்நூற்றுவரால் கட்டப்பட்ட செய்தியை குறிப்பிடுகின்றது.

ஐந்நூற்றுவர் உள்நாட்டு வாணிபத்திலும் அயல்நாட்டு வாணிபத்திலும் முதன்மை பெற்றிருந்தனர். அவர்கள் அரசர்களோடும் பௌத்த நிறுவனங்களோடும் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தியிருந்ததோடு இந்து சமய கலாசார அபிவிருத்திகளுக்கும் கணிசமான அளவில் ஆதரவு புரிந்தனர். அவர்களின் வாணிப நடவடிக்கையின் விளைவாக கம்மாளர், வீரர்கள், பணிசெய் மக்கள் இலங்கை இராசதானிகளுக்கும் வீர பட்டினங்களுக்கும் கரையோரப் பட்டினங்களுக்கும் சென்று அவற்றிலே தங்கியிருந்து இலங்கை குடிகளாகிவிட்டனர் (பத்மநாதன்.சி., 2006:159). பொலன்னறுவை மாவட்டத்து வெலிகந்தையில் கிடைத்த பன்னிரெண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த துண்டமான சாசனத்தில் பௌத்த கோயிலுடன் ஐந்நூற்றுவர் தொடர்பு கொண்டுள்ள செய்தியை அறியமுடிகின்றது.

மாத்தளை மாவட்டத்து கலவெல ஊரிலுள்ள விஹாரஹின்ன எறிவீரர் சாசனம் பன்னிரெண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். இதில் திசையாயிரத்து ஐற்நூற்றுவ வணிக குழுவோடு தொடர்புடையோர் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவையாவன: செட்டிபுத்திரர் (வணிகர்களின் ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள்), கவரை (வணிகர்களின் ஒரு வர்க்கம்), கதிரபன் (வணிகர்களின் ஒரு வகுப்பின் உறுப்பினர்), ஓட்டான் (வியாபாரிகள் சமூகத்தின் உறுப்பினர்), பசும்பைக்காரன் (பணப் பையை எடுத்துச் செல்பவன்), அங்கக்காரன் (வீரர்களின் ஒரு வகுப்பின் உறுப்பினர்), ஆவணக்காரன் (விற்பனையாளர்களின் உறுப்பினர் சந்தைகள்), தி...வீரன் (நாயகன்), பாவாடை-வீரர், ஜவீரர்கள் (நடக்கும் பாக்கியம் பெற்றவர்கள்) துணி விரிப்புஸ, சமஸ்கிருதம் தமிழ் மொழியில் புலமை பெற்றவர்கள், கழுதைகளை ஓட்டுபவர்கள் போன்றோராவர்.

அச்சு வண்ணம் எனும் வணிக கணத்தவர்கள் மாதோட்டத்திலே வாணிபஞ் செய்தனர் என்பதை விசாக பட்டினத்து தெலுங்குச் சாசனம் குறிப்பிடுகின்றது. அச்சு வண்ணம் என்ற வணிக கணத்தவருக்கும் ஐந்நூற்றுவருக்கும் இடையிலான தொடர்புகள் காரணமாக 14 ஆம் நூற்றாண்டு முதலாக ஐநூற்றுவரிடமிருந்த வாணிபச் செல்வாக்குகள் இஸ்லாமிய வணிகர்களிடம் கைமாறியிருக்கலாமென ஊகிக்க முடிகின்றது.

வீரபட்டினங்கள்

இலங்கையில் பன்னிரெண்டாம் நூற்றாண்டில் வீரபட்டினங்கள் தொடர்பான குறிப்புக்கள் காணப்படுகின்றன. பதவியா, வாஹல்கட, விஹாரஹின்ன, புதுமுத்தாவ, கல்தெம்பிட்டிய, தெதியமுல்லை எனுமிடங்களில் உள்ளன. வாஹல்கட சாசனத்தில் 'நானாதேசிய வீரபட்டினம்' தொடர்பான செய்தியையும், பதவியா சாசனத்தில் 'ஐபொழில் பட்டினம்' தொடர்பான செய்தியையும், விஹாரஹின்ன சாசனத்தில் 'தர்மசாகரப் பட்டினம்' தொடர்பான செய்தியையும், புதுமுத்தாவை சாசனத்தில் 'விக்கிரமசாலா மேகபுரம்' தொடர்பான செய்தியையும் காணலாம்.

வீரபட்டினங்கள் வீரக்கொடி என்னும் படைப்பிரிவினரால் அமைக்கப்பட்ட செய்தியை தெதியமுல்லை, கல்தம்பிட்டி, புதுமுத்தாவை போன்ற கல்வெட்டுக்கள் எடுத்துக் காட்டுகின்றன.

தெதியமுல்லை கல்வெட்டில் 'நானாதேசிப் பட்டிணம், சாயர்' போன்ற சொற்கள் உள்ளன. சாயர் என்பது கட்டணத்தை வசூலிப்பவர். ஒரு வரி வசூலிப்பவரைப் பற்றிய இக்கல்வெட்டு பன்னிரெண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இந்தக் காலக்கட்டத்தில் அரச கருவூலத்திற்கு வரிகளே முக்கிய வருவாயாக இருந்தன. ராணி லீலாவதியின் கல்வெட்டு அனுராதபுர நகரின் வாயிலுக்கு அருகில் வணிகப் பொருட்களுக்கு வசூலிக்கப்படும் வரியைக் குறிப்பிடுகின்றது.

விஹாரஹின்ன சாசனத்தில் மகாசேனகாமம் என்னும் ஊர் வணிக தலமாகிப் பின்பு பட்டினமாக அபிவிருத்தியடைந்தது. கிராமவாசிகள் உற்பத்திப் பொருட்களை பரிவர்த்தனை செய்கின்ற மத்திய நிலையத்தில் தென்னிந்திய வணிக கணத்தவர் சென்று கொள்வனவு செய்யத் தொடங்கினர். பின்பு வணிக பட்டினமாக வளர்ச்சியுற்றது. நானாதேசி வணிகரின் செல்வாக்கு இலங்கையில் சோழராட்சியில் ஏற்பட்டதால் பதினொராம் நூற்றாண்டில் மகாசேனகாமத்தில் வணிக கணத்தவர் அமைத்த வியாபார தளங்கள் வீரபட்டினமாக வளர்ச்சியுற்றன (பத்மநாதன்.சி., 2006:177,178). பௌத்த நிறுவனங்கள் சில வணிக கணங்களோடு நெருங்கிய தொடர்பு இருந்தமைக்கு பொலன்னறுவையில் பதினொராம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழராட்சிக் கால கல்வெட்டில் வஹிசிகை என்னுமிடத்தில் ஐந்நூற்றுவர் அமைத்த பௌத்த பள்ளி தொடர்பான குறிப்புண்டு. ஐந்நூற்றுவர் குடியிருப்பையும் இதனூடாக அறிந்துகொள்ளலாம் (பத்மநாதன்.சி., 2006:81). புத்தளம் எரியால அதரகுளியக் கல்வெட்டிலுள்ள ஐந்நூற்றுவர் அம்பலம் பற்றிய குறிப்பு அவர்கள் வாணிபம் செய்தமைக்குரிய சான்றாகும் (பத்மநாதன்.சி., 2006:127).

பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட குருநாகல் மாவட்டத்து புதுமுத்தாவ கல்வெட்டில் 'ஐந்நூற்றுவர் பட்டிணம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 'பட்டிணம்' என்பது நகரம், துறைமுகம் என இரண்டும் பொருள்படுவதால் ஐந்நூற்றுவர் கழகத்திற்குச் சொந்தமான துறைமுக நகரம் என்று கருதலாம். நகருக்குப் பாதுகாப்பு அளிக்க இராணுவம் இருந்திருக்கலாம். இந்தக் கல்வெட்டு குருநாகல் மாவட்டத்து நிக்கவெரட்டியாவின் மாகல் பகுதியில் அமைந்துள்ள ஒரு துறைமுக நகரத்தைக் குறிப்பிடுகிறது. முதலாம் பராக்கிரமபாகு நாட்டின் துறைமுகங்களில்

சுற்றித் திரிந்த வணிகர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கப்பட்ட செய்தியும் நோக்கத்தக்கது (இராசநாயகம், 1926:208). புதுமுத்தாவ கல்வெட்டு பொலன்னறுவை காலத்தைச் சேர்ந்ததாக காணப்படுகின்றமையால் அதே விதி நடைமுறைப்படுத்தப் பட்டிருக்க வேண்டும். எனவே, அந்த இராணுவம் வீரகோடியாக இருக்க வேண்டும்.

வீரக்கொடி

வீரக்கொடியார் கல்வெட்டுகள் தென்னிந்தியாவில் மைசூர், சித்தூர், ஈரோடு, செங்கல்பட்டு, திருச்சி, திண்டுக்கல் ஆகிய இடங்களிலும், அநுராதபுரம் மாவட்டத்தில் பதவியா, வாஹல்கட, குருநாகல் மாவட்டத்தில் புதுமுத்தாவ, தெட்டியமுல்ல, கல்தென்பிட்டி ஆகிய இடங்களிலும் காணப்படுகின்றன.

பதவியாவில் கிடைத்த சாசனத்தில் இரவிகுல மாணிக்க ஈஸ்வர (முதலாம் சிவாலயம்) ஆலயத்தின் நிர்மானத்தில் நானாதேசி வணிகரும் பதியில் வணிகரும் பங்கு கொண்டிருந்த குறிப்புண்டு (பத்மநாதன்.சி., 2006:163). இச்சாசனத்தை 'வீரக்கொடி எனும் படைப்பிரிவினர் வீரசாசனம் செய்து குடுத்தோம்' என குறிப்பிடப்பட்டுள்ளது. ஐந்நூற்றுவர் பிரசஸ்தியோடு ஆரம்பமாகி ஒரு செய்யுளுடன் முடிவடைகின்றது. ஐநூற்றுவர் பிரசஸ்தி, ஐம்பொழில்பட்டினக் குறிப்புக்களும் காணப்படுகின்றன.

பொலன்னறுவையில் உள்ள ரன்கொத் விகாரைக் கல்வெட்டுகளும், பதவியாவிலிருந்து கிடைத்த மற்ற இரண்டு கல்வெட்டுகளும் வீரக்கொடி, ஐநூற்றுவர் தொடர்பான செய்தியை பதிவு செய்வதாக பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை குறிப்பிடுகின்றார் (வேலுப்பிள்ளை.ஆ.,1971:46-57, வேலுப்பிள்ளை. ஆ.,1972:9-12,21). அதரகல்ல மற்றும் அனவிலுண்டாவ கல்வெட்டுகளில் இந்த இரண்டு பெயர்கள் காணப்படுவதை பேராசிரியர் கா. இந்திரபாலா குறிப்பிடுகின்றார்.

பேராசிரியர் பத்மநாதனின் கூற்றுப்படி, தெதியமுல்லை கல்வெட்டில் மாநகர சபைக்கும் வீரகொட்டி வர்த்தக கூட்டுத்தாபனத்திற்கும் இடையிலான ஒப்பந்தம் மற்றும் அவர்கள் ஒரு பௌத்த விகாரைக்கு வழங்கிய நன்கொடை பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், புதுமுத்தாவ கல்வெட்டு வீரக்கொடி

மற்றும் அவர்களால் கட்டப்பட்ட பௌத்த விகாரை பற்றி குறிப்பிடுகிறது. வீரக்கொடி என்பது சமுதாயத்தின் உயர் பதவியில் இருந்தவர்களின் தொகுப்பாகும்.

விஹாரஹின்ன, பதவியா, வஹல்கட ஆகிய கல்வெட்டுகளும் இதே காலத்தைச் சேர்ந்தவை (வேலுப்பிள்ளை.ஆ., 1971:46). ஐந்நூற்றுவர் வர்த்தகக் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் துணை நிறுவனங்கள் என நம்பக்கூடிய வீரக்கொடியும் நானாதேசியும் இலங்கையில் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டதாகத் தெரிகின்றது. இந்த வர்த்தக நிறுவனங்கள் அனைத்தும் தென்னிந்திய வம்சாவளியைச் சேர்ந்தவையாகும்.

முடிவுரை

வர்த்தக நிறுவனங்கள் இலங்கையில் பௌத்தம், இந்து சமய வழிபாட்டுத் தலங்களை நிர்மானித்து அவற்றுக்கு அனுசரணை வழங்கியதாக தமிழ்க் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. தென்னிந்தியப் படையெடுப்புக்கள் சமகால இலங்கை வரலாற்றில் தலைவிரித்தாடிய நேரத்தில் ஒரு வர்த்தகக் கூட்டுத்தாபனம் பௌத்த விகாரைகளுக்கு அனுசரணை வழங்கியமை இங்குள்ள சிறப்பாகும். இக்குழு இலங்கையை ஆக்கிரமிப்பதை நோக்கமாகக் கொண்ட குழுவல்ல. பௌத்த சமயத்தை மதிக்கும் குழுவாக இருந்துள்ளனர். இவ்வர்த்தக குழுவில் ஐந்நூற்றுவர் வலுவான வர்த்தக நிறுவனமாக தெற்காசியாவில் இருந்துள்ளனர்.

இலங்கையில் வணிக நிறுவனங்களுடன் தொடர்புடைய வணிக நகரங்கள் இருந்துள்ளன. வீரக்கொடி என்ற இராணுவம் வணிக நகரங்களுக்கு பாதுகாப்பு வழங்கியுள்ளது. அவர்களது வர்த்தகக் கூட்டுத்தாபனம் பங்குதாரர்களைக் கொண்ட ஒரு நிறுவனமாக இருந்திருக்கலாம். கல்வெட்டுகளில் வணிகப் பொருட்கள் தொடர்பான செய்திகள் காணப்படவில்லை. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செயற்பாடுகளை வணிக நிறுவனங்கள் மேற்கொண்டுள்ளன. வரி வசூல் வணிக நிறுவனங்களுடன் தொடர்புடையதாக இருந்துள்ளது.

ராணி லீலாவதியின் கல்வெட்டு, பதுளை தூண் கல்வெட்டு தவிர மற்ற அனைத்தும் தமிழில் காணப்படுகின்றன. இலங்கையில் தென்னிந்திய வணிக கணத்தினர் தமிழைத் தங்கள் ஆவணங்களின் பயன்படுத்தியமை தமிழ் பேசுவோராய் இருந்தனர்

என்பதைக் காட்டுகின்றது. வெளிநாட்டு வர்த்தகத்தின் முக்கிய மொழியாக தமிழ் இலங்கைத் துறைமுகங்களில் அதிகளவு பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலை பன்னிரெண்டாம் நூற்றாண்டு வரை நீடித்துள்ளது. முதலாம் பராக்கிரமபாகு வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பாக ஊராத்துறையில் வைத்த பிரகடனம் தமிழ் மொழியில் உள்ளது. 1410 இல் சீன வர்த்தகர்கள் எழுதி வைத்த கல்வெட்டு காலித் துறையில் தமிழ், சீனம், பாரசீகம் ஆகிய மூன்று மொழிகளில் பொறிக்கப்பட்டுள்ளது.

எனவே தெற்காசியாவில் ஒரு முக்கியமான பொருளாதார மையமாக இலங்கை விளங்கியதுடன் வணிகக் கணங்களால் இலங்கை வர்த்தகம் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டிருக்குமென முடிவு செய்யலாம்.

உசாத்துணை

The Mahavamsa, (1912). Geiger, Wilhelm (Trans.), Pali Text Society, London.

Rasanayagam, Mudaliyar C., (2003). Ancient Jaffna, New Delhi: Asian Educational Services.

Veluppillai, A., (1971). Ceylon Tamil Inscriptions, Part I, Peradeniya.

Veluppillai, A., (1972). Ceylon Tamil Inscriptions, Part II, Peradeniya.

Wickremasinghe, Don Martino de Zilva (1912). Epigraphia Zeylanica, Vol. I, New Delhi: Asian Educational Services.

Wickremasinghe, Don Martino de Zilva (1994). Epigraphia Zeylanica, Vol. III, New Delhi: Asian Educational Services.

இந்திரபாலா.கா., (2006). இலங்கையில் தமிழர் ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு பொ.ஆ.மு 300 - பொ.ஆ 1200, குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.

பத்மநாதன்.சி., (2006). இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

68

மத்திய காலக் கிழக்கிலங்கையின் நிர்வாகப் பிரிவுகள் - பற்றுக்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

சு.சுதிர்சனா
உதவி விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
s.suthi.shana1015@gmail.com

கௌரி லக்சுமிகாந்தன்
சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
gowryl@esn.ac.lk

ஆய்வு அறிமுகம்

புராதன காலம் முதலாக இலங்கை இராஜரட்டை, உரோகணை, தக்கிண தேசம், மலயரட்ட, உத்தர தேசம், பக்சிம தேசம், பச்சின பூமி என பல இராச்சியப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஆட்சி செய்யப்பட்டு வந்தது. இவற்றில் தனித்தனியாக பல நிர்வாகப் பிரிவுகள் காணப்பட்டன. அந்தவகையில் மத்திய காலம் முதலாக கிழக்கிலங்கையில் பற்று என்ற நிர்வாகப் பிரிவானது முக்கியம் பெற்றதாகக் காணப்படுகின்றது. குறிப்பாக வன்னிமைகளின் ஆட்சியின் கீழ் பற்று என்ற நிர்வாக முறையின் வளர்ச்சியை தெளிவாக விளங்கிக்கொள்ள முடிகின்றது. தற்கால நிர்வாக அலகுகளில் பற்று என்ற பிரிவு பல பிரதேச செயலகங்களின் பெயர்களின் பின்னொட்டுச் சொல்லாகக் காணப்படுகின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

ஆய்வின் நோக்கம்

கிழக்கிலங்கையின் ஆட்சியதிகாரத்தில் பற்று எனும் நிர்வாக அலகு எத்தகைய முக்கியத்துவம் பெற்றிருந்தது என்பதனை

வரலாற்றாதாரங்களின் அடிப்படையில் வெளிப்படுத்துவது இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஆய்வு அணுகுமுறை

பற்று என்றால் என்ன, இலங்கையில் பற்று நிர்வாக முறையாக எந்தக் காலப்பகுதிகளில் நடைமுறைக்கு வந்தது, கிழக்கிலங்கையில் நிர்வாக நடைமுறையில் பற்று எவ்வாறு செல்வாக்குச் செலுத்தியுள்ளது போன்ற கடந்தகால நிகழ்வுகளை தெளிவுபடுத்துவதற்கு உகந்த வரலாற்றியல் ஆய்வு முறை பயன்படுத்தப்படுகின்றது. கிழக்கிலங்கையில் நிர்வாகப் பிரிவான பற்றுத் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டு, அத்தகவல்களின் உண்மைத் தன்மையானது முதன்னிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளுடாக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

வரலாற்றில் பற்று

தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி 'பற்று' என்பது 13 ஆம் நூற்றாண்டிலிருந்து ஒரு சமூக மற்றும் நிர்வாக நிலப்பிரிவு எனக் குறிப்பிடுகின்றது. தமிழ்நாட்டில் கி.பி 1278 ஆம் ஆண்டுக்குரிய ஜடாவர்ம வீரபாண்டியனின் 25ஆம் ஆட்சியாண்டுக்குரிய கல்வெட்டொன்றில் 'பழுவூர் பற்றினாலும் கண்டராதித்தன் பிடகையிலும் பல பற்றிலும்...' என வருகின்றது (கிகூஷிழிவி-6, 1995:33). அதேபோன்று 1478 ஆம் ஆண்டுக்குரிய கல்வெட்டில் 'கற்குறிச்சி விக்கிறபாண்டிய நல்லாருள்ளிட்ட பற்றில் ஆண்டு ஒன்றுக்கு...' (TAS, ix:12-14) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் சோழர்களின் நிர்வாக அலகுகளாக மண்டலம், வளநாடு, கோட்டம், கூற்றம், நாடு போன்றவை குறிப்பிடப்பட்டபோதிலும் பற்று எனும் நிர்வாக அலகு பற்றிய குறிப்புகள் காணப்படவில்லை. ஆனால் அங்கு விஜயநகர நாயக்கர் காலப்பகுதிகளிலும், இரண்டாம் பாண்டியப் பேரரசுக் காலத்திலும் பற்று என்ற நிர்வாகப் பிரிவு, அவர்களுடைய நிர்வாக நடைமுறைகளில் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஆயினும் சோழராட்சியில் காணப்பட்ட வளநாடு என்பதற்குச் சமமானதாக 'பற்று' காணப்பட்டிருத்தல் கூடும் என பேரா.சி.பத்மநாதன் குறிப்பிடுகின்றார்.

இலங்கையில் 11, 12 ஆம் நூற்றாண்டுகளுக்குரிய சிங்களக் கல்வெட்டுக்களில் பத்து எனும் நிர்வாக அலகு பற்றிய குறிப்புள்ளது. ஆனால் பற்று என்ற பிரிவு குறிப்பிடப்படவில்லை. 14 ஆம் நூற்றாண்டு முதலாக கண்டி இராசதானியானது ரட, திசாவை என்கின்ற இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஆங்கிலேயர் கண்டியைக் கைப்பற்றுகின்றபோது 12 திசாவைகள் காணப்பட்டன. திசாவைகள் கோரளைகளாகவும், கோரளைகள் பத்துக்களாகவும், பத்துக்கள் கிராமங்கள் என்கின்ற நிர்வாக அலகுகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தன (Leitan.Tressi, 1979:1-2). பற்று என்ற தமிழ்ச் சொல் சிங்களத்தில் 'பத்து' என்று அழைக்கப்பட்டுள்ளது. இவை பல ஊர்களைக் கொண்ட நாட்டுப் பகுதி என்பதே பொருத்தமானதாகும்.

தமிழகத்தின் விஜயநகர நாயக்கர் கால ஆட்சியில் பற்று எனும் நிர்வாக அலகு

விஜயநகர நாயக்கர் கால ஆட்சியில் (கி.பி 1336 - 1650) பல நிர்வாகப் பிரிவுகள் காணப்பட்டுள்ளன. விஜயநகரப் பேரரசானது இராச்சியம், வளநாடு, நாடுகள், கூற்றம், கோட்டம், பற்று/கிராமம் என்ற வகையில் பிரிக்கப்பட்டிருந்தது. நாடு அல்லது கூற்றத்திலிருந்த கிராமப் பகுதிகளுக்குப் பற்று என்ற பெயர் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக செங்கழுநீர்ப்பற்று (செங்கற்பட்டு), அத்திப்பற்று (அத்திப்பட்டு), வரிசைப்பற்று (வரிசைப்பட்டு) என்பவற்றைக் குறிப்பிடலாம் (கிருஷ்ணசாமி, 1977). இது சிறிய நிலப்பரப்புக்கு வழங்கப்பட்ட பெயராகவே காணப்படுகின்றது.

கிழக்கிலங்கையில் பற்று

கோமரன்கடவல

கோமரன்கடவல கல்வெட்டானது திருகோணமலை மாவட்டத்தில் தனி நிர்வாகப் பிரிவாக உள்ள கோமரன்கடவல பிரதேசத்தில் முக்கிய வீதியுடன் இணைந்திருக்கும் காட்டுப் பகுதியில் கண்டறியப்பட்டுள்ளது. கட்டுக்குளம்பற்று நிர்வாகப் பிரிவாக இருந்த போது இந்த இடம் குமரன்கடவை என்றும் அழைக்கப்பட்டது. இக்கல்வெட்டு கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்தது. மலையின் மேற்பகுதியில்

திருவாசி போன்ற வட்டமும், அதனுடன் இணைந்த ஆவுடையாருடன் கூடிய சிவலிங்கமும் செதுக்கப்பட்டுள்ளன. இக்குறியீடுகளுக்குக் கீழே 22 வரிகளில் தமிழ்க் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டு வரிகளில் பற்று என்ற நிர்வாகப் பிரிவு பற்றிக் கூறப்பட்டுள்ளது. 'நமக்கு (ப்ராப்தமாய்) வருகிற காலிங்கராயப் பற்றில் மாநாமத்(து) நாட்டில் லச்சிகா(தி)

புரம் இதுக்குள்....' என்ற பத்தாவது வரியில் காலிங்கராயப் பற்றுப் பற்றிய குறிப்புள்ளது. இது மாநாமத்து நாட்டில் அமைந்திருந்தது. கிழக்கிலே சோழர் ஆட்சிக்குப் பொறுப்பாக இருந்த மூன்றாம் குலோத்துங்க சோழனது படைத்தளபதிகளுள் ஒருவனான அல்லது அரச பிரதிநிதியான குலோத்துங்கசோழக் காலிங்கராயன்; (கங்கராஜகாலிங்க விஜயபாகுவிற்கு (கலிங்க மாகனுக்கு) பட்டாபிஷேகம் செய்துவித்தவன்) தனது ஆட்சிக்குட்பட்ட பிரதேசமான காலிங்கராயப் பற்றில் அமைந்திருந்த இடமொன்றை தானமாக வழங்கியுள்ளான் எனக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. ஆயினும் இவ்விடம் எங்கு அமைந்திருந்தது என்பது பற்றி அறிய முடியவில்லை. எனினும் கல்வெட்டு அமைந்திருந்த பிற்கால கட்டுக்குளம்பற்று பகுதியிலேயே அமைந்திருத்தல் வேண்டும். இதனூடாக தமிழர் பகுதிகளில் 13 ஆம் நூற்றாண்டுகளில் பற்று எனும் நிர்வாக அலகு இருந்துள்ளமை உறுதியாகின்றது.

மத்திய கால கிழக்கிலங்கை நிர்வாகப் பிரிவான பற்று

சிங்கள மன்னர்களின் ஆட்சிக் காலப்பகுதிகளில் தமிழ்ப் பிரதேசங்களில் வன்னிச் சிற்றரசுகளின் ஆட்சி ஏற்பட்டுக் கொண்டது. இவர்கள் தங்களது ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் பற்று என்ற நிர்வாக முறையினை நடைமுறைப்படுத்தியிருந்துள்ளனர். வன்னிச் சிற்றரசுகளின் ஆட்சிப் பகுதிகளைக் குறிப்பதற்காகப் பற்று என்ற சொல் பயன்பாட்டில் காணப்பட்டுள்ளது. ஐரோப்பியர்களின் காலனித்துவ காலப்பகுதியிலும் இந்த பற்று என்ற பிரிவு தொடர்ந்தும் இருந்து வந்துள்ளது.

வன்னிமைகள் சிற்றரசுகளாக பெரும் செல்வாக்குப் பெற்றவர்களாக சில சந்தர்ப்பங்களில் சுயாட்சியை ஏற்படுத்தினர்.

சில காலப்பகுதியில் மேலாதிக்கங்களை ஏற்றுச் செயற்பட்டாலும் தமது பிரதேசங்களில் சுதந்திரமாகவே ஆட்சியினைச் செலுத்தினர். இவ்வாறாக வன்னிச் சிற்றரசர்கள் கிழக்கிலங்கை மட்டுமல்லாது இலங்கையில் உள்ள தமிழ் பிரதேசங்களில் முக்கியத்துவம் பெற்று விளங்கியுள்ளனர். இந்த வன்னிச் சிற்றரசுகள் செல்வாக்குப் பெற்றிருந்த காலப்பகுதிகளில் அவர்களது நிர்வாக அலகாகக் காணப்பட்ட பற்றுக்களும் முக்கியத்துவம் பெற்று விளங்கியிருந்தன.

கிழக்கிலங்கையைப் பொறுத்தவரையில் மட்டக்களப்பு வன்னிமை, திருகோணமலை வன்னிமை என்பன முக்கியம் பெற்றிருந்தன. திருகோணமலை வன்னிமையின் ஆட்சியின் கீழ் திருகோணமலைப் பற்று, கட்டுக்குளப் பற்று, தம்பலகாமப் பற்று, கொட்டியாரப் பற்று போன்ற வன்னிப் பற்றுக்கள் அடங்கியிருந்துள்ளன. மட்டக்களப்பு வன்னிமையிலே ஆறுக்குக் குறையாத வன்னிப்பற்றுக்கள் வன்னிச் சிற்றரசர்களால் ஆட்சி செய்யப்பட்டு வந்துள்ளன. அவையாவன, மட்டக்களப்பு, மண்முனைப் பற்று, பழுகாமம் பற்று, போரதீவுப் பற்று, சம்மாந்துறைப் பற்று, பாணமைப் பற்று என்பனவாகும்.

கோணேசர் கல்வெட்டு: கோணேசர் கல்வெட்டு திருகோணமலையைச் சேர்ந்த கவிராஜவரோதயரால் பதினாறாம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட வரலாற்று நூலாகும். இதில் திருகோணமலை, கட்டுக்குளம் ஆகிய பிரிவுகளில் குளக்கோட்டு மன்னனால் வன்னிமைகள் நியமிக்கப்பட்டமை தொடர்பான குறிப்புக்கள் காணப்படுகின்றன. இதனை கோணேசர் கல்வெட்டின் 'தானம் வரிப்பத்தென்னும் அரன் தொழும்பாளர்க்குள் இகலார் தர்க்கம் வந்தால்.....' என்ற கல்வெட்டுப் பாடலும், 'வைத்த கட்டுக்குளத்தூரார் அரன்தொழும்பு செய்ய இந்து வெளியூர் மேலோர்.....' என்ற கல்வெட்டுப் பாடலும் தெளிவுபடுத்துகின்றன. இதனடிப்படையில் இலங்கையின் மத்திய காலப்பகுதியில் வன்னிமைகள் முக்கியத்துவம் பெற்றிருந்தமையினையும் அவர்களின் நிர்வாகப் பிரிவுகள் செல்வாக்குப் பெற்றிருந்தமையினையும் அறிய முடிகின்றது.

'தானதிக திருமலைக்கு நாற்காத வழிதிருத்தித் தானும் கோணை....' என்ற கோணேசர் கல்வெட்டுப் பாடலின் மூலமாக

கொட்டியாபுரத்தில் நான்கு காதவழி தூரத்திற்கு உற்பத்தி விளைவுகளுக்காகக் காடுகளைத் திருத்தி விளைநிலங்களை உண்டாக்கிக் கோணேசப் பெருமாளுக்கென குளக்கோட்டன் கொடுத்தான் என்ற செய்தியும், அந்தக் கொட்டியாரபுரத்தில் வாழ்பவர்கள் கோணேசர் கோயிலுக்கு வெற்றிலை, வாழைப்பழம், சந்தனம், பால், தயிர், நெய், நூறு அவணம் அரசி என்பன கொடுத்து வரவேண்டும் என்று குளக்கோட்டன் கூறிய செய்தியும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் கல்வெட்டுப் பாடலின் மூலமாக கொட்டியாரபுரம் என்ற பிரிவு பற்றி அறிய முடிகின்றது. கோணேசர் கல்வெட்டின் செய்யுள் நடையில் அமைந்துள்ள பகுதியில் திருகோணமலை, கட்டுக்குளம், கொட்டியாரபுரம் போன்ற மூன்று பிரிவுகள் பற்றிய குறிப்புக்கள்; காணப்படுகின்றன. இடைச்செருகலாக அமைந்த பாடல்கள் மூலமாக தம்பலகாமம் பிற்காலத்தில் ஆதிகோணநாயகர் ஆலயத்தினால் முக்கியத்துவம் பெற்று விளங்கியுள்ளமையை அறியமுடிகின்றது. கோணேசர் கல்வெட்டில் கூறப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நோக்கும்போது மத்தியகால திருகோணமலை நான்கு பிரிவுகள் காணப்பட்டுள்ளது என்பது உறுதியாகின்றது. ஆயினும் அப்பிரிவுகள் பற்றிக் கூறும் போது பற்று என்ற சொல் கூறப்படாவிட்டாலும் அந்த நான்கு பிரிவுகளும் பற்றுக்கள் என்ற அடிப்படையிலேயே காணப்பட்டன என பேரா.பத்மநாதன் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

பெர்ணாஓ தே கோறோஸ் பாதிரியாரின் குறிப்பு: மட்டக்களப்பிலுள்ள வன்னி இராச்சியங்களின் உற்பத்தி பற்றிய கர்ண பரம்பரைக்கதை கோறோஸ் பாதிரியார் எழுதிய வரலாற்று நூலில் இடம்பெற்றுள்ளது. இதில் சம்மாந்துறை, பழுகாமம், ஏறாவூர் எனும் மூன்று பற்றுக்கள் பற்றியதான விடயங்கள் கிடைக்கப்பெறுகின்றது.

ஐரோப்பியர்கால கிழக்கிலங்கையும் பற்று என்ற நிர்வாகப் பிரிவும்

மத்தியகாலக் கிழக்கிலங்கையின் நிர்வாக முறையில் காணப்பட்ட பற்று என்ற பிரிவானது தொடர்ந்தும் காலனித்துவ காலத்திலும் கிழக்கிலங்கையின் நிர்வாக அலகாக நடைமுறையில் இருந்துள்ளது.

நாடுகாடு பரவணிக் கல்வெட்டு: இது கல்வெட்டு என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்ததாகும்.; அதில் வருகின்ற சில தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பதினாறாம் அல்லது பதினேழாம் நூற்றாண்டு காலப்பகுதிக்குரியது என்பது உறுதியாகின்றது.

இக்கல்வெட்டானது சீதாவாக்கையிலிருந்து நாடுகாட்டுப்பற்றுக்கு குடியேறிய சிங்கள அரசகுடும்பங்கள் சிலவற்றின் பின்னணியில் வெள;வேறு தமிழ், முஸ்லிம் சமூகங்கள் மூலம் நாடுகாட்டுப் பகுதியில் புதிய குடியிருப்புக்கள் உருவானது பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. பதினாறாம் அல்லது பதினேழாம் நூற்றாண்டு காலப்பகுதியில் சீதாவாக்கையிலிருந்து வந்த மக்கள் வாழ்ந்த கடைசிப் பற்றாக நாடுகாட்டுப் பற்று காணப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது. ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு மட்டக்களப்புப் பிரதேசமானது ஏழு நிர்வாகப் பிரிவுகளாக அமைந்திருந்தது (Canagaratnam, 1921:10,78). நாடுகாடு பற்று என்பதும் அதிலொன்றாகும். இதனடிப்படையில் மட்டக்களப்பில் மத்தியகாலப் பகுதியில் இருந்த பற்றுக்களோடு சேர்த்து பதினாறாம் அல்லது பதினேழாம் நூற்றாண்டு காலப்பகுதியில் நாடுகாடு பற்றும் காணப்பட்டுள்ளது.

பற்றுக்களில் சுயாட்சி கொண்டவர்களாக வன்னிமைகள் விளங்கினாலும் பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பம் முதலாகக் கிழக்கிலங்கை நிர்வாகத்தின் மீது கண்டி அரசனின் மேலாதிக்கம் ஏற்பட்டது. இதனால் பற்றுக்களும், அதன் நிர்வாகிகளும் கண்டி மன்னனின் மேலாதிக்கத்தை ஏற்றிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. கொட்டியாரப்பற்று முதலாக பாணமைபற்று வரையிலான வன்னிமைகள் கண்டி மன்னனுக்கு யானை, தேன், மெழுகு முதலியவற்றைத் திறையாகக் கொடுத்து வந்தனர். போர்க்காலங்களின் போது ஒவ்வொரு பற்றுக்களும் படைகளைத் திரட்டிக்கொடுத்தல் வேண்டும், போர் நடவடிக்கைகளுக்கு வன்னிமைகள் தலைமை தாங்கவும் வேண்டியிருந்தது. இதனடிப்படையில் நோக்கும் போது பற்றுக்கள் படைபலம் கொண்டதாக செல்வாக்குப் பெற்ற நிர்வாகப் பிரிவுகளாகவே விளங்கியுள்ளன.

பதினேழாம் நூற்றாண்டில் ஐரோப்பியரால் எழுதப்பட்ட நூல்களோடு வெளியிடப்பட்ட தேசப்படங்களில் கொட்டியாரப்பற்று, மட்டக்களப்பு, பாணமைப்பற்று என்பன 'இராச்சியம்' என்று வர்ணிக்கப்பட்டுள்ளமையும் கவனத்திற்குரியது. மேலும் இந்த நூல்கள் திருகோணமலையில் இருந்த நான்கு வன்னிப்பற்றுக்களையும் 'அரசுகள்' என்று குறிப்பிடுகின்றது.

மட்டக்களப்பை ஒல்லாந்தர்கள் கைப்பற்றியதன் பின்னர் அவர்களுடைய கவனம் திருகோணமலை மீது திரும்பியது. போர்த்துக்கீசரின் திருகோணமலைக் கோட்டையைத் அழிக்கும் ஒல்லாந்துக் கடற்படை 2 படகுகள் உட்பட 12 போர்க் கப்பல்கள் அடங்கிய படையுடன் 1639 இல் முற்றுகையிட்டது. இப்படைக்கு உதவியாக மட்டக்களப்பு, கொட்டியாரம், சம்மாந்துறை ஆகிய இடங்களிலிருந்து உள்நாட்டுப் படைகளும் சென்றிருந்தன. மட்டக்களப்பு வன்னிபம் 500 படைவீரர்களை அனுப்பியிருந்தான். கொட்டியாரத்திலிருந்து 500 படைவீரர்களும் அவர்களோடு தொழிலாளர்களும் சென்றிருந்தார்கள். இதனடிப்படையில் நோக்கும்போது வன்னிமைகளின் ஆட்சியினாலும், அவர்களது படைபலங்களினாலும் பற்றுக்கள் சிறப்பிடம் பெற்றிருந்துள்ளது.

ஒல்லாந்தர்களின் காலப்பகுதியில் மட்டக்களப்பு பற்றுக்களின் நிர்வாக முறையில் போடிமார்களும் முக்கியம் பெற்றிருந்துள்ளனர். ஒல்லாந்தர்கள் போடிமார்களில் சிலரை பற்றுக்களின் நிர்வாகிகளாக நியமனம் செய்துள்ளனர். சான்றாக 1766 இல் மண்முனைப்பற்று அறுமக்குட்டி போடிக்கு வழங்கிய நியமனத்தைக் குறிப்பிடலாம். போடிக் கல்வெட்டு என்னும் பாடலில் அறுமக்குட்டி போடிக்கு ஒல்லாந்தர் நியமனப் பத்திரம் வழங்கிய தகவல் கூறப்பட்டுள்ளது. பற்றுக்களின் நிர்வாகிகளாக வன்னிமைகள் செயற்பட்ட அதேசமயம் சில போடிமார்களும் பற்றுக்களின் நிர்வாகிகளாகச் செயற்பட்டுள்ளனர்.

ஒல்லாந்து ஆளுநரான ஜாக்ஸ் ஃபேப்ரிஸ் பன் சென்டென் (Jaques Fabrice Van Senden) 15.05.1786 - 21.06.1786 காலப்பகுதியில் திருகோணமலையில் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார். தனது சுற்றுப்பயணத்தைப் பற்றி அவர் வெளியிட்ட சுற்றுப்பயண அறிக்கையில் திருகோணமலைப் பற்று, கட்டுக்குளப் பற்று, தம்பலகாமப் பற்று, கொட்டியாரப் பற்று ஆகிய நான்கு பிரிவுகளிம்

உள்ள ஊர்களுக்குச் சென்று அங்குள்ள குடியானவர்கள், இயற்கைவளம், வயல்நிலங்கள், தோப்புக்கள், கைத்தொழில்கள் முதலானவற்றைக் குறித்த விபரங்களை எழுதியுள்ளார். இவரது குறிப்புகளின் அடிப்படையில் திருகோணமலையில் காணப்பட்ட பற்றுக்கள் பற்றியும், பற்று நிர்வாகப் பிரிவாகத் தொடர்ந்தும் நடைமுறையிலிருந்து வந்துள்ளமையினையும் அறிய முடிகின்றது. பதினேழாம் நூற்றாண்டிலே இளஞ்சிங்கன் என்ற முக்குவ வன்னியன் ஏறாவூர் பற்றிலே இருந்தானென்று தேசாதிபதி பான் கூன்ஸின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் விந்தனைப்பற்று தவிர்ந்த ஏனைய 11 பற்றுக்களும் 'மட்டக்களப்பின் 11 மாகாணங்கள்' என்று ஜாகொப் பேர்னாட் என்ற ஒல்லாந்து அதிகாரியின் 1794 ஆம் ஆண்டுக் குறிப்பில் சொல்லப்படுகின்றது. அவையாவன, கோறளைப் பற்று, ஏறாவூர் பற்று, மண்முனைப் பற்று, கரவெட்டிப் பற்று, எருவிற் பற்று, போரதீவுப் பற்று, கரைவாகுப் பற்று, சம்மாந்துறைப் பற்று, நாதனை - நாடுகாடுப் பற்று, அக்கரைப்பற்று, பாணமைப்பற்று என்பனவாகும்.

1815 ஆம் ஆண்டில் பிரதம நீதியரசரான அலெக்சாந்தர் ஜோன்ஸ்ரைன் ஆவணச் சுவடிகளில் திருகோணமலை பிராந்தியத்தைச் சேர்ந்த நான்கு வன்னிப் பற்றுக்களினதும் தேசவழமைகள் பற்றிய பல விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. பிரித்தானியர்களது காலனித்துவ காலத்திலும் பற்று நிர்வாக முறையாக தொடர்ந்தும் இருந்துள்ளது என்பதனை இந்த ஆவணச் சுவடிக் குறிப்பிலிருந்து அறிந்துகொள்ள முடிகின்றது.

தமிழ்த் தலைமைக்காரர்களின் முதலாவது பிராந்திய சபையானது 1909 யூன் மாதம் முதலாம் நாள் கொழும்பில் கூடியது. இரண்டாவது மகாநாடு மட்டக்களப்பில் 1912 யூலை 15, 16 ஆம் திகதிகளில் கூடியது. இவற்றில் பங்கு கொண்ட தலைமைக்காரர்களின் விபரங்களில் இருந்து வன்னிமைகளும் அதில் பங்கு கொண்டுள்ளமை தொடர்பான விபரங்களை அறியமுடிகின்றது. இதிலிருந்து இருபதாம் நூற்றாண்டுகளிலும் பற்றுக்கள் ஒரு முக்கியத்துவம் வாய்ந்ததொரு நிர்வாகப் பிரிவாகச் செயற்பட்டுள்ளமையை விளங்கிக்கொள்ள முடிகின்றது.

1939 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் பதவியிலிருந்த வன்னிபங்கள் பற்றிய விபரங்கள் காணப்படுகின்றது (பத்மநாதன், 2002:226). இதிலிருந்து ஒவ்வொரு பற்றுகளுக்குமான நிர்வாகிகளது பெயர்களை அறிய முடிகின்றது.

திருகோணமலை நகரம் - T. சரவணமுத்து

தம்பலகாமம் பற்று - A கனகசிங்கம்

கட்டுக்குளம் பற்று - M. இராசையா

கொட்டியாரம் பற்று - T. சங்கரப்பிள்ளை

மண்முனை தெற்கு எருவில் - போரதீவுப் பற்று - வேல்முருகு முதலியார் பொன்னுச்சாமி

மண்முனை வடக்கு மட்டக்களப்பு நகரம் - சின்னப்பு நமசிவாயம்

கரவாகுபற்று - M.S காரியப்பர்

சம்மாந்துறைப்பற்று - மீறா லெவ்வை முகம்மது அலி

அக்கரைப்பற்று - C.C. கனகரத்தினம்

பாணமைப்பற்று - அகமது லெவ்வை சின்னலெவ்வை

காலனித்துவவாதிகளின் இறுதிக் காலப்பகுதியில் அவர்களது ஆட்சி, நிர்வாக முறைகளில் ஏற்படுத்திய மாற்றங்களினால் பற்று என்ற நிர்வாகப் பிரிவானது சில இடங்களில் இல்லாது போனமை குறிப்பிடத்தக்கது. அதற்கு எடுத்துக்காட்டாக கிழக்கிலங்கைப் பிராந்தியமான திருகோணமலை மாவட்டத்தைக் குறிப்பிடலாம். மாறிவரும் சூழ்நிலைகளுக்கேற்ற வகையில் பற்று நிர்வாக முறையிலும் மாற்றங்கள் ஏற்பட்டு தற்காலத்தில் திருகோணமலையில் காணப்பட்ட நான்கு பற்றுக்களும் வழக்கொழிந்து போய்விட்டது. ஆயினும் பிரபல்யமான கோயில் நிர்வாகங்களில் மட்டும் இப்பற்றுக்கொரு பிரதிநிதி என்றடிப்படையில் நிர்வாக உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் வழக்கம் இன்றும் நடைமுறையில் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இன்றும் பற்றுக்கள் நிர்வாகப் பிரிவாக இருந்தே வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

முடிவுரை

இலங்கையில் 11, 12 ஆம் நூற்றாண்டுகளில் பத்து எனும் நிர்வாக அலகு இருந்துள்ளது என்பதற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன. பற்று என்ற தமிழ்ச் சொல் சிங்களத்தில் 'பத்து' என்று அழைக்கப்பட்டுள்ளது. இந்த பற்று என்ற சொல்லானது கிழக்கிழங்கையில் கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த கோமரன்கடவல கல்வெட்டில் கிடைக்கின்றது. இலக்கிய ஆதாரங்களில் மத்திய காலப்பகுதிகளில் காணப்பட்ட வன்னிப் பிரிவுகள் பற்றிய குறிப்புக்கள் காணப்பட்டாலும் அதில் பற்று என்ற சொற்பதம் குறிப்பிடப்படவில்லை. ஆயினும் நீண்ட காலமாக மக்களிடையே வன்னிப் பிரிவுகள் பற்றுக்கள் என்றே அழைக்கப்பட்டு வந்துள்ளன.

தமிழக விஜயநகர நாயக்கர் கால ஆட்சியில் காணப்பட்ட நிர்வாகப் பிரிவுகளில் நாடு அல்லது கூற்றத்திலிருந்த கிராமப் பகுதிகளுக்குப் பற்று என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு முன்னர் தமிழகத்தில் அப்பிரிவு பற்றி அறியமுடியவில்லை. ஆனால் அதற்கு முந்திய இலங்கைக் கல்வெட்டுக்களில் இந்நிலப்பிரிவு பற்றிய குறிப்புள்ளது. கிழக்கிலங்கையைப் பொறுத்தவரையில் பற்று என்பதற்குப் பல ஊர்களைக் கொண்ட நாட்டுப் பகுதி என்பதே பொருத்தமானதாகும். வன்னியர்களின் ஆட்சியின் கீழ் பல பகுதிகளைக் கொண்ட பரந்த நிலப்பரப்பே பற்றுக்களாக விளங்கியுள்ளது. அதன் தொடர்ச்சியாகவே ஐரோப்பியர்களது காலத்திலும் பற்றுக்கள் ஒரு நிர்வாகப் பிரிவாக இருந்து வந்துள்ளது. ஐரோப்பியர்கள் நிர்வாகத்தில் ஏற்படுத்திய மாற்றங்களினால் பிற்பட்ட காலங்களில் திருகோணமலையில் பற்றுக்கள் என்ற பிரிவுகள் இல்லாது போயுள்ளது. ஆயினும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில்; பிரதேச செயலகப் பிரிவுகளாக ஏறாவூர் பற்று, கோறளைப் பற்று, போரதீவுப் பற்று, மண்முனைப் பற்று, எருவில் பற்று, அக்கறைப்பற்று என்பன இன்றும் நிர்வாக அலகாக நடைமுறையில் இருந்து வருகின்றன. அத்துடன் நாட்டின் வேறு சில பகுதிகளிலும் பற்று, பத்து என்பன பிரதேசங்களின் பெயர்களின் பின்னொட்டாகக் காண்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

உசாத்துணை

கிருஷ்ணசாமி.அ. (1977). விஜயநகரப் பேரரசின் வரலாறு கி.பி 1565 வரை. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம். தமிழ்நாடு.

பத்மநாதன்.சி. (2002). இலங்கைத் தமிழர் தேசவழமைகளும் சமூக வழமைகளும். குமரன் புத்தக இல்லம். கொழும்பு - சென்னை.

பத்பநாதன்.சி (ப.ஆ). நாடு காட்டுப் பரவணிக் கல்வெட்டு.

வடிவேல்.இ (ப.ஆ). (1993). கோணேசர் கல்வெட்டு. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம். கொழும்பு.

Canagaratnam.S.O. (1921). AMonograph of the Batticaloa Distric of the Eastern Province of Celyon, Colombo.

Pieter Brohier (tr). (1960). A The and Exact Description of the Great Island of Ceylon by Phillipus Baldaeus. with an Introduction by S.D. Saparamadu Published in co-operation with the Ceylon Branch of the Royal Asiatic Society. Ceylon.

கோமரங்கடவல கல்வெட்டு

69

கண்டிக் கதிர்காமம் : பெயர் வழக்கும் வரலாறும்

எம்.எம்.ஜெயசீலன்
முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்,
இலங்கை. jseelanuop@gmail.com

அறிமுகம்

ஊர்ப்பெயர்களும் ஊர்ப்பெயர்களில் இடம்பெறும் முன் – பின் ஒட்டுகளும் சமூக வரலாற்றுச் செய்திகளைக் கொண்டுள்ளன. பௌதிகச் சூழல், உற்பத்தித் தன்மை, குடியேற்றம், குடியேற்றங்களில் ஏற்படும் மாற்றங்கள், ஊர்களின் தோற்றத் தொன்மங்கள் போன்றவற்றுடன் நேரடி உறவு கொண்டுள்ள ஊர்ப்பெயர்கள் சமூக மாற்றங்கள், அரசியல் ஆக்கிரமிப்புகள் முதலானவற்றால் திரிபுகளுக்கும் மாற்றங்களுக்கும் உள்ளானாலும் அப்பெயர்களின் எச்சங்களையும் ஏனைய ஆவணங்களில் கிடைக்கின்ற முன்னைய காலப் பெயர்களையும் அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட ஊரினுடைய சமூக வரலாற்றுச் செய்திகளை மீட்டெடுக்கலாம். அவ்வகையில், இலங்கையின் புராதன முருகன் ஆலயங்களுள் ஒன்றான கதிர்காமத்தைக் குறிக்க வழங்கப்படுகின்ற 'கண்டிக் கதிர்காமம்' என்ற வழக்கும் வரலாற்றுப் பொருண்மைகளைக் கொண்டிருக்க வேண்டும். ஒரு தொடராக இணைந்துள்ள கண்டியும் கதிர்காமமும் நேரடித் தொடர்பற்ற வெவ்வேறு பிரதேசங்களாகும். இலங்கையின் ஊவா மாகாணத்தின் தென்கோடியில் கதிர்காமமும் மத்திய மாகாணத்தின் நடுவில் கண்டியும் அமைந்துள்ளன. இரு பிராந்தியங்களுக்கும் இடையே 200 கிலோ மீற்றருக்கு மேற்பட்ட தூர இடைவெளி உள்ளது. அவ்வாறு நீண்ட தூரத்தில், வெவ்வேறு பிரதேசங்களில் கண்டியும் கதிர்காமமும் அமைந்திருக்க, கண்டிக் கதிர்காமம் என்ற விளிப்பு எவ்வாறு ஏற்பட்டது, அவ்வழக்கின் தோற்றத்துக்கான சமூக வரலாற்றுப் பின்புலம் யாது என்பனவற்றைக் கண்டறியும் முயற்சி இக்கட்டுரையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உள்ளடக்கப் பகுப்பாய்வின்கீழ் விவரணை அணுகுமுறையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த ஆய்வு இலக்கியம், வாய்மொழி வழக்காறு, வரலாற்றுச் செய்திகள் முதலான இரண்டாம்நிலைத் தரவுகளை முதன்மை ஆதாரங்களாக வரித்துக்கொண்டுள்ளது. கண்டிக் கதிர்காமம் என்ற வழக்குத் தோன்றிய சமூக வரலாற்றுப் பின்புலத்தைக் கண்டறிவதன் மூலம் கதிர்காமத்தின் பண்பாட்டு வரலாறு, கதிர்காமத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த – கதிர்காம யாத்திரையினை மேற்கொண்ட குழுவினர், கதிர்காமத்துக்கும் கண்டிக்கும் இடையிலான தொடர்பு முதலானவை குறித்த செய்திகளை அறிந்துகொள்ளலாம். அதன்வழி கதிர்காமத்தினுடைய பண்பாட்டு வரலாற்றின் முக்கியத்துவத்தை விரிவுபடுத்த இந்த ஆய்வு பங்களிப்பு நல்குகிறது.

கதிர்காமமும் பல்பண்பாட்டு ஒருங்கிணைவும்

சைவர்களதும் பௌத்தர்களதும் பிரதான யாத்திரைத் தலமாக விளங்கிவரும் கதிர்காமத்துக்கு நாடு முழுவதுமிருந்து முருக பக்தர்கள் யாத்திரை மேற்கொள்வது வழமையாகும். கதிர்காம யாத்திரையும் யாத்திரைக் காலத்து நடைமுறைகளும் இலங்கையின் கலாசார வாழ்வின் முக்கியமான கூறுகளாக விளங்குவதோடு ஒவ்வொரு இனத்தினதும் பிராந்தியத்தினதும் வழமைகளுக்கு ஏற்ப, தனித்துவம்மிக்க உபபண்பாட்டுக் கூறுகளும் நிலைபேறாக்கம் பெற்றுள்ளன. சைவத் தமிழர்களும் சிங்களப் பௌத்தர்களும் கதிர்காம யாத்திரையைத் தம் வாழ்வின் பெரும்பேறாகக் கருதுகின்றனர். கதிர்காமத்தோடும் கதிர்காம யாத்திரையோடும் தொடர்புபட்ட வகையில் ஆலய உருவாக்கங்கள், ஆலய நடைமுறைகள் என்பன அவ்விரு குழுவினரிடையேயும் பரவலாக ஏற்பட்டுள்ளன. சின்னக்கதிர்காமம், உபயக்கதிர்காமம் முதலிய பெயர்களில் முருகன் ஆலயங்கள் பல தோற்றம்பெற்றுள்ளதோடு கதிர்காம யாத்திரை செல்லும் பாதையையொட்டியுள்ள முருகன் ஆலயங்கள் அந்த யாத்திரையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கின்றன. அவற்றுள் வெருகல், திருக்கோவில், உகந்தை முதலிய ஆலயங்கள் தனித்துச் சுட்டிக்காட்டத்தக்கன.

சிங்களப் பௌத்த மரபில் முருகன், கதிர்காமத்தில் வீற்றிருக்கும் கதிர்காமக் கடவுள் (கத்தரகம தெவியோ) என்ற பெயரில் அழைக்கப்படுகின்றார். நாட்டினுடைய எப்பாகத்திலும் சிங்களவர்கள் முருகனை, கதிர்காமக் கடவுள் (கத்தரகம தெவியோ) என்றே அழைக்கின்றனர். சிங்களப் பௌத்த மரபில் வழிபடப்படுகின்ற சில கடவுளர்களுக்கும் கதிர்காமக் கந்தனுக்கும் இடையேயான தொடர்பினை வெளிப்படுத்தும் கதைமரபுகள் பல உள்ளன. உதாரணமாக, சிங்களப் பௌத்தர்களிடையே கண்டி இராசதானிக் காலத்தில் மேற்கிளம்பிய கடவுளான, அலுத்நுவர கடவுள் அல்லது தடிமுண்ட சுவாமி பற்றிய ஐதிகங்கள் கதிர்காமக் கந்தனுடன் இணைந்ததாக விளங்குவதைக் கூறலாம் (தர்மதாஸ மற்றும் துன்தெனிய, 1994: 129).

கதிர்காமத்துடனான முஸ்லிம்களின் தொடர்பும் தனித்துவம் மிக்கதாகும். அங்கு அமைந்துள்ள இஸ்லாமியச் சமாதியை வழிபட முஸ்லிம்கள் செல்வது வழமை. இலங்கையில் மேலோங்கிய இஸ்லாமியத் தூய்மைவாத நடவடிக்கைகளால், அடக்க ஸ்தலங்களை வழிபடுகின்ற தர்க்கா வழிபாடு அருகிவந்தாலும் இன்றும் சிலர் கதிர்காமத்துக்குச் சென்றுவருவதைக் காணமுடிகிறது.

கதிர்காமத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையிலான தொடர்பு

கதிர்காமத்துக்கான யாத்திரை வழிபாட்டாலும் கதிர்காமக் கந்தனின் அருட்திறம்மீதான நம்பிக்கையினாலும் கதிர்காமத்தின் புகழும் சிறப்பும் கடல்கடந்து பரவலாக்கம் பெற்றுள்ளன. அதனால், இந்தியாவிலிருந்து கதிர்காமத்துக்கு யாத்திரை மேற்கொள்வது நீண்டகாலமாக இடம்பெற்றுவருகின்றது. தமிழகத்தில் கதிர்காமத்தின் புகழ், இடைக்காலத்திலிருந்தே பரந்தளவில் வியாபகம் பெற்றுள்ளது எனலாம். யாப்பருங்கலக் காரிகை விருத்தியுரை, புகழேந்திப் புலவர் பெயரிலான நாவலர் சரிதை என்பனவற்றில் இடம்பெறும் கதிர்காமம் பற்றிய குறிப்புகளும் அருணகிரிநாதர் அருளிய திருப்புகழில் இடம்பெறும் கதிர்காமத்தின்மீதான திருப்புகழ்களும் இதற்குச் சிறந்த சான்றாகின்றன (இரகுபரன்: 2018). 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ்நாட்டிலிருந்து கதிர்காமத்துக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை மிகுதியாக அதிகரித்துள்ளது. அவ்வாறு

வரும் பக்தர்களை மனங்கொண்டு 'கதிர்காமம்' என்றொரு வழிகாட்டி நூலை கோ.நடேசய்யர் எழுதியுள்ளார்.

கந்தசஷ்டி விரதத்தின் பிரதான பாராயண நூலான கந்த சஷ்டிக் கவசத்தில் முருகன் உறையும் பதிகள் குறித்துக் குறிப்பிடும்போது பழனி, ஆவினன்குடி, செந்தின்மாமலை, சமராபுரி ஆகிய தலங்களுடன் கதிர்காமத்தையும் உள்ளடக்கியிருப்பது, தமிழ்நாட்டுச் சூழலில் கதிர்காமம் பெற்ற செல்வாக்கினை வெளிப்படுத்தி நிற்கிறது. இந்தச் செல்வாக்குக்கான காரணத்தை இரகுபரன், 'காலத்துக்குக் காலம் தென்னிந்தியாவிலிருந்து வந்து இலங்கையில் வாணிபம் செய்த வணிகக் கணத்தவர்களாலேயே கதிர்காமக் கந்தன்மேலான நம்பிக்கை கடல்கடந்த நிலையிற் பரவியது எனலாம். கண்டி இராச்சியத்தைத் தென்னிந்திய வம்சாவளி அரசர்கள் ஆண்ட காலத்தில் கதிர்காமக் கந்தனின் கடல்கடந்த புகழ் மேலும் அதிகரித்தது போலும். இன்றுவரை தமிழகத்துச் சாதாரண மக்களின் வாயில், 'கண்டிக் கதிர்காமக் கந்தா' என்ற பரவசமான விளிப்பினைக் கேட்கக்கூடியதாக உள்ளமை, அந்த உண்மையையே உணர்த்துகிறது எனலாம்' (மேலது: ஈகூஷிமி) எனத் தொகுத்துரைத்துள்ளார்.

கண்டிக் கதிர்காமம் – வழக்கும் வரலாறும்

கண்டிக் கதிர்காமம் என்ற விளிப்பு, இலங்கைத் தமிழர்களிடம் வழக்கில் இருப்பதாகத் தெரியவில்லை. சிறுவாரியாக மலையகத் தமிழர்களிடம் அவ்வழக்கு பயன்பாட்டில் உண்டு. அதுவும் பொது உரையாடல்களில் இல்லை. மலையகத்தில் பயன்பாட்டிலுள்ள முருக பக்திப் பாடல்களிலேயே 'கண்டிக் கதிர்காம வேலோனே' என்ற பரவச வெளிப்பாட்டைக் காணமுடிகின்றது. அதேவேளை, தமிழ்நாட்டில் கண்டிக் கதிர்காமம் என்ற வழக்கு இன்றும் நிலவி வருகிறது. அத்துடன் கதிர்காமம் குறித்துத் தமிழ்நாட்டில் தோன்றியுள்ள பக்திப் பாடல்களிலும் கண்டிக் கதிர்காமம் என்ற வழக்குப் பரவலாகக் கையாளப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கிடைக்கின்ற கதிர்காமத்துடன் தொடர்புடைய பழைய ஆவணங்களில் கண்டி குறித்த எந்தப் பதிவும் இல்லை. கண்டியூர், கண்டியத்தேவன் முதலிய சொற்கள் கல்வெட்டுகளிலும் ஏனைய நூல்களிலும் இடம்பெற்றுள்ளபோதும் அவை இலங்கையின் கண்டியையும் கதிர்காமத்தையும் இணைப்பதற்கான

எவ்வித இழைகளையும் கொண்டிருக்கவில்லை. இலங்கையில் கிடைக்கின்ற கதிர்காமம் குறித்தத் தொடக்க கால ஆவணங்கள் எவற்றிலும் கதிர்காமத்தையும் கண்டியையும் இணைத்துக்கூறும் பதிவுகள் இல்லை. பின்நாளில் அவ்வழக்குத் தோன்றியபோது, அது இந்தியாவிலிருந்து இலங்கை வந்த மலையகத் தமிழர்களிடையேயே சிறுவாரியாக வழக்கில் உள்ளது. அதனால் கண்டிக் கதிர்காமம் என்ற தொடர் தமிழகம், கண்டி, கதிர்காமம் ஆகியவற்றுக்கு இடையிலான முக்கோணத் தொடர்பினால் விளைந்திருக்க வேண்டும்.

கண்டியையும் கதிர்காமத்தையும் இணைத்த குறிப்பு, திருப்புகழில் இடம்பெற்றுள்ளது. திருப்புகழின் 13ஆம் பாடலில் 'செந்திலங் கண்டிக் கதிர்வேலா' எனத் திருச்செந்தூரிலும் அழகிய கண்டியிலும் ஒளிவீசும் வேலோடு விளங்குபவனே என்று முருகனைப் போற்றுகின்றார், அருணகிரிநாதர். இங்கு கதிர்வேலா என்பதற்குக் கதிர்காமா என்ற பாடவேறுபாடு உள்ளதாகக் கூறுவர். கண்டியையும் கதிர்காமத்தையும் இணைக்கும் காலத்தால் பழைய பதிவாக இதனைக் கொள்ளலாம்.

அருணகிரிநாதருக்குப்பின் 20ஆம் நூற்றாண்டின் தொடக்க காலப்பகுதியில் தோன்றிய இலக்கியப் பதிவுகளிலேயே கண்டிக் கதிர்காமம் என்ற பதிவு பரவலாக இடம்பெற்றுள்ளது. எடுத்துக்காட்டாக, 1914ஆம் ஆண்டு வெளிவந்துள்ள 'கதிர்காம மாலையில்', 'கண்டி வளநாடாளும் கதிர்காம வேலோனே' (கோபால் நாயக்கர், 1914: 4) என்ற குறிப்பு உள்ளது. 'கண்டிக் கதிர்காம வேலவன் மாலை' என்ற பெயரில் சுவடியொன்று கிடைக்கப் பெற்றுள்ளது. அதில், கண்டிவள நாடான் கதிர்காம வேலோனே, வள்ளி பங்காளா கண்ணஞ்சேர் கண்டிக் கதிர்காம வேலோனே, கட்டழகா கண்டிக் கதிர்காம வேலோனே (http://kovaimani-tamil manuscripttology. blogspot.com /2018/05/blog-post_21.html) எனப் பல இடங்களில் கண்டியையும் கதிர் காமத்தையும் இணைத்துக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு கதிர்காம மாலை, கதிர்காமக் கும்மி என வெளிவந்துள்ள பல நூல்களில் கண்டியையும் கதிர்காமத்தை யும் இணைத்த பதிவுகள் இடம்பெற்றுள்ளன. இந்த இணைந்த வழக்கு உருவாவதற்கு ஏதேனும் காரணங்கள் இருந்திருக்க வேண்டும். வெறுமனே எதுகை, மோனை சந்த ஒத்திசைவுக்காக

அவ்வாறான இணைப்பு தோன்றியிருக்க முடியாது என்பதனை ஊர்ப்பெயர் குறித்த ஆய்வுகள் காட்டுகின்றன.

கண்டிக் கதிர்காமம் என்ற வழக்கின் உருவாக்கத்துக்குக் கண்டி இராசதானியின் எல்லைக்குட்பட்டதாகக் கதிர்காமம் விளங்கியமை முதன்மைக் காரணியாக விளங்கியுள்ளது எனலாம். சீதாவாக்கை இராசதானியில் 1581ஆம் ஆண்டு ஆட்சிபீடமேறிய முதலாம் இராஜசிங்கன் கண்டியைக் கைப்பற்றி தன் ஆட்சியின்கீழ் கொண்டுவந்ததோடு கதிர்காமத்துக்கும் பல திருப்பணிகளைச் செய்துள்ளான். அவனது காலத்திலேயே முத்துலிங்கசுவாமி என்று சொல்லப்படுகின்ற கல்யாணகிரி, சங்கராச்சாரியார் மடத்திலிருந்து கதிர்காமம் வந்து, இராஜசிங்கனின் துணையுடன் பல திருப்பணிகளைக் கதிர்காமத்தில் மேற்கொண்டு, முறையான நிர்வாக முறைமையொன்றினைக் கட்டியெழுப்பியதாகக் கருதப்படுகின்றது. அருணகிரிநாதர் அக்காலத்திலேயே கதிர்காமத்துக்கு வந்து, கதிர்காமக் கந்தனை நேரே தரிசித்து, கதிர்காமத் திருப்புகழ்களைப் பாடியதாக நம்பப்படுகின்றது (குமாரசுவாமி: 1935). இப்பின்புலமே அருணகிரிநாதர் கண்டியையும் கதிர்காமத்தையும் இணைப்பதற்கான பின்புலமாக விளங்கியுள்ளது எனலாம். அவ்வாறு உருவான அடையாளம், கண்டி இராசதானியின் ஆட்சிப்பொறுப்பு தென்னிந்திய வம்சாவளி நாயக்கர்களுக்கு உட்பட்டமையால் மேலும் அழுத்தம் பெற்றுள்ளது. கண்டியை ஆண்ட நாயக்க மன்னர்களுக்கும் கதிர்காமத்துக்கும் இடையே நெருக்கமான உறவிருந்திருக்கிறது. கண்டி ராசன் ஒப்பாரி, கண்டி ராஜன் கதை, கண்டிராஜா நாடகம் முதலிய நூல்கள் அதற்குச் சான்றாக உள்ளன. கண்டியின் இறுதி மன்னனான ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனை ஆங்கிலேயர் கைதுசெய்யும் வரை கதிர்காமத்தின் நிர்வாகப் பொறுப்பு தமிழர்களிடமே இருந்துள்ளது. அவனின் கைதுடன் சிங்களவர்கள் அந்த நிர்வாகப் பொறுப்பினைப் பலவந்தமாகப் பிடுங்கியுள்ளனர். பின்னர், பிரித்தானியக் காலனிய அரசு அதனை மீண்டும் தமிழர்களுக்கே பெற்றுக்கொடுத்துள்ளது (நடேசய்யர்: 1946). என்றாலும் அவ்வழமை பின்னர் தொடரவில்லை. மேற்கூறியவாறான கண்டி அரசுக்கும் கதிர்காமத்துக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையிலான தொடர்புகளால் கண்டிக் கதிர்காமம் என்ற வழக்கு தோன்றியிருக்க வேண்டும்.

கண்டி இராசதானிக் காலத்தில் கண்டிக் கதிர்காமம் என்ற வழக்குத் தோன்றியிருந்தாலும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே அவ்வழக்கு பரவலான பயன்பாட்டுக்கு வந்துள்ளது. இதற்குப் பெருந்தோட்டத்துறை உருவாக்கமும் அதனையொட்டிய நிகழ்வுகளும் அடிப்படையாக அமைந்தன எனலாம். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பெருந்தோட்டத்துறை உருவாக்கம்பெற்றபோது இலங்கையில் கண்டியை மையப்படுத்தியே உருவாக்கப்பட்டது. அப்பெருந்தோட்டத் துறையில் வேலை செய்வதற்காகத் தென்னிந்தியாவிலிருந்து அதிகமான உழைப்பாளர்கள் கூலிகளாகக் கொண்டுவரப் பட்டுள்ளனர். தென்னிந்தியாவில் கதிர்காமம் பெற்றிருந்த செல்வாக்கின் காரணமாக, பெருந்தோட்டத் தொழிலுக்காக வந்த தொழிலாளர்கள் கதிர்காமத்துக்கு யாத்திரை செல்வதைத் தம் வாழ்வில் பெரும் பேறாகக் கொண்டிருந்துள்ளனர். அதன் தொடர்ச்சியை இன்றுவரை காணக்கூடியதாக உள்ளது. அத்துடன், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பெரிய வணிக நகராகக் கொழும்பு உருப்பெற்றபோது அங்கு தென்னிந்திய வணிகர்கள் வணிக நடவடிக்கைகளில் பரவலாக ஈடுபட்டுள்ளனர். அவர்களும் கதிர்காம யாத்திரைக்கு முதன்மையளித்துள்ளனர். அதனால், தென்னிந்தியர்களுக்கும் கதிர்காமத்துக்குமான நெருக்கமான உறவு அதிக வலுப்பெற்றுள்ளது. அக்காலத்தில் மலேரியா, காலறா போன்ற நோய்கள் காரணமாகத் தமிழகத்திலும் இலங்கையிலும் வியாதித் தடுப்பு விதிகள் பின்பற்றப்பட்டு, மக்களைத் தடுத்து வைத்து, இலங்கைக்குள் செல்ல அனுமதி வழங்கிய காலத்திலும் கதிர்காம யாத்திரையைத் தென்னிந்தியத் தமிழர்கள் மேற்கொண்டுள்ளனர் (நடேசய்யர்: 1946).

பெருந்தோட்டத்துறை உருவாக்கத்துடன் தென்னிந்தியத் தமிழரிடத்திலும் தென்னிந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்து இலங்கை வந்தவர்களிடத்திலும் 'கண்டி, கண்டிச்சீமை' ஆகிய இடப்பெயர்களினால் பெருந்தோட்டங்களையும் பெருந்தோட்ட வாழ்வியலையும் சில நேரங்களில் இலங்கையையும் சுட்டும் வழக்கம் நிலவியுள்ளது. தொடக்க காலத்தில் பெருந்தோட்டங்கள் கண்டியையொட்டிய பகுதிகளில் உருவாக்கப்பட்டமையும் பெருந்தோட்டங்கள் அமைக்கப்பட்ட பிராந்தியங்களின்

பெருநகரமாகக் கண்டி மாத்திரமே விளங்கியமையும் இதற்குக் காரணமாகலாம்.

மலையக நாட்டார் பாடல்களில் கண்டி, கண்டிச்சீமை ஆகிய இடப்பெயர்களே பெருந்தோட்டங்களையும் பெருந்தோட்ட வாழ்வியலையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. சிலோன், இலங்கை, ஈழம் ஆகிய சொற்களைக் காட்டிலும் கண்டி, கண்டிச் சீமை ஆகிய சொற்களையே பெருந்தோட்டங்களுடன் இணைந்த இலங்கையைக் குறிக்கச் சாதாரண மக்கள் பயன்படுத்தியுள்ளனர். அதனைப்போலவே இலங்கையிலிருந்து தமிழகம் திரும்பியோரைக் கண்டிக்காரர் எனச் சுட்டும் வழக்கு இன்றும் நிலவுகின்றது. அதனால், கண்டி பெருந்தோட்டங்களைக் குறிக்கவும் பெருந்தோட்ட வாழ்வியலைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டது போலவே இலங்கையைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்பின்புலம் 'கண்டிக் கதிர்காமம்' என்ற விளிப்புக்கு அதிக அழுத்தம் கொடுத்திருக்கலாம். கண்டி, கதிர்காமம் எனும் ஒத்த ஓசைகள் அந்த இணைவுக்கு மேலும் வலுவூட்டியுள்ளன. அதனாலேயே 20ஆம் நூற்றாண்டில் கண்டிக் கதிர்காமம் என்ற வழக்கு மிகுந்தளவில் பரவலாக்கம் பெற்றுள்ளது.

முடிவுரை

கண்டி இராசதானிக் காலத்தில் கண்டிக்கும் கதிர்காமத்துக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையே ஏற்பட்ட உறவும் நெருக்கமும் கண்டியையும் கதிர்காமத்தையும் பிணைத்துள்ளன. அப்பிணைப்பினாலேயே 'கண்டிக் கதிர்காமம்' என்ற விளிப்பு தோற்றம்பெற்றுள்ளது. அவ்வாறு தோன்றிய வழக்கு, பெருந்தோட்டத்துறை உருவாக்கத்துடன்தான் மிகுந்த வளர்ச்சி பெற்றுள்ளது. கண்டி இராசதானி வீழ்ச்சிக்குப் பின்னர் கண்டியை மையப்படுத்தி பெருந்தோட்டத் தொழிலுக்காகக் குடியேறிய தென்னிந்தியத் தமிழர்களிடத்து கதிர்காமத்துடனான உறவும் நெருக்கமும் தொடர்ந்துள்ளன. பெருந்தோட்டங்களின் கேந்திர மையமாக அமைந்த கண்டியே பெருந்தோட்டங்கள், பெருந்தோட்ட வாழ்வு என்பவற்றினதும் அதன் தொடர்ச்சியாக இலங்கையினதும் அடையாளமாக விளங்கியுள்ளது. அவற்றின் விளைவுகளால் கண்டி இராசதானியுடன் இணைந்த வகையில் தோன்றிய கண்டிக் கதிர்காமம் என்ற வழக்கு, மற்றுமொரு தளத்தில் நீட்சிபெற்றுள்ளது.

அந்நீட்சியே கண்டிக் கதிர்காமம் என்ற வழக்குக்கு நீடித்த இருப்பினை வழங்கியுள்ளது.

பெருந்தோட்டங்களையும் பெருந்தோட்ட உருவாக்கத்தை ஒட்டிய இலங்கையையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட கண்டி, கண்டிச் சீமை என்ற அடையாளம் இன்று அற்றுப் போனாலும், கண்டியும் கதிர்காமமும் வெவ்வேறு பிரதேசங்கள். அவை இரண்டுக்கும் நேரடித் தொடர்பில்லை என்ற புரிதல் ஏற்பட்டிருந்தாலும், கதிர்காமத்தைச் சிங்களப் பௌத்தர்கள் தமக்கு உரித்தாக்கிக்கொண்டாலும் 'கண்டிக் கதிர்காம்'; என்ற வழக்கு உயிர்ப்புடனேயே இருந்துவருகின்றது. அந்த இணைவு கதிர்காமத்துக்கும் கண்டிக்கும், கதிர்காமத்துக்கும் தென்னிந்தியத் தமிழர்களுக்கும், தென்னிந்தியாவுக்கும் கண்டிக்கும் இடையே நிலவிய நெருங்கிய தொடர்புகளின் அழிக்க முடியாத சான்றாக விளங்குகிறது. ஆகவே, கதிர்காமத்தின் சமய, பண்பாட்டு முக்கியத்துவத்தின் மேலெழுகையில் கண்டி இராசதானியினதும் தமிழ்நாட்டினதும் செல்வாக்கும் முதன்மையானதாக விளங்கியுள்ளது.

உசாத்துணை நூற்பட்டியல்

இரகுபரன், க. (ப.ஆ.) (2018). அருணகிரிநாதர் அருளிய ஈழத்து திருத்தல திருப்புகழ்கள். கொழும்பு: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

குமாரசுவாமி, வ., (ப.ஆ). (1935). கதிரைமலைப் பள்ளு. சென்னை: புரோகிரஸிவ் அச்சுக்கூடம்.

கோபால் நாயக்கர், டி. (1914). கதிர்காம மாலை. மதராஸ்: என்.சி. கோள்டன் அச்சியந்திரசாலை.

கோவை மணி. (ப.ஆ.) (2018) கண்டிக் கதிர்காம வேலவன் மாலை. Retrieved April 10, 2024, from <http://kovaimani-tamilmanuscripttology.blogspot.com/2018/05/blog-post_21.html>

தர்மதாஸ, கே.என்.ஓ. & துன்தெனிய, எச்.எம்.எஸ். (1994). சிங்கள தேவ புராணய (சிங்களம்). இலங்கை: அரச வெளியீடு.

நடேசய்யர், கோ. (1946). கதிர்காமம். மெட்ராஸ்: பி.என்.கே. அச்சகம்.

70

தமிழரின் நோய் நீக்கும் யோகக்கலை

யோகாச்சாரியா நீலமேகம்
ரீ யூனியன். nilabala38@gmail.com

ஆய்வு அறிமுகம்

இன்றைய சூழ்நிலையில் உலகம் வெகுவாக உயர்ந்து வருகிறது. அத்துடன் ஆதி காலத்தில் இருந்த நோய்கள், இன்றும் நம்மிடைடேய இருக்கிறன, நாளை எதிர் பார்க்கின்ற நோய்கள் இன்றைய சமுதாயம் சிறுக சிறுக ஆட்கொள்கிறது. இன்று இயற்கைக்கு ஒப்பாத காரியங்களில் சமுதாயம் ஈடுபடுவதின் பொருட்டு பல தரப்பட்ட இன்னல்களில் நாம் ஆளாக்கப்பட்டு வருவது உண்மை. நோய்களுக்கு மருந்து கண்டு பிடித்த வண்ணமும், மேலும் மேலும் அறிய முடியாத புதிய நோய்கள் வந்த வண்ணமுமாக இருந்து கொண்டிருக்கிறன. ஆதியில் முன்னோர்கள் வாழ்ந்த வாழ்க்கை நெறிமுறைகளால் நம்மை சுற்றி இருந்த நோய்கள் ஓடி மைறந்தன இப்போது தேடி வருகின்றன. இச்சிரமங்கள் யாவைக்கும் காரணம் இன்றைய சமுதாய மாற்றே. அன்று நம்மவர்கள் சொன்ன வார்த்தை 'கற்க கற்ற பின் நிற்க அதற்குத்தக' என்பதாகும். அவர்கள் சொல்லிச்சென்ற வாழ்க்கை நெறிமுறைகளின் படி இன்றைய சமுதாயம் நிற்கத்தவறி விட்டது. அதன் விளைவே இன்று நாம் கணுகின்ற வாழ்க்கைச் சிரமங்கள். தலை சிறந்த தமிழர்களின் பண்பாட்டை நாம் நினைக்கும் போது சில சமயங்களில் நம்மையே அது ஆச்சர்யத்தில் ஆழ்த்துகிறது. தமிழன் அன்று கல்வி, இலக்கணம், இலக்கியம், கலை, யோகம், சமயம், சாஸ்திரம், சம்பிரதாயம், வைத்தியம், இன்னும் என்னெவல்லாம் உண்டோ இவைகள் யாவிலும் தலை சிறந்து விளங்கி இருக்கின்றான் என்பது இன்று நாம் சொல்லாமேல விளங்கும்.

யோகக் கலையின் மகத்துவத்தை முதன் முதலில் உலகுக்கு உணர்த்திய தமிழன் அது நோய் நீக்கும் அரிய மருந்து என்று நமக்கு உணர்த்திச் சென்றுள்ளான். இன்று உலகலாவி யோகம் பயின்று கொண்டிருக்கும் உலக மக்களே ஓர் பெரிய உதாரணம்.

கல் தோன்றி மண் தோன்றா காலத்திற்கு முன் தோன்றிய மூத்தக்குடி தமிழ்க் குடி அன்றே இந்த நோய் நீக்கும் யோகக் கலையினை கற்பித்துள்ளான் தமிழன். அது புரியாமல் இக்கலையினை தமிழன் மற்றவர்க்கு தாரை வார்த்து தந்திட்டு, இன்று மற்றவரிடம் கையேந்தி நிற்கும் நிலையில் உள்ளான்.

ஆய்வு நோக்கம்

தமிழ் மூதாதையர்கள் சொல்லின்படி பொன், பெண்,பொருள்,புகழ் வேண்டேன் வாழும் நாள் வரை, நோயற்ற வாழ்வே வேண்டும் என்று அவர்கள் கூறியைத நினைவில் கொண்டு, யோகக் கலையில் தமிழரின் பங்கு அன்று எப்படி இருந்தது இன்று எப்படி இருக்கேவண்டும் என்பைக் கருத்தில் வைத்து, இனி வரும் காலங்களில் தமிழன், கண்டறிந்த நோய் நீக்கும் யோகக்கைலயினை நம் மொழி வழியே, உலகலாவி வாழும் தமிழ் இனத்திடம் கொண்டு சேர்க்க வேண்டும், என்பதை மனதில் கொண்டு தமிழராய் நாம் ஒவ்வொருவரும் இப் பயிற்சியில் நம்திறனைச் செலுத்தேவண்டும். தமிழர்கள் யோகம் கற்றதின் மேன்மையால் அவர்கள் பெற்ற இன்பம் உலகமக்கள் அடையவேண்டும். எனவே யோக பயிற்சியினால் யாவரும் நோயற்ற வாழ்வு வாழேவண்டும் என்பதை வலியுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஆய்வு முறையியல்

அறிவியலும் பாரம்பரியமும் கலந்த கலையே இந்த யோகக்கலை. வயது வரம்பற்று பயிலக்ககூடிய இக்கலையானது வாழ்க்கைக்கு எது தேவையோ அதை எவர்க்கும் பாகுபாடின்றி அவரவர்தம் தேவையை பூர்த்தி செய்கிறது. நெஞ்சை நிலை நிறுத்தி நினைவை தன் வசமாக்கி உளமே அஞ்சேல் என்று யோகம் என்று அது நமக்கு உணர்த்துகிறது.

உடன்பிறந்தே கொல்லும் வியாதி என்பது நம்மிடைடயே நிலவும் ஓர் ஆழ்ந்த நம்மில் மறுக்க முடியாத உயர்ந்த கருத்து. பிறப்பை அறிந்த நாம் இறப்பை அறிய முடியாது இந்த இடைப்பட்ட வாழ்க்கையில் இன்பம் துன்பம் அனைத்தையும் உணர்ந்து பின் உருவின்றி மறந்து விடுவதுண்மை. நம் உயிர்க்கு பாதிப்பு ஏற்பட மூலகாரணம் நம் உடல்தான். அந்த உடலின்

தேவையைப் பூர்த்தி செய்வது நாம் சுவாசிக்கும் காற்று, பருகும் நீர், உண்ணும் உணவு இவைகள்தான் நம் உயிர் காக்கும் கருவிகள். இன்று நமக்கு இருக்கும் பேரும் புகழும், உயர்வும் தாழ்வும், நன்மையும் தீமையும், எல்லாமே நம் வயது வரம்பின்றி கிடைப்பது. பிரிந்த உயிரைப் பார்த்து பிரியப்போகும் உயிர் அய்யோ விரைவில் என் நிலைமையும் உன்நிலைமைதான் என்று நினைக்குமாம். இது உண்மை, எனவே யோகம் பயின்ற, பயிலுகின்ற பயிலப்போகின்றவர்கள் எவராயினும் இந்த கருத்தினை எண்ணிப்பார்த்தல் மிகஅவசியம். இருப்பிற்கும், இறப்பிற்கும் இடைப்பட்ட நம்வாழ்க்கையை உடலுடன் மேவிய நம் உயிரை, அன்று மழலைப் பருவத்தில் பாதுகாத்த தாயும், வளரும் பருவத்தில் தந்தையும், வளர்ந்து விட்ட பருவத்தில் நாம் நமக்கு பொறுப்பேற்று கொள்ளல் அவசியம். அப்படி நோயற்ற வாழ்க்கையை நன்நிலைப்படுத்தி நல்ல நெறிக்குக் கொண்டு செல்வது யோகா என்றால் அது மிகையாகாது.

உள்ளடக்கப் பகுப்பாய்வும் பரிந்துரையும்

யோகாசன பயிற்சியினால் நம் உடல் மூன்று முக்கிய பிரிவுகளாக அறியப்படுகிறது. அதாவது காலிலிருந்து இடுப்புவைர(1) இடுப்பிலிருந்து கழுத்துவைர(2) கழுத்திலிருந்து தலை வரை (3) என பிரிக்கப்பட்டுள்ளது. இந்த மூன்றும் நாம் சுவாசிக்கும் காற்று, உண்ணும் உணவு, அருந்தும் நீர், இவைகளாலேதான் நம்முடைய உடலுடன் உயிரும் பாதுகாக்கப்படுகிறது. காற்று, நீர், உணவு இந்த மூன்றையும் சரியாக முறையோடு உடலுக்கு செலுத்தினால் நம் உடலும் உயிரும் நன்றே பாதுகாக்கப்படும். யோகம் பயிலும் ஒரு சாதகன் நீண்ட ஆயுளுடன் நல்ல ஆரோக்கியத்துடன் வாழ்நாளைக் கழிப்பான் என்பது உண்மை.

யோகக்கைலயில் நின்ற நிலை பயிற்சி யோகம் , அமர்ந்த நிலைப் பயிற்சி யோகம், கிடந்த நிலைப் பயிற்சி யோகம் என்று பிரிக்கப்பட்டுள்ளது. இதிலுள்ள ஒவ்வொரு பிரிவிலும் ஏகப்பட்ட ஆசன, சுவாச, தியான, தராண, பிரத்தியாகார, சாந்த, சமாதி நிலை யோகம் என்ற பயிற்சிகள் உண்டு. மேலும் மனதை அடக்கும் ஆழ்நிலை தியான பயிற்சியும் உண்டு. பொதுவில் நாம் எல்லோரும் அறிந்து கொள்ள வோண்டியது அவசியம். இங்கே கீழே

குறிப்பிட்டிருக்கும் ஆதவதரிசன யோகப்பயிற்சி நின்ற நி?லயி?ல ?சய்யேவண்டும் இதைன ஆதவதரிசனம் (அ) சூரியநமஸ்காரம் என்று அழைக்கப்படுகிறது. இதில் 12 நிலைகள் உண்டு. இதுபோன்றே மேலும் ஆதவதரிசனத்தில் ஒன்பது அமைப்புக்கள் உண்டு, அதில் ஒவ்வொன்றிலும் மேலே குறிப்பிட்டிருப்பது போல் 12 நிலைகள் உண்டு. இப்பயிற்சியினை ஆதவன் அதாவது சூரிய உதயத்திலும் அஸ்தமனத்திலும் செய்தால் நன்மை பயக்கும். இப்பயிற்சியினை நாம் வளைந்து நெளிந்து செய்வதால் நம் உடலின் உறுப்புக்கள் புதுபிப்பதோடு வயதான காலத்திலும் உடல் நல்ல உரம் ஏற்பட வாய்ப்புள்ளது. சூரிய ஒளியானது நம் உடலில் பூரணாமாக படுவதினால் விட்டமின் சக்திகள் நம் உடலில் பாய்ந்து நல்ல ஆரோக்கியத்தையும், நிறைந்த மன அமைதியையும் கொடுக்கிறது.

கண்டுபிடிப்பும் முடிவுரையும்

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த வாழ்க்கை பிறப்பு, இருப்பு, இறப்பு என்ற இந்த மூன்று இலக்குகளுக்கு கட்டுபட்டு இயங்கிக்கொண்டு இருக்கிறது. ஏதோ நாம் இந்த உலகுக்கு வந்தோம், வாழ்ந்தோம், இறதோம் என்று இருந்தால், நாம் மற்ற பிறப்புக்கள் போல் புல்லாய் புழுவாய் பூண்டாய், மரமாய் பறைவயாய் பாம்பாய் விலங்குகைளப்போல் நம்முடிவும் அப்படியே இருந்துவிடும். ஆனால் மானிடராய் பிறத்தல் அரிது என்ற வார்த்தைக்கு அர்த்தம் இல்லாமல் போய்விடும். மனித இனம் இந்த உலகுக்கு ஒர் எடுத்து காட்டாகவும் உதாரணமாகவும் இருக்க வேண்டும் என்பதற்கே நாம் இந்த உலகில் படைக்கப்பட்டிருக்கிறோம். காதறுந்த ஊசி கைக்கு வராவிட்டாலும் அதன் உதவி நமக்கு வேறு விதத்தில் கிடைக்கிறது. அதாவது அதன் கூர்மையின் உதவியால் காலில் தைத்த முள்ளை செவ்வனே எடுக்க கருவியாகிறது. நம்முடன் இருந்து வாழ்ந்த மற்ற உயிர்கள் யாதொரு சுவடின்றி மறைந்ததுவிடுகின்றன.ஆனால் மனிதர்களாகிய நாம் விதைக்கும் விதைகள் அர்த்தமாகி நம் எதிர்கால சந்ததிக்கு போய் சேருகிறது.

யோகக்கலையின் மேன்மையை ஓரிரு வார்த்தைகளால் சித்தரிக்க முடியாது. அன்று நம் முன்னோர்கள் உலைக வெறுத்து உடைல துறந்து நம்மின் ஒவ்வொருவரின் வாழ்க்கைக்கு வேண்டிய

உன்னத கருத்தை சொல்லிச் சென்றனர். கோயமே இது பொய்யடா வெறும் காற்றடைத்த பையடா என்று கூறிச்சென்ற சாதுக்கள். பஞ்சபூதங்களும் நம் உடலின் அடக்கம் என்ற உயர் கருத்தினை விட்டுச்சென்ற யோகிகெளல்லாம் வாழ்ந்த இந்த புண்ணிய பூமியில் கட்டுப்பாடின்றி யோகம் பயின்றோரும், பயில்வோரும் தன் இச்சைப்படியெல்லாம் வாழ்வதை நாம் நாளும் காண்கிறோம். யோகக் கலைக்கு ஆதியிலிருந்த கட்டுப்பாடு இன்றில்லை. பரதமுனியும் பதஞ்சலி முனியும் கட்டிக்காத்த குருகுல கல்விச்சாலைகள் இன்றில்லை. குருவைத்தேடி கலைகள் கற்றது அன்று. சீடர்கைள தேடி குரு ஓடிக் கற்பிப்பது இன்று. யோகம் என்ற அருஞ்சொல் இன்று ஆசனம் என்ற சொல்லுடன் முடிகிறது. விருப்பம், யோகம் என்ற ஆன்மீகச்சொல் இன்றைய இளஞர்களின் இதயத்தில் பதிய வேண்டும் கல்விச் சாலைகளின் பாடதிட்டதில் யோகப்பயிற்சி கொண்டு வரேவண்டும்.

71

பட்டினப்பாலையில் பழந்தமிழர் பண்பாடு - ஓர் ஆய்வு

பேராசிரியர் எஸ். கேசவன்
Professor in Hindu Civilization, Department of Hindu Civilization, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
kesavans@esn.ac.lk

எஸ். விவேகா
M.phil (Scholer), Department of Hindu Civilization, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
vevokav@gmail.com

ஆய்வு அறிமுகம்

கி.பி மூன்றாம் நூற்றாண்டிற்கு முன் எழுதப்பட்ட பத்துப்பாட்டின் ஆரம்பகால படைப்புகளில் பட்டினப்பாலையும் ஒன்றாகும். பத்துப்பாட்டு என்பது பத்து இடை நீளக் கவிதைகளின் தொகுப்பாகும். மதுரைக்காஞ்சி பாண்டிய நாட்டின் செல்வத்தையும் செழிப்பையும் எடுத்துரைப்பது போலவே, பண்டைய சோழ நாட்டின் வளத்தையும், சிறப்பையும், செழுமையையும் பட்டினப்பாலை விபரிக்கின்றது. சோழ நாட்டின் தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பு, அதன் செல்வ வளம், கரிகாலனுடைய வீரச்செயல்கள், மக்கள் வாழ்க்கை முறை ஆகியவற்றை எடுத்துக்கூறும் இப்பாடல் 301 அடிகளைக் கொண்டமைந்துள்ளது. இப் பாடலில் சோழ மன்னன் கரிகால் பெருவளத்தானின் பெருமைகளை எடுத்துக்கூறப்பட்டுள்ளதனைக் காணலாம்.

'ஒரு மன்னனுடன் செழிப்பான காவேரிபூம்பட்டினம் (புகார்) கொடுத்தாலும் தன் காதலியை விடமாட்டேன்' என்று ஐந்து வரிகளில் அறிவிக்கும் காதலனின் கூற்றுடன் பட்டினப்பாலை இலக்கியம் ஆரம்பமாகின்றது. பட்டினப்பாலையின்; 296 வரிகள் காவிரிப்பூம்பட்டினம் மற்றும் தமிழ்ப் புலவர்களின் பெரும்

ஆதரவாளனாக விளங்கும் கரிகால் சோழனைப் போற்றுவனவாக அமைந்துள்ளன. பெரும்பாணாற்றுப்படை என்னும் நூலைப் பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்னும் புலவரே பட்டினப்பாலையின் ஆசிரியருமாவார். பெரும்பாணாற்றுப்படை தொண்டைமான் இளந்திரையன் என்னும் அரசன் மீது பாடப்பட்டது. பட்டினப்பாலை கரிகால்சோழன் மீது பாடப்பட்டது. ஆகவே இவர் கரிகாலன், இளந்திரையன் என்ற இரண்டு மன்னர்களின் அன்புக்குரியவராக வாழ்ந்தவர் என்பது கண்கூடு. கடியலூர் இவர் பிறந்த ஊராகக் கருதப்படுகின்றது.

பண்பாடு என்பது பொதுவாக மனித செயற்பாட்டுக் கோலங்களையும் அத்தகைய செயற்பாடுகளிற்கு சிறப்புத் தன்மையையும் முக்கியத்துவத்தையும் கொடுக்கும் குறியீட்டு அமைப்புக்களையும் குறிப்பிடுகின்றது. பண்பாடு என்பது ஒரு குழுவின் வரலாறு, போக்குகள், பண்புகள், புரிந்துணர்வுகள், அறிவுப் பரம்பல்கள், வாழ்வியல் வழிமுறைகள், சமூகக் கட்டமைப்பு என்பனவற்றைச் சுட்டிக்காட்டி நிற்கின்றது என்கிறார் ரெய்லர் எட்வாட் (Tylor, Edward, 1871, Primitive Culture. Vol 1.Neq York). மொழி, உணவு, இசை, சமயம், நம்பிக்கைகள், தொழில்சார் தெரிவுகள் கருவிகள் போன்றவையும் பண்பாட்டினுள் உள்ளடங்குகின்றன. பட்டினப்பாலையில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற இயற்கை நிகழ்ச்சிகளும் உவமைகளும் அக்கால காவிரிப்பூம்பட்டினத்தை நம் மனக்கண்ணால் படம் பிடித்துக் காட்டுவது போல் அமைந்துள்ளதனைக் காணலாம். தமிழ்நாட்டின் பெருமை, தமிழர் நாகரிகத்தின் உயர்வு, தமிழர்களின் வீரம், பண்பாடு என்பனவற்றைப் பட்டினப்பாலையில் காணப்படும் பண்பாடு தொடர்பான விடயங்களை ஆராய்வதன் மூலம் அறியலாம்.

ஆய்வு நோக்கம்

பழந்தமிழர் பண்பாடு பற்றிப் பட்டினப்பாலை எவ்வாறு எடுத்துரைக்கின்றது என்பதனை எடுத்துக்கூறுதல், பட்டினப்பாலை இலக்கியம் எழுதப்பட்ட காலத்தினையும், அக்கால மக்களது பண்பாட்டினையும், வாழ்க்கைக் கோலத்தினையும் அனைவரும் அறியச் செய்தல், பட்டினப்பாலையினூடாக, பாலை நில மக்களையும் அவர்களது பண்பாட்டையும் எடுத்துரைத்து

எதிர்கால சந்ததியினரிற்கு வழிப்புணர்வினை ஏற்படுத்தல் என்பன இவ்வாய்வின் நோக்கங்களாக அமைகின்றன.

ஆய்வு முறையியல்

இவ்வாய்வில் ஒப்பீட்டாய்வு, விவரணஆய்வு, பகுப்பாய்வு என்பன பயன்படுத்தப்படுகின்றன. பழந்தமிழ் இலக்கியம் பற்றியும் அவற்றில் குறிப்பிடப்படும் பண்பாட்டம்சங்கள் பற்றியும் பட்டினப்பாலையுடன் ஒப்பிடுவதற்கு ஒப்பீட்டாய்வு பயன்படுகின்றது. பட்டினப்பாலை இலக்கியமானது பண்பாடு பற்றி எவ்வாறு எடுத்துரைக்கின்றது என்பதனையும் எத்தகைய பண்பாட்டம்சங்கள் குறிப்பிடப்படுகின்றன என்பதனையும் விரிவாக ஆராய்ந்து விபரிப்பதற்கு விவரண ஆய்வு பயன்படுகின்றது. பட்டினப்பாலை இலக்கியத்தில் குறிப்பிடப்படும் பண்பாடு மற்றும் அவற்றின் மூலம் வெளிப்படுத்தப்படும் சமூகம் பற்றிய விடயங்களையும் செவ்வனே எடுத்துரைக்க பகுப்பாய்வு பயன்படுகின்றது.

கருத்துரையும் பெறுபேறும்

பழந்தமிழ் இலக்கியங்களில் ஒரு தனிநபர், குடும்பம், இனக்குழுக்கள் சமூகம், கிராமம், நகரம் எனும் பல்வேறு அமைப்புக்கள் காணப்படுகின்றமையை அவதானிக்க முடியும். இவை ஒரு பண்பாட்டுக் கோலம் எனினும் அங்கு நடைமுறையில் உள்ள பழக்கவழக்கங்கள், நடைமுறைகள் என்பனவும் உற்று நோக்கப்படும். பட்டினப்பாலையில் காணப்படும் பண்பாட்டம்சங்கள் அக்கால வாழ்க்கைத் தரத்தினையும் செளிப்பினையும் அறிய ஏதுவாக அமையும். அந்தவகையில் பட்டினப்பாலை இலக்கியமானது எத்தகைய சமூக அமைப்பினைக் கொண்டுள்ளது என்பதனையும் அவற்றினூடாக மக்களது வாழ்க்கை முறையினையும் அறிந்துகொள்ள முடியும்

பட்டினப்பாலை குறிப்பிடும் காவிரிப்பூம் பட்டினம், செழிப்பான துறைமுக நகரமாக இருந்ததுடன், கடல்கோளினால் மூழ்கி அழிந்துவிட்டது என்பதும், இன்று சிறிய கிராமங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த துறைமுக நகரம் ரோமானிய வணிகர்களால் அறியப்பட்ட ஒரு வர்த்தக துறைமுகமாகக் காணப்படுகின்றது. தொலமியால் இத் துறைமுகம் 'ஒரு எம்போரியம்' எனக் குறிப்பிடப்பட்டிருப்பதனைக் காணலாம்.

கரிகால் சோழன் திரைக்கடலில் திரவியம் தேட நாவாய்கள் பல செலுத்தி, சுங்க முறையை ஏற்படுத்தி, வெளிநாட்டு வணிகத் தொடர்பு ஏற்படுத்தி தமிழகத்திற்கு உலகப்புகழை ஏற்படுத்திய மன்னன் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனை, 'வைகல் தொறும் அசைவு இன்றி உல்கு செயக் குறைபடாது' (பட்டினப்பாலை பாடலடி – 124,125) எனும் பாடல் அடிகள் ஊடாக அறிய முடிகின்றது. சுங்கம் என்பதற்கு 'உல்கு' என்றும் பெயர் உண்டு. அதாவது சினம் கொண்டு விரைந்து செல்லும் சூரியனின் தேரில் பூட்டிய குதிரைகள் போன்று எப்பொழுதும் சோர்வின்றி சுங்கம் பெற பண்டகச் சாலையில் ஏற்றுமதி இறக்குமதி பொருட்கள் குறைவின்றிக் குவிந்து காணப்படுகின்றன என்று கூறப்படுகின்றது. கரிகால் சோழன் ஆண்ட சோழப் பேரரசின் தலைநகரமாக விளங்கியதும் காவிரிப்பூம்பட்டினமாகும்.

வீடுகளில் குவிந்து கிடக்கும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகள் மலைகள் என்று வர்ணிக்கப்படும் அளவுக்கு அதிகமாக இருந்துள்ளன. துறைமுகம், பெரிய கப்பல்கள் மற்றும் அவர்கள் கொண்டு வந்த பொருட்கள், மீனவர்கள் மற்றும் அவர்களின் வாழ்க்கை, மத மடங்கள், முருக வழிபாடு, சோழ மன்னன் கரிகாலன் தனது அரியணையை மீட்க போராடியது, எதிரி நாடுகளின் மீதான அவரது படையெடுப்பு மற்றும் அமைதியான காலங்களில் அவரது நடவடிக்கைகள் அனைத்தும் விபரிக்கப்பட்டுள்ளன. பயிரிடப்பட்ட மற்றும் அறுவடை செய்யப்பட்ட உணவுகள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து வர்த்தகத்தில் கொண்டு வரப்பட்ட பல்வேறு பொருட்கள் பற்றிய விடயங்களும் அவற்றிற்கான விளக்கங்களும் கவிதைவடிவிலேயே குறிப்பிடப்படுகின்றன.

சோழ நாட்டின் உணவுக் கலாசாரத்தில் இறைச்சியும் மதுவும் பெரும் அங்கமாக இருந்துள்ளதனையும் காணலாம். 'வீரர்கள் வறுத்த இறால் மற்றும் வேகவைத்த ஆமைகளை சாப்பிடுவார்கள் என்றும் மீனவர்கள் செதில் பனை மரங்களில் இருந்து பனை சாராயம் குடிக்கிறார்கள் என்றும் மீன், இறைச்சித் துண்டுகளை வறுக்கும் சத்தம் மதுக்கடைகளின் முன்புறம் கேட்கிறது என்றும் பலர் வந்து செல்லும் இந்த கடைகளில், மதுபானங்கள் விற்கப்படுகின்றன' எனவும் குறிப்பிடுவதன் ஊடாக ஒவ்வொரு மக்களும் தமது வாழ்க்கை நிலைக்கேற்பவும் செய்யுமு; தொழில்

களிற்கேற்பவும் வெவ்வேறு உணவுப் பழக்கவழக்கங்களைக் கொண்டுள்ளனர் என்பது புலனாகின்றது.

இதில் வரும் 'ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்' என வரும் அடியில், ஈழத்தில் விளைந்த உணவு வகைகளும், கடாரத்தில் இருந்து வந்த செல்வங்களும் இன்னும் அரிய வகைப் பொருட்களும், பெரிய வகைப் பொருட்களும், சிறிய வகைப் பொருட்களும் இறக்குமதி செய்யப்பட்டன என்று கூறப்படுவதனூடாக உணவு முறை மற்றும் ஏற்றுமதி இறக்குமதி பற்றியும் எடுத்துரைக்கப்படுவதானது கண்கூடு.

பட்டினப்பாலையில் உணவு சமைக்கும் சமையலறை பற்றிக் குறிப்பிடுகையில், புலி சின்னம் தாங்கிய ஆடம்பரமான இரட்டை கதவுகளுடன் நன்கு பாதுகாக்கப்பட்ட பொது சமையலறைகள் உள்ளன எனக் குறிப்பிடுகின்றது. இந்த சமையலறைகளில் அதிக அளவு அரிசியை சமைத்து வடிகட்டும்போது, அரிசி பானைகளில் ஊற்றப்படும் அதிகப்படியான நீர் சேற்றில் சேற்றை உருவாக்கும் ஒரு சிறிய நதி போல ஓடுகிறது. வளைந்த கலப்பை கொண்ட விவசாயிகள் வானவர்களைப் புகழ்ந்து புதிய மற்றும் சமைத்த உணவைத் தர்மமாக வழங்குகிறார்கள் என்றும் குறிப்பிட்டு உணவு முறையையும், அவர்களது கொடைச் சிறப்பும், செல்வ செளிப்பும் ஒருங்கே எடுத்துக்காட்டப்படுகின்றமையைக் காணலாம்.

பிற பகுதிகளில் இருந்து வந்த பொருட்களைக் குவித்து வைத்து பிறர் களவு மேற்கொள்ளாதவாறு சோழ மன்னனின் காவலர் காத்து நிற்கின்றனர் எனவும், புலிச் சின்னமாகிய இலச்சினையைப் பொறித்தே சுங்க வரி அலுவலர்கள் வெளியே பொருட்களை அனுப்பி வைக்கின்றனர் என்றும் குறிப்பிடப்படுகின்றது. இதனை 'புலிபொறித்து புறம்போக்கி மதி நிறைந்த மலி பண்டம்' என வரும் பாடலடிகளினூடக அறியலாம். கரிகால் சோழனின் புலி முத்திரையினை, சுங்கச்சாவடி முதலானவற்றில் வருவாய் முத்திரையாகப் பயன்படுத்தினான் என்பதும், இறக்குமதியாகும் பொருட்கள் அனைத்திலும் புலிச் சின்னம் பொறித்து வெளியே அனுப்பப்பட்டன என்பதனையும்; அறிகையில், பழந் தமிழர்கள் காலத்திலேயே முறையான வணிகக் கோட்பாட்டை எம் முன்னோர் கடைப்பிடித்து வாழ்ந்திருக்கின்றனர் என்பது கண்கூடு.

கடியலூர் உருத்திரங்கண்ணனார் தான் கூறவிளைந்த கருத்துக்களை பிறர் எளிமையாக அறியும் பொருட்டும் தெளிவாக உணரும்பொருட்டும் தமது பாடல்களில் உவமைகளையும் புகுத்தி எழுதியுள்ளதனையும் நோக்கலாம். இதனூடாக நாம் பண்பாடு பற்றிய விடயங்களை எளிமையாக விளங்கிக்கொள்ளக்கூடியதாக அமைந்துள்ளது.

நாட்டுவளம், நகர வளம், மக்களது வாழ்க்கை முறை, மன்னனது சிறப்பு. வழிபாட்டுமுறைகள், பொழுதுபோக்குகள், நிலவளம், நீர்வளம் என்பன எடுத்துரைக்கப்படுவதன் ஊடாக பட்டினப்பாலையில் மக்கள் எந்தளவிற்கு தன்னிறைவுப் பொருளாதாரம் கொண்டு சிறப்பான வாழ்வினை வாழ்ந்தார்கள் என்பதனையும் அறியக்கூறியதாக உள்ளது.

பட்டினப்பாலையில் பிரதான தொழிலாக விளங்குவது விவசாயமாகும். 'பரந்த வயல்களில் இருந்து தொடர்ச்சியான விளைச்சல் உள்ளது, சர்க்கரை ஆலைகளில் இருந்து வீசும் வாசனை மற்றும் அவற்றின் நெருப்பின் வெப்பம் அருகிலுள்ள வயல்களில் உள்ள அல்லிகளை வாடிவிடும். கொழுத்த எருமைகளின் முழுமையாக வளர்ந்த கன்றுகள் முதிர்ந்த நேர்த்தியான நெல்லைச் சாப்பிட்டு, பெரிய தானியக் களஞ்சியங்களின் நிழலில் தூங்குகின்றன. கொத்துக் கொத்தாகத் தென்னை மரங்கள், வாழை செடிகள், முற்றிய கொட்டைகள் கொண்ட வெற்றிலைகள், நறுமணமுள்ள மஞ்சள், பல வகையான மாம்பழங்கள், கொத்து கொத்தாக பனைமரம், இளஞ்சிவப்பு இஞ்சி போன்றவை சோழ நாட்டில் உள்ளன என நாட்டு வளம் பற்றி எடுத்துரைப்பதனூடா அறிய முடிவதுடன் எத்தகைய விவசாயப்பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன எனவும் கால்நடை வளர்ப்பின் முக்கியத்துவமும் எடுத்துரைக்கப்பட்டுள்ளதனைக் காணலாம்.

பட்டினப்பாலை அகவொழுக்கத்தினை இக்கியச்சுவையுடன் விளக்குவதுடன், யாப்பியல் நுட்பம் கொண்டதாகவும் விளங்குகின்றது. அத்துடன் பண்டைத்தமிழரின் வாழ்வியல் பற்றி அறிய விரும்புபவர்களிற்கு காவிரியின் சிறப்பு, நாட்டு வரலாறு, நகர வர்ணணை, மன்னன் சிறப்பு என்பவற்றையும் தாங்கிநிற்கிறது எனக் கூறுதல் மிகையாகாது.

பாலைத் திணைக்கே உரித்தான பாடலமைப்புக்களைக் கொண்டுள்ள இவ்விலக்கியம் பாலைப் பண்ணுடன் சேர்த்து அம் மக்களது பண்பாட்டினை எவ்வாறு செவ்வனே எடுத்துரைக்கின்றது என்பதனை தெளிவாக ஆராயமுடியும். ஒட்டுமொத்தமாக நோக்குகையில், பண்டைத்தமிழரின் பண்பாட்டினை அறியும் ஒரு ஆவணமாக பட்டினப்பாலை மிளிர்கின்றது என்பது கண்கூடு.

ஆய்வுப் பயனும் முடிவுரையும்

பட்டினப்பாலையினூடாக அக்கால மக்களால் பின்பற்றப்பட்ட சமயம் மற்றும் வழிபாடுகள் பற்றியும் மக்களது நம்பிக்கைகள் பற்றியும் மக்களது சமூக அமைப்பு முறை, தலைமைத்துவம், நகரக்கட்டமைப்பு என்பன பற்றியும் சமூகத்தின் ஒழுக்கம் மற்றும் கட்டமைப்பினை ஒழுங்காக கொண்டு செல்வதற்கு விதிக்கப்பட்ட சட்டதிட்டங்கள் பற்றியும் மக்கள் தமது வாழ்வில் தம்முடன் இணைத்து வளர்த்து வந்த கலைகள் பற்றியும் பண்டைத் தமிழர் தமது தொடர்பாடலிற்காகப் பயன்படுத்திய மொழி பற்றியும் உணவு, உடை, உறையுள், பழக்கவழக்கங்கள் என்பன பற்றியும் பட்டினப்பாலையில் குறிப்பிடப்படும் மக்கள் வாழ்வியல் நடைமுறையில் பின்பற்றும் சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்கள், தொழில்கள், வர்த்தக நடைமுறைகள் பற்றியும் அறிந்துகொள்ளமுடிகின்றது. பண்டைக்காலத் தமிழர்களது பண்பாடு;, வாழ்வியல் முறைகள், பொருளாதாரம், அறிவியல் போன்ற விடயங்களை எடுத்துரைக்கும் சிறப்புமிக்கதாக பட்டினப்பாலை விளங்குகின்றது.

உசாத்துணை

இராகவையங்கார்.ரா,(1951). பட்டினப்பாலை ஆராய்ச்சியும் உரையும், அண்ணாமலை நகர், தமிழ்நாடு, மதுரை.

சந்திரகுமார்.சு, (28.05.2022). பட்டினப்பாலையில் நிகழ்த்துக் கலைஞர்கள் வாழ்வியல் ஓர் ஆய்வு, ஆய்வுக் கட்டுரை, Indian Journal Of Tamil

சாமி சிதம்பரனார்.உ.வெ, (1973). பட்டினப்பாலை ஆராய்ச்சி உரை, இரண்டாம் பதிப்பு, இலக்கிய நிலையம்.

சாமிநாத அய்யர், பட்டினப்பாலை / நச்சினார்க்கினியார் உரை, (தொகுப்பு), மதுரை தமிழ் இலக்கிய மின் தொகுப்புத் திட்டம்.

வரதராஜையர்.ஈ.எஸ், (1951). பட்டினப்பாலை, பதிப்புரை.

மறைமலையடிகள், (1966). பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, கழக வெளியீடு.

தமிழரசி.பா, பட்டினப்பாலையில் பண்டமாற்று, ஆய்வுக் கட்டுரை, சான்லாக்ஸ் பண்பாட்டு தமிழியல் ஆய்விதழ்.

பத்துப்பட்டு - பாகம் வீஸ் - பட்டினப்பாலை, (ஜனவரி 19, 2011)

<https://ta.m.wikipedia.org>, (2017), பண்பாடு, கட்டுரை.

Tylor, Edward, (1871), Primitive Culture. Vol 1.Neq York

72

யாழ்ப்பாணத் தமிழர் ஓவிய மரபும், மாற்றமும்

எஸ். தர்மதாஸ்
Lecturer at Sri Pada National College of Education, Patana,
Nuwara Eliya, Sri Lanka.
cartoonthaas@gmail.com

அறிமுகம்

உலகில் தோன்றி வளர்ந்த பல்வேறு பண்பாட்டுக் குழுமங்களைப் போன்று தமிழர்களிடையேயும் ஓவியம் என்பது பல்வேறு காலகட்டங்களில் உருப்பெற்றதும், அது பல்வேறு தேவைநோக்கம் கருதி வெளிப்பட்டமையையும் வரலாற்று எச்சங்களின் துணைகொண்டு பார்க்கமுடியும். குறிப்பாக யாழ்ப்பாண ஓவியச் சான்றாதாரங்கள் தமிழ்நாட்டிலேயே அதிகம் காணக்கிடைக்கின்றன. குகை, ஏட்டுச்சுவடிகள், பலகை, சேலை, கண்ணாடி, கடதாசி, சுவர் எனப் பல்வேறு ஊடகங்களில் காலமாற்றத்திற்கேற்ப ஓவியங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. முற்றத்தில் இடப்படும் கோலங்களில் இருந்தும், மண் சுவர்களில் வரையப்படும் ஓவியங்களில் இருந்தும், கோயில் சுவரோவியங்களில் இருந்தும், தமிழ்ப் பண்பாட்டில் மதக் கிரியைகள் சார்ந்தும், கதையாடல்கள் சார்ந்தும், மதம் சாராத பண்பாட்டின் வெளிப்பாடாகவும் எல்லாத் தளங்களிலும் ஓவியத்திற்கான தொடர்பு இருந்து வந்துள்ளது (சனாதனன், 2007)

யாழ்ப்பாணத்து ஓவிய மரபு என்பது தனித்தே தகவமைக்கப்பட்டதன்று. அது இந்திய தமிழ்நாட்டு ஓவியக்கலை மரபிலிருந்தே தோன்றியது. குறிப்பாக இந்திய மத்திய பிரதேச கற்கால ஓவியங்களை இலங்கையின் பூர்வீக வரைதல்கள் ஒத்திருக்கின்றன. (Bandaranayake,1986). எனினும் இப் பண்பாட்டில் அரசியல், பொருளாதார, சமூக, மத நடைமுறைகள் என்பன காட்சிமுறையின் தன்மைகளைத் தீர்மானிப்பதுடன் அடையாளத்தினையும் தன்னுள் தகவமைத்துக் கொண்டுள்ளது.

அதனாலேயே வெவ்வேறு கலைப் பாணிகள், கலைமரபுகள் கொண்ட கலைப் படைப்பாக்கத்தினைத் தரிசிக்க முடிகின்றது.

இங்கு ஓவிய வெளிப்பாட்டில் கற்பனைக்கும் இரசனை உள்ளுணர்விற்கும், குறியீட்டுத் தன்மைக்கும் முதன்மை வழங்கப்பட்டது. இது மேலைத்தேய மறுமலர்ச்சிக்கால கலைப்பாணியான இயற்பண்புவாதம் போல் அல்லாது ஓவிய வெளியைத் தட்டையானதாகவும், குறியீட்டு அர்த்தம் பொதிந்ததாகவும் உணர்த்துகின்றது. இது பல்லவர், பாண்டியர், சோழர், விஜயநகர மன்னர்கள், நாயக்கர், மராத்தியர் ஆட்சியினூடு கடத்தப்பட்ட அல்லது பேணப்பட்ட ஒன்றாகவும் காணப்பட்டது. யாழ்ப்பாணத்திலும் அதன் தொடர்ச்சியான கலைமரபைக் கொண்டமைந்த கலை வெளிப்பாடுகள் ஆரம்ப காலத்தில் காணப்பட்டு, இருந்தாலும் பிற்காலத்தில் சமூக, கலாசார, அரசியல் மற்றும் பொருளாதாரத் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களாலும், பாரபட்சமான அணுகுமுறையாலும், விழிப்புணர்வு அற்ற செயற்பாடுகளாலும் யாழ்ப்பாணத் தமிழரது ஓவியப் பண்பாடானது தனது இருப்பை இழந்துள்ளது. இதனை மீட்டுருவாக்கம் செய்யவேண்டிய, வெளிப்படுத்த வேண்டிய தேவையின் நிமிர்த்தம் யாழ்ப்பாணத் தமிழர் ஓவிய மரபும், மாற்றமும். எனும் தலைப்பில் இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வு முறையியல்

இது பண்புத்தர ஆய்வு முறையில் வரலாறு மற்றும் விபரண முறையியல்களைப் பின்பற்றியது. அத்துடன் யாழ்ப்பாண தமிழ் பேசும் மக்களினை மட்டும் மையப்படுத்தி 20ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட 08 வரலாற்றுக்கால இடங்களிலுள்ள (கோவில்,பொது இடங்கள்) ஓவிய வெளிப்பாடுகள் ஆய்விற்கு உட்படுத்தப் பட்டுள்ளன.

கருத்துரை

பல்லவர் காலம் முதல் நவீன காலம் வரை ஓவியம் (கி.பி. 7 - கி.பி. 20)

மூவேந்தர் ஆட்சிக்காலமான சங்ககாலம் (கி.பி.1ஆம் நூற் - கி.பி. 3ஆம் நூற்) தமிழுடன் சமயமும் கலைகளும் செழித்திருந்த காலமென இலக்கியங்கள் வழியாக அறியமுடிகின்றது. சங்ககாலம்

முதல் கிடைக்கப்பெற்ற இலக்கியங்களில் ஓவியத்தின் இருப்புத் தொடர்பான பல்வேறு குறிப்புக்கள் காணப்படுகின்றன. பக்தி இயக்க காலமாக கி.பி. 7ஆம் நூற்றாண்டில் பல்லவர் காலத்திற்குரிய ஓவிய எச்சங்கள் காஞ்சிபுர கைலாசநாதர் கோயிலில் கிடைக்கின்றன. இவை இக்காலச் சிற்பங்களுடன் பல பாணி ரீதியிலான மற்றும் கருப்பொருள் ரீதியான தொடர்புகளைக் கொண்டுள்ளன. அத்துடன் செல்நெறி ஓவியமரபின் தொடர்ச்சியாகவும் பார்க்கப்படுகின்றது. உருவ அமைப்பிலும், இரேகை மற்றும் நிறப்பாவனையிலும் பாண்டியர்களது ஓவிய வெளிப்பாடுகளும் பல்லவர்களை ஒத்த இயல்புகளை வெளிப்படுத்துகிறன. இதற்குச் சான்றாக சித்தன்னவாசலில் உள்ள ஓவியங்களைக் குறிப்பிடலாம். மாறாக தமிழர்களது ஓவிய முதிர்ச்சியை சோழர்களது ஓவியங்களில் காணலாம். அதிலும் தஞ்சாவூர் பிருகதீஸ்வரர் கோயில் கருவறையின் இரண்டாம் தளத்தில் நாயக்கர் கால ஓவியங்களுக்குக் கீழ் இருந்த சோழர்கால ஓவியம் இவர்களின் உன்னத படைப்பாகப் பேசப்படுகின்றது.

அதன் பின்னர் ஆந்திரர்கள், கன்னடர்கள், மலையாளிகள், தமிழர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து ஒரு பொது ஆட்சியின் கீழ் நிறுவிய விஜயநகரப்பேரரசின் (கி.பி.14ஆம் நூற் – கி.பி. 17ஆம் நூற்) ஆட்சியில் கொய்சாள மரபு, மொகலாய பண்பு மற்றும் கிராமிய மூலங்களையும், ஐரோப்பிய தொடர்புகளையும் இணைத்து ஒரு கலப்புப் பாணி வெளிப்படுத்தப்பட்டது (சனாதனன், 2007). இவர்களைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த நாயக்கர் ஹம்பிப்பள்ளியை மிகவும் நெருங்கியிருந்தது. ஆனால் மதுரை நாயக்கரது ஓவியமுறை ஹம்பியில் இருந்து வேறுபட்டுத் தனித்துவ அடையாளங்களைக் கொண்டது. பின்னர் கி.பி.17ஆம் நூற்றாண்டில் மராட்டியரது வருகை தஞ்சாவூர் பாணியை அறிமுகப்படுத்தியது. தொடர்ந்து கி.பி.18ஆம் நூற்றாண்டில் கம்பனி ஓவியங்களின் தாக்கம், 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பியக் கலைவெளிப்பாட்டு விடயங்கள் சார்ந்து ஓவியப் போக்கில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. இது ஓவியம் பற்றிய எண்ணத்திலும் பயில்விலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது.

யாழ்ப்பாணத் தமிழர் ஓவியம்

ஈழத்தின் ஓவிய வெளிப்பாட்டைத் தமிழகக் கலை வெளிப்பாடுகளின் தொடர்ச்சியாகவே நோக்கமுடியும். குறிப்பாக

யாழ்ப்பாண ஓவியத் தடயங்கள் காலனிய காலத்திற்கு அல்லது பிற் காலனியத்திற்கு உரியவை. எனவே 150 வருடப் பழமைக்கு உட்பட்டவை எனலாம். அதிலும் காலனி ஆக்கிரமிப்பு, மதமாற்றம், சமூக, அரசியல், கலாசார மாற்றம், தமிழரது சில பிற்போக்கான நடவடிக்கைகள் (சாதியம், மூடநம்பிக்கைகள்) போன்ற காரணிகளால் கடந்த 50 ஆண்டுகளில் தமிழர் ஓவியங்கள் அழிக்கப்பட்டும் அழிந்தும் போயுள்ளன. இது இப்பிரதேசத்தின் ஓவிய வரலாற்றின் தொடர்ச்சியை அல்லது மரபைப் பேணமுடியாமல் போனது. இது இலங்கைத் தமிழரின் ஓவியங்களின் நிலைப்புத்தன்மையைக் கேள்விக்குட்படுத்தி உள்ளது.

யாழ்ப்பாணக் கோயில் சுவர்களில் ஓவியங்கள் காணப்பட்டதற்கான சான்றாதாரங்கள் முற்றுமுழுதாக அழிவடைந்த நிலையில் சுவரோவியங்கள் பற்றிய ஆறுமுகநாவலரின் கண்டன உரையிலேயே முதன்முதலில் காணக்கிடைக்கின்றது (கைலாயபிள்ளை, 1996). அதிலும் அவ் ஓவியங்களின் காட்சிப் பண்புகள், பாணிகள், உத்திகள் என்பற்றிகான குறிப்பில்லை. எனினும் இக் குறிப்பானது இதற்கு முன்னைய தசாப்தங்களில் இருந்து மரபுவழி கடத்தப்பட்ட ஒரு நீட்சி ஓவியத்திற்கு இருந்திருக்கும் என உய்த்தறிந்துகொள்ள முடியும். இதற்குப் பின்னரான ஓவியப் படைப்புத் தொடர்பான தகவல்களை ஆ.தம்பித்துரை தனது 'யாழ்ப்பாணத்துப் பிற்காலச் சுவரோவியங்கள்- 1982) எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இவற்றின் வரையறுக்கப்பட்ட ஊடகத்தின் தன்மை, பாணி அமைப்பு மற்றும் வரலாறு பற்றி நோக்கும்போது கி.பி. 19ஆம் நூற்றாண்டின் இறுதி அல்லது கி.பி. 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என வரையறுக்கமுடியும். இவற்றை வரைந்த ஓவியர் தாவடியைச் சேர்ந்த துரைசாமி என்பவராவார். இது தங்சாவூர் பாணியை ஒத்திருந்ததுடன் கி.பி. 19ஆம், கி.பி. 20ஆம் நூற்றாண்டுகளில் மர அச்சுப் படங்களினூடு பரவிய ஒரு ஜனரஞ்சகப் பாணியாகவும் அமைந்தது குறிப்பிடத்தக்கது.(தம்பிதுரை 1982)

குறிப்பாக அழிக்கப்பட்டும், மாற்றப்பட்டும் காணப்பட்ட ஓவியங்களின் எச்சங்களைக் கொண்டு யாழ்ப்பாணத்து ஓவிய மரபு என மராட்டிய மன்னனான சர்போஜியின் தஞ்சாவூர் அரசவையில் முகிழ்ந்த 18ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தஞ்சாவூர் பாணியமைப்பைக் கொண்டவை. இது தஞ்சை நாயக்கர் காலம்

தொட்டு தஞ்சை மராட்டியர் மற்றும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலங்களினூடாகத் தமிழ்நாட்டில் வளர்ச்சியடைந்துவந்த ஓர் ஓவியக் கலைப்பாணியாகும். இந்துமதக் கருப்பொருட்களை கொண்டு உருவங்கள் உருண்டு திரண்ட பருமனாகப் பெரிய அளவில் வரையப்பட்டிருக்கும். வெகுநேர்த்தியாக செதுக்கல் வேலைப்பாடுகள் கொண்ட மரச்சட்டகத்துக்குள் இவ் ஓவியம் அமைந்திருக்கும். இச் சட்டகமும் ஓவியத்தின் ஒரு பகுதியாகவே கருதப்படும். தொடக்கத்தில் இவ் ஓவியங்களில் வர்ணங்கள் அதிக பரப்பில் பயன்படுத்தப்பட்டன. அவற்றில் வெளிர்நிற வர்ணக் கலவைகளும் இடம்பெற்றிருந்தன. இயற்கையாக தயாரிக்கப்பட்ட வர்ணங்களைக்கொண்டும் வெளிப்புறக்கோடுகள் கரும்பழுப்பு கொண்டும் வரையப்படும். யாழ்ப்பாணத்து கோவில் சுவரோவியங்களில் தமிழ்நாட்டிற் காணப்படுவது போன்று காட்சிப்பண்புகளில் வேறுபாகள் உண்டு. குறிப்பாக நல்லூர் சட்டநாதர் கோவில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஆரம்ப கால ஓவியங்களில் கோடுகளின் இயல்பு, இருபரிமாணத்தன்மை, மேடிப்படுத்தல், விக்கிரகவியல் மாதிரியமைப்பு என்பனவற்றில் ஜரோப்பியச் செல்வாக்குகள் குறைந்த தஞ்சாவூர்ப் பாணியை வெளிக்காட்டுகின்றன.(சனாதனன்,2007)

எனினும் தம்பித்துரையால் அடையாளப்படுத்தப்பட்ட குறிப்புகளுக்குரிய கோயில் சுவரோவியங்களை 1980 வரையில் பார்க்கக்கூடியதாக இருந்தது. பின்னர் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படும் ஆலயப் புணருத்தாரணங்கள், மக்களிடையே காணப்பட்ட வரலாற்றுப் பின்புலம் சார்ந்த விழிப்புணர்வின்மை மற்றும் போர் நடவடிக்கை போன்ற காரணிகளால் அழிந்துபோயின. பெரும்பாலும் இந்துமதச் செல்வாக்கிற்கு உட்பட்ட இவ் ஓவியங்கள் கோயில், மடங்கள், கிட்டங்கிகள், வீடுகள் என்பவற்றில் காணப்பட்டன. இவை சுண்ணாம்புச் சுவர்களின்மீது இயற்கை வர்ணங்கள் கொண்டு தீட்டப்பட்டதாகக் குறிப்புகள் உண்டு. இந்த வகையில் மாவட்டபுரம் கந்தசுவாமிகோயில், நல்லூர் சட்டநாதர் கோயில், காங்கேசன்துறை கிட்டங்கி, யாழ்ப்பாணம் பாங்கர்சால் வீதி கிட்டங்கி என்பவற்றில் காணப்பட்ட ஓவியங்களின் புகைப்படச் சான்றுகளை தமிபித்துரையின் நூலில் காணலாம். இவற்றை விட பருத்தித்துரை கோட்டடிப் பிள்ளையார் கோயில் மற்றும் கிட்டங்கிகளிலும்

சுவரோவியங்கள் இருந்ததற்கான குறிப்புகளையும் இவர் பதிவுசெய்துள்ளார். இவற்றை விட தாவடி அம்பலவாணர் முருகமூர்த்தி கோயில், வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோயில், வண்ணை ஸ்ரீவெங்கடேச பெருமாள் கோயில், தாவடி வண்ணர்மடம் போன்றவற்றிலும் ஓவியங்கள் இருந்ததற்கான சான்றுகள் உண்டு. இவற்றில் பெரும்பலானவை முத்தையா துரைசாமி வரைந்த ஓவியங்களாகும். அவ் ஓவியங்களும் காஞ்சிபுரம், தஞ்சை, ஹம்பி, சிதம்பரம், மதுரை, திருவரங்கூர் போன்ற இடங்களில் காணப்பட்ட ஓவியங்களின் பாணியையும், வர்ணச் சாயலின் தொடர்ச்சியையும் ஒத்திருக்கின்றது.

மரபும் மாற்றமும்

20ஆம் நூற்றாண்டில் தேசியவாதச் சிந்தனைகள் மேலோங்க இந்தியப் பெருங்கண்டத்தில் புத்தெழுச்சி கண்ட கலைசார் செயற்பாடுகள் யாழ்ப்பாணப் பிராந்தியத்தையும் புதுவழிக்குச் செல்ல வழியமைத்தது எனலாம். குறிப்பாக யாழ்ப்பாணத்துப் பண்பாட்டின் பல உயிர்த்துடிப்பான கலைச்செயற்பாடுகள் முகிழ்வதற்கு இது காரணமாக அமைந்தது. யாழ்ப்பாணத்தில் கலாநிலைய உருவாக்கம் (1930), விஸ்வகர்மா சங்கம் (1931), வட இலங்கை சங்கீதசபை (1932), சங்கீத சமாசம் (1933) போன்றவற்றின் முகிழ்ப்பும் செயற்பாடுகளும் கலைவெளிப்பாட்டில் நவீனத்தின் தாக்கத்தையும் புரிதலையும் ஏற்படுத்திய நிகழ்வுகளாகப் பார்க்கமுடியும்(சனாதனன்,2007) இதன் தொடர்ச்சியாக 1920 இல் இலங்கைத் தீவு முழுவதற்கும் சித்திரபாடத்திற்கான அதிகாரியாக நியமனம்பெற்று வந்த ஜேர்மனியரான ஊ.கு.வின்சரது வருகையும், 1934 இல் இரவீந்திரநாத் தாகூரின் யாழ்ப்பாணத்து வருகையும் ஓவியத்தில் புதிய தேடல்களுக்கான வழியை ஏற்படுத்தின. இங்கு ஓவியக்கலையை இறந்தகாலத்திற்குள்ளேயே வரையறுக்காது நிகழ்கால மற்றும் எதிர்கால சவால்களுக்கும், போக்குகளுக்கும் ஈடுகொடுக்கக்கூடிய உள்ளூர் புரிதலினூடான நவீனத்தினை ஏற்படுத்தினர். இதன் தொடர்ச்சியாக 1938 இல் யாழ்ப்பாணத்தில் எஸ்.ஆர்.கனகசபையின் தலைமையில் உருவான வின்சர் கலைக்கழகம், 1943 இல் கொழும்பில் லயனல் வென்ற் இன் தலைமையில் உருவான 43 குழு என்பன நவீனவெளிக்கு இட்டுச்சென்றன(கிருஸ்னராஜா,1997) இதில் தமிழ் ஓவிய மரபு சார்ந்து , இந்து மதம் சார்ந்து வெளிப்படுத்திய யாழ்ப்பாணத்து

ஆரம்பகால பாணிகள், கலைமரபுகளை விடுத்து மேலைத்தேயப் பாணிகளைத் தன்னுள் உள்வாங்கித் தனிநபர்கள் சார்ந்து புதுவெளியில் ஓவியம் நகரத்தொடங்கியதை யாழ்ப்பாணப் பிரதேசத்தில் காணலாம். இது ஆங்கிலேயக் கல்வியின் ஊடாக ஓவியப்பயிற்சி பெற்ற தனிநபர்களிடத்தே ஐரோப்பிய இயற்பண்புவாதம் நுகரப்படுவதற்கான சூழலை ஏற்படுத்தியது. இந்தப் பின்புலத்தோடு வளர்ந்த யாழ்ப்பாணத்தின் ஓவியக்கலை நவீனகாலத்தின் போசிப்புடனும், ஐரோப்பிய கால பண்பாண்டின் செல்வாக்கையும் தன்னுள் கொண்டு வளர்ந்தது. தொடர்ந்து சித்திரபாடம் பாடசாலைக் கல்வியிலும், பல்கலைக்கழகக் கல்வியிலும் உள்வாங்கப்பட்டு அனைத்துத் தரப்பினரும் கற்றுக்கொள்ள வழியேற்படுத்தியது. தவிரவும் இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டு கலவரம் காரணமாக ஓவியத்தினை தமிழர் சமூகத்தின் எழுச்சிக்கும் கருத்துச் செறிவாக்கத்திற்கும் பயன்படுத்தப்பட்டது. இதனால் ஓவியம் அழகியலையும் தாண்டி நவீனத்தினூடே மரபார்ந்த அடிப்படைக் கட்டுமானங்களையும் இணைத்து மண்சார்ந்தும் இனம் சார்ந்தும் படைக்கப்பட்டது. எனினும், தமிழ் மரபு சார்ந்து பண்பாட்டின் தொடர்ச்சியினை தமிழர் தரப்பு பேணிக்காக்கத் தவறியுள்ளமையை இங்கு கோடிட்டுக் காட்டமுடியும்.

முடிவுரையும் விதப்புரையும்

யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டில் ஓவியம் என்பது இந்தியப் பண்பாட்டினடியாக அதன் தொடர்ச்சியாகவே பார்க்க முடியும். அதிலும் தமிழனுக்கென பாரம்பரிய ஓவிய மரபுகள் இலங்கையில் இருந்திருக்கிறது. பிறநாட்டவரின் படையெடுப்பு, இயற்றைகையனர்த்தம், மற்றும் பராமரிப்பவர் யாரும் இன்றி ஓவியங்கள் அழிந்துபோயின. யாழ்ப்பாணத்திலும் பண்டைய ஓவியங்கள் இருந்ததாக வரலாற்று நூல்களே கூறுகின்றன. ஆனால் எம்மால் நேரடியாக அவதானிக்க முடியாதுள்ளது. தமிழ் பிரதேசங்களில் ஓவிய தடயங்கள் காலனித்துவ அல்லது பிற்காலணித்துவ காலங்களுக்குரியவை. எனவே 150 வருட பழமைக்கு உட்பட்டவை எனலாம். எனினும் அவை அனைத்தும் பல்வேறு காரணங்களால் கடந்த 20ம் நூற்றாண்டுகளில் அழிக்கப்பட்டு விட்டன. குறிப்பாக பிற்கால ஓவியப்போக்குகள் கற்றல், கற்பித்தல் மற்றும் சமூக கருத்தங்கத்தினை வெளிப்படுத்தும்

ஊடகமாகவே தமிழர் சமூகத்தில் முகிழ்த்ததனை நோக்கமுடியும். அத்துடன் அது சமயம் சார் விடயங்களிலிருந்து விடுபட்டு நவீன காலத்தின் போக்குகளை உள்வாங்கி தனிநபர் போசிப்பிற்குள் கருத்துருவாக்கப்படுகிறது. குரிப்பாக ஐரோப்பியச் செல்வாக்கைத் தன்னுள் கொண்டு வளர்ந்து வந்தது. யாழ்ப்பாணத்தில் ஓவியக்கலையை முன்னெடுத்த பல கலைஞர்கள் அதனை ஒரு தொழில் முன்னிலைப் பாடமாகக் கருதி அதன் கலையழகு தொடர்பாக சிந்தித்தார்களே தவிர தமிழர் பண்பாட்டில் கலைகள் நோக்கப்பட்ட முறையினைக் கருத்திற்கொண்டு நவீன தமிழ் சமூகத்தின் பண்பாட்டின் ஒரு பேறாக ஓவியம் வளர்த்தெடுக்கப்படவேண்டியதன் அவசியம் குறித்து சிந்திக்கத் தவறியுள்ளனர். அவ்வாறான சிந்தனையோட்டமற்ற புலமையான சமூகமாக நமது சமூகம் இல்லாததும் ஒரு பெரிய பாதிப்பு என்பதுடன் வளர்த்தெடுக்கவேண்டிய பொறுப்பில் இருந்தும் எமது சமூகம் தவறியுள்ளது.

தவிரவும் இதனால் ஒட்டுமொத்த இலங்கைத் தமிழரது ஓவியப் பண்பாடு என்பது அவ் இனத்தின் அடையாளத்தினை, வாழ்க்கைமுறையினை, தேவையைத் தன்னுள் உள்வாங்கி மேற்கிளம்ப முடியாத ஓர் கலையாக இருக்கின்றது. குறிப்பாக இலங்கையைப் பொறுத்தவரை தமிழர்களது கலைவெளிப்பாடுகளில் ஓவியம் பெரிய பங்களிப்பையோ, பாதிப்பையோ கொண்டிருக்கவில்லை செழிப்பான மொழியையும் தொன்மப் பண்பாட்டையும் கொண்ட தமிழர் தழிழ் ஓவியப் பண்பாட்டின் வேர்களையும் மரபுகளையும் ஆராய்ந்து கற்றறிந்து அவற்றைத் தற்கால உலகப்போக்குடனும் தேவையுடனும் இணைப்பாக்கம் செய்யவேண்டும். தமக்கான ஒரு அடையாளத்தினைப் பாரம்பரிய மரபுகளின் தொடர்ச்சியாகப் பேணிக்காக்கத் தலைப்படவேண்டும். அத்துடன் எமது பண்பாடு, மரபு சார்ந்து அறிமுறை மற்றும் செய்முறைக் கற்கைகளை பாடசாலைக் கல்வியின் கலைத்திட்டத்தில் இணைத்தல் வேண்டும். தவிரவும் இக் கல்வித்திட்டம் உயர் கல்வியிலும் உள்வாங்கப்பட்டு எதிர்கால சந்ததியினருக்கு ஒரு விழிப்புணர்வுடன் கூடிய கலைக்கல்வியை வழங்குவதனூடாக செழிப்பான தமிழரது ஓவிய மரபொன்றைக் கருத்துருவாக்கம் செய்யமுடியும். மேலும் இவ் ஆய்வானது யாழ்ப்பாணத் தமிழர்களை மட்டுமே

உள்வாங்கியுள்ளது. இது இன்னும் அகலிக்கப்பட்டு தமிழர்களது ஒட்டுமொத்தக் கலை, பாரம்பரிய பண்பாட்டு வேர்களைத் தேடியாய்ந்து இலங்கையில் சிங்கள பௌத்த ஓவியக் கலைமரபுடன் ஒன்றிக் கலந்துள்ள தமிழ் ஓவிய மரபின் வெளிப்பாடுகள் அடையாளப்படுத்தப்படவேண்டும். இதனால் தமிழர் ஓவிய மரபில் ஒரு தொடர்ச்சியினை வரலாற்றில் இருந்து கட்டியெழுப்பவும், அடையாளப்படுத்தவும் முடியும்.

உசாத்துணை விபரம்

Bandaranayake,(1986), The Rock and wall paintings of Sri Lanka, Lake House Bookshop.Colombo.

Nishantha Perera,T.D, (2006), INVESTIGATION OF AN APPROPRIATE METHODOLOGY FOR PRESERVATION OF TRADITIONAL SRI LANKAN MURAL PAINTINGS.

Rajadurai,G. Krishnamoorthy,K.,& Saravanakumar,A.R. (2022).A STUDY OF HISTORICAL PAINTINGS INSPIRED BY INDIAN REGIONS.

கிருஷ்ணராஜா,சோ.(1997).தற்காலத்து யாழ்ப்பாணத்து ஓவியர்கள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சனாதனன்,தா.(2007).பனுவல்:காலனிய யாழ்ப்பாணத்தில் ஓவியத்தில் நவீனத்துவமும் இருமை நிலையும்.சமூக பண்பாட்டு உயர் கற்கைகளுக்கான கொழும்பு நிறுவனம்.(5ஆவது இதழ்).

சிவரெத்தினம்,சு.(2011).ஈழத்து நவீன ஓவியம் எஸ்.ஆர்.கனகசபை முதல் மாற்கு வரை.குமரன் புத்தக இல்லம்.கொழும்பு.06.

சிவத்தம்பி,கா.(2000).யாழ்ப்பாணம் சமூகம், பண்பாடு, கருத்துநிலை.குமரன் புத்தக நிலையம், கொழும்பு.

தம்பித்துரை,ஆ.(1982).யாழ்ப்பாணத்து பிற்காலத்து சுவரோவியங்கள்,கலாகேசரி கலாலயம், குரும்பசிட்டி.

ஜகத் வீரசிங்க.(2004). ArtLa .இலங்கையில் சமகாலக் காண்ரியக் கலை நடைமுறைபளும் தொண்ணூறுகளின் போக்கும்.கலை மற்றும் பேறு தொடர்பான வெளியீடு.

73

நாட்டிய இலக்கண நூல்கள் கூறும் நாட்டியக்காரர்களின் பண்புகள் - சமகால நோக்கு நிலையினூடான விமர்சன ஆய்வு

யோகநாதன் துஷாந்தினி
முனைவர் பட்ட ஆய்வாளர்
கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை
thushanthiniy@gmail.com

அறிமுகம்

தமிழ்ப் பண்பாட்டுப் பேறுகளில் மிக முக்கியமான ஒன்று ஆடற் கலையாகும். இது இறைவனையும் நடன வடிவில் காணுமின்பத்தை அளிக்கவல்லது. இத்தகைய நாட்டியத்தை ஆற்றுகை செய்ய நடனம் பற்றிய இலக்கணங்களையறிதல் அவசியமாகிறது. இவ்விலக்கணங்கள் பாவ, ராகத்தோடு தாளக்கூறுகளையும் கொண்டமைகின்றன. இம்மூன்றும் நடனத்துடன் தொடர்புபடுவது பற்றிய விரிவான விளக்கங்களை நாட்டிய சாஸ்திரம், அபிநய தர்ப்பணம், சிலப்பதிகாரம், பரத சேனாதிபதியம் போன்ற நூல்கள் வழங்கியுள்ளன. ஆடல் நிகழ்த்துவோனின் பண்புகளைப் பற்றியும் பேசுகின்ற இந்நூல்கள் அதுபற்றி ஒன்றுடன் ஒன்று முரணான கருத்துக்களையே வெளிப்படுத்துகின்றன. அவற்றுள் நாட்டிய சாஸ்திரம் கூறும் பாத்திரம் சார்ந்த விடயங்களிலிருந்து அபிநய தர்ப்பணம் கூறும் ஆடுவோனின் பண்புகள் வேறுபட்டமைவதோடு, அவ்விரண்டினது பார்வையிலிருந்தும் சிலப்பதிகாரத்தினதும் பரத சேனாதிபதியத்தினதும் நாட்டியப் பாத்திரப் பண்புகள் வேறுபட்டு அமைகின்றன.

ஆய்வின் நோக்கம்

சிலப்பதிகாரம், பரதசேனாதிபதியம், நாட்டிய சாஸ்திரம், அபிநய தர்ப்பணம் ஆகியவை கூறியுள்ள பாத்திரப் பண்புகளின் வேறுபாட்டைத் தெளிவுபடுத்தி அதற்கான காரணங்களை ஆராய்வதோடு சமகால நோக்கு நிலையில் ஆடல் நிகழ்த்துவோனின் பண்புகள் எப்படிப்பட்டனவாக

இருக்கவேண்டும் என்பதனை முன்மொழிவதுமாக இவ்வாய்வு அமைகிறது.

ஆய்வு முறையியல்

சிலப்பதிகாரம், பரதசேனாதிபதியம், நாட்டிய சாஸ்திரம், அபிநய தர்ப்பணமெனும் நான்கு இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு ஒப்பீடு மற்றும் விபரண முறைமையியல்களுக்கு அமைய இவ்வாய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

நாட்டிய இலக்கண நூல்கள் கூறும் நாட்டியக்காரர்களின் பண்புகள்

ஆறாயிரம் சமஸ்கிருத சுலோகங்களுடைய பரதரின் நாட்டிய சாஸ்திரத்தை கலைஞர்கள் தாம் கையளுகின்ற நடன முறைகளை தமது மொழியிலேயே ஒப்பிடவும், தாமறிந்திரா கலை நுணுக்கங்களை கற்றுணர வேண்டுமெனும் நோக்குடனும் கலைமாமணி எஸ். என். ஸ்ரீராமதேசிகன் தமிழ் மொழிபெயர்ப்பைச் செய்தார். மொத்தமாக முப்பத்தாறு அத்தியாயங்களுடைய இந்நூல், 28-33 வரையான அத்தியாயங்களில் இசையம்சங்கள் சிலவற்றுக்கான விளக்கங்களையும், அவை தவிர்ந்த ஏனைய முப்பது அத்தியாயங்களில் நாட்டியாம்சங்களுக்கான விளக்கங்களையும் உள்ளடக்கியுள்ளது. அவற்றில் 35-ம் அத்தியாயத்துள் நாட்டியப் பாத்திரமேற்போரின் பண்புகளை விளக்கும் பரதர், இயக்குனர் ஒருவர் தன்னால் உருவாக்கப்பட்ட நாட்டியம் ஒன்றுக்கான பாத்திரங்களின் தெரிவின்போது நடிகர்களின் இயற்கைத் தோற்றம், நடை, உரையாடல் தன்மை போன்றவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டுமென்பதை வலியுறுத்துகிறார்.

நடிகர்களுக்கு ஏற்ற பாத்திரத்தை வழங்கும் செயலானது அந்நாடகத்தின் வெற்றிக்கு வழிவகுக்கும் என்பதைக் கூறுமிவர், இயக்குனர்களால் உருவாக்கப்படும் பொதுவான கதா பாத்திரங்களையும், அவற்றை ஏற்போருக்கு இருக்க வேண்டிய இலக்கணங்களையும் குறிப்பிடுகிறார். அவற்றுள், தேவதை பாத்திரமேற்போர் ஊனமற்ற உடல், குரல் வளம், நடுத்தர உடற்கட்டு போன்ற பண்புகளையும், மன்னர் பாத்திரமேற்போர் செழிப்பான உறுப்புகளைக் கொண்ட உடல், நன்னடத்தை, அறிவாற்றல்,

விவேகம், நடுத்தர உடற்கட்டு போன்ற பண்புகளையும் கொண்டிருக்க வேண்டுமெனக் கூறப்பட்டிருப்பதுடன், வேலைக்காரர்களின் பாத்திரமேற்போர் இவையிரண்டிலிருந்தும் மாறுபாடான பண்புகளைக் கொண்டிருக்க வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது. 'ஒற்றைக்கண் அற்றவர், விகாரத்தோற்றம் - கொண்டவர், பருத்த உடல் கொண்டவர், சப்பை மூக்குள்ளவர், ஒழுங்கற்ற வேடம் (ஆடை, நடை முதலியன) கொண்டவர், இயற்கையாகவே பரம்பரையாகப் பணியாளர்களாக உள்ளவர் போன்றவர்களை நியமிக்க வேண்டும்' (ஸ்ரீராமதேசிகன்.எஸ். என்.பக்.477)

இதன் பிற்தொடர்ச்சியாக நாடகத்தை சார்ந்துவரும் ஏனைய உதவியாளர்களின் வரிசையில் தலைவியின் பண்புகள், தலைவியாகத் தகுதியற்றவர்களின் பண்புகள் என்பனவும் முன்வைக்கப்பட்டுள்ளன. 'அழகு, குணம், நடத்தை, பருவம், இனியதன்மை, வலிமை, திறமை, தெளிவான நல்ல தன்மைகள் கொண்டவள், சிவந்த நிறமுள்ளவள், எளிதில் மனக்குழப்பம் அடையாதவள், லயம், தாளம் என்பன அறிந்தவள், சுவை உணர்வு கொண்டவள் தலைவி ஆகத் தக்கவள்' (ஸ்ரீராமதேசிகன்.எஸ். என்.பக்.480) 'தேவையற்ற போது நகைப்பவள், திறமையற்ற செயல்பாடுகள் கொண்டவள், நீண்டநாள் ஆறாத சினம் கொள்பவள், தைன்யம் உள்ளவள், செருக்கு மிக்க நடை உள்ளவள், பொலிவு அற்றவள் தலைவியாக விளங்கத் தகாதவளாவாள்' (ஸ்ரீராமதேசிகன்.எஸ்.என்.பக்.480)

நாட்டிய சாஸ்திரத்தினைத் தொடர்ந்து ஆடலிலக்கணங்களை பேசும் மற்றுமொரு முக்கிய நூல் அபிநய தர்ப்பணம். இது நந்திகேஸ்வரரால் எழுதப்பட்டு கிறிஸ்துவுக்கு பின் பதின்மூன்றாம் நூற்றாண்டிலறியப்பட்ட படைப்பு. இதனை வீரராகவையன் மொழிபெயர்ப்புச் செய்தார். இதன் பொருளடக்கப் பகுதி முற்சேர்ப்பு, நூல், பிற்சேர்ப்பென மூன்று பிரிவுகளாகப்பட்டுள்ளன. அவற்றுள் முற்சேர்ப்பு, பிற்சேர்ப்பெனும் இரண்டும் மகா பரதசூடாமணியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவையாக அமைகின்றனவென்பதை இந்நூலின் முகவுரை விளக்க, அம்மகா பரதசூடாமணி மகாபரதமெனும் வடமொழி நூலைச் சுருக்கி அமைக்கப்பட்டதென்பதை பரதசேனாபதியம் விளக்குகிறது. முற்சேர்ப்பில் சபாமண்டபம், சபையிலிருப்போர் பண்புகள்

போன்றவற்றுடன் பாத்திர, அபாத்திர லக்ஷ்ணங்களும் இடம்பெற்றுள்ளன. பாத்திர லக்ஷ்ணமானது அரச சிம்மாசனத்தின் முன் தோன்றும் ஆடற் பெண்ணின் கல்வியறிவு, திறமை, கோபமின்மை, தெய்வ, குரு பக்தி என்பவற்றோடு உருவ நிறவமைப்பினைப் பற்றியும் பேசுகிறது. அவற்றுள் அழகு, சிவந்தநிற மேனி, பருமன் மற்றும் உயரத்தில் நடுத்தரம், விரிந்த கண்கள், முக மலர்ச்சி, அங்க அல்லது உறுப்பமைப்பு போன்றவை குறிப்பிடத்தக்கன.

'சிவந்தழகாய் வண்மை காட்டும்
அன்னமன்னாள்,' (அபிநயதர்ப்பணம் 15)

'மிகப்பருத்தல் மிகவிளைத்தல் மிகவுயர்ச்சி
மிகக்குறுகல் மேவா மெய்யும்,
தகுரூபம் யவ்வனம் உத் தமதனமும்' (அபிநயதர்ப்பணம் 17)

'சகலமனோ கரங்கிரகித் தருள, சுரக்
கியானமும்வி சால நேத்ரம்
மிகுமவய வத்தினொளிர் முகமலர்ச்சி' (அபிநயதர்ப்பணம் 17)

இதேவேளை, இந்நூலில் கூறப்படும் அபாத்திர லக்ஷ்ணங்கள் கல்வியறிவின்மை, பொறுமையின்மை, சொற்களின் பொருளுணராமை, பரத உள்ளடக்கங்களை அறியாமை, குறிப்பறியாத் தன்மை, ஆசிரியர் சொல்லை மீறிய நடத்தை, அரங்கில் செய்யத்தகாத செயல்களைச் செய்தல் (வியர்வை துடைத்தல், உதட்டினை கடித்தல் மற்றும் ஈரப்படுத்துதல், தலை, மூக்கைச் சொறிதல், சோம்பல் முறித்தல், அவைக்கு பின் காட்டல்) என்பவற்றோடு மனிதனின் சிற்சில உருவ, நிற வேறுபாடுகளையும் உள்ளடக்குகிறது. அவற்றுள் அம்மை நோயினால் வடுக்களை பெற்றிருக்கும் முகம், ஒற்றை விழியை கொண்டிருத்தல், நீர் விழி, மாறுபட்ட விழி, மாலைக்கண், கழுத்து மற்றும் முகம் நீளமாயிருத்தல், காது கேட்காமை, பெரிய தலையை கொண்டிருத்தல், கூந்தல் இல்லாமை, கறுப்பு நிற மேனி, கொங்கையில்லாமை, சிவந்த கண்கள் போன்றவை குறிப்பிடத்தக்கன.

மேற்கூறப்பட்டுள்ள இரு வடமொழி நூல்களும் அழகினை ஒரு பாத்திரப் பண்பாக பார்க்கின்றபோது இளங்கோவடிகளின்

சிலப்பதிகாரம் அழகினை ஒரு கலைவடிவாகக் காண்கிறது. இதனை நாட்டியப் பெண் மாதவியின் அரங்கேற்ற செய்திகளைக் கூறும் அரங்கேற்றுக்காதை பாடலொன்று சான்று பகர்கிறது.

'தா தவிழ் புரிகுழல் மாதவி தன்னை
யாடலும் பாடலும் மழகு மென்றிக்
கூறிய மூன்றி னொன் றுகுறை படாம
லேழாண் டியற்றியோ ரீரா றாண்டிற்
சூழ்கழன் மன்னற்குக் காட்டல் வேண்டி' (சிலப்பதிகாரம் 10)

சோழ மன்னன் முன்னிலையில் ஆடல் அரங்கேற்றத்தை நிகழ்த்த வேண்டி மாதவி ஏழு வருடங்களாக ஆடல், பாடல், அழகு எனும் மூன்றினையும் கற்றுத் தேர்ந்தாளென்பதனூடாக சிலப்பதிகாரத்தில் வேந்தனவையில் கூத்தாடும் கூத்தியரிடத்து அமையும் அழகு, கூத்துடன் இணைந்தவோர் ஒப்பனை கலை தொடர்பான அறிவினை பெற்றிருத்தலேயெனலாம். கூத்தில் சிறப்பு தேர்ச்சியுடைய மாதவியன் ஆசிரியனிடத்திலும் உடற் தோற்றம், மேனி நிறம் போன்றவை எதிர்பார்க்கப்படவில்லை யென்பதை அரங்கேற்றுக்காதை பாடல் புலப்படுத்துகிறது. ஆட்டுவிக்கத் தெரிந்த ஆசிரியன் ஆடுதலிலும் வல்லவனாக இருக்கவேண்டுமென்பதைக் கூறும் ஆடற் கமைந்தவனாசிரிய னென்ப எனும் வரியினையுடைய பரத சேனாதிபதியமும் இவ்வாடல் வல்லமையுடையோன் கூத்துக்கள், அவற்றின் இலக்கணங்கள், பாடல்கள், அபிநயங்கள், தாளங்கள் என்பனவற்றில் திறமையுடையவனாயிருத்தல் வேண்டுமென சிலப்பதிகாரத்தோடு ஒன்றித்த கருத்துக்களையே புலப்படுத்துகிறது.

ஆடலானது உணர்வுகளின் வெளிப்பாடு. அவ்வெளிப்பாடு படைப்பாளிகளிடத்தும் சபையோரிடத்தும் ஓர் உறவை உருவாக்கக் கூடியது. அவ்வுறவுத் தீர்மானிப்பில் நாட்டிய சாஸ்திரம் கூறும் இயக்குனர் ஒருவரின் பாத்திரத் தெரிவின்போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய நடிகர்களின் இயற்கைத் தோற்றமெனும் காரணியும் செல்வாக்கு செலுத்தும். ஆனால், இவ்வியற்கைத் தோற்றத்தில் உள்டங்கும் நடிகர்களின் மேனி நிறமானது இயக்குனரால் உருவாக்கப்படும் அல்லது முன்வைக்கப்படும் கதாப்பாத்திரமொன்றுக்கு பொருத்தமாயிருத்தல்

அந்நாட்டியத்துக்கு சிறப்பைத்தர வல்லதெனும் கருத்தை விடுத்து, அக்கதாப்பாத்திரத்தை ஏற்போருக்கான தகுதியெனும் கருத்தை புலப்படுத்தியிருப்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்றாகும். இத்தவிர்க்கப்படவேண்டிய விடயத்தினை நாட்டிய சாஸ்திரம் தலைவியாகத்தக்கவளின் இலக்கணங்களுக்குள் உள்ளடக்கியிருக்கும் அதேசமயம் அபிநய தர்ப்பணமோ பாத்திர லக்ஷ்ணங்களுக்குள் சிவந்த நிற மேனியையும், அபாத்திர லக்ஷ்ணங்களுக்குள் கறுப்புநிற மேனியையும் உள்ளடக்கியுள்ளது. இக்கறுப்பு, சிவப்பு நிறமேனி பாகுபாடுகள் எங்கிருந்து, எப்போது, எதன் காரணமாக பரதத்துள் ஊடுறுவியது என்கிற ஆராய்வுகள் ஒருபுறமிருக்க, இன்றைய காலகட்டத்தைப் பொறுத்தவரையில் பொதுக்கலையான பரதத்தை எந்நிற மேனியரும் கற்பார் என்பதையும், நாட்டியத் தலைவியாகத் தக்கார் என்பதையும் தம் ஆற்றுகைகளினூடாக நிரூபித்துக் கொண்டிருக்கும் கலைஞர்களுக்கு இவ்விலக்கணாம்சங்கள் அவசியமற்றவையே.

தற்காலச் சமூகத்தினர் பரத நாட்டியக் கலையினை ஒரு சிகிச்சையாகவும் (Therapy) பயன்படுத்தப்படுத்தி வருகின்றனர். இவர்கள் இதுவரை நடனமே கற்றிராத தசைக்கூட்டு காயங்களுடைய நோயாளிகள் (Patients with musculoskeletal injuries), நரம்பியல் நோயாளிகள் (Neurodegenerative disorders) போன்றோரின் குணப்படுத்தலுக்கு பரத நாட்டிய அசைவுகளை அறிமுகப்படுத்துதல், முறையான பயிற்சிகளை தொடர்ச்சியாக வழங்குதல் (தட்டடவு, நாட்டடவு, கழுத்து மற்றும் கண்ணசைவுகள், கையசைவுகள், முத்திரை பயிற்சிகள்) போன்ற செயற்பாடுகளூடாக மாற்றங்களை கண்டுவரும் அதேசமயம் இவைதொடர்பான ஆய்வுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு சமகாலச் சமூகத்தினர் மனிதனின் உடல்சார் குறைபாடுகளுக்கான தீர்வினை பரதக்கலைக்குள் தேடிக்கொண்டிருக்கையில், அபிநய தர்ப்பணமோ மனிதனின் உடல்சார் பிரச்சினைகளை பரதத்தின் அபாத்திர லக்ஷ்ணங்களுக்குள் உள்ளடக்கியிருப்பதென்பது ஏற்றுக்கொள்ளத்தகாத கருத்தாகிறது.

மனித உடலின் ஒவ்வொரு அங்கமும் அம்மனிதனின் ஏதோவொரு தேவையை பூர்த்தி செய்யும் நோக்குடனேயே அமையப்பெற்றுள்ளது. அதனுள் பெண்களின் மார்பும் அவர்களின் குழந்தைகளுக்கான நோயெதிர்ப்பு சக்தியுடைய உணவினை

வழங்கும் பணி நிமித்தமுடையவோர் உறுப்பாகும். ஆனால் இவையின்று இயற்கையான அடிப்படை சமூகத் தேவையிலிருந்து விலகி, இன்பம் தரக்கூடிய பாலியல் அங்கமாகப் புனையப்பட்டுள்ளது. எந்தவோர் காலகட்டத்திலும் எவ்வுயிரினாலும் ஆபாச உணர்வுடன் பார்க்கப்படாத பெண்னின் மார்பு மனித இனத்தில் மாத்திரம் ஆண்களுக்கு இன்பமளிக்கும் கவர்ச்சி அங்கமாகவும் உருவகிக்கப்பட்டுள்ளது. அபிநய தர்ப்பணமும் கொங்கையில்லாமையை அபாத்திர லக்ஷ்ணங்களுக்குள் உள்ளடக்கியுள்ளது. இந்நூல் கர்ப்பமுற்றிருத்தலை அபாத்திரப் பண்பாக முன்வைத்திருக்கும் அதேசமயம் கொங்கை இல்லாமையையும் அதனுளடக்கியுள்ளது. அதாவது, கர்ப்பமானவர்கள் நடனமாடுதல் அவர்களின் உடல் நலனுக்கு ஆபத்தை ஏற்படுத்துமென்பதால் அப்பண்பை இதனுள் உள்ளடக்கியிருப்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டுமென்றாலும். அத்தாய்மைத் தன்மையுடன் தொடர்புடைய பெண் மார்பின் அவசியம் என்ன? அப்படியானால், இந்நூல் பெண்னின் மார்பை காட்சிப் பொருளாக பார்க்கின்றதா? அல்லது கவர்ச்சிப் பொருளாக பார்க்கிறதா? பரத நாட்டியத் தோற்றம் மற்றும் வளர்ச்சியில் பிரம்மன், சிவன், பரதமுனி ஆகிய ஆண்களைப் பற்றியும் பேசியிருக்கும் இந்நூல்கூறும் ஆடலுக்கு பெண் மார்பின் தேவையென்ன இருக்கிறது? அத்தோடு, ஆண்களையும் பெண்களையும் கடந்து திருநங்கைகளும் கற்றுத்தேரும் நடனக்கலைக்குரிய அபாத்திர லக்ஷ்ணங்கள் பெண்களை மையப்படுத்திய பண்புகளை பெரும்பான்மையாகவும் ஏனையவை பொதுப்பண்புகளாகவும் அமைந்திருத்தலும் ஏனையவர்கள் சார்பில் எந்தவித பண்புகளும் அபாத்திர லக்ஷ்ணங்களாக முன்வைக்கப்படாததும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத விடயங்களாகின்றன.

இவற்றுடன் கூந்தலின்மையையும் ஒரு அபாத்திர லக்ஷணமாக்குகிறது இந்நூல். தலையில் முடியற்ற நிலையில் ஆற்றுகைகளை புரிந்துவரும் பரதக் கலைஞர்களைக் காணும் சமகாலத்தில் இவ்வாறான விடயங்களெல்லம தற்கால மனித சமூகத்தில் கருத்து முரண்பாடுகளாவே அமைகின்றன.

முடிவுரை

பரதநாட்டியக் கலைஞர்களுக்குரிய பண்புகளைப் பொறுத்த வரையில் ஆய்வுக்கெடுத்துக் கொள்ளப்பட்ட வடமொழி இலக்கியங்களுக்கும், தமிழ்மொழி இலக்கியங்களுக்கும் இடையிலே ஒப்பீட்டளவில் வேற்றுமைகள் காணப்படுகின்றன. இவற்றுள் நாட்டிய சாஸ்திரம் மற்றும் அபிநய தர்ப்பணமெனும் இரு நூல்களிலுமே சமகாலத்துடன் பொருந்தாத கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இக்கருத்துக்கள் ஆண்நிலை நோக்கில் எழுதப்பட்ட நூற்கூறுகளைச் சார்ந்தமைந்த காரண அடிப்படையே பெண்னைக் கவர்ச்சிப் பொருளாகக் காணும் தன்மையை தோற்றுவித்திருக்கக் கூடுமெனலாம். உடல், உள மருத்துவ சிகிச்சை ரீதியிலும் ஆன்மிக ரீதியிலும் தற்கால மனித சமூகத்தில் நெருங்கிய பிணைப்போடு வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் பரதநாட்டியக் கலையின் போக்கில் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத நூலம்சங்களை கவனத்தில் கொள்ளாமல் தற்போதைய கால சூழ்நிலைகளுக்கேற்ற விடயங்களை உள்வாங்கி நடனக் கலையை பயிலுதல் வேண்டும்.

உசாத்துணை நூல்கள்

கலியாண சுந்தரையர். (1944). பரத சேனாதிபதியம். வசந்தா அச்சுக்கூடம்.

கார்த்திகா கணேசர். (1969). தமிழர் வளர்த்த ஆடற்கலைகள். தமிழ்ப் புத்தகாலயம்.

சிவசாமி,வி. (1988). பரதக்கலை. நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ்.

சீனிவாசன்,ரா. (1998). சிலப்பதிகாரம் மூலமும் திறனாய்வும். நெல்சன் பிரிண்டர்ஸ்.

வீரராகவையன். (1957). அபிநயதர்ப்பணம்: மூலமும் உரையும். வசந்தா பதிப்பகம்.

ஜெயராசா,சபா. (1998). பரதநாட்டிய அழகியல். கார்த்திகேயன் (பிறைவேட்) லிமிட்டெட்.

ஸ்ரீராமதேசிகன்,எஸ்.என். (2001). பரதநாட்டிய சாஸ்திரம். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

74

இலங்கைத் தமிழர் மரபில் பெருங்கற்காலப் பண்பாட்டுக் குறியீடுகள் - ஓர் வரலாற்று ஆய்வு

சுந்தரலிங்கம் பிரசாந்தன்
Govt. teachers' College, Kotagala, Sri Lanka.
artpirasa@gmail.com

ஆய்வின் அறிமுகம்

இலங்கையில் நீண்ட கால வரலாறு, பண்பாடு தொன்மமுடைய ஓர் இனக்குழுவாக தமிழர்கள் காணப்படுகின்றனர். பெருங்கற்கால இனக்குழுக்கள் என்பது திராவிட மொழி பேசுபவராகவே அடையாளங்காண முடிகின்றது. அதில் தமிழ் பேசுவோரும் ஒரு பகுதியினராகக் காணப்படுகின்றனர். தமிழர்களின் பண்பாட்டு வாழ்வியல் என்பது வரலாற்றறிஞர்களால் பெருங்கற்கால மக்களின் பண்பாட்டு வாழ்வுடன் இணைந்ததாக நோக்கப்படுகின்றது. இதன் வழியே தமிழர் பண்பாடு இலங்கையில் இப்புவியின் தட்ப வெப்பநிலைகளுக்கும் இயற்கைச் சூழமைவுக்கும் இயைபாகவும் போராடியும் தமக்கென்று ஓர் வாழ்வியலையும் பண்பாட்டையும் உருவாக்கிய வரலாற்றினைக் கொண்டது. அதாவது இலங்கையில் தமிழர் வாழ்வியல் என்பது தமிழ்ப் பண்பாடு பற்றிய அடையாளம் கொண்டதாகக் காணப்படுகின்றது.

இவ் ஆய்வானது யாழ்ப்பாணப் பிராந்தியத்தினையும் அதனை அண்டிய பகுதிகளிலும் காணப்படுகின்ற குறியீடுகள் பற்றியதாக அமைகின்றது. இங்கு பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் தமது வாழ்வியற் சூழலில் பயன்படுத்திய பல்வேறு குறியீடுகளைப் பற்றியதாக இவ் ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எழுத்துக்களின் பயன்பாட்டுக்கு முன்பு உயர் பாவணை கொண்டதாகவும் தொடர்பாடல் அடையாளங்களாகவும் இக்குறியீடுகள் பயன்படுத்தப்பட்டன. இவை எழுத்தின் வருகையுடன் வழுக்குன்றிக் காணப்படினும் பாரம்பரியம்,

நம்பிக்கை, பண்பாடு என்ற நிலைகளில் இன்று வரை பயன்பாட்டில் உள்ளன. ' இலங்கைத் தமிழர் மரபில் பெருங்கற்காலப் பண்பாட்டுக் குறியீடுகள் -ஓர் வரலாற்று ஆய்வு' என்னும் இவ் ஆய்வானது யாழ்ப்பாணப் பகுதியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் காணப்படும் குறியீடுகளின் கருப்பொருளாகும். இக் குறியீடுகளின் வரலாறு, பண்பாட்டுப் பெறுமானம், சமூக அசைவில் செயற்றிறன் போன்றவற்றைக் கருவாகக் கொண்டு ஆராயப்பட்டுள்ளது.

தமிழர் பண்பாட்டுச் சூழலின் உட்கூறுகளும் பெறுமானங்களும் காண்பியப் பண்பாட்டு அடையாளங்களும் பரந்து காணப்படுபவை. இவ் ஆய்வானது ஈழத்து தமிழர் பண்பாட்டுத் தளத்தில் பண்பாட்டு அடையாளங்களாகக் காணப்படும் கூறுகளுள் கட்புல வடிவங்களாகக் காணப்படுகின்ற குறியீடுகளை ஆய்வுப் பரப்பாகக் கொண்டுள்ளது. மறுநிலையில் மட்டுப்பாடு பற்றி நோக்கின் யாழ்ப்பாணப் பிராந்தியமும் அதனை அண்டிய மக்கள் வாழ்விடப்பகுதிகளும் ஆய்வுக்குரிய எல்லைகளாகக் காணப்படுகின்றன. குறியீடு பற்றிய இவ் ஆய்வில் ஏனைய கட்புல அடையாளங்கள் பற்றி பேசாது தவிர்க்கப்பட்டுள்ளது. தனித்துக் குறியீட்டின் பரப்புக்குள் நின்று அவை சமூக வாழ்வியலுடன் எவ்வாறு செயல் வடிவம் பெற்றுக் காட்சியளிக்கின்றன, அவை பெறும் பண்பாட்டுப் பெறுமானம் எவ்வாறுள்ளது போன்றன ஆராயப்பட்டுள்ளன.

இலங்கையில் தமிழர்களின் இன்றைய வாழ்வின் மிகவும் ஆரம்ப நிலையாக வரலாற்றில் பெருங்கற்கால வாழ்வியலைக் கொள்ள முடியும். இப் பெருங்கற்கால மக்கள் வாழ்வியலில் பயன்படுத்திய மொழி, கலை, நுட்பங்கள், வாழ்வியல் நம்பிக்கைகள் யாவும் தொல்லியற் சான்றுகளாகக் கிடைக்கும் தாழிகளிலும் ஈமச்சின்ன மையங்களிலும் மட்பாண்ட கீறல்களின் மூலமுமே அறிந்து கொள்கின்றோம். பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய கிறுக்கல் வடிவங்கள் ஒருவகைத் தொடர்பாடல் திறனுடைய அடையாளங்கள் என்பர். (இந்திரபாலா, 2006).

மனிதன் மொழியறிவு அற்ற காலத்தில்கூட கைகளையும் இயற்கையின் பகுதிகளையும் குறியீட்டுணர்வுடன் பயன்படுத்தி வந்துள்ளான். தொடர்புக்காகவும் வாழ்வியல் பண்பாட்டுக் கூறுகளாகவும் குறியீடு பயன்பாடு கொண்டிருந்ததனை அறிய முடிகிறது. பல்லாயிரமாண்டுக் காலப் பரிணாம வளர்ச்சிநிலைச்

சிந்தனைகளையும் பொருள்சார் பண்பாட்டுச் சான்றுகளையும் கொண்டு அறியப்படுகின்றன (பவுண்துரை, 2004).

குறியீடுகளின் தோற்றம் என்பது கட்புல வடிவங்களின் ஆக்கநிலைகளிலிருந்து ஆரம்பமாவதாக நோக்கப்படுகிறது. கட்புல கருவிகளும், வரைபுகளும், அடையாளங்களும் உருவான காலத்தில் கட்புலக் குறியீடுகளும் தோற்றம் பெற்றது. தமிழர்களின் வாழ்வியல் பண்பாடு கொண்ட யாழ்ப்பாணத்திலும் அதனை அண்டிய பூநகரி, அக்கராயன், ஊற்றுப்புலம், கோணாவில் போன்ற இடங்களில் கண்டெடுக்கப்பட்ட பல்வேறு மட்பாண்டங்கள், தொல்பொருட்கள் போன்றவற்றில் பல்வேறு பெருங்கற்கால குறியீட்டு வடிவங்கள் அடையாளம் காணப்படுகின்றன. அவை சமயச் சின்னங்களாக, குலச்சின்னங்களாக, வணிகச்சின்னங்களாக, எழுத்துகளாக பயன்பாடு பெற்றுள்ளன எனக் கருத்துகின்றனர்.

வரலாற்றுக் காலத்துடன் நிலவிய பண்பாட்டுச் சூழலையும் அப்பண்பாட்டுச் சூழலில் பயன்படுத்தப்பட்ட குறியீடுகளையும் அவை காணப்படுகின்ற கல்வெட்டுக்கள், செப்பேடுகள், முத்திரைகள், நாணயங்கள் போன்றவை பற்றியும் அவற்றில் உள்ள குறியீட்டு தனித்துவம் பற்றியும் அறிந்து கொள்ள முடிகின்றது. இக்காலச் சூழலும் பண்பாட்டுப் பெறுமானமும் அவற்றினூடு எழுந்த குறியீட்டு வடிவங்களும் அக்காலப் பண்பாட்டின் காட்சிப் பெறுமானங்களாகவும் கட்புல ஆதாரங்களாகவும் விளங்கி நிற்கின்றன. சமகாலப் பண்பாட்டிலும் இவை மதநம்பிக்கையின் அடிப்படையிலும் சமூக சாதிய, பிரதேச எண்ணங்களுக்கு ஏற்ப பயன்படுத்தப்பட்டு வருகின்றன. குறியீடு பயன்படுத்தும் முறை பொதுவாயினும் இலங்கைத் தமிழர்களுக்கு என்று குறியீட்டு முறையும் பயன்பாட்டு மற்றும் பண்பாட்டுப் பெறுமானமும் காணப்படுகின்றமையை இவ் ஆய்வு வெளிக்காட்டுகின்றது.

ஆய்வின் நோக்கம்

இலங்கையில் பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய குறியீடுகள் சமகால தமிழர்கள் மத்தியில் காணப்படுகின்றமையை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் கட்புல வடிவங்களையும், பண்பாட்டுப் பெறுமானங்களையும் கண்டறிதல் ஆய்வின் நோக்கமாகும்.

ஆய்வு முறையியல்

இலங்கைத் தமிழர் மரபில் பெருங்கற்காலப் பண்பாட்டுக் குறியீடுகள் – ஓர் வரலாற்று ஆய்வு என்கின்ற இவ் ஆய்வானது ஒரு பொருளின் தோற்றத்தினையும், வளர்ச்சியையும் முறையாகக் கண்டறியும் நோக்கில் கிடைக்கப் பெற்ற தரவுகளின் வழி ஆராய்ந்து துலங்கச் செய்யும் வரலாற்றாய்வு முறை சார்ந்த ஆய்வாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பண்பாட்டு எச்சங்களிலும் வழக்கங்களில் இருந்தும் எமது பண்பாட்டில் குறியீட்டின் புழக்கத்தினை வரலாற்றாய்வு முறை மூலம் ஆராயப்பட்டுள்ளது. இவ் ஆய்வுக்கு வரலாற்று ஆய்வு முறை பின்பற்றப்பட்டு தரவுகளும், தகவல்களும், சந்திப்புக்களும், புகைப்படங்களும் சேகரிக்கப்பட்டு ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கலந்துரையாடல்

வட இலங்கையில் தமிழர் வாழ்நிலங்களில் ஒன்றான பூநகரியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் கிடைக்கப் பெற்ற பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய மட்பாண்டங்களில் பெருங்கற்காலப் பயன்பாட்டுக்குரிய குறியீடுகள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மட்பாண்டக் குறியீடுகளாகவும் பிராமியைச் சாரா கல்வெட்டுக் குறியீடுகளாகவும் கிராபிக் குறியீடுகளாகவும் தொகுத்துப் பார்க்க முடிகிறது. அத்துடன் தமிழர் பயன்பாட்டில் இருந்த குறியீட்டு வடிவங்கள் இலங்கை முழுவதும் பரவிக் காணப்பட்டன.



பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய வாழ்வியல் கொண்ட பண்பாட்டு ஆய்வு தமிழர் பிரதேசத்தில் முதன்முதலில் கந்தரோடையில் ஆய்வு செய்யப்பட்டு வெளிக்கொணரப்பட்டது. அவ்வாறு பெருங்கற்காலப் பண்பாட்டில் காணப்படுகின்ற குறியீடுகள் பற்றி நோக்கின் இங்கு மட்பாண்டங்களில் வரையப்பட்ட குறியீடுகள், எழுத்துக்கள், அயல் பிராந்தியங்களுடனான தொடர்புகளுடைய குறியீடுகள், அரசியல், பொருளாதாரம் போன்ற அம்சங்கள்; குறியீட்டாக்கத்தில் செல்வாக்குற்றிருக்கின்றன. இவ் அம்சங்கள் கந்தரோடையில் கிடைத்த மட்பாண்ட பாவனைப் பொருட்களில் காணப்படும் குறியீடுகள் மூலம் உணரமுடியும். (கிருஸ்ணராஜா, 1998). இவ்வாறு ஆனைக்கோட்டை, தீவுப்பகுதி, வல்லிபுரம் போன்ற இடங்களிலும் பெருங்கற்கால அடையாளங்களும் குறியீடுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் பெரும்பாலான பகுதிகளில் பெருங்கற்காலப் பண்பாட்டின் குறியீடுகள் காணப்படுகின்றன. அதாவது இலங்கையின் புவியியல் அமைப்புக்கமைய நோக்கின் ஆற்றுப்படுக்கைகளிலும் நீர்நிலைகளுக்கு அண்டியும் பெருங்கற்கால மக்கள் பண்பாடு கொண்ட மையங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இப்பண்பாட்டு இயங்குநிலை என்பது விவசாய உற்பத்தி சிறுதொழில், கலைத்திறன், மந்தை வளர்ப்பு என பல்வேறு தொழில்களுடன் கூடிய தொழில்நுட்பத்திறன் கொண்ட மக்கட் கூட்டத்தின் பண்பாடு என நோக்கமுடிகின்றது. இப்பண்பாட்டின் தொடர்ச்சியே சமகாலத் தமிழரின் பண்பாடு எனவும் கூறுதல் பெருத்தமுடையது. பொதுவாக இலங்கைப் பெருங்கற்காலப் பண்பாட்டில் காணப்படுகின்ற குறியீடுகளின் கட்புல வடிவங்களை நோக்கின் பெருங்கற்கால மக்களின் பண்பாட்டுச் செழுமையை உணர முடியும்.

பெருங்கற்கால மக்களின் பாவனையில் இருந்த அழிபொருட்கள் பற்றிய தகவல்கள் பெறமுடியவில்லை. ஆயினும் மட்பாண்டங்களின் துண்டுகளும், ஈமத்தாழிகளும் கற்கிறுக்கல்களும் ஆய்வுகளில் கிடைத்துள்ளன. இவற்றில் காணப்படும் குறியீடுகள் எண்ணிக்கையில் அதிகமாக இலங்கையில் கிடைத்துள்ளன. ஆயினும் அவை சார்ந்த கருத்துக் கூறல் முடிந்த முடிவாகக் கொள்ளமுடியாத நிலை காணப்படுகிறது.

இக் குறியீடுகளை ஈழ-தமிழக பண்பாட்டு இயைவுகளுடை யவையாக நோக்கவும் கூடிய குறியீட்டு ஒருமைத் தன்மைகள் காணப்படுகின்றன. அவ்வாறான நிலையில் பொதுவாக இக்குறியீடுகளை ஆராய்ந்த பல அறிஞர்கள் அவற்றை சமயச்சின்னங்களாக, வணிகச்சின்னங்களாக, குடும்பச் சின்னங்களாக, குலச்சின்னங்களாக, எழுத்துகளாக இருக்கலாம் எனக்கருதியுள்ளனர். அவ்வாறாயினும் குறிப்பிட்ட ஒரு குறியீடு குறித்த ஒரு செய்தியினை மட்டும் குறித்து நின்றதென்றோ குறியீடுகள் அனைத்தும் ஒரே வடிவத்துள் அடங்கின என்றோ கூறமுடியாது. அவ்வாறே எல்லாக்குறியீடுகளையும் எண்ணிக்கை, இடம், இடத்தொடர்பு என்பவற்றின் அடிப்படையில் ஒரே வெளிப்பாட்டு, கருத்துநிலைப்பண்புடையவை எனவும் நோக்க முடியாதுள்ளது. ஆயினும் சில வரிவடிவங்கள் தோன்றிய காலங்களில் எழுத்துக்களாக பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இதற்கு போதிய சான்றுகள் உண்டு. ஈழத்திலும் தமிழ்நாட்டிலுமுள்ள பெருங்கற்கால மட்பாண்டங்களில் காணப்படும் சில குறியீடுகள் ஒலிப்பெறுமானமுள்ள எழுத்தாக பயன்படுத்தப்பட்டன. (ராஜன், 1994).

பெருங்கற்கால மக்களின் பண்பாட்டின் இயல்பு, இயங்குநிலை பற்றிய மதிப்பீடுகள் தொல்லியல் அகழ்வுகள் மூலம் கிடைக்கின்ற ஆதாரங்களின் ஊடாக கூறப்படுபவையாகும். இவ் முடிவுகளின் உறுதிநிலை என்பது அகழ்வுகளின் புதிய கிடைப்பனவுகளால் மாற்றமுற்று வருகின்றன. அவ்வாறான மாற்றங்களின் வாயிலாகவே அறிவு பூர்வமான வரலாற்றுப் பதிவுகளை அறிய உதவிடும் எனலாம். ஆயினும் இது வரையில் பண்பாட்டியல்சார் ஆய்வுகளில் தொல்லியல் துறைசார் தகவல்களும் தரவுகளுமே வரலாற்றுக்கு முற்பட்டகாலப் பண்பாட்டின் கோலங்களை அறியக்கூடிய, நிச்சயிக்கக் கூடிய தகவல்களைத் தந்துள்ளன. இப்பகுதியினூடு இலங்கையில் குறிப்பாகத் தமிழர் வாழ் நிலங்களில் காணப்படும் குறியீடுகள் பற்றிய ஆராய்வுகளைத் தந்துள்ளன. அவற்றிலும் யாழ்ப்பாணம், அதனை அண்டிய வன்னிப்பிரதேச பெருங்கற்காலப் பண்பாட்டில் பயன்படுத்தப்பட்ட குறியீடுகள் பற்றியும் அவை காணப்பட்ட இடங்களின் அகழ்வாய்வுத் தரவுகளினூடும் ஆராய முடிந்துள்ளது. இப்பகுதியினூடு பெருங்கற்கால வாழ்வு மையங்களில் கிடைத்த குறியீடுகளையும் அவைபற்றிய

கருத்துரைப்புக்களையும் வரைபடங்களினூடான குறியீட்டு வடிவங்களையும் தொகுத்து ஆராய முடிந்துள்ளது. பெருங்கற்காலப் பண்பாட்டின் இயல்பும் அசைவும் என்பது இன்றைய தமிழ்ச் சமூகப் பண்பாட்டில் காணமுடியும்.

முடிவுகள்

யாழ்ப்பாணத்தினுள்ளும் அதனை அண்டிய பகுதிகளிலும் வாழ்ந்த, வாழுகின்ற மக்கள் கூட்டத்தின் பண்பாட்டு எண்ணங்களையும் நடைமுறைகளையும் குறியீடு பற்றிய ஆய்வில் அறிந்து கொள்ள முடிந்துள்ளது. இக்குறியீடுகள் கொண்டுள்ள சமூகப் பெறுமானம் கருத்தால் கொள்ளும் அடையாளங்கள், அளவுகள் போன்ற அனைத்து வகையிலும் தமிழர் பண்பாட்டில் குறியீடுகள் என்பது நீண்ட வரலாறு கொண்டு காணப்படுகின்றமை ஆய்வில் தெளிவாகின்றது. காண்பியப் பண்பாட்டின் அடையாளங்களாகக் குறியீடுகள் காட்சியளிக்கின்றன. இனக்குழுவாக இருந்த தமிழர்களின் பண்பாடும் வழக்காறுகளும் உயர்வான நிலையில் பேணப்பட்டுள்ளன. இதற்கு வரலாறும் சான்று பகர்கின்றது. இனத்தினுடைய அடையாளங்களாக் குறியீடுகள் நோக்கப்படவேண்டியுள்ளது. குறியீடுகள் குறைந்த அளவில் நிறைந்த கருத்தமைவில் பயன்படுகின்றன. இன்று விவசாயம், கால்நடை வளர்ப்பு, விலங்கு வேளாண்மை போன்ற தொழில்களிலும் தச்சுவேலை, வியாபாரம், கடற்தொழில், சலவைத்தொழில் போன்ற தொழில்களிலும் காணப்படுகின்ற குறியீடுகள் எல்லாவற்றையும் ஆராய்தல் என்பதற்கு அப்பால் நீண்ட வரலாற்றுடன் காணப்படுகின்ற குறியீடுகளைச் சமகாலம் வரை அதன் பயன்பாடும் வடிவமும் பற்றிய ஆராய்வுகள் நடைபெற்று முடிவுகள் கூறப்பட்டுள்ளன. இவை வரலாற்றுத் தொடர்ச்சி கொண்ட பண்பாட்டின் அடையாளங்களாகவும் தொன்மைப் பண்பாட்டின் ஆதாரங்களாகவும் காணப்படுகின்றன என்பதனைக் கூறமுடியும்.

உசாத்துணைகள்

Anat Rafaeli., & Monica worline. (1999). Symbols in organization Culture. University of Michigan.

Blum Harold. P. (1978). Symbolic Process and Symbol formation. International Journal of psycho-Analysis.

Gunarajahrao. B.K. (1972). The Megalithic Culture in south Asia. Mysore University.

இராஜன்.கா. (1994). கொடுமணல் அகழ்வாய்வு - ஓர் அறிமுகம். மனோ பதிப்பகம், தஞ்சாவூர்.

இந்திரபாலா.கா. (2006). இலங்கையில் தமிழர் - இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு. குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

கிருஸ்ணராஜா.செ. (1998). தொல்லியலும் யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டுத் தொன்மையும். பிறைநிலா வெளியீடு, யாழ்ப்பாணம்.

பவுண்துரை.இராசு. (2004). பண்டைத்தமிழக வரைவுகளும் குறியீடுகளும். உலகத் தமிழாராச்சி நிறுவனம், சென்னை.

பாலகிருஸ்ணன்.ஓ. (2004). குறியீட்டியல் ஆய்வுக்கோவை பல்துறையியல். இந்தியப் பல்கலைக்கழக தமிழாசிரியர் மன்றம். திருச்சிராப்பள்ளி.

புஸ்பரட்ணம்.ப. (1993). பூநகரி தொல் பொருளாய்வு. யாழ்பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி.

புஸ்பரட்ணம்.ப. (2017). இலங்கைத் தமிழர் ஓர் சுருக்க வரலாறு. தமிழ்க் கல்விச்சேவை. சுவிற்சர்லாந்து.

75

தமிழ்ப் பண்பாட்டில் பிற பண்பாட்டுத் தாக்கம் : இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் புலம்பெயர் நாவல்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

ஞா.டிலோசினி,
ஆசிரியர், தி/மூ/கிளிவெட்டி மகாவித்தியாலயம், இலங்கை.
gnadilog22@gmail.com

அறிமுகம்

புலம்பெயர் தமிழர்களின் படைப்புக்கள், சமகாலத் தமிழ் இலக்கியத்தில் முக்கிய கூறாக இருக்கின்றன. சமுதாய மாற்றத்திற்கு இலக்கியம் துணை புரிய வேண்டும் என்ற நோக்கில் புதினங்களைப் படைப்பவர்களில் கிழக்கிலங்கையைச் சேர்ந்த இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியமும் குறிப்பிடத்தக்கவர். இவரது புலம்பெயர் நாவல்களில் வெளிப்படும் பண்பாடு சார்ந்த அம்சங்களை இவ்வாய்வு ஆராய்கின்றது. இந்நாவல்களில் கீழைத்தேய மற்றும் புகலிடப் பண்பாடுகள் வெளிப்படுவதை அவதானிக்கலாம். திருமணம், சாதியம், சீதனம், காதல், குழந்தைப்பேறு, சாத்திர சம்பிரதாயங்கள், நம்பிக்கைகள், நிறபேதம், போதைப்பொருள், ஆடம்பர வாழ்வு பற்றி நாவல்களில் இடம்பெறும் கருத்துக்கள் மேலைத்தேய, கீழைத்தேயப் பண்பாடுகளைப் பிரதிபலிப்பனவாக உள்ளன. இராஜேஸ்வரியின் ஒருகோடை விடுமுறை, தில்லையாற்றங்கரை தவிர்ந்த ஏனைய நாவல்களை(உலகமெல்லாம் வியாபாரிகள், தேம்ஸ்நதிக் கரையில், பனி பெய்யும் இரவுகள், வசந்தம் வந்து போய் விட்டது, அவனும் சில வருடங்களும், நாளைய மனிதர்கள்) அடிப்படையாகக் கொண்டு புலம்பெயர் சூழலில் கீழைத்தேய, மேலைத்தேயப் பண்பாடு சார்ந்த விடயங்களை யதார்த்தமாகச் சித்திரிப்பதில்

இந்நாவல்களின் பங்கு எத்தகையது என்பதை இனங்காண இவ்வாய்வு முயற்சிக்கின்றது.

தாயகம் மற்றும் புலம்பெயர் களங்களை அடிப்படையாகக் கொண்ட இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் நாவல்கள் தாயக நினைவு, அகதிநிலை வாழ்வு, பண்பாடு, பெண்ணியம், இனவாதம், புவியியல் சூழல், அனைத்துலக நோக்கு முதலான போக்குகளை உள்ளடக்கியுள்ளன. இவ்வாய்வில் இராஜேஸ்வரியின் நாவல்களில் காணப்படும் பண்பாடு சார்ந்த அம்சங்கள் ஆராயப்படுகின்றன. பண்பாடு ஒரு இனத்தின் வாழ்வோடும் வளர்ச்சியோடும் தொடர்புடையது. புலம்பெயர் சமூகம் பன்முகப்பட்டது. இதில் தமிழ் கலாசாரத்தைப் பேணுபவர்களும், புலம்பெயர் சமூகத்துடன் இயைந்து வாழ முனைபவர்களும் உள்ளனர்.

ஆய்வு வரையறையும் ஆய்வு முறையியலும்

ஈழத்துப் பெண் நாவலாசிரியர்களில் ஒருவரான இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் தமது நாவல்களில் புலம்பெயர் சூழலில் மேலைத்தேய, கீழைத்தேய பண்பாடுகளையும், பண்பாட்டு மோதல்களையும் பிரதிபலித்துக் காட்டியுள்ளார். இராஜேஸ்வரியின் நாவல்களை முதனிலைத் தரவுகளாகவும், இவரது நாவல்கள் தொடர்பாக வெளிவந்த கட்டுரைகள், பேட்டிகள், தகவல்களை இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் கொண்ட இவ்வாய்வு, உள்ளடக்க ரீதியாக சமூகவியல் நோக்கில் ஆராயப்படுகின்றது.

கலந்துரையாடல்

திருமணம்

இராஜேஸ்வரியின் நாவல்களில் தமிழர்களது திருமணத்தில் சாதி, சமய, அந்தஸ்த்துப் பார்ப்பதனையும், மேலைத்தேயத்தில் சாதாரணமாக நடைபெறும் திருமணங்கள் விவாகரத்தில் முடிவதனையும், தமிழ் கலாசாரத்திற்கு முரணான மேலைத்தேய கலாசாரம் அங்கீகரித்துள்ள ஓரினத் திருமணங்கள் பற்றியும், பொருந்தாத் திருமணங்களின் விளைவுகளையும் வெளிப்படுத்தியுள்ளார். உலகமெல்லாம் வியாபாரிகள் என்ற நாவலில் சகுந்தலா, கார்த்திகேயனைக் காதலித்த போதிலும், தனது தாய், தந்தையருக்கு கட்டுப்பட்டு சாதி, சமய, கலாசார அடிப்பிடையில் அந்தஸ்த்து உள்ள ஒருவனைத் பெற்றோரின்

கௌரவத்திற்காக நிர்ப்பந்தத்தில் திருமணம் செய்கிறாள். அவள் கார்த்திகேயனைத் தான் ஏமாற்றியதாக நினைக்கும் போது,

> 'ஏமாற்றினேனா? இந்த உலகத்தின் சட்ட திட்டங்களால் விற்கப்பட்டேன்'(இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், 1991 : 59).

இவ்வாறு சகுந்தலா என்ற பாத்திரத்தின் மூலம் தமிழர் திருமணத்தில் சாதி, சமய, அந்தஸ்த்து பார்த்து திருமணங்கள் நிச்சயிக்கப்படுகின்ற முறையை வெளிப்படுத்துகின்றது. இத்தகைய சமூக சட்ட, திட்டங்களால் திருமணத்தில் பெண்களின் உணர்வுகள் பண்பாடு என்ற பெயரில் மதிக்கப்படாது சிதைக்கப்படுவதை விமர்சிக்கிறார்.

இவரது நாவல்கள் தமிழ் கலாசாரத்திற்கு பொருந்தாத மேலைத்தேயக் கலாசாரத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஓரினத் திருமண நெறி பற்றி மேலைத்தேய கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் கூறியுள்ளன. 'வசந்தம் வந்து போய் விட்டது' என்ற நாவலில் இவ்விடயம் பற்றி பேசப்படுகிறது. புகலிடத்தில் மேலைத்தேய, கீழைத்தேய இளைஞர், யுவதிகளிடையே காணப்படும் காதல் மற்றும் திருமண உறவுகள் தமிழ்க் கலாசாரத்துக்கு முரணானது என மூத்த தலைமுறையினரிடம் காணப்படும் கருத்துக்களையும், இத்தகைய உறவுகளால் ஏற்படுகின்ற பண்பாட்டு மோதல்களையும் இவரது நாவல்கள் பிரதிபலிக்கின்றன.

வெள்ளையர்களின் திருமணத்தையும், தமிழர்களின் திருமணத்தையும் ஆசிரியர் ஒப்பிட்டுக் கூறுமிடங்களிலும் இரு பகுதியினரதும் பண்பாட்டில் யதார்த்தமாக நடைமுறையில் காணப்படும் வழக்கத்தை சித்திரித்துக் காட்டுகிறார்.

> 'கல்யாணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர் எங்களைப் பொறுத்த வரையில். உங்களைப் பொறுத்த வரையில் கல்யாணம் என்பது பெரிய முக்கியம் இல்லை. இன்றைக்குக் கல்யாணம் நாளைக்கு விவாகரத்து'(இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், 1991 : 76).

> 'அன்ரனி, உங்கள் வாழ்க்கை முறையில் காதலித்த துணையைக் கல்யாணம் செய்வது பண்பாடு. எங்கள் வாழ்க்கை முறையில் கல்யாணம் செய்தவரைக் காதலிப்பது பண்பாடு'(இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், 1991 : 78).

என உலகமெல்லாம் வியாபாரிகள் என்ற நாவலில் சகுந்தலா என்ற பாத்திரத்தின் ஊடாக வெளிப்படுத்தப்படும் கூற்றுக்கள் ஆங்கிலேயர்களினதும் தமிழர்களினதும் திருமண கலாசாரம் பற்றிய வேறுபட்ட கருத்துக்களைப் புலப்படுத்துகின்றன. இங்கிலாந்தில் சாதாரணமாக நடக்கும் திருமணங்கள் பெரும்பாலும் விவாகரத்தில் முடிகின்ற யதார்த்தத்தையும் ஆசிரியர் இந்நாவலில் புலப்படுத்தியுள்ளார்.

திருமணமாகாது தம்பதிகளாக வாழ்கின்ற முறை, இலண்டன் பாரம்பரியத்தில் ஒரு சாதாரண விடயம் என்பதையும், அம்முறை தமிழர் பண்பாட்டுக்கு கேடானது என்ற நிலையையும் இந்நாவல்கள் வெளிப்படுத்துகின்றன. தமிழர்கள் தமிழர்களைத் திருமணம் செய்ய வேண்டும் என்ற எண்ணம், இலண்டனில் பெரும்பாலான தமிழர்களிடம் காணப்படுகிறது. இது தமிழ்க் கலாசாரத்தை பேணுவதை வெளிப்படுத்துகின்றது. 'தேம்ஸ் நதிக் கரையில்' என்ற நாவலில் தமிழர் திருமண வைபவத்தில் காணப்படும் சடங்கு, சம்பிரதாயங்கள் பிரதிபலிக்கின்றன. இந்நாவல்கள் தமிழர் திருமணத்தில் திருமண ஒப்பந்தம் செய்து கொள்ளுதல், மோதிரம் மாற்றுதல், தாலிகட்டுதல் முதலிய பாரம்பரியங்களைப் பற்றியும் பேசுகின்றன.

நாளைய மனிதர்கள் என்ற நாவல் பொருந்தாத் திருமணங்களால் ஏற்படுகின்ற விளைவுகளையும், தமிழ் கலாசாரத்தில் பெண்கள் தாம் கணவன் கையால் இறப்பது புண்ணியம் என நினைக்குமளவுக்கு தமிழ் கலாசாரம் 'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன்' எனப் போதித்துள்ள போதனைகளை விமர்சிப்பதையும் காணலாம். ஒரே குடும்பத்துக்குள் திருமணம் செய்து வைப்பதால் மூளை பலம் குறைந்த அல்லது உடல் பலம் குறைந்த குழந்தைகள் பிறக்கலாம் என்ற விஞ்ஞான ரீதியான கருத்தையும் இந்நாவல் வெளிப்படுத்துகின்றது.

அக்காலகட்டத்தில் பெரும்பாலான வாலிபர்களின் காதல்கள், அவர்கள் மேலைத்தேயப் பெண்களின் உறவில் தங்கியிருந்தமை, படித்து முடிந்ததும் பெரும்பாலான இளைஞர்கள் இலங்கைக்குத் திரும்பி திருமணச் சந்தையில் தம்மை விற்றுக்கொள்ளுதல் முதலான விடயங்கள் இவரது நாவல்களில் இடம்பெறுகின்றமை

யதார்த்தத்தைப் பிரதிபலிக்கிறது. பேக்கரியில் மா மூட்டை தூக்கி உழைத்து எஞ்சினியரிங் படிக்கும் கதாநாயகன் செந்தில்வேலுக்கு ஜமேக்காவில் இருந்து நேர்ஸிங் படிக்க வந்த லோறா என்ற பெண்ணுடன் தொடர்பு ஏற்படுகின்றது. அந்தப் பெண்ணைக் காதலித்துப் பழகும் போது, அவனது சிந்தனைகள் யாவும் யாழ் கிராமத்தில் உள்ள தனது பெற்றோர் எவ்வாறு தன் செயல்களை கணிப்பர், கண்டிப்பர் என்பதிலேயே நிலைத்திருப்பதை இந்நாவல் சித்திரிக்கின்றது. செந்திலின் ஆணாதிக்க தன்மை, கோழைத் தனம், ஈடாட்டமான மனப்போக்கு அனைத்தும் நடுத்தர வர்க்கத்தின் பிரதிபலிப்பாக உள்ளது.

கீழைத்தேய கலாசாரத்தில் சாதாரணமாக ஆண்களும் பெண்களும் பழகுவதை சமூகம் தவறாக நினைக்கின்ற வழக்கத்தையும், இலண்டன் வாழ்க்கை முறையில் சில பெண்கள் மாறுவதையும், மேலைத்தேயக் கலாசாரத்தில் ஆண்களும் பெண்களும் பழகுவது ஒரு சாதாரண விடயம் என்பதையும் ஆசிரியர் தமது நாவல்களில் பிரதிபலித்துக்காட்டியுள்ளார்.

குழந்தைப் பேறு/ரெஸ்ற் ரியூப் பேபி

திருமணமாகி குழந்தையில்லாத பெண்ணுக்கு தமிழ் சமூகத்தில் 'மலடி' என்று பட்டம் சூட்டும் வழக்கத்தையும், ஆண்களுக்கு இத்தகைய தன்மை இருப்பின் அதனைப் பொருட்படுத்தாத நிலையையும், ஒரு பெண்ணுக்கு குழந்தை பெற்றுக் கொள்ளும் பாக்கியம் இல்லாவிடின், அவளது கணவனுக்கு இன்னொரு திருமணம் செய்து வைப்பதை சமூகம் அனுமதிப்பதையும் பனி பெய்யும் இரவுகள் என்ற நாவல் புலப்படுத்துகின்றது.

ஒரு பெண், தாலி கட்டிக்கொள்ளாத ஒரு தாய்க்கு பிறந்து, இரண்டாம் தாரமாக ஒருவனை மணந்து, யாரோ முன்பின் தெரியாத ஒருவனால் 'ரெஸ்ற் ரியூப் பேபி' முறை மூலம் கர்ப்பமடைந்து, இறுதியில் விதவையாகின்ற நிலையை எடுத்துக் காட்டும் இந்நாவல், பெரியதொரு பண்பாட்டு மாற்றத்தை சித்திரித்துக் காட்டுகிறது. அத்தோடு பண்பாட்டுக்கு அதிர்ச்சி தருவதாகவும் அமைகின்றது.

'பனி பெய்யும் இரவுகள்' என்ற நாவல் வித்தியாசமான காதற்கதை எனினும் பண்பாட்டுக்கு அதிர்ச்சி தரக்கூடிய

விடயங்களும் இந்நாவலில் இடம்பெறுகின்றன. குழந்தைக்காக ஏங்கும் 'சாரதா' என்ற பாத்திரத்திற்கு 'ரெஸ்ற் ரியூப் பேபி'க்கு வழிகாட்டுவதும் அதற்காக அவளது கணவன் இராமநாதன் கையாளும் தந்திரோபாயமும் பாரம்பரியத் தமிழ்ப் பண்பாட்டுச் சூழலில் அதிர்ச்சி தருவதாக அமைகின்றது. செயற்கை முறையில் ஒரு பெண் கர்ப்பம் தரிக்கும் முறை பற்றி எண்பதாம் ஆண்டுகளில் தமிழர்கள் பெரிதும் அறிந்திருக்கவில்லை. இம்முறை அத்தகைய காலகட்டத்தில் தமிழ்ப் பண்பாட்டுக்கு பொருந்தாதகாகக் காணப்படுகின்றது. செயற்கையாகக் குழந்தையை உண்டாக்க பல வழிகள் உள்ளன. அவற்றில் ரெஸ்ற் ரியூப்பில் குழந்தையை உருவாக்கும் விஞ்ஞான முறையை சாதாரண மனிதர்கள் தவறாகக் கருதுகின்ற சமூக நிலையையும் இந்நாவல் சித்திரிக்கின்றது.

நிறவாதம்

மேலைத்தேயக் கலாசாரத்தில் காணப்படும் கறுப்பர், வெள்ளையர் என்ற நிறவாதம் பற்றியும், இங்கிலாந்தில் உள்ள மறைமுகமான சட்டங்கங்களால் கீழைத்தேச கறுப்பின மக்கள் காட்டுமிராண்டித்தனமாக நடத்தப்படுவதையும் ஒதுக்கப் படுவதையும், நிறவாதத்தால் ஏற்படுகின்ற முரண்பாடுகளையும் இவரது நாவல்கள் சித்திரித்துள்ளன.

மூடக் கொள்கைகள்

பெரியவர்கள் தமக்கு பிடிக்காததை துரதிஷ;டம் என்று பழி பேடுகின்ற மூடக் கொள்கைகள், நம்பிக்கைகளை தேம்ஸ் நதிக்கரையில் என்ற நாவல் பிரதிபலித்துள்ளது. திருமணமாகி வாழ்க்கைத் துணையை இழந்த பெண்கள் சமூகத்தில் நடைபெறும் நல்ல காரியங்களில் பங்கு கொள்வதை அபசகுணமாக நினைக்கும் (வாழ்விழந்த பெண்களில் விழித்துக் கொண்டு கல்யாண ஆயத்தம் செய்வதை அம்மா எவ்வளவு வெறுப்பாள்) பிற்போக்கான சமூகக் கருத்து உலகமெல்லாம் வியாபாரிகள் என்ற நாவலில் வெளிப்படுகிறது.

கடவுள், விதி எனப் பேசும் மனிதர்கள் விரக்தி வரும்போது, விதியில் பழிபோடுவார்கள் என்பதை நாளைய மனிதர்கள் என்ற நாவல் வெளிப்படுத்துகின்றது. புதிய சிந்தனைகள் பல தோன்றியுள்ள நிலையில், உலகம் பல வழிகளிலும் முன்னேறிக்

கொண்டு செல்லும் காலத்திலும் தமிழர்களில் பல உலக முன்னேற்றத்திற்கு ஏற்ப வளராது, பழமைக்குள் இருந்து மீளாது, பழமை பற்றி பேசிக் கொண்டு திரிவதை உலகமெல்லாம் வியாபாரிகள் என்ற நாவல் விமர்சிக்கின்றது.

> 'உலகம் கடந்த கோடிக்கணக்கான வருடங்களில் மாறாத வேகத்தில் கடந்த ஒரு சில பத்தாண்டுகளில் மாறிவிட்டது. நாங்கள் எப்படி இருக்கிறோம்?..'(இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், 1991 : 100).

இவ்வாறு 'புவனேஸ்' என்ற பாத்திரத்தின் வாயிலாக நவீன முனனேற்;றங்கள், மாற்றங்களுக்கு மத்தியில் இலண்டன் வாழ் இலங்கைத் தமிழர்களிடையே காணப்படும் பழமையான போக்குகளை வெளிப்படுத்தியுள்ளார். பெண்கள், பெண்மை, கற்பு, பண்பு என பண்பாடு என்ற பெயரில் முதியவர்கள் வைத்த வரையறைகளுக்கு உட்பட்டு பண்பாட்டால் அடக்கப்படுகின்ற சமூக நிலையையும் ஆசிரியர் இந்நாவலில் வெளிப்படுத்தியுள்ளார். சீதனம், சாதி சமய அந்தஸ்த்துப் பார்த்தல், மூடக்கொள்கைகள் முதலானவை பண்பாடு கடந்தும் புலம்பெயர் தேசங்களில் மூத்த தலைமுறையினரிடம் காணப்படுவதை இந்நாவல்கள் புலப்படுத்தியுள்ளன.

ஆடம்பர வாழ்வு

இலண்டனுக்கு சென்ற தமிழர்களில் சிலர் இலண்டன் கலாசாரத்துக்கு அடிமையாகி ஒருத்தருக்கு ஒருத்தர் தன்னை உயர்த்திக் காட்டும் வகையில் வெள்ளையர்களின் முறையில் பார்ட்டிகள் வைத்தல், புதுப் புதுக் கார் வாங்குதல் என ஆடம்பரமாக வாழ்வதாக நினைத்து போலி வாழ்க்கை வாழ்வதையும் இந்நாவல்களில்; ஆசிரியர் புலப்படுத்தியுள்ளார்.

'பனி பெய்யும் இரவுகள்' என்ற நாவலில் தியாகராஜன் என்ற பாத்திரம், பிறந்தநாள் கொண்டாட்டம் ஒன்றில் நடைபெறும் நிகழ்வுகளைப் பார்த்துத் தனக்குள் தானே சொல்லிக் கொள்வது மேலைத்தேய நாகரிக மோகத்துக்கு இலண்டன் வாழ் தமிழர்களில் சிலர் அடிமையாகி வாழ்வதைக் காட்டுவதோடு, அது தமிழ்க் கலாசாரத்துக்கு சீரழிவை ஏற்படுத்துவதையும் சித்திரித்துக் காட்டுகிறது. இவரது நாவல்களில் மதுபான வகைகள் மேலைத்தேயங்களில் சாதாரண நிகழ்வுகளில் இருந்து

அனைத்திலும் பிரதான இடம் பிடித்துள்ளதையும் இத்தகைய கலாசாரத்திற்கு தமிழர்கள் அடிமையாகியுள்ளதையும் புலப்படுத்துகின்றன.

'நாளைய மனிதர்கள்' என்ற நாவலில் தனிமனிதர் சார்ந்த நலன்களை விட சமூக நலன்களே மரியாதைக்குரியது. தான் சார்ந்த இனம் அடிமைத் தனத்தில் வாழும் போது, தன்னலமே போதும் என வாழ முடியாது. இத்தன்மை வாய்ந்த பண்பாட்டுக் கூறுகள் தமிழ்க் கலாசாரத்திற்கு அந்நியமாக முடியாது போன்ற சீரிய உணர்வுகளை புலம்பெயர்ந்த தமிழர்கள் மற்றும் அவர்களோடு தொடர்புடைய நிகழ்வுகள் மூலம் ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். மேற்கத்தேயக் கலாசாரத்தில் பெற்றோரின் ஆதரவு இல்லாமல் வளர்ந்தவர்கள் அன்புக்காக ஏங்குவதையும், நேசத்திற்காக மேலை நாட்டு இளைஞர்கள் எதையும் விட்டுக் கொடுப்பதையும், காதலையும் நேசத்தையும் அவர்களால் பிரித்துப் பார்க்க முடிவதையும், அவர்கள் இளமையில் பிரிந்த பெற்றோரை, உறவுகளை தேடிக் கண்டுபிடிப்பதில் நிறைவு கொள்வதையும் இந்நாவல் வெளிப்படுத்தியுள்ளது. இத்தகைய பண்புகளை உடைய இங்கிலாந்துச் சூழலில் வாழும் சில அற்புதமான மனிதர்களை பாத்திரங்களின் ஊடாகப் பிரதிபலித்துள்ளார். புதிய கலாசார சூழலில் வாழ நேர்ந்தமையால் ஏற்பட்ட கலாசார நெருக்கடிகளையும், மூத்த தலைமுறைக்கும் இளைய தலைமுறைக்கும் இடையில் உள்ள இடைவெளி அதிகரிப்பதையும், தமிழ் கலாசாரத்தை மதிக்கின்ற சூழலில் வாழ்கின்ற இளைய தலைமுறைகளுக்கு நெருக்கடிகள் அதிகரிப்பதையும் இந்நாவல் வெளிப்படுத்தியுள்ளது.

முடிவுரை

புகலிடத்தில் அந்நிய மோகத்தால் பண்பாட்டுச் சிதைவுகள், குடும்பச் சிதைவுகள், குழந்தைகளது வளர்ப்பில் ஏற்படும் சிக்கல்கள், புகலிடத்தில் வாழும் பெண்களின் சுதந்திரம் மற்றும் வாழ்க்கை முறையைக் கண்டு தமிழ்ப் பெண்களும் வாழ முற்படுதல், நிறவேறுபாடுகள், தமிழ் சமூகத்தில் காணப்படும் சீதனம், திருமணம், சாதி ஏற்றத்தாழ்வுகள் முதலான பண்பாட்டுடன் தொடர்பான பல விடயங்களை இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் தமது நாவல்களில் வெளிப்படுத்த முனைந்துள்ளார். ஆகவே இவரின் நாவல்கள், தமிழர்களது பாரம்பரியமான பண்பாடுகளையும்

மேலைத்தேயப் பண்பாடுகளையும் பிரதிபலிப்பதோடு, ஒரு பண்பாட்டில் இன்னொரு பண்பாடு கலப்புறுவதையும், முரண்பட்டுக் கொள்வதையும், மூத்த தலைமுறையினர் பழமையான நம்பிக்கைகள், கொள்கைகளில் இருந்து இன்னமும் மாறுபடவில்லை என்பதையும், சில முற்போக்கான இளைய தலைமுறையினர் பழமையான கொள்கைகள், நம்பிக்கைகளில் இருந்து மீள எத்தனிப்பதையும் பிரதிபலித்து நிற்கின்றன.

உசாத்துணைகள்

நூல்கள்

இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், 1991,உலகமெல்லாம் வியாபாரிகள், நீலமலர், சென்னை.

இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், 1992,தேம்ஸ் நதிக்கரையில், குமரன் பப்ளிஷர்ஸ், மெட்ராஸ்.

இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், 1993,பனி பெய்யும் இரவுகள், பாரி நிலையம், சென்னை.

இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், 1997,வசந்தம் வந்து போய் விட்டது, பாரி நிலையம், சென்னை.

இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், 2000,அவனும் சில வருடங்களும், குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை.

இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், 2003,நாளைய மனிதர்கள், புதுப்புனல், சென்னை.

ஞானசேகரன், தே., 1999,தமிழர் பண்பாட்டு வரலாறு (தொகுப்பு - வீவீ), தமிழர் பண்பாடு சமூக ஆய்வு மன்றம், கோவை.

சஞ்சிகைகள்

அபிராமி, 2001,இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்துடனான நேர்காணல், பெண், தொகுதி : 6, இலக்கம் : 1, சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், மட்டக்களப்பு.

அஜந்தகுமார், த., 2017, ஈழத்துத் தமிழ்ப் பெண்களின் நாவல்கள், ஜீவநதி, சிறப்பிதழ் (100), பெண்கள் கல்வி ஆய்வு நிறுவகம், கொழும்பு.

ஞானசேகரன், தி., 2017, நேர்காணல் - இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்,ஞானம், சிறப்பிதழ் (200), ஞானம் பதிப்பகம், கொழும்பு - 06.

76

மலையக தமிழர்களின், பாரம்பரிய இராமர் பஜனை வழிபாடு: புளத்ஹோப்பிட்டிய பிரதேச செயலகத்திற்குற்பட்ட கந்தலோயா தோட்டத்தை மையப்படுத்திய கள ஆய்வு

எஸ்.பி.பருதவனி
புவியியல் துறை, கலை கலாசார பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை. Bawadharani2000@gmail.com

ஆய்வு அறிமுகம்

உலகளாவிய ரீதியில் தமிழர்களின் பாரம்பரிய கலை மற்றும் கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் பல்வேறு அம்சங்கள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. அதில் பிரதானமான ஒன்று வழிபாட்டு முறைமையாகும். வழிபாடு என்பது ஒரு தெய்வத்தை நோக்கிய மத பக்தியின் செயலாகும். அதாவது மக்கள் சில குறிப்பிட்ட முடிவை நோக்கி அல்லது உடல், மனது மற்றும் ஆன்மாவை ஒருங்கிணைத்து வழிபடுபவரை உயர்ந்தவராக உருவாக்க உதவுவதாக வழிபாடு இடம்பெறுகின்றது. (<https://ta.m.wikipedia.org>) இந்துமத வேதாகமங்கள் இவ் வழிபாடுகள் நடத்தும் முறைமைகளையும், அவை செய்யப்பட வேண்டிய காலத்தையும் வகுத்துக் காட்டியுள்ளன (Tamil virtual academy)

இந்து மதத்தில் அறுவகை சமய பிரிவுகளில் ஒன்றான வைணவ சமயத்தவர் மத்தியில் திருமாலின் பத்து அவதாரங்களில் ஒன்றான இராமருக்கே உரித்தான மாதமாக இம் மார்கழி மாதம் சிறப்புற்று விளங்குகின்றது (blogger.com,2016). உலகில் பல்வேறு நாடுகளிலும் பல்வேறு இராம வழிபாடுகள் நிகழ்த்தப்பட்டு வந்தாலும், இந்தியாவில் இராமருக்கென தனித்துவமான ஆலயங்களும் வழிபாடுகளும் அன்றிலிருந்து இன்று வரை இடம்பெற்று வருகின்றன. இராமனைப் பாரதத்தின் அடையாளமாகக் கருதி பாரத மக்கள் தெய்வமாகவே வணங்கத் தொடங்கினர். பல்லவர் மற்றும் சோழர்கால செயல்பாடுகள் தமிழ் மக்களின் மனதில் இராமகதை வேரூன்றச்செய்ததோடு, தாம் வாழும் இடங்களில்

இராமனை போற்றி பாடி வழிப்பட தொடங்கினர். (இராம் பொன்னு, 2017) சுமார் 85 ஆண்டுகளுக்கு முன்னமே கோவையில் இராம வழிப்பாடு இருந்தது. தொடர்ந்து இராம வழிப்பாடுகள் பரவலாயிற்று.(வி.பி.ஆலசுந்தரம்) குறிப்பாக இந்தியாவில் தஞ்சாவூர் பகுதியிலுள்ள திருவாரூர், பழனி கலையம்பத்தூர் அக்ரஹாரம் பகுதி, நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூடலூர் கிராமம், சேலம் டவுன், பட்டை கோவில் பகுதி, அம்மாபேட்டை, கருங்கல்பட்டி, தமிழ்நாட்டின் அயோத்தி போன்ற பல பிரதேசங்களிலும் இராமர் பஜனை இடம்பெறுகின்றது (maalaimalar.com). இலங்கையிலும் வடகிழக்கு பிரதேசங்களான திருகோணமலை மற்றும் முல்லை தீவுகளிலுள்ள பல பகுதிகளிலும் இந்தியாவை ஒத்த திருவெம்பாவை மற்றும் திருப்பாவை பஜனை இடம்பெற்று வருகின்றது.

இம்முறையை ஒத்ததாக மலையகத்தில் மார்கழியில் பஜனை பாடப்படுகின்றது. இந்தியாவில் இருந்து கலாசார பண்பாடுகளைது; தன்னகத்தே கொண்ட மலையக தமிழர்கள், ஒவ்வொரு ஆண்டும் மார்கழி மாதமும் பஜனை வழிபாட்டைத் தொடர்ந்து கடைபிடித்து வருகின்றனர். பெருந்தோட்டங்களில் வைணவ சமயத்தின் முழு முதல் கடவுளான திருமாலின் அவதாரங்களில் ஒன்றான இராம அவதாரத்தை அடிப்படையாகக் கொண்டு மார்கழி பஜனை செய்து வருகின்றனர். (அ.ரெ.அருட்செல்வம்,2020) குறிப்பாக கேகாலை மாவட்டத்திற்குட்பட்ட பம்பேகம, திக்தெனிய, பூனுகல, ஹல்கொல்ல, களனி, தெரனியகல, யட்டியாந்தோட்ட, மியான்விட்ட, உடப்பொல, மாலிபொட, உடபாக, சபுமல் கந்த, பருசெல்ல, வீ ஓயா, கிரிபொருவ, பன்னல, நாகஸ்தன்ன மற்றும் நுவரெலியா, ஹட்டன், பதுளையில் உள்ள சில பகுதிகளிலும் இன்றும் இவ்வழிப்பாடு நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

இவ்வழிபாடு ஆய்வு பிரதேசமான கந்தலோயா தோட்டத்தில் வெகு விமர்சையாக நிகழ்த்தப்பட்டு வருகின்றது. எனினும் குறிப்பிடத்தக்க ஒரு குழு மாத்திரமே இன்றும் அவ்வழிபாட்டைப் பின்பற்றி வருகின்ற நிலையில் அவர்களுக்கும் குறித்த வழிபாடு செய்வதற்கான நோக்கமோ, முறைமையோ முழுமையாக தெரியாது. அதனை தெரிந்துக்கொள்ள இளைய சமூகத்தினருக்கு ஆர்வம் இல்லை.

ஆய்வு நோக்கங்கள்

இவ் வழிபாடு சார்ந்த அறிவை கொண்டோர் இல்லாது போகும் காலத்தில் வழிபாடு இல்லாது போகும் நிலையும் உருவாகலாம் என்பதே பிரதான பிரச்சினையாகும். இவ் வழிப்பாடு செய்யப்படுவதற்கான நோக்கங்கள் மற்றும் செய்யப்படும் முறைமையை கண்டறிதல், இதனை இன்றுள்ள இளைஞர் சமூகத்திற்கிடையில் தெரியப்படுத்தலினூடாக அதன் அவசியத்தை உணர செய்தல், முன்போடு ஒப்பிடும் போது இன்று வழக்கொழிந்து செல்வதற்கான காரணங்களை வெளிக்கொணர்தல், அற்கான தீர்வுகளை முன்வைத்தல் போன்றவற்றை நோக்கமாக கொண்டு இவ்வாய்வு அமைகின்றது. எனவேதான் இவ் வழிபாடு சார்ந்த நோக்கங்கள், முறைமைகள் போன்ற முழுமையான அறிவை பெற்று அதனை எழுத்தாவணப்படுத்துவது மட்டுமின்றி இன்றைய சமூகத்தினருக்கு இடையே தெரியப்படுத்துவதற்கான தேவை அதிகம் உணரப்பட்டுள்ளது.

ஆய்வு முறையியல்

ஆய்வுக்கான தரவுகளானவை, கலப்பு முறையை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்டது. அவை முதலாம் நிலையினதாகவும் இரண்டாம் நிலையினதாகவும் அமைந்துள்ளன. முதலாம் நிலை தரவுகள் பிரதேசத்தில் உள்ள சாதாரண மக்கள், ஆலய நிர்வாகி மற்றும் பஜனை மாஸ்டர் உட்பட்ட குழுவினர், அனுபவம் கொண்ட வயோதிபர்கள் போன்றவர்களிடம் நேர்காணல், இலக்க குழு கலந்துரையாடல், கள ஆய்வு, நேரடி அவதானிப்பு, வினாகொத்து என்பன மூலமாகப் பெறப்பட்டன. இரண்டாம் நிலை தரவுகளானவை இணையத்தளம், பத்திரிக்கை, ஆய்வு கட்டுரைகள், புத்தகங்கள் போன்றவற்றினை அடிப்படையாகக் கொண்டு தகவல்கள் திரட்டப்பட்டன. பெரும்பாலுமே இவ்வாய்வுக்கான தரவுகள் பண்பு ரீதியான முறைப்படியே திரட்டப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கலந்துரையாடலும் பெறுபேறுகளும்

1963இல் கோலன் சொக்கலிங்கம் என்பவர் கம்பம் ஒன்றை செய்;தார். அக்கம்பத்தை வைத்து பால்சாமி உட்பட்ட குழுவினர் சிறிதாக ஆலயம் ஒன்றைக் கட்டினர். 1970இல் பெரிதாக

கட்டப்பட்டது. 2002 காலப்பகுதியாகும் போது இன்றிருக்கும் இக்கோவில் கட்டப்பட்டது. இவ்வாறான படிநிலை வளர்ச்சியைக் கொண்ட பஜனை செய்வதற்கான நோக்கம் பலதரப்பட்டனவாகும்.

தென்னிந்திய வைணவ சமயத்தவரின் தாக்கம்

இராமரை இறைவனாக வழிபடுகின்ற வைணவ வரலாற்றில் இராமாயணம் முக்கிய இடம் பெற்ற இதிகாசமாகும். உள்நாட்டு மக்களிடம் பிராமணியத்தை பரப்ப இது பயன்பட்டது. இதன் மூலம் வைணவம் நாடு முழுவதும் பரவி, பிறகு தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் பரவாலாயிற்று.

குறிப்பாக பெருந்தோட்டங்களில் வைணவ சமயத்தின் கடவுளான இராமர் அவதாரத்தை அடிப்படையாகக் கொண்டு செய்து வருகின்றனர். எனவே இது தென்னிந்திய வைணவ சமயத்தின் தாக்கத்தின் அடிப்படையில் பின்பற்றப்பட்டு வரும் வழிப்பாடாக உள்ளது. 'வைணவர்களின்ட வழிபாடுகளுல இராமருக்கான திருப்பாவை வழிபாடு ஒன்னு. அத ஒத்ததா மலையகத்துலையு இராமர் பஜன செய்யப்பட்டு வருது. இலங்கைக்கு, தென்னிந்தியாவுலிருந்து வந்த நம்ப முன்னோர்கள் அங்கவுள்ள கலாச்சாரத்தையும் கொண்டு வந்தாங்க. அதுல ஒன்னா இந்த பஜனையும் மார்கழியில செய்து வாரது வழக்கமாகு' (மகேஸ்வரன் ஐயர், சித்திரை, 02)

இறை பக்தி கொண்டவர்களின் நம்பிக்கை

இந்து மதத்தவர்களின் புனிதமான மார்கழி மாதம் தேவர்களின் மாதம் என அழைப்பார்கள். அச்சமயத்தில் சுவாமியைப் புகழ்ந்து பாடி வணங்கினால் தேவர்கள் மனம் மகிழ்ந்து எம் குறைகளை போக்குவார்கள் என்பது இந்துக்களின் ஐதீகம். இவ்வேளையில் சிவன் ஆலயங்களில் திருவெம்பாவையும் விஷ;ணு ஆலயங்களில் திருப்பாவையும் பாடப்படும் வழக்கம் உள்ளது. இத்திருப்பாவை இலங்கையில் வடகிழக்கில் வழக்கில் உள்ளது. இதனை ஒத்ததாகவே மலையக பிரதேசங்களிலும் மார்கழி மாதத்தில் பஜனை இடம்பெறுகின்றது. இது பழங்காலம் தொட்டே மக்கள் இறை நம்பிக்கையில் செய்யப்பட்டு வரும் நோக்கத்தை வெளிப்படுத்துகின்றது.

கம்பராமாயணத்தின் வரலாற்று கதையினை பாடல்வழியாக வெளிப்படுத்தல்

வைணவர்கள் இராமாயண காட்சிகளை புனிதமாக எண்ணி நிகழ்த்துகின்றனர். குறிப்பாக இராமரின் பிறப்பு, தற்பெருமைகள்,?இராமர் சீதை காதல், அனுமனின் அன்பு, இராமன் வனவாசம் சென்ற கதை போன்ற விடயங்களைப் பாடல் வழியாக வெளிப்படுத்துகின்றனர். இராமாயணத்தில் திருவடிசூட்டு படத்தில் வனவாசத்தில்; இராமர் பரதனுககு பாதுகைகளை அளித்தார். இதனை நினைவு கூறும் வகையில் பஜனையை பாதணிகள் அணியாது, கம்பத்தை ஏந்தி ஊர்வலமாக வருவதாகவும் அதனைப் பாடல்வழியாக வெளிப்படுத்துவதாகவும் ஒரு ஐதீகம் இதற்குள் உள்ளது.

இராமர் பஜனை செய்யப்படும் முறைமை

மார்கழி முதல்நாள் கோயிலைச் சுத்தம் செய்து, முற்றத்தில் கொடிமரம் நடப்;பட்டு, மாலை வேளையில் பூஜை செய்யப்படும். பின் கம்பத்தை ஏந்துபவரை குலுக்கள் முறைமையில் மூன்று வருடங்களுக்கென தேர்வு செய்வர். அன்றே கம்பம் பாலித்தல் நிகழ்வும் கங்கையில் இடம்பெறும். பஜனை குழுவினர் கம்பத்துடன் இசை கருவிகளையும் எடுத்துச்செல்வார்கள். பஜனைக் குழுவினரை பஜனை மாஸ்டர் வழிநடத்துடுவார். விடியற்காலையில் ஆலயத்திலிருந்து புறப்பட்டு ஊரின் சகல வீடுகளுக்கும் சென்று பாடல்களை பாடியவாறு, பூசையை பெற்று சூரியன் உதிப்பதற்கு முன்பு ஆலயம் செல்வது வழக்கம். இதன்போது வீட்டு வாசலில் சாணம் தெளித்து, கோலமிட்டு, பஜனை இல்லத்துக்கு வந்தவுடன் தரிசிப்பார்கள்.

இப்படியாக மார்கழி முழுவதும் பஜனை வழிபாடு செய்து மார்கழி கடைசித் தைப்பொங்கலன்று கம்பம் மற்றும் சப்பரம் ஊர்வலமாக எடுத்து சென்று பெருவிழாவாக கொண்டாடப்படும். இறுதியாக தெய்வம் 'மலையேற்றல்' பாடல்வழி இடம்பெறும். தொடர்ந்து மூன்றாவது நாள்; நடப்பட்ட கொடிமரம் இறக்கப்பட்டு, புனித கங்கையில் 'குடிவிடப்படும்'. பின் அசைவ உணவு சமைக்கப்பட்டு மக்களுக்கு வழங்குவதோடு பஜனை நிறைவுபெறும்.

வழக்கொழிந்து செல்வதற்கான காரணங்கள்

இன்று பஜனை வழக்கொழிந்து வருகின்றது. காரணம் பஜனை சார் அறிவு கொண்டோர் இன்றில்லை. இருப்பவர்கள் வயதாகிய நிலையில் உள்ளனர். அவர்கள் இளைய சமூகத்தினரை வழிநடத்துவதில் கவனம் செலுத்தவில்லை. இன்று கடவுள் பக்தியும் குறைந்துள்ள நிலையில், இவ்வாறான வழிபாடுகளில் இளைய சமூகத்தினருக்கு அலட்சியப் போக்குள்ளது. 'எங்க காலத்துல, 35பேர்; இருந்த பஜன குழுவுல இன்னக்கி 15 பேர் கூட இல்ல. அதுலையு நிறைய பேருக்கு பாடடே தெரியாது, நிரந்தரமா பஜன மாஸ்டரு இல்ல அதுமட்டு இல்லாம மேல்பிரிவுல பஜன கோயில் உடஞ்சி விழுந்துரிச்சி' (கோவிந்தராஜ் ஏப்ரல், 19)முன்பிருந்தவர்களும் பஜனைக்கான நோக்கம், முறைமை, பாடல் என்பவற்றைத் தொகுத்து வைக்காத நிலை இப்பிரதேசத்தில் உள்ளது. இன்றிருக்கும் சிலரும் எதிர்காலத்தில் இல்லாது போனால் பஜனை வழக்கிலிருந்தே அழியலாம்.

பரிந்துரையும் முடிவுரையும்

தென்னிந்திய வைணவ சமயத்தவரின் தாக்கம், இறை பக்தி கொண்டவர்களின் நம்பிக்கை, கம்பராமாயணத்தில் இராமரின் வரலாற்று கதையினை பாடல்வழியாக வெளிப்படுத்தல் போன்ற காரணங்களால் மலையகத்தில் பஜனை வழிபாடு இடம்பெற்றுவந்துள்ளது. இப்பஜனை வழிபாட்டைச் செய்வதற்கான முறைமை மற்றும் இன்று பஜனை வழக்கொழிந்து செல்வதற்கான காரணங்கள் முக்கியத்துவப்படுத்தப்பட்ட இவ்வாய்வில் பஜனை பற்றிய அறிவுடையோரைச் சந்தித்து தகவல்களை சேகரித்து எழுத்தாவணப்படுத்தி பாதுகாத்தல், இன்றைய சமூகத்தினருக்கு பஜனை சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்தல், இளைஞர்களையும் பஜனை குழுவில் இணைத்தல், சிறந்த பஜனை ஆசிரியரை தேர்வு செய்து முன்பு போன்று வழிநடத்துதல், இன்று காணப்படும் சிறு மாணவர்களுக்கும் இது சார்ந்த அறிவை வழங்குதல் மற்றும் வழிப்பாட்டை பின்பற்ற வேண்டியதற்கான அவசியத்தைத் தெளிவுபடுத்துதல் போன்றவை பரிந்துரைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன. அத்தோடு இப்பரிந்துரைகளை மேற்கொள்வதனூடாகப் பஜனையை மீட்டெடுத்து எதிர்கால சந்ததியினருக்குகொண்டு சேர்க்கலாம் என்ற தீர்வும்

முன்வைக்கப்பட்டுள்ளது. எனவே இன்று தமிழர்களின் கலை மற்றும் கலாசாரங்கள் வழக்கொழிந்து வரும் நிலையில், கந்தலோயாப் பிரதேசத்தை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட பஜனை வழிபாடு சார்ந்த இவ்வாய்வானது முக்கியம் பெறுகின்றது எனலாம்.

உசாத்துணைகள்

King news(B).(2023,December 18). பஜனை பாடல்கள் பாடி வழிபாடு.. www.king24*7.com <http://www.king24*7.com>. Retrived march 20,2024,from <https://king24x7.com/amp/local-news-king/worship-by-singing-bhajan-songs-301248>

James kuonal.(2020,april 02).ram navami: history,singnificance and importance of worshipping lord ram on last day of chaitra navaratri.english.jagran.com.retrieved march 20.2024,from <https://english.jagran.com/lifestyle/ram-navami-history-significance-and-importance-of-worshipping-lord-ram-on-this-day-10010172>

Blogger.(2021,march16). வழக்கிழந்து வரும் பஜனை வழிபாடு.mullaiapisharu5.blogspot.com.

<https://mullaiapisharu5.blogspot.com/2021/03/blog-post_16.html?m=1>

Dailythanthi.(2024.april 29). Markazhipoove. www,dailythanthi.com. retrieved December 9,2023, <https://www.dailythanthi.com/News/SirappuKatturaigal/2018/12/09130539/Markazhi-poove.vpf>

Moorthi,v,(2010,December 24). மார்கழியில் களைகட்டும் மலையகப் பகுதிகள்;.thinakaran, <https://archives.thinakaran.lk/2010/12/24/_art.asp?fn=f1012241>

Arutselvam (ar).(2020, feb 5). வாரம் ஒரு வரலாறு மார்கழி பஜனை.m.facebook.com.from

<https://m.facebook.com/101806961210737/posts/196269231764509/>

Arzonan(am).(2020 nevember). மார்கழி மாதத்தில் மட்டும் பஜனை ஏன்?.ta.quora.com.from

<https://ta.quora.com>

Janamtamil. (2024,jan 22). அயோத்திய இராமர் கோவில் விழா: தமிழகத்தில் களைகட்டிய கொண்டாட்டம்.<https://janamtamil.com/91271798>

நேர்காணல் மேற்கொண்டோர்

கோவிந்தராஜ், 69, கந்தலோயா

பத்மராஜ், 34, கந்தலோயா

ரஜீவன், 24, கந்தலோயா

சுப்பிரமணி, கந்தலோயா

மகேஸ்வரன் ஐயர், நாவலப்பிட்டிய

ஜெயக்கொடி, 50, கந்தலோயா

சீதையம்மா, 51, கந்தலோயா

மாரியப்பன், 69, கந்தலோயா